வெளியீடு—12—9—1974]
Issued—12—9—1974]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1974 மார்ச் 25

Monday 25th March 1974

தொகுதி LII—எண் 1

Volume LII—No. 1

©
தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

D
VRM,31 N74
31N74.52
61653

# Tamil Nadu Legislative Assembly Debates

TENTH SESSION OF THE LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*25 th to 28th March* 1974.

VOLUME LII (Nos. 1 to 4)

TABLE OF CONTENTS.

*Monday, 25th March 1974.*



| | PAGES |
|---|---|
| 1. QUESTIONS AND ANSWERS .. .. .. | 1–27 |
| 2. ADJOURNMENT MOTION— | |
| Boiler leak in Ennore Thermal Plant and consequent reduction in electricity production | 27–32 |
| 3. VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1974–75–*cont.* | |
| Demand No. 15–Police .. .. .. .. | 32–119 |
| Demand No. 16–Fire Services .. .. .. | 32–119 |
| 4. PAPERS LAID ON THE TABLE .. .. .. | 119–120 |

*Tuesday, 26th March 1974.*

| | |
|---|---|
| 1. QUESTIONS AND ANSWERS .. .. .. | 121–154 |
| 2. POINT OF ORDER— | |
| Opportunity for putting more supplementaries | 155–156 |

*Tuesday, 26th March 1974—cont.*


| | PAGES |
|---|---|
| 3. CALLING ATTENTION— | |
| (a) S.I.E.T. Women's College—hardship to students on account of Collection third term fees. .. .. .. .. | 156–158 |
| (b) Adverse effect on production of cement due to coal shortage. .. .. .. .. | 159–160 |
| 4. DEMANDS FOR SUPPLEMENTARY GRANTS (FINAL) 1973-74—PRESENTATION. .. .. | 160–166 |
| 5. ANNOUNCEMENTS— | |
| (a) D.S.G. (Final), 1973-74—Time for giving cut motions. .. .. .. .. .. | 167 |
| (b) Message from the Council .. .. .. | 256 |
| 6. VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1974-75—*cont.* | |
| (a) Demand No. 35—Irrigation .. .. <br> (b) Demand No. 36—Public Works—Buildings <br> (c) Demand No. 37—Public Works—Establishment and Tools and Plant .. .. <br> (d) Demand No. 38—Roads and Bridges .. <br> (e) Demand No. 50—Capital Outlay on Irrigation. <br> (f) Demand No. 51—Capital Outlay on Public Works-Buildings . .. .. .. <br> (g) Demand No. 52—Capital Outlay on Roads and Bridges | 167–351 |
| PAPERS LAID ON THE TABLE .. .. .. | 351–352 |


*Wednesday, 27th March 1974.*


| | |
|---|---|
| 1. OBITUARY REFERENCE— | |
| Demise of Thiru L.C. Pais, former Member of the Assembly .. .. .. .. .. | 381 |
| 2. QUESTIONS AND ANSWERS .. .. .. | 381–418 |
| 3. CALLING ATTENTION— | |
| (a) Strike by Karur handloom weavers .. | 418–420 |
| (b) Fast by workers of Alexander Thread Company, Mettur .. .. .. | 420–422 |




*Wednesday, 27th March 1974 cont.*


| | PAGES |
|---|---|
| 4. POINTS OF ORDER— | |
| (a) Allotment of a separate seat for Speaker during the discussion on the Motion for Removal of the Speaker .. .. .. | 428 |
| (b) Taking up of Motion relating to Removal of Speaker immediately after question hour | 423–424 |
| (c) Appointment of a Member from the Panel of Chairmen for conducting the proceedings on Motion for Removal of Speaker .. . | 429–430 |
| (d) Non-issue of Speaker's gallery pass .. | 430–431 |
| (e) Priority to Motion relating to Removal of Speaker from Office .. .. .. .. | 431–435 |
| 5. MOTION RE REMOVAL OF SPEAKER FROM OFFICE .. .. .. .. . .. | 424–428 |
| 6. VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1974-75—*cont.* <br> (a) Demand No. 24—Industries .. .. <br> (b) Demand No. 26—Handloom and Textiles <br> (c) Demand No. 49—Capital Outlay on Industrial Development, <br> (d) Demand No. 13—Administration of Justice, <br> (e) Demand No. 14—Jails | 436–639 |
| 7. PAPERS LAID ON THE TABLE .. .. .. | 640–642 |


*Thursday, 28th March 1974.*


| | |
|---|---|
| 1. QUESTIONS AND ANSWERS .. .. .. | 659–688 |
| 2. ADJOURNMENT MOTION— | |
| Pallavan Transport Bus-accident near Tambaram .. .. .. .. .. | 688–694 |
| 3. GOVERNMENT MOTION— | |
| Suspension of Rule 41 (3) .. .. .. | 694 |

*Thursday 28th March 1974*—cont


| | PAGES |
|---|---|
| 4. CALLING ATTENTION— | |
| (*a*) Closure of Urdu Training Schools and its consequences .. .. .. .. .. | 694–696 |
| (*b*) Distribution of Inam lands in certain villages in Tirunelveli District .. .. | 696–699 |
| (*c*) Rise in price of foodgrains and foodstuffs | 699–703 |
| 5. DEMANDS FOR SUPPLEMENTARY GRANTS (FINAL) 1973–74–GENERAL DISCUSSION .. | 704–719<br>720–728 |
| 6. POINT OF ORDER— | |
| Discussion on Supplementary Grants | 719–720 |
| 7. VOTING ON DEMANDS FOR EXCESS EXPENDITURE 1973–74 | |
| Demand No. 1—Land Revenue Department | 729 |
| Demand No. 2—State Excise Duties .. | 729–731 |
| Demand No. 3—Motor Vehicles Act—Administration<br>Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties–Administration | 731 |
| Demand No. 5—Stamps–Administration .. | 731–732 |
| Demand No. 6—Registration Department<br>Demand No. 7—State Legislature<br>Demand No. 8—Elections | 732–733 |
| Demand No. 9—Head of State, Ministers and Headquarters Staff<br>Demand No. 10—Milk Supply Schemes | 733 |




*Thursday 28th March 1974*—cont.


| | PAGES |
|---|---|
| 7. Voting on Demands Grants for Excess Expenditure 1973–74—*cont.* | |
| Demand No. 11—District Administration and Miscellaneous .. .. .. .. .. | 733–734 |
| Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. ..<br>Demand No. 13—Administration of Justice<br>Demand No. 14—Jails .. .. .. .. | 734 |
| Demand No. 15—Police .. .. ..<br>Demand No. 16—Education .. ..<br>Demand No. 17—Medical .. .. .. | 735 |
| Demand No. 18—Public Health .. ..<br>Demand No. 19—Agriculture .. .. ..<br>Demand No. 20—Fisheries .. .. ..<br>Demand No. 21—Animal Husbandry .. | 736 |
| Demand No. 22—Co-operation .. ..<br>Demand No. 23—Industries .. .. ..<br>Demand No. 25—Handlooms and Textiles ..<br>Demand No. 26—Khadi .. .. .. | 737 |
| Demand No. 27—Community Development Projects, etc. .. ..<br>Demand No. 28—Labour including Factories<br>Demand No. 29—Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. | 738 |
| Demand No. 32—Public Works–Works ..<br>Demand No. 33—Public Works–Establishment and Tools and Plant<br>Demand No. 34— Public Works–Grants–in–aid | 739 |
| Demand No. 35—Road Transport Schemes .. | 739–740 |
| Demand No. 37—Pensions ... .. ..<br>Demand No. 38—Miscellaneous .. ..<br>Demand No. 40—Forest Department .. | 740 |

| | PAGES |
|---|---|
| *Thursday 28th March 1974*—cont. | |
| Demand No. 45—Capital Outlay on Industrial Development .. .. .. .. .. | 740–741 |
| Demand No. 46—Capital Outlay on Irrigation<br>Demand No. 47—Capital Outlay on Public Works .. .. ..<br>Demand No. 48—Capital Outlay on Road Transport Schemes | 741 |
| Demand No. 52—Loans and Advances by the State Government .. .. .. .. | 742 |
| 8. ANNOUNCEMENTS— | |
| (a) Tamil Nadu Appropriation Bill, 1974 .. | 742 |
| (b) Business of the HouseChange in the order.. | 793 |
| (c) Tamil Nadu Motor Vehicles Taxation Bill, 1974 (L.A. Bill No. 10/74) .. .. .. | 860 |
| 9. GOVERNMENT BILL— | |
| Tamil Nadu Appropriation Bill, 1974 .. .. | 742 |
| 10. VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1974–75 | |
| (a) Demand No. 29—Labour including Factories | 743–792 |
| (b) Demand No. 32—Housing .. .. .. | 793–859 |
| 11. PAPERS LAID ON THE TABLE .. .. .. | 860–861 |


## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

---

### தமிழ் நாடு ஆளுநர்.

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா**

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (முதலமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. The Hon. Thiru MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. The Hon. Thiru K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. The Hon. Thiru O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. The Hon. Thiru M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்.
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா.
5. திரு. கே. எ. வகாப்.
6. திரு. கோ. இளங்கோவன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எஸ்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ. ,

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம் , |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்பத்தூர்–மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பேரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரோ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 61 கார்த்தீசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 93 | சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 | சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 | சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 | சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 | சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 | சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 | சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 | சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 | சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 | சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 | சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 | சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 | சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹளூர் (செ. வ.) |
| 106 | சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 | சுந்தரம், திரு. ஓ. எண். | திண்டுக்கல். |
| 108 | சுப்பிரமணியம், திரு. ஏ. | சிங்கநல்லூர். |
| 109 | சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம். |
| 110 | சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 | சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 | சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 | சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 | சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 | சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 | சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 | சுப்பையா, திரு. ஏ. ஆர். | கடயநல்லூர். |
| 118 | சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 | சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 | சுவாமிதாஸ், திரு. ஏ. | பத்மநாபபுரம். |
| 121 | செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 | ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 123 | செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர் (செ. வ.) |
| 124 | செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 125 | செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 | சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 | சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 | சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 | சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 | சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 | டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 | தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 133 | தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 | தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 | தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 | திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 | தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 | தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 | திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 | துரைசாமி திரு. ஏ. க. | குடியாத்தம். |
| 141 | துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 | துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 | துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 | தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 | தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 | தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 | தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 | நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 | நரசிம்மன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 151 | நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 | நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 153 | நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 | நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 155 | நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 156 | நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 | நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே. எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திருவோணம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டப் பேரவை

## திங்கட்கிழமை, 1974 மார்ச் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 591, 592, 593, 594, 595 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப் படுகின்றன.

### அரிசன மாணவர் விடுதிகள்.

*596. வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனத்தில் வாடகைக் கட்டடத்தில் உள்ள அரிசன மாணவர் இலவச விடுதிக்குச் சொந்த கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இனிமேலாவது கட்டடம் கட்டுகின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இயக்குநரிட மிருந்து எந்தவித செயற்குறிப்பும் வரவில்லை. ஆனால், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து ஏழு கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் வந்திருக்கின்றன. அவைதான் இன்றைக்கு அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த வாடகைக் கட்டடத்திற்கு மொத்தம் எவ்வளவு ரூபாய் வாடகை தரப்படுகிறது? எத்தனை ஆண்டுக்காலமாக இந்த விடுதி வாடகைக் கட்டடத்தில் இருந்துவருகிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: வாடகைக் கட்டடமா என்பது பற்றிய விவரம் இப்பொழுது இல்லை. "சொந்தக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?" என்ற மூலக் கேள்விக்கு "இல்லை" என்று பதில் அளித்தேன்.

[1974 மார்ச் 25

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சென்ற ஆண்டு பட்ஜெட்டில், இம்மாதிரி அரிசன, பிற்பட்ட மாணவர்களுக்குரிய விடுதிகள் கட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதே, அதில் ஏதாவது செலவழிக்கப்பட்டிருக்கிறதா? இதுவரை கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, கடன் கொடுப்பதாக உறுதியளித்த வங்கிகள் கடன் கொடுக்க மறுத்துவிட்டன. எனவேதான், இந்த ஆண்டு நலத்துறை மானியத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

**புலவர் சி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, பழனியில் இருக்கும் அரிசன மாணவர் விடுதி வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அதன் தரைப் பகுதி முழுவதும் பள்ளமும் மேடுமாக உள்ளது. அதைச் சீர்திருத்திக் கொடுக்க கட்டட உரிமையாளர் மறுக்கிறார். ஆகவே, அந்தக் கட்டடத்திற்கு பதில், அரசாங்கமே புதிய கட்டடம் ஒன்றைக் கட்டி, அங்கு இந்த விடுதியை மாற்றுவதற்கு முன்வருமா? அல்லது, வேறு நல்ல கட்டடத்திற்காவது அந்த விடுதியை உடனடியாக மாற்ற அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல, மாணவர் விடுதிகள் இருக்கும் பல கட்டடங்கள் அப்படிப் பட்ட நிலையில் இருக்கின்றன என்பதை மனத்திலே வைத்துத்தான் அரசு, கடந்த ஆண்டு வங்கிகள் மூலமாக கடனுதவி பெற்று புதிய கட்டடங்கள் கட்டுவதாக இருந்தது. ஆனால், உத்தரவாதம் கொடுத்திருந்த வங்கிகள் பிறகு கடன் தர மறுத்துவிட்டார்கள். அதனால் அரசே சொந்த நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கட்டடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதிலே எந்தெந்த விடுதிகளை முதலில் எடுத்துக் கொள்வது என்று பரிசீலனை செய்து அந்த விடுதிகளை அரசு கட்ட முன்வரும்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்கு விடுதிகள் கட்டுவதைப் பொறுத்து, தனியார் நடத்தும் பள்ளிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கு அவர்கள் கட்டடம் கட்டினால் அதற்கு ஏதாவது நிதி உதவி செய்ய அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அப்படிப்பட்ட திட்டம் இப்பொழுது இல்லை.

*** 597 வினா.—திரு. டி. சி. இம்மாயக் கவுண்டர்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், தாட்ரம்பள்ளியிலும், கந்திலியிலும் அரிசன மாணவர் விடுதி திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1974 மார்ச் 25]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை. ஆயினும், அரிசன நல இயக்குநர் வட ஆற்காடு மாவட்ட நல அலுவலரிடமிருந்து தக்க செயற்குறிப்பு கேட்டுள்ளார். செயற்குறிப்பு வந்த உடன் அது தனியே பரிசீலனை செய்யப்படும்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவர் அவர்களே, மிக மிகத் தேவைப்படும் இப்படிப்பட்ட ஒரு நல்ல காரியத்திற்கு வங்கிகள் கடன் கொடுக்க மறுத்து விட்டன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்கள் கடன் கொடுக்க மறுத்ததற்குக் காரணம் என்னவென்று அவர்கள் சொல்கிறார்கள்? அவர்கள் என்ன காரணம் சொன்னாலும், இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு வங்கிகள் கடனுதவி செய்யவேண்டும் என்று மத்திய அரசினிடம் எடுத்துச்சொல்லி, அதைப் பயன்படுத்திக்கொள்வது மட்டும் அல்லாமல், ஆயுள் காப்பீட்டுக் கழகம் (லைஃப் இன்ஷுரன்ஸ் கார்ப்பரேஷன்) போன்றவற்றிலிருந்தும் கடனுதவி பெற நம்முடைய அரசு ஏதாவது முயற்சிகள் எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** வங்கிகளிடமிருந்து வாங்கிய எல்லாக் கடன்களையும் திருப்பிக் கட்டிவிட்டோம். ஆனால், அவர்கள் கூறுவது என்னவென்றால், இப்படிப்பட்ட விடுதிகளுக்கெல்லாம் வங்கிகளிலிருந்து கடன் கொடுத்தால் அதிலிருந்து 'ரிடர்ன்' எதுவும் வர வாய்ப்பு இல்லை; எனவே, இப்படிப்பட்ட விடுதிகள் கட்டுவதற்காக நிதி உதவி செய்வதற்கில்லை என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்கள். அதைத்தான் இன்றைக்குப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மத்திய அரசுக்கும் அதுபற்றி எழுதியிருக்கிறோம். நாலரை சத விகித வட்டிக்கு வங்கிகள் தருவதில்லை; பத்தரை சதவீதம் வட்டி கேட்கிறார்கள். அதையும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசு வங்கிகளிடமிருந்து இப்படிப்பட்டவைகளுக்குக்கூட கடனுதவி பெற்றுக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

**திரு. ப. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதுபோல் எத்தனை விடுதிகள் கட்ட அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** திட்டவட்டமாக இன்னும் முடிவு எடுக்கவில்லை. நிதி ஒதுக்கீட்டுக்கேற்ப எந்த எந்த விடுதிகளைக் கட்டுவது என்பதை முடிவு செய்ய வேண்டும். எந்த எந்த விடுதிகளில் எத்தனை மாணவர்கள் தங்கியிருக்கிறார்கள், எவ்வளவு பெரிய அளவில் கட்ட வேண்டும் என்பதைப் பொறுத்துத்தான் எத்தனை என்று சொல்ல முடியும். இப்பொழுதுதான் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். எத்தனை கட்டடங்கள் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை.

[1974 மார்ச் 25

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நாட்டரம்பள்ளியிலும் கந்திலியிலும் அரிசன மாணவர் விடுதிகள் திறப்பதற்கு செயற்குறிப்பு இல்லை, அதுகுறித்துப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டு பகுதிகளும் வடார்க்காடு மாவட்டத்திலேயே பிற்படுத்தப்பட்ட பகுதிகளாகும். ஆகவே, அந்த இரு பகுதிகளைக் குறித்து அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தனி அக்கறை எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டிலேயே அங்கு விடுதிகள் திறக்கப்பட முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: விடுதிகள் தேவை என்றால், அதுகுறித்து மாவட்ட நல அதிகாரிதான் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் இயக்குநருக்குத் தெரிவிக்கிறார். எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள், எத்தனை மைல் சுற்றுவட்டாரத்திலிருந்து மாணவர்கள் வருகிறார்கள், அவர்களுக்கு ஒரு விடுதி தேவையா என்பதைக் குறித்து மாவட்ட நல அதிகாரி செயற்குறிப்பு அனுப்பவேண்டும். அப்படி செயற்குறிப்பு அவர்கள் அனுப்பவில்லை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் நல்ல காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று கருதுகிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட நல அதிகாரியை அணுகி, இந்தச் செயற்குறிப்பை விரைவில் அனுப்ப ஏற்பாடு செய்வார்களானால், அதை அரசு விரைவிலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

* 598 வினா.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி நபர்களால் நடத்தப்படும் அரிசன மாணவர் விடுதிகளை அரசு மேற்கொள்ளும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) அரிசன நலத்துறை உதவி பெற்று தனியார்களால் நடத்தப்படும் அரிசன மாணவர் விடுதிகளைப் படிப்படியாக அரசு மேற்கொள்வதெனவும் அவ்வாறு மேற்கொள்ளும்போது ஒழுங்கீனமாக நடத்தப்படுபவைகளை முதலில் மேற்கொள்வதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி ஒவ்வொராண்டும் நிதி நிலைமையைக் கருத்திற் கொண்டு, ஒரு சில தனியார் நடத்தும் விடுதிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தனியார் நடத்தும் அரிசன நல விடுதிகள் நம்முடைய மாநிலத்தில் தற்போது மொத்தம் எத்தனை உள்ளன? இதுவரை அரசால் எத்தனை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா?



1974 மார்ச் 25]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. நூற்றுக்கும் மேலாகத்தான் இருந்தன. ஆனால், படிப்படியாக ஆண்டுக்காண்டு குறைந்தது. 20–25 விடுதிகளைக் கையகப்படுத்தினோம். பிறகு படிப்படியாகக் குறைந்தது. இந்த ஆண்டு எடுக்க முடியும் என்ற நிலை கூட இல்லை. மொத்தமாக இதுவரை முப்பது, முப்பத்தைந்து தனியார் விடுதிகளுக்கு மேல் நாம் கையகப்படுத்தியிருப்போம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு இந்த ஹாஸ்டல் வசதி செய்துகொடுப்பதைப் பொறுத்தவரையில் அது ஒரு நல்ல காரியம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். அரிசனங்களுக்காக நடத்தக்கூடிய ஹாஸ்டல் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. அதிலே ஒரு விசேஷக் கவனம் செலுத்தி, இதுவரை தனியார் நடத்திக்கொண்டிருப்பதை சர்க்கார் எடுப்பதற்கு—இந்த ஆண்டு முடிவு செய்யாமற்போனாலுங்கூட—விசேஷ முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இது நீண்ட காலத்திற்கு முன்னால் எடுத்த ஒரு முடிவாக இருந்தாலும், தனியார் நடத்துகிற விடுதிகளை அரசு எடுக்கும்போது, அவைகளையெல்லாம் எடுக்கக் கூடாது, அவர்களே நடத்தட்டும் என்று பல பேர் சிபாரிசுக்கு வந்தார்கள். அதற்காகவே சிலவற்றை விட்டுவிட்டோம்.

வேறு சில விடுதிகளை எடுக்கும்போது, அவர்கள் 'நாங்கள் கடன் வாங்கி இருக்கிறோம்; அந்தக் கடனை நாங்கள் திருப்பித் தரவேண்டும்; அதற்காக நாங்கள் இன்னும் கொஞ்ச நாட்களுக்கு நடத்திக்கொள்ளுகிறோம்' என்று கூறுகிறார்கள். இன்னும் சில இடங்களில், அப்படியே வற்புறுத்தி நாங்கள் எடுத்தாலும், அதை நடத்துவதற்கு அரசு வாடகைக்குக் கட்டடம் எடுக்க வேண்டும். மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக கட்டடங்களை வாடகைக்குத் தரவேண்டும் என்று கேட்டால், வீட்டுச் சொந்தக்காரர்கள் பலர், பையன்கள் வசித்தால் வீட்டை இடித்துப் போட்டுவிடுவார்கள் என்று காரணம் சொல்லி வீடு தர மறுக்கிறார்கள். இடம் கிடைப்பதில்லை. சில திடல்கள் கிடைத்தால் அங்காவது குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று அப்படியும் சில இடங்களில்கூட பார்த்து செய்துகொண்டு வருகிறோம். இப்படிப் பல சிக்கல்கள் இருப்பதால் இந்தத் திட்டத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் நிறைவேற்றிக்கொண்டு வர முடிகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: அரசு மானியம் பெற்று தனியார் நடத்துகிற அரிசன ஹாஸ்டல்களை மேற்பார்வை (சூபர்வைஸ்) செய்ய அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நலத் துறை அதிகாரி அவர்கள் அடிக்கடி போய் மேற்பார்வை செய்கிறார். இயக்குநர் அவர்களும் மேற்பார்வை செய்கிறார். சில சமயங்களில் நான் கூட அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்யும்போது திடீர் விஜயம் செய்து, பிள்ளைகளுக்கு சரியான உணவு தரப்படுகிறதா என்று பார்த்து வருகிறேன். எனவே, அடிக்கடி சென்று பார்த்து மேற்பார்வை செய்யப்படுகிறது. கணக்குகள் ஒழுங்காக வைத்துக்கொள்கிறார்களா, அன்றாடம் அவர்கள் உரிய அளவு உணவுப் பொருள் மாணவர்களுக்கு வழங்குகிறார்களா என்று கண்காணிக்கப்படுகிறது. மாண வர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து கணக்கு வைத்துக்கொள்வதில் சில தவறுகளைச் செய்கிறார்கள். பத்து மாணவர்களை வைத்துக்கொண்டு இருபது மாணவர்கள் இருப்பதாகக் கணக்குக் காட்டி, பணம் வாங்குகிறார்கள். அவைகளையெல்லாம் திடீர் என்று விஜயம் செய்து, தவறுகள் இருந்தால் கண்டுபிடித்து, தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். இவை களையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு, அரசே இந்த விடுதிகளை எடுத்துக் கொள்வது என்று நீண்ட காலத்திற்கு முன்பே முடிவு எடுத்து, அதன்படி இது கொஞ்சங் கொஞ்சமாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தனியார் நடத்தும் விடுதிகளில் நிறைய ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையில் என்னென்ன ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த ஒழுங்கீனம்தான் முப்பது பிள்ளைகள் என்று சொல்லி அரசாங்கத்தினிடம் கிராண்ட் வாங்கு வார்கள். அங்கு 20 பிள்ளைகள்தான் இருப்பார்கள்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, நாட்டிலுள்ள பல அரிசன மாணவர்கள் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் இல்லாமல் நெருக்கடியான சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற அரிசன வீட்டு வசதி கழகத்தின் மூலமாக முதல் கட்டமாக கடன் தொகையை பெற்றுவது மாணவர்கள் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் உருவாக்குவதற்கு உரிய வழி வகைகள் செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த எண்ணத்தில்தான் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெற்று வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக இந்த விடுதிகள் கட்டவேண்டும் என்பது தான் அரசின் திட்டம். ஆனால், இடையிலே அந்த வங்கிகள் கடன் கொடுக் கிறேன் என்று சொல்லி கடைசியில் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அதனால்







இந்தத் திட்டம் இப்பொழுது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. வங்கிகள் இப்படிப்பட்ட திட்டங்களுக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசு அவர்களுக்கு உத்தரவிட வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக் கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அமைத்த அந்த மேம்பாட்டுக் கழகத்திற்குக் கூட அவர்கள் அப்படிச் சொல்லிவிட்டார்கள். நாமும் வங்கிகளைச் சேர்ந்தவர்களை நேரில் சிலரை அழைத்துப் பேசியும் கூட அவர்களெல்லாம் 4½ சதவீதம் வட்டிக்குக் கொடுக்க முடியாது, 10½ சத வீதம் வட்டிக்குத்தான் கொடுக்கிறோம். அதோடுகூட வெறும் வீடுகள் மட்டும் கட்டிக் கொடுத்தால் தங்களுக்கு பணம் திருப்பி வருவதற்கு வாய்ப்பு இல்லை. அரசாங்கமே கடன் பெற்று திருப்பித் தருவதற்கு ஏற்பாடு இருக்க வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. குறைந்த வட்டிக்கு விடுதிகள் கட்டுவதற்குப் பணம் கடன் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். எகனாமிக் யூனிட் இல்லாமல் கடன் கொத்தால் எங்களுக்குப் பணம் திருப்பி வருவதற்கு எங்கே வாய்ப்பு இருக்கிறது, வீடுகள் கட்டிக் கொடுத்துவிட்டு சொந்தக்காரர்கள் கடன் தொகையை திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டால் எங்கள் பணம் என்ன ஆவது, ஆகவே நாங்கள் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டதால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. நாமும் மத்திய சர்க்காருக்கு வங்கிகளிலிருந்து இப்படிப்பட்ட காரியங்களுக்காக கடன் வழங்கவேண்டும் என்று எழுதியிருக்கிறோம். மத்திய அரசு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி களுக்கு இப்படிப்பட்ட தாக்கீதோ, உத்தரவோ தருவார்களானால், வங்கிகள் கடன் தர முன்வரும். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டது போல வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியும்.

## இராதாபுரம் பகுதியில் இரால் மீன் விற்பனை

* **599. வினா—திரு. வீ. கார்த்திசன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி கடற்கரை பகுதிகளில் இரால் மீன்பிடி காலங்களில், கேரள வியாபாரிகள் எல்லோரும் கூட்டு சேர்ந்து இராலை குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) இராதாபுரம் தொகுதி கடற்கரைப் பகுதிகளில் கேரள முதலாளிகள் நேரடியாக இராலைக் கொள்முதல் செய்யவில்லை. கேரளாவில் இராலைப் பக்குவப்படுத்தி மேல்

நாடுகளுக்கு அனுப்பத் தக்க வாய்ப்புகளும், ஏற்றுமதி வியாபார அனுபவம் முதலிய சாத்தியக் கூறுகளும் இருப்பதால் தமிழ் நாட்டு கடற்கரைப் பகுதிகளில் பிடிபடும் இறால்கள், தமிழ் நாட்டு வியாபாரிகளால் முதலில் வாங்கப்பட்டு, பின்பு கேரள வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு அதன் பின்னர் கேரளாவிலிருந்து மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. ஆகவே இது சம்பந்தமாக நடவடிக்கை அவசியமில்லை.

**திரு. என். டென்னிஸ்:** இது அதிகமாக கிடைக்கிற காலத்தில் பிஷரீஸ் டிபார்ட்மெண்ட் அல்லது சொஸைடிகளின் மூலம் இதை ஸ்டோர் செய்து, அதன் மூலம் வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய ஒரு பொருளாக இருப்பதினால், இதன் மூலம் வருவாய்க்கு அதிக வாய்ப்பு இருப்பதினால் இம்மாதிரி ஒரு திட்டத்தைத் தீட்டி, அதற்கான வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அதற்குத்தான் இந்த பிஷரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் இப்பொழுது உருவாகியிருக்கிறது. அதற்கு முன்னால் நமக்கு நல்ல துறைமுகங்கள் தேவை. கப்பல்கள் அங்கே வர வேண்டும். கொச்சித் துறைமுகத்தில்தான் இப்பொழுது ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து கப்பல்கள் வருகின்றன. அவர்களுக்கு அங்கேயிருந்து கப்பல் மூலம் இந்த இறால் மீன்களை அனுப்புவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. நமக்கு அப்படிப்பட்ட துறைமுகங்கள் இருக்கவேண்டும். அதற்கு பிஷ்ஷிங் ஹார்பர்ஸ் இருக்கவேண்டும். அதுதான் இப்பொழுது கட்டிக்கொண்டிருக்கிறோம்.

இப்பொழுது அமைக்க இருக்கிற பிஷ்ஷிங் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் மூலம் ஃப்ரீஸிங் பிளாண்ட், கோல்டு ஸ்டோரேஜ் முதலியவைகள் பெரிய அளவில் உண்டாக்கி இங்கே பிடிக்கப்படும் மீன்களை கலெக்ட் செய்து பக்குவப்படுத்தி அனுப்புவதற்கு அந்தக் கார்ப்பரேஷன் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** கேரளாவிலிருந்து வியாபாரிகள் இறால் மீன்களை வாங்கிச் செல்கிறார்கள், அதற்கு உண்டான சூழ்நிலைகள், வசதிகள் வாய்ப்புகள் கேரளாவில் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது சொன்னார்கள்.

அதிலே பிரச்னை என்னவென்றால் அந்த மீன்களைப் பிடித்துவருகிற மீனவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. இடைத் தரகர்கள் குறைந்த விலைக்கு வாங்கி கூடுதல் விலைக்கு விற்று அதிகமான லாபம் பெறுகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு மீன்துறை இலாகாவே இந்த மீன்களை நேரிடையாக வாங்கி கேரள வியாபாரிகளுக்கு விற்பதற்கு வழிவகைகள் செய்வார்களேயானால், மீனவர்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கும், சர்க்காருக்கும் லாபம் கிடைக்கும். அதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்துவார்களா?



**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அரசு வாங்க முயற்சித்தால் மீனவர்கள் அதிக விலைகூட கேட்பார்கள். அதில் தகராறுகூட செய்வார்கள். இந்த விலை கொடுக்கவில்லையென்றால் மீன்களை கொடுக்க முடியாது என்று கூறுவார்கள். தனிப்பட்ட வியாபாரிகளுக்கு விற்றால் கொடுக்கல் வாங்கல் என்ற முறையில் அவர்களுக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டுக்கொடுப்பார்கள். அந்த முறையில் சுமுகமான சூழ்நிலையில் வியாபாரம் செய்வார்கள். அரசு தலையிட்டால் கூடுதலான விலை கொடுக்கவேண்டுமென்று கேட்பார்கள். சங்குகளுக்கு விலை வைத்த பிறகு அதிகமான விலை கொடுக்க வேண்டும் என்று அந்தத் தொழிலாளர்கள் கோரியதுபோல் கேட்பார்கள், அரசு அதற்கு இடம் தரவேண்டிவரும். ஆகவே, அதனால் நஷ்டம் ஏற்படுமே தவிர லாபம் ஏற்படாது.

**திரு. என். கே. பழனிசாமி:** கேரளாவில் பிரான் ஃபிஷ் வளர்ப்பதற்கு ஸ்பெஷல் திட்டம் போட்டு—இது முக்கியமாக ஃபாரின் எக்சேஞ்ச் கிடைக்கக் கூடிய ஒரு விஷயமாக இருப்பதன் காரணமாக—சர்க்கார் பிரான் ஃபிஷ் வளர்ப்பதற்கு ஏதாவது திட்டம் வகுத்து அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இப்பொழுது நமக்கு இறால்கள் கிடைக்கின்றன, கிடைக்காமல் ஒன்றும் போகவில்லை. நிறைய இறால்கள் கிடைக்கின்றன. அவைகளையெல்லாம் பிடித்து பக்குவப்படுத்தி அயல் நாட்டுக்கு அனுப்புவதற்கு கேரளாவைவிட நமக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, நாம் அதை இப்பொழுது உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். ஃபிஷ்ஷிங் கார்ப்பரேஷன் அமைந்துவிட்ட பிறகு, பிஷ்ஷிங் ஹார்பர்ஸ் கட்டப்பட்ட பிறகு கேரளாவைவிட நாம் அதிக அளவிலே அனுப்ப முடியும். காரணம் கேரளாவைவிட அதிக அளவு இறால் மீன்கள் நமது நாட்டிலே கிடைக்கின்றன. ஆனால் கேரளாவில் மீன்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன, நமக்கு இப்பொழுது இல்லை. ஆனால் இங்கே இறால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. நான் இந்த மான்யக் கோரிக்கை விவாதத்தின்போதுகூட சொன்னேன். மாரி கல்சர் என்ற முறையில் பிரான் கல்சர் அதிகமாகச் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கிறது. நாமும் அதிகமாக உற்பத்தி செய்ய விரும்புகிறோம். கேரளாவைவிட நல்ல ரக இறால்கள் நமக்குக் கிடைக்கின்றன. சிங்கி இறால் லாப்ஸ்டர் போன்ற அயல் நாட்டுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்படும் நல்ல ரக மீன்கள் இங்கே கிடைக்கின்றன. அவைகளை அனுப்புவதற்குப் போதிய வாய்ப்பு வசதிகள் இல்லாத காரணத்தினால்தான் நம்மால் அதிகமாக அனுப்ப முடியவில்லை.

[1974 மார்ச் 25

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அதிகமாக இரால் மீன்கள் நமது மாநிலத்தில் கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலும் இந்த இரால் மீன்கள் தென் மாவட்டங்களிலுள்ள கடலோரத்தில் அதிகமாகக் கிடைக்கின்றன. இது அதிகமாக டாலர் சம்பாதிக்கக்கூடிய ஒரு பொருளாக இருக்கிறது. ஆனால் ஏற்றுமதி செய்வதற்கு உள்ள பிஷ்ஷிங் ஹார்பர் இல்லை என்ற குறையை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மிகவும் முக்கியமாக அயல் நாட்டுச் செலாவணியை சம்பாதித்துத் தரக்கூடிய இரால் மீன்களை அரசாங்கமே வாங்கி அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. குளச்சலில் பிஷ்ஷிங் ஹார்பரை டெவலப் செய்தால் இந்தக் குறையை நிவர்த்தி செய்து பெரிய அளவுக்கு பொருள் சம்பாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, குளச்சல் ஹார்பரை பிஷ்ஷிங் ஹார்பராக சீக்கிரம் ஆக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த டிமாண்ட் விவாதத்தின்போது குளச்சல் துறைமுகத்தைப்பற்றி பேசிவிட்டீர்களே ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** குளச்சலை விட மிகப் பெரிய பிஷ்ஷிங் ஹார்பர் தூத்துக்குடியில் கட்டப்பட்டுவிட்டது. அதைவிட மிகப் பெரிய ஹார்பரை சென்னையில் கட்டி முடிப்பதற்கான திட்டம் இருந்தது. அது டிசைன் சரியில்லை என்று நிறுத்திவைக்கப்பட்டது. இப்பொழுது எல்லாம் சரிசெய்யப்பட்டு, அதற்கு வேண்டிய தொகை ஒதுக்கப்பட்டு, வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. குளச்சலில் ஒரு இயற்கையான பே இருக்கிறது. அதை ஒரு பெரிய அளவில் துறைமுகமாகக் கட்டலாம் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் இப்பொழுது இடையில் பாறைகள் இருக்கின்றன என்று சொல்லி பெரிய கப்பல்கள் வருவதற்கான வாய்ப்பிற்கு அந்தப் பாறைகள் தடையாக இருக்கின்றன என்ற காரணத்தினால் குறைந்த அளவில் வரக்கூடிய அளவுக்கு சிறு சிறு போட் ஜெட்டீஸ் வைக்கலாம், அதற்கான ஃப்ரீஸிங் பிளாண்ட், கோல்டு ஸ்டோரேஜ் இவைகளெல்லாம் வைத்து குளச்சலை ஒரு நல்ல துறைமுகமாக மாற்றுவதற்கு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மல்லிப்பட்டணம், வீபுரம் இவைகளெல்லாம் சேர்ந்தால் பல பெரிய, சிறிய துறைமுகங்கள் வரத்தான் செய்யும். பிஷ்ஷிங் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் வந்துவிட்ட பிறகு நல்ல முறையான அமைப்புகளை ஏற்படுத்த முடியும்.



1974 மார்ச் 25]

**திரு. மு. வேதாசலம் :** தமிழ்நாட்டில் அதிக அளவில் இரால் கிடைக்கிறது; ஆனால் அந்த இரால் முழுவதையும் மீனவர்கள் பிடிப்பது கஷ்டமாக இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தனிப்பட்டவர்களால் பிடிக்க கஷ்டமாக இருப்பதால் சர்க்காரே அந்த இரால் மீன்களைப் பிடித்து ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மற்றவர்கள் பிடிக்கக்கூடிய சூழ்நிலையைத்தான் சர்க்கார் உருவாக்க முடியும். சர்க்கார் மீனைப் பிடிக்காது; ஆளைத்தான் பிடிக்கும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, இந்த இரால் நமது கடற்கரையில் அதிகமாகக் கிடைக்கிறது. முன்பெல்லாம் 4 ரூபாய் 5 ரூபாய்க்கு கிடைத்த இரால் இப்போது 14 ரூபாய் 15 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது; அதுவும் கஷ்டமாக இருக்கிறது. வெளிநாடுகளுக்கு முழுவதையும் ஏற்றுமதி செய்துவிடுவதுதான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஏற்கெனவே இந்த இரால் மீன்களைச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டு விட்டவர்களுக்கு கஷ்டம் இல்லாமல் கிடைப்பதற்கு, ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை யாவது மொபைல் பஸ்கள் மூலம் உள்நாட்டில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமித்து :** இந்த இரால் மீன்களுக்கு உள்நாட்டிலும் அதிக கிராக்கி இருக்கிறது; வெளிநாட்டிலும் அதிக கிராக்கி இருக்கிறது. ஆகவே, மீனைப் பிடிப்பவர்களும் இந்த இரால் மீனைத்தான் தேடிச் செல்கிறார்கள். அதற்கு அதிக விலை கிடைப்பதுதான் காரணம். இங்கே இருக்கிற மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில், கார்ப்பரேஷன் நிறுவப்பட்ட பின்னால், ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை உள்நாட்டினருக்கு என்று ஒதுக்கிவிட்டு, மீதியை ஏற்றுமதி செய்வது குறித்து ஆலோசனை செய்யலாம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த இரால் மீன்களுக்கு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் அதிக கிராக்கி இருப்பதால், இந்த மீன் இனத்தை ஏரிகளிலும் குளங்களிலும் அதிக அளவில் வளர்த்து உற்பத்தியைப் பெருக்குவது அரசுக்கு சாத்தியமாக இருக்காதா ? அதனால் அதிக வருமானம் கிடைக்குமே. எனவே, அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இரால் மீன்களை ஏரி, குளங்களில் வளர்க்க முடியாது. அதன் குஞ்சுகளை உப்பளங்களில் வளர்த்து, கடற் பகுதிகளில் தான் வளர்க்க முடியும். ரகு, மிர்தா போன்ற இனங்களைத்தான் உள்நாட்டு நீர் நிலைகளில் வளர்க்க முடியும்.

[1974 மார்ச் 25

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் என்ற பகுதியில் இந்த இன மீன்களை அதிகமாகப் பிடிப்பதற்குள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அங்கே போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லாததால், இந்த வியாபாரம் சரியாக நடைபெற வசதி இல்லாமல் இருக்கிறது. அதனால் அங்குள்ளவர்கள் அதிக நாட்டம் செலுத்தாமல் இருப்பதாகத் தெரிகிறது. எனவே, வாலிநோக்கம் பகுதியை இந்த இன மீன் பிடிப்பகுதியாக மாற்ற, விசேஷ வசதிகளைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அங்கே இந்தத் தொழில் அதிகம் நடைபெறுகிறது. பெரிய பெரிய வியாபாரிகள் அங்கே இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியமும் அவர்களும் சேர்ந்து நல்ல சாலை வசதிகளைச் செய்துகொள்ள முடியும். ஆனால் அதிலே தகராறு இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் அந்த ரோடு போட மறுக்கிறார்கள். வியாபாரிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அரசுக்கு அதற்கு வேண்டிய அளவுக்கு நிதி ஒதுக்க இப்போது வாய்ப்பு இல்லை. ஆனால் யூனியனும், அரசும், முதலாளிகளும் சேர்ந்து கொஞ்சம் பணம் ஒதுக்கினால் சாலையைப் போடுவதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல பொதுப்பணித் துறையின் மூலம் அந்த ரோட்டைப் போடுவதற்கு முடியுமா என்பதை பரிசிலனை செய்வதற்கு குறிப்பு அனுப்பி வைக்கப்படும்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, குளச்சல் துறைமுகம் நல்ல துறைமுகம் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் பாறை இருப்பதாகச் சொன்னார்கள். குளச்சல் பண்டைக்காலம் முதலாகவே ஒரு பெரிய துறைமுகமாக வெளிநாட்டவராலும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே, அரபிக்கடல் பகுதியிலிருந்து கிடைக்கக்கூடிய மீன்களை இந்தத் துறைமுகம் வழியாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க ஏற்ற வகையில் அதை விருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பெரிய கப்பல்கள் வந்து தங்குவதற்கு வசதி இல்லாத அளவுக்கு அங்கே பாறைகள் இருக்கின்றன. சின்னஞ்சிறு படகுகள் தங்க வசதி இருக்கிறது. அதைத்தான் குறிப்பிட்டேன். அதனால்தான் தூத்துக்குடியில் இருக்கிற துறைமுகத்தைப் பெரிதாக விரிவுபடுத்தியிருக்கிறோம்.



1974 மார்ச் 25]

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, ஏற்றுமதி இறக்குமதி வசதிகளுக்கும் மற்றும் மீன்பிடி வசதிக்கும் பல துறைமுகங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிட வேண்டும். அதாவது சென்னையில் ஒரு பெரிய துறைமுகத்தை அமைக்கவேண்டுமென்று 5, 6 ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்டது. அது இன்னும் செயல்படுத்தப்படவில்லை. அதைப்போலவே எண்ணூரில் இருந்த பதப்படுத்தும் நிலையமும் சரியாகச் செயல்படவில்லை. இவைகளைச் சரியாக செயல்பட வைத்தால் நமக்கு அந்நியச் செலாவணி கிடைப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சென்னைத் துறைமுகத் திட்டத்தை பூனாவுக்கு அனுப்பினோம். அவர்கள் டிசைன் சரியில்லை என்று திருப்பித் திருப்பி அனுப்பிவிட்டு, இப்போது ஏற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு கட்டடங்கள் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு, இப்போது வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எண்ணூரில் 'ஃப்ரீசிங் பிளான்ட்' தனியாரிடம் இருந்தது. அவர்கள் சொந்தச் செலவில் சில இயந்திரங்களை வாங்கி வைத்திருந்தார்கள். அவர்களுடைய ஒப்பந்தம் ரத்தான பிறகு, அவர்களுடைய இயந்திரங்களைக் கொண்டுபோய் விட்டார்கள். வேறு யாரும் அதை ஏற்று நடத்த முன்வரவில்லை. ஆனால் இப்போது டயரி கார்ப்பரேஷன் அதை பதப்படுத்தும் நிலையமாக மாற்றிக்கொள்கிறோம் என்று கேட்டார்கள். இந்தத் துறை அந்தத் துறைக்கு 1,20,000 ரூபாய்க்கு லீசுக்கு விட்டிருக்கிறது.

## ஓட்டப்பிடாரம் துணை வட்ட அலுவலகக் கட்டடம்

* 600 வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஓட்டப்பிடாரத்தில் தாலுகா ஆபீசிற்கு புதிதாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) ஒட்டப்பிடாரத்தில் உப தாலுக்காத்தான் இருக்கிறது. அதன் அலுவலகத்திற்கு புதிதாக கட்டடம் கட்டுவதற்கு ரூ. 95,000 செலவு செய்துகொள்ளும்படி வருவாய்த் துறையின் 30—5—1973 தேதியிட்ட அரசாணை எண். 3053-ல் அனுமதியளிக்கப்பெற்றுள்ளது.

[1974 மார்ச் 25

*Wages for suspension period.*

* 601. Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the State Labour Advisory Committee has recommended during 1973, the amendment of the model standing order of each company or concern so that the worker may get wages during his suspension period; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, (அ) ஆம். தொழிலாளர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படும் கால அளவில் அவர்களுக்கு நிர்வாகத்தினர் வாழ்க்கைப்படி வழங்குவதைக் கட்டாயமாக்கும் வகையில், பொருத்தமான சட்டம் கொண்டுவரப்படலாமென்று மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனை வாரியம் பரிவுரை செய்துள்ளது.

(இ) இது பரிசிலனையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இதுபற்றி எப்போது சர்க்கார் முடிவு செய்யும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இது இப்போது மாநில தொழிலாளர் நல வாரியத்தால் பரிசிலனை செய்யப்படுகிறது. சட்ட இலாகாவுக்கு அனுப்பி சில தகவல்கள் கேட்டிருக்கிறார்கள். தகவல் வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த சர்க்கார் ஊழியர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டால் அந்தக் காலத்திற்கு அரைச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் தனியார் நிறுவனங்களில் கொடுக்கப்படுவதில்லை. தனியார் நிறுவனங்களிலும் கொடுக்கவேண்டுமென்று ஒரு திருத்த பில்லை ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 6 மாதங்களுக்கு முன்பே கொடுத்தார்கள். இன்னும் அது பற்றி முடிவு செய்யப்படவில்லையானால், இன்னும் எவ்வளவு காலமாகும் ? இந்தக் கூட்டத் தொடரிலாவது கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்மிபுகு திரு. க. இராசாராம் :** சட்டத் துறையினரிடம் சில விபரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. பதில் வந்தவுடன் விரைவிலேயே கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இந்த பில் சட்டமாக வருவதற்கு காலதாமதம் ஆகுமானால், இடைக்காலத்திற்கு சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்க அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 மார்ச் 25]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தனியார் நிறுவனங்களில் சில இப்போது அலவன்ஸ் தந்துகொண்டிருக்கிறார்கள். சிம்சன் கம்பெனியில் முழு அளவில் கொடுக்கிறார்கள். ஆகவே, இதற்கு இடைக்காலத்திற்கு என்று திடீரென்று ஒரு சட்டம் தேவையில்லை என்று கருதுகிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், ஒவ்வொரு கம்பெனிக்கும் ஸ்டான்டிங் ஆர்டர் இருக்கிறது. அது அந்தந்த கம்பெனியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் வேலைக்கு எப்போது வரவேண்டும்; எப்போது போக வேண்டும் என்பதைப்பற்றி இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்தி இந்த சஸ்பென்ட் பீரியடுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியாக இருக்குமா ? சஸ்பென்ட் செய்யப்பட்டது நியாயமாகவும் இருக்கலாம், அநியாயமாகவும் இருக்கலாம். அது பரிசிலனை செய்து முடிந்தபிறகுதான் தெரிய வரும். ஆகவே, இப்போது இருக்கின்ற ஸ்டான்டிங் ஆர்டரைத் திருத்தாமல், தனியாக ஒரு சட்டம் கொண்டுவந்து சஸ்பென்ட் பீரியடுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** சட்டம் இயற்றப் படும்போது கனம் அங்கத்தினருடைய ஆலோசனை பரிசிலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

*Lands of Theosophical Society, Madras.*

* 602 Q.—THIRU N. D5NNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a large portion of land belonging to the Theosophical Society at Adayar, in Madras City is being acquired by the Government ; and

(b) if so the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. என். டென்னிஸ் :** அதற்கான ப்ரபோசல் ஏதாவது அரசிடம் இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** முதலில் அப்படிப்பட்ட ஓரெண்ணம் அரசிடம் இருந்தது. அரசுக்குத் தெரிவிக்காமல் விற்பதில்லை—என்கிற சில நிபந்தனைகளை ஒப்பந்தம் மூலமாக ஏற்படுத்திக்கொண்டு, தங்களிடமே அந்த

நிலங்களை விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்த நிபந்தனைகளுக் குட்பட்டு அந்த நிலங்களை அவர்களே வைத்துக்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*Rent for houses under Slum Clearance Board.*

*603. Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the rent for the houses allotted through Slum Clearance Board has been raised from Rs. 10 to Rs. 35 per month; and

(b) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** அரசினால் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு எந்த அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மின்சாரம், தண்ணீர் வசதி இல்லாத வீடுகளுக்கு மாதம் 10 ரூபாய். மின்சாரம், தண்ணீர் வசதி உள்ள இடங்களுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு 15 ரூபாய். தண்ணீர் வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மாதம் ரூ. 12. மின்சார வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு ரூ. 13.

*Sandalwood oil.*

*604. Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to set up a factory under the Public Sector to extract sandalwood oil in this State?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்க ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** ஏற்கனவே நம் மாநிலத்தில் மைசூரைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தியாகக் கூடிய சந்தன மரத்தில் இருந்து சந்தன எண்ணெய், சோப்பு, இதர கைவினைப் பொருள்களைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைப்பதில் என்ன தயக்கம் ?



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தயக்கம் இருப்பதாகச் சொல்லவில்லை. இதன்படி ஒரு சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை 40 லட்சத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஒரு முடிவு எடுக்கலாம்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, the best sandalwood trees are available in plenty in Hosur and Denkanikota taluks in Dharmapuri district. In Bangalore also there is one Sandalwood Factory and sandalwood are taken to Bangalore. Good condition prevails in Hosur. May I know from the Hon. Minister for Forests and Electricity whether a sandalwood factory would be located in Hosur?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நமது மாநிலத்தில் ஐந்தாறு மாவட்டங்களில்தான் சந்தனக் கட்டைகள் கிடைக்கின்றன. உடனடியாக நம் மாநிலத்தில் ஒரு தொழிற்சாலையை ஓரிடத்தில் ஆரம்பித்த பின்னர், படிப்படியாக மற்ற இடங்களிலும் ஏற்படுத்த பரிசீலனை செய்யலாம்.

**திரு. இ. ராமசாமி :** கோயம்பத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த இடம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி இல்லை.

**திரு. கு. ஆ. பொம்மன் :** அமைச்சர் பதில் சொல்லும்போது கோயம்பத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். கோயம்பத்தூர் மாவட்டத்தில் போதிய சந்தன மரம் கிடையாது. நீலகிரி, ஜவ்வாது மலைகளில்தான் நிறைய சந்தன மரங்கள் இருக்கின்றன. ஆகவே நீலகிரியிலோ, ஜவ்வாது மலையிலோ அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நம் மாநிலத்தில் நீலகிரி மலையிலும், ஜவ்வாது மலையிலும், மற்ற இடங்களிலும் விளைகிற சந்தன மரங்கள் சத்தியமங்கலப் பகுதியில்தான் இப்போது சேர்க்கப்படுகின்றன. ஆகவே சத்தியமங்கலத்தில் ஆரம்பிக்கலாம் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அது முடிந்த முடிவல்ல. பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நம் மாநிலத்தில் விளைகிற சந்தன மரங்களில் 80 சதவிகிதம் ஜவ்வாது மலையில்தான் விளைகிறதைப் பார்க்கிறோம். ஆகவே இந்தப் பகுதியில் குறிப்பாக ஆலங்குளம், வாணியம்பாடியில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கூடாது. (சிரிப்பு.)

திரு. எம். ஏ. லத்தீப் : ஆரம்பிப்பார்களா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : ஜவ்வாது மலை வாசனைத் திரவியங்கள் நிறைந்தது. நமது மாநிலத்தில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் வசதி உள்ள இடங்களில் இதுவும் ஒன்று, இது நியாயமான கோரிக்கை என்பதை உணர்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை : சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டில் அதிகமான சந்தன மரங்கள் இருக்கின்றன. ஆகவே சேலம் மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது நம் மாநிலத்தில் எல்லா மாநிலங்களிலும் விளைகிற சந்தன மரங்களை ஒன்று சேர்த்தாலும் ஒரு தொழிற் சாலை ஏற்படுத்தத்தான் போதுமானதாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

திரு. கா. காளிமுத்து : மேற்கு முகவைப் பகுதிகள், ராஜபாளையம் பகுதி ஆகியவற்றில் சந்தன மரங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் முன்னாலே சொன்ன பதிலையே இதற்கும் பதிலாக எடுத்துக்கொள்ளலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : இப்படித் தயாரிக்கப்படும் சந்தன எண்ணெய் எதற்குப் பயன்படும் ? சந்தன எண்ணெயைக் கொண்டு வேறு என்ன பொருள்கள் தயாரிக்க இருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சந்தன எண்ணெய் தயாரிப்பதுதான் இப்போது இருக்கிறது. இதில் இருந்து சோப்பு போன்ற பொருள்கள் தயாரிக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

திரு. கோ. செபமாலை : தென்னாற்காடு மாவட்டத்தில் சந்தன மரங்கள் கிடைக்கின்றன. ஆகவே இங்கே ஒரு தொழிற்சாலை வைக்க முன்வருவார் களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லாம் பரிசீலிக்கப்படவேண்டிய விஷயம்.

திரு. கு. ஆ. பொம்மன் : ஏற்கனவே நடுவட்டத்தில் நறுமணப்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறது. அந்த இடத்திலேயே இந்தத் தொழிற் சாலையை வைப்பது பொருத்தமாக இருக்கும். அதை அரசு ஆலோசிக் குமா ?



1974 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கனவே ஒரு தொழிற்சாலை அந்தப் பகுதியில் இருப்பதால், இதை வேறு ஒரு மாவட்டத்தில் வைப்பதுதான் நியாயம் என்று கருதுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : இதற்காக 40 லட்சம் ஆகும், இது பரிசீலனை செய்யப்படுகிறது என்றார்கள். பரிசீலனை செய்வதற்கு என்ன இருக்கிறது ? உடனடியாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கக்கூடாதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : விவரங்களைச் சொல்ல வேண்டா மென்று நினைத்தேன். மத்திய சர்க்காரோடு தொடர்புகொண்டு, அவர்கள் ஏதாவது உதவி செய்யக்கூடுமா, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் இரண்டும் சேர்ந்து ஏற்படுத்தலாமா என்பது பரிசீலிக்கப்படுகிறது. இல்லையென்றால் மாநில சர்க்காரே ஏற்படுத்த முடியுமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : சந்தன எண்ணெய் தயாரித்து சோப்புகளை தயா ரிக்கவும், மேலும் பல கைவினைப் பொருள்களை மைசூர் மாநிலம் போலத் தயா ரிக்கவும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான இடம் வடாற்காடு மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்வது நியாயமான கோரிக்கை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இந்த நியாயமான கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பொருத்தமான இடங்களிலும் வடாற் காடும் ஒன்று என்பதை நான் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தங்கணிக்கோட்டா, ஓசூர், கும்மிடிபூண்டி, திருப்புவனம் போன்ற பகுதிகள் பற்றி இந்த அவையில் அடிக்கடி கேள்விகள் வருகின்றன. (சிரிப்பு) இந்தப் பகுதிகளில் என்ன என்ன வேண்டும் என்பதை தனியாகவே ஒரு அதிகாரியைப்போட்டு அரசு பரிசீலனை செய்யுமா ? (சிரிப்பு.)

(விடை இல்லை.)

திரு. ஆ. பரந்தாமன் : இந்தத் தொழிற்சாலையை மத்திய அரசின் உதவி யோடு ஆரம்பிக்க முடியவில்லை என்றால் மாநில அரசு ஜாயின்ட் செக்டாரிலாவது உடனடியாக ஏற்படுத்த முன்வருவார்களா

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மத்திய அரசு உதவ முன்வரவில்லை என்றால் மாநில சர்க்காரே ஆரம்பிக்க முடிவு செய்யலாம்.

சென்னையிலிருந்து புறநகர் பேருந்து வழித்தடங்கள்

*605 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தடம் எண் 92-ஏ (பிராட்வே-ஊத்துக்கோட்டை) பேருந்தினை பேரண்டூர் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு எப்போது நிறைவடையும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தடம் எண் 92-ஏ (பிராட்வே-ஊத்துக் கோட்டை) பேருந்தினை பேரண்டூர் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: இந்த ஊருக்கு நல்ல தார்ச்சாலையும், 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் இருப்பதனால் ஊத்துக்கோட்டை பேருந்தினை 3 மைல் நீட்டித்து பேரண்டூர் வரை சென்று திரும்ப மறுபரிசிலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சாலையின் காரணமாக இந்தப் பதில் தரப்படவில்லை. போதுமான பயணிகள் இருக்கமாட்டார்கள் என்ற அடிப்படையில் இந்த பதில் தரப்பட்டிருக்கிறது.

■606 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கண்ணம்பாக்கம் செல்லும் வழித்தடம் எண் 113 பேருந்து முறையாக, நேரந் தவறாமல் செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) இவ்வழித்தடத்தில் பழைய வண்டியை மாற்றி புது வண்டி விடும் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 113 ஆம் எண் வழித்தடத்தில் (வள்ளலார் நகர்-கண்ணம்பாக்கம்) ஒரு பேருந்து ஓடுகிறது. நாளொன்றுக்கு ஆறு பயணத் தடவைகள் மேற்கொள்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் தான் இயங்கும் பேருந்து வழித் தடங்கள் அனைத்திலும் பேருந்துகளை நேரந் தவறாமல் விடுவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறது.

(இ) இப்பேருந்துகளின் ஆயுட் காலமாகிய 8 ஆண்டுகள் முடிவடைவதன் மேல், அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: அந்தப் பேருந்துகளின் ஆயுட்காலம் இன்னும் இருந்தாலும் அவையெல்லாம் இடையிடையே நின்றுவிடுகின்றன என்ற புகார்கள் அடிக்கடி வருகின்றன. அந்த வழித்தடங்களிலே ஓடுகின்ற



பேருந்துகளை வேறு வழித்தடங்களிலே விட்டு அந்தப் பகுதிக்கு புதிய பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா? அந்த வழி கடினமாக இருக்கின்ற காரணத்தினாலும் ஆந்திர எல்லையோரத்திலே ஓடக்கூடிய நிலையிருக்கிற காரணத்தினாலும் அங்கே புதிய பேருந்துகளை விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேருந்துகளை நல்லமுறையிலே பராமரிப்பதற்கும் அவற்றை ஒழுங்காக விடுவதற்குமான முயற்சிகள் அனைத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளும்.

*607. Q.—Thiru A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is any proposal under consideration to ply buses between Madras and Kadambathur in Chingleput district by the Pallavan Transport Corporation?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னைக்கும் கடம்பத்தூருக்கும் இடையில் 138ஏ எண் வழித்தடத்தில் ஏற்கனவே ஒரு பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, அந்த வழித்தடத்திலே ஒரே ஒரு பேருந்துதான் ஓடிக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அங்கே பயணிகள் அதிகமாக இருக்கிறார்கள், சென்னைக்கு வேலைக்கு வரவேண்டியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால் மேலும் ஒரு பேருந்தை விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய யோசனை எதுவும் இல்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, இந்த பல்லவன் போக்கு வரத்து கழகத்திலே நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுவதால் அந்த வழித்தடமும் நஷ்டத்தில்தான் நடக்கிறதா என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அந்த வழித்தடமும் நஷ்டத்திலே தான் நடைபெறுகிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு ஆண்டிற்கு 80 லட்சம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படுகிறது என்றால் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஓடுகின்ற பேருந்துகளிலே 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. 1,000-க்கும் மேற்பட்ட பஸ்கள் சிட்டியிலே ஓடுகின்ற நிலைமையினாலும் செங்கற்பட்டு மாவட்டத்தைத் தொட்டுக்கொண்டு ஓடுகின்ற நிலைமையினாலும் 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஒன்று நாம் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஓடுகின்ற பேருந்துகள் அனைத்தையும் தேசிய

[1974 மார்ச் 25

மாக்கிவிடவேண்டும், இல்லாவிட்டால் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஓடுகின்ற அரசாங்க பஸ்களை நிறுத்திவிடவேண்டும். கோர்ட்டுகள் இருக்கிற நிலைமையில் தேசியமயமாக்கிவிடுவது தற்பொழுது முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகவே ஓடுகின்ற பேருந்துகளை நிறுத்திவிடலாமா என்றுகூட அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே தான் அதிகமான பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டு இருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்திலே அந்த பஸ்கள் எல்லாம் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நடப்பதற்கு என்ன காரணம், பில்பரேஜ் இருக்கிறதா என்பதையெல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** செங்கற்பட்டு நகரத்தைத் தொடுகின்ற வழித்தடங்களை மேற்கொள்ளவேண்டுமென்று 1967 ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டது. ஆனால் தனியார் பேருந்துகளைக் கொண்டிருக்கின்றவர்கள் நீதி மன்றங்களின் மூலமாக ஸ்டே வாங்கி அவர்களும் பேருந்துகளை ஓட்டுகிறார்கள். இரண்டு பேருந்துகளும் ஓடுவதால் டீசல்தான் அதிகமாகச் செலவாகிறது, இரண்டு பேர்களுக்கும் லாபம் வரவில்லை, நாமும் அந்த வழித் தடங்களிலே ஓட்டிக்கொண்டிருக்கிறோம், அதனால்தான் 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்பொழுது ஒரு அபாயகரமான அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலே ஓடுகின்ற அரசு வழித்தடங்களை நிறுத்தி விடலாமா என்று சொல்லி இருக்கிற யோசனை வெளியிலே இருக்கிற மக்களுக்கு அதிர்ச்சியாக இருக்கும். அதை மறுபரிசீலனை செய்து எந்த எந்த வழித் தடங்களிலே நஷ்டம் ஏற்படுகிறதோ அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவும் தனிப்பட்ட முதலாளிகள் நீதிமன்றங்களுக்கு சென்றால் அதை விரைவாக முடிப்பதற்காக எக்ஸ்பிடைட் பெட்டிஷன் தாக்கல் செய்வதன் மூலமாக விரைவிலே நடவடிக்கை எடுக்கவும் இப்பொழுது அங்கே ஓடுகின்ற பேருந்துகளை நிறுத்தாமல் தொடர்ந்து ஓட்டுவதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** எக்ஸ்பிடைட் பெட்டிஷன் எல்லாம் பார்த்தாகிவிட்டது. அதனால் எந்தவிதமான பலனும் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் எந்த எந்த வழித் தடங்களில் நஷ்டம் ஏற்படுகிறதோ அவற்றை நிறுத்திவிடலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.



1974 மார்ச் 25]

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தனியார் பஸ்களும் ஓடி, அரசாங்க பஸ்களும் ஓடி ஒரே ரூட்டிலே இரண்டு பஸ்களும் ஓடுவதால்தான் நஷ்டம் ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே தனியார் பஸ்கள் அரசாங்க பஸ்களைவிட பொதுமக்களுக்கு திருப்திகரமாக ஓடுகின்றன என்ற பொருளைக் கொடுக்கிறதா ? அரசாங்க பஸ்கள் மக்களால் விரும்பப்படுகிற வகையிலே அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நம்முடைய கணக்கு நமக்குத் தெரிகிறது. மற்றவர்களுடைய கணக்கு நமக்குத் தெரிவதில்லை. ஆனால் நாம் நஷ்டத்தைத் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டு வருவது நியாயம்தானா என்பதைச் சிந்திக்கவேண்டும். கோர்ட்களின் தடையின் காரணமாகவும் சட்ட சிக்கல்களின் காரணமாகவும் அரசாங்கம் 40 லட்சம் ரூபாய் அளவிற்கு இழக்கின்ற நிலை இருப்பது சரியா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நஷ்டமாக ஓடிக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். காரணம் நம்முடைய போக்குவரத்துக் கழகத்திலே ஓடுகின்ற பேருந்துகளிலே மக்கள் ஏற மறுக்கிறார்களா ? அல்லது கண்டக்டர்கள் போன்றவர்கள் மக்களை ஏற்றுவதற்குத் தயங்குகிறார்களா ? இதையெல்லாம் ஆராய்கிற நேரத்திலே சென்னையிலே உள்ளதைப்போன்று போனஸ் திட்டத்தை வெளி மாவட்டங்களிலும் பயன்படுத்தினால் நலமாக இருக்குமே அதைப்பற்றி வழிவகை செய்ய முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அதையும் பயன்படுத்தியதற்குப் பிறகு தான் இந்த நிலைமை. கலெக்ஷன் போனஸ் ஸ்கீம் செங்கற்பட்டு மாவட்ட வழித்தடங்களிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தேசியமயமாக்குகின்ற திட்டம் முதன் முதலாக சென்னைக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும்தான் கொண்டுவர வேண்டும் என்று முடிவுசெய்தோம் ஏழு ஆண்டுகளுக்கு முன்னதாக, கோர்ட் தடையுத்தரவு இருந்தாலும் அவர்களுடைய பெர்மிட் எக்ஸ்பைர் ஆகிவிட்டால் மறுபடியும் அவர்கள் பெர்மிட் கேட்டு வரும்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அது மட்டுமல்ல, அந்த வழித்தடங்களிலே புது பெர்மிட்டுகள் கேட்கப்பட்டால் புது பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இதையெல்லாம் செய்யாமல் இருந்து இருக்கிறார்களா? இனிமேலாவது அதைச் செய்யாமல் இருப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தக் கொள்கையே பெர்மிட் முடிந்தவுடன், மேற்கொள்ளவேண்டும், என்பதுதான். பெர்மிட் முடிந்த பிறகு அரசாங்கம் மேற்கொள்கின்ற நிலையில்தான் தனியார்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள், கோர்ட்டிலே இரண்டு பேரும் ஓட்டுங்கள் என்று இரண்டு பேருக்கும் அனுமதி வழங்குகிறார்கள்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திலே தேசியமயமாக்கப்பட்ட வழித்தடங்களில் எல்லாம் தனியார் பேருந்துகளும் ஓடுவதால் நாற்பது லட்ச ரூபாய் நஷ்டத்தில் ஓடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய நீதிமன்றங்கள் தேசியமயமாக்குகின்ற கொள்கைக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்று சொன்னார்கள். ஜனநாயகத்திலே மக்கள் தீர்ப்புதான் மகேசன் தீர்ப்பு. அந்த அடிப்படையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் சேர்ந்து கொண்டு வருகின்ற ஒரு திட்டத்தை கோர்ட் தடைசெய்யக்கூடாது என்ற முறையிலே நாடாளுமன்றத்திலே ஒரு அமென்ட்மென்ட் கொண்டுவரசெய்வதற்கு நம்முடைய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனையை நிறைவேற்றுவதற்கு புதிய அரசியல் சட்டம் தேவை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, முனைப்புடன் அந்த மாவட்டத்திலே தேசியமயமாக்குவதற்குச் சட்ட சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோர்ட்களிலே அனுமதி கொடுத்திருக்கின்ற நிலையில் ரிட் பெட்டிஷன்களுடைய அடிப்படை என்ன என்பதை அறிவிப்பார்களா? அவர்கள் எந்த அடிப்படையிலே தடையுத்தரவு போட்டிருக்கிறார்கள்? அவை போடுகின்ற சட்டங்களை நல்லமுறையிலே ஓட்டை உடைசல்கள் இல்லாமல் போடுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஓட்டை, உடைசல், சிக்கல் ஏற்படுவதைப் பார்த்தால் சட்டங்கள் இயற்றாமல் இருப்பதே மேல் என்ற நிலைமை இருக்கிறது.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** சென்னையில் இருக்கின்ற நெருக்கடி நிலைமையை உத்தேசித்தும், டவுன் பிளானிங், சேட்லைட் டவுன்ஸ் 30 மைல் சுற்றளவிலே நகரத்தை விரிவாக்குதல் போன்ற வேலைகளையெல்லாம் செய்கின்ற நிலைமையை உத்தேசித்தும் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஓடுகின்ற வழித்தடங்களை இப்பொழுது நிறுத்திவிடவேண்டுமென்ற கொள்கை அரசின் கொள்கைக்கு முரணான கொள்கை இல்லையா?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இது கொள்கைப் பிரச்னை அல்ல. இருக்கின்ற நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொன்னேன். சில வழித்தடங்களிலே பேருந்து வசதிகள் மக்களுக்கு இருக்குமானால் தனியார் பஸ்கள், மற்ற பஸ்கள் இவற்றைத்தவிர அனாவசியமாக நாமும் அங்கு பஸ்களை விடுவதால் இன்றைய நிலைமையில் இருக்கிற டீசல் கிரைஸிஸ்—எண்ணெய் நெருக்கடியை நாம் மேலும் அதிகப் படுத்தவேண்டுமா என்பதை யோசிக்கவேண்டும். மக்களுடைய நலன்கள் புறக்கணிக்கப்படாத முறையிலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலைப் பார்த்தால் கொஞ்சம் விரக்தியாக இருக்கிறது. நாட்டுடைமைக் கொள்கையிலே ஏதாவது தோல்வி கண்டிருக்கிறோமா? 40 லட்சம் ரூபாய் நஷ்டம் வருகின்ற காரணத்தினாலே அரசாங்க பஸ்களையெல்லாம் நிறுத்திவிட முடியுமா?. அரசாங்கத்திற்கு நஷ்டம் வருவதாக இருந்தாலும், இது அரசாங்கத்தின் கொள்கைப் பிரச்னை, நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்ற முறையிலே அவைகளைத் தொடர்ந்து விடுவதன்மூலம் அந்தக் கொள்கையை நிலைநாட்டுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் வரியைக் கூட்டி அரசுக்கு வருவாயை அதிகப்படுத்த முயற்சி செய்வார்களானால் இத்தகைய நஷ்டங்களை ஏற்றுக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தேசிய மயமாக்குகின்ற நோக்கில் இப்படிப்பட்ட சட்ட திட்டங்கள் இருப்பதால் முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருப்பதாகச் சொன்னார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சமதர்மத்தைப் பற்றி நிரம்பப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு சமதர்மத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இதனை முழுமையாக நிறைவேற்றும் வகையில் ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவேண்டுமென்று இங்கு தீர்மானங்கள் வாயிலாக அரசு கேட்டுக்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதே கருத்தை இந்திய அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் நான் மட்டும் சொல்லவில்லை; பல மாநிலங்களைச் சேர்ந்த போக்குவரத்துத் துறை அமைச்சர்களும் எடுத்துச் சொன்னார்கள். இன்றைய சூழ்நிலையில் ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து தேசியமயமாக்கப்பட்டிருப்பதுபோல் பஸ் போக்குவரத்தும் தேசிய மயமாக்கப்பட்டு அந்தந்த மாநிலங்கள் பஸ்களை இயக்கு

கின்ற வகையில் பிரித்துக் கொடுத்து விடுவது நலமாக இருக்கும். இல்லை என்றால் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் கோர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. ஆகவே, இந்தக் கருத்தை வலியுறுத்தி மத்திய அரசு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் பதிலளிக்கையில், தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள பஸ் தேசியமய சட்டம் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறதென்றும், தீர்ப்பு தெரிந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாமென்றும் தெரிவித்துள்ளார்.

திரு. கோவை செழியன்: ஆளும் கட்சி உறுப்பினர் மாண்புமிகு வீராசாமி அவர்கள் அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கையினை நிறைவேற்ற முடியாமல் விரக்தியுற்றிருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் விரக்தி நிலையில் இருக்கிறாரா என்பதற்கு விளக்கம் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இது போன்ற விளக்கங்கள் எல்லாம் கேட்கக்கூடாது.

### சேலம்-கொடுமுடி பேருந்து வழித்தடம்

*608 வினா—திரு. வ. முத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து மல்லசமுத்திரம், வேலக்கவுண்டம்பட்டி வழியாக கொடுமுடி செல்லும் வழித்தடங்களில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பஸ் விடுகிற உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. வ. முத்து: இந்தப் பகுதி அதிகக் கிராமங்கள் இருக்கும் பகுதி. ஆகவே, அங்கு பஸ் விட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் விடுவதற்கான செயற்குறிப்பு இல்லை. இருந்தாலும் போக்குவரத்துத் துறையின் மூலம் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. தி. பொன்னுமலை: சேலம் மாவட்டத்திலே டவுன் பஸ்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒவ்வொரு வழித் தடத்திலும் பொதுமக்கள் ஏராளமாக நின்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். சேலத்திலிருந்து வள்ளிபூர்; சேலத்திலிருந்து காரிப்பட்டி, சேலத்திலிருந்து பொன்னமராவதிப்பட்டி, சேலத்திலிருந்து ஆட்டையாம்பட்டி, சேலத்திலிருந்து மேலூர் வரை போவதற்கு டவுன் பஸ்ஸுக்கு மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆங்காங்கு போதுமான டவுன் பஸ் விட அரசு ஆவன செய்யுமா?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி எழுதியும் கொடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக சேலம் போக்குவரத்துத் துறை அதிகாரிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 609, 610 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### எண்ணூர் அனல் மின்நிலையக் கொதிகலன்களில் லீக்கேஜும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள மின் உற்பத்திக் குறைவும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் The serious situation arising out of the boiler leak in the Ennore Thermal Plant and consequent reduction in electricity production என்ற பொருள் குறித்து விவாதிக்க ஓர் ஒத்தி வைப்புத் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, I have given notice—"that this House stands adjourned to discuss a matter of urgent public importance, viz., the boiler leak in the Ennore Thermal Power plant and consequent reduction in the electricity production."

Sir, I personally feel and I am quite sure that the House will agree with me that this is a serious matter actually involving the very production of electricity. I am afraid for the past few months and for the past few years the production of electricity in Ennore has been steadily going down on account of various maladies and malaises that have beset this plant in Ennore.

Number of times we have brought to the notice of the House that the boilers are not working all right and some have totally failed. For that the Hon. Chief Minister said that he had appointed a commission headed by Mr. Mahalingam to go into the working of the plant and causes of reduction in production of electricity. After that we do not know what Mr. Mahalingam had said in his report and what was the action taken on that report. That is a whole mystery to this House. For the past three months such leakages are occurring. It is happening at a time when there is crop failure all over Tamil Nadu.

The Hon. Minister has told us the other day that he was not able to give enough electricity because the Central Government has not helped them to start another boiler in September. In the already existing boiler there is leakage and that is why there is reduction in electricity production. But the Hon. Minister is trying to pass the buck on Central Government and say that they are responsible for the reduction of electricity due to another boiler not having been erected. I want to know what is the real problem and what is it that has led to this leakage. I have received number of telegrams from all parts of Tamil Nadu.

Number of persons have come to us weeping and saying that thousands and thousands worth of crops have withered away. If all these things are totalled, I am afraid several crores worth of crops would have withered. Is it proper for the Hon. Minister to allow such things? Unless we go into the commissions and omissions, we will not be able to come to a decision on the matter. I have received telegrams from Pallappatti, Vilathikulam, Thirumalnalloor, Sirkali (a deltaic taluk), etc.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அதெல்லாம் நேற்றே சொல்லியாகி விட்டது. என்னூர்பற்றி மட்டும் பேசுங்கள்.

DR. H. V. HANDE: I have given notice of another matter asking for one hour discussion. When that comes, I will speak about these things. Now I will abide by the decision of the Chair and speak on this Ennore Thermal Plant.

Not only is there reduction in power production but I think there are certain other constructional difficulties also. I would like to know whether constructional difficulties are the cause for



this loss in production. When the boiler plant was constructed, I think there was some constructional difficulty; experts were not properly consulted. I would like to know whether that is the reason and whether this Government can give us an assurance that within the next two or three days things would be set right. I think the Chief Minister would agree to one or two hours' discussion on electricity failure.

I have given notice for an hour's discussion on that and I hope that will be discussed by the Business Advisory Committee and in the hope that the Hon. Speaker would allow such a discussion, I resume my seat.

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* தலைவர் அவர்களே, என்னூர் மின்சார நிலையத்தில் ஏற்பட்ட பழுதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இதற்கு விடையளிப்பதற்கு முன்னாலே தமிழ்நாடு முழுவதும் நாலைந்து நாட்களாக இருந்த இடர்ப்பாடான நிலைமை நேற்றோடு சரி செய்யப்பட்டு விட்டது. நான் காலையில் எல்லா மாவட்டங்களுடனும் தொடர்பு கொண்டேன். எதிர்பார்த்த அளவுக்கு எல்லா ஊர்களிலும் மின் விநியோகம் ரெஸ்யூம் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் ராஜாராம் அவர்களைக் கேட்டேன். சேலம், தர்மபுரி மாவட்டங்களில் நேற்றைய தினமே மின்சாரம் விநியோகம் ஆரம்பித்து விட்டதாகச் சொன்னார்கள்.

23-ம் தேதி இரவு பழுதடைந்த இயந்திரம் சரிசெய்யப்பட்டு நேற்றுக் காலை 7½ மணிக்கு பவர் கிரிட்டுக்கு வந்த காரணத்தாலும், மைசூர், கேரள மாநிலங்களிலிருந்து தாற்காலிக உதவி பெற்ற காரணத்தாலும், பன்முறை வேண்டுகோளுக்கிணங்க நெய்வேலி நிர்வாகஸ்தர்கள் தாங்கள் தரக் கூடிய மின் சக்தியின் அளவைச் சற்று உயர்த்தி விநியோகம் செய்த காரணத்தாலும் இன்றைக்கு எல்லா ஊர்களிலும் சுமுகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னூரில் 3-வது மின்சாரப் பிரிவு பழுதடைந்த காரணம் பாய்லரில் லீக்கேஜ் ஏற்பட்டதுதான். லீக் ஆனவுடனே அது நிறுத்தப்படுமானால் சூடு அடங்க மூன்று நாட்கள் ஆகும். அதற்குப் பின்னால் பாய்லரில் எங்கே லீக் என்று கண்டு பிடிக்க 200 அடி குழாய்க்குள் மனிதன் நுழைந்து சாரம் கட்டப்பட்டு வெல்டு செய்யப்பட்டு பழுது சரி செய்யப்படுவதற்கு நடைமுறையில் கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகிறது.

[திரு. ஓ. பி. இராமன்] [1974 மார்ச் 25

(முற்பகல் 10-00)

இதுபோன்ற லீக்கேஜ் எண்ணூரில் மட்டும்தான் நடந்து விட்டதாக யாரும் கருதத் தேவையில்லை. நேற்றுக்கூட பல ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. இது எதிர்பாராத அளவுக்கு ஏற்படக் கூடிய நிலைமைதான் என்பதற்காக நான் தலைவர் அவர்கள் அனுமதியோடு பத்திரிக்கையில் வந்த ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன்.

power crisis in U.P.—U.P. is facing a serious power crisis—

அது மட்டும் அல்ல. இது போன்ற மின்சார வெட்டுகளைப்பற்றி நான் எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் 50 சதவிகிதம், 60 சதவிகிதம் இருக்கிறது என்ற விவரத்தை எல்லாம் பத்திரிக்கையில் படித்திருப்பீர்கள். இது போன்ற லீக்கேஜ் திடீரென்று எண்ணூரில் ஏற்பட்டு விட்டது என்று சொல்லுவதற்கில்லை. அது ஏற்படுவதற்குச் சில மூல காரணங்கள் இருக்கின்றன. டிசைன் செய்கிற போது கிடைக்கக்கூடிய நிலக்கரியில் சாம்பல் அளவு 30 சதவிகிதம்தான் இருந்தது.

ஆனால் இன்றைக்கு கிடைக்கிற நிலக்கரியின் காரம் சற்று குறைந்து இருக்கின்ற காரணத்தால் 30 லிருந்து 40 சதவிகிதம் சாம்பல் உருவாவதன் காரணமாக பாய்லரின் உள்ளே சில படிவங்கள் ஏற்படுகிறது. அதன் காரணமாக அரிப்பு ஏற்பட்டு இப்படி திடீரென்று இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. சிங்கரேணி நிலக்கரி தான் எண்ணூருக்கு வந்துகொண்டிருக்கிறது. தரத்தின் அளவு சற்று குறைந்து இருப்பதால் தான் இவ்வளவு சங்கடம். அவர்கள் கொடுக்கும் நிலக்கரியைத்தான் வாங்கவேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் எவ்வளவோ தடவை கேட்டிருக்கிறோம். ஒன்றரை லட்சம் டன் கேட்டால் 75 ஆயிரம் டன் தான் கொடுக்கிறார்கள். நேற்று முன் தினம் வாரியத் தலைவரை எல்லாம் கூட அனுப்பி இருக்கிறோம். நானும் தொடர்பு கொண்டு இருக்கிறேன். பொதுவாக உள்ள நிலைமை இப்படி இருக்கிறது. எண்ணூரைப் பொறுத்தவரையில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் சரிசெய்யப்பட்டு விட்டது. எண்ணூரில் உள்ள 4 மெகாவாட் இயந்திரத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்போது 60 மெகாவாட் சர்வீஸ் இருக்கிறது. இரண்டரை மாதத்திற்கு ஒரு முறை பராமரிப்புக் கட்டாயமாக செய்ய வேண்டியிருக்கிறது.



1974 மார்ச் 25] [திரு. ஓ. பி. இராமன்]

இந்த மாதம் 15 ஆம் தேதி அளவில் அது பழுதுபார்க்கப்பட்டு இயங்கத் தொடங்கிவிட்டது. இரண்டாவது 60 மெகாவாட் ஓடிக்கொண்டிருக்கிறது. மூன்றாவது 110 மெகாவாட் நேற்று சரி செய்யப்பட்டு ஓடத்தொடங்கியிருக்கிறது. நான்காவது டிரான்ஸ்பார்மர் 110 மெகாவாட் அமைக்கப்பட, இப்போது வேகமாக வேலை நடந்துகொண்டு வருகிறது. முதல் டிரான்ஸ்பார்மர் பொருத்தப்பட்டுவிட்டது. இரண்டாவது டிரான்ஸ்பார்மர் பொருத்திக்கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது டிரான்ஸ்பார்மர் காலையில் வந்த செய்திப்படி போபாலிலிருந்து 200 மைலுக்கு அப்பால் ரயிலில் வந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் பொருத்தப்பட்டு இந்த மாத இறுதிக்குள் செயல்படத் தொடங்கிவிடும்.

ஆக, நான்கு இயந்திரங்களும் எந்த அளவு வேலை செய்து இயக்க வைக்க முடியுமோ அந்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதிகாரிகள் ஏதோ செய்து விட்டதால் ஏற்பட்டு விட்டது என்று யாரும் கருத வேண்டாம்.

சி.டபிள்யூ.பி.சி. கன்சல்டண்ட் அவர்கள் எண்ணூரைப் பார்த்து விட்டுக் கடைசியில் ஒரு குறிப்பை எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

The staff at Ennore have done commendably well within a short time

ஆகவே, எண்ணூரில் வாரிய அதிகாரிகளும் நல்ல திறனோடு தங்களால் முடிந்த அளவு இந்த வேலைகளை எல்லாம் செய்து வருகிறார்கள். இவை எல்லாம் எதிர்பாராமல் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் என்பதை நாம் பார்க்கிறோம். யு.பியில் கூட 500 மெகாவாட் ஒன்று மானுபாக்சரிங் டிபக்ட் காரணமாக பழுது அடைந்திருக்கிறது என்று பத்திரிக்கையில் பார்க்கிறோம். எனவே, எதிர்பாராமல் டிசைன் டிபக்டால் சில தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. அது போல்தான் இங்கே ஏற்பட்டது.

இப்போது அந்த இடர்ப்பாடுகள் களையப்பட்டு இப்போது நாடு முழுவதும் மின்சாரம் நல்ல விதத்தில் கொடுத்து வருகிறோம். இவ்வளவு விவரங்கள் அளித்து மின்சார நிலைமையையும் சரி செய்து விட்ட காரணத்தால் இந்தப் பிரச்னையை மேலும் வற்புறுத்த வேண்டாம்; அதற்காக இந்தச் சபையையும் ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க அது ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து மானிய கோரிக்கை மீதான விவாதம். 13 உறுப்பினர்கள் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## (3) 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி.)

### (அ) நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்

DR. H. V. HANDE : Hon. Mr. Speaker, Sir, in support of the cut motions moved by our Party, I would like to say a few important things.

At the outset I would say that the Hon. Chief Minister has given us a statement placed here in the form of a speech as well as in the form of a review on the Police Functioning.

I would say that with regard to Police functioning, the capacity of the police to detect crimes in our State is probably superior to the capacity of police departments in other States and we have no objection in giving them our compliments. In fact, I understand that today—I have not been able to go and see for myself—there is a display of the stolen articles in the office of the Commissioner of Police. My compliments to them for that.

With regard to Fire Accidents, even the other day, we had a fire accident in Teynampet and I do not know what the Chief Minister has done about it. I have known only through papers and I would like to know whether a statement would be placed on the Table of the House as to what action has been taken with regard to it.



My submission is this. This police department which has been quite efficient for quite a long time has been given in the hands of the Hon. Chief Minister. My submission is that the Hon. Chief Minister has destroyed totally, the morale of this excellent police force.

I have with me lots of facts and figures, I have a separate file and I will place it in his hands—I have here created a separate file of it collecting all the data from all over the State indicating what are the commissions and omissions that are going on in that department.

To start with, I would say that the Chief Minister does not seem to be bothered at all about the very serious matter that is going on in Tirunelveli district for the past few days. There is a communal clash going there. I am quite sure that all sections of the House would join with me that any communal clash whatever type it be should completely be smothered at the very early stage itself. The Hon. Chief Minister does not seem to be taking any effort to smother, to root out this communal clash which has developed on the dimensions of Muthukalathur incidents. I am not going into the merits and demerits of it. For, by doing so, it is possible, I am afraid, that we will be inflamming one side or the other. That has to be taken note of.

Now, I come to another important aspect. There has been a report placed on the Table of the House by the Hon. Chief Minister with regard to the Commission of Enquiry in connection with the Clive's Hostel incidents in Tiruchirappalli. That report is here. My submission is that the Hon. Chief Minister should have confessed in the open House that the entire fault rests with the Government itself. He should have confessed, but he has failed to do so. That is why I asked him to resign. I have asked him that several times. He would not oblige. He perhaps thinks it is routine thing for us to say so in this House and therefore I have stopped that. I have decided there is no use of asking him to resign. Probably they have developed a thick skin. There is no point in asking him to resign. My only submission is this. Will the Hon. Chief Minister openly and categorically say that he is responsible for all that ?

The Commission of Enquiry in its report at page 151 has said: 'The evidence of the Deputy Superintendent of Police is that the police did not enter the rooms in the hostel and beat the students.

According to him, as soon as the police entered, some students ran into the rooms, bolted the doors from inside and other students seeking entry banged', etc., etc. 'He cannot say whether the police searched in 30 rooms or 50 rooms. He would not remember any of these particulars ......... There is overwhelming evidence to show that about 50 or 60 policemen entered the Clieve 's.........' This is the finding of the Commission of Enquiry. 'There is overwhelming evidence to show that about 50 or 60 policemen entered the Clive's hostel. They were seen breaking open doors chasing and beating the boys with lathis and kicking with booted legs inside the quandrangle and also on the western verandha of the first floor .............. The injuries on the students are mostly simple and grievous (fractures) in some cases. They can be safely attributed to beating with lathis and not due to mild cane charge.' This is the verdict given by the Enquiry Commission.

Now the Hon. Chief Minister says that he is ready to take action against the then Collector, Thiru T. V. Bharathi and then D.I.G. of Police Thiru G. V. Narayanan, and that Thiru V. Karthikeyan, I.A.S., a member of the Board of Revenue has been appointed to give us an indication as to what action is going to be taken on them. Further there was a statement by the Inspector-General of Police and by our Hon. Chief Minister Dr. Karunanidhi, that no action could be taken against them because they belong to the I.A.S. and I. P. S. cadres and that the concurrence of the Centre has to be obtained. I would like to know whether it is a fact that the concurrence of the Centre has to be obtained. By this the Hon. Chief Minister and the Government are absolving of their responsibility and want to pass on the buck to the Centre. Instead of taking action against the Collector and the D. I. G. of Police, I feel that action should be taken against our hon. distinguished friend the Chief Minister Dr. M. Karunanidhi, because he is the supreme of the Department, he is above the Inspector-General of Police and the Secretary to Government, Home Department. He is the man who has to deliver the goods. Suppose Police does good work, the Hon. Chief Minister and the Government take that pride and they are praised. If there is miscarriage of justice, if there is a serious charge, if there is a serious allegation and if there is a large scale interference of Police in the campus of a College, the discredit should also come to the Hon. the Chief Minister and he must take the responsibility. Both the credit and discredit should be taken by the Hon. Chief Minister. Therefore, I say action should and must be taken against the Hon. Chief Minister.



I would like to ask another question. How the police got the guts to go inside the Hostel and who gave that moral courage to the Police and who gave that direction and who was responsible for that ? There is a supreme power and supreme authority and that is our Hon. Chief Minister. He was responsible for the atrocities of the Police inside the Hostel. The Chief Minister and the Ministers were responsible for the encouragement as well as for the withdrawal of Police and for the behaviour of Police in that manner.

The Hon. Minister hailing from Tiruchirappalli was seen giving that encouragement. The Hon. Chief Minister was responsible for giving that encouragement. Otherwise, how can this serious thing could be done by the Police Department? Icharge that this Government is responsible. Knowing fully well my responsibility, I change that the Hon. Chief Minister and the Cabinet are responsible for this and serious action—censure action—has to be taken. There should be a censure on the Government.

The Police Department in the hands of our Hon. Chief Minister is being abused, misused and wrongly used. It is being used as an instrument to terrorise and victimise the members of the Opposition. That is why, I have given a specific cut motion stating that Police is utilised as an instrument to terrories the Opposition Parties.

At the instigation of Tiruchirappalli Town D.M.K. Secretary, the Tiruchirappalli Police filed a decoity case against Anna D.M.K. volunteers alleging that the Anna DMK volunteers caused heavy damages to his shop. The Court which delivered its judgment in this case, has clearly and categorically said that persons who were found in the First Information Report had been included as accused and no identification parade or enquiry was conducted to determine the accused. The Judge also said that the case only probablises the version of Anna D.M.K. volunteers that because they belong to Anna D.M.K. the Tiruchirappali town D.M.K. Secretary foisted a case against them. The Identification Enquiry was very necessary under F.I.R. But no enquiry was made. Is any greater proof needed to substantiate my statement that the Police have foisted cases against Anna D.M.K. volunteers?

The Police Stations are dictated by the influential persons in the ruling party. The cases are foisted, filed and withdrawn at the whims and fancies of the Hon. Chief Minister and his henchmen.

In the Annamalai University incidents, the Police registered a case under section 120-B I.P.C. (Conspiracy) and 307, I.P.C. (attempt to commit murder) in connection with what Police described as an alleged plot to murder the Hon. Chief Minister. I want our distinguished Hon. Chief Minister to live long happily, healthily and nicely. I say that the alleged plot to murder the Hon. Chief Minister is a wrong statement. No body has been arrested in connection with the alleged plot to murder the Chief Minister. Even the Commission of Enquiry in its report had said that this case was being separately dealt with by the Police. If there was an alleged attempt to murder the Hon. Chief Minister and if there was a conspiracy to murder the Hon. Chief Minister, all these could have found a place in the orginal statement of the Police Officials. I would like to know whether the case has been referred as undetected.

When it has said that an attempt has been made, why a case was not registered ? Here no case was registered. It was also said that there was no case for registering it. The whole thing was unnecessarily produced to create public sympathy on the Chief Minister as it was done in the case of play bomb incident in Kodamuratti bridge. I have been really fighting tooth and nail that such a thing should not happen.

But our Hon. Chief Minister very intelligently and cleverly in order to rouse the sympathy of the public has said that nobody has been arrested and that the case has been referred undetected. With regard to Kodamuratti incident, I came to know that the police did not file a case under section 307-I I.P.C. but only filed a case under Section 3 of the Explosives Act. All these show how the Police Department is being abused by the Hon. Chief Minister.

Then coming to false cases, I would like to say that many cases have been foisted against the members of the Anna D.M.K. On 25th March 1974, when our General Secretry, Thiru M. G. Ramachandran, visited Saligram Village in St. Thomas Mount constituency, D.M.K. members stoned the van belonging to our General Secretary. The Police instead of arresting the miscreants responsible



for the stone throwing foisted false cases at the instigation of the District Joint Secretary and District Secretary on persons belonging to Anna D.M.K., and arrested S. M. Duraiarasan, K. Babu, A. Ratnam, etc., under I.P.C. 147, 342 and 327.

When our Leader was giving a speech there, cases were foisted against our members. The case was going on for the past 9 months in the Poonamalle Sub-Magistrate Court. For 9 months, they have to walk to the Police Station and Sub-Magistrate Court by spending money from their pockets.

Finally, the Anna D.M.K. persons were acquitted on 27th December 1973 on the ground that there was no sufficient ground or evidence at all aginst the accused. There has been a regular and concerted system on the part of the Chief Minister and his henchmen to demoralise our men. They want our men to spend money from their pockets every day for nine months and to ruin their daily life.

(The Hon. Speaker sounded the gong)

On behalf of our party, I am the only member. I am not wasting even a single minute. At least another 1 minutes may be given to me. We are fighting a battle outside and fighting a battle inside. What a tragedy? How much I feel? It is my duty to fight. Probably, even for the rest of my life, I think I will be fighting.

Then again at a meeting in Aminjikarai when our Leader was speaking, people belonging to the ruling party deliberately disturbed the meeting and wanted to see that our leader is physically disabled. What happened was this? Tear gas was used and the meeting was disturbed. Even though the Police knew what is going to happen there, they have not taken action. Again in my Constituency thirty-first division, a systematic attempt was made to destroy Thiru Gandhi physically and a number of Anna D.M.K. flags and Manrams organised there have been systematically damaged by the Ruling Party members and the Police have failed to take action against them.

Similarly a number of cases of omission and commission are there and I have given notice of a number of cut motions also.

At Cumbum on 11th March 1974 one Thiru Kuppuswami who was a member of our party was murdered and he lost his life.

1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதி இரவு குப்புசாமி கொலை செய்யப் பட்டார். பரிசோதனையில் அடித்துத்தான் கொலை செய்யப்பட்டது என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. 11—3—1974 அன்று இரவு குப்புசாமியைக் கொலை செய்து பேருந்து நிலையத்தில் போட்டுவிட்டுத் தலைமறைவாகி விட்டனர். குப்புசாமி 17 வயது இளைஞர். The Police did not take any action. Again in Nagercoil a person was taken into the lock—up and he was killed. No action has been taken.

மதுரை மாவட்டம் உத்தமபாளையம் தாலுக்கா சின்னமனூரில் அண்ணா தி.மு.க. அமைப்பாளர் குருசாமியை 8—11—1973 அன்று சோலைமுத்து மற்றும் சிலர் கடத்திச் சென்று கழுத்தை நெறித்துக் கொலை செய்து ஆற்றில் போட்டு விட்டனர். இதுபற்றி போலீஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

1973 ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி அன்று காலை பத்து மணிக்கு சென்னை அமைந்தகரையில் 61, 111-வது வட்ட அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் அண்ணா பிறந்த தின விழா கொடியேற்றம் கொண்டாடும் நேரத்தில் பலரை ஆளும் கட்சி உறுப்பினர்கள் தாக்கியிருக்கிறார்கள். அதுபற்றிப் புகார் கொடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மதுரை மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் கோகிலாபுரம் பெருமாள் தேவர் மகன் 18 வயது கருத்த கண்ணனை உத்தமபாளையம் போலீஸார் 5 பேர்கள் எந்தவித குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யாமல் 15 நாட்கள் காவல் நிலையத்தில் வைத்து அடித்து விட்டார்கள். 15 நாட்கள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை.

தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரைத் தொகுதி கொடமாண்டப்பட்டியில் அண்ணா தி.மு.க. உறுப்பினர்களை போலீஸார் எந்தவிதக் காரணமும் இன்றி 5—1—1973 அன்று தாக்கியிருக்கிறார்கள். எல்லா விவரங்களும் என்னிடம் இருக்கின்றன. அடித்த காவல் துறையினர், தலைமைக் காவலர் கோவிந்தராஜன் நம்பர் 420. காவலர் லிங்கம் நம்பர் 225. எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்படிப் பல இடங்களில் அண்ணா தி.மு.க. உறுப்பினர்களை போலீஸார் தாக்கிக் கொண்டு வருகின்றார்கள். போலீஸ் ஸ்டேஷன்களில் நாங்கள் சென்று ஏதாவது புகார்கள் கொடுத்தாலும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதில்லை.





நான் பத்து இருபது பைல்கள் வைத்திருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்களுக்கு இப்போது வேண்டுமானாலும் தரத் தயாராயிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) நான் முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். இது உங்களுக்கு நல்லதா. அண்ணா தி.மு.க. உறுப்பினர்களை, எதிர்க்கட்சி உறுப்பினர்களை இப்படித் தாக்குவது நல்லதா என்று கேட்கி றேன்.

1964-ல் வட சென்னையில் தி.மு.க. தொண்டர்கள் தாக்கப்பட்டார்கள். நான் கேட்கிறேன். அவர்கள் அப்போது எதிர்க்கட்சி உதவித் தலைவராக இருந் தார்கள். வட சென்னையில் அப்போது ஒரு எம்.எல்.ஏ. கூட இல்லை தி.மு.க. விற்கு. அப்போது நான் எம்.எல்.சி.-யாக இருந்தேன். அது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

கொடவாசலில் உள்ள முப்பது பேர்களை அனாவசியமாக நாகப்பட்டினம் கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டு, தொல்லை கொடுத்தார்கள். இது நியாயமா, தர்மத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். இப்படியெல்லாம் செய்து நீங்கள் அண்ணா தி.மு.க. உறுப்பினர்களை அடக்க முடியும் என்று நினைத்தால் நீங்கள் கற்பனை உலகத்தில்தான் இருக்கிறீர்கள். நிச்சயமாக எவ்வளவு அடித்தாலும் இந்த நேரத்தில் அவற்றை நாங்கள் பொறுத்துக்கொண்டு எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாக இருப்போம். நீங்கள் நேரம் கொடுக்கவில்லை என்றால் பரவாயில்லை. நாங்கள் 13 பேர்கள் இருக்கிறோம் என்பதற்காக எனக்குப் பேசுவதற்கு பத்து நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள். வெளியில் பொதுக் கூட்டத்தில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இருபது நிமிடங்கள் பேசியாகி விட்டது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் ஒரு பதில் கொடுப்பீர்களா இல்லையா என்று எதிர்பார்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தை களை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கணபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கோரியுள்ள போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல முன்வந்துள்ளேன்.

போலீஸ் என்றாலே ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது எதிர்க் கட்சிகளாக இருந்தாலும் சரி ஒரு பயத்தோடு அணுகக்கூடியதொரு நிலைதான் இருந்துவந்துள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. வெளி உலகில் போலீஸை சற்று அச்சத்தோடும் அடக்கத்தோடும் பார்த்துவிட்டு அவர்கள்

கை நீட்டமுடியாத இடத்தில்—அதாவது பரமசிவன் தலையில் இருக்கின்ற பாம்பைப் போல் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இருந்து கொண்டு போலிசை கண்டபடி பேசுவதுதான நம் நாட்டில் இருக்கிற அரசியல்வாதிகளின் நாகரீகமாக இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

அந்தமாதிரி நம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் முதல் அமைச்சர் அவர்களைப் பார்த்து ஏதோ பல்வேறு நிகழ்ச்சிகள் தமிழ் நாடு பூராவும் நடந்துவிட்டதுபோலவும் அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் நம் டாக்டர் கலைஞர் அவர்கள் தூண்டுதல் பேரில் நடந்து விட்டதைப் போலவும் உடனே அவரைப் பார்த்து கற்பனை உலகில் இருக்கிறீர்கள், நீங்கள் இறங்கித்தான் வரவேண்டும், இறங்கித்தான் வரவேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

டாக்டர் ஹாண்டே அவர்களை எப்போதுமே ஒரு மாயை சூழ்ந்து கொண்டிருக்கிறது. திண்டுக்கல் தேர்தலில் அவர் சிக்கிய அந்த மாயையில் இருந்து விடுபடாத ஒரு காரணத்தால் எங்களை எல்லாம் பார்த்து டாக்டர் கலைஞர் அவர்களைப் பார்த்து, திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களைப் பார்த்து, நீங்கள் எல்லாம் கற்பனை உலகில் சஞ்சரித்துக்கொண்டு இருக்கிறீர்களேயொழிய உண்மை நிலைக்கு வரவில்லை, நிச்சயம் வந்துவிடுவீர்கள் என்று சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அப்படிச் சொல்லிக் கொண்டு அவர் திருப்திப்படுவதாக இருந்தால் அந்தத் திருப்திக்கு குறுக்கே நாங்கள் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு வழக்குகளைப் பற்றியெல்லாம் அவர்கள் சொன்னார்கள். நான் உயர் நீதிமன்றத்தில் உதவி பப்ளிக் ப்ராஸிக்யூட்டராக இருந்தவன். பல்வேறு வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் நான் நடத்தியிருக்கிறேன். நான் டிபன்ஸ் வக்கீலாகவும் இருந்திருக்கிறேன். இந்த வழக்குகளையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கிற நேரத்தில் தள்ளப்படுகிற வழக்குகள் எல்லாம் போதிய சாட்சியங்கள் இல்லை என்ற காரணத்திற்காக தள்ளப் படுகின்றனவே தவிர ஏதோ பொய் வழக்குகள் என்று எந்த வழக்கும் தள்ளப்படுவது கிடையாது.

உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். நீதிமன்றத்திலும் சொல்வார்கள், நீதிமன்றத்திற்கு வெளியேயும் சொல்வார்கள். நம் நாட்டில் இருக்கிற ஒரு பழக்கம் ஏதாவது குற்றம் நடைபெற்றுவிட்டால் அந்தக் குற்றம் சம்பந்தமாக போலீஸுக்கும் அதிகாரிகளுக்கும் துணையாக இருந்து குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில் கண்ணுங் கருத்துமாக நம் நாட்டில் இருக்கிற பொது மக்கள் மன நிலை இல்லை என்பதை அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லுவார்கள்.



டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும் தெரியும் மற்றவர்களுக்கும் தெரியும், பல்வேறு பஸ் நிலையங்களில் பிக் பாக்கட் நடந்து கொண்டிருப்பது. பிக் பாக்கட் அடிப்பது யார் என்பது அந்த பஸ் ட்ரைவருக்கும் தெரியும், கண்டக்டருக்கும் தெரியும். அவன் பஸ்ஸில் ஏறியவுடன் அவன் யாருடைய பாக்கட்டிலோ கைவிடப் போகிறான் என்பது அந்த பஸ் ட்ரைவருக்கும் கண்டக்டருக்கும் தெரியும். இருந்தாலும் அவன் பிக்பாக்கட் அடித்துவிட்டு இறங்கி ஓடியவுடன் அந்த பஸ் ட்ரைவருக்கும் கண்டக்டருக்கும் துணிச்சல் வந்து இவன் வந்திருந்தான், இவன்தான் பிக் பாக்கட் அடித்துவிட்டுப் போயிருப்பான் என்று சொல்வார்கள். ஏனென்றால் அங்கேயே சொல்லி விட்டால் அடுத்த நாள் அந்த ரூட்டில் பஸ்ஸில் போக முடியாது என்ற அச்சம் காரணமாகத்தான் நாங்கள் அவன் வந்தவுடன் சொல்லவில்லை என்று பொதுமக்களிடம் சொல்லுவார்கள்.

ஆக, போடப்படுகிற வழக்குகள் பலவும் போதிய சாட்சியங்கள் இல்லை என்ற காரணத்தினால்தான் தள்ளப்படுகின்றனவே தவிர, பொய் வழக்குகள் என்று சொல்லி தள்ளப்படுகின்றன என்று ஹாண்டே அவர்கள் அந்த மாயையில் இருந்து கொண்டு சொல்வார்களேயானால் அதை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்வதற்கில்லை.

நம்முடைய போலீஸைப் பார்த்து பொய் வழக்குகள் போடுகிறார்கள் என்று மிகத் துணிச்சலாக அவர்கள் சொல்கிறார்கள். நமது போலீஸ் அகில உலகத்திலேயே இரண்டாவது ஸ்காட்லண்ட்யார்ட் என்று சொல்லக் கூடிய அளவில் அவ்வளவு திறமை படைத்த போலீஸ்காரர்கள் என்று பாராட்டுப் பத்திரம் நம் மாநில போலீஸ் துறையினருக்கு கிடைத்துள்ளது.

இந்தியாவிலேயே குற்றப் புலன் விசாரணையில் நம் மாநில போலீஸ்தான் முன்னணியில் நிற்கிறது. கொள்ளை வழக்கா அல்லது திருட்டு வழக்கா அல்லது வேறு பல்வேறு வழக்குகளா என்று எதை எடுத்துக்கொண்டாலும் தமிழ்நாடு காவல்துறைதான் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கிறது என்ற பாராட்டைப் பெற்றிருக்கிறது.

அப்படிப்பட்ட திறமையானதொரு போலீஸ் பொய் வழக்குகள் போடுவதாகயிருந்தால் கட்டுக்கோப்பாக வழக்கு போட்டு நீதிமன்றத்தில் தண்டனை வாங்கித் தருவார்கள் என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். அப்படி பொய் வழக்கு போட்டால், சாட்சியங்கள் தயாரித்து பொய் வழக்குகள் போட்டால் அந்த சாட்சியங்களிலிருந்து யாரும் மீண்டும் வர முடியாது என்பதை என் வக்கீல் தொழில் அனுபவத்தை வைத்துக் கொண்டு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். கணபதி] [1974 மார்ச் 25

(முற்பகல் 10-30)

எனவே, அவர்கள் சொல்கிறபடி பொய் வழக்கு இல்லை, பொய் வழக்கு இல்லை, அவர்கள் ஏதோ மாயையின் கார்ணமாகச் சொல்கிறார்களே தவிர உண்மைநிலை இல்லை என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையில் வந்த பல வியாபாரப் பெருமக்களை ஏமாற்றி, ஏஜெண்டுகள் என்று சொல்லி அவர்களை அழைத்துக் கொண்டு போய் விஷ ஊசி போட்டுக் கொன்றுவிட்டு, அடையாளம் தெரியாமல், உரு தெரியாமல், பெட்ரோலை ஊற்றி எந்தவிதத் தடையமும் தெரியாமல் செய்கின்ற பயங்கர குற்றங்களையும், அதற்கான குற்றவாளிகளையும் தண்டிக்கத் தக்க விதத்தில் வழக்குகளை நடத்தும் திறமைபடைத்த நம்முடைய போலிஸ் இத்தகைய காரியங்களில் இறங்குமா என்பதை மட்டும் டாக்டர் ஹாண்டே அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிலை வழக்குகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சிவபுரம் சிலை திருட்டில் ஒரு முக்கியமான தகவல் கிடைத்திருப்பதற்கு மகிழ்ச்சியடைகிறேன். அந்தச் சிலையை அமெரிக்காவில் வாங்கியவர் எந்தவித பிரதி பிரயோசனமும் இல்லாமல் நம்மிடம் திருப்பித் தருவதற்கு முன்வந்து இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அமெரிக்காவிற்குச் சென்று விட்ட சிலையைக் கண்டுபிடித்து, இந்த அரசாங்கத்திற்குச் செலவு எதுமின்றி திருப்பிக் கொண்டு வரும் திறமை படைத்த போலீஸ் நம் நாட்டில் இருப்பதற்கு நாம் அவர்களைப் பாராட்டியாக வேண்டும். இப்படிப் பாராட்டுதல்களைச் சொல்லிக்கொண்டிருக்கிற நாம் அவர்களுக்குச் செய்யவேண்டிய சில கடமைகளையும் இந்த நேரத்தில் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய போலீசைப் பற்றி நமக்கு இருக்கும் ஒரே வருத்தம் என்னவென்றால், அவர்கள் இரவு பகலாக, தங்களுடைய குடும்பத்தை மறந்து, பிள்ளைகளின் படிப்பு நிலையை மறந்து தங்களுடைய கடமையைச் செய்து கொண்டு வருகிறார்கள். மற்ற பெற்றோர்களெல்லாம் அவர்களுடைய குழந்தைகள் எப்படிப் படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து, அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிற நேரத்தில், இவர்கள் கண்ட கண்ட இடங்களில் சுற்றிக்கொண்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அலைந்துகொண்டிருக்கிறார்கள்.



1974 மார்ச் 25] [திரு. என். கணபதி]

அவர்கள் தங்களுடைய முழு நேரத்தையும் இந்த அரசாங்கத்திற்காக, இந்த நாட்டு மக்களுக்காகச் செலவு செய்து கொண்டிருப்பதால், நம்முடைய அரசாங்கம் அந்த போலீஸ்காரர்களின் பிள்ளைகளுக்கு அவரவர்கள் வசிக்கும் பகுதிகளிலேயே இலவச டியூஷன் வைத்து, அந்தப் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று மாண்புமிகு கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடைய ப்ராக்கிரஸ் ரிப்போர்ட்டைப் பார்த்து பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில், இவர்கள் பல கேஸ்களை ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு இந்தச் சலுகையை அவர்களுக்குச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் நிர்வாகத் துறையில் ஒரு சிக்கல் இருக்கிறது. டி.எஸ்.பி. யாக இருப்பவர்களில் இரண்டு விதம் இருக்கிறார்கள். ஒன்று, டி.எஸ்.பி யாக நேரடித் தேர்வின் மூலம் எடுக்கப்படுபவர்கள். இரண்டாவது, சப்-இன்ஸ்பெக்டராக இருந்து, இன்ஸ்பெக்டராக ஆகி, டி.எஸ்.பி யாக ஆனவர்கள் இருக்கிறார்கள். இப்படி டி.எஸ்.பி. யாக ஆவதற்கு 50 வயதாகி விடுகிறது. அவர்களுக்கு வேறு பதவி உயர்வு கிடைப்பது இல்லை. ஆகவே, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் ஒருவருக்குப் பதவி உயர்வு கொடுத்தால், இந்தமாதிரி பிரமோட்டிகளுக்கும் ஒன்று தரவேண்டுமென்ற விகிதத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் விதிமுறைகளை மாற்றி பிரமோஷன் கொடுக்க அவர்களுக்கு வசதி வாய்ப்பு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில விஷயங்களைச் சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் நீண்ட நாட்களாக ஒரு தீ அணைப்புப் படை வேண்டுமென்று கோரிக்கை செய்து கொண்டிருக்கிறோம். தீ அணைப்பிற்காக தஞ்சாவூருக்கோ அல்லது கும்பகோணத்திற்கோ செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, பாபநாசத்தில் ஒரு தீயணைப்புப் படை அமைத்துத் தர முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவலர் குடியிருப்புக்காக பாபநாசத்தில் நில ஆர்ஜிதம் செய்து ஏறத்தாழ 2 ஆண்டுகளாகிவிட்டது. அந்த இடம் இன்னும் சும்மா இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் காவலர் குடியிருப்பு, சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர்களுக்குக் குடியிருப்புக் கட்டித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மிகத் திறமையாகப் பணியாற்றக்கூடிய நம்முடைய போலீசைப் பற்றி நாம்

அவர்கள் திறமையாகப் பணியாற்றி வருகிறார்கள் என்று பாராட்டுகிற நேரத்தில், அவர்கள் தங்களுடைய திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு, பெரிய பெயரும், புகழும் எடுக்கவேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** சார் ஒரு கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே ஒன்றும் வேண்டாம்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகிற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெருப்புப் பொறி பறக்கப் போகிறது, அதை அணைக்க தியணைப்புப் படை வைத்து இருக்கிறேன் என்று சொன்னார். அவர் ஏமாந்து விட்டார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நெருப்புப் பொறி பறக்கவில்லை. ஹாண்டே அவர்களும் ஊதிப் பார்த்தார், அது பற்றவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த போலீஸ் துறை இன்றையதினம் நேர்மை உணர்ச்சியோடு இயங்கி வருகிறது. இன்று இருக்கும் சமுதாயத்தில் ஏற்பட்டு இருக்கும் கொந்தளிப்பான சூழ்நிலை, வேலையில்லாத் திண்டாட்டம், அரசியல் வாழ்வில் இருக்கும் பேரவா, இத்தனைக்கும் இடையில் நாடு தத்தளித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் இந்தத் துறை நல்ல முறையில் செயலாற்றி வருகிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

எத்தனையாயிரம் குற்றம் சாட்டினாலும் சரி, நாம் ஒப்புக்கொள்ளவேண்டும், ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து மாறிக்கொண்டிருக்கும் போலீஸ் துறை, இந்த 25–30 ஆண்டுகளில் எந்த அளவுக்கு தன்னை மாற்றிக்கொண்டு, தேசத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அது மக்களுக்கு நல்ல விதத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைப் பார்த்தால் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞான ரீதியில் ஈடுபட்டு, குற்றப்புலன் செய்வதற்கும், ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கும் பெரிய அளவில் இன்றைக்கு வழிவகைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. இந்தப் பெரிய மாறுதலை நாம் வரவேற்கவேண்டும். இன்னும் பல புதிய முறைகளைக் கையாண்டு, நல்ல விஞ்ஞான ரீதியில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு அந்தத் துறைக்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்று வழக்குகளைப் பொறுத்தவரையில் நல்ல முறையில் இந்தத் துறை செயல்பட்டு வருகிறது. சில நேரங்களில் போலீஸ் தரப்பில் வழக்கு போடுகிற போது சில வழக்கில் உண்மையிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து, ஓரளவிற்கு நன்றாக பரிசீலித்து அதன் அடிப்படையில் செய்ய வேண்டும். இதை ஆலோசனையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தவறாக நடக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. சட்டங்களிலும் தவறு இருக்கிறது. சட்டத்தை அமல் நடத்துவதற்காக அரசாங்கம் போடும் ஆணைகளிலும் தவறு இருக்கிறது. இந்தத் தவறைப் பயன்படுத்தி சொத்துரிமை கொண்டாடுபவர்கள் போலீஸ் துறையை அவர்களுக்குச் சாதகமாகத் திருப்பிக்கொண்டு விடுகிறார்கள். நான் ஏற்கனவே கூறியது போல், நிலச் சீர்திருத்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதில் ஏற்பட்டிருக்கிற சில சிக்கல்களை நிச்சயமாக அரசு பரிசீலிக்க வேண்டும். அதற்குத் தகுந்தார்ப்போல் நாம் நல்ல ஏற்பாடுகளைச் செய்தால்தான் அந்தத் தலையீட்டை நாம் தடுக்க முடியும்.

இன்று போலீஸ் என்று சொன்னால் நம்முடைய கருத்து மனப்பான்மை மாறவேண்டும். போலீஸ் என்று சொன்னால் அது எல்லா நாடுகளிலும் இருக்கும். சோசலிச அரசியலில் கூட போலீஸ் இருக்கிறது. ஸ்டேட்லஸ் சொசைடி என்று சொல்லப்படுகிற அரசாங்கத்தில் கூட, மனித சமுதாயத்தில் அப்படி அமைப்பு ஏற்படுகிற வரையில், பல மட்டங்களில் போலீஸ் அமைப்பு இருந்துதான் தீரும். மாறுபட்ட அதிகாரிகள் இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட ஸ்தாபனம் இருந்துதான் ஆகவேண்டும். ஆகவே, கால நிலைமைகளில் இருக்கும் மாற்றத்திற்கு ஏற்ப எப்படி போலீஸ் படை இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது.

குறிப்பாக, இந்தக் குற்றங்களை எடுத்துக் கொண்டு பார்க்கிற நேரத்தில், பல்வேறு விதமான வகைகளில், பல்வேறு விதமான குற்றங்களைச் செய்கிறார்கள். அவற்றையெல்லாம் மிகத் திறமையாக பிடித்து இருக்கிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சில குற்றங்கள் இன்றையதினம் பெரிய அளவுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

புதிய புதிய முறையில் குற்றங்களை மனிதன் சிருஷ்டித்துக்கொண்டு வருகிற அளவுக்கு, கடுமையான முறையில் தங்களுடைய சகாக்களைக் கொலை செய்து, பணத்தை அபகரிக்கக்கூடிய அளவுக்கு குற்றங்கள் நடக்கின்றன. இதற்கெல்லாம் தகுந்தாற்போல் புலனாய்வுத் துறை புதிய புதிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

கொள்ளை, கொலை புரிகிறவர்கள் மாத்திரம் சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்பது அல்ல. பலர் பணக்காரர்களாக வாழ்கிறார்கள். கள்ளப் பணத்தை வைத்துக்கொண்டு சமுதாயத்தையே சீரழிக்கிறார்கள். லஞ்ச லாவண்யத்திற்கு உறைவிடமாக இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் புலனாய்வுத் துறை நல்ல கண்காணிப்புச் செய்யவேண்டும்.

போலீஸ் இலாகாவில் இருக்கக்கூடிய விஜிலன்ஸ் பகுதி மிகவும் பலப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் எல்லாத் துறைகளிலும் ஒவ்வொரு நகரத்திலும் சரி, கிராமத்திலும் சரி எப்படியெல்லாம் சமுதாயத்தில் திடீர் திடீரென்று பணக்காரர்கள் உண்டாகிறார்கள், திடீரென்று பல்வேறு நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை கண்காணிக்கக்கூடிய விதத்தில் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால்தான் சமுதாயத்தில் அமைதியை வெகு எளிதாக நிலைநாட்ட முடியும். சமுதாயத்தில் அரசியலில் கூட பல பணக்காரர்கள் தலையிடுகிறார்கள். பணம் புகுந்து விளையாடுகிறது. அரசியலில் கூட பணம் எந்த அளவுக்கு பல உற்பாதங்களை ஏற்படுத்துகிறது என்பதை நாமெல்லாம் சிந்தித்துப்பார்த்து, அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த அடிப்படையில் விஜிலன்ஸ் துறை மிகவும் சிறப்பாகவும் திறமையாகவும் செயல்பட வேண்டும். அதைப்பற்றிய விவரங்கள் இந்த அறிக்கையிலே கொடுக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விஜிலன்ஸ் துறை எந்த அளவுக்கு இதையெல்லாம் தடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது, எந்த அளவுக்கு அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள், சமுதாயத்தை சீரழிக்கக்கூடிய பல திருட்டுத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள், எந்த அளவுக்கு கள்ளத்தனம் இருக்கிறது, எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் திட்டவட்டமாக தெரிந்துகொள்ள வேண்டும். இம்மாதிரி முக்கியமான அம்சங்களை எடுத்துக்கொண்டால் போலீஸ் துறை சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதல்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அது தன்னுடைய வேலைமுறைகளையும் மாற்றிக்கொண்டு செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்றால், அதை மேலும் போற்றி புகழக்கூடிய நிலைமை ஏற்படும்.

பொதுவாக, ஒரு பிரச்னையைக் குறிப்பிட விரும்புகிறேன். போலீஸ் துறையிலே எந்த அளவுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, தலையிடாமல் இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் உத்தரவாதமான சூழ்நிலையில் திறமையாக பணியாற்ற முடியும். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.



எல்லாத் தரப்பினரும், எல்லாக் கட்சியினரும் போலீஸ் துறையில் தலையிடாமல் இருப்பதற்கு ஒரு நியதியை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் அந்த அளவுக்கு அவர்கள் தங்களுடைய தொகுதிக்கு கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்று அவர்களை பாராட்ட முடியும்.

என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியிலே நான் இதுவரையில் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனதும் இல்லை, யாரையும் பார்த்ததும் இல்லை. அப்படி ஏதாவது வேண்டுமானால் எழுதியனுப்பிவிடுவேன். வேறு எந்தவிதமான தலையீடும் வைத்துக்கொள்வது கிடையாது (குறுக்கீடு) என்னைத் தேடி யாரும் வருவதும் இல்லை. என்னைத் தேடி வருகிறவர்களை உபசரிக்கக்கூடிய வசதியும், வாய்ப்பும் எனக்கு இல்லை. இப்படி நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

எந்தக் கட்சியினரும் போலீஸ் துறையில் தலையிடுவதில்லை என்று தாமாகவே ஒரு நியதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அவைகளுக்குப் பதில் அளிப்பார்கள். நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இம்மாதிரி நாமே ஒரு நியதியை வளர்த்துக் கொண்டால் அரசியல் வாதிகளின் தலையீடு இல்லாமல் போலீஸ் துறையினர் அந்த அளவுக்கு திறமையாகவும், சிறப்பாகவும் பணியாற்ற முடியும்.

போலீஸ் துறையில் தலையிடுவதால், பாரபட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இடம் அளிக்கிறது. சில சமயங்களில் அதிகாரிகள் மேலதிகாரிகளுக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள் என்ற அந்தக் குறைபாடும் வருகிறது. ஒரு எஸ்.ஐ. அல்லது ஒரு இன்ஸ்பெக்டருக்கு மேலே ஒரு பிடிப்பு இருக்கிறது என்று சொன்னால், சிபாரிசு இருக்கிறது என்று சொன்னால் மேலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு கீழ்ப்படிய மறுக்கும்பொழுது, சில நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஆளும் கட்சியில் இருப்பவர்களும் சரி, மற்ற எதிர்க்கட்சிகளில் இருப்பவர்களும் சரி இம்மாதிரி ஒரு புதிய வழியை மேற்கொண்டால், அது அடுத்த வருஷம் போலீஸ் துறை பெரிய அளவுக்கு சீராகவும் சிறப்பாகவும் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்ற பெருமைக்கு வழி வகுக்கக்கூடும்.

அடுத்தபடியாக, பல பேர் வாழ்க்கையிலும் சரி, நம்முடைய பண்பாட்டிலும் சரி, குடியிலிருந்துதான் பல்வேறு விதமான குற்றங்கள் புரியக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அது பஞ்சமகா பாவத்தில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

குடிதான் பலவிதமான குற்றங்களை தூண்டிவிடுகிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நிச்சயம் போலீஸ் இலகாவில் அன்றாடம் தொடர்ச்சியாக குடிக்கக்கூடியவர்களை நன்கு கண்காணிக்கவேண்டும். அது ஒரு சாஸ்திர சம்பந்தப்பட்ட சம்பிரதாயம் என்பது மட்டுமல்ல, சமுதாயத்தில் வாழக்கூடிய மக்களின் ஒழுக்கத்தை குடி பெரும் அளவுக்கு பாதிக்கிறது, அவர்கள் வாழக்கூடிய விதத்தில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக போலீஸ் இலாகாவுக்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது. ஆகவே, போலீஸ் இலாகாவில் குடிப்பவர்களாக இருப்பவர்களை கண்ணும் கருத்துமாக கண்காணிக்க வேண்டும்.

இன்னொரு விஷயம். ரோடில் போகும்பொழுது நவீன சமுதாயத்தில் நாம் வசிக்கிறோம் என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும், நம்மை உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது, மனிதத் தன்மைக்கு ஒரு புதிய மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ரோடில் சைகளிலில் போகும்பொழுது ஒரு எஸ்.ஐ.-யாக இருந்தாலும் சரி வேறு அதிகாரியாக இருந்தாலும் சரி, ரோடில் யாராவது ஏதாவது குற்றம் செய்தால் அவரைப் பிடித்துக் கைது செய்து ஸ்டேஷனுக்குக் கொண்டு போகலாம், ஆட்சேபனை கிடையாது. ஆனால் அவரை ரோடிலேயே அடிப்பது போன்ற அசிங்கமான நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது, அது மக்கள் மத்தியில் பீதியை உண்டாக்கக்கூடும். புதிய கண்ணோட்டத்தில் அம்மாதிரி செயல்களை அணுகி, அதற்குத் தக்க இதர நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர நடுத் தெருவில் அடிப்பது என்பது கூடாது.

தீயணைப்புத் துறையைப் பற்றி சென்ற ஆண்டு எஸ்டிமேட்ஸ் கமிட்டி சில சிபாரிசுகளை செய்திருக்கிறது. அது எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். 24 மணி நேரமும் காத்திருந்து பணியாற்றுகிறார்கள். ஆகவே, அந்த சிபாரிசுகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று ஒரு விதத்தில் சொல்லி விட்டு, மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய தங்கமணி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். தாங்கள் நேற்றைய தினம் போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்குச் சென்று அங்கு வைக்கப்பட்டிருக்கக் கூடிய திருடப்பட்ட விக்ரகங்களையும், இன்னும் பல அருமையான பொருள்களையும் பார்த்துவந்ததாகக் கூறி தங்கமணி அவர்கள் சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் சந்தோஷப்பட்டதைக் கேட்டு நானும் உள்ளபடியே சந்தோஷப் படுகிறேன்.



அடுத்தபடியாக ஷூட்டிங் பற்றி நேற்று கூட அவர்கள் சொன்னார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், 18 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்றார்கள். நீங்கள் வழக்கை வாபஸ் பெற்றுவிடுங்கள், நாங்கள் இதை விட்டுவிடுகிறோம் என்று சொன்னால், முதல் அமைச்சர் அவர்களுக்கு சில பொறுப்புகள் உண்டு. இப்படிப்பட்ட சம்பவங்கள் நேரும் பொழுது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது அவசியம்தானா என்பதைப் பரிசீலனை செய்திருந்தால், உண்மையிலேயே நல்ல நீதி வழங்கப்படக்கூடும். முதல் அமைச்சர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றி எனக்குக் கொஞ்சம் வருத்தம்தான். அப்படி பார்டர் எக்ரிமெண்ட் செய்துகொள்வது சரி அல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அவர்கள் அப்படி ஒத்துக்கொள்வது சரியல்ல. அதுவும் தவறு. ஆனால் அவர்கள் ஒத்துக்கொண்டதை முதல் அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள்வதும் தவறு.

குறிப்பாகச் சொல்லப்போனால் உயிர்ச்சேதம் இல்லாமல் போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமேயானால் நலமாக இருந்திருக்கும். போலீஸ் கண்ணியமாக நடந்துகொள்ளவேண்டும், மரியாதையாகப் பேசவேண்டும். அப்படி அவர்கள் நடந்துகொண்டால் திறமை மிக்க போலீஸ் என்ற பெருமையை அவர்கள் அடையலாம்.

மேலும் 3 வருஷங்களாக, 4 வருஷங்களாக தொடர்ச்சியாக நமது மாநிலத்துப் போலீஸ் திறமையாக விளையாட்டுகளில் முதலாவதாக நிற்கிறது என்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப்பட்டவர்களைச் சில பேர்களையாவது பொறுக்கியெடுத்து, ஒலிம்பிக் விளையாட்டுபோட்டிகளில் கலந்துகொள்வதற்கு அனுப்புவதற்கு நமது ஆட்சி நிச்சயம் உதவி புரிய வேண்டும். அவர்களுக்கு தனிப்பயிற்சி அளிக்கவேண்டும். உலக அரங்கில் வெற்றிபெறக்கூடிய சில அம்சங்கள் அவர்களிடம் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டுவிட்டு, போலீஸ் நிர்வாகத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த அளவோடு தெரிவித்து விட்டு, அமர்கிறேன்.

**திரு. எம். தேவராசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள இந்த காவல் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் நல்ல கருத்துக்களைத் தான் சொல்லியிருக்கிறார்கள் சில தனிப்பட்ட குறைகளைச் சொன்னாலும், இந்த நிர்வாகத்தை நல்ல முறையில் புகழ்வதிலிருந்து நாம் இதை உணர்கிறோம். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களைப் பார்க்கின்ற நேரத்தில் நமது மாநிலத்தில் எவ்வளவு அமைதியாக சட்டதிட்டங்களெல்லாம் காப்பாற்றப்பட்டு

வருகிறது என்பதை நாமெல்லாம் உணர்கிறோம். டெல்லியில் கூட நமது தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் கோலோச்சும் இடத்தில் கூட பட்டப் பகலில் கொள்ளைகள் நடைபெறுகின்றன. பட்டப் பகலில் துப்பாக்கி முனையில் பல லட்சக்கணக்கான ரூபாயை கொள்ளை அடித்திருக்கிறார்கள். பெண்களைக் கெடுத்திருக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தைப் பார்க்கிற நேரத்தில் எவ்வளவு அமைதி, எவ்வளவு பாதுகாப்பு என்று நாம் இருமாந்திருக்கக்கூடிய நிலையிலே இருக்கிறோம். இங்கே பல போராட்டங்களை சில எதிர்க்கட்சிகள் தூண்டிவிட்ட நேரத்தில் கூட திறமையாக அவைகளை போலீஸார் சமாளித்திருக்கிறார்கள். மாணவர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, தொழில் சங்கப் போராட்டமாக இருந்தாலும் சரி, துப்பாக்கி சூடின்றி தங்கள் திறமையின் மூலம் அவைகளைச் சமாளித்திருப்பது மிக மிக வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

அதே நேரத்தில் பெரிய வழக்குகள் தமிழகத்தையே கிடுகிடுக்க வைத்த வழக்குகள், விஷ ஊசி வழக்கு, கள்ள நோட்டு வழக்கு போன்ற பெரிய வழக்குகளையெல்லாம் போலீஸார் கண்டுபிடித்திருப்பது அவர்களுடைய திறமைக்குச் சான்று பகர்வதாகும். சமீபத்தில் கூட 40 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சிலைகள் திருட்டுப் போனதைக் கண்டுபிடித்து, அந்த சிலைகளைக் காத்துத் தந்திருக்கிறார்கள் என்பதை அறியும்போது நிச்சயமாக அவர்களை பாராட்ட வேண்டியதுதான். இவ்வளவு திறமை வாய்ந்த போலீஸ் துறைக்கு இன்று இந்த மதுவிலக்குப் பிரச்சனை ஒரு பெரிய சவாலாக இருக்கிறது.

கள்ளச்சாராயம் காய்ச்சுவதை எவ்வளவு முயற்சி செய்தும் போலீசாரால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லவேண்டியதிருக்கிறது. குறிப்பாக எங்கள் பகுதியில்—நீலகிரி மாவட்டத்தின் மலைமேடுகளில் இந்தத் தொழில் பெரிய அளவில் நடக்கிறது. இந்தத் தொழிலை நடத்திய பலர் இன்றைக்கு லட்சாதிபதிகளாக இருக்கிறார்கள். அதற்கு மேல் மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகளை நான் குறைசொல்லவில்லை. கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் தான் இந்த தவறுகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

ஒரு இடத்தில் போலீஸ் ரெய்டு போகிறது என்றால், அதற்கு முன்பே அந்த இடத்திலுள்ளவர்களுக்கு இன்பர்மேஷன் போய்விடுகிறது. பல கம்பிளைன்ட்கள் போய், டி.ஐ.ஜி. மட்டத்தில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நேரத்தில், அவர்கள் தவறு செய்கின்றவர்களைப் பிடிப்பதற்காகச் செல்கின்ற நேரத்தில், கீழ் மட்டத்திலிருக்கின்ற கான்ஸ்டபிள்கள் அந்த விபரத்தைத் தெரிவித்துவிடுகிறார்கள். அதனால் குற்றவாளிகள் தப்பித்துவிடுகிறார்கள்.



எப்படி இந்தத் தகவல் கொடுக்கப்படுகிறது என்பதை நமது காவல்துறை கண்டுபிடித்து, தகவல் கொடுப்பவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. இந்த மலைப்பகுதிகளில் உள்ளே போய் கள்ளச்சாரயம் காய்ச்சுகிறவர்களைக் கண்டுபிடிப்பதற்கு நல்ல பயிற்சி பெற்ற போலீசாரையும், குற்றத்தைக் கண்டுபிடிப்பதில் பயிற்சி பெற்ற நாய்களையும் பயன்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும். ஊழலை மறைத்து வைத்திருக்கும் இடம், சாராயம் காய்ச்சும் இடங்களை அந்த நாய்கள் சுலபமாகக் கண்டுபிடித்துவிடும். அந்த முறையில் ஒரு புதுமுயற்சியை பரீட்சார்த்தமாக மேற்கொண்டால் மிகவும் நல்லது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கூடலூர் பகுதி மிக மிக தொல்லைகள் தருகின்ற பகுதியாக இருக்கிறது. அரசுக்கு அடிக்கடி தலைவலி கொடுக்கின்ற பகுதி இந்த கூடலூர் பகுதி. சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் தலைவலி தீரவில்லை. நில ஆக்கிரமிப்பு அடிக்கடி அங்கே செய்யப்பட்டு, பெருங்குற்றங்கள் நடைபெறுகின்றன. அதன் காரணமாகப் புதிதாக 6 காவல் நிலையங்களை அங்கே இப்போது திறந்திருக்கிறார்கள்: ஆனால் அவைகள் எல்லாம் காட்டுப் பகுதியில் இருப்பதால் போதிய வசதிகள் அங்கே கிடைப்பதில்லை.

அந்தக் காவல் நிலையங்களில் தொலைபேசி வசதி இல்லை. அதனால் ஒரு நிலையத்திலிருந்து இன்னொரு நிலையத்திற்குத் தொடர்பு கொள்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்தக் காவல் நிலையங்களில் தொலைபேசி வசதி செய்துகொடுக்க வேண்டும். அவைகள் காட்டுப் பகுதியில் இருப்பதால் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் வாகன வசதி அங்கே இல்லை. எங்காவது தவறு நடப்பதாக அல்லது தகராறு நடப்பதாக காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தால், வாகன வசதி இல்லாததால் அவர்கள் வந்து சேருவதற்குள் பல குற்றங்கள் நடந்துவிடுகின்றன. ஆகவே, எல்லா காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதியும் வாகன வசதியும் உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அங்கே அரிசி கடத்துவது மிகவும் தீவிரமாக நடக்கிறது. கடலூர் வட்டத்தில் எருமாடு பகுதியிலிருந்து கேரளாவுக்கு அரிசி கடத்தப்படுகிறது. அங்கே செக் போஸ்ட் இருந்தாலும் தலைச்சுமையாக ஏராளமாகக் கடத்திச்

செல்லப்படுகிறது. அதை போலீசார் கவனிக்க வேண்டும். காட்டு இலாகா அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்டால் தான் அவர்களைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுப்பது சுலபமாக இருக்கும்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இனத்தின் காரணமாக அதைச் சொல்லவில்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். கூடலூர் பகுதியில் முக்கியமாக தமிழ் போலீசார்களைப் போட வேண்டும். மலையாளி போலீசார்களைப் போட்டால் பல தொல்லைகள் ஏற்படு கின்றன. அதைக் கண்கூடாக நாங்கள் காண்கிறோம். ஆகவே, கூடுமான வரையில் அந்தப் பகுதியில் எல்லாப் போலீசாரையும் தமிழர்களாகப் பார்த் துப் போட்டால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவிலே, இந்தப் போலீஸ் துறை இவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டு வருவது நமக்கெல்லாம் பெருமை தரும் விஷயமாகும் என்று கூறி, இந்த மானியத்தை வரவேற்று முடிக்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மன்றத் திலே மாண்புமிகு முதலமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியங்களில், காவல் துறை, நியமனப்பு மானியங்களில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். நானும் என்னுடைய கட்சித் தோழர்களும் சில வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறோம். அதை வரவேற்றுப் பேச முற்படுகிறேன்.

1971-ம் ஆண்டிலே முதலமைச்சரவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்கும் போது காவல் துறையினர் கண்ணியமாகவும் மரியாதையாகவும் செயல் பட்டார்கள் என்பதையும், சிறியவர்கள் முதல் பெரிய அதிகாரிகள் வரையில் அவ்வாறே செயல்பட வேண்டுமென்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கின்ற நிலைமையை எடுத்துக்கொண்டால் கடந்த இரண்டு மாதங்களிலே நம்முடைய மாநிலத்தின் தலைமை அதிகாரிகளும் மற்ற புலனாய்வுத் துறையினரும் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களைக் கண்டுபிடித்துத் தந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

சோழ மன்னன் காலத்து சிலை ஒன்று—ஏறக்குறைய 40 லட்சம் ரூபாய்க்கு பெறுமானமுள்ளது—கண்டுபிடிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. வைர நகைகள், ரெக்கப் பணம் இவைகளையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். நல்ல கன்ட்ரோல் ஆபீஸ்கள் எல்லாம் இருக்கின்றன. அந்த ஆபீஸ்களின் உதவி யினால் விரைவிலேயே—10, 20 நிமிடங்களிலே நடவடிக்கை எடுக்க முடிகிறது.





அப்படி இருக்கும்போது இன்றைக்கு பாஸ்போர்ட் இல்லாமலே சில சிலைகள் வெளிநாடுகளுக்குப் போகின்றன. மனிதர்கள் பாஸ்போர்ட் இல்லாமல் போக முடியவில்லை. ஆனால் சிலைகள் பாஸ்போர்ட் இல்லாமல் போய் விடுகின்றன. அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை இன்றைக்குப் பல்வேறு வகைகளிலே சிறப்பான சாதனைகளைப் பெற்றிருந்தாலும் ஏழை எளிய மக்களை அவர்கள் காத்து நிற்கவில்லை என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நிலச் சொந்தக்காரர்களுக்கும் பணம் படைத்தவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் காவல் துறையினர் துணையாக இருக்கிறார்கள். அதற்குச் சில விஷயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அரூர் விவசாயத் தொழிலாளர்கள் சட்ட கூலி கேட்டு, வேலை செய்யாமல் இருந்தார்கள். அங்கே நானும் போயிருந்தேன். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இராமதாஸ் அவர்கள் அங்கே இருந்தார்கள். அவர் எதற்காக ஸ்டிரைக் என்று கேட்டார். நாங்கள் சட்ட கூலி கேட்டு ஸ்டிரைக் செய்கிறோம் என்று சொன் னார்கள். சட்ட கூலி என்று என்ன இருக்கிறது, சட்ட கூலி கொடுக்காமல் வேலை செய்யமாட்டீர்களா என்று தாறுமாறாகப் பேசினார். அப்போது நான் தலையிட்டு; சட்டக் கூலி கேட்டுதானே அவர்கள் வேலை நிறுத்தம் செய்கி றார்கள். அதை வாங்கிக் கொடுங்கள். அதைவிட்டுவிட்டு, ஏன் இப்படி நடந்துக்கொள்கிறீர்கள் என்று சொல்லி, விவசாயிகளிடம் மத்தியஸ்தம் செய்ய வேண்டிய அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது.

பூமாதேவி அம்மாள், சொர்ணம் இவர்களின் நிலத்தை சரியான முறையில் சாகுபடி செய்து வந்தார்கள். அந்த நிலத்திற்கு ஒரு மணி நேரத்திற்குள் பணம் கட்டிவிடுகிறோம் என்று சொன்னபோது போலீஸார் மரியாதை இல்லா மல் பேசி கஷ்டப்படுத்தினார்கள். பூமாதேவி அம்மாளின் உறவினர் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்; பணத்தைக் கட்டிவிடுகிறோம் என்று சொன் னார். அவரை போலீஸார் பூட்ஸ் காலால் உதைத்துத் தள்ளிவிட்டார்கள். இப்படிப் பல்வேறு இடங்களில் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி முதலமைச்சருக்கு மனு கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாரங்கம் என்ற இடத்தில் 10 ஆண்டுகளாக பஞ்சாயத்து தலைவராக இருந்தவர் பொன்னம்பலம் என்பவர். அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவருடைய ஜாதியைக் கேட்டு, அவரைத் தாறுமாறாகத் திட்டி, அநாகரிகமாக நடந்துகொண்டார் என்பதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருப்பதாகச்

சொன்னார்கள். எனக்கும் மனு தந்திருக்கிறார்கள். முதலமைச்சரவர்களுக்கும் வந்திருக்கும் என்று கருதுகிறேன். என்னுடைய பேச்சை முடித்துவிட்டு. இதை முதலமைச்சரவர்களிடம் தந்துவிடுகிறேன்.

சீர்காழி, திருவெங்காடு பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட தொழிலாளி மக்கள் வேலைக்குப்போய்விட்டு, மாலை 6 மணிக்குத்தான் வீடு திரும்புவார்கள். அதற்குமேல் அவர்கள் கடைக்குச் சென்று சாமான்கள் வாங்கிவருவார்கள். அப்படிக் கடைகளுக்குச் செல்கின்ற நேரத்தில் திருவெங்காடு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் காலால் உதைக்கிறார். அப்படி உதைத்ததில் ஒரு அரிசனத் தொழிலாளி கீழே விழுந்துவிட்டான். அதனால் அங்கே பெரிய அமளி ஏற்பட்டது. அதன் பிறகு மாயூரம் டிபுடி சூப்பிரண்டு தலையிட்டு, நிலைமை ஓரளவு சீரடைந்திருக்கிறது.

பழையபாளையம் அரிசன மக்கள் 40, 50 பேர்களை நிலச் சொந்தக்காரர் களின் தூண்டுதலின் பேரில் அரஸ்ட் செய்து, கொள்ளிடம் உதவி சப்-இன்ஸ் பெக்டர் பல்வேறு வகைகளில் துன்பப்படுத்தியிருக்கிறார். பணம் வாங்கி விட்டுத்தான் அப்படிச் செய்தார் என்று சொல்லி, அதைக் கண்டிக்கும் வகையில் பெரிய ஊர்வலம் கூட நடைபெற்றது. இப்படிப் பல்வேறு சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அதேமாதிரி, பாக்கி இருந்தால் நிலச் சட்டத்தின்படி வழக்குத் தொடர்ந்து சிவில் கோர்ட்டு மூலம் நடவடிக்கை எடுத்து வசூல் செய்து கொள்ளலாம். அதை விட்டுவிட்டு, விவசாயிகளிடம் பணம் கேட்டு, உடனே கொடுக்க முடியா விட்டால் போலீசாரை வைத்து, அவர்களை அப்புறப்படுத்துகின்ற அவல நிலை இருக்கிறது. அவர்கள் விவசாயிகளை அடித்து நொறுக்கி சித்திரவதை செய் கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற் குக் கொண்டுவருகிறேன்.

கள்ளநோட்டு வழக்குகளைப்பற்றி இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார் கள். அந்த விஷயங்களில் இன்னும் துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென் பது என்னுடைய கருத்து. கள்ளநோட்டு வழக்குகளில் பெரும் செல்வந் தர்கள் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை கைதுசெய்து, ஜெயிலுக்கு அனுப்பினால் 'ஏ.கிளாஸ்' வேண்டும், 'பி.கிளாஸ்' வேண்டுமென்று கேட்கிறார்கள். அரசியலில் 30, 40 ஆண்டுக் காலம் ஈடுபட்டு சிறை செல்பவர் களுக்கு 'பி கிளாஸ்' கொடுத்து, கேழ்வரகு கஞ்சி கொடுக்கிறார்கள். ஆனால் கள்ள நோட்டடித்தவர்களுக்கு ஏ கிளாஸ், பி கிளாஸ் கொடுக்கப்படுவது சரியா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அப்படிக் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.



(முற்பகல் 11-00)

அதேபோல கம்பத்தைச் சேர்ந்த திருமலை சாமர்த்தி எனப்படும் நித்தியா னந்த சுவாமி என்பவர் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்து ரூபாய் 23,700 பெறுமானமுள்ள 237 நூறு ரூபாய் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டன என்கிற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர் பெயர் நித்தியானந்தசாமி —பொட்டையனுக்கு செந்தாமரைக் கண்ணன் என்று பெயர் வைப்பதைப் போல—சாமிப் பெயரில் இன்னும் எத்தனை பேர்கள் கள்ளநோட்டு அடிக்கிற சமூக விரோதச் செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை புலனாய்வுத்துறை ஆராய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கடவுளர் சிலைகளைப்பற்றிச் சொல்கிறேன். விலை உயர்ந்த சிலைகள் எல்லாம் கடத்தப்படுகின்றன, களவு போகின்றன. நான் கேட்கி றேன். எதற்காக இருபது லட்சம், முப்பது லட்சம் பொறுமான விலை உயர்ந்த சிலைகளை கோயில்களில் வைத்திருக்க வேண்டும்? உண்மையான சாமியானால் தங்கத்திலும், வைரத்திலும், வைடூரியத்திலும் இருக்க வேண்டாம். அந்தச் சிலைகளை எல்லாம் எடுத்தால் பத்து கோடிக்கு மேல் வரும். அவற்றை எல்லாம் எடுத்து கோயில்களிலே மஞ்சளிலே வைத்துவிட்டு, இந்தப் பத்துக்கோடி ரூபாயைக்கொண்டு அரிசனங்களுக்குக் காலனி கட்டிக்கொடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சிலைகளுக்கு—சிற்ப வேலைகளினால் தான் அத்தகைய உயர்ந்த மதிப்பு ஏற்பட்டிருக்கிறதே தவிர, அதில் உள்ள உலோகங்களினால் அல்ல. அந்த உலோகங்களை எடுத்து பத்து கோடிக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வது இயலாத காரியம். உலோகங் களாகிவிட்டால் அதன் மதிப்பு குறைந்துவிடும். சிற்ப நுணுக்கங்களுக்காக 40 லட்சம் என்கிறார்களே தவிர வேறு அல்ல.

**திரு. எஸ். வடிவேல்:** வைதீசுவரன் கோயில் சுவாமிக்கு ஒரு கைக்கு ஒரு லட்சம் ரூபாயில் கவசம்—ஒரு கை தான். மதுரை மீனாட்சிக்கு முடி 14½ லட்சம். "கஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி உனக்கு ஏண்டி கணக்கில்லா நகைகள் இருக்கின்றன? கட்டத் துணியின்றி—கஞ்சிக்கு வழி யற்ற கண்ணம்மாளைப் பார். போட்டுத் துப்ப வெற்றிலை பாக்குக்கு வழியற்ற பொன்னம்மாளைப் பார்," என்றெல்லாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் நீங்கள் தான் பேசினீர்கள். அது பட்டி தொட்டி எல்லாம் பரவியது. உங்கள் ஆட்சியில் பல புதிய மாறுதல்களை எதிர்பார்த்தேன். அத்தகைய மாறுதல் களை எல்லாம் உண்டாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையினர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதில் 63 சதவிகிதம் வெற்றி கண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை நூற்றுக்கு நூருக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆங்கில ஏகாதிபத்ய காலத்தில் சந்தேகக் கேசுகள் என்று பிடித்து உள்ளே போட்டார்கள். இன்றைக்குக் குறுணியை எடுத்து விற்றுவிட்டு பெண்டாட்டியோடே சினிமாவுக்குப் போகிறவன் 10 ரூபாய்க்கு ரூம் எடுத்துக் கொண்டா தங்கப் போகிருன்? அங்கங்கே பஸ் ஸ்டாண்டிலும், ப்ளாட்பாரத்திலும் படுத்திருக்கிறபோது இவர்களை பிடித்துக் கொண்டுபோய் சந்தேகக் கேஸ்கள் என்று போடுகிருர்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களை இப்படித் தொந்தரவு செய்வதில் என்ன பயன் இருக்கிறது? கள்ள நோட்டு அடிக்கிற பெரும்புள்ளிகளை—ஒரு நான்கு பேர் சந்தேகக் கேஸ் என்று போட்டு உள்ளே பிடித்து வைத்து விசாரணை செய்தால் நல்லது—இதுபோல ஏழைபாழைகள் மீது சந்தேகக் கேஸ்கள் என்று போடுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கு. காமாட்சி: பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தை ஆதரித்து ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நமது காவல்துறையினர் நல்ல திறமை பெற்றவர்கள், சிக்கலான பெரு வழக்குகளை எல்லாம் கண்டு பிடித்திருக்கிருர்கள் என்கிற நல்ல பெயரை எடுத்திருக்கிருர்கள். இந்த நாட்டிலே பொருளாதார சீரழிவை ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கிற சமூக விரோதிகள் கள்ள நோட்டு அடிப்பதிலே ஈடுபடுகிருர்கள். அவைகளை எல்லாம் திறமையாகக் கண்டுபிடித்த பெருமை நம் நாட்டு காவல்துறையினரைச் சாரும்.

விஷ ஊசி போடுவதன் மூலம் நடத்தப்பட்டு வந்த பெரும் திருட்டுக் கும்பல்களைக் கண்டுபிடித்த பெருமையும் நம்மைச் சார்ந்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் இவைகளை எல்லாம் விட மிக உச்சத்தில் இருப்பது, நம் நாட்டிலே இருக்கின்ற உணவுப் பொருளை வெளிமாநிலங்களுக்கு கள்ளக் கடத்தலில் கொண்டு செல்வதுதான். அதையும் தடுத்து நிறுத்த நமது காவல்துறையினர் பல இடங்களிலும் திறமையாகப் பணியாற்றி, இங்கே உணவு கிடைக்கிறது என்கிற நிலைமையை உண்டாக்கியிருப்பது மிகமிகப் பாராட்டுக்குரியது. அந்த அளவுக்கு அவர்கள் கடமை உணர்ச்சியுடன், கள்ளக்கடத்தலைத் தடுத்து நிறுத்தாவிட்டால் இந்த நாட்டிலேயும் பஞ்சம் ஏற்படுகின்ற சூழ்நிலை இருந்திருக்கக்கூடும்.





இப்போது கூட நம்முடைய நாட்டிலே குற்றங்கள் நடைபெறுகின்றன, சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று பேசுகிருர்கள்—தலைவர்கள் எல்லாம் கூட அறிக்கை விடுகிருர்கள். வேறு மாநிலங்களில் எதுவுமே நடைபெறவில்லை என்பதுபோன்ற அளவுக்கு அவர்கள் அறிக்கை இருக்கிறது. இன்னும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் பெண்கள் நடமாட முடியவில்லை, ஆங்காங்கு கற்பழிக்கப்படுகிருர்கள் என்று மிகப் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் எல்லாம்கூட இங்கே பேசுகிருர்கள். அவர்கள் எல்லாம் அண்டை மாநிலங்களில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும். ஏனென்ருல் குற்றம் எல்லா மாநிலங்களிலும்தான் நடக்கின்றன. ஆசாபாசங்கள் இருக்கிற வரை குற்றங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும். தடுக்க முடியாது. போலீசார் எதிரில் நடக்கிறதா? போலீசார் தூண்டுதல் பேரில் நடக்கிறதா? ஆட்சியாளர்களே தூண்டிவிடுகிருர்களா என்பதைப் பார்க்க வேண்டும். இந்த அளவில் குற்றங்கள் நடைபெறுகிறது என்று சொல்லமாட்டேன்.

மத்திய மாநிலத்தில் 16 பெண்களைக் காணவில்லை என்றும், 50 பெண்கள் விபசாரத்திற்காகக் கடத்தப்பட்டார்கள் என்றும் செய்தி வருகிறது.

கேரளத்தில் இருந்து வெளிநாட்டுக்கே பெண்கள் கடத்தப்பட்ட புகார்கள் சில நாட்களுக்கு முன்னர் வந்ததை அறிவோம்.

இதுபோன்ற குற்றங்கள் குறைய வேண்டுமென்ருல் நாட்டில் உள்ள பெருந் தலைவர்கள் பிரசங்கம் செய்ய வேண்டும். நல்ல அறிவுரைப் பிரசங்கங்கள் மூலம் குற்றங்கள் எல்லாம் கொஞ்சம் குறையலாமே தவிர வேறு வழியில்லை.

இன்றைக்கு வெளிநாடுகளிலும் கூட குற்றங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அண்மையில் ஸ்காட்லாந்து போலீசின் திறமைபற்றி திரு. என். கணபதி அவர்கள் பேசினர்கள். அங்கேயே—இங்கிலாந்து நாட்டு இளவரசி ஆனைக் கடத்துவதற்கான முயற்சி நடந்திருக்கிறது.

குற்றங்கள் எந்த நாட்டிலும் நடைபெறுவதுதான். அந்தக் குற்றங்கள் நடைபெருமல் இருக்க என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர—இந்த ஆட்சியில் பெண்கள் நடமாட முடியவில்லை என்பதாகப் பேசுவது பொருத்தமில்லாத வாதம். எல்லா மாநிலங்களையும் விட நம்முடைய மாநிலத்தில்தான் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. இதை எத்தனையோ முறையில் சொல்ல முடியும். இன்றைக்கு குஜராத்திலும், பீகாரிலும், அண்மையில் ஒரிசாவிலும் நடந்த கலவரங்களை நாம் அறிவோம். இந்தக் குற்றங்கள் நடைபெற என்ன காரணம், எப்படிக் குற்றங்கள் நடைபெறுகின்றன என்பதை எல்லோரும் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள், போட்டித் தொழிற்சங்கங்கள் காரணமாக பொறாமை, பூசல் அதன் காரணமாக ஏற்படுகிற பயங்கர விளைவுகள் ஆகியவற்றை நாம் காண வேண்டும். நம்முடைய கொள்கையான—ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் தான்—அதிலும் அரசியல் தலையீடு இல்லாமல் அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிகிற தொழிலாளர்களே தலைவராக இருக்க வேண்டும் என்பதைச் சொன்னோம். இதை மற்ற கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருந்தால் தொழிலாளர்கள் மத்தியில் பொறாமை, போட்டி பூசல், அதன் காரணமாக ஏற்படுகிற விளைவுகளை நாம் பெரும் அளவு தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு நம் நாட்டில் இருக்கிற கம்யூனிஸ்டுகள் தங்கள் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகக் கையாளுகிற முறைகளைத் தயவு செய்து மாற்றிக் கொண்டால் நாட்டில் அதிகமான குழப்பங்கள் இராது. இது என்னுடைய அபிப்பிராயம். இன்றைக்கு பீகாரில் நடந்த கலவரங்களுக்குக் காரணம் கம்யூனிஸ்டுகள் தான் என்று அந்தப் பகுதி எம்.பி.-க்களே குற்றம் சாட்டுகிறார்கள்.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை)

காங்கிரசாட்சியில் இருக்கிறவர்களைக் கூட கம்யூனிஸ்டுகள் இன்றைக்கு பாலுக்குக் காவலாகவும் பூனைக்கும் தோழனாகவும் இருக்கிறார்கள், இவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்றெல்லாம் அங்கே குற்றம் சாட்டுகிறார்கள். அதற்காகத்தான் சொல்லுகிறேன். நான் அவர்கள் கொள்கையைக் குறை கூறவில்லை. அவர்கள் தங்கள் கொள்கையை நிறைவேற்றிக்கொள்வ அன்று அவர்கள் வழியில் இல்லாவிட்டாலும் இன்றைக்குக் காங்கிரசுடன் இருக்கிற காரணத்தால் காந்தி அவர்கள் வழிமுறையிலாவது மாற்றிக் கொண்டால் இந்த நாட்டில் குழப்பமே இருக்காது. நல்லவிதமான ஒரு நிலைமை இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் திருவரம்பூர் தொகுதி அதிலே இரண்டு பகுதி. காந்திநகர் என்று தான் இரண்டுக்கும் பெயர். எங்கேயாவது கொள்ளை நடந்தது என்றால் அதற்கு முதலில் திருவரம்பூருக்குதான் வருகிறார்கள். இது உண்மையில் வெட்கப்பட வேண்டியதுதான் இன்றைக்கு என்ன செய்து இருக்கிறார்கள் என்றால் சில பல குற்றவாளிகளை எல்லாம் ஒன்று சேர்த்து திருவரம்பூரிலும் ராம்ஜிநகரிலும் அங்கே காந்திநகர் என்று பெயரிட்டு அங்கே ஒன்றாக வைத்திருக்கிறார்கள்.

இங்கே நடந்த கார்ப்பரேஷன் கொள்ளை, வெளி மாநிலத்தில் வங்கியில் கொள்ளை—இதற்கு எல்லாம் காரணமாக இருந்தவர்கள் இந்தப் பகுதியில் இருப்பவர்கள்தான் என்று போலீசார் கண்டுபிடித்து இருக்கிறார்கள். நான்



ட ஐ. ஜியிடம் தனியாக விவாதித்தேன். அதற்காக ஏதாவது வழிவகை சய்து அந்தக் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு வசதி செய்து தரப்பட வண்டும், அவர்கள் இந்தத் திருட்டுத் தொழிலுக்குப் போகாமல் இருக்க வழி சய்து தரவேண்டும் என்று அவர்களிடத்தில் விவாதித்து இருக்கிறேன். பவர்களும் அதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த அளவு நம் தமிழ்நாடு நல்ல நிம்மதியான முறையில் இந்த நாட்டில் இருக்கிற மாகாணங்கள் அத்தனையும் ஒன்றாக வாழ்க்கை நடத்துகிற மாகாண ாக இருக்கிறது. அதற்குப் போலீஸ் இலாகாவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திறமையான ஆட்சியும் தான் காரணம் என்பதை எடுத்துச் சொல்லி அவர்களுடைய இந்த மானிய கோரிக்கையை வரவேற்று விடை பெறுகிறேன்.

. . திரு. ஏ. எம். திருப்பூர் மொய்தீன்: பேரவைத் தலைவர் அவர்களே போலீஸ் மானியத்தின் மீது முஸ்லிம் லீகின் கட்சியின் சார்பில் நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு பிரிவாகப் பேசப்பட்டது. ஒரு பிரிவு அவர்கள் செய்வது எல்லாம் பொருத்தமானது, முறையானது, திறமையானது, நாணயமானது என்ற கருத்துப்பட இருந்தது. மற்றொரு தரப்பு செய்வது எல்லாம் குறையானது, குற்றமானது, ஒரு தலைப்பட்சமானது, ஏமாற்றமானது என்ற பொருள் பட இருந்தது. நான் இந்த இரண்டையும் ஏற்றுக்கொள்ளாமல் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ் என்று சொன்னால் அதற்குத் தமிழில் இப்போது காவல் துறை என்ற பெயர் கொடுத்து இருக்கிறோம். காவல் துறை என்று சொல்லும்போது வேளாண்மைக்கு வேலி எப்படியோ அது போல மனித இனத்திற்கு அவர்கள் வேலி. அரசியலுடைய இன்றைய சூழ்நிலையில் . . . என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும் . . . இன்றைக்கு எப்படி இருக்கிறது என்றால் அவர்கள் வேலியாக இருப்பதற்குப் பதில் அவர்கள் வாழையாக மாறி விட்டார்கள்.

போலீசார் இன்றைக்கு வேலியாக இல்லை. அதற்கு அவர்களை விடுவதும் இல்லை. அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால் ஐய்யய்யோ இப்படி நடவடிக்கை எடுக்கிறார்களே, கொடுமைப் படுத்துகிறார்களே, அக்கிரமம் செய்கிறார்களே என்று சொல்கிறோம். இப்படிச் சொல்லுகிறார்களே என்று நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் சும்மா இருக்கிறார்களே, இப்படி அக்கிரமம் நடக்கிறதே என்று சொல்லுகிறோம். அவர்கள் என்ன செய்வது என்பதை யாரும் தெளிவாகச் சொல்லுவது இல்லை.

[திரு. ஏ. எம். திருப்பூர் மொய்தீன்] [1974 மார்ச் 25

நான் சொல்லுகிறேன், அவர்களுடைய பணியைச் செய்வதற்கு முதலில் பூரண உரிமை கொடுக்கப்பட வேண்டும். அதிலே நாம் தலையிடக் கூடாது. சிற்சில தவறுகள் இருக்கலாம். அந்தத் தவறுகளைத் திருத்துவதற்காக அந்த இலாகாவின் பொறுப்பை வகித்து இருக்கிற முதல்வரிடம் நாம் கருத்துத் தெரிவிக்கலாம்.

இப்போது வந்தவாசியில் ஒரு சப்இன்ஸ்பெக்டர் தவறாக நடந்து கொண்டார் என்ற காரணத்திற்காக மாற்றப்பட்டார். ஆனால் மறுபடியும் யாருடைய உத்தரவின் பேரிலோ 2-3 வாரத்திற்குப் பிறகு மீண்டும் அதே இடத்திற்கு சப்இன்ஸ்பெக்டராக வந்திருக்கிறார். இது எப்படி நடந்தது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படிச் சில சம்பவங்கள். இப்படி அவர்களுடைய உரிமைகளில் தலையிடும்போது அவர்கள் குழம்பி விடுகிறார்கள். தங்கள் கடமைகளைச் சரியான முறையில் செய்ய முடியாதவர்களாகி விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை அரசியல் வாதிகளாகிய நாம் உண்டாக்கக் கூடாது. இங்கே நானும் ஒன்றைச் சொல்வது, மற்றவர்களும் ஒன்றைச் சொல்லுவது, நேர் மாறான காரியங்கள் செய்யச் சொல்வது . . . இந்தக் குற்றங்களைச் செய்தவனை விட்டுவிடுங்கள் என்று சொல்வது, மற்றொரு சாரார் பிடியுங்கள் என்று சொல்வது . . . இப்படி எல்லாம் சொல்லுவதால் போலீஸ் இலாகாவினர் திணறுகிறார்கள்.

இங்கே போலீசாருடைய திறமையைப் பற்றிப் பாராட்டுகிறார்கள். அந்தத் திறமை பூரணமாகப் பிரதிபலிக்க வேண்டுமென்றால் நாம் அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும். தவறு செய்தவர்களை நேரடியாகத் தெரிந்தால் அவர்களிடம் சொல்லி அவர்களைத் திருத்த வேண்டும். தவறுகளை அனுமதிக்கவே கூடாது.

வெளி மாகாணங்களில் இது மாதிரி நடக்கிறது என்பது எல்லாம் பிரச்சனை அல்ல. நம் மாகாணத்தில் நடக்கும் திருட்டுக் கொடுமைகள் நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும். எனக்குத் தெரிந்த வரை இந்தத் திருட்டுக்கு ஒரு காரணம் இருக்கிறது. மேல் நாட்டு படங்கள் அதிலே எப்படி சுவர் ஏறிக் குதிப்பது, எந்த மாதிரி கயிறு போட்டு ஏறுவது, எந்த ஏணிகளை அமைத்து ஏறி இறங்குவது என்ற விவரங்கள் அடங்கிய படங்கள் இங்கே இறக்குமதி செய்யப்படுகின்றன.

இன்னொரு படத்தைக் கூடப் பார்த்தேன், என்னைப் பயித்தியக்காரன் என்று சொன்னாலும் சரி, சுவரொட்டியில் தான் பார்த்தேன் ஏழெட்டு பெண்கள் ஒரு ஆண்மகனைத் தூக்கிக் கொண்டு போவதாக . . . ஒவ்வொரு பெண்ணும்



1974 மார்ச் 25] [திரு. ஏ. எம். திருப்பூர் மொய்தீன்]

ஒவ்வொரு அங்கமாக கால் கையென்று தனித்தனியாக தூக்கிக்கொண்டு போவது போன்றும் அதற்கு இந்த ஆண் மகன் அவர்களிடமிருந்து காப்பாற்றுங்கள் என்று சொல்லுவது போலவும் ஒரு படம்.

இது போன்ற படங்கள் ஒருபுறம். நூதனமான திருட்டுகள் நடைபெறுவது என்றால் அது எல்லாம் அவர்களுடைய மூளையிலிருந்து வந்தது அல்ல. இப்படிப்பட்ட சினிமாக்கள் பார்த்து அவர்கள் தெளிவாகத் தெரிந்து வைத்துக் கொண்ட வழிமுறை.

கயிற்றைப் போட்டு அமுக்கி கொலை செய்வது போன்றவை எல்லாம் மேல் நாட்டுப் படங்களிலிருந்து காப்பி அடிக்கப்பட்டவைகள் ஆகும்.

மற்ற மாகாணங்கள் எப்படியோ போகட்டும். இந்த மாகாணத்தை கட்டுப்படுத்த வேண்டுமென்றால் முதல் முதலாக என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் இம்மாதிரியான படங்கள் இங்கே இறக்குமதி செய்யப்படுவதைத் தடை செய்தாக வேண்டும். தடைப்படுத்தப்பட்டால் தான் இத்தகைய குற்றங்கள் குறையும். இல்லையென்றால் நல்ல பிள்ளைகள் எல்லாம் கூடத் தவறு செய்யக் கூடிய சூழ்நிலை இத்தகைய படங்களால் ஏற்படுகிறது. இப் படங்களைப் பார்த்து அம்மாதிரியான குற்றங்கள் நிறைய செய்யப்படுகின்றன.

இன்னொரு விஷயம். அதற்கு நான் உடன்பாடு உள்ளவன் அல்ல. இந்த தெய்வங்கள் சிலை திருட்டுப் போகின்றன. அதற்குக் காரணம் அங்கே இருக்கும் கோவில் முறைகள் சரியாக பந்தோபஸ்தாக வைக்கப்படுவது இல்லை. பாதுகாப்பாக வைத்தால் எப்படித் திருட்டுப் போகும்? இரண்டாவது சூழ்நிலை. வறுமை காரணமாக அமைந்து விடுகிறது. அது முதல்வர் குறிப்பிட்டதுபோல் கலை என்பதற்காக மற்ற நாடுகளில் அது அதிக விலை கொடுத்து வாங்கப்படுகிறது. நிச்சயமாக, அப்படி இருந்தாலும் அதைத் தடைபடுத்த வேண்டும். அந்த மாதிரியான தெய்வங்கள் களவாடப்பட்டு போவதிலிருந்து காப்பாற்றி ஆகவேண்டும்.

நம் அன்புக்குரிய கம்யூனிஸ்ட் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். விக்கிரகங்களை உருக்கியோ விற்றோ ஏழைகளுக்கு நன்மையளிக்கும் வகையில் உபயோகப்படுத்தலாம் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

அதைத் தெய்வம் என்று கருதுகிறவர்களுடைய மனதைப் புண்படுத்தி உதவி செய்வது சரியல்ல, வேறு வகையிலே அவர்களுக்கு உதவி செய்யலாம்.

நான் சொல்வது எல்லாம், போலீஸ்தரப்பினரைத் தூண்டிவிட்டு--ஒரு கூட்டம் நடக்கிறது, குழப்பம் ஏற்படுகிறது என்றால் போலீஸார் போகிறார்கள், இன்ஸ்பெக்டர் போகிறார், போலீஸார் போகிறார்கள், மேல் அதிகாரிகள் எல்லாம் போகிறார்கள். அந்த நேரத்தில் அவர்களைக் கல்லால் அடிக்கிறார்கள், அவர்கள் திருப்பியடித்தால் கொடுமை செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது—தூண்டிவிட்டு, அவர்களைத் தூண்டிவிடுகிற பின்னணிதான் இதற்கெல்லாம் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போலீஸார் அவர்களை அடக்குவது என்றால் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது சும்மா இருக்க வேண்டும். அவர்கள் சும்மா இருக்கக் கூடிய சந்தர்ப்பத்தைக் கொடுத்தால் நாம் சத்தம் போட ஆரம்பிக்கிறோம். அவர்கள் நடவடிக்கை எடுத்தால் அதற்கும் நாம் சத்தம் போட ஆரம்பிக்கிறோம்.

ஒரு குற்றம் செய்தவனுக்கு எம்.எல்.ஏ.க்களோ அல்லது அந்தஸ்துள்ளவர்களோ கட்சியின் பொறுப்பிலேயுள்ளவர்களோ குற்றவாளி என்று தெரிந்தால் அவனுக்குப் பரிந்து செல்லக் கூடாது. அப்படிச் செய்தால் அவர்கள் இரண்டு தவறுகளைச் செய்தவர்களாகிறார்கள். அப்படி நான் செய்வதில்லை. எத்தனையோ பேர்கள் சொல்லியிருக்கிறார்கள், என்ன நடந்தது என்றால் சாமான் விலைக்கு வாங்கினேன், அது திருட்டு சாமானும் என்றால் நான் வந்து சொல்லமாட்டேன், யார் வந்து சொன்னாலும் நிச்சயமாக நான் போக மாட்டேன் என்று சொல்லுவேன். ஏனென்றால் நிச்சயமாக அவன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மற்ற இடங்களில் எத்தனையோ பெண்களையெல்லாம் தூக்கிக்கொண்டு போனார்கள் என்றெல்லாம் நண்பர் சொன்னார்கள். நான் சொல்வது எல்லாம் நம்முடைய உத்தமிகளுடைய கற்பைக் காப்பாற்றுவதற்கு அவர்களுக்கு பூரண அனுமதி கொடுக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளிலே ஈவிரக்கமின்றி குற்றஞ்செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதை எந்த ரூபத்திலேயும் வளரவிடக் கூடாது. அவர்களுக்கு தாட்சண்யம் காட்டினால் அந்த நிலைமை வளரும், குறுக்குவழி காட்டினால் அந்த நிலைமை வளரும். அதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கக் கூடாது.

அந்தக் காலத்திலேயிருந்து நான் அரசியலிலே ஈடுபட்ட 45, 50 ஆண்டு காலமாகப் போலீஸார் நடந்து கொள்கிற முறை சரியல்ல என்றுதான் சொல்லப்படுகிறது, சரியென்று சொன்னதை நான் பார்த்ததேயில்லை, சொல்ல முடியாது. அந்தக் காலத்திலே கள்ளுக்கடை மறியல் என்றால் என்னைப் போன்ற இளைஞனையெல்லாம் கொண்டுபோய் நொறுங்க அடிப்பார்கள், விட்டு





விடுவார்கள், கொடி சத்தியாகிரகம் என்றாலும் அப்படிப்பட்ட நிலைமைதான், நொறுங்க அடிப்பார்கள். அப்பொழுது எல்லாம் அடிக்கலாம் என்று சொல்லப் பட்டது.

அந்தத் துறையே இப்படிப்பட்ட துறைதான். அவர்களுடைய கைகளுக்கும் முரடனுடைய முதுகுக்கும்தானே தொடர்பு, முட்டாளுடைய முதுகுக்கும் போலீஸினுடைய கைக்கும்தான் தொடர்பு. இரண்டு போட்டுத் தான் ஆகவேண்டியிருக்கிறது. கொஞ்சம் சாதாரணமாக விட்டுவிட்டால் அனுவசியமாகக் கருதுகிறார்கள்.

முன்னாலே எல்லாம் எவ்வளவு பயம் இருந்தது? ஒரு இன்ஸ்பெக்டர் வருகிறார் என்றால் ஒரு அச்சம் இருந்தது. ஜனநாயகத்தின் பேரால் இப்பொழுது அது போய்விட்டது. பயம் போய்விட்டது. எப்படி அவர்கள் மக்களைக் காப்பாற்ற முடியும்?

நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அவர்களை வாழையாக்க வேண்டாம், பழையபடி வேலியாகவே ஆக்கிவிட வேண்டும். எல்லா அரசியல் கட்சிக்காரர்களையும் நான் கேட்டுக் கொள்வேன். அவர்களை வேலியாக்கி நாம் வாழையாக வேண்டும், அவர்கள் வாழையாக மாறினால் நிலையைச் சமாளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில தவறுகள் அவர்கள் செய்யக்கூடும். எல்லோருமல்ல, சிலர் இருக்கிறார்கள். கமுதியிலே டெபுடி சூப்பிரண்டெண்டெண்ட், யாரோ இங்கே அதைப்பற்றிச் சொன்னார்கள். காரிலே போய் தர்க்காவிலே பிரார்த்திப்பதற்குப் போனவர்களை நிறுத்தி உதை உதையென்று உதைத்து, அவர்களுடைய கார் சாவியைப் பிடுங்கி அவர்களை ரோட்டிலே நடக்கவிட்டார்கள். அவர்கள் இதை ஏன் செய்கிறார்கள் என்றால் அவர்கள் குடித்துவிடுகிறார்கள், அதை போலீஸ் தரப்பிலேயுள்ள மேலதிகாரிகள் அல்லது அந்தத் துறையை வகித்து இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் கடுமையாக நடவடிக்கை எடுத்தால் நின்றுவிடும்.

சட்டத்திலே அதற்கு இடம் இல்லையோ என்னவோ, அவரை அப்பநாயக்கம் பட்டியிலிருந்து சொக்கனூர் மாற்றுகிறார்கள், அல்லது புளியம்பட்டிக்கு மாற்றுகிறார்கள், அவ்வளவுதான். நான்கு பேர்களுக்குத் தொல்லை தருகிறவர்களை டிஸ்மிஸ் செய்ய வேண்டும், அதற்குச் சட்டத்திலே இடம் இல்லையோ என்னவோ தெரியவில்லை. அப்படி நான்கு பேர்களைச் செய்தால் நிச்சயமாக மற்றவர்கள் தவறுகள் செய்யமாட்டார்கள்.

அபிராமத்திலே ஒரு தவறு செய்தால் அவரை வேறு ஊருக்கு மாற்றினால் அந்த ஊரிலேயும் அவர் தவறுதான் செய்கிறார் என்று சொன்னார்கள். நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. குறை செய்கிற மனிதனை ஏன் டிஸ்மிஸ் பண்ணக் கூடாது? அதற்குச் சட்டத்திலே இடம் இருக்கிறதா இல்லையா என்பதை சட்ட மந்திரி அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.

தவறு செய்தவர்களைப்—போலீஸாக இருந்தாலும் மேலதிகாரியாக இருந்தாலும்—பூட்ஸ் காலால் உதைக்கிறார்கள் என்று சொன்னார்கள், அது சரியல்ல. ஒரு அரிசன வகுப்பைச் சேர்ந்தவரை அப்படிச் செய்தார்கள், கொண்டுபோய் அடித்தார்கள் என்று சொன்னார்கள். யாரும் அப்படிச் செய்யக் கூடாது. அவர்கள் செய்வதற்குக் காரணம் குடி வெறிதான். ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் அல்லது மூன்று தடவைகள் நடக்கிறது என்றால் உடனே சஸ்பெண்ட் செய்யாமல் டிஸ்மிஸ் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் நிற்கும்.

நான் அதிக நேரம் பேச விரும்பவில்லை, அதற்கு என் உடல்நிலையும் இடம் கொடுக்காது. போலீஸ் தரப்பிலே உள்ளவர்களைப் பொதுவாக நான் பாராட்டு கிறேன். சிக்கல்களைக் கண்டுபிடிக்கிற திறமை உங்களிடத்திலே இருக்கிறது.

எல்லோரும் அவர்களைப் பாராட்டினார்கள். நான் அவர்களின் சார்பிலே கேட்டுக்கொள்வது, அவர்களுடைய மூளையையும் சிந்தனையையும் இந்த மாதிரி முறையிலே பூரணத்துவமாகப் பயன்படுத்த நாம் வாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும். அதற்கு எல்லா அரசியல் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு இந்த மானியத்தை முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலே வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, இந்தக் காவல் துறை மானியத்திலே என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை அவைக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

எப்போதுமே காவல் துறையைப் பார்த்தே ஆட்சி எப்படி நடக்கிறது என்பதை அதை அளவுகோலாக வைத்து முடிவு கட்டிவிடலாம். உங்களுடைய புள்ளிவிவரங்களைப் பார்க்கிற நேரத்திலே 26 ஆயிரம் வழக்கு களாக இருந்தது இன்றைக்கு 28 ஆயிரம் வழக்குகளாக அதிகரித்து கிட்டத்தட்ட 9 சதவிகிதம் அதிகமாக குற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறபோது நான் இந்த ஆட்சியாளர்களைத்தான் அவர் களுடைய திறமையைத்தான் குற்றஞ்சாட்ட வேண்டும், காரணம் நம்முடைய போலீஸ் இலாகாவைக் குற்றம் சொல்ல முடியாது.



தமிழக போலீஸ் மிகத் திறமை வாய்ந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. எனக்கு முன்னாலே பேசிய உங்களுடைய தோழமை கட்சியைச் சேர்ந்தவரே சொன்னார் அவர்களுடைய திறமையை முழுமையாக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் வாய்ப்புத் தரவில்லை, கட்சிக்காரர்களுடைய குறுக்கீடுகள், நீங்கள் கொடுக்கிற பிரஷ்ஷர்ஸ், இப்படிப்பட்ட காரியங்கள் . . . .

(முற்பகல் 11-30)

**திரு. ஏ. எம். திருப்பூர் மொய்தீன்:** நான் சொன்னது ஆளுங் கட்சி மட்டும்தான் என்று சொல்லவில்லை. திருமதி அனந்தநாயகி அம்மையார் உட்படச் சொல்லுகிறேன், அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டு மென்று, எல்லோருக்கும்தான் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** போலீஸ் இலாக்காவிலே ஆளுங் கட்சிக் காரர்கள்தான் அதிகமாகத் தலையிட வேண்டிய கஷ்டம் ஏற்படும். ஆகவேதான் நான் சொல்கிறேன், இன்றைக்கு ஆளுங்கட்சிக்காரர்கள் போலீஸ் இலாக் காவைத் தங்களுடைய கட்சி ஆயுதமாகப் பயன்படுத்துவதால்தான், தமிழ் நாட்டுப் போலீசார் தங்கள் முழுத் திறமையையும் வெளியே கொண்டுவர முடியாமல், இப்படிப் பல தவறுகளும், பல சங்கடங்களும் ஏற்படுகின்றன என்பதை ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இன்றைக்கு குற்றப்பட்டியலைப் பார்த்தால் கொலைக் குற்றம் இரண்டு பங்காக அதிகரித்திருக்கிறது. இது மிகவும் வருந்தத் தக்கது. தமிழ் நாட்டிலே கொலை செய்யும் நிகழ்ச்சிகள் அதிகரித்து வருகின்றன என்றால் எங்கோ தமிழக மக்களின் மத்தியிலே விஷம் பாய்ந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. காமாட்சி அவர்கள் சொன் னார்கள், உபன்யாசம் செய்ய வேண்டுமென்று. அந்த உபன்யாசத்தை இப்பொழுது செய்வதில்லை. உபன்யாசம் செய்ய வேண்டிய பணத்தை யெல்லாம் இன்றைக்கு வேறு எதற்கோ செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். கோயில்களில் உள்ள பணத்தையெல்லாம் இப்படிப்பட்ட நல்ல வழிகளில் அரசு செலவழிக்கவில்லை. உங்கள் அங்கத்தினரே சொல்கிறார். மாரல் எஜுகேஷன் குறைந்து கொண்டிருக்கிறது.

**திரு. கு. காமாட்சி:** நான் அதுமட்டும் சொல்லவில்லை, கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் கொள்கையை நிறுத்திக் கொண்டு, முறையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் இதைச் சொன்னீர்களா, இல்லையா, அதை ஒத்துக் கொள்ளுங்கள். அதைத்தான் நான் சொன்னேன். அதிகமாகக் குற்றம் செய்தால் யார் என்ன செய்ய முடியும் என்ற நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த அரசைப் பொறுத்தவரையில், பள்ளிக்கூடங்களிலே மாரல் எஜுகேஷன் குறைவாக இருக்கிறது. அதனால்தான் இப்படிப்பட்ட குற்றங்கள் மிகவும் தாராளமாகச் செய்யப்படுகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வகையில் இன்றைக்குள்ள போலீசாருக்கே மிகவும் புதிய ரகமான வேலைகளைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

பழைய குற்றங்கள் மாதிரி அல்ல. இன்றைக்கு ஒருபுறத்திலே விஷ ஊசி போட்டு ஆள் கொலை செய்யப்படுகிறான். மறுபகுதியிலே கள்ள நோட்டு வழக்கிலே உள்ளவர். இன்னொரு பக்கத்தில் போலி டாக்டர்கள் உலவ ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இன்னொருபுறத்திலே, எங்கு பார்த்தாலும் ஆண்களையும், பெண்களையும் கடத்திச் செல்லக்கூடிய அவலநிலை வந்திருக்கிறது. இப்படிப்பட்ட புதிய குற்றங்கள் தமிழ்நாட்டிலே அதிகரித்துக் கொண்டு வருவதை போலீசார் புரிந்துகொண்டு தங்கள் சாமர்த்தியத்தை அதற்கேற்றபடி மாற்ற வேண்டியதாக இருக்கிறது.

ஏனென்றால், இப்படி விஷ ஊசி போட்டுக் கொல்வதைப்பற்றித் தமிழகத்தில் இதுவரையில் கேட்டதில்லை.

தமிழகப் போலீஸார் தங்கள் திறமையைக் கொண்டு அதையும் கண்டு பிடித்து வெளியே கொண்டுவந்திருக்கிறார்கள்.

கள்ள நோட்டு வழக்கைப் பார்த்தால் எக்கச்சக்கமாக நடக்கின்றன. அப்படிப்பட்ட குற்றங்கள் புரிபவர்களைப் பிடிக்கும்பொழுது முறைப்படி விசாரிக்கப்பட்டு துரிதமாக அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுகிறதா என்றால் இல்லை. காலதாமதம் செய்து, செய்து அந்தக் குற்றத்தின் சக்தியே இழந்துவிடுகிறது.

கார்ப்பரேஷன் ஊழலைப்பற்றி எடுத்துக் கொண்டால் இன்வெஸ்டிகேஷனில் 1,500 பேர் விசாரிக்க வேண்டியிருக்கிறது. பிராசிகியூஷனில் ஆயிரக் கணக்கான சாட்சிகளைப் போட்டால் கேஸ் வீக்காகிவிடும். எனவே, இன்றைக்குக் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டால் துரிதமாக கேஸ்களை நடத்தி உரிய முறையில் அவர்களுக்கான தண்டனையை விதிப்பதில் கண்காணிப்பாக



இருக்க வேண்டும். காலதாமதமானால் பல குறுக்கீடுகள் வந்துவிட்டால் நியாயமாக நடப்பதற்கு முடியாது என்ற முறையிலே மக்கள் நம்பிக்கையை இழந்து கிடக்கிறார்கள்.

நித்தியானந்த சாமி கள்ளநோட்டு சம்பந்தமாக போலீஸ் ஆபீசரே துணை போனார் என்ற செய்தியைக் கேட்கும்பொழுது, அங்குள்ள பொதுமக்களே கண்டு பிடித்துக் கொடுத்தும், என்ன நிலைமை இருக்கிறது? கேட்டால் அமைச்சர் சொல்வார், அதுவும் ஒரு முறை என்று. கூடயிருந்தே கண்டு பிடித்தார்கள் என்று சொல்வார்கள். கூடயிருந்த கள்ளநோட்டு புழக்கத்திற்குத் துணையாக இருந்தார் என்று பொதுமக்கள் சொல்லும் பொழுது காரணம் என்னவென்று தீவிரமாக யோசிக்க வேண்டும். அத்தகைய நிலைமையிலே இந்த அரசு இல்லையென்றால் கட்சிமாச்சரியங்கள் அரசாங்கத்தில் குறுக்கிடுவதால் நியாயமான வழக்குகளைக்கூட உடனடியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலேயே சொல்லப்படுகிறது. on 26th April, 1973 ஒரு லாரியைத் துரத்தித் துரத்தி சப்-இன்ஸ்பெக்டர் பிடித்திருக்கிறார், 6 முறை சுட்டும் இருக்கிறார், தேவாரத்திலே. கடைசியிலே No enquiry was held; none was killed or injured in the incident. No enquiry was held as the Government dispensed with the enquiry. கடைசி லைனைப் பார்த்தால், நன்றாகத் தெரியும். ஏன்? சமுதாயக் குற்றங்கள் நடைபெறும்பொழுது, அதிலும் கம்பம், கூடலூர் போன்ற பகுதிகளில் அடுத்த மாகாணங்களுக்குக் கடத்திச் செல்ல வேண்டியதற்காக பயன்படுத்தும் நேரத்தில் அங்கே துப்பாக்கிச் சூடு நடந்து லாரியை துரத்திப் பிடித்திருக்கிறார்கள் என்றால்

"why should the Government dispense with the enquiry."

இது எதைக் காட்டுகிறது? எதையோ காட்டுகிறது என்பதைத்தான் அந்த ஒரு வரி காட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைவிடக் குறிப்பாக யார் அத்தாட்சி சொல்ல வேண்டும், ஆச்சே சொல்கிறதே. அப்படிப்பட்ட வகையில் குறுக்கீடுகள் அதிகரிப்பதால்தான் ஒழுங்காகப் போலீஸார் தங்கள் வேலைகளைச் சரியாகச் செய்ய முடியவில்லை. வேலியே பயிரை மேய்கின்ற சூழ்நிலை இருக்கிறது.

வள்ளிமலையில் கழுத்துச் சங்கிலியை அறுத்துச் சென்ற கூட்டத்தில், Police Official கடத்தல் கூட்டத்தில் ஒருவராக இருந்திருக்கிறார். இப்படி யார் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமோ அந்தக் காவல்துறையில் உள்ளவர்களே இப்படிப்பட்ட குற்றங்களைப் புரிவதால் மக்களிடையே ஒரு பீதி

ஏற்பட்டிருக்கிறது. இதனுல் உண்மையிலேயே போலீசார் விசாரிக்கச் சென்ருல்கூட பொதுமக்கள் பயப்படுகிருர்கள். இவர்கள் உண்மையான போலீசா, போலி போலீசா என்று பயப்படுகின்ற சூழ்நிலையில் நிகழ்ச்சிகள் இன்றைக்கு நடைபெறுகின்றன என்பதைப் பார்க்கும்பொழுது இதற்காக வருந்துவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

அடுத்தபடியாக, பிள்ளைகள் கடத்தப்படுவது தமிழ்நாட்டில் அதிகமாக நடைபெறுகிறது. தினத்தந்தியைப் பார்த்தால் தினம் மூன்று போட்டோக்களைப் போட்டு காணவில்லை காணவில்லை, ஆண், பெண், பையன், பெண் என்று தினமும் காணவில்லை என்றுதான் வருகிறது. காலையிலே பேப்பரைத் திறந்தால் வேறு ஏதாவது இருக்கிறதோ இல்லையோ, காணவில்லை என்ற செய்தி டெஃபனெட்டாக இருக்கிறது. கடத்தல் விஷயத்தில் தீவிரமாக இறங்கியிருக்கிருர்கள்.

ஆண்களுக்கு, பெண்களுக்கு, மாணவர்களுக்கு, மாணவிகளுக்குப் பாதுகாப்பு இல்லாமல், கடத்தல்காரர்கள் குற்றம்புரியத் தொடங்கியிருக்கிருர்கள் என்ருல் இன்னும் சற்று நாம் திறமையாகப் புலனுய்வு நடத்த வேண்டும் என்பதைத்தான் இது காட்டுகிறது. யாரோடு சேர்ந்து வேலை செய்து கொண்டிருக்கிருர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு அந்த இலாக்கா இன்னும் சற்று அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

வேலூரிலே ஒரு மாணவி கடத்தப்பட்டாள்.

விழுப்புரத்திலே ஒரு கல்லூரி மாணவனைக் கடத்தியிருக்கிருர்கள், இப்படி நடத்தைப் பார்த்தால் பள்ளி மாணவர்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வேலூரிலே நடைபெற்றது கடத்தல் அல்ல, காதல்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கடத்தல் என்றுதான் பேப்பரிலே பார்த்தோம். காதல் என்று நீங்கள் செய்தி கொண்டு வந்திருக்கலாம். கடத்தலைக் கண்டுபிடிக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டு காதல் என்ற பெயரைக் கொடுத்தாலும் கொடுக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** காதலாக இருந்தாலும் வேறு இடத்திலே கடத்திக் கொண்டு போயிருந்தால் பரவாயில்லை. ஆனல் பள்ளிக்கூடத்திற்கருகில், ஆசிரியர்களும், மற்றவர்களும் இருக்கும்பொழுது, சப்தம் போட்ட நேரத்திலேயும்கூட இப்படி நடந்திருப்பதைத்தான் கூறுகிருேம்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கடத்தியதாகத் தகவல் இல்லை. "என்னைக் கடத்திக் கொண்டு போ" என்று சொன்னதாகத் தகவல்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தப்பிப்பதற்காகக் காதல் என்ற வார்த்தையை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அல்லது அது உண்மையாகவும் இருக்கலாம். அல்லது கடத்தியிருந்தாலும் இருக்கலாம். இப்படிப்பட்ட செய்திகளையெல்லாம் படிக்கும்பொழுது பெண்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கே பெற்ருேர்கள் பயப்படுகிருர்கள். இப்படிக் கல்லூரிக்கு அனுப்புவதற்கும், பள்ளிக்கு அனுப்புவதற்கும் பயப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல் பாத்திமா கொலை விஷயத்தில் புருஷனே கொலை செய்துவிட்டான் என்று அவனைப் பிடிக்கிருர்கள். இதனுல் போலீசிலே புகார் சொல்வதற்கே பயப்படுகிருர்கள். காரணம் என்னவென்ருல், புகார் கொடுக்கப் போகின்றவனையே உள்ளே பிடித்துப் போட்டால் எப்படிப் புகார் சொல்வது?

இந்த முறையில் சில நிகழ்ச்சிகள் நடப்பதைப் பார்க்கும்பொழுது மிகவும் வருந்தத் தக்க சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாத்திமா கேஸ் மிகவும் கொடுமையானது. அப்படிப்பட்ட குற்றங்களில் நீங்கள் துரிதமாக நடப்பதை விட்டுவிட்டு, ஐந்தாம் முறைகளைக் கடைப்பிடித்து பயமுறுத்தி, சில வழக்குகளில் பயமுறுத்தி நீங்கள் ஒத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கின்ற சூழ்நிலை ஏற்படுவதைப் படிக்கும்பொழுதே இவ்வளவு பயப்பட வேண்டியிருக்கிறதே, இன்னும் அதில் நேரிடையாக அவஸ்தைப்படுபவர்களின் நிலைமை எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

அதேமாதிரி லாக்கப்பில் அந்தோனி அம்மாள் இறந்துவிட்டார். இப்படி லாக்கப்பில் இறக்கும் சூழ்நிலை இருக்கக் கூடாது என்று ஒவ்வொரு வருஷமும் சொல்லிக் கொண்டு வருகிருேம். இது மிருகத்தனமானது. பழைய முறையிலேயே அடி, உதை என்று காட்டுமிராண்டித்தனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது அல்ல. அந்த ஆபீசர்களை வெளிநாட்டிற்கு அனுப்பியாவது, குற்றவாளிகளைப் பயமுறுத்தாமல் அவர்களிடமிருந்து ஸ்டேட்மெண்ட் வாங்குவதற்கு வழியிருக்கிறதா, அடிக்காமல் வழிக்குக் கொண்டுவந்து ஸ்டேட்மெண்ட் வாங்குவதற்கு ஏதாவது மாடர்ன் மெத்தேட்ஸ் இருக்கின்றனவா என்று கண்டு பிடிக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது.

எனவே வெளிநாடுகளுக்கு, ஸ்காட்லண்ட் யார்ட் போன்ற பயிற்சி மிகுந்த இடங்களுக்கு அனுப்பி பயிற்சி பெறச் செய்து குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்கு 'வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பெரியகுப்பம் அறிக்கை இன்னும் வரவில்லை. விசாரணை கேட்டோம். அதிகாரியை அனுப்பி விசாரணை நடத்தினார்கள். எதிர்க்கட்சிக் காரர்களெல்லாம் சென்று, அத்துமீறிய செயல்கள் என்ன நடந்திருக்கிறது என்பதைப் பார்த்தோம். ஆனால் அதனுடைய அறிக்கை இதுவரையில் வர வில்லை. அந்த அறிக்கை வந்தாலாவது என்ன நடந்திருக்கிறது என்று நாம் புரிந்து கொள்ள முடியும்.

கிளைவ் ஹாஸ்டலில், கனம் முதலமைச்சரவர்கள் சொல்லும்பொழுது, பிரம்பால்தான் அடிக்கப்பட்டதாகப் போலீஸ் இலாக்கா சொல்கிறது என்று இந்தச் சட்டமன்றத்தில் முதலமைச்சரவர்கள் அந்த அறிக்கையை வைத்து இங்கே பதில் சொல்கிறார்கள். பிறகு நீதி விசாரணை போடுங்கள் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்டதற்குப் பிறகு நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய் தீர்கள்.

நீதி விசாரணையிலிருந்து உண்மை வருகிறது. போலீஸ் இலாக்கா கொடுத்த அத்தனை காரணங்களும் பொய் என்று வருகிறது. ' Busmen kidnapped by the students is a myth ' என்று சொல்லியிருக்கிறார்கள்.

பஸ்தொழிலாளர்களைப் பள்ளி மாணவர்கள் தூக்கிக் கொண்டு போனார்கள் என்று காவலர்கள் சொன்னது கதை; தாக்க வேண்டுமென்பதற்காகவே தாக்கியிருக்கிறார்கள் என்று ஆணித்தரமாகச் சொல்லி விட்டார்கள்.

பையன்களைப் பிரம்பு கொண்டு அடித்ததாகச் சொன்னார்கள்; ஆனால் தடி யடிப் பிரயோகம் செய்து மண்டையை உடைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

அத்துமீறிய செயல்கள் நீதி விசாரணை போட்டால்தான் வெளியே வருகி றது. இப்படி ஆயிரக்கணக்கான அத்து மீறிய செயல்கள் நடந்து கொண்டி ருக்கின்றன. ஒவ்வொரு அத்து மீறிய செயல்களுக்கும் நாங்கள் நீதி விசா ரணை கேட்டுக் கொண்டிருக்கவும் முடியாது; நீங்களும் எங்கே போடப் போகி றீர்கள்? இவ்வளவு அநியாயங்கள், அக்கிரமங்கள், அத்து மீறிய செயல்கள் இந்த இலாக்காவில் நடக்கின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் எந்த அளவுக்கு இந்த நிர்வாகம் திறமைக் குறைவுடன் நடத் தப்படுகிறது என்பதைக் கண்டு கொள்ள முடிகிறது.





ஆகவே, இன்று தொழிலாளர்கள் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டு மென்றால், மாணவர்கள் பிரச்சினையைச் சமாளிக்க வேண்டுமென்றால், மாணவிகள் கடத்தல் பிரச்சனையைச் சமாளிக்க வேண்டுமென்றால் புதிய புதிய முறைகளைக் கையாள வேண்டும். அவர்கள் தங்களுடைய திறமை முழுவதையும் பயன்படுத்த நம்முடைய தலையீடு குறைவாக இருக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

'டமில்நாடு ஃபோரன்சிக் கெமிகல் லாபரடரி' போலீஸ் இலாக்காவிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ரொம்ப அநியாயம் கொலைக் குற்றங்களில் கெமிகல் எக்சாமினேஷன் செய்வது இதற்கு முன்னால் மெடிகல் டிப்பார்ட் மெண்டில் இருந்தது. அப்போதுதான் நியாயமாக என்ன குற்றங்கள் என்று சொல்ல முடியும். இதைப் போலீஸ் இலாக்காவிடமே கொடுத்து விட்டால் அவர்களுக்கு வேண்டிய ரிப்போர்ட்டை அவர்களே தயார் செய்து கொள்ளலாம் என்ற நிலைதான் வரும். ' You should never give that department to the police ' 1971-ம் ஆண்டுதான் இதைக் கொடுத்திருக் கிறீர்கள். இதை மறுபடியும் மெடிகல் டிபார்ட்மெண்டில் கொடுத்தால்தான் குற்றங்களைப் பற்றி ஒழுங்கான முறையில் ரிப்போர்ட் கொடுக்க முடியும்.

தியணைப்பு வேலைகளை எடுத்துக் கொண்டால் இவர்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து அதிகமாகத் தீப்பிடிக்கின்றன. தமிழ் நாட்டில் சென்னையில் குடிசை கள் பரவலாகத் தீப்பிடித்தன; திண்டிவனம், ஆம்பூர், தேனாம்பேட்டை இப்படி தீப்பிடித்துக் கொண்டிருக்கின்றன. குடியாத்தத்தில் தீப்பிடித்த போது ஒரு அதிகாரி அங்கு கிடையாது. ', All the four officers were on leave that day '' இந்த நிலையில் அந்த இலாக்கா நடந்து கொண்டிருக் கிறது. மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்படி தீப் பிடிப்பது அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. காரணம் சொல்ல மாட்டேன் என்கிறார்கள்.

ஆம்பூரில் வடக்கே இருந்து வந்த வட நாட்டுக்காரர்களைப் பிடித்துச் சாகடித்திருக்கிறார்கள். அடித்துக் கொன்றிருக்கிறார்கள். இப்படி அநீதிகள் நடக்க இடம் கொடுப்பது மிக மிக வருந்தத்தக்கது.

தீயணைப்பு நிலையங்களை 73 இடங்களில் திறந்தோம், 93 இடங்களில் திறந் தோம் என்று சொல்லுகிறார்களே தவிர அவர்களுக்கு என்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன? அந்தச் சிப்பந்திகள் நிம்மதி இல்லாமல் இருக் கிறார்கள். போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம்கூட கொடுக்கப் படவில்லை. வெள்ளம், தீ போன்ற ரிஸ்க்கில் அவர்கள் வேலை செய்ய வேண்டி யிருக்கிறது. அவர்கள் 16 மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது.

வாரத்தில் ஒருநாள் கூட ஆஃப் கிடையாது. போலீஸகாரர்களுக்கும் ஆஃப் கிடையாது. லீவ் எடுத்தாலும் ரோல் காலில் கையெழுத்துப் போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள்—பெயிலில் வெளியே வந்த குற்றவாளியைப் போல் மெடிகல் லீவில் போனால்கூட ரோல் காலில் கையெழுத்துப் போடவேண்டும். இவை எல்லாம் பழைய முறைகள். மாற்றப்பட வேண்டும். ஜனநாயக ரீதியில் ஓய்வு கொடுப்பது அவசியம். போலீஸ்காரர்களுக்கு அலவன்ஸ் 1½ ரூபாயிலிருந்து 2 ரூபாய் வரை கொடுக்கிறார்கள். என்ன வாங்க முடியும்? இது மனிதாபிமானப் பிரச்சினை. அதிகமாக அக்கறை காட்ட வேண்டும். அவர்களுடைய திறமையைப் பயன்படுத்தும் சூழ்நிலையை ஏற்படுத்துவோமானால் கட்டாயமாக தமிழகத்துப் போலீசார் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவார்கள்.

ஒரு கோடி ரூபாய் பெறுமான பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள் இருக்கின்றன. கம்ப்ளெயின்ட் கொடுத்தாலும் திருட்டுப் போன சாமான்கள் திரும்பக் கிடைப்பதே இல்லை. சைக்கிள் திருட்டு, டிபன் பாக்ஸ் திருட்டு—ஒன்று கூடத் திரும்பக் கிடைப்பதே இல்லை. இவை எல்லாம் இருக்கின்றன என்று எப்படி பொதுமக்களுக்குத் தெரியும்? பேப்பரில் இப்படிக் காணமல் போன பொருள்கள் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருக்கின்றன என்ற வகையில் விளம்பரம் கொடுத்தால் பொதுமக்கள் அறிந்து கொள்ள முடியும். இல்லை என்றால் அதிலும் இப்படி அப்படி பாதி போய்விடுகிற நிலை ஏற்படும். இதற்கான வழிவகை செய்ய வேண்டும்.

தெலைப்டைக் குறைக்க வழிவகைகள் செய்ய வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம், விலைவாசி ஏற்றம் காரணமாக சென்னை நகரத்தில் பகலிலேயே திருட்டுகள் நடக்கின்றன. இவற்றையெல்லம் கண்டிப்பாகத் தடுக்க வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கு. ஆ. பொம்மன்: தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தில் எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். இந்தத் துறை திறமையாகப் பணியாற்றி வருகிறது என்ற புகழைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தத் துறை ஆளும் கட்சியின் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகாமல் சுயேச்சையாக இயங்க வேண்டும். அப்போது தான் நிர்வாகம் திறம்பட இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.



தமிழ்நாட்டு உள்துறை காரியதரிசி கருத்தரங்குகளில் பேசுகிறபோது போலீஸ் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எந்த அடிப்படையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருப்பார்கள் என்று தெரியவில்லை. அந்தக் கருத்தை இந்தத் துறை அமலுக்குக் கொண்டுவந்து அபிவிருத்தி செய்ய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய நண்பர் தேவராசன் அவர்கள் கடலூரைப்பற்றித் தெளிவாகச் சொன்னார்கள். அது ஒரு நிம்மதியற்ற தொகுதி என்பது அமைச்சர்கள் எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு நாளும் எங்காவது ஓரிடத்தில் தகராறு நடந்து கொண்டே இருக்கும். அதற்காக அங்கே ஆறு போலீஸ் நிலையங்களை ஏற்படுத்தினார்கள். போலீஸ் கான்ஸ்டபிள்கள் போதாது.

எருமாடு பகுதிகள் மிகவும் மோசமான பகுதிகள். கள்ளக்கடத்தல் நிறைய நடக்கிறது. கேரள மாநிலத்தை தொட்ட பார்டர் ஏரியா. அங்கு இருக்கும் ஏஜெண்டுகளை வைத்து அரிசி கடத்துகிறார்கள். அங்கு காவல் புரியும் காவலர்களே அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று பொதுமக்கள் சொல்லுகிறார்கள். ஒருசிலர் அப்படி இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அந்த இடத்தில் அதிகக் காவலர்களைப் போட்டாவது கண்காணிக்க வேண்டும்.

அந்தக் காவலர்களுக்கு அந்த இடத்தில் போதிய வசதிகள் இல்லை. மலைப் பகுதியான அங்கு கான்ஸ்டபிள்களுக்கு வீட்டு வசதி இல்லை யென்றால் அவர்களுக்கு வேலை செய்யவே மனம் இருக்காது. ஊக்கம் இருக்காது. ஆகவே, அவர்களுக்கு வீட்டு வசதியை உடனடியாகச் செய்து தரவேண்டும்.

எங்கள் ஊரில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகம். மலைப் பிரதேசமாக இருக்கிறபடியால் அவர்களைக் கண்டுபிடிப்பதும் கஷ்டம். திரு. தேவராசன் அவர்கள் சொன்னது போல் போலீசார் வருகிறார்கள் என்றால் அவர்களுக்கு ஏற்கெனவே தகவல் போய்விடுகிறது. அந்த இடத்தில் ஒரு தடயமும் கிடைக்காது, ஒரு ஆளும் இருக்கமாட்டான். அங்கு ஒரு துப்பறியும் நாய்ப்படை அமைக்க வேண்டும்.

கோவையிலிருந்து கொண்டுவரப்பட்ட துப்பறியும் நாய்கள்—நீலகிரி மாவட்டத்தில் நிகழ்ந்த கொலைக் கேஸ்களை துப்பறிய கொண்டு வந்த நாய்கள்—சில கேஸ்களில் ஒன்றையும் கண்டுபிடிக்க முடியவில்லை. உஷ்ணப் பிரதேசத்திலிருந்து குளிர்ப் பிரதேசத்திற்கு வரும்போது அவைகளால் கண்டு பிடிக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். உணர்ச்சி வேகம் குறைந்து விடுவ

தாகச் சொல்லுகிறார்கள். ஆயினும் பரிட்சார்த்தமாக உதகை நகரத்தில் துப்பறியும் நாய்ப்படையை வைத்தால் ஓரளவு குற்றங்களைக் கண்டுபிடிக்க வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறேன்.

அரிசனங்கள் போலீஸ் வேலைக்கு எடுத்துக் கொள்ளும்போது 26 வயதுக்குள் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகின்றது. ஏற்கனவே பெரும்பாலாக அரிசனங்கள்தான் போலீசாராக இருக்கிறார்கள். இப்போதும் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.க்கு மேல் படிக்க முடியவில்லை என்ற காரணத்தால் போலீஸ் வேலைக்கு வருகிறார்கள். அந்த வயதை 26-ல் இருந்து 30 ஆக உயர்த்தி அரிசனங்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இதனால் ஒருவாறு வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

தீயணைப்புப் படை விஷயத்தில் இரண்டொரு கருத்துக்கள் சொல்ல விரும்பு கிறேன். மாவட்டத் தலைநகரங்களில் தீயணைப்புப் படை இருப்பது நியாயம். உதகையில் ஒன்று இருக்கிறது. குன்னூரில் உள்ளது. கிடையா; கோத்த கிரியில் கிடையாது. தீயணைப்பு நிலையங்களை அந்த இடங்களில் வைக்க வேண்டும்.

அந்த ஊழியர்களுடைய வேலை நேரம் பகலில் 9½ மணி நேரம்; இரவில் 15½ மணி நேரம்; ஞாயிற்றுக் கிழமைகளில் வேலை மாற்றம் செய்யும்போது 21½ மணி நேரம் ஆகிறது. அவர்களுக்கு வாராந்திர விடுமுறை கிடையாது. அவர்களுக்குப் பேட்டா பகலில் 50 பைசாவும், இரவில் ஒரு ரூபாயும் கொடுக் கிறார்கள். இந்த அகவிலை காலத்தில் இது போதுமானதா? நியாயமானதா? இதை வைத்துக் கொண்டு ஜீவனம் செய்ய முடியாது. அந்தப் படியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே போலீஸ் துறையினருக்கு எந்த வகையில் எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்களோ அந்த வகையில் இந்தத் தீயணைப்புப் படையினருக்கும் சம்பளங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த படியாக, குடியிருப்பு விஷயம். எங்கு பார்த்தாலும் இந்தத் தீ அணைப்புப் படையினருக்கு குடியிருப்பு வசதிகள் இல்லை. சென்னையில் எக்மோரில் மட்டும் இருக்கிறது. அதுவும் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான கட்டடங்கள். கார்ப்ப ரேஷனில் இருந்து காலி செய்ய நோட்டீஸ் கொடுத்தால், காலி செய்துவிட்டு வீட்டுக்காக அலையும் நிலை ஏற்படும். ஆகவே இந்தத் தீ அணைப்புப் படையின ருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். இவர் களின் வேலை தீ அணைப்பது மட்டுமல்லாமல் நதியில் விழுந்தவர்கள், சமுத்தி ரத்தில் விழுந்தவர்கள், தீயில் சிக்கிக் கொண்டவர்கள் இவர்களை எல்லாம் இந்தப் படையினர் காப்பாற்றுகிறார்கள்.



ஆகவே இந்தத் தீ அணைப்புப் படையினருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர் அந்த இலாக்காவில் மெக்கானிக்ஸ், ட்ரைவர்கள் வேலைகள் காலியாக இருக்கின்றன. ஆகவே அந்த வேலைகளில் அங்குள்ளவர்களை அமர்த்த வேண்டும். பின்னர் சீனியாரிட்டி. சீனியாரிட்டி பிரச்னையை அங்கு கவனிப் பதில்லை. வேண்டியவர்களுக்கு வேலை கொடுத்துவிடுகிறார்கள். எனவே பதவி கொடுக்கும்போது சீனியாரிட்டி அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு அவர்களது கோரிக்கைகளை சர்க்காரிடம் சொல்வதற்கு வாய்ப் பில்லை. அவர்களுக்கு என்று ஒரு சங்கம் இல்லை. ஆகவே ஒன்றில் அவர்கள் என்.ஜி.ஓ. சங்கத்தோடு இணைந்து செயல்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு என்று ஒரு தனிச் சங்கம் அமைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தக் காவல் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்தக் காவல் துறை ஏதோ ஆளும்கட்சி ஆட்டிப்படைப்பதுபோல் ஆடுகிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். உள்ளபடியே ஆளும் கட்சி எதிர்க் கட்சி என்று பார்க்காமல் தங்கள் கடமைகளை எந்தளவிற்கு சிறப்பாக, குறிப்பாக இந்தியத் துணைக் கண்டத்தில் மற்ற மாநிலங்கள் பாராட்டுகிற அளவிற்கு நம் காவல் துறை எந்தளவிற்குப் பணியாற்றி வருகிறது என்பதை சில புள்ளிவிவரங்கள் கொடுத்து அதோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு சாதாரணப் போராட்டங்கள் நடைபெற வில்லை. ஆனால் நம்முடைய மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் இவ்வளவு போராட்டங்களுக்குப் பின்னும் இங்கே துப்பாக்கிச் சூட்டினால் பிணங்கள் விழவில்லையே என்றோ என்னவோ அதற்கு முந்திய ஆண்டு விவசாயப் போராட்டத்தின்போது நடந்ததைச் சுட்டிக் காட்டினார்கள்.

கடந்த ஆண்டு நான்கு துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த நான்கு தடவைகளிலும் என்ன நடந்திருக்கிறது என்று பார்த்தால் ஒரு துப்பாக்கிச் சூடு மதுரை மாவட்டத்தில் அரிசி கடத்தியதற்காக. அங்கு யாரும் சாகவில்லை.

அடுத்த துப்பாக்கிச் சூடு கம்பத்தில், அங்கு மக்கள் அரிசியை விநியோகித்துக் கொண்டார்கள் என்பதற்காக, அங்கு சுட்டு யாரும் சாகவில்லை.

அடுத்து, மதுரை மாவட்டத்தில் பழவநத்தத்தில் பஸ் தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு ஏற்பட்டு ஒருவர் இறந்துவிட்டார்.

கோவை மாவட்டத்தில் ஒரு துப்பாக்கிச் சூடு நடந்தது. அதிகாரி ஒருவர் குடித்துவிட்டு வானத்தை நோக்கிச் சுட்டார், மக்களை நோக்கியல்ல.

இப்படி நான்கு துப்பாக்கிச் சூடுகள். இந்தத் துப்பாக்கிச் சூடுகளினால் பிணங்கள் விழவில்லை என்று பார்க்கிற நேரத்தில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் தமிழ் நாடு அமைதியாக இருக்கிறது, இந்த இலாக்கா சுறுசுறுப்பாக பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பதை எதிர்க் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

கடந்த ஆண்டு மட்டும் இந்த நாட்டில் என்னென்ன போராட்டங்கள் நடந்திருக்கின்றன என்றால் சிம்ஸன் தொழிலாளர்கள் போராட்டம், மாணவர் போராட்டம், ஸ்தாபன காங்கிரஸ் நடத்திய தொடர் போராட்டம், டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்கள் போராட்டம், ரெயில்வே தொழிலாளர்கள் போராட்டம், ஏ.ஜி.-ஸ் ஆபிஸ் போராட்டம், எல்.ஐ.ஸி ஊழியர்கள் போராட்டம், ஏர் இந்தியா தொழிலாளர்கள் போராட்டம் என்று எவ்வளவோ போராட்டங்கள்.

அவ்வளவு போராட்டங்களும் அமைதியாக எந்தவிதமான துப்பாக்கிச் சூடோ அல்லது கண்ணீர் புகையோ எதுவும் பிரயோகப்படுத்தப்படாமல் அமைதியாக இந்தக் காவல் துறை அவற்றைக் கண்காணித்திருக்கிறது என்று பார்க்கிற நேரத்தில் நிச்சயம் எதிர்க் கட்சிக்காரர்கள் அதைப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு மாறாக ஏதையாவது குற்றம் சொல்ல வேண்டும் என்ற முறையில் இன்றையதினம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.
குற்றங்கள் அதிகரித்துவிட்டன என்று மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை புள்ளிவிவரங்களோடு சிறிது ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறநேரத்தில் நம் நாட்டில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்பதை நான் கொடுக்கும் புள்ளி விவரங்களிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

1972-ல் வழிப்பறி 28, 73-ல் அது 13 ஆகக் குறைந்திருக்கிறது.



அதேமாதிரி கொள்ளைகள், 72-ல் 93 கொள்ளைகள், ஆனால் 73-ல் அது 87 ஆகக் குறைந்திருக்கிறது.

ஹவுஸ் ப்ரேக்கிங் 72-ல் 6,956, 73-ல் 6,891 ஆகக் குறைந்திருக்கிறது.

கால்நடைத் திருட்டுக்கள் 72-ல் 1,199, இந்த ஆண்டு அதைவிடக் குறைவாக இருக்கிறது.

ஆக, இப்படி குற்றங்கள், திருட்டுக்கள் இவை குறைந்து கொண்டிருக்கின்றன, வழிப்பறி குறைந்திருக்கிறது என்று சொன்னால் நம் காவல் துறையினர் எடுக்கிற தீவிர நடவடிக்கைகள் காரணமாகத்தான் அவ்விதம் குறைந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அகில இந்தியாவிலேயே நம் மாநிலத்தில்தான் அரசியல் அமைதி இருக்கிறது. நம் மாநிலத்தில்தான் கொந்தளிப்பு இல்லாமல் இருக்கிறது. இம்மாநிலத்தில்தான் நிம்மதியாக வாழ்க்கை நடக்கிறது. கேரளாவில் மட்டும் கடந்த ஆண்டு அரசியல் கொலைகள் மட்டும் 28 நடந்திருக்கின்றன. குஜராத் மாநிலத்தில் பல்வேறு போராட்டங்களில் முக்கியமானது உணவுப் போராட்டம். அதில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு 73 பிணங்கள் விழுந்திருக்கின்றன. மராட்டிய மாநிலத்தில் 14 பிணங்கள் விழுந்திருக்கின்றன. அதேபோல் பீஹாரில் 7 பிணங்கள் விழுந்துள்ளன. இப்படிப் பிணங்கள் கணக்கிட முடியாத அளவில் மற்ற மாநிலங்களில் விழுந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் இங்கு அப்படிப் பிணங்கள் விழவில்லை, நம் மாநிலம் அமைதியாக இருந்து கொண்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு எவ்வளவு பிணங்கள் விழுந்திருக்கின்றன என்று கணக்கு எடுத்து வருகிறார்களா, நம் மாநிலத்தில் உள்ள நிலைமையைப் பொறுத்து பேசினால் நல்லது.

**திரு. நா. வீராசாமி:** மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பேசினால் சில பேர்களுக்குப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நம் மாநிலம் அமைதியாக இருக்கிறது, மற்ற மாநிலங்களில் அமைதி இல்லை, அங்கு துப்பாக்கிச் சூடுகளினால் பிணங்கள் விழுந்து கொண்டிருக்கின்றன, ஆனால் நம் மாநிலத்தில் அமைதி நிலவுகிறது என்று சொன்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனக்குத் தெரியும்.

எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் என்னென்னவோ முயற்சி செய்கிறார்கள், ஆனால் எனக்குள்ள வருத்தம் எல்லாம், முதல் அமைச்சர் அவர்கள் மீதுள்ள வருத்தமெல்லாம், ஆளும்கட்சியினரின் கரங்களை அவர்கள் கட்டிவிடுகிறார்கள்,

போலீஸின் கைகளைக் கட்டி வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் தாக்கப்படுகிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கப்படுகிறார்கள். இருந்தாலும் கூடப் பொறுத்துக் கொள்ளுங்கள், அதைத்தான் அன்று அவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்தார்கள் என்று இந்த உபதேசத்தைத்தான் நம் முதல்வர் அவர்கள் செய்கிறார்களே தவிர, காவல் துறையினர் தங்கள் கடமைகளைச் செய்கிறார்களே தவிர எதிர்க் கட்சிக்காரர்கள் என்பதற்காகப் பொய் வழக்குகள் போட்டதாகச் சொல்கிறார்கள்—உண்மையிலே எங்கள் வருத்தமெல்லாம் வழக்குகள் போட வேண்டிய அளவிற்குப் போடவில்லை என்பதுதான். பொய் வழக்குகள் அல்ல, உண்மையில் நடைபெறுகிற வழக்குகள்.

நேற்று ஒரு தகவல் எனக்குக் கிடைத்துள்ளது. புதுவை மாநில முதல் அமைச்சர் அவர்கள் இங்கு ஒரு கட்சித் தலைவரைச் சந்திக்க வந்தார்கள். அவர் எங்கு ஷூட்டிங்கில் இருக்கிறார் என்று சொன்னார்களோ அங்கு போனார். அங்கு போனவுடன் ஷூட்டிங் கொஞ்சம் நிறுத்தப்பட்டது. பொதுமக்கள் அதைப் பார்க்க வந்திருந்தார்கள். அங்குள்ள கதாநாயகியைப் பார்த்து மக்கள் விவரம் தெரியாது சிரிக்கிறார்கள். உடனே, சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்ற வேண்டிய அந்தப் பெரிய மனிதர் சட்டத்தையும், ஒழுங்கைக் கையில் எடுத்துக் கொண்டு பொதுமக்களை மரத்தில் கட்டிப் போட்டு உதைக்கிறார்கள் என்று இப்படிப்பட்டதொரு தகவல் கிடைத்திருக்கிறது. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய அவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு செயல்படுவார்களேயானால் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

உள்ளபடியே வருத்தத்தோடு சொல்கிறேன். இந்த மன்றத்தில் ஆளும் கட்சிக்காரர்களுக்குப் பாதுகாப்பு கூடக் கிடையாது. அவர்கள் பயமுறுத்தப் படுகிறார்கள், மிரட்டப்படுகிறார்கள். இன்னும் பத்திரிகைகளில் பார்த்தால் வெளியே பேசுகிற பேச்சுகளால் மேடைகளில் பேசுவதற்கே பயமாக இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இங்கு ஆளும் கட்சி உறுப்பினர்களை மிரட்டுகிறார்கள் என்று சொல்கிறார்கள். போலீஸார் இங்கு வரவேண்டுமென்று கேட்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** நாங்கள் அவ்வளவு கோழைகள் அல்ல. இருந்தாலும் அப்படி மிரட்டுபவர்கள் நடவடிக்கைகளைப் பார்க்கிறோம்.



ஒரு உறுப்பினர் பத்திரிகையில் எழுதுகிறார்கள். எப்படி எழுதுகிறார் என்றால் ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் ஆளும் கட்சிக்காரர்களைப் பார்த்து சில பொம்மைகள் எகிறி எகிறி உரத்த குரலில் குதிக்கின்றன என்று எழுதுகிறார். எங்களை எல்லாம் இந்த மன்றத்தில் பொம்மைகள் என்று அவமானப்படுத்துகிறார்கள். இந்த அளவிற்கு ஆளும்கட்சி உறுப்பினர்களை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வர்ணித்தால் ஜனநாயகம் எப்படிப் பிழைக்கும் என்பதை மாண்புமிகு கே.டி.கே. அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இது ஒரு மாண்புமிகு மன்றம். இந்த மன்றத்தை எவ்வளவு தூரம் அவமானப்படுத்துகிறார்கள் என்றால் முன்னாள் துணை சபாநாயகராக இருந்த சீனிவாசன் அவர்கள் எழுதுகிறார்கள், "கிழிந்து போன பழம் பஞ்சாங்கங்களும், செல்லாத கள்ள நாணயங்களும் சேர்ந்திருக்கும் உங்கள் அதிகாரக் கோட்டையை எங்கள் தலைவர் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. அதனால் தான் அவர் சட்டசபைக்குக்கூட வருவதில்லை". என்று பேசப்படுமானால், எழுதப்படுமானால் ஜனநாயக அமைப்புகள் எப்படி முறையாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளபடியே எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை யெல்லாம் சொல்வதற்குக் காரணம், ஏதோ, ஆளும் கட்சிக்காரர்கள் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அதற்காகச் சொல்கிறேன்.

(நண்பகல் 12-00)

நம்முடைய காவல்துறை எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். பத்து ரூபாய் கள்ளநோட்டு அடிப்பவர்களை காரைக்குடியில் கண்டுபிடித்தார்கள். ஏறக்குறைய 1,717 கள்ள நோட்டுகளை பறிமுதல் செய்து, வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

1 ரூபாய் கள்ள நோட்டு அடிப்பவர்களை பாங்கிமலையில் பிடித்திருக்கிறார்கள். 1.62 லட்ச ரூபாய்க்கு நோட்டுகள் அவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டிருக்கின்றன.

இரண்டு ரூபாய் நோட்டுகள் வழக்கில் லட்சுமண நாய்க்கர் என்பவரை கைது செய்து 69 நோட்டுகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

100 ரூபாய் நோட்டு வழக்கில் நித்தியானந்தசாமி என்பவர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். சாமிகள் எல்லாம்கூட இந்தக் காலத்தில் நோட்டு அடிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

புதிதாக வந்த 20 ரூபாய் நோட்டையும் சமுதாய துரோகிகள் விட்டு வைக்கவில்லை. அவர்களைக் கண்டு பிடித்து சோழவந்தானில் வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

இப்படி எங்கெங்கே கள்ள நோட்டு அடிப்பதற்காகத் திட்டம் போடுகிறார்களோ, அங்கேயெல்லாம் சென்று அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்பே நம்முடைய போலீஸ் நுழைந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அத்தகைய வேகமாக நம்முடைய போலீஸ் இலாகா பணியாற்றி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

எனக்குக் கிடைத்திருக்கிற தகவலை, தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை நகரத்தில் பல குற்றங்கள் நடைபெறுகின்றன.

சுதர்சன் சிட் கம்பெனி மூலமாக பல கள்ளநோட்டுகள் மாற்றப்படுகின்றன என்று பொதுவாக நம்பப்படுகிறது. இப்படிப்பட்ட எண்ணம் பரவலாக மக்கள் மத்தியிலே இருக்கிறது. நம்முடைய காவல் துறை இது பற்றி பரிசீலிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே இன்னொன்றையும் நம்முடைய போலீஸ் ஆணையர் அவர்களுக்குச் சொல்லவேண்டும். சென்னை நகரத்தில் நாகூர் களஞ்சியம் என்பவர் பயங்கரமான குற்றங்களைச் செய்து வருகிறார்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர், சுதர்சனம் சிட் கம்பெனியார் கள்ள நோட்டு மாற்றம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் புதிதாக தற்போது ஆரம்பித்த சுதர்சனம் இன்டர்நேஷனல் என்ற ஓட்டல் திறப்பு விழாவிற்கு உங்கள் அமைச்சர்களும் போயிருந்தார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** ஒரு தகவல் கிடைத்து இருக்கிறது. அதை நான் சொல்கிறேன். சமுதாய விரோதிகள் சேர்ந்த ஒரு விழாவிற்கு திருமதி அனந்தநாயகி அம்மையாரை அழைக்கிறார்கள். அவரும் அப்படிச் செய்பவர்கள் அவர்கள் என்று தெரியாமல் அதிலே கலந்து கொள்கிறார்கள். அதிலே ஒன்றும் தவறு இல்லை.



எனக்குக் கிடைத்த தகவல், நாகூர் களஞ்சியம் என்பவர் சென்னையில் தம்புச்செட்டித் தெருவில் இருக்கிறார். அவர் செய்கிற தொழில் கேரளாவிலிருந்து பெண்களைக் கடத்துகிறார். அந்நிய செலாவணி மோசடியில் ஈடுபடுகிறார். சென்னையில் கள்ள நாணயங்கள் புழக்கத்திற்கு வழிவகை செய்கிறார். இப்படி ஏறத்தாழ 42 குற்றச்சாட்டுகள் அவர் மீது இருக்கிறது. அப்படிப்பட்ட குற்றங்களை அவர் செய்ததாக நம்முடைய காவல்துறையினர் கண்டு பிடித்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். அது விசாரணையில் இருப்பதாக நம்பகமாகத் தெரிகிறது.

இதிலே அரசியல் கட்சியைச் சார்ந்த ஒருவர்—அவர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் என்று நான் சொல்ல விரும்பவில்லை—புதுவலசை என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் பெண்களைக் கடத்தல் செய்யும் வேலைகளில் ஈடுபட்டு இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. கிடைத்த தகவலை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆற்காடு வட்டமாக இருப்பதால் அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Thiru R. PONNAPPA NADAR :** Mr. Speaker, Sir, this House will pardon me when I speak in English. I may be permitted to make certain remarks about this important Demand which is the subject-matter for discussion before the House.

Before entering into the details, with your permission, I may refer to certain facts that have been culled out in the Report which has been presented to us in this House

There has been a notable increase in the number of crimes that have been reported during 1973. Sir the reasons attributed for the increase have been given in one of the paragraphs on page 4 of the booklet. The increase in crimes which is largely under thefts is attributed to population explosion, acute unemployment and spiralling prices of essential commodities. These are the reasons that have been set forth for the increase in number of crimes. So far as thefts are concerned, are we in a better position, Sir? That is the point which we have to consider. I am not saying that it is gratifying to see that the increase in crime is

only 9 per cent. The total number of cases have increased to 2,364. That may be an ornament and that may not be sufficient. We will have to think about the future improvements to the Police Department.

So far as the Tamil Nadu Police is concerned, I do not say that the image that has been created by the Police Department is second to any other force in our country. Permit me to say, Sir, that there are certain good things in this Department.

To-day, I have had the privilege of visiting the Commissioner's Office and our Hon. Thiruvalargal K.T.K. Thangamani and A.R. Marimuthu also visited the Commissioner's Officer. We have been taken to various sections functioning there. I may say without fear of contradiction that the Control Room that has been set up in the Commissioner's Office is very good and it deserves all praise.

However, all is not well there and some more improvements are needed.

In the City of Madras, there are so many crimes and they are on the increase and steps should be taken to improve them.

People are very much obliged to the Department for the manner in which prompt action is taken on certain very grave crimes. It may be said that they are doing well. But some more improvements are needed.

When I went through the Sections in the Commissioner's Office I saw the Conference Hall. In the Conference Hall, I had the occasion to see the rare idol which is said to cost several lanhs. The recovery of the idols by the Police is highly commendable.

Another thing I want to stress is regarding various thefts committed inside and outside the city. A car has been just recovered and it has been lifted by some anti-social elements.

Similarly, large quantities of vessels, cloths and other rare materials that have been stolen have been recovered.

Even in the Harbour of Madras, there were certain thefts which have been detected and certain valuable recoveries have been made.



With all that, are we to be complacent enough or to congratulate ourselves is the question. There is some force in the argument that we need much more improvements.

For that matter, I would like to reiterate and reaffirm in this House that the Police Force which is functioning in our State is much better and especially the Police force in the city' is functioning much better than the Police force in rural areas.

I want to express one thing as one of the Leaders of the Opposition. I would like to say that there are certain things which require the careful attention of this Government.

Many hon. Members raised before this House that there are some party interferences in the administration and in the matter of detection of crimes and all these things. I think this has to be ended. I hope and trust that the Hon. Chief Minister will act and see that there is no party interference and it is ended. It should be adhered to by all the members in this House and by other political leaders also. Many instances have been brought to the notice of the House and instances are not wanting. That is the primary reason why there had been set-backs and drawbacks in the matter of investigation.

So far as detection percentage is concerned, sixty per cent of the cases have been detected during the last year. The gap is 40 per cent and the Department has to take steps to bridge that gap. For instance, I am referring to one instance in Colachel constituency—one case has gone undetected.

In Colachel constituency, there was a couple murder case. The husband and wife have been murdered and some people have been interrogated. Some persons have been taken into custody and a case has been registered. But that case is even now undetected. It is some years now. The crime has not been detected. I want the Police to see that such grave crimes are detected earlier and the miscreants are awarded the punishments which they deserve.

Another point I want to raise before this House is regarding certain special cases which are investigated by the Police.

For instance, there is the Kadayanallur Conspiracy case in which there are certain alleged irregularities and misappropriations of public funds and the case is going on for a long time. A special court has been constituted for the purpose. Sir, the trial is lingering on for a very long time. Copies of the records are not made available even though several requests have been made by the Presiding Officer to the effect that the number of staff at his disposal is not adequate enough to copy the records and the legitimate and rightful request made by the Department has not been heeded to and I request the Hon. Chief Minister to take steps and give more attention to this matter.

Another point is that there is a special cell of the Police Department, Food Cell and attached to it there are officers who are in the border districts and there are so many difficulties there. There are certain raids being conducted by the Food Cell and what is it they are doing there? In the name of raids, they are attacking innocent people.

Very near my constituency one incident has happened at a place called Kanchamparam. There are certain anti-social elements and it seems there was a rubbing between these elements and the Food Cell who went over there found that the former made good their escape. But deliberately the Police force came in larger numbers and attacked the shop owners and the people who were passing along that place. Is it fair and is it just to attack innocent persons? Some persons have been unnecessarily manhandled and molested and some persons are even now despairing of their life and that is the kind of force which has been used by the Police in that area.

Another point which I want to stress is about the clashes at a place called, Ovari, in the Tirunelveli district. I never want to fan the feelings of communities. But there are certain newspapers which fan communal feelings. So far as this incident is concerned, I do not want to dwell at length but suffice it for me to say that it has assumed very large dimensions and the Government will have to take prompt and immediate steps to avert another major clash between two communities.





Sir, what has happened is that on 13-3-1974 at about 3 p.m. there was some incident in a private bus, Ganapathi bus in which two persons entered into a quarrel. One person was alleged to have been beaten by one belonging to the Nadar Ovari village. As a result of that what has happened is the point which will have to be considered by the department. This man went to the village and informed the villagers about it and the villagers marched in large numbers to the Barathar village. There was a clash and a free night. Two deaths are alleged to have taken place on one side and two deaths on the other side.

In the Nadar Ovari village the people who fell down were all taken by the costal people and they were all dumped into the sea and that is the *modus operandi* that has been adopted in this particular case. A small incident has been magnified and the church bell was rung and certain leaders marched in large numbers and they went to the village and looted the houses and also set fire to two jeeps that were standing near the temple of Nadars. This is the way in which the whole thing has been done.

I can understand if the people of Ovari village marched to the Barathar village and did such things but on the other hand, the people from the Barathar village marched into that village and not only looted and set fire to the houses and jeeps but also violated the modesty of women which is the most unfortunate thing and that will have to be considered.

Sir, it may be true that feelings might have run so high but should we not control the situation and that is the question which I am going to address to the Hon. Chief Minister. The Hon. Chief Minister has taken certain steps and I apprised the I.G. about it and he was kind enough to take certain steps. But what is happening now?

Certain parallel investigation is going on. Also the one Circle Inspector there does not heed to anything and what he does is that he registers there case as man missing in the Nadar village. That is the tactic which has been adopted by this Officer. He will have to register the case under Section 302. If a man is missing, *corpus delicti* should be adopted by the Police.

[Thiru R. Ponnappa Nadar] [1974 மார்ச் 25

A similar thing had happened before in 1971. The bodies of four persons were sunk into the sea. The case was registered and some convictions were made. Should not that *modus operandi* be repeated here, is the question which will have to be considered.

But in this case, the Police have been partial, if I may say so with respect. This sort of partisan or partial attitude should be avoided by the Police because they are above petty polities.

Two persons are behind it, one D.R.O. and one D.S.O. One is supporting the people of one village and another is supporting the people of another village. Then there are also two lawyer friends I do not want to mention their names-who are conducting a parallel enquiry and they are giving instructions to the Police. Sir. Does it speak well of the ruling party is the question to be considered.

There should be impartiality and there should be fairness in investigation.

One newspaper has commented that Mudukalathur would be repeated but I do not want that to be repeated there.

With regard to the incident at Thisayanvilai, innocent persons should not be penalised. I am sure that such sort of behaviour on the part of the local people should be avoided and such things whether they are done by one section or another section of the people should be condemned.

Then I want to refer to the incident at Navaland village. There are very important people including a Panchayat President involved in that incident. But innocent people have been unnecessarily harassed and that is how investigation by the Police is conducted.

Once again I emphatically reiterate before this House that so far as murder cases are concerned, they should be conducted with impartiality and a Special Officer should be appointed by the I.G. and he should conduct it as the local eofficers there have som axe to gridn; if necessary they should be transferred so that impartial enquiry could be conducted in that place.

There are other vulnerable spots also and the people there should be protected and the violence should be put down with a heavy hand.



1974 மார்ச் 25] [Thiru R. Ponnappa Nadar]

The next point I want to refer to is the recommendations of the Police Commission. How far they have been implemented is not clear in the report of the review that has been circulated to us. Most of the important recommendations of the Police Commission will have to be implemented in full so that the Police force may be contented.

One point I want to refer to is the feeding charges of Rs. 2 given to a constable on duty. That is owefully inadequate for a square meal. He has to take meals at least 3 times a day and Rs. 2 is mercilessly inadequate. Government should take steps to see that the Policeman is given a reasonable subsistence allowance when he is put on bandobust duty or when he goes to a village for detection of crime.

We are spending crores of rupees on this department on salaries, T.A. and other allowances; people in higher ranks enjoy good T.A. and allowances but the poor Policeman going to remote village is paid the pitttnce of Rs. 2. That should be enbanced.

Then comes the plight of Policeman on duty during the visit of VIP or Ministers. The late revered Anna has given certain views vid., that the porr Policeman are standing for every tamarind tree during the visit of VIP. Is there not any change in the attitude towards Policeman? I think even now it still continuce that when a Minister is on tour, I can say without fear of contradiction a number of transport vehicles accompany him. He should be given the protestion necessary but whether it should be on such a scale is a matter which can be reviewed. We should keep up regularity and we should just see that the minimum security arrangement is made. so that there need not be big bandobus arrangement. I think some change would be made.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* போலீஸார், அமைச்சர்கள் சுற்றுப் பயணம் நடத்துகிற நேரங்களில் சாலை முழுவதும் எல்லா இடங்களிலும் நிறுத் தப்படுகிற முறை கூடாது என்று சொல்லப்பட்டு, இப்போது நிறுத்தப்படு வதில்லை. எங்காவது பாதைகள் திரும்ப வேண்டிய இடம், அல்லது சிறிய ஊர் கள் திரும்ப வேண்டிய இடம் தவிர, முன்போல் மரத்துக்கு மரம், பர்லாங்குக்குப் பர்லாங் நிறுத்தப்பட்ட முறை மாற்றப்பட்டுள்ளது; நடை முறையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I am really happy to note that there has been a change in the attitude. There should be purposive changes in other directions as well.

Regarding recruitment of Police Sub-Inspectors. I find 184 Sub-Inspectors have been recruited in 1973. But how many were recruited per district is not clear. I think some details would be forthcoming. My grievance, long-standing and legitimate, is that on district has been categorically neglected. I do not know why A particular section of the community, viz., the backward class community, has been neglected *in toto*. That is the charge I am levelling against the Ministry. It is politically motivated. Are we to suffer on account of this is a matter to be considered by Government. There are thousands of youngsters, graduates and post-graduates who had passed the written examination but were finally eliminated, know of one important case, the case of one applicant, a graduate of Madurai University. He applied for there years and passad all the tests but was finally eliminated. That district has been totally neglected. That is the acse with regard to my district also. In recruiment to other departments also, some districts had been eliminated. I think this Government will mend these matters or they will end themselves. That is the point I want ot make.

I now come to the treatment meted out to the people. There are certain Police officers who unnacessarily harass others. Some scheduled caste or depressed class is taken to the Police station and the caste name is called and the man is abused. Such things should be avoided.

I have got a case. That matter has been just reported to the Hon. Minister for Harijan Welfare. A copy has been sent to me. The name of the person who has been insulted is one Mani. One Police constable by name Sasikumar, Loctari Police station, insulted that man calling names of caste. That sort of things should be avoided. People should not insult others in that manner. The Chief Minister must take note of that. A copy of this has been sent to leaders of all parties.

I shall now refer to one suspected death which has happened in my constituency. In my constituency, adjoining Kerala, one Sivasankara Panickkar has been found murdered. His body was found inside a well, in Panichamoodu, Vilavankode taluk,



Local people suspected it was murder and they hald a public meeting stating that death had taken place under suspicious manner. But the police did not take any action. That is the point I am making. If it is a case of homicide, the offenders should be brought to book. I hope the police will take effective steps to see that such things are not repeated. If it is case of murder, the murderer should be brought to book.

I want to point out that police is unnecessarily interfering in tenancy rights. Certain decisions have been made by the Tenancy Record Officer but that is not respected by police. I brought to the notice of Hon. Chief Minister about one incident. One man owns 4.70 acres in survey No. 416/B in Eraniyal village in Kaniyakkavilai, in Kanyakumari district. A decision has been given by the Tenancy Record Officer. But the crop has been wrongfully harvested on 21st February 1974. Four cases hava been registered against him. This matter has been represented to the Superintendent of Police and Collector and important police authorities. But they did not give protection to the tenant. They protected the landlord. Why this treatment has been made is because one of the relations of the landlord is a Motor Vehicles Inspector. That is why protestion had been given to landlord.

In Tuticorin soma lands have been harvested with police pootection. The Assistant Collector gave decision in favour of one Subbayya Nadar. But police helped the landlord to harvest the crop. So far as ryots are concerned, the police are behind landlords and we must see that such interference by police with tenancy rights of people, should be avoided.

I come to the labour policy of Government. There are some labour disputes. I refer to the strike in Panandalmodu depot. But the whole lot of conductors, drivers and others have been beaten mercilessly by the police. The strikes may be illegal or unwanted But people who are custodians of law and order should act with restraint, but they behaved in a disorderly way if I may use that expression. There was a reign of terror. Such behaviour of police should be avoided.

(பிற்பகல் 12-30)

Because this Government is always boasting that they are looking after the welfare of the labourers, I say this. Is it the way that Government servants and Transport workers, drivers

and conductors and public should be treated is a matter which the department should consider. (The going was sounded) I will finish soon, Sir and I am coming to a close, Sir.

Another point which I want to stress is relating to some case just instituted against our Party Secretary, Mr. Tindivanam Ramamurthi. Mr. Tindivanam Ramamurthi has been arrested in a case and that case has now been transferred to Villupuram. Numerous witnesses have deposed and they gave evidence exculpating Mr. Ramamurthi. Now, after that, the police will not bring any further evidence. Thinking that they could not do anything better the case has been transferred to Villupuram and it is now pending there.

That is one of the ways or MODUS OPERANDI adopted to harass political opponents.

Another case is against Radhakrishnan, advocate and Town Congress Committee President of Tindivanam. Five police cases have been registered against him. These cases were pending for long and they are also trasferred to Villupuram. Why all these cases have been trasferred? Is it for the convenience of the accused or is it for the convenience of the police or is it for the convenience of the witnesses? That is a matter which we have to consider.

I charge this Government that it is politically motivated and it is harassing its political opponents and this is the way that has been adopted. There are other cases as well in that jurisdiction. One Perumal Nainar of Gingee who happens to be the President has been.......................

THE HON. THIRU S. MADHAVAN: Is thera anything to show that Government have transferred these cases?

THIRU R. PONNAPPA NADAR: It is at the instance of the Police. Not at the instance of the accused. This I may inform the learned Law Minister. I know that a transfer can be made at the instance of the accused. That is allowed. Here, the application has been made by the Police and the reason they now give is that the A.P.P. is available only at Villupuram. That is a clever rule that is the clever argument which motivated them to ask for



he transfer of the cases. How long are we going to be oppressed nd suppressed like this is a matter which the Hon. Chief Minister ill have to consider.

Sir, there are other things as well.

So far as the Fire Service is concerned, I have given a cut notion to the effect...........(The gong was sounded). That is the ast thing, sir. I want to stress one point regarding my constituency. I thought of requesting the Government to open a Fire Station at Kuzhithurai. I think in the report here there is mention of it and I am really happy about it. The fire station now is nly at Nagercoil. There is no fire station in Kuzhithurai. The distance between the places is very long. There are many instances in which the fire could not be extinguished on account of lack of facilities which is available only at Nagercoil.

So far as the fire at Gudiyatham is concerned, some more probing is needed and I fear that there has been some mischief at Gudiyatham. The Hon. Chief Minister visited the spot. Our president, Mr. P. Ramachandran has visited the place. Leaders of almost all political parties have visited Gudiyatham. The unfortunate people there have been rendered homeless; they have nothing to fall back on.

Most of the people were engaged in handloom industry. Many of them are on the verge of starvation. The Prime Minister has given relief of one lakh; all political parties are lending their helping hand. Our party has given Rs. 10,000 to the Chief Minister's Fund. Some relief should be given to them at once. I want once again to earnestly appeal to the Chief Minister that some immediate relief measures should be instituted and help rendered to the poor people who have been affected thereby providing alternative employment, financial assistance in putting up houses and the rules may be relaxed so that the poor people who are on the verge of starvation are helped in time.

I think the Hon. Chief Minister will extend a helping hand. He should see that this sort of fire does not spread to other numberous places.

There have been instances in Teynampet, Ambur and other places

I think the Government will take steps to see that this sort of suppressing political opponents is avoided. Thera is disturbance created in political meetings conducted by the Opposition parties and that seems to be the trick of the trade that should be avoided and the ruling party people should not be allowed to interfere in the day-to-day administration of Police Administration.

There should not be allowed parallel investigation and all communal faction should be dealt with a heavy hand. I think the Government will take steps in all these directions. With these observations, let me conclude, Sir.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, காவல்துறை, தீ அணைப்புத் துறை ஆகிய மானியங்கள் மீது, நல்லபல கருத்துக்களை, ஆக்க பூர்வமாக வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானிய விவாதத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் 'பர்பாமன்ஸ் பட்ஜெட்' என்ற முறை இந்த மானியத்திற்கும் கடைப்பிடிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்கள்.

வளர்ச்சித் துறைகளுக்கு மாத்திரம்தான் அது போன்ற பட்ஜெட் வகுக்கின்ற முறையை நாம் இதுவரையில் கையாண்டு வந்திருக்கிறோம் என்பதையும், வளர்ச்சித் துறை அல்லாத வேறு மானியங்கள், வேறு துறைகளுக்கு இதுவரை அத்தகைய முறையில் பட்ஜெட் அமைக்கவில்லை என்பதையும், வளர்ச்சித்துறை அல்லாத வேறு துறைகளுக்கும் அந்தவகையில் பட்ஜெட் அமைக்க முடியுமா என்பதைப்பற்றி யோசிக்க, துறையினர்களை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதையும் அவர்களுடைய முறையீட்டுக்கு நான் என்னுடைய விளக்கமாகக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேசிய அனைத்துக்கட்சியினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தமிழ்நாடு காவல்துறையின் திறமையை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்கள். நண்பர் ஹாண்டே அவர்கள் பேசும்போது, 'போலீஸ் துறையில் தவறுகள் வந்தால் போலீசைக் காட்டிக்கொடுக்கிறீர்கள். போலீஸ் மீது அந்தத் தவறுகள் போய்ச் செல்லட்டும் என்று ஒதுங்கிக்கொள்கிறீர்கள். பாராட்டுகள் வந்தால் அதை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள்' என்று அவர் குறிப்பிட்டார்.





பாராட்டுகளையும் போலீஸ் துறையினர்தான் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதையும் அகில இந்திய விளையாட்டுப் போட்டியில் வழங்கப்பட்ட பரிசுகள் எனக்கு அளிக்கப்படவில்லை, அவைகள் எல்லாம் பரிசு பெற்ற போலீஸ் அதிகாரிகளுக்குத்தான் அளிக்கப்பட்டன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன்.

போலீஸ் திறமை நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அனைவராலும் பாராட்டத்தக்க அளவுக்கு மேல்நோக்கி இருக்கிறது என்பதை இந்த அவையில் நடந்த விவாதத்தில் யாரும் மறுக்காதது மட்டுமல்ல அவர்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள், இன்னும் இந்தத் துறை எவ்வாறு செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்கிற கருத்துக்கள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் அந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவன் என்ற நிலைமையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் போலீஸார் சார்பாக.

நீங்கள் வாங்கிய பாராட்டுகளுக்கு எல்லாம், இந்த அவையிலே வந்து அவர்கள் தங்களுடைய நன்றியை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள முடியாத காரணத்தினால், அவர்கள் அத்தனைபேர்களுடைய சார்பாகவும் நான் என்னுடைய நன்றியை அவர்களைப் பாராட்டிய உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தமிழக காவல்துறையின் தலைமை அதிகாரியோ, மாவட்டத்திலுள்ள காவல்துறை தலைமை அதிகாரிகளோ, குறிப்பாக சென்னை மாநகரத்தில் பணிபுரிகிற காவல்துறை தலைமை அதிகாரியோ, அவருக்குத் துணையாக இருக்கிற காவல்துறை அதிகாரிகளோ தமிழகத்தின் சட்டம், ஒழுங்கு அமைதி இவைகளைக் கட்டிக் காப்பதில் எந்த அளவுக்கு நிதானப் போக்கினைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதை நமது நண்பர் வீராசாமி அவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள்.

கடந்த ஓராண்டு காலத்தில் நடந்த போராட்டங்களின் வரிசை, அந்தப் போராட்டங்களின் தன்மை, நடைபெற்ற விதம், அந்தப் போராட்டங்கள் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டன என்பதை எண்ணிப் பார்த்து, போலிசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சட்டமும், ஒழுங்கும் அமைதியும் காப்பாற்றப்படுவதற்கு காவல்துறையினர் எவ்வளவு நிதானப் போக்கினைக் கடைப்பிடித்தார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

நம் காவல் துறையினருடைய மதிப்பு தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மேலும் உயருவதற்கான ஒரு அடையாளமாகத்தான் ஏறத்தாழ 100-க்கு மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்ளுகிற இண்டர்போல் என்று சொல்லப்படுகிற

உலக காவல் துறை அமைப்பு பாரிசில் அந்த அமைப்பின் மாநாடு அடிக்கடி கூடுகிறது இந்த ஆண்டு அந்த மாநாட்டில் உலக காவல் துறையின் துணைத்தலைவராக நம் ஐ. ஜி. திரு. அருள் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பது தமிழ்நாட்டிற்கும் இந்தியாவுக்கும் பெருமை அளிக்கக் கூடிய செய்தி என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அகில இந்திய ரீதியில் காவல் துறையினர் அலுவல் தொடர்புள்ள போட்டிகள் ஆண்டுதோறும் பல்வேறு மாநிலங்களில் நடைபெறுகின்றன. கை ரேகை எடுத்தல், கால் பதிவு எடுத்தல், விசாரணைக்கு அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துதல், நிழற்படம் எடுத்தல், சட்டம் சார்ந்த மருத்துவம் வேதியல் அறிவு, முதலுதவி அளித்தல், வாகன ஓட்டுநர்களுக்கிடையே வாகனம் பழுது பார்த்தல், துப்பாக்கி, சுழற்துப்பாக்கி சுடும் போட்டி, கம்பியில்லாத தந்தி மூலம் செய்தியை விரைவாக அனுப்புதல் ஆகிய இந்தப் போட்டிகள் அகில இந்திய ரீதியில் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

நாம் இந்தப் போட்டிகளில் கடந்த ஐந்தாண்டுகாலமாக முதலிடத்தையே பெற்றுவருகிறோம் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிறேன். தொடர்ந்து முதலிடத்தைப் பெற்று வருகிற மாநிலம் தமிழ்நாடு தான் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப் போட்டிகளில் கடந்த ஆண்டு மாத்திரம் மொத்தம் 11 தங்கப் பதக்கங்களையும் 5 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்பதையும் நான் பெருமையோடு கூறிக்கொள்வேன்.

அகில இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களோடு நம் மாநிலத்தை இன்றைக்கு சட்டம் அமைதி ஆகியவைகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது எந்த அளவு பெருமைப் படக் கூடிய நிலையில் தமிழ்நாடு இருக்கிறது என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழகம் அமைதியாக இருக்கிறது என்று பெரியவர் மணலி அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். நாம் மற்ற மாநிலங்களில் நடைபெறுகின்ற அமளிகளைப் பற்றியும் தமிழகத்தில் நிலவுகின்ற அமைதியைப் பற்றியும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற இந்த சூழ்நிலையில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் தமிழ் நாட்டில் அமைதி சூழ்நிலை கெட்டுவிட்டது என்று கூறி இருக்கிற காரணத்தால் மற்ற மாநிலங்களில் நடைபெறுகின்ற குற்றங்கள், அந்தக் குற்றங்களை கண்டுபிடிக்க காவல் துறையினர் எடுத்துள்ள முயற்சிகள், அதில் தண்டிக்கப்படுகின்ற குற்றவாளிகளின் எண்ணிக்கையில் விகிதாசாரம் ஆகியவைகளையும் ஆய்வுசெய்து நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.





நமக்குக் கிடைத்து இருப்பது கிரைம் இன் இண்டியா 1970. கிரைம் இன் இண்டியா 1970 என்ற இந்தப் புத்தகம் மத்திய சர்க்காருடைய உள்துறை இலாகாவால் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகம்.

அந்த புத்தகத்திலுடைய குறிப்புகள், புள்ளிவிவரங்கள் கூறுவதை எடுத்து வைத்துப் பார்ப்போமானால்—

1970-ல் உத்திரப்பிரதேசத்தில் பதிவான கொலைக் குற்றங்கள் 3,502, விசாரணைக்குப் பின் உண்மை என்று தெரிந்து கொள்ளப்பட்டவை 2,824, உண்மை என்று தெரிந்த பிறகு கண்டு பிடிக்கப்பட்ட குற்றங்கள் 1,927, விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 41.69.

மத்திய பிரதேசத்தில் 1970-ல் பதிவான கொலைக் குற்றங்கள் 1,725, விசாரணைக்குப் பின் உண்மை என்று தெரிந்தவை 1,201, அவைகளில் கண்டுபிடிக்கப்பட்டவை 926, விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 47.17.

மகாராஷ்டிரத்தில் பதிவான கொலைக் குற்றங்கள் 1,356. அதில் உண்மை எனத் தெரிந்தவை 1,201. கண்டுபிடிக்கப்பட்டவை 926. விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 53.

இந்தக் கொலைக் குற்றங்களை இந்த மாநிலங்களோடு நம் தமிழ்நாட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1970-ல் பதிவான குற்றங்கள் 890, விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்தவை 662, கண்டுபிடிக்கப்பட்டவை 622, விசாரணைக்குப்பின் தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 63.11 அந்த அளவுக்கு குற்றவாளிகளைக் கண்டுபிடித்தும் தண்டனை அளிப்பதிலும் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

கொள்ளைக் குற்றத்தை எடுத்துப்பார்த்தால்—உத்திரப் பிரதேசத்தில் பதிவானவை 5,202. உண்மை என விசாரணைக்குப் பின் தெரிந்தவை 1,869. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 1,027. தண்டிக்கப்பட்டவர்களின் சதவீதம் 37.99.

பீகாரில் 1970-ல் பதிவான கொள்ளைக் குற்றங்கள் 1,626. உண்மை எனத் தெரிந்தவை 963. கண்டுபிடிக்கப்பட்டவை 263. தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 52.

இதில் தமிழ்நாட்டை ஒப்பிடும்போது 1970-ல் பதிவான கொள்ளை குற்றங்கள் 94. உண்மை என தெரிந்தவை 20. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 19. விசாரணைக்குப் பின் தண்டிக்கப்பட்டோர் சதவீதம் 77.78.

அடுத்து வழிப் பறிக் குற்றங்கள்—

1970-ல் உத்திரப்பிரதேசத்தில் பதிவான குற்றங்கள் 3,710. உண்மை என தெரிந்தவை 3,722. கண்டுபிடிக்கப்பட்டவை 986. விசாரணைக்குப்பின் தண்டிக்கப்பட்டோர் சதவிதம் 43.90.

இதைப் போலவே மராட்டியம், பீகார் போன்ற மாநிலங்களில் அதிகமாகக் குற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

கேரளத்தில் பதிவான குற்றங்கள் 154. அவைகளில் உண்மை எனத் தெரிய வந்தவை 76. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 61, தண்டிக்கப்பட்டோர் சதவிதம் 32.20.

தமிழ் நாட்டில் 1970-ல் பதிவான வழிப்பறிக் குற்றங்களின் எண்ணிக்கை 107. அதில் விசாரணைக்குப் பின் உண்மை என்று தெரிந்த குற்றங்கள் 93. அதில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 80. குற்றங்களின் விசாரணைக்குப் பின் தண்டிக்கப்பட்டவர்களின் சதவிதம் 72.50.

மொத்தத்தில் குற்றங்களின் பட்டியல்—

1970-ல் உள்துறை அமைச்சர் வெளியிட்ட குறிப்பின்படி உத்திர பிரதேசத்தில் 1970 ஆம் ஆண்டு பதிவான மொத்த குற்றங்கள் 2,33,754 அதில் விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்தவை 1,40,764. அதில் கண்டு பிடிக்கப்பட்டவை 33,985. குற்றங்களின் விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப் பட்டோர் சதவிதம் 56.24.

மராட்டியத்தில் 1970-ல் பதிவான மொத்த குற்றங்களின் எண்ணிக்கை 96,552 அதில் விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்த குற்றங்கள் 28,047. அதில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் 19,493. குற்றங்களின் விசாரணைக்குப் பிறகு தண்டிக்கப்பட்டோரின் சதவிதம் 66.80.

கேரளாவில் மொத்தம் பதிவான குற்றங்கள் 31,617; உண்மை என தெரிந்தவை 22,567. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 18,002. தண்டிக்கப் பட்டோர் சதவிதம் 40.17.

மைசூரில் 1970-ல் பதிவான மொத்த குற்றங்கள் 35,566. உண்மை என தெரிந்தவை 28,047. கண்டுபிடிக்கப்பட்டவை 19,493, தண்டிக்கப்பட்டோர் சதவிதம் 58.90.

தமிழ்நாட்டில் 1970-ல் பதிவான குற்றங்களின் மொத்த எண்ணிக்கை 63,619. விசாரணைக்குப் பின் உண்மை என தெரிந்தவை 49,407. அதில் கண்டுபிடிக்கப் பட்டவை 42,464. தண்டிக்கப்பட்டோர் சதவிதம் 83.08.



இன்றைக்கு நாட்டில் தண்டிக்கப்பட்டோரின் சதவிதம் முதலிடத்தில் இருக்கிற மாநிலமாக தமிழ்நாடு தான் இருக்கிறது. அதற்காக நாம் காவல் துறையைப் பாராட்டுவதற்கு மெத்த தகுதி படைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டாமைக் குற்றங்கள் பற்றி குறிப்பிட்டார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய முதல்வரவர்கள் தண்டிக்கப் பட்டோர் சதவிதம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னார்கள். இது 1970-ஆம் ஆண்டுக்கான ஸ்டேடிஸ்டிக்ஸ் அந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது 1974 ஆம் ஆண்டு குற்றங்கள் ஜாஸ்தியாக இருக்கிறது. ஆகவே 1970 ஆம் ஆண்டில் நடந்த குற்றங்களைப் பற்றி சொல்லுவது பொருத்தமாக இருக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கிரைம் இண்டியா 1970 என்ற இதை வெளியிட்டதற்கு பிறகு எதையும் இன்னும் வெளியிடவில்லை. நான் இந்தப் புள்ளிவிவரங்களைச் சொல்லுவதற்கு காரணம் மத்திய அரசு தந்து இருக்கின்ற புள்ளிவிவரங்கள் நம் வாதத்திற்கு வலுவளிப்பதாக இருக்கும் என்பதாலே தந்தேன். அடுத்த புத்தகம் வெளியிட்ட பிறகு அதையும் நான் எடுத்துக் கூறுவேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திண்டாமைக் குற்றங்களைப் பொறுத்தவரையிலும், தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், வழக்குகளே போடப்படுவதில்லை, யாரும் தண்டிக்கப்படுவதில்லை யென்றெல்லாம் சொல்லப்பட்டது.

1969-ஆம் ஆண்டிற்கும் 1972 ஆம் ஆண்டிற்கும் இடையே உள்ள காலத்திற்கான வழக்குகள் பற்றிய புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அவற்றைப் பார்த்தால், 1969 ஆம் ஆண்டு திண்டாமைக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டவை 33, தண்டிக்கப்பட்டவை 16, விடுதலை செய்யப்பட்டவை 11, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் முடிக்கப்பட்டவை 5, சாட்சியம் போதாமை ஆகிய காரணங்களால் திரும்பப் பெற்றவை 1.

1970 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டவை 33, தண்டிக்கப்பட்டவை 15, விடுதலை செய்யப்பட்டவை 12, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் முடிக்கப் பட்டவை 6;

1971 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டவை 24, தண்டிக்கப்பட்டவை 10, விடுதலை செய்யப்பட்டவை 13, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் முடிக்கப் பட்டவை 1; 1972 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டவை 842, தண்டிக்கப் பட்டவை 478, விடுதலை செய்யப்பட்டவை 276, குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் முடிக்கப்பட்டவை 6;

இதிலே 59 வழக்குகள் சமாதானம் செய்யப்பட்டுவிட்டன, 23 வழக்குகள் கோர்ட்டில் உள்ளன.

1972 ஆம் ஆண்டிலே மாத்திரம் திண்டாமைக் குற்றத்திற்காக 777 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள், 476 பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள், 277 பேர்கள் விடுதலை செய்யப்பட்டவர்கள், நீதி மன்றத்திலே வழக்குகள் நடப்பதிலே ஈடு பட்டுள்ளவர்கள் 24 பேர்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய காவல் துறையினருடைய திறமைக்கு எடுத்துக்காட்டாக சென்னை மாநகரத்திலே கமிஷனருடைய அலுவலகத்திலே வைக்கப்பட்டிருக்கிற பொருள்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவரும் எடுத்துச் சொன்னார்கள். நேற்றைய தினம் நான்கூட அவைகளைப் பார்த்தேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரும் அவைகளைப் பார்த்தார்கள் என்று அறிகி றேன். அண்மையிலே கண்டுபிடிக்கப்பட்ட அழகான சிலைகள், சோழர் காலத் திலே செய்யப்பட்ட சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, அதனுடைய பெறுமானம் 45 லட்சம் ரூபாய் என்ற அளவிற்குச் சொல்லப்படுகிறது. களவாடப்பட்ட பல பொருட்களை களவு கொடுத்தவர்கள் புகார் கொடுக்காம லேயே களவாடியவர்களைக் காவல் துறை கண்டுபிடித்து அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் எல்லாம் சென்னையில் கமிஷனர் அலுவலகத்திலே வைக்கப்பட்டு இருக்கின்றன. அது பார்ப்பதற்கு நல்ல காட்சியாக இருக்கிறது. வைர மூக்குத்தி, வைரத் தோடு, ஒட்டியாணம், நெக்லஸ் வைக்கப்பட்டிருக் கின்றன. வயர்கள் குவிக்கப்பட்டு இருக்கின்றன. நல்ல அருமையான சேலைகள், ஜவுளிக் கடையிலிருந்து நேரடியாக எடுத்துவந்த பட்டுச் சேலைகள், புத்தம் புதிய சேலைகள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புவார்களானால் அவர்களைக்கூட சர்க்காருடைய பஸ்ஸிலே அழைத்துச் சென்று காட்டுவதற்கு மாத்திரம் (சிரிப்பு) அழைத்துச் செல்லத் தயாராக இருக்கிறேன் . . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் மதிப் புள்ள சாமான்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. கடந்த இரண்டு மாதத்திலே கண்டுபிடிக்கப்பட்டவை என்று சொல்கிறார்கள், பாராட்டத்தக்கது. சில பேர்கள் கம்ப்ளெய்ண்ட் கொடுக்காமல் இருக்கலாம், அவைகளினுடைய சொந்தக்காரர்கள் யார் என்று விசாரித்து எல்லாம் திரும்பக் கொடுக்கப்படுமா?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதற்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் விளம்பரம் கொடுக்கவேண்டும். சட்டசபையிலே பேசப்படுவதன்மூலம் விளம்பரம் கிடைக்கிறது, மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் அழைத்துச் சென்று காட்ட இருக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்த 40 லட்ச ரூபாய் சிலையை யாருக்கும் திருப்பிக் கொடுத்துவிடவேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது மட்டுமல்லாமல், குற்றங்களைக் கண்டுபிடிக்க வசதிகளை மேலும் பெருக்கவேண்டுமென்ற ஒரு கருத்தினை இங்கு பேசிய கட்சித் தலைவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே கடந்த நான்கைந்து ஆண்டுக்காலத்தில் குற்றங்களைக் கண்டுபிடிக்க, முன்னெச் சரிக்கையாகத் தடுக்க போலீஸ் அதிகாரிகளோடு கலந்தாலோசித்து நவீன கருவிகளை வாங்க இருக்கிறோம். எங்கு பார்த்தாலும் வயர்லஸ் ஸிஸ்டம் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாற்பது இலட்ச ரூபாய் செலவில் மைக்ரோவேவ் டிரங்க் லைன் எல்லா காவல் மாவட்டங்களையும் இணைத்து குற்றவாளிகளின் நடமாட்டத்தைத் துரிதமாகக் கண்காணிக்கக்கூடிய வகையிலே சாதனங்களை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்நியச் செலாவணி வரவேண்டியிருக்கிறது, மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெற்று விரைவிலே நவீன கருவிகள் பொருத்தப்பட்டு குற்றவாளிகளை விரைவிலே கண்டுபிடிக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக முயற்சித்து வருகிறோம்.

அது மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி எடுத்துத் தெரிவித்ததைப்போல், காவல் நிலையங்களில் தொலைபேசி பொருத்தப் படுகின்ற வேலை வேகமாக நடைபெற்று இருக்கிறது. மொத்தமாக 839 காவல் நிலையங்கள் இருக்கின்றன, தொலைபேசிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவை 586, அவைகளில் இதுவரை அமைத்துள்ளவை 436, 1973-74 ஆம் ஆண்டில் 50 காவல் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி அளிக்கப்பட்டுள்ளது. புறங்காவல் நிலையங்கள் 176 இருக்கின்றன. 37 புறங்காவல் நிலையங்களுக்கு தொலை பேசி அமைக்கப்பட்டுள்ளது, 1973-74 ஆம் ஆண்டில் 8 புறக் காவல் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உவரி, திசையன்விளை ஆகிய இடங்களிலே ஏற்பட்ட தகராறுகள் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அதைப் பற்றி பல பேர்கள் இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்கள், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய தொடக்க உரையில் இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனாலும் அவர்கள் அதை விரிவாகப் பேச விரும்பாமல்

ஓரளவுக்கு சமரஸ ஏற்பாடுகள் அங்கே நடைபெறவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டு நிறுத்திக் கொண்டார்கள்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விரிவாக அதைப்பற்றிச் சொல்லி அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றிச் சொன்னார்கள். உவரி பகுதியிலே நாடார் உவரி என்றும் மீனவர் உவரி என்றும் இருக்கின்றன, அந்தப் பகுதியிலே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன. அந்தச் சச்சரவுகளைப்பற்றி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்த நேரத்திலே நான் எடுத்துச் சொன்னது அதைப்பற்றி இங்கு விவாதிப்பதன் மூலமாக மேலும் அது பெருகுவதற்கு இடம் ஏற்பட்டுவிடக்கூடும், யோசித்துச் செய்ய வேண்டும் என்பதாகும்.

அது வகுப்புக் கலவரமாக மூண்டுவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நம் அனைவருடைய கடமை. நம்முடைய அதிகாரிகள் தலையிட்டு உவரி, திசையன்விளை பகுதிகளிலே சமரஸத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தற்சமயம் உவரி கிராமம், திசையன்விளை காவல் நிலையத்தின் எல்லைக்குள் உள்ளது. அங்கே காவல் நிலையம் இல்லாத காரணத்தாலே வகுப்புக் கலவரங்களைத் தடுக்கமுடியவில்லை. ஆகவே அரசு உவரி கிராமத்தில் ஒரு காவல் நிலையம் உடனடியாக அமைக்க முடிவு செய்து ஆணையிட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திசையன்விளை காவல் நிலையத்தை விரிவுபடுத்தி ஒரு போலீஸ் சர்க்கிளாக அதை ஆக்குவதற்கும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

உவரி கிராமத்தில் ஏற்படுத்த இருக்கும் காவல் நிலையத்திற்காக ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக் காவலர், ஒரு முதல்தர காவலர், இரண்டாம்தர காவலர்கள் 16 ஆகியவர்களையும் திசையன்விளையில் ஏற்படுத்த இருக்கும் போலீஸ் சர்க்கிளுக்காக ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு முதல்தர காவலரும், ஒரு இரண்டாம்தர காவலரும் நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. நம்முடைய அரசு பட்டியிலிலிருந்து இல்லாமல் இந்த ஏற்பாட்டை இருக்கின்ற சூழ்நிலைகளுக்கேற்ப உடனடியாக ஏற்பாடுகள் செய்வதற்காக சிறப்பு கட்டளையாக அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே போலீஸார் ஊதியங்களைத் திருத்தியமைப்பதற்காக கமிஷன் போடப்பட்டிருக்கலாம். ஆனால் காவல்துறையைச் சீரமைக்கவும், காவல்துறை பணிகளை ஒழுங்குபடுத்தவும், காவல் துறையினரின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படவும், சலுகைகள் அளிக்கப்படவும் அவர்களை





ஊக்கப்படுத்துகின்ற முயற்சிகள் இவைகளுக்காகவும் இந்தியாவிலேயே ஒரு போலீஸ் கமிஷன் போட்டது தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

போலீஸ் கமிஷனுடைய மொத்தப் பரிந்துரைகள் 133; அவற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை 116, ஒதுக்கி வைக்கப்பட்டவை 13, தள்ளிப்போடப் பட்டவை 4, முழுவதுமாகச் செயல்படுத்தப்பட்ட பரிந்துரைகள் 32, செயல் படுத்தப்பட்டுவரும் பரிந்துரைகள் 38. நாம் ஒத்துக்கொண்ட 116 பரிந்துரை களில் செய்தித் தொடர்பு துறை சம்பந்தமான பரிந்துரைகளை 3 ஆண்டுகளிலும் ஆட்படைத் திறன்பற்றிய பரிந்துரைகளை 5 ஆண்டுகளிலும், போக்குவரத்து பற்றிய பரிந்துரைகளை 7 ஆண்டுகளிலும் செயல்படுத்தத் திட்டமிட்டு வருகிறோம்.

61653

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டவைகளுக்கான தொடர் செலவு 3 கோடியே 38 இலட்சமும் தொடராச் செலவு 3 கோடி ரூபாயும் ஆகிறது என்பதை எண்ணிப் பார்த்தால் 116 பரிந்துரைகளையும் ஒரேடியாக நாம் செயல்படுத்த முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். போலீஸ் கமிஷன் பரிந்துரைகளுக்கு ஏற்பவும், அது நம்முடைய உள்ளத்திலே ஏற்படுத்தியிருக்கும் அடிப்படையான உணர்வும்—அவர்களின் சிபாரிசு என்று மட்டும் சொல்லிவிட முடியாது—அதன் மூலமாக அது அடிப்படை அமைத்துக் கொடுத்திருக்கிற உணர்வுபூர்வமாகவும் வேறு சில சலுகைகளை நம் காவல் துறையினருக்கு வழங்க இருக்கிறோம். இப்பொழுது இந்த மானியத்தின் தொடர்பாக வேறு சில சலுகைகளையும் நாம் இங்கே மகிழ்ச்சியோடு அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

காவலர்கள் தங்கள் கடமையை ஆற்றும் நேரத்தில், சமூக விரோதச் சக்திகளுடன் ஏற்படக்கூடிய கைகலப்பினாலோ, அல்லது மற்றக் காரணங்களாலோ வீர மரணம் அடைந்தால், அவ்வாறு வீர மரணம் அடைந்த காவலரின் குடும்பத்திற்கு, எவ்வித நிபந்தனையுமின்றி காவலர் தம் "அதிக அளவு காலச்" சம்பளத்தில் சரிபாதிக்குச் சமமான தொகையை ஓய்வூதியமாக அளிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே எப்படி பென்ஷன் அளிக்கப்பட்டது என்றால், உதாரணத்திற்கு, 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் சம்பளம் வாங்குகின்ற ஒரு அதிகாரி இறந்துவிட்டார் என்றால், அவர் 300 ரூபாய் சம்பளம் வாங்கினால் பென்ஷன் விதிமுறைகள், அதற்குட்பட்டபடி பென்ஷன் வழங்கப்பட்டது. ஆனால் இப்பொழுது 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் வாங்க வேண்டிய ஒரு

அதிகாரி, 300 ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கும்பொழுது, இப்படிப்பட்ட ஒரு கடமையாற்றுகின்ற நேரத்தில் இறந்துவிட்டால் அவர் வாங்க வேண்டிய 500 ரூபாயைக் கணக்குப் பார்த்து, எந்த விதிமுறைகளையும் வகுக்காமல் சரி பாதிக்குச் சமமான தொகையை ஓய்வூதியமாக அளிக்க விதி செய்திருக்கிறது என்பதை இந்த மாமன்றம் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

செப்டம்பர் 15-ஆம் தேதி, அண்ணா பிறந்த நாளில், இப்படிப்பட்ட வீரச் செயல்கள், அல்லது வீரமரணம் அடைந்தவர்களுக்கு வீரப்பதக்கம், பண முடிப்பு செப்டம்பர் 15-இல் அளிப்பதை இங்கே உள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அத்துடன், தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியவர்கள் தங்களது 10 வருட, 15 வருட, 20 வருட பணிக் காலத்தில் பதிவு செய்யப்படக்கூடிய தண்டனைகள் ஏதுமின்றியும், சிறு தண்டனைகள் இரண்டிற்கு மேல் இல்லாமல் திறமான பணிகள் சிறப்புப் பதிவுகள் (குட் சர்வீஸ் என்ட்ரி) பெற்றவர்களுக்கு, அவர் தம் ஊதிய காலத்தையும் மேற்சொன்ன பதிவுகளின் எண்ணிக்கையையும் அனுசரித்து மாதம் ஒன்றுக்கு 1 ரூபாய், 1.50 ரூபாய், 2 ரூபாய் முறையே சிறப்பு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தச் சிறப்பு ஊதியம் 4,407 பேர்களுக்கு மேற்படாமல் அளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை சமீப காலம் வரை இருந்து வந்தது. இந்த நிபந்தனை இப்போது அகற்றப்பட்டு தகுதி பெற்றவர்கள் அனைவருக்கும் இச்சிறப்பு ஊதியம் அளிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்கள் கடமையாற்றும் சமயம் சமூக விரோத சக்திகளுடன் ஏற்படக் கூடிய கைகலப்பினாலோ அல்லது மற்றக் காரணங்களினாலோ காயமுற்றால், அண்ணா பிறந்தநாள் வீரப்பதக்கம் பெறக்கூடிய நிலை இன்றுள்ளது. அஃதன்னியில் பணியாற்றும்போது காயமுற்றவர்கள், சைக்கிளிலே செல்பவர்கள் விபத்திற்கு ஆளாக்கப்பட்டால், ஸ்கூட்டரிலே செல்பவர்கள் விபத்திற்கு ஆளாக்கப்பட்டால், சைக்கிள் மோட்டாரில் ஜீப்புகளிலே செல்பவர்கள் விபத்திற்கு ஆளாக்கப்பட்டால் அவர் நிரந்தர ஊனம் அடைந்து, பணியில் தொடர இயலாமல் நலிவுறும் நிலையில் இருப்பின் அந்தக் காவலருக்கு நிபந்தனை ஏதுமின்றி மானியத் தொகையாக ரூ. 3,000 அளிக்க அரசு தீர்மானித்துள்ளது என்பதையும் மகிழ்வுடன் அறிவிக்கின்றேன்.





அவர்களுடைய ஊதியம் பற்றியெல்லாம் இங்கு பேசப்பட்டது. எனக்குள்ள வருத்தமெல்லாம்—ஒரு சிலரைத் தவிர—மற்ற உறுப்பினர்கள் எல்லாம் காவல் துறையில் இங்கே தவறு, இந்த அதிகாரி இந்தத் தவற்றைத் செய்தார், அந்த அதிகாரி அந்தத் தவற்றைச் செய்தார் என்பதிலே அதிகமாகச் கவனம் செலுத்தினார்களே தவிர, அந்தத் துறையிலே இருக்கின்ற 40,000 பேர்களும் மனிதர்கள் தான், அவர்களும் தொழிலாளிகள்தான், அவர்களுடைய தேவைகளையும் உணர வேண்டுமென்று இந்தக் குறைபாடுகளைப் பற்றிப் பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களுடைய உள்ளத்திலே அமைத்துக்கொள்ளாமல் பேசியது உண்மையிலேயே வருந்தத் தக்கதாகும்.

ஆனால் நாம் போலீஸ் கமிஷன் அமைத்ததற்குப் பிறகு எந்த அளவிற்கு அவர்களுடைய சம்பளம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஏற்கனவே இருந்த சம்பளத்தோடு அகவிலைப்படியையும் இணைத்து அதனால் பென்ஷன் வாங்குகின்ற நேரத்தில் அதிக லாபம் அடையும் விதத்தில் ஏற்படுத்தியிருக்கிறோம்.

கேரளத்தில் 80 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தோடு டி.ஏ. 125 ரூபாயும் சேர்ந்து 205 ரூபாய் கிடைக்கிறது.

கர்நாடகத்தில் 85 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தோடு 125 ரூபாய் டி.ஏ.யும் சேர்ந்து 210 ரூபாய் கிடைக்கிறது. இங்கேதான் ஒரு 5 ரூபாய் அதிகமாகக் கிடைக்கிறது.

ஆந்திரத்தில் 70 ரூபாய் அடிப்படைச் சம்பளத்தோடு 120 ரூபாய் அகவிலைப்படியும் சேர்ந்து மொத்தம் 190 ரூபாய் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் அடிப்படைச் சம்பளம் 150 ரூபாயாகி, டி.ஏ. 55 ரூபாயும் சேர்த்து 205 ரூபாய் நாம் அளிக்கிறோம். இதிலே முதல்தர காவலர்களுக்கு 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் என்ற அளவில் மாற்றியமைத்து இருக்கிறோம்.

இன்னும் அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தியணைப்புப் படையினருக்கும் இவர்களுக்கும் இருக்கும் வேறுபாடு அகற்றப்பட வேண்டாமா என்று கேட்டார்கள். அந்தக் கேள்வியை மனிதாபிமானத்தோடு எண்ணிப் பார்த்து நிச்சயமாக, தகுந்த நல்லதொரு முடிவு இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

தியணைப்புத் துறையைப் பற்றிப் பேசப்பட்டது. குறிப்பாக குடியாத்தத்தைப் பற்றிப் பலரும் எடுத்துக் கூறினார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சொன்னார்கள். எனக்குள்ள

குறையே, நான் மேலவையிலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் இதுபற்றி வந்த பொழுது, குடியாத்தம் தீவிபத்து பற்றிப் பேசியிருக்கிறேன். பிரதமர் இலட்சம் ரூபாய் அளித்திருக்கிறார், காங்கிரஸ் கட்சி 10,000 ரூபாய் அளித்திருக்கிறது, முதலமைச்சர் நிதியிலிருந்து இலட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்தேன். ஆனால், பொன்னப்ப நாடார் பேசும்பொழுது பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் கொடுத்த இலட்சம் ரூபாய் தெரிந்தது, காங்கிரஸ் கட்சி கொடுத்த 10,000 ரூபாய் தெரிந்தது, ஆனால் உடனடியாக முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுத்த இலட்சம் ரூபாய் அவருக்குத் தெரியாமல் போய்விட்டது என்பதற்காக வருந்துகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** உண்மையிலேயே விடுபட்டுப் போய் விட்டது. அதைத் திருத்திக் கொள்வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அவர்கள் இன்னும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இன்னும் அதிகமாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேண்டுமென்றே விட்டுவிட்டதாக நான் சொல்லவில்லை. நாங்கள் செய்வது அவர்கள் நினைவிற்கு வருவதில்லை. அதற்காகத்தான் சொன்னேன்.

தீயணைக்கும் படை இயந்திரங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** குடியாத்தம் தீ விபத்திற்குப் பிறகு பல இடங்களில் விபத்துக்கள் நடக்கின்றன. இன்றைக்குக் காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆம்பூரிலே விபத்து ஏற்பட்டு, சந்தேகப்பட்டு அங்கு சாதாரணமாகப் போன ஒரு ஆளைப் பிடித்து அடித்துக் கொன்றிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட விபத்துகள் எப்படி ஏற்படுகின்றன என்று அரசாங்கமே அறிக்கை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா? அப்படி ஒரு கமிஷன் தீர்ப்பு இருந்தால் இம்மாதிரி ஏற்படாது அல்லவா? எனவே விசாரணை கமிஷன் வைக்கும் கருத்து இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தீ விபத்துகளைப்பற்றி நான் போலீஸ் உயர் அதிகாரிகளோடு அடிக்கடி கலந்து பேசி, எல்லா இடங்களிலும் நம் காவல் துறையினர் உஷார்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கேற்ப அந்தக் காரியங்கள் நடக்கின்றன.

ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. நம் மாநிலத்திலுள்ள போலீஸ்காரின் எண்ணிக்கை 40,000. ஆனால் நாமோ 4½ கோடி மக்கள் இருக்கிறோம்.





அந்த விகிதாச்சாரப்படி பார்த்தால் 1,000 பேருக்கு ஒரு காவலர் என்று வருவார். ஆயிரம் பேருக்கு ஒரு காவலர் இருக்கிறார். ஆனால், எத்தனை கிராமங்கள், எத்தனை ஊர்கள், எத்தனை சிற்றூர்கள், எத்தனை நகரங்கள் இருக்கின்றன என்று எண்ணிப் பார்த்தால், உடனடியாக எல்லா இடங்களிலும் தீ விபத்துகள் ஏற்படும்பொழுது அங்கே அதிகாரிகள் அடுத்த கணத்திலேயே இருப்பது என்பது இயலாத காரியம். அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள், தீ விபத்து அதிகாரிகள் எங்கே போனார்கள் என்று கேட்டார்கள். அதிகாரிகளெல்லாம் எங்கெங்கே தீ விபத்து ஏற்படப் போகிறது என்று ஜோசியம் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. ஆனால் தீ விபத்து ஏற்படும் நேரத்தில் உடனடியாக அவர்கள் அங்கே செல்லத் தயங்கினார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலே தவறு ஏற்பட்டால் அவர்களைக் கண்டிக்க, தண்டிக்க, விசாரிக்க, விளக்கம் கேட்க நமக்கு உரிமை உண்டு. நிச்சயமாக அரசு அந்த நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருக்கிறது.

ஆனால் ஒவ்வொரு தீ விபத்து நடைபெறும் இடத்திலும் அதிகாரிகள் முன் கூட்டியே இருப்பது என்பது இயலாத காரியம். எங்கே பரவலாக நடைபெறுகிறது என்ற விவரம் தெரிகிறதோ அங்கெல்லாம் முன்னெச்சரிக்கையாக இருக்கக் காவலர்கள் தயாராக இருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் சொன்னது, குடியாத்தம் தீ விபத்தில் —ஜோசியம் பார்க்க வேண்டிய அவசியமில்லை—ஆனால் யாரோ ஓரிருவர் லீவில் போகலாம். கம்ப்ளீட்டாக, ஏணிப்படிபோல் இருக்க வேண்டிய அந்த 4, 5 பேர்களும் லீவில் போவது என்றால் எல்லோரும் ஒன்றாக ஜோசியம் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்களா? திடீரென்று தீ விபத்து ஏற்பட்டால் அதற்கு யாராவது ஒரு அதிகாரியாவது இருக்க வேண்டும், ஒரு அதிகாரி லீவில் போகலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** முதலமைச்சரவர்கள் சொல்லும்பொழுது தீ விபத்து எங்கே வருகிறது என்று ஜோசியம் பார்க்க முடியாது என்று சொன்னார்கள். அது உண்மைதான். கண்டுபிடிக்க முடியாதுதான். ஆனால் சென்ற நான்கைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து, மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட, மற்ற விஷயங்களுக்கு மற்ற மாநிலங்களை ஒப்பிடுவதால் சொல்கிறேன், மற்ற எல்லா மாநிலங்களையும்விட ஜாஸ்தியாக இங்கேதான் குடிசைகள் தீ விபத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்றன. தங்கமணி அவர்கள்கூட அதற்காகத்தான் சொன்னார்கள். அதற்கு ஏதாவது கண்டுபிடித்து அந்தத் தீ விபத்துக்கள் வராத வகையிலே ஏதாவது முதலமைச்சரவர்கள் திட்டம் வைத்திருக்கிறார்களா என்பதை விளக்கமாகச் சொன்னால் நல்லது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 1967-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் சென்னை மாநகரமெங்கும் குடிசைகள் தீப்பற்றி எரிந்தன. தொடர்ந்து தமிழகத்திலே பல்வேறு இடங்களில் தீ விபத்துக்கள் ஏற்பட்டன. அதற்குப் பிறகு கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக அந்த அளவிற்கு இல்லாமல் படிப்படியாக அது குறைந்திருக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரையில், குடிசைமாற்று வாரியம் அமைக்கப்பட்டு, குடிசைகளெல்லாம் மாற்றப்பட்டு நல்ல கட்டிடங்கள் கட்டித் தந்த அந்த முயற்சிக்குப் பிறகு சென்னை மாநகரத்தில் தீ விபத்துக்கள் வேகமாகக் குறைந்திருப்பதையும் நாம் காண்கிறோம்.

குடியாத்தத்தைப் பொறுத்தவரை அதுபற்றி முதல் நாள் பேசும்போது கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள் சதி இருக்கக் கூடும், ஆராய வேண்டும் என்று கூடச் சொன்னார்கள். அந்தப் பகுதி மக்களும் அப்படித்தான் என்னுகிறார்கள். ஆனால் இப்படிச் சொல்லுகிற நேரத்திலே பாதிக்கப்பட்ட மக்கள் தவறாகக் கருதிக்கொள்ளக் கூடாது. ஒரு சில இடங்களில் தங்களுடைய குடிசைகள் தீ விபத்துக்கு ஆளாக வேண்டுமென்று கருதுகிற உணர்வு சிலரிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், நல்ல நிதி உதவி கிடைக்கிறது; மாற்று ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்த முயற்சிகளில் நாம் வெகு வேகமாகச் செல்லுகிற நேரத்தில் மிக மோசமாக இருக்கும் குடிசைகள் தீயில் வெந்து போவது நல்லது என்று எண்ணும் சிலர் இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; அதிகாரிகளும், கட்சி சார்பற்ற முறையில் எல்லாக் கட்சி நண்பர்களும் விபத்து நடக்கும் இடத்தைப் பார்க்கும்போது சிலரது வீட்டுச் சாமான்கள் எல்லாம் முன்கூட்டியே தீயினால் பாதிக்கப்படாத தொலைவுக்கு எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியும் வருகின்றது. ஆகவே இதிலே நாம் அவசர முடிவுக்கு வந்து இந்தக் காரணத்தாலேதான் தீ விபத்து ஏற்பட்டது என்று சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. அவர்கள் நீதி விசாரணையே வேண்டுமென்று சொன்னார்கள். நீதி விசாரணை என்ற அளவுக்கு இல்லாமல் உஷாராக இருந்து கண்காணிக்க சகல ஏற்பாடுகளையும் அரசு சார்பில் நாங்கள் மேற்கொள்வோம் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடியாத்தத்தில் எல்லா அலுவலர்களும் இல்லாமல் போய்விட்டார்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். எதையும் மிகைப்படுத்திச் சொல்வது அவர்களுக்கு எப்போதும் மகிழ்ச்சிகரமான விஷயம். எல்லா அதிகாரிகளும் இல்லாமல் போய்விடவில்லை. ஒரே ஒரு அதிகாரி மாத்திரம் தான் குடியாத்தத்தில் விடுமுறையில் இருந்தார் என்ற தகவல் வந்திருக்கிறது.





அதிகாரிகள் தாமதமாகப் போயிருக்கலாம்; போன பிறகு தீ அதிகமாக மூண்டு விட்ட காரணத்தால் உள்ளே நுழைய முடியாமல் தவித்திருக்கலாம். தீயணைக்கும் படை கூட சற்றுத் தாமதமாக வந்தது என்று குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவைகளைப் பற்றி விசாரித்து அறிக்கை தரவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் வட்ட வாரியாக தீயணைக்கும் படைகள் நிறுவப்பட வேண்டுமென்ற கருத்து கூறப்பட்டது. இதற்கு 10 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை; அந்தச் செலவை ஏற்றுக் கொள்ளலாம் என்று கே. டி. கே. அவர்கள் கூட அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். பத்து கோடி ரூபாய் செலவழிப்பதில் கூடத் தயக்கம் இல்லை. அதற்குத் தேவையான இயந்திரங்களைப் பொறுத்தும், கட்டடங்களை வாடகைக்குப் பெறுவது அல்லது இடங்களை அமைப்பது போன்றவைகளிலும் காலதாமதம் ஏற்பட்டு விடுகிறது.

ஏற்கனவே, இந்த ஆண்டு கிருஷ்ணகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம் ஆகிய நான்கு இடங்களில் மாத்திரம் தீயணைக்கும் படைகளுக்கு அனுமதி அளிக்கலாம் என்று அறிவித்திருந்தோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, அதைக் கேட்ட பிறகு கிருஷ்ணகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம் ஆகிய நான்கு இடங்கள் மாத்திரமல்லாமல் பட்டுக்கோட்டை, மணப்பாறை, நாமக்கல், சிவகங்கை, ஆத்தூர், செங்கம், திருக்கோயிலூர், கடையநல்லூர், வந்தவாசி, நத்தம், ஸ்ரீபெரும்புதூர் ஆக மொத்தம் 15 இடங்களில் தீயணைக்கும் படைகள் அமைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, அன்றைக்கு குடியாத்தம் தீ விபத்து பற்றிப் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கெங்கு இருந்து தீயணைக்கும் படைகள் வந்தன என்று சொன்ன பட்டியலில் வாணியம்பாடி இல்லை. வாணியம்பாடியில் இதுவரை வைக்கவில்லை. பல நாட்கள் கோரிக்கையாக இருக்கிறது. ஆம்பூரில் இருக்கிறதா என்று தெரியவில்லை. வாணியம்பாடி கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படிப் பதில் சொல்ல ஆரம்பித்தால் இப்போது குறிப்பிடப்பட்டவை தவிர மற்ற எல்லா ஊர்க்காரர்களும் எழுந்து ஒவ்வொருவராகக் கேட்க ஆரம்பித்தால் மாலை 5 மணி வரை பதில் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 25

நியமனப்புத் துறை பணியாளர் சேமநல நிதிக்காக ஏற்கனவே ஆண்டு தோறும் 5,000 ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படுகிறது. அந்த ஐயாயிரம் ரூபாயை இந்த ஆண்டு முதல் தியணைப்புத் துறையினருக்கு 15,000 ரூபாய் மானியமாக வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக காவல் துறையைப் பாராட்டிப் பேசினார்கள். என்ன காரணத்தாலோ சென்ற ஆண்டு காவல் துறை ஏற்றுக்கொண்ட கடுமையான கண்டனங்களுக்கு ஆளாகாமல் இந்த ஆண்டு எல்லாக் கட்சிக்காரர்களும்—தோழமைக் கட்சியைச் சொல்லவில்லை. முஸ்லீம் லீக் தலைவர் மொய்தின் பேசினார்—மற்ற எதிர்க் கட்சிக்காரர்களும் அரவணைத்துப் பேசுவது போல் தெரிந்தது. 1976-ஐ எண்ணிக்கொண்டு இன்றைக்கு அரவணைத்துச் செல்ல வேண்டியது முறை என்ற கற்பனையோடு, கனவோடு அரவணைத்துப் பேசினார்கள் என்று எண்ணுகிறேன். பரவாயில்லை. இரண்டாண்டு காலத்திற்குக் காவல் துறை எங்களிடத்தில் நல்ல மிளிர்ச்சியோடு பழகும் என்ற அந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பாராட்டிவிட்டு அதே நேரத்தில் அவர்கள் ஏன் கெட்டுப் போகிறார்கள் தெரியுமா?—ஆளும் கட்சியின் தலையீடு; ஆளும் கட்சி தலையிடுகிற காரணத்தால்தான் காவல் துறை களங்கப்பட்டுவிட்டது என்று பலவகையில் எடுத்துச் சொன்னாலும், எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல முடியாவிட்டாலும், அவற்றைப்பற்றி நிச்சயமாக அறிவேன் என்றாலும் கூட ஒன்றிரண்டு பற்றி விளக்கத் தயாராக இருக்கிறேன்.

மணலி அவர்கள் சொன்னார்கள்—ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டு பேர் தலையிடுமே இருக்கிறது என்று சொன்னார்கள். தலையிடுவதற்கும் முறையிடுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வது, எதுவாக இருந்தாலும் ஊரில் நாங்கள்தான் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று முறையிடுவோம்; ஆளும் கட்சிக்காரர்கள் முறையிடவே செல்லக் கூடாது என்று சொல்லுகிறார்கள். நான் அதைக் கண்டிப்பாக மறுக்கிறேன்.

முறையிடுகிற உரிமை எதிர்க் கட்சிக்காரர்களுக்கு எப்படி இருக்கிறதோ அதைப்போல் ஆளும் கட்சிக்காரர்களுக்கும் இருக்கிறது. வழக்குகள் போட்டால் ஆளும் கட்சிக்காரர்களுக்குச் சார்பாகவே நடைபெறுகிறது என்றெல்லாம் பேசப்படுகிறது.



1974 மார்ச் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையில் லத்திப் என்ற முஸ்லீம் இளைஞன், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் கொலை செய்யப்பட்டான். வழக்கில் கைது செய்யப்பட்ட அத்தனை பேரும் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். கொலை நடந்தது உண்மை; செத்தது உண்மை; கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொலை செய்யப்பட்டால் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்; வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசியல் கொலைக்கு ஆளானால், குற்றவாளிகள் ஆளும் கட்சியினராக இருந்தால் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பது தவறானது.

ஆளும் கட்சிக்காரர்களும் பல பேர் தண்டிக்கப்பட்டார்கள் என்ற பட்டியலை என்னால் எடுத்துச் சொல்ல முடியும். அதற்கு ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், சொல்லிக்கொண்டே வந்தார்கள்; அவர்களை அறியாமலே முன்னுக்கு பின் முரணாக ஒன்றைச் சொன்னார்கள். இந்த மானியத்திலே கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசிய பேச்சு போற்றத் தக்க வகையில் அமைந்திருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆத்திரத்திற்கு எள்ளளவும் இடம் இல்லாமல் மிகுந்த அமைதியாக முறைப்படுத்தி பேச்சை வகுத்துப் பேசினார்கள். அதைப் பாராட்டுவதால் மற்றவர்கள் பேச்சு அப்படி அமையவில்லை என்று பொருளில்லை. ஆனால், மொத்தமும் ஆத்திரத்தைக் குறைத்துக்கொண்டு நல்ல பல விஷயங்களை அரசுக்கு எடுத்துச் சொன்னார்கள். இப்படிச் சொல்லுவதால் அவர்களை இழுக்கிறேன் என்று சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை. உண்மையை உணருகிற காலம் மெதுவாக வந்தாலும், மெல்ல மெல்ல வந்தாலும், உறுதியாக வரும் என்பதில் நம்பிக்கையுடையவன் நான் என்ற காரணத்தால் இது போன்ற யோசனைகளை கே. டி. கே. போன்றோர், பொன்னப்ப நாடார் போன்றோர், மாரிமுத்து போன்றோர், மணலி, மொய்தீன், எட்மண்ட் போன்றோர் கூறினால் சௌகரியமாக இருக்கும்.

எட்மண்ட் ஆசனத்தில் இல்லை. அவர் இங்கிருந்து அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மன்னிப்புக் கோரப் போகிறேன் என்று சொன்னார். தேவையில்லை என்று சொன்னேன். மன்னிப்புக் கோர யாரிடத்தில் அனுமதி கேட்டாரோ தெரியவில்லை; அனுமதி கிடைக்காத காரணத்தால் என் முகத்தைப் பார்க்க வேண்டாமென்று கருதி இங்கிருந்து போய்விட்டாரோ என்று கருதுகிறேன்.

நல்ல பல யோசனைகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறது இந்த அரசு. அப்படி விரும்புகிற நேரத்தில் சொல்லப்படுகிற சிறு சிறு குறைபாடுகள், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்தவைகளைத் தொகுத்துச் சொன்னாலும், அவற்றிற்கு நான் இங்கே பதிலளிக்க நேரம் இல்லாமல் போனாலும் அவை நிச்சயமாகக் கவனிக்கப்படுகின்றன. ஏற்ற நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது, போலீஸ் நன்றாகத் தான் இருக்கிறது; அரசாங்கம்தான் ஆட்டிப்படைக்கிறது என்று சொல்லிக் கொண்டே வந்தார்கள். எங்கோ ஒரு ஊரில்—மானாமதுரைக்குப் பக்கத்தில் நடைபெற்ற நிலத் தகராறில் போலீசார் நிலப்பிரபுக்களுக்குப் பக்கத்தில் இருந்தார்கள்; அரசாங்கம் தலையிட்டுச் சரி செய்தது என்று சொன்னார்கள். முதலில் போலீசார் சரியாக நடக்கிறார்கள்; அரசாங்கந்தான் தவறு செய்து விட்டது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தவர்கள் திடீரென்று மானா மதுரைக்கு அருகில் போலீசார் தவறு செய்தார்கள்; அரசு சரி செய்தது என்று சொன்னார்கள். இதிலிருந்து தவறுகள் நடைபெறுவதற்கும் அரசுக்கும் கிஞ்சித்தும் தொடர்பு இல்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இன்றைக்குக் கூட காலைப் பத்திரிகையில் பார்த்தேன். கேரளத்தில் பெண் போலிசை இரண்டு ஆண் போலிசார் பலாத்காரம் செய்தார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன். வேறு பத்திரிகையில் அல்ல; இந்துப் பத்திரிகையில் கூட வந்திருக்கிறது. இதற்கு அரசு பொறுப்பு என்று சொல்லமாட்டேன்.

இங்கேயும் மற்ற இலாகாக்களிலேயும் இருப்பவர்கள், எல்லா அதிகாரிகளும் மனிதர்கள்தான். எல்லா அதிகாரிகளும் தவறு செய்பவர்கள் அல்ல.. அதற் காக எல்லா அதிகாரிகளும் நல்லவர்களும் அல்ல. ஒருசில அதிகாரிகள் தவறு செய்யக்கூடும். அப்படித் தவறு செய்யக்கூடிய அதிகாரிகளை சுட்டிக்காட்டி னால் அவர்களைத் தண்டிக்க, கண்டிக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

அதிகாரிகளைப் பொறுத்தமட்டில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எவ்வளவு நண்பர்களாக இருந்தாலும், ஆருயிர் தோழர்களாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பழக்கப் பட்ட அரசியல் இலக்கணம் வகுத்த அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். (கைதட்டல்).

ஆகவே, அச்சமின்றி இப்படிப்பட்ட விவகாரங்களை நீங்கள் எங்களிடம் எடுத்துச் சொல்லலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நண்பர் ஹாண்டே அவர்கள் இங்கே இரண்டொரு குறிப்புகளை எடுத்துச் சொல்லி இதற்கெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார், என்ன பதில் சொல்லப் போகிறார் என்று கேட்டார்கள்.

ஒன்று பார்க்கிறேன் இந்த மானியத்தை ராஜிநாமாவிலிருந்து ஆரம்பித்து நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த மானியத்தில் பேசும்போது நீங்கள் அதிகச் சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கூறினார்கள். என் மீது அவருக்கு ஏற்பட்ட இந்தப் பரிதாபத்திற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் என்னை அவர்கள் உணர்வார்கள். ஆகவே, இந்தப் பரிதாபத்தோடு அதிகச் சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள், இலா காவை மாற்றிக் கொடுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

ஆனால், ஹாண்டே அவர்கள் ராஜிநாமாவும் வேண்டாம். இலாகா மாற்றமும் வேண்டாமென்று என்று கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து குறைந்தபட்சம் ஒரு மன்னிப்பாவது கேட்டுக்கொள்ளுங்கள் என்றளவிற்கு அவர்கள் தமது கருத்தைச் சொன்னார்கள். இரண்டு மூன்று குற்றங்களை எடுத்துச் சொல்லி இவைகளைப் பற்றியெல்லாம் விசாரிக்கவேண்டும், என்ன அக்கிரமங்கள் நடைபெறுகின்றன என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் உடனடியாக அவைபற்றி விசாரித்தேன்.

உத்தமபாளையம் தாலுகாவில் சின்னமனூரில் குருசாமி என்பவர் அண்ணா தி.மு.க. அமைப்பாளரை 8—11—1973 அன்று சோனைமுத்து மற்றும் சிலர் கடத்திச் சென்று கழுத்தை நெறித்து கொலை செய்து ஆற்றில் போட்டு விட்டார்கள். இதுபற்றி புகார் செய்தும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை என்று சொன்னார்கள். மதுரை தி.மு.க. செயலாளர் பொன் முத்துராம லிங்கம் தலையிட்டு மேல் நடவடிக்கை எடுக்கத் தடை செய்துள்ளாரா என்று அவர்களுடைய அதிகாரபூர்வமான கட்சிப் பத்திரிகையில் வந்த செய்தியை இங்கே அவர் சொன்னார்.

விசாரித்துப் பார்த்தால் அந்த குருசாமி உயிரோடு இருக்கிறார். (பலத்த கைதட்டல்) என்ன விஷயம் என்றால், அ.தி.மு.க. உறுப்பினர் குருசாமியை யாரோ கொலை செய்துவிட்டார்கள் என்று காவல் துறையினருக்கு வந்த தந்தியின் மீது விசாரணை நடத்தப்பட்டது. அந்தத் தந்தியை அனுப்பி யிருந்த சோனைமுத்துவிற்கும் குருசாமிக்கும் இடையே உறவு சீராக இல்லை. அதற்குக் காரணம் சோனைமுத்து தன் மனைவியை அடித்துக் கொடுமைப் படுத்துவதை குருசாமி—சோனைமுத்துவின் மாமனார் மாமியாருக்குத்

தெரிவித்துவிட்டார் என்ற ஒரு எண்ணம் சோலைமுத்துவிற்கு தோன்றியிருந்ததுதான் காரணம் என்று அறியப்பட்டது. சோலைமுத்து தன்மீது கொண்டுள்ள ஆத்திரம் குறையும்மட்டும் எங்காவது சென்றுவரலாம் என்று கருதி குருசாமி யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் பெரியகுளத்தில் உள்ள தன் உறவினர் ஒருவர் வீட்டிற்குச் சென்று தங்கியிருக்கிறார். 8—11—1973-ல் இவர்களுடைய கட்சிப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது இவர் கொல்லப்பட்டார் என்று. 25—11—1973 அன்று கிராமத்திற்கு அவர் திரும்பி வந்துவிட்டார். ஹாண்டே அவர்கள் பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்து தவறான விளக்கம் கேட்டார். அவருக்கு விளக்கம் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

அதே போல் இன்னொன்றும் அவர் சொன்னார். கம்பத்தைச் சேர்ந்த குப்புசாமி என்பவர் கொலை செய்யப்பட்டதாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். 11—3—1974 அன்று தன்னுடைய மகன் குப்புசாமி இரவு 9.45 மணிக்கு விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டான் என்று அவன் தாய் கம்பம் காவல் நிலையத்திற்குச் சென்று ஒரு புகாரைக் கொடுத்தார். அது குறித்து கம்பம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு உடல் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. வேதியல் பரிசோதனைக்காக உடலுறுப்புகளின் பாகங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இறப்பைப் பற்றிய கருத்து தெரிவிப்பது வேதியல் பரிசோதனையின் முடிவுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே தாயார் விஷம் குடித்து மகன் இறந்தான் என்று போலீஸில் அவர்கள் புகார் செய்திருக்கிறார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முதல் அமைச்சர் அவர்கள் அங்கே விஷம் குடித்து அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னார்கள். எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவல் மூட்டைப் பூச்சி மருந்து ஊற்றி தற்கொலை செய்து கொண்டார் என்பது தவறான எண்ணம். அவர் தாயார் வாக்குமூலம் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அதேமாதிரி அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தகப்பனார் அவர்கள் வாக்குமூலம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்கொயரி கமிஷன் ரிப்போர்ட்டில் அதற்கு மாறாகவும் இருக்கக் கூடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு கேஸை எடுத்துக் கொண்டு, உங்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடியதை சொல்வதில் பயன் இல்லை. என்னிடம் ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. முழுமையாகச் சொல்ல நேரம் இல்லை. அவர்கள் கேட்டால் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.



காழ்ப்புணர்ச்சியை வளர்க்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அண்ணா தி.மு.க. மீது காழ்ப்புணர்ச்சி வளரக்கூடாது, தி.மு.க. விற்கும் அண்ணா தி.மு.க. விற்கும் இடையே இந்தமாதிரியான சண்டை ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எனக்கிருக்கிற சங்கடமெல்லாம் உயிரோடு இருக்கிற சட்டசபையைச் செத்துப் போன சட்டசபை என்று சொல்கிறீர்கள்—உயிரோடு இருக்கிற குருசாமியைச் செத்துவிட்டார் என்று சொன்னால் எப்படிக் கொலைகாரனைக் கண்டுபிடிப்பது என்பதுதான் . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே: உதயகுமார். . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உதயகுமாரைப் பற்றி நான் சட்டசபையில் என்னென்ன பேசினேன் என்பது எல்லோருக்கும் தெரியும். எடுத்துப் பாருங்கள்—எனக்குச் சந்தேகமாக இருக்கிறது எனக்கு வந்த தகவல் இப்படி இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறேனேயல்லாமல் இறந்தது உதயகுமார் அல்ல என்று நான் சொல்லவே இல்லை. அதற்கு நீதி விசாரணையே போடப்பட்டது. நீதி விசாரணையிலே கூட போலீஸ் அடித்து உதயகுமார் இறந்தான் என்று சொல்லப்படவில்லை. இறந்தது உதயகுமாராகத்தான் இருக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு போலீஸ் அடித்து உதயகுமார் இறந்துவிட்டான் என்று சொல்லமுடியாது என்றுதான் நீதி விசாரணையில் இருக்கிறது. இறந்தது உதயகுமாரா இல்லையா என்று தகவல் நல்லமுறையில் அறிய நீதி விசாரணை வைக்க ஒத்துக்கொண்டேன். அதற்குக் காரணம் சந்தேகமான செய்திகள் வருகின்றன, ஆகவே, நீதி விசாரணை வைப்போம் என்று ஒத்துக்கொண்டேனே தவிர வேறு ஒன்றும் அல்ல என்று, பல நாட்களாக சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்களே, அதற்குப் பதிலாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் அமைதியாகப் பேசுகிறேன். உதயகுமார் இறந்து போனதுபற்றி நாங்கள் சொல்லிய நேரத்தில் என்ன தோரணையில்—என்னைப் பார்த்து எள்ளி நகையாடக் கூடிய அளவில்—நீங்கள் பேசியிருக்கிறீர்கள். நாங்கள் உதயகுமார்தான் என்று சொன்னபோது நீங்கள் இல்லை என்று கூறியிருக்கிறீர்கள். பிறகு இறந்ததாக, நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி பல விஷயங்கள் நாங்கள் அப்போது சொன்னதை இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இங்கு பேசப்பட்ட பிறகு நிரூபிக்கப்பட்ட பல விஷயங்கள் உள்ளன. தகவல்கள் தவறாகவும் இருக்கலாம் அல்லது சரியாகவும் இருக்கலாம். ஆகவேதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் முதலில் சொல்லும்போது எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் சொன்னேன் என்பதை ஹாண்டே அவர்கள் மறந்துவிடக்கூடாது. அவருக்குத் தரப்பட்ட தகவல் தவறானது என்று சொன்னேனே தவிர வேறல்ல. பத்திரிகையிலே வந்த தகவலை வைத்துச் சொல்லியிருக்கிறார். ஆகவே குருசாமி சாகவில்லை என்றுதான் சொன்னேன். பதில் கூறும்போது நான் எவ்வளவு பொறுப்போடு, அடக்கத்தோடு சொன்னேன் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது. முன்பு உதயகுமார் பற்றிப் பேசும் போது நான் எதிர்க் கட்சிகளை எள்ளி நகையாடுவதுபோல் பேசினேன் என்று சொல்வது தவறு. அப்படி எள்ளி நகையாடக்கூடியவன் அல்ல நான். எதிர்க் கட்சித் தலைவர்களெல்லாம் அப்போது இருந்திருக்கிறார்கள். படங்களைக் கொண்டுவந்து காட்டியிருக்கிறேன். பத்திரிகைகளில் போட்டு அடையாளம் கண்டு பிடியுங்கள் என்று சொல்லப்பட்டது. காவல் துறையிலிருந்து விளம்பரங்கள் செய்யப்பட்டன, யார் என்று கண்டு பிடியுங்கள் என்று. உதய குமாராக இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம், ஆகவே நீதி விசாரணை போடப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டதே தவிர யாரையும் நான் எள்ளி நகையாடுவதில்லை. எள்ளி நகையாடுகிற பழக்கம் எங்களுக்கு இல்லை. வட ஆற்காடு மாவட்டம் மாதனூர் கிராமத்தில் ஒரு . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தகப்பனாரே தன் பிள்ளையை இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் காட்டினார்களே, அது போலீஸாரின் துப்பறியும் தரத்தைக் காட்டுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குளத்தில் மூழ்கி இரண்டு நாள் போனதால் எந்த ஒரு பிரேதத்தையும் அடையாளம் கண்டு பிடிப்பது சிரமம் என்பதால் யாராலும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவருடைய கல்லூரித் தோழர்களால் கூடக் கண்டுபிடித்துச் சொல்ல முடியவில்லை. நெருங்கிப் பழகுகிற தோழர்களால் கூட யார் என்று சொல்வதற்கில்லை என்று சொன்னார்கள். உடனடியாகக் கிடைத்த சாட்சியங்கள் அப்படித்தான் இருந்தன.

வட ஆற்காடு மாவட்டத்தில் மாதனூர் கிராமத்தில் ஒரு பெண் கற்பழிக்கப் பட்டதாக ஒரு செய்தி வந்து எந்தக் குற்றவாளியும் கைது செய்யப்படவில்லை என்றெல்லாம்—எடுத்தவுடனே டெல்லிக்குத் தந்தி—இங்கு ஒரு அரசு இருப்பதாக யாரும் கருதுவதில்லை—பிரதமர் அவர்களுக்குத் தந்தி, ஜனாதிபதி அவர்களுக்குத் தந்தி என்று இப்படி தந்திகள் எல்லாம் கொடுத்தார்கள்.



குற்றவாளிகள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு இ.பி.கோ. 324-வது பிரிவின்படி ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாவது குற்றவாளி பாபுவிற்கும் ஐந்தாவது குற்றவாளி கரியனுக்கும் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தங்கச்சிமடம் அந்தோணியம்மாள் மரணம் குறித்து கே. டி. கே. தங்கமணி அவர்களும் அம்மையார் அவர்களும் இங்கு பேசினார்கள். இந்தச் சம்பவத்தில் அவர்கள் காவல் நிலையத்திலிருந்து காலை 7-30 மணிக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள் என்றும் மதியம் இரண்டு மணிக்குத் தெருவில் நினைவிழந்த நிலையில் விழுந்து கிடந்தார் என்றும் பிறகு சிகிச்சை அளிக்கப் பட்டும் பயன் இல்லாமல் 3-30 மணிக்கு அந்தோணி அம்மாள் இறந்து போனார் என்றும் பிரேத விசாரணை நடத்தப்பட்ட பிறகு வெளிப்புற, உட்புற காயம் எதுவும் காணப்படவில்லை என்பதால் அந்தோணி அம்மாள் விஷ மருந்து அருந்தி யிருக்கக் கூடும் என்றும் மருத்துவர் கருத்து வெளியிடப்பட்டது.

இருந்தாலும் விசாரணை, துணை ஆட்சியாளரைக் கொண்டு நடைபெற்றிருக் கிறது.

அது மாத்திரமல்ல. காவல் துறையினர் மீது கூறப்பட்ட புகார், அந்த விசாரணையில் கடைசியாக அறிவித்த முடிவு கூறப்பட்ட புகார் சரியல்ல என்கிற அளவிற்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

குமாரபாளையத்தில் பாத்திமா பீபி மரணம் பற்றி பேசப்பட்டது. இப்படி நம்முடைய நாட்டில் ஒரு முஸ்லீம் பெண், ஒரு அரிசனப் பெண் ஆகியவர் களுக்குத் துன்பம் நேர்ந்து விட்டால் அவர்களை நம்முடைய சகோதரி போல், நம்முடைய உடன்பிறப்பு போல் எண்ணி உணர்வு கொள்வதில் எந்தவிதமான தவறும் கிடையாது. ஆனால் இதைப் பெரிதாக விளம்பரப்படுத்துவதன் மூலம் ஒரு சமுதாயத்தோடு, ஒரு வகுப்போடு ஆளும் கட்சிக்கு விரோதம் உண்டாக் கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் சிலர் பிரசாரம் செய்வது நல்லதல்ல.

முதலில் அந்த பாத்திமா பீபி என்பவரை பலவந்தப்படுத்த முயற்சி செய்த வர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்து இருக்கிறார்கள். விசாரணை நடைபெற்று வருகிறது. அது வேறு விவகாரம்.

அவர் 12-ம் தேதி பலவந்தப்படுத்தப்பட்டார். நான் வழக்கில் நுழைய விரும்பவில்லை. 13-ம் தேதி இரவு, 14-ம் தேதி விடியற்காலை அவர் இறந்து இருக்கிறார். அதற்குப் பிறகு பிணம் புதைக்கப்பட்டுவிட்டது.

முஸ்லிம் லீக் தலைவர்கள் திருப்பூர் மொய்தீன் அவர்கள் தலைமையில் என்னைச் சந்தித்து மேலும் இதுபற்றி விசாரிக்க வேண்டும், பிரேத பரிசோதனை நடைபெற்றாக வேண்டுமென்று கேட்டார்கள்.

உடனே நான் அவர்களையும் அங்கே போகச் சொல்லி—திரு. லத்தீப், வகாப், ஜப்பார் ஆகியோர் சென்றதாக நினைவு—அவர்களுக்குத் தேவையான உதவிகளையெல்லாம் அதிகாரிகளைக் கொண்டு கொடுக்கவேண்டுமென்று சொன்னேன்.

அவர்கள் சென்று பார்த்தார்கள். பிரேதம் தோண்டி எடுக்கப்பட்டு, பிரேத விசாரணை நடைபெற்றது.

டாக்டர்கள் பிரேத விசாரணைக்குப் பிறகு சொல்லி இருப்பது அதிர்ச்சி தரக்கூடிய செய்தி. கழுத்து எலும்பு முறிக்கப்பட்டு இருக்கிறது. இது முறித்த ஒரு வினாடிக்குள் உயிர் போய்விடும். இது டாக்டர்களுடைய அபிப்பிராயம். 12-ம் தேதி பலாத்காரச் சம்பவம். 13-ம் தேதி இரவு இறந்திருக்கிறார். இறக்கும்போது கூட இருந்தது கணவர்தான். ஆகவே, கணவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். போலீசார் நடவடிக்கை எடுக்காமல் எப்படி இருப்பார்கள்.

ஒரு உறுப்பினர் இங்கே பேசும்போது ஞாயிற்றுக்கிழமையே அவரிடம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வாக்குமூலம் வாங்கப்பட்டதாகச் சொன்னது மிக மிகத் தவறாகும். 28-1-1974 திங்கட்கிழமை அன்றுதான் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மணி இப்பொழுது 1-30-க்கு மேலாகிறது. இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடித்து விடுவார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அடிக்கடி உட்காரச் சொல்லி ஓய்வு கொடுப்பதில் திரு. கே. டி. கே. அவர்களுக்கு ஒரு ஆவல். அதிகாரிகள் ஆங்காங்கே நடந்து கொள்ளும் விதம், அதனால் ஏற்படும் தவறுகள் எல்லாம் இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் அனைத்திற்கும் நான் இங்கே பதில் சொல்ல நேரம் இல்லாவிட்டாலும், குறிப்பிட நேரம் இல்லாவிட்டாலும், நான் முதலில் குறிப்பிட்டது போல் ஏற்ற நடவடிக்கைகளை



நிச்சயமாக எடுப்பேன் என்ற உறுதியைத் தெரிவித்து, இந்த மானியத்தின் மீது தரப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்று—1½ மணியாகிவிட்டது, நமது கட்சித் தலைவர்களெல்லாம் ஏற்கனவே களைப்பாக இருக்கிற காரணத்தால், அவைகளைத் திரும்பப் பெற்று இந்த மானியத்தை நிறைவேற்றித் தர வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எஸ்.ஐ. செலக்ஷனில் கன்னியாகுமரி அறவே விடப்பட்டது என்று சொன்னார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். 1973-ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 193 பேர். அதில் தென் மண்டலங்களைப் பொறுத்தவரையில் 193-ல் 74 பேர் இருக்கிறார்கள். நெல்லையில் 17, மதுரையில் 26, இராமநாதபுரத்தில் 24, கன்னியாகுமரியில் 5 பேர், செலக்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரிக்கு 5 பேர், தருமபுரி மாவட்டத்திற்கு 4 பேர்தான் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்படவில்லை, 5 பேர் செலக்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, எஸ்.ஐ. செலக்ஷனைப் பற்றி ஒரு விளக்கம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். இந்த நியமனைப்புப் படை போடுவதற்காக உத்தரவு பிறப்பிக்கப்பட இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, கிருட்டினகிரி, பண்ருட்டி, ஆரணி, மேட்டுப்பாளையம் போன்ற இடங்களுடன் என்ன காரணத்தாலோ குழித்துறை இதில் விடுபட்டிருக்கிறது. இதையும் அரசாங்கம் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த எஸ்.ஐ. தேர்வில் கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ளவர்களை எடுக்கவில்லை, திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளவர்களைத்தான் எடுத்து இருக்கிறார்கள். குறிப்பாக பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை எடுக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. நான் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பிற்பட்ட சமுதாயத்திற்கு இடம் கிடைக்கவில்லை என்று இந்த அரசைப் பார்த்துக் கூறுவது கொஞ்சமும் பொருத்தம் இல்லாத காரணம். அரசின்மீது குற்றம் சாட்டுபவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், அரிசனங்களுக்கு அதிக இடம் கொடுக்கிறோம் என்பதுதான். ஆகவே, எங்கேயாவது 1–2 புகார்கள் இருந்தால், அதைத் தெரிவித்தால் அதைப்பற்றி நான் கவனிக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

குழித்துறையில் ஒரு தீ அணைப்பு நிலையமும், வாணியம்பாடியில் ஒரு தியணைப்பு நிலையமும் நிறுவுவதை அரசு பரிசீலிக்கும் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ஆ. கு. சுப்பையா, ஏ. சுப்பிரமணியம், செவடி எஸ். சுந்தர பாரதி, கே. எம். சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் எம்.ஏ. லத்திப், கே. டி. கே. தங்கமணி, ஜே. ஜேம்ஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** விளக்கம் கேட்கக்கூடிய வாய்ப்பு கொடுக்கவில்லை. நான் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எத்தனையோ முறை எழுந்து விளக்கம் கேட்டு இருக்கிறீர்கள். உங்களுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறீர்களா, இல்லையா சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் விளக்கம் கேட்க விரும்புகிறேன். உதாரணமாக தருமபுரி மாவட்டத்தில் . . . .

டாக்டர் ஹாண்டே அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி. "நிதிக் கோரிக்கை எண் 15-காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,43,69,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் ஆ. கு. சுப்பையா, ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.





திருவாளர்கள் டாக்டர் எச். வி. ஹாண்டே, கே. டி. கே. தங்கமணி, கே. எ. வகாப், ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றுக்கொள்ளப் பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி. "நிதிக் கோரிக்கை எண் 16—தியணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,65,04,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.37 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

204. Notification issued with G.O. Ms. No. 7352, Revenue, dated the 12th December 1973 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1061 of 1965, published at pages 1-6 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, Extraordinary, dated the 15th March 1965. (Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

205 Notification issued with G.O. Ms. No. 2654, Rural Development and Local Administration, dated the 27th November 1973, in regard to variations to the list of parks in the area within the jurisdiction of Vellore Municipality. (Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act XXVI of 1959).]

206. Notification issued with G.O. Ms. No. 2420, Rural Development and Local Administration, dated the 9th November 1973, in regard to variations to the list of play-fields in the area within the jurisdiction of the Thanjavur Municipality. [Laid on

the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act XXVI of 1959).]

207. Notification issued with G.O. Ms. No. 49, Revenue, dated the 7th January 1974, in regard to date of coming into force of certain provisions of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 in the Agrahara Nattaramangalam alias Nattarmangalam Agraharam Inam Estate of Salem district. [Laid on the table of the House under section 73 (5) of the Tamli Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

208 Notification issued with G.O. Ms. No. 2102, Agriculture, dated the 8th October 1973, in regard to establishment of a market at Thiyagadurgam in South Arcot district to provide facilities for the purchase and sale of groundnut, gingelly, paddy etc. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

@ 103. Review on Tamil Nadu Police, 1973-74 (English and Tamil).

---

@ Despatched to Members on 22nd March 1974.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### செவ்வாய்க்கிழமை, 1974 மார்ச் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Midday meals Scheme*

* 591 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that the midday meals scheme in schools is not being implemented properly due to the rise in prices; and

(b) if so, the action taken by the Government to remedy the situation?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) பள்ளி மதிய உணவுத் திட்டத்திற்கான உணவுப் பொருள்களில் ஒரு பகுதி 'கேர்' நிறுவனத்திடமிருந்து இலவசமாகப் பெறப் படுகிறது. பிற செலவுகளுக்கு மதிய உணவு பெறும் மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் ஒரு வேளை உணவுக்கு ஆ[illegible]சு அரசு தருகிறது. இரண்டு காசை ஊராட்சியோ, ஊராட்சி ஒன்றியமோ தரவேண்டும். மீதி இரண்டு காசை ரொக்கமாகவோ, பொருள் வடிவிலோ அந்தந்த வட்டாரப் பொது மக்கள் தர வேண்டும். விலைவாசி உயர்வினால் ஓரளவு பிற செலவுகள் பாதிக்கப் பட்டிருக்கக்கூடும். ஆனால் அதன் காரணமாக இத்திட்டம் சரியாக நடைபெறவில்லை என்று புகார் ஏதும் அரசின் கவனத்துக்கு வரவில்லை. பல இடங்களில் பொது மக்கள் தாம் தரவேண்டிய நன்கொடையை வழங்கிட முன்வருவதில்லை. பொதுமக்களும், இந்தத் திட்டத்துக்கு உதவுவார்களாயின் இத்திட்டம் இன்னும் வெற்றிகரமாக செயல்படும்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, மதிய உணவுத் திட்டத்திற்கு அரசு இப்பொழுது கொடுக்கின்ற பங்குத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. இது பல ஆண்டுகளுக்கு

முன்பு நிர்ணயிக்கப்பட்ட தொகையாகும். ஊராட்சி தங்களுடைய பங்குத் தொகையைக் கொடுப்பதற்கு இயலவில்லை. காரணம், அவர்களுடைய நிதி நிலை பற்றாக்குறையாக இருக்கிறது. அவர்கள் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை உயர்த்துவதற்கும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மதிய உணவுத் திட்டத்திற்கு அரசு கொடுக்கும் பங்குத் தொகையை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரசு கொடுக்கின்ற தொகை 6 காசாக இருந்தாலும், இந்த ஆறு காசு அளவில் மட்டும் இந்த உணவு வழங்கப்படுவதில்லை. இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு நாம் மதிய உணவுத் திட்டத்திற்காக அரசாங்கத்தின் சார்பாகச் செலவழிக்கிறோம். 'கேர்' நிறுவனம் ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் தருவதன் காரணமாக நாம் ஓரளவு இதைச் சரிக்கட்டிச் செல்ல முடிகிறது. கேர் நிறுவனம் தரும் ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருள்கள் வராமற்போகுமானால், வெறும் ஆறு காசு, பத்து காசை வைத்துக்கொண்டு எதையும் செய்ய இயலாது. கேர் நிறுவனம் தருவதையும் சேர்த்தால், கிட்டத்தட்ட 24, 25 காசு நாம் மதிய உணவுக்குத் தருகிறோம் என்று பொருள். கேர் நிறுவனம் 18 காசு பெறுமானம் உள்ள உணவுப் பொருள் தருகிறார்கள், 2 காசு பல ஊராட்சி ஒன்றியங்கள் தருகின்றன. சில ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அதைத் தர முடியாத நிலை இருக்கின்றன. சிலபல பொதுமக்களுடைய ஒத்துழைப்பு பாராட்டத்தக்க வகையில் அமைந்திருக்கிறது. பல இடங்களில் பொது மக்களுடைய ஒத்துழைப்பு கிடைக்காத இடங்களில் பொது மக்கள் பங்குத் தொகை சரியாக வருவதில்லை. அதைச் சரியாகக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், இப்பொழுது அரசாங்கம் இரண்டு கோடி ரூபய் சில்லறை இதற்காகத் தொகை ஒதுக்கி வைத்திருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, 'கேர்' நிறுவனம் உணவுப் பொருள் தராமற்போகுமானால் மதிய உணவுத் திட்டம் நல்ல முறையில் நடைபெற முடியாது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த உதவி எத்தனை ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கிடைக்கும் என்று சொல்ல இயலுமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இத்தனை ஆண்டுகளுக்குக் கிடைக்கும் என்று சொல்வதற்கில்லை. தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கிற அளவுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், எல்லா இடங்களிலும் மைய சமையற்கூடங்கள் கட்டுவதற்கு இரண்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பெரும் பங்கை கேர் நிறுவனத்தார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைத் தவிர, மதிய உணவுக் கிடங்குகள் பத்து இடங்களில் கட்டுவதற்கும் அவர்கள் உதவித் தொகை அளித்து, ஆறு இடங்களில் கட்டி முடிக்கப்பெற்றிருக்கின்றன. நான்கைந்து மாவட்டங்களிலுள்ள 'வான்' களை ரிப்பேர் செய்வதற்குப் பயன்படுகிற வகையில், பொதுவாக ஒரு ஒர்க்ஷாம் பத்து லட்சம் ரூபாய் செலவில் கட்ட அண்மையில் நிதி உதவி அவர்கள் தந்திருக்கிறார்கள்.

எவ்வளவு ஆண்டுக்கு 'கேர்' நிறுவனத்தார் தருவார்கள் என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை.

ஆனால், தொடர்ந்து தருவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாம் இந்தத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம். என்றைக்கேனும் அவர்கள் அந்தப் பணியை நிறுத்தி விட்டால் இந்தச் சுமை முழுவதையும் நாம் தாங்கிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படும்.

**திரு. தொ.ப. சீனிவாசன்:** 'கேர்' ஸ்தாபனத்தின் மூலம் நிதி உதவி கிடைக்கும் விவரத்தை அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அமைச்சரவர்கள் குறிப்பிட்டது போல், இப்பொழுது சிறப்பாக அமைந்திருந்தாலும்கூட, இதற்கு முன்பாக, ஒவ்வொரு பள்ளியிலும் பள்ளியாசிரியர்கள் துணையோடு சமைத்து குழந்தைகளுக்கு அளித்த உணவு சிறப்பாக இருந்தது, இப்பொழுது புதிய முறையில் சென்ட்ரல் கிச்சன் மூலமாகச் சமைத்தும் உணவு அவ்வளவு சுவையாக இருக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. சமைத்து சூடான உணவை பிளாஸ்டிக் பாத்திரத்தில் காலையிலிருந்து பகல் வரை வைத்திருந்து குழந்தைகளுக்குக் கொடுக்கும்போது உணவு கெட்டுவிடுகிறது, எனவே, மாற்று முறையை அமைத்து மதிய உணவு கொடுக்க அரசு முயற்சிக்குமா?

[1974 மார்ச் 26

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முன்பைவிட இப்பொழுதுதான் சுவையுள்ள உணவை நல்ல முறையில் சுத்தமாக நாம் அளிக்க முடிகிறது. முன்பு அந்தந்தப் பள்ளிக்கூடங்களில் இருப்பவர்களே சமையலைப் பார்த்துக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட இடர்ப்பாடுகளை நாம் நன்றாகக் கவனித்தோம். ஆசிரியர்களில் ஒருவர் இருவர் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதன் காரணமாக, அவர்கள் படிப்பிலே கவனம் செலுத்த முடியாமல் சமையல் வேலையில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டு வந்தது.

இப்பொழுது இரண்டு மூன்று மாவட்டங்களில் மைய சமையற்கூடங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக அந்தத் தொல்லைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. சமைத்த உணவை இரண்டு 'வான்'கள் மூலம் இரண்டு மணி நேரத்தில் குறிப்பிட்ட இடங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்பொழுது தரும் உணவு, கோதுமை, சோயா தூள், வைடமின் முதலியவை கலந்து தரப்படுவதன் காரணமாகத்தான் இவ்வளவு சுவையுள்ள உணவு சுத்தமான முறையில் அளிக்கப்பட முடிகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்த 'கேர்' ஸ்தாபனத்தின் மூலமாகக் கிடைக்கும் மதிய உணவு குழந்தைகளுக்கு இவ்வளவுதான் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்களா? அந்த முறையை நாம் ஏற்படுத்திக்கொண்டோமா? மைய சமையற்கூடம் கட்டுவதற்கு, வான்கள் வாங்குவதற்கு ஆகியவற்றுக்கு அவர்களே சொந்தச் செலவில் செய்கிறார்களா? அல்லது நம்முடைய அரசாங்கம் அந்தச் செலவை ஏற்றுக்கொள்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கு அளிப்பதற்காக அவர்கள் குறிப்பிட்ட அளவில் உணவை நமக்குத் தந்துவிடுகிறார்கள். அதைப் பகிர்ந்து தரும் முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் துவக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையாகிய 84 லட்சத்தில் லட்சம் பேருக்கு மதிய உணவுத் திட்டத்தை வழங்குகிறோம். ஆனால், அதனுடைய அளவை நாம்தான் நிர்ணயிக்கிறோம்.



1974 மார்ச் 26]

இரண்டு லட்ச ரூபாய் அளவில் கட்டப்படுகின்ற கட்டடத்திற்கான நிலத்தை நாம் தரவேண்டும். அதுமட்டுமல்லாமல், கூலியாட்கள், மற்ற பொறுப்புகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். பாத்திரங்கள், சமையல் செய்வதற்கான கருவிகள், சமையல் செய்த உணவை எடுத்துக்கொண்டு போவதற்குப் பாத்திரங்கள், இரண்டு 'வான்கள்' ஆகியவற்றை கேர் நிறுவனம் தருகிறார்கள். உணவுப் பொருளை அந்த கேர் நிறுவனம் தருகிறது. காய்கறி போன்றவைகளை நாம்தான் அளிக்கவேண்டும்.

**திரு. மா. வே. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு அரசு ஆறு காசு வழங்குகிறது. உள்ளாட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மற்றும் பொது மக்களுடைய பங்குத் தொகையாக நான்கு காசு அளவில் தரப்படுகிறது. இப்பொழுது நான்கு காசு, ஆறு காசு, ஏழு காசு, எட்டு காசு என்று இப்படி அந்தப் பங்குத் தொகை உயர்த்தப்படுமானால் அதற்கேற்ற வகையில் ப்ரொபோர்ஷனேட் இன்க்ரீஸ்—ரேஷியோ அடிப்படையில் அரசு கொடுக்கும் ஆறு காசும் உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நிதிநிலை அதற்கு இடம் தராது. ஓரளவுதான் நாம் கணக்கிட்டுத் தர வேண்டியிருக்கிறது. நாம் ஒதுக்கும் தொகையில் 18 லட்சம் மாணவர்களுக்கும் மதிய உணவு தரவேண்டியிருப்பதால் அதை உயர்த்துவதற்கு வழிவகை ஏற்படாது. ஆனால் ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், ஊர் மக்கள் இந்த உதவியைப் பெரும் அளவில் செய்வதற்கு முன்வந்தால் அந்தந்த ஊர் சிறப்பான வசதிகளைப் பெற வாய்ப்பு ஏற்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, கேர் நிறுவனத்தார் வழங்கும் உணவுப் பொருள்களை தற்போது ஆசிரியர்கள், டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் வந்து எடுத்து செல்லும் நிலை இருக்கிறது. இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன, ஆகவே இதை அகற்றவேண்டும் என்று பல ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கை எழுந்திருக்கிறது. ஆகவே, இந்த உணவுப் பண்டங்களை ஆங்காங்கு உள்ள பள்ளிக்கூடங்களுக்கு வேன்கள் மூலமாக எடுத்துச் சென்று பள்ளியில் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

[1974 மார்ச் 26

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் இல்லை. அதுபற்றி கோரிக்கை அனுப்பப்படுமானால், அரசாங்கம் அதுபற்றி ஆலோசிக்கும்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, மத்திய சமையற் கூடத்திலிருந்து வான்கள் மூலமாக உணவு எடுத்துச் செல்லப் படும்போது, மிக உள்ளடக்கமான கிராமப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளுக்கு அந்த உணவை எடுத்துச்செல்ல முடியாத நிலை இருக்கிறது. பாதை வசதி சரியாக இல்லாததால் அப்படிப்பட்ட இடங்களுக்குக் கொடுத்துவந்த உணவை நிறுத்திவிட்டார்கள். ஆசிரியர்கள் மூலமாக முன்பு கொடுத்துவந்த முறையையே மீண்டும் கையாள அரசு ஏதாவது வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதனை ஆராயலாம்.

## சிவகங்கை அரண்மனை

* 592 **வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிவகங்கையில் உள்ள அரண்மனை பழுதடைந்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், பழுது பார்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) சில பகுதிகள் நல்ல நிலையிலும் சில பகுதிகள் சுமாரான நிலையிலும் மற்றும் சில பகுதிகள் பழுதடைந்தும் உள்ளன.

(ஆ) அரண்மனை தற்சமயம் சிவகங்கை சமஸ்தான நிர்வாகத்தில் இருப்பதாலும், அரசு எடுத்துக் கொண்டு இலட்சக் கணக்கில் செலவு செய்து பழுதுபார்க்கும் அளவிற்கு அழகு வாய்ந்ததும் அல்ல என்பதாலும் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டு மன்னர்கள் கோட்டையையும் கோயிலையும் ஒன்றாக பாவித்தார்கள். அதன் அடிப்படையில் இன்றைக்கு தமிழ்



1974 மார்ச் 26]

நாட்டில் ஏராளமான கோயில்களும் கோட்டைகளும் பழுதடைந்திருக்கின்றன. குறிப்பாக, புகழ்பெற்ற இராஜேந்திர சோழன், கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயில் மிகவும் பழுதடைந்தும் சீர்கெட்டும் இருப்பதால், புகழ்பெற்ற அந்த மன்னன் இராஜேந்திரனுக்காவது மதிப்பு கொடுத்து கங்கைகொண்ட சோழபுரத்தை நம்முடைய சர்க்கார் ஏதாவது செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் நேரடித் தொடர்பில்லை. என்றாலும், கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள கோயில் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் இருப்பதன் காரணமாக அதைப்பற்றி எடுக்கவேண்டிய முழு நடவடிக்கையையும் மத்திய அரசுதான் எடுக்கவேண்டியிருக்கிறது. மாநில அரசின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று பல தடவை நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதற்கு மத்திய அரசு இணக்கம் தெரிவிக்கவில்லை.

**திரு. கா. காளிமுத்து :** அங்கே நினைவுச் சின்னம் வைப்பதற்கு செயற் குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிவகங்கைச் சீமை புகழின் காரணமாக மருது பாண்டியன் சிலை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட செயற் குறிப்பு இல்லை.

**திரு. த. சோணையா :** இந்த சிவகங்கை அரண்மனையில் தற்பொழுது அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. அது வரலாற்றுச் சிறப்புப் பெற்ற அரண்மனையாக இருப்பதினால், அந்த அரண்மனை மருதுபாண்டியர் வாழ்ந்த இடமாக இருப்பதால், மருதுபாண்டியர்களுடைய வீரத்தை நாட்டிற்கு எடுத்துக்காட்ட அங்கே இரண்டு கோட்டைகள் நிமிர்ந்திருக்கின்றன. அவைகள் இப்பொழுது சுவர் விரிந்து இருக்கிறது. அவைகள் சாய்ந்து போகாத நிலைமைக்கு அந்தக் கோட்டைகளைச் சரிக்கட்டுவதற்குத் தமிழக அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இந்த அரண்மனை சிவகங்கை சமஸ்தானத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. அரசு தலையிட இயலாது. அந்த சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள் அரண்மனை முழுவதையும்

அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட்டால் எந்த அளவுக்கு நினைவுச் சின்னம் வைக்கலாம் என்பதைப்பற்றி ஆராயலாம். அந்த அரண்மனையை நாமே எடுத்து நடத்துகிற அளவுக்கு தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு அமைந்ததாக அது இல்லை.

மருதுபாண்டியர்கள் இருந்தார்கள் என்ற புகழ் உண்டு. அது அழகுவாய்ந்த இடம் என்று சொல்வதற்கும் இல்லை. தமிழகத்தில் எல்லா ஜமீன்தார்களின் வீடுகளைக்கூட அரண்மனை என்றுதான் சொல்கிறார்கள். அங்கே இருப்பவர்கள் ராஜாக்கள் என்றுதான் அழைக்கப்படுகிறார்கள். அப்படிப் பார்த்தால் தமிழ் நாட்டில் ஊருக்கு ஊர் ஒரு அரண்மனை இருக்கிறது. அதெல்லாம் கூட ஜமீன்தார்கள் வாழ்ந்த இடம் என்றுதான் அழைக்கிறார்கள்.

அது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாக இருந்தால்தான் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் எடுத்து பராமரித்து வைக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இது இன்னும் தனியார் சொத்தாகத்தான் இருந்து வருகிறது.

*Tourism Development Corporation*

* *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the amount of profit earned by the Tourism Development Corporation in the State during 1972; and

(b) the expenditure incurred by the Corporation during 1972?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆதாயம் ஏதும் கிட்டவில்லை.

(இ) 16,32,579 ரூபாய்.

திரு. என். கே. பழனிசாமி: 1973-74-ல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதா? லாபம் ஏற்பட்டிருக்கிறதா? அதிகப்படியான செலவு ஏற்பட்டதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த வாரியம் 1971-ம் ஆண்டில் துவக்கப்பட்டு, அப்பொழுது 6 சுற்றுலா மாளிகைகளை எடுத்துக்கொண்டது. அவைகளை எடுத்துக்கொண்ட நிலையிலே அவைகளை மேலும் கவர்ச்சிகரமாக ஆக்குவதற்கு, புதுப்



பிப்பதற்கு எடுத்த எடுப்பிலேயே பெரிய அளவுக்குத் தொகை செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் காரணமாக அந்த ஆண்டில் 1972-73-ல் the loss was mainly due to provision of depreciation value ரூ. 2,26,540 என்பது expenditure on headquarters establishment என்ற அளவுக்கு வருகிறது. 1973-74-ல் இனிமேல் அப்படிப்பட்ட மூலதனச் செலவு அதிகமாக ஆக வழியில்லை. இந்த ஆண்டு செலவு போக வருமானம் ஓரளவுக்கு கூடுதலாக வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் விவரம் வந்த பிறகு தெரியக் கூடும்.

திரு. நா. வீராசாமி: சுற்றுலா இன்னும் சிறப்பாகச் செயல்படக்கூடிய வகையில் நாம் இப்பொழுது நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறோம். கப்பல் ஓட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க, அவர்கள் இங்கே வந்து போக அதன் மூலம் வருமானம் பெருக வழிவகை செய்யப்படுகிறது. ஆற்காடு நவாப் வாழ்ந்த இடத்தில், அப்படிப்பட்ட பல வீரர்கள் வாழ்ந்த இடத்தில் நினைவுச் சின்னம் எழுப்புவதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து பார்த்துச் சென்றால் அதன் மூலம் நிறைய வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அம்மாதிரி ஒரு நினைவுச் சின்னத்தை ஆற்காடு நவாப்புக்கு எழுப்ப அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர்** இரா. நெடுஞ்செழியன்: பல்வேறு நினைவுச் சின்னங்கள் அமைப்பதுபற்றி சுற்றுலாத் துறையினர் ஆராய்ந்து எந்தெந்தப் பணிகளை எந்தெந்த வகையில் எந்தெந்த இடத்தில் செய்து அந்த இடங்களைச் செம்மைப்படுத்திச் சீர்படுத்தினால் அதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் ஈர்க்கப்படுவார்கள் என்று பார்த்து இத்தகைய பணிகளை மேற்கொள்கிறார்கள். அப்படிப் பார்க்கும்பொழுது ஆற்காடு எந்தக் கட்டத்தில் வருகிறது என்பதைக் கவனிக்கவேண்டும். முன்னுரிமை வழங்கப்படவேண்டிய இடங்கள் பல இருப்பதன் காரணமாக அதையெல்லாம் பார்த்து முடித்த பிறகு ஆற்காட்டுக்கு வரவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்வதற்கு சொகுசுப் பேருந்துகளைச் சுற்றுலாத் துறையினர் விடுகின்றனர். அதை மேலும் வசதியுள்ள சொகுசுப் பேருந்துகளாக மாற்றி, அந்த சொகுசுப் பேருந்துகளில் மற்ற

மாநிலங்களில் இருப்பதைப்போல விரிவுரையாளர்களை நியமித்தால் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகள் சுற்றுப்புறத்திலுள்ள விஷயங்களை அதிகமாக அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சொகுசுப் பேருந்துகளில் விரிவுரையாளர்களை அமர்த்திட அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதற்கான ஒரு திட்டம் பற்றி சுற்றுலா வாரியம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** இந்த சுற்றுலாக் கழகம் உள்நாட்டுப் பிரயாணிகளை ஈர்ப்பதைக் காட்டிலும் வெளி நாட்டுப் பிரயாணிகளை ஈர்ப்பதில் மிகவும் கவனம் கொள்ள வேண்டும். ஏனெனில் வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களிடமிருந்துதான் பணம் அதிகமாகப் பெற முடியும். ஆகவே, வெளிநாட்டுப் பிரயாணிகளைக் கவர்கின்ற வகையில் சர்க்கார் ஏதாவது சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கத்தக்க அளவுக்கு குறிப்பிட்ட இடங்களை நாம் அந்த வகையில் சீர்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே சென்னையை அடுத்துள்ள மகாபலிபுரம், சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையிலும் உள்ள பகுதிகளில் வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற அளவுக்கு சுற்றுலாப் பயணிகள் விடுதிகளைக் கட்டுவதற்குத் தனியார்களும் முன்வந்திருக்கிறார்கள். மத்திய அரசும் ஏற்கனவே ஒரு விடுதியை நடத்தி வருகிறது. மாநில அரசின் சுற்றுலா வாரியத்தின் சார்பாகவும் அத்தகைய முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். அதற்கு அடுத்தபடியாக காஞ்சீபுரத்திற்குச் சென்று பார்த்து வரும் வகையிலே வெளி நாட்டிலிருந்து பயணிகள் வருகிறார்கள். அடுத்து, மதுரை, ராமேசுவரம், கன்னியாகுமரி முனை, கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்கள் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க இடங்கள் என்ற நிலைமையில் இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கத்தக்க அளவுக்கு எந்தெந்த இடங்களில் சூழ்நிலை இருக்கிறதோ, அந்த இடங்களில் அதிக கவனம் செலுத்தி, 2, 3 நாட்களுக்குப் பயணிகள் தங்கிச் செல்லும் வகையில் வசதிகள் வாய்ப்புகள் செய்து தருவதற்கான முயற்சிகளைச் சுற்றுலாத் துறையினரும், சுற்றுலா வாரியமும் மேற்கொண்டிருக்கின்றன.





**திரு. சி. ஆறுமுகம்:** சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும்போது சென்னையிலிருந்து காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் ஆகிய இடங்களைக் காட்டுகின்றனர். புகழ் வாய்ந்த கோதண்டராமசாமி கோவிலுக்கும், மதுராந்தகத்திற்கும் அழைத்துச் செல்வதில்லை. ஆகவே, சென்னையிலிருந்து போகிறவர்களை வழியில் மதுராந்தகம், கோதண்டராமசாமி கோவிலுக்கு அழைத்துச்செல்லவும் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வெளி நாடுகளிலிருந்து வருகிற பிரயாணிகள் கலைச்சிறப்பு, வரலாற்றுச் சிறப்பைக் காணவருகிறார்களே தவிர, பக்தியினுடைய அடிப்படையில் ஸ்தல யாத்திரை செய்ய வருவதில்லை. ஸ்தல யாத்திரைக்கு வரும்பொழுது கோதண்டராமசாமி கோவில் ஸ்தல புராணத்தை விரித்துரைக்கலாம். இப்படி வருகிறவர்கள் 2, 3 மணி நேரம்தான் அங்கே செலவழிக்கிறார்கள். ஆகவே, வரலாற்றுச் சிறப்பு, கலைச் சிறப்பு மிக்க இடங்கள் என்ற வகையில் மதுராந்தகம் கோதண்டராமசாமி கோவில் அடங்கவில்லை.

* 594 Q.– Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government and State Tourism Development Corporation to promote Thiruvanmiyur as a Tourist Centre; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. என் டென்னிஸ்:** மெரினா கடற்கரை இப்பொழுது நெருக்கடியான இடமாக மாறிக்கொண்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகள் அமைதியான இடங்களை விரும்புகிறார்கள். ஆகையால் இதை அபிவிருத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த வகையிலே திருவான்மியூர் அந்தக் கட்டத்தில் வரவில்லை. சென்னை மெரினா கடற்கரை, எலியட்ஸ் கடலோரம், சோழமண்டலம், கோவளம், கன்னியாகுமரி, மகாபலிபுரம் கடற்கரை ஆகிய பகுதிகளை விரிவுபடுத்தி, அவைகளை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத்தக்க அளவுக்கு ஆக்குவதற்கான முயற்சிகளை சுற்றுலா வாரியம் மேற்கொண்டு

வருகிறது. அதைத் தவிர மத்திய அரசின் சார்பாக ஐக்கிய நாட்டு அவையின் சார்பாக அமைக்கப்பட்ட ஒரு குழுவும் வந்து சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையில் இருக்கிற கடற்கரை பகுதிகளை எந்த வகையில் விரிவுபடுத்தி வளப்படுத்தலாம் என்பதற்கான ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக வந்து பார்த்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கையை இந்திய அரசின் மூலம் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு மத்திய அரசிடமிருந்து ஓரளவுக்கு நிதி பெற்று, மாநில அரசு ஒரு திட்டம் போட்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்தப் பகுதிகளை விரிவுபடுத்தவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அந்த வகையில் திருவான்மியூர் கவர்ச்சிகரமான ஒரு இடமாக ஆக்குகின்ற அத்தகைய செயலில் அடங்காது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, அமெரிக்கா நாட்டுக்குச் சென்று வருகிறவர்கள் 'டிஸ்னி லான்டை'ப்பற்றி பெருமையாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அமைப்பை தமிழ்நாட்டில் கடற்கரையோரப் பகுதியில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் சுற்றுலாத் துறையின் மூலமாக உருவாக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட அமைப்பு ஒன்றை உருவாக்கலாம். அதற்கு ஏராளமான செலவு ஆகும். மத்திய அரசும் மற்றவர்களும் நிதி உதவி செய்தால் அமைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அமைப்பை உருவாக்க முடியாவிட்டாலும் இப்போது 'பிளானட்டோரியம்' ஒன்றை அமைக்க தனியார் நிறுவனங்களும் சுற்றுலா வாரியமும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறார்கள். பிளானட்டோரியத்தைச் சென்னை மெரினா கடற்கரையில் ஐ.ஜி. ஆபீசுக்கு எதிரில் அமைக்க முயற்சி செய்யப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are two varieties of Tourist Centres. There are beauty centres in which there are waterfalls, natural season, etc., and the other is historical and archaeological centres. Now I find more attention and money are paid to beauty centres and not on the historical and archaeological centres. The historical centres have more permanent value than the beauty centres. May I know from the Hon. Minister for Education and Tourism whether the Government will give more attention to historical and archaeological centres?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, வரலாற்றுச் சிறப்பும்—தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறத்தக்க அளவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும், கண்கவர் காட்சிகள் நிறைந்த இடங்களையும், அழகு வாய்ந்த இடங்களையும் பார்ப்பதில் வெளிநாட்டவர்கள் நாட்டமுடையவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அவர்களைக் கவரத்தக்க— ஈர்க்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

புதைபொருள் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்க்க, வரலாற்றுத் துறையிலும் கல்வித் துறையிலும் ஆர்வமுள்ள ஒரு சிலர்தான் விரும்புவார்கள். ஆகவே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், அழகு மிக்க இடங்களைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளுக்கு வெளிநாட்டவரை ஈர்க்கின்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. சுற்றுலாத் துறை அம்மாதிரியான இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

* 595 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரத்தில் சுற்றுலா விடுதி ஒன்று கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

இராமேஸ்வரத்தில் ரூ. 6 லட்சம் செலவில் சுற்றுலா மாளிகை ஒன்று கட்டுவதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் திறந்து வைக்கப்படும். நிலம் அணுகு சாலை முதலியவற்றிற்கு மாநில அரசு வகை செய்துள்ளது. அணுகு சாலைக்காக ரூ. 1.72 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா விடுதியில் தற்போது எத்தனை அறைகள் கட்டப்பட்டுள்ளன ; என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தச் சுற்றுலா மாளிகை இரண்டு மாடி கட்டடத்தில் அமைந்திருக்கிறது. அடித்தளத்தில் குளியலறை 2, ஒருவர் தங்கும்

[1974 மார்ச் 26

அறைகள் 7, ஓய்வறை ஒன்று, முன் கூடம் அத்துடன் கடை வசதிகளும் உள்ளன. முதல் மாடியில் குளியலறையுடன் தங்கும் அறைகள் 10, 15 பேர் தங்கக்கூடிய டார்மிட்டரி--துயிலிடம் ஒன்று ஆகியவை உள்ளன. கட்டட வேலை முடிவடைந்து உள்ளது; விரைவிலே திறக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற பல்வேறு திட்டங்களைப் பற்றி அரசாங்கம் கருத்துக் கொண்டிருக்கிறது என்பது அமைச்சரவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. வெளிநாடுகளில் இருந்து வருகின்ற பயணிகளைக் கவருகின்ற வகையில் மட்டும் விடுதிகளைக் கட்டினால் லாபகரமாக இருக்காது. இங்கே இருக்கின்றவர்களுக்கும் சேர்த்து விடுதிகளைக் கட்டினால்தான் லாபகரமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி இராமேஸ்வரத்தில் உள்ள சுற்றுலா விடுதி பற்றியது. அதைப்பற்றிய கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** கேள்வி சுற்றுலா விடுதியைப்பற்றியது தானே. சுற்றுலா விடுதிகளை அமைக்கும்போது இங்கே இருக்கின்ற மக்களும் அதிக அளவில் பங்குகொள்கின்ற வகையில் இருந்தால்தான் இங்குள்ளவர்களும் பங்குகொள்ள முடியும்; வருவாய் அதிகமாகும். அதைப்பற்றி இந்த அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டும் அல்லாமல் உள்நாட்டுப் பயணிகளையும் ஈர்க்கின்ற வகையில் அமைக்க வேண்டுமென்பது தான் எண்ணம். மற்றவர்களை ஈர்க்கின்ற திட்டங்களுக்கு என்று மட்டும் சுற்றுலாத் துறையும், சுற்றுலா வாரியமும் பெரிய அளவில் பணத்தைச் செலவிட இயலாது. ஆனால் இங்குள்ளவர்கள் வசதிகளுக்கு ஏற்றவகையில் தங்கும் விடுதிகளைத் தனியார்கள் கட்டுகிறார்கள்; இப்போதும் தனியார் விடுதிகள் பல இருக்கின்றன. அதற்கு நாம் ஊக்கமளித்து வருகிறோம். குற்றாலம் டவுன்ஷிப்பின் மூலம் குறைந்த பணம் கொடுத்துத் தங்குவதற்கு ஏற்ற வகையில் தனித்தனிக் கூடங்களையும் கட்டடங்களையும் கட்டியிருக்கிறார்கள். அதைப்போல திருச்செந்தூரிலும் கட்டப்பட்டிருக்கிறது. மகாபலிபுரம், ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களில் வெளிநாட்டவர்களைக் கவரத்தக்க அளவில்



1974 மார்ச் 26]

6 இடங்களை சுற்றுலா வாரியம் அமைத்திருக்கிறது. இராமேஸ்வரம் தங்கும் விடுதியிலுள்ள அறைகளுக்கு வாடகை 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் என்ற அளவுக்குத்தான் வரும். எந்த ஓட்டல்களிலும் 15 ரூபாய், 20 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதைப்போன்ற மதுரை, திருச்சி போன்ற இடங்களிலும் சுற்றுலா வாரியத்தின் சுற்றுலாப் பயணிகள் விடுதிகள் இருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இராமேஸ்வரத்தில் கட்டப்பட்டிருக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகள் விடுதி சமுத்திரக் கரையை ஒட்டி இருக்கிறது. அங்கிருந்து சூரிய உதயத்தைப் பார்க்க வசதி இருக்கிறது. இதுவரையிலே ஜனங்கள் அங்கே நின்று சூரிய உதயத்தைப் பார்த்து வந்தார்கள். இனியும் அவர்கள் பார்ப்பதற்கு இடையூறு இல்லாமல், வசதி செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றிய நிலைமை தெரியவில்லை. தடங்கல் ஏற்படாமலிருக்க என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய முடியுமோ, அவைகளைச் செய்யலாம்.

### ஓமலூர் மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு.

*611 வினா—**திரு. வீ. செல்லத்துரை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் மருத்துவ மனையில் "எக்ஸ்ரே" (X-ray) படங்கள் எடுக்கும் கருவி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**டாக்டர் ம. மோசஸ்:** தலைவரவர்களே, இப்போது எக்ஸ்-ரே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளில் இந்த யூனிட் முழு நேரம் வேலை செய்யாமல் இருக்கிறது. எமர்ஜென்சி கேஸ்கள் வந்தால், உடனடியாக எக்ஸ்-ரே எடுத்து, சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. அப்போது இந்த யூனிட் இயங்கவில்லையானால் உடனடியாக சிகிச்சை செய்ய முடியாது. உதாரணமாக சென்னையில் ஒரு ஆஸ்பத்திரியில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு

இடத்தில் ஒரு ஆள் அடிபட்டு வருகிருர் என்ருல், அது எமர்ஜென்சி கேஸாக இருந்தால் உடனடியாக எக்ஸ்-ரே எடுத்து சிகிச்சை செய்ய முடியாமல் திங்கட்கிழமை காலேதான் எக்ஸ்-ரே எடுத்து பார்த்து சிகிச்சை செய்ய முடியும். இந்த நிலைமையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, எமர்ஜென்சி கேஸ்கள் வருவதாக இருந்தால், ஓமலூர் போன்ற வட்டப் பகுதிகளிலே கூட எக்ஸ்-ரே யூனிட் இருந்தாலும், அதிலே பணியாற்றுபவர் உடனடியாக அழைக்கப்பட்டு தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளலாம். உடனடியாக சிகிச்சை செய்வது இயலாத காரியம் அல்ல. ஏதாவது குறை இருக்குமாளுல் அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

### மாயூரம் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

*612 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இரத்தம் சேமிப்பு நிலையம் எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாதிரி நீர், ரத்த சேமிப்பு நிலையத்தின் உபயோகத்திற்கு உகந்ததாக இருக்கிறது என அண்மையில் செய்த இரசாயன, நுண்ணியல் சோதனைகளின் மூலம் முடிவாகிவிட்டது. ஆதலால் மாயூரம் அரசு மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் வெகு விரைவில் துவங்கப்படும்

### *Intensive Family Planning Programme*

*615 Q.- THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to continue the scheme of Intensive Family Planning drive during the year 1973–74 also?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அதிக அளவு ஊக்கத் தொகையுடன் பெருமளவில் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்துவது இவ்வாண்டு கைவிடப்





பட்டுள்ளது. ஆனுல், அறுவை மருத்துவத்திற்குரிய பெருவாரியான தம்பதியர் மருத்துவ மனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளத் தூண்டும் நோக்குடன் அவ்வாறு அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன்வரும் ஒவ்வொருவருக்கும் அதிக அளவு ரூ. 60 ஊக்கத் தொகை இம்மாநில அரசு அனுமதித்துள்ளபடி குடும்ப நல முனைப்புத் திட்ட இயக்கங்களை ஆட்சித் தலைவர்கள் நடத்தி வருகின்றனர்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, இந்த முனைப்புத் திட்டத்தை இந்த ஆண்டு சேர்த்து நடத்த மத்திய அரசு நிதி உதவி செய்யும் என்று எதிர்பார்த்தோம். ஆனுல் அவர்கள் 50 சதவிகிதம் தருவதாக 6 மாதங்களுக்கு முன்னுல் பத்திரிகையில் செய்தி வந்தது. மத்திய அரசு அடியோடு அதை நிறுத்தி விட்டார்கள் என்று இப்போது கேள்விப்படுகிறேம். இது குறித்து மத்திய அரசோடு தொடர்பு கொண்டு 40 சதவிகிதம் தொகையை யாவது பெறுவதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, சதவிகித செலவு என்பது குடும்ப நலத் திட்ட நிர்வாக முறையிலே ஆகிற செலவாகும். இந்த டியூபக்டமி, வாசக்டமி அறுவை சிகிச்சை களில்—ஆண்களுக்கும் பெண்களுக்கும் செய்யப்படுகின்ற அறுவை சிகிச்சைகளில்—மத்திய அரசு வழக்கம்போல் ஒதுக் கொண்டிருக்கிற தொகை ஆண்களுக்கு 35 ரூபாயும், பெண்களுக்கு 45 ரூபாயும் மட்டுமே. கடந்த இரண்டு தீவிரத் திட்டங்களில் 100 ரூபாய் அளவில் சிறப்பு ஊக்கத் தொகை வழங்க முன்வந்தார்கள். இந்த ஆண்டு அதை அடியோடு நிறுத்தி விட்டார்கள். அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி காரண மாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

ஆனுல் மாநில அரசு ஏறக்குறைய 50 லட்ச ரூபாயை தனியாக ஒதுக்கி, கடந்த டிசம்பர் மாதத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டு, ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு திங்கள் முடிய நடைபெற்ற அறுவை சிகிச்சைகளில் ஆண்களுக்கு 80 ரூபாயும், பெண்களுக்கு 85 ரூபாயும் செலவிட்டு, மேலும் ஊக்கத் தொகையாக 60 ரூபாய் வழங்கி, இத்திட்டத்தை நிறைவேற்றியது. அந்த முறையிலே ஓரளவு இந்தத் திட்டம் குறிப்பிட்ட இலக்கை அடைவதில் நிறைவேறி இருக்கிறது.

[1974 மார்ச் 26

(முற்பகல் 9.30)

சென்னை நகரில் கழிவு நீரகற்றுத் திட்டம்.

*614 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கும் பகுதிகள் எவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

1. அமைந்தகரை, அரும்பாக்கம்
2. கிண்டி, வேளச்சேரி
3. கோட்டூர் ஊரூர்
4. செம்பியம் விஸ்தரிக்கப்பட்ட பகுதி, மடுவமாநகர்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடை இல்லாத நிலைமையில் பொது மக்களின் சுகாதார வாழ்வு பாதிக்கப்படுகிறது. கொசுக்கள் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆகவே, எல்லா இடங்களிலும் பாதாளச் சாக்கடை கட்ட ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது பொதுவான குறை. எல்லா இடங்களிலும் நிறைவேற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை நகரின் புற நகர்ப் பகுதிகள் வளர்ச்சி அடைந்து வருகின்றன. அந்த வளர்ச்சிக்கேற்ப 34 லட்சத்தில். 62 லட்சத்தில் தனித்தனியாக திட்டங்கள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. பண வசதிக்கேற்றபடி அவை ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : சைதாப்பேட்டை, பழைய மாம்பலம் போன்ற பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப் பட்டும், பொது மக்களுக்குப் பயன்படாத வகையில் இருப்பதால் உடனடியாக அவற்றைச் செயல்படுத்த அரசு முன்வருமா.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு திட்டம் நிறைவேற்றப் படுகிறபோது கண்ணுக்குத் தெரியும் வகையில் சாக்கடைகள் கட்டப்படுவதைக் காணலாம். அவை நிறைவேறிவிட்டாலும் பம்பிங் ஸ்டேஷன் அமைய வேண்டும், அங்கிருந்து தண்ணீரைக் கொண்டு சேர்க்கக்கூடிய இடம் அமைய வேண்டும், அவை எல்லாம் முடிகிற நேரத்தில் இந்தத் திட்டம் செயல்பட ஆரம்பிக்கும்.



1974 மார்ச் 26]

நெல் பயிரிடல்.

*615 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சமயம் தமிழ் நாட்டில் எத்தனை வகையான நெல் பயிரிடப்படுகிறது ?

(இ) அதில் காலத்தில் எத்தனை வகை நெல் பயிரிடலாம் ?

(உ) கோடையில் எத்தனை வகை நெல் பயிரிடலாம் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ), (இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த விவர அறிக்கையில் நான்கைந்து ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கிற நெல் வகைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு புதிய நெல்வகை ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ? ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 எல்லாம் வருடம் முழுவதும் சாகுபடி செய்யக் கூடியவையாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஐ.ஆர். 8 மழை காலத்தில் பலன் தராது. ஐ.ஆர். 20 மழை காலத்தில்தான் பலன் தரும். இது அனுபவம் இதுபற்றி என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த ஆண்டு இரண்டொரு புது ரக நெல் விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடுவதாக இருக்கிறது. ஐ.ஆர். 8 தண்ணீர் குறைவாக இருக்கிற நிலையில்தான் நன்றாக வளரும். என்றாலும் எல்லா இடங்களிலும் பயிரிட முடியும்.

திரு. தி. பொன்னுமலை : கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் எந்தப் பயிர் எந்த மாதத்தில் வைக்க வேண்டும், நாற்றங்காலுக்கு எவ்வளவு நாள், எந்தந்த நேரத்தில் என்ன

@ 353-356-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 26

உரம் போட வேண்டும் என்கிற விவரங்கள் பூராவும் இல்லை. அவற்றை எல்லாம் தொகுத்து புத்தகமாகவே போட்டு, வேளாண்மைப் பணியில் ஈடுபட்டிருப்போருக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எப்போது எந்தப் பட்டத்தில் எந்தப் பயிரை வைக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. மற்ற விஷயங்கள் எதையும் குறிப்பாக உறுப்பினர் கேட்டால், நான் மனப்பாடமாகவே சொல்ல முடியும்.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள நெல் விதைகளுக்கு எல்லாம் அதிகமான ரசாயன உரம், அதிகமான தண்ணீர் தேவைப்படுகிறது. ரசாயன உரம், தண்ணீர் குறைவாக பயன்படுத்தினால் போதும் என்கிற விதை ரகங்களை கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நெல் விளைச்சல் அதிகமாக வேண்டுமென்றால், 70 கிலோ நைட்ரஜன் உரம் போட்டாக வேண்டும். தண்ணீர் 40 இஞ்சு இருந்தால் போதும், அதைச் சொட்டு சொட்டாக எப்படி அளந்து பாய்ச்சுவது. இன்றைக்குத் தண்ணீரைக் கால்வாய் வழியாகப் பாய்ச்சக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் 70 இஞ்சு வரை பாய்ச்சுகிறார்கள். இது சற்று அதிகம் என்று சொல்கிறார்கள். நல்ல விளைச்சல் வேண்டுமென்றால் 70 கிலோ நைட்ரஜன் உரம் தேவை.

**திரு. சி. ஆறுமுகம் :** சம்பா, சிறுமணி போன்ற ரகங்களில் கிடைக்கும் வைக்கோல் ஐ.ஆர். 8-இல் கிடைப்பதில்லை. வைக்கோல் உற்பத்திக்கு என்ன திட்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஐ.ஆர். 8, கரிகாலன், கருணை போன்ற ட்வார்ப் குள்ள வகைகளில் வைக்கோல் குறைவாகத்தான் இருக்கும். வைக்கோல் அதிகம் வேண்டுமென்றால் ஐ.ஆர். 20 போடலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கக் கூடிய விதைகள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உகந்ததாக இல்லை. கன்னியாகுமரி க்ளைமாடிற்கு ஒத்தாக புது ரக விதைகள் கண்டுபிடிக்க முடியுமா ?



1974 மார்ச் 26]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வேளாண்மைத்துறை மானியத்தில் இதுபற்றி கூறப்பட்டவுடனேயே, நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஏற்ற ஹையஸ்ட் யீல்டிங் வெரைடி என்ன என்று கேட்டேன். ஏ. எஸ். டி. 1 முதல் 14 ரகங்கள் விளைவிக்கலாம் என்று சொன்னார்கள். மேலும் இதுபற்றி ஆராயச் சொல்லியிருக்கிறேன். விவரம் தெரிந்தவுடன் அறிவிக்கிறேன்.

**திரு. ஏ. எம் இராஜா:** வருடம் முழுவதும் பயிரிடக்கூடிய ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, ஜெயா, பாலா போன்றவற்றுக்கு எல்லாம் நைட்ரஜன் 75 கிலோ தேவைப்படும். ஆனால் பவானிக்கு 50 கிலோ இருந்தால் போதும். குறைந்த ரசாயன உரத்தைக் கொண்டு பயிரிடக்கூடிய பவானிக்கு ஸ்பெஷல் ஊக்கம் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எந்தனை டன் ஒரு எக்கருக்கு அதிகம் உற்பத்திசெய்ய முடியும் என்பதைப் பொறுத்திருக்கிறது நைட்ரஜன் உரம் கொடுப்பது. 50 கிலோவுக்கு ஒன்றேமுக்கால் டன் விளைச்சல் கிடைக்கும். அதிக விளைச்சல் வேண்டுமென்றால் அதிக உரம் கொடுக்க வேண்டும்.

* 616 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒருபோகச் சாகுபடியிலிருந்து இருபோகச் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** 2,65,600 ஏக்கர்கள்.

* 617. வினா—**திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அதிகமாக நெல் விளைச்சல் செய்யும் விவசாயிகளுக்குப் பரிசு வழங்கும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கிராம, வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில், ஆண்டுதோறும், நெல் விளைச்சல் போட்டிகள் நடைபெறுகின்றன. பரிசுகளும், "வேளாண்மைச் செம்மல்" என்ற பட்டமும் வழங்கப்படுகின்றது.

[1974 மார்ச் 26

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, பத்து ஏக்கர், இருபது ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிற பெரிய பெரிய விவசாயிகள்தான் இந்தப் பரிசுகளைப் பெறமுடிகிறது என்று சொல்லப்படுகிறது. அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருக்கிற சிறிய விவசாயிகளுக்குப் பரிசுகள் கிடைப்பதில்லை என்பதால் அவர்களையும் ஊக்கப்படுத்துகின்ற வகையிலே சிறிய விவசாயிகளுக்கு எந்த வகையிலே உதவி செய்யமுடியும் என்பதை அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, சிறிய விவசாயிகள்கூட இதிலே கலந்துகொள்கிறார்கள். இந்தப் பரிசுத் திட்டத்திலே கலந்துகொள்வதற்கு ஒரு நுழைவுக் கட்டணம் வைத்திருக்கிறோம். அதிகம் இல்லை, ஒரு ரூபாய்—லாட்டரி சீட்டு வாங்குவதைப்போல் என்று வைத்துக் கொள்ளுங்களேன்—என்று வைத்து இருப்பதால் எந்த விவசாயியும் அந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

**திரு. ந. சோமசுந்தரம் :** அதிக விளைச்சல் செய்கின்ற விவசாயிகளுக்குப் பரிசுகள் அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பரிசுகளைப் பெறுகின்ற நிலைமை கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்குத் தெரியாமல் இருப்பதால், அவர்களுக்கு விவரம் தெரியாத காரணத்தினால், ஒரு மாவுக்கு 30 கலம் நெல் விளைவிக்கக்கூடிய விவசாயிகள்கூட பரிசுகளைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, நல்ல விளம்பரம் கொடுத்து எல்லோரும் பரிசுபெறக்கூடிய முறையிலே வாய்ப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்தப் போட்டியில் கலந்துகொள்கிறவர்கள் முன்கூட்டியே அந்தப் பிளாக்கிலே உள்ள அக்ரிகல்சர் ஆபீசரிடத்திலோ அல்லது எக்ஸ்டன்ஷன் ஆபீசர் பார் அக்ரிகல்சரிடத்திலோ தெரிவிக்க வேண்டும். விளைந்த பிறகு தெரிவித்தால் பயன் இல்லை.

எல்லாக் கிராமங்களிலும் விளம்பரப் படுத்தப்படுகிறது. நோட்டீஸ் மூலமும் தெரியப்படுத்தப்படுகிறது. விளம்பரத்திற்கு என்ன செய்யவேண்டுமோ, அதன் மூலமும் விளம்பரம் செய்யப்படுகிறது. சில இடங்களில் சினிமா படங்கள் மூலம் காட்டப்படுகிறது. இதைவிட அதிகமாக விளம்பரம் தேவையில்லை



1974 மார்ச் 26]

என்று கருதுகிறேன். ஏராளமான விவசாயிகள் போட்டியிலே கலந்துகொள்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்த வரையில் நன்றாக இதைப்பற்றி எல்லோரிடமும் சொல்லலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister the highest yield recorded in this year and the name of the gentleman who has got that highest yield?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கடைசியாக எடுக்கப்பட்ட தகவல் 1972-ல் தான் கொடுக்கப்பட்டது. முதல் பரிசு பெற்றவர் கே. பி. துரைசாமி, ஈரோடு தாலுகா, விளைவித்தது 4618 கிலோ. இரண்டாவது பரிசு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பி ரெட்டியார் 3642 கிலோ. தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நஞ்சப்பகவுண்டர் மூன்றாவது பரிசைப் பெற்றார் அவர் விளைவித்தது 2,732 கிலோ.

## தெளிப்பான்கள் வாங்க மானியம்.

*618 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தீவிர சாகுபடி நெல்வகைகளைப் பயிரிடும் உழவர்களுக்கு அவர்களே ஸ்பேயர்களை விலைக்கு வாங்கிக்கொள்ள பாதி விலையை மானியமாகக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ஒன்றியங்களின் மூலமாக ஸ்ப்ரேயர்கள் தீவிர நெல் சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. வாடகைக்குத் தரப்படுகிற காரணத்தினாலே அடிக்கடி பழுதடைந்தும் விவசாயிகள் சரியான முறையிலே வைத்துக்கொள்ளாத நிலையும் இருக்கின்றன. அவர்கள் சொந்தமாக வைத்துக்கொண்டால் சரியான பராமரிப்பு இருக்கும். இப்பொழுது பருத்தி, கரும்பு போன்றவைகளுக்கு

[1974 மார்ச் 26

அப்படிப்பட்ட சலுகைகள் தரப்படுகின்றன. ஆகவே நெல் வகைகளுக்கும் அப்படிப்பட்ட சலுகைகளைத் தருவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கொடுக்கப்படுகிற ஸ்ப்ரேயர்கள் இனாமாகவோ அல்லது மானியமாகவோ கொடுக்கப்படுவதில்லை. 17 ஆயிரம் பவர் ஸ்ப்ரேயர்கள் இருக்கின்றன. இந்த ஆண்டும் ஒரு ஆயிரம் அதிகமாகக் கூட்டுவதாக இருக்கிறோம். 72 ஆயிரம், கையினால் தெளிக்கின்ற, கைத் தெளிப்பான்கள், இருக்கின்றன. அந்த அந்த வட்டாரங்களில் வைத்துக்கொண்டு குறைந்த பட்ச வாடகைக்குக் கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்துகொண்டு வருகிறோம்.

## அம்பாசமுத்திரம் அரிசி ஆராய்ச்சி நிலையம்

*619 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அம்பாசமுத்திரத்தில் உள்ள அரிசி ஆராய்ச்சி நிலையம் தற்சமயம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி பற்றிய விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இது அம்பாசமுத்திரத்தைப் பொறுத்தது, அதுபற்றிய விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் விளைவாக மக்களுக்கு என்ன என்ன நன்மைகள் கிடைக்கின்றன என்பதை ஆராய்வதற்காகப் புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டனவா ? இந்த ஆராய்ச்சியில் செலவழிக்கப்படும் செலவு பயனுள்ளதாக இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அம்பாசமுத்திரத்தில் நடத்தப்படுகிற ஆராய்ச்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தொகுதிக்கு மிக அருகிலே அது இருக்கிற காரணத்தினாலே பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 356-358-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 26]

அவர்கள் நல்ல முறையிலே கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கிறார்கள். ஏ.எஸ்.டி. 1-லிருந்து ஏ.எஸ்.டி. 14 வரையிலே கார் என்று சொல்வார்கள், அதாவது குறுவை கண்டுபிடித்திருக்கிறார்கள். அம்பாசமுத்திரம் இரண்டு ரக நெல் 3 டன்னுக்குக் குறையாமல் விளைகிறது ஒரு ஏக்கருக்கு.

அது மட்டுமல்லாமல் 110 நாட்களுக்குள் விளைகிறது. மிக நல்ல அரிசி, செக்கச் செவேரென்ற அரிசி, ப்ளட் ரைஸ், ரத்தத்திற்குத் தேவையான நல்ல அரிசி, அதை மற்ற மாவட்டங்களும் பரப்ப வேண்டுமென்று கருதுகிறோம் அம்பாசமுத்திரம் 1 ரக நெல் நீண்டகாலமாக தாம்பிரவருணி நதி தீரத்திலே பயிரிடப்பட்டு வருகிறது. அதைவிட அம்பாசமுத்திரம் இரண்டு ரக நெல்தான் மிக நல்லது. நல்ல விளைச்சல் கொடுக்கக்கூடியது. குறைந்த நாளிலே விளையக்கூடியது. ஆனால் கார் காலமாக இருந்தால்தான் விளையும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக நாம் கண்டுபிடித்து இருக்கின்ற உண்மைகளை விவசாயிகள் எல்லோரும் நல்ல முறையிலே அறிந்து கொள்ளக்கூடிய முறையில் என்னென்ன முறைகள் மூலமாக அரசாங்கம் அவர்களுக்குத் தெரிவிக்கின்றது, தனிப்பட்டவர்கள் சிலர் அபரிமிதமான விளைச்சலைச் செய்து பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் கையாண்ட முறைகளையும் மற்ற விவசாயிகளுக்கு தெரிவிக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அம்பாசமுத்திரம் ரகத்தைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அது மட்டுமல்லாமல், சினிமா படங்கள்மூலமாக விளம்பரப்படுத்த 2 லட்சம் ரூபாய் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்கிறோம், அதை அவர்கள் எல்லாம் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். சினிமாப் படம், துண்டுப் பிரசுரம், புத்தகம் இவைகளின் மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. குறிப்பாக அம்பாசமுத்திரம் ரகங்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அம்பாசமுத்திரம் 2 அல்லது 1வது ரக நெல்லில் இருக்கிற விசேடம் என்ன என்றால், மேலே இருக்கிற உமி மிகச் சன்னமாக இருக்கும். தஞ்சையைப்போல் திக்காக இருக்காது. சன்னமாக இருப்பதால் 100 டன் நெல்லுக்கு 75 டன்

[1974 மார்ச் 26

## மாயூரத்திற்குப் புதிய பெயர்.

அரிசி கிடைக்கிறது. அதாவது அவுட் டர்ன் அதிகமாக வருகிறது. அதனால் அதை மற்ற மாவட்டங்களுக்கும்கூடப் பரப்பலாம் என்ற கருத்தைத் தெரிவித்தேன்.

* 620 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்தின் தற்போதைய பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கக் கோரி மாயூரம் நகராட்சி 1973 ஆகஸ்டு மாதத்தில் தனது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாயூரத்தின் தற்போதைய பெயரை மயிலாடுதுறை என மாற்றி அமைக்கக் கோரி மாயூரம் நகராட்சி அதனுடைய எண். 285, 3—8—73 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருக்கிறது. மாயூரம் நகராட்சி அதுகுறித்து பொதுமக்களுடைய ஆட்சேபணை கேட்கப்படவில்லை என்று கூறி யிருக்கிறது. வருவாய்த் துறை ஏடுகளிலே பெயர் மாற்றத்தைப் பதிவுசெய்யவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதுபற்றிக் கருத்துரை வழங்குமாறு கேட்கப் பட்டிருக்கிறார். அதுபற்றி அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பல ஊர்களுடைய பெயர்கள் பண்டைக் காலத்தையொட்டி அமைந்த பெயர்களாக இருக்கின்றன, அப்பொழுது இடப்பட்ட பெயர்கள் இன்றைய மக்களின் சிந்தனைக்கும் கருத்துக்கும் பொருத்தமாக இல்லாத காரணத்தினால்—சில ஊர்களினுடைய பெயர்கள் காலத்தால் திரிந்தும் வேறு பெயர் மாறியும் இருக்கின்ற காரணத்தினால்—உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் எனது பகுதியாகிய பள்ளப்பட்டி என்ற பெயரை எடுத்துக்கொள்ளலாம், இந்தக் காலத்து மக்களின் கருத்துக்கும், சிந்தனைக்கும் கௌரவத்திற்கும் உகந்ததாக இல்லை. அப்படி உள்ள இடங்களிலே எல்லாம் மொத்தமாக—ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு ஊருக்கும் பெயர்மாற்றம் செய்வதால் வருவாய்த் துறைக்கு அதிக செலவாகும் என்ற காரணத்தினால்



1974 மார்ச் 26]

பல சிக்கல்கள் ஏற்படக்கூடும்—எந்த எந்த ஊர்களிலிருந்து மக்கள் அந்த அந்த ஊர்களினுடைய பெயர்களை மாற்ற வேண்டுமென்று சொல்கிறார்களோ, அவற்றையெல்லாம் ஒரே தடவையில் மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகையாலே என்பது மாறி இன்றைக்கு புதியன கழிதலும் பழையன புகுதலும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பழையவைகள் அனைத்தையுமே நீக்கிவிடாமல் புதிய அனைத்தையுமே எடுத்துக்கொள்ளாமல் அவ்வப்பொழுது பரிசிலித்து தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

## மதுரை மாநகராட்சிக்குக் கட்டடம்.

* 621 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்குப் புதிதாகக் கட்டப்படும் கட்டடத்தின் மொத்த மதிப்பீடு என்ன ?

(இ) இதுவரையிலும் நடந்து இருக்கும் வேலையின் மதிப்பென்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) மதுரை மாநகராட்சிக்கு புதிதாகக் கட்டப்படும் கட்டிடத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 70.70 இலட்சம் (ரூபாய் எழுபது லட்சத்து எழுபதினாயிரம்).

(இ) டிசம்பர் 1973 முடிய நடந்து இருக்கும் வேலையின் மதிப்பு ரூபாய் 1,79,735 (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து).

**திரு. த. சோனையா :** தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியினுடைய கட்டிடம் அஸ்திவாரம் இட்ட அளவோடுதான் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அந்தக் கட்டிடத்தை வேகமாக முடிப்பார்கள் என்று மதுரை மாநகரத்து மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே, அந்தக் கட்டிடத்தைச் சீக்கிரமாக முடிப்பதற்கும், இந்த ஆண்டு முடிவடையும் என்று காலவரையறுத்துச் சொல்வதற்கும் அரசால் இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவரவர்களே, அடிக்கல் போடுவதற்கு 2,79,865 ரூபாய் குறிப்பிட்டு அதற்காகத் தனி ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிக்கல் வேலை முடிக்கப்பட்டு, மேல் வேலை இப்பொழுது துவக்கப்பட்டிருக்கிறது. வடக்குப் பகுதியில் தூண்கள் மேற்கூரை உயரத்திற்கு எழுப்பப்பட்டிருக்கிறது. மேலும் துரிதமாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தக் கட்டிடம் ஒரு குளத்தின் உள்ளே அமைந்திருக்கிறது. எனவே, மழைக்காலங்களில் அதிகமாகத் தண்ணீர் தேங்குகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, லெவலிங் போன்றவைகளுக்கு அதிகமாகப் பணம் செலவழிக்க வேண்டியிருக்குமே, அதற்கு ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, அதை உத்தேசித்துத்தான் அடிமட்ட வேலைக்காகத் தனியாகத் திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டம் முடிந்திருக்கிறது. மேல் மட்டத்திற்கான திட்டங்கள் அளிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. கட்டிடத்திற்கு எந்தவிதமான கோளாறும் ஏற்படாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்தக் கட்டிடம் குளத்தில் கட்டப்படுகிறது. கட்டிடம் முடிந்த பிறகு தண்ணீர் விடப்படுமா? அல்லது கட்டிடம் மட்டும்தான் நிற்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, அது அந்த நேரத்தைப் பொறுத்தது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மதுரையிலே ஏற்கனவே உள்ள தெப்பக்குளத்தைப்போல் இந்தக் கட்டிடமும் தண்ணீருக்கு நடுவிலே ஆழமான இடத்திலே அமைய வேண்டுமென்று திட்டமிட்டுத்தான் அந்தக் கட்டிடம் அப்படி அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே அந்த முயற்சிகள் நடைபெறுமென்று நான் கருதுகிறேன்.





**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, அந்தக் குளத்திலே மதுரை மாநகராட்சிக் கட்டிடம் கட்டப்படுகிறது. இப்பொழுது விஞ்ஞான நாகரீக காலத்திலே, மற்ற இடங்களில் ஏர் கண்டிஷன் என்று செய்து கொள்கிறார்கள். இதில் இயற்கையாகவே சுற்றித் தண்ணீர் இருப்பதால் ஏர்கண்டிஷன் அறையைப்போல் அலுவலாளர்களுக்குக் குளிர்ச்சி எந்த நேரத்திற்கும் இருக்கும் என்பதால், அதைச் சுற்றிலும் தண்ணீரை நிரப்பி அதை ஏர்கண்டிஷன் போன்ற அளவிற்குச் செய்வார்களா? மேலும், இந்தக் கட்டிடம் எந்த ஆண்டிற்குள் முடியும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன பதிலைக் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கவில்லை என்று எண்ணுகிறேன்.

*Labour dispute in Addison and Company*

* 622 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken by the Government to settle the dispute between workers and management in Addison & Company, Madras?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த அடிசன் கம்பெனியில் தொழில் தகராறு ஏற்பட்டு, அதனால் வாலண்ட்ரியாக 333 பேர்களும், கம்பெனி டெர்மினேட் செய்ததால் 233 பேர்களும் வேலையிழந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கம்பெனி பவுண்டரியே மூடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். டிசம்பர் மாதம் 10-ஆம் தேதி மறுபடியும் அந்த பவுண்டரி திறக்கப்பட வேண்டுமென்றும், வேலையிழந்த தொழிலாளர்களை 'ரீ-இன்ஸ்டேட்' செய்ய வேண்டுமென்று லேபர் ஆபீசர் முன்பு அந்த விஷயம் இருப்பதாக அறிகிறேன். இந்தியாவிலேயே மிகவும் முக்கியமான பவுண்டரி. எனவே, இதைத் திறக்கும் முறையிலே சர்க்கார் ஆதரவு கொடுத்து, மறுபடியும் பரிசீலனை செய்கிறார்களா? அந்தப் பரிசீலனை எந்த அளவில் இருக்கிறது என்பதையும் அறிவிப்பார்களா?

@ 359-362-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஒரு சின்ன பிரச்னையிலே எழுந்த தகராறின் விளைவாகப் பெரிய பவுண்டரியே மூடப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தினர் மீண்டும் அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே உள்ள தொழிலாளர்களும் மற்ற வேலைக்குப் போய்விட்டதாக என்னிடத்திலே தகவல்கூட இருக்கிறது. இதிலே மீண்டும், அரசைப் பொறுத்தவரையில், ஒரு லேபர் ஆபீசர் முன்னிலையில் இதை வைத்து ஏதாவது செய்ய முடியுமா என்ற நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, விவர அறிக்கையில் 65 பேர்கள். Retired on voluntary basis என்றும், டெர்மினேஷன் 233 பேர்கள் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் ஒரு சின்ன பிரச்னைக்காக ஆரம்பித்தது என்று சொன்னார்கள். வேண்டுமென்றே, திட்டமிட்டு, இந்தச் சின்னப் பிரச்னைக்காகக் காத்துக்கொண்டிருந்து, ஒருவர் நீக்கப்பட்டார் என்பதற்காக சென்ற வருஷம் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி வேலை நிறுத்தம் ஏற்பட்டு, 25-ஆம் தேதி லாக்-அவுட்டை வேகமாகச் செய்துவிட்டு, திட்டமிட்டு, இதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, பிறகு வேண்டுமென்று மூடப்பட்டிருக்கிறது. இப்படிப் பாதிக்கின்ற வகையில் தொழிலாளர்களுக்கு விரோதமான போக்கைக்கொண்டிருக்கின்ற இந்த நோய் மற்ற தொழில்களிலும் பரவலாக வரக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக உள்ளதா? ஏனென்றால் இப்படியே விட்டுவிட்டால் மற்றத் தொழிலதிபர்களும் இதைக் கையாள்வார்கள். எனவே, இந்தப் போக்கை மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டவட்டமாக ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அந்தக் கம்பெனியை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்குத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் தொழிலாளர் நல விரோத அரசு அல்ல என்பதை மட்டும் உறுதியாக, திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் என் சின்ன பிரச்னையால் வந்தது என்று சொன்னேன் என்றால், இரண்டு சாராரும் இப்படிப்பட்ட பிரச்னைகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக அறிவித்தேனே தவிர வேறொன்றுமில்லை. இப்படிப்பட்ட சின்னத் தகராறுகளினால் பெரிய விளைவுகள் ஏற்படாத வகையில் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## *Textile workers in Coimbatore*

623 Q—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Committee appointed by the Government to examine the grievances of textile workers of Coimbatore has submitted its report; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(ஆ) இவ்வறிக்கை அரசின் ஆய்வில் இருக்கும்பொழுது பஞ்சாலைத் தொழிலாளர்களின் சார்பாக பெரும்பாலான தொழிற் சங்கங்கள் தங்களது கோரிக்கையான அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி முதலியவைகளின் மாற்றத்தை வலியுறுத்தி பஞ்சாலை நிர்வாகத்தினருக்கு வேலைநிறுத்த அறிவிப்புகளைக் கொடுத்தது. தொழிலாளர் துறை ஆணையரின் சமரச பேச்சுவார்த்தைகள் உடன்பாட்டுக்கு வழிவகுக்காததால் தொழில் தகராறுகள் சட்டம் 1947 (மத்தியச் சட்டம் XIV 1947) பிரிவு -ன்கீழ் அரசு ஒரு சிறப்பு தொழிற் தீர்ப்பாயம் அமைத்தது. ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியான திரு. ஆர். சதாசிவம் அச்சிறப்பு தொழிற் தீர்ப்பாயமாக நியமிக்கப்பட்டு மேற்கூறப்பட்ட தொழிற் தகராறு தீர்ப்புக்காக விடப்பட்டது. இம்மாநிலத்தில் பெரும்பாலான பஞ்சாலைகளில் 1—2—1974 முதல் பொது வேலைநிறுத்தம் தொடங்கியது. பெரும்பாலான நிர்வாகத்தினருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே 28—2—1974 அன்று ஒரு இரு தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. பி அவ்டு சி மில்ஸ், தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை நீங்கலாக, 1—2—1974 முதலும் அதன் பிறகும் அடிப்படைச் சம்பளம் மற்றும் பஞ்சப்படி முதலிய கோரிக்கைகளின் மீது வேலைநிறுத்தம் நடைபெற்ற பஞ்சாலைகளில் 1—3—1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் 7—3—1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

பி அண்டு சி மில்ஸ் சம்பந்தமாக 8-3-1974-ல் ஒரு உடன்பாடு கையெழுத்தாகி 11-3-1974 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி: சார், அருணகிரி கமிட்டியின் முன்னுரையில் தொழிலாளர்களுக்கு, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக 400 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இன்றைக்கு 5 ரூபாய் மட்டும் கொடுத்திருப்பதால் மறுபடியும் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடந்து, முடிவில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும்பொழுதே 'அட்ஜூடிகேஷனுக்கு' அனுப்புவதற்கு காரணம் என்ன? மாண்புமிகு முதலமைச்சரவர்களோ அல்லது லேபர் மினிஸ்டர் அவர்களோ நேரடியாக தொழிலாளர்களைக் கூப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு என்ன தடங்கல் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அந்த அறிக்கை வந்தது, ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது, அதற்குப்பிறகு பேச்சுவார்த்தை நடந்தது என்று உறுப்பினரே சொன்னார்கள். அதற்குத்தான் நாங்களும் கவலைப்படுகிறோம். அறிக்கை வந்தது, பேச்சுவார்த்தை நடந்தது, அது முறிந்து விட்டது என்ற பிறகு ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுத்தால், அது பொருத்தமாக இருந்திருக்கும். முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடக்காததுதான் இதற்குக் காரணம்.

## கோயில்பட்டி பூவணநாதசாமி கோயில்

*609 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியிலுள்ள பூவணநாதசாமி தேவஸ்தானத்தில் தற்போது எத்தனை அறங்காவலர்கள் உள்ளனர்?

(இ) அவர்களில் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?





மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) இக்கோயிலுக்கு ஓர் அரிசன அறங்காவலர் உட்பட ஐவர் அறங்காவலர்களாக இருந்தனர். இவர்களில் நால்வரின் பதவிக் காலம் முடிவுற்றதால், தற்போது ஒருவர் மட்டும் அரிசன வகுப்பைச் சேராதவர் அறங்காவலராக இருக்கிறார். காலியாக உள்ள பதவிகளை நிரப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்போது அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அறங்காவலராக நியமிப்பது பற்றியும் கவனிக்கப்படும்.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவரவர்களே, அறங்காவலர்களின் பதவிக்காலம் முன்பு ஐந்தாண்டுக்காலமாக இருந்தது. இப்பொழுது அதை மூன்றாண்டுகள் என்று குறைத்ததற்குக் காரணம் என்ன? மீண்டும் ஐந்தாண்டுகள் என்று ஆக்குவதற்கு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மூன்றாண்டுக்காலத்திலே சிறந்த முறையிலே பணியாற்றலாம் என்ற நோக்கத்தில்தான் அப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. அது மூன்றாண்டுகள் என்று தொடர்ந்து இருப்பதற்குத்தான் அரசு விரும்புகிறது.

## *Coolers for sale of milk*

*610 Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Dairy Development Corporation has drawn up a scheme in recent times to provide Milk Coolers on hire purchase to private persons for the sale of its milk and milk products in Madras; and

(b) if so, the details of the scheme?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) செய்தித்தாள்களில் சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டது. ஒரு சிலரே இதற்குப் பதில் அனுப்பினர். மேற்கொண்டு ஆய்வு செய்த பிறகு இத்திட்டம் கைவிடப்பட்டது. வசதியுள்ள இடங்களில் பொதுமக்களுக்கு பால், பால்பொருட்களை விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு பால்வள நிறுவனத்துறை மூலமாக குளிர் சாதனக் கருவிகளை ஏற்படுத்தியுள்ளது.

[1974 மார்ச் 26

**திரு. என். கே. பழனிசாமி:** சார், தனிப்பட்டவர்களிடத்தில் விற்பனைக்கு விடுவதால் 1 ரூபாய் 20 காசு, 1 ரூபாய் 30 காசு என்று வாங்கப்படுவதால், அதிகப்படியாக விற்றால்தான் கட்டுப்படியாகும். எனவே, சர்க்காரே எடுத்து, அம்பத்தூர் போன்ற இடங்களில் பால் உற்பத்தி ஸ்தாபனம் ஏற்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. மூன்று விதமான பால் இருக்கிறது, ஆர்டினரி மில்க், டபிள் டோன்ட் மில்க், டோன்ட் மில்க் என்று இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, சுகாதார முறையிலே நல்ல பாலை ஜனங்களுக்கு விநியோகிக்கும் முறையிலே அம்பத்தூர் திட்டம் முதலியவற்றில் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, தனியாரிடம் கொடுத்து விநியோகம் செய்வது என்ற திட்டம் ஏற்கெனவே கைவிடப்பட்டது. தனியாரிடத்தில் கொடுக்கிற நேரத்தில் கலப்படம் செய்வதை கண்டுபிடிப்பது கஷ்டம். இரண்டாவது நாம் முடிவு செய்கின்ற விலைக்கு விற்பார்கள் என்று சொல்ல முடியாது. அதிகமான விலைக்கு விற்பார்கள். கெட்டுப் போன பாலை என்ன செய்வது என்ற திகைப்பு வேறு அவர்களுக்கு ஏற்படும். இப்படி பல்வேறு பிரச்னைகள் இருப்பதால் தமிழ்நாடு பால்வள வாரியத்தின் மூலமாக ஆங்காங்கே குளிர் சாதன கருவிகளை வைத்து இன்றைக்கு நகரங்களில் பல இடங்களில் கொடுத்து வருகிறோம்.

அதேமாதிரி அம்பத்தூரிலும் வைக்க வேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கிறது. இரண்டாவது பால் பண்ணை வேலை முடிந்தவுடன் இதையும் அரசு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



974 மார்ச் 26]

## 2. நடைமுறைக் கேள்வி

### அதிக துணை வினாக்கள் கேட்க வாய்ப்பு தருவது குறித்து

**திரு. எம். சுரேந்திரன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கேள்வி நேரத்தின்போது 623 ஆம் நம்பர் பஞ்சாலை சம்பந்தமான கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பின்னால் முதலமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள். நேரம் இடம் தராததால் ஒரு சப்ளிமெண்டரி கேள்வி கேட்கக் கூட உறுப்பினருக்கு இடம் தரப்படவில்லை. ஆகவே, முதலமைச்சர் சொன்ன பதில் அங்கே நின்று விட்டது. அதனால் இந்த கேள்வியின் தன்மையை ஒன்றும் இல்லாமல் செய்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

**திரு. நா. ரவீசாமி:** இந்தச் சட்டமன்றத்தில் ஆளும் கட்சி சார்பில் 173 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். விவாதமானாலும் கேள்வி நேரமானாலும் எங்கள் தலைவர் பெருந்தன்மை காரணமாக எதிர்க்கட்சிக்காரர்களுக்கு அதிக நேரம் தருகிறார்கள். இன்றைக்கு கேள்வி நேரத்தில் 65 துணைக் கேள்விகள் கேட்கப்பட்டன. அதில் ஆளும் கட்சிக்காரர்கள் 20 கேள்விகள் கேட்கத்தான் தலைவர் அவர்கள் அனுமதி தந்தார்கள். இப்படி ஆளும் கட்சிக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டால் ஏதோ ஆளும் கட்சி செயல்படாத முறையில் இருப்பதாக பொதுமக்கள் எண்ணுவார்கள். எனவே கேள்வி நேரத்திலாவது ஆளும் கட்சிக்காரர்களுக்கு அதிக நேரம் அனுமதி வழங்கப்படுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆளும் கட்சி பதில் சொல்லி செயல்பட்டால் போதும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய வீராசாமி அவர்கள் 20 கேள்விகள் கேட்கத்தான் ஆளும் கட்சிக்காரர்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். கேள்வி நேரத்தில் தான் பல விஷயங்களை அமைச்சர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. அமைச்சர்களிடமிருந்து விரிவாக பதில் கிடைக்கிறது. முதலமைச்சர் அவர்களும் அதே முறையில்தான் சொல்லியிருக்கிறார். ஆகவே தலைவரவர்கள் உறுப்பினர் சொன்னார் என்பதற்காக கேட்டுவிடக்கூடாது என்று எதிர்க்கட்சி சார்பில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் ஒன்றுமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இது நம்முடைய பேரவை சம்பந்தப்பட்டது. நம் பேரவையில் நிகழ்ச்சி அத்தனையையும் குறிப்பெடுக்க பத்திரிகையாளர்களுக்கு நாம் இடம் ஒதுக்கி இருக்கிறோம். இடம் ஒதுக்குகிற பிரச்னை பற்றி . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இடம் கொடுக்கிறது எல்லாம் அட்வைசரி கமிட்டியிடம் இருக்கிறது. பேரவைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

### 3. கவன ஈர்ப்பு

**(அ) எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மாணவிகள் மூன்றாவது கால கட்டணத்தை செலுத்த வேண்டுமென கல்லூரி நிர்வாகம் வற்புறுத்தலும் அதனால் மாணவிகளுக்கு ஏற்பட்டுள்ள அல்லலும் குறித்து.**

THIRU H. V. HANDE : I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the hardship caused to the students of S.I.E.T. Women's College as a result of the management of the College claiming Rs. 80 for the third term college fees from each student.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அண்மைக் காலம் வரை தனியார் கல்லூரிகளின் கணக்குகள் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஒப்புதல் பெற்ற தனிப்பட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டு வந்தது. இந்த முறையை மாற்றி தனியார் கல்லூரிகளின் கணக்குகளை இனி கல்வித் துறை தணிக்கை பிரிவு தணிக்கை செய்யும் என்று அரசு ஆணையிட்டது. இதற்கேற்ப எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியின் கணக்குகளை கல்வித் துறைத் தணிக்கைப் பிரிவு சரிபார்க்கும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்தினர். ஆனால் நிர்வாகம் இதற்கு



ஒப்புக்கொள்ளவில்லை. மேலும் துறை தணிக்கையாளர்களை கல்லூரிக்கு அனுப்ப வேண்டாம் என்றும் நிர்வாகம் தெரிவித்தது. இப்பொருளில் அரசு ஆணை வரும் வரை, புகுமுக வகுப்பு நட்ட ஈட்டு மானியத்தை எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரிக்கு வழங்காமல் இருப்பதாக இயக்குநர் தெரிவித்தார்.

அரசு இப்பொருளில் ஒரு முடிவெடுக்கு முன்னர் மூன்றாவது கால கட்டணமாகிய ரூ. 80-ஐ உடனே செலுத்த வேண்டும் என்று கல்லூரி மாணவிகளுக்கு கல்லூரி முதல்வர் ஒரு அறிக்கை அனுப்பினர். மாணவிகள் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து இத் தொகையைப் பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

மாணவிகள் அவதிக்குள்ளாகக்கூடாது என்று அரசு விரும்பியதால் புகுமுக வகுப்பு நட்ட ஈட்டு மானியத்தைக் கல்லூரிக்கு வழங்கும்படி கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். மேலும் கல்வித் துறை தணிக்கைப் பிரிவின் தணிக்கைக்கு நிர்வாகம் ஒப்புக்கொண்டால்தான் மானியம் இனி வழங்கப்படும் என்று நிர்வாகத்திற்கு அறிவுறுத்தும்படியும் கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி புகுமுக நட்ட ஈட்டு மானியம் கல்லூரிக்கு வழங்க முயற்சி எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே மாணவிகள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில் மாணவிகள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் கல்லூரியில் அவர்கள் இன்னும் வற்புறுத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதற்காக சுற்றறிக்கை கூட அனுப்பி இருக்கிறார்கள். அதன் நகல் கூட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி இருக்கிறேன். அதில் 1973-74க்கு மூன்றாவது டர்முக்கு இன்னும் சேர வேண்டிய சப்சிடி பணம் வந்து சேரவில்லை. ஆகவே திட்டவட்டமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். வேறு வகையில் மற்ற கல்லூரிகளிலும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே

வாக்குறுதி கொடுத்தாலும் அங்கே நடைமுறையில் வேறுமாதிரி இருக்கிறது. ஆகவே இதற்குப் பரிகாரம் காணும் வழியில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரி முதல்வர் அப்படி ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். தணிக்கையாளர்களுக்கு இடம் தராத வரையில் இந்த நட்ட ஈட்டு மானியத் தொகை தர முடியாது என்று கொண்டபோது உள்ள நிலை அது.

மாணவிகள் தரவேண்டிய கட்டணத்தை உடனடியாக அனுப்புமாறு கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுவிட்டார். ஆகவே, இனி மாணவிகள் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. மாணவிகளுக்கு உரிய கட்டணம் உடனே போய்ச் சேரும். போய்ச் சேராவிட்டால் உடனடியாகச் சேருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே அந்த அறிக்கையைப் பார்த்து மாணவிகளுக்குத் தொல்லை ஏற்படக்கூடாது என்பதுதான் அரசின் எண்ணம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதற்காக ஒரு நோட்டிபிகேஷன் போட்டுவிட்டால் மாணவிகள் அறிந்துகொள்ள முடியும். இல்லாவிட்டால் அவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. அப்படி ஒரு நோட்டிபிகேஷன் போட்டுவிட்டால் சௌகரியமாக இருக்கும். இதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிச் செய்ய முடியுமானால் அப்படி ஒரு அறிக்கை விடப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பேரவைத் தலைவரவர்களே, பேரவையில் நடக்கின்ற விவரங்களை எழுதிக்கொள்வதற்கும் அதனால் மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கும் இங்கே குறிப்பெடுக்க பத்திரிகையாளர்கள். . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில்தான் பேச வேண்டும். வேறு ஒன்றையும் பேசக் கூடாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** என் கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில் அதை நான் படிக்க விரும்பவில்லை.



## (ஆ) நிலக்கரிப் பற்றுக்குறையும், சிமெண்ட் உற்பத்தி பாதிப்பும் குறித்து.

THIRU G. R. EDMUND : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the adverse effect on the production of cement in this State due to shortage of coal and steps to be taken in this matter.

**திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் :** தலைவர் அவர்களே, நிலக்கரி பற்றுக்குறை காரணமாக திருச்சி மாவட்டம், டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலையில் ஏற்கனவே ஒரு யூனிட் மூடப்பட்டு மற்ற இரண்டு யூனிட்டுகளும் மூடப்படும் தறுவாயில் இருப்பதால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழக்கும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான தீர்மானத்தை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டில் உள்ள சிமிட்டி ஆலைகளில் கடுமையான நிலக்கரிப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. நிலக்கரியும் உலை எண்ணெயும் கிடைக்காமையால் சிமிட்டி ஆலைகளில் உற்பத்தி கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது. இம் மாநிலத்தில் 7 சிமிட்டி ஆலைகளுக்கு மாதந்தோறும் 84,900 டன் நிலக்கரி தேவைப்படுகையில் 1973 அக்டோபரிலிருந்து 1974 பிப்ரவரி வரை அவற்றுக்கு மொத்தம் 2,29,612 டன் நிலக்கரி மட்டுமே கிடைத்துள்ளது. இவ்வரசு இதுகுறித்து இந்திய அரசுடன் கலந்தாலோசித்து வருகிறது. இத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, இதனால் சிமிட்டி ஆலைகள் மூடப்படும் நிலை, அதன் விளைவாகப் பெருமளவில் வேலை வாய்ப்பின்மை ஏற்படுதல், மற்றும் தமிழ்நாட்டிலும், சிமிட்டிக்கு இம் மாநிலத்தை நம்பியிருக்கும் பிற மாநிலங்களிலும் பெரும் வளர்ச்சித் திட்டங்கள் முடக்கமடைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் இவை குறித்து இந்திய அரசுக்கு விளக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சிமிட்டி ஆலைகளுக்குப் போதிய நிலக்கரி கிடைக்கச் செய்வதற்கும், நிலக்கரியை எடுத்துச் செல்வதற்குப் போதிய ரயில் சரக்கு வண்டிகள் கிடைக்கச் செய்யவும், நிலக்கரி குறைவாக வழங்கப்படும் நிலையில் உலை எண்ணெய் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யவும், தொழிற்சாலைகள் ஆதாயம் தரும்

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 26

வகையில் செயல்பட வேண்டுமானல் அவை உலை எண்ணெயைப் பயன்படுத்த வேண்டியபோது அவற்றிற்கு ஏற்படும் கூடுதல் செலவுகளை ஈடு செய்யவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

2. இந்திய அரசு, தமிழ்நாட்டிலுள்ள சிமிட்டி ஆலைகளுக்கு நிலக்கரி வழங்கப்படும் நிலை குறித்துத் தவறுமல் விழிப்புடன் கவனித்து வருவதாக இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. தென்னிந்தியாவில் உள்ள சிமிட்டி ஆலைகளுக்கு ராணிகஞ்ச, நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 100 வாகன் நிலக்கரி அனுப்புவதாக இந்திய அரசு உறுதியளித்துள்ளது. இது பற்றி இவ்வரசு தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறது.

## (4) 1973–74-ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை—அளித்தல்

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, 1973–74-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக் கோரிக்கைகளின் மொத்தத் தொகை 53.91 கோடி ரூபாயாகும். இதில் 35.15 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும். எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில், 53.54 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின்கீழும், 37 இலட்சம் ரூபாய் சாட்டிய இனங்களின் கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் சிலவற்றை இப்போது குறிப்பிட விழைகிறேன்.

நடப்பு ஆண்டில் இருந்து அரசு அலுவலாளர்களின் சம்பளம் அந்தந்தத் திங்களின் கடைசி வேலை நாளிலேயே கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பாக, ஒரு வரையறைக்குட்பட்ட ஊதியம் வாங்கும் அலுவலாளர்கட்கு மார்ச் திங்களுக்கான ஊதியம் 1974 ஏப்ரல 1 ஆம் தேதிக்கு மாறாக, மார்ச் 30 ஆம் தேதியிலேயே கிடைக்கும். ஆகவே, 1973–74-ஆம்



1974 மார்ச் 26] [திரு. மு. கருணாநிதி]

ஆண்டின் கணக்கிலேயே 12 திங்களுக்குப் பதிலாக 13 திங்கள் சம்பளத்திற்கான செலவு சேரும். ஒரு திங்கள் கூடுதலாகச் சம்பளம் இவ்வாண்டுக் கணக்கில் சேருவதால், நமக்கு 10 கோடி ரூபாய் செலவாகிறது. இத்தொகை எல்லா மானியக் கோரிக்கைகளிலும் விரவிக் கிடக்கிறது.

அதே போல, நடப்பாண்டில் அக்டோபர் திங்களுக்கான சம்பளத்தில் இருந்து கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வும் இம் மானியக் கோரிக்கைகளின் கூடுதல் அளவிற்குக் காரணமாகும். இதனுல் நடப்பாண்டில் மட்டும் 3 கோடி ரூபாய் அளவிற்கு அதிகச் செலவு ஆகும்.

மாவட்ட நிர்வாகம் (ரூ. 2.66 கோடி), காவல் துறை (ரூ. 3.25 கோடி), கல்வி (ரூ. 7.42 கோடி) போன்ற துறைகளில் அதிகப்படியாக நாம் கோரியுள்ள மானியங்களுக்கு இவ்விரண்டு காரணங்களும் முக்கியமாகப் பொருந்துகின்றவையாகும்.

வேளாண்மைக்கான மானியக் கோரிக்கையின்கீழ் 1.61 கோடி ரூபாயும் மருத்துவத்தின் கீழ் 2.52 கோடி ரூபாயும் பொதுவாக வளர்ச்சிப் பணிகளின் வேகத்தைக் குறிக்கின்றன. குறிப்பாக, வேளாண்மை மானியத்தில் கரும்புத் தீர்வை நிதிக்கு, கூடுதலாக 1.09 கோடி ரூபாய் மாற்றுவதற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இவ்வாண்டு, பொங்கல் நன்னுளில் புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்டதை இம்மாமன்றம் நன்கறியும். இதன் காரணமாகப் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும் புதிய அலுவலகங்களுக்காகப் பல்வேறு உபரி மானியக் கோரிக்கைகளிலும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இறுதித் துணை மதிப்பீட்டில் இதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் வளர்ச்சிப் பணிகளுக்காகக் கூடுதல் நிதி வசதி திரட்டும் பொருட்டு, ஒரு ரூபாய் நிலவரிக்கு 2.50 ரூபாய் வரை உள்ளூர் செஸ் மேல் வரி விதிக்கலாமென உயர் வரம்பினை 1972–73-இல் அரசு உயர்த்தியது. இந்த வாய்ப்பினை ஏராளமான ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள் திரட்டும் தொகைக்கு நிகராகவும், விதிக்கப்படும் மேல் வரியின் அளவிற்கு ஏற்ப சில இடங்களில் கூடுதலாகவும் நாம் இணை மானியம் கொடுக்கும் புதிய

முறையினால் இவ்வாண்டு நமது செலவு கூடியுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் இந்த இனத்தின்கீழ் 5.25 கோடி ரூபாய் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டி வருமெனக் கணக்கிட்டிருந்தோம். ஆனால், உள்ளூர் செஸ் மேல் வரியைத் திருத்தியமைத்ததன் காரணமாகவும் நாம் கொண்டுவந்துள்ள புதிய இணை மானிய முறையினாலும் அரசு கொடுக்க வேண்டிய இணை மானியம் 8.25 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. கூடுதல் தொகையான 3 கோடி ரூபாய் மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கென, கல்வி மானியத்திற்காகக் கொடுக்கப்படும் கணக்கில் 4.68 கோடி ரூபாய் கூடுதல் மானியமும் இத் துணை மானியக் கோரிக்கைகளில் கல்விக்கான கோரிக்கையில் இடம் பெற்றுள்ளது.

1973 நவம்பர் திங்களில் முதலாவது துணை மதிப்பீட்டினை நான் இப் பேரவையின் முன் வைத்தபோது, கல்வி பயின்ற இளைஞருக்கு வேலை வாய்ப்பின்மை துயரைப் போக்கிட இந்த அரசு எடுத்துள்ள பல நடவடிக்கைகளை விளக்கிக் கூறினேன். மத்திய அரசின் உதவியுடன் அனைத்திந்திய அளவில் ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் நாம் மேற்கொண்டுள்ள பல பணிகளுக்கு இம்மானியக் கோரிக்கைகளில் ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளன. மீனளத் துறை இயக்குநரால் அமைக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்காக 45.97 இலட்சம் ரூபாயும் (கோரிக்கை 45) போக்குவரத்துக் கழகங்களின்கீழ் அமைக்கப்படவிருக்கும் பொறியியல் கழகங்களுக்காக 98.73 இலட்சம் ரூபாயும் (கோரிக்கை 45) இத்தொகைகளில் அடங்கும்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய வீட்டு வளர்ச்சிக்காகத் தனிக் கழகம் அமைக்கப்பட்டுள்ளதை இந்த அவை அறியும். இக் கழகத்திற்காக 1 கோடி ரூபாய் 45-ஆவது மானியக் கோரிக்கையில் இடம் பெற்றுள்ளது. மேலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைகளுக்காக கூடுதல் தொகையாக 10 இலட்சம் ரூபாயும் 29-ஆம் எண் மானியக் கோரிக்கையில் கோரப்பட்டுள்ளது.





1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் காங்கித் தொழிலாளர்கள் மாநில அரசுப் பணியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இதற்கு வேண்டிய கூடுதல் செலவுத் தொகையும், நீலகிரி, ஈரோடு, திருநெல்வேலி கோட்டங்களில் இயற்கையின் சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளைச் சிறப்பாகச் செப்பனிடுவதற்கு வேண்டிய தொகையும் 32-ஆம் எண் மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள 1.52 கோடி ரூபாயில் அடங்கும்.

தாராள ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்தியது ( Liberalised Pension Scheme ), குறைந்த அளவு ஓய்வூதியத்தை உயர்த்தியது, ஓய்வுகால நன்மைகளை ஆசிரியர்களுக்கும் பொருந்தச் செய்தது ஆகியவை காரணமாக ஓய்வூதியம் பெறுபவர்களின் நிலைமை மேம்பாடடைந்து வருகிறது. ஓய்வூதியங்களுக்காக ஆகும் செலவு எதிர்பார்த்ததைவிட கணிசமாக உயர்ந்துள்ளது. இதற்காக, 37-ஆம் எண் மானியக் கோரிக்கையில் 1.73 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்படுகிறது.

பல்வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கும் கொடுக்கப்பட்ட இழப்பீட்டினை இக்கழகங்களில் பங்கு மூலதனமாகவும் அவற்றிற்குக் கொடுக்கப்படும் கடன்களாகவும் மாற்றுவதற்கு மாமன்ற உறுப்பினர்களின் அனுமதி 1973 நவம்பரில் வைக்கப்பட்ட முதலாவது துணை மதிப்பீட்டில் பெறப்பட்டது. 45, 52-ஆம் எண் மானிய மிச்சத்திலிருந்து பெறப்படும் தொகை நீங்கலாக இக்கோரிக்கைகளில் இப்போது 4.04 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்க நிலை கடன் வழங்கு சங்கங்களுக்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் பங்கு மூலதன உதவியாக 43.45 இலட்சம் ரூபாய், 1973—74-இல் உரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காகக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ஆதாயத் தொகை அளிக்க, தமிழ் நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பில் பங்கு மூலதனமாக 20 இலட்சம் ரூபாய் ஆகியவற்றிற்கு இம்மானியக் கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 26

கீழ்க்காணும் பாசனத் திட்டங்களுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது :—

(1) வரதமாநதி நீர்த்தேக்கத்தை 1.03 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைத்தல்.

(2) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், குண்டாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கத்தை 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைத்தல்.

(3) கோயம்புத்தூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், வட்டமலைக்கரை ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றை 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைத்தல்.

(4) கோயம்புத்தூர் மாவட்டம், பவானி வட்டம், வறட்டுப் பள்ளத்தின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றை 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைத்தல்.

(5) வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், சாத்தனூர் கால்வாய்க்கு நீர் விடும் அணைப் பகுதிக்கு மேற்புறத்தில் வலங்கை கால்வாய் ஒன்றை 2.02 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வெட்டுதல்.

(6) கோயம்புத்தூர் மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் வட்டம், குண்டேரிப் பள்ளத்தின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றை 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அமைத்தல்.

(7) அகண்ட காவிரி, கொள்ளிடம் கரைகளை 11.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் வலுப்படுத்தல்.

(8) பெரியாறு பாசன அமைப்பினை 7.3 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் சீரமைத்தல்.

இவை தொடர்பாக, தொடக்கப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மண்ணடியிலுள்ள காவலர் குடியிருப்பில் தற்போதுள்ள பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் காவலர் குடியிருப்பு ஒன்றைப் புதிதாகக் கட்டுவதற்கான திட்டமொன்றுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.



1974 மார்ச் 26] [டாக்டர் மு. கருணாநிதி]

இப்பணி இந்த ஆண்டிலேயே தொடங்கப்படும். இதற்கான ஒதுக்கீடு 47-ஆம் எண் மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ளது. இம் மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள 1.64 கோடி ரூபாயில் கீழ்க்கண்ட பணிகளும் அடங்கும் :—

சூரமங்கலம்—தாரமங்கலம் சாலைக்கு மேம்பாடுகள் செய்வதற்குத் தேவைப்படுகின்ற நிலங்களைக் கையகப்படுத்தல்; ஏழாவது தேசிய நெடுஞ்சாலைக்கும் சேலம் உருக்காலைக்கும் 71 இலட்சம் ரூபாய் செலவில் இணைப்புச் சாலை ஒன்று அமைத்தல்; இந்த இணைப்புச் சாலையில் மேம்பாலம் ஒன்று கட்டுதல் ஆகிய பணிகளுக்கும் நிதி கோரப்பட்டுள்ளது.

சாலைகள் மேம்பாட்டிற்காக இயந்திரங்கள், தளவாடங்கள் வாங்குவதற்கு 44.18 இலட்சம் ரூபாய் அதிகப்படியாகச் செலவிடுவதற்கும் இக்கோரிக்கையில் தொகை சேர்க்கப்பட்டுள்ளது.

அரசுப் போக்குவரத்துத் துறையின் பேருந்துகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காக, 48-ஆம் எண் மானியக் கோரிக்கையில் 28.95 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. கும்பகோணத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராம விலாஸ் பேருந்துப் போக்குவரத்து நிறுவனத்துக்கும், பொள்ளாச்சியைச் சேர்ந்த ஆனைமலை பேருந்துப் போக்குவரத்து நிறுவனத்துக்கும் வழங்கப்படும் 14.08 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுக்கும் இதற்கண் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சதர்ன் ஸ்ட்ரக்சுரல் நிறுவனம் நாட்டுடைமையாக்கப்படுமென்று 1974-75-க்கான வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்துள்ளேன். தற்போது அரசின் நிர்வாகத்தில் இந்த நிறுவனம் நடைபெற்று வருகிறது. முறை மரபுகளையொட்டிய நடவடிக்கைகள் எடுத்து முடிக்கப்படுகின்ற வரையில் இந்த நிறுவனம் செயல்படும் பொருட்டு இதற்குக் கடன்கள் வழங்க வேண்டியது அவசியமாகிறது. இதற்கென 52-ஆம் எண் மானியக் கோரிக்கையில் 25 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டுவதற்கு அளிக்கப்படும் மொத்தக் கடனுதவி அளவை உயர்த்தி வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கிற 65 இலட்சம் ரூபாய்க்குக்

கூடுதலாக 15 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதற்கான அடையாள நிதி ஒதுக்கம் இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப் பட்டுள்ளது.

குறைந்த செலவிலான வீட்டு வசதி சிறப்புத் திட்டத்தை 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நான் அறிவித்தேன். இத் திட்டத்திற்கு நிதி உதவி செய்ய வங்கிகள் முன் வராததால், பல்வேறு இடங்களில் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 21.63 இலட்சம் ரூபாயை அரசு வழங்கியுள்ளது. சட்ட மன்றத்தின் ஏற்பளிப்பு அடையாள நிதி ஒதுக்கத்தின் மூலம் கோரப்படுகிறது.

நடப்பாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட மின்சாரப் பற்றுக்குறை காரணமாகப் பருத்தி நூல் போதிய அளவிற்குக் கிடைக்கப் பெறாததால், மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்ற கைத்தறி நெசவாளர்களுக்குக் கடன் வழங்குவதற்காக மொத்தம் ஒரு கோடி ரூபாய் செலவுத் திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதுவரை இதற்காக ஏற்பட்டுள்ள செலவு 87 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தொகை, இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. 5.6 இலட்சம் ரூபாய் செலவில் தனியார் தொழில் முனைவர்களால் படகுகள் வாங்குவதற்காக வட்டியில்லாக் கடன் கொடுப்பதற்கும், 18.67 இலட்சம் ரூபாய் செலவில் மீனவர்களுக்குச் சலுகை விலையில் நைலான் நூல் வாங்கி வழங்குவதற்குமான திட்டங்கள் 52-ஆவது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ் நாடு குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்று வாரியம், தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் போன்ற நிறுவனங்களுக்குத் திட்ட வேலைகளை மிக விரைவாக மேற்கொள்வதற்காக முன் பணமாக மொத்தம் 7 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கூடுதல் தொகைகள் இக் கோரிக்கையில் இடம் பெற்றுள்ளன.

துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான ஒரு சில செலவினங்களை நான் எடுத்துக் கூறியுள்ளேன். உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இச் செலவினங்களுக்கும் பிற செலவினங்களுக்கும் உரிய விளக்கத்தைக் காணலாம் என்று கூறி, 1973-74 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.



## 5. அறிவிப்புகள்.

### (அ) இறுதித் துணை நிதிக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1973–74 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதி அறிக்கை இன்று பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவைகளை 27—3—1974, புதன்கிழமை மாலை 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

## (6) 1974-75-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,87,34,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. மணலி சி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, நீர்ப் பாசனத்தை சாகுபடி ஆரம்பக் கட்டத்திலிருந்தே சிக்கனமாக முறைவைத்து விடுவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,87,34,600-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, கொடகனாறு திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,87,34,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the need to expedite the Irrigation Project Works in Dharmapuri district, I move—

'That the allotment of Rs. 15,87,34, 600 under Demand No. 35—Irrigation be reduced by Rs. 100.'

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மேட்டூர் தாலுக்கா, தோணிமடுவு போன்ற பகுதியிலுள்ள பாசன வசதிகள் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,87,34,600-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss about the delay in construction of Kelavarapalli Anicut in Hosur taluk, Dharmapuri district, I move—

'That the allotment of Rs. 15,87,34,600 under Demand No. 35—Irrigation be reduced by Rs. 100.'

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மதுக்கரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பாலத்துறையில் ஒரு அணைக்கட்டு கட்ட வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,87,34,600-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்று நீர்த்தேக்க திட்டத்திற்கு நிதி ஒதுக்காததைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,87,34,600-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





THIRU N. DENNIS : Sir, to discuss about the continuous premature withering away of paddy crops in the newly converted paddy fields irrigated by the Karungal distributary of Chittar-Pattanamkal Irrigation System due to insufficient and irregular supply of water, I move—

'That the allotment of Rs. 15,87,34,600 under Demand No. 35—Irrigation be reduced by Rs. 100.'

## (ஆ) நிதிக் கோரிக்கை எண். 36—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண். 36—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,33,51,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 2,33,51,200 under Demand No. 36—Public Works—Buildings—be reduced by Rs. 100".

THIRU J JAMES : Sir, to discuss the necessity to construct buildings for all the Primary Schools in the Kanyakumari District replacing sheds, I move—

"That the allotment of Rs. 2,33,51,200 under Demand No. 36—Public Works—Buildings—be reduced by Rs. 100".

DR. H. V. HANDE : Sir, to discuss the urgent need to repair several dilapidated portions of buildings in General Hospital, I move—

"That the allotment of Rs. 2,33,51,200 under Demand No. 36—Public Works—Buildings—be reduced by Rs. 100".

[1974 மார்ச் 26

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சரித்திரப் பிரசித்திப் பெற்ற எட்டயபுரத்துக்கு வரும் பயணிகள் தங்கி ஓய்வு பெற எட்டயபுரத்தில் ஒரு பயணிகள் விடுதி கட்ட நடவடிக்கை எடுப்பதின் அவசியம்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 36—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,33,51,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, to press for the reconstruction and modernisation of the Travellers' Bungalow in Vaniyambadi town, I move—

"That the allotment of Rs. 2,33,51,200 under Demand No. 36—Public Works—Buildings be reduced by Rs. 100".

**(இ) நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள், பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,09,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, to discuss the necessity to improve the Colachel Harbour in Kanyakumari district, I move—

"That the allotment of Rs. 4,09,95,000 under Demand No. 37—Public Works Establishment and Tools and Plants be reduced by Rs. 100".



1974 மார்ச் 26]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் கீழ் உள்ள இயந்திரச் சாதனங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் இருப்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,09,95,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்ட பொதுப் பணித் துறை அதிகாரிகள் அரசு வாகனங்களை உபயோகிக்கும் முறை பற்றி எடுத்துக்கூற—

"நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,09,95,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to form Tamil Nadu Engineering Service consisting of all the Engineers in Public Works and various other Corporations in Tamil Nadu, I move—

'That the allotment of Rs. 4,09,95,000 under Demand No. 37—Public Works Establishment and Tools and Plants be reduced by Rs. 100.'

**(ஈ) கோரிக்கை எண். 38—சாலைகளும், பாலங்களும்.**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண். 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,86,05,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, எல்லாக் கிராமங்களுக்கும் தொடர்பு கொள்ளும் வகையில் சாலைகள் அமைப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என். 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,86,05,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையில் உள்ள சாலைகளைப் பொதுப் பணித் துறையே மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என். 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,86,05,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(முற்பகல் 10.30)

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, பஞ்சாயத்துக்களுக்குக் கட்டுப்பட்ட நெடுஞ்சாலைகள் அனைத்தையும் பொதுப் பணித் துறையே எடுத்துக் கொள்ளுவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் ரூ. 19,36,05,300 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளளூரிலிருந்து கஞ்சிக் கோனூர் பாளையத்துக்குச் சாலை போடவேண்டுமென்று விவாதிக்க —"நிதிக் கோரிக்கை என் 38—சாலைகளும், பாலங்களும்" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் ரூ. 19,86,05,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.





திரு. கே. பி. கோபால் : தலைவரவர்களே, கம்பம், இராஜபாளையம் நகரங்களை நேரிடையாக இணைக்க மலைப்பகுதிகளில் சாலை அமைக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,86,05,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இருக்கும் மண் சாலைகளை எல்லாம் கப்பிச் சாலைகளாக மாற்ற வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் ரூ. 19,86,05,300 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to prepare master plan of roads and bridges in Hosur and Denkanikottah taluk as it is a most backward area, I move—

"That the allotment of Rs. 19,86.05,300 under Demand No. 38—Roads and bridges, be reduced by Rs. 100".

### (உ) நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,95,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H V HANDE : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 14,95.69,000 under Demand No. 50—Capital outlay on irrigation be reduced by Rs. 100".

[1974 மார்ச் 26

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, கங்கை காவேரி இணைப்புத் திட்டம் பற்றித் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,95,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவரவர்களே, பாசன வசதி இல்லாத இடங்களில் குளங்கள் கண்மாய்களை ஆழப்படுத்துதல், குழாய்க் கிணறுகள் அமைத்தல் ஆகியவை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,95,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, கோவில்பட்டி, சங்கரன்கோவில் வட்டார வரட்சி நிலையைப் போக்க கிரியாறுத் திட்டத்தை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,95,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, சூலூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட வாகாராயம்பாளையம் வண்ணத்தங்கரை ஓடையில் குளம் கட்டுவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 14,95,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1974 மார்ச் 26]

## (ஊ) நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப் பணித் துறைக் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,03,80,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 10,03,80,400 under Demand No. 51—Capital Outlay on Public Works Buildings be reduced by Rs. 100."

THIRU J. JAMES: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 10,03,80,400 under Demand No. 51—Capital outlay on Public Works Buildings be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI: To discuss the need to have a phased programe for housing all public departments in Government owned buildings, I move:—

"That the allotment of Rs. 10,03,80,400 under Demand No. 51—Capital Oualay on Public Works Buildings be reduced by Rs. 100."

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to discuss the need to put up office building for all Government offices in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 10,03,80,400 under Demand No. 51—Capital Outlay on Public Works Buildings be reduced by Rs. 100."

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவரவர்களே, இலாக்காக்களில் உள்ள கட்டிடம் கட்டுதல், பாலம் கட்டுதல் முதலிய வேலைகளை அரசு அதிகாரிகளின் மூலமாகவே செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 10,03,80,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டுமென்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(எ) நிதிக் கோரிக்கை எண் 52—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 52—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,68,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 4,68,00,000 under Demand No. 52—Capital Outlay on roads and bridges be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI: Sir, to discuss the failure to include more roads in State highways, I move—

"That the allotment of Rs. 4,68,00,000 under Demand No. 52—Capital Outlay on roads and bridges be reduced by Rs. 100."

THIRU N. DENNIS: Sir, to discuss about the necessity to construct new bridges in the place of old and dilapidated bridges in AVM canal in Kanyakumari district, I move—

"That the allotment of Rs. 4,68,00,000 under Demand No. 52—Capital Outlay on roads and bridges be reduced by Rs. 100."

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவரவர்களே, கண்டிராக்டர்களின் மூலம் விடும் வேலைகளை நிறுத்திவிட்டு, அரசே மேற்படி வேலைகளைச் செய்ய வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 52—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படும் ரூ. 4,68,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கைகள் பற்றிய விரிவான விளக்க உரை அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய பேச்சை *படித்ததாக ஏற்றுக்கொண்டு, அவை அவையின் குறிப்பில் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அங்கத்தினர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக இதோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பேசுவதற்காக 35 உறுப்பினர்கள் பெயர் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, விவாதத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் ஐந்து நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இன்று 7 டிமான்டுகள் இருக்கின்றன. ஒரு உறுப்பினருக்கு 5 நிமிடம் என்று தலைவரவர்கள் சொன்னார்கள். இந்த நேரத்தில் ஒவ்வொரு டிமான்டில் ஒரு வார்த்தை கூட பேச நேரம் போதாது. எந்த ஒரு டிமான்டிலும் அங்கத்தினர்கள் தங்களுடைய முழு கவனத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். இதை இன்னொரு நாள் தள்ளிப் போட்டுக்கூட எடுத்துக்கொள்ளலாம். தலைவரவர்களே, முதலமைச்சர் அந்தத் துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு இன்னொரு நாள் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இன்றைக்கு மாலை சட்டமன்றம் இருப்பதால், மாலை நேரத்தை அதிகப்படுத்தி குறைந்தது 10 நிமிடமாவது கொடுத்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பிற்பகல் வைத்துக்கொள்வதைப் பற்றி எங்களுக்குப் பரவாயில்லை. மேலவை இருக்கிறது. மந்திரிகள் யாரும் இல்லை என்று சொல்லக் கூடாது. நாங்கள் மேலவையில் இருப்போம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, அமைச்சர்கள் மேலவைக்குச் செல்லட்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர் மட்டும்

* 362-378-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளன.

இருந்தால் போதும். ஒரு உறுப்பினருக்கு 10 நிமிடமாவது கொடுங்கள். சில உறுப்பினர்கள் கருத்துக்கு வருவதற்கே [illegible] நிமிடம் ஆகிவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசக் கொடுத்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளுங்கள். மாலையில் ஒரு மணி நேரம் கூட வைத்துக் கொள்ளலாம் என்றாலும் ஒரு உறுப்பினருக்கு 1-2 நிமிடம் தான் கூட வரும். 10 நிமிடம் கொடுத்தால், அது நீண்டுகொண்டே போய் இரவு 12 மணி ஆகி விடும். எனவே இருக்கும் நேரத்தை அந்த உறுப்பினருக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த பொதுப்பணித்துறையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுப்பணித்துறையின் சாதனைகள் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் இந்த அரசின் சாதனை என்று மக்கள் கணக்கிடுகிறார்கள். ஏனெனில் மக்களுக்குத் தேவைப்படுகிற சாலை வசதிகள், நீர்த்தேக்கங்கள், பாசன வசதிகள் ஆகியவற்றையெல்லாம் இந்தத் துறை உடனடியாக செய்து கொடுத்தால் தான் அவர்கள் நல்வாழ்வு வாழமுடியும்.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் அணைகள் கட்டுதல், சாலை அமைத்தல் போன்றவற்றை கிராமப்பகுதிகளில் உடனடியாகச் செய்து தந்தால் தான் அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கை ஏற்றம் பெறுகிறது. ஆகவே, அரசு செய்கிற சாதனைகள் மக்கள் புரிந்து கொள்கிற வகையில் இருப்பது இந்தத் துறையின் மூலம் தான். ஆகவே, அந்த வகையிலே இந்தப் பொதுப் பணித்துறை வேலை குறித்து ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன்.

அதற்கு முன்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில பல திட்டங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியிலே அந்த மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து, அந்த மக்களுக்கு நன்மை தருகிற திட்டங்களுக்கான இடங்களை ஆராய்ந்து அறிந்து, இங்கே அமைச்சருக்கு, அமைச்சரவைக்கு சிபார்சு செய்து, அதை அமைச்சர்களும் பெருமனது கொண்டு அங்கீகாரம் செய்த பிறகு, அந்தத் திட்டங்களிலே அதிகாரிகள்



நுழைந்து, அவர்களுடைய யோசனைக்கு ஏற்ப, அவர்களுடைய சிந்தனைக்கு ஏற்ப அந்தத் திட்டங்களை மாற்றி அமைத்து அல்லது இடத்தை மாற்றி அதிலே வேறு விதமான மாறுதலைச் செய்து சட்டமன்ற உறுப்பினர்களின் தன்மையையும் கௌரவத்தையும் குறைப்பதாக இருக்கிறது. அமைச்சர்களின் கௌரவத்தையும் குறைப்பதாக இருக்கிறது.

அதிகாரிகளுக்காக மக்கள் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களின் பிரதிநிதிகளாக, இருக்கிறார்கள். மக்களுக்காக அதிகாரிகளும், அமைச்சர்களும் இருக்கிறார்கள். ஆகவே, மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் முறையில் அவ்வவர்களின் பணி இருக்கவேண்டுமென்ற வேண்டுகோளை இந்தச் சந்தர்ப்பத்தில் விடுக்க விழைகிறேன்.

அடுத்தபடியாக ஒப்பந்தக்காரர்கள் பற்றிய பிரச்னை. இந்த ஒப்பந்தக்காரர்களை வைத்து இப்போது வேலைகள் செய்யப்படுகின்றன. ஆனால் நாடு முழுவதும் என்ன நிலைமை என்றால், இந்த ஒப்பந்தக்காரர்கள் என்றாலே கொள்ளைக்காரர்கள் என்ற அளவுக்கு வந்து விட்டது. நான் யாரையும் குறை சொல்லவில்லை ஒரு பெரிய அளவுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு அதிலே பல திருட்டுத் தனங்கள், தரக்குறைவான சாமான்கள் உபயோகிப்பது, மக்களுக்கு உற்பத்திக்காக செய்யும் திட்டங்களை காலதாமதம் செய்வது ஒரு குறிப்பிட்ட திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் முடிக்காமல் சுணக்கம் ஏற்படுத்துவது என்று இருக்கிறது. இந்த முறையை மாற்றி வேறு ஒரு முறையை அரசு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே அந்த முறைக்கு ஒரு மாற்று முறையை அரசு கண்டுபிடிக்க வேண்டும். வேலைகளை அரசு தன்னுடைய அலுவலர்களைக் கொண்டே செய்து விட முடியாதா என்பதை ஆராய வேண்டும். இதற்கு ஏதேனும் ஒரு திட்டம் வகுக்கவேண்டும். ஒப்பந்தக்காரர்களுடைய பிடியிலிருந்து நாம் தப்ப வேண்டும் என்பதற்கு ஒரு மாற்றுத் திட்டம் வகுக்கவேண்டும். ஒரு சிலர் மாத்திரம் லட்சாதிபதிகளாகவும், கோடீசுவரர்களாகவும் மாறுவதை மாற்ற, சமநிலை, சமதர்ம சமுதாயத்தை அமைக்க இருக்கக்கூடிய நமது அரசு ஒரு மாற்று பரிகாரத்தைக் காணவேண்டும் என்ற என்னுடைய சிபார்சை இந்த நேரத்தில் செய்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஒரு நன்றி. மூன்று ஆண்டுகளாக நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன். இந்த மூன்று ஆண்டுகளாக நான் பேசியதின் பலனாக எனக்குக் கிடைத்த பலன் என்னவென்று சொன்னால், இது வரையில் இந்த மூன்று ஆண்டுகளில் 180 கோடி ரூபாய் பொதுப்பணித் துறை செலவு செய்திருந்த போதிலும், என்னுடைய தொகுதிக்கு கிடைத்தது 13 லட்சம் ரூபாய் தான். அது ஒன்று தான் என்னுடைய தொகுதிக்கு செய்யப்பட்ட ஒரு சாதனை.

சட்டமன்ற உறுப்பினராக நான் மூன்று ஆண்டுகளுக்கு பணியாற்றி என்னுடைய தொகுதி மக்களுக்குச் செய்து கொடுக்க முடிந்தது இந்த 13 லட்சம் ரூபாய் பாலம் தான். அதாவது நாசபுரம் ஆரவக்குரிச்சிக்கு இடையே ஒரு பாலம். அதற்காக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும். பொதுப்பணித் துறைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல எனது சக சட்டமன்ற உறுப்பினர் தொகுதியாகிய வாணியம்பாடியில் ஒரு பாலம். இரண்டும் மத்திய அரசிடமிருந்து ஒதுக்கப்படுகின்ற நிதியிலிருந்து கட்டப்படுகின்றன. விரைவில் வேலை நடந்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், ஏதேனும் என்னுடைய தொகுதிக்கு அடியேன் ஒரு சிறு தொண்டு ஆற்றியவனாவேன் என்று பணிவோடு கூறிக்கொள்கிறேன்.

அதேமாதிரி நொய்யலாற்றுத் திட்டத்தையும் விரைவில் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது சம்பந்தமாக நிர்வாகப் பொறியாளர் 5,000 ஏக்கருக்குப் பாசன வசதி தரக்கூடிய வலையாபாளையம் அருகில் நீர்த்தேக்கம் ஏற்படுத்துவதன் மூலம் லோயர் பவானி பாசன திட்டத்தில் இருக்கக்கூடிய கழிவு நீரை தேக்கி 5,000 ஏக்கருக்கு பாசன வசதி கொடுக்க என்னுடைய தொகுதியிலே 5.000 ஏக்கர் பயிரிடமுடியும் என்ற ஒரு நல்ல திட்டத்தை ரூ. 2 கோடி 30 லட்சத்திற்குப் போட்டு அனுப்பியிருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தையாவது என்னுடைய காலத்திலேயே முடித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த முறை இந்த எளியோன் இந்த சட்டமன்றத்தில் இடம் பெறமாட்டேன் என்பது நிச்சயம். ஏனென்றால் நான் என்னுடைய தொகுதி மக்களுக்கு ஏதாவது சாதனைகளை செய்திருந்தால் தானே





என்னுடைய முகத்தை மக்களிடத்தில் கொண்டுபோய் காட்ட முடியும். எந்த சாதனையும் நான் காட்ட முடியவில்லை, அரசும் அதற்கு எனக்கு துணையாக இருக்கவில்லை. குறைந்தபட்சம் நொய்யலாற்றுத் திட்டத்தையாவது நிறைவேற்றித் தரவேண்டும் என்று ரொம்ப வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

சில செல்வாக்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்கு எவ்வளவோ சாதனைகளை சாதித்துக்கொடுத்து எவ்வளவோ பெருமையை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ தொழிற்சாலைகளை அவரவர்கள் தொகுதியில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நான் முன்பு சொல்லியது போல என்னுடைய தொகுதியில் ரூ. 13 லட்ச திட்டம்தான் என்னுடைய கோரடிட்டில் இருக்கிறது. நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். அதைவிட சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டுவிட்டு நான் ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விடலாம். வேறு திறமை மிக்க ஒருவரை, சாதனைகளை சாதித்துக்காட்டக் கூடிய செல்வாக்கு உள்ள ஒருவரை என்னுடைய தொகுதி மக்கள் தேந்தெடுத்து, அவர்கள் பயன அடையட்டும். நான் பதவியில் இருக்கவேண்டும் என்ற நோக்கம் இல்லை. அந்த அளவுக்கு நான் சொல்லிக்கேட்கிறேன் என்றால், நான் என்னுடைய உள்ளத்து வேதனையை வெளிப்படுத்துகிறேன். குறைந்தபட்சம் இந்த நொய்யலாற்றுத் திட்டத்தையாவது, 5,000 ஏக்கர் பாசன வசதி அளிக்கக்கூடிய திட்டத்தையாவது இன்னும் இருக்கக்கூடிய இரண்டு ஆண்டுக்குள் அருள் கூர்ந்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சென்னிமலை அருகில் ஒரு தேக்கம், இதே நொய்யலாற்றில் ஏற்படுத்துவதற்கு முன்வரவேண்டும். 20,000 ஏக்கர் பாசனவசதியில், 5,000 ஏக்கர் என்னுடைய தொகுதிக்குக் கிடைக்கும். அதையாவது அடுத்த கட்டமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆழியாறு தேக்கத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக அதிகமாக தண்ணீர் பெறக்கூடிய வசதி ஏற்பட்டிருக்கிறது. அப்படி அதிகமாகக் கிடைக்கக் கூடிய தண்ணீரை முழுக்க முழுக்க கோவை மாவட்டத்திற்கே பயன் படுத்தாது—கோவை

மாவட்டத்தைச் சேர்ந்தவர் இந்த அமைச்சர் அவையில் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார் என்ற காரணத்திற்காகவோ என்னவோ . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்பொழுது செல்வாக்குள்ள எம்.எல்.ஏ.-க்களாக இருப்பவர்கள் தான் தன்னுடைய தொகுதிக்கு திட்டங்களைப் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் மிகுந்த செல்வாக்குள்ள உறுப்பினர் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அவருடைய தொகுதியில் நிறையக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. மேலும் காரியங்கள் நடைபெறவேண்டும் என்று கேட்கலாமே தவிர, மற்ற மாவட்டங்களைக் குறை கூறி, அந்த மாவட்டத்து மக்களின் வெறுப்பை தேடிக்கொள்ளக்கூடாது என்பதைத்தான் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** என்னுடைய பிழைப்பு நடத்துவதே கோவை மாவட்டத்தில்தான். ஆகவே, அந்த மக்களை நான் பகைத்துக்கொள்ள விரும்பமாட்டேன். எங்களுக்கும் அந்தச் சலுகை வேண்டுமென்றுதான் கேட்கிறேன். ஆகவே, பரம்பிக்குளம்-ஆளியார் திட்டத்தின் நீரை கொஞ்சமாவது மிச்சப்படுத்தி தென்னிலைப் பகுதிக்கு ஒரு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்தத் தண்ணீரும் அங்கே வர முடியாது. இரண்டு ஆண்டுக்கு ஒரு தடவை தண்ணீர் வந்தால் போதும். ஏதேனும் ஒரு திட்டத்தை ஆராய்ந்து உருவாக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுடைய தொகுதியில் ஆண்டியப்பனூர் அருகே ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஆலங்காயம், போளூருக்கு இடையே ஜவ்வாது மலைப் பகுதியில் ஒரு சாலை அமைத்துத் தரவேண்டும் என்றும் கோருகிறேன்.





குடகனாறு திட்டத்தில் என்னுடைய தொகுதியில் 1,500 ஏக்கர் பாசன வசதி பெறும். அந்த அளவுமல்ல குடகனாறு திட்டத்தை மிக விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி ஆற்றில் வரக்கூடிய வெள்ள நீரை—நிரந்தர பாசன வசதி நான் கேட்கவில்லை—காவேரி தகராறு முடிந்த பிறகுதான் அந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்பதை நான் அறிவேன்—நான் முன்பு சொன்ன நொய்யலாற்றுத் திட்டம் காவேரி ஆற்றுக்குக் கட்டுப்பட்டது இல்லை—தேக்க அமராவதி ஆற்றில் ஒரு தடுப்பு அணை கட்டி கால்வாய் மூலம் அந்தத் தண்ணீரை திருப்பி சுற்றுப் புறத்தில் உள்ள கிராமங்களில் இருக்கும் குளங்கள் குட்டைகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மழை பெய்து வெள்ளம் வருகிறபொழுது, தண்ணீர் நிறைய வரக்கூடிய காலத்தில் அந்த உபரித் தண்ணீரை திருப்பிவிட்டு, குளம் குட்டைகள் நிரம்பும்படிச் செய்தால், கிணறுகளில் ஊற்றும் ஏற்படும். பல கிராமங்களில் வாழ வசதி ஏற்படும். குடி தண்ணீர் வசதி கிட்டும். இதைப்பற்றி ஒரு ஆய்வு நடத்தவேண்டும் என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் பெரிய நீர்ப்பாசன வசதிக்குரிய ஆறுகள் பெருவாரியாக இல்லை. குறைந்தபட்சம் பாண்ட்ஸ் ஸ்கீமையாவது நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த பாண்ட்ஸ் ஸ்கீமில் ஒரு கஷ்டம் இருக்கிறது. நிலச் சொந்தக்காரன் தன்னுடைய நிலத்தை வலிய விட்டுக்கொடுக்க வேண்டும் என்று சொன்னால், யாரும் தன்னுடைய இடத்தை கரட்டுக்காடாக இருந்தால் கூட எந்த விவசாயியும் விட்டுக் கொடுக்க முன்வரமாட்டான். ஆகவே வலுக்கட்டாயமாகத்தான் செய்யவேண்டும். ஒருவனுக்கு ஒரு சிறிய பாதகத்தை உண்டாக்கி அதன் மூலம் 100 பேர்கள் பிரயோசனப்பட முடியும் என்றால் ஜனநாயக அரசு செய்யக்கூடியது கட்டாய முறையில் அம்மாதிரி நிலத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஓடையில் போகக்கூடிய தண்ணீரை திருப்பிவிட்டால் கிணறுகளில் ஊற்றம் ஏற்படும். கிணறுகள் 100 அடிக்கு கீழ் சுரங்கப் பாதை போல் அமைந்திருக்கின்றன. ஆகவே, அம்மாதிரி வசதியைச் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 மார்ச் 26

என்னுடைய தொகுதியில் ரோடுகள் மிகவும் மோசம். ஆகவே அங்கெல்லாம் ரோடு வசதி செய்துதரவேண்டும். உதாரணமாக தென்னிலை-அஞ்சுகர் இடையே உள்ள பாதை, கோடம்பூர்-தென்னிலை இடையே உள்ள பாதை இப்படி பல பாதைகள் மோச மான நிலையில் இருக்கின்றன. நான் சொன்னதெல்லாம் எங்கே நடக்கப்போகிறது என்ற எண்ணத்தில் புள்ளிவிவரங்களைச் சேகரித்து வைத்துக்கொள்ள தவறிவிட்டேன். அந்த அளவுக்கு உண்மையிலேயே எனக்கு ஒரு கவலை ஏற்பட்டுவிட்டது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

வட ஆற்காடு, வந்தவாசி—சேதாரகுப்பம் இடையில் ஓடும் சுகநதியில் ஒரு பாலம் கட்டவேண்டும் என்று என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பேச்சை முடிவுபடுத்திக்கொள்ளக்கூடிய நிலைக்கு வந்துவிட்டேன். என்னுடைய பஞ்சப் பிரதேசம் அரவக்குரிச்சி. திருச்சி செழிப்பு மிக்க மாவட்டமாக இருந்தாலும் அந்த மாவட்டத்தோடு இந்தப் பகுதி ஒட்டிக்கொண்டிருக்கக்கூடிய காரணத்தினால் அது செழிப்பு மிக்க பகுதி என்ற அடிப்படையில் போய் விடுகிறது. அதனால் அந்தப் பிரதேசத்தின் பஞ்ச நிலை வெளியில் தெரியாத அளவுக்குப் போய்விடுகிறது. ஆகவே, அரவக் குரிச்சிப் பகுதியில் இருக்கக்கூடிய விசேஷ சூழ்நிலையை கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்கு ஒரு விசேஷ திட்டத்தை அமைத்துக் கொடுக்கவேண்டும். ஜனநாயகத்தில் ஒரு பகுதி, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட பகுதியாக இருக்குமானால் அதற்கு ஒரு விசேஷத் திட்டம் அமைத்துக்கொடுப்பதுதான் சிறந்த முறையாகும்.

**மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பள்ளப்பட்டி மக்கள் பஞ்சப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்கள் என்று சொல்கி றார்கள் உறுப்பினர் அவர்கள். அதை எப்படி ஒப்புக்கொள்வது என்று தெரியவில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** வாழ்க்கையில் சுகதுக்கங் களை துறந்து, மனைவி மக்களைத் துறந்து, குழந்தை குட்டிகளைத் துறந்து, பெண்டிர் பிள்ளைகளைத் துறந்து அயல் நாடு சென்று கஷ்டப்பட்டு, அரும்பாடு பட்டு, பொருள் ஈட்டிக்கொண்டு வந்து இங்கே அழகான கட்டடங்களைக் கட்டிக் கொண்டிருக்கி



1974 மார்ச் 26] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

றார்கள். ஆகவே, அங்கே பள்ளப்பட்டியில் வாழ்ந்துகொண்டிருக் கக்கூடிய ஒரு சிலரை மட்டும் வைத்துக்கொண்டு சொல்லக்கூடாது. கிராம மக்களை, அப்பாவி மக்களை, கந்தல்துணியைக் கட்டிக் கொண்டு இருக்கிற மக்களை, குடிக்க கூழைத் தவிர வேறு ஒன்றையும் பார்த்திடாத மக்களைப் பார்க்கவேண்டும். அந்த கிராம மக்களின் சார்பாக, வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்றுகூட கவனியாமல் எனக்கு வாக்களித்த அந்த மக்களின் சார்பாக, எனது தொகுதியில் உள்ள நல்ல உள்ளம் படைத்த மக்களின் சார்பாக—பள்ளப்பட்டி மக்களுக்காக இல்லை—என்னுடைய தொகுதி மக்களுக்காக ஏதேனும் சில திட்டங்களையாவது அருள் கூர்ந்து விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**திரு. அ. சே. குமாரசாமி:** பேரவைத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக் கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

1972-ம் ஆண்டு இறுதியிலே ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக பெரும் அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக என்னுடைய திருக்கோவிலூர் தொகுதி பெரிதும் பாதிக்கப்பட்டது. திருக்கோவிலூர் அணை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. அப்படி இருந்தும் நிதிநிலை அறிக்கையில் அந்த அணையைக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்பட வில்லை. 225 லட்சம் ரூபாய்க்கான ஒரு திட்டம் ஆய்வில் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. அந்த அணை 22 ஆயிரம் ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக்கூடியது. அது மூன்று தாலுகா விவசாயிகளின் பிரச்சினையாக இருக்கிறது. இப்போது டெம்பரரி டைவர்ஷன் ஆக சில திட்டங்களைப் போட்டு, ஆண்டுக்கு ஆண்டு பாசன வசதி ஏற்படுத்தி வருகிறார்கள். ஒரு பெருமழை பெய்தால்கூட டெம்பரரி டைவர்ஷனுக்கு செலவிடும் பணம் முழுவதும் வீணாகிப்போய்விடும். ஆகவே, காலதாமதம் இல்லாமல் நடப்பாண்டிலேயே இந்த திருக்கோவிலூர் அணையை ரெகுலேட்ட ருடன் 225 லட்சம் ரூபாய் திட்டத்தில் நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. துரைமுருகன் தலைமை)

மேலும் திருக்கோவிலூர் வட்டத்தில் இடையார்கோவில் வெள்ளப் பெருக்கில் பெரிதும் சேதம் அடைந்தது. செப்பனிடுவதற்கான பணிகளை பொதுப்பணித் துறை மேற்கொண்டது. இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. [illegible] ஆகிவிட்டது. உடனடியாக சீரமைப்பு வேலைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரசனூர் உயர்நிலைப்பள்ளி பெண்ணையாற்றங்கரையில் அமைந்திருக்கிறது. வெள்ளப் பெருக்கின்போது அந்தப் பள்ளிக் கட்டடம் அடித்துச்செல்லப்பட்டது. பள்ளிக்கூடம் மட்டுமல்லாமல் அந்த சுற்றுவட்டாரமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டப் பள்ளிக்கூடம் இன்னும் சீரமைக்கப்படவில்லை. உடனடியாக அதற்கான வேலைகளை மேற்கொண்டு, சீரமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில், வெள்ள நிவாரணப் பணியை மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் தற்காலிக நிவாரணப் பணிகளைச் சிறப்பாக செய்தார்கள். ஆனால் நிரந்தரமான பணி செய்யப்படவில்லை. இந்த நிரந்தர நிவாரணப்பணியில் என்னுடைய தொகுதி புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். பலமுறை அதைப்பற்றி இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். திருவெண்ணைநல்லூர்-ஏனாதிமங்கலம் பாதையைச் செப்பனிட வேண்டும். அதுமட்டுமல்லாமல் அங்கே ஒரு மேம்பாலத்தையும் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு ஒரு 5 லட்சம் ரூபாய்க்கான திட்டம் அரசின் [illegible] இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நடப்பாண்டிலேயே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சாலை அமைப்பதற்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களும், நெடுஞ்சாலைத் துறையும், இணைப்புச் சாலைகளை அமைக்கின்றன. மற்றும் கரும்பு செஸ் நிதி, மணிலா செஸ்நிதி வகைகளைக் கொண்டும் சாலை வசதிகள் செய்யப்படுகின்றன. இந்த கிராம இணைப்புச் சாலைகள் மிகவும் முக்கியமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அதற்கு இப்படித் தனித்தனியாக சாலைகளைப் போடுவதை விட, எல்லா நிதியையும் ஒன்றாகச் சேர்த்து, எல்லா வசதிகளும் கொண்டதாக அதாவது எதிர்காலத்திலே பஸ்கள் போக்குவரத்துக்குக் கூட





உகந்த சாலைகளாக கிராம இணைப்புச் சாலைகள் உருவாக்க ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, ஒருங்கிணைந்த திட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் திருக்கோவிலூர் அணையை 225 லட்சம் ரூபாயில் ரெகுலேட்டர் வசதிகளுடன் நடப்பாண்டிலேயே கட்டி முடிக்க வேண்டும். பெண்ணையாற்றின் கரையில் இருக்கின்ற பரசனூர் உயர்நிலைப்பள்ளியை சீரமைக்கும் வேலையை பொதுப்பணித்துறையே மேற்கொண்டு, நிறைவேற்றித் தரவேண்டும். திருவெண்ணைநல்லூர்-ஏனாதிமங்கலம் பாதையை செப்பனிட்டு 5 லட்சம் ரூபாய்க்கான பாலம் அமைக்கும் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) மற்றும் செய்ய வேண்டிய பணிகள் எல்லாவற்றையும் உடனடியாகச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

* திரு. ஏ. பாலையா: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் சுமார் 72 கோடி ரூபாய் அளவில் இந்த மானியக் கோரிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பருவ மழை பொய்த்ததன் காரணமாக சுமார் 40,000 எக்கர் நிலங்கள் தண்ணீர் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கரிந்து தீய்ந்து விட்டன. அதற்குக் காரணம் அந்த மாவட்டத்தில் பருவ மழை பொய்த்தது மட்டுமல்ல, அணையிலே இருக்கின்ற தண்ணீரை அங்கே இருக்கின்ற பொதுப்பணித்துறை அதிகாரி விவசாயத்திற்கு தேவையான காலத்தில், தேவையான நேரத்தில் தண்ணீரை சீராக ஒழுங்குபடுத்தி கொடுக்காததுதான் முக்கிய காரணமாகும். அதனால்தான் இத்தகைய ஒரு கரிவு நிலை அங்கே ஏற்பட்டது.

தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று அதிகாரிக்கு தெரிந்திருந்தும், கோதையாறு மேலணையில் மின்சாரத்திற்கு என்று தேக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவிலான தண்ணீரை

விவசாயத்திற்கு திறந்து விடுவதற்கான ஆலோசனையை அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லி, அனுமதியைப்பெற்று காலா காலத்தில் தண்ணீரை விவசாயத்திற்கு விட்டுக் கொடுத்திருந்தால் விவசாயம் பாதிக்கப்படாமல், விளைநிலங்கள் நாசமடையாமல் பாதுகாத்திருக்க முடியும். ஆனால் அந்த அதிகாரியின் அலட்சிய போக்கினால் காலம் கடந்து கோதையாறு தண்ணீர் விவசாயத்திற்கு விடப்பட்டது. அது விவசாயத்திற்குப் பயன்படாமல் போய்விட்டது; வீணாகப் பாய்ச்சப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கிய அந்த அதிகாரியினுடைய போக்கின் காரணமாகத்தான் அங்கே 40,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

பொதுவாக, பேச்சிப்பாறைத் தண்ணீரை எடுத்துக் கொண்டால், 40 அடி தண்ணீர் இருந்தால் கூட அங்கே இருக்கின்ற கடைவரம்பு நிலங்கள் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. காரணம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற விளை நிலங்கள் பருவமழை பொய்த்துவிட்டால், அணையில் முழு அளவுக்கு தண்ணீர் இருந்தாலும் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. மழை பெய்து, அணையில் நிறைய தண்ணீர் இருந்தால், ஒழுங்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டால் ஓரளவு பயிர்கள் வாடாமல் கரியாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் பேச்சிப்பாறையில் 10 அடி தண்ணீர் இருந்தால் கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய நிலங்கள் கரியக் கூடிய நிலைமை இருந்தால் கூட. அந்த அணையிலிருந்து ராதாபுரம் சானலுக்கு தண்ணீரை திறந்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி திறந்துவிடுவதன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற ஏராளமான விளை நிலங்கள் பாதிக்கப் படுகின்றன.

ராதாபுரம் சானலுக்கு தண்ணீர் திறந்து விடுவதில் அரசாங்கம் ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு குறியீட்டளவை கடைபிடிக்க வேண்டும். அப்படியானால்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விளைநிலங்கள் ஓரளவு பாது காக்கப்படும். அதிகாரிகள் அவர்கள் இஷ்டம்போல் தண்ணீர் திறந்துவிட முடியாமல் இருக்கும். இப்போது அவர்களுக்கு தோன்றும்போதெல்லாம் தண்ணீரை திறந்துவிடுகிறார்கள். ஒரு



குறியீட்டளவை நிர்ணயித்துவிட்டால், அதாவது தண்ணீர் 30 அடிக்குமேல் பேச்சிப்பாறை அணையில் இருந்தால் மட்டும் ராதாபுரம சானலுக்கு தண்ணீர் விடவேண்டும் என்று நடைமுறையை வகுத்துக்கொண்டால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பயிர் நிலங்கள் காப்பாற்றப்பட முடியும். அந்த நடைமுறையை அரசு கடைப்பிடிக்க வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும், பேச்சிப்பாறை அணையிலிருந்து வரக்கூடிய கால்வாய்கள் எல்லாம் பழுதுபட்டிருக்கின்றன. கால்வாய்கள் அனைத்தும் மண் மூடிக் கிடக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பேச்சிப்பாறை அணையிலிருந்து பதமனாபபுரம்-புத்தனாறு தண்ணீர் வீணாகக்கூடிய அளவில் மடைகளும் பழுது பட்டிருப்பதால் தண்ணீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதையெல்லாம் அதிகாரிகளிடம் சொல்லியும் இதுவரையிலும் அதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அந்தப் பணிகளை உடனடியாக இந்த அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு பாசனங்களுக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த சிறு பாசன வசதிகளுக்காக ஒதுக்கீடு செய்திருப்பதைப் பார்க்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திட்டங்கள் பற்றி சொல்லியிருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றுமே இல்லை என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. சுமார் 72 கோடி ரூபாய்க்கு சமர்ப்பித்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையில் ஒரு லட்சம் ரூபாய்க்கான திட்டம் கூட கன்னியா குமரி மாவட்டத்தில் இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 11.00)

இந்த அவையிலே பல்வேறு திட்டங்களைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். வள்ளியாற்றில் இருந்து லிப்ட் மூலம் முட்டம் சானலில் தண்ணீர் விடுவதாக இருந்தால், ஏற்கனவே முட்டம் சானலில் இருக்கிற இரண்டாயிரம் ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் போக இன்னும் ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பாசனத் திற்குக் கொண்டு வரமுடியும். முட்டம் சானல் கடைவரம்பு சானலாக இருக்கிறது. அதில் தண்ணீர் இல்லாத காரணத்தினால்

இரண்டாயிரம் எக்கரா நிலங்களும் கரிந்துவிட்டது. நான் சொன்ன இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தாலேயே பேச்சிப்பாறை அணைத் தண்ணீரை நம்பியிராமல், வள்ளியாறு தண்ணீரைக் கொண்டே சாகுபடியைச் செய்ய முடியும். இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கன்னியாகுமரி-நீரோடி கடற்கரைச் சாலைத் திட்டம் ஒன்று இருந்தது. அதைப் பரிசிலனை செய்து எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்து இரணியல்-முட்டம் சாலையில் வள்ளியாற்றின் குறுக்கே பள்ளம் பாலம் என்று ஒரு கம்பிப் பாலம் இருக்கிறது. அது பழுதடைந்திருக்கிறது. அதில் பாரவண்டி வாகனங்கள் போகக் கூடாது என்கிற போர்டு இருக்கிறது. அந்தப் பாலத்தையும் செம்மைப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு. . . (மணி அடிக்கப்பட்டது.)

திரு. பா. நாகலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சரால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து, அந்தத் துறையில் பணியாற்றுகிற அத்தனை அதிகாரிகளுக்கும் என் பாராட்டுதல்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நீண்டநெடுங்காலமாக இரண்டு பாலங்களைப்பற்றி அடிக்கடி சொல்லி வருகிறார்கள். நாபாளையம் மேம்பாலம் அனுமதிக்கப் பட்டுள்ளது. அதற்கடுத்து பொன்னேரி மேம்பாலம்—முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரை அழைத்துப்போய் காட்டினோம் —அந்தப் பகுதியில் உள்ள 50 கிராம மக்கள் பொன்னேரி நெருநகரத்திற்கு மழை காலத்தில் வருவதானால் எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லியும்—இதுநாள் வரை எடுத்துக் கொள்ளவில்லை. அதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட ஜனத் தொகைக் கொண்ட கிராமங்களில் ரூரல் ரோடு ஸ்கீம்படி சாலைகள் போடுவதாகச் சொன்னார்கள். அன்னாமலைச்சேரி, கள்ளூர் போன்ற கிராமங்களில் முஸ்லிம் மக்களும் மற்றவர்களும் அதிகமாக வாழ்கிறார்கள். அந்தச் சாலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைமைப் பொறியாளரிடத்தில் இருந்து நம் அரசின் சார்பில் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருப்பதாக கேள்விப்படுகிறேன். அந்த ரோடை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று உள்ளாட்சித் துறையைக் கேட்டால் பொதுப்பணித் துறையைக் கேட்கச் சொல்கிறார்கள். பொதுப்பணித் துறையைக் கேட்டால் உள்ளாட்சித்துறையைக் கேட்கச் சொல்கிறார்கள். அதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து பாசனத்தைப் பொறுத்தவரையில் செங்கைக்குப் பக்கத்தில் இருக்கிற என் தொகுதி பொன்னேரி. அந்தப் பொன்னேரி நிலவள வங்கி சார்பில்—பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், பசுமைப் புரட்சி வேண்டுமென்று நம் சர்க்கார் கடன் கொடுத்தார்கள் போர்-வெல் போட. ஆனால் அந்தத் தொகுதியில் ஆழக் குழாய்க் கிணறுகளை அமைத்து, ஆயில் ரிபைனரிக்கு தண்ணீர் சப்ளை செய்கிற காரணத்தினால் பொன்னேரிப் பகுதியில் உள்ள விவசாயிகளது போர்-வெல்கள் நின்றுவிடுகின்றன.

தண்ணீர் இல்லாது சப்ளை பாதிக்கப்படுகிறது. மேலும் ஆழப் படுத்த நிலவள வங்கிகளில் இருந்து லோன் தரப்படவில்லை.

திருவொற்றியூர் தொகுதியில் ஆயில் ரிபைனரி இருக்கிறது. சைதை தாலுக்கா நிலவள வங்கிகளில் லோன் தருகிறார்கள். அந்தத் தாலுக்காவுக்கு அப்பால் இருக்கிற எங்கள் தாலுக்காவில் லோன் நிறுத்தப்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அங்குள்ளவர்கள் நீங்கள் தருகிற வரியைவிட தொழிற்சாலைக்காரர்கள் தருகிற பணம் அதிகம் என்கிறார்கள். அதுபோல இன்றி, பொன்னேரி தாலுக்கா நிலவள வங்கிகளும் ஏழை விவசாயிகளுக்கு லோன் தர ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) நாங்கள் அடிக்கடி பேசுவதில்லை. ஒரு மானியத்தில்தான் பேசுகிறோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு துரைமுருகன்): ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேரவைத் தலைவர் ஒதுக்கிய நேரம் 5 நிமிடங்கள்தான்.

திரு. பா. நாகலிங்கம்: இப்படிச் செய்தால் நாங்கள் என்ன பண்ணுவது? பேச்சு பத்திரிகையில் வரவில்லை என்றால், அப்புறம் தொகுதியில் இருக்கிறவர்கள் கேள்விக்கு என்ன பதில் சொல்ல முடியும்?

இன்றைக்கு ஊராட்சி மன்றச் சாலைகளைப் பராமரிக்க கொடுக்கப்படுகிற நிதி போதுமானதாக இல்லை. ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்குட்பட்ட அதிகாரி ஆயிரம் ரூபாய் என்று மதிப்பீடு செய்து, கொடுத்து விடுகிறோம். இப்படி சாலை போடுவதற்காகக் கொடுக்கப்படுகிற பணம் சாலை போடப் பயன்படுவதில்லை. வேறு வகையில்தான் பயன்படுகிறது. ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் இதைப் பரிசீலித்து, ஊராட்சி மன்ற சாலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். . .

* திரு. எம். கோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, 1974–75-ஆம் ஆண்டு பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேச முற்படுகிறேன்.

முதலிலே 4½ கோடி மக்களின் நாயகராக தலைமை தாங்கி வருகிற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் பல நூற்றாண்டு காலமாகச் செய்யாத —மிகப் பெரிய ஏரியான செம்பரம்பாக்கம் ஏரியை மராமத்து செய்ய 75 லட்சம் ரூபாய் ஒதுக்கி, வேலைகள் நடைபெறும்படி யாகச் செய்திருக்கிறார்கள். அதற்காக என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என் தொகுதியில் தென்னேரி, மணிமங்கலம் ஏரி, படப்பை ஏரி ஆகிய பல ஏரிகள் இருக்கின்றன. தென்னேரி, மணி மங்கலம் ஏரிகள் தூர் வாரப்படவில்லை. இரண்டாண்டுகளுக்கு முன்பு முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக்கை அழைத்துக் கொண்டு போய்க் காட்டினோம். அதற்குப் பணம் ஒதுக்குவதாகச் சொன்னார்கள். ஆனால் எந்த வேலையும் எடுத்து நடத்தப்படவில்லை.





அதோடு மணிமங்கலம் ஏரியை ஆழப்படுத்த வேண்டும். அதற்குத் தண்ணீர் வருவாய் இல்லை. ஒரு ஓடை வீணாக சைதை ஆற்றில் கலந்து கடலில் போய் வீணாகிறது. அந்தக் கால்வாயை அந்த ஏரியோடு சேர்த்து மணிமங்கலம் ஏரி, படப்பை ஏரியில் தண்ணீர் நிரம்பச் செய்தால் நிறைய விவசாயம் செய்ய முடியும்.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு தான் ஏரிகள், குளங்கள், கிணறுகள் ஆகிய வேலைகள் நடைபெறு கின்றன. விளைச்சலும் அதிகமாகி, பற்றாக்குறையும் தீர்ந்திருக் கிறது. மேலும் உற்பத்தி பெருக இந்த ஏரிகள் எல்லாம் உடனடி யாகச் செப்பனிடப்படவேண்டும்.

இணைப்பு சாலை பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். என் தொகுதி குன்னத்தூர் ஒன்றியம். செயல் படுவது படப்பையிலிருந்து. படப்பை செல்ல வேண்டும் என்றால் 25 மைல் ஏறக்குறைய சுற்றித்தான் செல்ல வேண்டும். குறுக்கே செல்ல வேண்டுமென்றால் 8 மைல் ஆகும். அந்த குறுக்கு வழியில் சாலை போட எனக்கு முன்னால் இருந்த பெரியவர்கள் எஸ்டிமேட் தயாரித்து திட்டங்கள் போட்டிருந்தார்கள். ஆனால் இதுவரை போடவில்லை. தாம்பரம் சென்று வண்டலூர் சென்றுதான் படப்பை போக வேண்டும்.

அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து இந்த குறுக்குப் பாதையைச் செப்பனிட்டுப் போட்டுக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்கள் என்றென்றைக்கும் பாராட்டுவார்கள். ஆகவே எப்படி யாகிலும் இந்த குறுக்குப் பாதையைப் போட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

படப்பை தொகுதியைச் சுற்றி வரவேண்டும் என்றால் காவனூர், உலத்தூர் போன்ற கிராமங்களைச் சுற்றிப் போக வேண்டும். அதற்கான பாதைகளைச் செப்பனிட்டால்தான் நல்ல முறையில் செயலாற்ற முடியும். மக்களும் நன்மை பெறுவார்கள். இந்த மானியத்தின் மூலம் ஒதுக்கப்படும் பணத்தை எந்த எந்த தொகுதியில் மக்களுக்கு வரவில்லையோ அந்தப் பகுதிகளுக்கு ஓரளவு நியாயமான முறையில் பங்கிட்டு பாதைகளைச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. எம். கோபால்] [1974 மார்ச் 26

அதைப் போல தென்னேரி மூலம் மூன்று போகம் விளையக் கூடிய பகுதியின் நன்மையை உத்தேசித்து தென்னேரியைச் சீரமைப்பு செய்து தர வேண்டும். அப்படி செய்து தந்தால் தென்னேரி பாய்கின்ற பகுதி தஞ்சாவூர் போன்று செழிப்பான பகுதியாக ஆகிவிடும்.

இப்போது அந்தப் பகுதியில் ஒரு சில வறட்சி பகுதியாக ஆகி விட்டது. இருந்தபோதிலும் கடன் வசூல் செய்கிறவர்கள் ஜப்தி நடவடிக்கை போன்றவற்றில் இறங்கியிருக்கிறார்கள். அதை எல்லாம் கொஞ்ச காலம் ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்திற்கு ஆதரவு தெரிவித்து விடை பெறு கிறேன்.

* திரு. குழ. செல்லையா : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பாசன பொதுப்பணித் துறை மானியத்தின் மீது அன்று தி.மு.க. வின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களை வழி மொழிகின்ற முறையில் ஒரு சில வார்த்தை களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, நீர்ப்பாசன வசதிதான் நாட்டில் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிகமிக முக்கியமானது என்பதை நாம் எண்ணிப் பார்க்க மறந்து விடக் கூடாது.

தற்போது காவிரியில் மைசூர் மாநிலத்தில் அணை கட்டப்பட்டு நம் தமிழகத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்குமா கிடைக்க காதா என்று எண்ணிக் கொண்டு இருக்கிற நேரத்தில் நம் பகுதியில் இருக்கிற ஆறுகள், காட்டாறுகள் மீது அணை கட்டுவதன் மூலமும் குளங்களை மராமத்து செய்வதன் மூலமும்தான் நீர் பாசன வசதியை நிறைவு செய்து உற்பத்தி குன்றாமல் இருக்கச் செய்ய முடியும்.

குளங்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ளன. அப்படி அவைகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலங்கள் கணக்கில் உள்ளவை. எந்தப் பகுதியிலாவது முழுமையான குளங்கள் இருக்கின்றனவா என்றால் இல்லை.



1974 மார்ச் 26] [திரு. குழ. செல்லையா]

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏரிகள் குளங்கள் எல்லாம் தனியார் பட்டா போட்டு அசைன்மெண்ட் போட்டு சாகுபடி செய்கிற நிலைமைதான் இருக்கிறது. ஆனால் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில் ஒரு கடுமையான சட்டம் போட்டாக வேண்டும்.

குளங்கள் ஏரிகள் பக்கத்தில் யார் சாகுபடி செய்தாலும் பட்டா வாங்கினாலும் அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்ற சட்டத்தை மிக விரைவாக துரிதமாக போட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உண்மையில் ஏழை ஹரிஜனங்கள் அப்படிப்பட்ட குளங்களை பயன்படுத்துகிறார்களா என்றால் இல்லை. யார் பணக்காரர்களோ, வசதி மிக்கவர்களோ, அதிகாரம் கொண்டவர்களோ அவர்கள் கையில் குள நிலங்கள் எல்லாம் இருக்கின்றன. இதை எல்லாம் அப்புறப்படுத்த உடனடியாக நடவடிக்கை தேவை என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இந்த பாசன திட்டங்களை கட்சி பாகுபாடு இன்றி காரியங்களை செய்ய வேண்டும்.

என் தொகுதியாகிய பேராவூரணியைப் பற்றி குறிப்பிட வேண்டுமென்றால் 1971-லிருந்து 1974 வரை மூன்றாண்டு காலத்தில் பொதுப் பணி பாசனம் போன்றவற்றில் சிறிய வேலை கூட நடக்க வில்லை என்று மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமை பட்டு இருக்கிறேன்.

குளங்களைப் பற்றி சொல்லுகிற நேரத்தில் ரெவின்யூவிற்கும் பொதுப் பணிக்கும் தொடர்பு உண்டென்றாலும் ஏரிகள் குளங்கள் எல்லாம் யார் யார் கையில் இருக்கிறது என்று நிச்சயமாக சொல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது.

புதுக்கோட்டை ஆலங்குடி பக்கத்தில் மழவாராயன் பட்டியில் ஹரிஜனங்கள் பரம்பரையாக ஒரு குளத்தை அதன் பக்கத்தில் இருக்கிற பூமியை இடுகாடாக, சுடுகாடாக வைத்திருந்தார்கள். அந்தச் சுடுகாட்டிற்கும் அந்த நிலத்திற்கும் தொடர்பு இருக்கிறது. இந்த 56 செண்டு நிலம் இன்றைக்கு தனியார் கைக்கு போய் விட்டது. அதிகாரத்தில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர்கள் தூண்டுதலின் பேரில்

ஊராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் வாக்களிக்கவில்லை என்ற ஒரே காரணத்தால் தனியாருக்கு பட்டா செய்து அந்த சுடு காட்டை அப்புறப்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாக்கப் பட்டிருக்கிறது. அதற்காக எவ்வளவோ முறையீடு செய்தும் எந்த விதமான நடவடிக்கையும் இல்லை.

9—11—1973-ல் அந்த ஹரிஜன மக்கள் பல அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் எழுதி இருக்கிறார்கள். ஆனால் இது வரை எந்த விதமான நடவடிக்கையும் இல்லை. 56 சென்டில் 20 சென்டாவது வேண்டும் என்று இந்த ஹரிஜன மக்கள் கேட்டு இருக்கிறார்கள். ஆலங்குடி தாசில்தாரின் உறவினருக்கு வழங்கப் பட்டதாகத் தெரிகிறது. அரசியல் காரணங்களால் இப்படி எல்லாம் செய்து வருகிறார்கள். அதனால் ஹரிஜன மக்கள் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள்.

எவ்வளவோ முயற்சி செய்தும் பட்டா கொடுத்ததை மாற்ற முடியவில்லை. அந்த ஆர்.டி.ஓ. எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப் பார்த்திருக்கிறார்கள். 20 சென்டாவது கொடுத்துவிடுங்கள் என்று. ஆனால் மாற்ற முடியுமா என்றால் மாற்ற முடியும். அதிகாரிகள் ஜாதி விரோதத்தால் செய்ய முடியாமல் பயந்து கொண்டிருக் கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல் அந்த சுடுகாட்டில் இருந்த எலும்புகளை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு போலீசை விட்டு இது சுடுகாடல்ல என்று சொல்ல வைத்திருக்கிறார்கள். கணக்கு பிள்ளையைச் சொல்ல வைத்திருக்கிறார்கள். இப்போது அந்த ஏழை மக்களுக்கு சுடுகாடு கிடையாது. சமீபத்தில் அந்த இடத்தில் இறந்து போன ஒரு குழந்தையை புதைக்கப் போன நேரத்தில் ஒரு வழக்கை அவர்கள் மீது பதிவு செய்திருக்கிறார்கள் காவல் துறை யினர், குடியிருப்பு பகுதியில் புதைக்கச் சென்றதாக.

நான் இதையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் இப்படி குளங்களின் பக்கத்தில் இருக்கிற நிலங்களை ஏழை மக்களுக்கு வசதி இல்லாதவர்களுக்கு கொடுத்தாலும் பரவாயில்லை. வசதி மிக்கவர்களுக்கு இந்த மாதிரி பட்டா செய்து கொடுக்கக் கூடாது.

**திரு. மு. பெரியசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.





குழந்தை செத்துப் போய் அதைப் புதைக்க வசதி இல்லாமல் போய் விட்டதாக மான்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டார்கள். ஜனங்கள் புழங்குகின்ற ஜாதி இந்துக்கள் இருக் கின்ற இடத்தில் இந்த மாதிரி கோரிக்கை எழுப்பப் பட்டதா அல்லது ஹரிஜனங்களுக்காக புதைக்க இடம் ஒதுக்கப்பட வில்லையா என்பதை விளக்க வேண்டும்.

**திரு. குழ. செல்லையா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்க கடமைப்பட்டு இருக்கிறேன். ஊராட்சிமன்றம் மாஞ்சன் விடுதியில் மழவராயன்பட்டி ஒரு ஹேம்லட். பரம்பரையாக அங்கிருந்த ஹரிஜனங்கள் இறந்தால் கொளுத்த புதைகுழி இருந்த இடத்தில்—திருட்டுத்தனமாக என்றுகூட சொல்ல முடியும் —ஒரு சிலர் பட்டா போட்டுக்கொண்டு 56 செண்ட் இடத்தை சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இறந்த குழந்தையை புதைக்கச் சென்ற நேரத்தில் பட்டா இருக்கிறது என்று சொல்லி போலீசை கூப்பிட்டு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இது நியாயம் தானா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அவர்கள் அங்கே எந்த குடியிருப்புக்குள்ளேயும் கொண்டு போய் புதைக்கவில்லை, மற்றவர்களுக்குச் சம்பந்தப்பட்ட இடங் களிலும் புதைக்கவில்லை, அவர்கள் பரம்பரைபரம்பரையாக புதைத்து வந்த இடத்திலேதான் புதைத்துவரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை யார் வேண்டு மானாலும் போய்ப் பார்க்கலாம், அந்த ஆர்.டி.ஓ.-வே போய் பார்த்திருக்கிறார், அவரேகூட அதிகாரிகளிடத்தில், 20 சென்டை விட்டு விடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை விட்டால் அவர்களுக்கு வேறு இடம் இல்லை என்பதை வலியுறுத்திக் காட்டு வதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன்.

அரிசன மக்கள் மைனாரிட்டியாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அங்கே அதிகாரத்தை வைத்து மிரட்டுகிறார்கள்.

அதேபோலத்தான் போராவூரணி பேரூராட்சியில் நாட்டாணிக் கோட்டை என்ற கிராமத்திலே பெரிய குளம் என்ற பகுதி இருக் கிறது, அதுவும் குளத்திற்குள்ளே ஒரு சுடுகாட்டாகத்தான் இருக்கிறது, அந்தக் குளத்தையும் பட்டாப் போட்டு வழங்கியிருக் கிறார்கள். அதனால் அங்கே பெரிய கலவரங்கள் ஏற்பட்டு கடைசியில் அவர்களுக்காக என்று 8 செண்ட் நிலத்தை புதைகுழிக்காக

[திரு. குழ. செல்லையா] [1974 மார்ச் 26

என்று விட்டு வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நாள் அங்கே அதற்காக கலவரம் ஏற்பட்டு போலீஸ் வரைக்கும்போய் முடிவில் அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுத்துவிடவேண்டிய நிலைமை வந்தது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல அவர்கள்மீது வழக்குகளையும் பதிவுசெய்கிறார்கள். சட்டம் இருக்கிறது, பட்டா வழங்கப்பட்ட நிலத்திலே அத்துமீறி உள்ளே போனால் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கலாம் என்ற சட்டம் இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு அவர்கள் வழக்குகளை பதிவுசெய்கிறார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு கொடுத்த பட்டாவை ரத்துசெய்வதற்கு உரிமை இருக்கிறது. இதை நான் மீண்டும், மீண்டும் சொல்வதற்குக் காரணம் அவர்களுக்கு அங்கே வேறு இடம் இல்லையென்ற காரணம்தான். ஆகவே அந்த இடத்திலே 20 சென்ட் நிலத்தை அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, அவர்கள் மேல் போடப்பட்டு இருக்கிற உண்மைக்கு மாறான வழக்குகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்திப் பெருக்கத்திலே பல்வேறு காரியங்களைச் செய்கிறபோது போக்குவரத்துக் காரியங்களை ஒன்றியங்களிடத்திலே விட்டு இருக்கிறோம். ஒன்றியங்களுக்கு சாலை போக்குவரத்துக் காரியங்களை கவனிப்பதற்காக அதிகமான நிதி கொடுக்கப்படவேண்டும். அப்படியில்லாவிட்டால் அந்தக் காரியங்கள் நடைபெறாது. குறிப்பாக கடற்கரையை ஒட்டிய பகுதிகளிலே அதிகச் செலவு அதற்காக ஆகிறது, ஆகவே ரோடு மானியங்களை அதிகப்படுத்தவேண்டுமென்ற வகையிலேயும் இது ஒரு அடிப்படைத் திட்டம் என்ற வகையிலேயும் அதிகமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணம் என்ற பெயரிலே அறந்தாங்கி தாலுகாவிலே 30 லட்ச ரூபாய் செலவாயிற்று என்று சொல்லப்படுகிறது. அந்தச் செலவிற்காக என்ன என்ன காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்றே தெரியவில்லை. கணக்கு இருக்கலாம், ஆடிட் செய்திருக்கலாம், ஏ. இ. செய்திருக்கலாம். ஆனால் அந்தப் பகுதி



1974 மார்ச் 26] [திரு. குழ. செல்லையா]

மக்கள் எல்லாம் ஒன்றுமே நடைபெறவில்லை என்று சொல்லி சந்தேகிக்கிறார்கள். 30 லட்ச ரூபாயை அறந்தாங்கி தாலுகாவிலே போக்குவரத்து பணிக்காகவும், குளங்கள், ஏரிகள் பராமரிக்கின்ற பணிக்காகவும் சரியான முறையிலே செலவழிக்கவில்லை, முறைகேடுகள் நடந்திருக்கின்றன, ஊழல்கள் நடத்துகின்றன என்று சர்வகட்சிகூட்டங்கள் போடப்பட்டு பேசியிருக்கிறார்கள், அதைப் பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையின் சார்பாக, சாலையோரங்களிலே போடப்பட்டிருக்கிற கடைகளைப் பிரிக்கிறார்கள், அது நியாயமாக இருக்கலாம். ஆனால் சாலையோரங்களிலே இருக்கிற குடிசைகளை பிரிக்கிறார்கள். அவர்களுக்கு நியாயமாகப் பட்டா இருந்தாலும் அவர்களைத் தடுத்திருக்கிறார்கள், கோர்ட்டிற்குச் சென்றிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது.

ஆனால் பெரிய கட்டடங்கள் இருந்தால் சாலையோரங்களிலே அவற்றை விட்டுவிடுகிறார்கள், ஆனால் சிறிய சிறிய குடிசைகளைப் பிரித்து விடுகிறார்கள். ஆகவே குடிசையாக இருந்தாலும், பெரிய கட்டடமாக இருந்தாலும் முறையாக எல்லோருக்கும் ஒரே மாதிரியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பி. இ. படித்தவர்கள் வாரியங்களுக்கு வருகின்ற நேரத்திலே நேரடியாக ஏ. இ. க்களாக வந்துவிடுகிறார்கள். ஆனால் பொதுப் பணித் துறையிலே இருக்கின்றவர்கள் ஜே. இ. ஆக இருந்த பிறகு தான் ஏ. இ. யாக வரமுடிகிறது. ஒரே தரமான படிப்புப் படித்தவர்கள் சில இடங்களிலே ஏ. இ. யாகவும் சில இடங்களிலே ஜே. இ. யாகவும் பணியாற்ற நேரிடுகிறது. ஆகவே ஜே. இ. யாக பணியாற்றிய சர்வீஸ்ஸையும் அனுபவத்தையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு ஏ. இ. பதவி கொடுக்கப்படவேண்டும் அல்லது, அத்தனை பேர்களையும் ஏ. இ. க்கள் ஆக்கிவிடவேண்டும் அசிஸ்டென்ட் எக்ஸிக்யூடிவ் என்ஜினியர் பதவி உருவாக்கப்போவதாக அறிகிறேன். அதற்கு நேரடியாக ஏ. இ. பதவியிலிருந்து நீண்டகாலமாக சர்வீஸ் பண்ணியவர்களாக இருந்தால் யாருக்கு அதிகமான சர்வீஸ் இருக்கிறதோ யார் சீனியாரிடிபடி வருகிறார்களோ அவர்களுக்குத்தான் அந்தப் பதவி கொடுக்கப்படவேண்டும். இல்லையென்றால் யாரோ தனிப்பட்டவர்களுக்கு செய்யக்கூடிய

[திரு. குழ. செல்லையா] [1974 மார்ச் 26

காரியம் ஆக இருக்கும். கட்சிக் கண்ணோட்டம், பொதுப்பணி, பாசனம், கட்டடம் ஆகிய பணிகளில் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே தேசிய நெடுஞ்சாலை கடற்கரை போரச்சாலை என்ற முறையிலே அம்மணிச்சத்திரத்திலே ஒரு பாலம் கட்டப்படுகிறது. அந்த வேலை நான்கைந்து ஆண்டுகளாக நடைபெறவே இல்லை. காரணம் கேட்டால் ரிவைஸ்டு எஸ்டிமேட் போடவேண்டுமென்று சொன்னார்கள், இரண்டு ஆண்டுக்காலம் அதற்காகத் தாமதம் ஏற்பட்டது என்று சொல்கிறார்கள், ஏன் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று கேட்டால் அண்ணா அறநிலைய க .டளை நிதிக்கு 50 ஆயிரம் ரூபாய் வாங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால்தான் தாமதம் ஏற்படுகிறது என்றும் சொல்கிறார்கள்.

இப்பொழுது அந்த வேலை துவங்கியிருந்தாலும்கூட அங்கே கலவை சரியாகப் போடப்படுவதில்லை, போதுமான கண்காணிப்பு இல்லை, அந்த வேலையை நல்லமுறையிலே செய்து விரைவாக முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற நிதிக்கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைப் பேச முன்வருகிறேன்.

கடந்த ஆண்டு தமிழகத்திலே புயல் வந்த நேரத்தில் தஞ்சை மாவட்டம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட நிலையில் மத்திய அரசு ரோடுகளைச் செப்பனிடுவதற்கும் பல்வேறு பணிகளைச் செய்வதற்கும் நிதிகொடுக்கவேண்டுமென்று நாம் கேட்ட நேரத்தில் அவர்கள் ஒரு ஆய்வுக் குழுவை அனுப்பினார்கள். அவர்கள் தஞ்சை மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளை சுற்றிப்பார்த்து சாலைகளைப் பழுதுபார்க்கவும் செப்பனிடவும் ஒன்றியங்கள் மூலமாக பல வேலைகளை எடுத்துக்கொள்ளப்படவும் நிதி ஒதுக்க வேண்டுமென்ற முறையிலே பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் நம்முடைய அரசிற்கு, மத்திய அரசு ஒரு கணிசமான தொகை கொடுக்கும் என்று நாம் எதிர்பார்த்த பரிந்துரைத்தத் தொகை முழுவதும் வராத காரணத்தினாலே சாலைப் பணிகளும் மற்றப் பணிகளும் ஆங்காங்கு முழுவதும் நிறைவேற்றப்படமுடியவில்லை



1974 மார்ச் 26] [திரு. எஸ். கணேசன்]

என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் தமிழக அரசை மத்திய அரசு புறக்கணித்துக்கொண்டே வருகிறது என்பதைப் பார்க்கிறோம்.

காவிரி நீர்த் தகராறு பொறுத்தவரையில் மத்திய அரசு ஓர வஞ்சனையாக நடந்துகொண்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் இங்கே ஒருமைப்பாடுபற்றி தீவிரமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். மைசூர் மாநிலத்திலே காவிரியின் நீரைத் தடுப்பதற்காக அணையைக் கட்டுகிற நிலையில் மத்திய அரசின் அனுமதிபெற்றுத் தான் கட்டவேண்டுமென்ற நிலை இருந்தாலும் அப்போதிருந்த ஆட்சியாளர்கள் அனுமதியைப்பெற்று கட்டமுன்வந்தார்களா என்றால் கிடையாது. அனுமதி பெறாமல் கட்டினார்கள். அதற்குப் பிறகு வந்த கவர்னர் ஆட்சியிலேகூட தேசிய ஒருமைப்பாட்டை எண்ணிப்பார்த்து மத்திய அரசு அதைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்வந்திருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் கிடையாது. அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து அந்த வேலைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

தேசிய ஒருமைப்பாடு வாயளவிலே பேசுவதற்காகத்தான் இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் அதைப்பற்றி நாட்டுணர்வோடு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை.

மைசூரிலே காவிரியின் குறுக்கே அணை கட்டப்படுகிறது. என்ன முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்று நம்மைப் பார்த்து கேட்கிறார்கள். ஆனால் மத்திய அரசினுடைய அனுமதியில்லாமல் கட்டுவது எந்த அளவிற்கு இந்த மாநிலத்தினுடைய வருங்காலத்தைப் பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.

(முற்பகல் 11.30)

நாம் கிணறுகளை ஆழப்படுத்துகிறோம், ஏரிகளைத் தூர் எடுக்கிறோம், அதேபோன்று ஆறுகளை அகலப்படுத்துகிறோம். ஆனால் வருங்காலத்தில் காவிரியே வற்றக்கூடிய நிலைமையிருக்கிறதே, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அக்கறை ஏதாவது எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த வகையில் எப்படிப் பார்த்தாலும் மத்திய அரசு தமிழகத்தைப் புறக்கணித்துக்கொண்டிருக்கிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

[திரு. எஸ். கணேசன்] [1974 மார்ச் 26

அடுத்து, என்னுடைய தொகுதியைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நண்டலார், அய்யாலூர் போன்ற ஆறுகளில் ஒவ்வொரு ஆண்டும் பெருமழை பெய்யும் காலங்களில் உடைப்பெடுத்து, அதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பாழாகும் நிலைமை முன்பிருந்தது.

ஆனால், நம்முடைய கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் அந்தப் பகுதிக்கு வந்து சுற்றிப் பார்த்து, நண்டலார் ஆற்றின் கரைகளை வலுப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நண்டலார் கரைகளில் ஜீப்புகள் செல்லக்கூடிய அளவில் கரைகள் வலுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அந்தக் கரைகளில் ஆங்காங்கு சிலயிடங்களில் மழையின் காரணமாக அரிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, பொதுப்பணித் துறையில் அதை மேலும் பழுது பார்த்து, அந்தக் கரை செம்மையாக இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

செம்பனார்கோவில் தொகுதியில் நண்டலாற்றின் ஒரு கிளை ஆறாக ஓடுகின்ற சந்திரபானு என்ற ஆற்றில் 1970 ஆம் ஆண்டில் ஒரு பெரிய மதகு உடைந்தது. அப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த திரு. சாதிக் பாட்சா அவர்கள் உடைப்பினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தைப் பார்த்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் உடனடியாக அங்கேயிருந்த டி.ஈ.யிடம் சொல்லி, மதிப்பீடு தயார் செய்யச் சொல்லி, ஆக்க வேலைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இப்பொழுது நான்காண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அந்த மதிப்பீடு எந்தத் துறையால் தயாரிக்கப்பட இருக்கிறது, எப்பொழுது அந்த வேலைகள் மேற்கொள்ளப்படும் என்பதைப் பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கான ஆக்கப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதியில் பொறையார்-மங்கநல்லூர்-நல்லாடை-செம்பனார்கோவில் சாலை ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருந்த நேரத்தில் மிகச் சிறப்பான சாலையாக இருந்தது. பிறகு அது அரசு மேற்கொண்ட சாலையானதற்குப் பிறகு மிகமிகப் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அதனால் அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் சட்டமன்ற உறுப்பினராகிய என்னை மிகவும் குறை பேசுகின்ற நிலைமையிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தச் சாலையை வருகிற ஆண்டிலேயாவது தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)



1974 மார்ச் 26] [திரு. எஸ். கணேசன்]

*திரு. எஸ். சகாதேவன்: தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த பொதுப்பணித் துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். தமிழ்நாட்டில் ஆளுங்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப் பிறகு நமது பொதுப்பணித் துறையின் மூலமாக, பட்டி தொட்டிகளிலெல்லாம் நல்ல சாலைகளையும், 1,500 மக்களுக்கு மேற்பட்ட இடங்களில் கிராமப் பணி வளர்ச்சித் திட்டத்தையும் உருவாக்கி எல்லாக் கிராமங்களிலும் சாலைகள் போடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றியும், என்னுடைய தொகுதியில் நடைபெறவேண்டிய வேலைகளைப்பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கிராமங்கள் அதிகமாக அடங்கிய தொகுதியாகத்தான் அது இருக்கிறது. என்னுடைய தொகுதியில் எந்தவிதமான நகரமோ, எந்த விதமான பெரிய போக்குவரத்துள்ள இடமோ இல்லை. அத்தனையும் கிராமங்கள் அடங்கிய தொகுதிதான் என்னுடைய தொகுதி.

ஆகவே, அந்தக் கிராமங்களில் ரோடுகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, செஞ்சியிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில் செல்லபிராட்டியில் பிரியும் சாலையில், பென்னகர், தாமனூர் வழியாகச் சென்று வடார்க்காடு மாவட்டத்திலுள்ள வெடால் என்ற ஊரை அடையும் சாலையைப் போட வேண்டுமென்று நாங்கள் நீண்ட நாட்களாகக் கேட்கிறோம். அந்தச் சாலையில் சுமார் 60, 70 கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் போக்குவரத்து வசதியில்லாமல் அந்த மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அந்த வேலையைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். சகாதேவன்] [1974 மார்ச் 26

அடுத்தபடியாக, திண்டிவனத்திலிருந்து வந்தவாசி செல்லும் சாலையில் வெள்ளிமேடுபேட்டையில் பிரிந்து விரணாமூர் வரை செல்லும் ரோட்டைப் பராமரித்து, கிராமப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழே அந்த ரோட்டைப் போட்டுத் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திண்டிவனத்திலிருந்து செஞ்சி செல்லும் பாதையில் வெண்மணியாத்தூர், நடுவநந்தல், புலியனூர் வரை செல்லும் சாலை இருக்கிறது. அதில் பஸ்கூடப் போயிருக்கிறது. ஆனால் அந்தப் பாதை சரிவர இல்லை. எனவே, அந்தச் சாலையையும் போட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று செஞ்சியிலிருந்து ரெட்டணை செல்லும் சாலை இருக்கிறது. திருவம்பட்டு, மாம்பட்டு வழியாக அந்தச் சாலை செல்கிறது. அதிலே பேருந்துகூட விடப்பட்டு இருக்கிறது. ஆனால் ஒருநாள்கூட ஒரு தடவைகூட அந்தப் பேருந்து சரியாகப் போவதில்லை. ஏனென்றால் ரோடு சரிவரயில்லாமல் இருக்கிறது. எனவே, அந்தச் சாலையையும் போட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாலங்கள் கட்டுவதைப்பற்றிச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சங்கராபரணி ஆற்றில் ரெட்டணையிலிருந்து செஞ்சி செல்லும் வழியில் ரெட்டணைக்கு அருகில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நெடுங்காலமாகக் கோரி வருகிறார்கள். அங்கே மழை பெய்தாலும், வெள்ளம் வந்தாலும் சுமார் 60, 70 கிராமங்களுக்குப் போக்குவரத்து இல்லாமல், ஒரு தீவில் மாட்டிக்கொண்டதைப்போல் கஷ்டப் படுகிறார்கள்.

ஆகையால் எப்படியாகிலும் அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டு மென்பதற்காகக் கூட, அந்தப் பாலத்தின் அருகில் உள்ள கிராம மாகிய திருவம்பட்டியிலிருந்து ஒரு சட்டமன்ற உறுப்பினரைக் கூட முன்பு அவர்கள் அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர் வந்து போனாரே தவிர, அவர்கள் காலத்தில் பாலம் கட்டவில்லை. ஏற்கனவேயிருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை எனக்கு முன்னாலிருந்த சட்டமன்ற உறுப்பினர் அந்தப் பாலத்திற் கருகில் அழைத்துச் சென்று காட்ட வேண்டுமென்று காட்டி



1974 மார்ச் 26] [திரு. எஸ். சகாதேவன்]

னார்கள். ஆகவே, அந்தப் பாலத்தை எப்படியாகிலும் கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர வர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பாலம் சம்பந்தமாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களுக்கு ஏராளமான மனுக்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. ஆகவே, இது முக்கியமானதொரு பாலமாக இருப்ப தால் இந்தப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திண்டிவனம் வட்டத்தில் ஒலக்கூர் என்ற பெரிய கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமம் செஞ்சி தொகுதி யைச் சேர்ந்தது. அந்த ஊரில் இரயில்வே ஸ்டேஷனும், போலீஸ் ஸ்டேஷனும், ஆஸ்பத்திரி போன்றவைகளெல்லாம் இருக்கின்றன. எனவே, அந்த ஊருக்குச் செல்ல ஆற்றின் குறுக்கே பாலம் கட்டினால்தான் மழைக் காலத்தில் மக்கள் போக முடியும். அது சென்னைக்கு வரும் நெடுஞ்சாலையை இணைக்கின்ற ரோடாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தையும் கட்டித் தர வேண்டு மென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் வைரபுரம் செல்லும் ரோட்டில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், சங்கராபரணி ஆற்றின் குறுக்கே அணை கட்டி வராக நதித் திட்டம் செயல்பட்டு வருகிறது. அதன் மூலமாக கிட்டத்தட்ட 40, 50 கிராமங்களுக்கு மேல் நீர்ப்பாசன வசதி பெறுகின்றன. அந்த வராக நதித் திட்டத்தை மேல் ஒலக்கூர், வீரணாமூர், மேல் அத்திப்பாக்கம், நீர் பெருத்தகரம் போன்ற கிராமங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேல்சித்தாமூர் ஏரியில் மண் நிரம்பி பாய்ச்ச லுக்கு வசதியற்ற நிலையிலிருக்கிறது. எனவே, அந்த ஏரியிலும் தூர் வாரிக் கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்மலையனூர் ஏரி சங்கராபரணி நதி உற்பத்தியாகக்கூடிய ஏரியாகும். அந்த ஏரியில் மண் தூர் நிறைந்திருக்கிறது. அதையும் தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். சகாதேவன்] [1974 மார்ச் 26

பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதியில் அடிவைக்காத இடமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்களுக்கு எல்லாக் கிராமங்களும் தெரியும். ஆகவே, அந்தப் பகுதி மக்களெல்லாம் இந்தப் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் காலத்திலேயே ரோடுகள் வந்துவிடும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, அந்த நம்பிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், என்னுடைய தொகுதியிலிருக்கின்ற இந்தச் சாலைகளையெல்லாம் உடனடியாக இந்தத் திட்டத்தின்கீழ் போட்டுத் தர வேண்டுமென்று கேட்டு இந்த மானியத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. எஸ். கே. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிதாக ஒன்பது நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கியிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். 1974-75-ம் ஆண்டில் பாசன வசதிக்காக ஆயிரம் லட்சம் ஒதுக்கப்பட்டு இதனால் 63,000 ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெற்றுப் பயனடையும் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பழைய அமராவதி கால்வாய், தாம்பிரபரணி கால்வாய் புதுப்பிக்கும் வேலை முடிவடையும் தருவாயில் இருப்பதை விவசாயிகள் வரவேற்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

பாசனக் கால்வாய் பழுது பார்க்க விரைவுத் திட்டத்தின் மூலமாகச் செய்துள்ள காரியங்களின் பயனாக இன்றையதினம் விவசாயிகளிடமிருந்து புகார்கள் வருவது குறைந்த வண்ணமாக இருக்கின்றன.

சிறு பாசனத் திட்டங்கள் மூலமாக 7 லட்சம் ஹெக்டர் நிலம் பாசனம் பெறுகிறது. இதன் மூலமாக 6 லட்சம் டன் உணவு தானியம் கிடைக்கிறது. இத்திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயன்தரத்தக்க திட்டமாகும். பாசன வசதி அடைவதன்



1974 மார்ச் 26] [திரு. எஸ். கே. சுப்பிரமணியம்]

மூலமாக விவசாயிகள் குறிக்கோளை நிறைவேற்ற முடியும் என்ற வகையில் அரசு இத்திட்டத்திற்கு இன்னும் அதிகமான நிதியை ஒதுக்கி விவசாயிகளுக்கு ஊக்கததைத் தரவேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெரும்பாசனக் கால்வாய்களைப் புதுப்பிப்பதற்கு மத்திய அரசு 400 லட்சம் ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அந்தத் தொகை எதிர்பாராத விதமாக முழுமையும் வந்து சேராத காரணத்தால் இன்றையதினம் திட்டத்தில் பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. பாசனத் துறையும் உணவு உற்பத்தித் துறையும் ஒன்றையொன்று சார்ந்ததாகும். இதுபோன்ற காரியங்களில் மத்திய அரசு கருணையோடு நடந்துகொள்ள வேண்டும்.

வறட்சிப் பகுதிகளாக தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கோவை மாவட்டமும், சேலம் மாவட்டத்தில் ஒரு பகுதியும் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பகுதிகளுக்கு அதிகப்படியாக மானியம் அளிக்க மத்திய அரசு முன்வருமானால் உற்பத்தி அதிகமாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டுக்குப் பாசன வசதிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்குமானால் இது பல்வேறு மாநிலங்களுக்கு உணவு அளிக்கும் என்று குறிப்பிட்டார்கள். இன்றையதினம் பார்க்கிறோம். பக்கத்தில் இருக்கும் கர்நாடக மாநிலமானாலும், கேரள மாநிலமானாலும், மேற்கு வங்கமானாலும், பீகாரானாலும் இன்றையதினம் தமிழ் நாட்டை எதிர்பார்க்கிற நிலை இருக்கிறது. அவற்றுக்கு உணவு வழங்குகின்ற நிலையைப் பார்க்கிறோம். அறிஞர் அண்ணா அவர்கள் அன்றே சொன்னது இன்று நிறைவேறி வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் ஒரு சில நிலைமைகளை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மைசூர் மாநிலத்தின் எல்லைப் பகுதியாக இருக்கும் தாளவாடி வட்டாரத்தில் ஈக்கிளா, சிக்கல்லியில் 100 ஆண்டுகளுக்கு முன்பே வெட்டப்பட்ட பெரிய குளம் ஒன்று இருந்தது. நானும் பார்த்தேன். இடையிலே ஏற்பட்ட விரிசலின் காரணமாக இன்றையதினம் அது மேலும் பெரிதாகி குளமே பழுதடைவதற்கான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு

சிலரால் அது அடிக்கடி ஆக்கிரமிப்புச் செய்யப்படுகிறது. அந்தக் குளத்தைப் பழுது பார்த்துக் கட்டுவோமானால் அந்த வட்டாரத்தில் 2,000 ஏக்கர் நஞ்சை பயிர் செய்ய முடியும்.

தாளவாடி வட்டாரம் மைசூரிலுள்ள டாமுக்குப் பக்கத்தில் உள்ளதால் பாசன வசதி கிடைக்க வழி இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். அங்கு பள்ளங்களைத் தடுத்து சிறு அணைகளைக் கட்டினால் அந்தப் பகுதியில் விவசாயத்திற்கு வசதி ஏற்படுவதோடு குடிதண்ணீருக்கும் பயன்படும்.

ராஜநகர், வடபெல்லி, வீரக்கடவு பகுதி மக்கள் லோயர் பவானி கட்டுவதற்கு முன்னால் சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். அந்த அணை கட்டியதன் விளைவாக அவர்கள் வேறு இடத்திற்குக் குடியேற்றப்பட்டார்கள். அதன் விளைவாக இன்றையதினம் அவர்கள் தண்ணீருக்குக் கஷ்டப்படுகிறார்கள். விவசாயம் செய்யவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் பெரிய பள்ளம் இருக்கிறது. அதைத் தடுத்து அந்தப் பகுதிக்கு வசதி செய்ய வேண்டும். சத்தியமங்கலம் நகரைப் பொறுத்தவரை மலை அடிவாரம் வரை எல்லைப் பகுதியாக இருக்கிறது . . . (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, பாசனத் துறை மற்றும் பலவற்றின் கீழ் மானியக் கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். பாசனப் பணிகளைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில் 100-க்கு 40 சதவிகிதம் கொண்டு வரப்பட்டு விட்டதாகவும் 60 சதவிகிதத்தை எந்த விகிதத்தில் கொண்டு வரமுடியாது என்ற நிலைமைகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். பல வருஷங்களாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டுமென்பதில் எல்லாத் தரப்பினரும் ஆவலாக இருக்கிறார்கள்.

அறுபது சதவிகிதம் மானம் பார்த்த பூமியாகப் போக வேண்டுமா, சீர்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா என்று பார்த்தால் மத்திய அரசு கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் சிறப்புத் திட்டத்தை அமலாக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு





ஜில்லாக்களில் இருக்கும் வறட்சிப் பகுதிகளுக்கு இருக்கும் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்ல முடியும்.

பி.ஏ.பி. திட்டம் 1964-ல் இருந்து பத்தாண்டுகள் ஆகிவிட்டன. நீராறுத் திட்டம் இன்னும் முடிவடையவில்லை. பட்ஜட்டில் பணம் நீண்டுகொண்டே போகிறது. 34 கோடிக்குத் திட்டம் போட்டு இன்று 72 கோடிக்கு வந்தும் அந்தத் திட்டம் முடிவடையவில்லை. கேரளத்தோடு பேசிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்போது முடிவுக்கு வந்து என்ன சொல்லுகிறார்கள் என்றால் 75,000 ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கப்பட்டுள்ளது. முன்னால் இந்தத் திட்டத்தால் 2,50,000 ஏக்கர் பாசன வசதி பெறும் என்று சொன்னார்கள். லோயர் பவானி திட்டத்தில் 2 லட்சம் ஏக்கருக்குப் போக மிச்சமிருக்கும் தண்ணீர் அவனாசியில் 12,000 ஏக்கருக்குக் கொடுக்க இருந்த அந்தத் திட்டம் அடியோடு போய் விட்டது. பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திற்காக கோரிக்கைகள் கொடுக்கப்பட்டு, பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு கடைசியில் அமைச்சர் அவர்கள் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். வறட்சிப் பகுதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் சரியான முடிவு எடுக்கவில்லை. நீராறுத் திட்டம் முடிவடைந்த பிறகு பல்லடம், கோவை மேற்குப் பகுதி, அவனாசி ஆகியவற்றுக்குக் கிளை வாய்க்கால் உண்டாக்கி தண்ணீர் கொண்டுவர சாத்தியக்கூறுகளைப் பார்க்க வேண்டும். உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி பாசன வசதி பெறுவதில் விடப்பட்டுள்ளன. மீதி நிலங்களுக்கு அந்தப் பகுதியை சர்வே எடுத்து மீண்டும் நீர் கொடுப்பதற்கான வழிவகைகளை உருவாக்க வேண்டும்.

நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலமாக விவசாயம் நடைபெறுகின்ற இடங்களில் ஒரு ஏக்கருக்கு 33 ரூபாய் நீர் வரி. ஆனால் கிணறுகளை வெட்டி பம்ப் செட் வைத்து ஒரு மாதத்திற்கு 300 ரூபாய் கரண்ட் சார்ஜ் செலவு செய்தும் அந்த நிலங்களில் விளையும் பொருளுக்கும் மற்ற நிலங்களில் விளையும் பொருளுக்கும் ஒரு விலை நிர்ணயிக்கப்படுகிறது. கிணறு வெட்டும் திட்டத்திற்கு அரசாங்கமே முழு நிவாரணமும் கொடுக்கும் வகையில் வெட்டிக் கொடுக்க வேண்டும்.

[திரு. கே. என். குமாரசாமி] [1974 மார்ச் 26

குளம் குட்டைகளை அதிகப்படியாக வெட்டிக் கொடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியிலிருந்து 350 விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்கள். 125 விண்ணப்பங்கள்தான் பரிசீலனை செய்யப்பட்டு குளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பெரிய ஸ்கீம்களுக்கு இடம் இருக்கிறது. ஆகவே அவைகளைப் பற்றி ஆராய்ந்து குளங்கள் அமைத்துக் கொடுக்க பொதுப்பணித் துறையில் ஒப்படைத்தால் நலமாக இருக்கும்.

பாண்ட்ஸ் ஸ்கீம்களை வேறு ஒரு துறை மூலம் செய்யாது அவற்றை பொதுப் பணித் துறை மூலம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

லோயர் பவானியில் புன்செய் பூமிக்கு நீர் விடுவதாக ஒப்பந்தம் இருந்தது. இப்போது நெல் விளைவித்துவிட்டார்கள். இப்போது எவ்வளவு தண்ணீர் வந்தாலும் பற்றாது. பின்னர் அப்பர் பவானி கட்டுவதாகச் சொன்னார்கள். ஒரு பவானியையும் காணோம்.

வரட்சிப் பகுதிகளுக்கு முழு நிவாரணமும் அளிக்கத் தக்க வகையில் செயல்பட வேண்டும். இந்த பட்ஜெட்டில் எங்கள் பகுதிக்கு ஒன்றையும் காணோம். ஆற்றுப் பாசனப் பகுதிகளுக்கு தான் இந்த ஸ்கீம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறு பகுதிகளில் அமைக்கப்படவில்லை. வாய்க்கால்களையொட்டிய பகுதிகளில்தான் குளம் குட்டைகள் அமைக்கிறார்கள். வேறு பகுதிகளிலும் குளங்கள் குட்டைகள் அமைக்கப்படவேண்டும். அப்படி செய்தால் கிணற்றுப் பாசனம் மூலம் விவசாயம் செய்ய வாய்ப்பு ஏற்படும்.

எங்கள் பகுதியில் பாசனப் பகுதிகளை அதிகப்படுத்தவேண்டும். கேரளாவோடு பேச்சுவார்த்தை நடத்தி மிச்சமுள்ள நீரை பெறக் கூடிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் எந்த விதமான பாலிடிக்ஸ்-ம் வேண்டியதில்லை. எல்லாக் கட்சியினரும் சேர்ந்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி தமிழகத்திற்கு தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யவேண்டும். அதற்கு எங்கள் கட்சி தயாராக இருக்கிறது. எனவே இதுகுறித்து மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் அணுகி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 26] [திரு. கே. என். குமாரசாமி]

சாலைகளைப் பொறுத்தவரையில் பஸ் ரூட், பல்லடத்திலிருந்து அரமூர் வழி செல்கிறது. அது கப்பி ரோடு. அதை தார் ரோடாக மாற்றியமைக்க வேண்டும். 12 மைல் நீளம் இருக்கிறது அந்த ரோடு. (மணியடிக்கப்பட்டது). வன்னத்தங்கரைப் பள்ளம் பெரிய பள்ளம். சாதாரண வண்டிகூட போக முடியாது. அங்கு ஒரு பாலம் கட்டித் தரவேண்டும்.

திருப்பூர்-பல்லடம் ரூட்டில் ஒரு ஓடை இருக்கிறது. அங்கு கார் போனால் ஸ்லிப்பாகிறது, வண்டிகள் போனால் ஸ்லிப்பாகின்றன. ஸ்லிப்பாகி கீழே விழுந்து ஆக்சிடென்ட்ஸ் ஏற்படுகின்றன. அங்கு ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் இதுவரையில் அதுபற்றி ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

* திரு. பூ. எட்டியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

இந்தப் பொதுப்பணித் துறை கிராமங்களையும் நகரங்களையும் முக்கியமாக இணைக்கும் ஒரு கேந்திரக் கூடல் என்றால் அது மிகையாகாது. இரண்டாயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கெல்லாம் பெரிய சாலைகளிலிருந்து இணைப்புச் சாலைகள் ஏற்பட வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 1,500 மக்கள் தொகை இருந்தாலும் அந்தக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் போடவேண்டும் என்ற நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக, பஞ்சாயத்து சாலைகளாக இருந்தாலும் சரி அல்லது யூனியன் சாலைகளாக இருந்தாலும் சரி பஸ்கள் போகக்கூடிய எல்லாச் சாலைகளையும் பொதுப்பணித் துறை எடுத்து செயல்படுத்தினால் சிறப்பாக இருக்கும்.

சாலைகள் சரியாக இல்லை என்ற காரணத்தினால் பஸ் முதலாளிகள் அவ்விடங்களுக்கு வண்டிகளை விடுவதில்லை. ஏற்கனவே பஸ்கள் ஓடாமல் இருந்தால் பரவாயில்லை. ஆனால் ஓடிக்கொண்டிருக்கும் வண்டிகள் நின்றுவிட்டால் அந்தக் கிராம மக்களுக்கு பதில் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு திண்டாட்ட நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

ஆரணியில் இருந்து செய்யாறு வழியாக அனப்பத்தூர் வரை பஸ் சென்று கொண்டிருந்தது. அது தற்போது நிறுத்தப் பட்டிருக்கிறது. அதுகுறித்து மாவட்ட ஆட்சியாளர், ஆர்.டி.ஓ. இவர்களிடம் எடுத்துச் சொன்னோம். அது இதுவரையில் கவனிக்கப்படவில்லை.

வந்தவாசியிலிருந்து காஞ்சிபுரத்திற்கு பஸ் சென்று கொண் டிருந்தது. இதுவும் அனப்பத்தூர் போகாமல் இப்போது நின்று விட்டது. காரணம் சாலை சரியாக இல்லை என்பது தான். பெரிய சாலையிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் இருக்கும். பஞ்சாயத்துக்கு பணம் இல்லாததால் கிராம மக்கள் பணம் வசூல் செய்து சொந்தமாக அந்தச் சாலையை செப்பனிட்டிருக்கிறார்கள். எனவே அதை நல்லமுறையில் செப்பனிட்டுக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி செய்யாறிலிருந்து வாக்கடை வழி பெரணமல்லூர் செல்லும் வழியில் கழனிப்பாக்கம் சாலை குறுகலாக இருக்கிறது. அதில் வளைவு இருக்கிறது. அதன் ஆரம்பத்தில் ஒரு பெரிய கிணறு இருக்கிறது. தவறி வண்டி அந்தக் கிணற்றில் விழும்நிலை இருக்கிறது. ஆகவே அதை கவனத்தில் கொண்டு. நல்லமுறையில் சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சடத்தாங்கள்—பெரணமல்லூரில் ஒரு கிணறு இருக்கிறது. அங்கு அரசுப் பேருந்து ஒன்று அந்தக் கிணற்றில் இறங்கும் தருவாயில் திடீரென்று ட்ரைவர் சாமர்த்தியமாக வண்டியை நிறுத்தி பயணிகளைக் கீழே இறக்கி பின்னால் வண்டியைத் திருப்பி ஓட்டினார். அவ்வளவு குறுகலான இடம் அது. அதுவும் கவனிக்கப் படவில்லை.

பெரணமல்லூர் பெரிய ஏரியை ஆழப்படுத்த வேண்டும். பெரியகுழப்பலூரில் ஒரு பி.டபிள்யூ.டி. டாங்க் இருக்கிறது. அதில் தண்ணீர் தங்கும் வசதி இருந்தும் கீழே குடிமராமத்து செய்யப்படவில்லை. இந்த மானியத்தின்மீது பேசும்போது சென்ற ஆண்டே நான் கேட்டுக்கொண்டேன். சில செல்வாக்கு படைத்தவர்கள் பின்னால் இருந்துகொண்டு தண்ணீர் போகக் கூடிய வழிவாய்ப்புகளை தடுத்து மற்றவர்களுக்கு பயன்படக்கூடிய அளவிற்கு இல்லாத முறையில் ஒரு இக்கட்டான நிலை இருக்கிறது. அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பெரணமல்லூரில் 504 ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய அளவிற்கு ஒரு ஏரி இருக்கிறது. அங்கு ஒரு திட்டு இருக்கிறது. அந்த ஏரியை இரண்டு பர்லாங்கு தூர அளவிற்கு ஆழப்படுத்தி விட்டால் முப்போகப் விளையக் கூடிய ஒரு வாய்ப்பிருக்கிறது. இந்த ஆண்டு தீபாவளி, கார்த்திகை, பொங்கல் சமயங்களில் அதில் நீர் வழிந்துகொண்டிருந்தது. கீழே விழுந்து வீணாகப் போகும் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்தால், பஞ்சமில்லாமல் முப்போகம் விளைவதற்கு ஒரு வாய்ப்பிருக்கும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூறியிருக்கிறேன்.

செங்காடு கோவிலூர் பாதை மூன்று கிலோ தூரம் இருக்கிறது. கோவிலூருக்குப் பக்கத்தில் கூட மூன்று பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கு ஐயாயிரத்திற்கு மேற்பட்டு மக்கள் தொகை இருக்கிறது. அதற்காக பஸ் ரூட் சாங்க்ஷன் செய்தார்கள். அதுகுறித்து தனிப்பட்டவர்கள் ஹைகோர்டில் ஸ்டே வாங்கி விட்டார்கள்.

எனவே அரசுப் பேருந்தைச் செய்யாறிலிருந்து கோவிலூர் வரையில் செங்காட்டு வழி செல்ல வாய்ப்பளிக்கவேண்டும். அந்தச் சாலையையும் நன்கு பராமரிக்க வேண்டும்.

செய்யாற்றின் குறுக்கே விண்ணமங்கலம் அருகில் அணைக் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு பரிந்துரை செய்த வேலையை இந்த ஆண்டாவது எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வேலையை எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தந்தால் ஏறத்தாழ பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் முப்போகம் விளைவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

1972 டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளம், புயல் கொடுமையால் ஒரு தனி இலாகா ஏற்பாடு செய்தார்கள். வெள்ளப் பராமரிப்புத் துறை என்று ஏற்படுத்தப்பட்டது. D·E· விழுப்புரம் S·E. கடலூர், A·E· வேலூர், S·O· திருவண்ணாமலை . . . (மணியடிக்கப் பட்டது.)

[1974 மார்ச் 26

(நண்பகல் 12.00)

திரு. சீ. க. வடிவேலு: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் 1974-75-ம் ஆண்டுக்காகக் கொண்டுவரப்பட்டுள்ள பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

தமிழகத்தில் பொதுப்பணித்துறை நல்ல முறையில் இயங்கி வருகிறது. அண்டை மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், நம் தமிழகத்தில் இருக்கும் அதிகாரிகள் மிகவும் பொறுப்புணர்ச்சியோடு பணியாற்றி, உணவு உற்பத்திக்கான திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தியதன் காரணத்தால் தான் நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. அதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மைசூர் அரசாங்கம் ஒப்பந்தத்தை மீறி காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டிக்கொண்டிருப்பதை மத்திய அரசு தடுக்காமல், தமிழகத்திற்கு ஓரவஞ்சமாக நடந்து கொண்டிருக்கும் போக்கை இந்த மன்றத்தின் மூலம் வன்மையாகக் கண்டிக்கிறேன். மைசூர் அரசாங்கம் உண்மையில் அந்த அணையைக் கட்டுமானால் அதனால் தமிழகத்திற்கு பெரும் அபாயம் ஏற்படும். ஆகவே, டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு போராட்டத்தைச் செய்தால், நானும் அதற்குத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நான் காவிரிப் பகுதியில் இருக்கும் விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்து இருப்பதால், அவர்களுடைய நிலை எனக்கு நன்கு தெரியும்.

டாக்டர் கலைஞர் அவர்கள் குடவனாறு திட்டத்தை நிறைவேற்றச் செய்து இருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது பெருமைப் படுகிறேன். அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயப்பெருங்குடி மக்களின் சார்பில் இந்த மன்றத்தில் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் நீண்டநெடுங்காலமாக ஒரு பெரிய பிரச்னை இருகிறது. காட்டுப்புத்தூர் வாய்க்கால் சீரமைப்புத் திட்டம். ஏறத்தாழ 15 லட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டது.



1974 மார்ச் 26] [திரு. சீ. க. வடிவேலு]

அது இப்போது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், அங்கே உள்ள விவசாயிகளுக்கு மிகவும் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுப்புத்தூர் வாய்க்காலில் தண்ணீர் வராமல் நெருக்கடியாக இருக்கும் நேரத்தில், உங்கள் பகுதியில் இருக்கும் விஸ்வநாதன் என்பவர் புஞ்சை நிலத்திற்குத் தண்ணீர் எடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார். அனுமதி இல்லாமலேயே கால்வாய் வெட்டி, இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட இன்ஜினீர் அவர்கள் தலையிட்டு இப்போது தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் அங்கே ஏகப்பட்ட செலவு செய்து அதற்கு அனுமதி எப்படியும் வாங்கிவிடுவது என்று வேலை செய்து கொண்டிருக்கிறார். ஆகவே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும், இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தால்தான் அங்கேயுள்ள விவசாயிகள் நன்மை பெற முடியும்.

அந்தத் திட்டமும் நிறைவேற்றப்பட்டால் அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் நல்ல வருமானம் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்த விஸ்வநாதனுக்குத் தண்ணீர் கொடுத்தால் அங்கே ஒரு போராட்டத்தை நடத்துவதற்கே அங்கேயுள்ள விவசாயிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கருகாலி என்ற கால்வாய் வெட்ட 1966 இல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. கேள்வி நேரத்தில் அமைச்சர் கூடச் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று. அன்றைக்கு எடுத்த மதிப்பீட்டையும் இன்றைக்கு உள்ள நிலைமையும் பார்க்கிறபோது அதிக செலவாகும். அன்று 19 லட்சத்து 30 ஆயிரம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றுள்ள சூழ்நிலையைப் பார்க்கிறபோது ஏறத்தாழ 20 ஆயிரம், 30 ஆயிரம் அதிகம் தேவைப்படும் என்று தோன்றுகிறது. ஆகவே, அதையும் உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாழவல்லி என்ற கிராமத்திற்குக் கொல்லிமலையிலிருந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரைத் தேக்கினால் 1000 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் செய்யலாம். ஆகவே, நம்முடைய அரசு கொல்லிமலை திட்டத்தை உடனடியாக எடுத்து,

தாத்தய்யங்கார்பேட்டைக்கும் பாசன வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் யூனியன் தலைவராக இருக்கிறேன். ஏறத்தாழ 1,500 மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தித் தரப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் எங்கள் ஊரில் ஒரு கிராமத்திற்குக்கூட ரோடு போடவில்லை. அந்த ரோடை ரூரல் டெவலப்மெண்ட் ஸ்கீமில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

திரு. ஜப்பார் அவர்கள் பேசும்போது பொதுப் பணித் துறை அதிகாரிகள் சட்ட மன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை உதாசினப் படுத்தும் போக்கைக் கையாளுகிறார்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அதிகாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

7 ஆம் தேதியன்று சட்ட மன்றத்தில் எனது கேள்வி ஒன்றுக்கு பதில் கொடுக்கிற நேரத்தில் முக்கூடல்-வீரவநல்லூர் பாலம் 1975-76 ஆம் ஆண்டு சேர்த்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

1973-74 ஆம் ஆண்டுக்கான சாலை மற்றும் பாலம் பட்ஜெட் விவர அறிக்கையில் திருநெல்வேலி டிவிஷனை சீர்திருத்துவதற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கியிருந்தார்கள். இந்த ஆண்டு ஒதுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் இருக்கும் வீரவநல்லூர் என்ற கிராமத்தில் கிராமச் சாவடி இல்லை. ஏற்கனவே இருந்த கிராமச் சாவடி இடிந்து விட்டது. ஆகவே, அங்கே புதிய ஒரு கிராமச் சாவடி கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



சிறுபாசன மேம்பாடு திட்டத்தின் கீழ் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எனது தொகுதியில் கன்னடியன் கால், மணிமுத்தாறு கால், ராமா நதி, கடனா நதி திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களில் கால்வாய் சீரமைப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் இருக்கும் குளங்கள் பராமரிக்கப்பட்டு 25-30 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தக் குளங்களை நல்ல முறையில் சீரமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற டிசம்பரில் எங்கள் ஊரில் ஏற்பட்ட மழையின் காரணமாக கடுமையான வெள்ளப் பெருக்கம் ஏற்பட்டு, பல குளங்கள் உடைந்து விட்டன. அப்படி உடைந்த குளங்களை சீர்திருத்தி, நல்ல நிலைமையில் கொண்டு வருவதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாமிரபரணி பாசன பகுதிகளில் தண்ணீர் விநியோகம் பற்றி சொல்ல விரும்புகிறேன். அந்தப் பகுதியில் கீழே உள்ளவர் களுக்குப் பாசனம் செய்வதற்கு தண்ணீர் சரியாக கிடைக்கவில்லை. ஸ்ரீவைகுண்டம் பகுதிக்கு நல்ல முறையில் தண்ணீர் வழங்கப் படுகிறது. பழந்தொழி என்று சொல்லி எங்களுக்கு பொதிமைப் பட்டத்தில் தண்ணீர் விநியோகம் அங்கே செய்யப்படுகிறது. எங்கள் பகுதியில் சரியான முறையில் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அங்கே இவ்வளவு ஏக்கர் பயிர் செய்வதற்கு தண்ணீர் விடவேண்டுமென்று அரசாங்க ஆணை (ஜி.ஓ.) இருக்கிறது. அதற்கு ஏற்ப தண்ணீர் விடவேண்டும். அந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் இரண்டு முக்கியமான சாலைகள் இருக்கின்றன, பாளையங்கோட்டையிலிருந்து அம்பாசமுத்திரம் செல்லும் சாலை, திருநெல்வேலியிலிருந்து தென்காசிக்கு—வழி முக்கூடல், கடையம்—செல்லும் சாலை. இந்தச் சாலைகளை மேம்படுத்த வேண்டும். இந்தச் சாலைகளில் தருவை அருகே, பச்சையாறு பாலம், கல்லிடைக்குறிச்சி அருகே கோரையாறு பாலம், முக்கூடல் அருகே வெள்ளோடை பாலம், பாப்பாக்குடி அருகே பாலம், ஆகியவை எல்லாம் தாம்போதி பாலங்களாக இருக்கின்றன. இவைகள் கட்டப்பட்டு ஏறக்குறைய 30-40 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது ஏற்பட்டு இருக்கும்

*[திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்] [1974 மார்ச் 26*

போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கும், அதைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற சூழ்நிலையில் அங்கே நல்ல மேல்நிலை பாலங்களை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் தெற்கு கல்லிடைக்குறிச்சியில் நாடார் புதுக்குளம் சொந்தக்காரர்கள் அந்தக் குளத்தை அரசினிடம் ஒப்புவிக்கத் தயாராக இருக்கிறார்கள். அரசு அந்தக் குளத்தை எடுத்து மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி விடுவதன் காரணமாக விவசாயிகள் பெரிதும் பயன் அடைவார்கள். மணிமுத்தாறு அணை அந்தக் குளத்திற்குச் சமீபத்தில் தான் இருக்கிறது, ஒன்றிரண்டு மைலில் தான் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுப்பட்டி வழியாக முக்கூடல்–கடையம் ரோடுக்காக ரூ. 3½ லட்சம் சென்ற ஆண்டு சாங்ஷன் செய்யப்பட்டது. சென்ற டிசம்பர் 16 ,17 ஆம் தேதிகளில் ஏற்பட்ட மழையின் காரணமாக வெள்ளப் பெருக்கெடுத்து பல இடங்கள் அங்கே பாதிக்கப்பட்டு, ரோடு போக்குவரத்தெல்லாம் கிட்டத்தட்ட நின்றுவிட்டது. அந்தப் பாலம் 20 கிராமங்களை ஒன்றிணைக்கக்கூடிய பாலம்.

ஆகவே, அங்கே பஸ் போக்குவரத்து சரியான முறையில் நடக்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது அந்தப் பாலத்திற்கு வேண்டிய நிதி உதவியை மறுபடியும் அளித்து, அந்தப் பாலத்தை நல்ல முறையில் செப்பனிட்டுத் தர வேண்டும், அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக கீழச்செவல், பத்தமடை, கோபாலசமுத்திரம் ஆகியவை தாம்பரபரணி ஆற்றின் தெற்கு கரையில் இருந்து கொண்டிருக்கின்றன. வடக்குக் கரையில் இருக்கும் திருநெல்வேலிக்கு வருவதற்கு 3 மைல் இருக்கிறது. அங்கே எந்தவிதமான பாலப் போக்குவரத்தும் கிடையாது. திருநெல்வேலியிலிருந்து வரவேண்டுமென்றால், பாளையங் கோட்டையைச் சுற்றி 10 மைல் அளவுக்கு வந்தாக வேண்டும். ஆகவே, அந்த ஏரியாவில் ஒரு நல்ல பாலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



*1974 மார்ச் 26] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]*

அது சம்பந்தமாக வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

எனது மாவட்டத்தில் பச்சையாறு என்ற ஒரு திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ. 100 டோக்கன் கிராண்டாக அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. அடுத்த ஆண்டிலாவது அந்தத் திட்டத்திற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கீடு செய்து அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

THIRU K. T. K. TANGAMANI : He is the first speaker from his group. He represents a particular party. If only five minutes is allowed for the spokesman of a party, no point could be made out. So some more time may be given to the first speaker of each group.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்கு 5 நிமிடங்கள் கொடுக்கவில்லை. அதற்காகத்தான் 2, 2½ நிமிடங்கள் கூடவே கொடுத்திருக்கிறேன். சரி, இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மேலும், ஆலந்துரையாறு என்ற ஒரு திட்டம் இருந்துகொண்டிருக்கிறது. 17 லட்சம் ரூபாய் அளவில் உள்ள அந்தத் திட்டம் சென்ற ஆண்டு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்கப்படும் என்று கூறினார்கள் பட்ஜெட் விவாதத்தின்போது.

ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் அந்தத் திட்டம் சேர்க்கப் படவில்லை. அதைச் சேர்த்தால் வள்ளியூர் ஒன்றியப் பகுதி மிகவும் பயன் அடையும் என்பதைக் கூறிக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. க. பழனிவேலன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களினால் இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள பாசன, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் இதுவரையில் கவனிப்பாரற்றுக் கிடந்தன. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்புள்ள ஏரிகளுக்கு இந்த மான்யக் கோரிக்கை ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் என்ற முறையில் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள ஏரிகளையெல்லாம் பராமரிப்பதற்கு மிகவும் குறைந்தத் தொகையை ஒன்றியங்களுக்கு ரூ. 7,000, ரூ. 8,000 அரசு ஒதுக்கீடு செய்திருந்தது.

அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பிலுள்ள ஏரிகளைப் பராமரிக்க இயலாமல் ஏரி ஒன்றுக்கு ரூ. 1,000, ரூ. 500 என்ற அளவில் மதிப்பீடு தயார் செய்து, சரியான முறையில் ஏரிகளைக் கவனிக்க இயலாமல் இருந்தது இந்தக் குறையை இந்தத் திட்டம் போக்கும் என்று கருதுகிறேன்.

எத்தனை ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள ஏரிகளைப் பராமரித்தோம் என்ற கணக்கைப் பார்க்காமல் ஒவ்வொரு ஏரியின் பராமரிப்புக்கும் அதற்கான முழுத் தேவையைப் பார்த்து செய்யக்கூடிய அளவுக்கு, எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், அதிலுள்ள வேலைகள் அனைத்தும் செய்யப்படவேண்டும் என்ற நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு, அரசு அதிகாரிகள் அதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் சில கோரிக்கைகளை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனது தொகுதி ராமனுதபுரத்தைச் சார்ந்த ஒரு வரண்ட தொகுதியாகும். பாலைவனத்தில் சோலைவனம் இருப்பதுபோல வடக்கலூர் பிர்க்கா ஓரளவுக்கு பாசன வசதியுள்ள பகுதியாகும். ஆனால் தரை மட்டத்தில் அங்கு உள்ள நீர் உப்பு நீர்.

அரசாங்கத்தினுல் ஒழுங்குமுறை செய்து நாப்பட்ட நீர்த் தேக்கம் அல்லது ஏதாவது அணை இருக்கிறதா என்றால் எதுவுமில்லை. வடக்கலூர் பிர்க்காவில் 8 பொதுப் பணித் துறை ஏரிகள் உள்ளன. அவைகளுக்குச் சரியான வரத்து வாய்க்கால்கள் கிடையாது.





மழை காலத்தில் கிடைக்கின்ற நீரை வைத்துக்கொண்டுதான் அந்த ஏரிகள் தண்ணீரை நிரப்பிக்கொள்ளக்கூடிய பரிதாபகரமான சூழ்நிலை இருக்கிறது.

அத்தியூர், கிழுமத்தூர், கைப்பெரம்பலூர், வயலூர், ஒகூர் ஆகிய 5 ஏரிகள் இருக்கின்றன. சுமார் 4,000 ஏக்கர் நிலப்பரப்பு சாகுபடி செய்யவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அந்தப் பகுதி கரும்பும், நெல்லும் விளையக்கூடிய ஒரு பகுதி. நான்கு ஐந்து வருடங்களாக அங்கு விளைச்சல் இல்லை. அதுவும் கூட 1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெள்ளப்பெருக்கு வந்தபொழுது 4 ஏரிகளிலும் சுத்தமாக ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கிடைக்க முடியாத நிலை உள்ளது.

1973 ஆம் ஆண்டு மார்ச் வரையில் அவைகளைச் செப்பனிட எந்தவிதமான நடவடிக்கையும் அதிகாரிகள் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான்கு ஏரிகளின் மூலம் 4,000 ஏக்கர் பாசனம் செய்து சாகுபடி செய்யவேண்டிய நிலையில் இருந்தது. ஆனால் இன்று தண்ணீர் இல்லாத காரணத்தினுல் கம்பு, கேழ்வரகு போன்ற புஞ்சை தானியங்களை பயிரிட்டு, அது கூட கடுமையான வெய்யிலினுல் காய்ந்து தீய்ந்து பயிர் பொய்த்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்னென்றையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சுமார் 15 ஆண்டு காலமாக அந்தப் பகுதி மக்கள் நிரந்தரமாக அந்த ஏரிகளில் நீர் நிறம்புவதற்கு ஒரு திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக 1967-68-க்குப் பின்னுல் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த பொழுது—நானும் அன்றைய சட்ட மன்ற உறுப்பினரும் அந்தப் பகுதியில் நான்கு ஏரிகளுக்குத் தண்ணீர் நிரப்புவதற்காக வெள்ளையாற்றின் குறுக்கே பொது மக்கள் மணல் அணை கட்டி அதன் மூலம் தண்ணீர் நிறப்புவதைப் படம் எடுத்துக் காட்டினேம். அதற்குப் பிறகு இப்பொழுது மூன்றாவதாக வந்த பொதுப் பணித் துறை அமைச்சர் இருக்கிறார். கிட்டத்தட்ட 8 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. வருகிற ஆண்டிலாவது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும்

முதல்வர் அவர்களும் என்னுடைய தொகுதி மக்களுடைய நல்வாழ்வை கருத்தில் கொண்டு கருணை காட்டி அதற்கு ஆவன செய்வார்கள் என்று கருதுகிறேன். நான்கு ஏரிகளிலும் நிரந்தரமாக தண்ணீர் வரத்து இல்லாமல், ஊருக்கு 25 பேர் என்ற அளவில் தினம் வெள்ளையாற்றின் குறுக்கே மணல் அணை கட்டி அதன் மூலம் தண்ணீர் நிறப்புவது வழக்கம். ஆனால் 1972 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக ஆற்றிலிருந்த நீர்ப்போக்கு ரிவர் கோர்ஸ் மாறிவிட்ட காரணத்தினால், மணல் அணைக்கட்டினால் தண்ணீர் அணைக்கின்ற சூழ்நிலை மாறி இயற்கை ஏமாற்றிவிட்டது அந்தப் பகுதி மக்களை. இயற்கை இப்படி ஏமாற்றிவிட்ட காரணத்தினால், அந்தப் பகுதியிலே கரும்பும், நெல்லும் சரியானபடி சாகுபடி செய்ய முடியவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு கூறிக் கொள்கிறேன்.

அத்தியூர் கிராமம் என்னுடைய சொந்த ஊர். அதன் காரணமாக என்னால்கூட அந்தப் பகுதி மக்களுக்குச் சரியான பதில் சொல்ல முடியவில்லை. இன்று வரும், நாளை வரும் என்று அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு 'ரி மாடெல்லிங் ஆஃப் ஓகலூர் சப்ளை சானல்' என்ற திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம் 1968--ல் முதல் முதலாக அரசாங்கத்தில் பரிசீலனைக்கு வந்தது. அதற்கு பின்னாலே மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகள் அதிலே பல மாற்றங்கள் செய்து இன்று வரை என்ன திட்டத்தை நிறைவேற்றப் போகிறார்கள் என்ற முடிவுக்கு வரவில்லை.

மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இதுபற்றி எடுத்துக் கூறினேன். தலைமைப் பொறியாளர், நீர்ப்பாசனம், என்ற அதிகாரியிடத்திலும் எடுத்துக் கூறினேன். அவரும் மாவட்ட அதிகாரிகளுக்கு நினைவுக் குறிப்பும், தாக்கீதும் அனுப்புவதாகச் சொன்னார். ஆனால் மாவட்ட அதிகாரிகள் இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வருகின்ற சாகுபடி ஆண்டிலாவது



இதற்கு ஒரு தற்காலிகமான பரிகாரத்தையாவது செய்து கொடுக்கவேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

எங்கள் பகுதி ஆற்றுப் பாசனத்தைவிட ஓடைப் பாசனம் தான் முக்கியமாக உடையதாக இருக்கிறது. இந்த ஓடைப் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக பல திட்டங்களை எஸ்.எம்.ஐ.பி. திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளிலே ஒன்று நன்னையில் புதிய ஏரி அமைக்கும் திட்டம். இந்த ஏரி அமைக்கப்பட்டால் சுமார் 3,000 ஏக்கர் பாசன வசதி பெறும். அதனால் நன்னை, வேப்பூர், கல்லை, ஓலைப்பாடி கிராமங்கள் பயனடையும். அது மட்டுமல்லாமல் வேளூரில் புதிய ஏரி அமைக்கும் திட்டம் ஒன்றும் இருக்கிறது. அதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, பாலங்களைப் பொறுத்தவரையில் திருச்சிக்கும் தஞ்சைக்கும் இடையில் திருமானூர் பாலத்தைக் கட்டியிருக் கிறார்கள். அதன் தொடர்ச்சியாக தென்னார்காடு மாவட்டத்தில் மாத்தூர்-திட்டக்குடி நெடுஞ்சாலையில், திட்டக்குடி அருகே வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மங்களூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கூட இத்திட்டத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். இந்தப் பாலம் கட்டப்பட்டால் பெண்ணாடத்தி லுள்ள அருணா சர்க்கரை ஆலைக்கு கரும்பு எடுத்துச்செல்ல வசதியாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல் அரியலூர் சந்தையிலிருந்து சாமான்கள் வாங்கிவருவதற்கும், சந்தைக்குக் கொண்டு செல்வதற்கும் நல்ல வசதி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், தஞ்சையிலிருந்து சென்னைக்கு வர கிட்டத்தட்ட 50 மைல் தொலைவு குறையும். அதனால் போக்குவரத்துத் துறைக்கு நல்ல லாபம் வரும். வெள்ளாற்றில் எந்த இடத்தில் இந்தப் பாலத்தைக் கட்டுவது என்பது ஒரு சர்ச்சையில் இருந்துகொண்டிருக்கிறது.

நியாயத்தின் அடிப்படையில் எந்த இடத்தில் கட்டினால் வசதியாக இருக்கும் என்பதை அரசு பரிசீலிக்கவேண்டும். வசதியான இடத்தில் கட்டுவதுபற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. திட்டக்குடிக்கு அருகில் அமைப்பதுதான் நியாயத்தின் அடிப்படையில் அமைவதாகும் என்பதை பரிசீலனையில் தெரிந்துக் கொள்ளலாம். இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இருப்பது, கிராம இணைப்பு சாலைத் திட்டம். நான் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராகவும் இருப்பதால், இதைப்பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. (மணியடிக்கப்பட்டது).

ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் கட்டுப்பாட்டில் இருக்கின்ற வழித் தடங்களை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வேப்பூர்-ஆடுதுறை நெடுஞ்சாலையை இணைக்கின்ற வகையில் சின்னாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டி தார் சாலை அமைக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

**திருமதி வி. ப. பழனியம்மாள் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

வட்டமலைப் பகுதி என்னுடைய தாராபுரம் தொகுதியில் இல்லாவிட்டாலும் அங்கே 70 லட்சம் ரூபாய் செலவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கப்படுவது பாராட்டக்கூடியதுதான். அந்தப் பகுதி மக்களின் சார்பில் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மிகவும் வறண்ட பகுதி. இந்தத் திட்டத்தினால் மிகுந்த பயன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

தவிர, பி. ஏ. பி. திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 7 லட்சம் ஏக்கர் பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். இப்போது இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் ஒரு லட்சம் ஏக்கர்தான் பாசன வசதி பெற்றிருக்கிறது. அதுவும் எல்லா





இடங்களுக்கும் ஒரே நேரத்தில் பாசன வசதி கிடைப்பதில்லை. இந்த ஆண்டு ஒரு பகுதிக்குப் பாசன வசதி கிடைத்தால் அடுத்தாண்டு மறுபகுதிக்குப் பாசன வசதி கிடைக்கிறது. இப்படி மாற்றி மாற்றி தண்ணீர் விடுகிறார்கள்.

தவிர, இந்த பி. ஏ. பி. திட்டத்தின்கீழ் தாராபுரம், உடுமலை வட்டம், பொள்ளாச்சி வட்டம் ஆகியவை 1967-ம் ஆண்டே சர்வே செய்யப்பட்டு, நீராறு திட்டம் நிறைவேற்றப்பட்டதும் பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. நீராறு திட்டம் இப்போது முடிந்துவிட்டது. கேரள அரசாங்கத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் தண்ணீர் பிரச்சினை ஓரளவு தீர்ந்துவிட்டது. அதனால் மேலும் சுமார் 4 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறக்கூடிய திட்டம் இருக்கிறது. ஆகவே, மேற்படி எல்லா திட்டங்களிலும் விட்டுப்போன பகுதிகளையும் சேர்த்து, பாசன வசதி கிடைக்குமாறு செய்ய பொதுப்பணித் துறை அமைச்சரவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்திட்டத்திற்காக என்னுடைய தொகுதி மக்கள் பல விண்ணப்பங்களை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடமும் பலமுறை நேரில் தெரிவித்திருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். நீராறு திட்டம் முடிந்தபிறகு உங்கள் பகுதிகளுக்கு எல்லாம் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே பொதுப் பணித் துறையின் மூலம் விரைவிலே இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாராபுரத்தில் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் கட்டப்பட்டு சுமார் 75 ஆண்டு காலத்திற்கு மேல் ஆகிறது. அது பழுதடைந்த நிலையில் இப்போது இருக்கிறது. மிகவும் வலுவிழந்திருக்கிறது. எட்டு கிலோ மீட்டர் வேகத்தில் செல்ல வேண்டுமென்று வாகனங்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தை விரைவிலே செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பலமுறை கேட்டும், அதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

[திருமதி வி. ப. பழனியம்மாள்] [1974 மார்ச் 26

அந்தப் பாலம் இடிந்துவிட்டால், நாங்கள் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டுமானால் உடுமலை, பழனி வழியாக 60 மைல் சுற்றித்தான் செல்லவேண்டும். வேறு மாற்று பாலம் கிடையாது. ஆகவே, அது மிகவும் முக்கியமான பாலமாக இருக்கிறது. பழனி, கரூர், திருச்சி, மதுரை, நாகர்கோவில் போன்ற இடங்களுக்குச் செல்ல அந்தப் பாலத்தின் வழியாகத்தான் போகவேண்டும். அந்த அளவுக்கு போக்குவரத்திற்கு இன்றியமையாத பாலம் அது. அந்தப் பாலத்தை உடனடியாக பழுதுபார்த்துக் கட்டித் தாருங்கள். அல்லது அதன் பக்கத்தில் வேறு புதிய பாலத்தை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, தாராபுரம் 4 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட ஒரு பெரிய வட்டம். அந்த வட்டத்தின் தலைமையிடத்தில் இருக்கின்ற ஒரு பொதுப்பணித் துறை சுற்றுலா பயணிகள் விடுதியில் போதிய வசதி இல்லை. இரண்டு அறைகள்தான் இருக்கின்றன. அமைச்சர்கள் வந்தால் கூட தங்குவதற்கு வசதி இல்லை; வேறு இடங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. எனவே, அந்தப் பயணிகள் விடுதியை விரிவாக்கி, அதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்மாறு மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தை இந்த மன்றத்தில் அடிக்கடி முறையிட்டு வந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கடத்தூர் பகுதி மக்கள் குடிநீர் வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்போதும் அதே நிலைமைதான் இருக்கிறது என்பதை கூற விரும்புகிறேன்.

மடத்துக்குளத்தில் ஒரு காகித ஆலை இருக்கிறது. அந்தக் காகித ஆலையிலிருந்து வெளிவருகின்ற கழிவு நீரை அமராவதி ஆற்றில் விடுகிறார்கள். அதனால் தண்ணீர் சிவப்பு நிறத்தில், பார்ப்பதற்கு ஒரு அருவருப்பாக இருக்கிறது. துர்நாற்றம் அடிக்கிறது. அந்தத் தண்ணீரைத்தான் அந்தப் பகுதி மக்கள் குடிக்கிறார்கள்.

இதுபற்றி ஏராளமான விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறோம். அமைச்சரவர்களையும் அழைத்துச் சென்று காட்டியிருக்கிறோம். அதற்குத் தகுந்த நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை. ஒன்று அந்த காகித ஆலைக்கு உள்ள லைசென்ஸை ரத்து செய்



1974 மார்ச் 26] [திருமதி வி. ப. பழனியம்மாள்]

யுங்கள்; இல்லை என்றால் கழிவு நீரை வேறு இடத்தில் விடுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். இதில் எதையாவது ஒன்றைச் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல குடி நீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இன்றைக்கு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பாசனத் திட்டத்தின்கீழ் பெரிய பாசனத் திட்டமாக முன்பு சீரியாறு திட்டம் போடப்பட்டது. சீரியாறு திட்டத்தில் மேற்கொண்டு முயற்சி செய்யப்படவில்லை. இத்திட்டத்தில் கவனம் செலுத்தி, சர்வே செய்ததில் அதிகப் பணம் செலவாகும் என்று சொல்லி நிறுத்திவிட்டதாகச் சொல்லப்படுகிறது. செலவைப் பார்க்காமல் கோவில்பட்டி, சங்கரன்கோவில் போன்ற வறண்ட பகுதிகளுக்கு இத்திட்டம் பெரிதும் பயன்படுமாகையால் மறுபரிசீலனை செய்து, நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குளம், குட்டைகளை எல்லாம் உடனடியாக மராமத்து செய்யவேண்டியிருக்கிறது. திடீரென்று மழை பெய்தால் இப்போது இருக்கின்ற ஏரி, குளங்கள் எல்லாம் பெருகி, வழிந்து, தண்ணீர் வீணாகப் போய்விடுகிறது. அதனால் மழை இல்லாவிட்டால் உடனே வறட்சி ஏற்படுகிறது. மழை நீர் முழுவதும் பெருகி நிற்பதற்கு வழியில்லாமல் ஏரி, குளங்கள் எல்லாம் தூர்ந்துபோய்விட்டன.

கீழ் ஊற்றை நாம் அதிகமாக பயன்படுத்தி வருகின்ற இந்த நேரத்தில், இப்படிப்பட்ட ஏரி, குளங்களை உடனடியாக மராமத்து செய்தால் மிகவும் பயனுடைதாக இருக்கும். அதனால் சாகுபடி பெரிதும் அதிகமாகும்.

தர்மபுரி, சேலம், கோவை, மதுரை போன்ற இடங்களிலுள்ள ஏரிகள், குளங்கள் எல்லாம் தண்ணீர் தேங்க முடியாத அளவுக்கு மேடிட்டு, தூர்ந்துபோய் இருக்கின்றன. உடனடியாக அவைகளை எல்லாம் சீர்செய்து, திருத்தி அமைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. கே. அழகர்சாமி] [1974 மார்ச் 26

தமிழ்நாட்டில் சுமார் 3,000 இனாம் கிராமங்கள் இருந்தன. இனாம் கிராமத்திற்கு ஒரு குளம் இருக்கிறது. இப்போது இனாம்கள் ஒழிக்கப்பட்டுவிட்டதால் அந்த 3,000 குளங்களும் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கிறது. பொதுப்பணித் துறை மராமத்து செய்வதா, ஊராட்சி ஒன்றியம் மராமத்து செய்வதா அல்லது சர்க்காரே மராமத்து செய்வதா என்று முடிவு செய்யப்படாமல் ஒரு அனாதைக் குழந்தைபோல் இனாம் குளங்கள் கிடக்கின்றன. அதையெல்லாம் பொதுப்பணித் துறையே எடுத்து, சீர் செய்து, அதிகத் தண்ணீரை தேக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்தால் பாசன வசதி பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது மிகவும் முக்கியமான விஷயம். கீழ் ஊற்றைப் பயன்படுத்துவதாகச் சொல்லி, இருக்கின்ற ஏரி, குளங்களை தூரவிட்டுவிடுவது எந்த வகையிலும் பொருத்தமுடையதல்ல.

இன்று நம்முடைய மாநிலத்திலே எங்காவது ஒரு மாவட்டத்திலுள்ள இடத்தில் ஒவ்வொரு ஆண்டும் வறட்சி, பஞ்சம் உண்டாகின்ற நிலைமை ஏற்படுகின்றது. இந்த நேரத்தில் கூட பல இடங்களிலே குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் கோடையில் என்ன ஆகுமோ தெரியவில்லை. கிடைக்கின்ற தண்ணீர் வீணாகப் போகாமல், எங்கெங்கே வாய்ப்பு இருக்குமோ, அங்கெல்லாம் தேக்கக்கூடிய அளவுக்கு குளம் குட்டைகளை அமைக்கவேண்டும்.

இருக்கின்ற ஏரி, குளங்கள் தூர் எடுத்து ஆழப்படுத்த வேண்டும். அவை யாரிடத்தில் இருந்தாலும் சரி, அரசாங்கமே எடுத்து பராமரித்து வரவேண்டும். எனக்குச் சொந்தம், உனக்குச் சொந்தம் என்று சொல்வார்கள். அதை எல்லாம் கேட்காமல் பாசன வசதியை முன்னிட்டு, அரசாங்கமே ஏரி, குளங்களைக் கையகப்படுத்தி, நல்லமுறையில் மராமத்து செய்யவேண்டுமென்று கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நெல்லை மாவட்டத்தில் பல திட்டங்கள் இருக்கின்றன. அவை இன்னும் முடிவுபெறவில்லை. பணகுடி என்ற இடத்தில் அனுமான் நதியில் நாளிச்சாம்பான் அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது. திருக்காங்குடி பக்கம் நம்பியாற்றில் கொடிமாடி அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது. களக்காடு பக்கம் பச்சையாற்றில் கருமாண்டியம்மன் கோவில் அணைத்திட்டம் இருக்கிறது.



1974 மார்ச் 26] [திரு. கே. அழகர்சாமி]

அதைப்போன்ற திருக்கரங்குடி இறையடிக்கால்வாய் திட்டம். இது 5 குளத்துக்கு தண்ணீர் வரும் கால்வாயாக இருக்கிறது. இதுவும் சரியாக மராமத்துச் செய்யப்படாமல் தூர்ந்துபோய் இருக்கிறது. அதன் கரைகள் பழுதடைந்திருக்கின்றன. அதனால் தண்ணீர் அதிகமாக வரும்போது கரை உடைப்பெடுத்து இருபக்கமும் உள்ள வயல்களை அழித்துவிடுகிறது.

அதைப்போலவே ஆறுமுகங்கலம் வடிகால் திட்டமிருக்கிறது. இவைகள் எல்லாம் எப்போது நிறைவேற்றப்படும் என்று தெரியவில்லை. இருக்கின்றவைகளை யார் பராமரிப்பது என்ற சர்ச்சை இருக்கக் கூடாது.

இந்த இடத்திற்கு வடிகால் வசதி வேண்டுமென்று பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வடிகால் வசதிகளையும் பொதுப் பணித் துறையில் மூலமே செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.30)

அதேமாதிரி வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்காக திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் தர்மபுரி இரண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறது. மிகு வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளின் திட்டம் மத்திய சர்க்கார் திட்டமாகும்.

ராமநாதபுரம், தர்மபுரியைப் போலவே விளாத்திகுளம், கோவில்பட்டி வட்டாரம் மிகு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் இதை எடுத்துக்கொள்ள முடியாவிட்டாலும், மாநில அரசே நிதி ஒதுக்கி, இந்த வட்டாரங்கள் மத்திய அரசுத் திட்டம் போன்ற ஒரு மாநில அரசுத் திட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

டி.டி.சி. யிலேயே ஒரு தீர்மானம் போட்டு இதுபற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மாநில அரசு விளாத்திகுளம் தாலுக்காவை இத்திட்டத்தில் சேர்க்கவேண்டும். அதேமாதிரி இன்றைக்குப் பொதுப்பணித்துறை 70 கோடி செலவழிக்கிறார்கள். பெரும் பகுதி காண்டிராக்ட்டுக்கு விட்டே செய்யப்படுகிறது.

இன்றையதினம் இலாக்காவில் நல்ல திறமையானவர்கள் இருக்கிறார்கள், கருவிகள், இயந்திரங்கள் எல்லாம் வாங்கி வைத்திருக்கிறோம். ஆகவே காண்டிராக்டு விடுவதை நிறுத்தி, பொதுப்பணித்துறையினரே இவைகளை எடுத்துச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பொதுப்பணித்துறையில் பல பணியாளர்கள் இருக்கிறார்கள், 12 ஆயிரம் பேர் வேலைசெய்கிறார்கள், 8 ஆயிரம் பேர் நிரந்தரமாக்கப்பட்டவர்கள், 4 ஆயிரம்பேர் தற்காலிகமாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மின் பணியாளர்கள் டெம்பரரியாக இருக்கிறார்கள். அரசு காங்கி கூலிகளை நிரந்தரமாக்கியதைப்போல, 5 ஆண்டுகாலம் தொடர்ந்து பணியாற்றியவர்களை நிரந்தரமாக்கவேண்டும். வொர்க் சார்ஜ்ட் லேபரர்கள் என்று வைத்திராமல் நிரந்தரமாக்கவேண்டும்.

இன்னும் இந்த இலாக்காவில் பணியாற்றுகிற பொறியாளர்கள் ஹவுசிங் போர்டு, வாட்டர் போர்டு என்று போகிறார்கள். இங்கே ப்ரமோஷன் வாய்ப்பு இல்லை. அங்கே போய் நான்கைந்து ஆண்டுகளிலேயே ஏ. இ. ஆகிவிடுகிறார்கள். திரும்ப இங்கே வந்தால் இவருக்கு சீனியராக உள்ளவர்களுக்கும் மேலாக வருகிறார்கள். இது அந்தப் பொறியாளர்களுடைய குறைபாடு. ஆகவே மாநில அளவில் பொறியாளர்களுக்கு சீனியாரிடி பிக்ஸ் பண்ணி, அவர்கள் எந்த இடத்திலே வேலைசெய்தாலும், ப்ரமோஷன் வாய்ப்புகள் பாதிக்கப்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, நிர்வாகச் சீர்திருத்த பணிக்குழு, நிர்வாகத் திறமையை ஒட்டி—அசிஸ்டென்ட் எக்சிக்யூடிவ் என்ஜினியர் நேரிடையாகத் தேர்ந்தெடுப்பது பற்றிச் சொல்லியுள்ளது. இப்படிச் செய்வதனால் கீழே இருக்கிறவர்களுடைய ப்ரமோஷன் பாதிக்கப்படும். ஆகவே, இதுசரியல்ல மேலும் பாசனத்திற்கு வேறு, கட்டிடத்திற்கு வேறு என்று ஒவ்வொன்றையும் தனியாகப் பிரிக்க நினைப்பது சரியல்ல. நிர்வாகத்தில் ஒரு ஒருங்கிணைந்த தன்மை இருக்க இவை ஒன்றாக செயல்பட வழி செய்யவேண்டும்.





அதேமாதிரி என்னுடைய பகுதி மானுவாரிப் பகுதி, வறட்சி தொடர்ந்து பஞ்சம் இருக்கக்கூடிய பகுதி. அங்கே குளங்கள் அமைக்கவேண்டும் என்று கேட்கப்பட்டது. அன்-எக்கனமிகலாக இருக்கும் என்று அந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டன. அது சரியல்ல. அதனால் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போகிறது.

ஆகவே அன்-எக்கனமிகல் என்று கருதாமல் உணவுப் பிரச்னை அந்த வட்டார மக்களின் வாழ்வுப் பிரச்னை என்கிற அடிப்படையில் அங்கே குளங்கள் அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

முன்னாலே பாண்டு ஸ்கீம் என்று இருந்தது. பாண்டு ஸ்கீம்களை நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் அந்த அந்த வட்டாரக் கிணறுகளிலாவது கொஞ்சம் தண்ணீர் இருக்கும்படியாகச் செய்ய முடியும். மழைகாலத்தில் தண்ணீர் வீணாகப் போய்விடாதிருக்க அங்கங்கே குளங்கள் அமைத்து, அதில் அந்தத் தண்ணீரைத் தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு—கோவில்பட்டி வட்டாரத்தில் உடனடியாக ஸ்பெஷல் பாண்டு ஸ்கீமைச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பெரி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 1973-74-ம் ஆண்டு பொதுப்பணித்துறை மானியத்தை வரவேற்று என்னுடைய தொகுதியான திருவாடானை வட்டத்திற்கு முக்கிய தேவைகளைச் சிலவற்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டாரங்களில், ஏரிகளுக்கும், குளக்கால்வாய்களுக்கும் தூர் வாருதல் ஆகியவைகளுக்குச் சிறுபாசனச் சிறப்பு திட்டத்தின்கீழ் 5-வது ஆண்டு திட்டத்தில் ரூ. 320 லட்சம் ஒதுக்கீடு செய்தமைக்கு அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒதுக்கப்பட்ட இந்த நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி திருவாடானை வட்டத்தில் கண்மாய்கள் தூர்எடுப்பு, உள்வாய் நில மீட்பு வேலைகளுக்காக ஒதுக்கி இருப்பதாக அறிகிறேன். இவ்வேலைகளை துவங்குவதில் காலதாமதமில்லாமல் துவங்க வேண்டுகிறேன்.

[திரு. பெரி. சண்முகம்] [1974 மார்ச் 26

திருவாடானை வட்டத்தில் ஆயிரக்கணக்கான கண்மாய்கள், மழையை நம்பியே இருக்கின்றன. சில கண்மாய்களுக்கு ஆற்றுக்கு குளக்கால்கள், மூலமாகவும் பல கண்மாய்கள் நீர்ப்பிடி வாரிகள் வாயிலாகவும் பயனடைகின்றன. ஆகவே அருள்கூர்ந்து முதலில் இந்த குளக்கால்களும், வாரிகளும் முதலில் பராமரிக்கப் படவேண்டும். இவைகளைப் பராமரிக்காவிடில் கண்மாய்களில் நீர் நிரம்புவதற்கு மார்க்கமில்லை.

இப்பொழுதுள்ள குடிமராமத்து முறையில் மாநிலக் கணக்காயரின் தணிக்கைகளும் பெரும் தடையாக உள்ளன. ஆகவே, ஆற்றுக் குளக்கால்களை மட்டுமாவது லைனிங் செய்து கொடுத்தால் தான் ஓரளவு தண்ணீர் கண்மாய்க்கு வரும்.

சில சிறு பாசனத்திட்டங்கள் லாபமில்லாத திட்டங்கள் எனும் வகையில் செயல்பட முடியாமல் உள்ளன. ஆகவே, வறட்சி தடுப்பு என்ற நிதி ஒதுக்கீட்டில் Normal funds of the State செய்ய முடியாத வேலைகளுக்கு உதவ வேண்டுகிறேன். கண்மாய்களோ, குளக்கால்களோ பராமரிக்கப்பட வேண்டுமானால் டிவிசனுள்ள பொதுப்பணித்துறையால் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு concurrence க்கு அனுப்பி வைக்கப்பட்டால் ஆண்டுக்கணக்கில் கிடந்து விடுகிறது. இதனால் அந்தப் பகுதியிலுள்ள எல்லா வேலைகளும் துவக்கப்படாமல், அதற்குரிய பணமும் செலவு செய்யப்படாமல், தடைபட்டு விடுகிறது.

ஆகவே, இத்தகைய சூழ்நிலைகள் ஏற்படாவண்ணம் உடனடியாக மராமத்து வேலைகள் நடப்பதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

என் தொகுதியில் 20 மைல் நீளமுள்ள ஐந்து கோட்டை கால்வாயும், கப்பலூர் கால்வாய் ஒன்றும் இதுபோன்ற 100-க் கணக்கான குளக்கால்களும் லைனிங் செய்யாமல் பல ஆண்டுகளாக இருக்கின்றன. அதோடு மல்லனூர், வட்டாணம் அணைக்கட்டு சிறுநல்லூர் அணைக்கட்டு கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கும் சூரியன் கோட்டை அணைக்கட்டு திட்டத்தை இந்த சிறப்பு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த வேண்டுகிறேன்.



1974 மார்ச் 26] [திரு. பெரி. சண்முகம்]

திருவாடானை வட்டத்தில் 120 சிறு பாசனக் கண்மாய்களும் 70 பெரும் பாசனக் கண்மாய்களும் இருக்கின்றன. இவைகள் அனைத்தும் "ஜமீன் ஒழிப்பின்" கீழ் அரசால் ஒதுக்கப்பட்ட கண்மாய்கள் 1959 ஆண்டிலிருந்து இந்த கண்மாய்கள் அனைத்தும் கலுங்கு, மடைகள் கட்டி Standardise செய்யாமல் இருக்கிறது. ஆகவே உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் வருவதால் விரைவாக வகுத்து முடித்துக் கொடுக்க வேண்டுகிறேன்.

பெரும் பாசன கண்மாய்கள் பராமரிப்பு வேலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாகவே இல்லை. திருவாடானை வட்டத்திற்கு ஆண்டு தோறும் போதுமான நிதி ஒதுக்கிட வேண்டுகிறேன்.

இந்த ஆண்டு மழையே இல்லாத காரணத்தால், மகசூல் சாவியாகிவிட்டது. ஒரு தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக இப் பகுதியில் பஞ்சம் அடிக்கடி ஏற்படுகிறது. இந்த் ஆண்டு நான் எடுத்துக்கொண்ட முயற்சியால் பெரியார் நிறைமணி முத்தாற்றின் மூலம் கொண்டு வந்து ஓரளவு விளைவதற்கு முயற்சி செய்தேன். இனிவரும் ஆண்டுகளில் சனவரி மாதத்தில் மட்டும் மணிமுத்தாற்றில் பெரியார் நீர் அளிப்பதை நிரந்தரமாகச் செய்தால் ஓரளவு ஒரு பகுதியில் மட்டும் எல்லாக் கண்மாய்களிலும் தண்ணீரைப் பெருக்கி விளைவதற்கு வழி செய்யலாம் என்பதை நம்பிக்கையோடு சொல்லிக் கொள்கிறேன்.

பெரியார் பாசன விஸ்திரிப்பு மேம்பாடு வேலைகளுக்கு அரசு 7½ கோடி ரூபாய் திட்டமொன்றை அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான திருவாடானை வட்டத்தையும் சேர்த்து இவ்வட்டத்தில் ஓடும் மணிமுத்தாற்றில் பெரியார் நீரை இணைத்து ஒரு நிரந்தரப் பாசன வசதி அளிக்க வேண்டுகிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் காவேரியின் கிளை நதியான கல்லணை கால்வாயில் ஆவணத்தின் அருகேயுள்ள ஏறுநிக்காம்பள் ரெகுலேட்டரிலிருந்து கண்ணங்குடி ஒன்றிய கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிகிறது. இத் திட்டத்தையும் பரிசீலனை செய்து நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. பெரி. சண்முகம்] [1974 மார்ச் 26

விவசாயத்தையே நம்பி வாழும் திருவாடானைப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு நிரந்தரமான பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, 1974-75க்கான பொதுப் பணித்துறை மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற நேரத்தை ஒதுக்கித் தரவேண்டும் என்று முதலில் கேட்டுக் கொண்டு, மதுராந்தகம் என்று சொன்னாலே மாநில அரசிற்கும் மத்திய அரசிற்கும் எந்த அளவு சிறப்பு வாய்ந்தது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டு உள்ளேன். தமிழ்நாடு பூராவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருந்த நேரத்தில் மத்திய அரசின் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து மதுராந்தகம் ஏரியைக் காட்ட வேண்டிய சூழ்நிலை நமக்கும் நம் அதிகாரிகளுக்கும் வந்தது என்று சொன்னால் உண்மையில் வருத்தப்படவேண்டியதும் ஆகும்.

என்ன வருத்தம் என்று சொன்னால் அதனால் நாங்கள் பயன் அடையவில்லை என்பது என் கருத்தாகும். இந்த ஆண்டு திட்டத்தில் மதுராந்தகம் தாலுக்காவில் நீர்ப்பாசன திட்டம் ஒன்றும் கோடிட்டு காட்டப்படவில்லை. ஆனாலும் கல்லார் திட்டம் என்ற ஒன்றுக்கான எல்லா வேலையும் முடிந்து அதற்கான திட்டம் எல்லாம் அரசாங்கத்திடம் இருப்பதாக அறிகிறேன். 15 லட்சம் 61 ஆயிரம் ஒதுக்கப்படக் கூடிய இந்தத் திட்டத்தினை நடப்பு ஆண்டில் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று அரசினை கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, செம்பரம்பாக்கம் ஏரி எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அந்த அளவு அல்லது அதைவிட பெருமை வாய்ந்தது மதுராந்தகம் ஏரியாகும். செம்பரம்பாக்கம் ஏரிக்காக நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்த அதிகாரிகள் மதுராந்தகம் ஏரிக்கு அப்படிப்பட்ட சீர்திருத்தம் செய்ய முன்வரவில்லையே என்று சங்கடம் எங்கள் பகுதி மக்களுக்கு நிறைய இருக்கிறது. அந்த மதுராந்தகம் ஏரிக்கு தண்ணீர் வருகின்ற வாய்க்கால் நீர்வழிகள் 200 ஆண்டுகளுக்கு முன்னால் மதுராந்தக சோழனால் அமைக்கப் பட்டதாகும். உத்திரமேரூர் ஏரி, கிளியாறு போன்ற கால்வாய் வழிகளில் வந்தவாசி பகுதியிலிருந்தே தூர் எடுக்க வேண்டும்.



1974 மார்ச் 26]

**திரு. துரைமுருகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். முன்பே மதுராந்தகம் ஏரியில் தூர் வாரப்பட்டதாக நாம் அறிந்திருக்கிறோம். அப்படி இருக்க தூர் வாரப்படவில்லை என்று உறுப்பினர் சொல்லுகிறாரே அது எப்படி என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும் என்று எனக்கு தெரியவில்லை. சட்டம் படித்தவர் அவர். ஆகவே மதுராந்தகம் ஏரியில் தூர் வாரவில்லை என்று சுட்டிக்காட்ட முடியும். சுற்றிக் காட்டுவதற்கு அடையாளமாக ஒரு சில நாட்களுக்கு வேலை செய்யப்பட்டதே அல்லாமல் முறையாக செப்பனிடப்படவில்லை என்று அரசாங்க குறிப்பே இருக்கிறது. வேண்டுமென்றால் பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொல்லுகிறார்கள். அது தவறான குற்றச்சாட்டு. மதுராந்தகம் ஏரியில் தூர் எடுப்பதற்குத் தான் பணம் செலவிடப்பட்டது. மதுராந்தகம் ஏரியை கவனிக்கவே இல்லை என்று உறுப்பினர் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் கொண்டுள்ள ஆர்வத்தை பாராட்டுகிறேன். ஆனால் செப்பனிடப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சரியானதல்ல. மதுராந்தகம் ஏரியைப் பற்றி நாங்கள் நன்றாக அறிந்திருக்கிறோம். அதன் பயனைப் பற்றியும் எங்களுக்குத் தெரியும். உறுப்பினர் தன்னுடைய முயற்சியை தீவிரமாக எடுத்து அதிகபட்சமான பணத்தை வாங்குவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் தவறான குற்றச்சாட்டை சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** ஆளும் கட்சி உறுப்பினர் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி இருக்கிறார் என்றால் அவர் வேண்டுமென்றே சுமத்தி இருக்கிறார் என்று சொல்ல முடியாது. அப்படி சுமத்த வேண்டும் என்று யாரும் எண்ணமாட்டார்கள். ஆகவே அவர் கூறுவது தான் உண்மை நிலையோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பொதுப் பணித் துறை அமைச்சர் என்ற முறையில் எங்களிடமிருந்து உறுப்பினர் விளக்கம் பெறுகிறாரே தவிர, உறுப்பினர் சொல்லுவது தான் சரி என்று எடுத்துக்கொள்ள வேண்டாம்.

**திரு. சி. ஆறுமுகம் :** என் தொகுதி பிரச்னையைத்தான் சுட்டிக் காட்ட வந்தேன். மற்ற நீர்ப்பாசன ஏரிகளுக்காக வேலை நடக்கிறதே என் தொகுதியில் இல்லையே என்பதைத்தான் சொல்ல விரும்பினேன்.

ஆகவே நேரம் குறைந்து இருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய பேச்சில் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு அடுத்து நீர் வருகிற கால்வாய்கள் எல்லாம் செப்பனிடப்பட வேண்டும்.

மதுராந்தகம் ஏரியிலிருந்து வருகிற ஏரி பல்லவகுளம் ஏரி. ஏறக்குறைய 17—20 ஊர் வழியாக வரவேண்டும். ஏறத்தாழ ஆறாயிரம் ஏக்கருக்கு மேல் நீர்ப்பாசனம் ஆக வேண்டும். ஆகவே அதையும் சீரமைக்க வேண்டும்.

அதைப் போல செய்யூர் ஏரி, செங்காட்டூர் ஏரி போன்ற வற்றையும் சீரமைக்க வேண்டும். நடைமுறை ஆண்டில் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த முக்கியமான வற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து; சாலையைப் பொறுத்தவரைக்கும் சென்ற ஆண்டைப் போல நல்ல விதத்தில் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால் ஏறத்தாழ ஒரு தொகுதிக்கு மட்டும் 50 லட்சம் ரூபாய் என்று ஒதுக்குவதை விட எல்லா சட்ட மன்றத் தொகுதிகளுக்கும் சமமாக பகிர்ந்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரே தொகுதிக்குப் பணம் போகக் கூடாது என்பது என் கருத்தாகும்.

அதைப் போல மதுராந்தகம் பஸ் ஸ்டாண்ட் என்ன காரணமோ தெரியவில்லை, ஒப்புதல் வரவில்லையோ, என்னமோ அந்த வேலை இன்னும் நடக்காமல் இருக்கிறது. இந்த வசதியை இந்த ஆண்டாவது செய்து தர வழிவகைச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





கிராமசாலைப் பகுதியில் எங்கள் பகுதி சரிவர இடம் பெறவில்லை. ஈசூர், தச்சூர் போன்ற கிராமப்புறங்களில் சாலை வசதிகள் மிகத் தேவையாக இருக்கின்றன. அதைப்போல நீலமங்கலம், நெல்லாய், பாளையம், செய்யூர் ஆகிய இடங்களுக்கும் சாலை வசதிகள் செய்துதர கிராம அபிவிருத்தித் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

கடலோரப் பகுதிகளுக்கும் சாலை வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும். மணல் அதிகமாக இருக்கிற அந்தப் பகுதிகளில் திட்டம் போடுகிற நேரத்தில் சரிவர போட்டு நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, கடலோரப் பகுதிக்குக் குடி தண்ணீர் வசதி செய்து தரப்பட வேண்டும். கடலோரப் பகுதியாக இருப்பதால் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளுக்குக் குடி தண்ணீர் கிடைக்க இந்த ஆண்டாவது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் அவருக்கு என்னுடைய நன்றியை மறுமுறையும் தெரிவித்துக்கொண்டு, இந்த ஆண்டு மதுராந்தகம் தாலுகாவிலே சம்பா எல்லாம் சாவியாகிவிட்டது, ஆகவே மதுராந்தகம் தாலுகாவை பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த ஆண்டு மழையே பெய்யாததால், அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஒட்டி என்னுடைய கட்சித் தலைவர் திரு. மணலி அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில விஷயங்களைச் சொல்ல நான் முன்வருகிறேன்.

இன்றைய தினம் காவிரி கால்வாய்ப் பகுதி விரைவுத் திட்டம் ஒன்றைத் தீட்டி, அதற்காக மதிப்பீடுகள் எல்லாம் தயாரித்தல், ஒப்பந்தங்கள் எல்லாம் முடிவு செய்தல், பொருள்களை வாங்குதல் ஆகிய வேலைகளையெல்லாம் காலத்திலே செய்தாக வேண்டும்.

காலத்திலே என்று நான் சொல்வதற்குக் காரணம் ஒரு ஆண்டு ஜூன் மாதம் முடிவதற்குள்ளாக அந்த வேலைகளை செய்தாக வேண்டும், ஜனவரி மாதத்திற்கு முன்னாலேயே மதிப்பீடுகளைத் தயாரித்து, ஒப்பந்தங்களை முடிக்க வேண்டும். இன்றைய தினம் வேலை அரைகுறையாகத் தான் நடந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் வந்துவிட்டால் வேலையைப் பூர்த்தி செய்ய முடியாது. ஆகவே உடனடியாக வேலைகளைத் துவங்க வேண்டும்.

சிறுபாசனத் திட்டங்களை இன்னும் அதிகமாக நிறைவேற்றுவதன் மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பாசன வசதிக்குக் கொண்டுவர முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குளம், குட்டை, ஏரிகளில் உள்ள வேலைகளை பராமரிப்பு வேலைகளைச் செய்து மழை பெய்தால் ஆங்காங்கு தண்ணீரைத் தேக்கக்கூடிய முறையிலேயும் அந்தத் தண்ணீரை பாசனத்திற்குப் பயன்படுத்தக்கூடிய முறையிலேயும் திட்டங்களைத் தீட்ட வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே காட்டாறுகள் பல இருக்கின்றன, அவற்றிலிருந்து தண்ணீர் வீணாகக் கடலிலே சேருகின்றது. அவற்றின் குறுக்கே எல்லாம் ஆங்காங்கே அணைகளைக் கட்டி அந்தப் பகுதியிலுள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்த வடிகால் விவகாரம் தஞ்சை மாவட்டத்திலே பெரிய விவகாரமாக இருக்கிறது. கந்தபுரிச்சான் வடிகால் திட்டம் பல லட்ச ரூபாய்கள் செலவிடப்பட்டும் மதகுகளில் எல்லாம் தண்ணீர் சரியாக வடிவதில்லை. ஆகவே இரண்டு கண்கள் அதிகமாக வைத்து தண்ணீரை வடியவைக்க வேண்டுமென்று அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் கேட்டுக்கொண்டு வருகிறார்கள். அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிளைதாங்கி வடிகால் திட்டம் திரு. மனோலி அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த திருத்துறைப்பூண்டியிலே இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருக்கிறபோது அந்தத் திட்டத்தை ஆய்வுசெய்து முடித்த பிறகு அந்த வடிகாலை எங்கே விடுவது என்ற தகராறு வந்து ஒரு செல்வாக்குள்ளவரின் தோப்பு வழியாக விடவேண்டுமென்ற தகவல் எல்லாம் சொல்லப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.





அதற்கான மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டுவிட்டன. நிலத்தை ஆர்ஜிதம் செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதைப் பற்றி டிபார்ட்மெண்டிலே கேட்டால் ரெவினியூ துறையைக் கேளுங்கள் என்று சுட்டிக்காட்டுகிறார்கள், ரெவின்யூ துறையிலே கேட்டால் குறுக்கீடுகள், தலையீடுகள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை விரைவிலே முடிக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக 5 ஆயிரம், 10 ஆயிரம் ஏக்கரா நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டித் தொகுதியிலே தலைக்காடு என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்குள் அரிச்சந்திரா நதியிலே ஒரு பாலம் கட்டப்பட வேண்டும் என்ற செயற்குறிப்பு இருக்கிறது, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மன்னார்குடியிலிருந்து தேவன்குடி வரைக்கும் செல்கின்ற நிலை இருந்தாலும் அருகிலே இருக்கிற கொறடாசேரி செல்ல முடியும் என்றாலும் அதற்கு குறுக்கு வழியொன்றை அமைக்க குறுக்கே ஒரு ஆறு இருக்கிறது, அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தைக் கட்டினால் மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதால் அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பாமினியாறு, கோதையாறு என்ற இரண்டு ஆறுகள் ஓடுகின்றன. அதனால் பல கிராமங்களுக்கிடையே இணைப்புச் சாலைகள் இல்லாமல் இருக்கின்றது. எந்தவிதமான இணைப்பும் 22 மைல் அளவுக்கு இல்லை. ஒரு பாலம் கட்டினால் இணைப்பு ஏற்படுத்தலாம். அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள், பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருக்கிறது என்று சொன்னார்கள், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட அந்தப் பாலத்தைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அதையும் கவனத்தில் கொண்டு கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 மார்ச் 26

அங்காடி இணைப்புச் சாலைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கூத்தாநல்லூரில் இருந்து தில்லை விளாகம் வரையிலே 22 மைல் வரையில் வேலை ஆரம்பிக்கப்பட்டு 3 கிலோ மீட்டர்கூட வேலை செய்யப்படாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் அதில் என்ன மர்மம் இருக்கிறது என்று புரியவில்லை. அது மாநில அரசாங்கத் திட்டமா மத்திய அரசாங்கத் திட்டமா? இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கிய பணத்தை வேறு திட்டத்திற்கு ஒதுக்கி விட்டார்களா? இதையெல்லாம் பரிசீலித்து உடனடியாக அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமச் சாலைகள் சிறப்புத் திட்டம் ஒரு சிறப்பான திட்டமாகும். 1,500 மக்கள் கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போட வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. அதை ஆயிரம் மக்கள் தொகை என்ற அளவிற்குக் குறைத்து அப்படிப் பட்ட கிராமங்களுக்கு எல்லாம் இணைப்புச் சாலைகளைப் போடுகின்ற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து கூட்டு மன்றங்களால் நடத்தப்படுகின்ற சாலைகளை அவைகள் நிர்வகிக்க முடியவில்லை. அந்தச் சாலைகளை வைத்துக் கொண்டு மிகப்பெரிய பொல்லாப்புகளை அவர்கள் ஏற்க வேண்டியிருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்குக் கப்பி அடிக்கிறார்கள். பிறகு மக்கள் கோரிக்கைக்கு இணங்க அங்கே பஸ் ஓட்டுகிறார்கள். ஆனால் பஸ் திடீரென்று நின்றுவிடுகிறது, பஞ்சாயத்து யூனியன்களிடம் சாலைகளைச் செப்பனிட பணம் இல்லை, அதனால் அவைகளால் அந்த வேலைகளைச் சரிவரச் செய்ய முடியவில்லை. ஆதலால் பஞ்சாயத்து யூனியன்களிடம் இருக்கின்ற சாலைகள் அனைத்தையும் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்.

ஆண்டுக்கு 70 கிலோ மீட்டர் 80 கிலோ மீட்டர் என்று எடுப்பதால் பிரச்னை தீர்ந்துவிடாது, ஆகவே ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். வீராக்கி—ஆளத்தாம்பட்டி கரையைக் கப்பி போட்டால் மன்னார்குடியிலிருந்து தலைஞாயிறு வரையில் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.



1974 மார்ச் 26] [திரு. ஆ. கு. சுப்பையா]

முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடனே தஞ்சைக்கு வந்திருந்த நேரத்திலே அங்கே நடந்த மாநாட்டிலே அவர்கள் அதை நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுத்தார்கள், அவர்கள் கொடுத்த அந்த வாக்குறுதியே இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

71 கோடி ரூபாய் கேட்டு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மானியங்களை இங்கே வைத்திருக்கிறார்கள். அதிலே பெரும்பகுதி காண்ட்ராக்டர்கள் அடித்துக் கொண்டு போகக்கூடிய வழி இருக்கிறது, அவர்கள் செய்யக்கூடிய வேலைகள் எல்லாம் மிகத் தரக்குறைவாக இருக்கின்றன, ஆதாயக் குறிக்கோளை வைத்துக்கொண்டு இருக்கிற காண்டிராக்டர்களை நம்பக்கூடாது. ஆகவே அதை அடியோடு ஒழித்துவிட்டு நிர்வாகமே அதை எடுத்துக்கொண்டு செய்ய வேண்டும். மூன்றில் ஒரு பங்கை அவர்கள் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். ஆகவே அதையெல்லாம் அரசாங்கமே ஏற்று நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** பேரவைத் தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டிற்கு பொதுப் பணித் துறை, பாசனத் துறை, நெடுஞ்சாலை, பெருவழித் துறை ஆகிய துறைகளுக்கான நிதிக் கோரிக்கைகளை ஆதரித்து எனது கருத்தினை தெரிவிக்க விழைகிறேன்.

தமிழகத்திலே பொதுப் பணித் துறையிலே ஆகட்டும், பாசனத் துறையிலே ஆகட்டும், நெடுஞ்சாலை, கிராம, பெருவழித் துறையிலே ஆகட்டும், அனைத்துத் துறைகளிலுமே செங்கற்பட்டு மாவட்டம் நீங்கலாக—அப்படி சொல்வதற்கு என்னை மன்னிக்க வேண்டும்—செங்கற்பட்டு மாவட்டம் விடுத்து பிற மாவட்டங்களிலே முனைப்பான திட்டங்களையும், மேம்பாடு செய்கின்ற திட்டங்களையும் பயனுறு திட்டங்களையும் இந்தத் துறை செய்து வருவதை நான் பாராட்டுகிறேன், மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

(பிற்பகல் 1.00)

இதே நிலையை செங்கற்பட்டு மாவட்டமும் பெற வேண்டுமென்று கூறுவது என்னுடைய உரிமையின்பாற்பட்ட, என்னுடைய கடமையின்பாற்பட்ட உரிமை என்பதால் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1974 மார்ச் 26

1957 ஆம் ஆண்டில் என்னுடைய பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொதுப் பணித் துறை மீது ஆற்றிய உரையின் மீது நான் பேரவைத் தலைவரவர்களே, நான் உங்கள் மாடத்திலே அமர்ந்து அந்தப் பேருரையைக் கேட்கும் பெரும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். மிகவும் கனிந்து சொன்னார்கள், பெருமளவில் காஞ்சீபுரத்தில் விவசாயிகள் இருக்கின்றார்கள், ஆனால் பாசன வசதிக்குரிய நல்ல நீரோட்டம் உள்ள ஆற்று நீர் இல்லாத அளவில் அந்தப் பகுதி மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். பாலாறு என்ற பெயர் இருக்கிறது, ஆனால் அதில் வற்றிய மணலை மட்டும் தான் பார்க்கின்ற துர்ப்பாக்கியமான நிலை அங்கே இருக்கிறது. தாமல் ஏரி, பரம்பரை ஏரியாக இருக்கிறது. பருந்தூர் ஏரி, காரை ஏரி, சிங்காரிவாக்கம் ஏரி, சிறுவள்ளூர் ஏரி என்று பல ஏரிகள் இருக்கின்றன என்று அடுக்கிக்கொண்டே பல ஏரிகளைச் சொன்னார்கள். அவைகளெல்லாம் அரசாங்க அடங்கலில் இருந்து, 11 மாதம், 9 மாதம், 8 மாதம் அவைகளில் தண்ணீர் தேங்கி பாசனத்திற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இருப்பதாக அடங்கலில் இடம் பெற்றிருந்தாலும், மூன்று திங்களுக்கு மேல் பாசனத்திற்குரிய வகையில் உதவிகரமாக ஆக்கப்படாமல் மேடிட்டு இருக்கிறது. ஆகவே, காமராஜர் அவர்களே, உங்கள் ஆட்சியில் அவைகளை ஆழமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று அன்றைக்கு அண்ணா அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்தார்கள்.

அவர்களுக்குப் பின்னாலே பாரம்பரியமாக வந்த இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்தனை ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து நாங்கள் கூச்சலிட்டுக் கொண்டு வந்த காரணத்தால் தாமல் ஏரிக்கு 1,50,000 ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள், அதுவும் கடைசியிலே, எப்படியோ கவனக் குறைவாக விடப்பட்டு, மறுபடியும் சேர்க்கப்பட்டிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அளவில் அது பயனுறு திட்டமாக இருப்பது பெரும்பாலோருக்குத் தெரியாது.

இன்றைக்கு உள்ளபடியே காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள ஏரிகள் கால்நடைகள்கூட தண்ணீர் குடிக்க முடியாத நிலையில் வறண்டு கிடக்கின்றன. மாரிக் காலத்தில் பெய்கின்ற மழைத் தண்ணீர்



1974 மார்ச் 26] [திரு. சி. வி. எம். அண்ணாமலை]

கடலிலே கலக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி, வெள்ளக் கால்வாயைச் சீர்படுத்தி அதன் எதிர்வாயிலைச் சீர்படுத்த வேண்டும்.

அங்கே பொன்னேரி என்ற ஒரு ஏரி இருக்கிறது. காஞ்சீபுரம் பல்வளமும் சிறப்பாகப் பெற்ற நாடாகயிருந்தாலும் அந்தப் பெருநகரத்திற்கு வருபவர்கள் வந்தவுடனேயே பார்ப்பது வறண்டு கிடக்கும், பாழடைந்து கிடக்கும், வற்றிக்கிடக்கின்ற, கால்நடைகளுக்குக்கூடத் தண்ணீர் கிடைக்காத நிலையில் இருக்கின்ற ஏரிகளைத்தான் பார்க்கின்ற அவலநிலை இருக்கிறது.

பொன்னேரிக்கு வரவுகாலைச் சீர்படுத்தினால் சுமார் 800 ஏக்கராக்கள் அளவில் பாசன வசதி பெறும் அளவில் விவசாயிகள் இருக்கிறார்கள். கடந்த 15, 20 ஆண்டுக்காலமாக விவசாயிகள் சரியாக விவசாயம் செய்ய முடியாத நிலையில் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவற்றில் பாசன வசதி ஏற்படுத்தி, கம்பக் கால்வாயிலிருந்து தனிக்கால்வாய் ஏற்படுத்த வேண்டுமென்று பலமுறை கோரியும் இதுவரையில் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

காரை கிராமம் பற்றிய திட்டம் கிடப்பிலே இருக்கிறதே தவிர, இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இங்கு சொல்லப்பட்ட அத்தனை ஏரிகளையும் துரிசுப்படுத்தி ஆழப்படுத்தினால் மாரிக்காலங்களில் பெய்யும் மழைத் தண்ணீரை அவைகளில் தேக்கி வைத்தால் உழுகின்ற உழவர்களுக்கு நீர்கொடுத்து, அதனால் செய்யப்படும் விவசாயம் மேம்பாடுடையதாக இருக்கும். ஆகையால் திட்டங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே மாவட்டத்தில், ஒரே இடத்தில் திட்டங்களைப் போடுவதால், கோடிக்கணக்கான ரூபாய்களில் போடுவதால் எங்களைப்போன்றவர்கள் கூறுகின்ற சொற்கள் உரியவர்கள் கேட்பதிலே தடைப்பட்டு விடுகிறதோ என்ற மனக்கலக்கத்துடன் பேசுகிறேன்.

நான் வாக்காளப் பெருமக்களுக்காக மட்டும் பேசவில்லை, என்னுடைய மனச்சாட்சியின்படிதான் பேசுகிறேன். காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் கூறிய வேலைகளையெல்லாம், அனைத்து

[திரு. சி. வி. எம். அண்ணாமலை] [1974 மார்ச் 26

முன்னோடித் திட்டங்களையெல்லாம், அவைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் விடுபட்டதற்குக் காரணம் பொதுப்பணித்துறை பொறியாளர் என்று சொன்னால் நீங்கள் அவர்மீது நடவடிக்கை எடுங்கள், அல்லது கவனக்குறைவாக இருந்தால் ஒரு கணம் அங்கே வந்து பார்த்து இந்தத் திட்டத்திலே அவற்றையெல்லாம் இணைத்துக்கொள்ள ஒருப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பரனூர் என்ற இடத்தில் பம்பக் கால்வாய் என்ற ஒரு கால்வாய் குறுக்கிடுகிறது. மாரிக்காலங்களில் 40-க்கும் மேற்பட்ட பேருந்துகள் அங்கே செல்ல முடியாமல் சடங்கலாக இருக்கிறது. அந்தக் கரைகள் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு போடப் பட்டவை. இதை முதலமைச்சரவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த காலத்தில் அழைத்துச் சென்று காட்டினேன். முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரவர் களுக்கும் காட்டினேன். இந்நாள் பொதுப்பணித்துறை அமைச்சரவர்களையும் அழைத்துச் செல்வதற்குத் தேதி கேட்டு சண்டை போட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டு வருவதற் குள்ளாக அழைத்துச் சென்று காட்டி விட வேண்டுமென்று கருதினேன். ஆனால் முடியாமற்போய்விட்டது.

3½ இலட்சம் ரூபாயில் ஒரு மதிப்பீடு மூன்றாண்டுக்காலமாக நிதித்துறையிலே நிதிச் செயலகத்தில் இருக்கிறது. தலைமைப் பொறியாளர் பரிந்துரையையும் பெற்றுவிட்டது. ஆனால் அதை நிறைவேற்றுவதில் காலம் கடத்திக்கொண்டு வரப்படுகிறது. ஏன் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற கேள்வியை நான் கேட்கும் பொழுது வாக்களித்த மக்களின் குறைகளை எடுத்துச் சொல்லாத பெருங்குறைக்கு இலக்காகிவிடுவோமா என்ற நெஞ்சார்ந்த நிலையில்தான் நான் இதைச் சொல்கிறேன். எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பருந்தூர் ஏரி பயனுள்ள ஏரி. அதேபோல் சிறுவாக்கம் ஏரி, சிறுவள்ளூர் ஏரி, கோவிந்தவாடி ஏரி, பெரிய கரம்பூர் ஏரி, காரை ஏரி, சிங்காரிவாக்கம் ஏரி என்று பல அருமையான ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளையெல்லாம் செம்மைப்படுத்தி, ஆழப்படுத்தி, அங்குள்ள ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றினால் அவை பயனுள்ள ஏரிகளாக அமையும்.



1974 மார்ச் 26]

திருமதி த. ந. அனந்தநாயகி: இவ்வளவு ஏரிகளைச் சொல்கிறார்களே, அவருடைய தொகுதி வெறும் ஏரிகளாகத்தான் இருக்கிறதா அல்லது வேறு ஏதாவது இருக்கிறதா என்பதற்காகக் கேட்கிறேன்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை: அம்மையார் அவர்கள் தயவு செய்து அங்கே வந்து பார்க்க வேண்டும். ஆளுங்கட்சிக்காரர்கள் மட்டும் பயன்பெறுவதாகக் கருதுகிறீர்கள். ஆளுங்கட்சிக்காரர் வெறும் வாய் மட்டுந்தான் உள்ளவனாக இருக்கிறேன். ஆகையால் நீங்களெல்லாம் தயவு செய்து உங்களைப் போன்ற பெருமைமிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய தொகுதியை வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட திட்டங்கள் இங்கே நடைமுறையில் வருவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள எல்லா சட்டமன்ற உறுப்பினர் களையும், பொறியியல் துறை வல்லுநர்களையும் கூட்டிப்பேசி திட்டங்களைத் தீட்டினால் குறைகளைக்களைய முடியும் என்று பணிந்து கேட்டுக்கொண்டு, இங்கே குறிப்பிட்ட குறைகள் மிகவும் குறைந்த குறைகளைத்தான் கூறியிருக்கிறேன். அந்தக் குறைகளை நிறைவு செய்ய செம்மையாக ஒருப்பட வேண்டுமென்று பணிந்து கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

திரு. வீ. இராசகோபால்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்தப் பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கைகளை நான் உளமார வரவேற்கிறேன்.

நான் இந்த மானியத்தை வரவேற்பதற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு என்னுடைய உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால், கடந்த 20, 23 ஆண்டுக் காலமாக என்னுடைய தொகுதியிலே கோரி வந்த ஒரு கோரிக்கை இன்றைய தினம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் அச்சரபாக்கம் சாலையில் ஒரு இடத்தில் சுகநதி ஆறு என்ற ஒரு ஆறு குறுக்கிடு கிறது. அந்த ஆற்றிலே ஒரு மேம்பாலம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று முன்பிருந்த சட்டமன்ற உறுப்பினர் கூடக் கேட்டு வந்தார்கள். அந்தக் கோரிக்கை இப்பொழுது நிறைவேற்றப்

[திரு. வீ. இராசகோபால்] [1974 மார்ச் 26

பட்டிருப்பது கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். அதற்கான என்னுடைய உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பொதுப்பணித்துறை மானியத்திற்கு சற்றேறக்குறைய 71 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாசனம், கட்டிடம் என்பது போன்றவற்றிற்கு இவ்வளவு தொகையை ஒதுக்கி இந்த அரசு சிறப்பாகச் செயல்படுகிறது. பொதுப் பணித்துறை இன்றைக்கு நாட்டிலே ஆற்றிவரும் பணிகள் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். பாசனத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு நான்காவது திட்டத்தில் 9 புதிய திட்டங்களைப் புகுத்தியிருக்கிறது. இப்படிப் பாசனத் திட்டங்களை விரிவுபடுத்தும் அதே சமயத்தில் நிலநீர் ஆய்வுகளை வைத்து, இயக்குநர்களை வைத்து பூமியிலே உள்ள நீரைக் கண்டுபிடித்து, அதை எப்படிச் செயல்படுத்த வேண்டுமென்ற முறையிலே மிகப் பெரிய திட்டத்தை வைத்து, அதன் மூலம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த பொதுப் பணித்துறை உதவியாக இருப்பது பாராட்டத் தக்கது.

நான் சார்ந்திருக்கின்ற வடார்க்காடு மாவட்டத்தில் நீர்ப் பாசன வசதிகள் அதிகம் இல்லை. ஏரிகளைக் கொண்டுதான் அங்கே விவசாயம் செய்ய வேண்டும். ஏரிகள் வறண்டுவிட்டால் ஒரு போகம் தான் செய்ய முடியும், அல்லது ஏரி முழுவதும் நிரம்பியிருந்தால் இரண்டு போகம் பயிரிடலாம். இல்லையென்றால் வறட்சி தான். அந்த வடார்க்காடு மாவட்டத்தில் நிலநீரைப் பயன்படுத்தி அங்குள்ள விவசாயிகள் விவசாயம் செய்ய வேண்டும். இப்பொழுது பார்க்கும்பொழுது வடார்க்காடு மாவட்டத்தில் இந்தப் பசுமைப்புரட்சியின் அடிப்படையிலே ஏராளமான கிணறுகள் வெட்டப்பட்டு விவசாயிகளுக்குப் பயன்பட்டு வருகின்றன.

அதற்கு நில நீர் ஆய்வாளர்கள் உதவி செய்து வருகிறார்கள். இந்த மானியத்தில் ஏரி கொள்ளளவு திறனைப் பெருக்கும் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிறப்பான திட்டம். இதற்காக 1½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட ஏரிகளின் கொள்ளளவு குறைந்து கொண்டே வருகிறது. ஏரி எதிர் வாயில்களில் பயிரிடுகிறார்கள்;



1974 மார்ச் 26] [திரு. வீ. இராசகோபால்]

கிணற்றைத் தோண்டுகிறார்கள். இந்தத் திட்டத்தின்படி ஏரிக் கரைகளை உயர்த்தி, ஆழப்படுத்தி தூர் எடுத்துக் கொள்ளளவை அதிகப்படுத்த திட்டமிட்டிருக்கிறார்கள். அதிலே ஆக்கிரமிப்பு செய்பவர்களைக் கட்டாயமாக வெளியேற்ற வேண்டும்.

சென்ற முறையே மானிய விவாதத்தின்போது குறிப்பிட்டேன். என்னுடைய தொகுதியிலும் அந்த நிலைமை இருக்கிறது. அது பற்றி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல இடையூறுகள் இருக்கின்றன. அதிகாரிகள் தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை அப்புறப்படுத்த வேண்டும். அவர்கள் எடுத்துக் கிணறுகளைத் தூர்த்துவிட் வேண்டும்.

நில நீர் ஆய்வு பற்றிக் குறிப்பிட்டேன். நிலத்திலே உள்ள நீரை எடுக்க வேண்டுமென்றால், நிலவள வங்கிகள் கடன் கொடுக்கின்றன கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்க நில நீர் இயக்குநர்-கிரவுண்ட் வாட்டர் டைரக்டர் க்ளியரன்ஸ் சர்டிபிகேட் கொடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை ஏராளமாக கிணற்றுப் பாய்ச்சல் மூலமாக புஞ்சை பயிரிடப்படுகிறது. கிணற்றிலே தண்ணீர் இல்லை என்று சொல்லி அந்த சர்ட்டிபிகேட் கொடுப்பதில் தடை இருக்கிறது.

இதுபற்றி இயக்குநரைக் கேட்ட நேரத்தில் நில நீர் ஆய்வாளர்கள் அங்கே தண்ணீர் இல்லை என்று சொன்னதாகச் சொல்லுகிறார்கள். வந்தவாசி வட்டத்தில் மழைக் காலத்தில் ஏரித் தண்ணீர் வடியும் வரை புஞ்சை நிலங்களில் உள்ள கிணறுகளில் ஏராளமாகத் தண்ணீர் இருக்கின்றன. நில நீர் ஆய்வாளர்கள் நேரடியாகப் பார்ப்பது கிடையாது. நில நீர் ஆய்வாளர்களை அனுப்பும்போது நிலவள வங்கித் தலைவருக்கும், தொகுதி சட்ட மன்ற உறுப்பினருக்கும் அறிவித்துவிட்டு அனுப்ப வேண்டுமென்று இயக்குநரைக் கேட்டுக் கொண்டேன். அதற்கு இதுவரை செவி சாய்க்கவில்லை.

நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் என்னுடைய தொகுதியைப் பற்றிய சில குறைகளைக் கூற விரும்புகிறேன். அங்கு ஒரு மேம்பாலத்திற்கு அனுமதி கொடுத்தார்கள். இன்னொரு மேம்பாலத்திற்கும் அனுமதி வேண்டும். பள்ளிகுளம், புத்தேரி ஓடை இருக்கிறது. செஞ்சியை இணைக்கக்கூடியது.

[திரு. வி. இராசகோபால்] [1974 மார்ச் 26

அடுத்து வந்தவாசியிலுள்ள அரசினர் மருத்துவ மனையில் வராண்டாவில் ஸ்க்ரீன் போட வேண்டும். இல்லையென்றால் மழை பெய்யும்போது சாரல் அடித்து நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். சென்ற மாளியத்திலேயே பேசினேன். டி.எம்.ஓ.வைச் சந்தித்துக் கேட்டதற்கு பி.டபிள்யூ.டி. (இ.இ.) அவர்களிடம் குறிப்பு இருப்பதாகக் கூறினார்கள். அதைக் கூடிய விரைவில் செய்து பேஷண்டுகள் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

THIRU K. S. KOTHANDARAMIAH: Hon. Speaker, Sir, I thank you very much for giving me at least some time to say a few words on the Cut Motions have been given notice of by me on these Demands—Irrigation and Public Works '.

These are important Demands over which depend every activities of human life. I went through the reviews given to us. It contains a number of useful schemes. I thank and congratulate the Hon. Minister for Works, who is in charge of that portfolio for including such good schemes and also the officers whom we are meeting very frequently for getting information as to whether a particular thing has been done or not. I also congratulate our present Revenue Minister Hon. Thiru Sadiq Pasha, because he has provided a lot of irrigation facilities when he was the Hon. Minister for Works. I am sure the present Hon. Minister for Works will continue them and do good work for us.

Moreover the present Hon. Minister for Works has seen our area and knows the whole thing, as Revenue Minister previously.

The summer here is very and the weather in our area is very fine and I request the Hon. Minister for Works to come and stay in our area for some time after the Budget Session is over and study the needs and requirements of our people.

Coming to our local needs, I would like to say that Kelavarapalli Dam construction is pending for the last so many years. The investigation work has been completed. We thought that it would be included under the Five-Year Plan for implementation this year--but it is included as a token scheme only. Similarly, the Doddahalla Project near Anchetty is also pending for the last five or six years. It was approved by our Hon. Chief Minister when



1974 மார்ச் 26] [Thiru K. S. Kothandaramiah]

he was Minister for Works. The sanction and construction of the Project is still pending. I hope the Hon. Minister for Works will take necessary steps to include it and execute it soon.

The Dalavai Cheru dam is pending for more than 25 years. The tenders were called for and everything was finalised. A contractor also came to take up the work; but it was kept pending as the D.P.A.P. scheme was given up. The scheme is included in the S.M.I.P. scheme.

Under this S.M.I.P. scheme it should be execused as soon as possible. The construction of Vempalli dam in Sulagiri Estate, a Zamindari area, is also pending for a long time.

In the Budget Speech, the Hon. Chief Minister said that the tanks in the Zamindari areas will be taken up for improvement But it has been stated in the note that they will be given to the Panchayat Unions. I would like to submit that the P.W.D. will be able to do better than the Panchayat Unions. So, it is better to give them to Department, who can do some good work.

Then coming to Irrigation tanks, under the Minor Irrigation Programmes, I find that only a sum of Rs. 25 lakhs have been provided for the entire State and under which so many items have been included. The amount provided for is insufficient and more money should be provided.

I also understand that under Kudimaramathu, silted channels will be taken up for investigation and repair and also for execution. For the channels of one or two miles, the Government should improve them without demanding money from the agriculturists. The Department should take steps to repair them soon.

Coming to desilting, I would like to say a word. In the tanks in Hosur and Denkanikotta taluks, the silt is increasing every year. If the silt is not removed, the capacity of the tanks will go down. I therefore request the Hon. Minister for works to see that some special schemes are drawn up for Dharmapuri district because that position does not prevail in other parts of the State. The desilting of the tanks should be taken up immediately.

[Thiru K. S. Kondaramiah] [1974 மார்ச் 26

Coming to the bridges, I would like to say that the construction of a bridge between Sulagiri and Uddapalli is pending for a long time. Sulagiri consists of six panchayats. On Vadappalli side this has not been taken up for execution for so many years. It is still pending. Unless the bridge is constructed, the people will not be able to go to the Panhayat Union office of Sulugiri. It will benefit nearly 50 to 60,000 people in that area. Nearly 50 to 60,000 people are going that way.

Therefore, I request the Hon. Minister for Works to see that if the good bridge is not possible, at least a causeway is provided soon, because it is in the hilly area and there are a number of jungle streams. Small bridges and causeways should be constructed in jungle streams so that the people can go from one area to another.

Under the Crash Programme, a number of roads have been laid; but no road has been metalled so far. Consequently what happens is this. The road gets ruined in due course if metalling is not done in time. I therefore request that the metalling of the road should also be done simultaneously.

(The Hon. Speaker sounded the gong.)

**திரு. வீ. கார்த்திசன் :** தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான பாசன, பொதுப்பணித் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நேரம் குறைவாகக் கொடுக்கப்பட்டுள்ளதால் என் தொகுதி தேவைகள் பற்றிப் பேச விரும்புகிறேன். கடந்த பத்தாண்டுகளாக வரட்சிப் பகுதியான ராதாபுரம் தொகுதியில் எவ்வித வேலையும் நடைபெறவில்லை.

எங்கள் பகுதியில் ஆலத்துறையாறு திட்டம் குறித்து நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த ஆலத்துறையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரட்சியான எங்கள் பகுதியில் ஐம்பது குளங்களுக்கு மேல் பாசன வசதி பெற்று அந்தப் பகுதியில் உள்ள விவசாயக் கிணறுகளில் எல்லாம்



1974 மார்ச் 26] [திரு. வி. கார்த்திசன்]

தண்ணீர் மேலே வருவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்பியாறு திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. நாங்குனேரி வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே கடலில் வீணாகப் போகும் தண்ணீரை மடக்கி ஒரு அணை கட்டித் தந்தால் அதை திசையன்விளைப் பகுதியில் உள்ள வறட்சியான பகுதிகளுக்குக் கொண்டு சென்று 12 குளங்களாவது நிரம்ப வாய்ப்பு ஏற்படும். ஆகவே அந்த நம்பியாற்றுத் திட்டத்தை நிறைவேற்றினால் 12 குளங்கள் நிரம்ப வழி ஏற்படும். அதோடு அங்குள்ள விவசாயக் கிணறுகளிலும் நல்லமுறையில் தண்ணீர் மட்டம் உயரும். அதோடுகூட அங்குள்ள பம்ப் செட்டுகள் வழி தண்ணீர் இறைக்கவும் வசதி ஏற்படும். ஆகவே நம்பியாற்றுத் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பின்னர், குடமாடியணை, பச்சையாறு திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து எங்கள் பகுதிக்குப் பட்டணங்கால் திட்டம் மூலம் தண்ணீர் வருகிறது. எங்களுக்குப் பட்டணங்கால் தண்ணீர் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. ஒரு தண்ணீர்தான் அங்குள்ள பயிருக்குப் பாய முடிகிறது. அடுத்த தண்ணீர் கிடைப்பதில்லை என்பதால் அங்கு பயிர்கள் எல்லாம் வாடுகின்றன.

ஆகவே பட்டணங்கால் தண்ணீரை ஒழுங்காக எங்கள் பகுதிக்கு விடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் பட்டணங்கால் திட்டத்தினால் எங்களுக்கு ஒரு பலனும் இல்லை.

ஒரு தண்ணீர் பாய்வதற்கே ரூ. 100 வரி போடுகிறார்கள் அங்கே ஏக்கருக்கு ரூ. 100 வரி வாங்கிவிடுகிறார்கள். இரண்டாவது தண்ணீர் விடப்படாததால் அங்கு பயிர்கள் வாடிவிடுகின்றன. எனவே இந்த ரூ. 100 வரியை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. வி. கார்த்திசன்] [1974 மார்ச் 26

பட்டணங்கால் தண்ணீரை வெறும் தரிசுகளுக்கு விடுகிறார்கள். அதனால் அதிக இடம் பாசன வசதி பெற வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆகவே பாண்ட்ஸ் லிஸ்டத்தில் அந்தத் தண்ணீரை ஒவ்வொரு குளங்களிலும் நிரப்பி அதன் மூலம் அங்குள்ள கிணறுகளின் நீர் மட்டம் உயர வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆகவே பட்டணங்கால் தண்ணீரை பாண்ட்ஸ் லிஸ்டத்தில் விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதி கடற்கரைப் பகுதி திருச்செந்தூர் தாலுகா எல்லை கன்னியாகுமரி எல்லை இவற்றிற்கு மத்தியில் என் தொகுதி இருக்கிறது. இது கடற்கரைப் பகுதி. கடற்கரைப் பகுதியில் ஆறு மைல் தூரம் விவசாயக் கிணறுகள் தோண்ட இப்போது கடன் கொடுப்பதில்லை என்று அரசாங்கம் அறிவித்து விட்டது. எங்கள் பகுதியில் பாசனம் செய்வது கிணற்றுப் பாசனம்தான். அங்கு ஆற்றுப் பாசனமோ அல்லது குளத்துப் பாசனமோ கிடையாது. ஆகவே, கடற்கரையில் இருந்து ஆறு மைல் தொலைவில் உள்ள எங்கள் பகுதியில் கிணறுகள் தோண்டுவதற்கு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதவநேரி—ஆரல்வாய்மொழி ரோடில் ஒரு பாலம் அமைக்க வேண்டும்.

யாக்கோபுரம், ஆரல்வாய்மொழி, சங்கருபுரம்—இருக்கந்துரை, பணகுடி–வேப்பிலாங்குளம் ரோடுகளில் பாலங்கள் கட்டித்தர வேண்டும். ரூரல் ரோட் வொர்க்ஸ் மூலம் கன்னங்குளம், சங்கரு புரம், ஆவரங்குளத்திலிருந்து மதகநேரி, ஆவுடையாபுரம் போன்ற ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

ஒரே ஒரு கோரிக்கை. மணிமுத்தாறு தண்ணீர் விஜய நாராயணன் குளத்திற்கு வந்துதான் திசையன் விளைப் பகுதிக்கு வருகிறது. அங்கிருந்து தண்ணீர் ஒழுங்காக விடுவதில்லை. எனவே மணிமுத்தாறு தண்ணீரை விஜயநாராயணன் குளத்திற்கு விடாமல் தனி கால் மூலம் திசையன்விளைப் பகுதிக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



**1974** மார்ச் 26] [திரு. வி. கார்த்திசன்]

புத்தன்தருவை வடிகால் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக ஒரு வாய்க்கால் வெட்ட இருக்கிறது. அதை உடனடியாக செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, இம்மானியத்தை வரவேற்று என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த மானியத்தில் போளூர் தொகுதியைப் பொறுத்த வரையில் நான் அடிக்கடி இந்தச் சட்டமன்றத்தில் கேட்டுக் கொண்டே வந்திருக்கிறேன். செண்பகத்தோப்பு அணையைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். பதினைந்து ஆண்டுகளாக இந்தக் கோரிக்கை ஏற்கப்படாத நிலையில் இருந்து வருகிறது. பலமுறை இதுகுறித்து அதிகாரிகளைச் சந்தித்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் அதிகாரிகள் செண்பகத்தோப்பு அணை கட்டக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்களே தவிர, நடைமுறையில் பதினைந்தாண்டுக் காலமாக அது நிறைவேற்ற முடியாத நிலையில்தான் இருக்கிறது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒரு திட்டத்தையாவது என் தொகுதியில் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று மிக மிக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கோட்டப்புத்தூர் ஏரி என்ற ஒரு ஏரி உடைந்து விட்டது. அதை எல்லா அதிகாரிகளையும் அழைத்துச் சென்று காண்பித்துவிட்டேன். அதை மறுபடியும் கட்டிக் கொடுக்க வேண்டியதுதான் என்று சொல்கிறார்களே தவிர, இன்னும் அது கட்டி முடிக்கப்படவில்லை. பின்னர் விவசாயிகள் பணம் கொடுத்தால் கட்டித் தருகிறோம் என்று சொன்னார்கள். எல்லா விவசாயிகளிடத்திலும் நானே அழைத்துச் சென்று, நேரடியாக அழைத்துச் சென்று குறிப்பிட்ட அந்தத் தொகையை கொடுக்கிறோம் என்று எழுதிக் கொடுத்தும்கூட இதுவரையிலும் அது குறித்து ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டாண்டுக் காலத்தில் அதிகாரிகளை எந்தெந்த முறையில் எல்லாமோ வணக்கத்துடன் அணுகிக் கேட்டும்கூட அது இன்னும் செயல் படுத்தப்படவில்லை. எனவே என் தொகுதி மக்களிடம் நான்

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1974 மார்ச் 26

குற்றவாளியைப் போல் நிற்க வேண்டிய ஒரு நிலையில் இருக்கிறேன். எனவே கூடியவிரைவில் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர் கஸ்தம்பாடி ஏரிக்கு வரத்து இல்லாதிருக்கிறது. ஒரு ஏரி என்றால் அதற்கு வரத்துக்கால் இருக்க வேண்டும். ஆனால் இந்த கஸ்தம்பாடி ஏரி வரத்துக்கால் இல்லாதிருக்கிறது. 550 ஏக்கர் பாயக் கூடிய நிலையில் இருந்தும் ஏன் இப்படி இருக்கிறது என்று கேட்டால் மேலே உள்ள ஏரியில் உள்ள மிகுதித் தண்ணீரைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். பின்னர் இந்த அலியாபாத் அணையில் இருந்து ஒரு சிறிய கால்வாய் கட்டினால் போதும். எவ்வளவோ முறை டி.இ. யிடமும், எஸ்.இ. யிடமும் சொல்லியாகி விட்டது. இப்படிப்பட்ட சாதாரண வேலைகள் கூட நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன.

போளூர் ஏரி 1,150 ஏக்கருக்கு எட்டு மாதம் பாயும். ஆனால் இப்போது நான்கு மாதங்கள்தான் பாய்கிறது. அதிகாரிகள் வந்து பார்த்து திட்டம் தீட்டி அனுப்பப்பட்டிருக்கிறது. தயவு செய்து அந்த வேலையை உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பின்னர் வடபாதிமங்கலம் ஏரி நான்கைந்து மாதங்களுக்கு முன்னர் உடைந்தது. அதுபற்றி ஆட்சியாளரிடமும், மற்றும் அதிகாரிகளிடம் சொல்லியும் கூட அது செப்பனிடப்படவில்லை.

பின்னர், சாலைகள் பொறுத்தவரையில் எங்கள் யூனியனில் 40 கிலோ மீட்டர் தொலையுள்ள சாலை கூட இருக்கிறது. அங்கு 14 சாலைகள் உள்ளன. ஒன்றியத்தை அணுகிக் கேட்டால் ரூ. 38,000 ஒதுக்க வேண்டுமென்று கேட்டார்கள்.

அங்கு ஒரு சாலை கூட ஒழுங்காக இல்லை. மழைக் காலத்தில் அங்கு போகவே முடிவதில்லை.

மண்டகுளத்தூர் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமம். அது திரு. மாணிக்கவேலர் அவர்களின் தொகுதியாக இருந்தது. அண்ணன் முருகையன் அவர்களுடைய தொகுதியாக இருந்தது. அங்குள்ள சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. மழைக் காலத்தில் சைக்கிள் கூட போக



1974 மார்ச் 26] [திரு. தொ. ப. சீனிவாசன்]

முடியாத நிலையில் இருக்கிறது. அமைச்சர் அவர்களிடம் இது பற்றி நேரில் சொன்னபோது ரூரல் ரோட் வொர்க்ஸ் ஸ்கீமில் சேர்க்கலாம் என்றார்கள். ஆகவே ரூரல் வொர்க்ஸ்ஸில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இன்று ஒன்றியங்களுக்கு நிதி வசதி இல்லாததொரு நிலை பொதுவாக இருக்கிறது. 45 சாலைகள் உள்ளன. மின்சாரத்திற்காக பணத்தைக் கட்டுகிறார்களே தவிர, சாலைக்காக ஒரு தட்டு மண் கூட போடுவது கிடையாது.

நான் பொதுவான ஒரு கருத்தைச் சொல்லவிரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியச் சாலைகளை ஹைவேஸ் அல்லது வேறு துறைகளின்கீழ் எடுத்துக்கொண்டால்தான் நாம் எண்ணுவதுபோல் கிராம மக்களுக்கு சாலைவசதிகளைச் செய்து கொடுக்க வாய்ப்பாக இருக்கும்.

ஆலங்காயம்-போளூர் ரோடு அமைக்க வேண்டுமென்று திரு. ஐப்பார் அவர்கள் கேட்டார்கள். அதைச் செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும்.

அடுத்து, என் தொகுதியில் வெள்ளூர் கிராமத்தில் ஒரு ஓவர் ஹெட் டாங்க் கட்ட டெண்டர் கோரப்பட்டு ஐந்தாண்டுகளாக அந்த வேலை பாதியில் நிற்கிறதே தவிர, அந்தக் காண்ட்ராக்டர் அதைக் கட்டி முடிக்கவில்லை. அப்படி அந்த வேலையைச் செய்து முடிக்காத அந்த காண்ட்ராக்டர்மீது அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை.

சந்தவாசலில் ஒரு விவசாயக் கிணறு கட்ட அதே காண்ட்ராக்டர் ஐந்தாண்டுகளாகியும் அதைக் கட்டி முடிக்கவில்லை. ஒரு திட்டம் வருவதே சங்கடமாக இருக்கிறது, அப்படியிருக்க இப்படி எந்தக் காண்ட்ராக்டர் தவறு செய்தாலும் உடனடியாக தயவுதாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கைகளை மேற்கொண்டால் தான் கிராம மக்களுக்கு நன்மை ஏற்படும்.

நான் அங்கு செல்கிறபோது குப்பம்மாளுக்கு வோட்டு கேட்க வந்தபோதும் அப்படியே இருந்தது, இப்போதும் அதேநிலையில் தான் இருக்கிறது என்று மக்கள் கிண்டல் செய்கிறார்கள். ஆகவே சிறு சிறு காரியங்களையாவது செய்து கொடுத்தால் கிராம மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

## (ஆ) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு என் 9/74) சட்டமன்ற மேலவையில் 16—3—1974-ம் நாளன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிந்துரை யின்றி நிறைவேற்றப்பட்டதாக மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது, மாலை 4 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

(இடைவெளிக்குப் பிறகு)

இடைவேளைக்குப்பின் மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

***திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மான்யத்தின் மீது என்னுடைய அம்பா சமுத்திரம் பகுதியில் உள்ள சில முக்கியமான பிரச்சினைகளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

என்னுடைய பகுதியிலே, தாம்பரபரணி நதியின் வடக்கு கோடை மேல் அழகியன்கால் பாசனம் மூலம் பயன் அடையும் கீழ்ப்பாசனத்துக்கு நீண்ட காலமாகப் போதிய தண்ணீர் கிடைக்காமல் அடிக்கடி விவசாயம் பாதிக்கப்பட்டு வருகிறது என்பதையெல்லாம் அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். மேலும், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் கூட்டத்தில் இந்த விஷயத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று



வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கால்வாயில் லைனிங் வேலை செய்யவேண்டிய அவசியம் குறித்து அரசினருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இப்பொழுது கூட தினசரி கீழ்ப்பாசனத்திற்கு வாய்க்காலுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. தினசரி தலையணை வரையில் 15 அல்லது 20 பேர் சம்பள ஆட்களை வைத்து விவசாயிகள் ரூ. 100, 150 செலவு செய்துதான் இந்தக் கீழ்ப்பாச னத்திற்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டிய நிலை இருந்துகொண் டிருக்கிறது. இந்தக் கால்வாயில் லைனிங் வேலை செய்யவேண்டும் என்று பல தடவை வற்புறுத்தியிருக்கிறேன். இதை உடனடி யாகச் செய்து தர வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள் கிறேன்.

மேலும் இந்தக் கால்வாயின் மூலம் பயன் அடையக்கூடிய குளங்கள் இருக்கின்றன. அந்தக் குளங்களில் சில குளங்கள் தனியாரிடம் இருக்கின்றன. தனியாரிடம் இருப்பதினால் குளம் பாசி ஒருவருக்கும் குளத்தினுடைய ஆயக்கட்டுதாரர்கள் பலபேருமாக இருப்பதினால் குளத்திற்குச் சரியாக தண்ணீர் பெருக்க முடியாத நிலை இருந்து வருகிறது. இப்படிப்பட்ட குளங்களை அரசே ஏற்று இந்தக் குளத்தினுடைய தண்ணீரை பெருக்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

உணவு உற்பத்தி பெருக்கக்கூடிய அளவிலே இன்று அரசு எல்லா முயற்சிகளையும் செய்து வரக்கூடிய நேரத்தில் தாம்பர பரணி மூலமாக பயன் அடையக்கூடிய அநேக நிலங்களில் நீர் ஊற்றின் காரணமாக வேறு எந்தவிதமான பயிரும் செய்ய முடியாமல் நஞ்சை சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள்.

12 வருஷத்திற்கு மேலாக இந்த நிலங்களுக்கெல்லாம் வாட்டர் ரேட் தண்டத் தீர்வை விதிக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட நிலங்களை தனித் தீர்வையின் கீழ் கொண்டு வந்து நஞ்சைக்குரிய நிலங்களாக பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ச. சங்குமுத்து தேவர்] [1974 மார்ச் 26

மேலும் தாம்பரபரணிப் பகுதியில் ஒருபோக நிலங்கள் இருக்கின்றன, இரு போக நிலங்களும் இருக்கின்றன. ஒரு போக நிலங்களையெல்லாம் நீண்ட காலமாக இருபோக நிலங்களாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு வருகிறது. அது இது வரையில் கவனிக்கப்படாமல் இருக்கிறது. இந்த நிலங்களையெல்லாம் இரு போக நிலங்களாக மாற்றுவதில் யாருக்கும் எந்த விதமான இடைஞ்சலும் இருப்பதாகத் தெரியவில்லை. இதையெல்லாம் இருபோக நிலங்களாக மாற்றவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கடையம் யூனியன் பகுதியில் மானாவாரிக் குளங்கள் அதிகமாக உள்ளன. அந்தப் பகுதியில் அநேக குளங்கள் சரியான முறையில் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. இந்தக் குளங்களையெல்லாம் உடனடியாக மராமத்து செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடையம் யூனியன் பகுதியிலும் இன்னும் அநேக பம்புசெட்டுகளுக்கு, விவசாயம் செய்யக்கூடிய பம்பு செட்டுகளுக்குக் கூட மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருந்து வருகிற காரணத்தினால், அங்குள்ள விவசாயிகள் எல்லாம் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த பம்புசெட்களுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதியில் இரும் கிராமங்கள் பல இருப்பதால், அங்கே இருக்கின்ற குளங்களை எல்லாம் சீர்செய்து தண்ணீர் தேக்க முடியாமல் இருக்கிறது. கால்வாய்களை மராமத்து செய்வது யார் என்று முடிவு செய்யாமல், விவசாயிகளே குளங்களுக்கு தண்ணீர் அடைத்து விவசாயம் செய்ய வேண்டிய நிலைமை இருந்துவருகிறது. இந்தக் குளங்களை எல்லாம் அரசாங்கமே ஏற்று, எல்லாக் குளங்களிலும் தண்ணீர் தேங்குவதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தாம்பிரபரணியிலிருந்து அட்வான்ஸ் காருக்காக கீழ்ப் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. பாபநாசம் நீர்த் தேக்கத்தில் மின்சாரத்திற்கு கோடை காலங்களில் ஏப்ரல், மே மாதங்களில் பயன்படுத்தப்படும் தண்ணீரின் அளவைக் கணக்கிடாமல்



1974 மார்ச் 26]

கீழ்ப் பகுதியில் அதிக அளவில் பயிர் செய்கிறார்கள். அதன் காரணமாக மேற்கத்தியப் பகுதிகள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. மேலும் அட்வான்ஸ் காருக்குத் தண்ணீர் கொடுக்கும் போது, ஜூன் மாதம் 1-ம் தேதிக்கு முன் அறுவடை செய்யக்கூடிய அளவில் குறுகிய கால பயிர்களை கீழ்ப்பகுதியில் பயிரிடச் செய்ய வேண்டும். அதிக நாள் வித்துக்களைப் பயிர் செய்தால் ஜூன் 1-ந் தேதியில் கீழ்ப்பாகத்திலுள்ள பயிர்கள் பொதி பட்டமாக வருகின்ற நிலைமை இருப்பதால், அங்கும் கீழ்ப்பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டி வருகிறது. ஜூன் 1-ந் தேதி மேற்கத்தியப் பாசனத்திற்கும் தண்ணீர் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. இதனால் இரு தரப்பினர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, பாதிப்பு ஏற்படாமல் இவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று, அரசாங்கத்தை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வ. முத்து: பேரவைத் தலைவரவர்களே, இந்த பொதுப் பணித் துறை மானியத்தை வரவேற்று இரண்டொரு கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் மல்ல சமுத்திரம் பகுதியில் திருமணி முத்தாறு கால்வாய் சுமார் 4 ஆண்டு காலமாகியும் இன்னும் வேலை முடிவடையாமல் இருக்கிறது. அந்தக் கால்வாய் வேலையை ஆரம்பிக்கும்போது இருந்த பொதுப் பணித் துறை அமைச்சருக்குப் பதிலாக புதிதாக ஒரு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள்.

அதேபோலே ஆரம்பிக்கும்போது இருந்த சட்டமன்ற உறுப்பினர் போய், இப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். இருந்தபோதிலும் அந்தக் கால்வாய் வேலை முடிவடையவில்லை.

அது அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு பெரிதும் சங்கடத்தை ஏற்படுத்துகிறது. கால்வாய் மேட்டுப் பாதியில் இருப்பதால் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு வருத்தம், கால்வாய் வெட்டாமல் இருக்கின்ற பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு எப்போதும் தண்ணீர் வரும் என்ற கவலை, இப்படி இரு தரப்

பினருக்கும் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, அந்தக் கால்வாயை உடனடியாக வெட்டி, முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சங்கரி யூனியனில் வீராச்சிப்பாளையம் என்ற கிராமத்தில் ஏரி உடைப்பெடுத்து சுமார் இரண்டாண்டு காலம் ஆகிறது. அதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நான் கூறினேன். அதோடு சேலத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அதற்கு வந்திருந்த நம்முடைய அமைச்சரவர்களிடமும் இதைப்பற்றிக் கூறினேன். அமைச்சரவர்கள் உடனே அங்கிருந்த அதிகாரிகளைக் கூப்பிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

ஆனால் அங்கே இருக்கின்ற கீழ்மட்ட அதிகாரிகளுக்கு அந்த ஏரி எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாமல் 4 நாட்களுக்குப் பிறகு என்னுடைய வீட்டுக்கு வந்து விபரம் கேட்டு தெரிந்து சென்றார்கள். உடனடியாக வேலையைத் தொடங்குவதாகச் சொன்னார்கள். அந்த வேலை இன்னும் முடிவடையவில்லை. அதையும் உடனடியாக முடித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, திருமணிமுத்தாற்றிலிருந்து பால்மேடு, கோட்ட பாளையம் ஆகிய கிராமங்களுக்கு ஒரு கால்வாய் செல்கிறது. அது தூர்ந்த நிலையில் இருக்கிறது. சுமார் இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்னால் அந்த கால்வாயை தூர் எடுத்திருந்தால் புயல் ஏற்பட்டு, போன ஆண்டு பெரு வெள்ளம் வந்தபோது அந்தக் கால்வாய் வழியாகத் தண்ணீர் சென்று, 2 3, ஏரிகள் நிரம்பி, விவசாயம் முன்னேற்றம் அடைந்திருக்கும். அதைப்பற்றி பல தடவைகள் அதிகாரிகளிடம் சொல்லியும், இன்னும் பழுது பார்க்காமல் இருக்கிறார்கள். மேலும் அந்த விபரத்தை பொதுப் பணித்துறை மேட்டூர் அதிகாரிகளிடமும், சேலம் அதிகாரிகளிடமும் சொன்னேன். நிர்வாகப் பொறியாளர் அது எந்தத் தாலுக்காவைச் சேர்ந்தது என்று மேட்டூர் அதிகாரிகளைக் கேட்-





டால் அதில் எங்களுக்கு தொடர்பு இல்லை. சேலத்தில் கேட்க வேண்டும் என்றும் சேலத்திலுள்ள அதிகாரிகளைக் கேட்டால் அது திருச்செங்கோட்டைச் சேர்ந்தது. ஆனால் மேட்டூர் அதிகாரிகளைக் கேளுங்கள் என்றும் மாற்றி மாற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

யார் செய்யவேண்டுமென்று அதிகாரிகள் இன்னும் முடிவு செய்து, பொறுப்பு எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, அரசாங்கம் அந்தக் கால்வாயை உடனடியாக சீர்செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியில் காளிப்பட்டியிலிருந்து வைகுந்தத்திற்கு ஒரு ரோடு செல்கிறது. அந்த ரோடு ரொம்ப பழுதடைந்து கார் செல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது. அதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தேன். பல பதிகளைச் சொல்கிறார்களே தவிர வேலை நடைபெறவில்லை.

அதன் பிறகு அந்தப் பகுதியில் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவரையும், மாண்புமிகு அமைச்சரவர்களையும் அழைத்திருந்தேன். அவர்கள் வந்தார்கள். அப்போது அந்த ரோட்டைக் காட்டினேன். உடனே அமைச்சரவர்கள் நிகழ்ச்சிக்காக தன்னை அழைக்கவில்லை. அந்த ரோட்டைக் காட்டுவதற்காகத்தான் அழைத்திருக்கிறார் என்று சொல்லி, உடனடியாக அந்த ரோட்டை செப்பனிடவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொன்னார்கள். அப்படி இருந்தும் இதுவரை வேலைதொடங்கப்படவில்லை. எனவே, அந்த ரோட்டை உடனடியாக தார் சாலையாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. மு. இராமன்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, 1974-75-ஆம் ஆண்டு பொதுப் பணித் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்தது குறித்து முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. மு. இராமன்] [1974 மார்ச் 26

இந்த நிதி நிலை ஆண்டில் பாசனத்திற்கு என 15,87,34,600 ரூபாயும், பொதுப் பணிகள்—கட்டடங்கள் கட்டுவதற்கு 2,33,51,200 ரூபாயும், பொதுப் பணிகள்—பணியாளரமைப்புக்கு 4,09,95,000 ரூபாயும், சாலைகளும் பாலங்களும் அமைப்பதற்கு 19,86,05,300 ரூபாயும், பாசனம் மீதான மூலதனச் செலவுகளுக்கு 14,95,69,000 ரூபாயும், பொதுப் பணிகள்—கட்டடங்கள் மீதான மூலதனச் செலவுகளுக்கு 10,03,30,400 ரூபாயும், சாலைகள்—பாலங்கள் மீதான மூலதனச் செலவுகளுக்கு 4,68,00,000 ரூபாயும்—ஆக மொத்தம் பொதுப் பணித் துறை மானியத்தின்கீழ் 69,66,35,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் பெரும் வெள்ளம் ஏற்பட்டு, தென்னுற்காடு மாவட்டம், அதிலும் குறிப்பாக கண்டமங்கலம் தொகுதி பல வகைகளில் பாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் சம்பந்தப்பட்ட தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள செயல் பொறியாளர் அவர்களும், நிர்வாகப் பொறியாளர் அவர்களும், உதவிப் பொறியாளர் அவர்களும் தக்க நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

குறிப்பாக தென்னுர்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. மாதவ சர்மா, ஐ. ஏ. எஸ். அவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, வேளாண்மைக்கு உட்பட்டிருந்த இடங்கள்-6 அடி மேடாக இருந்த இடங்களை எல்லாம் பார்வையிட்டு, சுமார் 5,000 ஏக்கர் நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நியமாக்கிக் கொண்டுவந்தார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே பல சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள் பழுதடைந்திருந்தன. விக்கிரவாண்டி, கண்டமங்கலம், கோலியனூர் ஒன்றிய சாலைகள் பெரிதும் பழுதடைந்திருந்தன. அவைகளை எல்லாம் சரி செய்வதற்கு நம்முடைய விழுப்புரம் கோட்டப் பொறியாளர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர் அவர்கள், சம்பந்தப்பட்ட ஒன்றியத்தின் இள நிலைப் பொறியாளர் அவர்கள் ஆகியோர் தக்க நடவடிக்கை எடுத்து பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 26] [திரு. மு. இராமன்]

அடுத்தபடியாக, நீண்டகாலமாக, 1952-ல் இந்தச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பின்னர் இந்த அவையிலேயே அமைச்சராக இருந்த காலஞ்சென்ற முன்னுள் அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் வளவனூர் ஏரியை ஆழப்படுத்த வேண்டுமென்று பலதரம் இந்த மன்றத்திலேயே கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். 1967-இல் சட்ட மன்றத்தில் அதுபற்றி பலமுறை வேண்டுகோள் விடுத்தும், சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலும், அதிகாரியிடத்திலும், பொதுப் பணித் துறை செயலாளரிடத்திலும், எடுத்துச் சொல்லப்பட்டு, அதன் காரணமாக ரூ. 23,34,000 மதிப் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் தயார் செய்து, அனுப்பி வைத்தும், அந்தக் கட்டு வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்களிடத்தில் இரண்டாண்டு காலமாக தேக்கத்தில் இருக்கிறது.

அந்தக் கட்டுக்களை வரவழைத்து, நன்ருகப் பரிசீலனை செய்து, வளவனூர் ஏரியை ஆழப்படுத்தவும், கரைகளைப் பலப்படுத்தவும் உடனடியாக வழி செய்ய வேண்டும். அதன்மூலம் நாலாயிரம் ஏக்கராவுக்குப் பாசன வசதியை அளிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தென்னல் அணைக்கட்டுத் திட்டம்—இந்த தென்னல் அணைக்கட்டுத் திட்டத்திற்கு 19 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் பொதுப் பணித் துறையினுல் தயாரிக்கப்பட்டு அனுப்பி $1\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகின்றன. இதனையும் உடனடியாக ஒப்புதல் அளித்து, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் பம்பையாறு ஓடுகிறது. அதில் எர்ஸ்ணும் பாளையத்தில் ஒரு அணைக்கட்டு கட்டித் தந்தால் 18 கிராமங்கள் அதனுல் பயன் அடையும். அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தென்பெண்ணை, மலட்டாறு ஆகியவை இரண்டும் எங்கள் தொகுதியில் ஓடுகின்றன. மழைக் காலத்தில் வெள்ளத்தினுல் கொங்கமேட்டான்காலனி, பெரிய கொங்கம்பட்டு, வடவாம்பலம், சின்னமடம், நரசிங்கபுரம், கன்னிப்பட்டு ஆகியவை பாதிக்கப்படுகின்றன. இந்த ஊர்களைச் சுற்றி தண்ணீர்

[திரு. மு. இராமன்] [1974 மார்ச் 26

தேங்கி விடுகிறது. ஆகவே வெள்ளத் தடுப்புச் சுவர் பூவரசங் குப்பம், அகரத்துமேடு, ஆண்டிபாளையம் ஆகியவற்றுக்குக் கட்டித் தரவேண்டும்.

இன்றைக்கு பூவரசங்குப்பத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டித்தர ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்த வேலை நடந்துகொண்டிருக்கிறது. அந்த வேலை நல்லமுறையில் முடிய வேண்டுமென்றால் இன்னும் 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரியே என்னிடம் சொன்னார். ஆகவே அந்தத் திட்டத்திற்கு மேலும் 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கித்தர வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் திரு. சிவலிங்கம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதைப் போலவே வடலாம்பலம், கொங்கமேட்டான் காலனி, பெரிய கொங்கம்பட்டு, கள்ளிப்பட்டு, சின்னமடம் ஆகிய இடங்களிலும் தடுப்பு மதில் சுவர் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாலை வசதி, முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் விக்கிரவாண்டி வட்டாரத்திற்கு வந்தார்கள். விக்கிரவாண்டியிலிருந்து—பெரியதச்சூர் வழியாக எசாலம் என்னாயிரம் பிரமதேசம் வரை ஒரு சாலை அமைக்க மதிப்பீடு என்ன ஆகுமென்று கேட்டார்கள். பத்து லட்சம் ரூபாயில் மதிப்பீடு போடப்பட்டு நெடுஞ்சாலைத் துறை உதவி பொறியாளர் கோட்டப் பொறியாளர் அனுப்பி ஓராண்டு ஆகிவிட்டது. அதை 1973 ஆம் ஆண்டிலேயே எடுத்துக் கொள்வார்கள் என்று தெரிவித்தார்கள். அந்தப் பகுதி மக்கள் நினைத்து ஏமாந்துவிட்டார்கள். 1974–75-லாவது அத்திட்டம் செயல்படும் என்று தெரியவில்லை. அதனை பொதுப்பணி அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தச் சாலையைப் போட்டுத்தர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அண்ணாசாலை அரசினர் தோட்டத்திலுள்ள கடைநிலை ஊழியர்களின் காலனியில் இருந்து, அங்கே குடியிருப்பவர்களைக் காலி செய்ய அரசு

P.W.D. Notification No. 3405/A7/1924-123, dated 15th March 1974 issued by the E.E., South Presidency Division, Madras-5.

உத்தரவிட்டிருக்கிறது. அந்த வீடுகளைக் காலி செய்துவிட்டு கடை



1974 மார்ச் 26] [திரு. நா. வெ. குருசாமி]

நிலை ஊழியர்கள் எங்கே போவது? அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக வீடுகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச அனுமதி அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின் மீது எனது சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் காலையில் இருந்து ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்களும், எதிர்தரப்பைச் சேர்ந்தவர்களும் அரசு கொடுத்திருக்கிற திட்டங்களை எதிர்த்தே பேசிக் கொண்டிருந்தார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சாலைகளைப் பொறுத்தும், நீர்ப்பாசன திட்டங்களைப் பொறுத்தும் சரியான கவனம் செலுத்தவில்லை என்பதை குற்றம் சாட்டாமல் லேசாகச் சுட்டிக்காட்டி வந்தார்கள்.

இந்த பொதுப்பணித் துறை பொறுப்பை நமது அமைச்சர் அவர்கள் புதியதாகத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டிரண்டு நாட்கள் கருத்தரங்கு நடத்தி, அந்த அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள், மற்றவர்கள் கூறுகிற கருத்துக்களைக் கேட்டு, எந்த எந்தத் திட்டங்களை முதலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற வகையில் இதைத் தயாரித்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். தொகுதிகளில் உள்ள குறைகளைப் போக்க ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காரணம் சில திட்டங்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களுடைய தொகுதியிலேயே, முக்கியமான அமைச்சர்களுடைய தொகுதியிலேயே ஏற்படுகின்றன.

வறட்சிப் பணிகள் நல்லமுறையில் செயல்படுவதாக இங்கே கூறப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி குஜிலம் பாறை பகுதி மிக மோசமான வறட்சி நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பகுதி வறட்சிப் பணிக்குச் சரியான திட்டம் கண்டதாகத் தெரியவில்லை. எனது தொகுதியைப் பொறுத்த அளவில் கண்டனூர் பகுதி, ஆத்தங்கரைப்பட்டியில்

[திரு. நா. வெ. குருசாமி] [1974 மார்ச் 26

சிறிய அணை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற 9 கண்மாய்களையும் சீர்படுத்துவதற்காக செகண்டு ஸ்கீம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதுவும் பைனல் ஸ்டேஜில் இருக்கிறது. அதை உடனே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் தெப்பம்பட்டி, பாலக்கோம்பை போன்ற கண்மாய்களும் உடனடியாக செப்பனிட்டுத் தரவேண்டும். அதிகாரிகள் வருகிறார்கள். கொடிகளைக் கட்டுகிறார்கள்—கட்சிக் கொடிகள் அல்ல—அந்தப் பகுதி மக்கள் குளங்களை செப்பனிட்டுத் தரப் போவதாக நினைக்கிறார்கள். அந்த வேலை அப்படியே நின்று விடுகிறது.

மேலும் மதுரை மாவட்டத்தில் எங்கள் ஆண்டிப்பட்டி பகுதியில் சாலை வசதி சரியாக இல்லை. வரிசை நாடு மலைப்பகுதி எங்கள் தொகுதியில் இருக்கிறது. அங்குள்ள மக்கள் சாலை வசதியின்றி, பஸ் போக்குவரத்து இல்லாத நிலைமையில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஆண்டிப்பட்டிப் பகுதிக்கு அதிகமாக நிதி ஒதுக்கி சாலை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியகுளத்தில் சோத்துப்பாறை திட்டம் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் போடப்பட்டது. இன்னும் எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அந்தத் திட்டம் செயல்பட்டால் கீழ் பகுதி கிராமங்கள் நல்ல வளர்ச்சி அடைய ஏதுவாக இருக்கும். சோத்துப்பாறை திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும், எங்கள் பகுதியில் நில நீர் ஆய்வு செய்யப்படாத காரணத்தினால் நிலவள வங்கிகளில் இருந்து கடன் பெற முடியவில்லை. உடனடியாக நில நீர் ஆய்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு நிலவள வங்கிகளின் மூலம் லோன் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வைகை அணைப் பகுதியில் பொதுப்பணித் துறையில் 10 ஆண்டுகளாக தினக் கூலியாக பலர் இருந்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களை நிரந்தரமாக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 மார்ச் 26] [திரு. நா. வெ. குருசாமி]

மேலும் மதுரை மாவட்டம் வைகை அணைப் பகுதி சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய இடமாக இருக்கிறது. இதற்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் தொகை காணவில்லை. ஆகவே, வைகை அணைப் பகுதிக்கு அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை ஆய்வாளர்களாக வேலை செய்பவர்கள் அந்தப் பதவியில் இருந்தே பல ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறுகிறார்கள்.

(மாலை 4.30)

மற்றவர்களுக்கு அளிக்கப்படுவது போல் அவர்களுக்கும் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு இப்போது சைக்கிள் படி 4 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. இப்போது விலைவாசி உயர்ந்திருக்கின்ற இந்த நேரத்தில் அந்த நாலு ரூபாயை அதிகமாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் கிராமப்புற சாலை விஷயத்தில் சில இடங்களில் என் ஆண்டிப்பட்டி தொகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஆண்டிப்பட்டி—தெப்பம்பட்டி இடையே தார் ரோடு போட காண்ட்ராக்ட் விடப்பட்டது. அந்தக் கண்ட்ராக்டால் சரளைகற்கள் எல்லாம் சப்ளை செய்யப்பட்டிருந்தும் கூட அங்கே உள்ள உதவிப் பொறியாளர்—மதுரையில் முக்கியமானவர்களுக்குச் சொந்தக்காரர் அந்த வேலையை நிறுத்திவிட்டார்.

அந்தக் காண்ட்ராக்டர் பெரிய காண்ட்ராக்டராக இருந்தும் கூட அவர்களுடைய டெண்டரை கான்சல் செய்ய வேண்டும் என்று நிறுத்தி இன்னும் அந்த வேலை மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. இது குறித்து எஸ்.இ. அவர்களிடம் பல முறை சொல்லியும் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே அந்தச் சாலையைப் போட உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரங்கசமுத்திரம்—புலிமான்கோம்பை, வாடிப்பட்டி, AT சுப்புலாபுரம் சாலையைப் போட்டுத் தரவேண்டும்.

[திரு. நா. வெ. குருசாமி] [1974 மார்ச் 26

அடுத்து மயிலாடும்பாறை எம். கல்லுப்பட்டி வழியாகச் சென்றால் தேனியில் இருந்து ராஜபாளையம் செல்ல வேண்டிய தூரத்தில் 30 மைல் குறையும். இந்த மயிலாடும்பாறை எம். கல்லுப்பட்டி சாலையையும் உடனடியாகப் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும் வருசநாடு மலைப் பகுதியிலும் சாலை போட்டுத் தர வேண்டும்.

பாலங்கள் விஷயத்தில் குள்ளபுரத்தில் விராக நதியில் ஒரு பாலம் கட்ட வேண்டு என்பதற்காகத் திட்டமிட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. என்னுடைய பகுதியும் தேனீ பகுதியும் இணைக்கப்படக்கூடிய அம்பாசமுத்திரம் பாலமும் கட்ட முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. பி. பொன் சொக்கலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப்பணித் துறை மானிய கோரிக்கை மீது என் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு பெற்றமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுப்பணித் துறை என்பது மக்களுக்கு மிக அவசியமான ஒரு துறையாகும். இப்படி பொதுப்பணியில் ஈடுபட்டிருக்கின்ற இந்தப் பொதுப்பணித் துறை பற்றி பட்டமன்றத்தில் உரையாற்றுகின்ற வகையில் எதிர் கட்சியில் உள்ள பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இருக்கக் கூடியவர்கள்—எதிர் கட்சித் தலைவர்கள் கொஞ்சம் கவனமாகக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்—எல்லாருடைய பேச்சுக்கும் இடம் கொடுக்கிற வகையில் 2—3 நாட்கள் இப்படிப்பட்ட சிறந்த துறையில் விவாதம் செய்வதற்கு பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இருக்கிற தலைவர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அங்கத்தினன் என்ற முறையில் என் கட்சி சார்பாக வேண்டுமென்றால் நாலு நாட்கள் விவாதம் நடத்தத் தயாராக இருக்கிறோம். தினமும் இங்கே 'கோரம்' இல்லை என்று மணி அடித்து அங்கத்தினர் வரவழைக்க வேண்டிய துரதிருஷ்டமான சூழ்நிலை இருந்து வந்திருக்கிறது. ஆகவே, மத்தியான வேளையில்



1974 மார்ச் 26] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வைக்காமல் காலையில் வைத்துவிட்டு முடித்து இன்னும் சில நாட்கள் நடப்பதில் ஆட்சேபனை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அட்வைசரி கமிட்டி உறுப்பினர் என்ற முறையில் இந்த முக்கியமான துறையைப் பற்றி விவாதிக்க அதிகமான நாட்கள் இருக்க வேண்டியதுதான், இரண்டு மூன்று நாட்கள் கூட வைத்துக் கொள்ளலாம், மாண்புமிகு உறுப்பினருக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அங்கத்தினன் இல்லாத முறையில் நான் கூற விரும்புவது என்ன என்றால் எதிர்க் கட்சித் தலைவர் இன்னும் அதிக நாட்கள் ஒதுக்க வேண்டுமென்றால் கூட அமைச்சர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று தான் கூறப்படுகிறது. அதோடு காலிங் பெல்லை அடித்துக் கூப்பிடுகின்ற சூழ்நிலை ஏன் உருவாகிறது என்று சொன்னால் ஐந்து மணி நேரம் உட்கார்ந்துவிட்டு மீண்டும் நாலு மணிக்கு வரவேண்டுமென்றால்

It is humanly not possible for any of the members of this House. ஆகவே, நிர்ப்பந்தப்படுத்துவதால் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி வருகிறார்களே தவிர, நியாயமான முறையில் அவர்கள் வர இயலாது. இந்த நிலையை மாற்றி அதிக நாட்கள் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்குப் பேரவைத் தலைவர் ஒன்றும் செய்ய முடியாது. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் ஆளும் தரப்பில் அமைச்சர் சொல்லி இருந்தாலும் போதாது. கமிட்டியில் சொல்லித்தான் இதற்கு முடிவு எடுக்க வேண்டும். ஆகவே, இன்னும் ஒரு நாள் வேண்டும் என்று இங்கே வந்து பேரவைத் தலைவரிடம் சொல்லுவது முறையாகாது.

**திரு. பி. பொன் சொக்கலிங்கம் :** இப்போது எனக்கு கிடைத்தது, 5 நிமிடம். அதில் மூன்று பேர் பேசி விட்டார்கள்.

*[திரு. பி. பொன் சொக்கலிங்கம்] [1974 மார்ச் 26*

பொதுப்பணித் துறை ஒரு சிறப்பான இலாகா. குறிப்பாகக் கிராமங்களில் தேவையானவை பற்றி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் இங்கே உரை நிகழ்த்தக்கூடிய நிலையில் இருக்கிறோம். இதிலே, ஒவ்வொரு உறுப்பினரும் பேசி விட்டார்கள். அப்படிப் பேசாமல் போனால் தொகுதியில் உள்ளவர்களை நீங்கள் ஏன் பேசவில்லை என்று கேட்கக்கூடிய தோழர்களும் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை எல்லாம் பேசினால் நேரம் இருக்காது.

**திரு. பி. பொன் சொக்கலிங்கம்:** குறிப்பாக, தொகுதியைப் பற்றி சட்டமன்றத்தில் பேசுகிற நிலை ஏற்படுகிற போது இங்கே இருக்கிற பத்திரிக்கை நிருபர்கள் எல்லாம் ஒரு சிலருக்குத்தான் அவர்கள் பேசுவதை எல்லாம், தும்பினார்கள், தும்பவில்லை என்று போடுகிறார்கள். இந்த நிலையைத் தவிர்க்க வேண்டும். பேசுகிறவர்கள் பேச்சுக்கு உள்ளபடியே மதிப்பு அளிக்க வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் உணவு உற்பத்தியை வியாபாரிகளிடத்திற்கு எடுத்துச் செல்லுவதற்கும் பாதைகளைச் செப்பனிடுவதற்கும் அத்தியாவசியமானதுமான ஒரு இலாகா.

இந்த இலாகாவில் ஒவ்வொரு தொகுதிக்கும் தேவையான காரியங்கள் நடைபெற்றாக வேண்டும்.

சிதம்பரம் வட்டத்தில் நாம் பார்க்கிறபோது தஞ்சை மாவட்டத்திற்கு ஏராளமான தொகை ஒதுக்கப்படுகிறது. அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற தென்னாற்காடு மாவட்டத்தில் கொள்ளிடம் கரையில் இருக்கின்ற சிதம்பரத்திற்கு—சிதம்பரம் வட்டத்திற்கு மட்டும் நிதி ஒதுக்கீடு ஏன் சிறப்பாகச் செய்யவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

குறிப்பாக தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு வீராணம் ஏரியிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம். அந்தக் காரணத்தைப் பற்றியாவது அந்த வீராணம் ஏரியை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதற்காகப் பல விண்ணப்பங்கள் தந்தேன். முன்பு இருந்த பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு. நடராஜன் அவர்களை



*1974 மார்ச் 26] [திரு. பி. பொன் சொக்கலிங்கம்]*

அழைத்துச் சென்று காண்பித்தேன். மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்களையும் அழைத்துச் சென்று காண்பித்திருக்கிறேன். நீர்ப்பாசன வாய்க்கால்களின் கரைகள் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருக்கிறது. இதை P.W.D. க்கு மாற்ற வேண்டுமென்ற இந்தக் கோரிக்கை பல்லாண்டுகளாக இருக்கிறது. அதை P.W.D. யில் சேர்க்க வேண்டும் என்று அதிகாரிகளிடத்தில் பல முறை எடுத்துச் சொல்லியும் கவனிக்கப்படவில்லை.

கண் துடைப்பிற்காக நடவடிக்கை ஏதோ எடுக்கப்படுகிறது. 30—35 வாய்க்கால்களுக்கு ஸ்லாப் சிஸ்டம் என்ற பேராலே சர்வே நடைபெறுகிறது. இந்தத் திட்டம் நல்ல முறையில் செய்ய முடியாமல் இருப்பதற்கு அதிகாரிகளின் கவனக் குறைவோ என்று எண்ண வேண்டியிருக்கிறது.

வீராணம் ஏரிக்கு கீழ் இருக்கிற பாசனக்காரர்கள் மூன்று போகம் பயிர் செய்கிறார்கள். அந்தப் பகுதியில் நிறைய நஞ்சை நிலங்கள் இருக்கின்றன.

ஆனால் அந்தப் பகுதிகளில் தான் ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது. சில சாலைகளில் கார் கூட போக முடியாது. அது பல்வேறு அதிகாரிகளுக்கு நன்றாக தெரியும்.

எட்டாம் தேதி கவர்னர் அவர்கள் காட்டுமன்னார்குடிக்கு வருகிறார் என்பதற்காக அவசர அவசரமாக வேலைகள் சில சாலைகளில் நடைபெறுகின்றன. 6—8 மாதமாக இதை எல்லாம் செய்யவில்லையே ஏன் என்று கேட்டால் ரோலர் இல்லை என்று சொல்லுகிறார்கள். இரண்டு மூன்று மாதம் என்னுடைய காரைக் கூட எடுத்துச் செல்ல முடியாமல் சென்னையில் விட்டு வைத்திருக்கிறேன். சிதம்பரத்திலிருந்து நாங்கள் 52 லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு ரெவின்யூவாகத் தருகிறோம்.

**திரு. துரைமுருகன்:** கார் எடுத்துப் போகாமல் இருந்ததற்குக் காரணம் பெட்ரோல் வாங்க முடியவில்லை என்பதற்காக என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா, இது உண்மையா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. பொன் சொக்கலிங்கம்:** அது அவருக்கு வேண்டுமானால் இருக்கலாம்.

[திரு. பி. பொன் சொக்கலிங்கம்] [1974 மார்ச் 26

எங்களுடைய பகுதி சிறப்பான பகுதி, அப்படிப்பட்ட சிறப்பான பகுதிக்கு பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. வெள்ளம் வந்தால் சேதம் ஏற்பட்டு விடுகிறது. அமைச்சர் அவர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். அதிகாரிகளும் வந்து பார்த்தார்கள். ஆனால் கவனம் செலுத்தவில்லை, அதிகாரிகள் அதிகமான கவனம் செலுத்த வேண்டும்.

எக்ஸிகியூட்டிவ் எஞ்ஜினியர், அஸிஸ்டெண்ட் எஞ்ஜினியர், சூப்பரெண்டெண்டிங் எஞ்ஜினியர் இவர்கள் எல்லாம் அங்கிருந்து தபால் அனுப்பினால் கொர்ரி போட்டு திருப்பியனுப்பி விடுகிறார்கள். ஆனந்தகுடியிலிருந்து கூடலையாற்றூர் வரையிலும் வெள்ளாற்றின் ஓரத்திலே தடுப்புச் சுவர்கள் கட்டவேண்டும் என்று கடந்த பத்து ஆண்டுக் காலமாகச் சொல்லி வருகிறோம். தலைமைப் பொறியாளரும் துணைப் பொறியாளர்களும் சுற்றுப் பயணம் செய்து பார்த்தார்கள். ஆனால் இன்னும் கவனிக்கப்படவில்லை என்ற உண்மையான குற்றச்சாட்டை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் வரிக் கட்டுகிறார்கள், நாங்கள் சட்ட மன்றத்திற்கு வருகிறோம் என்றால் எங்களைக் கேட்கிறார்கள், எங்களை அதிகமாகத் திட்டியும் பேசுகிறார்கள். அந்த அளவிற்கு நான் மிக வேதனையோடு இதனைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வெள்ளத் தடுப்பு வேலை என்ற முறையிலே ஆறரை லட்சம் ரூபாய் செலவில் 6, 7 தடுப்புச் சுவர்கள் ஓரத்தூருக்கு அருகில் கட்ட தற்பாயம் அனுமதி வந்துள்ளது. எங்கள் பகுதி மிகவும் பயங்கரமான பகுதி, ஒரு பக்கம் கொள்ளிடம், மற்றொரு பக்கம் வெள்ளாறு, இந்த நிலைமை எல்லா அதிகாரிகளுக்கும் தெரியும். ஆனால் கவனிப்பதில்லை. சாலைப் போக்குவரத்து பொறுத்த வரையில் ரூரல் ஒர்க்ஸ் என்றும், காம்ப்ளக்ஸ் ஒர்க்ஸ் என்றும் வைத்திருக்கிறார்கள்.

கரும்பு செஸ் மூலம் பணம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியிலே கரும்பு செஸ் என்ற வகையிலே ஒதுக்கப்படுகிற பணம் மூலம் அங்கே எந்தவிதமான வேலைகளும் செய்யப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் அவர்கள் அடிக்கடி வந்திருக்கிறார்கள்.



1974 மார்ச் 26] [திரு. பி. பொன் சொக்கலிங்கம்]

சிதம்பரத்தில் அமைச்சர் ஆக இல்லாத காலத்திலேகூட சுற்றுப்பயணம் செய்திருக்கிறார்கள். அங்கே நல்ல நஞ்சை பூமி, பக்கத்திலே வாய்க்கால். பக்கத்தில் சாலை இருப்பதால் காட்டுமன்னார்கோயில் சாலை ஓரத்தூர் சாலை, கொண்ணமங்கலம் சாலை இவைகள் எல்லாம் நீரால் அரிக்கப்பட்டிருக்கின்றன, வாய்க்கால் மராமத்து மண்ணை வெட்டியெடுத்து சாலைக்குப் போட்டால் சாலை அகலமாகும் பணமும் மிச்சமாகும் அதைச் செய்வதற்குக்கூட முடியவில்லை.

அதைப்பற்றி பொதுப்பணித்துறை அதிகாரிகளைக் கேட்டால் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளைக் கேளுங்கள் என்று சொல்கிறார்கள் ; நெடுஞ்சாலை துறை அதிகாரிகளைக் கேட்டால் பொதுப் பணித்துறை அதிகாரிகளைக் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லிக்கொண்டே போய் ரோடுகள் போடப்படவேயில்லை, வாய்க்கால்களையும் வெட்டவில்லை என்பதை மிக்க வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன், வீராணம் ஏரியை அடுத்த ஆண்டிலாவது வெட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவரப் போகிறார்கள். என்னுடைய தொகுதி அது. அங்கிருந்து தண்ணீர் கொண்டுவருகின்ற உரிமை இருக்கிறபோது அந்த ஏரியின் கீழே இருக்கிற 37 வாய்க்கால்களைச் சீர் செய்வதற்கு அரசு உடனடியாக உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் நெல் உற்பத்தி அதிகம், நல்லமுறையில் விவசாயம் நடைபெறுகிறது கால்நடை வளர்ச்சி அதிகம், இவ்வளவு இருந்தும் எங்கள் தாலுகாவிற்கு ஒரு ஆஸ்பத்திரிக்கு தான் நிதி ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர. வேறு ஒன்றும் இல்லை. நான் எம்.எல்.ஏ. வாக வந்து இந்த மன்றத்திலே பலதடவைகள் கூறியும்—சபாநாயகர் அவர்களே தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்—இருந்த மூன்று ஆண்டுக் காலத்திலே எங்கள் பகுதிக்குச் செய்ய வேண்டியதை அதிகாரிகள் செய்யவில்லை. அதிகாரிகள் செய்யவேண்டும். அதிகாரிகள் கவனக் குறைவாக இருக்கிறார்கள். நான் அதிகாரிகளை வேண்டுமென்றே குற்றஞ்சாட்டவில்லை. அதிகாரிகள் வருகிறார்கள், பார்க்கிறார்கள்,

ரோலர் இல்லை ரோலர் இல்லை என்று சொல்கிறார்களே தவிர, வேலை முடியவில்லை. எங்களுடைய குறைகளை இனிமேலாவது கவனித்து ஆவன செய்தால்தான் நாங்கள் தொகுதிக்கு, கிராமத்திற்குப் போக முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற பொதுப்பணித் துறை மானியங்கள் அனைத்தையும் மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பை யேற்றிருக்கிற அரசாங்கத்தைப் பாராட்டவும் குறை கூறவும் பொதுவாக விமர்சனம் செய்யவும் பளிச் சென்று கண்ணுக்குத் தெரிகின்ற இலாகாவாக பொதுப்பணித் துறை இருக்கிறது என்பதை நாம் இந்த மன்றத்திலே நடைபெறுகின்ற விவாதத்திலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, பொதுவாழ்க்கையிலே ஈடுபடுகிற எங்களுடைய பொதுப்பணிக்கு, இந்தப் பொதுப்பணித் துறை தான் அடிக்கல்லாக, அச்சாரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினரையும் பொதுப் பணித் துறையில் அவருடைய சாதனையை மனதிலே வைத்துத் தான் மக்கள் விமர்சனம் செய்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும் கூட நிதிவசதிக்கு ஏற்ப இந்தப் பொதுப் பணித் துறையிலே மிக அருமையான மிகச் சிறப்பான திட்டங்களைக் கடந்த 1967-ஆம் ஆண்டிற்குப் பிறகு நம்முடைய அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.
கல்விக்கு அடுத்தபடியாக அரசாங்கத்தினுடைய பணம் அதிகமாகப் பொதுப் பணித்துறைக்குத்தான் மிகுந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகிறது.



என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு நானும் என்னுடைய தொகுதி மக்களும் கேட்டுக் கொண்ட கோரிக்கைகளை அரசு மிகுந்த கவனத்தோடு கேட்டு செய்துவருகிறது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தழுதாளை என்ற ஊரில் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் ஒரு ஏரி கட்டப்பட்டு அதன்மூலம் சிறிய நீர்ப்பாசன வசதிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973-ஆம் ஆண்டில் என்னுடைய தொகுதியில் உள்ள நாத்தப்பூர் நெற்குணம் ஆகிய இரண்டு ஊர்களிலும் 10½ லட்ச ரூபாய் செலவில் ஏரிகளை அமைக்க அரசு ஆணையிட்டதற்காக நான் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கல்லார்பாலம் பற்றி நான் சட்ட மன்ற உறுப்பினராக பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து நம்முடைய அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு வந்தேன். இன்றைய ரெவின்யூ துறை அமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது அதை ஏற்றுக் கொண்டார்கள், அங்கு வந்து பார்த்தார்கள், குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறோம். அவர்களுடைய அரிய முயற்சியின் காரணமாகவும் இப்பொழுது இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் முயற்சியின் காரணமாகவும் மத்திய சாலை வசதி நிதியிலிருந்து 7 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு ஒரு உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு அதற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையிலே முக்கியமான மூன்று இணைப்புச்சாலைகளைப் போடுவதற்கு அனுமதி கொடுத்தமைக்காக நான் என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். சில குறைகளைச் சுட்டிக் காட்டுவதற்கும் நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1974 மார்ச் 26

நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களிலே தலைமைச் செயலகத்திலே இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் மேலப் புலிவலம் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில், அது எக்னமிக் ஸ்கீமாகத்தான் இருக்கிறது. இத் திட்டத்தை நடப்பாண்டில் அனுமதிக்க வேண்டுகிறேன்.

நிறைவேருமல் உள்ள நீண்டகாலமாக இருக்கிற இரண்டு திட்டங்களில் ஒன்று கலிங் ஓடைத் திட்டம் பூலாம்பாடி கிராமத்திற்கு அருகிலே இருக்கிறது. அதற்கு 5½ லட்ச ரூபாய் செலவாகும். புதுநடுவலூர் எரி மற்றென்று. அதற்கு 6 லட்சம் ரூபாய் ஆகும். இந்த இரண்டு திட்டங்களும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே பேசப்பட்டு வருகிறது. ஆனல் இந்தத் திட்டங்கள் எக்னமிக்காக இல்லாத காரணத்தினல் அந்தப் பகுதி மக்களுக்கு நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படாமல் இருக்கின்றன.

எங்களுடைய பகுதி பிற்பட்ட பகுதி, காவிரி என்று இருந்தாலும் எங்களுக்கும் காவிரிக்கும் சம்பந்தம் இல்லை. காவிரி தென்பண்ணை பாலாறு என்று பாட்டிலேதான் எங்களுக்கு உரிமை யுண்டே தவிர காவிரிக்கும் எங்களுக்கும் சம்பந்தம் கிடையாது என்று நான் எத்தனையோ முறைகள் சொல்லியிருக்கிறேன்.

அங்கே கிணற்றுப் பாசனம், சிறிய பாசனம் ஆகிய இவற்றை வைத்துத்தான் நாங்கள் தற்பொழுது விவசாயத்தைத் செய்து வருகிறேம். திட்டங்களை நிறைவேற்றி வருகிறேம். ஆகவே, 6 இலட்சம் ரூபாய் செலவில் இந்த புதுநடுவூர் எரி கட்டப்பட்டால் அது முழுக்க முழுக்க தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்பட யிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனையோ காரியங்களுக்கு, ஸ்பெஷலாக, சிறப்பாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி தருகின்ற கழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார உயர்விற்காக இந்த எரி பயன்படும் என்பதால் அதில் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே கோரிக்கையை நான் திருச்சி எஸ். ஈ. அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன்.

அதேபோல் கலிங்க ஓடைத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 26] [திரு. ஜே. எஸ். இராசு]

ஆத்தூர், கிச்சிலி சம்பா என்ற நெல் வகைகள் என்னுடைய பகுதியிலேதான் விளைகின்றன. அவை ஆத்தூர் மார்க்கெட்டுக்குப் போவதால் அந்தப் பெயரே தவிர, விளைவதெல்லாம் என்னுடைய பகுதியில்தான். எனவே அருள்கூர்ந்து நான் கூறிய அந்த எரித் திட்டங்களையெல்லாம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரங்கனுதபுரம், கடம்பூர், திருவாச்சூர், விஸ்வகுடி போன்ற இடங்களுக்கெல்லாம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன.

தலைவரவர்களே, என்றைக்கோ ஒரு நாள் பேசுகிறேம். எனவே, அருள்கூர்ந்து இன்னும் இரண்டு மூன்று நிமிஷங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பொருளாதாரத்தை மட்டும் மையமாக வைத்திருக்கும் அந்தப் பகுதிகளுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விஸ்வகுடி கிராமம் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. அந்த முஸ்லிம் மக்கள் தங்களுக்கு ஒரு எரியைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறர்கள். ஆனல் வெங்கலம் என்ற பக்கத்து கிராமத்தில் இருக்கின்ற மக்கள் விஸ்வகுடியில் எரியைக் கட்டினல் தங்களது வெங்கலம் பகுதி பாதிக்கப்படும் என்று நினைக்கிறர்கள். நான் சொல்வது என்னவென்றல், விஸ்வகுடிக்கும் எரி வேண்டும், அதேநேரத்தில் வெங்கலத்தில் உள்ள எரியும் பாதிக்கப்படக்கூடாது. விஸ்வக்குடி எரித் திட்டத்திற்கு 22 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அது மாவட்ட ஆட்சித் தலைவரவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதை மீண்டும் அரசாங்கம் பரிசீலித்து விஸ்வகுடி மக்களுக்கும் எரி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

25 இலட்சம் ரூபாய்க்குள்ளே இருந்தால் அது சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தில் வருகிறது. என்னுடைய தொகுதிக்கும் அவ்வளவு ரூபாயைத் தந்து அந்த நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மைனரிட்டி சமுதாயமாகிய முஸ்லீம் மக்கள் அங்கே இருக்கிறர்கள்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1974 மார்ச் 26

அவர்களுக்காக எடுத்துச் சொல்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, வெங்கலத்திற்குப் பக்கத்தில் விஸ்வகுடிக்கும் ஒரு ஏரியைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, துரைமங்கலம் ஏரியில் தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரும்பாலான ஏரிகளில் தூர் எடுக்காததால் ஏரி தரிசு நிலங்களாக விவசாயிகள் விவசாயம் செய்யக் கூடிய அளவில் மேடிட்டுப் போயிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். வெங்கலம் பெரிய ஏரியிலும் தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெரியம்மாபாளையம் ஏரியையும் அதிகச் செலவிட்டு கட்டித்தர வேண்டும். அங்கே ஆண்டுதோறும் வெள்ளத்தால் உடைப்புகள் ஏற்படுகின்றன. தற்காலிகமாக செய்யப்படும் வேலைகள் அங்கே பலனளிக்கவில்லை, எனவே, நிரந்தரமாக ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் டிவிஷனில் நிறைய வேலைகள் அனுமதிக்கப்பட அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வேலைகளைச் செய்வதாக இருந்தால் அடிஷனல் ஸ்டாப் வேண்டும். இல்லையென்றால் நிறைவேற்றித்தர முடியாது என்று திருச்சி சர்க்கிள் எஸ்.ஈ. அவர்களும், அரியலூர் டிவிஷன் ஈ.ஈ. அவர்களும் தெரிவித்தார்கள்.

இதற்காக 74-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 4 எஞ்சினீயர்களும், இரண்டு ஜூனியர் அசிஸ்டண்டுகளும், ஒரு அசிஸ்டண்டும், ஒரு ஜீப் டிரைவரும், ஒரு ஜீப்பும் மற்றும் சில ஸ்டாப் வேண்டுமென்று திருச்சி எஸ். இ. அரசுக்கு எழுதியுள்ளார். அதற்கான அனுமதியைக் கொடுத்தால்தான் திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

இந்த ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் அரியலூர் இ. இ.யால் செலவழிக்கப்பட வேண்டும். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு ஆட்கள் இல்லாமல் முடங்கிக் கிடக்கிறது ஆகவே, திட்டத்திற்கு ஒதுக்கும் நேரத்தில் அரசாங்கம் அதற்கான அடிஷனல் ஸ்டாப்-க்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 26] [திரு. ஜே. எஸ். இராசு]

என்னுடைய பகுதியில் விவசாயத் துறையிலே வேண்டியவற்றிற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவிற்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, பொதுப்பணித்துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கோவையிலே மேற்குப் பகுதியில் மதுக்கரை பிர்க்கா பஞ்சாயத்து யூனியன் மிகவும் வரண்ட பிரதேசம். அந்த பிர்க்கா கேரள எல்லை வரையிலே இருக்கிறது. கிணற்று நீரையும், ஊற்று நீரையும் நம்பித்தான் அவர்கள் விவசாயம் செய்ய வேண்டும். அந்த நிலையை மாற்ற வேண்டுமானால், மதுக்கரை பிர்க்காவிலே உள்ள பாலத்துறையில் ஓடுகின்ற ஒரு ஓடையில் அணைக்கட்டு கட்டினால் சில புஞ்சை நிலங்கள்கூட நஞ்சை நிலங்களாக ஆகக்கூடிய சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் இருக்கின்றன.

அந்த ஓடையைக் கட்ட வேண்டுமென்று 1967 ஆம் வருஷத்திலே ஒரு ப்ரபோசல் இருந்திருக்கிறது. சர்வேயும் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி சர்வேயும் செய்யப்பட்டு மூன்று இலட்சம் ரூபாயும் சேங்க்ஷன் செய்யப்பட்டும் அது நடைபெறாமல் அப்படியே தேங்கியிருக்கிறது.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை)

அதை உடனடியாக எடுத்து நடத்தினால் அந்தப் பகுதியிலே சுமார் 5,000 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறுவதோடுகூட, அந்தப் பகுதியிலுள்ள குடிதண்ணீர்த் தட்டுப்பாடும் நீங்கும் சூழ்நிலையும், சந்தர்ப்பமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவையில், நொய்யல் நதித் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. தொண்டாமுத்தூர், செம்மேடு என்ற இடத்தில் நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கேயே ஆற்றுத் தண்ணீரை அணைகட்டிவிடுவதால் கீழேயுள்ள பகுதிகளுக்குத் தண்ணீர் வராமல் செய்துவிடுகிறார்கள். அதனால் கீழேயுள்ள சிறு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், பெரிய காஞ்சிமாநதி என்ற சிறப்புப் பெயரைச் சொல்கிறார்களே

[திரு. என். மருதாசலம்] [1974 மார்ச் 26

தவிர, அது வரண்டு போயிருக்கிறது. எனவே, மேலே உள்ள பெரிய நிலச்சுவான்தார்களிடமுள்ள தடையை நீக்கி கீழே தண்ணீரைக் கொண்வரச் செய்து அங்கேயுள்ள விவசாயிகள் பயிர் செய்கின்ற சந்தர்ப்பத்தை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு வெள்ளலூர் என்ற இடத்திலே ஒரு பள்ளம் இருக்கிறது. அந்தப் பள்ளம் கஞ்சிகோனுன் பாளையத்தில் இருக்கிறது. மத்தியிலே பள்ளம் இருக்கிறது. அந்த ஊருக்குப் பெயரே கஞ்சிகோனுன்பாளையம். அங்கே ஒரு ரோடு போகிறது, நீண்ட ரோடு. அந்த ரோட்டை அரசு போட்டுக் கொடுப்பது மட்டுமல்லாமல் அந்த அணைக்கட்டையும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தக் குளங்களிலேயெல்லாம் மராமத்து வேலை செய்ய வேண்டும். எல்லா குளங்களையும் எப்படி மராமத்து செய்கிறார்கள் என்றால், தண்ணீர் தேங்கியிருக்கும் இடம் பள்ளம், அந்தப் பள்ளத்திலேயிருந்து மண்ணை எடுத்துப்போட்டு அங்கே பள்ளமாக ஆக்குகிறார்கள். மேடாக இருக்கும் இடத்தில் பள்ளமாகச் செய்ய வேண்டும். அம்மாதிரி செய்வதில்லை. எனவே, அம்மாதிரி செய்து, டிராக்டர் போட்டு மேட்டிலிருந்து கொண்டு வந்து ஏரிக்கரையிலே போட வேண்டும்.

அந்த மாதிரி குளங்களையும் மராமத்து செய்து ஆழப்படுத்தினால் குளங்களில் தண்ணீர் நிற்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும். அதனால் பக்கத்திலிருக்கிற குட்டைகளுக்கும், கிணறுகளுக்கும் தண்ணீர் ஊற்று காணக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். எனவே, அந்த முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பொதுப்பணித்துறையிலே 'பேச் வொர்க்' என்ற முறையில் சாதாரண தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் ரோடுரோடாக சிறு வண்டியைத் தள்ளி வேலை செய்கிறார்கள். ஆனால் 5 வருஷம், 10 வருஷமாக டெம்பரரியாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சர்க்காரின் சலுகைகள் எதுவுமில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களை வெளியே போகச் சொல்லலாம், எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்ற முறையில் இருக்கிறது. அப்படிப்பட்ட சாதாரணத் தொழிலாளர்



1974 மார்ச் 26] [திரு. என். மருதாசலம்]

களுக்கு பர்மனென்ட் வேலை கொடுத்து, அவர்களது சம்பளத்தையும் உயர்த்த வேண்டும். அந்த முறைகளை அரசு கவனிக்க வேண்டும்.

மற்ற இடங்களிலே உள்ள விவசாயிகளுக்கும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாதவகையில் இப்பொழுதிருக்கும் தண்ணீர் வாரியத்திலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பெரிய சென்டரிலே ஆழக் கிணறுகளை வெட்டிக் கொடுத்து அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கும், குடிதண்ணீருக்கும் தண்ணீர் சப்ளை செய்கின்ற முறையை அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. முத்துவேல் :** மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய தொகுதியில் உள்ள சில பிரச்னைகளைப் பற்றி கூறலாம் என்று முன்வருகிறேன்.

என்னுடைய தொகுதியில் எனக்கு முன்னாலிருந்த எம்.எல்.ஏ., திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மரக்காணத்திற்கும் தாழங்காட்டுக்கும் இடையில் புளியங்கால் ஓடை என்ற ஒரு ஓடை ஓடுகிறது. அது பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பாழ்படுத்துகிறது, தண்ணீர் நிரம்பிவிட்டால். அதை முன்பிருந்த பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் நேரடியாக வந்து பார்த்து அதற்கு ஆவன செய்வதாக இருந்தது. ஆனால் அது எந்த அளவிலே இப்பொழுது இருக்கிறது என்று இன்றுவரையில் எனக்குத் தெரியவில்லை.

(மாலை 5.00)

அடுத்தபடியாக, மரக்காணம் ஒன்றியத்தில் அனுமந்தைக்கும் வண்டிப்பாளையத்திற்கும் செல்லும் வழி நீண்ட பகுதியாக இருக்கிறது. மக்கள் நடந்துதான் செல்ல வேண்டும். இடையில் இடுப்பு அளவுக்குத் தண்ணீர் நிரம்புகிற நிலை இருக்கிறது. எப்படி ஆண்களும் பெண்களும் செல்லுகிறார்கள் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். அந்தப் பகுதியையும் முன்பிருந்த அமைச்சரிடம் காண்பித்திருக்கிறோம். அதுவும் எந்த மட்டத்தில் இருக்கிறது என்று தெரியவில்லை.

[திரு. நா. முத்துவேல்] [1974 மார்ச் 26

நான் பல முறை என்னுடைய தொகுதியில் மூன்று ஏரிகள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். தலைக்காணிக்குப்பம் ஏரி, நல்லம்போக்கு ஏரி, காந்தாடு ஏரி. அந்தக் கிராமத்திற்கு ஏரியே கிடையாது. பல தீர்மானங்கள் போட்டு அதிகாரிகளை எஸ்.இ. போன்றவர்களை எல்லாம் கொண்டு போய்க் காண்பித்தோம். அவர்கள் வருகிறார்கள், போகிறார்கள், ஏரிக்கு எஸ்டிமேட் தயாராகிறது என்று சொல்லுகிறார்கள். இதுவரை எந்தவிதமான வேலையும் ஆரம்பமாகவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் காட்ரம்பாக்கம் கிழப்பட்டுப் பாதூர் சாலை 13 கிலோ மீட்டர் உள்ளது. யூனியன் ரோடாக இருந்தபோதிலும் 16 கிராமங்கள் அடங்கிய அந்த ரோடு வழியில் இருக்கிறபடியால் பஸ் போக்குவரத்து இல்லாமல் மக்கள் இவ்வளவுதூரம் நடந்து வந்து பஸ் ஏறவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் நேசல் என்ற கிராமத்திற்கு வந்த போது அந்த வழியில் அழைத்துச் செல்லும் போது காண்பித்தோம். அந்தச் சாலை இதுவரை செப்பனிடப் படவில்லை. கிராம நெடுஞ்சாலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்தில் பல முறை எடுத்துச் சொன்னோம். அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். தரிசனூர் வாழத்தூவல் செல்லும் ரோட்டையும் நெடுஞ்சாலைத் துறையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மிகவும் பிரசித்திபெற்ற திருவக்கரை கிராமத்திற்கும் விழுப்புரம் கோட்டூர் கிராமத்திற்கும் இடையே சங்கராபரணி ஆறு செல்கிறது. அங்கு ஒரு தரை மட்டப் பாலத்தை அமைத்துத் தரவேண்டும்.

சென்னையிலிருந்து திண்டிவனம் போகும் வழியில் களம்பூர் சாலையில் 15 ஆண்டுகளாக பஸ் போக்குவரத்து சென்று கொண்டிருக்கிறது. மத்தியில் நான்கு ஏரிகள் குறுக்கிடுகின்றன. இடையில் கலிங்கு இருக்கிறது. மழைக் காலங்களில் பஸ் போக்குவரத்து நின்றுவிடுகிறது. இதுபற்றிப் பல முறை அதிகாரிகளிடம் தெரிவித்தோம். இதுவரை அந்த ரோட்டுக்கு எந்த விமோசனமும் கிடைக்கவில்லை என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



1974 மார்ச் 26] [திரு. நா. முத்துவேல்]

நீர்ப்பாசன வசதியில் தென்னாற்காடு மாவட்டத்தில் தென் கடலூர், வட கடலூர் என்று சொல்லுகிற அந்தப் பகுதிகள் மிகவும் பின்தங்கிய பகுதிகள். திண்டிவனம் வட்டத்தில் வீடூர் அணைக்கட்டு இருக்கிறது. அது பார்க்க அழகாக இருக்கிறதே தவிர, 3 மாதங்களுக்கு மேல் தண்ணீர் இருப்பதில்லை. அதில் தண்ணீர் வந்தால் என்னுடைய தொகுதியில் முக்கால் பகுதியில் விவசாயம் செய்ய வசதியாக இருக்கும்.

அதற்குத் தண்ணீர் வர வேண்டுமென்றால் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மாவட்டத்தி லுள்ள சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து நந்தன் கால்வாய், நல்லம்பள்ளி கிராமத்தின் வழியாக, வராக நதி வழியாக வீடூர் அணைக்குத் தண்ணீர் வர வழிவகை இருக்கிறது. அதன்மூலம் வீடூர் அணைக்கட்டுக்கு அருகிலுள்ள விழுப்புரம் தாலுகா, திண்டிவனம் தாலுகா தண்ணீர் வசதி பெறும்.

செங்கற்பட்டு மாவட்டத்தையும் தென்னாற்காடு மாவட்டத்தை யும் இணைக்கும் வகையில் ஓங்கூர் ஆறு செல்கிறது. மேற்குப் பகுதியில் நிறைய தரிசு நிலங்கள் இருக்கின்றன. ஓங்கூர் ஆற்றின் குறுக்கே அணை கட்டினால் ஓங்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் 20 கிராமங்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சல் ஏற்படும். அங்கு சிறு சிறு ஏரிகள் இருக்கின்றனவே தவிர, பெரிய ஏரி இல்லையென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் பூத்துறை கிராமத்தில் உள்ள ஏரி பாண்டிச்சேரியில் தண்ணீர் ஏறினால் ஏரி உடையும் நிலையில் இருக்கிறது. இது பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான ஏரி. மூன்று ஆண்டுகளாக இந்த நிலை இருக்கிறது. இதுவரை பழுது பார்க்கப்படவில்லை. நான்கு மாதங்களுக்கு முன்பு அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறேன். கவனிப்பதாகக் கூறினார்கள். இன்னும் அந்தப் பூத்துறை ஏரி பழுது பார்க்கப் பட்டதாகத் தெரியவில்லை.

மயிலத்திலிருந்து நல்லாவூர் செல்லும் சாலையில் தென்போடிப் பாக்கம் கிராமம் இருக்கிறது. கலிங்குகள் ஏரியின் குறுக்கே செல்லுகின்றன. அங்கு பஸ் போக்குவரத்து செல்லுகிறது. ஆனால் ஒரு நாள் மழை பெய்துவிட்டால் கூட பஸ் போக முடியாது.

[திரு. நா. முத்துவேல்] [1974 மார்ச் 26

அந்தக் கலிங்குகள் அவ்வளவு ஆழமாக இருக்கின்றன. அதற்கு எஸ்டிமேட் 30,000, 40,000 ரூபாய் என்று போட்டு அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்பிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இதுவரை அதிலே கால்வாயைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. உடனடியாக அந்த நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரம்மதேசம்-கிளியனூர் நெடுஞ்சாலை இருக்கிறது. தார் போட்ட ரோடு 6 கிலோ மீட்டர் செல்லுகிறது. மீதி 2 கிலோ மீட்டர் போக வழி இல்லை. குறுக்கே சிறு ஆறு செல்லுகிறது. கிளியனூர் ஏரியின் கீழ்ப்பகுதி மோசமாக இருப்பதால் ஜல்லி போட்டு வைத்திருக்கிறார்கள். நான்கு வருஷங்கள் ஆகியும் ஒன்றும் செய்யவில்லை. ஜல்லிகள் ஒவ்வொன்றாகப் போய்க் கொண்டிருக்கின்றன. இந்த 2 கிலோ மீட்டர் ரோடு போடுவதைப் பற்றியும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மானியங்களிலே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ.ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏழு மானியங்களுக்கு மொத்தமாக 72 கோடி ரூபாய்க்குச் சபையினுடைய அனுமதியைக் கோரியிருக்கிறார்கள்.

நமது நிதிநிலைகளிலே கல்வி மானியத்திற்கு அடுத்தபடியாக இந்த அமைச்சர் அவர்கள்தான் இவ்வளவு அதிகப்படியான தொகையைச் செலவழிக்கக்கூடிய ஒரு பெரும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். ஆகையினாலே இந்தத் தொகையைச் செலவழிக்கும்போது மிகப் பொறுப்புடன், கடமை உணர்வோடு கவனித்துச் செலவழிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அப்படி நாம் செலவழித்துக் கொண்டு வரும்போது கடந்த பல்லாண்டுகளாக பல கோடிக்கணக்கான ரூபாயை நாம் செலவழித்து வந்தும் கூட, இந்த அவையில் பேசிய உறுப்பினர்கள் பேச்சைப் பூராவாகக் கேட்டுக் கொண்டிருக்கும்போது நாம் செய்ய வேண்டியது ரொம்ப அதிகமாக இருக்கிறது என்று உணர முடிகிறது.



1974 மார்ச் 26] திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஆகையால் பாசன வசதி, ரோடு வசதி இவைதான் நாட்டின் விவசாய அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அடிப்படையான அம்சம்.

விவசாய மானியத்தின் பேரில் நான் பேசும்போது—வெறும் விவசாய இலாகா மட்டும் அபிவிருத்தியைப் பண்ணிவிட முடியாது ; பாசன வசதி, ரோடு வசதி இன்னும் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால்தான் நாட்டிலே விவசாய அபிவிருத்தி அடைய முடியும் என்று கூறியிருக்கிறேன்.

ஆகவே, இந்தத் துறை விவசாய அபிவிருத்திக்கு மிக அடிப்படைக் காரியங்களைச் செய்து வரக்கூடிய ஒரு பிரிவு. இந்தப் பிரிவு செம்மையாகச் செயல்பட்டால்தான் நாட்டிலே பெரும் வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும். ஆகவே, நான் கேட்டுக் கொள்வேன்—சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் இன்னும் மிக அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 15 கோடி ரூபாய் சிறுபாசனத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று கூறப் பட்டிருக்கிறது. இன்னும் அந்தத் திட்டம் முடிவாக வரையறுக்கப் படாத காரணத்தால் 15 கோடி ரூபாய் அளவுக்கு இருக்குமா, குறையுமா என்பதைத் திட்டவட்டமாகக் கூற இயலாது. ஆகவே, நான் கேட்டுக் கொள்வது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் ஒதுக்கினாலும் இங்கு கூறப்பட்ட குறைகளை நிவர்த்திப்பதற்கு, ஒரு பகுதியை நிவர்த்திப்பதற்குக்கூடப் போதாது என்ற நிலையில் இந்தத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில்—திட்ட வட்டமான முடிவு எடுக்கப்படாத காரணத்தால் குறைந்த தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை அதிகரிக்க முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

நம்முடைய பொதுப்பணித்துறை நிர்வாக அமைப்பு ஒட்டு மொத்தமாக ஒரு ஆண்டில் அதிகப்படியான தொகையை ஒதுக்குமானால் அப்படியே செலவழிக்க சக்தி வாய்ந்த அமைப்பாக இருக்க முடியாது. ஆகவே, 15 கோடி ரூபாய் மொத்தமாக ஒதுக்குகிறோம் என்றால், இந்த ஆண்டு மூன்று கோடி ரூபாயாவது

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 26

ஒதுக்கவேண்டும். இந்த ஆண்டு குறைந்த தொகை அடுத்த ஆண்டு மிக அதிகமான தொகை என்று ஒதுக்கும்போது செலவழிப்பதற்கு சங்கடங்கள் அதிகமாக இருக்கும்.

ஆகவே சிறுபாசனத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இனிமேல் அதை மாற்றிக் கொள்ள முடியாது. ஆகவே இதை கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

இருநூறு ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதியுள்ள குளங்களைப் பொதுப்பணித்துறை மராமத்து வேலைகளை ஏற்றுச் செய்ய வேண்டும் என்றிருந்தது போக இப்போது 100 ஏக்கருக்கு மேற்பட்டிருப்பதை பொதுப்பணித்துறை செய்யவேண்டும், பாக்கியிருக்கிற பாசனக் குளங்களை எல்லாம் அந்த அந்த யூனியனே செய்யலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. எனக்கு அது சரியாகப்படவில்லை.

பாசனக் குளங்கள் என்று வந்தால் அது 30 அல்லது 40 ஏக்கராக இருந்தாலும் அதனால் நமக்கு விளைச்சல் அதிகரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமானால் எவ்வளவு சிறிய குளங்களானாலும் சரி அவை எல்லாம் பொதுப்பணித்துறையின் மராமத்தில்தான் வரவேண்டும்.

என் அனுபவத்தில் யூனியன்களினால் பராமரிக்கப்படுகிற குளங்கள் அவ்வளவு தரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதாக கூற முடியவில்லை. ஆகவே எல்லாக் குளங்களையும் பொதுப்பணித்துறையே மராமத்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிரமங்கலம் வடக்கு ஏரி என்ற இடத்தில் போர்வெல்ஸ் இரண்டு போட்டு அந்த பம்ப் செட்கள் வேலை செய்யாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி முதலீடு செய்கிறபோது அது நல்ல முறையில் பயன்படுத்தப்படவில்லை என்றால் நாட்டில் இன்ப்ளேஷன் வரத்தான் செய்யும். இது சின்ன அளவில் இருக்கலாம். ஆனால் இப்படி எவ்வளவு இடங்களில் இருக்கின்றனவோ எனக்குத் தெரியாது. அவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும்.

பின், காவிரி நீர் தகராறுபற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்கட்சிக்காரர்கள் எல்லாம் ஒன்றுமே செய்யவில்லை என்று சிலர் குறிப்பிட்டார்கள்.



1974 மார்ச் 26] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

எதிர்க்கட்சியினரைப் பொறுத்தவரையில் காவிரி நதிநீர் தகராறு தமிழகத்திற்குப், பாதகம் இல்லாத முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் எந்தவிதமான அபிப்பிராயபேதமும் இல்லை.

அமைச்சர் அவர்கள் சர்வ கட்சி தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசித்தான் அடிக்கடி அது சம்பந்தமான முடிவுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அரசு இது சம்பந்தமாக எடுத்துக்கொள்கிற முடிவுகளில் எல்லாம் எதிர்க்கட்சி தரப்பில் நாங்கள் ஆதரித்து வந்திருக்கிறோமே தவிர, அவை சரியில்லை என்று சொல்லவேயில்லை. நாங்கள் உங்களுக்கு உறுதுணையாகத்தான் இருந்து வந்திருக்கிறோம்.

என் கட்சி சார்பில் சொல்கிறேன், காவிரி நீர் தகராறு சுமுகமாக தீர்ந்து தமிழகத்திற்குப் பாதகம் இல்லாத நிலையில் நமக்குக் கிடைக்கவேண்டிய நீர் நியாயமான அளவிற்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக எங்கள் பரிபூரண ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கும்.

மேற்கொண்டு மத்திய சர்க்காரோடு பேசி அதை தீர்ப்பதற்கான முயற்சிகளை செய்யுங்கள். மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் அறிக்கையைப் பார்க்கும்போது மத்திய சர்க்கார் இதற்கான சரியான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்களே தவிர, மத்திய சர்க்கார் ஏதோ நமக்குப் பாதகமான நிலையில் நடந்து கொள்கிறது என்ற கருத்து அமைச்சரவைக்கு இருப்பதாகத் தெரியவில்லை. உறுப்பினர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் அமைச்சரவைக்கு அந்தக் கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஏதாவது கருத்து அமைச்சரவைக்கு இருக்குமானால், அதை இந்த சபையில் வெளியிடுவார்களேயானால் அதற்கேற்றபடி எங்கள் ஆதரவைக் கொடுத்து தமிழகத்தின் நலன் குறையாமல் இருப்பதற்கு எங்கள் பரிபூர்ண ஆதரவு உண்டு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நில நீர் ஆய்வுப் பணி சம்பந்தமாக ஒரு பிரிவு பொதுப்பணித் துறையில் பணியாற்றி வருகிறது. நல்ல ஏற்பாடுதான். மேல்மட்டம் பூராவும் ஓரளவிற்கு உபயோகித்த பிறகு பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை நம்பியிருக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் அதன் ஆராய்ச்சி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 26

விஞ்ஞான ரீதியில் உள்ளது. அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் ஒவ்வொரு பிட் இடத்திலும் நீர் இருக்கிறதா இல்லையா என்று ஒவ்வொரு சர்வே நம்பரிலும் பார்ப்பது நடைமுறைக்குச் சாத்திய மானதல்ல.

ஒரு பகுதியில் ஒரு இடத்தில் நீர் வளம் குறைவாக இருக்கிறது என்று சொல்வார்கள். அப்படி குறைவாக இருக்கிறது என்பதற்காக அங்கு தண்ணீரே இல்லை என்று முடிவு எடுத்துவிட முடியாது. ஒரு கஜ தூரத்திற்குள்ளே ஒரு இடத்தில் நீரோட்டம் இருக்கிறது, ஒரு இடத்தில் நீரோட்டம் இல்லை என்ற நிலை இருக்கிறது.

என் அனுபவத்தில் ஒரு இடத்தில் வெட்டியபோது தண்ணீர் இல்லை, ஆனால் ஒரு அடி தாண்டி வெட்டியபோது தண்ணீர் இருக்கிறது.

பட்டுக்கோட்டை வட்டாரம், மதுக்கூர் வட்டாரம் இவற்றில் சர்க்கார் உதவி மூலம் கிணறுகள் வெட்ட பணம் கொடுப்பதில்லை. காரணம் அங்கு தண்ணீர் இல்லை என்று ரிப்போர்ட் கொடுத்திருக் கிறார்கள். ஆனால் யதார்த்த நிலையைப் பார்க்கிறபோது பல யிடங்களில் தண்ணீர் இருக்கிறது.

ஆகவே அப்படி தண்ணீர் இருக்கிற இடங்களில் கிணறுகள் வெட்ட அல்லது போர்வெல்ஸ் போட அரசு கடன் கொடுப்பதற்குத் தயங்கக் கூடாது. இவர்கள் அனுமதி கொடுக்க முடியாது என்று சொல்வதன் காரணத்தால் எல்.டி. பாங்க், தேசிய வங்கிகள் மூலம் கடன்கள் வாங்க சிரமப்படுகிறார்கள்.

எல்லா மாவட்டங்களிலும் இந்த சிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கடற்கரையோரத்தில் பலயிடங்களில் முப்பது அடிக்குக் கீழ் நல்ல தண்ணீர் இருக்கிறது. சிலயிடங் களில் மேல் மட்டத்தில் தண்ணீர் உப்பாக இருக்கிறது, இருநூறு அடி கீழே போனால் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. ஆகவே விவ சாயிகள் தங்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக சர்க்காரை அணுகினால் தண்ணீர் கிடைக்குமானால் கடன் கொடுக்க சர்க்கார் தயங்கக் கூடாது.



1974 மார்ச் 26] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

நில நீர் ஆய்வுக் குழு கொடுத்த அறிக்கையை வைத்துக் கொண்டு இந்தப் பகுதிக்கு கடன் கொடுப்பது அந்தப் பகுதிக்கு கடன் இல்லை என்று சொல்வது கடன் கிடைக்காதவர்களைப் பாதிக்கும். ஆகவே இதைப் பரிசீலனை செய்யவேண்டும்.

கட்டடம் பற்றி சொல்லும்போது புதுப் புதுக் கட்டடங்கள் கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை. கட்டடத் தேவை நமக்கு அதிகரித்திருக்கிறது. குடியிருப்பு தேவைகள் அதிகரித் திருக்கின்றன. ஆனால் கட்டடங்களில் போடுகிற பணம் அண் ப்ரொடக்டிவ் காப்பிட்டல். அதற்காகக் கட்டடங்கள் கட்டா மலும் இருக்கமுடியாது.

அதனால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்கிறது. ஆனால் புதுக் கட்டடம் கட்டும்போது அது அவசியந்தானா என்று பார்த்து அவசியம் என்ற முடிவிற்கு வந்த பிறகுதான் கட்ட வேண்டும். இருக்கிற கட்டடங்களைப் பழுது பார்க்கின்றபோது தேவைதானா என்று பார்த்துச் செய்யவேண்டும்.

கலைவாணர் அரங்கத்தை இடித்துக் கட்டுவது தேவை இல்லை என்பது எல்லோருடைய அபிப்பிராயமாகும். அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று சொல்லமுடியாது. ஏற் கனவே எவ்வளவு குழந்தைகள் உட்கார்ந்து படம் பார்த்தார் களோ அவ்வளவு பேர்கள்தான் இனியும் பார்க்க போகிறார்கள். ஆகவே இவ்வளவு பணம் செலவிடுவானேன். எவ்வளவோ கட்ட வேண்டியிருக்கிறது. குடிசை மாற்று வாரியம் இருக் கிறது. இதைக்கொண்டு ஐந்து கட்டடங்களைச் சேர்த்துக் கட்டி யிருக்கலாம். இருபது ஆண்டுகள் இருக்கும் என்றால் இருக் கட்டுமே.

வாடகைக் கட்டடங்களிலிருந்து மாற்றி சொந்தக் கட்டடங் களில் வைக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. அந்தக் கட்டடங்களும், தனியார் கட்டடங்களுடையதாக இருந்தாலும், தேசிய சொத்துத்தான். வாடகையை வேண்டுமானால் கட்டுப் படுத்தலாமே தவிர அல்லது வேறு எந்த முறையில் செய்யலாம் என்பதை ஆலோசித்துப் பார்க்க வேண்டும்.

சாலை மேம்பாடு, நாஷனல் ஹைவேஸ், ஸ்டேட் ஹைவேஸ், மேஜர் டிஸ்ட்ரிக்ட் வொர்க்ஸ் என்றெல்லாம் இருக்கின்றன. இதை டெவலப் செய்து கொண்டு போங்கள்.

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 மார்ச் 26

ரூரல் வொர்க்ஸில் கவனம் செலுத்தவேண்டும். பல கிராமங்கள் இணைப்புச் சாலைகள் இல்லாமலிருப்பதைப் பார்க்கும்போது சங்கடமாகயிருக்கிறது.

சில கிராமங்களில் வைத்திய வசதிக்காக நோயாளிகளை எடுத்துச் செல்ல சாலை வசதி இல்லாத நிலை இருக்கிறது. 1,500 மக்கள் தொகைக்கு மேல் இருந்தால் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒரு 500 அல்லது 600 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் பாதை இல்லை என்பதால் நோயாளியை கட்டில் படுக்க வைத்து நோயாளியை தூக்கிச் செல்ல வேண்டியிருக்கிறது அடுத்த கிராமத்திற்கு. இதையும் கவனிக்கவேண்டும்.

பின்னர், சென்டரல் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ். ஒரு திட்டம் போட்டு, மறுதிட்டம் போட்டு அனுப்பினோம். பணம்கொடுக்கிறார்களா என்று தெரியவில்லை. டிவிஷன் எல்லாம் வேலை செய்துகொண்டிருக்கிறது. தொகை பூராவும் செலவு செய்திருப்பார்கள். 25 லட்சம் இருப்பதாக தெரிகிறது. அவர்கள் ஒப்புதல் இல்லையென்றால் நாமே நம் நிதியிலிருந்து செய்யவேண்டும். அந்த வேலையை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ரூரல் ரோட்ஸ்க்கு பெரிய திட்டம் போட்டார்கள். மத்திய சர்க்காரோடு பேசினார்கள். இந்த ஆண்டு 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். மொத்தம் 60 கோடிக்கு மேல் ஆகும் என்று திட்டம் போட்டார்கள். அது என்னவாயிற்று? பூராவும் கொடுப்பார்களா என்று தெரியவில்லை. இப்படிப் போட்டுக்கொண்டு போனால் இருபத்தைந்தாண்டுகள் ஆகும் பாதைகள் அமைய. ஆகவே, தமிழகத்தில் இணைப்புச்சாலைகள் சீக்கிரம் போட முயற்சிக்கவேண்டும்.

இவ்வளவு வேலைகளைச் செய்யும் அந்தப் பொறியாளர்கள், அலுவலாளர்களுக்கு இருக்கும் குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும். என்ன குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டுமென்றால், இன்ஜினியர்கள் பிரமோஷன் விவகாரத்தில் ஒவ்வொரு துறையில் இருக்கும் பொறியாளர்களுக்கும் தனித் தனியே சீனியாரிட்டி இருப்பதாகவும், அதனால் அவர்களுக்குச் சில பாதகங்கள் ஏற்படுவதாகவும் சொல்கிறார்கள்.



1974 மார்ச் 26] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷனில்கூட ஏதோ சிபார்சு செய்து இருப்பதாகச் சொல்கிறார்கள். பாதகம் என்றால் ஒரேடியாக எதிர்பார்கள், சாதகம் என்றால் ஒரேடியாக ஆதரிப்பார்கள், இது எங்கும் உள்ள இயற்கை நிலை.

எல்லாத் துறையில் இன்ஜினீயர்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே சீனியாரிட்டி வைத்துக்கொள்ளலாம் என்று ஒரு கருத்து இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கருத்து நல்ல கருத்து என்று எனக்குப் படுகிறது. அதை நீங்கள் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இர்ரிகேஷன் என்று வைத்தால் அவர்களுக்கு அங்கே பாதிப்பு இருக்கிறது. மற்ற மற்ற வாரியங்களில் நல்ல பதவி உயர்வு கிடைத்து விடுகிறது. அவர்களுடைய மனதில் நமக்கு எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றம் இந்தத் துறையில் இருந்தால் கிடைக்கும் என்று ஏற்படுமானால்தான், அவர்கள் நல்ல முறையில் வேலை செய்வார்கள். ஆகவே, அந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டிராப்ட்ஸ்மென் கிரேடு I பதவியில் இருப்பவர்களும் அவர்களுடைய போஸ்ட் கெசடட் நிலைக்கு—ஜூனியர் இன்ஜினீயர் லெவலுக்கு—உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வே. ந. முத்தமிழ்ச் செல்வன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ள பொதுப் பணிகள், கட்டிடங்கள் சாலைகள் மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களை வைக்கிறேன்.

தமிழகமானது சாலை வளர்ச்சித் திட்டங்கள் முதலியவற்றில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டு இருக்கிறது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு சாலை வசதி மிக முக்கியமானதாகும். இந்தச் சாலை வசதி தமிழகத்திலே நெடுஞ்சாலை என்ற பெயரில் பெரிய அளவில் அமைக்கப்பட்டு நல்ல வளர்ச்சியைக் கண்டு இருக்கும் தமிழகத்தில் நீர்வழிப் போக்குவரத்து என்று வரும்போது நான் பல ஆண்டு காலமாக கனவு கண்டு வருகிற, நமது தமிழக மக்களின் ஏக குரலாக இருக்கும் சேதுசமுத்திரம் திட்டமானது இன்னும் காலம் கடந்து கொண்டு போய்க்கொண்டிருக்கிறது.

இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக்கொள்கிறேன், தமிழக மானது எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டு வரும் இந்த நேரத்தில் இந்த சேதுசமுத்திர திட்டமானது நிறைவேற்றப் படாவிட்டால் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்த இந்திய பூபாகத் திற்கே நல்ல முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் கொடுக்கும் என்ற காரணத்தால் வருகிற ஐந்தாவது திட்டத்தின் முதல் ஆண்டிலேயாவது இந்தத் திட்டமானது இடம்பெறவேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக மத்திய அரசினைக் கேட்டுக்கொள்கி றேன்.

சாலையைப் பொறுத்தவரையில் பொதுவாக இன்று நெடுஞ்சாலை என்று வருகிறபோது முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும், கிராமப்புறச்சாலைகள் ஒன்றியத்தால் பராமரிக்கப் பட்டவை இன்னும் அபிவிருத்தியாகாமல் இருக்கின்றன. இந்தக் கிராமச் சாலைகளுக்காக சிறப்புத் திட்டங்கள் போட்டு, சரளையைக் கண்டிராத சாலைகள் எல்லாம் இன்று நல்ல வசதியான நிலையில், தார் சாலைகளாக அபிவிருத்தி அடைந்திருக்கின்றன.

ஆனால் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகாலமாக பேருந்து செல்லும் சாலைகள் ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டவை, நெடுஞ்சாலைத் துறைக்கு வந்தபின்னாலே அங்கே பஸ்களே போக முடியாத நிலை இருக்கிறது. எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், குறிப் பாக லால்குடியிலிருந்து பாடலூர் செல்லும் சாலையைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். இந்தச் சாலை வழியாக 10-15 ஆண்டு களாக பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. இருந்தாலும் எந்த ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தாரும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அந்த சாலை வழியே பஸ் விடுவது இல்லை. காரணம், சாலை மோசமாக இருப்பதுதான்.

இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்தச் சாலை வளர்ச்சித் திட்டம் அமல்படுத்து கிறபோது, இந்தக் கிராமப்புறங்களில் பேருந்துகள் செல்லும் சாலையையும் சேர்த்து நல்ல முறையில் சீர்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஏதுவாக அதிக நிதியையும் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்த லால்குடி-பாடலூர் சாலை, குமுளூர், கண்ணாகுடி, பெரு வளப்பூர் போன்ற ஊர்களின் வழியாகச் செல்கிறது. இந்தச் சாலையானது மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், இதை உடனடியாக நல்ல முறையில் செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனம் என்று சொல்கிறபோது, பாசன வசதியைப் பெருக்கி னால்தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். நம்முடைய தமிழகம் உணவு பற்றாக்குறையில் இருந்தது. இன்று உபரி மாநிலமாக இருக்கிறது. இதற்குக் காரணம் நாம் நம்முடைய தீவிர சாகுபடி திட்டத்தின்மூலம் அதிக பாசன வசதிகளை ஏற்படுத்தி அதன்மூலம் நல்ல முன்னேற்றத்தைக்கண்டு இருக் கிறோம். பாசன மேம்பாடு என்று வருகிறபோது நிலத்தின் மேல் பரப்பில்பெறும் எல்லா நீரையும் பயன்படுத்தி விட்டோம்.

மழைநீர் தேக்கிவைக்கவேண்டியதை இன்று பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள், இந்த மழைநீரை ஆங்காங்கு குட்டைகள் கட்டுவதன் மூலம் தேக்கி வைத்து பாசன வசதி செய்யலாம். இதனால் அதிக உற்பத்தியும் ஏற்படும். எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் அய்யன் வாய்க்கால், பெருவளை வாய்க்கால் என்று இரண்டு வாய்க்கால்கள் இருக்கின்றன. இந்தப் பெருவளை வாய்க்கால் வழியாக பல ஏரி களின் தண்ணீரைப் பெறுகிறது. இந்தப் பெரிய ஏரிகளில் தூர் எடுக்காததன் விளைவாக முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது.

ஆகவே, இந்தப் பெருவளை வாய்க்கால் அருகிலுள்ள பெரிய ஏரிகளில் தூர் எடுத்து அதன் மூலம் அந்தப் பகுதியில் பாசன வசதியை மேம்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஏரியில் தூர் எடுக்காததற்குக் காரணம் இந்த ஏரி ஆற்றுப் பாதுகாப்புத் துறையில் இருக்கிறது. ஆர். சி. டிவிஷனில் இருக் கிறது. இந்த டிவிஷனுக்கு புல்டோசர்கள் இல்லை. அதனால் அவர்களால் தூர் வார முடியவில்லை. அந்த டிவிஷனுக்கு ஒரு 4-5 ஆண்டு காலத்திற்கு புல் டோசர்கள் ஒதுக்கினால், பல முன்னேற்றங்களைச் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கி றேன்.

எங்கள் தொகுதியில் இப்போது தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. குறிப்பாக கரும்பு பயிர் அங்கே அதிகமாக இருக்கிறது. சர்க்கரை ஆலையில் நிர்வாகத்தினருக்கும், தொழிளாளர்களுக்கும் ஏற்பட்ட தகராரின் காரணமாக ஒரு மாதகாலமாக அங்கே கரும்பு அறவை செய்ய முடியாமல் போய்விட்டது.

இதனால் கிட்டத்தட்ட 1000 ஏக்கர் நிலங்களில் உள்ள கரும்பு அரைக்க முடியாமல் போய்விட்டது. இந்த ஆலையில் கரும்பு அரைக்காததன் காரனத்தால், அந்தக் கரும்பை காய்வதினின்றும் காப்பாற்ற வேண்டிய நிலை வந்திருக்கிறது. காவிரியிலிருந்து வரும் ஊற்று நீரைக் கொண்டு ஓரளவிற்குப் பாசனத்துறை மூலமாகத்தந்தால் அந்தக் கரும்புப் பயிரைக் காப்பாற்ற முடியும். பொதுப் பணித் துறை பொறியாளர்கள் இதற்குத் தனிக் கவனம் செலுத்தினால் நிச்சயமாக ஓரளவிற்கு அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு இலட்சக்கணக்கில் ஏற்படக்கூடிய நட்டத்தை தவிர்க்கலாம் என்று பொதுவாகச் சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. சுப்பிரமணியம்:** பேரவைத் தலைவரவர்களே, பொதுப் பணித் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்தைத்தொகுத்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் புத்தநந்தல் என்ற அணை 1956-ம் ஆண்டில் கட்டப்பட்டு, இன்று வரை வாய்க்கால் வெட்டப்படாமல் இருந்து வருகிறது என்பதை நான் அந்த இலாகாவின் கவனத்திற்கு பல முறை கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்தபோது பொதுமக்களால் அவர்களிடமே நேரடியாக எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது.

அதன் பின்னல் மாவட்ட ஆட்சித் தலைவர், கூட்டாட்சித் தலைவர், பொதுப்பணித்துறை அதிகாரிகள், என்னையும் சேர்த்து ஒரு குழுவை அமைத்து, அது சம்பந்தமான அறிக்கையையும் அரசுக்கு 1970-ம் ஆண்டில் அனுப்பி இருக்கிறோம். இன்று வரை சம்பந்தப்பட்ட இலாகா எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 5.30)





அந்த அணையில் வாய்க்கால் வெட்டி செயல்படுமேயானால் 1,600 ஏக்கர் நிலங்களுக்குப் பயிர் ஏறுவதற்கு வகை செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வெகு விரைவில் இந்த ஆண்டிலாவது கட்டி முடிக்கப்பட்ட அந்த அணையில் வாய்க்கால் வெட்டிக்கொடுப்பதன் மூலம் விவசாயத்தை நாம் மேம்பாடு அடையச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அருங்குறுக்கையில் கடிலம் நதியில் ஒரு அணை கட்டுவதற்கு பொதுப்பணித் துறை இலாகாவினர் ஒரு கோடி ரூபாய் மதிப்பீடு தயாரித்து அரசுக்கு அனுப்பி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்று நினைக்கிறேன். அருள் கூர்ந்து அந்த அணையைக் கட்டி முடித்தால் ஏறக்குறைய மானவாரி புஞ்சை நிலங்கள் 2,500 ஏக்கருக்கு மேல் இருபோக சாகுபடி செய்வதற்கு லாயக்கு உள்ளதாக மாறும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வா விரும்புகிறேன். அருள் கூர்ந்து அந்த அணையைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே கடிலம் நதியில், சேஷ நதியும் இணைகின்ற இடத்தில் ஒரு அணை கட்டப்படவேண்டும். அதனால் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இருபோக சாகுபடிக்கு லாயக்கு உள்ளதாக மாறும். இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகிறது என்பதையும் நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வா விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் உளுந்தூர்பேட்டை–திருவள்ளூர் சாலையில் கடிலம் நதியில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்குக் கடந்த ஆண்டு 10 லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டம் போட்டு ரூ. 100 டோகன் கிராண்டு ஒதுக்கப்பட்டது. ஆனல், இந்த ஆண்டு அந்த டோக்கன் கிராண்டு கூட நிறுத்தப்பட்டு இருப்பதை நான் அறிகிறேன். அருள் கூர்ந்து இந்த ஆண்டு அந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே உளுந்தூர்பேட்டை-பாலக்கொல்லை ரோடில் வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்ட ஒரு பாலம் இன்றுவரை கட்டப்படுவதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 26

பொதுவாக இன்றையதினம் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் 50 கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ள ஒன்றிய சாலைகளில் பஸ் போக்குவரத்து போய்க்கொண்டிருக்கிறது என்பதையும் பஸ் போக்குவரத்துப் போகிற அந்த சாலைகளை மேம்பாடு செய்வதற்கு சிறு சிறு ஒன்றியங்கள் நிதிநிலைமை இழந்திருப்பதை நம்முடைய அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். பஸ்போகிற ஒரு சாலையில் பஸ் போக ஆரம்பித்தவுடனேயே அதை ஒரு ஆண்டு காலத்திற்குள் பெருவழித்துறை சாலையாக எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த அரசு அதை ஒரு கொள்கையாக எடுத்து பஸ் போக்குவரத்துச் சாலைகள் அத்தனையையும் பெருவழித் துறை சாலைகளாக மாற்றுவதற்கு ஒரு திட்டத்தை திட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே என்னுடைய தொகுதியிலே நீண்ட நெடுங் காலமாக ஏறக்குறைய 10 ஆண்டு காலத்திற்கு மேலாக கீழமருதூரில் ஒரு உயர்நிலைப் பள்ளி புளிய மரத்து நிழலில் நடைபெறக்கூடிய ஒரு காட்சியை நான் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது இங்கே எடுத்துக் கூறியும் இதுவரையில் அதற்கு எந்தவிதமான பலனும் இல்லை. அருள் கூர்ந்து அந்தப் பள்ளிக்கு ஒரு கட்டடம் கட்டிக் கொடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட இலாகாவினர் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பொதுவாக வாரியங்களெல்லாம், வீட்டு வசதி வாரியம், குடி நீர் வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்ற வாரியங்களுக்கும் கிராமப்புறத்திலுள்ள மக்களுக்கும் என்ன விரோதம் என்று எனக்குத் தெரியவில்லை. குடிசை மாற்று வாரியம் அல்லது வீட்டு வசதி வாரியம் அல்லது குடிநீர் வாரியம் துவங்குகின்ற திட்டங்களெல்லாம் பெரிய நகரங்களில் துவக்கப்படுகின்ற காட்சியை நாம் காண்கிறோம். நான் ஒரு உள்அடங்கிய கிராமத்திலிருந்து இங்கே வந்துள்ளேன்.

கிராமங்களில் குடி தண்ணீர் வேண்டும், கிராமப் புறங்களில் உள்ள குடிசைகள் மாற்றப்படவேண்டும். கிராமப்புறங்களுக்கு வீட்டு வசதி வேண்டும். ஆனால் வாரியங்கள் துவங்குகின்ற திட்டங்களெல்லாம், அவைகள் ஆரம்பிக்கின்ற அந்த திட்டக்



1974 மார்ச் 26] [திரு. நா. நாச்சியப்பன்]

காரியங்களெல்லாம் சென்னை போன்ற பெரும் நகரங்களிலும், கோவை, மதுரை, திருச்சி போன்ற பெரும் நகரங்களிலும்தான் துவங்கப்படுகின்றன.

இப்படி பல ஆண்டு காலமாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்குமேயானால் பல தலைமுறைகள் சென்றாலும் இந்தத் திட்டங்களெல்லாம் கிராமங்களை எட்டிப் பிடிக்காது என்பதை நான் உணர்கிறேன். ஆகவே, அருள் கூர்ந்து கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட திட்டங்களை துவக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

***திரு. நா. நாச்சியப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான பொதுப்பணித் துறை மான்யத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

மார்ச்சு மாதத்தில் நம்முடைய மான்ய ஒதுக்கீடு அனுமதிக்கும் நேரத்தில் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை எவ்வளவு விரைவாக செலவழிக்க வேண்டுமோ, அவ்வளவு விரைவாக செலவழிப்பதற்கு பொறியாளர்கள் மிக வேகமாக வேலை செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை நீங்கள் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக மற்ற திங்களைவிட மார்ச்சு திங்களில் தான் மிக அதிகமான அளவுக்கு வேலைகள் செய்கின்ற நிலைமை தொன்று தொட்டு தொடர்ந்து நிலவிவருகிறது என்பதை இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்கவேண்டும். பல பிரிவுகளாக பணத்தைப் பிரித்து நிதியை ஒதுக்கித் தருகின்ற நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கின்ற நிதி பெரும்பாலும் மார்ச்சு திங்களில்தான் செலவழிக்கப்படுகிறது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

இப்படி அவசரம் அவசரமாக மார்ச்சு திங்களில் செலவழிக்கப் படுகிற தொகை சரியான முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதைத் தான் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

மார்ச்சு 10-ம் தேதிக்கு மேலாக சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 1,500 மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கிராவல் அடிப்பதற்கு ஆபீசர் வொர்க் 10, 12 தினங்களுக்கு முன்னால் பல

வேலைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு வார காலத்திற்குள் எப்படி வேலைகள் நடைபெறும் என்பதை நாம் நன்றாக அறிவோம்.

இப்படி நாம் ஒதுக்குகின்ற பணம் வீணாக விரயம் ஆவதைத் தடுக்கக்கூடிய முறையில் நிர்வாக முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பல டிவிஷனல் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக, என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கூட இரண்டு ரெகுலர் டிவிஷனல் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். அதைப்போல ரூரல் வொர்க்ஸ்க்கு ஒரு டிவிஷனல் என்ஜினியர் இருக்கிறார். இன்னும் கரும்பு வளர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் சாலைகளைக் கவனிப்பதற்கு, சைதாப்பேட்டையில் ஒரு டிவிஷனல் என்ஜினியர் இருக்கிறார். சைதாப்பேட்டையில் இருக்கும் டி.ஈ. சங்கராபுரம் பகுதிக்கும், கோவை மாவட்டத்திலும் சாலைகளைக் கவனிப்பதற்கு இங்கே இருந்து புறப்பட்டுச் சென்றால் ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்கின்ற நிலைமை ஏற்படுகிறது என்பதைத் தான் நாம் பார்க்கிறோம்.

இந்த நிலைமையை மாற்றி அந்தந்த தலைப்பில் நிதியை ஒதுக்கீடு செய்து அந்தப் பகுதியிலே இருக்கிற பொறியாளர்களே அந்த நிதியை செலவழிக்கின்ற வகையாலும் அந்தச் சாலைகளை கவனித்துக்கொள்கிற முறையிலும் நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி மாற்றி அமைக்கின்ற காரணத்தினால் அரசுக்குப் பெருத்த செலவு ஏற்படாது என்பது என்னுடைய தாழ்மையான எண்ணமாகும்.

இதற்குமாறாக ஒன்றியத்திற்கு ஒரு உதவிப் பொறியாளர் என்ற முறையில் உதவிப் பொறியாளர், இரண்டு பிரிவு அலுவலர்கள் என்ற அளவுக்கும் அதைப்போலவே கோட்டத்திற்கு ஒரு டிவிஷனல் என்ஜினியர் என்ற அளவுக்கும் அதைப்போல மாவட்டத்திற்கு ஒரு மேற்பார்வை பொறியாளர் என்ற அளவுக்கு நிர்வாகத்தை மாற்றி அமைத்தால் நெடுஞ்சாலையைப் பொறுத்து, பாலமாக இருந்தாலும், சிறு பாலமாக இருந்தாலும், எந்த நிதி ஒதுக்கீட்டில் சாலை செப்பனிட வேண்டியதாக இருந்தாலும்,





அவரவர்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள வேலைகளை மிக ஒழுங்கான முறையிலே கவனித்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்த முடியும்.

பல டிவிஷன்களாகவும், பல உதவிப் பொறியாளர்களாகவும் இருக்கிற காரணத்தினால் ஒப்பந்தக்காரர்கள் 3, 4 உதவிப் பொறியாளர்களுடைய எல்லைக்கு உட்பட்டுள்ள இடங்களில் ஒப்பந்த வேலைகளை எடுக்கின்றார்கள். யார், எந்த உதவிப் பொறியாளர் கொஞ்சம் சலுகைக் காட்டுகின்றாரோ அந்த நிலைமை இருக்கிற இடத்தில் அங்கே வேலை துரிதமாக நடைபெறுகிறது. கொஞ்சம் கடுமையாக இருந்து, வேலை ஒழுங்காக வாங்கவேண்டும் என்று கருதக்கூடிய பொறியாளர்கள் இருக்கக்கூடிய இடத்தில் வேலை நடைபெறாமல் இருக்கிற நிலையும் இருக்கிறது.

ஒதுக்கப்பட்ட பணம் ஏன் செலவழிக்கப்படவில்லை என்று மேலே இருக்கிறவர்கள் கேட்கக்கூடும் என்று கருதி, ஒழுங்காக நடந்து கொண்டிருந்த அதிகாரிகளும் ஏதோ வேலை நடைபெற்றால் போதும் என்று அவர்களும் தளர்ந்துபோகின்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்த நிலைமைகளெல்லாம் தவிர்க்கப்பட்டு ஒழுங்கான முறையில் பணம் செலவழிக்கப்படவேண்டும் என்றால், நிர்வாக முறையை மாற்றி அமைக்க வேண்டும்.

பொதுப் பணித் துறையில் கட்டடப் பிரிவுக்கு ஒரு தலைமை பொறியாளர், நீர்ப்பாசனத் துறைக்கு ஒரு தலைமைப் பொறியாளர் இருக்கிறார். பெரிய நீர்ப்பாசன அணைகளுக்கு ஒரு தலைமைப் பொறியாளர், அவர் பெரிய அணைகளைக் கவனித்துக்கொள்வதற்கும், சிறிய பாசனங்கள் அத்தனையும் கவனித்துக் கொள்வதற்கு ஒரு தலைமைப் பொறியாளர் என்றும் அந்த அளவில் நிர்வாகத்தை மாற்றி அமைத்தால் நன்றாக இருக்கும்.

இன்றையதினம் ஒன்றியங்களில் இருக்கின்ற சிறிய குளங்களை எல்லாம் அரசாங்கமே எடுத்து செயல்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டு, 1974-75 ஆம் ஆண்டில் 1½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆனால் இன்னும் இதை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்.

[திரு. நா. நாச்சியப்பன்] [1974 மார்ச் 26

நிலத்திற்கு அடியில் இருக்கின்ற நீர் வளங்களை ஆராய்ந்து கண்டுபிடிக்கும் நில நீர் ஆராய்ச்சியாளர் இன்னும் 20, 25 ஆண்டு காலத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைப்பதுகூட கஷ்டமாக இருக்கும் என்ற தகவலைச் சொல்லி, தண்ணீருக்காக ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கும் விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியிருக் கிறார்கள். உபரி மாநிலம் என்ற நிலை மாறி, பஞ்சத்தை எதிர் நோக்கியிருக்கும் நிலை உருவாகும் என்ற பீதி இப்போது ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமானால், ஏரிகள் எல்லாம் தூர் எடுக்கப்பட வேண்டும்; கிணறுகள் எல்லாம் ஆழப்படுத்தப்பட வேண்டும். மழை நீர் வீணாகாமல் தேங்கி நிற்குமளவிற்கு ஏரி, குளங்களை தூர் எடுத்து, ஆழப்படுத்த வேண்டும். எனவே, புதிய அணைகளைக் கட்டுவதற்கும், ஏரிகளை ஆழப்படுத்துவதற்கும், தூர்ந்திருக்கின்ற ஏரி, குளங்களை தூர் எடுப்பதற்கும் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்திலே ஒரே ஒரு ஓவர்சியர் மட்டும் இருந்தால் போதும். அவர் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மன்றங்களில் 3,000 ரூபாய்க்கு உட்பட்ட வேலைகளை கவனித்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மற்ற எந்த வேலையாக இருந்தாலும்—குடிநீர் கிணறு வெட்டு வதாக இருந்தாலும், ரோடு போடுவதாக இருந்தாலும், ஒன்றியப் பள்ளி கட்டடங்களைக் கட்டுவதாக இருந்தாலும்—உதவிப் பொறியாளரின்கீழ் இரண்டு பிரிவு அலுவலர்களை வைத்து, அந்த வேலையையும், நெடுஞ்சாலைத் துறை வேலையையும் சேர்த்து செய்ய வேண்டுமென்ற முறையில் நடைமுறைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளிக்கூட கட்டடங்கள் கட்டும் வேலை 7 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. இன்னும் முழு அளவில் முடியவில்லை. நான்கு, ஐந்து மேல்நிலை குடிநீர் தொட்டிகள் இன்னும் கட்ட வேண்டி யிருக்கின்றன. இதுவும் 6, 7 ஆண்டுகளாக கிடக்கிறது. இப்படிப் பட்ட கால தாமதங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு நாம் நிர்வாகத்தைக் கொஞ்சம் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 26] [திரு. நா. நாச்சியப்பன்]

சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் துணை மானியத்தின்போது சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து வலதுபுறம் வாய்க்கால் வெட்டுவதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருந் தார்கள். 1974-75-ஆம் ஆண்டிலே 5 இலட்சம் ரூபாய் அடையாள நிதி ஒதுக்கம் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். 1974-75 ஆம் ஆண்டுக்கு 15 இலட்சம் ரூபாய் அடையாள நிதி ஒதுக்கம் என்று செய்திருந்தால் எந்த ஆண்டில் வேலை முடியும் என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. அந்த அளவுக்கு நிதி ஒதுக்கீட்டில் குறைவு இருக் கிறது.

இது ஒரு நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வருகிறது. எங்கள் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, முன்னாள் சட்ட மன்ற துணைத் தலைவராக இருந்த திரு. பார்த்தசாரதி நாயுடு அவர்கள் காலத்திலிருந்து கேட்ட கால்வாய் நம்முடைய அமைச்சரவர்கள் காலத்தில் கிடைத்தது என்ற எண்ணம் அந்தத் தொகுதி மக்களுக்கு ஏற்படுகின்றது என்று கூறி அதை வரவேற்று இந்த வாய்க்கால் என்னுடைய தொகுதியில் ஒரு பகுதியில்தான் வருகிறது என்ற போதிலும் ரிஷிவந்தியம் தொகுதி மக்களுக்கும், கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ள மக்களுக்கும் இது பயன்படு கிறது என்ற காரணத்தால் என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட் டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில், முசுகுந்தா ஆற்றிலிருந்து லக்கநாயக்கன்பட்டிக்குத் தண்ணீர் கொண்டுவரக்கூடிய திட்டம் ஒன்று 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு நான்கு, ஐந்து ஆண்டு காலமாகியும் இன்னும் கிடைக்கப்படாமல் இருக் கிறது. அதையும் கவனித்து, குறையை நிவர்த்திக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே கள்ளக்குறிச்சி வட்டத்தில் இருக்கின்ற ஒரு திட்டம் கோமுகி நதியில் பாலம் கட்ட வேண்டும் என்பது. அந்தப் பாலத்தைக் கட்டி முடித்தால் மலைவாழ் மக்களுக்கு அது பெரிதும் போக்குவரத்திற்கு உதவியாக இருக்கும். ஆகவே, அந்தப் பாலத்தை கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களால் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற ஏழு மானியக் கோரிக்கைகளின்மீது, எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஒட்டியும், ஆளும் கட்சியின் சார்பில் பல அங்கத்தினர்கள் எடுத்துக்கூறிய கருத்துக்களை ஆதரித்தும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

ஆளும் கட்சி அங்கத்தினர்கள் பலர் இந்த மானியத்தின்மீது பணம் ஒதுக்கி இருக்கின்ற முறையை சுட்டிக்காட்டி பல மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினர்கள். உண்மையிலேயே இந்த அறிக்கையைப் பார்க்கும்போது தஞ்சை மாவட்டமும் சென்னை மாநகரும்தான் அதிகமாக பயன்பட்டிருக்கின்றன என்பது தெரியவருகிறது.

குறிப்பாக இந்த அரசில் அதிகப் பிடியுள்ள அமைச்சர்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்த மானியத்தை பொதுப் பணித் துறை மானியம் என்று கூறுவதற்குப் பதிலாக தஞ்சைப் பணித் துறை மானியம் என்று கூறினல் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பல்வேறு மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு முன்னல் பேசிய நண்பர் காஞ்சி அண்ணமலை அவர்கள் கூறினர்கள்; நண்பர் ஆறுமுகம் அவர்கள் கூறினர்கள்; இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் அதைப்பற்றி கூறினர்கள்.

வடக்கில் இருந்து பார்த்தால் வடாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்கள் நிச்சயமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மறைந்த முதலமைச்சர் அண்ணதுரை அவர்கள் இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபோது வடாற்காடு மாவட்டமும், தென்னற்காடு மாவட்டமும் பயனடையும் வகையில் பாலாறு திட்டம் இருக்கிறது, அதை இந்த அரசு நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலாறு அல்ல; அது செய்யாறு. அது முடிந்துவிட்டது.



**திரு. ஜே. ஜேம்ஸ்:** அது வேறு; இது வேறு. பாலாறு பாழாருக மாறக்கூடாது என்று 1957, 1958 இரண்டு ஆண்டுகளிலும் மிக வலியுறுத்தி கூறியிருக்கிறர்கள்.

இந்த அரசு பொறுப்பேற்று 7 ஆண்டுகள் ஆகின்றன. அந்தத் திட்டத்தை சிந்தித்துப் பார்த்ததுகூட உண்டா என்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு காலஞ்சென்ற அண்ணதுரை அவர்கள் இந்தத் திட்டத்திற்கு மைசூர் அரசு இடையூருக இருக்கிறது. மைசூர் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறர்கள். ஆனல் இன்றளவும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. பாலாறு பாழாருகத்தான் இருக்கிறது. இந்த அரசு அதைப்பற்றி சிந்தித்துக்கூட பார்க்கவில்லை. இப்படி பல்வேறு மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.

தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அதைப்பற்றி நான் கூறவேண்டிய தேவை இல்லை. எந்த மானியத்தை எடுத்துக் கொண்டாலும் தென் மாவட்டங்கள் என்ருல் அது ஒரு தனி ரீதியாகத்தான் நடத்தப்பட்டு வருகிறது. ஏனென்ருல் தென் மாவட்டங்களுக்கு ஒரு அமைச்சர் இருக்கிருர். தென் மாவட்டங்களின் நன்மைகளைப் பாதுகாக்கக்கூடிய அந்த அமைச்சர் 'டாக் இன் தி மேஞ்சர் பாலிஸி' என்ற முறையில் தனது சொந்த நலன்களிலேயே அக்கரை செலுத்தி வருகிருர்; மக்கள் நலனை காக்கவேண்டுமென்ற எண்ணம் அவரிடம் இல்லை. ஆகவேதான் தென் மாவட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. குறிப்பாக பொதுப் பணித் துறையில் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் மற்ற மாவட்டங்களை விட உணவு உற்பத்தியில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அங்கே அரிசி படி ஒன்றுக்கு 5 ரூபாய் என்ற அளவிலேதான் விற்றுக் கொண்டிருக்கிறது. ஏழை எளிய மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு, இந்த அரசு நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பாசன ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 26

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் சித்தாறு-பட்டணங்கால் போன்ற பெரிய திட்டங்களை அதாவது பெரிய ஆறுகளின் குறுக்கே அணைகளை எல்லாம் கட்டி, இந்த அரசு வரும்போது அணைகளைக் கட்டுவதற்கு பெரிய ஆறுகள் இல்லை என்று கூறுகின்ற அளவுக்குச் செயல்பட்டுவந்தது. என்பதை அனைவரும் அறிவார்கள்.

ஆனால் பட்டணங்கால் திட்டத்திற்கு 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஒதுக்கினார்களே தவிர, அந்த பணம் முழுவதும் செலவிடப்பட்டதா என்றால் இல்லை. நான்கு இலட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. மீதி செலவிடப்படாததற்குக் காரணம் என்ன? அங்கே வேலைகள் இல்லையா? எந்தக் காரணத்தினால் செலவிடப்படவில்லை என்பது தெரியவில்லை.

பட்டணங்கால் பாசனத்தால் பயனடையக்கூடிய பகுதிகள் முழுவதும் இன்றைக்கு பயிர்கள் கரிந்து போய்க்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, அங்கே 'டெயில் என்ட்' பகுதிக்கு தண்ணீரே போக வழியில்லை. கால்வாய் பழுதடைந்திருக்கிறது; தூர்ந்திருக்கிறது. உடைந்த கரைகள் செப்பனிடப்படவில்லை. சில்ட் எடுக்கப்படவில்லை. பழுதடைந்து அப்படியே கிடக்கிறது. பதினான்கு இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியிருந்தும்கூட, நிர்வாகம் அந்த வேலைகளைக் கவனிக்காததன் காரணமாக மாவட்டத்தில் பெரும் வறட்சி ஏற்பட்டு, நிலங்களில் பயிர்கள் கருகிப்போய் விட்டன என்று சொன்னால் இதற்கு யார் பொறுப்பு என்று கேட்க விரும்புகிறேன். நிலவரி வசூலும் நடக்கிறது. ஒருவேளை அரசாங்கம் இதனை உணர்ந்து, அந்தப் பகுதி நிலங்களுக்கு நிலவரியை ரத்துசெய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காலஞ்சென்ற அண்ணாதுரை அவர்கள் 1967 ஆம் ஆண்டு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் நிற்பாப்பு வலதுகரைக் கால்வாய் சேர்க்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் ஆட்சியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தத் திட்டத்திற்கு 13 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தையே இந்த அரசு கைவிட்டுவிட்டது. நில ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கால்வாய் வெட்டுவதற்கு கல் நாட்டப்பட்டது. அந்தக் கல்லையே இந்த அரசு மாற்றி விட்டது. காரணம் என்ன? அந்தக் கால்வாய் போகிற வழியில்



1974 மார்ச் 26] [திரு. ஜே. ஜேம்ஸ்]

தனியார் ஒருவர் நிலம் பாதிக்கப்பட்டது. அவர் ரெவின்யூ இலாக்காவில் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்தத் திட்டத்தையே கைவிடச் செய்துவிட்டார்கள்.

அடுத்து, நெய்யாறு இடதுகரைக் கால்வாய் சம்பந்தமாக கேரள அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி கேரள அரசு தண்ணீர் தருவதில்லை. இந்த மாமன்றத்திலேயே அதுபற்றிக் கேட்டிருக்கிறோம். கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி அதிகமாகத் தண்ணீர் பெற முயற்சி செய்வதாகச் சொன்னார்கள். அதற்காக இந்த அரசு எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

அதுபோல நெய்யாறு, முல்லையாறு ப்ராஞ்சு சானல்களில் தண்ணீர் வருவதில்லை. ஸ்லூயிஸ் இல்லை. சில்ட் எடுக்கப்படவில்லை. அதனால் நெய்யாறு இடதுகரைக் கால்வாய் பயன் இல்லாமல் இருக்கிறது.

நம் மத்திய அரசாங்கம் நம்மைப் புறக்கணித்துவிட்டது, 6-வது நிதிக் கமிஷனில் தமிழகத்திற்கு அநீதி விளைவிக்கப் பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாமே நமது ஜனங்களுக்கு இவ்வளவு தீமை செய்தால் மத்திய அரசாங்கம் செய்கிற தீமையைச் சொல்ல வாய் எங்கே இருக்கிறது? உங்கள் கண்ணில் உள்ள உத்தரத்தை எடுத்துவிட்டு, மற்றவர்கள் கண்ணில் உள்ள துரும்பை எடுங்கள் என்று பழமொழி. நாம் செய்கின்ற தீமைகளை முதலில் அகற்றியாக வேண்டும். மாவட்டங்களுக்கு மாவட்டம் அரசியல் தாழ்ப்புணர்ச்சி யோடு செயலாற்றக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நீங்கள் 72 கோடி ரூபாய்க்கு மானியம் கேட்கிறீர்கள். ஜனத்தொகை அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 2½ கோடியாவது ஒதுக்கப்பட்டிருக்கவேண்டும். நீங்கள் இதில் கன்னியாகுமரி மாவட்டத்திற்காக எவ்வளவு ஒதுக்கியிருக்கிறீர்கள்?

சில தினங்களுக்கு முன்பு கேட்டபோது ஒவ்வொரு மாவட்டத் திற்கும் அமைச்சர் வந்து கலந்துகொள்வதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றையதினம் பதில்சொல்லும்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 26

போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். அப்படிக் கூறத் தயாரா தெளிவாக, என்று கேட்கிறேன். இனிமேலும் இதுபோல் நடக்கக் கூடாது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல திட்டங்கள் இருக்கின்றன. இனிமேலாவது எஞ்சியிருக்கிற உங்கள் 2 ஆண்டுகாலத்தில் சில திட்டங்களையாவது தொடங்கவேண்டும் என்கிற அடிப்படையில் அந்தத் திட்டங்களை இங்கே கூற விரும்புகிறேன்.

உதாரணமாக, பொய்கை அணை—இதனால் உங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு ராஜாப்பிள்ளை தொகுதிக்குப் பயன் தரக் கூடியது. அதை நிறைவேற்றித் தரவேண்டும்.

இன்னும் மாம்பழத்துறை அணை—இதனால் பத்மநாபபுரம் தொகுதி, கொளச்சல் தொகுதி பயன்பெறும்.

இன்னும் வள்ளியாற்றிலும், பழையாற்றிலும் வீணாகும் நீரை லிப்டு இர்ரிகேஷன் மூலம் பாய்ச்ச ஏற்பாடு செய்ய வேண்டும். முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் எங்கள் பகுதியில் லிப்டு இர்ரிகேஷன் சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கங்களுக்கும் வேலை கிடைக்க இது வாய்ப்பாக இருக்கும். இந்தத் திட்டங்களை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மைனர் இர்ரிகேஷனைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீங்கள் 6 லட்சம் கடந்த ஆண்டு ஒதுக்கினீர்கள். அந்த 6 லட்சத்தில் ஒரு ரூபாய் கூட இதுவரை செலவு செய்யப்படவில்லை. தவறான ஹெட்டில் அந்தப் பணம் ஒதுக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் செலவிட முடியவில்லை என்று சொல்லி அதற்கு விளக்கம், திருத்தம் பெற இத்தனை நாட்களாகிவிட்டன. இந்த நிலை மாறவேண்டும்.

மைனர் இர்ரிகேஷனைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு லட்ச ரூபாய் திட்டம்கூட ஏதாவது உண்டா? இல்லை. அமைச்சர் அவர்கள் அறிக்கையில் "நில்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் திட்டமே இல்லையா என்று கேட்கவிரும்புகிறேன்.



1974 மார்ச் 26] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்தபடியாக, சாலைகள்—பாலங்கள். கன்னியாகுமரி மாவட்டம் வருடத்தில் 10 மாதங்கள் மழை பெய்கிற பகுதி. வாய்க்கால்கள், ஓடைகள், நிறைய இருக்கின்றன. அவற்றைக் கடந்துசெல்ல இயலாத வகையில் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். நான் அடிக்கடி கூறுகிறேன். ஒருசில பாலங்களையாவது உடனடியாகக் கட்டித் தாருங்கள் என்று கழிந்த ஏழு ஆண்டுகளில் ஒருபாலம் கூடக் கட்டித்தரப்படவில்லை.

குறிப்பாக, நாரான் விளை கடவு ஒரு பாலம்—காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே பட்ஜெட்டில் சேர்க்கப்பட்டு, யுத்தத்தின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதுபற்றி நான் முன்னாள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரிடம் கேட்டபோது அவர்'It is under the active consideration of the Government'.

என்று சொன்னார். நான்

'active consideration of the Government'

என்றால் என்ன அர்த்தம்.

'Whether it is to drop the scheme or to execute it'

என்று கேட்டேன். அதற்கு அவர் பதிலளிக்கும்போது

'Active consideration of the Government means that it is always in favour'

என்று கூறினார்கள். ஆனால் என்ன ஆயிற்று? இன்றுவரை நடைபெறவில்லை.

அதுபோல எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தொகுதியில் கணபதியான் கடவு பாலம்—நீண்ட நாட்களாகக் கோரப்பட்டு வந்திருக்கிறது. இன்றுவரை கட்டப்படவில்லை.

அதுபோல பாம்பூர் வாய்க்காலின் குறுக்கே இருந்த பாலத்தை அகலப்படுத்தவேண்டுமென்று 1970 ஆம் ஆண்டே சூப்பிரண்டிங் என்ஜினியரை அந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினேன். அவரும் எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்து அனுப்பினார். இதுவரை நடைபெறவில்லை. முன்பு பஸ் அந்தப் பாலம் வழியாகச் சென்றுகொண்டிருந்தது. அது பழுதடைந்த

காரணத்தினால் சிறிய பஸ்கள் இல்லை—பெரிய பஸ்களை அதில் விடமுடியாது என்று போக்குவரத்து பஸ் ஓடுவதை அதில் நிறுத்திவிட்டார்கள்.

அடுத்து மாண்புமிகு திரு. எ. ஸ்வர்மிதாஸ் அவர்கள் தொகுதியில் குமாரபுர்—பெருஞ்சிலம்பு சாலை நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமல் மோசமான நிலைமையில் இருக்கிறது. அதை உடனடியாகச் செப்பனிட வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து, கோதையாற்றில் அருமனை குலசேகரம் சாலையில் மாரப்பாடியில் ஒரு காஸ்வே கட்டினால் ஆற்றைக் கடந்து செல்வதற்கு வழியாக இருக்கும்.

தொடுவெட்டி ஆலஞ்சோலை சாலையில், கோதையாற்றின் குறுக்கே, சித்தாற்று பாலத்தை அகலப்படுத்தி, ரிப்பேர் செய்து தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதில் எஸ்டேட்டில் இருந்து லாரிகள் வருகின்றன பல பஸ்கள் இந்தப் பாலம் வழியாகச் செல்லுகின்றன. ரப்பர் தோட்டத்தில் இருந்து சாமான்கள் அந்தப் பாலம் வழியாகத்தான் போகவேண்டியிருக்கிறது. இதற்கு சில லட்சம் ரூபாய்தான் ஆகும். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6.00)

அடுத்து கட்டடங்கள். இந்த அறிக்கையை பார்த்தேன். ஆறு தலைப்பில் இர்ரிகேஷன் முதல் மருத்துவம் போன்ற பல்வேறு திட்டங்கள் காணப்படுகின்றன. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாகர்கோவில் ஹெட்குவார்டர்ஸ் ஆஸ்பத்திரிக்காக 1.08 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது போதுமா, இது நியாயம் தானா என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

கன்னியாகுமரி ஜில்லாவில் அரசாங்கத்தை சேர்ந்த பிரைமரி பள்ளிக் கூடங்களும் உயர்நிலை பள்ளிக் கூடங்களும் இருக்கின்றன. பெரும்பாலானவை கொட்டகையில்தான் நடத்தப்படுகின்றன. ஆகவே அரசாங்கம் இப்படிப்பட்ட பள்ளிக் கூடங்களை நல்ல கட்டடங்களில் மாற்ற திட்டங்கள் வகுக்கவேண்டும். அடுத்து அரண்மனி மருத்துவமனை. அதற்கு திட்டமிட்டபடி வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.





அடுத்து, இந்தக் கட்டட இலாகாவில் இடித்து கட்டுகிற முறையினை கைவிடவேண்டும். சில்ரன்ஸ் தியேட்டரை இடித்து அழகான ஒரு கட்டடத்தை கட்டி இருக்கிறார்கள். இது போல் பழைய கட்டடங்களை இடித்து புதிய கட்டடங்களாக கட்டுவதால் பெரும் பணச்சேதம் ஏற்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில்ரன்ஸ் தியேட்டரை கலைவாணர் அரங்கு என்று பெயர் மாற்றி இருக்கிறார்கள். வரும் காலத்தில் கலைவாணர் யார் என்று தெரிந்துகொள்ள முடியாது. ஆகவே அந்த கட்டிடத்திற்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அரங்கு என்று மாற்றினால் அது அரசு கொண்டிருக்கிற எண்ணத்தை நிறைவேற்றியதாக இருக்கும்.

அடுத்து, கூவத்தை பற்றி. இந்த கூவம் திட்டம் 110 லட்சம் ரூபாயில் தொடங்கப்பட்டது. அன்றே சொன்னோம். இந்த திட்டம் நிச்சயமாக பயன் அளிக்காது என்று. ஏன் என்றால் நகரத்தில் உள்ள கழிவு நீரை வெளியே அனுப்ப மார்க்கம் இல்லாமல் இந்த கூவத்தில் தான் வரவேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக கூவம் மணக்காது என்று சொன்னோம். அரசினர் இல்லை, கூவம் மணக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நேப்பியர் பாலத்தைத் தாண்டினால் காரில் செல்லுகின்ற அமைச்சர்களுக்கு வேண்டுமென்றால் கூவத்தின் நாற்றம் தெரியாமல் இருக்கலாம், நமக்கு தெரிகிறது; நாற்றம் சகிக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. இதைப் பற்றி அரசு செய்த விளம்பரத்தால் தினசரி ஆயிரக்கணக்கான மாணவர்கள் பார்க்க வருகிறார்கள். நிச்சயமாக இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று அறிக்கையில் பார்த்தேன். இது பயன் அற்ற திட்டம். இதற்காக அரசு செய்கிற செலவு வீணானது.

அடுத்ததாக, இந்த என்ஜினீரிங் பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்ட் இன்னும் இரண்டாக பைபர்கேட் பண்ணுவதற்கு ஒரு திட்டம் இருப்பதாக பார்த்தேன். ஆனால் அதில் பணியாற்றுகின்ற என்ஜினீயர்களுக்கு ஒரு பெரும் நஷ்டம் அதில் ஏற்பட்டு இருக்கிறது. ஏன் என்றால் இப்போது நாம் வாரியங்களை ஏற்பாடு செய்து இருக்கிறோம். அப்படிப்பட்ட வாரியங்களை நம் விருப்பம் போல் நியமித்து இருக்கிறோம். ஆனால் பி.டபிள்யூ.டி. இலாகாவில் 10—15 ஆண்டுகள் பணியாற்றிய ஜூனியர் என்ஜினீயர் இன்னும்

பிரமோஷன் வாங்க முடியாமல் அப்படியே இருக்கிறார். ஆனால் இந்த வாரியங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு 2, 3 ஆண்டுகள் பணியாற்றியவுடன் பிரமோஷன் வந்து விடுகிறது. இந்த அநீதி ஒழிக்கப்படவேண்டும்.

ஒரு காமன் பூல் எல்லா என்ஜினியர்களுக்கும் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வாரியத்திற்கும் அரசு லெண்ட் பண்ண வேண்டும். இந்தக் காமன் பூலிலிருந்து சினியாரிட்டி அடிப்படையில் பிரமோஷன் கொடுத்தால் அது நிச்சயமாக நியாயமாக இருக்கும், என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதாரணமாக எங்கள் மாவட்டத்தின் மீது இரக்கம் உள்ளவர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அரசாங்கத்தின் கொள்கை கன்னியாகுமரி மாவட்டம் என்று சொன்னால் அது தி.மு.க.-விற்கு வாக்கு அளிக்காதவர்கள் மாவட்டம், அதற்கு இப்படி என்று ஒரு கொள்கை வைத்திருக்கிறார்கள்.

நான் ஒரு வழியை சொல்லுகிறேன். நான் கூறிய திட்டங்களில் ஒரு தொகுதிக்கு ஒன்றாக செய்து தருவீர்களானால் வருகின்ற தேர்தலில் பாருங்கள், உங்கள் எம்.எல்.ஏ. சாதிக்கவில்லை, நாங்கள் செய்திருக்கிறோம் பார்த்தீர்களா, ஆகவே எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டால் நிச்சயமாக ஓட்டு போடுவார்கள், நீங்கள் ஜெயிக்க வழி இருக்கிறது. ஆகவே, உங்களுடைய நன்மையை குறித்தாவது ஒரு தொகுதிக்கு ஒரு திட்டம் என்ற முறையிலாவது நிறைவேற்றி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களை எல்லாம் காலையிலிருந்து விளக்கமாக பேசினார்கள்.

காலையிலிருந்து கருத்து வழங்கிய அத்தனை பேரும் இந்த மானியத்திற்காக ஒதுக்கப்படுகிற பணம் சரிவர செலவு செய்யப்படவேண்டும் என்பதிலும் பொதுமக்களுக்கு அது பயன்பட வேண்டும் என்பதிலும் அதுவும் குறிப்பாக அவரவர்கள்





தங்களுடைய தொகுதியில் இது இது நிறைவேற்றி தரவேண்டும் என்பதிலும் ரொம்ப அக்கறையோடு பேசியிருக்கிறார்கள் என்பதை நான் மனதார வரவேற்கிறேன்.

நான் அறிந்த மட்டில் இந்த ஒரு மானியம் தான் இதுவரையில் அதிக கண்டனக் குரல் இல்லாமல் மாற்றுக் கட்சியினர் எல்லாம் பேசும்படி வந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

அதிலும் இன்றையதினம் நான் ஒரு கொள்கையை கடைப்பிடித்து கடைசி வரை நிறைவேற்றி இருக்கிறேன் என்று பெருமையோடு சொல்லிக்கொள்வேன். அங்கத்தினர்கள் பேசும்போது குறுக்கிடக் கூடாது என்ற கொள்கையினால் தான் உட்கார்ந்தே இருந்தேன். குறுக்கிடாமல் இருந்ததாலேயே பேசிய கருத்துக்கள் எல்லாம் உண்மையான கருத்துக்கள், அரசு ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துக்கள் என்று தயவுசெய்து தவறாக கருதிவிட வேண்டாம். அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும்போது தாராளமாகத் தெரிவிக்கட்டும் என்ற நல்ல நோக்கத்துடன் தான் அங்கத்தினர் பேசும்போது குறுக்கிடாமல் இருந்து வந்தேன்.

பேசிய அங்கத்தினர்கள் அத்தனை பேரும் அவரவர்கள் தொகுதியில் நிறைவேற்ற வேண்டிய பல்வேறு காரியங்களை பற்றி சொன்னார்கள். என் பேச்சில் ஒவ்வொரு அங்கத்தினரும் சொன்ன ஒவ்வொன்றையும் சொல்லி அவர்கள் கருத்திற்குப் பதில் சொல்லுவது என்றால் இரண்டு மூன்று மணி நேரமாகும். அங்கத்தினர்களுக்கு ஒன்றை மட்டும் உறுதி அளிக்கின்றேன்.

இந்தத் துறையை சார்ந்த அதிகாரிகள் நீங்கள் சொன்ன ஒவ்வொரு பிரச்சினை பற்றியும் குறிப்பு எடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். குறிப்பு எடுப்பது மட்டும் அல்ல, அதற்கு மேலே பாலோ ஆப் ஆக்ஷன் இருக்க வேண்டும் என்றும் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு திட்டமும் பரிசீலிக்கப்பட்டு அவற்றினை அரசாங்கம் கவனத்திற்கு கொண்டுவரப்படும் என்று மாற்றுக் கட்சி நண்பர்களுக்கும் . . .

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** தலைவர் அவர்களே, இங்கே எல்லா உறுப்பினர்களும் பேச வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. சில உறுப்பினர்கள் தான் தங்கள் கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். சிலர் சொல்லாமலும் இருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இங்கு அமைச்சர் குறிப்பிடுகின்ற மாற்றுக் கட்சி எது என்று தெரியவில்லை. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று தான் இருக்கிறதே தவிர, மாற்றுக்கட்சி என்று எதுவுமில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எதிர்க் கட்சியினரைத் தான் குறிப்பிடுகிறேன். திரு. சுவாமிதாஸ், தான் பேச வாய்ப்பு தரப்படவில்லை, தன்னுடைய கருத்தில் கொண்டுள்ள திட்டங்கள் எல்லாம் விடுபட்டுவிடுமோ என்ற வகையில் குறிப்பிட்டார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு உறுதி மொழி அளிக்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் தொகுதிக்கு ஒரு வேலையாவது நடக்க ஏற்பாடு செய்கின்றேன். அதற்கு நேரிடையாக ஆங்காங்கே வருகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நண்பர் குருசாமி என்று எண்ணுகிறேன். மாவட்டங்கள் தோறும் அதிகாரிகளை அழைத்து வந்து மாநாடுகள் நடத்த வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். அப்படி மாவட்டம் தோறும் திட்டங்களைப் பரிசீலிக்க அதிகாரிகள் வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கே பேச வாய்ப்பு இல்லாத அங்கத்தினர்கள் அந்த நேரத்தில் கருத்து தெரிவித்தால் அவைகளும் அரசின் பரிசீலனைக்கு உட்படும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்று காலை விவாதத்தைத் துவக்கி வைத்த திரு. ஜப்பார் அவர்கள் இங்கே இல்லை. இருந்தாலும் நண்பர் திரு. லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள். எனவே, நான் சொல்லுவது ஜப்பார் அவர்களுக்குச் சொல்லுவதாகப் பொருந்தும். இந்தத் துறை அதிகாரிகள் மக்களுக்காகத்தான் இருக்கிறார்கள் என்று நம்ப வேண்டும். அதிகாரிகளுக்காக மக்களா, மக்களுக்காக அதிகாரிகளா என்று பேச்சின் துவக்கத்தில் சொல்லி இவைகள் எல்லாம் நிறைவேற்றப்படாதவை என்று சொன்னார்கள்.





அவர்கள் சொன்ன திட்டங்களையெல்லாம் நான் பரிசீலித்துப் பார்த்தேன், அவையெல்லாம் ஏற்கனவே அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற சில திட்டங்களைத்தான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்ட திட்டத்திலே நொய்யலாற்று பாசனத் திட்டம்பற்றி வலியுறுத்திச் சொன்னார்கள். அது அரசின் கவனத்தில் இருக்கிறது. அரசாங்கத்திற்கு முறைப்படி வந்து சேருகிற நேரத்திலே அது பரிசீலிக்கப்பட்டு, சாதகமான முடிவாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் பேசவில்லையென்று சொன்னாலும்கூட—அவர்கள் இப்பொழுதுகூட கையைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்—அவர்கள் அக்கறை காட்டுகிற ஆண்டியப்பனூர் திட்டம்—அதனுடைய பெயர் ஆண்டியப்பனூராக இருந்தாலும்கூட—அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது, அதுவும் சாதகமாக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலங்காயம்-போளூருக்கு இடையே ஒரு சாலை போட வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி ஆய்வு நடத்தி முடிந்தால் மேற்கொள்ளப்படும்.

திருக்கோவிலூரில் பாதிக்கப்பட்ட, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அணையை—அந்த அணையே வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது—மீண்டும் புதுப்பித்துக் கட்டவேண்டுமென்று ஏ. எஸ். குமாரசாமி அவர்கள் சொன்னார்கள். தாற்காலிகமாக ஒரு தடுப்புச் சுவர் அங்கே கட்டப்பட்டாலும்கூட அந்த அணையைக் கட்டவேண்டுமென்ற அடிப்படையிலே 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் ஒரு திட்டத்தை தீட்டி அரசாங்கம் ஆய்வுகளைச் செய்து மத்திய அரசினுடைய அனுமதிக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது, அது வந்ததற்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

பொதுவாக வெள்ள நிவாரண வேலைகள் எல்லாம் சரிவர நடக்கவில்லை என்று திரு. பொன்சொக்கலிங்கம் போன்ற உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்தார்கள். நான் உண்மை நிலையைத் தெரிவிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

வெள்ளத்தால் தமிழ்நாடு பாதிக்கப்பட்ட நேரத்திலே மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்து 30 கோடிக்குப் பக்கமாக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தோம். அங்கிருந்து அவர்கள் ஒரு அதிகாரியைப் போட்டு ஒரு குழுவை இங்கே அனுப்பி அந்தக் குழுவும் தமிழ்நாட்டிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எல்லாம் சென்று பார்த்துவிட்டு 11 கோடி சொச்சம் என்று நினைக்கிறேன், நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 13 கோடி என்று சொல்கிறார்கள், நினைவில்லை எனக்கு, தரவேண்டுமென்று அவர்கள் சிபாரிசு செய்து மத்திய அரசாங்கம் அதைக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டது. ஆகவே 13 கோடி ரூபாய் கிடைக்கும் என்று நம்பிக்கையோடு நாம் பல திட்டங்களை ஏற்றுக்கொண்டோம்.

ஆனால், மத்திய அரசாங்கம் இதுவரையில் கொடுத்தது 4 கோடி தான். மிச்சப் பணம் கொடுக்கப்படவில்லை, இனிமேல் அது வருமா என்றால் நிச்சயமாக வராது என்றுதான் தெரிகிறது. நாம் தரவேண்டுமென்று வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் வெள்ள நிவாரண வேலைகள் செய்யப்படாமல் தாமதப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்பொழுது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருந்த சுடுகாட்டை, இடுகாட்டை—அது குளமாக இருந்தது—யாரோ பட்டா செய்துகொண்டு விட்டார்கள் 56 சென்ட் என்று தெரிவித்தார்கள். என்னிடத்திலே முழு விவரமும் இல்லை. அவர்கள் வருவாய்த் துறை மானியத்தின்போது பேசினால் பதில் சேகரித்துத் தருவார்கள். பின்னாலே வருவாய்த்துறை வாரியம் வருகிறது என்று நினைத்து முன்னாலேயே சொல்லிவிடலாம், அவர்கள் தகவல் காட்டும் என்று சொல்லிவிட்டாரோ என்னவோ தெரியவில்லை. ஏதோ தாசில்தாருக்குச் சொந்தக்காரர் பட்டா செய்துகொண்டு விட்டார் என்றும் அதை ஆர்.டி.ஓ. 20 சென்டாவது திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டும் பயனில்லை என்றும் சொன்னார்கள். ஆர்.டி.ஓ. கெஞ்சிக் கேட்டாரா என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை கெஞ்சிக் கேட்டிருந்தால் நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன், அவர் ஆர்.டி.ஓ.-வாக இருக்க லாயக்கில்லாதவர். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அவருக்கே அதை ரத்து செய்கிற



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பெற்ற ஆர்.டி.ஓ.-வே தாசில்தாரைக் கெஞ்சிக் கேட்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டது தவறு என்று அவரே கருதுகிற சூழ்நிலையில் அவருக்கு ரத்து செய்கிற அதிகாரம் இருக்கிற நிலையில் அவர் கெஞ்சி கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முழுவிவரங்களும் என்னிடத்திலே இல்லை . . .

**திரு. குழ. செல்லையா :** அந்த உத்திரவை ரத்துசெய்ய அவருக்கு அதிகாரம் இருந்தாலும் மேலே இருக்கிறவர்களின் அச்சுறுத்தல் காரணமாக அவர் செய்யாமல் இருக்கிறார், மேலே இருக்கிறவர்கள் அவரை எதுவும் செய்வார்களோ என்று பயந்து கொண்டிருந்தால் அவர் எப்படி ரத்து செய்ய முடியும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இப்படி எங்காவது ஒன்று நடக்கும்போது மேலே இருக்கிறவர்கள் அச்சுறுத்துகிறார்கள், அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்வது வாடிக்கையாக இருக்கிறது. நான் அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஒருவேளை அப்படி இருக்குமானால் அரசுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு கவனிக்கும்.

வறட்சி நிவாரண வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன, பேசி ஓய்ந்துவிட்டது. அதிலே ஊழல் என்ற வார்த்தையைப் போடா விட்டால் தன்னுடைய பேச்சுக்கு சிகரம் வைத்ததுபோல இருக்காது என்று நினைத்தோ என்னவோ திரு. குழ. செல்லையா அவர்கள் ஊழல் என்று சொன்னார்கள். அந்தக் கடினமான வார்த்தையைப் பலமுறைகள் பயன்படுத்தியதால் அந்த வார்த்தை மிகச் சாதாரணமான வார்த்தையாகிவிட்டது.

450 கோடி ரூபாய் 460 கோடி ரூபாய் செலவுசெய்கின்ற ஒரு அரசாங்கத்தில் எங்காவது ஒரு சிறு தவறு நடக்கலாம். நான் இப்படிச் சொல்வதாலேயே அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார் என்று சில பத்திரிகைகளிலே செய்தி வரும், ஏனென்றால் இப்பொழுது பத்திரிகைகளுடைய நிலைமை அப்படித் தான் இருக்கிறது. எங்காவது சிறு தவறு இருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகின்ற நிலையில் அதை ஊழல் என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

பல உறுப்பினர்கள் பல கருத்துக்களை தொகுதியிலே செய்யப் படவேண்டிய காரியங்களைப்பற்றி நிறையப் பேசியிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னேன், அவையெல்லாம் முறைப்படி பரிசீலிக்கப்படும் என்று.

திரு. அழகிரிசாமி அவர்கள் கிரியாறு திட்டம் நிறைவேற்றப் படவேண்டுமென்று சொன்னார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப் படுவதற்கு இயலாது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. 1955-ஆம் ஆண்டிலேயே அந்தத் திட்டம் இயலாது, செய்ய முடியாது என்று முடிவு செய்துவிட்டார்கள். காரணம் பம்பையாறு என்று கேரள அரசு மின் உற்பத்தி செய்வதற்கு ஒரு திட்டம் போட்டு இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே 1955-ஆம் ஆண்டிலேயே அது தள்ளப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் திட்டம் வருவதற்கான சாத்தியக் கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனாமுக்குச் சொந்தமான குளங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஜமீனுக்கும், இனாமுக்கும் சொந்தமான குளங்களை அரசாங்கம் எடுத்து ஸ்டாண்டர்டைஸ் செய்யப் போகிறது என்று சொல்லியிருக் கிறார்கள். அதற்காகப் பணமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேலைகள் விரைவிலே துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுராந்தகம் உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும் பொழுது மதுராந்தகம் ஏரியைத் தூர்வாருவதைப் பற்றிப் பெரிய பிரச்னையாகக் கிளப்பினார்கள். அப்பொழுது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் ஆகா பணம் ஒதுக்கியிருக்கிறார்கள், வேலையே நடக்கவில்லை என்று நினைத்துக்கொண்டார்கள். மதுராந்தகம் ஏரிக்காக 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு தூர்வாரப் பட்டிருக்கிறது. அது போதாது. 5லட்சம் செலவு செய்திருக் கிறோம். இன்னும் 43 லட்சம் செலவு செய்தால்தான் முழு அளவிற்கு தூர்வார முடியும் என்ற கணக்கு எடுக்கப்பட்டு அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

கல்லார் திட்டம்பற்றிச் சொன்னார்கள். அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. வருவாய்த் துறையிலிருந்து வந்தால் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் பேசும்பொழுது காஞ்சிபுரத்தைச் சுற்றியிருக்கிற திட்டங்களையெல்லாம் மனப்பாடம் செய்வதுபோல் சொல்லி ஒரு பாட்டே பாடுவதைப் போல சொன்னார்கள். அவையெல்லாம் பரிசீலிக்கப்படும்.

திரு. கார்த்திசன் அவர்கள் பேசும்பொழுது ஆலத்துறையாறு என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது விரைவிலே நிறைவேற்ற இருக்கிறோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குருசாமி அவர்கள் பேசும் பொழுது சைக்கில் அலவன்ஸ் ரோடு இன்ஸ்பெக்டர்களுக்கு 4 ரூபாய் போதாது என்று சொன்னார்கள். ஏற்கனவே 5 ரூபாயாக ஆக்குவது என்று பே கமிஷன் சிபாரிசின்படியே கொடுத்து விடுவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது, அதை ஒத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்னொரு கருத்தும் பேசப்பட்டது. ஜல்லிகளைச் சேகரித்து விடுகிறார்கள், ஆனால் அவைகளைப் பரப்புவதற்கு காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அதற்கான காரணம் என்ன என்று கண்டுபிடிக்கப்பட்டு இப்பொழுது புதிய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. ஜல்லிகள் சேகரிப்பதற்கு ஒரு காண்டிராக்டர் என்றோ, அல்லது பரப்புவதற்கு என்று தனியாக ஒரு காண்டிராக்டர் என்றோ இருக்கக்கூடாது. ஒரே காண்டி ராக்டர் மூலம் கூடியவரையில் செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஜல்லிகளை அதிகமாகச் சேர்த்து வைத்துக் காக்க வைக்கக் கூடாது, சேகரித்த உடனேயே பரப்ப வேண்டு மென்று புது உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இன்னொரு கருத்தை எல்லோரும் குறிப்பிட்டார்கள். காண்டிராக்டர்களே தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். காண்டிராக்டர்களே தேவையில்லை என்று, ஏதோ ஒதுக்குகின்ற பணம் காண்டிராக்டர்களுக்கே போய்

விடுகிறது என்பதைப்போல் சிலர் கருத்து தெரிவித்தது சரியல்ல. அதற்காக காண்டிராக்டர்கள் தவறே செய்யவில்லையா என்றால் செய்யக்கூடும், அவர்களுக்கு லாபம் வரவில்லையா என்றால் வரக் கூடும். ஆனால் நாம், அரசாங்கத்தில் எடுத்துச் செய்யும்பொழுது பல சிக்கல்கள் மூண்டு, எவ்வளவு செலவாகும் என்பதை அங்கத்தினர்கள் கூர்ந்து பார்த்தால் புரியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, இடையிலே ஒரு திருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன், மதுராந்தகம் ஏரிக்கு செலவு செய்யப்பட்டது ஐந்து இலட்சம் அல்ல, இரண்டு லட்சம் ரூபாய் என்று தகவல் வருகிறது, எனவே ஐந்து இலட்சம் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு கருத்து கூறப்பட்டது. நூறு ஏக்கருக்குக் கீழே பாசனமுள்ள ஏரிகளை ஊராட்சி மன்றமோ, ஊராட்சி ஒன்றியங்களோதான் செய்ய வேண்டும், அதற்குமேல் உள்ளவைகளை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வரவு-செலவுத் திட்டத்திலேயும் சொன்னோம். ஏ.ஆர்.சி.-யிலும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அரசாங்கம் அதை ஒத்துக் கொண்டு அந்த சிபார்சுகள் புத்தக வடிவில் வைக்கப்பட்டிருக் கிறது.

இதுவரையில் 200 ஏக்கர்களுக்கு மேலே சாகுபடியாகும் ஏரிகளை, பாசனத்திற்கான ஏரிகளைத் தான் பொதுப்பணித் துறை ஏற்றுச் செய்து வந்தது. அதற்குக் கீழே இருப்பவைகளை ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் செய்து வந்தன.

ஆனால், இப்பொழுது 100 ஏக்கர்களுக்கு மேல் பாசனமுள்ள ஏரிகளை எடுத்துக்கொள்வதால் ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பெரிய பளுவைக் குறைத்திருக் கிறோம். இதில் இன்னொரு விசேஷமான அம்சம் என்னவென்றால், முன்பு 200 ஏக்கர் வரை பாசனமுள்ள ஏரிக்கு எவ்வளவு பணம் கொடுத்தோமோ, அந்தப் பணத்தைக் குறைக்காமல் அப்படியே நாம் கொடுக்கிறோம். அந்தப் பணத்தைக்கொண்டு 100 ஏக்கர்





வரை பாசனமுள்ள ஏரிகளையும், கண்மாய்களையும் சீர்செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கலைவாணர் அரங்கம் பற்றிக் கருத்து தெரி விக்கப்பட்டது. இடிக்கப்பட்டதற்கு எவ்வளவு, கட்டியதற்கு செலவு எவ்வளவு, தண்டச் செலவு எவ்வளவு, எதற்காக அங்கே கட்டினீர்கள், தனியாக இன்னொரு இடத்திலே கட்டியிருக்கக் கூடாதா என்ற கருத்துக்களையெல்லாம் தெரிவித்தார்கள்.

கலைவாணர் அரங்கத்திற்குச் செலவழிக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதுகூட முக்கியமல்ல. ஆனால் ஏற்கனவே ஒரு முறை பேசியபொழுது கலைவாணர் அரங்கத்திற்குச் செலவழிக்கப் பட்டது, அதைக் கட்டுவதற்காக 50 இலட்சம் ரூபாய் ஆயிற்று என்று பேசினார்கள். 50 இலட்சம் ரூபாய் ஆகவில்லை என்பதையும் திறப்பு விழாவிலே முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்கள்.

ஏற்கனவேயிருந்த அரங்கத்தில் எவ்வளவு பேர் உட்கார்ந்தார்களோ, அவ்வளவு பேர்தானே இப்பொழுதும் உட்காருகிறார்கள் என்று திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சரியல்ல. ஏற்கனவே இருந்த அரங்கத்தில் உட்காரக்கூடிய 'சீட்டிங் கெபாசிட்டி' 670 ஆகும். ஆனால் இப்பொழுது இருக்கின்ற புதிய அரங்கத்தில் 'சீட்டிங் கெபாசிட்டி' 1,040 ஆகும். இப்படிப்பட்ட ஒரு அரங்கம் தமிழ் நாட்டில், அதுவும் தலைநகரத்தில் தேவை என்றுதான் செய்தோம்.

அரசாங்கமே புதிய கட்டிடத்தைக் கட்டுவதால் இங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். இது தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய ஒன்றுதான் என்று எடுத்துக் கொண்டிருக்கலாம். நல்ல அரங்கம் ஒன்று இருக்க வேண்டும், அத்தகைய அரங்கம் அரசு சார்பில் தேவை என்று முடிவெடுத்துக் கட்டப்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைவாணர் அரங்கத்திற்குக் கலைவாணர் என். எஸ். கே அரங்கம் என்ற பெயரை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். கலைவாணரை, எதிர்காலத்திலே என்.எஸ்.கே. என்று சொன்னால்

தான் நாடு அறியும் என்ற நிலையில் நாடு இல்லை, உறுதியாக, கலைவாணர் என்றாலே எதிர்காலத்திலே நினைவுகொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், கலைவாணர் சார்பாகக் கட்டப்பட வேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராயபேதம் இருக்க முடியாது. ஆனால் ஏற்கனவே இருந்த ஒரு அரங்கத்தை ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து இடித்துவிட்டு, அதேயிடத்தில் கட்ட வேண்டுமென்ற நிலையிருக்கிறதா? அந்த அரங்கத்திற்குப் பதிலாக வேறே ஏதாவது ஒரு இடத்திலே கட்டக் கூடாதா? இருக்கின்ற அரங்கத்தை இடிப்பதைப் பார்த்த நேரத்தில் அதைப் பார்ப்பதற்கே விரசமாக இருந்தது. நல்ல கட்டிடத்தை இடிப்பதைவிட வேறொரு கட்டிடத்தை, புதிய கட்டிடத்தைக் கட்டலாமே. இந்தக் கட்டிடத்தை வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாமே. இந்தக் கட்டிடத்தை இடிக்க வேண்டுமென்ற அவ்வளவு மோசமாக இருந்ததா என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அந்தக் கட்டிடம் மோசமாக இருந்தது என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் அந்தக் கட்டிடம் சட்ட மன்றம் நடத்துவதற்காக அப்பொழுது கட்டப்பட்டது. ஆனால் சட்ட மன்றத்தை நடத்துவதற்கு நாம் கோட்டைக்கே திரும்பவும் வந்துவிட்டோம். அந்த அரங்கத்தை வேறு நல்லமுறையில் பயன்படுத்த வேண்டுமென்றால் நாடகம், கலையரங்கம், சினிமா போன்றவற்றை நடத்த வேண்டும். இப்படிப்பட்ட காட்சிகளை நடத்துவதற்கு ஏற்ற அரங்கமாக அது இல்லாததால், வசதியுள்ள அரங்கமாக இருக்க வேண்டுமென்று கருதி அதை மாற்றினோமே தவிர, வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்களும், மற்ற கன்னியாகுமரி மாவட்டத்து உறுப்பினர்களும் பேசும்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எதையுமே செய்யவில்லை, கன்னியாகுமரி மாவட்டத்தில் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். தொகுதிக்கு ஒரு வேலையாகச் செய்தால் அடுத்தமுறை ஏழு இடங்களும் உங்களுக்குக் கிடைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக்



கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டியிருக்கிறார்கள். ஒரு வேளை வேலை கிடைக்கும் என்ற கருத்தில் சொன்னார்களோ என்னவோ தெரியவில்லை.

நான் ஒரு நீண்ட பட்டியலே வைத்திருக்கிறேன், கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வளவு, எவ்வளவு எது எதற்குச் செலவழிக்கப் பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு நீண்ட பட்டியலே வைத்திருக்கிறேன்.

எஸ்.எம்.இ.பி.க்குப் பணம் ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு 73-74-இல் ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டு 'நில்' என்று போடப்பட்டிருக்கிறதே என்று சொன்னார்கள். அதைப்பற்றிய தகவலை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். ஏதாவது வேலைகள் விட்டுப் போயிருந்தால் யோசிக்கலாம், தொடங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நிறைய செலவழித்திருக்கிறோம், இல்லையென்று சொல்லிவிட முடியாது. ஒருவேளை அங்கத்தினர்கள் விரும்பினால் அந்தப் பட்டியலைப் படிப்பதற்கும் தயாராக இருக்கிறேன்.

இன்றைய பேச்சில் அனைவரும் பேசிய கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, நான் பொதுவாக அரசின் தரப்பில் சில கொள்கைகளைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். அதிலே ஆரம்பமாக, நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில் நடந்த பேச்சுவார்த்தைகள், ஏற்பட்ட முடிவுகள் அதைப்பற்றி அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் 1970-ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டதற்குப் பிறகு மேல் நீராறு என்ற திட்டத்தில் 3 மைல் நீளமுள்ள டன்னலை வெட்டி, மலையைக் குடைந்து வேறு வழியாகத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டும். பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை இதுபோன்ற தாலுக்காக்களில் மேலும் பாசன வசதியை அதிகப்படுத்துவதற்காக இந்தத் திட்டம் வகுக்கப்பட்டது. இந்தத் திட்டம் வகுக்கப்பட்ட பிறகு இந்த டன்னலைக் குடைந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு அங்கத்தினர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன், அதைப்போய் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். மிகவும் அற்புதமாக பொறியாளர்கள் அந்த டன்னலை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கிடு) திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், அனுப்பினால் பார்க்கலாம் என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி யோசிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் விரும்பினால் அதைப் போய்ப் பார்ப்பதற்குகூட ஏற்பாடு செய்யலாம், அதற்கு யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே அந்த டன்னல் வெட்டப்படுகிறது. குறுக்கே அணை கட்ட வேண்டுமென்பதிலே ஒரு சிறிய தகராறு இருந்தது. காரணம் என்ன வென்றால், பாண்டியாறு-புன்னம்புழா பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கும்வரையில் இதுவும் தீர்க்கப்படாமல் இருந்து வந்தது. இப்பொழுது அது தீர்ந்துவிட்ட பிறகு, இதில் அணை கட்டுவதற்குக் கேரள அரசாங்கம் ஒத்துக்கொண்டுவிட்டது. அப்படி ஒத்துக்கொண்ட பிறகு, நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன், அந்த 3 மைல் நீளமுள்ள டன்னல் வேலைகள் அநேகமாக இந்த ஜுன் மாதத்திற்குள் முடிந்துவிடும், ஜுலை மாதம் 15-ம் தேதிக்குள்ளாக அந்த டன்னல் வழியாகத் தண்ணீர் திருப்பப்பட்டு, பரம்பிக்குளம்-ஆளியாற்றுக்கு விடப்படும் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையில் பணியாற்றுகின்ற அத்தனை பொறியாளர்களையும் அவர்களுடைய திறமைக்காக மனதாரப் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டில் பொறியாளர்கள் செய்துள்ள ஒவ்வொரு வேலையையும் சொல்லிச் சொல்லிப் பாராட்டலாம்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் போய்விட்டு வருவதற்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்யும் பொறுப்பை அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கத்தினர்களை அழைத்துச் செல்வதாக உறுதியளிக்கிறார்கள். நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. அங்கே போய்ப் பார்க்க வேண்டும். டன்னலில் ஒருமுறை தண்ணீர் விடப்பட்டால் பிறகு பார்க்க முடியாது. இப்பொழுது விளக்குகள் இருக்கின்றன, இரயில் பாதை போடப்பட்டு குடைந்து





கொண்டிருக்கிறார்கள், இரயில் பாதையில் ஏறிப்போய் பார்க்கலாம், நான், கடைசி வரையிலே போய்ப் பார்த்துவிட்டு வந்தேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : எதிர்க்கட்சித் தலைவர்களை டன்னலில் விட்டுவிட்டு தண்ணீரைத் திறந்துவிடக் கூடாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு எங்கள் மேல் அவ்வளவு கோபம் வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மறந்தும் அந்தத் தவறைச் செய்ய மாட்டோம். தைரியமாகப் பார்க்கலாம். மேல் நீராறைப் பொறுத்தவரையில் இது.

அடுத்தபடியாக, கீழ் நீராறு அணை கட்ட டன்னல் செய்ய வேண்டி வருகிறது. கீழ்நீராறு டன்னல்தான் இதுவரையில் செய்துள்ள டன்னல் வேலைகளில் நீளமானது. 5 மைல் நீளம் பாறையைக் குடைந்து வர வேண்டும். அதையும் தமிழகப் பொறியாளர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி திருவனந்தபுரத்தில் பேச்சு வார்த்தை நடத்தி அவர்களும் ஒத்துக் கொண்டு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அது விரைவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 6.30)

பரம்பிக்குளம்-ஆளியாறு பொறுத்தவரை இதுவரை 2.5 லட்சம் ஏக்கர் பாசனத்திற்கு நீர் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஒரே ஆண்டில் 2.5 லட்சம் ஏக்கருக்கும் கொடுக்கப்படுவதில்லை. தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக ஒரு ஆண்டு 1.25 லட்சம் ஏக்கருக்கும் அடுத்த ஆண்டு மீதம் உள்ள 1.25 லட்சம் ஏக்கருக்கும் கடந்த பத்தாண்டு காலமாகத் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படி தண்ணீர் மாற்றாண்டு கொடுப்பதன் காரணமாக அந்தப் பகுதியிலுள்ள கிணற்று நீர் உயர்ந்து வருவதாகச் சொல்லுகிறார்கள். இப்படி மாற்றாண்டு கொடுப்பதே போதும் என்று எல்லோரும் கருதுகிறார்கள். பொறியாளரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

ஐயாயிரம் ஏக்கரா (4900 ஏக்கர் என்று கருதுகிறேன்) இது வரை பாசன வசதியில் சேர்க்கப்படவில்லை. ஆயக்கட்டில் சேர்க்கப்பட்ட இடத்திற்கு இடையிடையே பாக்கட் பாக்கட்டாக பூமிகள் விடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் சேர்த்துக் கொள்ள முடியும் என்று தலைமைப் பொறியாளர் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார். அரசு ஆணை பிறப்பித்து விட்டது. அந்த ஐயாயிரம் ஏக்கராவும் இந்த ஆண்டு பாசன வசதி பெறும்.

இப்போது இருக்கும் தண்ணீரை வைத்துக் கொண்டே மேற்கொண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஏக்கர் பாசன வசதி பெற முடியும் என்று தலைமைப் பொறியாளர் அரசுக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். அதைப் பற்றித் தீவிரமாக ஆராய வேண்டுமென்று தலைமைப் பொறியாளருக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அது நிறைவேற்றப்படும்.

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் பகுதிகளைப் பொறுத்து தலைமைப் பொறியாளராகப் பணியாற்றுகின்ற திரு. வேதநாயகம் அவர்கள் இன்னொரு திட்டத்தை அரசின் கையில் கொடுத்திருக்கிறார்கள். அரசு அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

'விண்ட் மில்' என்று சொல்வார்கள். காற்றினால் சுழலுகின்ற இயந்திரம். காற்றின் சக்தியை வீணாக்காமல், பெரிய சக்கரங்களை வைத்து காற்றின் வேகத்தில் சுழலச் செய்து கிணற்று நீரை மேலே கொண்டு வருவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டு நடைமுறைக்கு வரும் என்று ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பரிட்சார்த்தமாக இரண்டு காற்றாடிகள் (விண்ட் மில்) வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். டில்லியில் சி.எஸ்.ஐ.ஆர்-ல் செய்து வருகிறார்கள். இது சாத்தியக்கூறானதுதான் என்று பல பொறியாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் கூறியிருக்கிறார்கள். எனவே, இந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. எந்த மாதத்தில் காற்று வேகமாக அடிக்கிறது என்றால் கோடை மாதங்களில்தான் காற்று வேகமாக அடிக்கிறது. ஆகவே, இது வருமேயானால் கிணற்று நீரை இறைக்க வசதியாக இருக்கும். அந்த இயந்திரத்தைப் பரிட்சார்த்தமாகப் போட்டுப் பார்க்கலாம் என்ற குறிப்பும் தரப்பட்டிருக்கிறது.



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

பாண்டியாறு-புன்னம்புழா பற்றி எல்லோரும் பேசினார்கள். மாண்புமிகு திரு. குமாரசாமி அவர்களும் பேசினார்கள். 1965-ம் ஆண்டு முன்பு இருந்த அரசால் ஒத்துக்கொள்ளப்பட்ட திட்டம், ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தைக் கேரள அரசாங்கம் வலியுறுத்தி வந்தது. பாண்டியாறு—புனம்புழா திட்டத்தின்கீழ் மின்சாரத்தை உற்பத்தி செய்து கொண்டு 14 டி.எம்.சி. தண்ணீரைக் கேரள அரசாங்கத்திற்கு விட வேண்டும்.

கேரளத்திற்குத் தண்ணீரை விடும்போது சோழாட்டிபுழா என்ற இடத்தில் மின்நிலையம் வைப்பார்கள். அதற்குத் தமிழக அரசு பாதிச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும். உற்பத்தியாகிற மின்சாரத்தில் தமிழக அரசுக்குப் பாதிப் பங்கு உண்டு. இது ஏற்கனவே இருந்த அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இருக்கிறது.

இப்போது முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து—14 டி.எம்.சி. தண்ணீரைச் சோழாட்டிபுழாவுக்குத் திருப்பிவிடுவதில் 9 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொடுங்கள். பஞ்சப் பிரதேசம் போல் காய்ந்த பூமியாக இருக்கும் கோவை மாவட்டத்திற்கு அந்தத் தண்ணீரைக் கொடுத்தால் அந்தப் பகுதியில் பயிராகக் கூடிய நெல்லில் பங்கு வேண்டுமென்றால், கேரளாவிற்குத் தருகிறோம் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள்.

அவர்கள் சோழாட்டிபுழா மின் நிலையம் பாதிக்கப்பட்டு விடும் என்று சொன்னார்கள். முதலமைச்சரவர்கள் சொன்னார்கள் —9 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்காவிட்டாலும் 5 டி.எம்.சி. தண்ணீராவது கொடுங்கள். மிச்சம் உள்ளதை சோழாட்டிபுழாவிற்கு விட்டுவிடுகிறோம். மின்சக்தி உற்பத்தி செய்யுங்கள் என்று சொன்னார்கள். அது எங்களுக்கு ஒத்து வராது, கீழ் இருக்கும் தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் போதாது என்று அவர்கள் தெரிவித்தார்கள். தண்ணீர் போதும் என்ற கணக்கை நாங்கள் தெரிவித்தோம்.

அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்தத் தண்ணீரைக் கொண்டு அந்தப் பகுதியிலுள்ள பூமிகளை பாசன வசதி உள்ள பூமியாக மாற்றப் போகிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் இனிமேல் மாற்ற வேண்டும் ; ஏற்கனவே பாசன வசதிக்குத்

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

தருந்த பூமியாக இருக்கும் கோவை மாவட்டத்து பூமியை நஞ்சை நிலமாக மாற்றி நெல் உற்பத்தி செய்து நீங்கள் கொடுக்கிற தண்ணீருக்கு ஏற்ற அளவு நெல் கொடுக்கிறோம் என்று தெரிவித்தோம்.

அவர்கள் சொன்ன கருத்து—மின்சார உற்பத்தி குறையும் என்றார்கள். மாற்றுக் கருத்தாக சோழாட்டிபுழாவில் தமிழக அரசுக்குச் சொந்தமாக இருக்கும் பாத்தியதையை, உரிமையை விட்டுக் கொடுத்து விடுகிறோம்; நீங்களே முழு மின்சாரத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தோம்.

9 டி.எம்.சி. தண்ணீரைத் திருப்பி அனுப்ப மூன்று தேக்கங்கள் கட்ட வேண்டி வரும். அந்த மூன்று தேக்கங்களையும் தமிழக அரசு தன் சொந்தச் செலவில் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொன்னோம்.

ஆற்று நீர் கடலில் கலக்கிற காரணத்தால்தான் கடலரிப்பு இல்லாமல் இருக்கிறது. இல்லாவிட்டால் கடலரிப்பு இருக்குமென்று தெரிவித்தார்கள். கடலரிப்புக்குச் தடுப்புச் சுவர் கட்டத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தோம்.

இவ்வளவு தெரிவித்த பிறகும் கேரள அரசாங்கம் முடியாது என்று பிடிவாதமாகக் கூறிவிட்டது. 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தை அப்படியே நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். இதற்காக பேச்சு வார்த்தையை நிறுத்துவது சரியல்ல; வேறு சில திட்டங்களுக்கும் ஒப்புதல் பெற வேண்டுமென்ற நிலையில் 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவோம் என்று ஒப்புக்கொண்டு வந்திருக்கிறோம்.

இன்றும் கூடத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரளாவில்—திருவனந்தபுரத்தில் கேரள முதலமைச்சரோடு தமிழக அரசின் சார்பில் நானே ஏற்றுக்கொண்ட 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் கொஞ்சம் கூடப் பின்வாங்க மாட்டோம் என்ற உறுதியை அளிக்கிறேன்.

கேரள அரசை தயவு செய்து மறு பரிசீலனை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை ஒரு நாட்டுப் பிரச்சினையாகக் கருத வேண்டாம்; தேசீயப் பிரச்சினையாக ஏற்றுக்கொள்ளுங்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்தால் தமிழ் நாடு மட்டும் பயன் அடையும் என்று கருதாமல்,



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

கேரளத்திற்கு மட்டும் பயன் என்று கருதாமல் இந்தியா எவ்வளவு லாபம் அடையும் என்ற எண்ணத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு தலையிட்டு நீரை வாங்கிக் கொடுக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் கூடத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் நெல் கொடுக்கிறோம் என்று சொன்னபோது கேரள அரசினர் ஒன்றைச் சொன்னார்கள். நீங்கள் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறீர்கள்; சிறுவாணித் திட்டத்திற்காகக் கூட 15,000 டன் நெல் தருவதாகச் சொன்னீர்கள். மத்திய அரசு அதை ஒத்துக்கொள்ள மாட்டேன்; சென்ட்ரல் பூலுக்குத்தான் வரவேண்டுமென்று தெரிவித்தார்கள்; அதனால் எங்களுக்கு என்ன லாபம் என்று **கேரள அமைச்சர்கள் தெரிவித்தார்கள்.**

இன்னொரு கருத்தும் தெரிவித்தோம். நீர் கொடுக்க நீங்கள் ஒப்புக் கொள்ளுங்கள். நெல் கொடுப்பது பற்றி இரண்டு அரசும் சேர்ந்து மத்திய அரசை வலியுறுத்துவோம்; நிலைமையை எடுத்துச் சொல்வோம்; மத்திய அரசை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்துவோம் என்று சொன்னோம்.

இவ்வளவும் பலன் இல்லாமல் போய்விட்டது. இந்த நிலைமையிலும் தெரிவித்துக் கொள்வது 'நீர் கொடுத்தால் நெல் கொடுப்போம்' என்று தமிழக முதலமைச்சர் தெரிவித்த நிபந்தனை, அந்தச் சலுகை உறுதி மொழி அப்படியே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. எப்போது சொன்னாலும் நிறைவேற்ற இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மக்கள் சிலபேர் வந்து என்னையும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் வந்து சந்தித்தார்கள். அவர்களிடம் தெரிவித்தேன்—இது கட்சிப் பிரச்னை அல்ல; நாட்டுப் பிரச்னை அல்ல; தேசீயப் பிரச்னையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கிறேன்.

அவர்கள் என்னிடத்தில் தெரிவித்தது—'கருத்தரங்கு மாநாடு ஒன்றைக் கூட்டலாம். எல்லாக் கட்சியினரையும் அழைக்கலாம். இரண்டு நாட்டையும் சேர்ந்த தலைவர்களையும் அழைத்துப்

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

பேசலாம்' என்று தெரிவித்தார்கள். தாராளமாகச் செய்யுங்கள்; தமிழக அரசின் சார்பில் கலந்து கொள்ளுவோம் என்ற உறுதியை நான் அளித்திருக்கிறேன்.

கோவை மாவட்ட மக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வேன். இந்த அரசு தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்திருக்கிறது. இன்னும் முயற்சி செய்யும். கேரள அரசாங்கம் ஏற்றுக் கொண்டால், இறுதியாக நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே நிறைவேற்றி வந்த சிற்றாறு-பட்டணங்கால் பற்றித் தெரிவித்தார்கள். பாதகம் ஏற்பட்டிருக்கிறது; பயிர் காய்ந்து விடுகிறது என்று தெரிவித்தார்கள். தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக, கோதையாற்றுக்குத் தண்ணீர் விட்டதன் காரணமாகத் தடங்கல் ஏற்பட்டிருக்கலாம். 40,000 ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ள முடியாது. அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்திருக்கும் தகவல் 7,000 ஏக்கருக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்பதாகும். 7,000 ஏக்கர் என்று சொல்லிவிட்டதால் அவ்வளவுதான் என்று சொல்லவில்லை. மேற்கொண்டு பாதகம் ஏற்பட்டிருந்தால் வருவாய்த் துறை கவனம் செலுத்தும் என்ற உறுதியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாலாறு–பொருந்தலாறு திட்டம். அது அநேகமாக 1975-ம் ஆண்டுக்குள் முடிவடையும்.

பரப்பலாறு திட்டம் 1974 செப்டம்பர் மாதத்திற்குள்ளாக அந்த நீர்த் தேக்கம் திறந்து விடப்படும்.

சின்னாறு திட்டம் வேகமாக நடந்து வருகிறது. 1975-க்குள்ளாக தர்மபுரி மாவட்டம் சின்னாறு திட்டம் முடிவடையும்.

தண்டரை அணைக்கட்டுத் திட்டம் 1974 செப்டம்பருக்குள் முடிவடையும். நந்தன்கால்வாய் திட்டம் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

கருப்பா நதித் திட்டம் 1975-க்குள் முடிவடையும்.

பொன்னணியாறு திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கிறது.

நிலவுக்கல் திட்டம் 74-க்குள்ளாக முடிவடையும்.



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

மருதா நதித் திட்டம். அதுபற்றிய நில ஆர்ஜித நடவடிக்கைகள் நடக்கின்றன. அது முடிந்தவுடன் வேலைகள் துவங்கும்.

இந்தத் திட்டங்களைப் பார்த்தால் ஏதோ தஞ்சை மாவட்டத்திற்கு என்று தயாரித்த திட்டம் என்று ஜேம்ஸ் அவர்கள் தெரிவித்தார்கள். அதிருஷ்டவசமாகவோ அல்லது துரதிருஷ்டவசமாகவோ தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். தஞ்சை மாவட்டத்தை நாம் இன்னும் வளமாக்கினால்தான் தமிழ் நாடு பட்டினி இல்லாமல் இருக்க முடியும். நெற்களஞ்சியமாக இருக்கிற தஞ்சைக்குத் தனியாகத் திட்டங்கள் போடுவது என்பதல்ல. தேவையான திட்டங்களை நிறைவேற்ற நாம் முயற்சி செய்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பிரச்னை அப்படியே இருக்கிறது. அதுபற்றி இங்கு உறுப்பினர்கள் பலர் எடுத்துப் பேசினார்கள். காவிரிப் பிரச்னை பற்றி நாம் இங்கு விரிவாகப் பேசியிருக்கிறோம். காவிரி நீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாம் மத்திய அரசோடு பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி மத்திய அரசாங்கத்தின் தலைமையில் கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இறுதியாக அது முடிவுறக் கூடிய தருவாய் வரும்போது ஒத்திப் போடப்பட்டது.

1924-ம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம், ஐம்பது ஆண்டு ஒப்பந்தம். 1974-ம் ஆண்டோடு அந்த ஒப்பந்தம் முடிந்து விட்டது. ஆகவே காவிரி நீர் நமக்கு வராது என்று எவரும் கருதத் தேவையில்லை. 1924-க்கு முன்பாகக்கூட 1892-ல் போடப்பட்ட ஒப்பந்தம், அந்த ஒப்பந்தத்திற்கு முன்பிருந்தே தஞ்சை மாவட்டத்திற்குத் தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கிறது. மேற்கொண்டு எவ்வளவு நீரை பயன்படுத்த முடியும் பாசனத்திற்கு என்றுதான், அதை பரிசீலிப்பதற்காகத்தான் 1924 ஒப்பந்தம் இருக்கிறதே தவிர, தண்ணீர் விடப்பட்டு வருகிற அளவைக் குறித்து மீண்டும் பரிசீலிப்பதற்காக அல்ல. இது தமிழக அரசு எடுத்திருக்கிற முடிவு. எனவே ஒன்று உறுதியாகக் கூறுகிறேன்.

திரு. எ. சங்குமுத்து தேவர்: இந்த காவிரி நீர் குறையாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கர்நாடக மாநிலத்தில் அணைக்கட்டுகள் கட்டி நீரை தேக்கிக்கொண்டிருக்கிறார்களே அது குறித்து என்ன சொல்கிறீர்கள்?

[1974 மார்ச் 26

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** காவிரி நீர் பொறுத்த மட்டில் கபினி, சொர்ணவதி, ஹேமாவதி, ஹேரங்கி என்ற நான்கு இடங்களில் அவர்கள் அணைக்கட்டுகள் கட்ட ஆரம்பித்தார்கள். அப்படி கட்ட ஆரம்பித்த பிறகு நாம் ஆட்சேபணை தெரிவித்தோம் இவற்றைக் கட்டக்கூடாது என்று. அவர்களுக்கு இரண்டு அணைகளைக் கட்ட உரிமை இருக்கிறது. ஆப்-ஸெட் என்று சொல்லி. கட்டுவது தமிழ்நாடு அரசோடு கலந்து பேசிய பிறகுதான் கட்ட வேண்டுமென்று ஆட்சேபணை தெரிவித்தோம். அந்த ஆட்சேபணையை மத்திய அரசு ஒத்துக்கொண்டு கடிதம் எழுதினார்கள், அன்றிருந்த அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள், கட்டக் கூடாது என்று. திட்டக் குழு ஒத்துக் கொள்வதற்கு முன்பு ஸி.டபிள்யூ. பி.ஸி. க்ளியரன்ஸ் கொடுப்பதற்கு முன்பு கட்டக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

1969-70-ல் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் கர்நாடக முதல் அமைச்சராக இருந்தார்கள். கபினிக்கு 70-71-க்கு 174 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். 71-72-ல் 89 லட்சம், ஹேமாவதிக்கு 222 லட்சம், 71-72-ல் 200 லட்சம் என்று ஒதுக்கினார்கள். ஹேரங்கிக்கும் பணம் ஒதுக்கப்பட்டது. வேலைகள் நடைபெற்றபோது ஆட்சேபணை தெரிவித்தோம்.

நம் ஆட்சேபணையோடு மத்திய அரசும் ஆட்சேபணை தெரிவித்தது. ஒரு காரணத்திற்காக கர்நாடக அரசு கலைக்கப்பட்டது. அப்படிக் கலைக்கப்பட்ட பிறகு அந்த வருட வரவு செலவுத் திட்டத்தை, கர்நாடக அரசு நிறைவேற்றுகிற பொறுப்பை மத்திய அரசு, நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியது. கர்நாடக அரசு அந்த நான்கு அணைக்கட்டுகள் கட்ட நிதி ஒதுக்கியது தவறு என்று எந்த மத்திய அரசு தெரிவித்ததோ, அதே மத்திய அரசு அதே நான்கு அணைக்கட்டுகளுக்கும் கூடுதல் நிதி ஒதுக்கி மத்திய அரசு வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றியது. திரு. வீரேந்திரப் பட்டீல் அவர்கள் ஒதுக்கியதை விட அதிகமாக கபினி திட்டத்திற்கு 324 லட்சமும், ஹேமாவதிக்கு 260 லட்சத்திற்குப் பதிலாக 3 கோடி ரூபாய் ஒதுக்கியது. ஹேரங்கிக்கு 48 லட்சம். சொர்ணவதிக்கு 30 லட்சம், என்று இப்படியாக ஒதுக்கினார்கள்.



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

அவர்கள் ஆட்சேபணை தெரிவித்தார்கள் கட்டக்கூடாது என்று. அப்படியிருக்க நீங்களே பணம் ஒதுக்கியிருக்கிறீர்களே என்ன நியாயம் என்று கேட்டோம். அதன் பிறகு நடந்தவை உங்களுக்குத் தெரியும்.

சர்வ கட்சித் தலைவர்களை அழைத்து நம் முதல் அமைச்சர் அவர்கள் என்ன செய்யலாம் என்று யோசித்து வழக்குத் தொடுத்தோம். பிறகு பிரதமர் அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்தார்கள். தமிழ் நாட்டுக்கு வேறு வேலையாக வந்தபோது முதல் அமைச்சர் அவர்கள் அவர்களைச் சந்தித்தார்கள், 21—5—1972 அன்று. பிரதமர் அவர்கள் சொன்னார்கள், டெல்லியில் முதல் அமைச்சர்கள் மகாநாட்டைக் கூட்டுகிறேன், மீண்டும் பேச்சுவார்த்தை நடத்திப் பார்க்கலாம் என்று கூறிய யோசனையின் பேரில் பேச்சுவார்த்தை துவங்கியது.

பேச்சுவார்த்தை துவங்கி உண்மை நிலையை அறிய ஒரு குழு போட்டார்கள். இது உறுப்பினர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தக் குழு தன் அறிக்கையைத் தாக்கல் செய்தது. அதற்குப் பிறகு அது உண்மையா என்று மீண்டும் ஆலோசிக்க வேண்டும் என்று சொன்னார்கள். மறுபடியும் பரிசீலித்தார்கள்.

அதற்குப் பிறகு இன்னொரு குழு இப்போது போட்டிருக்கிறார்கள். நீரைச் சிக்கனப்படுத்துவது எப்படி என்றறிய. அந்தக் கமிட்டி ரிப்போர்ட் தாக்கல் செய்யவில்லை.

மொத்தத்தில் காவிரியில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்பதில் ஒரு சங்கடம். பாக்ட் பைன்டிங் கமிட்டி ஒன்று சொல்கிறார்கள்.

ஆனால் நாம் ஒன்று சொல்கிறோம். இந்த நேரத்தில் நியாயத்தின் பேரில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பாக்ட் பைன்டிங் கமிட்டி கொடுத்திருக்கிற ரிப்போர்ட், 50 சதவிகிதம் டிப்பென்டபிலிட்டி அதன்படி 740 டி.எம்.ஸி. தண்ணீர் இருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இரண்டாண்டு கணக்கு எடுத்ததில், அவ்வளவு நீர் இல்லை 670 டி.எம்.ஸி. தண்ணீர்தான் இருக்கிறது என்று நாம் தெரிவித்திருக்கிறோம். இன்னும் முடிவடையவில்லை.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

காவிரி நீர் பிரச்னை மீது முடிவு எடுக்கப்படவில்லை. அது சீக்கிரத்தில் முடிவடையும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அவைக்கு ஒரு தகவல் தருகிறேன். 1971-ம் ஆண்டு, நமக்கிருக்கிற தகவல்படி எவ்வளவு ஏக்கர் நாம் சாகுபடி செய்கிறோம், எவ்வளவு ஏக்கர் கர்நாடகம் சாகுபடி செய்கிறது, எவ்வளவு ஏக்கர் கேரளம் சாகுபடி செய்கிறது என்ற புள்ளி விவரங்கள் என் கையில் இருக்கிறது.

தமிழ்நாடு சாகுபடி செய்கிற இடம் ஏறத்தாழ 28 லட்சத்திற்கு மேலாக இருக்கிறது. கர்னாடகம் ஏறத்தாழ 6 இலட்சம். கேரளா 53,000 சாகுபடி செய்கிறது. இவையெல்லாம் அந்த பாக்ட் பைண்டிங் கமிட்டி கொடுத்திருக்கிற விவரங்கள்.

டெல்லியில் விரைவில் மாநாடு நடக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறோம். இதுவரை நாம் பெற்றுவருகிற நீரில் எந்தளவும் குறையாத அளவிற்கு நீர் நாம் பெறவேண்டும். இது நம் கொள்கையாகும். இதிலிருந்து நாம் கொஞ்சம்கூட பின்வாங்குவதாக இல்லை. மத்திய அரசிடம் இதுபற்றி வாதாடத் தயாராயிருக்கிறோம்.

திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள், இதுபற்றி விளக்கமாகச் சொல்லவேண்டும் என்று மத்திய அரசு ஏதாவது தவறு செய்தால் தகவல் தெரிவியுங்கள், தமிழ்நாட்டின் நன்மையை உத்தேசித்து நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு குரலாக எழுப்பி தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிற நீர் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவசியம் ஏற்பட்டால் நிச்சயமாகத் தெரிவிக்கிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் இதுபற்றி சர்வகட்சி மாநாடு கூட்ட வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால் கூட்டுவார்கள். அப்படி ஒரு நிலை ஏற்படுமானால், கூடி என்ன செய்வது என்பதுபற்றி யோசிக்கலாம்.



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு தூங்கிக்கொண்டிருக்கவில்லை. விழிப்போடுதான் இருக்கிறோம். விரைவாக நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நெய்யாறு இடதுகரை வாய்க்காலுக்கு நமக்கு ஒரு கொள் அளவு தண்ணீர் தருவதாக கேரள அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் பல காலமாகியும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஆகவே கேரள அரசோடு பேசுவதற்கு ஏதாவது முயற்சி நடந்ததா ? அதன் விவரத்தைச் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நெய்யாற்றில் 150 டி.எம்.சி. தண்ணீர் நமக்கு அவர்கள் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால் இப்போது குறைவாகத்தான் தண்ணீர் வருகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதற்காக கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு இருக்கிறோம். கடிதம்கூட எழுதியிருக்கிறோம். 150 டி.எம்.சி. தண்ணீர் குறையாமல் வாங்கி விடுவது என்று முயற்சி எடுத்து வருகிறோம்.

தமிழ்நாட்டில் கட்டப்பட்டிருக்கிற பாலங்கள் மிகச் சிறப்பான பாலங்களாகும். தமிழகத்தின் வரலாற்றில் அதுவும் நெடுஞ்சாலைத் துறை வரலாற்றில் இவைகளெல்லாம் என்றும் காலத்தால் அழியாத சின்னங்களாக இருக்கும். நமது பொறியாளர்கள் மிகவும் அழகான, சிறப்பான பாலங்களைக் கட்டி முடித்து இருக்கிறார்கள்.

சென்னையில் கட்டப்பட்டிருக்கிற அண்ணா மேம்பாலம், திருநெல்வேலியில் கட்டப்பட்டிருக்கும் திருவள்ளுவர் மேம்பாலம், கோவையில் கட்டப்பட்டிருக்கிற மேம்பாலம் இவற்றைப் போய்ப் பார்க்கிறபோது, எவ்வளவு அற்புதமாகக் கட்டி முடித்து இருக்கிறார்கள் நம்முடைய இன்ஜினியர்கள் என்று நமக்கு நன்றாகத் தெரியும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

இவ்வளவு சிறப்பு மிக்க பாலங்கள் கட்டி முடித்து இருக்கும் இந்த நேரத்தில், பாலம் என்ற உடன் எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. பாம்பன் பாலம் பற்றியதாகும் அது. இந்த பாம்பன் பாலத்தைப் பற்றி யாராவது பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். பேசவில்லை. ஆகவே, பாம்பன் பாலத்தைப்பற்றி நானே விளக்கம் கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன்.

ஏன் விளக்கம் தரவேண்டுமென்று சொன்னால், ஒரு பெரியவர் தமிழக மந்திரிமார்கள் மத்திய அரசாங்கம் 5 கோடி செலவில் பாம்பனில் பாலத்தைக் கட்டுவதற்கு பணம் தருகிறேன் என்று சொன்னாலும் காலம் தாழ்த்துவதற்கான ரகசியம் என்னவென்றால் அவர்கள் 50 லட்ச ரூபாயை லஞ்சமாக கண்டிராக்டரிடம் கேட்டார்கள் என்று தைரியமாக பத்திரிகையில் எழுதினார்கள். நான் அடுத்த நாளே பத்திரிகையில் பார்த்து விளக்கம் சொன்னேன்.

ஆனால், அந்தப் பெரியவர் நான் தந்த விளக்கத்திற்குப் பிறகு, உண்மையான நிலையை உணர்ந்து மறுப்புத் தெரிவிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நான் செய்த துரதிருஷ்டம் பெரிய மனம் படைத்தவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஒருவேளை காலம் கடந்தாவது உண்மை அறிவார்களோ என்னவோ நமக்குத் தெரியாது.

பாம்பன் பாலம் மத்திய அரசு ரூ. 5 கோடி நிதியை ஒதுக்கித் தந்து நாம் அவர்களுக்காகக் கட்டும் பாலம். கட்டுகிற பொறுப்பு, கட்டுகிற காண்டிராக்ட்காரர்கள் செய்கிற வேலையை மேற்பார்வை பார்க்கும் பொறுப்புதான் நமக்கு உண்டு. அவர்கள் நம்மை ஒரு ஏஜெண்டு மாதிரிதான் போட்டிருக்கிறார்கள். சென்டேஜ் சார்ஜ் 7½ சதவிகிதம் நமக்குக் கொடுக்கிறார்கள். அப்படி அவர்கள் கொடுப்பது அதற்காக நியமிக்கப்படும் அதிகாரிகள் சம்பளம் போன்றவற்றிற்கு சரியாகிறது.

இதை நெடுஞ்சாலைத் துறையினர் செய்து வருகிறார்கள். அதற்காக ஒரு தனி தலைமைப் பொறியாளரைப் போட்டு, அந்த பாம்பன் பாலத்தை விரைவாகக் கட்ட வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தோம்.



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

இதுவரையில் கடலில் பாலம் கட்டப்படவில்லை. பம்பாயில் கூட பேக் வாட்டர்சில்தான் கட்டி இருக்கிறார்கள். பாம்பனில் தான் முதன் முதலாக கடலில் பாலம் கட்டுகிறோம். இந்த பாம்பன் பாலம் கட்டுவது சம்பந்தமாக சில புள்ளி விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நல்லவர்களே, உயர்ந்த எண்ணம் கொண்டவர்களே சொல்லுங்கள், தமிழக மந்திரிமார்கள் 50 லட்ச ரூபாய் லஞ்சமாகக் கேட்டார்கள் என்று சொல்கிறார்களே, மனதில் கை வைத்து நியாயத்தை உணர்ந்து சொல்லுங்கள்.

Date of tenders—28th March 1973.

Report sent to the Government of India on the tenders—

இந்த நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த டென்டர் கோருகிறபோது மத்திய அரசாங்கம் இரண்டு கவர் சிஸ்டம் கேளுங்கள் என்று சொன்னார்கள். புதிதாக இந்த முறையைக் கொண்டு வந்து புகுத்தினார்கள்.

இந்த இரண்டு கவர் சிஸ்டத்தில் ஒன்று, பணம் எவ்வளவு என்று ஒரு கவர், அடுத்த கவர் 'அலேன்மென்ட்' அதற்கு மாற்று யோசனை தெரிவிப்பார்களானால் அதைச் சொல்லும்படி எழுதி வாங்குங்கள் என்று சொன்னார்கள். அப்படியே எழுதி வாங்குகிறோம்.

பணம் பற்றிய கவரை வாங்கி, வங்கியில் வைக்கச் சொன்னார்கள். வைத்து விட்டோம். மாற்று யோசனையுள்ள கவரைப் பிரியுங்கள். அதைப் பரிசீலித்து, டெல்லிக்கு அனுப்பச் சொன்னார்கள். அனுப்பினோம். ஐந்து பேர் டென்டர் போட்டிருந்தார்கள். அந்த 5 பேருடைய டென்டரையும் டெல்லிக்கு அனுப்பி வைத்தோம்.

அந்த 5 பேரும் சில நிபந்தனைகளைப் போட்டார்கள். அந்த நிபந்தனைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நாம் சொன்னோம். அதிலே இரண்டு பேர் திரும்பப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். டெல்லிக்கு எழுதினோம். கான்சல் செய்யுங்கள் என்று சொன்னார்கள். சொல்லி விட்டு மீதம் உள்ள டென்டரைப் பிரியுங்கள் என்று சொன்னார்கள். அந்தத் டென்டர்களைப் பிரித்த தேதி—அது வரை அலேன்மென்ட் டென்டரைத்தான் பிரித்து அனுப்பிக்கொண்டிருந்தோம்—அதைப் பற்றிய விவரம் இப்போது தருகிறேன்.

Scrutiny at Delhi by the Officers of the State Government and Government of India upto 17th August 1973; Questionnaire issued to tenders—25th August 1973;; Replies reeeiverd—26th September 1973; Scrutiny by the Officers of the State and Government of India and issue of second questionnaire—1st October 1973 to 17th October 1973: Replies received to second questionnaire—7th November 1973; Report sent to Government of India on the final position of tenderers—26th November 1973; Orders of Government on further action—24th December 1973, Clarification sent on the capacity of tenderers—11th January 1974; Concurrence from Government of India in their letter, dated 31st January 1974, on 7th February 1974; Final discussion with the tenderers upto 22nd February 1974. Opening of sealed covers of price bids—

இதுவரையிலும் யார் பணம் எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று கவரைப் பிரிக்கவே இல்லை. பேங்கில் இருக்கிறது. எந்த தேதி பிரிக்கிறோம், 22—2—1974. போன மாதம் திறந்தோம். ஒரு 30-35 நாட்களுக்கு முன்பு தான் எவ்வளவு பணம் யாருக்கு வரும் என்று பார்த்து இருக்கிறோம். அப்படிப்பட்ட சந்தர்ப்பம் வருகிறது.

ஆனால், 6 மாதத்திற்கு முன்பு ஒரு பெரியவர் எழுதினார், 50 லட்ச ரூபாயை தமிழக மந்திரிமார்கள் லஞ்சம் கேட்டார்கள் என்று. நியாயத்தின் பேரில், தர்மத்தின் பேரில் கேட்கிறேன், எந்த கடுமையான வார்த்தையையும் நான் பயன்படுத்த விரும்பவில்லை. இருந்தாலும் நான் கேட்டுக்கொள்வது ஏதோ ஒரு குற்றவாளிகள் —தமிழக மந்திரிகள் என்று சமுதாயத்தில் ஒரு எண்ணத்தைப் பரப்ப வேண்டுமென்பதற்காக இப்படிப்பட்ட விஷக்காற்றை தூவ வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த பாம்பன் பாலம் சம்பந்தமாக சென்ற ஆண்டே, இந்த மாதிரி பாலம் கட்டுவதற்கு பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இது குறித்து யாரைக் கேட்க முடியும், இந்த அரசைத் தானே கேட்க முடியும். நீங்கள் பொறுப்பு எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள், பொறுப் பெடுத்துக்கொண்ட பிறகு காலம் தாழ்த்துவது என்று சொன்னால், அந்த காலதாமதத்திற்கு மத்திய அரசு பொறுப்பு என்று சொன்னால், மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்தியிருக்க வேண்டும், அல்லது மத்திய அரசையே நேரடியாக கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கவேண்டும்.





அப்படிச் சொல்லியிருந்தால் தமிழக ஆட்சியைப் பற்றி யாரும் தப்பாகச் சொல்ல மாட்டார்கள். பாம்பன் பாலத்திற்காக ஒரு தலைமைப் பொறியாளர், இதற்கு ரூ. 5 கோடி செலவாகிறது என்று சொன்னால், அதைப் பற்றிக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. அன்றைக்கே தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

இன்று மத்திய அரசு நம்மை ஏஜென்டாகத்தான் போட்டிருக்கிறது என்று சொன்னால் அதைத் துரிதப்படுத்துவதற்காகவாவது நடவடிக்கை எடுத்து இருக்கவேண்டும். இப்போது கூட தேதி வாரி புள்ளிவிவரங்கள் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, தகுந்த நடவடிக்கைகளை விரைவாகச் செயல்படுத்த நம்முடைய அரசின் என்டிலிருந்து எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இதுவும் நம்முடைய துர்ப்பாக்கியம் தான். இப்படி தவறாகவே எடுத்துச் சொல்லிக் கொண்டு போவது தமிழக மக்களிடையே இந்த அரசின் மீது ஒரு தப்பான எண்ணத்தை ஏற்படுத்துவதற்காகத்தான். தங்கமணி அவர்கள் அத்தகைய நோக்கம் கொண்டு சொல்லி யிருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

நீங்கள் கேட்கிறீர்கள், ஏன் கேட்கிறீர்கள் என்று சொல்லவில்லை, இந்த அரசாங்கம் பொறுப்பை தட்டிக் கழிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் செயல்படவில்லை, நான் சொல்ல வந்தது, பணத்தைப் பற்றிய டெண்டர் பிரிப்பது 22—2—1974 அன்று தான். அதுவரையிலும் யார் குறைத்து டெண்டர் கொடுத்து இருக்கிறார்கள் என்று தெரியாது.

ஆனால் அதற்கு முன்பாகவே ரூ. 50 லட்சம் லஞ்சம் கேட்டார்கள் என்று ஒரு பெரியவர் சொன்னதற்கு மாண்புமிகு தங்கமணி அவர்கள் ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் இந்த புண்பட்டு இருக்கும் மனம் கொஞ்சம் சாந்தி அடைந்து இருக்கும். இந்த வேதனையை எங்கே சொல்வது?

பத்திரிகையில் எழுதிவிட்டார்கள். ஊருக்கு ஊர் பொதுக் கூட்டங்கள் போட்டு விளக்கிக் கொண்டு இருக்கிறோம் என்று சொன்னாலும், எல்லாயிடங்களிலும் செய்ய முடியவில்லை. ஆகையால் தான் இந்த அவையைப் பயன்படுத்தி, இந்த நேரத்தில் அது குறித்து சொல்ல முன்வந்தேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

கொஞ்சம் கூட இந்த அரசின் மீது குற்றம் இல்லை. நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற எல்லா நடவடிக்கைகளும் இந்தப் பாலத்தை விரைவாகக் கட்டிவிடவேண்டுமென்பதற்காகச் செய்து இருக்கிறோம்.

இப்போது டெல்லிக்குக் கூட அந்தத் தலைமைப் பொறியாளரை அனுப்பி வைத்து, அந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை உடனே பெற்றுவருமாறு கூறியிருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இப்படி பத்திரிகையில் எழுதிய பெரியவர் பக்தவத்சலத்தின் மீது வழக்குத் தொடர்ந்து இருக்கலாமே? ஏன் வழக்குத் தொடரவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வழக்குத் தொடருவது என்பது சுலபம். வழக்குத் தொடரப்பட்டவுடனே பெட்டிஷன் டெல்லிக்குக் கொடுத்துவிடுகிறார்கள். இந்த நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அதற்குப்பிறகு 2-3 ஆண்டுகள் அந்த வழக்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது போடப்பட்ட வழக்கு அப்படியே இருக்கிறது.

மத்திய அரசு நம்மை ஒரு ஏஜென்டாகத்தான் நியமித்து இருக்கிறார்கள். அந்த நிலை தான் ஒரு மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு 5 கோடி ரூபாய் திட்டத்தை பரிசீலிக்க, பேச்சு வார்த்தை நடத்த எங்களுக்கு எந்தவிதமான அனுமதியும் இல்லை. மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் எதையும் செய்யமுடியாது, செய்யக்கூடாது. எல்லாவற்றிலும் மத்திய அரசாங்கம் தான் முடிவு எடுக்கவேண்டும்.

மூன்று பேர் டெண்டர் போட்டு இருக்கிறார்கள். அந்த மூன்று பேரையும் வரிசைப்படுத்தி யார் குறைந்த டெண்டர் போட்டு இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம். டெல்லி பார்த்து சொல்லவேண்டும், இவர் தான் குறைந்த ரேட் கொடுத்து இருக்கிறார். அவருக்குக் கொடுங்கள் என்று சொல்லவேண்டும். அதன் பிறகு அக்ரிமெண்ட் எழுதி வாங்கிக்கொண்டு வேலைசெய்யவேண்டும். இவர் குறைந்த ரேட் என்று சொல்லும் உரிமை எங்களுக்கு இல்லை. அதுவும் மத்திய அரசின் கையில் தான் இருக்கிறது.



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

தலைமைப் பொறியாளரை அனுப்பி சீக்கிரம் அனுமதி வாங்கி வாருங்கள் என்று சொல்லி இருக்கிறேன். அவர்கள் செல்ல இருக்கிறார்கள். எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு துரிதமாக நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். எங்கள் மீது சொல்லும் அபாண்ட பழிகள் எல்லாம் இத்தகைய முறையில்தான் இருக்கின்றன, அவர்களுக்கு எல்லாம் நல்ல காலம் நிச்சயமாக உண்மையை உணர்த்தும் என்று உறுதியாகத் தெரிவித்து, இத்தகைய போக்கு எப்படியும் முறியடிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(இரவு 7.00)

இறுதியாக, ஏ.ஆர்.ஸி. ரெகமெண்டேஷன்களைப் பற்றியெல்லாம் பேச்சுவார்த்தைகளில் சொன்னார்கள். அதைப்பற்றி என்ன செய்யப்போகிறோம் என்பதுபற்றி விளக்கமான குறிப்புகளை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறேன். ஏ.ஆர்.ஸி. குறிப்புகள் அத்தனையும் நாங்கள் வைத்திருக்கிற காரணத்தினால், அவையில் வைத்திருக்கிற குறிப்புகளின்படி எல்லாம் ஒத்துக்கொண்டிருக்கிறோம், அவைகளை அவையில் வைத்து இருக்கிறோம்.

சில பேர் சில குறிப்புகளை தெரிவித்தார்கள். அசிஸ்டெண்ட் எக்ஸிக்யூடிவ் என்ஜினியர்களுக்கு டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் வைக்கிறீர்களே, தேவையில்லை என்ற கருத்து தெரிவிக்கப் பட்டது. அவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்வேன். சில பேர்களைக் கொண்டுவருவதற்காக இந்த முறையை வைக்கிறார்களா என்று சந்தேகமாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். யாரையும் மனதில் வைத்துக்கொண்டு இதைச் செய்யவில்லை.

இலாகாவில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் யார் தகுதி உள்ளவர்களாக இருந்தாலும் அவர்கள் அந்தப் பரீட்சைக்கு உட்காரலாம். நாங்கள் தேர்ந்தெடுக்கவில்லை, சர்வீஸ் கமிஷனை தேர்ந்தெடுக்கச் சொல்லியிருக்கிறோம். தகுதியுள்ளவர்கள் யார் வந்தாலும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பர்ஸ்ட் கிளாஸில் பாஸ் செய்த தகுதியை நிர்ணயித்திருக்கிறோம். நன்றாகப் படித்துத் தேர்ந்து வந்தவர்களுக்கு, ஊக்கம் அளிப்பதற்கு இப்படி இளைஞர்களை தேர்ந்தெடுக்கவேண்டும் என்று தான் சொல்லியிருக்கிறோம்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

இதிலே இன்னென்றும் இருக்கிறது. ஏன் கீழே ஜூனியர் என்ஜினியர்களாக வருகிறவர்களை படிப்படியாக உயர்த்திக் கொண்டு வரக்கூடாது என்று கேட்கப்பட்டது. நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன். கீழே உள்ளவர்கள் படிப்படியாக வருகிற காலத்தில், அவர்கள் சீப் என்ஜினியாராக வரும்பொழுது அவர்களுக்கும் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு காலம் தான் சர்வீஸ் இருக்கிறது. அவர்கள் வயதானவர்களாக ஆகிவிடுகிறார்கள் என்பதற்காகத் தான் கொஞ்சம் இளைஞர்களாக தேர்ந்தெடுத்தால், நடுத்தர வயதுடையவர்களை தேர்ந்தெடுத்து 4, 5 ஆண்டுகளாவது தலைமைப் பொறியாளர்களாக பணியாற்றுவதற்கு தகுதிபடைத்தவர்களாக வரவேண்டும் என்பதற்காகத் தான் நாம் இந்த முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதிலே எந்தத் தவறும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறு சில விஷயங்களைப் பற்றிக்கூட சொன்னார்கள். நீங்கள் பொதுப்பணித்துறையையும் கட்டடங்களையும் தனியாக பிரிக்கின்றீர்களே என்று கேட்டார்கள். இப்படிப் பிரிப்பது யாருக்கும் பாதகம் ஏற்படுத்துவதற்காக அல்ல. அரசின் நோக்கம் கட்டடத் துறையைப் பொறுத்தமட்டில், அதைப்போல விவசாயப் பாசனத் துறையைப் பொறுத்தமட்டில் கூட சில என்ஜினியர்கள் ஸ்பெஷலைஸ் செய்யவேண்டும் என்ற ஆசையோடு, நோக்கத்தோடு தான் இதைச் செய்கிறோம். கட்டடத்தில் நிபுணத்துவம் உள்ளவர்களாக இருக்கக்கூடும். இதற்குக் கூட முதல் அமைச்சர் அவர்கள் ஒரு புதிய யோசனையைத் தெரிவித்தார்கள்.

ஏ.ஆர்.ஸி. கமிஷனிடம் சொல்லி அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். ஜூனியர் என்ஜினியர் வரையிலே காமன் காடர் ஆக வைக்கப்படும். அதற்கு மேல் ஏ.ஈ. ஆகின்ற நோக்தில் அவர்களைக் கேட்கப்படும். எந்தத் துறையை நீங்கள் தேர்ந்தெடுக்கக் கொள்கிறீர்கள், நீங்கள் பொதுப்பணித்துறைக்குப் போகிறீர்களா, கட்டடத் துறைக்குப் போகிறீர்களா, பாசனத் துறைக்குப் போகிறீர்களா, எதற்குப் போகிறீர்கள் என்று கேள்வி கேட்கப்படும். அவர்கள் எது தேவை என்று தேர்ந்தெடுக்கிறார்களோ அதற்குப் போகலாம். ஆனால் ஒரு முறை ஏ.ஈ.-ஆக நுழைந்துவிட்டால், அந்த நுழைந்த இலாகாவில் தான் இருக்க வேண்டும். நாம் கட்டாயமாக இந்த விதிமுறைகளை வகுத்திருக்



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

கிறோம். எனவே தான், யாருக்கும் பாதகம் ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நமது தமிழக அரசுக்குச் சொந்தமாக பொதுப்பணித் துறை வொர்க்ஷாப் சென்னையிலே இருக்கிறது. பரம்பிகுளம்-ஆளியாறில் இருக்கிறது. அவைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு சில சலுகைகள் அளிக்கவேண்டும் என்று அரசு முடிவு செய்து, அவைகளை நான் இங்கே தெரிவிக்கிறேன். அந்த ஊழியர்களுக்கு வாஷிங் அலவன்ஸ் மாதம் மூன்று ரூபாய் அளிக்கப்படும்.

அதுவுமல்லாமல் அங்கு பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு, வெல்டிங் டிபார்ட்மெண்டில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு கம் பூட்ஸ் என்று முழங்கால் மூடுமாறு போட்டுக்கொள்ளத்தக்க பூட்ஸ்கள் வாங்கிக் கொடுப்பதற்கு அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாங்க அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இருக்கக் கூடாது, அரசாங்கத்திற்கே சொந்தமான கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் வெட்டுத் தீர்மானத்தில் கூறியிருக்கிறார்கள். இங்கே சில பேச்சுக்களிலும் அதே கருத்தைத் தெரிவித்தார்கள். அரசாங்கம் இதை ஒத்துக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு லட்சக்கணக்கான ரூபாய் அரசாங்க அலுவலகங்களுக்காக வாடகையாக கொடுக்கப்படுகிறது. பொதுவாக அரசாங்க அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்டவேண்டும் என்று ஒத்துக்கொண்டு, அதற்காக பணம் ஒதுக்கியிருக்கிறோம். இரண்டு இடங்களை இந்த ஆண்டு தேர்ந்தெடுத்து கட்டடம் கட்டுவதற்கு வேலை துவக்கலாம் என்று நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஒன்று அண்ணா சாலையில் தேனாம்பேட்டையில் மருத்துவத்துறை அதிகாரி அலுவலகத்திற்கு அருகில் உள்ள அந்த இடத்தில் ரூ. 78.35 லட்சம் செலவில் பல மாடிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கு தீர்மானித்திருக்கிறோம்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்தை, பர்ஸ்ட் லைன் பீச்சில் இருக்கிற அலுவலகக் கட்டடத்தை இடித்துத் தள்ளிவிட்டு—ஏன் இடித்தார்கள் என்று கேட்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். கட்டடம் பாழடைந்து கிழமான கட்டடமாகி விட்டது. அந்தக் கட்டடத்தை நாம் இடிக்காவிட்டாலும் காலத்தால் அதுவே இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கிறது—பல மாடிக் கட்டடம் கட்டுவதற்கு ரூ. 1 கோடி 39 லட்சம் செலவில் . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கார்ன்வாலிஸ் கேட்டு என்று ஒன்று இருக்கிறதே, அதுவாவது வைத்துக்கொள்ளப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதை நினைவுச் சின்னமாக வைக்கலாமா என்று கேட்கிறார்கள். அதுபற்றி யோசிக்கவேண்டும். ரூ. 139.22 லட்சத்தில் அங்கே ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. செக்ரடேரியட்டைப் பொறுத்தமட்டில், இங்கே இடம் போதவில்லை, புதியதாக செகரடேரியட் கட்டலாம் என்று அரசு யோசித்தது. யோசித்தவுடனேயே மீண்டும் அதே பெரியவர் பத்திரிகையில் எழுத ஆரம்பித்தார். யாரோ காண்ட்ராக்டர் கொள்ளை அடிப்பதற்கு செக்ரேடேரியட்டை ராஜ்பவனத்திற்குக் கொண்டு போகிறார்கள், அநியாயம், அக்கிரமம் என்று அறிக்கை விட்டார்கள்.

உங்களுக்குத் தெரியும், செகரடேரியட்டில் பணியாற்றும் ஊழியர்கள் எவ்வளவு சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு சிரமத்திற்கிடையே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பது. அவர்களுக்கு தனியாக ஒரு கட்டடம் கட்டவேண்டும். ஊழியர்களுக்கு தனியாக கட்டடம் கட்டவேண்டும், அமைச்சர்களுக்கு தனியாக ஒரு கட்டடம் கட்டவேண்டும்.

இன்னொரு இடத்திற்குப் போய் செகரடேரியட் கட்டுவது என்றால் பெரிய செலவாகும், அந்தச் செலவைக் குறைப்பதற்கு, தடுப்பதற்கு ஒரு கட்டடம் கட்டவேண்டும் என்று கருதி, ஒரு கோடி 20 லட்சம் ரூபாய் செலவு செய்து, நமக்கு வலது புறத்தில்



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

காலியாக இருக்கிற இடத்தில், அதிலே நமக்குச் சொந்தமான பழைய கட்டடங்கள் இருக்கின்றன, அந்தக் கட்டடங்களை இடித்துத் தள்ளிவிட்டு, புதியதாக கட்டடம் கட்டுவதாக அரசு முடிவு செய்திருக்கிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் லத்திப் அவர்கள் கோரிய ஆண்டியப்பனூர் ஓடை திட்டத்தை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் பார்க்கின்ற பார்வையிலேயே தெரிகிறது. அவருடைய பொன்னையாற்று மேம்பாலம் கட்டவேண்டும் என்று அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. வேலை தொடங்கும் என்று அவர்கள் மகிழ்ச்சி அடையலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர்கள் தெரிவித்த பல கருத்துக்களை யெல்லாம் நினைவில்லாமல் விட்டுவிட்டேன் என்று யாரும் கருத வேண்டாம். அவைகளையெல்லாம் பற்றி அரசு அதிகாரிகள் குறிப்பு எடுத்திருக்கிறார்கள். அவைகள் பரிசீலிக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

இங்கே பேசாத அங்கத்தினர்கள்கூட நான் மாவட்டத்திற்கு வருகிறபொழுது தங்களுடைய கோரிக்கைகளை தெரிவிப்பார்களேயானால், நிச்சயம் அவைகளைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று. அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கிற பி.டபிள்யூ.டி. வொர்க்ஷாப் அத்தனையும் ஒரு கம்பெனியாக மாற்றலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

கம்பெனியாக மாற்றவேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், அது ஒரு கமர்ஷியல் கன்ஸர்னாக ஆகவேண்டும் என்பது தான். அரசாங்கத்திற்குத் தேவையான பொருள்களைச் செய்வதாக இருந்தாலும் சரி, அரசாங்கம் அல்லாமல் வேறு வெளியாருக்குத் தேவையான பொருள்களைச் செய்வதாக இருந்தாலும் சரி, அவற்றைச் செய்துகொடுப்பதற்குத் தக்க முறையில் அதைக் கம்பெனியாக மாற்றவேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

நான் தந்திருக்கிற விளக்கங்களுக்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கே. என். குமாரசாமி:** அமைச்சர் அவர்கள் சொல்கிற பொழுது 1965-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நடந்து கொள்ளவேண்டும் என்ற முடிவோடு நிறுத்திவிட்டார்கள். சோழாட்டிப்புழா 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். நம்முடைய காட்ச்மெண்டு ஏரியா ஆயிற்றே? அந்த ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்க முடியுமா? கீழ்நீராறு, மேல்நீராறிலிருந்து டன்னல் வழியாக தண்ணீர் கொண்டுவந்து ஒரு லட்சம் சொச்சம் ஏக்கருக்கு அதிகமாக பாசன வசதி செய்துகொடுப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வறட்சிப் பிரதேசமாக இருக்கிற பல்லடம், கோவை தாலுகாக்களுக்கு இந்தத் தண்ணீர் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறையாவது கிடைக்க வாய்ப்பை உருவாக்கித் தர அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 1965-ம் ஆண்டு போடப் பட்ட ஒப்பந்தத்தில் சோழாட்டிப்புழா பற்றி இருக்கிறது. தமிழ் நாட்டு காட்ச்மெண்ட் ஏரியாவில் இருக்கிறது என்பது சரியான எண்ணம் அல்ல. தமிழ் நாட்டு எல்லையிலும், கேரள எல்லை ஓரத்திலும் வருகிறது. இருவரும் சேர்ந்து கட்டவேண்டும்.

தமிழ் நாடு அரசே கட்டவேண்டுமென்று 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் போடப்பட்டிருக்கிறது. அதற்கான செலவை இரண்டு அரசுகளும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னபடி, நீர் கொடுத்தால் நெல் கொடுக்கிறோம் என்று சொன்ன ஆஃபர் இன்னும் திறந்தபடி இருக்கிறது, கேரள அரசு அதை மறுபரிசிலனை செய்யுமானால் நாங்கள் எப்பொழுதுமே தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீராறைப்பற்றிச் சொன்னார்கள். அந்தத் தண்ணீரில் மேற்கொண்டு 1½ லட்சம் ஏக்கருக்கு புதிய பாசனம் செய்வதற்கு எந்தெந்தப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்பதைப்பற்றி ஆய்வு



1974 மார்ச் 26] [திரு. ப. உ. சண்முகம்]

செய்யவேண்டும் என்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த ஆய்வு முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஐந்தாண்டு காலம் சூப்பர்வைசர்களாகப் பணியாற்றி டிப்ளமா ஹோல்டர் களாக இருக்கின்றவர்களை ஜூனியர் எஞ்சினியர்கள் தகுதியில் அமர்த்த வேண்டுமென்று, அவர்கள் ஒரு மாநாடு கூட்டி, அந்த மாநாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், பொதுப் பணித்துறை அமைச்சரவர்களையும் அழைத்து, அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள். அது கவனிக்கப்படும் என்று அப்போது அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி முடிவு செய்யப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அந்த மாநாட்டில் முதலமைச்சரவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். கொள்கை அளவில் அதை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக் கிறார்கள்.

இப்போது ஜூனியர் என்ஜினியர்கள் தங்களுக்கு பதவிப் பெயரை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் இரு சாராரையும் அழைத்து, பேசி முடிவு செய்யலாம் என்று சொன்னார்கள்.

என்னுடைய பதில் உரையில் ஒன்றைக் குறிப்பிடாமல் விட்டு விட்டேன் என்று கருதுகிறேன். அதைப்பற்றி இப்போது சொல்லி விடுகிறேன். குளம் புறம்போக்கு ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப் படுத்த வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாவட்டம் வறட்சியாகப் போய்க்கொண்டிருப்பதற்கு காரணம் குளம் புறம்போக்கை யார் யாரோ ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதுதான் என்று தெரியவருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தமாதிரியான நிலைமை இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. நான் எல்லாக் கட்சி உறுப்பினர்களையும், கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்வது, இந்த காரியத்தில் எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்பதுதான்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 26

குளம் புறம்போக்குகளை யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும், அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—இதில் கட்சி கண்ணோட்டம் என்பதே கிடையாது, அரசியல் பிரச்சனை இதில் கொஞ்சம் கூட கிடையாது, நாட்டுப் பிரச்சனை இது—அவர்களை அப்புறப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது—கோவில்பட்டி, சங்கராபுரம் ஆகிய இடங்களுக்கு தண்ணீர் கிடைக்க கிரியாறு திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி எங்களுடைய வெட்டுத் தீர்மானத்திலும் கொடுத்திருக்கிறோம்—1955-ம் வருஷத்திலேயே கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு, கிரியாறு திட்டத்திற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். மீண்டும் இந்த அரசாங்கம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

இன்னொன்று. ஏ.ஆர்.சி. ரிப்போர்ட் அடிப்படையில் ஒர்க்ஸ், இரிகேஷன் இரண்டையும் பைபர்கேஷன் செய்வது பற்றி பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா? ஒர்க்ஸ் தலைமைப் பொறியாளரும், இரிகேஷன் தலைமைப் பொறியாளரும் ஸ்பெஷலிஸ் பண்ணிதான் சொல்லியிருப்பார்கள். அந்தமுறையில் ஏ.ஆர்.சி. பரிந்துரை கவனிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தனித்தனியாக இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதை ஸ்பெஷலிஸ் செய்துதான் முடிவு செய்யவேண்டும். அதைப்பற்றி பரிசீலனை செய்வதாக இருக்கிறோம்.

கிரியாறு திட்டத்திற்கு 1955-ல் ஒப்புக்கொள்ளவில்லை கேரள அரசு. இப்போது இடுக்கித் திட்டத்தை தொடங்கியிருக்கிறார்கள். தனியாக அரசு அதற்கு பணம் தருவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. இடுக்கித் திட்டம் வந்த பிறகு கிரியாறு திட்டத்திற்கு நீர் வருமா என்பது சந்தேகமாக இருக்கிறது என்று தலைமைப் பொறியாளர் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் அதுபற்றி முயற்சி செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 26]

**திரு. எம். ஏ. லத்திப்:** தலைவரவர்களே, இந்த ஏரி புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களை அப்புறப் படுத்துவது பற்றிச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கின்ற ஏற்பாட்டின்படி ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு சரியான முறை இல்லை. வடாற்காடு மாவட்டத்திலும் ஏரி புறம்போக்கு ஆக்கிரமிப்பு இருக்கிறது. அவர்களை அப்புறப்படுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது என்று கலெக்டர் தெரிவித்திருக்கிறார்.

அதோடு, அவர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒரு ஸ்பெஷல் ஸ்குவாடு அமைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்ற கருத்தையும் தெரிவித்தார்.

ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற குளங்களை எல்லாம் அரசாங்கம் தன்னுடைய பராமரிப்பில் எடுத்துக்கொள்வதற்கு மாநிலம் பூராவும் ஒரு சர்வே செய்து, அங்கும் ஆக்கிரமிப்பு இருந்தால் அவர்களையும் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கு கலெக்டர் தெரிவித்த கருத்துப்படி தனி ஸ்குவாடு அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது. இது கட்சிப் பிரச்சனை அல்ல; இந்த நாட்டின் பிரச்சனை. அதனால்தான் சர்வ கட்சியினரும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். சர்வ கட்சியினரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு ஒரு காரணம் உண்டு. ஒரு ஊரில் ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டபோது சிலர் தலையிட்டு, தடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அமைச்சர்களை சந்தித்து தகவல் தந்திருக்கிறார். நான் அந்த ஊர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. மேலும் நடவடிக்கை எடுக்கும்போது அப்படி யாரும் தடை செய்யக்கூடாது என்பதற்காகத்தான் எல்லோரும் இந்த காரியத்தில் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், கே. எஸ். கோதண்டராமையா, என். மருதாசலம், வா. மை. அப்துல் ஜப்பார் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை என் 35-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் மனலி சி. கந்தசாமி, எம். சுரேந்திரன், பி. வெங்கடசாமி, என். டென்னிஸ் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என் 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,87,34,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. கே. எஸ். கோதண்டராமையா, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை என் 36-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், சோ. அழகர்சாமி, எம். ஏ. லத்தீப் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என் 36—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,33,51,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை என் 37-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், சோ. அழகர்சாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என் 37—பொதுப்பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,09,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், என். மருதாசலம், கே. பி. கோபால் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை என் 38-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. என். குமாரசாமி, மனலி சி. கந்தசாமி, பி. வெங்கடசாமி, திரு. கே. ஏ. வகாப் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என் 38—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,86,05,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 50-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது.

திருவாளர்கள் கே. எ. வகாப், மணலி சி. கந்தசாமி, கே. டி. கே. தங்கமணி, கே. என். குமாரசாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,95,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : தலைவரவர்களே,

டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அனந்தநாயகி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 51-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், கே. டி. கே. தங்கமணி, மணலி சி. கந்தசாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,03,80,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : பேரவைத் தலைவரவர்களே, எனக்கு பேச அனுமதி அளிக்காததால் நான் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறேன். (திரு. வி. கிருஷ்ண மூர்த்தி அவையிலிருந்து வெளியேறினர்).

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 52-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது.

திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, மணலி சி. கந்தசாமி, என். டென்னிஸ் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 52—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,68,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.19 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

209. Notification issued with G.O. Ms. No. 7073, Revenue, dated the 26th November 1973 in regard to an amendment to Revenue Department Notification II-1 No. 3939 of 1969 published at pages 1–2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th December 1969 as subsequently amended. [Laid on the table of the House under section 13 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

[1974 மார்ச் 26

210. Notification issued with G.O. Ms. No. 6798, Revenue, dated the 12th November 1973 in regard to appointment of the Director of Settlements, Nagercoil to carry out the functions and duties assigned to the Director of Settlements, and delegation of powers exercisable by the Settlement Officers under the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964, (Tamil Nadu Act 30 of 1964).]

B. *Reports, Notifications and Other Papers*

@ 104. A Review on Irrigation in Tamil Nadu 1973–74. (English and Tamil).

@ 105. Speech by Hon. Thiru P. U. Shanmugam, Minister for Public Works on Demands for Irrigation and Public Works Department Grants 1974–75 (English and Tamil).

@ 106. A Review on the working of Minor Ports in Tamil Nadu 1973-74 (English and Tamil).

@ 107. A Review on the working of Tuticorin Harbour Project and Sethusamudrum Project in Tamil Nadu 1973-74 (English and Tamil).

---

@ Cut Motions circulated separately.

@ Despatched to Members on 23rd March 1974.



1974 மார்ச் 26]

## இணைப்பு I:

139-ம் பக்கத்தில் 615 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

விடை :—

(அ) தமிழ்நாட்டில் தற்போது 15 உயர் விளைச்சல் ரகங்களும், 4 இதர உயர் விளைச்சல் ரகங்களும், 5 பொறுக்கு வித்து ரகங்களும், ஆக 24 ரகங்கள் பெரும் அளவில் பயிரிடப் படுகின்றன. இதை தவிர்த்து உள்ளூர் ரகங்களும் பயிரிடப்படு கின்றன.

உயர் விளைச்சல் ரகங்களாவன :—

ஐ.ஆர். 20, ஐ.ஆர். 8, கருணா, காஞ்சி, அன்னபூர்ணா, பொன்னி, கண்ணகி, கரிகாலன், ஜயா, காவேரி, பவானி, ரத்னா, திரிவேணி, பாலா, பாமா ஆகிய 15 ரகங்கள்.

இதர உயர் விளைச்சல் ரகங்கள் :—

ஆடுதுறை 27, கோ. 29, கோ. 25, அம்பாசமுத்திரம் 14 ஆகிய நான்கு ரகங்கள்.

இவ்வினாவிற்கான விடை கீழ்க்கண்ட அட்டவணையில் விளக்கப்பட்டுள்ளது.—

| வரிசை எண். | நெல் ரகத்தின் பெயர். | வருடம் முழுவதும். | சொர்ணவாரி அல்லது கார் அல்லது குறுவை. | சம்பா. | தாளடி அல்லது பிஷாணம். | கோடை அல்லது நவரை. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | ஐ.ஆர். 20 | வருட முழுவதும். | | | | |
| 2 | ஐ.ஆர். 8 | .... | | | | |
| 3 | கருணா | .... | சொர்ணவாரி, கார், குறுவை. | | | |
| 4 | பொன்னி | .... | .... | சம்பா. | தாளடி பிஷாணம். | |
| 5 | கண்மணி | .... | சொர்ணவாரி, கார், குறுவை. | | | |
| 6 | கரிகாலன் | .... | சொர்ணவாரி, கார், குறுவை, | | | |
| 7 | ஜயா | .... | .... | | | |
| 8 | காஞ்சி | .... | சொர்ணவாரி, கார், குறுவை, | .... | .... | |
| 9 | அன்னபூர்ணா | .... | சொர்ணவாரி, கார், குறுவை. | .... | .... | கோடை. நவரை. |
| 10 | காவேரி | .... | சொர்ணவாரி, கார், குறுவை, | .... | .... | |
| 11 | பவானி | .... | ,, | சம்பா. | .... | ,, |
| 12 | ரத்னா | .... | ,, | .... | .... | ,, |
| 13 | திரிவேணி | .... | | | | |
| 14 | பாலா | வருட முழுவதும் | | | | |
| 15 | பத்மா | .... | ,, | .... | .... | ,, |
| இதர உயர்விளைச்சல் ரகங்கள்:— | | | | | | |
| 1 | ஆடுதுறை 27 | .... | சொர்ணவாரி, கார், குறுவை. | .... | .... | கோடை நவரை. |
| 2 | கோ 29 | .... | ,, | சம்பா. | தாளடி. பிஷாணம். | ,, |
| 3 | கோ 25 | .... | .... | ,, | ,, | .... |
| 4 | அம்பாசமுத்திரம் 14 | | கார், குறுவை. | .... | .... | .... |
| பொறுக்கு விதை நெல் ரகங்கள்:— | | | | | | |
| 1 | ஜி.இ.பி. 24 | .... | .... | சம்பா. | .... | .... |
| 2 | டி.கே.எம். 6 | .... | சொர்ணவாரி, கார் குறுவை. | .... | .... | கோடை நவரை. |
| 3 | எ.எஸ்.டி. 1 | .... | கார். | .... | .... | .... |
| 4 | பி.வி.ஆர். 1 | .... | .... | சம்பா. | .... | .... |
| 5 | பி.சி.வி. 1 | .... | .... | ,, | .... | .... |

ஐ.ஆர். 20, ஐ.ஆர். 8, ஜயா, பாலா ஆகிய நெல் ரகங்கள் வருட முழுவதும் பயிரிடலாம். கருணை, கண்ணகி, கரிகாலன், காஞ்சி, அன்னபூர்ணை, காவேரி, பவானி, ரத்னை, திரிவேணி, பத்மா, ஆடுதுறை 27, கோ 29, எ.எஸ்.டி. 14 (கார்) டி. கே. எம். 6, ஏ. எஸ். டி. 1 (கார்) ஆகிய நெல் ரகங்கள் சொர்ணவாரி அல்லது கார் அல்லது குறுவை பட்டத்தில் பயிரிடலாம்.

பொன்னி, பவானி, கோ 25, ஐ. இ. பி. 24, பி. வி. ஆர். 1, பி. சி. பி. 1 ஆகிய நெல் ரகங்கள் சம்பா பட்டத்தில் பயிரிடலாம்.

பொன்னி, கோ 25, நெல் ரகங்கள் தாளடி அல்லது பிஷாணம் பருவத்திலும் பயிரிடலாம்.

கோடை அல்லது நவரை பட்டத்தில் காஞ்சி, அன்னபூர்ணை, காவேரி, பவானி, ஆடுதுறை 27, கோ 29, டி.கே.எம். 6, நெல் ரகங்கள் பயிரிடலாம்.

(ஊ) ஐ.ஆர். 20, ஐ.ஆர். 8, ஜயா, பாலா, காஞ்சி, அன்னபூர்ணை, காவேரி ஆகிய உயர் ரகங்களும்,

ஆடுதுறை 27, கோ 29 ஆகிய இதர உயர் விளைச்சல் ரகங்களும்,

டி.கே.எம். 6 பொறுக்கு வித்து ரகமும் ஆகிய 10 ரகங்களும் மற்றும் சில உள்ளூர் ரகங்களும் கோடையில் பயிரிடப்படுகின்றன.

## இணைப்பு II

**144-ம் பக்கத்தில் 619 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட**
வினாவிற்குரிய விடையைக் காண்க.)

விடை—

அம்பாசமுத்திரம் அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது நடந்தேறி வரும் ஆராய்ச்சிப் பணியின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

விரைவில் வளரும் கலப்பின பயிர்கள் குறித்து ஆய்வு செய்வதன் மூலமும். A.S.D. 1, 2, 3 வகைகளுடன் தொடக்க சோதனை நடத்துவதன் மூலமும், மேற்கண்ட வகைகளின் விளைச்சலை ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமும் கார் காலத்தில் பயிரிடப்படும் தற்போதைய A.S.D. வகை பயிருக்குப் பதிலாக குட்டையான, கனத்த தாளுடைய உரங்களிடுவதால் பயனடையும் மிகு பயன்தரும் வகைப் பயிர்களை உருவாக்குதல்.





விரைவில் வளரும் கலப்பினப் பயிர்கள் குறித்து ஆய்வு செய்வதன் மூலமும், முறையே A.S.D. 4, 5 வகையுடன் ஒப்பிட்டு பயிர் விளைச்சல் சோதனையை நடத்துவதன் மூலமும். பிசானம் பருவக் காலத்தில் விளைவிக்கத் தகுந்த நடுத்தரக் காலப் பயிர் வகையை உருவாக்குதல்.

விரைவில் வளரும் கலப்பினப் பயிர்கள் குறித்து ஆய்வு செய்வதன் மூலம் பிசானம் பருவக் காலத்திற்குத் தகுந்த குலைநோய் எதிர்ப்புத் தன்மையுள்ள வகையை உருவாக்குதல்.

விரைவில் வளரும் கலப்பினப் பயிர்கள் குறித்து ஆய்வு செய்வதன்மூலம் கார், பிசானம் பருவக் காலத்திற்காக நெற் பயிர்களைத் தாக்குகின்ற தண்டு துளைப்பான் பூச்சி நோயை எதிர்க்கும் பயிர் வகையை உருவாக்குதல். பிசானம் பருவக் காலத்திற்கான நெற்கரளைப் பூச்சி தடுப்பு ரகப் பயிர் வகையை உருவாக்குதல்; இதனை A.S.D, 8 வகையுடன் ஒப்பிட்டு விளைச்சல் சோதனையை நடத்துதல்.

கார் பருவ காலத்தில் பிரபலமாக உள்ள பயிர் வகைகளுடன் ஒப்பிடுகையில் புதிதாகப் புகுத்தப்பட்ட பயிர் வகைகளின் வளர்ச்சி பற்றி ஆய்வு நடத்துதல்; இவற்றை A.S.D. 9 வகையுடன் ஒப்பிட்டு பயிர் விளைச்சல் சோதனையை நடத்துதல்; பிசானம் பருவக் காலத்தில் பிரபலமாக உள்ள பயிர் வகைகளுடன் ஒப்பிடுகையில் புதிதாகப் புகுத்தப்பட்ட பயிர் வகைகளின் வளர்ச்சி பற்றி ஆய்வு நடத்துதல்; இவற்றை A.S.D. 10, 11 வகையுடன் ஒப்பிட்டு பயிர் விளைச்சல் சோதனைகளை நடத்துதல்.

நெற்பயிருக்கு நைட்ரஜன் உரமிடும் கால அளவு குறித்தும், நைட்ரஜனையும் பொட்டாசியத்தையும் தனித் தனியாக வெவ்வேறு அளவுகளில் பயன்படுத்துவதால் உண்டாகும் பலன்கள் குறித்தும். அந்த இரண்டு உரங்களை ஒன்றாகப் பயன்படுத்துவதால் உண்டாகும் பலன்கள் குறித்தும் ஆய்வுகள் நடத்துதல்.

விதை நடும் காலம் குறித்து சோதனைகளை நடத்துதல்; நெற்பயிர் விளைச்சலில் துத்தநாகம் பயன்படுத்துதல், இடைவெளி விட்டு நடுதல், உரமிடுதல் ஆகியவை குறித்து சோதனைகளை நடத்துதல்; நாற்றங்கால் பற்றிய கால வரம்பு குறித்து ஆய்வுகள்.

4.—

The items of research work currently in progress at the Rice Research Station, Ambasamudram are as detailed below :—

Evolution of short statured, stiff strawed, fertiliser, responsive, high-yielding strains to replace existing ASD strains in kar season by the study of early generation hybrids and by conducting preliminary and comparative yield trial with ASD breeds 1, 2 and 3 respectively.

Evolution of a medium duration strain suitable for raising in Pishanam season by the study of early generation hybrids and by conducting comparative yield trial with ASD breeds 4 and 5 repectively.

Evolution of ' Blast ' resistant strain for Pishanam season by the study of early generation hybrids.

Evolution of a strain, resistant to paddy-stemborer for kar and pishanam by the study of early generation hybrids.

Evolution of ' Gal midge ' resistant strain for Pishanam season and conducting of comparative yield trial with ASD breed 8.

Study on the performance of newly introduced strains and varieties in comparison with popular strains under spread in kar and conducting of comparative yield trials with ASD breed 9.

Study on the performance of newly introduced strains and varieties as compared to popular stains under spread in Pishanam season and conducting of comparative yield trial with ASD breeds 10 and 11.

Studies on time of application of nitrogen to paddy and in the response of varying doss of nitrogen and potash separately and in combination.

Conducting of trials on 'time of sowing'.

Conducting of trials on the application of zinc to paddy, spacing and manuring.

Studies on 'the age of seedling'.



## இணைப்பு III

(149-ம் பக்கத்தில் 622 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

அடிசன் கம்பெனி நிர்வாகம் இரண்டு உற்பத்திப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை 1. பொறியியல் வெட்டுக் கருவிகள் உற்பத்தி செய்தல். 2. முரட்டுப பழுபபிரும்பு உறபத்தி செய்தல் (பவுண்டரி). 18—1—1973-ம் தேதி அன்று பொறியியல வெட்டுக் கருவிகள் உற்பத்தி செய்தல் பிரிவில வேலை செய்து வந்த ஒரு தொழிலாளியை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கியதன் காரணமாக தொழிலாளரிடையே வேலைநிறுத்தமும் வன்முறையும் 24—1—1973-ம் தேதி ஏற்பட்டது. அதன் விளைவாக 25—1—1973-ம் தேதி அன்று நிர்வாகம் கதவடைப்பு செய்தது. முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் தலையீட்டின் காரணமாக பொறியியல் வெட்டுக் கருவிகள் உற்பத்தி பிரிவில் மட்டும் 18—4—1973-ம் நாள் கதவடைப்பு நீக்கப்பட்டது. பவுண்டரி பிரிவை நிர்வாகம், நட்டத்தின் காரணமாகவும், மற்றும் பல்வேறு காரணங்களினாலும் மீண்டும் திறக்கவில்லை. 18—4—1973, 26—5—1973 ஆகிய நாட்களிட்ட அறிக்கைகளில் நிர்வாகம் கொடைப்பணம், நட்ட ஈடு, அறிக்கைக்குப் பதிலாக ஒரு மாத ஊதியம் தாங்களாகவே ஓய்வு பெறும் தொழிலாளிகளுக்கு தருவதாக அறிவித்தது. 4—7—1973 அன்று பவுண்டரி பிரிவு தொழிலாளர்களுக்கு நிர்வாகம் பவுண்டரி பிரிவை மூடிவிட நிர்மானித்துள்ளதாகவும், அதனால் பவுண்டரி தொழிலாளிகள் கொடைப் பணம், நட்ட ஈடு மற்றும் தங்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகை ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அறிவித்தது.

1—12—1972 அன்று பவுண்டரி பிரிவில் வேலைசெய்து வந்த தொழிலாளிகளின் எண்ணிக்கை . 333. நிர்வாகத்திடம் தங்களுடைய கணக்கை முடித்துக் கொண்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை, கணக்கை முடித்துக் கொள்ளாதவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | |
|---|---|
| டிசம்பர் 1972 முதல் ஜூலை 1973 வரை தாங்களாகவே வேலையிலிருந்து விலகியவர்களின் எண்ணிக்கை. | 65 |
| 1973-ல் மரணம் அடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 9 |

[1974 மார்ச் 26

| | |
|---|---|
| கெட்ட நடவடிக்கை காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 3 |
| மற்ற பிரிவுகளுக்கு மாற்றப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 3 |
| வேலையின்மை காரணமாக வேலையிலிருந்து நீக்கப் பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 233 |
| நிரந்தரமான மற்றும் சில வேலைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 27 |
| மொத்தம் | 333 |

| | |
|---|---|
| வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை—233. | |
| கொடைப்பணம் நட்ட ஈட்டுப்பணம் ஆகியவை பெற்றுக் கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 228 |
| கணிக்கப்பட்ட முறையில் ஒப்பந்தத்தின் காரணமாக நட்ட ஈட்டைப் பெற்றுக்கொண்டவரின் எண்ணிக்கை. | 1 |
| குடியிருக்கும் விலாசம் தெரியாத தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 1 |
| கொடைப்பணம், நட்ட ஈட்டுப்பணம் பெற்றுக் கொள்ளாதவர்களின் எண்ணிக்கை. | 3 |
| மொத்தம் | 233 |

பவுண்டரி பிரிவை மறுபடியும் திறக்கக்கோரி நிர்வாகத்திடம் பலமுறை பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால் நிர்வாகம் பவுண்டரி பிரிவை திறக்க இயலாது என தெரிவித்துவிட்டது.

தொழிற்சங்கம் பவுண்டரி பிரிவை மறுபடியும் திறக்க வேண்டும் என்றும் எல்லா தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் தொழிலாளர் துறை அலுவலர்முன் 10—12—1973-ம் நாள் தொழிற்தகராறை எழுப்பியுள்ளது.



[1974 மார்ச் 26

A.—The Addison and Company had two sections viz., the Tool Works Section and the Foundry Section. The suspension of a worker on 18th January 1973 in the Tool Works Section led to a strike by the workers and as there was violence on 24th January 1973, the management declared lock out on 25th January 1973. With the intervention of the then Minister for Labour, the lock-out in the Tool Works Section alone was lifted on 18th April 1973. The Foundry Section was not reopened by the management on account of loss of market and other reasons. By their notices, dated 18th April 1973 and 26th May 1973 the management offered gratuity and retrenchment compensation as well as one month's wages in lieu of notice to those workers, who were prepared to retire voluntarily. On 4th July 1973 they advised the Foundry workers that as the management had decided to close down the Foundry the workers could collect the gratuity, compensation and other dues.

The total number of employees in the Foundry Section as on 1st December 1972 was 333. The particulars of Workmen who have settled their accounts with the management and those who have not so far settled their accounts are furnished below :—

| | |
|---|---|
| Number of those who retired on voluntary basis (from December 1972 to July 1973) ... ... | 65 |
| Deaths in 1973 ... ... ... ... ... | 3 |
| Dismissed for serious misconduct in 1973 ... ... | 3 |
| Transferred to other departments .. ... ... | 3 |
| Terminated consequent on cessation of operations | 233 |
| Retained for residual and other work ... ... | 27 |
| Total | 333 |

| | |
|---|---|
| Total number of employees whose services were terminated ... ... ... ... ... | 233 |
| Number of employees who accepted gratuity and compensation ... ... ... ... | 228 |
| Number of employees who accepted compensation by private settlement ... ... ... ... | 1 |
| Number of employees whose whereabouts are not known ... ... ... ... ... | 1 |
| Number of employees who have not accepted payment ... ... ... ... ... ... | 3 |
| Total | 233 |

Several discussions were held with the management for re-opening the Foundry Section. But the management pleaded their inability to re-open the Foundary Season.

The union has raised a dispute before the Labour Officer on 13th December 1973 stating that the Foundry Section should be reopened and the workers reinstated.

## இணைப்பு IV

*(177-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)*

### பாசன-பொதுப்பணித் துறைக்கான மானியக் கோரிக்கைகள்

### 1974–75

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 35. பாசனம்" என்பதன்கீழ் ரூ 15,87,34,600-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 50. பாசனம்" மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் ரூ. 14,95,69,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 36. பொதுப் பணிகள்—கட்டிடங்கள்" என்பதன்கீழ் ரூ. 2,33,51,200-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 37. பொதுப்பணிகள்—பணியாளரமைப்பு" என்பதன்கீழ் ரூ. 4,09,95,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 38. சாலைகளும் பாலங்களும்" என்பதன்கீழ் ரூ. 19,86,05,300-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 51. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் மீதான மூலதனச் செலவு" என்பதன்கீழ் ரூ. 10,03,80,400-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை 52. சாலைகள், பாலங்கள் மீதான மூலதனச் செலவு" என்பதன்கீழ் ரூ. 4,63,00,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.





ஏற்கெனவேயுள்ள பாசன ஏற்பாடுகளை விரிவுபடுத்தவும், அவற்றை மேம்படுத்தவும் அவற்றிலிருந்து உரிய அளவு பயனைப் பெறும் வண்ணம் அவற்றைச் சரியான நிலையில் வைத்திருக்கச் செய்யப்படும் இயல்பான பேணுதல் செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் சேதங்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றிற்காகும் செலவும், நடப்பு வருவாயிலிருந்து "கோரிக்கைகள் 35. பாசனம்" ஆகியவற்றின்கீழ் அளிக்கப்படும் மானியத்தின் மூலம் பெறப்படும். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்ற அல்லது இவ் வரவு-செலவுத் திட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிற புதிய பாசனத் திட்டங்களின் மீதான செலவின் பெரும்பகுதி "கோரிக்கை 50. பாசனம் மீதான மூலதனச் செலவு" ஆகிய தலைப்புகளின்கீழ் அளிக்கப்படும் மானியத்திலிருந்து பெறப்படும்.

கட்டிடங்கள், பல்வகைப் பணிகள், போன்ற மூலப் பணிகளுக்கும், கட்டிடங்களைக் கட்டுதலும் சீரமைத்தல் போன்ற பழுதுபார்த்தல் செலவுகளும், இப்போதுள்ள கட்டிடங்களைப் பேணி வருவதற்குரிய இயல்பான செலவுக்கும் உள்ள நிதி ஒதுக்கீடு கோரிக்கை 36-ல் அடங்கும். பொதுப்பணித் துறைப் பணியாளர்களுக்காகும் மொத்த செலவு கோரிக்கை 37-ன் கீழ் வருகிறது. சாலைகள், பாலங்கள், பல்வகைப் பணிகள் போன்ற மூலப்பணிகளுக்கும், சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், சாலைகள், பாலங்கள், ஆகியவற்றைச் சீரமைத்தல் போன்ற பழுது பார்த்தல் பணிகளுக்கும் இப்போதுள்ள சாலைகளையும், பாலங்களையும் பேணி வருவதற்குரிய இயல்பான செலவுக்கும் உள்ள நிதி ஒதுக்கீடு கோரிக்கை 38-ல் அடங்கும். இதில், நெடுஞ்சாலைகள் துறையின் பணியாளர்களுக்காகும் மொத்த செலவும் அடங்கும். ஒவ்வொன்றும் தனித்தனியே ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டு செலவாகிற சாலைகள், கட்டிடங்களுக்குரிய புதிய பணிகளுக்கும் அல்லது தனித்தனியே இந்தத் தொகை வரம்புக்குக் குறைவாக இருப்பினும், தொடர்ச்சியான நோக்கம், கால அளவு கொண்டிருந்து மொத்தத்தில் ரூபாய் 5 இலட்சத்திற்குமேல் செலவாகக் கூடிய ஒரு திட்டத்தின் பாகமாகவுள்ள பணிகளுக்கும் ஆகும் செலவு முறையே 51, 52-வது கோரிக்கைகளின்கீழ் பெறப்படுகிறது.

இவ்வாறு 1974-75-ல் பாசனம், கட்டிடங்கள், சாலைகள் ஆகியவை குறித்துச் செலவிடக் கருதப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூ. 71,84,35,500 ஆகும்.

### பாசனம்

1973-74-ம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை, காவிரி பவானி ஆறுகளின் நீர்க்கோள் பகுதிகளில் இயல்பான அளவிற்குச் சற்று அதிகமாகவே பெய்தது. பெரியாறு, தாமிரவருணி, கோதையாறு ஆகிய பகுதிகளில் மழை இயல்பான அளவிற்குக் குறைவாகவே இருந்தது. வடகிழக்கு பருவ மழையின் போது மணிமுத்தாறு, பாபநாசம், கிருஷ்ணகிரி, சாத்தனூர், வைகை நீர்த்தேக்கங்களில் நீர்வரவு நல்ல வகையில் இருந்தது.

நடப்பாண்டில், நீர்த்தேக்கங்கள் அனைத்தும் பாசனத்திற்காக திறந்து விடப்பட்டன. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தின்கீழ், ஆயக்கட்டு நிலங்களில் வழக்கமாக நீண்ட காலப் பயிர் விளைவிப்பதுடன் ஆயக்கட்டு நிலப்பரப்பு முழுவதும் குறுகிய காலப் பயிர் விளைவிப்பதற்காக 1973 ஜூலை 23 ஆம் நாளிலிருந்து நீர் வழங்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட பயிர் முறையினால் காவிரி கயவாய்ப் பகுதியில் இந்த ஆண்டிலும் இரு போகம் விளைவிக்கும் திட்டம் மேலும் பல பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. கருநாடக அரசின் வேண்டுகோளின் பேரில், அந்த மாநிலத்திலுள்ள பயிர்களைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாட்டிற்கு அனுப்பவேண்டிய நீரிலிருந்து, 3,000 மில்லியன் கன அடி நீரை 1973 டிசம்பர், 1974 ஜனவரி ஆகிய திங்கள்களில் தற்காலிகமாக கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தில் தேக்கி வைப்பதற்கும், அவ்வாறு தேக்கி வைக்கப்பட்ட நீரை அடுத்த பாசன காலத்தின் ஆரம்பத்தில் வெளிவிடவும் நல்லெண்ணத்தின் அடையாளமாக இந்த அரசு ஒப்புக்கொண்டது.

தென்மேற்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, இக்கால அளவில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி ஆகிய நீர்த்தேக்கங்களில் பெறப்பட்ட நீரின் அளவு இயல்பான அளவிற்கு 32 சதவீதம் குறைவாயிருந்தது. வடகிழக்குப் பருவ மழையின்போதும் இந்த நீர்த்தேக்கங்களில் நீர்வரவு நன்றாக இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் 40,000 எக்கர் நிலத்திலுள்ள பயிர்களைக் காப்பதற்காக, 1974 பிப்ரவரி திங்களில் மேல் கோதையாறு நீரின் தேக்கத்திலிருந்து சிறப்பான நேர்வாக, கூடுதலாக நீர் வழங்க அரசு ஆணையிட்டது.

1973–74 ஆம் ஆண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டாகும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இத் திட்டக் காலத்தில், கீழ்க்கண்ட 9 புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டன :—

1. சின்னாறு திட்டம்.
2. தண்டரை அணைக்கட்டு திட்டம்.
3. நந்தன் வாய்க்காலைப் புதுப்பித்தல்.
4. கறுப்பா நதித் திட்டம்.
5. பொன்னணி ஆறு நீர்த்தேக்கத் திட்டம்.
6. பிளவுக்கல் திட்டம்.
7. பரப்பலாறு திட்டம்.
8. பாலாறு-பொரந்தலாறு திட்டம்.
9. மருதநதி திட்டம்.

இத்திட்டங்களினால், 0·19 லட்சம் எக்கர் புதிய பரப்பும் ஏற்கெனவேயுள்ள 0·44 லட்சம் எக்கர் பரப்பும் பயனடையும். இத் திட்டங்களில், பரப்பலாறு, பொன்னணியாறு திட்டங்கள் மட்டுமே நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முடிக்கப்படுமெனவும் எஞ்சியவை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முடிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படு



கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலில் சேர்க்கப்படாத கொடகனாறு திட்டத்திற்கு 1973 ஆகஸ்ட் திங்களில் அனுமதி வழங்கப்பட்டு அதன் தொடக்கப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1974-75—1978-79) முந்தைய திட்டங்களின்போது நிறைவேற்றப்படாமல் எஞ்சி நிற்கும் திட்டங்களைத் தவிர, இரு பெரும் திட்டங்களையும், புதிதாக 31 நடுத்தரத் திட்டங்களையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் பின்தங்கிய பகுதிகளுக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் இத்திட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த 31 திட்டங்களில், 14 திட்டங்கள் வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் பின்தங்கிய பகுதிகளிலும் செயல்படுத்தப்படுவனவாகும். மேற்கூறப்பட்ட 14 திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 15·90 கோடியாகும். (1) காவிரி கயவாய்ப்பகுதி பாசன ஏற்பாட்டைப் புதுப்பித்தல், (2) பெரியாறு கால்வாயைச் சீரமைத்தல் ஆகிய இரு திட்டங்கள் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளக் கருதியுள்ள இரு பெரும் திட்டங்களாகும். தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும் நடுத்தரத் திட்டங்கள், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட வேண்டுமெனவும் எய்தக் கருதியுள்ள பயன்களைத் திட்ட இலக்கு கால அளவிற்கு முன்பாகவே அடைய வேண்டுமெனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1974–75 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதற்காக 7 திட்டங்களுக்கு (வறட்சிப் பகுதிகள், பின்தங்கிய பகுதிகள் ஆகியவற்றில் நான்கும், ஏனைய பகுதிகளில் மூன்றும்) மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், பெரியாறு கால்வாய் சீரமைப்பு குறித்த பெருந் திட்டமும் அடங்கும்.

வைகைக் கால்வாயைப் புதுப்பித்தல் போன்ற தொடர் திட்டங்களைப் பொறுத்த வரையில், அவைகளின் பணிகளை விரைவாக முடித்து அவற்றின் பலனை இயன்ற விரைவில் பெறுவதற்கேற்ற வகையில் ரூ. 200 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1974–75 ஆம் ஆண்டில் பாசனத்திற்காக ஏறக்குறைய 1,000 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1974–75 ஆம் ஆண்டுக் காலத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்படும் திட்டங்களினாலும் புதிய திட்டங்களினாலும் கிட்டத்தட்ட 63,000 ஹெக்டேர் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில், 39,000 ஹெக்டேர் புதிதாக பாசன வசதி பெறும் நிலங்கள் பாக்கி 24,000 ஹெக்டேருக்கு பாசன உறுதி கிடைக்கும்.

புதிய திட்டங்கள் அனைத்தும், அன்னியச் செலாவணியையும் அதிக அளவில் இயந்திரங்களையும் பயன்படுத்தாமல், தொழிலாளர் உழைப்பையே பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களாகும். வீணாகும் நீரைத் தடுத்து புதிய பகுதிகளுக்குப் பாசனமளிக்க அதனைச் சேமித்து வைக்கும் நோக்கத்துடன் பழைய பாசனப் பணிகளைப் பழுதுபார்த்துச் சீரமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பழைய அமராவதி கால்வாய்களையும் பழைய தாமிரவருணி கால்வாய்களையும் புதுப்பிக்கும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளன. இப்பணிகள், குடியானவர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளதால் ஏனைய பழைய பாசனக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் பணிகளும் நாளடைவில் மேற்கொள்ளப்படும்.

பழைய காவிரி கயவாய்ப் பகுதி பாசன ஏற்பாட்டைப் புதுப்பிப்பதற்காக ரூ. 49·00 கோடி செலவிலான அடங்கல் மதிப்பீடு ஒன்று 1969-ல் தயாரிக்கப்பட்டு இசைவிற்காக மத்திய நீர் மின்சக்தி ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கு இசைவு கிடைக்கும்வரை, கால்வாய்களைச் சீரமைத்தல், வடிகால் வாய்க்கால்களுக்கு மேம்பாடு ஆகியவற்றுக்கான முன்னோடித் திட்டங்கள் முன்னரே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட முன்னோடித் திட்டங்களையொட்டி கால்வாய் புதுப்பிக்கும் திட்டத்தில் அடங்கியுள்ள, உடனடியாக நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாட பணி இனங்களை நிறைவேற்றுவதற்காக காவிரி கயவாய்ப் பகுதியில் "பழுது பார்த்தல் விரைவு திட்டம்" ஒன்றிற்கு அரசு 1972-ல் ஒப்புதல் அளித்தது. அதற்காக, 1972-73 முதல் 1975–76 முடிய சுமார் ரூ. 13·00 கோடி செலவு செய்ய நான்காண்டுத் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்தது.

பாசனத்திற்கு நீர் விடப்படாத நான்கு மாத குறுகிய காலத்தில், இத் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3 முதல் 4 கோடி செலவிட வேண்டியுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மதிப்பீடுகள் தயாரித்தல், ஒப்பந்தங்களை முடிவு செய்தல், பொருள்கள் வாங்குதல் போன்ற தொடக்கப் பணிகள் அனைத்தும் முன்னதாகவே செய்து முடிப்பதற்கேற்றவாறு இப்பணிகள் வகுக்கப்பட்டுள்ளன. அப்போதுதான் கால்வாயில் நீர்விடப்படாத கால அளவிற்குள் இப்பணிகளைத் தொடங்கி அவற்றை முடிக்க இயலும். இப்பணி குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டு குறுகிய கால அளவிற்குள் நிறைவேற்றப்பட்டுள்ளது. பணிகளை விரைந்து மேற்கொள்ளும் இந்தப் போக்கு அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து பின்பற்றப்படும்.

பழுதுபார்த்தல் விரைவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணித் திட்டங்களினால் செவ்விய முறையில் நீர் வழங்குவதற்கேற்றவாறு பாசன ஏற்பாடு மேம்பாடடைந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் பாசனக் காலங்களின்போது கயவாய்ப் பகுதியில் நீர்ப் பற்றுக்குறை குறித்துப் புகார்கள் வருவது வழக்கமாக இருந்தது. இப்போது இது கணிசமான அளவு குறைந்துள்ளது.

மேல் அணைக்கட்டில் காவிரியின் கிளையில் ரூ. 212·00 இலட்சம் செலவில் குறுக்கு அணை ஒன்று கட்ட அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது. இப்பணி விரைவில் மேற்கொள்ளப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேல் அணைக்கட்டில், காவிரி ஆற்றில் வெள்ளம் வருவதைக் கட்டுப்படுத்த இது உதவும்.

### சிறு பாசனம்:

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிவரை ரூ. 4,507 லட்சம் செலவில் சிறுபாசன சிறப்புத் திட்டத்தின்கீழ் 15,678 பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டன. இதனால், 6·5 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு இடையறு பாசன உறுதி கிடைப்பதோடு 1·71 லட்சம் ஹெக்டேர் புதிய பரப்பும் பயனடையும். இதனால், கூடுதலாக 5·96 லட்சம் டன் உணவு உற்பத்தி கிடைக்கும்.





ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறுபாசன சிறப்புத் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 3,000 லட்சத்தில், 1974-75-ல் 725 பணிகளை மேற்கொள்வதற்காக ரூ. 500 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தூர் எடுத்தல்**—பண்படுத்துதல் திட்டத்தின்கீழ், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் ரூ. 205 லட்சம் செலவில் 201 பணிகள் நிறைவேற்றப்பட்டுவிடும். ஏற்கனவேயுள்ள 4,900 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசன உறுதி கிடைப்பதோடு புதிதாக 3,000 ஹெக்டேர் பரப்பளவிற்குப் பாசனம் கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கிடைக்கும் கூடுதல் உணவு உற்பத்தி 11,700 டன்களாகும்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இத் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட ரூ. 100 லட்சம் நிதி ஒதுக்கத்தில், ரூ. 25 லட்சம் 1974–75-ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஏரிக்கொள்ளளவு திறனைப் பெருக்கும் திட்டமும், ஊராட்சிகளிடம் நிலைபெற்றுள்ள ஏரிகளுக்கான முக்கிய மேம்பாடுகளும்.

ஏரிகளைப் பார்வையிட்டு அவற்றை நல்ல தரமான நிலைக்குக் கொண்டு வருவதற்காக (ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளின் பொறுப்பின் கீழுள்ள ஏரிகள் உட்பட) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 15 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1974–75-ஆம் ஆண்டிற்காக ரூ. 1·50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடிமராமத்து

குடிமராமத்துப் பணிகள் குறித்து உழவர்கள் தங்கள் பங்குத் தொகையைக் கொடுக்கத் தயங்குவதாலும் இப் பணிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2·50 செலவு செய்யலாம் என்று உச்சவரம்பு வைத்து வரையறை செய்திருப்பது போதாமையாலும் நமது பாசன ஏற்பாட்டு முறைகளில் உள்ள கால்வாய்களில் பல ஆண்டுகளாகக் குடிமராமத்துப் பணி சரிவர செய்யப்படவில்லை. இந்தப் பாசன கால்வாய்கள் மேலும் பயனற்று போகாமல் தடுக்க இவைகளில் குடிமராமத்துப் பணிகளை அரசு மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்து முதல் கட்டமாக ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கு நீர் வழங்கும் வாய்க்கால்களில் குடிமராமத்து பணிகள் பொதுப்பணித் துறை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு அண்மையில் முடிவு செய்துள்ளது. இப்பணிக்காகும் செலவை அரசும் ஆயக்கட்டுதாரர்களும் 4 : 3 என்ற வீதத்தில் பகிர்ந்துகொள்வார்கள்.

### ஆராய்ச்சி

பூண்டியில் உள்ள பாசன ஆராய்ச்சி நிலையம் 1945-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அணைகளைக் கட்டுவதிலும், வெள்ளத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுவதிலும், கரையோரப் பொறியியல் பணிகளிலும் எழக் கூடிய நீரியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்நிலையம் கணிசமான பயனுள்ள பங்கினை ஆற்றியுள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. செய்முறை நீரியல் ஆராய்ச்சியிலிருந்து அடிப்படை, ஆதார ஆராய்ச்சிப் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் நீரியல், புவி நீரியல், வான்

நீரியல், கரையோர பொறியியல் போன்ற புதிய துறைகளில், பூண்டி பாசன ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி நடத்த இயலும் வகையில், 1973-74 நிதி ஆண்டு முதல் அந்நிலையத்தை நீராற்றல், நீரியல் (Hydraulics and Hydrology) நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. மாநிலத்தில் பெருகிவரும் தேவைகளை அடுத்துவரும் ஆண்டுகளில் நிறைவு செய்வதே இதன் நோக்கமாகும்.

## பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள்

பொறியாளர்களுக்கு மேலும் பல வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் கருத்துடன் தமிழ்நாட்டில் உள்ள பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள்பற்றி ஆய்வு செய்வதற்கு 10 கோட்டங்களை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்திய அரசின் நிதி உதவியுடன் இவை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்டத்தின்கீழ் சேராத வேலைத் திட்டங்களின்கீழ் மத்திய அரசு நிதி உதவியைக்கொண்டு இதுவரை இச்செலவு செய்யப்பட்டது. இதனைத் திட்டத்தில் சேர்ந்த வேலைத் திட்டத்தின்கீழ் சேர்க்கத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் பொறியியல், வேளாண்மைக் கூறுகள் குறித்த ஆய்வை மேற்கொள்வதற்காக "கிராமப் பொறியியல் ஆய்வு" எனப்படும் இந்திய அரசுத் திட்டம் இம் மாநிலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது. வேளாண்மைப் புள்ளி விவரங்கள், மக்கள் தொகை, அவர்களின் வருமானம் குறித்த புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், தற்போதுள்ள குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சக்தி வசதி ஆகியவைபற்றிய விவரங்களைத் தொகுக்கவும், வரும் காலங்களில் முழு அளவிலான திட்டங்களைத் தயாரிக்க இயலும் வகையில் தள எல்லை வேறுபாடு குறித்த நிலப் படங்களைத் (Contour map) தயாரிக்கவும் இந்த ஆய்வு வகை செய்கிறது. மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள 25 ஆய்வு குழுக்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுகின்றன. இதுவரை, 187 கிராமங்களில் பொறியியல் ஆய்வுப் பணியையும், 99 கிராமங்களில் வேளாண்மை ஆய்வுப் பணியையும் அவை முடித்துள்ளன.

## புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள்

1972 டிசம்பரில் வீசிய கடும் புயலினாலும், வெள்ளத்தினாலும் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டன. அதனால் 4,000-க்கு மேற்பட்ட வெள்ளத் தடுப்புப் பணிகளை சுமார் ரூ. 9·50 கோடி செலவில் மேற்கொள்ள வேண்டி வந்தது. வெள்ளப் பழுதுபார்க்கும் பணிகளைக் கவனிக்க வேண்டி சிறப்புப் பணியாளர்களை உடனடியாக நியமிக்க அரசு அனுமதி வழங்கியது. உடைப்புகளை அடைக்கவும், நீரைப் பாசனத்திற்காக சேமிக்கவும் இப்பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டன. பாசனத்திற்கு இடையூறின்றி உடைப்புகளை அடைக்கும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. இயற்கைத் தரங்களுக்கேற்ப நல்ல நிலைக்குக் கொண்டுவரும் பணி தற்போது நடந்தேறி வருகிறது.



இம் மாநிலத்தைப் பார்வையிட்ட மத்திய அரசு ஆய்வுக் குழு எனையவை குறித்துப் பரிந்துரைக்கையில், பெரும் பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 400 லட்சம் ஒதுக்கப்படலாமென்று பரிவுரை செய்தது.

1972–73-ல் ரூ. 100 லட்சத்திற்கும் 1973–74-ல் ரூ. 300 லட்சத்திற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. எதிர்பார்த்த நிதிகள் இந்திய அரசிடமிருந்து கிடைக்காததால் 1973–74-ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 245 லட்சத்திற்குக் குறைக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. 1972-73-ல் ரூ. 72·58 லட்சமும் 1973 செப்டம்பர் இறுதிவரை ரூ. 138 லட்சமும் செலவிடப்பட்டது. பொன்னியாற்றுக்குக் குறுக்கே கட்டப்பட்டுள்ள திருக்கோயிலூர் அணைக்கட்டு அடித்துச் செல்லப்பட்டதால் அங்கு ரூ. 225 லட்சம் செலவில் குறுக்கு அணை ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

## மிகு வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளின் திட்டம்

வறட்சியால் மிகவும் பாதிக்கப்படும் பகுதி குறித்த திட்டம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாகும். இதற்கு இந்திய அரசு முழு நிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாட்டில் தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் நிலவும் நீர் பற்றுக்குறையைத் தீர்க்க வேண்டி அங்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த இம்மாவட்டங்கள் இந்திய அரசால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில், பெரும் பாசனத்துறையின் கீழ் சுமார் ரூ. 89·26 லட்சம் செலவில் 46 பாசனத் திட்டங்களும் மண்வளப் பாதுகாப்பின் கீழ் ரூ. 4·74 லட்சம் செலவில் குளம் வெட்டும் திட்டங்கள் 11-ம் பொதுப்பணித்துறையால் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 21 பாசனத் திட்டங்களும் குளங்கள் வெட்டும் திட்டங்கள் நான்கும் முடிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரும் பாசனத் திட்டத்தின்கீழ் ரூ. 31·38 லட்சம் செலவில் 118 திட்டங்கள் பொதுப்பணித் துறையால் நிறைவேற்றுவதற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்பது திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டங்களில் அவசர சிறுபாசன சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தல், ஏரி, நீர்வழங்கு வாய்க்கால் ஆகியவற்றில் தூர் எடுத்தல், ஆகியவை குறித்து 50 சதவீதம் மத்திய உதவித்தொகையுடன் ரூ. 320 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

## கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்கள்

செங்கற்பட்டு மாவட்டம் கோவளத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அரபிக் கடற்கரை நெடுகவும் தொடர்ந்து கடல் அரிப்பு ஏற்பட்டு வருவதால் அரபிக் கடற்கரை நெடுக 14·5 கிலோ மீட்டர் தொலைவுவரை ரூ. 351 லட்சம் செலவில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் ஒன்று கட்டுவதற்கான தொடக்க மதிப்பீடு, முழு மத்திய நிதி உதவிக் கேட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மாநில வெள்ளத் தடுப்பு வாரியம் மூலமாகவும்

தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் மூலமாகவும் இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு மத்திய நீர்-மின்சக்தி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட வேண்டுமென்று இந்திய அரசு அண்மையில் கேட்டுக்கொண்டுள்ளது. அவ்வாறே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### பக்கிங்ஹாம் கால்வாய்

தமிழ்நாடு எல்லைக்குள் ரூ. 20 இலட்சம் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயில் தூரெடுக்கும் திட்டத்தை மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக நிறைவேற்ற ஏற்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கால்வாய் முழுவதிலும் தூரெடுக்கும் பணியும், கால்வாய் பாதுகாப்புப் பணிகள் சிலவும் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகளை 1974 மார்ச் திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எல்லைக்குள் பக்கிங்ஹாம் கால்வாயை ரூ. 600 லட்சம் செலவில் அகலப்படுத்தவும், ஆழப்படுத்துவதற்குமான பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, ரூ. 350 லட்சம் செலவில் கால்வாயின் வடக்குப் பக்கத்திலுள்ள பணிகள் நான்காவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் ஆறு ஆண்டுகளில் முடிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூ. 250 இலட்சம் செலவில் கால்வாயின் தெற்குப் பகுதிப் பணிகள் ஐந்தாவது, ஆறாவது திட்டக்காலங்களில் மேற்கொள்ளப்படும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேற்சொன்ன பணிக்கு ரூ. 100 லட்சம் ஒதுக்க இந்திய அரசு தற்போது ஒப்புக்கொண்டுள்ளது. இப்பணிகள் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிக்கு 1973–74 திருத்த மதிப்பீட்டில் ரூ. 41·77 லட்சமும் 1974–75 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 81·09 லட்சமும் நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

### காவிரி நிர் தகராறு

காவிரி நீர் தகராறைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளவும் காவிரி நீர் தொடர்பான தகவல் அனைத்தையும் சேகரிக்க தகவல் தொகுக்கும் குழு ஒன்றை நியமிக்கவும், 31–5–1972-ல் புதுடில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு, கேரளா, கருநாடகம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களிடையே ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது.

காவிரி நீர்த் தகராறு குறித்துத் தகவல் தொகுக்கும் மத்தியக் குழு தனது அறிக்கையை 15–12–1972-ல் இந்திய அரசுக்கு அனுப்பியது. மூன்று மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தை, அப்போது மத்தியப் பாசன-மின்சக்தி அமைச்சராயிருந்த டாக்டர் கே. எல். ராவ், புதுடில்லியில் 29–4–1973-ல் கூட்டினார். காவிரி நீர்த் தகராறு குறித்து மேற்கொண்டும் சில விவரங்களைச் சேகரிக்க காவிரி தகவல் தொகுக்கும் குழுவை மீண்டும் நியமிக்க அப்போது முடிவு செய்யப்பட்டது. காவிரி நீர் குறித்துத் தகவல் தொகுக்கும் குழு அந்தக் கூடுதல் அறிக்கையை 14–8–1973-ல் அனுப்பியது.





மாநிலங்களுக்கிடையேயான இரண்டாவது கூட்டம் 1973-ஆம் ஆண்டு அக்டோபர் 9, 10 ஆம் நாட்களில் புதுடில்லியில் நடைபெற்றது. காவிரி நீர்பள்ளத்தாக்கில் தற்போது நிறைவேற்றப்படும் திட்டங்களிலும் இனி நிறைவேற்றப்படத் திட்டமிட்டுள்ள திட்டங்களிலும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து ஆய்வுகளை நடத்த, இந்திய அரசு பாசன-மின்சக்தி அமைச்சகத்தின் கூட்டுச் செயலாளரான திரு. C. C. படேலின் தலைமையில் ஆய்வுக் குழு ஒன்றை நியமிப்பதென அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்த ஆய்வுக் குழு 1–11–1973 முதல் 5–11–1973 வரை தமிழ்நாட்டில் தங்கியிருந்து காவிரி கயவாய்ப் பகுதியில் உள்ள குறிப்பிட்ட திட்டப்பகுதிகள் சிலவற்றை 2–11–1973 லிருந்து 4–11–1973 வரை பார்வையிட்டது. தலைமைச் செயலகத்தில் 5–11–1973 அன்று தலைமைச் செயலாளரும், பொதுப்பணித்துறைச் செயலாளரும் ஆய்வுக் குழுவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். காவிரிநீர் பள்ளத்தாக்கு குறித்து ஆய்வுக்குழுவிற்கு மேற்கொண்டும் தேவைப்படுகிற விவரங்கள் 8–11–1973-ல் அக்குழுவிடம் கொடுக்கப்பட்டன. ஆய்வுக் குழு தனது ரகசிய அறிக்கையை இந்திய அரசுக்கு விரைவில் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து பேச்சுவார்த்தைகள் மூலம் ஓர் உடன்பாட்டிற்கு வர, தமிழ்நாடு, கேரளா, கருநாடக மாநிலங்களின் முதலமைச்சர்கள் மத்திய பாசன-மின்சக்தி அமைச்சரின் தலைமையின் கீழ் மேற்கொண்டும் பேச்சுவார்த்தைகள் அப்போது நடத்துவர்.

### மேற்கு தொடர்ச்சிமலை மேம்பாடு.

இந்த மாநிலம் தன்னுடைய மேற்பரப்பு நீர்வளத்தில் பெரும் பகுதியைப் பயன்படுத்தி விட்டது. அண்டை மாநிலங்களின் உபரி நீரினைப் பெற இனி பேச்சு வார்த்தை நடத்த வேண்டியுள்ளது. இந்த முறையில் முதல்படியாக, மேற்கு தொடர்ச்சி மலை வட்டாரத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சி குறித்து இந்த அரசு தோராய ஆய்வை மேற்கொண்டுள்ளது. இது குறித்துப் பொருத்தமான செயற்குறிப்புகளை உருக்க, அந்தந்த அரசுகளின் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படவேண்டுமென்று இந்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூர் மாநகருக்கான சிறுவாணி நீர் வழங்கு திட்டம் கடந்த பல ஆண்டுகளாக இழுபட்டுக்கொண்டே வந்தது. இப்போது இத்திட்டத்திற்குத் தீர்வு காணப்பட்டு கேரள அரசுடன் 1973 ஆகஸ்டில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இத்திட்டத்தின் பணிகள், தமிழ்நாடு, கேரளா அரசுகளின் முதலமைச்சர்களால் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு 20 ஆம் நாளன்று தொடங்கிவைக்கப்பட்டன. தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கங்கை-காவிரி இணைப்பு.

கங்கையைக் காவிரியுடன் இணைப்பதற்காக வகுக்கக் கருதியுள்ள தேசிய நீர் இணைப்புத் திட்டத்தின்கீழ் காவிரியைக் கோதாவரியுடனும், கிருஷ்ணா நதியுடனும் இணைக்கும் பணி முதல் நிலையிலேயே மேற்கொள்ளப்படலாம் என்று இந்த அரசு மத்திய அரசுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளது. ஏனெனில், இந்த இணைப்பில் உயர்மட்டத்திற்கு நீரேற்றும் பணி இல்லை. கால்வாய் வெட்டும் அதே நேரத்தில், இதன் பயன் உடன் கிடைக்கப் பெறும்.

## நிலநீர் ஆய்வு.

இம் மாநிலத்தின் வண்டல் மண் பகுதிகளில் வடி நிலப்பகுதி வாரி யாக விரிவான, அறிவியல் சார்ந்த நில நீர் ஆய்வை மேற்கொள்வதில் நாட்டிலேயே தமிழ் நாடு முன்னணியில் நிற்கிறது. இந்த ஆய்வு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப் பட்டது. முதல் நிலையில் நில நீர் ஆய்வு குறித்த முறையான, அறிவியல் அடிப்படையிலான முன்னோடிப் பணி தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. சென்னை மாநகர், அதன் சுற்றுப்புறங்கள், பாலாறு, நெய்வேலிப் பகுதிகளில் நிலத்திற்குள் கீழே நல்ல நீரோட்டம் இருக்குமிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மீஞ்சூர்—பஞ்செட்டி—தாமரைப் பாக்கம் நீரோட்டத்திலிருந்து எடுக்கப்பட்ட நிலநீர், குழாய் மூலம் சென்னை யில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. 1969-ல் தொடங்கப்பட்ட இரண்டாவது நிலைப் பணி 1972-ல் நிறைவேற்றி முடிக்கப் பட்டு, இறுதி அறிக்கை ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கு அதன் அனு மதிக்காக அனுப்பப்பட்டது. இரண்டாவது நிலையின் கீழ், காவிரி கயவாய்ப் பகுதியில் விரிவான, முனைப்பான நில நீர் ஆய்வு நடத்தப்பட்டது.

நில நீர் இயக்குநர் அலுவலகம் 9 கோட்டங்களுடன் 1970-ல் தமிழ் நாடு அரசினால் அமைக்கப்பட்டது. அவை, மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் ஒரே சமயத்தில் ஆய்வை மேற்கொண்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதிக்குள் இந்த ஆய்வுப் பணி முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ரூபாய் 49 இலட்சம் செலவில் நீர் வாயில்களை மதிப்பிடுதல், நீர் எடுத் தல், நீரைப் பயன்படுத்துதல், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் ஆகியவை பற்றி ஆய்வை மேற்கொள்ளவும், தண்ணீர் பிரச்சினைகள் பற்றி ஆராய்ச்சி நடத்தவும் இம் மாநிலத்தில் நீர் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்புக்கும் அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித் துள்ளது.

## கட்டடங்கள்.

பொதுப் பணித்துறையின் கட்டடப் பிரிவின் முக்கியமான அலுவல் மாநில அரசின் பெரும்பாலான துறைகளின் கட்டடத் தேவைகளை நிறைவேற்றுவதே ஆகும்.

பல்வேறு துறைகளின் தேவைகளுக்கிணங்கத் திட்டமிடுதல், வடி வமைப்பு, கட்டடம் கட்டும் வேலை ஆகியவற்றுக்குக் கட்டடப் பிரிவு பொறுப் புடையதாகும். இவை தவிர, சிறப்பு நேர்வுகளில் மத்திய அரசுத் துறைகளுக்கும் ஓரளவு அரசுத் தன்மையுள்ள பிற அமைப்புகளுக்கும் கட்டடம் கட்டும் பணிகளை இத் துறை முகவர் நிறுவனமாயிருந்து நிறை வேற்றுகிறது. மாநில அரசுக் கட்டடங்களைப் பேணும் பொறுப்பும் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





இதுவரை கட்டி முடிக்கப்பெற்ற அல்லது கட்டடப்பணி நடந்து வருகிற அல்லது முடியுந்தருவாயிலுள்ள பெரும்பணிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி II-வது தொகுதிக்கு மேல் முதல், இரண்டாவது மாடிகள் கட்டுதல். | 10·50 |
| 2 | காஞ்சிபுரத்தில் புற்று நோய் மருத்துவமனை கட்டுதல். .. | 27·00 |
| 3 | ஈரோடு, அரசினர் மருத்துவமனையில் கூடுதலாகக் கட்ட டங்கள் கட்டுதல் .. .. .. .. .. | 20·44 |
| 4 | சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைத் தொகுதி கட்டுதல் .. .. .. | 15·00 |
| 5 | சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் அறுவைச் சிகிச்சைத் தொகுதிக்கு மேல் கூடுதலாக மாடி கட்டுதல் .. .. .. .. | 14·00 |
| 6 | கிண்டி, கிங் நிறுவனத்தில் குளிர்ப் பதன வசதிகளுக்கும் பணி வசதிகளை மேம்படுத்துவதற்கும் வகை செய்தல். | 16·64 |
| 7 | மதுரை, எர்ஸ்கின் மருத்துவ மனையில் சிசு நோய்ச் சிகிச்சைத் தொகுதி கட்டுதல் .. .. .. | 17·00 |
| 8 | சிதம்பரத்தில் அரசு மருத்துவ மனை கட்டுதல் .. .. | 10·90 |
| 9 | பொள்ளாச்சியில், அரசினர் மருத்துவ மனை கட்டுதல் .. | 10·00 |
| 10 | திருநெல்வேலி நாட்டு மருத்துவக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டுதல் .. .. .. .. .. | 10·00 |
| 11 | சென்னை, நந்தனம் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் .. .. .. | 21·00 |
| 12 | உடுமலைப்பேட்டை அரசினர் கலைக் கல்லூரிக்கு நிலையான கட்டடங்கள் கட்டுதல் .. .. .. .. | 13·35 |
| 13 | செய்யாறு, அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் அறிவியற் பகுதிக்குக் கட்டடம் கட்டுதல் .. .. | 12·30 |
| 14 | திண்டுக்கல், மகளிர் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுதல் .. | 13·35 |
| 15 | மாயூரம், அரசினர் மகளிர் கலைக் கல்லூரிக்கு நிலையான கட்டடம் கட்டுதல் .. .. .. .. .. | 13·35 |
| 16 | மன்னார்குடி, அரசினர் ஆடவர் கலைக் கல்லூரிக்குக் கட்ட டம் கட்டுதல் .. .. .. .. .. | 13·35 |
| 17 | வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல் லூரிக்குக் கட்டடம் கட்டுதல் .. .. .. .. | 15·40 |
| 18 | சட்டக்கல்லூரி மாணவர் இல்லத்திற்குக் கூடுதல் கட்ட டம் கட்டுதல் .. .. .. .. .. .. | 12·00 |
| 19 | தல்லாகுளம் கண்மாய் இடத்தில் மதுரை மாநகராட்சி அலுவலகத்திற்காகக் கட்டடம் கட்டுதல் .. .. | 70·70 |

[1974 மார்ச் 26

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 20 | அங்காடி கட்டுதல் II-ம் நிலை (வேலூர் நகராட்சி) .. | 15.13 |
| 21 | கோயம்புத்தூர் நகராட்சி—வண்டிப்பேட்டையில் 6 மாடி கட்டடம் கட்டுதல்—முதல் நிலையில் அடித்தளமும் முதல் மாடியும் மட்டுமே அடங்கும் .. .. | 23·73 |
| 22 | மதுரை நகராட்சி நகர மன்றம் .. .. .. | 13·00 |

மேற்சொன்ன திட்டப் பணிகளைத் தவிர, ரூ. 5·738 கோடி மதிப்பீட்டுச் செலவில், திருச்சிராப்பள்ளியில் சிறு படைக்கலத் திட்டம் குறித்த பணிகள் நிறைவேற்றப்படுவதற்காக பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டன. இப்பணி 1964 மார்ச் திங்களில் தொடங்கப்பட்டது. திட்டப் பணியில் பெரும் பகுதி முடிவடைந்து விட்டது. மேற்சொன்ன பணிக்காக இதுவரை ரூ. 5·44 கோடி செலவிடப்பட்டுள்ளது. ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னையில் தொலைக் காட்சி ஒளிப்பரப்பு நிலையம் (டி. வி. ஸ்டேஷன்) ஒன்றை நிறுவும் பணி, பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. நிலையம் கட்டும் பணி முடிவடையும் நிலையிலுள்ளது.

**வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளரமைப்பு.**

பொதுப் பணித் துறையில் சுமார் 12,000 பணியாளர் உள்ளனர். அவர்களில் 8,000 பேர் தற்போது அரசுப் பணித் தரங்களில் பணிபுரிகின்றனர். 4,000 பேர் அரசுப் பணியின்கீழ் வராத பணித் தரங்களில் பணிபுரிகின்றனர். தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டுள்ள சம்பள வீதங்கள், பொதுப் பணித் துறையில் முறையான அரசுப் பணியின்கீழ் கொண்டு வரப்பட்ட பணியாளர்களுக்கும் பொதுப் பணித் துறையின் 1973 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் 1970-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் தேதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள் துறையைப் பொறுத்தமட்டில், சாலை ஆய்வாளர்கள் சுமார் 2,516 பேரும் கருவிகள் தளவாடப் பணியாளர்கள் 1,625 பேரும் 1970 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் தேதியிலிருந்து அரசுப் பணியின்கீழுள்ள பணித்தரங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இப்பணியை அரசுப் பணியின்கீழ்க் கொண்டுவந்ததன் மூலம், பொதுப் பணித் துறையிலும், நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள் துறையிலும் அரசுப் பணியின்கீழ் உள்ள இவ்வகைப்பணியாளர்களுக்கு அனுமதிக்கத் தக்க சம்பள வீதங்கள், அகவிலைப்படி, வீட்டுவாடகைப்படி, பணிக்கொடைக்குப் பதிலாக உதவித்தொகை பெறும் வருங்கால வைப்புநிதிப் பயன்கள், விடுப்பு, பணியில் சேரும் காலம், பிற பயன்கள் ஆகியவற்றைப் பெற இப்பணியாளர்கள் தகுதிபெறுவர்.

பொதுப்பணித் துறையில் அரசுப் பணியின்கீழ் வராத வேலை நிதி ஊதியம் பெறும் பணியாளர்கள் நெடுஞ்சாலை-கிராமப்பணிகள் துறையில் கருவிகள் தளவாடப் பணியாளர்கள், சாலை ஆய்வாளர்கள் ஆகியோர் 24—11—1970 அன்றுள்ளவாறு 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டுப் பணியாற்றியிருந்தால் அவர்களின் பணிகள் மேற்சொன்ன நாளிலிருந்து



1974 மார்ச் 26]

அரசுப்பணியின்கீழ்க் கொண்டுவரப்பட வேண்டுமென்று பொதுப்பணித் துறையின் 9—1—1971 ஆம் நாளிட்ட 95 ஆம் எண் அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இதைத் தவிர, 1—4—1973 அன்றுள்ளவாறு 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் அரசுப் பணியின்கீழ் வராத தொகுதி மஸ்தூர்களின (Gang Mazdoors) பணிகள் அரசுப் பணியின்கீழ்க் கொண்டு வரப்படவேண்டும் என்றும் பொதுப்பணித் துறையின் 26—6—1973 ஆம் நாளிட்ட 1032 ஆம் எண் ஆணையில் அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆணைகளினால் சுமார் 6,762 மஸ்தூர்கள் பயனடைகின்றனர்.

மேலும், நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள் துறையிலும், தேசிய நெடுஞ்சாலைகள் துறையிலும் ஓராண்டுக்குமேல் பணியாற்றியுள்ள மஸ்தூர்கள் அனைவருக்கும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மிதியடிகள் வழங்குமாறும் பொதுப்பணித்துறையின் 26—4—1973 ஆம் நாளிட்ட 688 ஆம் எண் அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

**சாலைகள் மேம்பாடு.**

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையின் பொறுப்பின்கீழ் 65,024 கிலோ மீட்டர் சாலைகள் இருந்தன. 1973 மார்ச் திங்களில் அத்துறையின்கீழ் இருந்த சாலையின் மொத்த நீளம் 71,442 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் சாலையின் மொத்த நீளம் 72,620 கிலோ மீட்டராக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள பேருந்து வழித்தடச் சாலைகளை இவ்வரசு மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் 1972-73 வரையில் 10,965 கிலோ மீட்டர் பேருந்து வழித்தடச் சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 4,400 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இன்னும் மேற்கொள்ளப்படாமல் உள்ளன. 1973-74-ல் 1,636 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

1973-74-ல், நெடுஞ்சாலைகள் துறை தனது கட்டுப்பாட்டின்கீழும், நிர்வாகத்தின்கீழும் வைத்து வருவதற்காக நகராட்சி மன்றங்களிடமிருந்து 70 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து வழித்தடச் சாலைகளை மேற்கொள்ளுமாறும் அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. இந்த 70 கிலோ மீட்டர் நகராட்சி சாலைகளைப் போக்குவரத்துக்கேற்ற நிலைக்குக் கொண்டுவருவதற்கு மொத்தம் ரூ. 20 இலட்சம் செலவாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலை மேம்பாட்டுக்காக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 2,689 இலட்சமாகும்.

1972-73-ல் தொடங்கப்பட்ட கிராமச்சாலைகள் சிறப்புத் திட்டம் கணிசமான அளவு மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளது. 1,500 பேருக்கும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய எல்லாக் கிராமங்களையும் சிற்றூர்களையும், ரூ. 19 கோடி மதிப்பீட்டுச் செலவில் வரையறுத்த கால அளவிற்குள்ளும், படிப்படியாகவும் முதன்மைச் சாலைகளுடன் இணைப்பதே இத்திட்டத்தின்

நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 1972-73-ல் ரூ. 293·76 லட்சம் செலவிடப்பட்டது. எல்லா காலநிலைக்கும் ஏற்ற 70 கிலோ மீட்டர் இணைப்புச் சாலைகள் இதுவரை போடப்பட்டுள்ளன. தற்போதுள்ள 1,612 கிலோ மீட்டர் மண்சாலைகள் எல்லாக் காலநிலைக்கும் ஏற்ற சாலைகளாக சீரமைக்கப் பட்டுள்ளன.

1972 டிசம்பர் திங்களில் ஏற்பட்ட கடுமையான புயலாலும், பயங்கரமான வெள்ளத்தாலும் சென்னை, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், செங்கற்பட்டு, நீலகிரி, வட ஆர்க்காடு, கோயம் புத்தூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கபட்ட அரசுச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சிச் சாலைகள், சிறுபாசன வாயில்கள், நெடுஞ்சாலை கிராமப்பணிகள் துறைக்கும், ஊராட்சி ஒன்றியங் களுக்கும் சொந்தமான கட்டிடங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்காக 1972-73-ல் ரூ. 2·52 கோடி செலவிடப்பட்டது. 1973-74-ல் நிலையான தன்மையுடைய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் ரூ. 148 09 லட்சம் செலவில் 978 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 437·98 லட்சம் மதிப்புள்ள 1,901 பணிகள் நடந்தேறி வருகின்றன.

மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 1973-74 ஆம் ஆண்டில் கீழ்க் காணும் பெரும் பணிகள் முடிவடைந்துள்ளன :—

1. பெரம்பலூர்-மானுமதுரை சாலையின் (தஞ்சாவூர், திருச்சி மாவட்டங் கள்) 109·1/4 மைலில் திருமானூரில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ. 65·70 லட்சம் செலவில் உயர்மட்ட அளவிலான பாலம் ஒன்றைக் கட்டுதல்.

2. ரூ. 5·20 லட்சம் செலவில் எமனேஸ்வரம்-நயினர் கோயில் சாலைக்கு கற்கள் போட்டு தார் போடுவதன் மூலம் சாலையின் தரத்தை உயர்த்துதல்.

தேசிய நெடுஞ்சாலைகளின்கீழ், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 379·18 லட்சம் செலவில் 181 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 1,279·77 லட்சம் செலவில் 74 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளி, பணி ஒப்படை ஆகிய பல்வேறு நிலைகளின்கீழ் அவை உள்ளன.

### பாம்பன் பாலத் திட்டம்.

இராமேஸ்வரம் தீவை நிலப்பகுதியோடு இணைப்பதற்கு ரூ. 532·87 இலட்சம் மதிப்பீட்டுச்செலவில் (பாலம் கட்டும் பணிக்கு ரூ. 481·86 லட்சம் அணுகுசாலைகள் தொடர்பான பணிகளுக்கு ரூ. 51·01 லட்சம்) பாக் ஜலசந்தி குறுக்கே சாலைப்பாலம் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பாம்பன் பாலத்திட்டம் மிக முக்கியமானதொரு திட்டமாகும். இயற்கை சூழ்நிலைகளினால் ஏற்படும் பல இடையூறுகளைச் சமாளித்து இப்பாலத்தை கடலில் கட்டவேண்டியுள்ளது. இந்த மாதிரியான பாலம் நாட்டிலேயே இதுதான் முதலாவதாகும். பாலம் கட்டும் பணி தொடங்கப் பெறும்வரையில், அணுகு சாலைகள் அமைக்கப்படும் பணி மேற்கொள்ளப்பட்டு அப்பணி நடந்தேறி வருகிறது.





பாலம் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் முடிவு செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர் பணி தொடங்கப்படும். இத்திட்டப் பணியை ஒரே சீராக நிறைவேற்றுவதற்கு, சிறப்புத் தலைமைப் பொறியாளர் ஒருவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

### சாலை மேம்பாட்டிற்கான ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம். (1974-75 முதல் 1978-79 வரை.)

ஐந்தாவது ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக மொத்தம் ரூ. 6,302 லட்சம் நிதி ஒதுக்கக் கருதப் பட்டுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதியில் தமிழ்நாட்டில் எல்லாக் கால நிலைக்கும் ஏற்ற நெடுஞ்சாலைத் துறை சாலைகளின நீளம் 36,000 கிலோ மீட்டரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னிந்திய பெட்ரோ-கெமிகல் தொழில்கள் கழகத்தைச் சேர்ந்த உரத் தொழிற்சாலை தயாரிக்கும் உரங்களை எடுத்துச் செல்ல வசதி அளிக்க வேண்டி மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடிக்குச் செல்லும் சாலையை மேம்படுத்துவது அவசியமாயுள்ளது. இத்தொழிற் சாலை 1974 ஜூன் திங்களில் உற்பத்தியைத் தொடங்குமென்று குறிப்பிடப் படுகிறது. ரூ. 112 இலட்சம் மதிப்புடைய மேம்பாட்டுப் பணிகள் மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளன. இப்பணிகளுக்காக 1974-75-ல் அரசு சிறப்பாக ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

### கிராமப்புறச் சாலை மேம்பாடு

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்த அளவு தேவைத் திட்டத்தின்கீழ் ரூ. 10 கோடியும், கிராமப்புறச் சாலை சிறப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 13 கோடியும் ஆக 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யக் கருதப்பட்டுள்ளது. 36 முக்கியமான கிராமங்களையும் 36 கிராமத் தொகுதிகளையும் இணைக்கப் புதிதாக 133 கி. மீட்டர் நீளமுள்ள சாலை அமைக்கும் பணியும், 1,282 முக்கியமான கிராமங்களையும், 906 கிராமத் தொகுதிகளையும் இணைப்பதற்குத் தற்போதுள்ள 4,750 கிலோ மீட்டர் மண் சாலையை எல்லாக் காலநிலைக்கும் ஏற்ற சாலைகளாக அமைக்கும் பணியும், கிராமப் புறச்சாலை சிறப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப் படும். 258 முக்கியமான கிராமங்களையும், 1,123 கிராமத் தொகுதி களையும் இணைப்பதற்குப் புதிதாக 2,270 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை அமைக்கும் பணி குறைந்த அளவு தேவை திட்டத்தின்கீழ் முடிக்கப்படும். இவ்வாறாக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 23 கோடி செலவில் 3,641 கிராமங்களுக்கு எல்லாக் கால நிலைக்கும் ஏற்றச் சாலைகள் போடப்படும்.

மத்தியச் சாலை நிதித் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 1,18·80 லட்சம் செலவிலான 8 பணிகளுக்கு இந்திய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

*[1974 மார்ச் 26*

## சிறு துறைமுகங்கள்

தமிழகத்தில் இரண்டாவது, மூன்றுவது, நான்காவது திட்ட காலத்திற்கான சிறு துறைமுக மேம்பாட்டுப் பணிகளில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் மத்திய அரசின் முழு கடன் உதவியுடன் கடலூர் துறைமுக மேம்பாட்டுப் பணி மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. பரவனுறு, கடிலம் ஆகிய ஆறுகளின் நீரோட்டம் தடம் மாறிச் செல்வதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, அவ்விரு ஆறுகளின் நீர்ப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் பணிகளும், அலைத் தடுப்புச் சுவர் கட்டுவதன் மூலமும், கடற்பாலம் ஒன்றை அமைப்பதன் மூலமும், இரு மண்வாரி பம்புகள் நிறுவுதல் மூலமும் கடல் வாயிலிருந்து துறைமுகம் வரையில் ஆண்டு முழுவதும் படகுகள் செல்வதற்காக, குறைந்தது ஒன்பது அடி ஆழமுள்ள கால்வாய் அகழ்ந்திடும் வேலையும், மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். 1964-ல் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டங்கள், எல்லா வகையிலும் 1974 மார்ச் முடிவில் முடிக்கப்படும். கடலூர் துறைமுக மேம்பாட்டுக்காக ரூ. 1,99 இலட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூ. 1,35 இலட்சம் மத்திய அரசிடமிருந்து கடனுக பெறப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான ரூ. 64 இலட்சத்தைக் கடனுக வழங்குமாறு மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. மேலும், துறைமுக மேம்பாட்டுப் பணிகளின் மூலம் கிட்டக்கூடிய கூடுதல் பலன்களைப் பெற்று பணியைத் தொடங்கும் நிலை ஏற்படும் வரையில் அந்தக் கடனைத் திருப்பித் தருவதைத் தள்ளி வைக்கவும் மத்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் மாநில அரசு சிறு துறைமுக மேம்பாட்டுப் பணியை முதன் முறையாக மேற்கொண்டுள்ளது. மாநில அரசுத் துறையின் கீழ், கீழ்க்கண்டவாறு ரூ. 4,60·75 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| கடலூர் .. .. .. .. .. | 84·25 |
| நாகைப்பட்டினம் .. .. .. .. | 21·50 |
| ராமேஸ்வரம் .. .. .. .. | 3·50 |
| வேப்பலோடை .. .. .. .. | 20·50 |
| எண்ணூர் .. .. .. .. .. | 1,31·00 |
| கப்பல் போக்குவரத்துக் கழகம் .. .. | 2,00·00 |
| மொத்தம் .. | 4,60·75 |



*1974 மார்ச் 26]*

1974-75-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மாநில அரசுத் துறையின் கீழான சிறு துறைமுக மேம்பாட்டுப் பணிக்காக கீழ்க்கண்ட வாறு ரூ. 1,57·25 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| கடலூர் .. .. .. .. .. | 44·25 |
| நாகைப்பட்டினம் .. .. .. .. | 8·50 |
| ராமேஸ்வரம் .. .. .. .. | 3·50 |
| வேப்பலோடை .. .. .. .. | அடையாள நிதி ஒதுக்கம். |
| எண்ணூர் .. .. .. .. .. | 1·00 |
| கப்பல் போக்குவரத்துக் கழகம் .. | 1,00·00 |
| மொத்தம் .. | 1,57·25 |

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், ரூ. 2,66·75 லட்சம் செலவிலான கீழ்க்கண்ட திட்டங்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு மத்திய அரசுக்குப் பரிவுரை செய்யப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| கடலூர் .. .. .. .. .. | 1,99·75 |
| நாகைப்பட்டினம் .. .. .. .. | 3·00 |
| ராமேஸ்வரம் .. .. .. .. | 60·00 |
| புன்னைக்காயல் .. .. .. .. | 4·00 |
| மொத்தம் | 2,66·75 |

திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள் ஆய்வுரையில் கொடுக்கப்பட்டுள்ளன.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புதன்கிழமை, 1974 மார்ச் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. எல். சி. பைஸ் அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1946-ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரை மேற்கு கடற்கரை இந்திய கிறிஸ்துவர்கள் தொகுதியிலிருந்தும், பின்னர் 1952-ஆம் ஆண்டு முதல் 1956-ஆம் ஆண்டு வரை மங்களூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டப் பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. எல். சி. பைஸ் அவர்கள் 22—3—1974-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### SHORT NOTICE QUESTION.

*Industrial Dispute in Textile Mills.*

* 2 *S.N.Q.*—Thiru A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the names of textile mills in the State which have not so far accepted the terms of the industry-wise Settlement of 28th February 1974 in toto;

(*b*) the steps taken by the Government to make them fall in line with the other mills;

(*c*) the names of the textile mills which kept on running during the general strike of textile workers in February, March 1972;

(*d*) the names of textile mills which were not affected by the general strike in February 1974; and

(*e*) the names of textile mills, whose workers joined the strike in February 1974 but resumed work before 1st March 1974?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, விவர அறிக்கையொன்று @ பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்படாத நாற்பது மில்களில் இந்த ஒப்பந்த ஷரத்துக்களை அமல் செய்யக்கூடிய விஷயமாக சர்க்காரே எற்று நடத்த முடியாது என்று சொல்லுகிறார்களே, அந்த நாற்பது மில்கள் எந்த அளவுக்கு அவர்களாகவே ஒப்பந்த ஷரத்துக்களை அமல் செய்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இதுவரையிலும் மொத்தத்தில் 32 மில்கள் முழுமையாக இந்தத் திட்டங்களை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர்களோடு இப்பொழுது பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அநேகமாக அவர்கள் ஏற்றுக்கொள் வார்கள் என்ற நம்பிக்கையும் அரசுக்கு இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்த ஒப்பந்தம் சரியான வகையில் ஏற்படுவதற்கு ஒரு 'ஒன் மேன் கமிஷன்' மாதிரி நியமித்து, தொழிலாளர்களுடைய குறைகள் என்ன என்று தெரிந்து. அதனுடைய பரிந்துரையின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். அந்தப் பரிந்துரை கிடைத்தபிறகு கூட, மீண்டும் அதை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக வைத்ததன் காரணமாகத்தான் இந்தத் தகராறு ஏற்பட்டது என்று அரசுக்குத் தெரியுமா? ஒன் மேன் கமிஷன் ரிபோர்ட்டை முழுமையாக நடைமுறைக்குக் கொண்டுவந்து

@ 643-654 பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





இருந்தால் இது நடந்திருக்காது. பி. அண்டு சி. மில் ஒப்பந்தத்திற்கு வரவில்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம்? உடனடியாக அவர்கள் ஒப்பந்தத்திற்கு வருவதற்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் தயாராக இருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாமே. முதலில் எதற்காகத் தவிர்க்க முடியவில்லை என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அருணகிரி அவர்கள் தலைமையில் குழுவொன்று போடப்பட்டது. அதில் தொழிலதிபர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் இருந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஏறக்குறைய எட்டு மணி நேரம் பேச்சுவார்த்தைகள் நடந்தன. அரசு அதற்கு ஆன செலவு பூராவையும் ஏற்றுக்கொண்டது. தொழிலாளர் பக்கமே அரசு இருந்தது. அதிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. கருத்து வேறுபாடு ஏற்பட்ட பிறகு, ஒரு நிபுணருடைய தீர்ப்புக்கு மீண்டும் விட்டோம். உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியினுடைய தலைமையில் அந்தப் பிரச்சினையில் மீண்டும் முடிவு காண அனுமதித்தோம். என்றாலும், தொழிலாளர் தலைவர்களெல்லாம், மீண்டும் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று விரும்பினார்கள். அதற்கும் அரசு இணங்கியது. அந்தத் தனிப்பட்ட ஒருவர் திரு. அருணகிரி அவர்கள் 28 காசு வழங்க வேண்டுமென்றுதான் தீர்ப்பு வழங்கினார்கள். இப்பொழுது 29 காசுவரை தொழிலாளர்கள் பெறும் அந்த நன்மையை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நீதிபதி திரு. அருணகிரி அவர்கள் தலைமையில் இயங்கிய அந்தக் குழுவின் பரிந்துரை முழுமையாகக் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அமல்படுத்தப்பட வில்லை என்ற ஒரு புகார் இருக்கிறதே. அது சம்பந்தமாக எல்லா முடிவுகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா? அவற்றை அமல் நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அருணகிரி அவர்களின் தீர்ப்புக்கு மேல் தந்துவிட்டதைச் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு ஆலையில் 100 ரூபாய் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால், முதல் அமைச்சர் அவர்கள், 100 ரூபாய் அல்ல, எல்லோருக்கும் கொடுப்பதினால் ஏற்படுகிற நஷ்டத்தைக்கூட அரசே தாங்கிக்

கொள்ளலாம், 200 ரூபாய் அளிக்கலாம் என்று எனக்கு ஆணை பிறப்பித்தார்கள். அதன்பேரில் 200 ரூபாய் அளிக்கப்பட்டது. டாக்டர் ஹாண்டே அவர்கள் பி. அண்டு சி. மில்லைப்பற்றி கேட்டார்கள். பி. அண்டு சி. மில் பிரச்சினை தீர்ந்து, அவர்கள் கேட்ட கோரிக்கை அனைத்தும் நிறைவேற்றப்பட்டு, இன்றைக்கு சுமுகமான முறையில் பி. அண்டு சி. மில் நடந்துகொண்டிருக் கிறது. பெரிய பாராட்டு விழா கூட நடந்துகொண்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தப் பேச்சுவார்த்தையின் மூலமாக ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பெருவாரியான மில்கள்—முப்பத்திரண்டு—ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்றாலும், இராம நாதபுரம் மாவட்டத்திலுள்ள ஸ்ரீ ராமலிங்கா மில்ஸ், அருப்புக் கோட்டை; கலைமகள் மில்ஸ், சிவகாசி ஆகிய இந்த இரண்டு மில்களும் ரொம்பத் தகராறு பண்ணக்கூடிய மில்களாகிவிட்டன. அவர்களை வற்புறுத்தி, இந்த ஒப்பந்த ஷரத்துக்களை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியுமா? அப்படிச் செய்த பிறகுதானே விசேஷ தொழில் கோர்ட்டிலே 'நாங்கள் ஒப்பந்தம் செய்துகொண் டோம்' என்று சொல்லி அந்தக் கேசை வாபஸ் பண்ண முடியும்? அதற்கு எந்த நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதைப்பற்றிப் பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. தற்போது தொழிலாளர் நல ஆணையாளர் அவர்கள் உடல் நலக் குறைவாக இருக்கிறார். அவர் உடல் நலம் பெற்றவுடன் சுமுகமான உடன்பாடு ஏற்படும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, இதில் 32 மில்கள் 28—2—1974 ஒப்பந்தத்திற்குக் கட்டுப்படாமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 32 மில்களில் சில ஒத்துக் கொண்டு ஒப்பந்தம் செய்திருப்பதன் பட்டியல் அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அந்தப் பட்டியல் தற்போது என்னிடம் இல்லை. ஆனால், 32 மில்களும் ஒவ்வொரு மில்லாக இந்த உடன்படிக்கையின்கீழ் வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. கே. என். குமாரசாமி:** இந்த ஒப்பந்தம் பல்வேறு முறை களில் காலதாமதமாகி அவர்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வராமல் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் மற்ற மில்களும் ஒப்பந்தத்திற்குள் வந்தாகவேண்டும் என்ற ஒரு நிபந்தனையை அந்த மில்களுக்கு அரசு விதிக்கவேண்டும். இழுபறியான நிலையில் மேட்டூர் மில் இருந்து கொண்டு இருக் கிறது. அங்கே சிக்கல் ஏற்பட்டு மீண்டும் தொழில் தகராறு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டாகியிருக்கின்றன. அதனால் அரசு அவசர நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** 'சைமா'-வில் இருக்கும் உறுப்பினர்கள் அத்தனை பேரும் ஏறக்குறைய ஒப்பந்தத்தில் வந்திருக்கிறார்கள். சில பேர் தனியாக இருக்கிறார்கள். இழுபறி நிலைமையைச் சிலபேர் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி உருவாக்கிக் கொண்டிருக்கிறவர்களுக்குக்கூட தக்க அறிவுரைகளை இந்த அரசு தந்து, இந்த உடன்படிக்கையை நிறைவேற்றும் வண்ணம் காரியங்களை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அதன் விளைவாக சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு தொழிலாளர் தரப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கூட்டுறவு மில்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் தனியார் மில்களில் அளிப்பதைவிட மிகவும் குறைவாக இருக்கிறது என்ற பிரச்சினை ஏற்கெனவே இருந்துகொண் டிருந்தது. அந்தப் பிரச்சினை இப்பொழுது ஏற்பட்ட செட்டில் மென்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆனால், அதற்கு மாறாக அந்தப் பிரச்சினை குறித்துத் தனியாகப் பேசி வேறு செட்டில்மென்ட் செய்துகொள்ள ப்ரோவிஷன் இந்த செட்டில் மென்டில் இருக்கிறதா? அந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** கூட்டுறவு ஆலைகளைப் பொறுத்து பல சங்கடங்கள் இருந்தன. அவை நஷ்டத்திலேதான் நடந்துகொண்டிருக்கின்றன. என்றாலும், தொழிலாளர்களுக்குத் தகுந்த கூலியைத் தந்துவிடவேண்டும் என்று அரசு கருதியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்த மில்களையும் மற்ற

மில்களுக்குச் சரிசமமாகக் கொண்டுவரவேண்டும் என்று விரும்பினார்கள். ஏறக்குறைய நான்கில் மூன்று பங்கு கூட்டுறவு மில்களில், மற்ற ஆலைகளில் தரப்படும் கூலி அளவுக்குக் கூலி தர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக, அநேகமாக கூட்டுறவு ஆலைகளில் வேலை செய்பவர்களுக்கும் தனியார் ஆலைகளில் வேலை செய்பவர்களுக்கும் கூலியில் எந்த விதமான வித்தியாசமும் இல்லாத சூழ்நிலைகூட ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் இருக்கும் தொழிலாளர்கள் அத்தனை பேரும் மிகவும் நிம்மதியாக இருக்கிறார்கள்.

*Centre-State relations*

*624 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether this Government have sent any communication to the Centre during 1973 to take steps to amend the Constitution so as to secure autonomy for the States; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(ஆ) மத்திய-மாநில உறவு குறித்து, இந்திய அரசால் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு செய்த பரிவுரைகள் பற்றி இம் மாநில அரசின் கருத்துக்களை இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் தனது 21-8-1971-ஆம் நாளிட்ட கடிதத்தில் கேட்டுள்ளது. நிர்வாகத் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிவுரைகளை மத்திய-மாநில உறவு குறித்து இந்த அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட டாக்டர் பி. வி. ராஜமன்னார் தலைமையிலான மத்திய-மாநில உறவு ஆய்வுக்குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில் இந்த அரசு ஆய்வு செய்தது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு செய்துள்ள இருபத்திரண்டு பரிவுரைகளில் நான்கு பரிவுரைகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஏனைய பரிவுரைகளைப் பொறுத்தவரை, இந்த அரசு தனது கருத்துக்களைத் தந்துள்ளதோடு, அவை தொடர்பாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொருத்தமான திருத்தங்கள் பற்றியும் கருத்துரை



வழங்கியுள்ளது. இந்த அரசின் கருத்துக்கள், இம்மாநில சட்டத்துறையின் 4-7-1973-ஆம் நாளிட்ட 22451/71-13-ஆம் எண் கடிதத்தில் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

*625 Q.—Thiru J. JAMES: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government of India have expressed their views on the Rajamannar Committee Report?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இராஜமன்னார் குழு அறிக்கையைப்பற்றி இந்திய அரசின் கருத்துக்கள் இவ்வரசுக்கு வரவில்லை.

*626 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய மாநில உறவு குறித்து ஏனைய முதலமைச்சர்களின் கருத்து கேட்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மைய-மாநில உறவுகள் குறித்துத் தங்களது கருத்துக்களை அளிக்குமாறு இம்மாநில அரசு ஏனைய மாநில முதலமைச்சர்களுக்கு குறிப்பாக வேண்டுகோள் ஏதும் விடுக்கவில்லை. ஆனாலும் மைய-மாநில உறவு ஆய்வுக்குழு அறிக்கையின் பிரதிநிதிகளுடன் அனுப்பப்பட்ட கடிதத்தில் அவ்வறிக்கையில் சொல்லப்பட்ட கருத்துகள் பற்றிச் சிந்தித்துப் பார்க்குமாறு சிறிது அவகாசம் எடுத்துக்கொள்ளுமாறு முதலமைச்சர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தச் சபையில் அடிக்கடி அறிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள்படி, மத்திய சர்க்கார் நம்முடைய திட்டங்களுக்குத் தடையாக இருப்பதாகச் சொல்வதுபற்றி, நாம் மத்திய சர்க்காரோடு நேரிடையாகப் பேசி விவாதித்தே தீர்த்துக் கொள்ளலாம். அப்படி இருக்கிறபோது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 256-ஆவது பிரிவை ரத்து செய்வதன் மூலம் பார்லிமெண்டுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை ரத்து செய்து, மாநிலத்தில் சுயாட்சி என்றும், மத்தியில் கூட்டாட்சி என்றும் மத்திய சர்க்காரைப் பலவீனமுடையதாகச் செய்வதனால் என்ன பிரயோசனம் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய மாநில உறவுகள் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பரிசீலனை செய்வதற்கு ராஜமன்னார் குழு போட்டதே குற்றம் என்றால் மத்திய அரசு

[1974 மார்ச் 27

நிர்வாகச் சீர்திருத்த குழுவைப் போட்டதும் குற்றம் என்றாகி விடும். மத்திய அரசு தான் நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒன்றினை நியமித்தது. அதன் அறிக்கையை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பிவைத்தார்கள். அதன்பேரில் நம் கருத்துக்களைக் கேட்ட போது, நாம் ராஜமன்னார் குழுவின் கருத்துக்களை அவற்றின் கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்தாக அனுப்பிவைத்திருக்கிறோம் என்று சொன்னேன்.

மாநில சுயாட்சி என்பது மத்திய மாநில உறவுகளைக் கெடுத்து விடும், அது ஆபத்தானது என்கிற கருத்தில் உறுப்பினர் சொன்னார். நம்மைப் பொறுத்தவரையில் மத்திய மாநில உறவுகள் வலுப்படவே மாநில சுயாட்சி கேட்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாநில சுயாட்சி பெறுவதற்காக அரசியல் சட்டத்தில் சில ஷரத்துக்களை மாற்றியமைக்க சிபார்சு செய்கிற நோக்கத்தில் ராஜமன்னார் குழு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகையால் இந்த அரசாங்கம் ராஜமன்னார் குழுவின் அடிப்படையில் அரசியல் சட்டத்தில் எந்தந்த ஷரத்துக்களைத் திருத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறது? கேட்கவில்லை என்றால் கேட்காமல் இருக்கக் காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மத்திய அரசு நிர்வாகச் சீர்திருத்தக் குழு அளித்த அறிக்கையினை நமக்கு அனுப்பி நம் கருத்துக்களைக் கேட்டபோது, நாம் அவர்களது பரிந்துரை எண் 1க்கு அளித்த கருத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

"ஓர் இணைப்பாட்சி அமைப்பில் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே நிலவ வேண்டிய உறவுபற்றிய பிரச்சினை முழுவதையும் அரசமைப்புச் சட்ட வகையறைகளைக் கருத்திற் கொண்டு இவ்வரசு ஆராய்ந்தது. மாநிலத் தன்னாட்சியினை அடையும் வகையில் அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள் பல தேவைப்படுகின்றன" என்பது நமது பரிந்துரையாகும்.

பரிந்துரை எண் 2—பற்றி நமது அரசாங்கத்தின் கருத்து:

"முற்றிலும் மாநில அதிகாரத்திற்குட்பட்ட விவகாரங்களில் மைய அரசும் நாடாளுமன்றமும் அக்கறை காட்டவும், தலையிடவும் முற்படுகின்ற விதமும் அடிக்கடி அவ்வாறு செய்வதும் நாடு



1974 மார்ச் 27]

முழுமைக்குமான நிருவாகத்திற்கு மேலாண்மை வகிக்க மைய அரசு ஆர்வங்கொண்டுள்ளது என்னும் எண்ணத்தை உண்டாக்குகிறது". என்ற கருத்தை அரசின் சார்பில் நாம் அனுப்பியிருக்கிறோம்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தின் கொள்கை, லட்சியம் எல்லாம் மாநில சுயாட்சி என்பதுதான். இந்த மாநில சுயாட்சியை அடைவதற்கு முதலமைச்சர்களைக் கூட்ட நம் அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலமைச்சர் இங்குள்ள கட்சித் தலைவர்களை வேண்டுமானால் கூட்டலாம். முதலமைச்சர்களை எல்லாம் கூட்டுகிற அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை. ஏற்கனவே ராஜமன்னார் குழுவின் அறிக்கையினை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தபோது, அதற்கு இந்தியப் பிரதமர் அவர்கள் எழுதிய பதிலில்; "இதுபற்றி எல்லா முதலமைச்சர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். அதைப் பிரதமர் செய்வதுதான் பொருத்தமுடையதாக இருக்கும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், மத்திய நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் அறிக்கையில் 22 சிபார்சுகள் செய்திருப்பதாகவும், அவற்றில் 2-ஐ ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், பாக்கிக்கு கருத்து தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார். பாக்கியுள்ள 20 சிபார்சுகள் என்ன? அவற்றின் மீது அரசாங்கம் தெரிவித்த கருத்து என்ன?

இங்கு மாநில சுயாட்சி என்ற பெயரால் ராஜமன்னார் கமிட்டி அளித்த அறிக்கையினை, திராவிட முன்னேற்றக் கழகக் குழு ஒன்று பரிசிலனை செய்து, ஒரு அறிக்கை கொடுத்திருப்பதாகப் பத்திரிகைச் செய்தியில் இருந்து அறிகிறோம். திராவிட முன்னேற்றக் கழகக் குழு கொடுத்த அறிக்கையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறதா? இவர்களது கருத்து தெரிவிக்கப்பட்டதா? ராஜமன்னார் குழு அறிக்கையின் பேரிலே சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ராஜமன்னார் குழு அறிக்கை அளிக்கப்பட்டதும், நாம் உடனடியாக அதனை மத்திய அரசுக்கும், இந்தியப் பிரதமருக்கும், தொடர்புடைய மற்றவர்களுக்கும் அனுப்பி வைத்தோம்.

[1974 மார்ச் 27

திராவிட முன்னேற்றக் கழகம் ராஜமன்னுர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இந்த அரசின் கொள்கைப்படி, எப்படி மாநில சுயாட்சி கொள்கையினை வகுப்பது என்கிற அடிப்படையில் ஆராய்ந்து ஒரு அறிக்கையினை கழகத்திற்குத் தந்திருக்கிறது.

இதற்கிடையில் மத்திய அரசு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையினை நமது கருத்துக்களுக்காக அனுப்பிவைத்தது. அதனைப் பரிசீலித்து, நாம் ராஜமன்னுர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கைகளுக்கு மாறுபட்ட கருத்துக்கள் பலவற்றை இந்த அரசு அனுப்பியிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இது முக்கியமான அரசியல் பிரச்சினையாக இருக்கிற காரணத்தினுல் நம் அரசாங்கம், அரசியல் அமைப்புச் சட்டத்தில் 256-இல் இருந்து 263 வரை இருக்கிற ஷரத்துக்களை திருத்த வேண்டுமென்று திட்டவட்டமாக, நமது சட்ட இலாக்கா மூலமாக ஏதாவது கருத்துரை வழங்கியிருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? மாநில சுயாட்சி என்ற பிரச்சினையை விவாதிப்பதற்கு நாள் ஒதுக்கி அதை விவரமாக இந்த அவையில் விவாதிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி:** நாம் மத்திய அரசுக்கு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை மீது நமது கருத்துக்களைத் தெரிவிக்கிறபோது சட்ட இலாக்காவைக் கலந்துகொண்டு தான் அந்தப் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. இதுபற்றி நிறைய கேள்விகள் கேட்டுக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்ததுபோல இதற்காக ஒரு நாளோ, இரண்டு நாளோ ஒதுக்கி இந்த அவையில் விவாதம் செய்ய அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யலாம். விவாதத்திற்கு முன்கூட்டியே எல்லா உறுப்பினர்களுக்கும் இதுபற்றிய விவரங்கள், குறிப்புகள் எல்லாம் அனுப்பி வைக்கவும் ஏற்பாடு செய்யலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓராண்டுக்கு முன்பாகவே இதுபற்றி இந்த அவையில் விவாதிக்கலாம் என்று சொன்னுர்கள். ஆனுல் இதுநாள் வரை நாள் குறிப்பிடப்படவில்லை. இன்றைக்கே நாள் குறிப்பிட்டு, என்றைக்கு இதுபற்றி விவாதிக்கலாம் என்று தெரிவிப்பார்களா?



1974 மார்ச் 27]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி:** நாள் குறிப்பிடுவது பற்றிச் சொன்னுர்கள். ஓராண்டுக்கு முன்பே தெரிவித்தும், இது வரை அலுவல் ஆய்வுக் குழுவில் கட்சித் தலைவர் வலியுறுத்தி நாள் குறிப்பிடப்படவேண்டுமென்று கூருத காரணத்தினுல் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இன்றைக்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வெளிப்படையாகக் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிற காரணத்தினுல் இதுபற்றி இன்று அல்லது நாளை நடைபெற இருக்கிற அலுவல் ஆய்வுக் குழுவில் ஆலோசித்து நாள் குறிப்பிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து விஞ 627, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் . . . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கேள்வி அனுமதிக்கப்பட்டிருக்கிறது, இதைப்பற்றிய துணைக் கேள்விகளைப் பொறுத்த வரையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்விகள் கேட்க அந்தப் பக்கத்திலிருந்தும் இந்தப் பக்கத்திலிருந்தும் அதிகமான உறுப்பினர்கள் கைகளை உயர்த்திஞர்கள். தொடர்ந்து விஞக்களை அனுமதித்தால் ஒரு சிலருக்கு வாய்ப்புக் கிடைக்கும், ஒரு சிலருக்குக் கிடைக்காது, கிடைக்காதவர்களுக்கு கிடைக்கவில்லையென்ற குறை ஏற்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக நாள் குறிப்பிடலாம் என்று சொன்னுர்கள், ஆகவே கேள்விகள் போதுமானது என்று நினைக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நாள் ஒதுக்குவது என்றுல் இந்த செஷனிலேயே அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமா? ராஜமன்னுர் குழுவின் அறிக்கையைப்பற்றி விவாதம் நடத்த வேண்டுமென்று ஒரு ஆண்டுக்கு முன்பிருந்தே நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன். அதற்கு அரசாங்கம் தான் தயாராக இல்லை. அரசாங்கமே அதைக் கொண்டுவந்திருக்கவேண்டும். நான் தீர்மானமே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே கொடுத்திருக்கிறேன். ஆகவே இந்த செஷனிலேயாவது அதை எடுத்துக்கொள்ள முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி:** தலைவர் அவர்களே, இது பற்றி எல்லாம் விரிவாகப் பேசத்தான் அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதிக்கலாம் என்று சொன்னேன். ஏற்கெனவே இருக்கின்ற சட்ட மன்றக் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புகளின்படி அடுத்த மாதம்

10-தேதியுடன் முடிவடைகின்றன. அதற்குப் பிறகு வருஷப் பிறப்பு வருகிறது. ஆகவே, இடையிலே விடுமுறை நாட்கள் எல்லாம் தேவைப்படும். ஆகவே, அதற்குப் பிறகு மாநில சுயாட்சியை ஆராய்வதற்காக 2, 3 நாட்கள் சட்ட மன்றக் கூட்டத்தை வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றியெல்லாம் தான் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு, மூன்று பேர்கள் ஒரே நேரத்தில் எழுந்துகொண்டால் எப்படி? சுரேந்திரன் அவர்கள் சொல்லட்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, மாநில சுயாட்சி பிரச்னை என்பது ஒரு பிரதானமான கேள்வி. அதைப் பற்றி கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் இங்கே வந்திருக்கிறபோது அதற்குச் சந்தர்ப்பம் தாங்கள் கொடுக்காமல் இருப்பது சரியல்ல, அதற்காக இரண்டு நாட்கள் விவாதிக்கலாம் என்று சொல்லி இந்த வாய்ப்புகளைக் கொடுக்காமல் இருப்பது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒரு முக்கியமான பிரச்னை என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் எவ்வளவு பேர்கள் கையை உயர்த்தினார்கள் என்பதையும் பார்த்தேன். ஒரு சிலருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு ஒரு சிலருக்குக் கொடுக்கவில்லை என்றால் குறைப்பட்டுக்கொள்கிற நிலைமையெல்லாம் வரும். முதலமைச்சர் அவர்கள் தனியாக நாள் ஒதுக்கி விவாதித்துக்கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, கேள்விகள் மேலும் தேவையில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் கேள்விக்குள் நுழைய வில்லை, 10-ஆம் தேதி வரையில் அலுவல்கள் இருக்கின்றன. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே முடிவு செய்து இருக்கிறோம். அதற்குப் பிறகு இதற்காக நாள் ஒதுக்கப்போகிறார்களா?



Sir, already we have agreed on what are the things to be discussed. This is also a very important subject; it has seized the attention of not only this House but the entire State and the country. Will it not be possible to extend another 10 or 15 minutes and allow supplementaries? All the questions have been taken together. We have come prepared with supplementaries and we will ask only valid supplementaries. Will it not be possible to allow some more time?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்குத் தொழிற் துறை மானியத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம், அதற்காக இரண்டு வேளைகளும் நாம் ஒதுக்கியிருக்கிறோம். மேலும் இதிலே துணைக் கேள்விகளை அனுமதித்தால் 15 நிமிடத்தில் முடியும் என்று சொல்லவே முடியாது. ஒரு மணி நேரம் கொடுத்தால்கூட முடியும் என்று நான் நினைக்கவில்லை. அவ்வளவு உறுப்பினர்களுக்கும் இடம் கொடுக்கவேண்டும், அந்த நிலையில் ஒரு சிலருக்குக் கொடுத்துவிட்டு சிலருக்குக் கொடுக்காத நிலைமை வரும். தங்களுக்கு எப்படியும் வந்துவிடும் என்ற அந்த எண்ணத்திலே இருக்கக்கூடாது. ஆகவே அதிலே மேலும் கேள்விகள் தேவை யில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அதற்காகத் தனியாக விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஆனால் விவாதங்கள் வருகின்றபோது தலைவர்கள்தான் பேசுகிறார்கள், உறுப்பினர்களாகிய எங்களுக்குப் பேசுவதற்கு பங்கு கொடுக்க வேண்டும். எங்களைப் போன்றவர்களுக்கும் பங்கு கொடுத்து நாங்களும் பேசக்கூடிய முறையிலே விவாதத்தை ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கேள்வி நேரத்திலே கொள்கைப் பிரச்னைபற்றி விவாதிப்பது இயலாது. தனியாக ஒரு நாள், இரண்டு நாள் ஒதுக்கி விவாதிக்கலாம் என்று சொன்னேன். தாங்களும் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். எல்லாக் கட்சித் தலைவர் களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது என் பதிலளிக் கக்கூடாது என்று கேட்டார்கள். ஆளுங்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் நிர்வாக சீர்திருத்த கமிஷன் சிபாரிசுகள் என்ன என்ன என்று கேட்டார்கள்.

அதற்கு நான் பதில் சொல்லவேண்டுமென்றால் 20 நிமிடங்கள் 30 நிமிடங்கள் வரை கூட ஆகும், நான் படிக்கவேண்டும் ஒவ்வொன்றாக. அதனால் தான் முன் ஏற்பாடு ஆக அவற்றை யெல்லாம் எல்லாருக்கும் கொடுத்துவிட்டு அந்த அடிப்படையிலே விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும், இன்றோ நாளையோ அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே தக்க முடிவுகளை எடுக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன்:** கேள்வி நேரத்திலே கேள்வி என்று வந்ததற்குப் பிறகு கேள்வியே கேட்கக்கூடாது என்பது சரியல்ல, அதற்காக நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி கேள்வி வந்ததற்குப் பிறகு சந்தர்ப்பம் கொடுக்காமல் இருப்பது சரியல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேள்வியே அனுமதிக்கப் படவில்லை என்று சொல்வது சரியல்ல. துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படவில்லை என்று கூறுவது சரியல்ல. துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் முடிக்கப்பட்டதே தவிர துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படவில்லை என்று சொல்வது சரியல்ல.

### *Special coaching scheme in Law College*

*627 Q.—THIRU N. K. PALANISWAMY
THIRU R. R. MUNUSWAMY Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that a new scheme of special coaching has been started in the Law College, Madras, recently; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(ஆ) இளநிலை பொதுச்சட்ட முதல், இரண்டாம் ஆண்டுத் தேர்வுகளில் (I and II B.G.L. Examinations) தேர்ச்சி பெறாத மாணவர்களுக்காகச் சிறப்பு வகுப்புகள் நடத்தும் திட்டம் இந்த ஆண்டிலிருந்து (1973-74) சட்டக் கல்லூரியில் தொடங்கப்பட்டிருக் கிறது. மேற்கண்ட திட்டத்தின்படி கல்லூரி நடக்கும் எல்லா நாட்களிலும் காலை 7 மணியிலிருந்து 9 மணிவரை சிறப்பு



வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சிறப்பு வகுப்புகளுக்கு வரும் அனைத்து மாணவர்களிடமிருந்தும் சிறப்புக் கட்டணமாக ரூ. 20 வசூலிக்கப்படுகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த லேபர் சட்டங்கள் பற்றி டிப்ளமா கோர்ஸ் பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்படுமா? தமிழிலே அங்கு படிப்பு சொல்லிக்கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை, தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, எம்.எல். படிக்கின்றவர்களுக்கு சிறப்பான சலுகைகள் அளிக்கப்படுமா? என்ன என்ன ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறார்கள்? ஒரு சில சப்ஜெக்டுகளுக்குதான் எம்.எல். இருக்கிறது, எல்லா பாடங் களுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர் களே, முதல் ஆண்டிலே தேர்வு பெறாதவர்கள் இரண்டாம் ஆண்டிலே சேர்ந்திருக்கிறார்கள், முதல் ஆண்டு படிப்பை முடிக் காமல் மூன்றாவது ஆண்டுக்குச் செல்ல முடியாது. அப்படிப் பட்டவர்கள் 70 சதவீதத்தினர் இருக்கிறார்கள். இரண்டாம் ஆண்டிலே தேர்வு பெறாமல் மூன்றாம் ஆண்டுத் தேர்வுக்குச் செல்ல முடியாது. அப்படிப்பட்டவர்கள் 60 சதவிதத்தினர் இருக் கிறார்கள். பி.ஜி.எல். இரண்டு ஆண்டுகளில் இப்படிப்பட்ட முறை பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டிருக்கிறது, அது நல்லமுறையில் நடந்தால் எம்.எல்.க்கும் அதற்கான வாய்ப்பு ஏற்பட்டால் பரிசீலிக்கலாம்.

### முதியோர் கல்வி.

*628 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதியோர் கல்வி கற்பிப்பதின் மூலம் 1971-72 மற்றும் 1972-73 ஆம் ஆண்டுகளில் எவ்வளவு முதியோர், கல்வி அறிவு பெற்றார்கள்?

[1974 மார்ச் 27

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உழவர் செயல் முறை எழுத்தறிவுத் திட்டத்தின்கீழ் 1971–72 ஆம் ஆண்டு நான்கு மாவட்டங்களில் 9,473 முதியோர்களும், 1972–73 ஆம் ஆண்டு ஐந்து மாவட்டங்களில் 10,105 முதியோர்களும் கல்விப் பயிற்சி பெற்றார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, முதியோர் கல்விக்கு சாதனங்கள், எக்விப்மெண்ட்ஸ் எதன் மூலம் பயன் படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதியோர் கல்வி பங்க்ஷனல் லிட்டரஸி என்ற அடிப்படையிலே உழவர்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்கு உழவர்களுக்கு எந்த எந்த வகைகளிலே எந்த எந்த சொற்களிலே பயிற்சி வேண்டுமோ எந்த எந்த விவரங்களை அளிக்க வேண்டுமோ அதற்காக தனி நூல் ஒன்று போடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் முதியோர் கல்வித் திட்டம் ஆங்காங்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் 20 மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மையத்திலிருந்தும் 30 முதியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த நூலின் வாயிலாக அந்தக் கல்வி போதிக்கப்படுகிறது.

(முற்பகல் 9-30)

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, இந்த முதியோர் கல்வி என்பது எந்த முறையில், எந்த அடிப்படையில் நடத்தப் படுகிறது? அதற்கு ஆசிரியர்கள் எப்படி நியமிக்கப்படுகிறார்கள்? குறிப்பாகக் கிராமங்களில் பழங்காலத்தில் படிப்பதற்கு வாய்ப்பில்லாத காரணத்தால், அவர்கள் கை ரேகை வைக்கின்ற நிலையில் இருக்கிறார்கள், எனவே, அவர்கள் பேங்குகளிலேகூட கணக்கு வைத்துக்கொள்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. எனவே, இதில் பிரத்யேகமாகக் கவனம் செலுத்தி ஒவ்வொரு கிராமத்திலும் முதியோர் கல்வி கற்பிப்பதற்கு வசதி வாய்ப்புகள் இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது பகல் பள்ளியிலே இருக்கும் ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி யளித்து கூடுதல் உதவித் தொகை அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. உழவர் செயல்முறை, அதாவது Functional literacy என்ற அளவிற்கு, உழவர்களுக்கு எந்தெந்தச் சொற்கள் பயன்படுமோ, எந்தெந்தச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுமோ, விதை, உரம், இன்னும் வேறு பல வகைகளில் எந்தெந்தச் சொற்களை உழவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்களோ அந்த அறிவை ஓராண்டு காலத்தில் வளர்க்கின்ற முறையில்தான் இந்த வகுப்புகள் துவங்கப் பட்டிருக்கின்றன. இதுவரையில் கிட்டத்தட்ட பொள்ளாச்சி கல்வி மாவட்டம், தஞ்சை கல்வி மாவட்டம், திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய கல்வி மாவட்டங்களில் வைக்கப் பட்டிருந்தது. இந்த ஆண்டு மதுரை, புதுக்கோட்டை கல்வி மாவட்டங்களில் வைப்பதற்குத் திட்டம் இருந்து வருகிறது.



1974 மார்ச் 27]

### உதகமண்டலம் ஏரி.

*629 வினா—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் ஏரியின் பராமரிப்புப் பணி மீனளத் துறையிலிருந்து சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) படகோட்டல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு சிறப்பிடம் அளித்து, உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் உதகமண்டலம் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகிறது. எனவே, படகு நிலையச் சிற்றுண்டிச் சாலை உட்பட படகு நிலையத் தொகுதி முழுவதும் மீனளத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுவதைக் காட்டிலும் பயணி களுக்கு மிகுந்த வசதிகள் அளித்து, வணிக அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். இயற்கைச் சூழலைப் பாதுகாக்க ஏரியில் தூர் வாருதல், ஏரிக்கு எழில் கூட்டுதல் ஆகியவற்றிற்காக அரசும் ரூபாய் ஐந்து லட்சம் செலவு செய்துள்ளது. உதகமண்டலம் ஏரியை மேலும் மேம்படுத்துவதற்கான திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. எனவே, ஏரியினை சுற்றுலாத் துறையின் பொறுப்பின் கீழ்க் கொண்டு வருவதும், மீனளம் குறித்த தொழில்

நுட்பக் கூறுகளை மீனளத் துறையிடமே தொடர்ந்து விட்டு வைப்பதும் விரும்பத்தக்கது எனக் கருதப்பட்டு, அந்த வகையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது திட்டம் இருப்பதாகக் கூறினார்கள். அதை உடனடியாக, ஏனென்றால் கோடை காலத்தில் வெளியூர்ப் பிரயாணிகள் அங்கே அதிகமாக வருவதால், அதன் மூலம் அந்நியச் செலாவணியும் அதிகமாகக் கிடைப்பதால், உடனடியாக ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதற்கென்று விரிவுபடுத்த, அழகுபடுத்த என்று திட்டம் வகுக்கப்பட்டு ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

M/s. Prynne Abbott and Davies, leading Architects

அது சம்பந்தமாக ரிப்போர்ட் தந்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மாயூரத்தில் அரிசன நலப் பணிகள்.

* 630 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73 இல் மாயூரம் தொகுதியில் அரிசன நலத் துறை மூலமாக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ரூ. 3,83,482.

(இ) 1972–73 இல் மாயூரம் தொகுதியில் அரிசன நலத் துறை மூலமாகச் செலவழிக்கப்பட்ட தொகைபற்றிய விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

---

@ **654** ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





### பர்வதராஜகுல மீனவர்கள்

* 631 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

" பருதவராஜகுல மீனவர்களை''' தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் உள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உறுப்பினர் பர்வதராஜ குலத்தைத்தான் 'பருதவராஜ குலம்' என்று குறிப்பிடுகிறார் என்று கருதப்படுகின்றது. பர்வத ராஜகுல மீனவர்களை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, தாழ்த்தப் பட்டவர்களின் பட்டியலிலே சேர்க்க வேண்டும் சேர்க்க வேண்டும் என்று எல்லா வகுப்பைச் சேர்ந்தவர்களுமே கூறிக்கொண்டிருக் கிறார்கள். ஏதாவது ஒரு சலுகையைப் பெறுவதற்காகத்தான் பேக்வேர்ட் லிஸ்டிலே சேர்க்க வேண்டுமென்று ஒவ்வொரு வகுப்பினரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒரு மாற்றுத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் யோசித்து, ஏதாவது சலுகை பெற வேண்டுமென்றால் வருமான அடிப்படையை உண்டாக்கி அதன் மூலம் இதற்கு முடிவுகட்டி, இந்த பேக்வேர்ட், ஃபார்வேர்ட் என்ற முடிவை அரசாங்கம் கொள்கையளவில் எடுத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, அதற்காகத்தான் சமுதாயத்திலே, பொருளாதாரத்தில் பின்தங்கியிருப்பவர்களை பின்தங்கியவர்கள் என்ற ஒரு நிலையை உருவாக்கி பின்தங்கியவர்கள் பட்டியலில் பலர் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் என்பது தீண்டாமை என்ற கொடுமைக்கு ஆளாக்கப்படும் சமுதாயம் எதுவோ அதுதான் சேர்க்கப்பட வேண்டுமென்று மத்திய அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, பர்வதராஜ குல மீனவர்களைப் பின்தங்கியவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று மாநில பிற்பட்டோர் நல கருத்தரங்கில் ஒரு

[1974 மார்ச் 27

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, மீண்டும் அதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, இப்பொழுதும் அவர்கள் மிகவும் பின் தங்கிய சமுதாயம் என்ற பட்டியலில்தான் இருக்கிறார்கள். ஆனால் அவர்களது கோரிக்கை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்பது. பின்தங்கிய வகுப்பினர் நல ஆணைக்குழு அதைப்பற்றி ஆராய்ந்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்ப்பதற்கு மத்திய அரசை ஒப்புக்கொள்ளச் செய்வது மிகவும் கடினம் என்று தெரிவித்துள்ளது. இதுதான் இப்பொழுது உள்ள நிலைமை.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, 'பர்வதராஜ குலம்' என்பதில் ராஜகுலம் என்ற பெயர் இருந்தாலும் அவர்கள் பொருளாதாரத்தில் முன்னிலையில் இல்லை. அவர்கள் தாழ்த்தப் பட்டவர்களை விட மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, நான் முதல் கேள்விக்கே பதில் சொன்னேன். மிகவும் பின் தங்கிய சமுதாயம் என்று சில சமுதாயங்களை மாநில அரசு ஏற்படுத்தி அவர்களுக்கு மேலும் பல சலுகைகளைத் தருகிறது. தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் எந்த இனத்தைச் சேர்க்க வேண்டு மென்றாலும் அவர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட வேண்டும். இதுதான் மத்திய அரசின் உத்தரவு. பர்வதராஜகுல மீனவர்கள் தீண்டாதவர்கள் அல்ல.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இப்பொழுதே தாழ்த்தப்பட்டவர்களோடு மலைஜாதியினரைச் சேர்த்து இந்தச் சலுகைகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த 'பர்வதராஜ குல' மீனவர்கள் என்பதில், பர்வதம் என்ற சொல் இருக்கிறது, பர்வதம் என்றால் மலை என்று பொருள்படும், எனவே இவர்களிடம் மலைஜாதி என்பது சேர்ந்திருப்பதால் இவர்களை மலைஜாதி யினரோடு சேர்ப்பது நியாயம் அல்லவா? அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 மார்ச் 27]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, ராஜாங்கமும் சேர்ந்திருக்கிறார்கள், எனவே கொடுக்கக்கூடாது என்றுதான் பலரும் கூற முடியும்.

### ராஜேஸ்வர சேதுபதி பாலம்

*632 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வைகை ஆற்றில் உள்ள ராஜேஸ்வர சேதுபதி பாலம் பழுதுபட்டு இருப்பது உண்மையா?

(இ) அந்தப் பாலத்தைப் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) ஆம், பழைய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைத்துறை) மட்டத்தில் பரிசீல னையில் உள்ளது.

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, மானாமதுரை வைகையின் குறுக்கே இருக்கும் பாலம் ராஜாராஜேஸ்வர சேதுபதி பாலம் என்று அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அந்தப் பாலம் மிகவும் பழுதடைந்திருப்பதால், அது மட்டுமல்லாமல் அதற்கு அருகில் ஒரு தரைப் பாலமும் இருக்கிறது. அதில் பெரும் பகுதி உடைந்துபோய் சேதப்பட்டிருக்கிறது. எனவே புதிய பாலத்தை கட்டித் தரும் இந்த அரசு அந்த அருகிலே உள்ள தரைப் பாலத் தையும் சேர்த்து அதையும் செப்பனிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஏற்கனவே இருந்து வருகிற பாலம் மிகவும் சிலமாக இருக்கிறது, எடை தாங்கக் கூடியதாக இல்லை என்று புதுப்பிக்க வேண்டு மென்று அரசு யோசித்து ஆராய்ந்து வருகிறது. மதிப்பீட்டில் ஏறக்குறைய 35 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று நம்பப்படு கிறது. அந்த ஆராய்ச்சி முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப் படும்.

[1974 மார்ச் 27

## மதுரை-மண்டபம் நெடுஞ்சாலை

* 633 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையின் அருகில் வைகை ஆறு வருவதால் தட்டாங் குளத்திலிருந்து மார்நாட்டு கால்வாய் முகப்பு வரையிலும் பல இடங்களில் ரோடு அரிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், அரிப்பு ஏற்படாமல் இருக்க முண்டுகள் வைத்து தடுப்புச் சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) ஆம்.

**திரு. த. சோனையா:** தலைவரவர்களே, மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையின் அருகில் தட்டாங்குளத்திலிருந்து மார்நாட்டு கால்வாய் வரையிலும் அந்த ரோடுகளுக்கு அருகில் வைகை ஆறு ஓடுவதால் அடிக்கடி வைகையிலே பெருவெள்ளம் ஏற்படும் காலங்களில் ரோடுகளும் சேதப்படுகின்றன. ஆகவே, அப்படித் தண்ணீரில் அடிபட்டு அடிக்கடி சேதம் ஏற்படாத வகையில் அங்கே ஒரு தாங்குசுவர் அல்லது ரிவெட்மென்ட் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 1,81,400 ரூபாய் செலவில் இதைச் செய்யலாம் என்று கருதி எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒப்புதல் கொடுத்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

## கொல்லிமலையில் நில ஒப்படை

* 634 வினா—திரு. சி. சின்னவெள்ளையன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதி, கொல்லிமலையில் எத்தனை பேர்களுக்கு இதுவரை நிலப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?



1974 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சேந்தமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதி, கொல்லிமலையில் 1947-ம் ஆண்டி லிருந்து 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை 3,986.14 ஏக்கர் நிலம் 2,003 பேர்களுக்கு, பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, பட்டா வழங்கியதில் அரிசனங்களுக்கு எத்தனைபேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது? எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மொத்தம் எத்தனைபேர்களுக்கு என்றுதான் இருக்கிறது. தனியாக அரிசனங்களுக்கு என்ற புள்ளிவிவரம் இல்லை.

**திரு. அ. ஆறுமுகம்:** தலைவரவர்களே, கொல்லிமலையில் எவ்வளவு ஏக்கர்கள் இன்னும் பட்டா கொடுக்கப்படாமல் இருக் கிறது என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதற்கென்று தனியாக ஒரு கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் தருகி கிறேன் .

## இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வரும் நிலங்கள்

* 635 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை இனாம் ஒழிப்புச் சட்டம் 26/63-ன் படி நேரடி சாகுபடி இல்லாத நிலங்களை எடுத்துக்கொள்ள அரசு மேற் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) (தமிழ்நாடு சட்டம் 26/1963) சட்டத்தின்கீழ் பட்டா பெறுவதற்கான எல்லா நேர்வுகளிலும் நிலம் சொந்தச் சாகு படியில் இருந்ததாக மெய்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி சட்டத்தின் 9-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள கால அளவில் தமது சொந்தச் சாகுபடியில் இருந்ததாக மெய்ப்பிப்பாராயின் நிலத்தை வைத்திருப்பவர்கள் நிலப்பட்டா பெறுவதற்குத் தகுதி

யுடையவர்களாவர். நிலத்தை வைத்திருப்பவர் இந்து சமய நிறுவனமாயிருப்பின், பட்டா வழங்கும் காரியத்துக்காக, நிலத்தை சொந்தச் சாகுபடியில் வைத்திருந்ததாக மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. எந்த நிலம் குறித்து நிலம் வைத்திருப்பவர் அல்லது வேறெவர் மேற்படி சட்டத்தின் வேறு எந்த விதித்துறையின் கீழும் ரயத்துவாரிப் பட்டா பெற உரிமையில்லாமல் உள்ளாரோ அந்த நிலங்களைப் பொறுத்த வரையில், ரயத்து நிலங்கள் குறித்து பட்டா பெற மேற்படி சட்டத்தின் 10-வது பிரிவின்கீழ் ஒவ்வொரு குடியான வரும் உரிமை உடையவராகிறார். மேற்படி பிரிவின்கீழ் ரயத்து பட்டா பெறுவதற்கு சொந்தச் சாகுபடியை மெய்ப்பிப்பதற்கான தேவை இல்லை. மேற்படி சட்டத்தின் 9 அல்லது 10 ஆவது பிரிவின்கீழ் பட்டா பெறத் தகுதியுடையவர் யாரும் இல்லாதிருந்து, அந்த நிலம் அரசிடம் நிலை பெற்றிருந்தால், அந்த நிலத்தை 11-ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ள கால அளவில் சொந்தத்தில் சாகுபடி செய்துகொண்டிருந்த நபர், 11-ஆவது பிரிவின்கீழ் அந்த நிலம் குறித்து பட்டா பெற உரிமையுள்ளவ ராவார். ஒன்பது, 10 அல்லது 11-ஆவது பிரிவின்கீழ் பட்டா பெற எவரும் உரிமையுடையவராக இல்லாதிருந்தால், அப்பொழுது அந்நிலம் அரசிடம் நிலைபெறும். நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகள் மேற்கண்ட விதித்துறைகளை ஏற்கெனவே செயல்படுத்தி வருகின்றனர்.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் நிலத்திலே யார் யார் சாகுபடி செய்து வருகிறார்களோ, வீட்டு மனையை சொந்தத்தில் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பட்டா வழங்க வேண்டுமென்று இருக்கிறது. திருச்சியில் நவாப் தோட்டத்தில் குடியிருக்கும் 50, 60 குடியானவர்களுக்கும், இனாம் தாரருக்கும் சேர்த்து ஜாயின்ட் பட்டா வழங்கக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பது பற்றிப் புகார் அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிறதா? அந்தக் குடியானவர்களுக்கு தனியாகப் பட்டா வழங்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.





## வெள்ளி விழா கிராமம்

*636 வினா—**திரு. த. சோனையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்தில் வெள்ளி விழா கிராமமாக எந்த கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

(இ) இதுவரையிலும் அங்கே என்னென்ன வேலைகள் நடைபெற்று இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தீத்தாம்பேட்டை கிராமம் வெள்ளிவிழா கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

(இ) நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள், நிறைவேற்றப்பட்ட பணிகள், ஆகிய விவரங்களடங்கிய அறிக்கை@ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. வீராசாமி:** வெள்ளி விழாவை முன்னிட்டு இவ்வளவு சிறப்பாக, ரோடு போடுதல், குடிதண்ணீர் வசதி, அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல் ஆகிய பணிகளுக்காக ஒரே ஒரு கிராமத்திற்கு 1,28,660 ரூபாய் செலவழிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 25,000 ரெவின்யூ வில்லேஜ்கள் இருக்கின்றன. இதே போன்று எல்லாக் கிராமங்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுமென்றால் 31,250 கோடி ரூபாய் ஆகும். இதைக் கனவில் கூடக் காண முடியாது. ஒரு ஆண்டுக்கு சில கிராமங்களை எடுப்பது என்று வைத்துக் கொண்டால்கூட 100, 150 ஆண்டு காலமாகும். இந்தச் சிறப்பான திட்டத்தை முடிந்த அளவுக்கு மத்திய அரசின் உதவியைப் பெற்றுவது நிறைவேற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** யோசனை நன்றாக இருக்கிறது. நிறைவேற்ற இப்போது இயலாது.

---

@ 655-657-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. நா. காசிராமன்: 1,28,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து நல்ல பணிகளை அனுபவிக்கக்கூடிய நிலைமையில் வெள்ளி விழா சீருராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தக் கிராமம் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது? அதேமாதிரி மற்றக் கிராமங்களுக்கும் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்தியாவின் 25-வது சுதந்திர வெள்ளி விழா ஆண்டையொட்டி ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடத்தும் திட்டம் இந்தத் திட்டம். இந்தத் திட்டத்திற்கான கிராமங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

## Applied Nutrition Programme

* 637 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Applied Nutrition Programme is being implemented in Kanyakumari district; and

(b) if so, the details of the Blocks, where it is being implemented?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) தக்கலை பஞ்சாயத்து ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ்: கிள்ளியூர் வளர்ச்சி வட்டம் பிற்பட்ட வளர்ச்சி வட்டம். பொருளாதார நிலையில் பின்தங்கிய ஏழை மக்கள் இருக்கிறார்கள். அங்கு நியூட்ரிஷன் ப்ரோகிராம் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 1972–73-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் தக்கலை உட்பட ஆறு வளர்ச்சி வட்டாரங்களில் திட்டத்தை செயல்படுத்துமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தச் சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த வட்டாரங்களை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்ல என்ன தகுதிகளை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது? தக்கலை ஊராட்சி ஒன்றியத்தை மட்டும் எடுப்பதற்கு விசேஷ காரணங்கள் உண்டா? தக்கலையில் ஆளும் கட்சி உறுப்பினர் தலைவராக இருக்கும் காரணத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டதா அல்லது வேறு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இதுவரை தக்கலை மாத்திரமல்லாமல் 38 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு கிராமமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் தக்கலை கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கட்சிக் கண்ணோட்டத்தோடும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஐந்தாண்டு காலத்திற்கு இத் திட்டத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதை எல்லாம் விவரமாகக் குறிப்பிட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு அங்காங்கே ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக என்ன காரியங்கள் செய்யப்படுகின்றன என்ற விவர அறிக்கை வேண்டுமென்று கேட்டால் அதை வைக்கத் தயாராக இருக்கிறேன்.

## Housing Projects

* 638 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the Government have sought the assistance of the Hindustan Housing Factory for the Housing Projects of the State Housing Board; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. என். டென்னிஸ் :** வீடு கட்டும் பொருள்களின் விலை அதிகரித்து வருவதால் இவ்வித ஸ்தாபனத்தின் உதவி இருந்தால் அனுகூலமாக இருக்கும் அல்லவா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்துஸ்தான் உறவுசிங் பாக்டரியிலிருந்து ப்ரிஃபாப்ரிகேடட் ஹவுஸ் கட்ட கட்டுமானப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலையை அம்பத்தூரில் ஏற்படுத்தலாம் என்று இந்திய அரசு பரிந்துரை செய்திருக்கிறது. தமிழக அரசு அதுபற்றிப் பரிசீலித்து வருகிறது. அதன்மூலம் வீடு கட்டும் செலவு ஓரளவு குறையும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நகர்ப்புறங்களில் வீட்டு மனைகளின் விலைகள் ஏறிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக வீடு கட்டும் திட்டம் கூட்டுறவு முயற்சியில் பாதிக்கப்படுகிறது. அந்த விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வீடு கட்டும் பொருள்களில் சிமென்ட், இரும்பு போன்றவை அதிக விலையாக இருக்கின்றன. நிலத்தின் விலையும் ஏறிக்கொண்டிருக்கிறது. நிலத்தின் விலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. ப்ரிஃபாப்ரிகேடெட் ஹவுஸைப் பொறுத்தவரை தமிழகத்திலுள்ளவர்கள் அதிகமாக விரும்பாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்துஸ்தான் ஹவுசிங் பாக்டரிமூலம் ப்ரிஃபாப்ரிகேடட் ஹவுசுக்கான தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசாங்கம் பரிந்துரைத்தும்கூட மாநில அரசாங்கம் காலதாமதம் செய்யக் காரணம் என்ன ? சாதாரணமாக எதற்கெடுத்தாலும் மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டிக் கொண்டிருப்பவர்கள் இதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்தும் நீங்கள் காலதாமதம் செய்யக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மூன்று கோடி ரூபாயில் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை வருவதற்கு பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன. காலதாமதம் எங்களால் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொன்னவுடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தொழிற்சாலை வருவதற்குள் நம்முடைய மக்களைத் தயாராக்கும் சூழ்நிலை இருக்கிறது. இன்று ப்ரிஃபாப்ரிகேடெட் மாதிரி வீடுகளைக் கட்டியிருக்கிறோம். அதற்கு டிமாண்ட் அதிகமான அளவு வரவில்லை. அது வந்தவுடன் இந்தத் தொழிற்சாலை அமைவது நல்லது என்று அரசு கருதுகிறது.



## தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்

*639 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) & (இ) இல்லை. இருப்பினும் இம் மாநிலத்தில் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி மானியத் திட்டம் Subsidised Industr ial Housing Scheme. ) செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளுக்குச் சென்றுவர வசதியாக மையமாக அமைந்துள்ள பகுதியில் பொதுவாக குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** இந்தத் திட்டம் ஏற்கனவே ஏழு ஆண்டுகளுக்கு முன்பே அமலுக்குக் கொண்டுவரப்பட்ட திட்டம். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு இதை விரிவாக்கும் என்று கருதினேம். இன்னும் அது விரிவாக்கப்படாமல் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். ஏற்கனவே திரு. வி. க. நகரில் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. ஒன்று கட்டிமுடித்த வீடுகள் பழுதுபார்க்கப்பட வேண்டும், இல்லையென்றால் இன்னும் ஏராளமான வீடுகளைத் தொழிலாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கவேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறது ?

[1974 மார்ச் 27

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** விரிவாக்கவில்லை என்று நான் எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. நிறைய வீடுகளைக் கட்டிக்கொண்டு வருகிறோம். முன்னால் தனிப்பட்ட வீடுகள் தொழிலாளர்களுக்குக் கட்டப்பட்டு வந்தன. இப்போது இடத்தின் அதாவது நிலத்தின் விலை ஏறிக்கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே தொழிலாளர்களுக்குத் தனிப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள் கட்டவேண்டுமென்று அரசு விரும்புகிறது. தொழிலாளர் நல இலாகாவும் விரும்புகிறது. ஏற்கனவே இருக்கிற வீடுகளை இடித்துக் கட்டவேண்டிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. பழுதடைந்த வீடுகள் சிலயிடங்களில் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் அந்த வீடுகள் தங்களுக்குச் சொந்தமாக இருப்பதுபோல் பாவித்து காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். அந்தச் சூழ்நிலை மாறுமானால் நிரம்ப வீடுகள் கட்ட முடியும். நிறைய வீடுகள் ஏற்கனவே கட்டிக் கொண்டும் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி :** தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் வீட்டு வசதி வாரியத்துக்குக் கடிதம் எழுதினால் வீட்டுவசதி வாரியம் ஒப்புக்கொண்டு அங்கு வீடுகளைக் கட்டலாம் அல்லவா? அதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஏற்கனவே மதுரையில் கூட ஒரு ஆலை அதிபர் தன் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் தொழிலாளர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொண்டு வருகிறது. தனியாக தொழில் அதிபர்கள் தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டினால் 50 சதவீதம் கடனும், 25 சதவீதம் உதவித் தொகையும் ஆட்சி அளித்து வருகிறது.

### பீடித் தொழிலாளர்கள்

***640 வினா—திரு. ஜி. ராமசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதம் வரையறுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?



1974 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** 1—7—1973 முதல், பீடித் தொழிலாளர்களுக்கு, குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் மாநில முழுமைக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது வட ஆர்க்காட்டில் உள்ள நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

***641 வினா—திரு. என். டென்னிஸ் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும், பீடித் தொழிலாளர்கள் டிசம்பர் 6, 1972 தினத்தை கோரிக்கை நாளாக அனுஷ்டிக்க முடிவு செய்திருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அவர்கள் கோரிக்கையை பரிசிலனை செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) பீடித் தொழிலாளர்கள் பத்து கோரிக்கைகளை விடுத்தனர். அவற்றில் தென் மாநிலங்களிலுள்ள பீடித் தொழிலாளர்களுக்கு 1,000 பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 5.50 என்ற ஒரே சீரான கூலி நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதும், பீடி, சுருட்டுத் தொழிலாளர் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள்) சட்ட சம்பந்தமான சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து புது டில்லி தலைமை நீதிமன்றத்தில் வழக்காட வேண்டும் என்பதும் முக்கியமான கோரிக்கைகள் ஆகும். 17—1—1973-ல் புது டில்லியில் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவினையொட்டித் தமிழ்நாடு அரசு பீடித் தொழிலாளர்களுக்கான குறைந்தளவு ஊதிய விகிதங்களை 1-7-73 முதல் தகுந்தவாறு மாற்றி அமைத்தது. பீடி, சுருட்டுத் தொழிலாளர் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள்) சட்டம் செல்லுபடியாகும் என்று தலைமை உயர்நீதி மன்றம் தற்போது தீர்ப்பளித்து உள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** தற்போது பல பீடித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அதனால் தொழிலாளர்கள் பலர் வேலை இழந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன தீவிர நடவடிக்கைகள் எடுக்கும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** கூலி உயர்வு கேட்டுத்தான் கோரிக்கைகள் வந்திருக்கின்றனவே தவிர எந்தப் பீடித் தொழிற்சாலையும் மூடிக் கிடப்பதாக எனக்கு தகவல் இதுவரையில் இல்லை. அப்படிப்பட்ட தகவல் ஏதாவது உறுப்பினர் அவர்கள் தருவார்களானால் அதை அரசாங்கம் பரிசீலிக்கத் தயாராயிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** வட ஆர்க்காடு மாவட்டத்தில் நம்முடைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலியை பல தனிப்பட்ட பீடிக் கம்பெனிக்காரர்கள் கொடுப்பதில்லை. அது குறித்து அரசுக்கு முறையிட்டிருக்கிறார்கள். எனவே அந்த குறைந்தபட்சக் கூலியைக் கொடுக்காத முதலாளிகள்மீது நம் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வந்திருக்கிற கோரிக்கைகள் குறைந்தபட்ச கூலி யாரும் கொடுக்கவில்லை என்ற கோரிக்கை என்னிடம் இதுவரையில் வரவில்லை. ஆனால் வந்திருக்கிற கோரிக்கைகள் கூலியை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைதான் என் முன்னால் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, the dispute that has been referred by the Hon. Minister has been adjudicated upon by the Supreme Court of India and in the light of adjudication by that body, will the Government be prepared to bring in a comprehensive legislation to give all possible concessions to the beedi workers and to procure proper job security for beedi workers?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பீடித் தொழிலாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதில் அரசு மிகுந்த கவனம் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த கோர்ட் நடவடிக்கைகள்மீது அவர்களுக்கு தனிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏற்கனவே பீடித் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதுதான் ஒத்தி போடப்பட்டது. காரணம் பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலத்திற்கு இந்தத் தொழில் பறந்து



போய் விடுமோ என்ற பயம் காரணமாக. ஆகவே, அந்தச் சட்டத்தை மீண்டும் அமல்நடத்துவதில் என்ன கஷ்டம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சட்டத்தைப் பற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை என்று சொன்னாலும், பீடித் தொழிலைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் ரூ. 3.50 நிர்ணயித்திருக்கிறோம். ஆந்திராவில் ரூ. 2.50 என்றிருக்கிறது. ஆந்திரா என்றால் எங்கேயோ இருப்பதல்ல, சித்தூரில் ரூ. 2.50 வேலூரில் ரூ. 3.50. ரூ. 4.50 தரவேண்டுமென்று கேட்கிறார்கள். மைசூரில் ரூ. 4.50 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தும், காண்ட்ராக்டர்களுக்கு கொடுத்து விடுகிறார்கள், தொழிலாளர்களிடம் பணம் போய் சேருவதில்லை. தமிழகத்தில் நிர்ணயிக்கப்பட்ட கூலி தொழிலாளர்களுக்கு மத்தியில் போய் சேருகிறது. ஆகவே, கூலிப் பிரச்சினையில் சிறிது ஜாக்கிரதையாக இல்லாமல் போனால்—ஏற்கனவே டெல்லியில் நடந்த தொழிலாளர்கள் நல அமைச்சர் மாநாட்டில் ஆந்திராவில் இருக்கிற கூலியை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னேன். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஆந்திராவைச் சேர்ந்தவர். அவர்கள் இதுவரை அதிகப்படுத்தாமல் இருக்கிறார்கள். அவர்கள் அதிகப்படுத்தினாலொழிய தமிழ்நாட்டில் இருக்கிற பீடித் தொழிலாளர்களுக்கு தகுந்த வாழ்வு அளிப்பது என்பது கடினம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** 1—7—1973 அன்று தொழிலாளர்களுக்கான கூலி உயர்வு நிர்ணயிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் எந்த அடிப்படையில் செய்யப்பட்டது? இப்போதிருக்கிற விலைவாசியேற்றத்தின் அடிப்படையில் அவர்களுக்கு கூலியை ஓரளவிற்கு உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஏற்கனவே மாநிலங்கள் மத்தியில் இருக்கிற நிலைமையை படம் பிடித்துக் காட்டினேன். வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போது ரூ. 3.25 ஜாடி பீடிகளுக்கும் ரூ. 2.95 சாதாரண பீடிகளுக்கும் என்று வரைமுறை வகுத்திருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் ரூ. 4.50 கூலி தர, அங்குள்ள பீடி முதலாளிகள் ஒத்துக்கொண்டு கூலி தந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1974 மார்ச் 27

**திரு. கே. எ. வகாப் :** இன்றையதினம் ஆந்திராவில் உள்ளவர்கள் கூலியை ஏற்றவில்லை அதனால் நாம் ஏற்றவில்லை, அத்துறை மத்திய அமைச்சர் ஆந்திராவைச் சேர்ந்தவர் என்று சொன்னார்கள். இந்தப் பீடித் தொழிலாளர்கள் வறுமை, நோய், மற்றும் பல்வேறு விதமான வேதனைகளுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். இன்றைய விலைவாசியேற்றத்தின் அடிப்படையில் பீடி முதலாளிகளே கூலியை உயர்த்துவதை ஒத்துக்கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆனால் இதில் அரசு சற்று தீவிர முயற்சி எடுத்துக் கொண்டால் அதில் வெற்றியடையலாம். ஆகவே, அந்த முயற்சியை இந்த அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இது தொழிலாளர் நல அரசு என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Training Institute for Transport Staff*

* 642 Q.—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start an Institute to train State Transport Staff in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) இந்தப் பொருள் அரசின் முதனிலை பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** இது தொழில் சம்பந்தமாக மாத்திரமா ? ஒழுக்க முறை அதாவது பணியாளர்கள் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும் முறை குறித்து பாடமாகக் கற்றுக்கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இருக்கிற உபரித் தொகையை வைத்து தமிழ் நாட்டில் ஒரு போக்குவரத்து இன்ஸ்டிட்யூட், ரோட் டிரான்ஸ்



1974 மார்ச் 27]

போர்ட் இன்ஸ்டிட்யூட் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது. அதன் மூலம் தகுந்த ட்ரைவர்களை உருவாக்குவது, கண்டக்டர்களுக்கு நல்லமுறையில் பயிற்சி தருவது, மெக்கானிக்குகளை உருவாக்குவது என்பனபோன்ற வைகளில் திட்டமிட்டு—ஏனென்றால் இன்னும் பத்து இருபது ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பேருந்துகளையும் நாமே கையகப்படுத்துவது என்று வரும்போது அதற்கான மான் பவர் ப்ளானிங், மனித சக்தி அளவை நிறைவு செய்கிற வகையில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தலாம் என்ற ஆலோசனை இருக்கிறது.

(முற்பகல் 10.00)

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, இந்தத் திட்டம் விரைவாக அமைக்கப்படுமா ? எந்த இடத்தில் அமைக்கப்படும் ? அதற்கு என்ன செலவாகும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்த விவரங்கள் எல்லாம் இன்னும் முடிவு எடுக்கப்படாததால்தான் ஆரம்பநிலையில் இருக்கிறது என்று என் பதிலில் தெரிவித்தேன்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தப் போக்குவரத்துத் துறை நாளடைவில் தமிழ்நாடு முழுவதும் நாட்டுடைமையாக்கப்படவிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளுக்கு நிறைய உதிரி பாகங்கள் தேவைப்படும். இப்போது அதிகவிலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தப் போக்குவரத்துத் துறையும், தொழிற்துறையும் இணைந்து இந்த உதிரி பாகங்களை உற்பத்தி செய்வதற்காக ஒரு பயிற்சியையும் அளிக்க இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இதிலே அடிப்படையான ஒரு வேறுபாடு உண்டு. ஒரு புறம் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தாலும், இன்னொரு புறம் டிரைவர்கள்கூட போதுமான அளவுக்கு போக்குவரத்துத் துறையில் கிடைப்பது இல்லை. ஆகையால் இருக்கிறவர்களை நல்ல முறையில் பயிற்றுவித்து போக்குவரத்துத் துறையில் எவ்வளவுக் கெவ்வளவு பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஆராய்ந்து அதற்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு

[1974 மார்ச் 27

மென்பதற்காகத்தான் இந்த பயிற்சிநிலையம் உருவாக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மெக்கானிக்ஸ் பற்றி குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். போக்குவரத்துக் கழகங்கள் அத்தனைக்கும் சேர்த்து இன்ஜினியரிங் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் என்ற முறையில் உதிரி பாகங்களை உற்பத்தி செய்ய ஒரு நிறுவனம் ஆரம்பித்து இருக்கிறோம். அதிலே கொடுக்க வாய்ப்பு ஏற்படுமானால் அவற்றையும் பரிசீலிக்கலாம்.

### டி.வி.எஸ். கம்பெனிக்கு இழப்பீட்டுத் தொகை

* 643 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை டி.வி.எஸ். போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்கியதில் டி.வி.எஸ்க்கு அரசு நஷ்ட ஈடாக கொடுத்தது, கொடுக்க வேண்டியது எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மதுரை சதர்ன் ரோட் வேஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தாருக்கு அரசு இழப் பீடாக ரூ. 91,55,057.25 வழங்கியுள்ளது ; அரசு எடுத்துக் கொண்ட எல்லா உடமைகள் தொடர்பாகவும் இந்நிறுவனத்தார் கோரிய இழப்பீட்டுத் தொகை தொடர்பாக, முழுமையாகவும் இறுதி யாகவும் கொடுத்துத் தீர்க்கும் வகையில் இத்தொகை வழங்கப் பட்டது.

**திரு. த. சோனையா :** தலைவரவர்களே, இந்த டி.வி.எஸ். நிறுவனத்திற்கு தமிழக சர்க்கார், அதை தேசிய மயமாக்கியபோது மொத்தமாகக் கொடுத்த தொகை எவ்வளவு? இன்னும் நாம் கொடுக்க வேண்டிய தொகை இருக்கிறதா ? அதைக்கொடுக்கிற போது எந்த முறையில் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, டி.வி.எஸ். நிறுவனத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் கொடுக்க வேண்டிய தொகை 1 கோடியே 25 லட்சம் ரூபாய். அதில் நாம் கிராஜுவிடி அல்லது லயபிலிடி என்று பிடித்துக்கொண்டது 33 லட்சம் ரூபாய். ஆகவே, மொத்தம் தரப்படவேண்டியது ரூ. 91,55,057.25. ஏற்கனவே அது தரப்பட்டு விட்டது.



[1974 மார்ச் 27

**திரு. கோவை செழியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். கேள்வி மீது. பேரவைத் தலைவரவர்களே, மதுரை டி.வி.எஸ். போக்கு வரத்தை நாட்டுடைமை ஆக்கியதில் டி.வி.எஸ்க்கு அரசு நஷ்ட ஈடாகக் கொடுத்தது எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். டி.வி.எஸ். போக்குவரத்து மதுரையில் கிடையாது. சதர்ன் ரோடுவேஸ் தான் இருந்தது. இந்தக் கேள்வியை அனுமதித்ததே தவறு. கேள்வியை எப்படி டிபார்ட்மெண்டுக்கு அனுப்பி, அதற்கு பதிலும் பெற்று, இங்கே அனுமதித்து இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன். டி.வி.எஸ். போக்குவரத்து கிடையாது. சதர்ன் ரோடுவேஸ் தான் இருக்கிறது. இந்தக் கேள்வியை எப்படி அனுமதிக்கலாம்.

**திரு. கு. காமாட்சி :** சதர்ன் ரோடுவேஸ் என்றாலும் ஒவ்வொரு பஸ்ஸிலும் டி.வி.எஸ். என்றுதான் எழுதியிருந்தது. தவறான தகவலை உறுப்பினர் தருகிறார்கள்.

**திரு. த. சோனையா :** மாண்புமிகு கோவை செழியன் அவர்கள் கேள்வி கேட்டதே தவறு என்று சொல்கிறார்கள். அந்த வார்த்தையை அவர்கள் வாபஸ் வாங்கவேண்டும். கேள்வி தவறு, கேட்டதற்கு பதில் கொடுத்தது தவறு என்று சொல்வது— என்னுடைய கேள்வி தவறு என்று சொல்வது வருத்தத்தக்க விஷயம். அதை அவர்கள் உடனடியாக வாபஸ் வாங்கவேண்டு மென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, 1 கோடியே 25 லட்சம் ரூபாய் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது பணமாகக் கொடுக்கப் பட்டதா? அது பாண்டாகக் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, கேள்வியிலேயே பிரச்னை எழுந்து இருக்கிறது. டி.வி.எஸ். என்ற நிறுவனம் பஸ்களை, லாரிகளை நடத்தவில்லை. சதர்ன் ரோடுவேஸ் தான் நடத்துகிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறார்கள், கேட்கிறபோது அரசாங்கத்தின் சார்பில் அந்தக் கேள்வியின் பின்னாலே இருக்கிற உணர்வுக்குத்தான் பதில் அளிக்கிறோமே தவிர அது டெக்னிகல்லாக சரியாக இல்லை என்று

சொல்லி அரசாங்கம் பொறுப்பைத் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. ஆகவேதான் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பணமாகக் கொடுக்கப்பட்டதா என்று கேட்டார்கள். அந்த நஷ்ட ஈடு பேச்சுவார்த்தை மூலமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே அவர்களுக்கு பணமாகவே வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. என். கே. பழனிசாமி அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

## (3) கவன ஈர்ப்பு.

### (அ) கரூர் நெசவு நூற்புத் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

Thiru N. K. PALANISAMY : Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, tde continuous strike by the handloom weavers in Karur weaving factories, numbering more than 3,000 pressing for more wages.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, கரூர் வட்ட நெசவு நூற்புத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை குறித்து 27-12-1973 அன்று ஒரு தொழிற் தகராறு எழுப்பியது :—

1. வருகைப் பதிவேடு போடுதல்.
2. எட்டு மணி நேரம் வேலை.
3. விருதி நேரம் சலுகைகள் அளிப்பது.
4. விடுப்பு சலுகைகள் அளிப்பது.





5. தேசிய பண்டிகை விடுமுறைகள் அறிவிப்பு.
6. வருங்கால சேமிப்பு நிதி.
7. ஐம்பது சதவீதம் ஊதிய உயர்வு அளிப்பது.

28—1—1974 அன்று திருச்சி தொழிலாளர் அலுவலர் இரு தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தினர். அவரது அறிவுரையின் பேரில் கரூர் நெசவு நூற்பு ஆலையின் உரிமையாளர் சங்கம் 50 சதவீதம் ஊதிய உயர்வு அளிப்பது தவிர மற்ற கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தது. 50 சதவீதம் ஊதிய உயர்வு அளிப்பது குறித்து தொழிலாளர் அலுவலர் 12—2—1974 அன்றும் 20-2-1974 அன்றும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அவர் ரூ. 50 ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 35 ஊதிய உயர்வும், ரூ. 50-க்கு மேற்பட்டு ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 30 ஊதிய உயர்வும் சிறப்பு ஊதிய உயர்வாக அளிக்குமாறு ஆலோசனை கூறினர். சங்கம் அதற்கு மறுப்பு விடுத்து, 22-2-1974 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது.

25—2—1974 அன்று தொழிற்சாலை உரிமையாளர்களில் ஒருவர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர் ஒருவரால் ஊர்வலத்தில் இழுக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டார். அதனால் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம் மேற்கொண்டு திருச்சி அலுவலரால் 28-2-74 அன்று ஏற்படுத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளவில்லை. 1—3—1974 அன்று மதுரை தொழிலாளர் துணை ஆணையாளர் அவர்களால் மதுரையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் தொழிற்சங்கம் மட்டுமே கலந்து கொண்டது.

இதற்கிடையில் திருச்சி மாவட்ட அலுவலர் குறுக்கீட்டின் காரணமாக சாயத் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளருக்கும் (ஏறக்குறைய 1,000 தொழிலாளர்கள்) இடையே 7—3—1974 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அதன் காரணமாக சாயத் தொழிலாளர்கள் மட்டும் வேலையில் சேர்ந்தனர். திருச்சி மாவட்ட அலுவலர் மேற்கொண்டு நடத்திய பேச்சு வார்த்தையின் காரணமாக கீழ்க்கண்ட ஒப்பந்தம் 18—3—1974 அன்று ஏற்பட்டது. அதன் விவரங்கள் பின் வருமாறு :—

[திரு. க. இராசாராம்] [1974 மார்ச் 27

1. ரூ. 49 ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 13 ஊதிய உயர்வும், ரூ. 50 முதல் ரூ. 99 வரை ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 23 ஊதிய உயர்வும், ரூ. 100-க்கு மேற்பட்டு ஈட்டும் தொழிலாளர்களுக்கு ரூ. 28 ஊதிய உயர்வும் அளிக்கப்படும்.

2. இந்த ஒப்பந்தம் ஏறக்குறைய 2,000 தொழிலாளர்கள் வேலை செய்யும் 210 நிறுவனங்களை கட்டுப்படுத்தும். இந்த ஒப்பந்தம் 1—3—74 முதல் ஏற்பட்டு, ஒரு வருடம் வரை நீடிக்கும்.

தொழிலாளர்கள் அனைவரும் வேலையில் சேர்ந்தனர்.

**(ஆ) மேட்டூர் பியர்சல் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அலெக்ஸாண்டர் திரட் தொழிற்சாலை தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.**

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, மேட்டூர் பியர்சல் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அலெக்சான்டர் திரட் தொழிற்சாலையில் பணி புரியும் 160 தொழிலாளர்கள் 4—2—1974-ம் நாள் முதல் தங்கள் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்வது பற்றியும், அதன் தொடர்பாக சேலம் லேபர் ஆபீசர் சொன்ன ஆலோசனையை கேட்காமல் மேற்படி நிர்வாகத்தினர் பாதி தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வதாகக் கூறுவதால் மூன்று தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருவது பற்றியும் இதனால் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பரபரப்பான நிலை பற்றியுமான அவசரப் பொது முக்கியம் வாய்ந்த காரியத்தை நான் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணையில் 160 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற 'அலெக்ஸாண்டர் திரட் கம்பெனி' மேட்டூர் அணையில் உள்ள மேட்டூர் பியர்செல் கம்பெனியின் ஒரு பிரிவு ஆகும்.

நான்கு சங்கங்கள் சேர்ந்து அமைக்கப்பட்ட ஒரு கூட்டு செயற்குழுவின் மூலம் தொழிலாளர்கள் ஒரு கோரிக்கைப் பட்டியலை நிர்வாகத்தின் பரிசீலனைக்கு கொண்டு வந்தனர்.



1974 மார்ச் 27] [திரு. க. இராசாராம்]

நிர்வாகத்தினர், சங்கங்களுடன் நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தி, 20 நாட்களுக்கு ஒரு நாள் விதம் விடுப்பு அனுமதி வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை மட்டும் ஒத்துக் கொண்டு சமரசம் செய்து கொண்டனர். மற்ற கோரிக்கைகளைப் பற்றி பல தடவை நேரடியாக இருதரப்பு பேச்சு வார்த்தைகள் நடந்தும் ஒரு சமரச முடிவும் எடுக்கப்படவில்லை.

அதன் விளைவாக 4—2—74 நாள் முதற்கொண்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சேலம், தொழில் துறை அலுவலர் சம்பந்தப்பட்ட கட்சியினரை 5—3—1974 அன்று சமரசப் பேச்சு வார்த்தைக்காக வரும்படி அழைப்பு விடுத்தார்.

இதற்கிடையில் நிர்வாகம் 88 தொழிலாளர்களை 6—4—74 முதல் ஆட்குறைப்பு செய்யும் பொருட்டு ஆட்குறைப்பு அறிவிப்பு வழங்கியது.

1973 ஆம் வருடம் ஜனவரித் திங்கள் 31 வரை ரூபாய் 25 லட்சம் நட்டம் ஏற்பட்டதால் சிக்கனமாக இயங்காத பிரிவுகளை நிறுத்தி விடவும், மற்ற வேலைகளில் வேலைப் பளுவினை சீராக்கவும் நிர்வாகம் தீர்மானித்தது.

அதன்படி 1974 ஆம் வருடம் மார்ச் திங்கள் 5 ஆம் நாள் மாலை சேலம் தொழிலாளர் அலுவலர் முன்பு சமரசப் பேச்சு வார்த்தை நடக்க இருந்தது. ஆனால் அன்று முற்பகலிலேயே நிர்வாகத்தினர் ஆட்குறைப்பு நஷ்ட ஈட்டுத் தொகையை பண அஞ்சல் மூலம் தொழிலாளர்களுக்கு அனுப்பி வைத்தனர்

மேற்சொல்லப்பட்ட சங்கங்கள் இந்த ஆட்குறைப்பு பழிவாங்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டது என்று குற்றம் சாட்டினர். சங்கங்கள் தொழிற்சாலையின் உள்ளேயே சத்தியாக்கிரகம் செய்ததாக நிர்வாகத்தினர் தொழிலாளர் துறை ஆணையருக்கு தந்தி மூலம் தெரிவித்தனர்.

மேலும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, இத்தகராறுகளில் முடிவு காணும்படி கோயம்புத்தூர் துணைத் தொழிலாளர் ஆணையாளருக்கு கட்டளையிடப்பட்டது.

துணை ஆணையர் நடத்திய பேச்சு வார்த்தை முறிந்துபட்ட நிலையில் சென்னை வந்து இங்கே உள்ள துணை லேபர் கமிஷனர் முன்னிலையில் தற்போது பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த தொழிற்சாலை மிக சிறிய தொழிற்சாலை. இந்தத் தொழிற்சாலையில் போன நவம்பர் மாதத்தில் கூட புதிதாக ஆளை எடுத்து இருக்கிறார்கள். இங்கே தொழிலாளிகளின் சம்பளம் 2½ ரூபாய், 3 ரூபாய், 3½ ரூபாய் என்ற நிலையில் இருப்பதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து வேலை நிறுத்தம் செய்கிறபோது மானேஜ்மெண்ட் சைடிலிருந்து 88 ஆட்களை அதிகமாக இருப்பதால் வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன் வைத்தால். இது தொழிலாளர்களை பழி வாங்குவது என்றல்லாமல் வேறு எந்த நியாயமும் கற்பிக்க முடியாது.

ஆகவே, அப்படிப்பட்ட நிர்வாகம் செய்கிற தவறான காரியத்திற்கு கொடுமையை தடுத்து நிறுத்தி தொழிலாளர் உரிமையை பாதுகாக்க இந்த அரசாங்கம் உறுதியாக பணியாற்றுமா என்பதை கேட்க விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நான் ஏற்கனவே அறிக்கையில் சொன்னதுபோல் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அதில் சுமுகமான முடிவு ஏற்படும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் ஆணையர் அவர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுவார் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் இருக்கும் திரு. துரைமுருகன் அவர்களை இது சம்பந்தமாகப் பேரவையின் நிகழ்ச்சிகளை நடத்தித் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பேரவைத் தலைவர் தம் இருக்கையை விட்டு எழுந்து பேரவையில் வேறொரு இருக்கையில் அமர்ந்தார். திரு. துரைமுருகன் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்தார்.



## 4. நடைமுறை கேள்விகள்.

**(அ) பேரவைத் தலைவரை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு விடையளிக்க அவருக்குத் தனி இருக்கை கொடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து.**

DR. H. V. HANDE : Mr. Chairman, Sir, I rise on a point of order. Before we take up this item 2 in the Agenda, I would like to know whether it will be in order for the Hon. Speaker to reply to this debate.

Supposing this debate takes place on the No-Confidence Motion against the Speaker, whether it would be appropriate for the Hon. Speaker to reply from the place where he is sitting now. Normally in this House, the hon. member should speak from the seat that is allotted to him. Now a seat has been allotted to me For the Hon. Speaker, no seat has been allotted and now he is sitting in the seat allotted to the hon. Member Thiru K. A. Mathialagan. I would like to know whether a separate seat will be allotted to the Hon. Speaker in this House. Unless he speaks from the allotted seat, his speach will not go on record. I would just like to know what is the seat from where he is going to reply to the debate.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை நான் புரிந்து கொண்டு விட்டேன். அவரை எங்கே உட்கார வைப்பது என்ற பிரச்னை தானே. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்றால் முதலில் அதற்குத் தேவையான உறுப்பினர்கள் எழுந்து நின்று பேரவை அனுமதி தர வேண்டும். அதற்குப் பின்பு தான் இந்தப் பிரச்னை வரும். ஆகவே, நாம் இப்போது இந்தத் தீர்மானத்திற்கு அவை அனுமதி அளிக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

**(ஆ) பேரவைத் தலைவரை பதவி நீக்க அனுமதி கோரும் தீர்மானத்தை வினா-விடை நேரத்திற்குப் பின் உடனடியாக எடுத்து கொள்ளாதது குறித்து.**

THIRU K. T. THANGAMANI : Sir, my point of order arises uner rule 58 of the Tamil Nadu Legislative Assembly Rules. Under that rule, on receipt of notice under rule 52, a motion

for leave to move the resolution shall be entered in the list of business in the name of the member concerned on the day of the meeting immediately after the expiry of the fourteen days, notice as required under Article 179 of the Constitution.

இன்று கேள்வி நேரம் முடிந்த பிறகு சில நடவடிக்கைகள் ரூல் 41-ன் கீழே எடுக்கப்பட்டது. உங்களுடைய கிளியர் ரூலிங்கை நான் அறிய விரும்புகிறேன். இந்த ரூல் 53 அடிப்படையில் பார்க்கிறபோது கேள்வி நேரம் முடிந்த உடனே இது எடுக்கப் படாமல், ரூல் 41-ன் கீழே சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதே அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

The motion shall be taken into consideration immediately after Question Hour.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** ரூல் 41-ன் கீழ் வரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எப்போதுமே அஜெண்டாவில் சேர்ப்பது கிடையாது. இன்பார்மலாகவே வைத்துக்கொள்வதே தவிர அஜெண்டாவில் வருவது இல்லை. இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

## 5. பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவல் பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் ஆகும். இத் தீர்மானத்தை முன்மொழியப் பேரவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறியுமுன் அதை இப்பேரவைக்கு நான் படிக்க வேண்டும். தீர்மானம் பின்வருமாறு உள்ளது.

"That this House resolves to remove the Hon. the Speaker Pulavar K. Govindan from his office on account of his failure to conduct the proceedings of this House in an impartial manner and by ordering expunction of proceedings lasting more than 45 minutes, refusing to allow points of order raised by Opposition





leaders and permitting the members of ruling party to make uncalled for remarks against the Opposition members and shout down the Opposition, etc."

தீர்மானத்திற்கான அறிக்கை அளித்திருப்பவர்கள்:—

திருவாளர்கள் கோவை செழியன்
கே. டி. கே. தங்கமணி
க. உரோ. எட்மண்ட்
ஆர். பொன்னப்ப நாடார்
திருமதி த. ந. அனந்தநாயகி

ஆகியோர். இந்தப் பேரவையின் 54 (1) விதியின்படி இத் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்க வேண்டும். அதற்கு 35 மாண்புமிகு உறுப்பினர்கள் அனுமதியளிக்க வேண்டும். எனவே அதற்கு அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களைத் தம் இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்:—

1. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
2. திருமதி ஜோதி வெங்கடாசலம்
3. திரு. எ. ஆர். மாரிமுத்து
4. திரு. பி. வெங்கடசாமி
5. திரு. கே. டி. கே. தங்கமணி
6. திரு. ஜே. ஜேம்ஸ்
7. திரு. கே. கே. முத்தையா
8. திரு. க. உரோ எட்மண்ட்
9. திரு. கு. அ. பொம்மன்
10. திருமதி த. ந. அனந்தநாயகி
11. திரு. சோ. அழகர்சாமி
12. திரு. ச. சங்குமுத்து தேவர்
13. திரு. கே. பி. கோபால்

[திரு. துரைமுருகன்] [1974 மார்ச் 27

14. திரு. சு. ம. துரைராஜ்
15. திரு. ஏ. சுப்பிரமணியம்
16. திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்
17. திரு. எஸ். வடிவேல்
18. திரு. எ. சுவாமிதாஸ்
19. திரு. மு. சத்தியமூர்த்தி
20. திரு. பெ. சௌந்திரபாண்டியன்
21. திரு. கா. காளிமுத்து
22. திரு. எம். சுரேந்திரன்
23. திரு. நா. வெ. குருசாமி
24. திரு. என். கே. பழனிசாமி
25. திரு. ஏ. பாலையா
26. திரு. ஓ. என். சுந்தரம்
27. திரு. கே. என். குமாரசாமி
28. திரு. ம. மோசஸ்
29. திரு. என். மருதாசலம்
30. திரு. என். டென்னிஸ்
31. திரு. அரங்கநாயகம்
32. திரு. நா. காசிராமன்
33. திரு. ஆண்டி அம்பலம்
34. டாக்டர் எச். வி. ஹான்டே
35. திரு. கோவை செழியன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : முப்பந்தைந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனுமதி அளிப்பதற்கு ஆதரவாக எழுந்து நிற்பதால் பேரவை அனுமதி அளிக்கிறது என்று தெரிவிக்கிறேன்.

இந்தத் தீர்மானம் 29—3—74 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.



1974 மார்ச் 27]

* திரு. க. உரோ. எட்மண்ட் : டெப்யூடி ஸ்பீக்கர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளும் கட்சி கொண்டுவந்த பொழுது ஒரு நாள் முழுவதும் அதை விவாதித்தோம். பேரவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு எப்படி ஒரு நாள் போதும்? 35 பேர்கள் பேசியாக வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : காலையிலே மான்யம் பற்றிய விவாதம் இருக்கிறது. அன்றைக்கு மாலையில் எடுத்துக்கொண்டாலும் 3 மணி நேரம் இருக்கிறது. 4 மணிக்கு ஆரம்பித்தால் தொடர்ந்து விவாதிக்கலாம். அதற்கென்று தனியாக ஒரு நாள் தேவையில்லை.

திரு. க. உரோ. எட்மண்ட் : சபாநாயகர் ஆசனத்தில் இருக்கும்பொழுது எங்களுக்கு அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதற்காகத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, வேறு ஒருவர் தலைவராக உட்கார்ந்திருக்கும்பொழுது பேரவைத் தலைவர் எங்களுக்குப் போதுமான நேரம் கொடுக்கவில்லை என்பதைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் கொஞ்சம் தாராளமாகப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, ஒரு நாள் இதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 3 மணி நேரம் என்பது ஒரு நாளைத்தான் குறிக்கும். நாளைக்கு மறுநாள் வைக்கப் பட்டிருக்கிறது. இன்னொரு நாள் காலையிலும் வைத்துக்கொண்டு மாலையிலும் வைத்துக்கொள்ளலாம், எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் பேசுவதற்கு அதிகமாக நேரம் இல்லையே என்றெல்லாம் இப்பொழுது சொல்லிக் கொண்டிருப்பது நல்லது அல்ல. ஆளும் கட்சியினருக்கும் அதிக நேரம் கொடுக்கவில்லையே என்று குறையாகத்தான் இருக்கிறது. அதிக நேரம் கொடுக்கவில்லையே என்று ஆளும் கட்சியினரே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்க வேண்டும். அதிக நேரம் கொடுக்கவில்லை என்பதைப்பற்றி யெல்லாம் பிறகு விரிவாகப் பேசலாம். 3 மணி நேரம் என்பது ஒரு நாளைத்தான் குறிக்கும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, No-Confidence Motion is being moved against the Chair and it is an important motion. So, we can have the discussion on the Demands in the afternoon but the Resolution can be taken up in the morning.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : ஏற்கனவே நான் சொன்னேன். காலையில் பட்ஜெட் டிமாண்ட் இருக்கிறது ஆகவே தான் மாலை 4 மணிக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். அப்பொழுது உங்களுடைய கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாலையிலே டிமாண்ட் வைத்துக் கொண்டு காலையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வைத்துக் கொண்டு நடத்தலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : அப்ரோப்ரியேஷன் பில் இருக்கிறது. . . . நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் மான்யக் கோரிக்கையைவிட இதுதான் முக்கியம் என்று கருதுகிற காரணத்தினால் மான்யக் கோரிக்கையை மாலை நேரத்திற்கு தள்ளிவிட்டு இதைக் காலையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் உங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தாலும் வந்துவிடும். 29—3—74 அன்று காலையில் எடுத்துக்கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மிஸ்டர் சேர்மன் ஸார், உங்களுக்குச் சௌகரியமாக இருப்பதற்குத் தான் சொல்கிறேன். ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): இது தொடர்பான பாயின்டு ஆப் ஆர்டரா, வேறு பாயின்டு ஆப் ஆர்டரா?



(4) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) பேரவைத் தலைவரை நீக்கக் கோரும் தீர்மானம் விவாதிக்கப் படும்போது, பேரவைத் தலைவர் இருக்கையில் இருந்து நடத்துபவரை பேரவை அனுமதியுடன் நியமிப்பது குறித்து.

DR. H. V. HANDE: This is different.

As per the rules 52, 53 and 54, the normal procedure is that when a No-Confidence Motion is moved against the Hon. Speaker, normally the Deputy Speaker presides. Once when a No-Confidence Motion was moved against the Deputy Speaker, there was no Speaker. So the Deputy Speaker himself appointed a Member from the Panel of Chairmen, Thiru Palanivel Rajan, by taking the leave of the House. Thiru Palanivel Rajan occupied the Chair and conducted the proceedings of the House. So normally a Member from the Panel of Chairmen is appointed for this purpose. Therefore, the Hon. Speaker or the Temporary Chairman should take the permission of the House with regard to the appointment of the person who is to sit in the Chair . . . . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): நீங்கள் உட்காருங்கள். நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதை நான் புரிந்துகொண்டுவிட்டேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கொஞ்சம் அமைதியாக இருந்தால் நான் சொல்லி முடித்து விடுகிறேன். ஒரு பாயின்டை சொல்லிவிடுகிறேன்.

The normal procedure is that the person presiding should fix the date with the concurrence of the Hon. the Leader of the House. Now the Hon. Chief Minister himself says.—

தாங்கள் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டுமென்று. ஏற்கனவே நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்கள். நீங்கள் மதியழகன் அவர்கள் மீது கொண்டுவந்தீர்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** இதிலே ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள். 'ஐ வோண்ட் அலவ் யு'. நான் எழுந்து நிற்கும்பொழுது நீங்கள் உட்கார வேண்டும். இந்த அவையின் பானல் ஆஃப் சேர்மனில் இருக்கிற யாராவது ஒருவரை உட்கார வைத்து அவையினுடைய அனுமதி கோரப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மீது கொடுத்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள அவை அனுமதி அளிக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு யார் உட்கார்ந்து இந்த அவையை நடத்தலாம் என்பது தான் பிரச்னை. பேனல் ஆஃப் சேர்மனில் யாராவது ஒருவர் உட்கார்ந்து நடத்தலாம் என்பதுதான் நம்முடைய சட்ட வழிமுறைகள். ஆகவே, இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. இது குறித்து மேலும் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த பானல் ஆஃப் சார்மனில் முதியவராக இருப்பவரை உட்காரவைக்கலாமா என்று நாங்கள் கருதினோம். அப்படிப் பார்த்தால் ஜோதி அம்மாள் அவர்களைத் தான் உட்கார வைக்க வேண்டும். அவரை உட்கார வைத்தால் 34 ஆகிவிடும். ஆகவே, மூத்தவர் இல்லாவிட்டால்கூட, அந்தப் பானல் ஆப் சார்மெனில் வரிசையாக வருவதில் முதல் வரிசையாக பெயர் துரைமுருகன் பெயர்தான் வருகிறது. ஆகவேதான் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். (சிரிப்பு).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

## (ஈ) பேரவைத் தலைவர் பார்வையாளர் மாடத்திற்கு அனுமதிச் சீட்டு வழங்காதது குறித்து.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** 'ஐ ஆர் செய்ஸிங் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கொஞ்ச நேரத்திற்கு முன்பு 10-லிருந்து 11 மணிக்கு ஸ்பீக்கர் காலரிக்கு பாஸ் வேண்டும் என்று கேட்டேன். ஒரு மணி வரையிலும் எல்லா இருக்கைகளுக்கும் பாஸ் கொடுத்து முடிந்தாகிவிட்டது என்று சொன்னார்கள் இங்கே பார்த்தால் பல இருக்கைகள் காலியாக இருக்கின்றன. இதற்கு என்ன கூறுகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே 35 பேர்களுக்கு இடம் இருக்கிறது. 35 பேருக்கும் பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களில் சில பேர்கள் வாராமல் இருக்கக்கூடிய நிலைமை உண்டாகலாம். ஆகவே, இருக்கைகளின் கணக்குப்படி 35 பேர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஜோதி அம்மையாரை உட்காரவைத்தால் 34 பேர்களாகி விடும் என்று எதிர்க்கட்சியைக் குத்தலாகச் சொன்னார்கள். ஜோதி அம்மையாரை உட்கார வைத்தால் கூட நாங்கள் பார்வேர்டு பிளாக் 7 வோட்களையும் வாங்கிவிடுவோம் என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒருமுறை வாங்கிய பழக்கத்தில் சொல்கிறார்கள். இனிமேல் அது நடக்காது என்பதை உறுதியாகத் தெரிவித்து கொள்கிறேன். (சிரிப்பு).

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** அம்மையார் அவர்கள் மிக வேகமாக எழுந்து 7 பேர்கள் வோட்டுகளை வாங்கிவிடுவோம் என்று சொன்னார்கள். ஒரு வோட் கூட அம்மையார் வாங்க முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

## (உ) பேரவைத் தலைவரைப் பதவி நீக்க அனுமதி கோரும் தீர்மானத்தைப் பேரவைத் தலைவரே பேரவையின் முடிவிற்கு விட்டிருக்கலாம் என்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Mr. Speaker, Sir, I only want to refer to an amendment made by the last Rules Committee, namely, 'the motion shall be taken up for consideration immediately after the Question Hour. So we feel that after Question Hour, this must get top priority. That is one point.

Another point I would like to raise is that on receipt of the notice, etc., the person presiding over the Assembly—

அதாவது தங்களைப்பற்றி இப்படி ஒரு தீர்மானம் இருந்தாலும், இந்தத் தீர்மானம் இன்றைக்கு லிஸ்டில் போடப்பட்டிருப்பதன் காரணமாக தாங்களே தலைமை தாங்கிக் கொண்டிருக்கும்பொழுது தாங்களே இந்த மோஷனை வோட்டுக்கு விடலாம். ஏனென்றால்

ரூலில் அந்த முறைதான் இருக்கிறது. விவாதம் நடக்கும் பொழுது வேறு யாராவது வந்து உட்கார்ந்து நடத்த வேண்டுமே ஒழிய ரூல் 54 ரொம்ப கிளியர் ஆக இருக்கிறது. நீங்கள் பொதுவாகச் செய்தது நல்லதுதான். தங்களைப்பற்றி வந்திருக்கும்பொழுது தாங்களே தலைமை தாங்கக் கூடாது என்று கருதியிருக்கலாம். ஆனால் சட்டசபை ரூல்ஸில் தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. எந்தத் தீர்மானம் வந்தாலும் அது ஆர்டர் பேபர் லிஸ்டில் இருந்தால் அந்த ஆர்டர் பேபரில் இருப்பதை வரிசையாக எடுக்கிற பொழுது யார் தலைமை தாங்குகிறார்களோ அவரே அதை அவையிலே கொண்டு வரவேண்டும் என்று இருக்கிறது. அது ஒரு பிரிஸிடெண்ட் ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

இன்னொரு விஷயத்திலும் தங்களுடைய ரூலில் இருந்தால் நல்லது
" motion shall be taken up for consideration immediately after the Question Hour. "

என்று கிளியராக ரூலில் போடப்பட்டிருக்கிறது. பல முறை இதைப்பற்றி விவாதித்து ஸ்பீக்கர் ஏதாவது இம்மாதிரி ஒரு தீர்மானம் வருகிறபொழுது வேறு விஷயங்களை எடுத்துக் கொண்டு இதை ஒத்திப்போடுவதற்குரிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்று சொல்லித் தான் அதை மாண்டேட்டரியாக வைத்திருக்கிறோம். " shall be taken into consideration. "

என்று போடப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த மாதிரி ரூல் இருக்கிறபொழுது, யார் தலைமையில் இருந்தாலும் அவர்கள் ரூலிங் நம்மைக் கட்டுப்படுத்தும் என்று இருந்தாலும்கூட, இதை ஒரு முறை கரெக்ட் பண்ணவேண்டும் என்பதற்காகத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதுபற்றி உங்களுடைய முடிவு தெரிந்தால் உதவியாக இருக்கும். இன்று இல்லாமல் போனால் கூட, நீங்கள் நாளைக்குக் கூட சொன்னால் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறியிருக்கிற கருத்து ஆதரிக்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. தீர்மானத்தை எடுத்துக் கொள்வதா இல்லையா என்று வருகின்ற போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கீழே இறங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. விவாதம் வரும்போதுதான் பேரவைத் தலைவர் இருக்கக்கூடாது என்று விதி இருக்கிறது. தீர்மானத்தை எடுத்துக்கொள்ள சபை அனுமதிக்கிறதா இல்லையா என்பதை பேரவைத் தலைவரவர்களே இருந்து பார்த்துக் கொள்ளலாம். லீவ் கிரான்ட் ஆன பிறகு விதி 54 (2)





If leave of the House is granted, discussion on the resolution may follow immediately or the House may fix for its discussion a date not being more than seven days from the day on which leave is granted.

ஆக, தீர்மானத்தை எடுத்துக்கொள்வது என்று முடிவாகி விட்டால் அதிலிருந்து 7 நாட்களுக்குள் விவாதத்தை வைத்துக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலே 29-ம் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் தவறு இல்லை.

THIRU K. T. K. TANGAMANI : I think I have not made myself clear. The motion for leave has to be taken up immediately after question-hour.
தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டதில் தவறு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள சபை அனுமதிக்கிறதா இல்லையா என்பதை சபாநாயகரே இருந்து பார்த்துக்கொள்ளலாம் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புத் தீர்மானம் அஜன்டாவில் வருவதில்லை. அஜன்டாவில் வராததால் அதை முதலில் எடுத்துக் கொண்டோம். கேள்வி நேரம் முடிந்தவுடன் அஜன்டாவில் வராததை எடுத்துக் கொள்வதில் தவறு இல்லை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாமல் அஜன்டாவில் உள்ளபடி முதலிலே நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டால் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை விட்டுவிட வேண்டிவரும். அஜன்டாவில் கவன ஈர்ப்புத் தீர்மானம் இடம்

பெறவில்லை. ஆகையால் கேள்வி நேரம் முடிந்தவுடனே கால் அட்டன்ஷன் நோட்டீஸை எடுத்துவிட்டு, அதன் பிறகு அஜெண்டாவில் உள்ளபடி நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்திருக்கிறோம். அதில் தவறு இல்லை.

இன்னொன்று, பேரவைத் தலைவரே இருந்து தீர்மானத்தை சபை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறதா இல்லையா என்பதை பார்த்துக் கொள்ளலாம் என்று தங்கமணி அவர்கள் கருத்து சொன்னதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இதற்குப் பாராளு மன்றத்தில் ஒரு விதிமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

It has been held that consideration by the House of a motion for leave to move the resolution does not amount to consideration of the resolution for removal and it would not be unconstitutional if the Speaker or the Deputy Speaker, as the case may be, does not vacate the Chair while a motion for leave to move the resolution for his removal is under consideration in the House.

என்று இருக்கிறது. ஆனாலும்,

However, as a matter of propriety, rule 201 (1) provides that the Speaker or the Deputy Speaker, as the case may be, shall vacate the Chair even when a motion for leave to move the resolution is taken up.

என்று இருப்பதால் இந்த இடத்தை நான் விட்டு, வேறொருவரை அமரச் செய்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:**

நூல் 53-ல்

the motion shall be taken up immediately after the question hour.

என்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் அஜெண்டாவில் இல்லாதது. அஜெண்டாவில் இடம் பெறாத ஒன்றை கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம். கேள்வி நேரம் முடிந்தவுடன் அஜெண்டாவில் உள்ளபடி இன்னொரு நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டால் அஜெண்டாவில் இடம் பெறாதது விடுபட்டுப்



போகும். ஆகவேதான் முதலிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, அதற்குப் பின்னால் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகின்றபோது 7 பேரை வாங்கியிருப்போம் என்று சொன்னார்கள். இது ஒரு உறுப்பினருடைய கௌரவப் பிரச்சனையாக இருக்கிறது. இந்த மன்றத்திலே உறுப்பினர்களை வாங்கிவிடுவோம் என்று சொல்வது பொதுமக்கள் மத்தியிலே தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். உறுப்பினர் ஒருவரை இந்த மன்றத்தில் வாங்கலாம், விற்கலாம் என்ற எண்ணம் பொது மக்களுக்கு ஏற்பட்டுவிடும். ஆகையால் அந்த வார்த்தைகளை சபை நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் சொன்னது ஓட்டுக்களை வாங்கிவிடுவோம் என்று. வாங்குவதிலும் விற்பதிலுமே கனம் அங்கத்தினருடைய எண்ணம் போய்க்கொண்டிருக்கிறது. எப்போதுமே இந்த எண்ணம் தானா? ஒரு ஓட்டு போய்விட்டால் 7 ஓட்டுக்களை வாங்கி விடுவோம் என்றுதான் நான் சொன்னேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** அம்மையார் அவர்கள் திரும்பத் திரும்ப பார்வேர்டு பிளாக் கட்சியைப்பற்றி சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் தெளிவாகச் சொல்கிறேன். வானம் பிளந்தாலும், இந்த பூமி பிளந்தாலும் பார்வேர்டு பிளாக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம்தான் நிற்கும் என்பதை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் என்ன முடிவு செய்கிறார்களோ அதைத்தான் நாங்கள் செய்வோம். மேலும் இப்படிப்பட்ட விளையாட்டை விளையாட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 மார்ச் 27

6. 1974–75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,01,33,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE : Sir, to discuss the need to give incentive and protection to hand made soap industries manned both by private individuals and Khadi Board, I move :—

"That the allotment of Rs. 5,01,33,500 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the ways and means to encourage the starting of cottage and small-scale industries in Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 5,01,33,500 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

THIRU K. T. R. TANGAMANI : Sir, to discuss about the failure to nationalise the sugar industry in the State, I move :—

"That the allotment of Rs. 5,01,33,500 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to extend the sericulture in the entire State of Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 5,01,33,500 under Demand No. 24—Industries be reduced by Rs. 100".

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, சிறு தொழில்களுக்குக் கடன் வழங்குவதில் உள்ள சிரமங்களைப் போக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,01,33,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1974 மார்ச் 27]

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, தமிழ்நாடு சிட்கோ ஸ்தாபனத்திற்கு சிறு தொழில் வளர்ச்சிக்கு மூலதனக் கடன்கள் கொடுத்து உதவி அதனுடைய பொருளாதார வளர்ச்சிக்கு அரசு ஆவன செய்தல் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை 24 தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,01,33,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, 1966-க்கு பின் இது வரை எவ்வித தொழிற்சாலையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்தாத நிலையில் அங்கு ரப்பர் தொழிற்சாலை அமைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூற—

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,01,33,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,93,40,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to ensure proper distribution of yarn to the weavers through co-operative societies, I move :—

"That the allotment of Rs. 1,93,40,400 under Demand No. 26—Handlooms and Textiles be reduced by Rs. 100."

THIRU M. A. LATHEEF : Sir, to discuss the need to ensure regular supply of yarn to the weavers and push up handloom textile exports, I move :—

"That the allotment of Rs. 1,93,40,400 under Demand No 26—Handlooms and Textiles be reduced by Rs. 100."

Dr. H. V. HANDE: Sir, to discuss about the deplorable living conditions of lakhs of handloom weavers all over the State and to devise ways and means to improve their standard of life, I move:—

"That the allotment of Rs. 1,93,40,400 under Demand No. 26—Handlooms and Textiles be reduced by Rs. 100."

Thiru K. M. SUBRAMANIAM: Sir, to discuss the policy and wages of handloom weavers, I move:—

"That the allotment of Rs. 1,93,40,400 under Demand No. 26—Handlooms and Textiles be reduced by Rs. 100."

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, அருப்புக் கோட்டை நகரில் செயற்கைப்பட்டு கைத்தறித் தொழிலாளிகள், செயற்கைப் பட்டு நூல் விலை ஏற்றத்தால் தொழில் கிடைக்காமல் வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவதியுறும் நிலை குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,93,40,400-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, சந்தானம் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் செயலாக்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,93,40,400 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, கைத்தறித் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைக்கும், நியாயக் கூலிக்கும் வகை செய்ய வேண்டியது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,93,40,400 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



(இ) நிதிக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,38,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

Thirumathi T. N. ANANDANAYAKI: Sir, to discuss policy, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 2,38,05,000 under Demand No. 49—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

Thiru J. JAMES: Sir, to discuss policy, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 2,38,05,000 under Demand No. 49—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

Thiru SOWDI S. SUNDARA BHARATHI: Sir, to discuss the policy, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 2,38,05,000 under Demand No. 49—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு இடையே உள்ள, தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்தி மாநிலங்கள் அளவில் கூட்டுத் தொழில்கள் ஆரம்பிப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,38,05,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1974 மார்ச் 27

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, துவங்கும் தொழில்கள் கூட்டுத் துறை என்பதற்குப் பதில் பொதுத் துறையில் மட்டுமே துவங்கப்பட வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,38,05,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss the urgency to step up industrial production of our State to improve the employment opportunities, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 2,38,05,000 under Demand No. 49—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the need to start an industrial complex at Hosur, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 2,38,05,000 under Demand No. 49—Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100."

(ச) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,62,32,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss policy, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 3,62,32,800 under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100."



1974 மார்ச் 27]

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,62,32,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss policy, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 3,62,32,800 under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100."

THIRU M. A. LATHEEF: Sir, to discuss the need to ensure equitable representation to the Muslim minority in cadres of judiciary, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 3,62,32,800 under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100."

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, தென் மாவட்டம் மக்களின் வசதிக்காக உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவை மதுரையில் ஏற்படுத்தாதது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,62,32,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Sir, to discuss the necessity to establish Munsif Courts in all taluk headquarters, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 3,62,32,800 under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100."

THIRU G. R. EDMUND: Sir, to discuss the need to abolish the Court of Special Additional First Class Magistrate at Tirunelveli, I move the following cut motion, namely:—

"That the allotment of Rs. 3,62,32,800 under Demand No. 13—Administration of Justice be reduced by Rs. 100."

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட்டு களுக்கு தகுதிக்குத் தகுந்த ஊதியம் வழங்கபபடாமல் இருப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,62,32,800-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,52,02,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

Thiru B. VENKATASWAMY : Sir, to discuss policy, I move the following cut motion, namely :—

"That the allotment of Rs. 3,52,02,500 under Demand No. 14—Jails be reduced by Rs. 100."

Dr. H. V. HANDE : Sir, to discuss policy, I move the following cut motion, namely :—

"That the allotment of Rs. 3,52,02,500 under Demand No. 14—Jails be reduced by Rs. 100."

Thiru K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to lodge the life prisoners in the Central Jails nearer to their native places, I move the following cut motion, namely.—

"That the allotment of Rs. 3,52,02,500 under Demand No. 14—Jails be reduced by Rs. 100."





திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் பத்து ஆண்டுகளுக்குமேல் தண்டனை அனுபவித்துவிட்டால் அவர்களை விடுதலை செய்வதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,52,02,500-ல் ரூ. 100 குறைக்கப் வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru J. JAMES : Sir, to discuss the need to provide drinking water and other minimum requirements for the undertrail prisoners particularly when they are lodged in large numbers, I move the following cut motion, namely :—

"That the allotment of Rs. 3,52,02,500 under Demand No. 14—Jails be reduced by Rs. 100."

Thiru SOWDI S. SUNDARA BHARATHI : Sir, to discuss the necessity to provide more amenities in jails, I move the following cut motion, namely :—

"That the allotment of Rs. 3,52,02,500 under Demand No. 14--Jails be reduced by Rs. 100."

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை என் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3.52,02,500-ல் ரூ. 100 குறைக்க படவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வருகின்றன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் வளர்ச்சி மிக விரைவாகக் காணவேண்டு மென்பதிலும், வேலைவாய்ப்பு மிகுதியாக வருவதற்கு பரவலாக தொழில் வாய்ப்புகள் பெருக வேண்டும் என்பதிலும், தமிழகத்தில்

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

வேளாண்மையை நம்பியிருக்கக்கூடிய பெரும்பான்மையான மக்களுக்கு தொழில்துறையில் வாய்ப்புக் கிடைக்கிறபோதுதான் நம் மாநிலத்தில் உண்மையான பொருளாதார வளர்ச்சியைக் கண்டவர்களாவோம் என்பதிலும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அந்தத் தொழில் வளர்ச்சிக்கு நம் காலத்திலேயே சிறந்த முறையில் பாடுபட வேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை. இந்த அடிப்படையில் தொழில்துறையில், பல்வேறு வாரியங்களில் அரசுத் துறையில் மிகச் சிறப்பாக நமது கொள்கையை நிறைவேற்றித்தருகிற வகையில் பலரும் பணியாற்றி வருகிறார்கள் என்பதில் மகிழ்ச்சி. அவர்களுக்கு எல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தொழில்துறை வளரவேண்டுமென்பதில் இங்குள்ளவர்களுக்கு எல்லாம் கருத்து வேறுபாடு இல்லாவிட்டாலும், எந்தத் துறையில் வளர வேண்டுமென்பது சர்ச்சைக்குரிய பிரச்சினை—தத்துவங்கள் மோதுகின்ற பிரச்சினை. அதில் தலையிட நான் விரும்பவில்லை.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்தத்துறை, அந்தத்துறை என்று பிடிக்கிற பிடிவாதமான கொள்கை கிடையாது. Strong views கிடையாது. எந்தத் துறையிலாவது எப்படியாவது தொழில்கள் வளரவேண்டுமென்ற முயற்சியைத் தான் எடுத்து வருகிறோம்.

ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாம் மத்திய அரசாங்கத்தின் பொருளாதார, தொழில் கொள்கையின் கீழ்தான் பணியாற்ற முடிகிறது. மாநில அரசு மத்திய அரசாங்கத்தின் பொருளாதார-தொழில் கொள்கைக்கு ஏற்ற வகையில்தான் இங்கு சுற்றுப்புற சூழ்நிலையை infra-structural facilities உருவாக்க முடிகிறது. எந்தத் துறையில் அகில இந்திய அளவில் தொழில்கள் வளர வேண்டுமென்று மத்திய அரசாங்கம் முடிவு எடுத்தாலும், நாங்கள் தைரியமாக அதை ஏற்று நடத்தத் தயாராய் இருக்கிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

உதாரணமாக, சர்க்கரை ஆலைகள் எல்லாம் தனியார் துறையில் இருக்கக்கூடாதென்ற ஒரு முடிவினை மத்திய அரசு எடுத்தது என்றால், எல்லா சர்க்கரை ஆலைகளும் பொதுத்துறையில் வர வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்லுமானால், அதனை உடனடியாக ஏற்று நடத்தக்கூடிய ஒரு அரசு இந்த அரசுதான் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எந்தத்துறை என்பது பற்றி மத்திய அரசாங்கம் தான் கொள்கை அடிப்படையில் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிலைப் பொறுத்தவரையில் மூலப் பொருள் அதிகம் இல்லாத மாநிலம்—ஆனால் மூளையுள்ளவர்கள், திறமையுள்ளவர்கள் உள்ள மாநிலம் நம்முடையது என்கிற அடிப்படையில்தான் தொழில் வளர்ச்சி காண வேண்டுமென்ற முயற்சியை எடுத்துக் கொள்கிறோம்.

கடற்கரை மிகுந்த மாநிலமாக இருப்பதால் உப்பின் அடிப்படையில் தொழிற்சாலைகள், பெட்ரோ கெமிகல் காம்ப்ளக்ஸ், ரசாயன தொழிற்சாலைகள், பார்மசுடிகல்ஸ், சேலம் திருவண்ணாமலையில் கிடைக்கிற தாதுப் பொருள்களைக் கொண்டு ஸ்டீல் காம்ப்ளக்ஸ், மீன் உற்பத்தி அடிப்படையிலான தொழிற்சாலைகள் என்கிற அளவில் வளர்வதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. அந்த முயற்சியை எடுத்து வருகிறோம்.

அடுத்து, நமது மாநிலத்தில் எல்லாப் பகுதிகளும் வளர வேண்டும். பின்தங்கிய பகுதிகளும் வளர வேண்டும் என்பது ஒரு கொள்கையாகும். அதில் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் கருத்து வேறுபாடு கிடையாது. நம்முடைய மாநிலத்தில் எட்டு மாவட்டங்கள் தொழில் துறையில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன என்பதை நாம் அறிவித்திருக்கிறோம். தொழில் துறையில் பின்தங்கிய இடங்களில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு கடன் கொடுப்பதில், வட்டி குறைவாகக் கொடுப்பதில், மின்சாரம் கொடுப்பதில், தண்ணீர் கொடுப்பதில் சலுகைகள் அளிக்கிறோம்.

அதைத் தவிர மத்திய அரசாங்கம் 15 சதவிகிதம் சப்சிடி கொடுக்கவும் ஒரு கொள்கை வைத்திருக்கின்றது இந்தக் கொள்கையின் அடிப்படையில் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். முதன் முதலில் அவர்கள் இந்தச் சலுகை ஒரே ஒரு மாவட்டத்திற்குத்தான் என்று அறிவித்தார்கள்.

அப்போது நாம் மாவட்ட எல்லையை கவனிக்காது—பரப்பளவு, ஜனத்தொகை அடிப்படையில் இராமநாதபுரம், மதுரை மாவட்டத்தின் ஒரு பகுதி, புதுக்கோட்டை ஒரு பகுதி ஆகியவற்றைச் சேர்த்து—அதற்கு அனுமதி பெற்றோம். பிறகு 2 மாவட்டங்கள் என்று சொன்னார்கள். அதன் காரணமாக இராமநாதபுரம் ஒரு பகுதி—மதுரையை ஒட்டியுள்ள பகுதி, தர்மபுரி மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியவை எல்லாம் பயன் அடைந்து வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சில பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் அங்கத்தினர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். நம் அரசாங்கத்தின் சார்பில் மாவட்டம் என்று நிர்ணயிக்காது, தொடர்பாக ஒரு பகுதிக்கு என்று நிர்ணயிக்காது—ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பாக்கெட்டுகளை எல்லாம் அறிவித்து அங்கெல்லாம் 15 சதவிகிதம் சப்சிடி என்ற கொள்கையை அறிவித்தால் தொழில்கள் பரவலாக வளர்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதுதான் கருத்து. இப்படிச் செய்தால் எல்லாப் பகுதிகளும் தொழில்துறையில் வளர்ச்சி அடைய வாய்ப்பு உண்டு. முதன் முதலில் இராமநாதபுரம், புதுக்கோட்டை பகுதியில் 15 சதவிகிதம் சப்சிடி தரப்படும் என்று அறிவித்தும் மிகச் சில, இரண்டு மூன்று, விரல்விட்டு எண்ணக்கூடிய தொழில்களே அந்தப் பகுதியில் ஏற்பட்டன. நிறையத் தொழில்கள் ஏற்படவில்லை.

அதற்குப் பின்னர் தர்மபுரி, இராணிப்பேட்டையை எடுத்துக் கொண்டவுடன்—இராணிப்பேட்டையில் மட்டும் 70 கோடிக்கு தொழில்கள் உருவாக முடிந்தது. தர்மபுரி ஓசூர் பகுதியில் 16 கோடிக்கு தொழில் வருகிற வாய்ப்பு ஏற்பட்டது

ஆக சென்னையை ஒட்டி, பங்களூரை ஒட்டி தொழில்கள் வளருகிற வாய்ப்புக் கூறுகள் இருப்பதாக எண்ணுகிறோம். நமது மாநில அரசின் கொள்கைகளையும், மத்திய அரசின் கொள்கைகள்





பற்றியும், நாம் செயல்பட வேண்டிய முறைகள் பற்றியும் நல்ல ஆலோசனைகளை எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னாலே வைத்திருக்கிற பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

தொழிற் துறையைப் பொறுத்தமட்டில் இந்த அரசாங்கம் அதிகமான புதிய தொழிற்சாலைகளை நடத்த வேண்டுமென்ற அக்கறை கொண்டிருப்பதாக அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்புக்களிலிருந்து எதுவுமே தெரியவில்லை. எதற்கும் மத்திய அரசாங்கத்தையே குற்றம் சாட்டி மத்திய அரசாங்கமே இந்த மாநிலத்திலே அதிகமான புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வற்புறுத்த வேண்டுமென்ற முறையிலே தான் இந்த அரசு செயல்படுகிறதே தவிர இந்த அரசாங்கமே தொழிற்சாலைகள் பெருகுவதற்காக என்ன செய்திருக்கிறது என்று பார்த்தால் ஏமாற்றமாக இருக்கிறது. பெர்பார்மன்ஸ் பட்ஜெட் என்று உறுப்பினர்களுக்கு எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 3-ஆவது பக்கத்திலே ஒன்றைக் காட்டியிருக்கிறார்கள்.

'In the Budget Estimate for 1973–74, under financial requirements Rs. 4,40,98 lakhs has been provided under State Plan Schemes.

முன்னாலே 34.04 என்று இருக்கிறது. இந்த ஆண்டைப் பொறுத்த வரையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைந்திருக்கிறது. 3,61.66 லட்சம் பணம் ஒதுக்கினார்கள். மத்திய அரசாங்கத்திலிருந்து சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஏறத்தாழ 2.53.67 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்த பக்கத்திலே பார்த்தால் அங்கே ஒரு விளக்கமும் கொடுத்திருக்கிறார்கள்.

'Large and medium industries: Revised Estimate, 1973–74 for Plan schemes 1.98 lakhs and for Non-Plan Schemes Rs. 92.76 lakhs have been Provided. The total comes to Rs. 2,90.76 lakhs.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1974 மார்ச் 27

ஆனால் இந்த ஆண்டைப் பொறுத்தவரையில்

'Non-Plan 9.42 lakhs and for Plan Schemes 1,78.53 and the total is Rs. 1,87.95 lakhs.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு குறைத்துக் காட்டப் பட்டிருக்கிறது.

அதைப்போல் சுமால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் இந்த நாட்டிலே அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்று கொள்கை வைத்திருக்கிற அரசு அதையும் குறைத்திருக்கிறார்கள்.

'Small Scale Industries: For 1973–74 Revised Estimate, Non-Plan Schemes Rs. 33.98 lakhs and for Plan Schemes Rs. 95.58 and the total comes to 129.51. Budget Estimate for 1974–75: Non-Plan 63.23 and Plan 95.40 lakhs.'

என்ற அளவிற்கு அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஆக, கூடுதலான தொழிற்சாலைகளை அரசாங்கமே முன்வந்து ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் எதுவும் இந்த மானியக் கோரிக்கையில் இல்லையென்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக, அரசாங்கம் நடத்துகின்ற தொழிற்சாலைகளிலே கூட இன்றைய தினம் நிர்வாகத் திறமையின்மை காரணமாகப் பல தொழிற்சாலைகள் இன்று நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் அதைக்கூட அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டிலே பக்கம் 9-இல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'The Mechanised Brick Plant is the only major industrial unit under the control of the Director of Industries and Commerce.'

என்று சொல்லியிருக்கிறார்கள்.

செங்கல் சூளை இயக்குநருடைய கண்ட்ரோலிலே இருக்கிற ஒரே தொழிற்சாலை என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக்கூட திறமையாகச் செயல்பட வைத்திருக்கிறார்களா என்றால்—நான்



1974 மார்ச் 27] [திரு. க. உரோ. எட்மண்ட்]

அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்—அவர்களே ஒப்புதல் வாக்குமூலம் கன்பெஷனல் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், திருமழிசையிலே

'The Mechanised Brick Plant at Thirumazhisai was commissioned on 1st April 1968. The total capital investment in the scheme is about Rs. 74 lakhs. A General Superintendent in the rank of a Deputy Director is in charge of the plant'

என்று சொல்லிவிட்டு அந்த செங்கல் சூளை எந்த அளவிற்கு நடக்கிறது என்று பார்த்தால் அதற்கும் விளக்கம் இதிலே கொடுத்திருக்கிறார்கள்.

'The production capacity of the plant is 66,000 bricks per day against which the daily production at present is about 35,000 only என்று சொல்லியிருக்கிறார்கள்.

1968-ஆம் ஆண்டு இந்த அரசாங்கத்தினுடைய அதிகாரிகளுடைய நேரடி நிர்வாகத்திலே ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொழிற்சாலை நாளொன்றுக்கு 66 ஆயிரம் செங்கல் தயாரிக்க வேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ 6 ஆண்டுக் காலம் முடிந்து 7-ஆவது ஆண்டு நடந்துகொண்டு வருகிறது. ஏழு ஆண்டுகளுக்குப் பிறகும் 50 சதவிதம்கூட உற்பத்தியை எட்டிப் பிடிக்கவில்லை. 65 ஆயிரம் செங்கல் நாளொன்றுக்கு உற்பத்தி செய்ய வேண்டிய நிலைமையில் 35 ஆயிரம் செங்கல்தான் தயாரிக்கப்பட முடிந்திருக்கிறது.

அதற்கான காரணங்களையும் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட அரசாங்கத்தினுடைய நிர்வாகத்திலே இருக்கின்ற ஒரு தொழிற்சாலையிலே 74 லட்ச ரூபாயை மூலதனமாகப் போட்டு முடக்கி நடத்தக்கூடிய தொழிற்சாலையில் எதிர்பார்த்த உற்பத்தியை ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுகூட ஏற்படுத்த முடியாமல் இன்றைய தினம் அது நட்டத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது.

அதற்கான காரணத்தை அமைச்சர் அவர்களே, சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 27

'......the Unit could not reach the maximum capacity. Moreover, the frequent drop in voltage of power supply, ower-shut downs, power cut, etc., have also hampered the progress in achieving the maximum production capacity'
என்று சொல்லியிருக்கிறார்கள்.

மின்சாரம் ஒழுங்கான முறையிலே கிடைக்காததால் தான் மின் பற்றாக்குறையால்தான் உற்பத்தியை ஒழுங்கான முறையிலே பெருக்க முடியவில்லை என்று சொல்லியிருப்பதைப் பார்த்தால் எங்களுக்கெல்லாம் சந்தேகமாக இருக்கிறது; தொழிற்துறை அமைச்சர் அவர்கள் மறைமுகமாக மின்சாரத் துறை அமைச்சர் சரியாகச் செயல்படவில்லை என்ற முறையிலே . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எப்படியும் எங்களுக்குள் சண்டையை மூட்டிவிட வேண்டுமென்று பார்க்கிறார்கள், அது முடியாது, அதைச் சொன்னார்கள், அதிலேயே 'ஆல்ஸோ' என்ற வார்த்தை போடப்பட்டு இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டும். அதுவும் ஒரு காரணம். எப்படியோ ஒரு திட்டம் போட்டுவிட்டார்கள், தவறு நடந்துவிட்டது. வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் எதிர்பார்த்தார்கள், வரவில்லை, நாமெல்லாம் ஒன்றாக இருந்தபோது இருந்த ஆட்சியின்போது ஏற்படுத்தப் பட்டது. அந்தத் தொழிலில் உள்ள எல்லாத் தொழிற்சாலைகளும் மோசமாகத்தான் இருக்கின்றன.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அப்படியிருந்தால்கூட இருக்கலாம், அடுத்த பாராவிலே பார்த்தால்—

'The present manufacturing cost of the bricks about Rs. 180 per 1,000, whereas the market price of the bricks is about Rs. 125 per thousand'

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆயிரம் செங்கல்லுக்கு உற்பத்தி செலவு 180 ரூபாய் ஆகிறது. ஆனால் அதனுடைய மார்க்கட் வேல்யூ, சந்தையில் அதனுடைய மதிப்பு 125 ரூபாய். உற்பத்தி அதிகமாக இல்லை; குறைந்த விலை மார்க்கட்டிலே இருக்கிறது.

எதிர்பார்த்த உற்பத்தியாவது கிடைக்கிறதா என்று பார்த்தால் அதுவும் கிடைக்கவில்லை, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுகூட 50 சதவிகித உற்பத்தியைத்தான் எட்டியிருக்கிறது. கேட்டால்



1974 மார்ச் 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

மின்சாரம் இல்லையென்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் மின்சாரம் மட்டுமல்ல, பல்வேறு காரணங்களுள் ஒரு காரணம் அது என்றார்கள்.

மெக்கானைஸ்டு பிரிக் ஒர்க்ஸ் பொறுத்தவரையில் மின்சாரம் இல்லாமல் நடத்த முடியாது. பல்வேறு ரா மெட்டிரியல்ஸ் தேவைப் படலாம், பல்வேறு ரா மெட்டிரியல்ஸ் கிடைத்தாலும் மின்சாரம் சரியாக வழங்கப்படவில்லையென்றால் நட்டத்திலே தான் ஓடிக் கொண்டிருக்கும்.

தொடர்ந்து நட்டத்திலேயே ஓட்டுவதைவிட அதை மூடிவிட்டு வேறு காரியங்களிலே ஈடுபடலாம்.

இந்த அளவிற்கு தொழிற் துறையைப் பொறுத்தவரையிலே இந்த அரசு போதுமான கவனம் செலுத்தவில்லை என்பது மாத்திரமல்ல, ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பல தொழிற்சாலைகள் இன்றைய தினம் நட்டத்திலேதான் ஓடிக்கொண்டிருக்கின்றன.

அடுத்தாற்போல் நெசவாளர்கள் பிரச்னை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே வைத்தபோது சொன்னார்கள், ஒரு கோடி ரூபாய் கடனை நெசவாளர்க்குக் கொடுத்தோம். அத்தனையையும் நாங்கள் வஜா

(முற்பகல் 11.00)

செய்துவிட்டோம். திரும்பவும் வசூல் செய்யப்போவதில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் எத்தனை நெசவாளர்களுக்கு இந்த நூறு ரூபாய் கடன் கிடைத்திருக்கிறது? பெயரளவில் ஒரு கோடி ரூபாய் என்று பெரிய தொகையாகத் தெரிகிறதே தவிர எத்தனை பேருக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்று பார்த்தால், உண்மையான நெசவுத் தொழில் செய்கின்ற எத்தனை நெசவாளர்களுக்கு அந்தப் பணம் கிடைத்திருக்கிறது? அது முதல் பிரச்னை.

நாங்கள் பல்வேறு ஊர்களுக்குப் போகும்பொழுதும் அங்கே யுள்ள நெசவாளர்கள் சொல்கிறார்கள், காஞ்சிபுரத்திற்குப் பக்கத்தில் திருமால்பேறு என்ற ஊருக்கு 10 நாட்களுக்கு முன்னால் ஒரு பொதுக்கூட்டத்திற்குப் போகும்பொழுது அங்கேயுள்ள

நெசவுத் தொழிலில் ஈடுபட்ட பெரும்பாலான நெசவாளர்கள் சொல்கிறார்கள், எங்கள் ஊரிலே ஒரு நெசவாளருக்குக்கூட 100 ரூபாய் கடன் கிடைக்கவில்லை என்று சொல்லி வருத்தப் பட்டார்கள். இப்படிக் கடன் பெறாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நிதிநிலை அறிக்கையிலேயும் சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் இந்தக் கடனை வசூலிக்க வேண்டாமென்று உத்தரவு போட்டு விட்டோம் என்று சொன்னவுடன் ஆளுங்கட்சியிலிருப்பவர்கள் மேஜையை ஓங்கித் தட்டுகிறார்கள்.

ஆனால் என்ன நடந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதை வஜா செய்து விட்டோம், வசூலிக்கப் போவதில்லை என்று சொல்வதற்கு முன்னால், எத்தனை நெசவாளர்களிடம் அதைத் திரும்ப வசூலிப்பதற்கு எவ்வளவு பெரிய கெடுபிடிகளை யெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதை நீங்கள் உண்மையிலேயே மனச்சாட்சியிருந்தால் ஒப்புக் கொள்வீர்கள்.

போகின்ற இடங்களிலேயெல்லாம் அங்கேயுள்ள தொழிலாளர்கள் குறைப்படுகிறார்கள். நூறு ரூபாய் கடனை உடனடியாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அப்படிக் கொடுக்கவில்லை யென்றால், அவர்கள் வீட்டிலேயுள்ள தட்டுமுட்டுச் சாமான்களை யெல்லாம் பறிமுதல் செய்து வருகிறார்கள் என்று சொல்கிறார்கள்.

எனவே, அந்த அளவிற்கு ஏட்டளவிலே ஒரு கோடி ரூபாய் கடனை வசூலிக்காமல் நிறுத்திவிட்டோம் என்று சொன்னாலும், அந்த ஒரு கோடி ரூபாயில் எத்தனை இலட்சம் ரூபாயை நீங்கள் இந்தக் காலம் வரைக்கும் கட்டாய வசூல் மூலம் வசூலித்திருக் கிறீர்கள் என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

அடுத்தபடியாக, நூல் வழங்குதலைப்பற்றி எடுத்துக்கொண்டால், நூல் மிகவும் தேவை. எத்தனை தொழிலாளர்களை வைத்திருந் தாலும், எத்தனை தறிகளை வைத்திருந்தாலும் நூல் கொடுக்காமல் அவர்கள் நெசவுத் தொழிலை ஒழுங்காகச் செய்ய முடியாது.





**திரு. எல். கணேசன் :** பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அரசு கடன்களை ரத்து செய்ததைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய இயக்கத்தில் நெசவாளர்களுக்கு என்று நன்கொடை வசூலித்தார்கள். அந்தப் பணத்தைக் கொடுத்து விட்டார்களா? எத்தனை கோடி வசூலித்தார்கள், எத்தனை ஆயிரம் பேர்களுக்குக் கொடுத்தார்கள் என்பதை அறிவிப்பார்களா?

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்தக் கேள்விக்கு இந்த மன்றத்தில் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. பொதுக் கூட்டத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். இங்கே ஒரு கட்சி செய்வதைப் பொறுத்து நாம் சொல்லவில்லை. அரசாங்கத்தில், ஆட்சிப்பொறுப்பிலே இருப்பவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்று அதைச் சொல்லத்தான் கடமைப்பட்டிருக்கிறோமேயொழிய நீங்கள் வசூலித்தீர்களே, கொடுத்து விட்டீர்களா என்று கேட்டால் எப்படி?

**திரு. எல். கணேசன் :** பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற காரணத்தால் கேட்கிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் வெளியே கேட்டால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

உங்களுடைய கடமை என்னவென்றால், இந்த ஒரு கோடி ரூபாய் கடன் கொடுத்ததை வசூலிக்க வேண்டாமென்று உத்தரவு போட்டுவிட்டதாக இப்பொழுது சொல்கிறீர்கள். ஆனால் அந்த ஒரு கோடியிலே எத்தனை ஆயிரம் நெசவாளர்களுக்குப் பணத்தைக் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக் கிறீர்கள்.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, கெடுபிடி செய்து வசூலித்தார்கள் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். நான் கோவாப்பரேட்டிவ் சொசைட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்தக் கெடுபிடியும் இல்லை. வசூலிக்கப் பட்ட தொகை அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டன. எனவே, இம்மாதிரி சொல்வது முரணானது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோபப்படத் தேவையில்லை.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** நான் கோபப்படவில்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு சங்கத்தின் தலைவராக இருக்கிறேன் என்று சொன்னார்கள்.

நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுக்குப் பல நெசவாளர்களிடமிருந்து மனுக்கள் வந்து இருக்கின்றன. நாங்கள் பொதுக்கூட்டங்களுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும் கலந்துகொள்ளப் போகும் நேரத்தில், எதிர்க் கட்சிக்காரர்கள் என்ற முறையில் எங்களிடத்தில் பல நெசவாளர்கள் தங்கள் குறைகளைக் கூறியிருக்கிறார்கள். மகஜர்கள் மூலம் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். வேண்டுமானால் நாங்கள் அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இந்த அரசாங்கம் அதைப்பற்றி விசாரணை நடத்தி அப்படி ஏதாவது கெடுபிடி வசூல் செய்திருந்தால் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முதலில் கடனைக் கொடுத்தோம். அதை வசூலிக்க வேண்டாமென்று சொல்ல முடியாது. பிறகு அதை ரத்து செய்தோம். இதற்கிடையில் வசூல் நடந்திருந்தால், புள்ளிவிவரம் கொடுத்தால்,—அப்படிக் கொடுக்க முடியாவிட்டாலும்—எங்கெங்கே கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தச் சங்கங்களுக்கு ஷேர் கேபிடல் கொடுத்தால் ஏற்றுக் கொள்ளலாம்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சரவர்களே மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் கடனை, தலைக்கு 100 ரூபாய் என்று கொடுத்த கடன் வசூலிக்கப்பட்டிருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் வசூலிக்கப்பட்டிருக்கிறது. கட்டாயமாக வசூலித்திருக்கிறார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறது. கேட்டால் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.



அடுத்து, நூல் வழங்குவதை எடுத்துக்கொண்டால் நெசவாளர்களுக்குச் சரிவரக் கிடைப்பதில்லை.

என்னுடைய தொகுதியில் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. நான் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவரையில் நான் அந்த நூற்பாலை இயக்குநராக இருந்தேன். இன்றைக்கு நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தவுடனே அதில் நான் இயக்குநராக இல்லை.

என்னுடைய வருத்தமெல்லாம், என்னுடைய தொகுதியிலே கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது, அதிலே நானும் ஒரு பங்குதாரர், நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கும் வரையில் அதிலே டைரக்டராக இருக்க முடிகிறது, அதற்குத் தகுதியிருக்கிறது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்தவுடனேயே அந்தத் தகுதி இல்லை என்று சொன்னால் அது புரியவில்லை. அதைக்கூட நீங்கள் கட்சி அடிப்படையில் போடுகிறீர்கள்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, தோப்பூர் திருவேங்கடம் அவர்களைகூடத்தான் இருந்தார்கள். ஒருமுறை போட்டால் மறு படி போட வேண்டாமென்று செய்திருக்கிறார்கள்.

**திரு. கு. காமாட்சி :** அவர்களை மக்கள் நம்பவில்லை. அதனால் இயக்குநராக இல்லை.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** எங்களை மக்கள் நம்புகிறார்களா இல்லையா என்பது கோவையிலும், புதுவையிலும் தெரிந்து விட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. எட்மண்ட் அவர்கள் மறுபடி தொடர விரும்ப மாட்டார்களோ என்று நினைத்துக் கொண்டிருந்தோம். இப்பொழுது அவர்கள் விருப்பத்தைத் தெரிவித்திருப்பதால் நிச்சயமாக எதிர்ப்பு தெரிவிக்க மாட்டோம்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** நான் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அதில் இருப்பதால் எனக்குப் பெரிய கிரீடம் வந்துவிடப்போவதில்லை. நான் சொல்வதெல்லாம், இதிலேகூட கட்சி அடிப்படையில் செய்கிறீர்கள். சட்டமன்ற

உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஒரு லட்சம் வாக்காளர்களின் பிரதிநிதியாக இருப்பவர் இன்னொரு கட்சியில் இருப்பதாலேயே இயக்குநராக இருக்கக்கூடாதா?

திரு. வீராசாமி அவர்கள் சொல்கிறார்கள், ஒருமுறை இருந்தால் இன்னொரு முறை இருக்கக் கூடாது என்று. நான் அதைக்கூட ஒப்புக்கொள்கிறேன். அந்தப் பாலிசி இருக்க வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நூற்பாலையிலே எத்தனை பேர்களை மீண்டும் மீண்டும், திரும்பத் திரும்ப டைரக்டராகப் போட்டிருக்கிறீர்கள். அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆகவே, அந்த அளவிற்கு இன்றைக்கு நூற்பாலைகளிலே தகவல் வருகிறது. அங்கே தயார் செய்யப்படும் நூல்கள் உண்மையாகத் தொழில் செய்கின்ற கைத்தறி நெசவாளர்களுக்குத் தரப்படக் கூடிய நிலைமைக் கூடக் கிடையாது. வட்டச் செயலாளர்களுக்கும், மாவட்டச் செயலாளர்களுக்கும் கோட்டா. ஆனால், நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. இதனால் அவர்களுக்கு என்ன லாபம் என்றால் அவர்கள் வாங்குகின்ற நூலை இரட்டிப்பு விலைக்கு நூல் பேல்களை விற்று விடுகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்களுக்குக் கோட்டா என்று கூறுகிறார்கள். நூற்பாலையில் கோட்டா இருக்கிறது என்று சொன்னார்கள். இது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்மீதும், அங்கேயுள்ள வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள்மீதும் சொல்லப்படும் பயங்கரமான குற்றச்சாட்டு. எந்த மாவட்டச் செயலாளருக்கு, எந்த வட்டச் செயலாளருக்கு பர்மிட் அல்லது கோட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவையிலே சொல்வதுதான் நல்லது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உடனே சூடாகிவிடக் கூடாது. கொஞ்சம் சுவையும் இருந்தால்தான் நல்லது. நூல் கொடுப்பதில் இப்படிப் புகார்கள் வருகின்றன. தவறு நடக்கக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு ஊரிலேயும் அனைத்துக் கட்சிக் குழு என்று போடுகிறோம். அந்தக் குழுவின் பரிசீலனைக்குப்பிறகு தறி வைத்திருப்பவர்களுக்குக் கார்டுகள் கொடுக்கிறோம். அதில் தப்பு என்றுகூடப் பேசலாம்.





ஆனால், அந்தக் கார்டுகள் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறோம். நூற்பாலை நேரடியாக யாருக்கும் கொடுக்கக் கூடாது, இந்தக் கார்டுகளுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். கார்டு இல்லாமல் யாருக்காவது கொடுத்திருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். அனைத்துக் கட்சி குழு போடப்பட்டிருக்கிறது. எனவே, வட்டம், மாவட்டம் என்று பேசுவதால் நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வதாகத்தான் இருக்கும். வட்டச் செயலாளராகவும், மாவட்டச் செயலாளராகவும் இருப்பவர்களும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கும் கொடுக்கப்படும். எனவே, கட்சி ரீதியில் என்று சொல்வது மேற்கொண்டு குழப்பத்திற்குத்தான் வழிவகுக்கும்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அருமை நண்பர் திரு. எட்மண்ட் அவர்கள் தன்னுடைய மொத்த உரையிலேயும் வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் என்று குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாட்டிலே அவர்களெல்லாம் வாழ வேண்டாமா? நாட்டிலே சட்டப்படி வியாபாரம் செய்யும் உரிமையை அவர்கள் ஆளுங்கட்சியில் இருப்பதாலேயே தவிர்க்க வேண்டுமா? அல்லது இவர்களெல்லாம் கட்சியிலே அப்படிப்பட்ட வியாபாரம் செய்ய மாட்டார்களா? பாண்டிச்சேரியிலே மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டுவரும் உத்தேசம் உண்டா?

**THIRU G. R. EDMUND:** Sir, we are now on the Industries Demand and not on prohibition. பாண்டிச்சேரியில் மதுவிலக்கு உண்டா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது பாண்டிச்சேரி சட்டமன்றம், தமிழ்நாடு சட்டமன்றம் அல்ல.

**திரு. க. மு. இராசகோபால்:** தலைவரவர்களே, வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அரிசி ஆலைக்கு இன்டஸ்ட்ரியல் கடன் கேட்டு அதற்காக மனுப்போட்டு, அந்தத் துறைக்கு ரிகார்ட் எல்லாம் கொடுக்கப்பட்டது. மறுபடியும் டைரக்டர்

[திரு. க. மு. இராசகோபால்] [1974 மார்ச் 27

49,000 கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். 25,000 தான் கொடுக்க முடியும். எழுதிக் கொடு என்று கேட்டார்கள். மூன்று நாட்கள் பொறுத்து எழுதிக் கொடுத்தேன். அதன் பிறகு என்னுடைய பேப்பர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்து தள்ளிவிட்டதாகக் கூறி இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினருடைய நிலையே இப்படி இருக்கிறது என்றால் வட்டச் செயலாளர்களும், மாவட்டச் செயலாளர்களும் என்ன செய்ய முடியும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் நாசரத் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையில் உற்பத்தி செய்யப்படுகிற நூல் . . .

திரு. க. மு. இராசகோபால்: பொதுவாக, வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று கூறுகிறார். எந்த வட்டச் செயலாளர், எந்த மாவட்டச் செயலாளர் என்று தெளிவாகக் கூறட்டும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: கொடுத்திருக்கிறார்கள் . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, the hon. Member may be asked to continue his speech. If such interruptions are on the increase, he cannot effectively speak. So, I would once again make a request through the Chair that hon. Members should not interrupt the Member who is making charges.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுக்கிடக்கூடாது என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். பேசுகின்ற நேரத்தில் குறுக்கிடு மளவுக்குப் பேச்சு கார்டெட் ஆக இருப்பது நல்லது.

திரு. க. உரோ. எட்மண்ட்: நான் பேசும்போது அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேச உரிமை இருக்கிறது. ஒவ்வொருவரும் விளக்கம் கேட்டு விளக்கம் கொடுத்துக் கொண்டிருப்பதற்கு நேரம் இல்லை.

நம்முடைய அமைச்சர் அவர்கள் கார்டு மூலம் நூல் விநியோகிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள்.



1974 மார்ச் 27] [திரு. க. உரோ. எட்மண்ட்]

எனக்குத் தெரிந்தது வட்டச் செயலாளர் நூல் வாங்குகிறார். கார்டு வைத்து வாங்குகிறாரா, கார்டு இல்லாமல் வாங்குகிறாரா என்று தெரியாது. கார்டு வைத்தும் வாங்கலாம்; கார்டு இல்லாமலும் வாங்கலாம். போகஸ் கார்டுகள் தயாரித்துக் கொண்டார்கள் என்று தெரிகிறது . . .

(ஆளும் கட்சியில் பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

திரு. என். கணபதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அரசியல் சட்டப்படி பேச்சுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. யாரும் குறுக்கிடவில்லை.

எங்கள் கட்சியைச் சார்ந்த வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் போகஸ் கார்டுகள் தயார் செய்தார்கள் என்ற முறையில் மிஸ்சிவசாகச் சொல்லுகிறார்கள். இப்படிச் சட்ட மன்றத்தில் பேசுவது ஒரு கட்சியை, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களை இழிவுபடுத்த வேண்டும்; பொதுமக்கள் மத்தியில் கெட்ட பெயரை உண்டாக்க வேண்டுமென்ற அடிப்படையில் பேசப்படுகிறது. சட்டமன்றத்தில் அப்படிச் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் பேசுகின்ற நேரத்தில் ஒரு முறையைப் பின்பற்ற வேண்டுமென்று முறை வகுத்திருக்கிறோம்.

திரு. க. உரோ. எட்மண்ட்: நான் ஜெனரலாகத்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவான குற்றச்சாட்டைச் சொல்லுகிற நேரத்திலும் அந்தக் குற்றச்சாட்டைப் பொறுப்போடு சொல்ல வேண்டும். போகஸ் கார்டு என்று சொல்லும்போது அந்தக் கார்டைக் காட்டிச் சொல்லுங்கள். போகஸ் கார்டு என்று அடிப்படை இல்லாமல் இந்த மன்றத்தில் இல்லாதவர்களைப் பற்றிச் சொல்லுவது முறையல்ல.

திரு. க. உரோ. எட்மண்ட்: அப்பேர்ப்பட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. என்னை மட்டும் ஆதாரம் எங்கே என்று கேட்கிறீர்கள். அன்றைக்கு உணவு மானிய விவாதத்தின்போது

தி.மு.க. உறுப்பினர் சுருளிவேல் அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர் அரிசி கடத்தினார் என்று சொன்னார். அன்றைக்கு அதைக் கேட்க யாரும் தயாராக இல்லை.

(பல உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்—கூச்சல் குழப்பம்)

**திரு. என். கணபதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது என்னவென்றால் வட்டச் செயலாளர்களும், மாவட்டச் செயலாளர்களும் கார்டுகளைப் பெற்று வாங்கினார்களோ, அல்லது கார்டு இல்லாமல் வாங்கினார்களோ அல்லது போகஸ் கார்டு தயார் செய்து வாங்கினார்களோ எனக்குத் தெரியாது என்று சொன்னார்கள். ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளைக் கூற வேண்டாமென்றுதான் கூறுகிறோம்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** என்னுடைய தெளிவான குற்றச் சாட்டு—அந்தக் கூட்டுறவு நூற்பாலையில் தயாரிக்கப்படுகிற நூல் ஏழை நெசவாளர்களுக்குப் போகாமல் நெசவுத் தொழிலுக்குச் சிறிதும் சம்பந்தப்படாத தி.மு.க. வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் கார்டுகள் வழங்கி கார்டு மூலமாக நூல் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். என்னுடைய சந்தேகம் எல்லாம் . . .

**திரு. நா. வீராசாமி:** பொதுவாக வட்டச் செயலாளர் என்றால் எப்படி? பெயரைச் சொல்லட்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** Sir, I am trying to catch your eye நீங்களே பேச அனுமதித்தீர்கள். அனுமதித்த பிறகு இரண்டு உறுப்பினர்கள் பேசுகிறார்கள்.

எட்மண்ட் அவர்கள் சொல்லுகின்றபோது நேரடியாக கை நெசவில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. வட்டச் செயலாளர்கள் நூல் பெறுகிறார்கள் என்று பொதுவாகக் கூறினார்கள். எந்த வட்டச் செயலாளர் என்று பெயரைச் சொல்லவில்லை. எந்த வட்டச் செயலாளர் என்று கேட்டால் ஒருவேளை அவர் பெயரைச் சொல்லலாம்.





போகஸ் கார்டுகள் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்கே தெரியும். சரியான முறையில் தறிகளின் லிஸ்டை எடுக்க வேண்டுமென்று இப்போது என்யூமரேஷன் நடந்து கொண்டிருக்கிறது. பல மட்டங்களில் போகஸ் கார்டுகள் இருக்கின்றன.

நியாயமான முறையில் நூல் கிடைக்கவில்லை. மதுரையில் நடந்திருக்கிறது; அருப்புக்கோட்டையில் நடந்திருக்கிறது. சின்னாளப்பட்டியில் நடந்திருக்கிறது. அரசாங்கத்திற்கே உண்மை தெரியும். அதைச் சரி பார்க்க என்யூமரேஷன் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக, போகஸ் கார்டுகள் அதிகமாக இருக்கும் காரணத்தால் யாருக்கு நூல் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. அப்படிச் சொல்லுகிறபோது பொதுவாக வட்டச் செயலாளர்கள் நூல் பெறுகிறார்கள் என்று சொன்னால் என்ன தவறு? குறிப்பிட்ட வட்டச் செயலாளர் போகஸ் கார்டு மூலம் நூல் வாங்கினார் என்ற கருத்தைச் சொன்னால் அது வேறு விஷயம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தி.மு.க., அ.தி.மு.க. என்பதால் சூடு வருகிறது. முதலிலேயே விளக்கம் கொடுத்தேன். அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். கார்டு மூலம் வாங்கியிருந்தாலும் வாங்கியிருக்கலாம் என்றார்கள். அந்த அளவுக்கு நல்லதைச் சொல்லி இருக்கிறார்கள். பொதுவாக வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று கூறாமல் நிச்சயமாக இந்த வட்டச் செயலாளர் என்று கூறட்டும். இங்கும் இருக்கலாம், அங்கும் இருக்கலாம். என்னிடம் எல்லாத் தகவல்களையும் வைத்திருக்கிறேன். வேண்டுமென்றால் தனியாகக் காண்பிக்கிறேன். அவர்கள் அதுபற்றி விவரமாகச் சொல்வதாக இருந்தால் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** தவறான முறையில் நூல் வழங்கப்படுகிறது என்று நான் சொல்லக் காரணம் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காததுதான்.

[1974 மார்ச் 27

**திரு. இரா. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, நண்பர் எட்மண்ட் அவர்கள் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த நூற்பாலை நூலை விற்கும் கமிட்டியில் நான் உறுப்பினராக இருக்கிறேன்.

கடந்த பல மாதங்களாக அங்கு உற்பத்தியாகிற நூலை ஸ்டேட் சொசைடிக்குக் கொடுத்து வருகிறது. பதினைந்து சதவிகித கோன் யார்ன் உற்பத்தி செய்யப்பட்டு அந்த நூல் ஓப்பன் மார்க்கெட்டில் டைரக்டர் ஆப் ஹான்ட்லூம்ஸ் குறிப்பிட்ட விலைக்கு மேல் லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு வருகிறது.

நண்பர் எட்மண்ட் அவர்கள் சரியான விவரம் தெரியாமல் வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என்று கூறுகிறார். யாருக்கும் அப்படிக் கொடுக்கவில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் நேரடியாக விற்கப்படவில்லை; நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விற்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதிலே ஆட்சேபணை இல்லை.

பெரிய அளவுக்கு சட்டம் வைத்தும் அது எட்டளவில் இருக்கிறது. கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்தில் விற்பனை செய்யப்படுகிற நூல் உண்மையில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களுக்குக் கிடைக்கவில்லை.

நண்பர் ராமலிங்கம் அவர்கள் சொன்னார்கள். நான் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து நேரடியாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்லவில்லை. கூட்டுறவு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து சில கட்சியிலுள்ள முக்கியமானவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தைத்தான் சொன்னேன். இப்பேர்ப்பட்ட நிலைமையில் நெசவாளர்களுக்கு என்ன செய்ய முடியும்?

ஆகவே அதற்கான நடைமுறைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். கடைசியாக, நீதி நிர்வாகத் துறை. நீதி நிர்வாகத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு ஜனநாயக நாட்டில் இருக்கக் கூடிய எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள், ஜனநாயக நாட்டில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனுடைய கடைசிப் புகலிடம் நீதி மன்றம் என்பதை.



1974 மார்ச் 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

காவல் துறை விரட்டியடித்தால் அவர்கள் நீதி பெறவேண்டிய இடம் நீதிமன்றம். சட்டமன்றத்தில் ஏதாவது தவறுகள் நடந்தால் நீதி பெற வேண்டிய இடம் நீதிமன்றம். ஆகவே நீதிமன்றம்தான் ஜனநாயக நாட்டில் வாழ்கிற ஒவ்வொரு குடிமகனுடைய கடைசிப் புகலிடம்.

ஆனால், இந்த நீதி நிர்வாகத் துறையில், உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும்போது அல்லது அரசாங்க வழக்கறிஞர்களை நியமிக்கும்போது, ஸ்டேட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டேர்ஸை நியமிக்கும்போது கட்சி அடிப்படையில் இல்லாமல் கட்சி மனமாச்சரியங்களுக்கு இடம் கொடுக்காமல் திறமை மிகுந்தவர்களை, அதில் நல்ல புத்திகூர்மை உள்ளவர்களை இந்த அரசு நியமிக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

திருநெல்வேலியில் அங்கு ஒரு நீதிமன்றத்திற்கு ஏதாவது ஒரு பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் போடவேண்டுமென்றால் உடனே பட்டியல் வருகிறது தி.மு.க.-வில் உள்ள வழக்கறிஞர்கள் யார், யார் என்று பட்டியல் வருகிறது. அவர்களை விட திறமைசாலிகள், அவர்களை விட நீண்ட காலமாக இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் மனுச் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

கடந்த ஆண்டு கூட நம் உயர்நீதிமன்றத்திற்கு ஸ்டேட் பப்ளிக் ப்ராஸியூக்ட்டராகப் போட்டார்கள், இன்று அவர் உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராக பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார். அதைப் பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், எந்த அடிப்படையில் ஸ்டேட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டராகப் போட்டார்கள் என்றால் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீண்ட நாட்களாக உறுப்பினராக இருந்தவர், ஏறக்தாழ ஆறு ஆண்டுகள் மாவட்டச் செயலாளராக இருந்தவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக சேரன்மாதேவி தொகுதியில் போட்டியிட்டு தோற்றவர் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கட்சிக்காரர்களைப் போடக் கூடாது என்று பேசத் தொடங்கி திறமையானவர்களைப் போடலாம் என்று அவர்கள் சொன்னார்கள். திரு. ரத்னவேல்

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

பாண்டியன் அவர்களை திறமையற்றவர் என்று அவர்கள் மனப் பூர்வமாகச் சொல்கிறார்களா? உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு அவர் பொருத்தமானவர் அல்ல என்பது அவர்கள் வாதமா?

திரு. க. உரொ. எட்மண்ட்: திரு. ரத்னவேல் பாண்டியன் அவர்கள் திறமையற்றவரா என்று கேட்டு அமைச்சர் அவர்கள் என்னை மாட்ட வைக்க நினைத்தால் அது நிச்சயமாக முடியாது. நான் சொல்வது திரு. ரத்னவேல் பாண்டியனை விட திறமைசாலி களானவர்கள் மனுச் செய்தவர்களிடையே இருந்தார்களா இல்லையா, அதைத்தான் பார்க்கவேண்டும்.

THIRU N. GANAPATHY : Sir, on a point of order.

THIRU G. R. EDMUND : Sir, I am definitely not yielding.

திரு. என். கணபதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது ஏதோ கட்சிக்காரர்களையெல்லாம் உயர்நீதி மன்றத்திற்கும், மற்ற நீதிமன்றங்களுக்கும், அரசாங்க வக்கீல் களாக நியமித்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். பப்ளிக் ப்ராஸிக்யூட்டேர்ஸ், கவர்ன்மென்ட் ப்ளீடேர்ஸ் அல்லது அட்வக்கேட்-ஜெனரல் இவர்கள் அரசாங்க வாயிலாக நியமிக்கப் படுவது என்பது உண்மை.

மேற்கு வங்கத்தில் சித்தார்த்த சங்கர் ரே அட்வக்கேட் ஜெனரலாகவும் இருந்தார், காங்கிரஸ் கட்சியிலும் இருந்தார்.

மோகன் குமாரமங்கலம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராகவும் இருந்தார். அட்வக்கேட் ஜெனரலாகவும் இருந்தார்.

ஆகவே திறமையைப் பார்த்து கட்சிக்காரர்களுக்கு பொறுப்பு கொடுத்தால் என்ன தவறு?

திரு. க. உரொ. எட்மண்ட்: என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் ஸ்டேட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டரை நியமித்தீர்கள், அவர்களை திறமையின் அடிப்படையில்தான் போட்டார்கள் என்றால், நான்



1974 மார்ச் 27] [திரு. க. உரொ. எட்மண்ட்]

நிச்சயமாகச் சொல்வேன், நிச்சயமாக இல்லை. அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக ஒரு தேர்தலில் போட்டி யிட்டு தோற்றார். அவருக்கு ஒரு கன்ஸொலேஷன் ப்ரைஸ்-ஆக அந்தப் பதவியைக் கொடுத்தார்கள். நான் சொல்லவேண்டு மென்றால் எவ்வளவோ சொல்லலாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: பொதுவாக இப்படிப்பட்ட நியமனங் களைப் பற்றியெல்லாம் கண்டனம் தெரிவிப்பது அவர்களுடைய உரிமை, எதிர்க்கட்சியினருக்கு அந்த உரிமை உண்டு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால் பொதுவான சில கருத்துக்களை அவர்கள் சொல்வதில் எந்தவிதமான தடையும் இல்லை.

திரு. ரத்னவேல் பாண்டியன் அவர்கள் ஸ்டேட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டராக இருந்து இன்று உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டு செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவரைப் பற்றி ஒரு சர்ச்சை எழுப்புவது, அவரை ஒரு காண்ட்ராவர்ஷியல் பிகராக இந்த அவையில் விவாதிப்பது இந்த அவையின் மரபுக்கு உட்பட்டதல்ல, பொதுவான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லலாம், அரசைத் தாக்கலாம். ஆனால் அதே நேரத்தில் மேலைநாடுகளில் . . .

THIRU G. R. EDMUND : Sir, is the hon. Member raising a point of order?

THIRU M. A. LATHEEF : Yes, definitely it is a point of order. The Chair should give the ruling . . . .

THIRU G. R. EDMUND : Sir, I am sorry.

திரு. எம். ஏ. லத்தீப்: உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்லியதுபோல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அரசியல் அடிப்படையில்தான் நீதிபதிகள், மற்றும் பப்ளிக் ப்ராஸிக் யூட்டேர்ஸ் எல்லாம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இங்குள்ள அரசுக்கு சில கொள்கைகள் இருக்கலாம். அங்கே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள், இங்கே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் அவர்களை நியமனம் செய்கிறார்கள். ஆகவே நீதிபதியாக இருக்கக்கூடிய ஒருவரைப்பற்றி, அவர் பெயரைக் குறிப்பிட்டு இங்கே பேசக் கூடாது என்பதுதான்.

[1974 மார்ச் 27

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என் கருத்து கூட, தனி நபர்கள் பெயரைச் சொல்வது நன்ருகயிருக்காது. காரணம் அண்ணு அவர்கள் இருந்தபோது திரு. நாராயணசாமி முதலியார் அவர்களை அட்வக்கேட்-ஜெனரலாகப் போட்டார்கள், பின்னர் அவர்கள் நீதிபதியானுர்கள். அவரும் தேர்தலில் நின்று தோல்வி கண்டவர்.

இப்படி ஒவ்வொருவரையும்பற்றி விமர்சிக்க ஆரம்பித்தால்—சுப்ரீம் கோர்ட்டில், காங்கிரஸ் கட்சி உறுப்பினராக ராஜ்ய சபாவில் இருந்தவர் ஒருவர் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக நியமிக்கப் பட்டிருக்கிருர். ஆகவே திறமையற்றவர்களைப் போட்டோம் என்று சொன்னுல் அதற்குப் பதில் சொல்ல நான் தயாரா யிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த நீதிபதிகள் நியமனம் பற்றி அரசின் கொள்கையைப் பற்றி விமர்சிப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஏனென்ருல்,

It may not amount to any reflection on the conuct of any judge-ஆதலால் பொறுப்புணர்ச்சியோடு வழக்கறிஞர் என்ற முறையில் தான் அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றி விமர்சிக்கிருர்களே தவிர தனிப்பட்டவர்கள் மீது எந்தவிதமான குரோத மனப்பான்மையும் அவர்களுக்கு இல்லை என்றுதான் இதுவரையில் கேட்டுக்கொண்டிருந்ததில் இருந்து எனக்குப் புரிந்திருக்கிறது.

அமெரிக்க தேசத்தில் உள்ள முறைகளைப் பற்றிச் சொன்னுர்கள். காங்கிரஸ் கட்சி கையாண்ட முறைகளைப்பற்றி யெல்லாம் சொன்னுர்கள். நீங்கள் அதே முறைகளை மேற்கொள்கிற நிலையில் கட்சி அடிப்படையில்தான் நியமனம் நடக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் கட்சியின் கொள்கை ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக விருந்தால் அவர்கள் திறமையானவர்களாக இருந்தாலும் போடக் கூடாது என்பது அவர்கள் வாதமா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அது என் வாதம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 27]

திரு. க. உரொ. எட்மண்ட்: என்னுடைய வேண்டுகோள் எல்லாம் எந்தக் கட்சியானுலும் சரி, அது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி அல்லது திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி அல்லது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி—அண்ணு தி.மு.க. என்ருல் சப்தம் போடுவார்கள், மக்கள்தான் முடிவு செய்யவேண்டும், மக்கள் முடிவு செய்து கொண்டும் வருகிருர்கள்—நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் கட்சி மனமாச்சரியங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருநெல்வேலியில் கடையநல்லூர் பகுதி கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு கையாடல் நடந்தது, 46 வழக்குகள் இருக்கின்றன. அதை நடத்துவதற்கு திருநெல்வேலியில் ஸ்பெஷல் அடிஷனல் பர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நியமித்திருக்கிருர்கள். அந்தக் கோர்ட் இன்னும் வேலை செய்ய ஆரம்பிக்கவில்லை. மற்ற வழக்குகள் நடக்கின்றன. இந்த வழக்கு நடக்கவில்லை. அந்த வழக்குகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னுல் எதற்காக ஒரு ஸ்பெஷல் பப்ளிக் ப்ராஸிக்யூட்டரைப் போட்டிருக்கிருர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11-30-க்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: வழக்கே ஆரம்பிக்கவில்லை, ஸ்பெஷல் அடிஷனல் பப்ளிக் ப்ராஸிக்யூட்டரைப் போட்டிருக் கிருர்கள். யாரைப் போட்டிருக்கிருர்கள்?

(Thiru N. Ganapathy rose)

Sir, I am only arguing the point. Let the hon. Member give a patient hearing and let him not poke his nose..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரைப் பார்த்துப் பேச வேண்டாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: வழக்கு விசாரணை ஆரம்பிக்க வில்லை. ஒரு நீதிமன்றம் என்ருல் அதற்கு ஒரு ஸ்பெஷல் அடிஷனல் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் வேண்டாமா என்று கேட்பார்கள்.

நான் சொல்வது, திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலியில்மட்டும் எ.பி.பி. நம்பர் 1, நம்பர் 2 என்று நான்கு பேர்கள் இருக்கிறார்கள். இந்த நான்கு பேர்களில் யாரையாவது ஒருவரை வழக்கு ஆரம்பிக்கிற வரையில் அந்த வழக்குக்குத் தேவையான காரியங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கலாமே. ஸ்பெஷல் அடிஷனல் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் நம்பர் 2 என்று போட்டிருக்கிறார்கள்.

யாரைப் போட்டிருக்கிறார்கள் என்றால் முதலில் போட்டார்கள் அங்குள்ள மாவட்டச் செயலாளரை. அவர் மாவட்டச் செயலாளராக இருக்கிறார் என்று சொன்னவுடன் அவரை நீக்கிவிட்டு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒரு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரை அந்தப் பொறுப்பில் போட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நடக்கின்றன.

ஆகவேதான் சொல்கிறேன். எவ்வளவு பேர்கள் அந்த வேலைக்கு மனுப் போட்டார்கள்? நீண்ட காலமாக அவர்கள் அந்தத் தொழிலில் அனுபவப்பட்டவர்கள். அவர்கள் மனுப் போட்டிருக்கிறார்கள், ஆனால் அவர்களுக்குக் கிடைக்கவில்லை, மாவட்டச் செயலாளருக்குக் கொடுத்தார்கள். வெட்டுப் பிரேரணை கூட கொடுத்திருக்கிறேன்.

(முற்பகல் 11.30)

'To discuss the need to abolish the court of Special Additional First Class Magistrate at Tirunelveli' என்று. இந்த நீதிமன்றத்திற்கு தனி இடம். அதற்கு ஒரு தனி மாஜிஸ்டிரேட். அதற்கு கிளார்க். அங்கே என்ன நடைபெறுகிறது என்று சொன்னால் ஒரு 10 எழுத்தர் போட்ட வழக்கில் வழக்கு சம்பந்தமான நகலை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை மாதந்தோறும் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

After all they are preparing copies for the cases filed. அதைத்தான் அவர்கள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு அவ்வளவு அவசியம் இல்லை.





ஏற்கனவே அங்கே ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட் இருக்கிறது. அங்கே இந்தக் கிளார்க்குகளைப் போட்டு காப்பி எடுக்கும் வேலையைச் செய்யலாம். வேலை செய்யாமல் இப்படி அடிஷனல் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட், பப்ளிக் பிராசிகியூட்டர், கிளார்க் என்று இப்படி நீதி நிர்வாகத்துறையிலே பல லட்சக்கணக்கான ரூபாய் இன்று விரயம் ஆகிக்கொண்டிருக்கிறது.

நம்முடைய சட்ட அமைச்சர் கேட்பார்கள். அங்கே வழக்கு நடக்கவில்லையா என்று. வழக்கு நடைபெறுகிறது, நான் கூட அங்கே இரண்டொரு வழக்குகளை நடத்திக்கொண்டிருக்கிறேன். எப்படி அந்தக் கோர்ட்டுக்கு வழக்கு வருகிறது என்று சொன்னால், ஏதோ அவர்களுக்கு வேலை இல்லை என்பதற்காக மற்ற கோர்ட்டுகளிலிருந்து இங்கே கேஸ்களை டிரான்ஸ்பர் செய்கிறார்கள்.

ஆகவே, ஒரு நாளைக்கு அந்த மூன்று மாஜிஸ்டிரேட்டுகளும் 2 மணி நேரம், 3 மணி நேரம் தான் வேலை செய்கிறார்கள். அந்த அளவுக்கு நீதி நிர்வாகம் இருக்கிறது. இதை உடனடியாக நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நீதிபதி, டிஸ்ட்ரிக்ட் முன்சிப் செலக்ஷனையெல்லாம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம் ஒப்படைக்கக்கூடாது.

* * * *

திரு. நா. வீராசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்று எனக்குத் தெரியும். நானே சொல்லிவிடுகிறேன்.

* * * *

எட்மண்ட், * என்று சொல்வது நல்லமுறையில் இல்லை. அந்த வாக்கியங்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஐ வித்டிரா சார்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. கோவை செழியன் : சர்வீஸ் கமிஷனைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கு தாங்கள் தீர்ப்பு கொடுத்தீர்கள். இதே மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு நாங்கள் 98 பேரை பேக்வார்ட் கம்யூனிட்டியிலிருந்து போட்டு இருக்கிறோம் என்று சொன்னபோது இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு இருக்கிறது. நீங்கள் வேண்டுமானல் ரிகார்டை எடுத்துப் பாருங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, என்னுடைய யோசனையெல்லாம் இந்த டிஸ்டிரிக்ட் முன்சிப், சப்-மாஜிஸ்டிரேட் போன்ற பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களை, நீதி நிர்வாகத்துறையில் நீண்ட நாள் அனுபவம் பெற்று ஓய்வு பெற்றவர்களைக்கொண்டு ஒரு குழு அமைத்து அதன் மூலம் தேர்ந்தெடுக்கவேண்டும்.

திரு. லத்தீப் அவர்கள் கூட ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இன அடிப்படையில் இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அந்தக் கருத்திலிருந்து நான் மாறுபட்டவன். இப்படி கிருஸ்தவர், முஸ்லீம் என்று இன அடிப்படையில் வேலை கொடுத்துக்கொண்டு போனால், அது நல்ல திறமையுள்ளவர்களுக்கு வாய்ப்பளிக்காத சூழ்நிலையை உருவாக்கிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருப்பது தகுதி இல்லாவிட்டாலும் முஸ்லீம்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நியமனம் செய்யவேண்டுமென்று சொல்லிக் கொடுக்கவில்லை. தகுதி இருந்தும், சிறுபான்மையினர் என்ற அளவில் அவர்களைப் புறக்கணிக்காமல் இருப்பதற்காகத் தான்—அப்படிப்பட்ட நிலைமை ஓரிரு இடங்களில் இருக்கிறது—தகுதி படைத்தவர்களுக்கு வாய்ப்புக்கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் கொடுத்திருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, என்னுடைய கருத்து என்னவென்றால் இந்த நீதித்துறையைப் பொறுத்த வரையில் because it is the last resort of every citizen.



இந்த நீதித் துறை தான் நாட்டிலே உள்ள குடிமகனுக்கு கடைசிப் புகலிடம், பாதுகாப்புத் தேடித்தரும் இடம்.

ஆகவே, இந்த இடங்களுக்கு திறமைமிக்கவர்களைப் போட வேண்டுமென்றும், அதிக அனுபவம் உள்ளவர்களை மாத்திரம் போடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்ட அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும் முழு மனதோடு ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 30 உறுப்பினர்கள் பேச பெயர் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : ஆளும் கட்சியில் உள்ளவர்களும் தொகுதி மக்களால் வாக்களிக்கப்பட்டுத்தான் இந்த சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் தங்கள் தொகுதி பற்றிய கருத்துக்களைச் சொல்வதற்கு தகுந்த முறையில் வாய்ப்புத் தருவதில்லை. இதற்காக உள்ளபடியே சங்கடப்படுகிறோம். ஆகவே, ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கு சரியான பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முப்பது உறுப்பினர்கள் பேச பெயர் கொடுத்திருப்பதால் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு 10-15 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற நிதிக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

அவர்கள் கொடுத்துள்ள முன்னுரையிலேயே மத்திய அரசாங்கத்தின் தொழில் கொள்கை சரிவர இல்லாத காரணத்தால் தான் மாநிலங்களிலே பொதுவாக கிராமப்புறங்களில் தொழிற் சாலைகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் ஏற்படவில்லை என்று சொன்னார்கள்.

(திரு. துரை முருகன் தலைமை)

தொழில் துறையைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு சிறந்த முறையில் தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதும், அதிகமான

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 மார்ச் 27

தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தொழில் ஆரம்பிப்பதற்கு மிகமிகத் தேவையானது மூலதனம்.

இரண்டாவது மின்சாரம்.

மூன்றாவது மிக முக்கியமானது 'ரா மெடீரியல்ஸ்'.

தொழில் அமைச்சர் சொன்னதுபோல் 'ரா மெடீரியல்ஸ்' அதிகம் இல்லாத மாநிலம் நம்முடைய தமிழகமும் பஞ்சாப் மாநிலமும் தான். பஞ்சாப் மாநிலம் எப்படியோ அதே போல் தான் தமிழக மாநிலமும். பஞ்சாப் மாநிலத்திலும் விவசாயம் தான் அதிகமாகச் செய்யப்படுகிறது. தமிழகத்திலும் விவசாயம் தான் அதிகமாகச் செய்யப்படுகிறது. ஆனால் பஞ்சாபில் தொழிற்சாலைகள் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் தொழில் ஆரம்பிக்க முடியாத அளவுக்கு நிலைமை இருப்பதற்குக் காரணம் இதற்கு முன்னே ஆட்சியில் இருந்தவர்கள் சரிவர நடக்காத காரணத்தால்தான் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏழு வருஷமாக ஆட்சியில் இருக்கிறீர்களே அது போதாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எங்கள் கட்சி ஆட்சியில் இருந்த நேரத்திலும் திறமையான முறையில் தொழில்களை வளர்த்து இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மாற்றுக்கட்சிக் காரர்களும் நாங்கள் சரியாகச் செய்யவில்லை என்று சொல்வதற்கு உரிமை இருக்கிறது.

முன்பு பஞ்சாப் மாநிலத்தில் ஒருவர் முதலமைச்சராக இருந்தார். அவர் தொழிற்சாலைகளை அதிகமாக உண்டுபண்ண வேண்டுமென்று அக்கறை காட்டி வந்தார். அப்படி அக்கறை காட்டியதன் பலனைத்தான் பஞ்சாபில் 10 ஆண்டுகளுக்கு முன்பு துவங்கிய தொழிற்புரட்சி இன்றைக்கு அந்த விவசாய மாநிலத்தை பெரும்பகுதி தொழில் உள்ள மாநிலமாக மாற்றி இருக்கிறது.



1974 மார்ச் 27] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அதோடு, அந்த மாநிலம் டெல்லிக்கு மிக அருகில் இருக்கிறது. டெல்லியில் எந்தத் திட்டம் போட்டாலும், எந்தத் தொழிலைப் புதிதாக ஆரம்பிக்கவேண்டுமென்று திட்டம் போட்டாலும் உடனே அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. உடனே அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆரம்பித்து விடுகிறார்கள்.

நாம் தூரத்தில் இருப்பதால் நம்முடைய மாநிலம் அதிக அளவுக்கு தொழில்களை வளர்க்க முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. இந்த மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால் இங்கே தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கிடைக்காமலும், ரா மெடீரியல்ஸ் கிடைக்காமலும் போய்விடுகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். டெல்லிக்கு அதிகமான தூரத்தில் தமிழ்நாடு இருக்கிறது, அதனால் தொழில் ஆரம்பிக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். What is your Liason Officer doing at New Delhi?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்):** இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** டெல்லியில் இருக்கும் தலைமை அலுவலகம் அருகே இருப்பதால் பஞ்சாபில் அதிகமாக தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. முன்பு பஞ்சாப் மாநிலத்தில் அதிகம் இருந்தது. இப்போது ஹரியானா மாநிலத்திலும் தொழில்கள் அதிகம் வந்து கொண்டிருக்கிறது. இது உண்மை.

ஆனால் சென்னையிலிருந்து தூரத்தில் இருக்கக்கூடிய கன்னியாகுமரியிலோ அல்லது திருநெல்வேலி போன்ற மாவட்டத்திலோ அங்கெல்லாம் சென்னைக்கு மத்தியில் அல்லது சென்னையை சுற்றி தொழில்கள் வளர்ந்திருக்கிற அளவுக்கு வளர முடியவில்லை. இல்லை என்று சொல்ல முடியுமா? பொன்னப்ப நாடார் அவர்கள் கூட மறுக்கமாட்டார்கள். தொழில்கள்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 மார்ச் 27

வளர்வதற்கு தேவையான ஆய்வுக்கூறுகள் உடனடியாகக் கிடைக்கின்ற இடங்களில்தான் தொழில்களை நிறுவுவது நல்லது. மற்ற இடங்களில் அதனால்தான் தொழில்கள் வளர முடியவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய மாநிலத்தில் பணம் வைத்திருக்கக் கூடியவர்கள் கொஞ்சம் தயக்கம் காட்டுகிறார்கள். தொழிலில் பணம் போட்டால் சரியாக ரிட்டர்ன் வருமா, அதிலே ரிஸ்க் இருக்கிறதே, நிறைய ரா மெட்டீரியல்ஸ் கிடைக்குமா, ரூபாய் 2 லட்சம் அல்லது 3 லட்சம் மூலதனம் போட்டு அல்லல்படுவதை விட எங்கேயாவது வட்டிக்குப் பணம் கொடுக்கலாம், அல்லது ஏதாவது வியாபாரம் செய்யலாம் என்று தமிழகத்தில் பணம் வைத்திருக்கிறவர்கள் எண்ணுகிறார்கள். அதிகமான அளவுக்குத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே அதிகமாக வளரவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.

பாரின் கொலாபரேஷன்—தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்றால் முன்பெல்லாம் சிறு தொழில்களாக இருந்தாலும் சரி, மீடியம் இண்டஸ்ட்ரீஸாக இருந்தாலும் சரி, பெரிய தொழில்களாக இருந்தாலும் சரி, வெளி நாடுகளிலிருந்து அதிகமாக டெக்னிஷியன்ஸ் வைத்து, 'டெக்னிகல் நோ-ஹவ்' வரவழைத்து கொலாபரேஷன் செய்துகொண்டு தொழில்களை தொடங்கக்கூடிய நிலைமை இருந்தது.

ஆனால், இன்றைக்கு மத்திய அரசாங்கம் சொல்லிவிட்டார்கள், டெக்னிகல் கொலாபரேஷன் இனிமேல் அனுமதிக்க முடியாது என்று. மற்ற நாடுகளைப் போலவே சில தொழில்கள்; 100, 150 தொழில்கள் இந்தியாவில் மேம்பாடு அடைந்துவிட்டன. ஆகவே, அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, யார் வேகமாக ஓடுகிறார்களோ அவர்கள்தான் பயன் அடைகிறார்கள். பின்னாலே நிற்பவர்கள் பின்னாலேயே நின்றுகொண்டு புதிதாக தொழில்களை ஆரம்பிக்க முடியாத ஒரு நிலை தமிழகத்தில் வந்து விட்டது. இதைச் சொன்னால் மாநில சுயாட்சி கோருகிறார்கள் என்று கூடக் கோபிப்பார்கள்.



1974 மார்ச் 27] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள், வெஸ்ட் பெங்காலில் முதல் அமைச்சராக இருந்தவர், ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த சமயத்தில் சொன்னார்: 'இது பெடரல் செட் அப். இதிலே நான் லைசென்ஸ் வாங்கவேண்டும், வெஸ்ட் பெங்காலில் தொழில் அமைக்க வேண்டும், வெளி நாடுகளோடு கொலாபரேஷன் செய்யவேண்டும் என்றால் உங்களுடைய அனுமதி பெறவேண்டிய அவசியம் கிடையாது. ரா மெட்டீரியல்ஸ் இம்போர்ட் பண்ணவேண்டு மென்றால் அல்லது கொலாபரேஷன் ஏற்பாடு செய்யவேண்டும் என்றால், நான் ஃப்ரெஞ்ச் நாட்டோடு, அல்லது ஜெர்மன் நாட்டோடு அல்லது அமெரிக்கா நாட்டோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்றால், அதற்கு நான் மத்திய அரசாங்கத்தினிடம் வந்து உங்கள் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை' என்று சொன்னார்கள்.

நாங்களும் அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். டாக்டர் பி. ஸி. ராய் வெஸ்ட் பெங்கால் முதல் அமைச்சராக இருந்த சமயத்தில் அவர்கள் இப்படி கேட்டார் என்று சொல்லுகிறோமே தவிர, இதிலே தனி நாடோ அல்லது வேறு பிரச்னையோ இல்லை என்பதனை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுக்கிறார்கள். அதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. எப்படி மத்திய அரசாங்கம் லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுக்கிறார்கள்? அகில இந்தியாவையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்தத் தொழிலுக்கு எவ்வளவு கபாஸிடி என்பதனை அஸெஸ் செய்கிறார்கள். பிறகு தான் புதிய லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். டெல்லியில் இருக்கிற காரணத்தினால் பிர்லா, டாட்டா போன்ற தொழில் அதிபர்கள் மற்ற மாநிலங்களில் அவர்கள் செய்து கொண்டிருக்கிற தொழில்களை ஆரம்பிக்க வேண்டாம் என்று கருதி, பல லெட்டர் ஆப் இன்டென்ட்களை தாங்களே வாங்கிவைத்துக்கொண்டு இருப்பதால், இங்கே இருக்கிறவர்கள் தொழில்கள் ஆரம்பிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 மார்ச் 27

பல தொழில் அதிபர்கள், பல கோடிக்கணக்கான ரூபாய்களை வைத்துக்கொண்டு தொழில்களை நடத்தக்கூடியவர்கள் மற்ற மாநிலங்களில் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டால் தங்களுடைய பொருள்களுக்கு, தாங்கள் ஏற்கனவே உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு மார்கெட் இருக்காது என்ற காரணத்தில் அவர்களே மற்ற இடங்களில் தொழில்கள் ஆரம்பிப்பதற்குத் தடங்கலாக இருக்கிறார்கள்.

அவர்கள் ஃபால்ஸ் லெட்டர்ஸ் ஆப் இன்டென்ட்களை ஏற்கனவே வாங்கி வைத்துக்கொண்டு, தொழில்களை ஆரம்பிக்காமல் எக்ஸ்டென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் யாராவது ஒரு தொழிலை ஆரம்பிக்கவேண்டுமென்றால், 2 கோடி தேவை, 3 கோடி தேவை என்றால், 30 லட்சம் அளவுக்கு பாரின் எக்ஸேஞ்ச் வேண்டுமென்றால், மத்திய அரசை லெட்டர் ஆப் இன்டென்ட் கேட்டால் capacity already met by the existing units, என்று சொல்லிவிடுகிறார்கள்.

இதனால் பிற்பட்ட பகுதியாக இருக்கக்கூடிய தமிழகம், அதே போலத் தான் ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் தொழில்கள் வளரமுடியாமல் மத்திய அரசின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கிற தொழில் அதிபர்கள் தாங்களே முன்பே லெட்டர் ஆப் இன்டென்ட்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு இருப்பதால், நமக்கெல்லாம் லெட்டர் ஆப் இன்டென்ட் கிடைக்கமுடியாத ஒரு நிலை இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மையார் அவர்கள் சொன்னார்கள். லைஸான் ஆபீஸர் போடலாம் என்று சொன்னார்கள். நான் வரவேற்கிறேன்.

மத்திய அரசில் தொழில் துறையில் சென்று ஒரு லெட்டர் ஆப் இன்டென்ட் வாங்கவேண்டும் என்றால் நிறையச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அசோகா ஹோட்டலில் ஒரு பார்ட்டி வைக்கவேண்டும் அல்லது வேறு ஒரு ஹோட்டலில் ஒரு பார்ட்டி வைக்கவேண்டும். அங்கெல்லாம்



1974 மார்ச் 27] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

பார்ட்டி வைத்து லெட்டர் ஆப் இன்டென்ட் அப்ளிகேஷன் மூவ் செய்தால் தான் எதுவும் நடக்கும். மந்திரிகளே நினைத்தால் கூட நடக்காது. டி.ஜி.டி.டி. இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் மினிஸ்டரி யார் சொன்னாலும் நடக்காது, மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்கள் நினைத்தால் கூட அது நடக்காது.

அங்கு இருக்கக்கூடிய குட்டி தேவதைகள், செக்ஷன் ஆபீஸர், டைரக்டர், ஜாயிண்ட் செகரடரி, செகரடரி, அட்வைசரி-கமிட்டி, இன்னும் எத்தனையோ கமிட்டிகள் இருக்கின்றன. எல்லோரையும் திருப்தி செய்யவேண்டும். இதைத் தவிர்ப்பதற்கு நம்முடைய அதிகாரிகள் அடிக்கடி டெல்லிக்கு பறந்துகொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் முடியவில்லை. காரணம் அவர்களை திருப்தி செய்யக்கூடிய அளவுக்கு செலவு செய்ய முடியாது. ஏனென்றால் பட்ஜெட்டில் நிதி கிடையாது. ஆகவேதான் லைஸான் ஆபீஸர், மத்திய அரசு அதிகாரிகளோடு நெருங்கிப் பழகக்கூடிய லைஸான் ஆபீஸராக ஒரு இண்டஸ்டிரியலிஸ்டை அரசாங்கமே தொழில்களை ஆரம்பித்தாலும் சரி, தனிப்பட்டவர்கள் ஆரம்பித்தாலும் சரி, அந்தத் தொழிலுக்கு லைசென்ஸ், லெட்டர் ஆப் இன்டென்ட், ரா மெட்டீரியல்ஸ் பெற்றுத் தருவதற்கு ஒரு பெரிய அதிகாரியாக, டெல்லியில் நம்முடைய அதிகாரியாக நியமித்தால் இவைகளையெல்லாம் செயல்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக லெட்டர் ஆப் இன்டென்ட் கொடுத்து விடுகிறார்கள். லெட்டர் ஆப் இன்டென்டை வாங்கிவிட்டால், அதை இம்ப்ளிமெண்ட் பண்ணுவது கிடையாது. நான் ஏற்கனவே சொன்னதுபோல அவைகளை வாங்கிவைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிறார்கள் அல்லது புதியதாக மற்றவர்களை தொழிலில் வரவிடாமல் தடுக்கிறார்கள். இந்த நிலையை தடுக்கவேண்டும்.

டெக்னோகிராட்ஸுக்குக் கொடுக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் இருக்கக்கூடியவர்கள் டெக்னோகிராட்ஸ்க்கு என்று லைசென்ஸ் கொடுக்கிறார்கள். என்ன லைசென்ஸ்? யாராகிலும் ஒருவர் பி.ஈ. மெகானிகல் என்ஜினியரிங் படித்துவிட்டு ஒரு கோடி ரூபாய் காபிடல் போடுவது என்று சொன்னால் யார் போடுவது? யாராவது ஒரு லட்சம் ரூபாய் அல்லது இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்து தொழில் ஆரம்பிப்பதாக இருந்தால் தொழில்

ஆரம்பிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும். இல்லையென்றால் சாதாரணமாக இப்படி மறுப்பதன் மூலம் இந்தப் பகுதியிலே தொழில்களை அரசாங்கம் வளர்ப்பதற்கு மத்திய அரசு குறுக்கே நிற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூலதனத்தைப்பொறுத்து அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய வங்கி, மத்திய அரசின் நிதி உதவி அளிக்கின்ற ஸ்தாபனங்கள் ஆகியவைகளிடமிருந்து நிறைய உதவிகளைப் பெற்றுத்தர வேண்டும் என்ற முயற்சியில் தமிழகம் ஈடுபட்டிருக்கிறது.

குறிப்பாக நான் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் இதுவரையில் மீடியம் இண்டஸ்ட்ரீஸ் நடப்பதற்குத்தான் உதவி செய்துவந்தது. இனிமேல் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ், சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்குக்கூட 90 சதவிகிதம் வரையில் கடன் கொடுக்கக் கூடிய முறையில் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா என்று மத்தியிலுள்ள நிதி உதவி ஸ்தாபனத்தினிடமிருந்து பணத்தைப் பெற்றுத் தருவதற்கு ஸிட்கோ மூலமாகவும், இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் மூலமாகவும் புதிய திட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான சிறு தொழில்கள் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஸிப்காட் மூலம் 15 சதவிகிதம் சப்ஸிடி கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுப்பதன் மூலம் ஏறக்குறைய 94 யூனிட்களுக்கு 92 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலம் இன்வெஸ்ட்மெண்ட் 15.70 கோடி ரூபாய் ஏற்பட்டு 3,871 பேர்களுக்கு வேலை கிடைத்திருப்பதை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜாயிண்ட் செக்டார் பற்றி நமது அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் சொன்னார்கள். இரு வேறுபட்ட கருத்துக்கள் இந்த மன்றத்தில் உள்ளவர்களுக்கு இருக்கிறது .நான் என்னுடைய கருத்து என்ன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க் கட்சிக்காரர்களாக இருப்பவர்கள் சொல்லிவிடக்கூடும். இது





இங்கே தோன்றிய நோய் அல்ல. மத்திய அரசில் இருக்கக் கூடிய பெங் டர்க்ஸ், அங்கே இருக்கக்கூடிய இளம் துருக்கியர்கள் உண்டுபண்ணக்கூடிய விதை.

தொழில்கள் வேண்டும், தொழில்களில் மக்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும். தொழில்களிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்கள் நாட்டு மக்களுக்கு வேண்டும். ஆனால் இதிலே முக்கியம் என்னவென்றால் இதைச் செய்வது யார்? ஏறக்குறைய அரசாங்கமே முனிசிபாலிடி வேலையை விட்டுவிட்டு, ரோடு போடுகிற வேலையை விட்டுவிட்டு, அதாவது மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகச் செய்கின்ற வேலைகளை விட்டுவிட்டு, தொழில்களை மட்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கமே பணத்தைச் செலவழிக்க விரும்பினால் அதை வேண்டாம் என்று சொல்கிறார்கள்.

அரசாங்கம் பணம் பூராவும் செலவழிக்க வேண்டியதில்லை. தொழில்களை ஆரம்பிக்கக்கூடிய தனிப்பட்டவர்கள் ஆரம்பித்தால் அவர்கள் ஏகபோக உரிமையாளர்களாக இருக்கக்கூடாது என்பது தான் ஜாயிண்ட் செக்டார் கொள்கை.

இதில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 'ஸ்பிக்' தமிழகத்தில் வந்திருக்கிறது. சதர்ன் பெட்ரோலியம் இண்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ்க்கு என்ன மூலதனம்? ரூ. 84 கோடி மூலதனம். நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய பங்கு என்ன? ரூ. 4 கோடி. மீதி இருக்கக்கூடியது யாருடையது? அதை நடத்தக் கூடியவர்கள் மற்றவர்களிடமிருந்து பெற்ற கடன் தொகை ரூ. 80 கோடி. நான்கு கோடி ரூபாய் மூலதனம் போட்டு, தமிழகத்தில் ஒரு தொழில் வந்து, அந்தத் தொழிலின் மூலம் 1,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அதன் மூலம் இன்றைக்கு 1,500 டன் உரத்தையும் தமிழகத்திற்குப் பெற்றுத் தருகிறது. இதைப் போய் குறை சொன்னால் என்ன பயன்?

மத்திய சர்க்காருடைய கொள்கை ஜாயிண்ட் செக்டார் வேண்டாம் என்று சொல்வது அங்கு இருக்கக்கூடிய யெங்ஸ் டர்க்குகளை திருப்திப்படுத்துவதற்குத்தான் இப்படிச் சொல்கிறார்கள். தொழில்கள் வளரவேண்டும் என்ற நோக்கம் இல்லை.

அதைப்போலவே தமிழ்நாடு ரப்பர்ஸ், தமிழ்நாடு கெமிக்கல்ஸ் போன்ற பல ஜாயிண்ட் செக்டார்கள் மூலமாக தமிழகத்திலே பல தொழில்கள் வளர வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேஷனலைஸ்ட் பாங்குகள் மூலமாக சிறு தொழில்கள், பெரிய தொழில்கள், மீடியம் இன்டஸ்ட்ரீஸ் நடத்த கடன் கொடுத்து உதவ முன்வருகிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, நிதி நெருக்கடியின் காரணமாக பின்தங்கிய பகுதிகளில் தனியார்கள் நடத்துகின்ற தொழில்களுக்கு ஒர்க்கிங் காப்பிடல் கொடுக்க அவர்கள் முன்வருவதில்லை. அவர்கள் 20 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். பதினான்கு நேஷனலைஸ்ட் பாங்குகளும் மற்ற வங்கிகளும் ஏறக்குறைய 50 கோடி ரூபாய் தொழில் நடத்த கொடுத்திருக்கலாம்.

ஆனால், அவர்கள் நியாயமான முறையில் தொழில் நடத்துபவர்களுக்கு பணம் கொடுக்காமல் கள்ளமார்க்கெட்காரர்களுக்கும் கொள்ளை லாபம் அடிப்பவர்களுக்கும் கடன் கொடுக்க முன்வருகிறார்கள். நியாயமாகத் தொழில் நடத்துபவர்களுக்கு கொடுக்கத் தயங்குகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில்கள் நடத்துவதற்கு போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை. அதனால் எத்தனையோ பேர் ஜெனரேட்டர்கள் வாங்கிக் கொடுத்தால் போதும் என்று சொல்கிறார்கள். அதனால் எத்தனை பேர் வேண்டுமென்று கேட்கிறார்களோ அத்தனை பேர்களுக்கும் ஜெனரேட்டர்களை வாங்கிக்கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; அதை மேலும் தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைத் தொழிலைப் பொறுத்தவரையில் புதிதாக 8 சர்க்கரை ஆலைகளை கரும்பு உற்பத்திச் செய்கின்றவர்களை பங்குதாரர்களாகக்கொண்டு நிறுவப்போவதாகச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே அதைப் பற்றிச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இன்னும் அதுபற்றிய முடிவுகள் முடிவாகாததால்





அறிவிக்கவில்லை என்று கருதுகிறேன். அப்படி ஏற்படுத்துகின்ற 8 சர்க்கரை ஆலைகளில் ஒன்றை திருவெண்ணைநல்லூரில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டிலேயே மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் அங்கே சர்க்கரை ஆலை நிறுவப்படலாம் என்றும், அதை ஏற்றுக் கொள்வோம் என்ற உறுதிமொழியையும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, விரைவிலேயே திருவெண்ணைநல்லூரில் சர்க்கரை ஆலை நிறுவுவதுபற்றிய அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது இந்த 'ஸ்பிக்' நிறுவனத்தில் அரசாங்கம் 4 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறது; மீதியை அதாவது 80 கோடி ரூபாயை அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் போட்ட மூலதனம் 5 கோடி ரூபாய்தான். ஆக, அந்த நிறுவனத்திற்கு 10 கோடி ரூபாய் அளவுக்குத்தான் மூலதனம் வருகிறது. ஆனால் அங்கத்தினர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்த மன்றத்திற்கு தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** எனக்குத் தெரிந்த தகவலை வைத்து சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப்போல படித்து, நான் தெரிந்துகொண்டதைச் சொன்னேன். அவர்களுக்கு வேறுவிதமான தகவல் கிடைத்திருக்கலாம். அந்த நிறுவனத்தில் நம்முடைய அரசாங்கம் 4 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறது. அரசாங்கத்தைவிட அதிகமாக அவர்கள் மூலதனம் போட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் கன்ட்ரோலிங் பவர் அரசாங்கத்திற்கு 51 சதவிகிதமும் அவர்களுக்கு 49 சதவிகிதமும்தான் இருக்கிறது. அதனால் நிச்சயமாக அந்த நிறுவனத்தை அரசாங்கம் கட்டுப் படுத்த முடியும்.

நம்முடைய தொழில் துறையைச் சேர்ந்த அலுவலர்களும், டைரக்டர்களும் நிர்வாகத்தில் பங்கேற்றிருக்கிறார்கள். அதற்கு மேல் அரசாங்கம் இருப்பதால் அவர்கள் இஷ்டப்படி நடக்க

முடியாது. இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு அண்டர் ரைட் மூலமாக 50 கோடி, 60 கோடி ரூபாய்க்கு ஷேர் காப்பிடல் உற்பத்தி செய்கிறார்கள் என்றால் அதில் தவறென்ன இருக்கிறது? நாம் குறைந்த அளவு மூலதனத்தைப்போட்டு, ஒரு பெரிய நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துகிறோம். சின்ன மீனைப்போட்டு, பெரிய மீனைப் பிடிக்கிறோம். சிறிய மீனைப்போட்டு பெரிய மீனைப் பிடிப்பதுதான் திறமை. பெரிய மீனைப்போட்டு சிறிய மீனைப் பிடிப்பதுதான் புத்திசாலித்தனம் அல்ல.

திரு. கோவை செழியன்: 85 கோடி ரூபாய் மூலதனமுள்ள ஒரு நிறுவனத்தில் 5 கோடி ரூபாய் மட்டுமே தருகின்ற ஒரு நிர்வாகத்தினரிடம் முழு பொறுப்பையும் தரலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): முழு அதிகாரமும் அவர்களிடம் இல்லை; கன்ட்ரோலிங் பவர் நம்முடைய அரசாங்கத்தினிடம்தான் இருக்கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, தொழில் துறை அமைச்சரவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த மானிய கோரிக்கைகளின்மீது எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தலைவரவர்களே, நான் கொஞ்சம் அதிகம் பேசவேண்டியிருப்பதால் எனக்கு 10 நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): ஐந்து நிமிடத்திலிருந்து 7 நிமிடங்கள் வரை கிடைக்கும். அதற்குள் முடித்துவிடுங்கள்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: எனக்கு 10 நிமிடங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அன்று எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 'வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது' என்று குறிப்பிட்டார்கள். இப்போது அவர்கள் ஆளும் கட்சியாக



இருக்கிறார்கள். அவர்கள் அப்போது எழுப்பிய கோஷங்களை முறியடிக்கின்ற வகையிலே பல நல்ல திட்டங்களை பின்தங்கிய மாவட்டங்களிலே புகுத்தி செயல்படுவார்கள் என்று எதிர் பார்த்தோம். ஆனால் நடைமுறையில் அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்பதை நாங்கள் காண்கிறோம்.

இராமநாதபுரம் மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கியது அல்ல என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. அந்த மாவட்டத்திற்கும் தொழில் துறையில் பல தொழில்களைப் புகுத்தி அந்த மாவட்டத்தை முன்னேற்ற வேண்டும். அதேநேரத்தில் வேறு எந்தெந்த மாவட்டங்கள் தொழில் துறையில் பின்நோக்கம் அடைந்திருக்கின்றன என்று பார்த்து அவைகளையும் முற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது அல்லவா என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய ஒரு மாவட்டமாக இருக்கிறது. தொழில் துறையில் பிற்பட்ட மாவட்டங்கள் என்று 8 மாவட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 8 மாவட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டம் இடம்பெறவில்லை. அதற்கு என்ன காரணம்? அங்கு தொழிலும் இல்லை; அது தொழிலில் பிற்பட்ட மாவட்டம் என்று ஒப்புக்கொள்ளப்படவுமில்லை என்றால் அதற்கு என்ன காரணம்? காங்கிரஸ் கட்சியினர் அங்கே வெற்றி பெற்றிருக்கிற காரணத்தைத் தவிர வேறொன்றும் இல்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

எப்போது பணத்தை ஒதுக்கினாலும், மக்கள் தொகையின் அடிப்படையில் ஒதுக்க வேண்டும். மத்திய அரசும் அந்த அடிப்படையிலே கொடுக்க வேண்டும் என்று கேட்கவேண்டும். தமிழ்நாட்டிலே 4½ கோடி மக்கள் இருக்கிறோம். அந்த அடிப்படையில் கொடுங்கள், கொடுங்கள் என்று கேட்டு, மாநில சுயாட்சி பெறவேண்டுமென்று எல்லாம் கேட்கும்போது கன்னியாகுமரி மாட்டத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசு நியாயமாக கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்க வேண்டாமா? கொடுக்காமல் இருப்பதற்கு பாரபட்சம் அல்லது மாற்றான் தாய் மனப்பான்மைதான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 27

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் ஆரம்பிப்பதற்கான மூலப்பொருட்கள் கிடைக்கின்றன. அதை வைத்து தொழிலை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டிலேயே ரப்பர் மிகுதியாகக் கிடைக்கின்ற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் தான். ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கான மூலப்பொருள் ஏராளமாக அங்கே கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு நிச்சயமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழில் ரப்பர் என்பதற்குப் பதிலாக 'ரப்பர்' என்பதற்கு முன்னால் 'இ' என்ற எழுத்தைப்போட்டு எழுத வேண்டும். அதை அழுத்தமாக உச்சரிக்கும் 'இரப்பர்' என்று சொல்வார்கள். ஆகவே, ரப்பர் தொழிலுக்கு இரப்பர் என்ற நிலையை உருவாக்காமல் அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளை நிறுவுவதைப் பொறுத்தவரையில், பொதுத் துறையில் ஆரம்பித்தாலும் சரி, தனியார் துறையில் ஆரம்பித்தாலும் சரி, ஜாயின்ட் செக்டாரில் ஆரம்பித்தாலும் சரி அதைப்பற்றி எங்களுக்கு கவலை இல்லை. எந்தத் துறையில் இருந்தாலும் பின்தங்கிய மாவட்டங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வேலை வாய்ப்பை பெருக்க வேண்டும். அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை.

இன்றைக்கு தனியாரிடம் பணம் தேங்கி கிடக்கிறது. அரசாங்கத்திடம் இருக்கின்ற பணத்தை விட தனியாரிடம் அதிகம் இருக்கிறது. அந்தப் பணத்தை அவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு நாம் வழிவகை செய்யவேண்டும். அந்தப் பணத்தை வெளியே கொண்டுவந்து, அவர்கள் பல தொழில்களை ஆரம்பித்தால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பண்டங்களின் உற்பத்தி பெருகும். அதற்கு அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்; ஆர்வத்தை உண்டாக்க வேண்டும்.

இன்றைக்கு அவர்கள் ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் இன்றைக்கு இருக்கின்ற வரி விதிப்பு முறைகளும், கணக்கு கேட்கின்ற முறைகளும்தான். அவர்களுக்கு



1974 மார்ச் 27] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

ஊக்கமளித்து, கையிலே இருக்கின்ற பணத்தை தொழிலில் மூலதனமாகப் போடுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சிறுதொழில்களை யாராவது கொஞ்சம் பணம் வைத்து ஆரம்பித்தால் அவர்களுக்கு அரசாங்கம் பணம் கடன் கொடுக்கிறது. அது வரவேற்கத்தக்கது. அரசாங்கம் கொடுக்கின்ற பணத்தை இயந்திரங்கள், இதர கருவிகள் என்ற வகையில் பொருளாக கொடுக்கிறார்கள். அதில் சில கோளாறுகள் இருக்கின்றன.

தனியார் ஒருவர் நேரடியாக வாங்குவதாக இருந்தால், லேத், டர்னர், பக்மில் போன்ற கருவிகளை வாங்குவதாக இருந்தால், அரசாங்கம் வாங்கும் விலையைவிட 10 சதவிகிதம் கமிஷன் விலையில் —குறைந்த விலையில் வாங்கிக்கொள்வார்கள். 20,000 ரூபாய் காட்லாக் விலையாக இருந்தாலும் அவர்களுக்கு 2,000 ரூபாய் அரசாங்க விலையைவிட குறைவாகக் கிடைக்கும். அரசாங்கத்தின் மூலம் வாங்கும்போது இந்த 2,000 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

அடுத்ததாக, கன்னியாகுமரியிலிருந்து பலவகை மணல்—உயர்ந்த ரக மணல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். அவற்றைக் கொண்டு அங்கே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க முடியுமா என்று பார்க்கவேண்டும்.

அங்கே நிறைய தென்னை நார் கிடைக்கிறது. அங்கிருந்த கயிறுத் தொழில் ட்ரெயினிங் ஸ்கூலைக் கூட மூடிவிட்டார்கள். இந்த நிலைதான் இருக்கிறதே தவிர வேறல்ல. ஈத்தாமொழி பயிற்சி பள்ளியை நல்லமுறையில் நடத்தி தொழிற்சாலை இயங்க வசதி செய்யவேண்டும்.

அதோடு அந்த மாவட்டத்தில் ஜெனரல் பர்பஸ் வொர்க்ஷாப் இருந்தது. அதையும் மூடிவிட்டார்கள்.

சா மில் யூனிட் இருந்தது, அதையும் மூடிவிட்டார்கள்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 27

இதுபோன்ற தொழிற்சாலைகள் எல்லாம் செயல்பட்டாலேயே அந்த மாவட்டத்தில் உள்ள வறுமை நீங்கும், வேலையில்லாத் திண்டாட்டம் போகும். (மணி அடிக்கப்பட்டது.) சார் இன்னும் சிறைச்சாலை இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்):** இன்றைக்கு 30 பேர்கள் பேசியாக வேண்டும். இன்னும் 1½ மணி நேரம்தான் காலையில் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் 5 நிமிடம் என்று பேரவைத் தலைவர் சொல்லியிருக்கிறார். ஐந்து நிமிடத்தில் இருந்து 7 நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** எங்கள் மாவட்டத்தில் முந்திரித் தொழிற்சாலைகள் மட்டும் 120 இருக்கின்றன. கேரளத்தில் இருந்து வந்தவர்கள் அந்தத் தொழிலை நடத்துகிறார்கள். வரவேற்கிறோம். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு சிலர் கூட அந்தத் தொழிலை நடத்த தற்போது முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு மினிமம் வேஜ் பிக்ஸ் பண்ணவில்லை. பத்து மணி நேரம் பாடுபடுகிறார்கள். குறைந்தது 7 ரூபாய் அல்லது 8 ரூபாயாவது அவர்களுக்கு ஒருநாள் சம்பளம் என்று நிர்ணயிக்க வேண்டும். கடனாக நூறு, இருநூறு கொடுக்கக்கூடாது. தொழில் செய்ய, கைத் தறியாகவே கொடுக்கவேண்டும்.

நீதித் துறையிலும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முன்சிபுகள், ஜட்ஜுகள் என்ற நிலையில் பதவி உயர்வு கொடுக்கவேண்டும்.

ஹைக்கோர்ட்டில் வழக்கறிஞர்கள் இருப்பதற்கு கட்டிடங்கள் கட்டப்பட்டு தரப்பட்டிருக்கின்றன. வாடகை அதிகம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசு கவனிக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஏதாவது ரிட், வழக்குக் கொடுக்க சென்னை ஹைக்கோர்ட்டிற்கு அலைந்து கொண்டிருக்க வேண்டியுள்ளது. ஆகவே ஹைக்கோர்ட்டின் ஒரு பிராஞ்சை—பிரிவை மதுரையில் ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் நாகர்கோயிலில் ஒரு கிளை சிறைச்சாலை இருக்கிறது. அதன் பராமரிப்பு சரியாக இல்லை. நான் ஒருநாள் அதில் இருந்தேன். ஒரே துர்நாற்றம்—ஒரு அறைக்குள் 20, 25 பேர்களை அடைக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும்.

இன்னும் வழக்குகளை கூடுமானவரையில் 6 மாதங்களுக்குள் முடிக்கவேண்டும். ஒருவர் வழக்குப்போட்டார் என்றால் தீர்ப்பு வழங்குவதற்குள் அவர் காலஞ்சென்று அடுத்த வாரிசு வந்து விடுகிறது.

அப்படியின்றி விரைவாக வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கு வதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தொழில் புரட்சி ஒன்று ஏற்பட்டு இருக்குமானால், குறைந்த வசதிகளை வைத்துக்கொண்டு, சாதனங்களை வைத்துக் கொண்டு—அது தமிழகத்தில்தான் ஏற்பட்டு வருகிறது என்பதை இந்த நாட்டில் உள்ளவர்கள் எல்லாம் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இதற்கான முழுப் பெருமையும் நமது தொழில் அமைச்சரவர்களுக்கும் மாண்புமிகு முதல்வரவர்களுக்குமே உரியது.

அன்றையதினம் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற கோஷத்தை எழுப்பினார்கள் என்றால் அது இன்றைக்கும் வெறும் கோஷங்களாக இல்லை. வடக்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள் எவ்வளவு, அவற்றில் செய்யப்பட்டுள்ள மூலதனம் எவ்வளவு, அதேபோல தெற்கே ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் எவ்வளவு, மூலதனம் எவ்வளவு என்று பார்த்தால் தெரியும்.

நிச்சயமாக இனிமேலாவது நல்லபல பெரிய தொழிற்சாலைகள் —மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் நிதி உரையில் கூறியுள்ளது போன்ற—பெரிய தொழில் நிறுவனங்கள் தெற்கே அமைக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1974 மார்ச் 27

நமது தொழில் அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு போராடிப் பெறுவதில் வல்லவர்கள். உண்மையிலேயே வடக்கே உள்ளவர்கள் சொல்கிறார்கள், "உங்கள் தொழில் அமைச்சர் வந்தால் நல்லபல கருத்துக்களைச் சொல்கிறார்கள். தம் காரியங்களையும் சாதித்துக்கொண்டு போய்விடுகிறார்" என்று சொல்கிறார்கள். இதற்காக நாம் எல்லாம் பெருமைப்படலாம். இந்த அரசு தன்னால் இயன்ற அளவுக்கு நம்முடைய மாநிலத்தில் பல தொழில்களை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக, இராணிப்பேட்டை சிறந்த தொழில்பேட்டையாக வெகுவேகமாக மாறி, வளர்ச்சி அடைந்து வருவதற்குக் காரணமே நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும்தான். அதற்காக நான் நன்றிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள், தம் செல்லக் குழந்தையான ஸ்பிக் ஸ்தாபன வளர்ச்சியில் ஆர்வம் காட்டுகிற காரணத்தினால்தான் இன்றைக்கு இராணிப்பேட்டை ஆக்க பூர்வமான வழியில் தொழில்துறையில் 2 மாதங்களுக்கு முன்பு இருந்த நிலை இன்று இல்லை என்கிற அளவில் வளர்ச்சியினைக் கண்டு வருகிறது. அந்த வளர்ச்சிக்கு உதவி செய்கின்ற வகையில் இராணிப்பேட்டையை ஒரு நகரியமாக ஆக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், இன்றைக்கே அங்கே மக்கள் இருப்பதற்கு வீடு இல்லாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே அதை டவுன்ஷிப்பாக ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தம் உரையில் முதலிலே சொல்லும்போது, "எங்களுக்கு எந்தத் துறையில் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்ற அக்கறை கிடையாது. எந்தத் துறையில் இருந்தாலும் தொழில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை" என்றார்கள். அதை மனப் பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. கே. எ. வகாப்]

பொதுத்துறையில் ஆரம்பிப்பது என்றால் பணம் இல்லை. தனியார் துறையில் ஆரம்பிப்பது என்றால் முதலாளித்துவம் வருகிறது. அதற்கு எதிர்ப்பு வருகிறது. ஆகவே கூட்டுத்துறையில் இன்றையதினம் தொழில்களை ஆரம்பிப்பது நலமாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் தொழில்துறையில்—எரிபொருள் பற்றுக்குறை, பண வீக்கம் காரணமாக பல இடையூறுகள் இருக்கின்றன. அதனால் ஒரு பெரும் முட்டுக்கட்டையே ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வேன்.

இந்த நேரத்தில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தொழில் வளர்ச்சிக்கு உதவியாகச் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்ல ஆசைப்படுகிறேன். சிறு தொழில்கள், பெருந்தொழில்கள் மட்டுமல்ல—நடுத்தரத் தொழில்களுக்கும் உதவி செய்ய அவர்கள் முன்வந்தாக வேண்டும்.

ஏழை எளிய சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்களுக்கு உதவி செய்யாது நகர்வாலாக்களுக்கே உபயோகப்படக் கூடிய பணமாக அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளின் பணம் போகிறது என்பதை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி, சிறு தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் அவர்கள் உதவி செய்ய முன்வரச் செய்யவேண்டும்.

சிறு தொழில்களுக்கு உதவி செய்ய சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் செயல்படுகிறது. அதற்குப் பொருளாதார வசதிகள் குறைவாக இருக்கின்றன. அரசிடம் இருந்து பணம் வருவதில்லை. வங்கிகளும் பணம் கொடுக்க முன்வருவதில்லை.

இன்று இராணிப்பேட்டையில் சிட்கோ நல்லமுறையில் செயல் படுகிறது என்றாலும் வேலைப் பளு அதிகமாகிவிட்டது. இன்னும் அதிகப்படியான ஆட்களைப் போடவேண்டும். அது நல்லமுறையில் செயல்பட அரசாங்கம் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அந்தப் பகுதியில் கைவினைப் பொருள்கள் குடிசைத் தொழில்களாக விளங்கி வருகின்றன. அவர்களுக்கு போதுமான நிதி உதவி செய்வது அவசியமாக இருக்கிறது.

குறிப்பாக நான் தொழில் அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை கொடுத்து இருக்கிறேன். வந்தவாசியிலே பாய் சங்கம் ஒன்று இருக்கிறது. இரண்டாயிரம் குடும்பங்கள் அந்தத் தொழில் மூலம் பிழைக்கின்றன, ஐயாயிரம் தொழிலாளர்களுக்கு நெசவுத் தொழில்மூலம் பயன்கிடைக்கிறது. அதற்கு ஒரு மத்திய சங்கம் என்று இருந்தாலும்கூட பொருளாதாரம் அதிகமாகக் கிடையாது, 40 ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஆகவே இரண்டு லட்சம் ரூபாய் வட்டியில்லாத கடனாக அதற்குக் கொடுக்க முன்வரவேண்டும், அப்படிக் கொடுத்தால்தான் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அது பயன்படும்.

இன்று இந்த நாட்டினுடைய பொருளாதாரத்திலே நாட்டு மக்களுக்குப் பயன்படுகின்ற முக்கியமான தொழில்களுள் தோல் பதனிடும் தொழில் ஒன்றாக இருக்கிறது, அந்தத் தொழிலைப்பற்றிச் சொல்லாவிட்டால் இந்த மானியம் பூரணத் தன்மை பெறாது.

அரை அளவிற்குப் பதனிடப்படுகிற தோலையெல்லாம் வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய முறையிலே நீண்டகாலத் தவணை கேட்டு இந்த மாமன்றத்திலே தீர்மானத்தைப் போட்டிருக்கிறோம். அந்தத் தீர்மானத்தைப் போடுவது, இந்த அரசு எந்த அளவிலே அந்தத் தொழிலிலே நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. மத்திய அரசினிடத்திலே இன்னும் கடுமையாக எடுத்துச்சொல்லி ஆக்கப்பூர்வமான ஏற்பாடுகளைச் செய்தால்தான் நம் நாட்டிற்கு அதிகமான வெளிநாட்டுப் பணம் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களும் தொழில் அமைச்சர் அவர்களும் முயற்சி செய்து வருகிறார்கள் என்றாலும் இன்னும் நல்லமுறையிலே அவர்கள் செயல்பட்டு ஆக்கப்பூர்வமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். முஸ்லீம்களுக்கு நீதித்துறையிலே பங்குகொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவர்களை அவர்களுடைய தகுதி, திறமை இவற்றின் அடிப்படையிலே பணியிலே அமர்த்துங்கள், திறமையில்லாதவர்களை அவர்கள் மைனாரிட்டியாக இருந்தாலும் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை, மைனாரிட்டியிலிருந்து



திறமை மிக்கவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையிலேதான் வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைபற்றி பேச நேரம் இல்லை. வந்தவாசி, செய்யாறு பகுதிகளிலே விவசாயிகள் அதிகமான கரும்பை விளைவிக்கிறார்கள். அந்தப் பகுதிக்கு சர்க்கரை ஆலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைக் கடிகாரங்கள் வெளிநாட்டிலிருந்துதான் வாங்கப்படுகின்றன. கைக் கடிகார தொழிற்சாலை பெங்களூரிலே இருப்பதைப் போல் ஒரு கைக் கடிகாரத் தொழிற்சாலையை ஜப்பானிய அல்லது சுவிட்சர்லாந்து கூட்டு முயற்சியோடு நம் மாநிலத்தில் நிறுவுவதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாவட்டந்தோறும் கருத்தரங்குகளை நடத்த வேண்டும், அப்படி நடத்துவதற்கு அரசாங்கம் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. வே. நாராயணசாமி:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் அவர்கள் கோரியுள்ள மானியங்களை வரவேற்றும் ஆதரித்தும் என்னுடைய, கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்திலே தொழில்கள் மிகச் சிறப்பான முறையிலே வளர்க்கப்பட வேண்டும் அதுவும் சரியான முறையிலே திட்டமிடப்பட்டு வளரவேண்டும் என்ற முறையிலே நம்முடைய தமிழக அரசு குறிப்பாக தொழில் துறை அமைச்சர் அவர்கள்—மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் எந்த அளவுக்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையும் அந்த முயற்சிகளுக்கு எந்த அளவிற்கு மகத்தான வெற்றிகள் கிடைத்துக்கொண்டு வருகின்றன என்பதையும் நாம் காண்கிறோம். இந்தப் பேருண்மையை இந்த மாமன்றமும் தமிழகத்து மக்களும் மிக நன்றாக அறிவார்கள்.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1974 மார்ச் 27

அவர்களுடைய நல்ல முயற்சி, மத்திய அரசினுடைய தொழில் கொள்கை, லைசென்ஸ் வழங்குவதிலே உள்ள தடைகள் எத்தகையதாக இருந்தாலும்கூட அவற்றையெல்லாம் எதிர்த்து வாதாடி நியாயத்தைப் பெறக்கூடிய அளவிற்கு மிகச் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதையும் அந்த நல்ல முயற்சிகளுக்கு ஊக்கம் தருகின்ற முறையிலே நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பணிகள் பலவற்றையும் திட்டங்கள் பலவற்றையும் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதையும் நாம் எல்லாம் மனதாரப் பாராட்டித் தான் ஆகவேண்டும்.

அப்படிப் பாராட்டுவது அவர்கள் இன்னும் எதிர்காலத்தில் ஏராளமான தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு வாய்ப்பாக அமையும். ஆனால், என்ன காரணத்தினாலேயோ இங்கே கூட எதிர்க் கட்சிகளின் சார்பிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய எட்மண்ட் அவர்கள் எதையெதையோ சொன்னார்கள். இதற்கு ஒரு பாராட்டு உண்டா என்பதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

நம்முடைய தமிழக அரசு சிறு தொழில்களை எந்த அளவிற்கு நடத்திவருகிறது, துவக்கிவருகிறது என்பதைப் பார்த்த ஒவ்வொருவரும் பாராட்ட வேண்டும், அப்படி ஒரு பாராட்டு கூறுவதால் எதுவும் போய்விடாது.

அப்படிப்பாராட்டாமல் அவர்கள் மற்றமற்ற மிகச் சிறிய பிரச்னைகளையெல்லாம் பெரிய பிரச்னையாக்கி இந்த மன்றத்திலே பெரிதுபடுத்திப் பேசுவதைப்பற்றி உள்ளபடியே நான் வருந்துகிறேன்.

டிட்கோ, அதனுடைய தொழிற்சாலைகள் படிப்படியாக அரக்கோணத்திலே ஆரம்பிக்கப்பட்டு பல பெரிய தொழிற்சாலைகளை தீவிரமாக நடத்திக்கொண்டு வருகிறோம். சிறு தொழில்களுக்கென ஒரு டான்ஸி வேகம் வேகமாக இயங்கிவருகிறது.

சிட்கோ, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட சிப்காட் மிகச் சிறப்பான முறையிலே இயங்கிவருகிறது.



1974 மார்ச் 27] [திரு. மா. வே. நாராயணசாமி]

குறுகிய காலத்திலே இராணிப்பேட்டையிலே மிகப் பெரிய அளவிற்கு இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் தொடங்கப்பெற்று நல்ல முறையிலே வளர்கிறது. சென்னையிலிருந்து 70 மைல் தொலைவில் உள்ள இராணிப்பேட்டையிலே ஒரு பெரிய இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸ் அமையப் பெற்றிருப்பதால் சென்னை மாநகரத்தைச் சுற்றி தொழில் துவங்க விரும்புகிறவர்கள் அங்கே சென்று தொடங்க வாய்ப்பு இருக்கிறது.

அது மட்டுமல்ல, சென்னை-பெங்களூர் சாலை இருக்கிற பக்கம் அது இருப்பது இன்னும் அதிகமான வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. இப்படிப் பல்வேறு துறைகளிலே நம்முடைய அரசு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

மத்திய அரசு தமிழகத்திலே பெரிய பெரிய தொழில்களைத் தொடங்குவது என்பது அற்றுப்போய்விட்டது என்பதை நடைமுறையிலே காண்கிறோம். பெரிய தொழில்கள் இங்கு உருவாவதில்லை, மத்திய அரசின் சார்பிலே. அதைப்பற்றி நம்முடைய அரசு மேலும் வற்புறுத்தி, பெரிய தொழில்களை இங்கே துவக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

பெரிய தொழில்களுக்கு வாய்ப்புக் கிடைக்கின்ற நேரத்தில் அந்தத் தொழிற்சாலைகளிலே அதிகமான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் வேலை பெறக்கூடிய "ஹைலி லேபர் ஓரியண்டட் இண்டஸ்ட்ரியாக" அமைக்கப்பட வேண்டும். இந்த மாமன்றத்திலே அதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன்.

நாற்பது கோடி, ஐம்பது கோடி மூலதனம் போட்டு துவக்கப் படுகிற தொழிற்சாலையில் 400 பேர்களை வேலைக்கு அமர்த்துவது என்றால் நிச்சயமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அது பயன்படாது.

ஆனால் நம்முடைய அரசு தொழில்கள் துவங்கப்பட்டால் அவற்றிலே நிரம்ப வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய முறையிலே கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1974 மார்ச் 27

என்னுடைய திருவொற்றியூர் தொகுதியிலே நிரம்பத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே எம்.ஆர்.ஐ. ரிபைனரிஸ் தொடங்கப்பெற்றது.

அங்கிருந்து ஆஸ்பால்ட்டை கொண்டுபோவதற்கு டிரம்கள் தயாரிப்பதற்காக, தார் டிரம்களைத் தயாரிப்பதற்காக அரசின் உதவியோடு ஒரு தொழிற்சாலை சிறு தொழிற்சாலை என்ற பெயரில் தொடங்கப்பட்டது. "பங்கஜா அயர்ன் ஸ்டீல் ஒர்க்ஸ்" என்ற பெயரில் தொடங்கப்பட்டது. அங்கே ஏறத்தாழ 300 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

என்னென்ன இவற்றையெல்லாம் தயாரிக்கக்கூடிய இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆஸ்பால்ட் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அதைக்கொண்டு போவதற்காக அவர்களே இப்பொழுது ஒரு டிரம் ப்ளாண்ட் ஆரம்பித்து இருக்கிறார்கள். நமது அரசின் ஆலோசனையைப் பெற்று சிறு தொழிலாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிற இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற 300 தொழிலாளர்கள் இதனால் பாதிக்கப்படக்கூடிய, வேலை இழக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(The gong was sounded)

I am representing industrial area; I must get more time.

ஆகவே, அந்தத் தொழிலாளர்களெல்லாம் இன்றைக்கு வேலை வாய்ப்பு இழக்கக் கூடிய நிலையிருக்கிறது. இன்றைக்கு ஐ.ஓ.சி. ப்ளாண்ட்டுக்கு மட்டும் ஆர்டர் தருகிறார்கள். இந்த தொழிற்சாலைகளுக்குத் தரமறுக்கிறார்கள். இதை மாற்ற வேண்டும்.

அடுத்து, எங்களுடைய திருவொற்றியூர், எண்ணூர், மணலிப் பகுதிகளில் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு தொழில்கள் பெருகியிருந்தாலும், அந்தப் பகுதிகளில் வாழ்கிற, கிட்டத்தட்ட 1½ லட்சம் மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிகளிலே "ஹையஸ்ட் ஏர் பொல்யூஷன்" காரணமாக மக்கள் சாப்பிடக் கூட முடியாமல் அவதிப்படுகிறார்கள்.

இ.ஐ.டி. பாரி போன்ற ஃபாக்டரிகளிலிருந்து வருகிற ரசாயன கலவை நிறைந்த புகையினால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே இதையெல்லாம் போக்க செலவுகள் ஆனால், இந்த அரசு சம்பந்தப்பட்ட தொழிலதிபர்களை



1974 மார்ச் 27] [திரு. மா. வே. நாராயணசாமி]

கலந்து, அவர்களை இதற்கு மாற்றுத் திட்டங்களைப் போட்டு செயல்படுத்த செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணலியில் உரத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர் ரசாயன கலவை நிறைந்திருப்பதால் கால்நடைகள் அந்த நீரைக் குடித்து இறந்து விடுகின்றன. இதைப் பற்றி இந்த அரசிற்கும், கலெக்டர் அவர்களுக்கும் சொல்லியிருக்கிறோம். ஆகவே, இதை உடனடியாக இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விம்கோ என்ற ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை எங்களின் திருவொற்றியூர் பகுதியில் இருக்கிறது. இது ஸ்வீடிஷ்காரர்களால் தொடங்கப்பட்டது. இப்படி அந்நியநாட்டுக்காரர்களால் தொடங்கப்பட்ட ஒரு தீப்பெட்டி நிறுவனம் இன்றும் அவர்களே நடத்த வேண்டுமா என்பது கேள்வி. நம்முடைய அரசு சோஷலிச கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள ஒரு அரசு. ஆகவே, இந்த அரசு அந்த ஃபாக்டரியை எடுத்து நடத்தவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் திருவொற்றியூரில் உள்ள சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு தற்போது வாடகைக் கட்டிடத்தில் இருந்துவருகிறது. ஆகவே, அதற்கு ஒரு நிரந்தரமான கட்டிடம் கட்டிக்கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிக் கோரிக்கையை நான் முழுமனதோடு வரவேற்றுப் பாராட்டி என்னுடைய ஒருசில கருத்துக்களை சொல்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம், பிற்படுத்தப்பட்ட மாவட்டம். இங்கே நம்முடைய நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது பஞ்சாப் டெல்லிக்கு பக்கத்திலிருக்கிற காரணத்தால் அங்கே தொழில் வளம் பெருகியிருக்கிறது என்று சொன்னார்கள். அதே போல் தமிழ்நாட்டில் சென்னைக்கு பக்கத்திலுள்ள பல இடங்களில் தொழில் வளம் பெருகியிருக்கிறது ; இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் தொழில் வளம் இல்லை என்றும் சொன்னார்கள். அவர்கள் உண்மையைச் சொல்லியிருக்

[திரு. த. சோனையா] [1974 மார்ச் 27

கிருர்கள். நூற்றுக்கு நூறு உண்மை அது. உண்மையிலே, அவர்கள் மட்டுமல்ல, இந்தச் சட்ட மன்றத்திலே அமர்ந்திருக்கிற யாரைக் கேட்டாலும் இராமனுதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம், தொழில்துறையில் மிகவும் மெலிந்திருக்கிற மாவட்டம் என்பதை அத்தனைபேர்களும் ஒத்துக்கொள்வார்கள்.

இன்னும் சொல்ல வேண்டுமானுல், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இராமனுதபுரம் மாவட்டம் எப்படி இருக்கிறதென்பதை அந்த மாவட்ட அமைச்சரைச் சுட்டிக் காட்டி அடிக்கடி சொல்வார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மாவட்டத்திலே இருந்து வந்திருக்கிற நான் இந்த மாமன்றத்தின் மூலம் அந்த மாவட்டத்திற்கு அதிகமான தொழில்களைக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இராணிப்பேட்டையில் 70 கோடி ரூபாய் அளவில் தொழில் நடைபெறுகிறதென்று சொன்னுர்கள். உள்ளபடியே அது பாராட்ட வேண்டிய ஒன்ருகும். இராணிப்பேட்டைக்கே 70 கோடி ரூபாய் என்று சொன்னுல் சென்னையிலிருந்து 300 மைல்களுக்கு அப்பாலிருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்திலே குறைந்தது ஆண்டு ஒன்றிக்கு 100 கோடி ரூபாய் மூலதனமுள்ள தொழில்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி வந்தால் மற்ற மாவட்டங்களோடு நாங்கள் சரிசமமாக இருக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமென்பதால் அங்கே 100 கோடிக்கு மேலே தொழில்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே வாலிநோக்கத்தில் ஒரு உப்பு சம்பந்தமான தொழிற் சாலை துவங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். எங்களுக்கு இதுவரை கிடைத்த தெல்லாம் உப்புத் தொழிற்சாலை தான். இன்னும் கிடைக்க வேண்டிய தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன.

ஆகவே, கிழக்கு இராமனுதபுரம் பகுதியில் நல்லமுறையில் நல்ல தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. த. சோனையா]

கிழக்கு இராமனுதபுரம் மாவட்டப் பகுதியில் கடல் வளம் நிறைந்திருக்கிறது. அங்கே இயந்திரப் படகுகள் உபயோகிக்கப் படுகின்றன. சென்னையிலே உள்ள படகுகளும், கேரளாவிலே உள்ள படகுகளும், பம்பாய் படகுகளெல்லாம் கூட அந்த மண்டபம் பகுதிக்கு வந்து மீனை எடுத்துச்செல்கின்றன. அப்படி வருகிற படகுகளுக்கு ஒரு சிறு ரிப்பேர் ஏற்பட்டாலும் கூட ஒரு போட்டுக்கு வாஷர் நட்டு இல்லாவிட்டாலும் கூட அதற்காக வேண்டி மதுரைக்கோ, சென்னைக்கோ வரவேண்டியிருக்கிறது. அதனுல் தொழில் பாதிக்கப்படுகிறது.

அங்கே மண்டபத்தைச் சுற்றிலும் நிறையபடகுகள் இருப் பதால் அந்தப் படகுகளைக் கட்டுவது, அதிலே உள்ள ரிப்பேர்களை சரிசெய்வது, இது சம்பந்தமாக ஒரு தொழிற்சாலையை அங்கே உருவாக்க வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இராமனுதபுரம் மாவட்டம், மானுமதுரைப் பகுதிகளில் சிறு சிறு செங்கல் சூளைகள் நிறைய இருக்கின்றன. அவையெல்லாம் கையால் செய்யப்படுகின்றன. முன்பு இந்தத் தொழிலுக்கு அரசாங்கம் கடன் கொடுத்து வந்ததாகவும், இப்போது கொடுக்கப் படவில்லை என்று குற்றச்சாட்டும் சொல்லப்படுகிறது. ஆகவே, கையால் செங்கல் செய்வதற்கு கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அங்கே உள்ள மண்ணைக் கரைத்தால் அது சந்தனம் போலிருக்கிறது. அதில் செய்கிற செங்கல் மிக உறுதி யாக இருக்கிறது. ஆகவே, அங்கே அரசு ஒரு இயந்திர செங்கல் சூளை அமைத்தால் அதில் உற்பத்தி செய்கிற செங்கல்களை அரசு பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே, ஒரு இயந்திர செங்கல் சூளை அமைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மானுமதுரை சிவகெங்கைப் பகுதியில் சுண்ணும்புக்கல் அதிக மாகக் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை அங்கே அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்புவனம், திருப்பாச்சேத்திற்கு இடையில் ஒரு கூட்டுறவு நூற்பு மில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. சோனையா] [1974 மார்ச் 27

திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சுற்றிலும் 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கரும்பு விவசாயம் செய்கிறார்கள். இந்த கரும்பை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச்சென்று சர்க்கரை ஆலைக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் விளைகிற கரும்பை, அங்கேயே ஒரு சர்க்கரை ஆலை தொடங்கி, சர்க்கரை ஆக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மானாமதுரை தொகுதியில் ஒரு தொழில்பேட்டை ஏற்பட வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். ஆகவே, இந்த முக்கியமான பிரச்சினையை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக திருப்புவனத்தில் ஒரு முன்சீப் கோர்ட்டும், சப்-மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டும் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பட்டது.)

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தைப் பொறுத்த அளவிலே தொழில் வளர்ச்சியிலே நமக்கு ஒரு நல்ல பெருமையைத் தேடித் தரக்கூடிய அளவிலே இருக்கக்கூடிய தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நான்கு மானியங்களிலே மூன்று மானியங்களை ஆதரித்தும், ஒரு மானியத்தைப் பொறுத்தவரையில் எதிர்த்தும் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

தொழில்துறை, நீதி நிர்வாகம், ஜெயில் ஆகியவற்றை ஆதரிக்கிறேன். கைத்தறி தொழில் துறையைப் பொறுத்தவரையில் அந்த மானியத்தை எதிர்த்துப் பேச வேண்டியவனாக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

காரணம் என்னவென்றால், நான் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மத்தியில் பிறந்து வாழ்பவன். ஆனால் அங்கே இப்பொழுது உள்ள நிலையில் எந்த அளவிற்கு நிர்ப்பந்தத்திலே



1974 மார்ச் 27] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

இருக்கிறது என்பதைச் சொல்லி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கு எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அங்கேயுள்ள நிலைமைகளைப்பற்றி நான் சொல்ல வேண்டிய தேவையில்லை. அங்கேயுள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் எல்லாம் நல்ல வருவாய் கிடைக்கும் என்ற நிலையிலே இல்லாதவர்கள். சில மாதங்களுக்கு முன்னால் நூல் விலை கூடியது. செயற்கைப் பட்டின் விலையும் கூடியது. அதனால் செயற்கைப் பட்டை நம்பியிருக்கும் நெசவுத் தொழிலாளர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

இப்பொழுது கொஞ்சம் நூல் விலை சமாளிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டு நூல் தறிகளெல்லாம் இப்பொழுது ஓரளவிற்கு வேலை செய்கின்றன. ஆனால் செயற்கைப் பட்டை நம்பியிருக்கும், செயற்கைப் பட்டுத் தறிகளை மட்டும் வைத்துக்கொண்டிருக்கும் நெசவுத் தொழிலாளர்களின் நிலையைப் பார்த்தால் அவர்கள் இன்றைக்குப் பட்டினியையும் பஞ்சத்தையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் என்னுடைய தொகுதிக்குச் செல்லும் நேரத்திலெல்லாம் சந்தோஷமாகப் பார்த்துச் செல்லும் நான், அங்கே நெசவுத் தொழிலாளர்களின் கண்ணில் எங்கே பட்டுவிடுவோமோ என்று குனிந்து செல்கின்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் நெஞ்சத்திலேயும், கண்களிலேயும் காணுகின்ற பரிதாபம் இருக்கிறதே அதை நான் எப்படித் தாங்கிக்கொள்வேன் என்று எனக்குத் தெரியவில்லை.

நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அரசு இரண்டு கொள்கைகளைத் தெரிவித்திருக்கிறது. ஒன்று, கூட்டுறவுத் துறைக்கு அப்பால் உள்ள நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறைக்குத் கொண்டு வர வேண்டுமென்பது. மற்றொன்று, நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இந்தக் கைத்தறித் தொழிலை மட்டும் நம்பியிருக்கக் கூடாது. அவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுக்க வேண்டுமென்பது. இந்த இரண்டு கொள்கைகளுக்கேற்ப அரசு என்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்க்க விரும்புகிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1974 மார்ச் 27

குடிசையிலேயிருக்கும், குடிசையிலே வாழும் மக்களுக்கெல்லாம் மாடி விடு கட்டித் தரவேண்டும், அவர்கள் மாடியிலே வாழ வேண்டும் என்று சொன்ன நமது அரசு அப்படிச் சொன்னதற்கேற்ப குடிசைமாற்று வாரியத்தை அமைத்து மாடி விடுகளைக் கட்டிக்கொடுக்கிறார்கள்.

ஆனால், நெசவாளர்கள் இந்தத் தொழிலேயே நம்பியிருக்க வேண்டாம், வேறு மாற்றுத் தொழிலுக்குப் போங்கள் என்று சொல்லும் நமது அரசு அந்தக் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வேறு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு என்ன காரியங்களைச் செய்திருக்கிறது? இப்படிக் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேறு தொழிலைச் செய்யும் வகையில் ஒரு வாரியம் அமைக்க வேண்டாமா? கைத்தறித் தொழில் நெசவாளர்கள் மாற்று வாரியம் என்று அமைத்து அதன் மூலமாக அவர்கள் வேறுத் தொழிலுக்குப் போவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா?

இதிலே குறிப்பாக நம்முடைய அரசின் கொள்கைக்கேற்ப கூட்டுறவுத் துறைக்கு அப்பால் உள்ள எல்லா கைத்தறி நெசவாளர்களையும் இந்தக் கூட்டுறவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறோம். அதற்காக நிதி ஒதுக்கீடெல்லாம் செய்கிறோம். ஆனால் செயற்கைப் பட்டுத் தொழிலை நம்பியிருக்கக் கூடிய நெசவாளர்களுக்கு மாஸ்டர் வீவர்ஸ் இனிமேல் வேலை கொடுக்க மாட்டார்கள். ஏனென்றால், திடீர் திடீரென்று இந்த செயற்கைப் பட்டின் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. அதனால் மாஸ்டர் வீவர்கள் வேலை கொடுக்க முடியாத நிலை இருக்கிறது.

எனவே, இனிமேல் அவர்கள் கூட்டுறவுத் துறையின் மூலமாகத்தான் தங்களுக்கு வாழ்வு என்று அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறைக்கு அப்பாலுள்ள நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறைக்கு நாம் கொண்டுவர வேண்டுமென்றால், அதற்காக இந்த மானியத்திலே, இந்த 1974-75 ஆம் வருஷத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது என்றால் 6,000 தறிகள் உள்ள இடத்திலே வெறும் 6 இலட்சம் ரூபாய் மட்டும் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு நாம் எவ்வளவு தொகை ஒதுக்கினோம் என்றால் 6.5 இலட்சம் ரூபாய், அதற்கு முன் ஆண்டில் 6.5 இலட்சம் ரூபாய்.



1974 மார்ச் 27] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

ஆனால், இதற்கு முன்னால் இவ்வளவு பெரிய இக்கட்டான நிலைமை இல்லை. இப்பொழுது நல்ல அருமையான சந்தர்ப்பம். இப்பொழுது இந்தக் கூட்டுறவுத் துறைக்கு அப்பால் உள்ள நெசவாளர்களை சிக்கிரம் சேருங்கள் என்று சொல்லும் நிலையிலே நாம் குறைத்து ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் இத்தகைய ஒரு எண்ணம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மத்தியிலே ஏற்படாத சூழ்நிலை இருந்த நேரத்தில் ஒதுக்கியதைவிட இப்பொழுது குறைவாக ஒதுக்கியிருக்கிறோம். ஏன் இந்த நிலை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது அவர்களெல்லாம், கூட்டுறவுத் துறைக்கு அப்பாலுள்ள நெசவாளர்களெல்லாம் நாங்கள் கூட்டுறவுத் துறைக்கு வந்துவிடுகிறோம் என்று சொல்லும் நிலையிலே எவ்வளவு பணம் அதற்காக அதிகமாக ஒதுக்க வேண்டுமோ அந்தப் பணத்தை ஒதுக்கியிருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை இழக்க வேண்டாம்.

என்னுடைய தொகுதியைப்பற்றி நான் சொல்கிறேன். மற்றவர்களைப்பற்றி ஆங்காங்குள்ள அங்கத்தினர்கள் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். என்னுடைய பகுதியில் நிச்சயமாக இன்னும் ஓரிரு மாதங்களுக்குமேல் தாங்க முடியாது செயற்கைப் பட்டு நெசவாளர்கள் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாத நிலை. ஒன்று, கைத்தறி நெசவாளர்கள் எல்லோரையும் கூட்டுறவுத் துறையிலே சேருங்கள். என்னுடைய ஊரிலே, 13,000 தறிகள் இருந்தால் அதில் 1,000 தறிகள் கூட்டுறவுத் துறையிலே இருக்கும். மீதியுள்ள 12,000 தறிகள் நிலைமை என்ன? அருப்புக்கோட்டையிலே மட்டும், இந்த 12,000 தறிகளையும் சேர்க்க வேண்டுமென்றால் இந்த 6 இலட்சம் ரூபாய்மட்டும் போதாது. இன்னுமொரு 6 இலட்சம் ரூபாய் வேண்டும். அப்படியிருக்க தமிழகம் பூராவும் சேர்த்து 6 இலட்சம் ரூபாய் என்று சொன்னால் எப்படி முடியும்?

கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட 1 கோடி ரூபாய் கடனை வஜா செய்தோம். அப்படி வஜா செய்ததைவிட இன்னும் 1 கோடியோ, 2 கோடியோ கூட்டுறவுத் துறைக்கு

அப்பாலுள்ள கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறைக்குக் கொண்டுவர ஏன் ஒதுக்கக்கூடாது, ஏன் அப்படி அரசாங்கம் ஒதுக்கி 20 இலட்சம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கக்கூடாது? ஏன் இந்த அரிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் இழந்துவிட வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

இதைப்போன்ற அரிய சந்தர்ப்பம் நிச்சயமாக மறுபடி கிடைக்காது. எனவே, இந்த நிலையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மற்ற ஊர்களிலே இந்தக் கூட்டுறவுத் துறையில் சேர்வதற்கு ஆசைப்படுகிறார்களோ என்னவோ அது எனக்குத் தெரியாது, அதைப்பற்றி அந்தந்த ஊரைச் சேர்ந்தவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் என்னுடைய ஊராகிய அருப்புக் கோட்டையைப் பொறுத்தவரையில், அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், அவர்கள் எல்லோரையும் கூட்டுறவுத் துறையிலே சேர்க்க வேண்டும், அதற்காக இந்த ஆறு இலட்சம் ரூபாயை ஒதுக்கிக்கொள்ளலாம் அல்லது வேறு துறையிலேயிருந்து ஒதுக்கலாம்.

விசைத்தறிகளுக்கு 1,700 ரூபாய் 1,000 என்று கடனுகக் கொடுப்பதாக இருக்கிறது. ஆனால் கைத்தறி நெசவாளர்களுக்கு 100 ரூபாய் கூடக் கொடுக்க முடியாத நிலையில் இந்த விசைத் தறிகளுக்கு இவ்வளவு பணத்தை ஒதுக்க வேண்டுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஏப்ரல் மாதத்திலேயோ அல்லது இன்னும் ஒன்றிரண்டு மாதங்களுக்குள்ளேயோ அருப்புக்கோட்டையிலேயுள்ள எல்லா கைத்தறி நெசவுத் தொழிலாளர்களையும், கூட்டுறவுத் துறைக்கு அப்பாலுள்ள எல்லா நெசவுத் தொழிலாளர்களையும் இந்தக் கூட்டுறவுத் துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பண வசதிகளைச் செய்துகொண்டு அவர்களை ரிஜிஸ்தர் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் என்னுடைய தொகுதியிலே பெரிய இக்கட்டான நிலையை எனக்கு ஏற்படுத்தி விடுவீர்கள். இனிமேல் நான் அந்த ஊருக்கே போக முடியாது. இல்லாவிட்டால் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், என்னைக் கொண்டுபோய் ஜெயிலில் வைத்து விடுங்கள். இந்த நிலையில்





நான் ஊருக்குப் போக விரும்பவில்லை. நான் இதை பேச்சுக்காகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட நிலைமை அங்கே இருக்கிறது. அவர்களைப் போய்ப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இந்த நிலையில் இல்லை. கூட்டுறவுத் துறையிலே அவர்களைச் சேர்த்துவிட்டால். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** போராட்டம் என்று தூண்டிவிடுகிறார்கள், பக்கத்தில் அதற்காகவே இருக்கிறார்கள். அவர்கள் இவ்வளவு வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை. இரண்டு, மூன்று சொசைட்டிகள் எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் கேட்டுள்ள சொசைட்டிகள் முழுவதும் ரிஜிஸ்தர் செய்யப்படும்.

இருக்கின்ற பிரச்னை என்னவென்றால், நான்-கோவாப்பரேட்டிவ் செக்டாராக இருப்பதால், கோவாப்பரேட்டிவ் செக்டாராக எடுத்து முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதா, இல்லையென்றால் சர்விஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி என்று எடுத்து நூலை மட்டும், மூலப்பொருட்களை மட்டும் வழங்கும் பொறுப்பை எடுக்கலாமா என்பது பிரச்னை.

சர்விஸ்-கோவாப்பரேட்டிவ் என்று ஒத்துக்கொண்டால் இந்த ஆண்டே எல்லா கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளையும் அப்படி ஆக்கிவிடலாம்.

நாமே முழுப்பணத்தையும் போட்டு எடுப்பது என்றால் கஷ்டம், அதற்கு 6 இலட்சம் போதாது என்று சொல்லி வேறு வகையிலேயிருந்து திருப்பி முழுக்க முழுக்க கொடுக்கும் முயற்சியை எடுத்திருக்கிறோம்.

அருப்புக்கோட்டையில் யார் யார், எந்தெந்த சொசைட்டிகள் கேட்டிருக்கிறார்களோ அத்தனையும் தரப்படும்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலைவரவர்களே, அமைச்சரவர்களுக்குத் தெரியும். நூறு ரூபாய் நாம் அவர்களுக்குக் கடனுகக்கொடுத்தும் அவர்களால் திருப்பிக் கட்ட முடியாத அளவில் அதை வஜா செய்தோம். அந்த நிலையில் அவர்களால் நூறு ரூபாய் எப்படிக் கொடுக்க முடியும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நூறு ரூபாய் கொடுக்காமல் அதைப் பதிவு செய்யப்படும் என்றுதான் சொன்னேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** அமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டபிறகு, சிறைச்சாலைக்குப் போவது, ஜெயிலுக்குப் போவது என்பதை மறந்துவிட்டு, நாட்டிலே அப்படிப்பட்ட ஒரு நிலைமை வரவில்லை என்று அவர்களே சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** அமைச்சரவர்கள் நிச்சயமாகச் செய்கிறோம் என்று சொன்னார்கள், அது நிறைவேற்றப்படும் என்று நான் நினைக்கிறேன். அதற்கான ஒரு காலகட்டம் வரையில் காத்திருக்கிறேன். ஏனென்றால் அங்குள்ள கஷ்டத்தைச் சொல்கிறேன். மற்றவர்கள் சொல்கிறார்களே என்பதற்காகச் சொல்லவில்லை. வேறு ஏதாவது பேச்சைக் கேட்கும் ஆள் நான் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும், இந்த அவைக்கும் தெரியும். எனக்கு இவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதற்காகத் தான் சொன்னேன். நிச்சயமாக அமைச்சரவர்கள் வாக்குறுதி தந்திருப்பதால் இந்த மானியத்தை ஆதரித்து முடிக்கிறேன்.

* **திரு. மா. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கைத்தறியைப் பொறுத்த மானியத்தை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மன்ற உறுப்பினர் மாண்புமிகு சௌடி சுந்தரபாரதி அவர்கள் ஆரம்பத்திலே இந்தக் கைத்தறித் துறை மானியத்தை எதிர்த்து தன்னுடைய கருத்துக்களைச் சொல்வதாகச் சொல்லி இறுதியில் ஆதரித்து அமர்ந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் கைத்தறித் துறையைப் பொறுத்தவரை இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத





அளவுக்கு இந்த மாநிலத்தில் இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்காக இந்த அரசு எடுத்துக் கொண்ட பெரு முயற்சிகளை கடந்த காலத்தில் நூல் பற்றாக்குறையினால் ஏற்பட்ட கஷ்டங்களைச் சமாளித்ததில் இருந்து நாட்டு மக்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பாக அமைந்தது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் எல்லாத் தறிகளையும் கூட்டுறவின்கீழ் கொண்டுவர வேண்டுமென்ற கருத்து இருந்தாலும்கூட அப்படி எல்லாக் கைத்தறிகளையும் கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவந்து விடுவதாலேயே இந்த அரசு எல்லா நெசவாளர்களுக்கும் முழுமையாக உதவிட முடியுமா என்று பார்க்கிற நேரத்தில் அந்த அளவுக்கு இந்த அரசின் கரத்தில் அதிகாரம் இல்லாததை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நெசவாளர்களுக்கு மூலப்பொருள்களான நூலும் சாயப் பொருள்களும் அத்தியாவசியமாக இருக்கின்றன. இந்த இரண்டு பொருள்களின் விநியோக அதிகாரம் இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. தமிழகத்தில் 200-க்கு மேற்பட்ட நூற்பாலைகள் இருக்கின்றன.

ஆனால், இந்த நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சு எங்கே இருந்து கிடைக்கிறது என்று சொன்னால் வட மாநிலங்களில் இருந்துதான் அதிகமாகக் கிடைக்கிறது. அகில இந்திய அளவில் காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி அதன்மூலம் மில்களுக்குத் தேவையான பஞ்சு தருவதற்காக இந்திய அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆனால் காட்டன் கார்ப்பரேஷனின் நடைமுறை என்பது இதுவரை யாரும் தெரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. அந்தக் கார்ப்பரேஷனுக்கு அட்வைசரி கமிட்டி என்ற ஒன்று இருக்கிறது. அந்த அட்வைசரி கமிட்டியில் 200-க்கு மேற்பட்ட நூற்பாலைகளை வைத்திருக்கும் தமிழகத்தின் பிரதிநிதியாக யாருமே இல்லை என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகிற நேரத்தில் உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை நீங்கள் சரியாகச் செயல்படுத்துகிறீர்களா என்றெல்லாம் குறிப்பிடுவார்கள். அது மட்டுமல்ல. இங்கே குழுக்களைப் போடுகின்ற நேரத்தில் யார் யாரைப் போட்டிருக்கிறீர்கள் என்றெல்லாம் கேட்பார்கள்.

[திரு. மா. சுப்பிரமணியன்] [1974 மார்ச் 27

இன்றைக்கு 200-க்கு மேற்பட்ட நூற்பாலைகளைக் கொண்டிருக்கும் தமிழகத்தின் பிரதிநிதி காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவில் ஒருவர் கூட இல்லை என்பதை அவர்கள் அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் பிரதிநிதி இல்லாத காரணத்தால் பஞ்சின் விலையை நிர்ணயிக்கின்ற நேரத்திலும், பஞ்சு விநியோகம் மில்களுக்குக் கிடைக்கின்ற நேரத்திலும் மிகுந்த இடர்பாடுகள் ஏற்படுகின்றன என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதனால்தான் பஞ்சின் விலை ஏற ஏற நூலின் விலையும் ஏறவேண்டியிருக்கிறது.

இன்றைய தினம் ஒரு மாத காலத்திற்குள்ளாக பஞ்சின் விலை ஏற்றத்தால் நூலின் விலை ஏறியிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு பேலுக்கு 400 ரூபாய் 500 ரூபாய் என்ற அளவுக்குப் பஞ்சின் விலை ஏறியிருக்கிறது. கட்டு ஒன்றுக்கு நூலின் விலை 12 ரூபாயிலிருந்து 45 ரூபாய்க்கு ஏறியிருக்கிறது என்பதை யாரும் மறுத்திட முடியாது.

இந்த அளவுக்கு விலையேற்றத்தை அனுமதித்து விட்டு நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் தரவேண்டுமென்று சொன்னால் அந்த அதிகாரம் தமிழகத்தின் கையில் இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்திடல் வேண்டும். பஞ்சு விலையேற்றத்தைத் தடுக்கும் அதிகாரமும் இல்லை. பஞ்சின் விலையை ஏற்றிவிட்டு நூலின் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் இங்கிருக்கும் நூற்பாலைகளை மூடிவிடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நூற்பாலைகளில் நூற்கப்படுகின்ற நூலை வாங்கி விநியோகம் செய்யும் அதிகாரமாவது இந்த அரசாங்கத்திடம் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. பன்னிரண்டு கூட்டுறவு நூற்பாலைகள், 12 டி.என்.டி.சி. மில்கள். இந்த நூற்பாலைகள் தவிர 200-க்கு மேற்பட்ட தனியார் நூற்பாலைகளில் தயாரிக்கப்படும் நூல்கள் அவர்கள் இஷ்டத்திற்கு விற்கப்படுகின்றனவே தவிர அதை நம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு விலையை நிர்ணயிக்கும் அதிகாரமோ, விநியோகிக்கும் அதிகாரமோ இந்த அரசாங்கத் திடம் இல்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.



1974 மார்ச் 27] [திரு. மா. சுப்பிரமணியன்]

இந்த நாட்டில் 5½ லட்சத்திற்கு மேலான கைத்தறிகள் இருக்கின்றன. அவற்றை நம்பி 25 லட்சத்திற்கும் மேலான மக்கள் பிழைக்கிறார்கள், வாழ்கிறார்கள். அத்தனை பேருக்கும் முறையான வாழ்வு தரவேண்டுமென்று சொன்னால் நூல் விநியோகிக்கும் அதிகாரமும், நூலுக்கு விலை நிர்ணயிக்கும் அதிகாரமும் இந்த அரசாங்கத்திடம் இருக்கவேண்டும். அப்போதுதான் கைத்தறி நெசவாளர்களுக்கும் நிச்சயமாக வாழ்வு தரும் நிலைமையை இந்த அரசாங்கம் ஏற்படுத்த முடியும். இல்லையென்றால் அந்த நிலைமை ஏற்படுத்த முடியாது என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் டெக்ஸ்டைல் கமிஷன் அவர்களிடத்திலிருந்து இந்த மாநிலத்திற்கென்று ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்கு ஒதுக்கப்பட்ட நூலின் விவரங்களை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு மாதத்தின் தேவை 100-ம் நம்பர் நூல் மட்டும் 6,000 பேல்கள். ஆனால் மூன்று மாதத்திற்கு நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அளவு 15,000 கிலோ கிராம்கள்தான். 15,000 கிலோ கிராம் என்று சொல்லும்போது ஆயிரக் கணக்கில் சொல்லுவது போல் தோன்றுகிறதே தவிர, அது 75 பேல்களாகத் தான் இருக்கும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

நமக்கு மாதத்திற்குத் தேவை 6,000 பேல்கள்; ஆனால் மூன்று மாதத்திற்கு 75 பேல்கள்தான் டெக்ஸ்டைல் கமிஷனரால் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அது எந்த அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருமதி அனந்தநாயகி அவர்கள், தரப்படுகிற பொருள்களைச் சரியாக விநியோகிக்க வேண்டுமென்று அடிக்கடி சொல்வார்கள். இந்த 75 பேல்களை எந்த அடிப்படையில் யாருக்கு விநியோகிப்பது? இதிலே வேடிக்கை என்னவென்று சொன்னால் சேலம் டெக்ஸ்டைல்ஸ், ஆத்தூர் என்ற மில்லுக்கு, தமிழ்நாட்டின் தேவையில் இந்த ஒரு மில்லுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது 5,63 கிலோ கிராம்தான்—மூன்று மாதங்களுக்கு. ஐந்து பேல்கள் என்ற கணக்கு அல்ல. ஒரு கட்டுக்கு மேலாக இரண்டு பூட்டுகள் வருகின்றன.

[திரு. மா. சுப்பிரமணியன்] [1974 மார்ச் 27

இந்த அடிப்படையில் நூல் விநியோகிக்கப்படுமானால் இந்த நாட்டில் இருக்கும் நெசவாளர்களுக்கு இந்த அரசாங்கம் எப்படி வாழ்வு அளிக்க முடியும்?

அதனால்தான் நாங்கள் அடிக்கடி கூறுவதுபோல் மாநில சுயாட்சி கேட்கிறோம். அப்படிக் கேட்கிற நேரத்தில் எல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் அதைத் தனி நாடு பிரிவினை என்று கருதி விடாமல் இப்படிப்பட்ட காரியங்களுக்காகத்தான் அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம் என்பதை ஏற்றுக் கொண்டு இந்த அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை நல்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, சாயப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதை அறிகிறேன். இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்வது எல்லாம்—ஈரோடு தொகுதி கைத்தறிக்குப் பேர்போன தொகுதி; நிறைய சாயச்சாலைகள் இருக்கின்றன. சாயப் பொருள்கள் அதிகமாக கன்ஸ்யூம் செய்யப்படுகிறது. அந்த சாயத் தொழிற்சாலையை ஈரோடு தொகுதியில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. கே. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தொழிற்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வது—நான் அடிக்கடி இந்த மாமன்றத்தில் எழுந்து பேசாதவன். கோவை மாவட்டத்தில் இருந்து வந்திருக்கிறேன். அது சிறுதொழில்கள் அதிகமாக இருக்கும் பகுதியாகும். அதைப் பற்றிப் பேச சற்று அதிக நேரம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற் துறையை எடுத்துக் கொண்டால் தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் குறிப்பாக கோவை மாவட்டத்தில் வளர்ந்திருக்கின்றன. இதற்கு மூலகாரணம் தமிழக அரசாங்கத்தால் நிறுவப்பட்டிருக்கிற 'சிட்கோ', 'சிப்காட்' ஆகியவை அளிக்கும் ஊக்கமும் ஆக்கமுந்தான் என்று சொல்லக்



1974 மார்ச் 27] [திரு. கே. ரங்கநாதன்]

கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தொழில்கள் வளருவதற்கு இன்றைக்கு ஊக்கம் ஏற்பட்டு வருகிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, சிறு தொழில்கள் வளர மூலப்பொருள்கள் தேவை. அந்த மூலப்பொருள்கள் நம் தமிழகத்தில் உற்பத்தியாவதில்லை. பெரும்பாலும், வட மாநிலங்களில்தான் அவை உற்பத்தியாகின்றன.

பிக் அயர்ன், கோக், பால்பெயரிங் போன்றவைகள் அங்கிருந்து தான் நம் மாநிலத்திற்கு வருகின்றன. அங்கிருந்து வருவதை வைத்துக்கொண்டு ஸிட்கோ நிறுவனம் சிறு தொழில்களுக்குத் தன்னால் முடிந்ததைத் தருகிறார்கள்.

ஆனால் பிக் அயர்ன் ஒரு டன்னுக்கு ரூ. 700 ஆகிறது, கோக் ரூ. 400 ஆகிறது. சாதாரணமாக ஒரு சிறு தொழில் நடத்துவதற்கு, 30 பேர்கள் வேலை செய்யக்கூடிய ஒரு சிறிய தொழிற்சாலைக்கு ஏறத்தாழ 150 டன் பிக் அயர்னும், 50 டன் கோக்கும் தேவைப் படுகிறது. ஆனால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு அந்த அளவிற்குக் கொடுக்க முடிவதில்லை. காரணம் அந்த அளவிற்கு வட மாநிலங்களிலிருந்து நமக்கு வருவதில்லை.

ஆனால், வேறு இடங்களில் பிக் அயர்ன் டன் ஒன்றுக்கு ரூ. 1,250 என்ற விலைக்கு கிடைக்கிறது, ஸிட்கோ மூலம் கிடைக்கும்போது ரூ. 700 தான் ஆகிறது. கோக் இங்கு ஸிட்கோ மூலம் ரூ. 400-க்கு கிடைக்கிறது, வெளியில் ரூ. 800 கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது.

ஆகவே ஒரு தொழிற்சாலை நடத்தவேண்டுமென்றால் வெளியே அதிகப் பணம் கொடுத்துத்தான் பிக் அயர்னும், கோக்கும் வாங்கி நடத்தவேண்டியிருக்கிறது.

ஆனால் வட மாநிலங்களில் இருந்து இப்படி வெளி இடங்களுக்கு எப்படிப் போகிறது என்பது புரியவில்லை.

தமிழ் நாட்டில் இருக்கிற தொழிற்சாலைகளை மூட்டவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் வட மாநிலங்களில் இருக்கிறவர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கிற தொழிற்சாலைகளில் யாருக்கு வேண்டுமானாலும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் பிற மாநிலங்களில் இருக்கிற எந்தத் தொழிலானாலும் சரி, அது அரசாங்கம் மூலம் நடத்துகிற தொழிலாக இருந்தாலும் சரி அல்லது தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய தொழிலாக இருந்தாலும் சரி, அந்தந்த மாநிலங்களில் உள்ளவர்களுக்குத்தான் முதல் இடம் கொடுக்கிறார்கள். அதேபோல் நம் தமிழகத்திலும் நம்முடைய அரசு இங்கிருக்கிற தனிப்பட்டவர்கள் நடத்துகிற தொழிலானாலும் சரி அல்லது அரசாங்கம் நடத்துகிற தொழில்களானாலும் சரி, தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்குத்தான், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்குத்தான் முதல் இடம் என்று சொல்கிற ஒரு நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்னாடக மாநிலத்தில் அதைத்தான் சொல்கிறார்கள். கர்னாடகத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் முதல் இடம் என்று சொல்கிறார்கள்.

பீகாரிலும் அங்கேயிருக்கிறவர்களுக்குத்தான் முதல் இடம் என்று சொல்கிறார்கள்.

அந்நிலை தமிழகத்திலும் ஏற்பட்டே தீரவேண்டும்.

இங்கே இருப்பவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு தருகிற வகையில் முதல் இடம் தரப்படவேண்டும்.

இன்று சிட்கோ மூலம் ரா மெட்டீரியல்ஸ் தருகிறார்கள். கோவையில் அதற்காக ஒரு டிப்போ இருக்கிறது. ஒரு தொழிலுக்கு இரண்டு அல்லது மூன்று டன் அலாட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். சென்னைக்கு வந்து செலவழித்து இரண்டு டன்னை எடுத்து கோவைக்கு லாரியில் கொண்டுபோவது என்றால் கஷ்டமாகயிருக்கிறது. ஆகவே கோவையில் இருக்கிற ரா மெட்டீரியல்ஸ் டிப்போவிலேயே டெலிவரி கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

அதேபோல் காப்பர் எனமல் வொயர் டான்லி தயாரிக்கிறது. அதற்கு விலை ரூ. 45 தான். அதே வொயர் வட மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வருகிறது. அந்த காப்பர் எனமல் வொயருக்கு ரூ. 52 ஆகிறது. நம் விலை குறைவாக இருக்கிறது. சிறு தொழில் நடத்துகிறவர்களுக்கு இது மிகவும் பயன்படுகிறது.





அந்த வகையில் பால்பெயரிங் நாம் தயாரிப்பதில்லை. அது சிறிய தொழில்களுக்கு மிகவும் அவசியம். வட மாநிலங்களிலிருந்து பால்பெயரிங் நமக்கு சரியாகக் கிடைப்பதில்லை, சிறு தொழில்கள் நடத்துகிறவர்களுக்கு சரியாகக் கிடைப்பதில்லை. அங்கும் ப்ளாக் மார்க்கட் இருக்கிறது. அதிக விலைக்கு விற்கிறார்கள். அவர்கள் உறவினர்களான பஞ்சாபியர்களுக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் நமக்குக் கொடுக்கிற விலை ரூ. 27, ரூ. 32, ரூ. 36 என்று ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விலைக்குக் கொடுக்கிறார்கள்.

ரூபாய் 22 விலையுள்ள பால்பெயரிங்கை பத்து ரூபாய் அதிகப்படுத்தி விற்கிறார்கள். அதற்குக் காரணம் அதை அங்கு தயாரிப்பவர்களுக்கு உறவினர்கள் ஒருவர் அல்லது இருவர் இங்கிருப்பதால் அவர்களுக்கு நேரடியாகத் தந்து விடுகிறார்கள். ஆகவே அவர்கள் அந்த விலையைச் சொல்கிறார்கள். அவர்களிடம்தான் அது கிடைக்கிறது. எனவே நம் அரசே இந்த பால்பெயரிங்கை தயாரிக்கவேண்டும். அப்படி அரசே தயாரித்தால் சிறு தொழில்கள் பாதிக்கப்படாத அளவில் நடைபெறும்.

சிறு தொழில்கள் ஆரம்பிப்பதில் பல கஷ்டங்கள் உள்ளன. அதைப்பற்றி நான் 1971-ல் இங்கே பேசிய நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இன்று நம் அரசு அதையெல்லாம் பரிசீலனை செய்து, ஒரு தொழிலை ஆரம்பிக்கிற நேரத்தில் ஒவ்வொரு அதிகாரிக்கும் மனுபோடவேண்டிய நிலை இருந்தது அப்போது. ஆனால் இப்போது அந்நிலை மாறி ஒரு அதிகாரியிடம் இன்று மனு கொடுத்தால் போதும், அந்த அதிகாரியே எல்லா அதிகாரிகளையும் சந்தித்து லைசென்ஸ் கொடுக்கிற வகையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த மாறுதலை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, பாக்டரி ஆக்ட். அதை மாற்றினால் தவிர சிறு தொழில்கள் நல்லமுறையில் இயங்கா.

பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இந்த சிறு தொழில் நடத்துகிறவர்களுக்கு அடிக்கடி தொல்லைகள் கொடுக்கிறார்கள். ஏன் என்றால் அதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன.

[திரு. கே. ரங்கநாதன்] [1974 மார்ச் 27

பதினாறு அடி உயரத்தில்தான் பாக்டரி கட்டடம் கட்டவேண்டும் என்று ஆக்டில் இருக்கிறது. ரூபாய் 10,000 அல்லது ரூ. 20,000 செலவு செய்து ஒருவர் பாக்டரிக்காக கட்டடம் கட்டினால் ஒவ்வொரு முறையும் வந்து கோர்ட் நோட்டீஸ் கொடுத்து பைன் போடுகிறார்கள். ஆகவே அந்த அதிகாரிகள் தொல்லை கொடுக்காமல் இருக்கவேண்டும்.

ஒட்டுமொத்தமாக இந்த அரசை மனமாரப் பாராட்டுகிறேன். காரணம், இந்தியத் துணைக்கண்டத்திலேயே குறைந்த அதிகாரத்தைக்கொண்டு லிட்கோ, டான்ஸி போன்றவை மூலம் சிறு தொழில்கள் வளர ஆக்கமும் ஊக்கமும் தருவதுதான் என்று கூறி என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எல். கணேசன்: மாமன்றத்தின் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தொழில்-சட்ட அமைச்சர் அவர்கள் முன் வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகம் அனைத்து இந்தியாவிலும் எல்லாத் துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக, 'பாராட்டுப் பெறக்கூடிய மாநிலமாக மரபுவழி வருவதைத் தொடர்ந்து நிலைநாட்டுகிற வகையில் தொழில் துறையில் நம்முடைய தமிழகத்தை முன்னேற்றுகிற மிகப் பெரும் பணியினை நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். தொழில் அமைச்சர் அவர்கள் மதி நுட்பமும், வினைத்திட்பமும், செயல் ஊக்கமும் உடையவர் என்பதைக் காண நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால் எனக்கு ஒரு மனக்குறை உண்டு. பொதுவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்-தஞ்சை, அது தென்னாட்டின் நெற்களஞ்சியம், 'தஞ்சையா ! நன்செய்யும் புன்செய்யும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணி', என்று இப்படியெல்லாம் சொல்லி எங்கள் தலையில் ஐஸ் கட்டியை வைத்து ஒட்டுமொத்தமாக தஞ்சைத் தரணி தொழில்துறையில் மிகப் பின்தங்கிய மாவட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. எல். கணேசன்]

ஒரு நாடு, அதிலும் இந்த நிலப்பிரபுத்துவம் என்ற இரண்டாவது நாகரீக காலகட்டத்தைத் தாண்டி தொழில் நாகரீகம் இருந்து வருகிற காலக்கட்டத்தில் எந்த ஒரு நாடும் வேளாண்மையை மட்டும் நம்பியிருந்தால் அது பொருளாதார முன்னேற்றம் அடைந்த ஒரு நாடாகக் கருதப்படமுடியாது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

ஆனால் பலரும் எங்களைத் திரும்பத் திரும்ப அந்த வேளாண்மைப் பொருளாதாரத்திலேயே இருத்தி வைத்திருக்கிற சூழ்நிலையில்தான் தஞ்சையைப் பொறுத்தமட்டில் கண்டு கொண்டிருக்கிறோம்.

நம்முடைய மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு ஆய்வு நடத்தியிருக்கிறார்கள்.

Techno-Economic survey of Thanjavur district has been undertaken by Engineering and Design Organisation.
அது மிகத் தெளிவாக ஆராய்ந்து பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை அரசிடம் சமர்ப்பித்திருக்கிறது.

அதில், தஞ்சையில் எந்தத் தொழில்களை எல்லாம் துவங்க முடியும் என்பதிலிருந்து ஆய்வுரைகள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் துறையில் இன்னும் ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

தஞ்சைக்கு என்று ஒரு தனி தலைவிதி இருக்கிறது. பொதுவாக தமிழ்நாட்டில் 80 சதவிகிதம் மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள். அப்படி விவசாயத்தை நம்பியிருக்கிற மக்கள் மற்றத் துறைகளுக்குக் கொண்டுவரப்பட்டால்தவிர பொதுவாக பொருளாதார வளர்ச்சி ஏற்படாது.

தஞ்சையைப் பொறுத்தவரையில் விவசாயிகள் என்று சொல்கிறபோது வெறும் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற ஒரு மாவட்டம்தான் தஞ்சை மாவட்டம். மற்ற இடங்களில் எல்லாம் பணப்பயிர்கள் இடுகிறார்கள். காஷ் க்ராப்ஸ். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் 80 சதவிகிதம் விவசாயிகளில் 87.3 சதவிகிதம் பேர்கள் முழுக்க முழுக்க நெல்லை மட்டும் நம்பியிருக்கிறார்கள்.

[திரு. எல். கணேசன்] [1974 மார்ச் 27

100-லே 10 சதவிகிதம் தான் இங்கொன்றும், அங்கொன்றுமாக பணப்பயிர் செய்கிறோம். இங்கேயிருக்கும் சங்கடம் நெற்பயிரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1.00)

"Paddy cultivation does not offer chances for re-circulation of the surplus within the district itself. Therefore, the small farmers and agriculturists do not get a share of the production in the district and the standard of living remains objectively low." தஞ்சையில் இருக்கிற விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தைக் குறிப்பிடுகிறபோது அந்த அறிக்கையிலே அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம் நெல் விவசாயம் செய்யும் மாவட்டம். நெல்லை மட்டுமே விவசாயம் செய்யும் மாவட்டமாக இருப்பதால் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி இல்லாமல், தஞ்சை மாவட்ட விவசாய மக்களின் பொருளாதார நிலை மிகமிகக் கீழே இருக்கிறது.

"objectively low"
என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதை எடுத்துக்காட்டுவதற்குக் காரணம். இதை மாற்றியாக வேண்டும். மாற்றுவதற்கான பல்வேறு சாத்தியக்கூறுகள் சொல்லியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாத வகையில் தொழில் வளர்க்கமுடியும் என்பதையும் அந்த ஆய்வுக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக நெல் உற்பத்தியைப் பாதிக்காமல்
"by a better and judicious rotation of crops".
இந்த மாற்று பயிரிடுதல் மூலம் நிச்சயமாக பணப்பயிரை உருவாக்க முடியும்.

அதேபோலவே கரும்புச் சாகுபடியை உருவாக்குவதன் மூலம் சர்க்கரை ஆலை. அதையொட்டிய டிஸ்டில்லரீஸ் உருவாக்க முடியும்.



1974 மார்ச் 27] [திரு. எல். கணேசன்]

அதேபோலவே சூரியகாந்தி பயிரிடுவதன்மூலம் பல தொழில்களை உண்டாக்க முடியும். தஞ்சை மாவட்டம் நீண்டு வளர்ந்து கடற்கரை கொண்ட மாவட்டம். அங்கே மீன்பிடிப்பைத் தீவிரப்படுத்துவதன் மூலமாக நிச்சயமாக பல தொழில்களை உருவாக்க முடியும். மேலத்தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 4—5 சர்க்கரை தொழிற்சாலைகளை உருவாக்கலாம். 1,500 டன்னிலிருந்து 2,000 டன் வரையில் அங்கே கரும்பு பயிரிடுவதற்கு ஆற்றல் இருக்கிறது. அந்தப் பகுதியில் இதனால் சர்க்கரை ஆலைகளை உருவாக்க முடியும். இதையொட்டி டிஸ்டில்லரி இன்டஸ்டிரீஸ் உருவாக்க முடியும். அதைப்போலவே பூச்சிகொல்லி மருந்து தொழிற்சாலையை அங்கே உருவாக்க முடியும். ரசாயன உரத்தொழிற்சாலை, மாட்டுத் தீவனத் தொழிற்சாலை என்று பல்வேறு தொழிற்சாலைகளை அங்கே உருவாக்க முடியும் என்று மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள்.

தஞ்சை என்று சொல்கிறபோது சிலருக்குப் பொறாமைகூட ஏற்படுகிறது. தஞ்சை என்றால் பல அமைச்சர்கள் இருக்கிறார்கள், முதலமைச்சர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று சொல்கிறார்கள். ஒரு அமைச்சருக்கு ஒரு தொழிற்சாலை என்று வந்திருந்தாலும்கூட தஞ்சை, பொருளாதாரத்தில் அதிகமாக முன்னேறியிருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களின் திருக் கண் பார்வை அந்த தஞ்சை மாவட்டத்தின்பால் திரும்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். முக்கியமான தொழில் மானியத்தின்மீது விவாதம் நடந்து கொண்டு இருக்கிறது. அன்னா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் யாருமே இல்லை, ஒருவேளை பாண்டிச்சேரி அரசு கவிழ்ந்து விட்டது என்ற காரணத்தால் அங்கே போய் விட்டார்களோ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

* திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இங்கே தொழில் அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற 5 மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக ஓரிரு விஷயம் முக்கிய விஷயமாக அமைந்து இருக்கிறது.

[திரு. எம். சுரேந்திரன்] [1974 மார்ச் 27

இந்தத் தொழில் என்று சொல்கிறபோது நாம் சோசலிச லட்சியத்தை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்து கொண்டிருக்கிறோம் என்று இந்த அரசும் சொல்லிக்கொண்டிருக்கிறது. இந்த தொழில் சம்பந்தமான பிரச்னைகள் குறித்து ஒரு 7—8 புத்தகங்களை இரவு கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைப் படிப்பதற்கோ அதைப் பற்றி இங்கே கருத்து வைப்பதற்கோ நேரம் இல்லை.

இந்த 5 மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கும் நேரம் சரியாக இல்லாததால், அதைப்பற்றிச் சுருக்கமாக சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தக் குறிப்புகளையெல்லாம் படிக்காவிட்டாலும், 'தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி' என்ற குறிப்பை நான் படித்துப் பார்த்தேன். அதிலே உற்பத்தி வளர்ந்து இருக்கிறது. மாநிலத்தின் வருவாய் உயர்ந்து இருக்கிறது. ஆனால் தொழிலாளர்களின் எண்ணிக்கை உயர்வேயில்லை என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

நாம் ஒரு தொழிலை ஆரம்பிக்கிறோம் என்று சொன்னால் அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்காக என்னென்ன கருத்துக்களைக் கொண்டு ஆரம்பிப்பது என்று இல்லாமல், அதனுடைய பலன்கள் எந்த முறையில் இருந்தாலும் பரவாயில்லை என்ற அடிப்படையில் அரசு ஒரு கொள்கையை வைத்து இருக்கிறது என்ற அடிப்படையில் அமைச்சர் அவர்கள் பேசினார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கருதுகிறீர்களா, அல்லது பேசினேன் என்கிறீர்களா? நான் பேசவில்லை. மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இப்போது நீங்கள் அகில இந்திய கட்சியில் இருக்கிறீர்கள். ஆளும் கட்சியில் இருக்கிறீர்கள். அகில இந்திய அடிப்படையில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பது என்று சொன்னால் மத்திய அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பொதுத் துறைக்குத்தான் முதலிடம். அதற்கு மத்திய



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

சர்க்கார் முதலிடம் அளித்தால் இந்த அரசு அதை முதன்முதலில் நிறைவேற்றத் தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். இதிலே உங்கள் கொள்கை என்ன என்று சொல்லலாம்.

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சர் ஏற்கனவே சொன்னதைப் போல் தொழில்கள் உருவாகவேண்டுமென்பதுதான் நம்முடைய தொழில் அமைச்சர் கொள்கை என்று கருதுகிறேன். தொழில்கள் எப்படியாவது உண்டாக்கவேண்டும். அது எந்த வகையில் உண்டானாலும் பரவாயில்லை. அதனுடைய பலன்கள் எந்த முறையில் வந்தாலும் பரவாயில்லை. என்று தொழில் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையை அணுகுகிறார்கள் என்பது நான் கருதிக்கொண்டிருக்கிற கருத்தாகும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் கருத்து தப்பு என்று தான் கூறினேன். பலன்கள் எப்படியாவது இருக்கலாம் என்று இல்லை. பலன்கள் பொதுத் துறையில் இருக்கவேண்டும். மத்திய அரசு இன்றைக்குச் சொல்லட்டும், நாளை அதை நிறைவேற்றிக் காண்பிக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த தொழில் அமைச்சர் அவர்கள் திறமையைப் பற்றி, புத்திசாலித்தனத்தைப் பற்றி நான் சந்தேகிக்கவில்லை. அவர் சிறந்தவர். ஆனால் அவருடைய புத்திசாலித்தனமும், திறமையும் தனிப்பட்ட தொழில் சொந்தக்காரர்களுக்கு உபயோகப்படுகிறதே என்றுதான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் கவலையோடுதான் நான் அடிக்கடி குறிப்பிடுகிறேன். இப்படிப்பட்ட ஒரு கொள்கையை வகுப்பது மத்திய அரசாங்கம்தான். நாளைக்கு அவர்கள் தைரியமாக அறிவிக்கட்டும், நாங்கள் அதை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றுகிறோம். இப்போது நாங்கள் அறிவித்தோம், சர்க்கரை ஆலைகள் இனி தனியார் துறையில் இல்லை என்று அவர்கள் சொல்லட்டும், இருக்கிற சர்க்கரை ஆலைகள், நூற்பு ஆலைகள் சர்க்காருக்கு வரவேண்டுமென்று, மறு நாளே நாங்கள் அதை நிறைவேற்றுகிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதற்கு முன்னால் இருந்த எங்கள் அரசு சர்க்கரை ஆலைகளையெல்லாம் கூட்டுறவுத் துறை மூலமாக ஆரம்பித்தார்கள். நீங்கள் வந்த பிறகு தனியார் துறையில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எவ்வளவு, காங்கிரஸ் சர்க்கார் காலத்தில் இருந்த சர்க்கரை ஆலைகள் எவ்வளவு? நீங்கள்தான் கூட்டுத் துறை 'ஜாயின்ட் செக்டார்' என்று தனி முதலாளிகளுக்கு இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காங்கிரஸ் கட்சி ஆட்சி காலத்தில் ஏழு கூட்டுறவு சர்க்கரை தொழிற்சாலை, ஒன்பது தனியார் தொழிற்சாலை. எங்கள் ஆட்சியில் 11-ம் கூட்டுறவுத் துறையில்.

திரு. எம். சுரேந்திரன் : நாங்கள் தெரிந்து கொள்ளவிரும்புவது என்னவென்றால், மத்திய அரசின் கொள்கை என்ன என்பதை விட, இந்த மாநில அரசு ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தால் அது கூட்டுத் துறையில்தான் ஆரம்பிக்கவேண்டுமென்று இருக்கிறதா என்பது தான்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் இல்லை என்று சொன்னேன்.

திரு. எம். சுரேந்திரன் : அப்படியில்லையென்றால் கூட்டுறவுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து இங்கே 16 தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், மூன்று தொழிற்சாலைகள்தான் மாநில அரசின் சார்பில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. பதினாறு தொழில்கள் கூட்டுத் துறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றால், அதன் பொருள் சிறிது மூலதனத்தை வைத்துக்கொண்டு பாக்கி இருக்கும் மூலதனத்தை அரசாங்கமும், அரசாங்கத்தைச் சார்ந்த பாங்குகள் போன்றவற்றின் உதவியால் அந்தத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இந்தத் தொழிற்சாலையைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு அரசாங்கத்தின் பொறுப்பாளிகள் இருக்கிறார்கள், அவர்கள்தான் கொள்கை வகுப்பார்கள் என்று கூறினார்கள். இந்தக் கொள்கையை வகுப்பதன் மூலம், இந்தத் தொழிற்சாலை நிர்வாகத்தை அவர்



களுடைய கையில் எடுத்துக்கொண்டு விட்டவர்களாக ஆகிவிட மாட்டார்கள், அல்லது அந்தத் தொழிற்சாலை இப்படித்தான் நடக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய நிலை ஏற்படாது. இதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தார்கள் என்று சொன்னால், அது பொதுத்துறையில் ஆரம்பிக்கவேண்டும். அப்படியில்லாமல் செய்தால், அது சோசலிச பாதைக்குச் செல்வது போல் இருக்காது. லட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு நாம் தொழிற்சாலை ஆரம்பித்து விட்டு அது கூட்டுத் துறை என்று சொன்னால், நாம் சொல்கிற வாதத்திற்கு அது ஒத்துவராத வாதமாகப் போய்விடுகிறது என்று இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் இங்கே 12 தொழிற்சாலைகள் இருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பன்னிரண்டு தொழிற்சாலைகளில் கிட்டத்தட்ட 60,000 பேர்கள் வேலை செய்கிறார்கள். மொத்தம் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுடைய எண்ணிக்கை 4 லட்சத்து சில்லரை என்று கணக்கில் கூறப்பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கையையும் மற்றத் தொழிற்சாலைகளை நாம் உண்டாக்கியதன் மூலம் எவ்வளவு தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நாம் சரியாக நடக்கிறோமா, மத்திய அரசு சரியாக நடக்கிறதா என்று கூட ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக அது அமைந்திருக்கிறது.

ஆரம்பிக்கப்பட்ட கூட்டுத் துறைத் தொழில்கள் எப்படியிருக்கின்றன என்று சொன்னால், சாதாரண மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு முதல் இடம் தரப்பட்டு, அம்மாதிரியான தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்களா என்று பார்த்தால், வேறு மாதிரியான தொழில்களைத்தான் ஆரம்பித்திருக்கிறார்கள். அத்தியாவசியமாக மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தொழில்களை ஆரம்பிக்கவேண்டும்.

கரும்பு, சர்க்கரை ஒன்றுதான் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்கரைத் தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் மக்கள் சம்பந்தப்பட்ட தொழில். மக்கள் சம்பந்தப்பட்ட, வெளியார் சம்பந்தப்படாத, நல்ல ஜனங்களுடைய உதவிக்காக உள்ள தொழிலாக இருந்தாலும் கூட, வருமானம், லாபம் இருக்கிறது என்று தெரிந்திருந்தும், அது மக்களுடைய உணவுப் பொருள்களின் ஒரு பகுதியாக ஆனாலும், இன்னும் ஏன் தனியாக ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும்? அதை ஏன் தேசிய மயமாக்கக்கூடாது? காரணம் ஏதோ மத்திய சர்க்கார் தடங்கலாக இருக்கிறது என்று சொல்லக்கூடும்.

தேசீயமயமாக்குகின்ற கொள்கையிலே உங்களுக்கு ஒரு தெளிவு இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயம் தெளிவு இல்லை என்று சொல்வேன்.

சில நாட்களுக்கு முன்னால் இங்கே கூறப்பட்டது. மேட்டூரில் இருக்கிற மால்கோ தொழிற்சாலை நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று கூறினார்கள். இன்றைக்கு பின்னால் மத்திய சர்க்கார் அனுமதி அளிக்கவில்லை என்று கூறலாம். அதற்குப் பின்னால் இந்த அறிக்கையிலே ஏதாவது அது சம்பந்தமாக நடவடிக்கையில் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்களா என்று பார்த்தால் அப்படி ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காரணம் அவர்கள் அனுமதி அளிக்கவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** நீங்கள் ஏதோ ஆரம்பித்து, எதையோ நினைத்துக் கொண்டு ஒன்றைச் சொல்கிறீர்கள். அதைச் சரியானபடி அமல் நடத்த நடவடிக்கை எப்பதில்லை. எல்லாவற்றிற்கும் சண்டை போடுவதாகக் கூறுகிறீர்கள். உணவு மண்டலம் அமைக்கப்படுவது பற்றி . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எங்கள் மீது கோபத்தில் மட்டும் கருத்தைச் சொல்லக்கூடாது. நாங்கள் கேட்டது அலுமினியம் ஒரு மூலப்பொருள், அந்த மூலப்பொருளை அடிப்படையாகக் கொண்டு லட்சக்கணக்கான சிறிய தொழில்கள்



நடைபெறுகின்றன. எங்களுடைய பணம் ஒரு கோடிக்கு மேல் இருக்கிறது. அது அன்னியில்—உங்களுக்குத் தெரியும்—ஒரு ஆண்டுக்கு 1½ கோடி ரூபாய் நம்முடைய வரிப் பணத்திலிருந்து இனமாக; சப்ஸிடியாக கொடுக்கிறோம். இப்படிப்பட்ட காரணங்களைச் சொல்லி, அரசாங்கமே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லி, இதுவரையில் அவர்கள் பதில் சொல்லவில்லை. அதற்குப் பின்னாலே எங்களைக் குறை சொல்வது எப்படி நியாயம்?

**திரு. எம். சுரேந்திரன் :** ஜாயின்ட் செக்டாரை நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு கோடி ரூபாய் பணம் போட்டிருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு யோசிக்கவேண்டியது என்னவென்றால், ஒரு பக்கம் தேசியமயமாக்கவேண்டும் என்று சொல்கிறீர்கள். உங்களுடைய கொள்கை முரண்பட்டிருக்கிறது. யார் தொழிலுக்குச் சொந்தக்காரர்கள், யாரை நீங்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கவேண்டும் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுதான் பெரிய ஆபத்து. நாம் மட்டும், ஒரு மாநிலத்தில் மட்டும் அப்படிப்பட்ட கொள்கையை பிரகடனப்படுத்தினால் நம்முடைய தமிழ்நாட்டிற்கு வருகிற தொழில்கள் பூராவும் எங்கேயாவது வெளியே போய் விடும். அப்படி தொழில்கள் வேறு மாநிலங்களுக்குப் போக வேண்டுமென்று அவர்கள் நினைக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். பாதகமாக ஒரு கொள்கையைச் சொல்கிறார்கள். நாங்கள் ஆழ்ந்து சிந்தித்துச் சொல்கிறோம்.

அகில இந்திய அடிப்படையில் எந்தக் கொள்கை எடுத்தாலும், அது சர்க்கரை ஆலையாக இருக்கலாம், அல்லது நூற்பு ஆலையாக இருக்கலாம், எந்தத் தொழிலாக இருந்தாலும், கொள்கை அளவில் அகில இந்தியாவின் அடிப்படையில் அதை ஒத்துக்கொண்டால் இந்த அரசுதான் பொதுத் துறைக்கு முதல் அரசாக அனுமதி கொடுத்து நிறைவேற்றும்.

**திரு. எம். சுரேந்திரன் :** தொழில்கள் வேறு மாநிலங்களுக்குப் போய்விடும் என்று பயப்படுகிறார்கள். தொழில்கள் வேறு மாநிலங்களுக்குப் போகவேண்டியதில்லை. இங்கேதான் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

தொழில்கள் எதற்கு என்ற கேள்வி அங்கே வருகிறது. தொழில்களை நாம் உண்டாக்குகிறோம். தொழில்களுடைய நோக்கம் என்ன? அங்கே இருக்கிற தொழிலாளர்கள் எந்த அளவுக்கு சௌகரியமாக இருக்கிறார்கள் என்பதுதான். நாட்டு மக்களுக்கு உற்பத்திப் பொருள்கள் சுலபமாக குறைந்த விலையில் கிடைக்க வேண்டும். அங்கே வேலை செய்யக்கூடியவர்களுக்கு பலன் கிடைக்க வேண்டும். வரக்கூடிய லாபம் சமுதாயத்திற்கு பயன்படக்கூடிய முறையில் இருக்கவேண்டும்.

இது இல்லாமல், ஜாயிண்ட் செக்டாரில் ஒரு தொழில் ஆரம்பிக்கிறோம், அதற்கு ஊக்கம் அளிக்கிறோம் என்று சொல்வதில் பிரயோசனம் கிடையாது. ஒரு கோடி ரூபாய் அரசாங்கம் முதல் போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தேசியமயமாக்கவேண்டும் என்று சொல்கிறீர்கள். அப்படி தேசிய மயமாக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு, அதிலே உறுதியாக இருக்கிறீர்களா? மத்திய அரசு பதில் சொல்லவில்லை என்றால், நாம் கேட்கவேண்டாமா? காவேரிப் பிரச்னையைப் பற்றி போராடுவோம் என்று சொல்லவில்லையா? உணவு மண்டலப் பிரச்னையைப் பற்றி போராடுவோம் என்று சொல்லவில்லையா? அதே போல அடிப்படை கொள்கை அம்சமாக இருப்பதை ஆழ்ந்து சிந்திக்கக்கூடாதா என்பதைத் தான் கேட்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. ஏழு, எட்டு அறிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் பற்றி எங்களுடைய கருத்துக்களை சிலவற்றையாவது சொல்லவேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 29 பேர் பேசியாகவேண்டும். இப்பொழுது நீங்கள் 11-வது மெம்பர். இன்னும் 18 பேர்கள் பேசியாகவேண்டும். நாம் என்ன பண்ண முடியும்? இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** எல்லாவற்றையும் டச் பண்ணுவதற்காவது நேரம் வேண்டாமா? தொழில் பற்றிய மான்யம் ரொம்ப முக்கியமான மான்யம். அப்படியென்றால் யாரையும் கேட்காமலேயே மான்யத்தை நிறைவேற்றிக் கொண்டு போகலாமே? . . .





**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இங்கே எடுக்கப்படுகின்ற முடிவு, சட்டமன்றத்தில் எவ்வளவு பேர்கள் பேசுவது, எவ்வளவு நேரம் பேசுவது என்பது ஒரு கட்சியின் சார்பாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல. ஆளும் கட்சியின் சார்பாக மட்டும் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. எல்லோருக்கும் பொதுவாக எடுக்கப்பட்ட முடிவுகள். அங்கத்தினர் அதை மீறுகிறபொழுது, மற்ற அங்கத்தினர்களுக்கு மாறுபாடாக நடந்துகொள்கிறார்கள் என்பது பொருள், ஆளும் கட்சிக்கு மட்டும் மாறுபாடாக நடந்துகொள்கிறார்கள் என்பது பொருள் அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மந்திரி அவர்கள் இருக்கையில் இல்லை. அப்படியிருக்கும்பொழுது எப்படி அவர்கள் சொல்வது பொருத்தமாக இருக்கும்?

**திரு. எம். சுரேந்திரன்:** இது ஒரு பெரிய மான்யம். சமுதாயத்தையே மாற்றி அமைக்கக்கூடிய அடிப்படையான அம்சம் இதிலே அடங்கியிருக்கிறது. நான்கு, ஐந்து மான்யங்கள் இருக்கின்றன. நேரம் போதவில்லையே என்று சபாநாயகரைத் தான் கேட்டேன். நான் ஆளும் கட்சியை குற்றம் சொல்லவில்லை.

கைத்தறி பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கைத்தறியாளர்களையெல்லாம் கூட்டுறவுத் துறையில் கொண்டுவரவேண்டுமென்று சொல்கிறோம். கூட்டுறவு சங்கங்கள் இப்பொழுது 711 இருக்கின்றன என்று புள்ளிவிவரம் கூறுகிறது. குறைந்து போயிருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் குறைந்து போயிருக்கின்றன என்றால், அதற்கான முயற்சி சரியாக எடுக்கவில்லை. குறைந்திருக்கிறது என்ற கணக்கைக் காட்டி இன்னும் கொண்டு வரவேண்டும், அதற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லை என்று கூறுகிறார்கள்.

எனக்கு முன்பு பேசிய பாரதி அவர்கள் கூட அதைப்பற்றிப் பேசினார்கள். நான் அதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. கூட்டுறவுத் துறையில் அதிகமான பேர்களைக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக நீதித்துறை சம்பந்தமாக ஒரு குறிப்பிட்ட விஷயத்தை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நீதி எல்லோருக்கும் பொதுவானது. இதற்கு முன்னால் கூட பேசினார்கள்.

நீதிபதிகள் ரொம்ப ஆடம்பரமாக நடக்கிறார்கள், பொது விழாக்களில் பங்கு கொள்கிறார்கள், அப்படியெல்லாம் செய்வது சரியானபடி நீதி கிடைப்பதற்கு வழி வகுக்காது என்று வெளியிலே கருத்து, ஊரிலே ஜனங்கள் மத்தியிலே இருக்கிறது.

நீதிபதிகளையும், மற்றவர்களையும், அது சம்பந்தமாக உள்ள அதிகாரிகளையும் தி.மு.க. கட்சியிலிருந்து எடுத்துப் போடுகிறார்கள் என்ற கருத்து பரவலாக இருந்துவருகிறது. நீங்கள் சொல்லிக் கொள்ளலாம். சட்டப்படிதான் பண்ணுகிறோம், விதிப்படிதான் செய்கிறோம் என்று சொல்லலாம். அதைப்பற்றி யாருமே ஆட்சேபனை சொல்வதற்கில்லை.

அரசாங்கம் இம்மாதிரி ஒரு காரியத்தைச் செய்கிறபொழுது அதற்காக ஒரு விதியையோ மற்ற ஆதாரத்தையோ எடுத்துக் காட்டுவதற்கு தயாராக வைத்துக்கொண்டிருப்பார்கள் ஆனால் மனச்சாட்சியை தொட்டுப்பார்த்துக்கொள்ளவேண்டும். உங்கள் கட்சியிலிருப்பவர்களை நீதிபதிகளாகப் போடுவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் நீதித் துறை என்பது நிரந்தரமாக இருப்பது, இன்றைக்கு ஒன்று, நாளைக்கு ஒன்று என்பது அல்ல, ஏதோ நாம் இருக்கும்வரை இருக்கட்டும் என்பது அல்ல. ஆகவே, இந்தத் தன்மையை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

மேட்டூரில் ஒரு சப் ஜெயில் கட்டவேண்டும் . . . (மணி அடிக்கப்பட்டது)

***திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் துறையில் எந்த அளவுக்கு முற்போக்கான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதையெல்லாம் தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு சிறு புத்தகங்களிலிருந்து மிகத் தெளிவாக நாம் அறிந்துகொள்ள முடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 1971-72-ம் ஆண்டில் நாம் பயன்படுத்திய மின்சாரம் 2,852 மிலியன் யூனிட். ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் பயன்படுகிற மின்சாரத்தில் கிட்டத்தட்ட





49.5 சதவிகிதம் மின்சாரம் இன்றைக்கு தொழில் துறைக்காக நாம் பயன்படுத்துகிறோம் என்று சொன்னால் இந்த அரசாங்கம் தொழில்கள் வருவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளை நம்மால் பார்க்க முடியும்.

அதே போல் உரிமங்கள் கொடுக்கக்கூடிய முறையில் இந்திய அரசால் இந்த மாநிலத்தில் 1973-ம் ஆண்டில் 62 தொழில்கள் துவங்குவதற்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதே போல் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதங்கள், ஏறத்தாழ 75 தொழில்களுக்கு அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக் கின்றன என்பதையும் பார்க்கிறோம்.

மத்திய அரசைப் பொறுத்தவரையில் இங்கே நம்முடைய மாநிலத்தில் வேலை வாய்ப்புக்கு இடம் இல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கியிருப்பதைப் பார்க்கிறோம்.

மத்திய அரசின் சார்பாக இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் என்று எடுத்துக்கொண்டால், கடந்த பல ஆண்டு காலத்திற்கு முன்னால் ஆரம்பித்த தொழிற்சாலைகளைத் தவிர, எந்த ஒரு தொழிற்சாலையையும் மத்திய அரசின் மூலதனத்தோடு தமிழ் நாட்டில் ஆரம்பிக்கவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசு மூலதனத்துடன் தொடங்கப்பட்ட தொழில் நீண்டகாலமாக எதுவும் இல்லை. அண்மையில் சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு மூலதனம் கொடுத்திருக்கிறார்கள். இந்த சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை. சேலம் உருக்காலைத் திட்டம்கூட வேகமில்லாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை வேகப்படுத்தி, எந்த அளவுக்கு பெரிய திட்டமாக விரிவு படுத்த முடியுமோ அந்த அளவுக்கு விரிவுபடுத்தி, எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வழியை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் ஏறக்குறைய எல்லாப் பஞ்சாலைகளுமே நெருக்கடி ஏற்பட்டு, லாபம் கிடைக்காமல் நஷ்டத்தில் இயங்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, மூடப்பட்டன. மூடப்பட்டப் பஞ்சாலைகளைத் திறந்து வேலை இழந்த தொழிலாளர்களுக்கு

மீண்டும் வேலை கொடுக்கவேண்டுமென்று எல்லோருமே சொன்னார்கள். நாமும் இந்த மன்றத்தில் பேசியிருக்கிறோம். அதற்கு மத்திய அரசும் மாநில அரசும் பெருமுயற்சி செய்தன. அதன் அடிப்படையில் தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் 51 சதவிகிதமும் தமிழ்நாடு அரசாங்கம் 49 சதவிகிதமும் பணம் போடவேண்டுமென்ற ஒரு பொதுவான கொள்கை உருவாக்கப் பட்டது.

மூடிக்கிடந்த பஞ்சாலைகளை ஏற்று நடத்த தமிழ்நாடு அரசு 31—12—1973-ல் 2.46 கோடி ரூபாய் மூலதனம் போட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் 1.72 கோடி ரூபாய்தான் போட்டிருக்கிறது. இதிலே நிலைமை என்ன என்பதை நாம் பார்க்கவேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் இந்த மாநில அரசு பஞ்சாலைகளைத் திறக்க முயற்சியே செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மாநில அரசினுடைய பங்குத்தொகையை விட இரண்டு சதவிகிதம் அதிகமாகப் போடவேண்டிய மத்திய அரசாங்கம் குறைவாகப் போட்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்கம் விற்பனை வரி போன்ற காரியங்கள் மூலம் 1.05 கோடி ரூபாய் உதவியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 7.32 கோடி ரூபாய்க்கு பொறுப்பேற்றிருக்கிறது. இப்படி அரசாங்கம் பல்வேறு வகைகளில் முயற்சி எடுத்துக்கொண்டதன் பயனாக 12 ஆலைகளிலுள்ள 10,400 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடிந்தது.

பஞ்சாலைகளை மத்திய அரசே எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் சமீபத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்போவதாகச் சொல்கிறார்கள். இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் இதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியா பூராவிலும் இருக்கின்ற பஞ்சாலைக் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டுள்ள—104 பஞ்சாலைகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் நஷ்டத்தில் இயங்கிக்



கொண்டிருந்த 12 பஞ்சாலைகளை தமிழ்நாடு அரசாங்கம் ஏற்று நடத்தி, இன்றைக்கு லாபகரமாக அவை இயங்கிக்கொண்டிருக் கின்றன.

இதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு இதர பஞ்சாலைகளைப்போல் நியாயமான சம்பளம் கொடுக்கிறோம்; இதர சலுகைகள் எல்லாம் கொடுக்கிறோம். ஆனால் இதர பஞ்சாலை கார்ப்பரேஷன் நடத்துகின்ற 92 பஞ்சாலைகள் இன்னும் நஷ்டத்தில் தான் இருக்கின்றன. பல தொழிலாளர்களை 'லே ஆஃப்' கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கே நியாயமான சம்பளம் கொடுப்பதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய அரசு தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷனின் கீழ் உள்ள ஆலைகளை எல்லாம் எடுத்துக் கொண்டால், இங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களின் கதி என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாடு பூராவுக்கும் ஒரு பொதுவான கொள்கையை உருவாக்கு வார்கள். அங்கே என்ன கொள்கை வகுக்கப்படுகிறதோ அதே கொள்கைதான் இங்கே இருக்கின்ற பஞ்சாலைகளுக்கும்.

கடந்த ஆண்டில் இங்கே இருக்கின்ற பஞ்சாலைத் தொழிலாளர் களுக்கு போனஸ் கொடுத்தோம். அகில இந்தியாவிலும் தமிழ்நாடு பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குத்தான் நிறைய போனஸ் கொடுத்திருக்கிறோம்.

போனஸ் சட்டத்தையும் மீறி, அதிகமாகக் கொடுத்திருக் கிறோம். கடந்த ஆண்டில் கூடுதலாக 4 சதவிகிதத்திற்கும் அதிகமாக கொடுத்திருக்கிறோம். ஒரு ஆலையில் 22 சதவிகிதம் கொடுத்திருக்கிறோம். வேறு மாநிலங்களில் 20 சதவிகிதத்திற்கும் அதிகமாக எங்கும் போனஸ் கொடுக்கப்படவில்லை. எந்தத் தொழிற்சங்கமும் வாங்கித்தரவில்லை. ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

இதர மாநிலத்திலுள்ள எல்லா ஆலைகளும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்போது, தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொண்ட ஆலைகள் மட்டும் லாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 2 கோடியே 10 லட்சம்

ரூபாய் லாபத்தில் நடக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் மத்திய அரசு இந்த ஆலைகளை எடுத்துக்கொள்வதாக இருந்தால் இந்தத் தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பதை எல்லாக் கட்சிக் காரர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பொதுவான கொள்கையின் அடிப்படையில் மற்ற இடங்களி லுள்ள தொழிலாளர்களுக்கு உள்ள நிலைமைதான் இங்கிருக்கின்ற வர்களுக்கும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறையில் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரண மாக தமிழ்நாட்டில் 'சிட்கோ' நிறுவனம் அமைக்கப்பட்டிருக் கிறது. இந்த நிறுவனத்தின் மூலம் பல்வேறு தொழில்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. 1973-74 ஆம் ஆண்டில் மட்டும் 443 தொழில்களுக்கு கடன் உதவி வழங்கியிருக்கிறது. ஒட்டுமொத்த மாக இதுவரையில் 1,009 தொழில்களுக்கு 421 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. இந்த நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஆண்டில் மட்டும் 35 இலட்சம் ரூபாய் பல்வேறு தொழில்களின் புழக்க மூலதனமாக கடனுதவி வழங்கி யிருக்கிற இந்த சிட்கோ நிறுவனம் மேற்கொண்டு புழக்க மூலதனத்திற்கு பணம் ஒதுக்கவில்லை என்று நான் கேள்விப் படுகிறேன். அது கூடாது. தொடர்ந்து அதற்கு பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விசைத் தறிகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் 12,500 விசைத்தறிகளை ஐந்தாண்டுத் திட்டத்தில் நியமிக்க வேண்டு மென்று முடிவு செய்தோம். இன்றைக்கு நிலைமை என்ன? கிட்டத்தட்ட 6,000 விசைத்தறிகள்தான் அமைக்கப்பட்டிருக் கின்றன. மீதமுள்ளவைகளையும் வேகமாக அமைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பல்வேறு தொழில்களையும் சீரமைக்க ஒரு விரிவான திட்டத்தை தொழிலமைச்சரவர்கள் தீட்டி, அதை நிறைவேற்றுவதற்கான சட்டத்தையும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழில், சர்க்கரை ஆலைத் தொழில், சிமெண்ட் ஆலைகள் ஏனைய ஆலைத் தொழில்களை எல்லாம் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் அரசாங்கமே ஏற்று



நடத்தும் வகையில் நாட்டுடமையாக்கும் ஒரு சட்டத்தை சட்ட மன்றத்தில் கொண்டுவரவேண்டும். அதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கிறதா இல்லையா என்பதை பொதுமக்களிடம் எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பு அப்போதுதான் ஏற்படும் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

*திரு. நா. வெ. குருசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தொழில் துறை மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன்.

இப்போது நமது தொழில் துறையைப் பொறுத்தவரையில், தொழில்கள் எல்லாம் பரவலாக்கப்பட வேண்டுமென்று சொல்லப் படுகிறது. ஆனால் பல பிற்பட்டப் பகுதிகளில் இப்பேர்ப்பட்டத் தொழில்களை ஆரம்பிப்பது கிடையாது. மூலப்பொருட்கள் இருக்கும் இடங்களில் அவை சம்பந்தப்பட்டத் தொழில்களைத் தொடங்கவேண்டும். எந்தெந்த இடங்களில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றனவோ அந்தந்த இடங்களில் அவை சம்பந்தப்பட்டத் தொழில்களைத் தொடங்குவதாகச் சொல்லப் படுகிறது. அந்தக் கொள்கை சரியானதா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். ரப்பர் விளைவது எல்லாம் கன்னியா குமரி மாவட்டத்தில்தான். ஆனால் ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவது இராமநாதபுரம் மாவட்டத்தில். இம்மாதிரி யான முறை கூடாது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நைலான் கிடைப்பது பம்பாயில். அதற்கான தொழிற்சாலை அமைக்கப்படுவது மதுரையில்.

திரு. நா. வெ. குருசாமி: மூலப்பொருள்கள் கிடைக்கின்ற இடங்களிலேயே அவை சம்பந்தப்பட்ட தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று என்னுடைய கருத்து. நைலான் உற்பத்தி பம்பாயில் இருந்தாலும் மதுரையில் தொழிற்சாலை ஏற்படுத்து வதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அந்த நைலான் தொழிற்சாலை வைகை அணைப் பகுதியில் ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. வெ. குருசாமி] [1974 மார்ச் 27

கரும்பு எங்கே அதிகமாக உற்பத்தியாகிறதோ அங்கே சர்க்கரை ஆலைகளை நிறுவ வேண்டும். குறிப்பாக இராஜபாளையம், வத்திராயிருப்பு, சங்கரன்கோவில் ஆகிய இடங்களில் அதிகமாக கரும்பு உற்பத்தியாகிறது. ஆனால் சர்க்கரை ஆலையை மானாமதுரையில் ஆரம்பிப்பதாகத் தெரிகிறது. நான் குறிப்பிடுவது எங்கெங்கே கரும்பு அதிகமாக உற்பத்தியாகிறதோ அங்கெல்லாம் சர்க்கரை ஆலைகளை நிறுவ வேண்டும்.

மேலும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்போது, ஆங்காங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்குத்தான் வேலைகள் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு அல்லாமல் வேறு பகுதிகளில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்தால் அந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகவே அப்படிச் செய்யக்கூடாது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் ஆலங்குளம் சிமின்ட் பாக்டரியை எடுத்துக்கொண்டால் அந்த பாக்டரி ஆரம்பிக்கப்பட்டதால் பல மைல் தூரத்திற்கு விவசாயம் செய்ய முடியாத அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அந்த பாக்டரியிலாவது வேலை கொடுத்தார்களா என்றால் அதுவும் இல்லை. அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பின்தங்கிய பகுதிகள் என்று எடுத்துக்கொண்டால், இராமநாதபுரம் மாவட்டத்தில் 6, மதுரையில் 1, திருச்சி மாவட்டத்தில் 3 என்று தெரிந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் அதிகமாகப் பின்தங்கிய இடம் எங்கள் மதுரை மாவட்டத்திலுள்ள பெரியகுளம் வட்டமாகும். அதை ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்பது புரியவில்லை. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு அமைச்சர் இருக்கின்றார் என்ற காரணத்தால் அந்த வட்டாரத்தை மட்டும் எடுத்துக் கொண்டார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. எப்படியிருந்தாலும் பெரியகுளம் வட்டத்தை பின்தங்கியப் பகுதியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. நா. வெ. குருசாமி]

பின்தங்கிய பகுதிகளுக்கு உதவித் தொகை வழங்குகின்ற திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 5, தர்மபுரி மாவட்டத்தில் 3, மதுரை மாவட்டத்தில் 3, வடாற்காடு மாவட்டத்தில் 4 இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலும் பெரியகுளம் சேர்க்கப்படவில்லை மிகவும் பிற்பட்ட பகுதியாக இருப்பதால் பெரியகுளம் பகுதியை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அதிக உதவி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று பேரவை மாலை 4-00 மணியளவில் மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் பேரவை 4.00 மணி அளவில், பேரவைத் தலைவர் தலைமையில் கூடியது.

**திரு. எஸ். முருகையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் கொண்டுவந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தொழில் அமைச்சர் அவர்கள் நம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தனியாக அக்கறை எடுத்துக்கொண்டு நல்ல பெரிய தொழில்களையும் சிறு தொழில்களையும் நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டு வருவதில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். சென்ற 7 ஆண்டுகளிலேயே பல பெரிய தொழில்கள் இங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக அவ்வப்போது நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருடன் கலந்து பேசி நல்ல பல தொழில்களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

[திரு. எஸ். முருகையன்] [1974 மார்ச் 27

கிராமப்புறங்கள் நல்ல முறையில் வளர்ச்சி பெற வேண்டுமென்றால், பொருளாதார வளம் பெற வேண்டுமென்றால் சிறு தொழில்கள் ஆங்காங்கே, கிராமப்புறங்களில் ஆரம்பிக்கப்பட வேண்டும். குறிப்பாக, நம்முடைய நாட்டிலே—பஞ்சாப் மாநிலத்திலே பல சிறிய தொழில்கள் கிராமப்புறங்களில் குடிசைத் தொழில்களாகவே செயல்பட்டு வருகின்றன என்கிறார்கள். நமது தொழில் அமைச்சர் அவர்கள் 10 நாட்கள் பஞ்சாப் மாநிலத்திலே சுற்றி வந்ததாகக் கேள்விப்பட்டேன். அதுபோல இங்கும் கிராமப்புறங்களில் குடிசைத் தொழில்களாக பல சிறு தொழில்கள் வருகிறபோதுதான் இங்குள்ள வேலையில்லலாத் திண்டாட்டம் பரவலாக ஒழிக்கப்பட வாய்ப்பு ஏற்படும்.

பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று மனுச் செய்தால் ஒரு வாரத்திற்குள் லைசென்சு வழங்கப்படுகிறதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இங்கே குறைந்தது மூன்று, நான்கு மாதங்கள் ஆகிவிடுகின்றன. ஏன் இதுபோல ஆகிறதென்றால் பப்ளிக் ஹெல்த் ஆக்ட், டவுன் ப்ளானிங் ஆக்ட் இங்கே கடுமையாகக் கவனிக்கப்படுவதால் ஆகிறது. பஞ்சாப் மாநிலத்தில் அந்தச் சட்டங்களை நான்கைந்து ஆண்டுகளுக்கு நிறுத்திவைத்திருக்கிறார்கள். அதேபோல் அந்த அளவுக்கு நம் மாநிலத்தில் அந்தச் சட்டங்களை ஒத்திவைக்காவிட்டாலும், சற்று தளர்த்தி கிராமங்களில் தொழில்கள் வளர்வதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுத்தால் தமிழகம் நல்ல முறையில் முன்னேற்றம் அடையும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமப்புறங்களில் சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றால் இப்போதுள்ள விதிப்படி கட்டிடம் 12 அடி உயரத்தில் இருக்கவேண்டும் என்பதுபோல பல கண்டிஷன்கள் இருக்கின்றன. சுற்று வட்டாரங்களில் கட்டிடமே இல்லாவிட்டாலும்கூட லைசென்சு கொடுக்க தாமதப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தைப் போல, நம் மாநிலத்திலும் நிறைய தொழில்கள் கிராமப்புறங்களில் ஏற்பட எந்த எந்தச் சலுகைகளை அளிக்கவேண்டுமோ அவற்றை எல்லாம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சிறு தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று அதிகாரிகளை அணுகிக் கேட்கிற நேரத்தில், அவர்கள் ஆலோசனை கூறுவதற்குக் கூடத் தயங்குகிறார்கள். ஆகவே ஒவ்வொரு



1974 மார்ச் 27] [திரு. எஸ். முருகையன்]

மாவட்ட தலைநகரிலும் இதற்காக தனியாகவே அதிகாரிகளை நியமித்து, ஆலோசனை கூறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

நம் மாநிலத்திலே சில பகுதிகள் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டு 15 சத விகிதம் சப்சிடி கொடுக்கப்படுகிறது. வடாற்காடு மாவட்டத்தில் சில பகுதிகளைத்தான் அப்படி அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக செங்கம், போளூர், திருவண்ணாமலை, வந்தவாசி ஆகிய இந்த நான்கு வட்டங்களும் மிகமிகப் பிற்பட்ட பகுதியாகும். நமது சட்டப் பேரவைத் தலைவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். அடுத்து, ஐந்தாவதாக அவரது தொகுதியையும் சேர்க்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பகுதிகளை, எல்லாம் பிற்பட்ட பகுதிகளாக அறிவித்து 15 சத விகிதம் மானியம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருவண்ணாமலை அருகில் கவுட்டிமலை, வேடியப்பன் மலை ஆகிய இடங்களில் இரும்பு கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. சேலம் இரும்பை விட தரமான இரும்பு—14 கோடி டன் வரை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை விரைவில் வெட்டி எடுக்க வேண்டிய ஏற்பாடுகளை தனி அக்கறை செலுத்தி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் சிமிண்ட் ஏராளமாக உற்பத்தியாகிறது. தேவையைவிட 2½ மடங்கு உற்பத்தியாகிறது. அப்படியிருந்தும் சிமிண்ட் பற்றாக்குறை இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான அளவு சிமிண்ட் பெற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் மெருகு கொடுக்கக்கூடிய கருங்கற்கள் தமிழகத்தில் ஏராளமாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. மெருகிட்டும், மெருகிடாமலும் அவை வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. அங்கே அவர்கள் அந்தக் கற்களை சிறு சிறு பலகையாக அறுத்து வேறு நாடுகளுக்கு அனுப்புகிறார்கள் என்பது எல்லாம் வருகிறது.

நாமே ஒரு முயற்சி எடுத்துக்கொண்டு கறுங்கற்களை பலகைகளாக அறுக்கும் இயந்திரத்தை நம் மாநிலத்திலேயே ஏற்படுத்தி, சிறு சிறு பலகைகளாக இங்கேயே அறுத்து வெளிநாடுகளுக்கு

அனுப்பினால் அந்நியச் செலாவணி நம் நாட்டிற்கு அதிகமாகக் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் (மணி அடிக்கப் பட்டது).

*திரு. தோப்பூர் திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த தொழில் துறை மான்யத்தின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விழைகிறேன்.

நம்முடைய தமிழ்நாடு தொழில் துறையிலே பல்வேறு வாரி யங்களை நிறுவி இன்றைக்கு தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்பட நல்ல பல திட்டங்களை நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

இப்போது டான்சி, டிட்கோ, சிட்கோ, சிப்காட் போன்ற நிறுவ னங்கள் நல்ல முறையில் பணியாற்றி தமிழ்நாட்டில் தொழில் துறையில் பெரு வளர்ச்சி ஏற்படச் செய்திருப்பதை பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நமது தொழில் துறை இலாகா மூலம் வெளி நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஒரு அரிய திட்டத்தை இந்த மானியத்தில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன்.

இந்தத் தொழில் துறை இலாகா கைவினைப் பொருட்கள், மற்றும் களிமண், பீங்கான், தோல் பொருட்கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்ட முடியும் என்பதைக் குறித்து பாராட்டு கிறேன். இந்த களி மண்ணால் செய்கின்ற ஜாடிகள், மற்ற டம்பளர்கள், கப்செட்டுகள் போன்றவற்றை எங்களுடைய வட ஆற்காடு மாவட்டம் காட்பாடி அருகிலுள்ள கரிகேரி என்ற இடத்தில் மிக அழகாகச் செய்கிறார்கள்.

இந்தப் பாண்டங்களை எல்லாம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு, மற்ற மாநிலங்களுக்கும் அனுப்புகிறார்கள். அப்படிப் பட்ட தொழில் அறிவு பெற்றவர்களுக்கு தொழில் துறை இலாகா இன்னும் அதிகமாக ஊக்கமும், வசதியும் செய்து தரவேண்டும்.

மேலும், அவர்களை அரசாங்கம் உற்சாகப் படுத்துகிற வகையிலே ஏதாவது மானியம் அளித்தால் இந்த தொழிலில் மேலும் அவர்கள் உற்சாகம் காட்ட ஏதுவாக இருக்கும்.





ஜப்பான் நாட்டிலே ட்ரான்சிஸ்டர் போன்ற தொழில்களைக்கூட குடிசைத் தொழிலாகச் செய்கிறார்கள். அந்த முறையில் நம்மு டைய நாட்டிலேகூட தொழில்களை எல்லாம் சாதாரணமாகக் குடிசைகளிலே செய்வதற்கு கிராமப்புற மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

நம்முடைய தமிழ்நாட்டில் ப்ளாஸ்டிக் பை தயாரிப்பதற்கு வேண்டிய ஒரு இயந்திரத்தை ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார். ஆனால் அவரை நம்முடைய அரசாங்கத்திலுள்ள அதிகாரிகள் போதிய உற்சாகம் அளித்து ஊக்கப்படுத்தவில்லை.

பாம்பே போன்ற வெளி மாநிலங்களிலே இருந்து இயந்திரங்களை வரவழைத்து நம்முடைய மாநிலத்தில் தேவையானவர்களுக்கு கொடுக்கிறார்கள். ஆகவே, இனிமேலாவது இப்படி தொழிலில் ஆர்வம் உள்ளவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் தொழில் செய்து முன்னேறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அக்ரோ பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ், சர்க்கரை ஆலை, நூற்பு ஆலை, அரிசி ஆலை போன்றவை இருக்கின்றன. மாடர்ன் ரைஸ் மில் இன்றைக்கு வட ஆற்காட்டிலே செய்யாறிலே இருக்கிறது. அதே போல் மாவட்டந்தோறும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு மாடர்ன் ரைஸ் மில் துவங்கவேண்டும். சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கக்கூடிய பகாஸ், மற்றும் மூங்கில் போன்ற பொருட்களைக் கொண்டு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கத் திட்டமிருக்கிற தென்று அறிகிறேன். அதை விரைவிலே உருவாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகிற சர்க்கரை இன்றைக்கு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வெளிநாட்டுச் செலாவணி மூலம் இந்த சர்க்கரை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு லாபத்தில் ஒரு பகுதியாவது கொடுக்க வேண்டும்.

குறைந்தது ஒரு டன் கரும்புக்கு 120 ரூபாய் கொடுக்க சிபாரிசு செய்யவேண்டும். மேலும் இந்த சர்க்கரை அதிக வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருவதால் விவசாயிகளுக்கு உரம் போன்றவைகளை நியாயமான விலையில், கொடுக்க வேண்டும்.

[திரு. தோப்பூர் திருவேங்கடம் [1974 மார்ச் 27

மற்றும் நம்முடைய தமிழ்நாட்டிலே பல்வேறு தொழிற்சாலைகளைத் துவக்க அதற்கான இயந்திரங்களை இறக்குமதி செய்ய இந்த வெளிநாட்டு செலாவணியைப் பயன்படுத்தவேண்டும்.

" Rural Industrial Estates " அஃதாவது கிராமப்புறங்களிலே நல்ல தொழில்பேட்டைகளை உருவாக்க வேண்டும்.

வடஆற்காடு ராணிப்பேட்டையில் ஒரு தொழில்பேட்டை உருவாக்கப்பட்டிருப்பதை அனைவரும் பாராட்டுவார்கள். கிராமப்புறங்களிலே துவங்கப்படுகிற தொழிற்பேட்டைகளை ஊராட்சி ஒன்றியங்களே நடத்தச் செய்யவேண்டும். அப்படி நடத்துவதன் மூலம் தொழில்கள் எல்லாம் நகரத்திலேயே இல்லாமல் கிராமப்புறங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது என்பது ஒன்று.

மற்றொன்று கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மூன்றாவது ஊராட்சி ஒன்றியங்கள் அதனுடைய நிதி வசதிகளைப் பெருக்கிக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

அதேபோல சிட்கோ மூலம் புதிய கடன் உதவித் திட்டங்களை உருவாக்கியிருப்பது வரவேற்கத் தகுந்த ஒன்றாகும். இந்த சிறு தொழில்களைப் பற்றி முழு விபரங்களை அடங்கிய புத்தகம் ஒன்று இந்த இலாகா வெளியிட வேண்டும்.

(Tamil Nadu Industries Technical Cell)
(தமிழ்நாடு இன்டஸ்ட்ரிஸ் டெக்னிகள் செல்)

அஃதாவது தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் டெக்னிகல் செல் ஒன்று உருவாக்கி அதன் ஆலோசனை மூலம் மேலும் பெரிய தொழிற்சாலைகளை உருவாக்கி மேலும் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழில் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** பேரவைத் தலைவரவர்களே, தொழில் துறை மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் எழுந்து நிற்கிறேன்.

இந்த மாதிரி மானியங்களை ஒன்றாக இணைத்து ஒரு அமைச்சர் வைத்திருக்கிறார் என்பதற்காக ஒரே அடியாக பேசச் சொல்வது ரொம்பவும் அநீதியாகும். குறிப்பாக எடுத்துக்கொண்டு பார்த்



1974 மார்ச் 27] [திரு. மணலி சி. கந்தசாமி]

தால் அமைச்சரிடம் இருக்கிற இலாக்காக்களான ஜெயில், நீதி இலாகா, இண்டஸ்ட்ரீஸ் இவையெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவை. ஆகவே, வரப்போகிற காலத்திலாவது எந்தெந்த இலாகாவை எதெதோடு இணைக்கவேண்டுமோ அப்படி இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுதான் சரியாக இருக்கும். நீங்கள் வேண்டுமானால் சொல்லலாம், பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே இருக்கிறீர்களே, அதில் சொல்ல வேண்டியதுதானே என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால், நீங்கள்தான் அதற்குத் தலைவர். ஆகவே அதிலே உங்களுக்கும் பொறுப்பு உண்டு. ஆகவே, இதை இனிமேல் மாற்றவேண்டும்.

தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி எற்பட்டிருக்கிறது. ஒரு நாடு வளர்ச்சி பெற்றிருக்கிறதென்று சொன்னால் அதற்குத் தொழில் வளர்ச்சி ஒரு பாராமீட்டர் போல இருக்கிறதென்பது உண்மைதான். ஆனால் இந்த தொழில் வளர்ச்சி எதற்காக என்று பார்க்க வேண்டும். அது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், அடுத்தபடியாக ஜனங்கள் நியாயமான விலையில் பொருட்களைப் பெறவும்தான் பொருட்களை உற்பத்தி செய்கிறோம் என்பது ஒரு பக்கம் இருக்கிறது. அந்நிய செலாவணியையும் சம்பாதித்து தருகிறது.

இன்றைக்கு தொழில் வளர்ச்சி மாத்திரம் ஏற்பட்டுவிட்டால் நம்முடைய குறிக்கோள் நிறைவேறுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும் இங்கே வேலையில்லாத் திண்டாட்டம் போயிருக்கிறதா என்று பார்க்கிறபோது, இந்த ஜாய்ன்ட் செக்டார்—பொதுவாக பொதுத் துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை என்று மூன்று துறையிருக்கிறது—இன்றைக்கு ஜாய்ன்ட் செக்டார் என்று வேறு வைத்திருக்கிறீர்கள்.

மத்திய சர்க்கார் எந்த அளவிற்கு ஒத்துழைக்கிறது என்றெல்லாம் நீங்கள் சொல்வீர்கள். ஆனால் அதற்காக நாம் போராட முடியும்.

ஆனால் இன்றைக்கு இந்தக் கூட்டுறவுத் துறை எப்படி நாட்டுக்கு சாதாரண மனிதனுக்கு நன்மை பயக்கிறதென்று சொல்ல முடியும். இந்தக் கூட்டுறவுத் துறைக்கும் சர்க்காருக்கும்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 மார்ச் 27

இருக்கக்கூடிய சம்பந்தம் எல்லாம் நாட்டின் வளர்ச்சிக்கு எப்படி உதவுகிறதென்று பார்த்தால், முதலாளிகளை வளர்ப்பதற்குத் தான் இந்தக் கூட்டுறவுத் துறை இருக்கிறதென்பதுதான் சரியானது.

தொழில் வளர்ச்சி என்பது மட்டும் போதாது. தொழிலாளர்களுக்கும் சர்க்காருக்கும் அது பயனுடையதாக இருக்கிறதென்று சொன்னால் அதோடு முதலாளிகளுக்கும் லாபம் சம்பாதிக்க என்ன செய்யப்பட்டிருக்கிறதென்று தெரியவில்லை.

இன்றைக்கு இந்த நாட்டிலே முதலாளிகள் வளர்கிறார்கள். அவர்கள் போட்ட முதலுக்கு ஏதோ வட்டி சம்பாதித்தால் சந்தோஷப்படுவேன்.

ஆனால் இன்றைக்கு இந்த நாட்டிலே 95 ஏகபோகங்கள் வளர்ந்திருப்பதைப் பார்த்தால், தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட சில பேர்கள் வளர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இது யாருக்கு நன்மை ? இப்படிப்பட்ட ஏகபோகங்கள் ஒரு பக்கம் சட்ட நுணுக்கம் தெரிந்த நிபுணர் ஒருவரையும், ஒரு சார்ட்டர்டு அக்கௌண்டன்டையும் வைத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட மூல தனத்தை தாங்கள் போட்டுக்கொண்டு, மேலும் எல்.ஐ.சி., சர்க்கார் சப்சிடி போன்றவற்றையும் பெற்றுக்கொண்டு அவர்கள் கொள்ளை லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

வாங்கக்கூடிய மக்களுக்கும் நீதி வழங்குவது இல்லை. முதலாளித்துவத்தை வளரவிடுவது சோஷலிஷ சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கின்ற இந்தச் சர்க்காருக்கு எந்த வகையிலே பொருந்தும்? சொல்லி விடுங்கள் நீங்களும், இந்திய சர்க்கார் மாதிரி நீங்களும் பூஷ்வாக்களுக்கு ஆகத்தான் இருக்கிறது சர்க்கார் என்று சொல்லிவிடுங்கள், தமிழ்நாட்டிலே உள்ள பூஷ்வாக்களுக்குத்தான் அரசாங்கம் இருக்கிறது என்று பிரகடனப்படுத்தி விடுங்களேன்.

கூட்டுறவுத் துறை எந்த அளவிற்கு நாட்டு மக்களுக்கு பயன்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் சில பணக்காரர்கள், சில கோடீஸ்வரர்கள் சில மூலதனம் வைத்திருக்கக்கூடியவர்கள், பேங்கிலிருந்து பணம் வாங்கக்கூடியவர்கள் இப்படிப்பட்டவர்களை



1974 மார்ச் 27] [திரு. மணலி சி. கந்தசாமி]

வளர்ப்பதற்குத்தான் பயன்பட்டிருக்கிறதே தவிர வேறு மக்களுக்குப் பயன்படவில்லை. அப்படி வளரவிடக் கூடாது, அப்படி வளர விடுவது இந்த அரசுக்கே கூட நல்லதல்ல.

முதலாளிகளுக்கு இருதயம் கிடையாது. எந்த சூழ்நிலையிலும் எப்படியும் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கின்ற ஈவு இரக்கமற்ற கூட்டம் அது. இருதயமற்ற தன்மையிலே அவர்கள்—எப்படி வேடன்தாங்கலிலே தண்ணீர் வருகின்ற நேரத்திற்கு பறவைகள் வருகின்றன, பிறகு பறந்துவிடுகின்றனவோ—அதைப் போன்று, அந்த அந்த அரசாங்கங்களை அவ்வப்பொழுது அவர்களோடு சேர்ந்துகொண்டு பயன்படுத்திக் கொள்வார்கள், அவர்களிடத்திலே இருக்கிற பத்திரிகைகளின் வாயிலாக நாட்டிலே திருவிளையாடலை நடத்திக்கொண்டு வருகிறார்கள் இந்திய சர்க்கார் அப்படித்தான் நடக்கிறது.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பதே சோஷலிச சமுதாயம் அமைப்பதற்காகத்தான் என்பதுதான் என்னுடைய கண்ணோட்டமாகும். நாட்டின் நலன்களுக்கு அப்பாற்பட்ட முறையிலே முதலாளித்துவத்தை குறுக்கும் நெடுக்குமாக வளரவிட்டால் நல்லதல்ல, புத்திசாலித்தனமான அமைச்சர் இந்த துறை அமைச்சராக இருக்கின்றார், அவர் இந்தக் கூட்டுத் துறையை செம்மைப்படுத்த வேண்டும், மத்திய சர்க்கார் நமக்கு உதவி செய்யவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.

இங்கு ஆளும் கட்சியாக மாத்திரமல்ல, வெளியேயும் ஒரு பெரிய கட்சியாக உங்கள் கட்சி இருக்கிறது, இதிலே உடன்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்களை எல்லாம் சேர்த்துக்கொண்டு இதற்காக ஒரு போராட்டத்தைத் துவக்குங்கள், இந்த கட்டுக் கோப்பை உடையுங்கள், இப்படிச் சொல்லிக்கொண்டே காலந் தள்ளிக் கொண்டே போனால் எப்படி முடியும்?

நெசவுத் தொழிலாளர்கள் கண்ணீர் விடுகிறார்கள், அவர்களுக்குப் பல குறைகள் இருக்கின்றன, நூல் அதிக விலை, உதவித் தொகைகள் கிடைப்பதில்லை, போதுமான வருமானம் கிடைக்கவில்லை இப்படிப்பட்ட பிரச்னைகளையெல்லாம் தீர்த்துவைக்க உங்கள் கட்சி ஆளுங்கட்சி மாத்திரமல்ல போராட்டக் கட்சியாகவும் இருக்கும் என்பதை நிரூபிக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள், சிப்காட், டிட்கோ போன்ற நிறு

வனங்கள் எல்லாம் நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு அனுசரணையாக இருக்கின்றன, ஆனால் பெரிய தொழிற் வளர்ச்சியை ஏற்படுத்துவதாக இல்லை.

சுமால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் என்று எடுத்துக்கொண்டால் தேங்காய் மட்டை நார், பிளாஸ்டிக் பை, இவைகள் தயாரிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கிறீர்கள், பெரிய பெரிய இயந்திரங்களுக்கு துணைக் கருவிகள் செய்வதற்கும், பெருந் தொழில்களுக்கு துணையாக இருக்கக்கூடியவையாகவும்தான் இருக்கிறதே தவிர தமிழ்நாட்டிலே எந்த எந்த அளவிற்கு எங்கெங்கே இயற்கை செல்வங்கள் இருக்கின்றன, அவற்றை எப்படிப் பயன்படுத்தலாம் எந்த மாவட்டத்திலிருந்து மூலதனத்தை எப்படித் திரட்டலாம் என்று யோசிக்கவேண்டும்.

சில பணக்காரர்கள்தான் இன்றைக்கு கூட்டுத் துறையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியிலே ஷேர் கேட்டு வாங்கவேண்டும், தொழிற்சாலைகளை அதன்மூலம் ஆரம்பிக்க வேண்டும்.

திரு. கணேசன் அவர்கள்கூட சொன்னார் தஞ்சாவூரில் தொழிற்சாலைகள் கொடுத்திருக்கிறீர்கள் என்று, என்ன தொழிற்சாலை என்றால் உரிமட்டையிலிருந்து நார் உரித்தல் தொழிற்சாலை, எனக்கே சிரிப்பு வந்துவிட்டது, தாரங்கத்ரா தொழிற்சாலை, மேட்டூர் கெமிக்கல்ஸ் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஏற்படுத்தக்கூடாதா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது, படித்தவர்களுக்கும் வேலையில்லை. வெளி மாநிலத்தவர்களுக்கு கொடுக்க கூடாது என்று சன்ஸ் ஆப் தி சாயில் பற்றியெல்லாம் பேசினார்கள். முதலாளித்துவத்தை ஒழிக்காத வரையில் அப்படித்தான் இருக்கும். முதலாளிகள் அப்படித்தான் செய்வார்கள், அவர்கள்தான் 4 ரூபாய் குறைத்து வேலைக்கு ஆள் வருகிறேன் என்று சொன்னால் அவர்களுக்குத்தான் அவர்கள் வேலை கொடுப்பார்கள் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தமிழனுக்குத் தரமாட்டார்கள்





சோஷலிஸம் ஏற்பட்டிருக்கிறது ஓரளவிற்கு முன்னேற்றத்தை அது ஏற்படுத்தியிருக்கிறது என்று பாராட்டினாலும் கூட நீங்கள் செய்திருக்கிற முறைகள் சோஷலிஸப் பாதைக்கு உங்களை அழைத்துச் செல்லாது. நிலச் சீர்திருத்தம், கண்ணொளி வழங்கும் திட்டம் இவையெல்லாம் ஒரு அளவிற்குத்தான் சோஷலிஸத்தைக்கொண்டுவர உதவும்.

அடியோடு சோஷலிஸம் வரவேண்டுமானால் முதலாளித்துவத்தை வளரவிடக்கூடாது. முதலாளித்துவத்தை வளர்த்துக்கொண்டே போனால் காலப்போக்கிலே அதை நீக்குவது கடினமாகிவிடும். பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன.

டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களிடத்தில் சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன், அவை நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நல்ல முறையிலே இயங்குவதற்குத் தடங்கல் ஏற்பட்டால் சிக் மில்களையெல்லாம் ஆரோக்கிய மில்களாக நாம் மாற்றிக்கொண்டு வருகிறோம்.

தமிழ்நாட்டிலே பெரிய பெரிய மில்கள் இருக்கின்றன, அவற்றிற்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து—முதலாளிகள் தாங்கள் கொடுப்பதற்குத்தான் சிக் மில்களாக வைத்திருக்கிறார்கள்—உண்மையிலேயே அவை நல்ல தரத்திலேதான் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

இந்தியா பூராவும் ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்போவதாகச் சொன்னார்கள். இந்தியா பூராவும் இருக்கிற சிக் மில்களையெல்லாம் எடுக்கும் நிலை ஏற்படும்பொழுது நம்முடைய அனுபவம் நல்ல உதவியாக இருக்கும் அவர்களுக்கு.

நான் நல்ல எண்ணத்தோடு சொல்கிறேன், மந்திரி அவர்களிடத்திலே சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன், அதை அவர்கள் கவனிக்கவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லாவிலே பல லட்சக்கணக்கான ரூபாய் மூலதனம் இருக்கிறது அதைக் கொண்டுவரவேண்டும், அதற்காக எம்.எல்.ஏ.-க்கள் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம், இராம

நாதபுரத்திலே தொழிற் வளர்ச்சி ஏற்பட வேண்டும், கன்னியாகுமரி மாவட்டம் ஒதுக்கப்படக்கூடாது. அதற்காக சோத்து ஜில்லாவாக இருக்கிற எங்களுடைய ஜில்லாவை மறந்துவிடக்கூடாது, அங்கே தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டும்.

புத்திசாலிகள் எல்லாம் எங்கள் ஜில்லாவைச் சேர்ந்தவர்கள் தான் இருக்கிறார்கள்.

தஞ்சாவூரிலே இண்டஸ்ட்ரிகளை ஏற்படுத்தி நடத்தக்கூடிய மூலதனம் இருக்கிறது. அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயில், நீதி துறை எல்லாம் இருக்கின்றன, இதோடு அதையெல்லாம்பற்றி நான் பேச விரும்பவில்லை, நீங்களே ஏதாவது பண்ணிக்கொள்ளுங்கள் என்று தெரிவித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. காமாட்சி :** அவர்கள் பேசியபோது புத்திசாலிகள் எல்லாம் தஞ்சாவூரில்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். . . .

**திரு. மணலி சி. கந்தசாமி:** உங்களுக்கும் காவிரிதான், நீங்கள் குடிக்கிற தண்ணீரைத்தான் நாங்களும் குடிக்கிறோம். நீங்களும் நாங்களும் ஒன்றுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சோழவள நாடு சோறுடைத்து என்று சொன்னவர்கள் சான்றோருடைத்து தொண்டை நாடு என்று தொண்டை நாட்டைத்தான் சொல்லியிருக்கிறார்கள் (சிரிப்பு).

**திரு. இ. எஸ். தியாகராசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழகத்திலே தொழிற் வளர்ச்சி அருமையான வளர்ச்சியாக இருக்கிறது என்று அறிக்கையிலே பார்க்கும்போது உண்மையிலேயே அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.





தொழில் வளர்ச்சிக்கு தமிழகத்திலே நல்ல காரியங்கள் செய்ய, டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன், சிப்காட், இண்டஸ்ட்ரியல் பைனான்ஸ் கார்ப்பரேஷன், டான்ஸி போன்ற நிறுவனங்கள் எல்லாம் அமைக்கப்பட்டு தமிழகத்தின் தொழிற் வளர்ச்சி பல மடங்குகள் பெருகுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது கழக அரசு என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 4-30)

இன்றையதினம் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனை எடுத்துக்கொண்டால் 13 நூற்பாலைகளை, சிக் மில்களை ஏற்றுக்கொண்டு சுமார் 2 கோடி ரூபாய் லாபம் பெறுகின்ற வாய்ப்பை, அந்த 13 மில்களும் சம்பாதிக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கி, அந்த சிக் மில்களை இந்த உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ள நம்முடைய தொழில் துறை அமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன். இரண்டு கோடி ரூபாய் லாபம் என்பது மட்டுமல்ல, ஏழை நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காத நேரத்திலே எப்படி கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலைக் குறைந்த விலையில் ஏழை நெசவாளர்களுக்கு அளிக்க முன் வந்ததோ அப்படி இந்த 13 மில்களிலேயும் உற்பத்தியாகும் நூலை குறைந்த விலைக்கு அளிக்க முன் வந்ததற்காக நெசவாளர்களின் சார்பில் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகளில் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமாக இருந்த நிலைமைகளைப் போக்கி இன்றையதினம் எல்லா நூற்பாலைகளும் லாபத்தில் நடக்கின்ற வாய்ப்பு நம்முடைய திறமை மிக்க தொழில் அமைச்சரவர்களுடைய திறமையால்தான் நடைபெறுகின்றன என்று கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

நூல் மில்கள், கூட்டுறவு நூற்பாலைகளைப்பற்றிச் சொல்லும் பொழுது இன்றைக்கு எல்லா கூட்டுறவு நூற்பாலைகளும் அதிகமாக வளர்ச்சி பெறவும், பல மில்களை விரிவுபடுத்துவதற்கும், இன்றைக்கு நல்ல திட்டங்களைத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். அவைகளை இன்னும் விரிவுபடுத்த மேலும் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1974 மார்ச் 27

அதேபோல் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மிகவும் நல்ல முறையில் நடக்கின்றன. பல தனிப்பட்ட சர்க்கரை ஆலைகளைவிட இந்த ஆலைகள் பல இலட்சக்கணக்கான ரூபாய் லாபம் சம்பாதிப்பது மட்டுமல்லாமல், ஏழை கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அதிகபட்சமாக லாபத்தைத் தருகின்ற ஒரு சூழ்நிலைகளை நம்முடைய சர்க்கரை ஆலைகள் உண்டாக்கியிருப்பதற்காக சர்க்கரை ஆலைத்துறையை நான் பாராட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்குத் தமிழகத்தில் மேலும் 2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் துவக்குவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றிருக்கிறது. இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியிலே உள்ள குறைகள் சிலவற்றைக் கூறுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

திருத்தணி மிகவும் பிற்பட்ட பகுதி. ஏற்கனவே ஆந்திரத்தில் இருந்து கவனிப்பாரற்று இருந்த பகுதி அது. எனவே, தயவு செய்து அங்கே ஒரு சர்க்கரை ஆலையை மாண்புமிகு அமைச்சரவர்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைப்பீர்களேயானால் அங்கே உள்ள ஏழை விவசாயிகள் வளர்ச்சி பெறுவதற்கு நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, திருத்தணி பகுதியை மறக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் என்னுடைய பகுதி ஆந்திராவிலிருந்து பல ஆண்டுகாலமாகத் தொழில் வளர்ச்சி பெறாமல் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. எனவே, கருணைகூர்ந்து அந்தப் பகுதியை தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று நான் இரண்டாண்டுகளாகக் கேட்டுக்கொண்டு வருகிறேன். இந்த நேரத்திலேயும் அதனை நினைவுபடுத்தி இந்த ஆண்டிலேயிருந்தாவது அதை பிற்பட்ட பகுதி என்று அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று கூட்டுறவுத் துறையிலே நெசவாளர்கள் 30 சதவிகிதம் மட்டும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே அங்கத்தினர்களாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் பெறுகின்ற நல்ல வாய்ப்பு



1974 மார்ச் 27] [திரு. இ. எஸ். தியாகராசன்]

களை அடைகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதில் மேலும் பல பிரைமரி சங்கங்களைப் பதிவு செய்து, அதன் மூலம் பல ஏழை நெசவாளர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்தால் 30 சதவிகிதத்தை 50 சதவிகிதமாக உயர்த்துவதற்கு வாய்ப்பிருக்கும். பிரைமரி சங்கங்களிலுள்ள நெசவாளர்கள் சேர்ந்தால் அரசு எந்த வகையிலே நல்லது செய்ய வேண்டும் என்று கருதுகிறதோ அந்தப் பலன்களைப் பெறுவதற்கு அவர்களுக்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நெசவாளர்கள் சங்கங்களுக்கு அளிக்கப்படும் ரிபேட்டைப் பொறுத்தவரையில் தமிழகத்தில்தான் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் ரிபேட் அளிக்கும் சூழ்நிலை இருக்கிறது. இன்றைய தினம் அகில இந்திய கூட்டுறவு நெசவாளர் சங்கம், பாம்பே கூட்டுறவு சங்கங்களுக்கு 10 இலட்சத்திலிருந்து 12 இலட்சம் ரூபாய் வரையில்தான் ரிபேட் தருகிறது மத்திய சர்க்கார். ஆனால் தமிழ்நாட்டிலேதான் கூட்டுறவுச் சங்கம், நெசவாளர் சங்கங்களுக்கு மட்டும் நம்முடைய தமிழக அரசு ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் ரிபேட் அளித்து ஏழை நெசவாளர்களுக்குப் பலன் போகும் நல்லதொரு வாய்ப்பை நம்முடைய அரசு வழங்கி வருகிறது. இதற்காக என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுகளைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கைத்தறி நிதி உதவிக் கழகம் ஒன்றை அமைத்து மாஸ்டர் வீவர்களுக்கு மட்டும் கடன் வழங்கி வருகிறார்கள். இந்த ஆண்டு சிறு நெசவாளர்களுக்கு கடன் வழங்குவதற்காக 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட இருப்பதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயில் ஒரு நெசவாளிக்கு ரூ. 100 தான் கடன் கொடுத்திருக்கிறோம் என்றால், இந்த 20 இலட்சம் ரூபாயில் எந்த அளவிற்கு உதவி செய்ய முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, கருணைகூர்ந்து இந்த 20 லட்சம் ரூபாய் என்பதை 2 கோடி ரூபாயாகவாவது உயர்த்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1974 மார்ச் 27

இன்றையதினம் பவர்லூம்ஸ் போட்டுக்கொள்ள நெசவாளர்களுக்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அந்த பவர்லூம்களை வாங்குவதற்கு நம்முடைய "ஹேண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன்" மூலம் நிதி உதவி அளிக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

இப்பொழுது இரண்டு இரண்டு தறிகள் கொடுக்கிறார்கள். அதற்குமேல் அனுமதி கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். கருணைகூர்ந்து அரசு அதற்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். வணக்கம்.

* திரு. கி. ஜெயராமன் : தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அடையவில்லை என்று வேண்டுமென்றே எதிர்க்கட்சியினர் சொல்கிறார்கள். அதற்கு ஒரேயொரு உதாரணத்தை மட்டும் நான் எடுத்துச் சொல்வதற்கு இங்கே மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்

Industrial Development Bank of India. என்ற ஒரு நிதி நிறுவனத்தின் மூலமாக நம்முடைய தமிழகத்திற்கு பல்வேறு தொழில்களுக்கு நிதி வசதியை, 1,668 இலட்சம் ரூபாயை, It has been disbursed உண்மையிலேயே 1,668 இலட்சம் ரூபாய் விநியோகித்திருக்கிறார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே இரண்டாவதாக, மகாராஷ்டிரத்திற்கு அடுத்தபடியாக நம்முடைய தொழில் நிறுவனங்கள் கடன் வசதியும் மற்ற வசதிகளும் பெற்று வருகின்றன. அதற்குப பின்னால்தான் குஜராத் மாநிலம் வருகிறது. அதற்குப் பின்னால் தான் மேற்கு வங்கம் வருகிறது.

இப்படியே நம்முடைய சிறுதொழில் வளர்ச்சியைப் பார்க்கும் பொழுது உலக வங்கியானது இரண்டு குழுக்களை இந்தியத் துணைக் கண்டத்திற்கு அனுப்பியதில், தமிழ்நாட்டில் சிறுதொழில்களெல்லாம் சரியான முறையிலே முன்னேற்றம் அடைந்து வருகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள்.



974 மார்ச் 27] [திரு. கி. ஜெயராமன்]

இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னால் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. சி. எஸ். அவர்கள்கூட நம்முடைய சிறுதொழில் முயற்சியைப் பாராட்டியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நாம் பார்க்கும்பொழுது நிச்சயமாகத் தொழில் வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

இங்கே அடிக்கடி எதிர்க்கட்சியினர் பலவேறு நிறுவனங்கள், பலவேறு வாரியங்கள், பலவேறு கார்ப்பரேஷன்கள் போன்றவைகளையெல்லாம் நிறுவி வீண் செலவைத் தான் மேற்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நாம் வளர்ச்சி அடைந்ததைப் பார்க்கும்பொழுது அங்கே என்ன செய்து முடித்திருக்கிறார்களோ அதை நிச்சயமாகப் பாராட்டத்தான் வேண்டும்.

இதே நேரத்தில், பஞ்சாபிலே ஆளும் காங்கிரஸ் நடத்தும் அந்த நிர்வாகத்தில் "பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டி" என்ற கமிட்டி அறிக்கையைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலேயிருந்து ஒரு பகுதியை மட்டும் படிப்பதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

'The Committee Report on the working of the Poultry corporation was perhaps the most damaging. While the State was experiencing shortage of eggs, the Corporation was sending eggs to Delhi and that too without getting any payment. The arrears of payment by the Delhi Agent had accumulated to Rs. 1.21 lakhs. This Agent had been favoured by the Managing Director out of the way. On the one hand the Delhi Agent was allowed the agency without observing proper formalities and also post-dated cheque was accepted by the Corporation which was dishonoured by the Bank.'

என்று பெரிய டேமேஜிங் ரிப்போர்டை பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி மூலம் அனுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் இங்கே இல்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மற்றொரு கொள்கையை நான் இங்கே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அண்மையில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் 'டுயல் பிரைஸ் பாலிசி' என்ற கொள்கையை மத்திய

[திரு. கி. ஜெயராமன்] [1974 மார்ச் 27

சர்க்காரிலே மத்திய தொழிலமைச்சர் திரு. சி. எஸ். அவர்கள் சர்க்கரையிலே ஆரம்பித்து, இரும்பிலிருந்து, சிமெண்டுக்கு வந்திருக்கிறார்கள்.

அதே மாதிரியாக நைலான், ரயான், ஸ்டேபிள் ஃபைபர் யார்ன் மாதிரி முக்கிய பொருள்களுக்கெல்லாம் வேண்டுமென்றே டியூயல் பிரைஸ் பாலிசியை வைத்துக்கொண்டு வாலண்டரி டிஸ்ட்ரிப்யூஷன் என்ற திட்டத்தின்கீழ் குட்டிச் சுவராக்குகிறார்கள்.

நாம் சந்தானம் கமிட்டி அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம். வெளியிட்டதோடு நடவடிக்கை எடுத்து நிறைவேற்றி வருகிறோம். ஆனால் இந்தியத் துணைக்கண்டத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே நூல் போன்ற முக்கிய பொருள்களுக்குக் கட்டுபடியாகும் விலையை நிர்ணயிக்க டாரிப் கமிஷன் ரிப்போர்ட் அளிக்கப்பட்டு பாராளு மன்றத்தில் இன்னும் வெளியிடப்படவே இல்லை. அமுலாக்கப்படுமா என்பது தெளிவாக இல்லை. எவ்வளவோ தடவை இதைப்பற்றிச் சொல்லிவிட்டோம். நம்முடைய பாராளு மன்ற உறுப்பினர்கள் அங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தமிழகத்திலிருந்து சென்றவர்கள் ஒரு தடவை கூடச் சொல்லவில்லை.

அந்த ரிப்போர்ட்டில் நூலுக்குக் கட்டுபடியாகும் விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். அதை அமுலாக்காமல் வாலண்டரி டிஸ்ட்ரிப்யூஷன் என்ற முறையில் முதலாளிகள் டாரிப் கமிஷன் ரிப்போர்ட்டில் உள்ள விலையைக் காட்டிலும் அதிகமான விலைக்கு விற்பதற்கு வழி செய்திருக்கிறார்கள். இப்போதுகூட ரயான் போன்றவற்றுக்கு கிலோ ஒன்றுக்கு 2½ ரூபாய் அதிகமாகி இருக்கிறது. எப்படி நாம் சர்க்கரையை 70 சதவிகிதம் லெவியாகவும் 30 சதவிகிதம் ஃப்ரீ மார்க்கெட்டு என்று விற்கிறோமோ அதே போல் இரண்டு விலைகள் இருப்பதன் காரணமாக (வெஸ்டெட் இண்டரஸ்ட்ஸ்) வலிமை படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள், மேல் மட்டத்தில் இருப்பவர்கள் முதலாளிகள் லாபம் அடையும் வகையில் தவறான வழியில், குறுக்கு வழியில் பல கோடி ரூபாயைப் பெற்று வருகிறார்கள் என்று நாடாளு மன்றத்திலேயே எடுத்துச் சொல்லப்பட்டது. அதைப்பற்றி மத்திய அமைச்சரிடத்திலிருந்து எந்தப் பதிலும் காணோம். கவனிக்கிறோம் என்று சொல்கிறார்களே



1974 மார்ச் 27] [திரு. கி. ஜெயராமன்]

தவிர, ஆக்கபூர்வமாக ஏதும் சொல்லவில்லை. ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது அதைப்பற்றிப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நாம் சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டை ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுத்திருப்பதோடுகூட இதே தொடர்பான மசோதாகூட இதே தொடரில் கொண்டுவர இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

இதை எல்லாம் பார்க்கும்போது, இந்தியத் துணைக் கண்டத்தோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல பல காரியங்களைச் செய்யும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்த மாநிலத்தில் இருக்கக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.

நேரம் இல்லாத காரணத்தால் கைத்தறி பற்றி ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிபேட் அளித்து வருகிறோம். 5 பைசா ரிபேட், ஸ்பெஷல் ரிபேட் 10 பைசா என்று இரண்டு முறைகளிலே கொடுக்கிறோம். இதனால் பிரைமரி வீவர்ஸ் சொசைடி அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் சிக்கல் ஏற்படுகிறது. எல்லாவற்றையும் அவ்வப்போது கணக்கில் கொண்டு வராமல் பிரைமரி சொசைடிஸ் ஸ்பெஷல் ரிபேட் காலங்களில் அதிகமாக விற்பனையாக கணக்கை எழுதுகிறார்கள். மொத்த ரிபேட் கணக்கு 150 லட்சம்; சாதாரண ரிபேட் கணக்கு 15 லட்சம் தான் வருகிறது. மீதி ஸ்பெஷல் ரிபேட்தான். டியூயல் பிரைஸ் பாலிசி போல் இரண்டு வித ரிபேட் தேவையில்லை.

ரிபேட் 10 பைசா என்று ஒரேயடியாகச் செய்து விட்டால் கணக்குகளை மாற்றி எழுதுவது நடைபெறாது. அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வீட்டுக் குடியிருப்புக் கடன், நெசவாளர்களின் மற்றப் பிரச்சினைகளை நேரடியாக அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்து விடுகிறேன் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவர் அவர்களே, தொழிலமைச்சருடைய மானியக் கோரிக்கைகளின்மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1974 மார்ச் 27

சிட்கோ, சிப்காட், டிட்கோ, டான்சி முதலான நிறுவனங்கள் மூலமாக நல்ல முன்னேற்றம் அடைந்து இரண்டாவது கட்டத்தை அடைந்திருக்கிறோம். இவற்றை ஆரம்பிக்கும்போது கார்ப்பரேஷன்கள் இவ்வளவு தேவையா என்ற ஐயப்பாடு ஏற்பட்டது. இப்போது அவற்றின் உதவியால் எல்லாவிதமான நன்மைகளும் ஏற்பட்டு நல்ல தொழில் வளர்ச்சி வளருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் இன்று நமக்கு அதிகம் தேவை அக்ரோ பேஸ்டு காட்டேஜ் இண்டஸ்ட்ரிஸ்தான். நகரங்களைப் பொறுத்து தொழில் வளர்ச்சிக்கான காரியங்களைச் செய்யும்போது 10 பர்சன்ட், 20 பர்சன்ட் தள்ளிக் கொடுத்து தொழில் வளர்க்கும் நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

அக்ரோ பேஸ்டு காட்டேஜ் இண்டஸ்ட்ரிசை வளர்க்க வேண்டுமென்று சொல்லும்போது நாட்டில் இருக்கும் முக்கியமான தொழில் செரி கல்ச்சர். குறைந்த பணத்தை வைத்து நல்ல பயனை அடையலாம்.

அந்த மாதிரி பார்க்கும்போது சில்க் ஹாண்ட்லூம்சுக்கும் தேவையாக இருக்கிறது, காதி போர்டுக்கும் தேவையாக இருக்கிறது. இப்போது நமது தேவையில் 5 சதவிகிதந்தான் உற்பத்தியாகிறது.

ரா சில்க் தேவை பூராவையும் பெங்களூர் மார்க்கெட்டுக்குப் போய் வாங்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. நாம் உற்பத்தி செய்து பெங்களூர் மார்க்கெட்டுக்கு அனுப்பி அங்கிருந்து பட்டை வாங்குகிறோம். நம்முடைய நாட்டில் இருக்கும் உற்பத்தியை பெங்களூர் மார்க்கெட்டுக்கு அனுப்பினால் நம்முடைய தொழில் வளர முட்டுக்கட்டையாக இருக்கிறது என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது.

காதி போர்டை எடுத்துக் கொண்டால் 20,000 தறிகள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். அவர்கள் எல்லாம் பெங்களூரில் போய் பட்டு வாங்குகிறார்கள். இங்கேயே பட்டை வாங்கக்கூடிய நிலைமையில் உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டம் போட வேண்டும்.



1974 மார்ச் 27] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

ஒரு லட்சம் கிராம் தேவை என்றால் 5,000 ஏக்கர் இரிகேடட் லாண்ட் தேவையாக இருக்கிறது. இப்போது 1,200 ஏக்கருக்குத் தான் திட்டம் போட்டிருக்கிறோம். இதை நன்றாகச் செயல் படுத்தினால் சாதாரண மக்கள் 500 ரூபாய் முதலீடு செய்தால் வருஷத்திற்கு 4,000 ரூபாய் வரும் என்று சொல்லுகிறார்கள். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வர வேண்டும்.

எக்ஸ்போர்ட் மார்க்கட் கூட இருக்கிறது. சில்க் வேஸ்ட் பயன் படுகிறது. இப்போது இருக்கக்கூடிய ஸ்பன் சில்க்குக்கு இரண்டு யூனிட் வைத்திருக்கிறோம். 75 பர்சன்ட் எக்ஸ்போர்ட்டுக்குப் போகிறது. சில்க் வோர்ம், பாப்பா—கூட்டுப் புழுவை வைத்து சோப் தயார் செய்யலாம். உடனடியாக அதை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்.

தென்காசியில் 1965-ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் அப்படியே நின்று கொண்டிருக்கிறது—8 வருஷ காலமாக. வளர்ச்சி ரொம்பக் குறைவாக இருக்கிறது. என்ன காரணமோ தெரியவில்லை. குறைந்த செலவில் மூலதனத்தோடு சாதாரண கிராமத்தில் இருக்கக்கூடியவர்கள் வளருவதற்கு உரிய திட்டத்தை அதிகமாக விரிவுபடுத்த வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இண்டஸ்ட்ரியல் சென்டர் என்ற முறையில் சில இடங்களில் ட்ரெய்னிங் சென்டர்களாக ஆரம்பிக்கப்பட்டு ஒரு பக்கத்தில் மூடிக் கொண்டிருக்கிறோம். இப்போது சணல் மூலமாக கம்பளி நெய்ய வேண்டுமென்ற திட்டம் பல இடங்களில் உருவாக்கப்பட்டது. எட்டு வருஷங்கள் ஆன பிறகு வேலை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் வெளியே அனுப்பப்படுகிறார்கள்.

தென்காசி தாலுகாவில் ஆயக்குடி என்ற இடத்தில் எட்டு ஆண்டுகள் வேலை பார்த்த ஒர்க்கர்ஸை வீட்டுக்குப் போகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குடும்பமே தவிக்கிறது. இப்படி பல குடும்பங்கள் தவிக்கின்றன. ஸ்கில்ட் லேபரர்சை மற்றக் காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்ளத் தயாராயிருக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ஷுகர் இன்டஸ்ட்ரீஸ் எட்டோ ஆறோ வருவதாகச் சொல்கிறார்கள். அதை டிஸ்ட்ரிக்ட் வைஸ் என்றில்லாமல் இரண்டு டிஸ்ட்ரிக்ட்களை சேர்த்து ஒரு இன்டஸ்ட்ரி வைக்கக்கூடிய விதத்தில் வழி செய்யலாம்.

திருநெல்வேலியில் சங்கரன்கோவிலில்தான் 5,000 ஏக்கர் கரும்பு பயிரிடுகிறார்கள். அந்த ஐயாயிரம் ஏக்கர் நிலத்தில் விளைகிற கரும்பை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு ஷுகர் பாக்டரி வைக்க முடியாது. அதோடு ஒட்டியிருக்கிற ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகாவையும் இணைத்தால்தான் ஒரு ஷுகர் பாக்டரி வைக்க முடியும். ஆகவே, இரண்டையும் சேர்த்து ஒரு பாக்கட்டாக வைக்க வேண்டுமே தவிர ஜில்லா அடிப்படையில் என்று செய்யக் கூடாது.

நான்கு கோடி ரூபாய் செலவழித்து அந்தத் திட்டத்தை உருவாக்கப் போகிறார்கள். அது பப்ளிக் செக்டரில் இருக்குமா அல்லது ஜாயின்ட் செக்டரில் இருக்குமா என்பதுபற்றி தெளிவாக கூறி தைரியத்தோடு செயல்படத் தயாராயிருக்க வேண்டும்.

சோஷியலிஸம் என்று பேசிக் கொண்டிருந்தாலும், கரும்பு உற்பத்தி செய்கிறவர்களுக்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கப் போகிறீர்கள் என்பதை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். ஏனெனில் ஷுகர் இன்டஸ்ட்ரி என்றிருந்தால் பல பைப்ராக்ட்ஸ் செய்யலாம். பேப்பர் செய்யலாம், கார்ட்போர்ட் செய்யலாம், ஆயில் செய்யலாம். ஆகவே நான்கு கோடி ரூபாயில் ஒரு திட்டம் போடும்போது விவசாய மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு திட்டம் வகுத்தால்தான் நாம் வளர்ச்சி அடைய முடியும். இல்லாவிடில் இதற்கு முன் வர யோசிப்பார்கள். ஆகவே ஆர அமர யோசித்து விரிவானதொரு திட்டத்தை உருவாக்க வேண்டும்.

விங்கின் மான் கமிஷன் உருவாக்கப்பட்டு எங்கெங்கு புது கோர்ட்கள் உருவாக்கவேண்டும் என்பதுபற்றி ஒரு ரிப்போர்ட் கூட அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை அனுப்பி கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் ஆகின்றன. ஆனால் இன்னும் முடிவு என்ன என்று தெரியவில்லை.





இன்று விவகாரங்களின் செலவு அதிகமாகிக் கொண்டு வருகிறது. டிசென்ட்ரலைஸ் செய்யவேண்டுமென்று திட்டம் உருவாக்கப்பட்டு அந்தக் கமிஷனை அமைத்து அவர்கள் ரிப்போர்ட் அனுப்பி எட்டு மாதங்களாகின்றன.

தென்காசியில் ஒரு சப்கோர்ட் வேண்டுமென்று சொன்னார்கள்.

சங்கரன்கோவிலில் ஒரு முன்சீப் கோர்ட் வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகச் செலவு ஏற்படாது.

ஆகவே மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அந்த ரிப்போர்ட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Hon. Speaker, Sir, when I read the news this morning that the Madhya Pradesh Government has decided not to employ anybody getting more than Rs. 500 from outside in India Government services and in India Government industries, I was really shocked. This is the worst form of disintegration that can happen in the country, because the investment made in Central Government industries is an investment made by all the people in India. I think this sort of policy should be objected to and I am sure that this Government will do it.

Last night I was supplied with a set of books pertaining to Industrial Development in this State. I had only little time to go through those books. When I read them, I was pleasantly shocked to see how much progress we have made in industries and how little we left as deficit.

I understand that Letters of Intent have been given for seventy five new major industries in this State. All these have not been given wide publicity or advertisement. To my knowledge they have not been published or perhaps it has not reached my eyes as a layman.

After going through the review, I found that the Government has done a wonderful job getting Letters of Intent for these seventy-five industries. I am sure the Department will take care to see that the licences are properly utilised and maximum benefit is derived to Tamil Nadu.

[Thiru K. M. Subramaniam] 1974 மார்ச் 27

Secondly, I went through the Review of Tamil Nadu Textile Corporation. I went through the pamphlet relating to sick spinning mills. I will not say spinning mills but I will say sick mills. When I made a cursory glance of the book, I found that every sick mill has made a profit not only one mill but all the sick mills.

Now all these sick mills have become healthy and they have been cured completely. I think they have cured themselves. I will be failing in my duty if I do not compliment the Hon. Minister and the Department for curing all these sick mills.

I also found that there is a proposal to nationalise all these mills. I am all for nationalisation. I do not think that All India nationalisation is right in this case. The decentralisation of nationalisation is very necessary. Whatever sick mills the Government have improved, the Government should nationalise them. In the mills, some may be good, some may be bad and some may be indifferent. I am happy that you are going to nationalise all the mills that have been improved.

Coming to the most disputed point of public sector versus joint sector, I am very glad that the Hon. Minister for Industries has given a categorical assurance this morning that this Government would always favour public sector undertakings, if the Central Government takes it as a policy in all the States. I am with him in this matter.

I am only sorry that the Government of India in spite of many promises made during 1971 elections has not started the nationalisation of industries. I am neither young nor a Turk. I am not a young Turk.

The nationalisation of industries is very important at the present state of the country. There is a misconception that the nationalised industries always bring loss. Excuse me when I say this with my limited experience and knowledge in the industries. I can say that the private industries are also incurring loss.

It is not correct to say that the nationalised industries alone are making losses and that the ordinary private industries have not incurred losses. In the private industry in order to share the



1974 மார்ச் 27] [Thiru K. M. Subramaniam]

profits among themselves many practices are adopted to show that the industry is working in loss. In the public sector undertakings, the profits will be shared by the citizens and will be utilised for common good.

I think it is wrong to say that the public sector undertakings are incurring loss and that private industries are able to manage their industries in a clever way and that there is no corruption in the private industry. Even in the private industries there is corruption.

Coming to the handloom industry, which, I think is my favourite subject, I would like to say that I have taken lot of pains to study it. I would like to point out that whatever good that is done by the Government has not reached the actual weavers at all. I think that I am not revealing a secret when I say this. There is a difference between the producers' price and consumers' price.

In the Punjab, there is a difference of 30 per cent between the producer price and the consumer price. If this difference is eliminated, what is the benefit that can be given to an ordinary handloom weaver?

I am sure that this Government will examine the possibility of setting up a Wage Board for the handloom weavers, because I known that in Saidapet, a family consisting of 5 or 6 persons is able to get Rs. 16 per week. Just imagine the appalling conditions in which they live. I therefore request that a Wage Board should be constituted and their wages fixed so that each adult will get a sum of Rs. 5 per day. Otherwise, this industry cannot survive.

Next I would come to the 'Market Research'. I am very sorry that in spite of many new developments and many new techniques the market research has not been developed. I can quote an example.

In the Pubjab, there is sale of 72 inches matty cloth manufactured by Madras handloom weavers. It is used by them for cross-stitching purposes. There is good demand for this variety and

[Thiru K. M. Subramaniam] [1974 மார்ச் 27

private individuals are taking full advantage of it. They buy the cloth at Rs. 3 per metre in Madras and selling them at Rs. 8 per metre in the Punjab.

I hope and trust that with the new dynamism of the present Government, the Department will conduct some national and international market research so that we may know what we are going to do to improve the demand for our clothes and also for other products.

(மாலை 5-00)

I am glad that a major industry to manufacture turkish towels is going to be started in Kumarapalayam. There is an excellent export market for tere-towels all over the world. So, I am very happy that such an industry is going to be started in Kumarapalayam and one or two other places. Such industries would be useful to the people.

Though we are finding fault and accusing each other, the handloom industry has developed from 1947 when the total production of handloom cloth was 700 million yards but today the total production of handloom cloth in India is 3,000 million yards. I am not talking of Tamil Nadu. There is a very great demand for good varieties of handloom cloth like bed-spreads.

But other States also are manufacturing beautiful varieties. Even in Delhi, they are manufacturing beautiful varieties. So also the bed-spread which is manufactured in Sholapur is competing with the bed-spread manufactured in Karur. So, I say good research and good analysis of things must be done. I am sure the handloom industry has a good future and it is the middlemen who are the biggest curse for the handloom industry.

(திரு. துரைமுருகன் தலைமை)

I am also happy that the Hon. Minister for Industries is thinking about service co-operatives which are very important. From my experience, I can say that they are very necessary. Just as the people who live in houses feel that they should own them, the people engaged in this industry also feel that they should own the service co-operatives. I am sure with the starting of the service co-operatives, the conditions of the handloom industry in our State would be improved.



1974 மார்ச் 27]

* திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தொழில்கள், கைத்தறி, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் ஆகிய மானியங்களை நெஞ்சார வரவேற்று, சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த நாட்டின் எதிர்காலத்தை கணிக்க வேண்டியதற்கு மிக முக்கியமானது தொழில் வளர்ச்சியாகும். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைச்சர் அவர்கள் சிந்தித்து சிந்தித்துப் பார்த்து பல்வேறு பணிகளைச் செய்கிற காரணத்தால் நாட்டில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடியிலும், நாட்டிலே ஏற்பட்டு இருக்கும் மின்சார வெட்டு போன்ற பிரச்னைகளிலும் தமிழ் நாட்டை முடிந்த அளவுக்குக் காப்பாற்றி இன்றையதினம் தொழில் துறையில் நாம் எல்லோரும் மகிழ்ச்சியடையத்தக்க அளவுக்கு, பாராட்டுகிற தன்மையை உருவாக்கியிருக்கிறார்கள்.

நம்முடைய தமிழக தொழில் அமைச்சரைப் பொறுத்த உரையில், டெல்லியில் நடைபெறுகிற மாநாடுகளில் கலந்து கொள்கிற நேரத்திலும், மற்ற தொழில் விற்பனையாளர்களோடு கலந்துகொள்கிற நேரத்திலும், அவர்கள் எப்படியெல்லாம் நுட்பமாக கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள் என்பதைப் பார்த்து பத்திரிகைகள் எல்லாம் பாராட்டுகின்றன. அந்த வகையில் காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற அளவில் இல்லாமல் ஆளும் கட்சிக்காரர்களாகிய நாங்கள் அவரைப் பாராட்டுகிறோம்.

ஆயிரம் சொன்னாலும், இன்றையதினம் பல்வேறு வகையில் எதிர்நீச்சல் போட்டு, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நாம் சிறப்பான பணியை செய்து இருக்கிறோம் என்பதை இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கும் குறிப்புகள் காட்டிக்கொண்டிருக்கின்றன. காலையில் அமைச்சர் அவர்கள் தீவிரமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இங்கே நமக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் மிகுதியாக இல்லை என்று சொன்னார்கள். அது ஓரளவிற்கு உண்மையென்றாலும் கூட, "இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்". என்று

வள்ளுவர் சொன்னது போல் இருக்கிற வசதிகளைக் கூட பயன் படுத்திக்கொள்ளாத நிலையை நாம் சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.

சேலம் மண்ணில் தூங்கிக்கொண்டிருக்கும் இரும்பை நாம் வெளிக்கொணர்ந்து இந்த நாட்டில் நூற்றுக்கணக்கான இன்ஜி னீரிங் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். அதை மத்திய சர்க்கார் என்ன காரணத்தினாலோ விரைவுபடுத்த முடியாத நிலையில் வைத்து இருக்கிறது.

அங்கே உத்திரப் பிரதேசத்தில் தேர்தல் வருகிறது என்று சொன்னால், ஓடி ஓடிப்போய் புதிதாக அணு மின் நிலையங்களைத் திறந்துகொண்டு இருக்கிறார்கள். தேர்தல் வந்தால் அங்கே தொழிற்சாலை. ஆனால், இங்கே பிரதமர் இந்திரா அம்மையாரை வரவழைத்து சேலம் மாங்கனியைக் கொடுத்து, சேலத்தில் இருக்கும் இரும்புக் கனியைத் தோண்டியெடுக்க விரைவான நடவடிக்கை எடுங்கள் என்று முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் ஒரு பெரிய வரவேற்பைக் கொடுத்துக் கேட்டார்கள். ஆண்டு பல கடந்தன. ஆனால், அது செயல்பட வில்லை என்று தெரிவித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்ல விரும்பு கிறேன்.

அதுபோல் நெய்வேலியில் நிலக்கரி தூங்கிக்கொண்டிருக்கிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் ஆரம்பித்தால் பல்வேறு வசதிகளைப் பெறலாம். மின்சார வசதி பெறலாம், இன்னும் மற்ற மற்ற வசதிகளைப் பெறலாம் என்று சொன்னாலும் கூட, அதை முனைப்பாக தீவிரமாக எடுத்துக்கொள்ளாதது மிகவும் வருந்தத் தக்க வேண்டிய ஒன்றாகும்.

காவிரி வட்டாரத்தில் இருக்கும் எண்ணெய் வளத்தை எடுப்ப தற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை. நம்முடைய நாட்டில் வளத்திற்குக் குறைவு இல்லை; நிறைவாக இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் பழைய திராவிடநாடு ஏடுகளில் எழுதிக் காட்டியது போல், ஒரு பகுதியில் இரும்பு தூங்கிக்கொண் டிருக்கிறது, இன்னொரு பக்கம் நிலக்கரி தூங்கிக் கொண்டிருக் கிறது, மற்றொரு பக்கத்தில் எண்ணெய் வளம் இருக்கிறது.





இவைகளையெல்லாம் மத்திய அரசாங்கம் கண் திறந்து பார்த்து முழுக்க முழுக்க பயன்படுத்த முன்வந்திருக்குமானால் இன்றைய தினம் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், நாட்டிலே இருக்கும் பொருளாதார நெருக்கடி அறவே வந்திருக்காது. இதற்கு மாநில அரசாங்கம் என்ன செய்யமுடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதையெல்லாம் நாங்கள் சொன்னால் ஏதோ எங்கள் கட்சியின் கோஷம், மாநில சுயாட்சி கோஷம், என்று சாக்கு சொல்கிறார்கள். இந்த அடிப்படை உண்மையைப் பார்க்கிறபோது—சில அங்கத்தி னர்கள் கூறினார்கள் அவர்களை தயவுசெய்து கேட்டுக்கொள் கிறேன்—இருக்கிற நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

இங்கே சென்னையில் மத்திய அரசாங்கம் உரத் தொழிற்சாலை வைத்திருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டும். உரம் நமக்கு மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயே பற்றாக்குறை என்ற சூழ்நிலை இருக்கிறது. அகில இந்தியாவிற்கும் பயன்படும் வகையில் சென்னை உரத் தொழிற்சாலையைப் பெருக்கவேண்டும் என்பதை நம்முடைய அரசாங்கம் சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆகவே, மீண்டும் ஒரு முறை இருக்கிற உற்பத்தியை இன்னும் 50 சத விகிதம் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், உர உற்பத்தி நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமாக இருக் கிறது என்று நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

அதேபோல் தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக சில தொழில்களை நடத்துகின்றது. ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி, அரக்கோணம் தொழிற்சாலை இப்படியெல்லாம் சிறப்பாக நடைபெறுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல யோசனை சொல்லி சிறப்பான முறையில் நடத்திக்கொண் டிருக்கிறார்கள்.

நான் விடுக்கிற வேண்டுகோள் என்னவென்றால், ஏதோ வடார் காடு மாவட்டத்தில் ஒரு அரக்கோணம் என்றோ, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம் என்றோ இல்லாமல் ஒவ்வொரு மாவட் டத்திலும் ஒவ்வொரு தொழிற்சாலை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் மாநில அரசின் மூலமாகச் செய்ய வேண்டுமென்று பணி வாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளுவர் சொன்னது போல் இருக்கிற வசதிகளைக் கூட பயன் படுத்திக்கொள்ளாத நிலையை நாம் சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.

சேலம் மண்ணில் தூங்கிக்கொண்டிருக்கும் இரும்பை நாம் வெளிக்கொணர்ந்து இந்த நாட்டில் நூற்றுக்கணக்கான இன்ஜீனீரிங் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். அதை மத்திய சர்க்கார் என்ன காரணத்தினாலோ விரைவுபடுத்த முடியாத நிலையில் வைத்து இருக்கிறது.

அங்கே உத்திரப் பிரதேசத்தில் தேர்தல் வருகிறது என்று சொன்னால், ஓடி ஓடிப்போய் புதிதாக அணு மின் நிலையங்களைத் திறந்துகொண்டு இருக்கிறார்கள். தேர்தல் வந்தால் அங்கே தொழிற்சாலை. ஆனால், இங்கே பிரதமர் இந்திரா அம்மையாரை வரவழைத்து சேலம் மாங்கனியைக் கொடுத்து, சேலத்தில் இருக்கும் இரும்புக் கனியைத் தோண்டியெடுக்க விரைவான நடவடிக்கை எடுங்கள் என்று முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் ஒரு பெரிய வரவேற்பைக் கொடுத்துக் கேட்டார்கள். ஆண்டு பல கடந்தன. ஆனால், அது செயல்படவில்லை என்று தெரிவித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுபோல் நெய்வேலியில் நிலக்கரி தூங்கிக்கொண்டிருக்கிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் ஆரம்பித்தால் பல்வேறு வசதிகளைப் பெறலாம். மின்சார வசதி பெறலாம், இன்னும் மற்ற மற்ற வசதிகளைப் பெறலாம் என்று சொன்னாலும் கூட, அதை முனைப்பாக தீவிரமாக எடுத்துக்கொள்ளாதது மிகவும் வருந்தத்தக்க வேண்டிய ஒன்றாகும்.

காவிரி வட்டாரத்தில் இருக்கும் எண்ணெய் வளத்தை எடுப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை. நம்முடைய நாட்டில் வளத்திற்குக் குறைவு இல்லை; நிறைவாக இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் பழைய திராவிடநாடு ஏடுகளில் எழுதிக் காட்டியது போல், ஒரு பகுதியில் இரும்பு தூங்கிக்கொண்டிருக்கிறது, இன்னொரு பக்கம் நிலக்கரி ஒளிந்து கொண்டிருக்கிறது, மற்றொரு பக்கத்தில் எண்ணெய் வளம் இருக்கிறது.





இவைகளையெல்லாம் மத்திய அரசாங்கம் கண் திறந்து பார்த்து முழுக்க முழுக்க பயன்படுத்த முன்வந்திருக்குமானால் இன்றைய தினம் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், நாட்டிலே இருக்கும் பொருளாதார நெருக்கடி அறவே வந்திருக்காது. இதற்கு மாநில அரசாங்கம் என்ன செய்யமுடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதையெல்லாம் நாங்கள் சொன்னால் ஏதோ எங்கள் கட்சியின் கோஷம், மாநில சுயாட்சி கோஷம், என்று சாக்கு சொல்கிறார்கள். இந்த அடிப்படை உண்மையைப் பார்க்கிறபோது—சில அங்கத்தினர்கள் கூறினார்கள் அவர்களை தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்—இருக்கிற நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

இங்கே சென்னையில் மத்திய அரசாங்கம் உரத் தொழிற்சாலை வைத்திருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டும். உரம் நமக்கு மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயே பற்றாக்குறை என்ற சூழ்நிலை இருக்கிறது. அகில இந்தியாவிற்கும் பயன்படும் வகையில் சென்னை உரத் தொழிற்சாலையைப் பெருக்கவேண்டும் என்பதை நம்முடைய அரசாங்கம் சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆகவே, மீண்டும் ஒரு முறை இருக்கிற உற்பத்தியை இன்னும் 50 சதவிகிதம் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், உர உற்பத்தி நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமாக இருக்கிறது என்று நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

அதேபோல் தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக சில தொழில்களை நடத்துகின்றது. ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி, அரக்கோணம் தொழிற்சாலை இப்படியெல்லாம் சிறப்பாக நடைபெறுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல யோசனை சொல்லி சிறப்பான முறையில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நான் விடுக்கிற வேண்டுகோள் என்னவென்றால், ஏதோ வடார்க்காடு மாவட்டத்தில் ஒரு அரக்கோணம் என்றோ, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம் என்றோ இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு தொழிற்சாலை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் மாநில அரசின் மூலமாகச் செய்ய வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வள்ளுவர் சொன்னது போல் இருக்கிற வசதிகளைக் கூட பயன்படுத்திக்கொள்ளாத நிலையை நாம் சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.

சேலம் மண்ணில் தூங்கிக்கொண்டிருக்கும் இரும்பை நாம் வெளிக்கொணர்ந்து இந்த நாட்டில் நூற்றுக்கணக்கான இன்ஜினீரிங் தொழிற்சாலைகளை உருவாக்க முடியும். அதை மத்திய சர்க்கார் என்ன காரணத்தினாலோ விரைவுபடுத்த முடியாத நிலையில் வைத்து இருக்கிறது.

அங்கே உத்திரப் பிரதேசத்தில் தேர்தல் வருகிறது என்று சொன்னால், ஓடி ஓடிப்போய் புதிதாக அணு மின் நிலையங்களைத் திறந்துகொண்டு இருக்கிறார்கள். தேர்தல் வந்தால் அங்கே தொழிற்சாலை. ஆனால், இங்கே பிரதமர் இந்திரா அம்மையாரை வரவழைத்து சேலம் மாங்கனியைக் கொடுத்து, சேலத்தில் இருக்கும் இரும்புக் கனியைத் தோண்டியெடுக்க விரைவான நடவடிக்கை எடுங்கள் என்று முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் ஒரு பெரிய வரவேற்பைக் கொடுத்துக் கேட்டார்கள். ஆண்டு பல கடந்தன. ஆனால், அது செயல்படவில்லை என்று தெரிவித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுபோல் நெய்வேலியில் நிலக்கரி தூங்கிக்கொண்டிருக்கிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் ஆரம்பித்தால் பல்வேறு வசதிகளைப் பெறலாம். மின்சார வசதி பெறலாம், இன்னும் மற்ற மற்ற வசதிகளைப் பெறலாம் என்று சொன்னாலும் கூட, அதை முனைப்பாக தீவிரமாக எடுத்துக்கொள்ளாதது மிகவும் வருந்தத்தக்க வேண்டிய ஒன்றாகும்.

காவிரி வட்டாரத்தில் இருக்கும் எண்ணெய் வளத்தை எடுப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை. நம்முடைய நாட்டில் வளத்திற்குக் குறைவு இல்லை; நிறைவாக இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் பழைய திராவிடநாடு ஏடுகளில் எழுதிக் காட்டியது போல், ஒரு பகுதியில் இரும்பு தூங்கிக்கொண்டிருக்கிறது, இன்னொரு பக்கம் நிலக்கரி ஒளிந்து கொண்டிருக்கிறது, மற்றொரு பக்கத்தில் எண்ணெய் வளம் இருக்கிறது.





இவைகளையெல்லாம் மத்திய அரசாங்கம் கண் திறந்து பார்த்து முழுக்க முழுக்க பயன்படுத்த முன்வந்திருக்குமானால் இன்றைய தினம் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், நாட்டிலே இருக்கும் பொருளாதார நெருக்கடி அறவே வந்திருக்காது. இதற்கு மாநில அரசாங்கம் என்ன செய்யமுடியும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதையெல்லாம் நாங்கள் சொன்னால் ஏதோ எங்கள் கட்சியின் கோஷம், மாநில சுயாட்சி கோஷம், என்று சாக்கு சொல்கிறார்கள். இந்த அடிப்படை உண்மையைப் பார்க்கிறபோது—சில அங்கத்தினர்கள் கூறினார்கள் அவர்களை தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்—இருக்கிற நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

இங்கே சென்னையில் மத்திய அரசாங்கம் உரத் தொழிற்சாலை வைத்திருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டும். உரம் நமக்கு மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயே பற்றாக்குறை என்ற சூழ்நிலை இருக்கிறது. அகில இந்தியாவிற்கும் பயன்படும் வகையில் சென்னை உரத் தொழிற்சாலையைப் பெருக்கவேண்டும் என்பதை நம்முடைய அரசாங்கம் சுட்டிக் காட்டியிருக்கிறது. ஆகவே, மீண்டும் ஒரு முறை இருக்கிற உற்பத்தியை இன்னும் 50 சதவிகிதம் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், உர உற்பத்தி நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமாக இருக்கிறது என்று நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

அதேபோல் தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக சில தொழில்களை நடத்துகின்றது. ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி, அரக்கோணம் தொழிற்சாலை இப்படியெல்லாம் சிறப்பாக நடைபெறுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல யோசனை சொல்லி சிறப்பான முறையில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நான் விடுக்கிற வேண்டுகோள் என்னவென்றால், ஏதோ வடாற்காடு மாவட்டத்தில் ஒரு அரக்கோணம் என்றோ, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம் என்றோ இல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு தொழிற்சாலை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் மாநில அரசின் மூலமாகச் செய்ய வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மகிழ்ச்சியான ஒரு செய்தியைத் தந்து இருக்கிறார்கள். நலிந்து போய்க்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளைத் தேசியமயமாக்குவது என்பதாகும் அது. சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ் நிறுவனம், என்னுடைய தொகுதியில் இருக்கும் சக்தி பைப்ஸ் நிறுவனம், ஆகியவற்றை நாட்டுடைமையாக்கப் போகிறோம் என்று மகிழ்ச்சியான செய்தியை தந்து இருக்கிறார்கள். சக்தி பைப்ஸ் நிறுவனம் நெருக்கடியாக இருந்த நேரத்தில் அதற்கு உதவி செய்து, இப்போது அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் இயங்கி வருகிறது. அங்கேயிருக்கிற 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கு இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அங்கே உற்பத்தியாகும் குழாய்கள் மேல்நாடுகளில் நல்ல பெயர் எடுத்து, அதற்கு ஆர்டர்கள் அங்கிருந்து வந்துகொண்டிருக்கின்றன. நல்ல முறையில் வளரும் சக்தி குழாய் நிறுவனத்தை இன்னும் விரிவாக்கவும், பல்வேறு பொருள்களை உருவாக்குவதற்கும் அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைப் பொருட்களை கச்சாப் பொருள்களாக இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவேண்டும். கடற்கரைப் பகுதிகளில் எல்லாம் உப்பு அதிகமாக இருக்கும். அந்த இடங்களில் உப்பு சம்பந்தமான தொழில்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட செங்கற்பட்டு மாவட்டத்தில்—சென்னையைத் தாண்டி விட்டாலே—பழவேற்காடு, பொன்னேரி, ஆரம்பாக்கம், சுண்ணாம்புக்குளம் போன்ற இடங்களில் உப்பளங்கள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் உள்ளபடியே ரசாயன தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய வங்கக் கடலில் கொஞ்ச தூரம் கட்டு மரத்திலோ அல்லது படகிலோ போனாலும் சரி மிகப் பெரிய பனைமரங்கள் போல், ஈச்ச மரங்கள் போல் சுறுக்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சுறுக்கள் இருக்கின்றன என்று சென்னை மாநகர ஆணையர் கூட அடிக்கடி அறிக்கை விடுவது உண்டு. அந்தச் சுறுக்களுக்கு மனிதன் பயப்பட வேண்டுமென்று அறிக்கை விடப்பட்டிருக்கிறது. நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன் அவற்றிற்கு நாம் பயப்படாமல், நம்மைப் பார்த்து அந்தச் சுறுக்கள் பயப்





படுகிற அளவுக்கு தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். அந்தப் பெரிய சுறுக்களைப் பிடித்து ஷார்க் லீவர் ஆயில் என்று சொல்லக்கூடிய அந்த மீன் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை இங்கே உருவாக்க வேண்டும் என்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எப்படியிருந்தாலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்து, அதிகாரிகளை அவ்வப்பொழுது அணுகி எந்தெந்தப் பகுதிகளை வளப்படுத்த வேண்டுமோ அவற்றையெல்லாம் வளப்படுத்துவதற்கு முடிந்தவற்றை செய்துகொண்டு வருகிறார்கள். நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் 300-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு சிறு தொழில் பேட்டை உருவாக்க வேண்டும் அல்லது தொழில்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையில் சாயப் பொருள்கள், ரசாயனப் பொருள்கள் ஆகியவற்றிற்கான தொழிற்சாலைகள் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்திருக்கிறார்கள்.

மாதர்பாக்கம், பாதிரிவேடு போன்ற இடங்களிலிருந்து ப்ளீடிங் மெட்ராஸ், அதாவது வண்ணம் மாறும் கைத்தறித் துணிகள் மேல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, நாட்டிற்கு கைத்தறித் தொழிலின் மூலம் அன்னியச் செலாவணி பெற்றுக் கொடுக்கப்படுகிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்ட நெசவாளர்கள் அந்தப் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை வளப்படுத்துவதற்கு வட செங்கற்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக மாதர்பாக்கத்தில் சாயத் தொழிற்சாலைகளை அதிகமாக உருவாக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சீபுரத்தில் ஜரிகை உற்பத்தி தொழிற்சாலையை விரிவுபடுத்தி, விரைவாக அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு குழு அறிக்கை கொடுத்திருக்கிறது. அதை விரிவாகப் பரிசீலனை செய்து முடிவு எடுத்து, அந்தப் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரியில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் வேண்டும் என்று சொன்னோம். அமைச்சர் அவர்கள் அதை உடனடியாக ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புழல் போன்ற பகுதியிலே ஏராளமாக திறந்த வெளிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் திறந்த வெளி சிறைச்சாலைகள் உருவாக்க வேண்டும். கைதிகள் தானே காய்கறிகளை உற்பத்தி செய்து கொண்டு, தங்களுக்கு வேண்டிய வசதிகளை பெருக்கிக்கொள்வதற்கான ஒரு புதிய திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அளித்துள்ள மானியக் கோரிக்கையை நான் வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய பல சட்ட மன்ற அங்கத்தினர்கள் கைத்தறித் தொழிலைப் பற்றியும், கைத்தறித் தொழிலில் நெசவாளர்கள் படக்கூடிய இன்னல்கள் பற்றியும் விளக்கமாக எடுத்து உரைத்தார்கள். கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நூல் இருக்கும். ஆனால் அவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு. நூல் இல்லாமல் கஷ்டப்படுவார்கள். நூல் இருக்கும்பொழுது அதிக துணியை உற்பத்தி செய்து, உற்பத்தி செய்த சேலை, துணிகளை விற்பனை செய்வதற்கு மார்க்கெட் கிடைக்காமல் கஷ்டப்பட்ட காலம் உண்டு.

அந்தக் காலத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி துணியை சுமந்துகொண்டு மக்கள் அதை ஆதரிக்க வேண்டும் என்று கைத்தறித் துணியை விற்பனை செய்தார்கள்.

அதைப்போல சமீபத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கூட ஓர் ஆண்டுக்கு முன்பாக கைத்தறித் துணியை விற்பனை செய்தது.





ஆனால் இப்பொழுது ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமை நூல் கிடைக்கவில்லை. செயற்கைப் பட்டு கிடைக்கவில்லை. தேவையான ரசாயன மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் இன்றையதினம் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதைத்தான் தமிழக அரசு உணர்ந்து அதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும் என்று ஒரு நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு சந்தானம் கமிட்டி அமைத்தார்கள்.

சந்தானம் கமிட்டி அறிக்கை கொடுத்திருக்கிறது. அந்தக் குழு கொடுத்த அறிக்கையை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதனை நான் பாராட்டுகிறேன்.

முக்கியமாக, நெசவாளர்களுக்கு வேண்டிய நூல், சாயப் பவுடர், செயற்கைப் பட்டு, அசல் பட்டு, ஜரிகை போன்ற பொருள்கள் நியாயவிலையிலே அரசாங்கம் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அரசு ஏற்றிருக்கிறது. நான் அதை மனமாற பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் உற்பத்தியாகக்கூடிய துணிகள் விற்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் அந்தக் குழு சொல்லியிருக்கிறது. அரசாங்கமே அந்தத் துணிகளை கொள்முதல் செய்து கொள்ளவேண்டும், கொள்முதல் செய்து விற்பனை செய்யவேண்டும் என்ற ஒரு திட்டத்தையும் தீட்டியிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு ஏற்றிருக்கிறது என்பதைப் பாராட்டுகிறேன்.

தனியார் துறையில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படியிருந்தாலும் தமிழகத்திற்குத் தேவையான செயற்கை பட்டு, அதை விநியோகிக்கக்கூடிய உரிமை மத்திய ஆட்சியின் கையில் இருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெயராமன் அவர்கள் சொன்னார்கள். தனியார்களும் தறி முதலாளிகளும் செய்துகொண்ட ஒப்பந்தம் டிசம்பர் 31-ம் தேதியோடு முடிவுற்றது. அதற்குப் பின்பு மூன்று மாதங்கள் ஆகியிருக்கிறது. இந்த மூன்று மாதங்களில் உற்பத்தி ஆகக்கூடிய

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1974 மார்ச் 27

செயற்கைபட்டு நியாய விலையில் நெசவாளர்களுக்கு கிடைக்க மத்திய அரசு எத்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. இப்பேர்ப்பட்ட அவல நிலையினால் தமிழக அரசும் அதை கொடுக்க முடியாத நிலை ஏற்படும். ஆகவே, கட்சி பேதம் இல்லாமல் எல்லா கட்சியினரும் ஒன்று சேர்ந்து மத்திய சர்க்காரை தட்டிக் கேட்டு எல்லா நெசவாளர்களுக்கும் செயற்கை பட்டு கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவுத் தொழிலுக்கு சம்பந்தப்பட்ட சாய பவுடர் உற்பத்தி தொழிற்சாலை ஏற்படுத்துவதாக அறிக்கையில் உள்ளது. நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு கிலோ பவுடர் ரூ. 6 விற்றது இன்றையதினம் ரூ. 60-க்கு விற்கிறது. இந்த நிலைமையை அறிந்துதான் தொழில் அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இம்மாதிரி ஒரு தொழிற்சாலை அமைத்து இந்தத் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருளை கொடுக்கலாம் என்ற நல்லெண்ணத்தில் இந்த முறையை வகுத்திருப்பது மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகும்.

ரயான் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ரூ. 30 கோடியில் ஒரு திட்டம் தீட்டி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தும் வந்திருக்கிறது. அதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

கைத்தறி நிதிக் கழகம் என்ற ஒரு அமைப்பு தமிழகத்தில் நடந்து கொண்டு வருகிறது. அவர்கள் ரூ. 100-க்கு 11 சதம் வட்டி வசூலிக்கிறார்கள். அதிகமான வட்டி.

குறிப்பாக திண்டுக்கல் வட்டம் தொழில் துறையில் பிற்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு 7½ சதவிகிதம் வட்டி என்ற முறையில் செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் செயற்கை பட்டை பயன்படுத்தக்கூடிய பகுதியிலே உள்ளவர்கள் இந்த கைத்தறி நிதி கழகத்திலிருந்து கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன் வசூலை எல்லாம் ஓர் ஆண்டு காலம் ஒத்திவைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கைத்தறி நிதி கழகத்தில் புது



1974 மார்ச் 27] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

உறுப்பினர்கள் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது இல்லை. ஆகவே, புதிய உறுப்பினர்களை சேர்த்தால்தான் வரக்கூடிய புதிய நெசவாளர்கள் அங்கே கடன் வாங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

நெசவுத் தொழிலாளர்களை வேறு தொழில்களுக்கு மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். புதியதாக நமது தமிழகத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும்பொழுது அந்தத் தொழிற்சாலைகளில் கைத்தறி நெசவாளர்களுடைய மகன்களுக்கு முதல் இடம் கொடுத்து, அந்தத் தொழிற்சாலைகளில் சேர்த்துக் கொண்டால்தான் நெசவுத் தொழிலிலிருந்து வேறு தொழிலுக்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களை மாற்ற முடியும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, சின்னாளப்பட்டியில் கூட்டுறவு சங்கங்கள் 11 சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த 11 சங்கங்களில் 10 சங்கங்களில் ஏறக்குறைய 1,500 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். 1,500 நெசவாளர்களுக்கு உள்ள பங்குத் தொகை ஒரு நெசவாளிக்கு ரூ. 100 கொடுக்க வேண்டும். ஆனால் ரூ. 30 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 200 தறி இருக்கிறது என்றால், 50 தறிதான் இப்பொழுது நெசவாளர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். மீதி நெசவாளர்களுக்கு கொடுக்க முடியாத நிலை இருந்துகொண்டு வருகிறது. அந்த நெசவுத் தொழிலாளர்களுக்கு பங்குத் தொகை ரூ. 70 கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சின்னாளப்பட்டியில் 10, 11 நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இருப்பதால் சாயம் போட கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஊரிலே ஒரு சாயப் பட்டறை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படி சாயப் பட்டறை ஏற்படுத்தினால்தான் நல்லமுறையில் சாயம் போட்டு, நல்ல துணிகளை உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு கைத்தறியாளர்களுக்கு உண்மையாக உதவி செய்யக்கூடிய அரசு இந்த அரசு. இன்றைக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை வைத்துக்கொண்டு எந்த எந்த முறையிலே நன்மைகளைச் செய்ய முடியுமோ அந்தந்த முறையிலே அவைகளைச் செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த தொழில் துறை மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் இந்த அறிக்கையைப் பார்த்த பிறகு நம் மாநிலம் சமீபத்திலே எத்தகைய தொழில் வளர்ச்சியை அடையப் போகிறது என்பதை காண முடிகிறது. பல பெரிய தொழிற்சாலைகளை அரசின் நிதி உதவி கொண்டு நல்ல முறையில் நடத்த திட்டமிடப்பட்டிருக்கின்றது. தொழில் துறையிலே நல்ல கவனம் செலுத்தி, தேவைகளைப் பூர்த்தி செய்தால் நம் மாநிலம் நல்ல செழிப்படையும் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸை பொறுத்தவரையில் சில குறைகள் சொல்லப்படுகின்றன. அதாவது ஒரு தொழில் ஆரம்பிப்பதற்கு எசன்ஷியாலிட்டி சர்ட்டிபிகேட் ஜாயின்ட் கன்ட்ரோலர் ஆஃப் எக்ஸ்போர்ட்ஸ் அண்டு இம்போர்ட்ஸ் கொடுக்க வேண்டியிருக்கிறது. சிறு தொழில்களுக்கு 10,000 ரூபாய்க்கு குறையாமல் கொடுக்கலாம் என்றிருந்தாலும் அவர்கள் 10,000 ரூபாய்க்கு சர்ட்டிபிகேட் கொடுப்பதில்லை அவர்கள் சிபாரிசு செய்யாவிட்டால் பணம் பெற முடியாது. ஆகையால் இந்த முறையில் இடையூறு இருக்கிறது.

ஆந்திரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலே அவர்கள் எந்த அளவுக்கு சிறு தொழில்களுக்கு ஊக்கமளித்து, மத்திய அரசின் உதவியைப் பெற முடியுமோ அந்த அளவுக்கு செய்ய தயாராக இருக்கிறார்கள். எந்த சிறு தொழிலாக இருந்தாலும் 10,000 ரூபாய்க்கு சிபாரிசு செய்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்றவர்கள் அப்படிச் செய்வதில்லை. அதனால் மிகவும்





கஷ்டமாக இருக்கிறது. மேலும் ஒவ்வொருத் தொழிலுக்கும் 10,000 என்ற அளவில் 7 தொழில்களுக்கு 70,000 ரூபாய்வரை சிபாரிசு செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யூனிட் காஸ்ட் எப்படி இருந்தாலும் ஒரு தொழிலுக்கு 10,000 வரை சிபாரிசு செய்யலாம் என்றும் விதி இருக்கிறது. ஆகவே, சிறு தொழில்களைத் தொடங்க அதிக ஊக்கமளிக்கும் வகையில் 10,000 ரூபாய்க்கு குறையாமல் எசன்ஷியாலிட்டி சர்ட்டிபிகேட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்களை எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்பதைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும். 1972-லிருந்து அதற்கு கமிட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிற்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கலெக்டரை தலைவராகக் கொண்டு, அந்த அஃபிஷியல் கமிட்டி கூடியதாகச் சொல்லப்படுகிறது. அந்த கமிட்டியில் என்னென்ன ஆராய்ச்சிகளைச் செய்தார்கள், என்ற விஷயம் தெரியவில்லை. சட்ட மன்ற உறுப்பினர்களும், மற்றுள்ள மக்களும் அதன் நடவடிக்கைகளைப் பற்றி அறிவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆகையால் அந்த பரந்த அளவில் அமைக்க வேண்டும்.

அந்தந்த வட்டாரத்திலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களையும் அந்த கமிட்டியில் இடம் பெறச் செய்ய வேண்டும் அதோடு தொழில் துறையிலே உள்ள வல்லுநர்களையும் போட வேண்டும். அப்படிச் செய்தால், தொழில் அபிவிருத்திக்கான பல ஆலோசனைகளை வழங்க முடியும். கமிட்டி அந்த முறையிலே திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்களை ஆரம்பிப்பதற்காக அனுமதி கேட்டு பலர் மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அந்த மனுக்களில் ஏதாவது ஒரு சிறிய குறை இருந்தாலும் திருப்பி அனுப்பி விடுகிறார்கள்; மனு நிராகரிக்கப்படுகிறது அந்த முறையைத் தவிர்க்க வேண்டும்.

காலையிலே கேள்வி நேரத்தின்போதுகூட அமைச்சரவர்கள் சொன்னார்கள். டி.வி.எஸ். என்று கேள்வியிலே குறிப்பிட்டிருந்தாலும் அது 'சதர்ன் ரோட்வேஸ்' பற்றியது என்று அறிந்து, கேள்வி கேட்டவருடைய நோக்கம் என்ன என்பதை புரிந்து அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள்.

அதைப்போல மனுக்களில் ஏதாவது தவறு இருந்தாலும் அதை நிவர்த்தி செய்து, பரிசீலனை செய்ய வேண்டுமே அல்லாமல் நிராகரித்துவிடக் கூடாது. திருப்பி அனுப்பினால் ஏழை எளியவர்களுக்கு சிறு தொழில்களைத் தொடங்குவது மிகவும் கஷ்டமாகும். ஆகவே, பரிசீலனை செய்து அதற்குரிய லைசென்ஸ் கொடுக்க வேண்டும்.

மனுக்களை பரிசீலனை செய்வதற்கு ஏதாவது ஒரு கமிட்டிப் போட்டு, அதிலேதான் நிராகரிப்பது பற்றி முடிவு செய்ய வேண்டும். தனிப்பட்ட அதிகாரிகள் கையில் அந்த அதிகாரத்தைக் கொடுக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு நாம் ஏராளமான உதவிகளைச் செய்கிறோம். அது நம்முடைய கடமை. ஆனால் அதே நேரத்தில் நம் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டியதும் அவசியமாகிறது. அதைத் தீர்க்க வேண்டும். முக்கியமாக இந்த கைத்தறி நெசவாளர்கள் பிரச்சனையைக் கவனிக்க வேண்டும். பெரியத் தொழில்களைத் தொடங்குவதற்கு 15 கோடி, 20 கோடி ரூபாய் செலவிடுகிறார்கள். இவ்வளவு ரூபாயை அள்ளிப்போட்டாலும் 100 அல்லது 200 பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இதிலே உள்ள கணக்கைப் பார்த்தால் ஒரு கோடி ரூபாய் இன்வெஸ்ட்மென்ட் செய்தால் 50 பேருக்கு மேல் வேலை வாய்ப்புக் கொடுக்க சாத்தியமில்லை.

ஆனால், கைத்தறித் தொழிலுக்கு ஒரு லட்சம் ரூபாய் உதவி செய்தால்கூட ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே இந்தத் துறையில் கொஞ்சம் அதிகமாகப் பணம் ஒதுக்கினால் பாதகமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கின்ற ரீதியில் போனால், அவர்களுக்கு மிகவும் கஷ்டம் வந்துவிடும். இப்போதே அவர்களுக்கு





நூல் கிடைப்பதில்லை; நார்ப்பட்டு கிடைப்பதில்லை. சாயம் கிடைப்பதில்லை. இவைகளை எல்லாம் கவனித்து தாராளமாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு போதிய பண வசதி இல்லை என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வது சரியல்ல. பட்ஜெட்டில் பணம் ஒதுக்கவில்லை என்றால் ரிவைஸ்ட் பட்ஜெட்டில் ஒதுக்கிக்கொள்ளலாம். எத்தனையோ துறைகளுக்கு உதவி செய்கின்றபோது இந்தத் துறைக்கு மேலும் 20, அல்லது 25 லட்சம் ரூபாய் அதிகம் ஒதுக்கிக் கொடுப்பதில் தவறு இல்லை.

இப்போது செய்கின்ற உதவியினால் அவர்கள் ஷேர் காப்பிட்டல் கூட கட்ட முடியாது.

எம்.டி.சி. லோன் பெறுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. டர்ன் ஓவரில் 25 சதவிகிதம் இருந்தால் தான் அந்தக் கடன் கொடுக்கிறார்கள். இப்படி இருந்தால் தொழில் செய்ய முடியாது. 100 ரூபாய் உதவி செய்தால் போதாது (மணியடிக்கப்பட்டது). 80 ரூபாய்க்கு விற்ற நூல் இன்றைக்கு 150 ரூபாய், 200 ரூபாய்க்கு விற்கிறது. ஆகவே, 100 ரூபாயை வைத்து நூல் கூட வாங்க முடியாது. ஆகவே, அவர்களுக்கு இன்னும் அதிக அளவில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கனம் தற்காலிகத் தலைவரவர்களே,

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): எல்லாம் ஒரே தலைவர்தான். தற்காலிகத் தலைவரும் அல்ல; வேறு தலைவரும் அல்ல.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

இதில் முதலாவதாக கைத்தறி நெசவாளர்களைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இது குறித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 27

சந்தானம் கமிட்டியில் பரிந்துரை அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் விபரங்களைப் பார்க்கும்போது பல பரிந்துரைகளைப் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது அல்லது எடுக்கப் போகிறது என்பதை என்னால் காணமுடியவில்லை.

சந்தானம் கமிட்டியினர் 151 பரிந்துரைகளையும் 9 ஆலோசனைகளையும் வழங்கியிருக்கிறார்கள். அதிலே சில மத்திய அரசு நிறைவேற்ற வேண்டியவை. மாநில அரசு செய்யவேண்டிய பலவற்றைப்பற்றிய சொலப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எல்லாம் ஒன்றையும் இங்கே காணவில்லை. அதுகுறித்து அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்த பட்ச கூலி நிர்ணயிப்பதற்காக ஒரு கமிட்டி போடப்பட்டு, அறிக்கையும் கொடுத்து பல மாதங்கள் ஆகின்றன. அந்த அறிக்கை இன்னும் வெளிச்சத்திற்கு வரவில்லை. அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நெசவாளர்கள் பல காலமாக எழுப்பிய கூக்குரலுக்குப் பிறகுதான் அந்த கமிட்டி போடப்பட்டது. சந்தானம் கமிட்டி அறிக்கை வெளிச்சத்திற்கு வர பல மாதங்கள் ஆனதைப் போலத்தான் இந்த அறிக்கையும் வரும் என்று தெரிகிறது. கமிட்டியின் அறிக்கை இன்னும் இருட்டில்தான் கிடக்கிறது. அது வெளிச்சத்திற்கு வந்த பிறகு தான் செய்திருக்கிற பரிந்துரை சரியா இல்லையா என்று சொல்ல முடியும். ஆகையால் அந்த அறிக்கையை வெளிச்சத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5.30)

அடுத்தபடியாக, சர்வீஸ் கோவாப்பரேட்டிவ்ஸ் இப்போது அமைத்திருக்கிறார்கள். அதற்கு விதிகளும் இருக்கின்றன. 1000 தறிகளுக்கு ஒரு கமிட்டியும் ஒரு சொசைட்டியும் அமைக்க படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கோவையிலுள்ள ஒரு அதிகாரியை சமீபத்தில் சந்தித்து, இதுபற்றி கேட்டபோது, 3000 தறிகளுக்கு ஒரு கமிட்டியும், சொசைட்டியும் அமைக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இதில் எது சரியானது என்று தெரியவில்லை. இந்தக் கமிட்டிகளில் அனைத்துக் கட்சியின் பிரதிநிதிகளை,



1974 மார்ச் 27] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

நெசவாளர்களது பிரதிநிதிகளை போடுவதாகச் சொன்னார்கள். ஆனால் வேறுவிதமாகப் போடுவதாகத்தான் தகவல் வந்திருக்கிறது. ஓரிடத்தில் உப்புமண்டிக்காரரைப் போட்டிருக்கிறார்கள். பண லேவா தேவிக்காரரைப் போட்டிருக்கிறார்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சர்விஸ் கோவாப்ரேடிவ் சொஸைடி என்பது கூட்டுறவு ஸ்தாபனத்தின் கீழ் வராத கைத்தறியாளர்களை ஒன்று சேர்த்து சங்கம் அமைத்து, அவர்களுக்குப் பணப்பொறுப்பை வைக்காமல் நூலை மட்டும் வழங்கக்கூடிய உரிமையைத் தருவதுபற்றி. இதில் கமிட்டி என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை. எப்படிச் சொல்கிறார்கள்?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கைத்தறி ஆய்வாளர்கள் என்னிடமே வந்து கமிட்டியில் யார்யாரைப்போடலாம் என்று கேட்டு பெயர்கள் வாங்கிக்கொண்டு போய் இருக்கிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள்தான் விளக்கவேண்டும். ஓரிடத்தில் உப்பு மண்டிக்காரரை போட்டிருக்கிறார்கள். ஓரிடத்தில் பண லேவாதேவிக்காரரைப் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எந்த ஊர் என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும். அவர் சொல்வது சர்வீஸ் கோவாப்பரேடிவ் இராது. நாம் நூல் வழங்க கார்டு வழங்க ஒவ்வொரு இடத்திற்கு கமிட்டி போட்டோம். கான்சென்ட்ரேஷன் வேண்டுமென்றால் அதிகமான கமிட்டி வேண்டும் என்பதால் ஆயிரம் பேர்களுக்கு ஒரு கமிட்டி போடுவது என்று சொல்லப்பட்டது. அதில் அங்கத்தினர் சொல்வது போல் நடந்திருந்தால் அது மாபெரும் தவறு, நிச்சயம் அதைத் திருத்த முடியும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** சேலம் மாவட்டம் ஜலகண்டபுரத்தில் அப்படி நடந்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இதை அமைச்சர் கவனிக்கவேண்டும். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எழுதிக்கொடுத்த பெயர்களை ஆளும் கட்சியினர்கள் மாற்றி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அதையும் கவனிக்க வேண்டும்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 27

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, பஞ்சாலைக் கார்ப்பரேஷனின் பணிகள் அண்மைக் காலத்தில் சீர் அடைந்திருப்பதற்கு மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மூடிய பஞ்சாலைகளை அரசே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியவர்களில் நானும் ஒருவன். இந்த பஞ்சாலை கார்ப்பரேஷனில் தொழில் உறவு நல்ல முறையில் இருக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புவார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அந்த மாதிரி இல்லை. மற்ற ஆலைகளுக்கு பஞ்சாலை கார்ப்பரேஷன் வழிகாட்டியாக, முன்னோடியாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கிற நேரத்தில் அவற்றைவிட மோசமாக இருக்கிறது. கோவை மாவட்டத்திலேயே இத்தகைய அரசியல் தலையீடு எவ்வளவு ஏற்பட்டது என்பது எனக்கு தெரியும். இதுபோல அரசியல் பாரபட்சம் காட்டப்படக்கூடாது என்று அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இதுபோன்ற அரசியல் தலையீடுகள் இல்லாமல் நல்லமுறையில் அந்த ஆலைகள் நடைபெற சரியான தொழில் உறவு ஏற்படச் செய்ய வேண்டும்.

இதற்கு அட்வைசரி கமிட்டி போட்டிருந்தார்கள். 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை கூடியது. அப்புறம் கூடவில்லை. என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அதில் தொழிற் சங்கத்தைச் சேர்ந்த நானும், மற்றொருவரும் உறுப்பினராக இருந்தோம். கடைசியாக சில மாதங்களுக்கு முன்பாக கேட்கிற போது அது லிக்விடேட் ஆகிவிட்டது என்றார்கள். இது சரியல்ல. குறிப்பாக இந்த கார்ப்ரேஷனுக்கு அரசாங்க உத்தியோகத்தில் உள்ளவர்கள் வருகிறார்கள். தொழிலுக்குப் புதியவர்கள் அவர்களுக்கு உதவியாக இருக்க இதுபோன்ற அட்வைசரி கமிட்டி இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

அடுத்தப்படியாக, டான்சியில் லாபம் வந்திருப்பாகச் சொல்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களது நிலைமை என்ன என்று பார்க்க வேண்டும். அடிப்படைச் சம்பளம் 40 ரூபாய்தான். பஞ்சப்படி சிம்லா புள்ளி அடிப்படையில் 173 புள்ளிக்கு மேல் புள்ளிக்கு 60 பைசா என்று கொடுக்கிறார்கள் ... குறைந்தப்பட்சம் ஒரு தொழிலாளிக்கு 121 ரூபாய்தான்



1974 மார்ச் 27] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

என்ஜினியரின் வேஜ் போர்டு பிரகாரம் குறைந்த பட்ச சம்பளம் 314 ரூபாய் இந்த அடிப்படையில் அவர்களது சம்பளத்தைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பட்டது).

**திரு. சு. துரைசாமி:** மூடப்பட்ட 12 பஞ்சாலைகளை, நமது பஞ்சாலைக் கார்ப்பரேஷன் எடுத்துக்கொண்டிருக்கிறது. இவற்றை தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷன் எடுத்துக்கொள்ளப் போவதாகச் சொல்லப்படுகிறதே, இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் கருத்து என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தனியார் ஆலைகளை தேசியமாக்குவதை தான் வரவேற்கிறேன். அதனாலே இவை உடனே கெட்டுவிடும் என்ற கருத்தை ஏற்கமாட்டேன்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 74-75 ஆம் ஆண்டுக்கான தொழிற்துறை மானியக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதனை வரவேற்று, சில கருத்தினை நான் சொல்ல முற்படுகின்றேன்.

இங்கு எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் இந்தத் தொழில் துறையில் நமது அரசு நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருப்பதைச் சொன்னார்கள். என்றாலும் வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கு எந்தவிதமான சர்க்கார் தொழிற்சாலையும் இல்லை என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் எனது தொகுதியைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 1,648 தறிகள் செயல்பட்டு வருகின்றன. ஆயினும் நமது சர்க்கார் கூட்டுறவுத் துறையில் இயங்கின்ற தறிகளுக்குதான் நூல் விநியோகம் அளிப்பது என்கிற முறையினால் ஆம்பூர் தொகுதியில் இயங்கி வந்த வீவர்ஸ் சொசைடி, விநாயகர் சொஸைடி இயங்காத காரணத்தினால் இன்றைக்கு அங்குள்ள பெரும்பாலான நெசவாளர்கள் பரிதபிக்கிறார்கள்.

ஆகவே, ஆம்பூர் நகர், பெரியான் குப்பம் நெசவாளர்களுக்கு கூட்டுறவுத் தறியில் இல்லாதவர்களாக இருந்தாலும் நூல் விநியோகம் சீராகக் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். பன்னீர்செல்வம்] [1974 மார்ச் 27

அடுத்து வடாற்காடு மாவட்டத்தில் தோல்பதனிடும் தொழிலில் அதிகமாக அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் நகரம் ஆம்பூர்தான். சமீபத்தில் மத்திய சர்க்கார் கொண்டு வந்த கட்டுப்பாட்டினால், கலர்தோல் தான் அனுப்பப்பட வேண்டும் என்கிற கட்டுப்பாட்டினால் பல ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

ஏறத்தாழ 62 தொழில்சாலைகளில் ஒருசில வணிக பெருமக்களால் தான் அந்தக் கலர்தோல் தயாரிக்கும் மெஷினரிகளை வைக்க முடிந்ததே தவிர—பாக்கி முடியவில்லை. அவற்றில் வேலை செய்த வர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திற்கிணங்க—கலர் தோல்தான் ஏற்றுமதி செய்ய அனுமதி உண்டு என்று இல்லாமல் ட்ரேஸ் தோலையும் அங்கே உருவாக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள், முஸ்லீம் சமுதாய மக்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே நேரத்தில் ஆம்பூர் நகரத்தையும், மற்ற சில நகரங்கள் போல் ஒரு தொழில் நகரமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிற வட்டியில்லா கடனைப் பார்க்கிறபோது, அது ஆம்பூர் நகரத்தில் இரண்டு பேர்களுக்கும், பள்ளிகொண்டாவிலே இரண்டு பேர் களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் நிறைய ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தென், வட மாவட்டங்களைப் பார்க்கிற போது வட ஆற்காடு ஆம்பூர், குடியாத்தம், பேர்ணம்பேட், கணியம்பாடி போன்ற இடங்களில் சர்க்கரைத் தொழில் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதி ஏழைகள் வாழ உடனடியாக சர்க்கரை தொழில் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஆரம்பித்தால் அதன் மூலம் அந்தப் பகுதியிலுள்ள



1974 மார்ச் 27] [திரு. எம். பன்னீர்செல்வம்]

நிறைய ஏழைகளுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமென்று வாய்ப்புத் தந்ததற்கு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

* திரு. எ. கு. துரைசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தொழில், கைத்தறிபற்றியுள்ள மானிய கோரிக்கையை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் குறிப்பாக நெசவாளர்கள் பிரச்சினை பற்றி என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். கடந்த ஆண்டு 75 சதவிகிதம் மின்சார வெட்டு ஏற்பட்டு, நெசவாளர்கள் நூல் கிடைக்காமல் அவதிப்பட்டபோது, நம்முடைய மாநிலம், மற்ற அண்டை மாநிலங்களுக்கு வழிகாட்டுகிற தன்மையில் கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கும், அதற்கு அப்பாலிருந்த நெசவாளர்களுக்கும் சீரான முறையில் நூல் விநியோகம் செய்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு 3 மாதம் நூல் தட்டுப்பாடு ஏற்பட்டு நெசவாளர் களுக்கு ரேஷன் கார்டு முறையில் நூல் விநியோகம் செய்யப் பட்டது. அன்றைக்கு நெசவாளர்கள் பட்ட இன்னலைப் பார்த்து தமிழக அரசு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1 கோடி ரூபாய் கடனுதவி வழங்கினார்கள். பின்னர் அந்த நெசவாளப் பெருமக்கள் படுகிற கஷ்டத்தைப் பார்த்து, தற்போது அந்த ஒரு கோடி ரூபாய் கடனை திரும்பச் செலுத்தவேண்டாமென்று தள்ளுபடி செய்திருப்பதற்காக நான் நெசவாளப்பெருமக்கள் சார்பாக நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 10—3—1974 அன்று குடியாத்தத்திலே ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டு அதிலே அங்கே உள்ள நெசவாளப் பெரு மக்கள் வீடிழந்து கஷ்டப்பட்டபோது நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு லட்ச ரூபாய் வழங்கியது மட்டுமல்ல, பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும், மற்ற நல்ல இதயம் கொண்ட பெருமக்களும் பேருதவி செய்தார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் பெருமான துணிகளை வழங்கினார்கள். அவர்களுக் கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு நெசவாளர்களுக்கு அவ்வப்போது ஏற்படுகிற பல இடையூறுகள், அவர்களுக்குத் தேவையான நூல், சாயப் பொருட்கள், ரசாயனப் பொருட்கள் கிடைக்காமல் அவர்கள் படுகிற துயரத்தைப் போக்கவேண்டும் என்பதற்காக நம்முடைய மாநிலம், மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பது போல், பணி கூட்டுறவு சங்கம் என்ற ஒன்றினை தமிழ்நாடு முழுவதும் அமைத்து அதன் மூலம் நெசவாளர்களுக்கெல்லாம் அந்தப் பொருட்களை எல்லாம் அவர்களுக்குக் கிடைக்கச் செய்திருப்பதற்காக உள்ளபடியே இந்த அரசை நெசவாளர்களின் சார்பாக பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல அண்மையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் வருகிற 1-ம் தேதியிலிருந்து 30 சதவிகிதம் மின்சார வெட்டு அமுல்படுத்தப்படும் என அறிந்தவுடன் இன்றைக்கு நேசவாளிகளுக்கு வேண்டிய தேவையான பொருட்களின் விலைகள் ஏறிப்போயிருக்கிறது. பன்னிரண்டு ரூபாய் விற்ற சல்ஃபர் ப்ளாக் இன்றைக்கு 40 ரூபாய்க்குக் கூட கிடைக்கவில்லை.

அது மட்டுமல்ல க்ரின், ப்ரவுன், வயலட், கோல்டன், ஆரஞ்ச் போன்ற கலர்கள் இன்றைக்கு இரண்டு மடங்கு மூன்று மடங்கு அதிக விலை விற்கிறது. அதுவும் நல்ல தரமான கலர்கள் கூட கிடைப்பதில்லை. ஆகவே இதை எல்லாம் உற்பத்தி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் 5,56,000 தறிகள் இருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், 25 வருடகால பெரு முயற்சிக்குப் பிறகும் 1 லட்சத்து 63 ஆயிரம் பேர்கள் தான் இன்றைக்கு கூட்டுறவு சங்கத்திலே இருக்கிறார்கள். அதனால் பலன் பெறுகிறார்கள். இது மொத்தத்தில் 30 சதவிகிதம் தான். மீதி 70 சதவிகிதம் இதிலே சேராதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இப்படி வெளியே இருக்கிற நெசவாளர்களும் பயன் பெறுகிற வகையில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தமிழகத்திலே இன்றைக்கு 50 கோடி ரூபாய் பெருமான துணிகள் கைத்தறியிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அதிலே 10, 15 10, 15 கோடிக்கு கூட்டுறவுத் துறையிலே உற்பத்தி செய்யப்படுகிறது. இதைப் பற்றி சந்தானம் கமிட்டியிலே கூட கூறியிருக்கிறார்கள்.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் காலத்திலிருந்தே கரைபோட்ட வேஷ்டி, சேலை போன்றவைகளை கைத்தறிக்கே ஒதுக்கவேண்டுமென்று கேட்கப்பட்டுவருகிறது. இது பற்றி சந்தானம் கமிட்டியிலே கூட கூறபபட்டிருக்கிறது. ஆகவே இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு சாயம், ரசாயனப் பொருட்களுக்கும் எளிதாகக் கிடைக்க வழிவகை செய்யவேண்டும்.

அது மட்டுமல்லாமல் குடியாத்தத்திலே ஒரு நூல் ஆலை ஏற்படுத்தவேண்டும். மேலும், வீட்டு வசதி வாரியத்தின் மூலமும், வீடு அடமான வங்கிகளின் மூலமும் குடியாத்தத்திலே உள்ள தீயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு—சட்டம் குறுக்கே நின்றாலும் அதைத் தளர்த்தி—அவர்களுக்கு வீடு கட்டி கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு செங்கல்பட்டு, மதுரை, இராமநாதபுரம், சேலம் போன்ற இடங்களில் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கிற திட்டம் இருக்கிறது. ஆனால் வட ஆற்காடு, மாவட்டம் குடியாத்தத்திலே அந்தத் திட்டம் இல்லை, ஆகவே அந்தத் திட்டத்தை அங்கேயும் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தொழில்துறை மானியத்தின் மீது எனக்கு முன்பு பேசிய வட ஆற்காடு மாவட்ட வட்டார உறுப்பினர்கள் வட ஆற்காடு மாவட்டம் தொழில் துறையில் எவ்வளவு தூரம் பின்தங்கி இருக்கிறதென்பதனை தெளிவாக எடுத்துக் கூறி, அந்த மாவட்டத்தின் மீது விசேஷமான கவனம் செலுத்தவேண்டுமென்பதைப் பற்றி மிக உருக்கமாக எடுத்துச்சொன்னார்கள். அதே கருத்தை நானும் வரவேற்கிற வகையில் ஒருசில கருத்துக்களை சொல்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு தொழிற்துறையில் முன்னணியில் இருக்கிறதென்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்திய நாட்டிலே உள்ள மற்ற மாநிலங்களைப் பார்த்தால், ஏதோ ஒன்றிரண்டு மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களின் நிலைமைகளைப் பார்த்தால் தமிழகம் இந்தத் தொழில் துறையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் என்பது தெரியும்.

தொழில் துறையிலே எப்பேர்ப்பட்ட புரட்சியை உண்டாக்கியிருக்கிறோம் என்பதை நன்கு உணரலாம். நான் மட்டுமல்ல, உண்மை நிலையை அறியக்கூடிய உண்மையைப் பேசுகின்ற மனப்பான்மையைக் கொண்ட நல்லவர்கள் அத்தனை பேர்களும் இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு நற்சான்று வழங்குகிறார்கள்.

தொழில் துறையை ஏற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் துறையிலே நாம் எண்ணிய வகையிலே மாற்றங்களை, புரட்சிகளை காணவில்லையென்றால் அதற்கு இந்த அரசுதான் பொறுப்பு என்று யாரும் சொல்லமாட்டார்கள். நம்முடைய புள்ளிவிவரங்களையும் அரசியல் நிலைமைகளையும் பார்த்தால் தொழிற்சாலைகள் அமைக்க உரிமங்கள் தரும் அதிகாரங்களின் பெரும்பகுதி மத்திய அரசினிடத்திலே இருக்கிறது.

எந்த ஒரு தொழிலாக இருந்தாலும், மூலத் தொழிற்சாலையாக இருந்தாலும் அங்கீகாரம் வழங்குகின்ற அதிகாரம், உரிமம் வழங்குகின்ற உரிமை மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. நாம் எவ்வளவுதான் திட்டங்களைத் தயாரித்து அங்கே அனுப்பினாலும் அவர்கள் ஒப்புதல் தருவதற்குப் பல வருடங்கள் ஆகின்ற சூழ்நிலைதான் இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் தமிழ்நாட்டில் பொருளாதாரத்திலே தமிழ்நாட்டிலே தொழில் துறையிலே பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு சேலம் உருக்காலை திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த வேண்டுமென்று அதற்கான ஒப்புதலை வற்புறுத்தி வற்புறுத்திப் பெற்றோம். ஒப்புதல் பெற்றுங்கூட மத்திய அரசு அதை அமைக்க தடங்கலாக இருக்கிறது என்பதையும் அவ்வளவு தூரம் நமக்குச் சாதகமாக நிலைமை இல்லை என்பதையும் நாம் அறிவோம்.



நம்முடைய அமைச்சர் அவர்கள் மாநில அரசின் சார்பிலே இந்தத் திட்டத்தை இந்தக் காலத்திற்குள் நிறைவேற்றவேண்டுமென்ற ஒரு காலத்தை வரையறுத்து மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அதற்குள்ளாக அவர்கள் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த முன்வராவிட்டால் அவர்கள் அதற்காக முனைப்புடன் செயல்படவில்லை என்றால் தமிழகம் ஆர்த்தெழுந்து குரல் எழுப்புகின்ற ஒரு முயற்சியை, முறையை மேற்கொள்ள வேண்டும்.

குடிசைத் தொழில்களையும், சிறு தொழில்களையும், பெரும் தொழில்களையும் ஏற்படுத்திவிடுவது மட்டும் போதாது, " there should be industrialisation for further industrialisation " என்று சொல்வார்கள். நாம் மூலத் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தவேண்டும். எந்த எந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் அதன் மூலம் மற்றத் தொழிற்சாலைகளில் உற்பத்திப் பெருக்கமுடியும் என்பதைப் பார்த்து. அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும். அந்தவகையிலே தொழிற்கொள்கை மாற்றப்படவேண்டும்.

அதிலே இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று ஏற்கனவே இருக்கின்ற தொழிற்சாலைகளை மேலும் வலுப்படுத்தவும் மேலும் முன்னேற்றம் காணவும், அங்கேயிருக்கிற சூழ்நிலைகளை நல்ல முன்னேற்றத்திற்கான சூழ்நிலைகளாக மாற்றுகின்ற வகையிலே அவர்களுக்கு எந்த எந்த உதவிகளைச் செய்தால் அவர்கள் வளருவார்கள் என்று கண்டறிந்து திட்டங்களை வகுக்க ஒரு துறையைப் பயன்படுத்தலாம்.

மேலும் ஒரு துறையானது எந்த எந்த மாவட்டங்களிலே எந்த எந்த இடங்களிலே மூலப்பொருட்கள் என்ன என்ன கிடைக்கின்றன, எந்தத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கும் என்பதை அறிவதற்கும் பயன்படும். அமைச்சர் அவர்கள் ஒருவராக இருந்தாலும் செயலாளர் அவர்கள் ஒருவராக இருந்தாலும் துணைச் செயலாளர்கள் இருவர் என்ற முறையிலே ஏற்படுத்தி ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளைக் கவனிக்க ஒரு பிரிவும் புதிதாக தொழிற்சாலைகளை அமைக்க ஒரு

பிரிவும் தனித்தனியாகப் பொறுப்புக் கொடுக்கப்படக்கூடிய வகையிலே மாற்றப்பட வேண்டும்.

இன்றைக்கு நாம் தொழில் துறையிலே ஒரு சில இடங்களிலே தொழில்களை தூக்கிவிடுவதானால் நம்முடைய பிரச்சினைகள் தீராது. டிசென்ட்ரலைசேஷன் என்று சொல்லக்கூடிய பரவலாக்கும் முறைகளைக் கையாளவேண்டும். எல்லா மாவட்டங்களுக்கும் எல்லாத் தொகுதிகளுக்கும் அந்த அந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் தொகுதியில் சார்பிலே அவர்கள் நல்லமுறையிலே நிலைமைகளை அறிந்தவர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் ஒரு இன்வெஸ்டிகேஷன் செல் தனியாக ஏற்படுத்தி அதன் பரிந்துரையின் அடிப்படையிலே ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு தொழிற்சாலையாவது இருக்கவேண்டுமென்ற கொள்கையை இந்த அரசாங்கம் கடைப்பிடித்து எல்லாத் தொகுதிகளிலும் தொழிற்சாலைகளை அமைக்க முயற்சிகள் செய்யவேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்லுவேன், அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கேட்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். சந்தனத் தைலம் செய்வதற்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த 40 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் இருக்கிறது. என்ன வேதனை அல்லது சோதனை என்று சொல்வேன், எந்த மாவட்டத்தில் 80 சதவீதம் உற்பத்தியைச் செய்துவருகிறோமோ அந்த எங்கள் ஜவ்வாது மலைப் பகுதியிலே சந்தன மரக்கட்டைகள் 80 சதவிகதத்திற்கு மேற்பட்ட சந்தனக்கட்டைகள் தருகின்ற மாவட்டத்திலே அந்தத் தொழிற்சாலையை வைக்காமல் எங்கேயோ கோவை மாவட்டத்திலே அதை ஏற்படுத்தினால் எப்படிச் சும்மா இருக்கமுடியும்? எங்கள் பகுதியில் அது ஏற்படுத்தப்படாவிட்டால் நான் வட ஆற்காடு மாவட்டத்தை....

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ரொம்ப கோபம் வேண்டாம். காட்டு இலாகாவின் சார்பிலே ஒரு பரிந்துரை சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சார்பிலோ அல்லது வேறு யாரோ கேட்டபோதுகூட அது தொழில் இலாகாவிலே ஆராயப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.





**திரு. எம். ஏ. லத்தீப்:** எந்த இலாகா என்பதல்ல, எந்தச் சட்டியிலே சமைத்தாலும் சாதம் எங்களுக்கு வேண்டும். அந்தத் தொழிற்சாலை எங்கள் மாவட்டத்திற்கு வரவேண்டும், நாங்கள் தான் உரிமையுடையவர்கள்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்னை. அந்த பிரச்னைபற்றி நாடு முழுவதும் அழுதுகொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய தான்தோன்றித்தனமான முறையினால் நம்முடைய உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல் பல்லாயிரக்கணக்கான மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் தோல் பதனிடும் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலிலே மத்திய அரசு பலப் பரிட்சையிலே ஈடுபட்டிருக்கிறது.

நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தாமாகவே ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்திலே கொண்டுவந்து அதை சர்வ கட்சியினரும் ஏற்றுக்கொள்கிற நிலையில், நான் அதற்காக அவர்களுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருமனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால் மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பார்த்தால் பழைய நிலைமையே இருக்குமானால் இந்தச் சட்ட மன்றத்திற்கு மத்திய அரசு தருகின்ற மதிப்பு என்ன என்பதை மக்களுக்கு மத்திய அரசு தருகின்ற மதிப்பு என்ன என்று நாலரைக் கோடி மக்களும் ஒருமித்த கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடைப்பிடிக்கின்ற நிலையைப் பார்த்தால் பிராக்டிக்கல் என்று சொல்வார்களே அதன் அடிப்படையிலே பார்த்தால் சாதகமாக இல்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கக்கூடிய எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பினிஷ்ட் புராடக்ட்ஸ் ஆக அனுப்பினால் அதனால் நாட்டுக்கு நன்மை என்றால் அதற்கு ஆதரவு தரத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் அந்த மாற்றத்தைச் செய்வதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் 10 கோடி ரூபாய் தேவை, 10 ஆண்டுகளும் தேவை என்கிறபோது அது முடியாது என்கிறபோது அதற்குப் பரிகாரம்

[திரு. எம். ஏ. லத்திப்] [1974 மார்ச் 27

கானை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் மீண்டும் ஒருமுறை தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நான் இன்றைய சூழ்நிலையில் கேட்டுக்கொள்கிறேன், இந்த சட்ட மன்றத்தின் சார்பாக ஐவர், அல்லது மூவர் குழுவைப் போட்டு பிரதம அமைச்சரை, ஜனாதிபதியை, அமைச்சர் சட்டோபாத்தியா அவர்களைச் சந்திக்க அனுப்ப வேண்டும். அதற்கான செலவை லத்திப் வேண்டுமானால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார். அரசாங்கத்தின் சார்பாக அதற்கு ஒப்புதல் தர வேண்டும்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்துகின்ற வகையிலே மீண்டும் இந்த சபையிலே ஒரு தீர்மானத்தை அல்லது அறிக்கையை கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். அமைச்சரின் முனைப்புடன் செயல்படுகின்ற தன்மையை நாடு உயரவேண்டுமென்று அவர்கள் பாடுபடுகின்ற தன்மையைப் பாராட்டி அவர் வாழ வேண்டும், இந்த நாடு வாழ வேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Sir, in support of the cut motions moved already, I want to offer a few remarks regarding our Industries, Handloom, Textiles, Administration of Justice, Jails, etc.

In the first instance itself, I think I should say that I have noted in the review that there is abnormal delay in starting the Salem Steel Plant. It is going at Tortoise speed. I do not know why it is like that. I request the Government to speed up this Salem Plant. This Plant will give opportunities for starting many ancillary industries and therefore there is much potential for creating employment opportunities. I request the Hon. Minister for Industries to see that the Salem Steel Plant is expedited.

(மாலை 6.00)

Sir, three days back the Hon. Minister for Industries was giving a reply with regard to recruitment of personnel in the centrally sponsored industries. I am very sorry to note that they are showing discrimination to our State people. At least the



1974 மார்ச் 27] [Thiru B. Venkataswamy]

Central Government must see that proportionate opportunities are given to our people in any central project which is started throughout India. I object the policy of the Centre.

At the same time, I would say that this House should pass a Resolution stressing the Central Government to give equal job opportunities not only to the people from Tamil Nadu but also to the entire Nation according to the population or on some other basis. I request the Hon. Minister to see that at least equal opportunities are given to our people in any factory started by the Central Government in any part of the Nation.

I am very sorry to note that the Licensing Policy of the Nation is very bad. They are delaying licences to people who have applied to start industries and red-tapism is playing a major role in the licensing policy. Those who have come forward to open more industries or factories are not in a position to do so because of red-tapism.

The licensing policy should be liberalised in order to create more employment opportunities for unemployed person in the Nation. About nationalisation of factories and Industries I have already said that it is a suicidal policy of the Government and it is anti-people policy also. When you talk about nationalisation, no industrialist will come forward to open or start a industry. We are really wasting our national wealth by nationalisation as well as we are not in a position to create employment opportunities in the Government sector.

Therefore, that policy should be given up in order to enable more people to come forward to start new industries and to create more employment opportunities.

In Germany and Japan, free trade is allowed and there is no interference of the Government. Enormous factories are run in the private sector and there is no strict licensing policy. The industrialists are even importing raw materials from India and they are making a lot of money out of it. On behalf of the Swatantra Party, I oppose the Licensing Policy and Nationalisation.

[Thiru B. Venkataswamy] [1974 மார்ச் 27

I am thankful to the Government for including Dharmapuri District as area eligible for subsidy under SIPCOT. Dharmapuri district has been included because it is backward area in our State. Really it is a boon to areas like Hosur, Harur and Dharmapuri.

The SIPCOT is really doing good job and they are going to give incentives to four or five districts. I understand that 60 per cent subsidy is going to be given for these districts. Power tariff concesion, interest-free loans and other facilities are also going to be given. Within two years, the SIPCOT has done tremendous job. It has been stated in the report that that SIPCOT would create employment opportunities for 8,400 persons and that it is also going to acquire 1,000 acres in Hosur and create an Industrial Complex there. Really it is a good thing for the improvement of industries in Tamil Nadu.

The small-scale industries should be given more importance. For example, oil seeds are produced in rural areas. Ragi is produced in Hosur and sericulture is in existence in Hosur.

Agarbathis are also manufactured in cottages.

There is no use in investing a huge amount, several crores in heavy industires. It has been said by our Great Leader Mahatma Gandhi an others that cottage industries and small-scale industries should be developed.

It should be the policy of the Government to set up cottage and small industries in village areas.

Oil seeds are grown in villages and are available in every house. They are actually taken away by the merchants from outside for crushing. The oil seeds are taken by them and oil is extracted in a big factory. If such industries are developed in villages, the position of the villagers will improve economically.

Instead of starting big industries, the villagers may be given 500 or 1,000 rupees to have chakkus.

Similarly, sericulture should be developed in villages. Ours is a sericulture area. Recently, I have seen in the papers that a sum of Rs. 4-1/2 crores have been asked for by our Government to improve sericulture in our State.



1974 மார்ச் 27] [Thiru B. Venkataswamy]

If sericulture is developed in our State, I can surely say that it will outbeat the Karnataka State. We will be in a position to produce good variety of cocoons. Instead of depending on Karnataka State, we can produce them here itself. We can even bring yellow revolution in Tamil Nadu.

There is a proposal to cultivate mulberry in 3,730 hectares. Sericulture is not only a small-scale industry but it is also agro-based industry. In our area, the agriculturists are growing mulberry and it is a Kamedenu to agriculturists.

The cocoons waste is a vitamin food for the cattle. The cocoons rearing could also be done in the villages. The waste of cocoons is also a best poultry food and also used for biscuits. The waste silk is exported to other Nations. There is good scope for this agro-based industry in our area.

I came to understand that the Karnataka Government has asked the Government of India to sanction 100 crores for this industry. I am very sorry to say that only 4½ crores has been asked for by this Government for this industry. I also understand that in the districts of Madurai, Salem, South Arcot, Coimbatore and Dharmapuri, the mulberry is grown. I hope the Hon. Minister will take serious steps to improve the yellow revolution so that we can earn foreign exchange.

I have already given cut motions with regard to starting of an Electronic Factory at Hosur, to discuss the need to start an Industrial Complex at Hosur, to discuss the need to introduce package scheme in sericulture, to discuss the delay in opening of a Cigarette Factory at Hosur and also acquire 1,000 acres of land to have an industrial complex in Hosur, because Hosur is a backward area.

Sir, we are producing sugarcane in our area and its recovery is 12.5 per cent to 13 per cent because the climatic conditions in Hosur are favourable. As it is very economical to produce sugar, I request the Hon. Minister to start a sugar factory in Hosur so that the people there will be benefited.

Regarding 'cumbly' weaving industry, licence has been given for starting it but no step has been taken to start it. As it would be of great benefit to the people of the Dharmapuri district,

[Thiru B. Venkataswamy] [1974 மார்ச் 27

I request the Hon. Minister to start it. Now we are importing 'cumbli' from other countries. So, this aspect of the matter has to be considered.

As regards sandalwood, an hon. Member also referred to it. As there is a large forest area in the Dharmapuri district, a sandalwood oil factory can be started there.

My hon. Friend, Thiru Bhomman wants that a Sago Factory and a Saw Mill should be started in Gudalar as raw materials like teak are available in large quantities.

An Engineering Unit of TANSI also can be started at Ootacamund.

Finally, I want to stress one point with regard to Sericulture. People are finding it very difficult to sink big wells and get water. I request the Hon. Minister to grant a loan of Rs. 10,000 for each person so that we can bring about a yellow revolution in Tamil Nadu and the people in the villages also can be benefited.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளுக்கு எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

பர்பார்மன்ஸ் பட்ஜட்டிலே நல்ல பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்த மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் ஒருசில கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

உதாரணமாக, செங்கல் தொழிற்சாலை நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது என்று நீங்கள் கொடுத்த புள்ளி விவரங்களை எல்லாம் தொகுத்து இந்த மன்றத்திற்குத் தந்தார்கள். இந்தத் தொழிற்சாலையானது ஒரு வெள்ளை யானையாக இயங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எப்போது பார்த்தாலும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஆயிரம் செங்கல் 150 ரூபாய் செலவு செய்து உற்பத்தி செய்து 125 ரூபாய்க்கு விற்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நீண்டகாலத்திற்கு இந்தத் தொழிற்சாலையைக் கொண்டு போக வாய்ப்பு இருக்கிறதா என்பதைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.



1974 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இது நட்டத்தில் போனாலும் தொழிலாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தால் இந்தத் தொழிலை விடக் கூடாது என்று நினைத்தாலும் இதுபற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

தனியார் துறையில் பலரும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோடு இந்தத் தொழிலில் நாம் ஈடு செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறோமா என்பது இதைப் படித்துப் பார்த்தாலே நிச்சயமாகப் புலப்படுகிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த அரசாங்கம் தொழில் கொள்கையை வகுத்திருக்கும் நிலைமையைப் பற்றி அவையில் எடுத்துக் கூற விரும்புகிறேன். கூட்டுத் துறையும், தனியார் துறையும், பொதுத் துறையும் இருக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் நமது அரசாங்கம் இப்போது வைத்திருக்கிறது. கூட்டுத் துறையைப் பற்றி ஒருசில கருத்துக்கள் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். பல புதிய ஸ்தாபனங்களும், பல தொழில்களும் கூட்டுத் துறையில் ஆரம்பமாகி இருக்கிறது. கூட்டுத் துறையில் ரப்பர் பாக்டரி ஆரம்பிக்கத் திட்டம் போட்டிருக்கிறோம். அதே மாதிரி ரசாயன உரத் தொழிற்சாலை தூத்துக்குடியில் ஆரம்பமாகி இருக்கிறது. இந்த நிறுவனங்களில் என்ன வழி முறைகள் கையாளப்பட வேண்டுமென்பது பற்றி என்னுடைய ஆலோசனைகளைக் கொடுப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

வேலைக்கு ஆட்களை அமர்த்தும்போது அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட பர்சன்டேஜ் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பொதுத் துறை நிறுவனங்களில் மத்திய அரசாங்க நிறுவனங்களும் பல நம்முடைய மாநிலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கு நமது மாநிலத்திற்குப் போதிய அளவு பங்கு கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகாராஷ்டிர மாநிலத்தில் சிவசேனைக் கிளர்ச்சி ஆரம்பமாகியிருக்கிறது. அதே மாதிரி கிளர்ச்சியைத் தமிழ்நாட்டில் உருவாக்க வேடுண்மென்ற எண்ணத்தில் தொல்லவில்லை. நம்முடைய

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 27

தமிழர்கள் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மத்திய அரசாங்க நிறுவனங்களில் போதிய பிரிதிநிதித்துவம் கொடுக்கவில்லை என்று பரவலாகப் புகார் சொல்லுகிறார்கள். இந்த நேரத்தில் நமக்கு நியாயமான பங்கு, கணிசமான பங்கு கிடைக்க வேண்டும்.

சேலத்தில் இருக்கும் உருக்காலையானாலும் சரி; ஏனைய நிறுவனங்களானாலும் சரி, நிச்சயமாக பங்கு கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதற்கு நமது அரசாங்கம் முனைந்து பாடுபட வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் வேறு சில தொழில் முன்னேற்றத்தைப் பற்றி வெகுவாக வளர்ச்சி அடைந்திருக்கிறோம் என்று தொழிலமைச்சர் அவர்களைப் பாராட்டினார்கள். வளர்ச்சி வேகம் போதுமா, இன்னும் அதிகமாக வேண்டாமா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

மகாராஷ்டிர மாநிலம், வங்காள மாநிலத்தை எடுத்துப் பார்க்கும்போது நமது முன்னேற்றம் சரியான முறையில் இருக்கிறதா என்று கேட்டால் அந்த அளவுக்கு வளர்ச்சியை அடையவில்லை என்றுதான் கூறவேண்டும்.

குஜராத் மாநிலம் நம்மை விட அதிகமாக முன்னேறிக் கொண்டிருக்கிற நிலைமைகளை உணர்ந்து இந்த மாநிலமும் அந்த அளவு வளர்ச்சியடைய அதிகத் திட்டங்களைத் தீட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, நமது மாநிலத்தில் தொழில்கள் ஏற்படுவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று பல உறுப்பினர்கள் கூறினார்கள். ஆனால் இங்கு ஏற்பட்டிருக்கும் தொழில்கள், இனி வரக்கூடிய பெரிய தொழில்கள் எல்லாம் பொதுத் துறையில் ஏற்படுவது சாலச்சிறந்ததாக இருக்கும்.

பொதுத் துறையை ஆட்சேபிக்கிறவர்கள் பலரும் இருக்கிறார்கள். எங்கள் கட்சி சமதர்மத்தை நம்புகிற கட்சி. தேசியமயமாக்க வேண்டும்; தேசவுடைமையாக்க வேண்டுமென்ற கொள்கையை எப்போதும் பின்பற்றுகிற காரணத்தால் வருகின்ற பெரிய தொழில்கள் நிச்சயமாக பொதுத் துறையில் ஏற்பட வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1974 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ஹாண்ட்லூம்ஸ் பொறுத்தவரை ஒருசில கருத்துக்கள் கூற முற்படுகிறேன். நமக்குத் தந்திருக்கிற அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போது 5.56 லட்சம் தறிகள் இருப்பதாகவும், 20 லட்சம் பேர்கள் இதிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் 50 கோடி ரூபாய்க்குச் சரக்கு உற்பத்தி செய்யப்படுவதாகவும் கூறியிருக்கிறார்கள்.

கைத்தறியைப் பொறுத்த அளவில் எக்ஸ்பர்ட் கமிட்டி கூறிய கருத்துக்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதிலே பல காரியங்களைச் செய்வதில் கஷ்டம் இருக்கிறது, சங்கடங்கள் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் போதிய அளவு ஒத்துழைக்கவில்லை என்று உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் இருக்கும் நிலைமையை நல்ல முறையில் உணரவேண்டும்.

இப்போது மகாராஷ்டிர மாநிலத்தை எடுத்துக் கொண்டால் காம்போசிட் மில்கள் அதிகமாக இருக்கின்றன. பவர் லூம்ஸ் இருக்கின்றன. நாம் இன்னும் பழைய முறையிலேயே சென்று கொண்டிருப்போமானால் நாம் அவர்களோடு போட்டியிட முடியாது. நிச்சயமாக நாம் பின்னேக்கப் பாதையில் செல்லும் நிலைக்கு ஆளாக்கப்படுவோம்.

இனி அடுத்தபடியாக காம்போசிட் மில்சை நிறுவ அரசாங்கம் தொழிற் துறையில் அதிகமான முனைந்து அக்கறை காட்ட வேண்டும். அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பவர் லூம்ஸ்—விசைத் தறியைப் புகுத்துவது பற்றியும் பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். அது எந்த மட்டில் வெற்றியைத் தந்திருக்கிறது, வெற்றி வாய்ப்பு மேலும் எவ்வளவு ஏற்படும் என்பதை நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, அந்த முறையில் இந்தத் தொழிலை மாற்றியமைக்க நாம் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

பஞ்சு விலையைப் பற்றிக் கூறினார்கள். பஞ்சு போதிய அளவில் இல்லை. மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதற்காக ஏற்பட்ட கார்ப்பரேஷன் பற்றி எல்லாம் பல கருத்துக்களைக் கூறினார்கள்.

பொதுவாக, தமிழ்நாட்டில் பல நூற்பாலைகள் இருக்கின்றன. அந்த நூற்பாலைகள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நலிந்த ஆலைகளைக்கூட ஏற்று லாபம் தரக்கூடிய முறையில் நடத்த நமது அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்று சிந்தனை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அந்தத் தொழிலைப் பொறுத்த அளவில் நிச்சயமாக தேசியமயமாக்கினால் எங்களைப் போன்றவர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. தேசியமயமாக்கினாலும், நாட்டுடமையாக்கினாலும் நல்ல முறையில் செயல்பட வேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில்கள் நட்டத்தில் நடக்கிறது; மக்களுடைய வரிப் பணத்தை விரயம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு ஏற்படாத வகையில் திருத்தியமைக்க வேண்டிய வழிவகைகளைச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகள் 12 இருக்கின்றன. இவற்றைப் பற்றிய அறிக்கையைப் பார்க்கும்போது பல நூற்பாலைகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் கதிர் அத்தனையையும் உபயோகப்படுத்தியதாகத் தெரியவில்லை. எகனாமிக் வயபிள் யூனிட் என்ற முறையில் விஸ்தரிக்க துரிதமாக அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும், பல இடங்களில் இருக்கிறது. நிதிப் பற்றாக்குறையாக இருந்தாலும் அதற்கு அரசாங்கம் பண உதவி செய்து வேண்டுமென்றால் ஷேர் காபிடலை அரசாங்கம் கொடுத்து ஊக்குவிக்க வேண்டிய திட்டங்களைத் திட்ட வேண்டுமென்பதையும் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எல்லா கூட்டுறவு ஆலைகளும் 25,000 கதிர் போட வேண்டும் என்று, முன்பிருந்ததை விட இரட்டிப்பாக போட வேண்டுமென்று, அரசு முடிவு எடுத்து இம்ப்ளிமென்டேஷன் ஆரம்பித்துவிட்டது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அது விரைவில் ஏற்பட்டால் மகிழ்ச்சி. அதை ஆட்சேபிக்கவில்லை. இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அவர்கள் அடிப்படைச் சம்பளம் பற்றி காலையில் கேள்வி நேரத்தில் ஒரு





கேள்வி கேட்டேன். அவர்கள் சம்பளத்தை ஏதோ அரசாங்கம் திருத்தியமைப்பதற்கு ஒத்துக்கொண்டதாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

நான் ஒன்று கூற விரும்புகிறேன். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய அடிப்படைச் சம்பளம் இன்று குறைவாக இருக்கிறது. மற்ற மில்களில் கொடுப்பதை விட குறைவாக இருக்கிறது. ஆதலால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஏனையத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போல் இவர்களுக்கு அதேபோல் ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு நூற்பாலைகளுக்கு இந்த அரசாங்கம் நியமனம் செய்கிறார்கள். டைரக்டர்களை எல்லாம் அரசாங்கமே நியமனம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு கட்சிக் கண்ணோட்டத்தோடு இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

எங்கள் பகுதியில் ஒரு நூற்பாலை இருக்கிறது. பல்லாண்டு காலமாக தொடர்ந்து அதில் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் டைரக்டர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் கூட அன்று டைரக்டர்களாக இருந்தோம். ஆதலால் எங்களுக்கு மறுமுறையும் தரவேண்டும் என்று வாதாடுவதற்கு நான் வரவில்லை. கூடிய விரைவில் அங்கு அதற்கு தேர்தல் நடத்த வேண்டும். நாங்கள் எல்லாம் அந்த நூற்பாலைக்கு பணம் கொடுத்தவர்கள். ஆனால் இதுவரை அதிலிருந்து ஒரு நயா பைசா கூட டிவிடன்ட்டாகவோ அல்லது மற்றவிதத்திலோ வாங்காதவர்கள். அது நியாயமாக, ஒழுங்காக நடக்கிறதா என்று பார்ப்பதில் எங்களுக்கு அதிக அக்கறை இருக்கிறது. ஆகவே தேர்தல் வைக்க வேண்டும், யார் வேண்டுமானாலும் வரட்டும், தி.மு.க.வினரே வந்தாலும் ஆட்சேபிக்கவில்லை. தேர்தல் முறையை இதில் புகுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு நூற்பாலைகளில் மட்டுமல்ல, சர்க்கார் ஆலைகளிலும் தேர்தல் முறையைக் கையாள வேண்டும். அரசாங்கத்திலிருந்து மூலதனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் திரும்பக் கொடுப்பது வரையில் தேர்தல் நடத்த வேண்டாம் என்று விதிமுறை இருப்பதாக அறிகிறேன். அந்த விதிமுறையை நிச்சயமாக மாற்றியமைக்க வேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 27

ஜனநாயக அமைப்பில் அதிலும் இந்தமாதிரியான பெரிய தொழில்களை எல்லாம் நடத்துவதில் ஏன் தேர்தல் முறையைக் கையாளக் கூடாது? நிச்சயமாக இதை ஒரு கட்சியின் கூடாரமாக, எந்தக் கட்சியானாலும் சரி, அவர்களின் கூடாரமாக இருக்காமல் பொது மக்களின் வரிப் பணத்தால் அல்லது மற்றவர்கள் பணத்தால் இயங்கும் ஒரு ஸ்தாபனம் என்ற முறையில் தேர்தல் முறையைப் புகுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கயிறுத் தொழில். இந்தக் கயிறுத் தொழிலைப் பொறுத்தமட்டில் மட்டையிலிருந்து நார் எடுத்து என்ன செய்ய முடியும் என்றெல்லாம் பலரும் எடுத்துக் கூறினார்கள். இந்தக் கயிறு தொழில் கேரளாவில் சிரோடும் சிறப்போடும் நடந்து கொண்டிருக்கிறது. அது ஒரு பெரிய தொழிலாக அங்கிருக்கிறது.

ஆலப்புழை போன்ற பெரிய நகரங்களுக்கு சென்று பார்த்தால் அந்தக் கயிறு தொழிற்சாலைகள் எல்லாம் என்ன முறையில் இயங்கி வருகின்றன என்பதைக் கண்டுகொள்ளலாம். நிச்சயமாக அதற்கு ஒரு எதிர்காலம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, தஞ்சை, கன்னியாகுமரி போன்ற கடற்கரையோரப் பகுதிகளில் இந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கான நல்ல வாய்ப்பிருக்கிறது. ஆதலால் அந்த முறையில் போதுமான ஆக்கமும் ஊக்கமும் இந்த அரசு செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈத்தா மொழியில் ஒரு கயிறு பயிற்சிப் பள்ளி இருந்தது. அந்தப் பள்ளிக்கூடம் இப்போது மூடப்பட்டு அதில் பல்லாண்டுக் காலம் வேலை செய்தவர்கள், நிரந்தரமாகப் பணியாற்றியவர்கள் எல்லாம் வேலை இழக்கும் ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதில் வேலை இழந்தவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டுமென்று அவர்கள் மனுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது. ஆகவே அரசு அந்தப் பிரச்னையை அணுகி நியாயம் வழங்கக் கூடிய அளவில் அதில் வேலை பார்த்து வந்த ஊழியர்கள் எல்லோருக்கும், ஒரு சிலர் மட்டும் என்றில்லாமல், சம நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்தபடியாக, தோல் பதனிடும் தொழில் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பல கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் எவ்வளவோ பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அதில் என்ன பாலோ அப் ஆக்ஷன் எடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

இந்தப் பிரச்னையை காழ்ப்புணர்ச்சியோடு நான் அணுகவில்லை. மனிதாபிமானப் பிரச்னையாகத்தான் இதை அணுகுகிறேன். ஏனெனில் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் நம் மாநிலத்தில். பல தொழில் அதிபர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழில் அதிபர்கள் என்றால் வட நாட்டிலுள்ள டாட்டா, பிர்லா போன்ற பெரிய தொழில் அதிபர்களைப் பற்றிச் சொல்லவில்லை.

தோல் ஏற்றுமதி செய்வதில் பினிஷ்ட் ப்ராடக்ஸை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று மத்திய அரசு ஒரு திட்டம் வகுத்து அதை கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவர்கள் தமிழ் நாட்டில் ஒரு பெரிய நிறுவனத்திற்கு மொனுப்பலி ஹவுஸ்க்கு, இருக்கிற நிலையை ஆராயாமல் அந்தக் குழு கூட இங்கே வராமல் அவர்கள் ஏதோ முடிவு எடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இது உண்மையாக இருந்தால் தமிழகத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிலாளர்கள் மட்டுமின்றி இதில் ஈடுபட்டிருக்கிற எல்லோரும் பாதிக்கப்படும் ஒரு பிரச்னை என்பதால் இது குறித்து விரைவில் ஒரு முடிவு காணவேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சீனித் தொழிற்சாலைகள் பல ஏற்பட இருக்கின்றன. அவை பொதுத் துறையில் ஏற்பட இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஒன்று கூற விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 2

புதிதாக ஏற்படக்கூடிய சினித் தொழிற்சாலைகள் எங்கெங் கெல்லாம் தொழில் இல்லாமல் இருக்கிறதோ, எங்கெங் சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளில் அமை வேண்டும்.

எங்கள் பகுதியில் முன்னால் தக்கலையில் பாரி அண்ட் கோ ஒரு சர்க்கரை ஆலையை நடத்தி வந்தது. அது ஏதோ காரணத்திற்கா மூடப்பட்டது.

திருநெல்வேலியில் ஒரு சீனி ஆலை நடத்தப்பட்டு வந்தது பாரி அண்ட் கோ-வினுல் என்று நினைக்கிறேன். அதுவும் மூடப்பட்டது. அந்தப் பகுதிகளில் இந்த சீனி ஆலைகளை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆகவே ஆராய்ந்து அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது வேறு சில புதுக் கருத்துக்கள் எல்லாம் இருக்கின்றன.

ஷுகர் கேன் பார்ம் கார்ப்பரேஷன் நிறுவுவதாக இருக்கிறது. 6,500 ஏக்கர் ஆரூரான் சர்க்கரை ஆலையிலிருந்து கைப்பற்றப்பட்டு ஒரு கார்ப்பரேஷன் என்ற முறையில் இயங்கிக் கொண்டிருப்பதாகப் பார்க்கிறேன். இதற்கு ஒரு கார்ப்பரேஷன் அமையப் போகிறது.

அடுத்தபடியாக, ஒரு கார்ப்பரேஷன் அமையப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

Sugar Courporation for running public sector sugar mills என்ற தலைப்பில் ஒரு கார்ப்பரேஷன் நிறுவ ஏற்பாடு செய்யப் போவதாக இந்த அறிக்கையில் காண்கிறேன்.

நிச்சயமாக எல்லா சர்க்கரை ஆலைகளையும் தேசியவுடைமை யாக்குவதில் எங்களைப் போன்றவர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

கூட்டுறவுத் துறையில் 7 ஆலைகள் இருக்கின்றன. 9 ஆலைகள் தனியார் துறையில் இருக்கின்றன. இந்த அரசின் கொள்கை அந்த ஆலைகளை எல்லாம் நாட்டுடமையாக்குவது என்று



1974 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

சொன்னுல் எங்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இரண்டு மூன்று கார்ப்பரேஷன்கள் தேவையா என்பதைப் பற்றி ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஷுகர் இன்ஸ்டிட்யூட், ஆராய்ச்சி போன்றவைகள் செய்ய ஒரு இன்ஸ்டிட்யூட் இப்போது கான்பூரில் வட இந்தியாவில் இருக்கிறது என்று அறிக்கையில் கூறியிருக் கிருர்கள். அதேமாதிரி ஒரு இன்ஸ்டிட்யூட்டை இங்கே ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தைக் கூறியிருக்கிருர்கள். அதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆனுல் இரண்டு மூன்று கார்ப்பரேஷன்ஸ் இருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கார்ப்பரேஷன் என்ருலே ஒரு அலர்ஜி டெவலப்பாகிறது, தமிழ் நாட்டில். அது ரொம்பப் பயன் உள்ளது. ஒவ்வொரு கார்ப்பரேஷனிலும் நாம் போடுகிற முதலைவிட பல மடங்கு நாம் பைனன்ஷியல் இன்ஸ்டிட்யூஷன் களிலிருந்து வாங்குகிருேம். சர்க்கார் நடத்துவது என்ருல், ஒரு கார்ப்பரேஷன் என்ருல், அந்தப் பணம் வராது. தொழில் வாரியாக கார்ப்பரேஷன்ஸ் ஏற்பட ஏற்பட நாம் போடுகிற முதல் குறைந்து ஏராளமான முதல் பைனன்ஷியல் இன்ஸ்டிட்யூஷன் களிடமிருந்து வாங்குவதற்கு ஒரு அதிகாரம் கிடைக்கிறது. பொதுமக்களிடமிருந்து பணம் திரட்டுவதற்கும் ஒரு அதிகாரம் கிடைக்கிறது. கார்ப்பரேஷன் என்ருல் அதிகப் பணம் தொழிலுக்கு முதலீடு செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் பொருள். உண்மையில் கார்ப்பரேஷன்கள் நாட்டுக்கு நிச்சயமாக நல்லது.

(மாலை 6-30)

THIRU R. PONNAPPA NADAR : I am afraid that there is a plethora of corporations. That is the reason why I am constrained to think that it may not be workable.

அடுத்தபடியாக, வேறு இரண்டு துறைகள் இருக்கின்றன. அவற்றின் மீதும் என்னுடைய கருத்தைக் கூறவேண்டுமென்று நினைத்தேன். நிறைய பேச வேண்டுமென்று நினைத்தேன். சமயம் அதிகமாகிவிட்டதால் நிறைய பேச விரும்பவில்லை.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 27

நீதித்துறையைப் பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். நீதித்துறையைப் பற்றி பல கருத்துக்களை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினர் நீதிபதி நியமனம் பெறுவதற்கு அரசாங்கம் சலுகை செய்வதில் நிச்சயமாக எனக்கு ஆட்சேபணை இல்லை, ஆதரிக்கிறேன்.

அதே நேரத்தில் அவர்கள் தகுதியும், திறமையின் அடிப்படையிலும்தான் அமையவேண்டும். வெறும் ஜாதியின் அடிப்படையில் மட்டும் அமையக்கூடாது. என்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இதிலே கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் நீதிபதிகள் வருவார்களானால் நல்லமுறையில் அவர்கள் செயலாற்ற முடியும் என்பதில் இரண்டு வித கருத்துக்கு இடமில்லை.

இப்போது பப்ளிக் பிராசிக்யூட்டர் நியமனம் செய்து இருக்கிறீர்கள். ஏழு வருஷம் வக்கிலாக இருந்தவர்கள்தான் இந்தப் பதவிக்கு வருவதற்கு இயலும். இந்த 7 வருஷ அனுபவத்தில் அவர்களெல்லாம் நல்ல திறமைசாலிகளாகி விட்டார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எப்படி அவ்வளவு அனுபவம் 7 ஆண்டுகளில் வந்துவிடும் என்றும் எனக்குத் தெரியவில்லை. அவர்கள் என்னென்ன கேஸ்களை நடத்தினார்கள், என்னென்ன முறையில் நடத்தினார்கள் என்று பார்த்து கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் நல்ல தகுதியின் அடிப்படையில் நியமிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய பகுதியில் திருநெல்வேலி கான்ஸ்பிரசி கேஸ் நடந்தது. அதிலே ஒரு ஸ்பெஷல் பிராசிக்யூட்டர் நியமனம் செய்து இருந்தார்கள். அந்த ஸ்பெஷல் பிராசிக்யூட்டர் மேலவையின் உறுப்பினராக நியமனம் பெற்ற உறுப்பினராக இருந்தவர். அங்கே கலெக்டர் அவர்கள் ஸ்பெஷல் பிராசிக்யூட்டர் நியமனத்திற்காக மனுக்கள் கேட்டு, அதிலே சிலருக்கு அபேட்சையும் கொடுத்தார்கள். அந்த அபேட்சை செய்தவர்களில் யாரையும் நியமனம் செய்யாமல், அரசாங்கம் அந்த பப்ளிக் பிராசிக்யூட்டருக்கு உதவி செய்துகொண்டு வந்தவரை நியமித்து இருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் இந்த முறை சரியான முறையா? அந்த நபருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், முன்பே கொடுத்து இருக்கலாம். அதற்காக மனுக்கள்



1974 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கேட்டு, அபேட்சையும் கொடுத்திருக்கவேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன்.

அங்கே உள்ள வக்கில் சங்கத்தில் இருப்பவர்கள் பெரும் ஆட்சேபணை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி நிலை மறுபடியும் ஏற்படாத முறையில் நடக்கவேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீதிபதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். அப்படிச் சுற்றுப்பயணம் செய்கிற போது, அவர்கள் தனியார் வீடுகளில் தங்குகிறார்கள். செல்வந்தர்கள் வீடுகளில் தங்குகிறார்கள் என்ற கருத்தை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உண்மையிலேயே கோயம்புத்தூருக்கு நான் சென்று இருந்த போது, ஒரு சில நீதிபதிகள் இம்மாதிரி செல்வந்தர்கள் வீட்டில், தனியார் வீட்டில் தங்கினார்கள். அங்கே அவர்கள் சொன்ன பல்வேறு கருத்துக்களையும் என் காதால் கேட்டேன். இந்த மாதிரி நம்முடைய நீதிபதிகளைப் பற்றி குறைத்துக்கூற வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

நீதிபதிகள் நல்ல முறையில் நடந்து கொண்டால்தான் நிச்சயமாக பொதுமக்கள் அவர்களை மதிப்பார்கள். இப்படி நான் சொல்கிறபோது அவர்கள் யார் மீதும் எனக்கு தனிப்பட்ட முறையில் ஹாஸ்டிலிடி கிடையாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த இலாகா ஒரு சிலரின் குடும்பச் சொத்து என்ற முறையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்று பல வழக்கறிஞர்கள் சொல்கிறார்கள். அந்தக் கருத்தை இந்த மன்றத்தில் கூறுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, இந்த மாதிரி முறையில் இந்த இலாகா இல்லாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** குடும்பச் சொத்து என்றால் மந்திரிகளைப் பற்றி நினைத்துக்கொள்வார்கள். அதை விளக்கிச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1974 மார்ச் 27]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நீதிமன்றம் யாருடைய குடும்பச் சொத்தாக இருக்கிறது என்பது பொதுமக்களுக்கு நன்ருகத் தெரியும். அதைப் பற்றியெல்லாம் விரிவாகவும், விளக்கமாகவும் பேச வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்ற முறையில் அமையவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அவர்கள் மறைமுகமாகச் சொல்கிருர்கள். அப்படிப்பட்ட சில பேச்சுகளை புரிந்து கொள்ளக் கூடிய சக்தி எங்களுக்குக் கிடையாது. யாருடைய குடும்ப சொத்து. யார் அது என்பதை தெளிவாகச் சொன்னல் நன்ருக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வக்கீல் தொழில் செய்பவரும், நாடாளுமன்ற உறுப்பினருமாக இருந்த தங்களுக்கு இது புரியும். இந்த மன்றத்திற்கும் புரியும். நீங்கள் போடுகிற வலையில் நான் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை. எல்லோருக்கும் தெரியும். இந்த மன்றத்திற்கும், பொதுமக்களுக்கும் தெரியும். ஆகவே, இந்த முறையானது விரும்பத்தக்கது அல்ல. வெறுக்கத்தக்கது என்று சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதிமன்றத்தில் பலவிதமான குறைபாடுகள் வருகின்றன. அதோடு இந்த சப்-மாஜிஸ்டிரேட் என்று இருக்கிறவர்கள் நிலைமை பார்க்கிறபோது அவர்கள் மிகவும் கவலைக்குள்ளாகிக்கொண்டு இருக்கிருர்கள்.

அந்தக் கடையநல்லூல் ஸ்பெஷல் கேஸ் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். திரு. எட்மண்ட் அவர்கள்கூட கூறினுர்கள். 45 வழக்கு போடப்பட்டிருக்கின்றன. காப்பி எடுக்கவேண்டுமானல், இன்று இருக்கும் முறைப்படி காப்பி எடுப்பதற்கு இன்னும் 15 ஆண்டுகள் ஆகும் என்று அந்த மாஜிஸ்டிரேட் ஹைக் கோர்ட்டுக்கு எழுதி இருப்பதாக எனக்கு நம்பமாகத் தெரியும். இந்த மாதிரி நிலை இருந்தால் எதற்கு சப்-கோர்ட் என்று போட்டு இருக்கிறீர்கள்? இன்னும் 50 காப்பிஸ்ட்டுகள் வேண்டுமென்று கேட்டார்கள் என்று தெரிகிறது. ஒரு வேளை அந்த வழக்கில் எதிரிகளாக இருப்பவர்கள் எல்லாம் மாண்டு, மறைந்த பிறகு நீதி



1974 மார்ச் 27] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

விசாரணை நடத்தப்போகிருர்களோ என்னவோ தெரியவில்லை. நிச்சயமாக அரசாங்கம் அதிக அக்கரை இந்த விஷயத்தில் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஜெயில் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். நாங்கள் அண்மையில் நாகூர் சப்-ஜெயிலில் இருந்தோம். அங்கே இருக்கும் சுகாதார நிலை மிகவும் வேதனைப்படும்படியாக இருக்கிறது. அங்கே தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் அந்த ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் அங்கே எல்லா இடங்களிலும் பரிமாறிக் கொண்டிருக்கிருர்கள். அங்கே குளிப்பதற்கு வைத்திருக்கும் தண்ணீரில் காலையில் குளிப்பதற்கும், பொங்குவதற்கும் தண்ணீர் எடுத்துக்கொள்கிருர்கள். அதற்குப் பிறகு நாங்கள் குளிக்கும் நிலை அங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதை மட்டுமின்றி அங்கே மனதிற்குப் பிடித்தமில்லாத நிலைமைகள் இருக்கின்றன. அது விரும்பத்தக்கது அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதே மாதிரி பாளையங்கோட்டை ஜெயிலுக்கும் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கே குளிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காத நிலை இருந்தது. ஒரு வேளை அரசாங்கம் சொல்லக் கூடும், பல்லாயிரக்கணக்கான நபர்கள் சிறைச்சாலையில் அடைத்து விட்டதன் காரணமாக குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்று. குளிக்கவேண்டுமென்று நினைத்தால் அதற்கு வழி இல்லை. கொல்லைக்குப் போக வேண்டுமென்று நினைத்தால் போக முடியாது. இவ்வளவு துன்பங்களுக்கும், சங்கடங்களுக்கும் இடையே நாங்கள் இருந்தோம். இதைப் போக்குவதற்கு அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

சிறைச்சாலையில் இருக்கும் ஆயுள் தண்டனை கைதிகளுக்கு பரோல் கிடைக்கவில்லை என்று சொல்கிருர்கள். அவர்களுக்கு ரெமிஷன் உத்தரவுகள் காலாகாலத்தில் கொடுக்கவேண்டும். வேறு விதமான கண்ணேட்டம் இல்லாமல் எல்லா கைதிகளுக்கும் ஒரே மாதிரியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 மார்ச் 27

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எதிர்க்கட்சிக்காரர்கள் சிறைச்சாலையில் வைப்பது என்ற கொள்கை அரசாங்கத்திற்குக் கிடையாது. ஆகவே, அதிக நேரம் நாங்கள் பொறுத்திருக்க வில்லை, போராட்டம் 1 வாரத்தில் முடியும் என்று சொன்னீர்கள் 1 வாரம் ஆனவுடன் 5 மணிக்கு விட்டு விட்டோம். எதிர்க்கட்சிக் காரர்களை ஜெயிலில் வைக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நாங்களெல்லாம் 5 மணிக்கு போகவேண்டுமென்று நினைக்கவில்லை. சிறைச்சாலைக்கு அஞ்ச வில்லை, இனியும் அஞ்ச மாட்டோம் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் ஜெயில், நீதி, தொழில், கைத்தறி ஆகிய நான்கு மானியங்களின் பேரில் 16½ கோடி ரூபாய்க்கு ஒப்புதல் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

தொகை ஜாஸ்தி இல்லை. இந்த இலாகா ரொம்ப முக்கியமான இலாகாவாக இருக்கிற காரணத்தினால் எப்படி அதையெல்லாம் இணைத்துப் பேசுவது என்பது கஷ்டமாக இருக்கிறது என்று ஏற்கனவே சொன்னார்கள்.

நான் ஆரம்பத்திலேயே ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கைத்தறியைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னபடி, இது ஒரு முக்கியமான பிரச்னையாக வந்திருக் கிறது.

கைத்தறியை இந்த இலாகாவிலிருந்து பிரித்து, அதற்கு ஒரு தனி அமைச்சர் போடவேண்டும் என்று சேலத்தில் நடந்த மகாநாட்டில் கோரினார்கள். அதை நான் இங்கே வலியுறுத்த ஆசைப்படுகிறேன். தனியாக கைத்தறி சம்பந்தமாக ஒரு விவாதத்தை வைத்துக்கொண்டு, அதை முழுமையாக கவனிக்க வேண்டியதற்கு ஒரு தனி அமைச்சர் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அதே நேரத்தில் கைத்தறியைப் பொறுத்தவரையில் சந்தானம் கமிட்டி சிபார்சுகள் வந்து ஓர் ஆண்டுக்குப் பிறகு தான் அது வெளியிடப்பட்டது. சந்தானம் கமிட்டி சிபார்சுகளில் நாம் எதை எதை இப்பொழுது அமுல் நடத்தப்போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் குறைந்தபட்ச சம்பள அடிப்படையை நிர்ணயிப்பதற்கு ஒரு குழு அமைக்கப் பட்டது. அந்தக் குழு தன்னுடைய தீர்ப்பைக் கொடுத்து விட்டது. அந்த தீர்ப்பு கொடுத்து பல மாதங்கள் ஆகிவிட்டன. அந்தத் தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை. வெளிவந்த பிறகு அந்தத் தீர்ப்பை எப்பொழுது அமல் நடத்தப்போகிறார்கள் என்பதும் நமக்குத் தெரியவில்லை.

அதே நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் சரியாக கிடைக்கவில்லை என்ற குறையை உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்காக தறிகள் இருப்பதாக கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். சில ஊர்களில் கைத்தறிகள் இருப்பதாக அதிகம் பேர்களை கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக 'கோஸ்டு' கார்டுகள் அதிகமாக இருக்கக்கூடிய நிலைமை இருந்துவருகிறது; அதை அடுத்துத் தான் அரசாங்கம் சரியாக கார்டுகள் வழங்கவேண்டும் என்பதற்காக எத்தனை தறிகள் இருக்கின்றன என்று கணக்கு எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதனுடைய விவரங்கள், எத்தனை தறிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன, அதற்கு எந்த முறையில் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதையும் சொல்ல வேண்டும் என்று உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சில விஷயங்களைக் கூறிவிட்டு, இறுதியாக தொழிலைப் பற்றி கூறுகிறேன். நீதியைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ரொம்ப நல்ல முறையில் எடுத்துச் சொன்னார்கள். நீதியைப் பொறுத்த வரையில் சொல்வார்கள்

'Justice delayed is justice denied'

எப்பொழுதும் ஒரு தீர்ப்பு சீக்கிரம் வரவேண்டும். ஆகவே தான், மதுரையில் ஜில்லா ஜட்ஜாக இருந்து, ஹைகோர்ட் நீதி பதியாக இருந்து, கடைசியில் பிரதம நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற காலம் சென்ற பி. ராஜகோபாலன் அவர்கள்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

He was able to tighten up Sub-Magistriates' work. Why no similar step has been taken about civil court? என்று அந்த அளவுக்கு அதைச் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் சட்டத் துறையைப் பற்றி நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். I have nothing against the present Law Secretary. The Law Secretary must be a senior officer, as in West Bengal. In West Bengal, the Law Secretary is probably next only to the Chief Secretary. He has got direct access to the Cabinet. என்ற முறையில் இந்த இலாகாவை உயர்த்தவேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்த நரேத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் பிரிட்டிஷார் இருந்த காலத்தில் அவர்கள் விட்டுப்போன சில நல்ல காரியங்களில் இதுவும் ஒன்று. நீதியை சரியான முறையில் பரிபாலிக்க வேண்டும் என்ற முறையில் வைத்திருக்கிறார்கள்.

நம்முடைய ஹைகோர்ட்டைப் பற்றி சொல்லப்போனால் எவ்வளவு அருமையான ஹைகோர்ட் ஜட்ஜ்கள் இருந்தார்கள். குட்ஸ் டாட்டர் பற்றி சொல்வார்கள். மிகப் பெரிய அப்பீலாக இருந்தாலும் கூட ஒரு முக்கியமான விஷயத்தை ஒரே நேரத்தில் புரட்டிப் பார்த்து, கேள்வி கேட்டு, ஒரு வாரம் விவாதம் நடைபெறும் என்று நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது, ஒரே நாளில் முடித்துவிடுவார்கள் என்று சொல்வார்கள்.

எவ்வளவு சிக்கலான கேஸ்கள் வந்தாலும் கூட உண்மையை எடுத்து சொல்லக்கூடிய பப்ளிக் ப்ராசிக்யூட்டர் எதிராஜ் போன்றவர்கள் இருந்தார்கள். நான் உறுதியாகச் சொல்ல முடியும். எதிராஜ் போன்றவர்கள் பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவும் அனந்த நாராயணன் போன்றவர்கள் செஷன்ஸ் ஜட்ஜாகவும் இல்லாமல் போயிருந்தால் முத்துராமலிங்கத் தேவர் போன்றவர்களுக்கு அன்று கண்டிப்பாக தண்டனை கிடைக்கத்தான் செய்திருக்கும்.



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அரசியல் நிர்ப்பந்தங்கள் இருந்தாலும் ஜட்ஜுகள் கேஸ்களை நிதானமாக நடத்தினார்கள். அரசாங்கம் சார்பாக கேஸ்களை நடத்தக்கூடிய பப்ளிக் ப்ராசிக்யூட்டர்கள் அவ்வளவு சிறப்பாக பணியாற்றினார்கள். ஆகவே, அப்படிப்பட்ட புது உத்தியோகங்கள் வருகிறபொழுது கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

பல உறுப்பினர்கள் இப்பொழுது அமர்த்தப்பட்டிருக்கிற கவர்ன்மெண்ட் ப்ளீடரைப்பற்றிச் சொன்னார்கள். கவர்ன்மெண்ட் ப்ளீடரை நியமிப்பது அரசாங்கம் தான். ஆகவே அவர்களை நியமிக்கக்கூடிய காலத்தில்—அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்வார்கள் என்பது எனக்குத் தெரியும்.

மேல் சபையில் அதற்கு ஒரு பதில் கொடுத்திருக்கிறார்கள். மேல் சபையில் சொல்லப்பட்ட விஷயத்தை இங்கே சொல்லக் கூடாது என்றாலும், பத்திரிகையில் அதைப்பற்றி செய்தி வந்திருக்கிறது. என்னவென்றால் ஏற்கனவே அடிஷனல் கவர்ன்மெண்டு ப்ளீடராக இருந்தார்கள் என்று சொல்வார்கள். இதிலே என்ன நிலைமை ஏற்படுகிறது என்றால், இப்படி ஒரு கருத்து வருகிற பொழுது கவர்ன்மெண்ட் ப்ளீடர் ஹைகோர்ட் ஜட்ஜாக வரக் கூடிய ஒரு வழி இருக்கிறது. அம்மாதிரி அந்த நிலைமையில் ஹைகோர்ட் ஜட்ஜாக வந்துவிடுவார்களோ என்ற ஒரு அச்சம் இருக்கிற காரணத்தினால் அரசு நேரடியாக அமர்த்தக்கூடிய ஒருவர் இப்படி கவர்ன்மெண்ட் ப்ளீடராக ஆக வந்திருக்கிறார் என்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதை அமைச்சர் அவர்களும், இந்த இலாகாவும் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வேட்டுப் பிரேரணையில் மானாமதுரை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டில் அடிக்கடி டிரான்ஸ்பர் வருகிறது என்று நான் ரொம்ப பக்குவமாக சொல்லியிருக்கிறேன், அதை நிராகரிக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக. முன்சீப் பேரில் எத்தனையோ கம்ப்ளேண்ட்கள். ஏதோ இன்றைக்கு எடுத்து முன்சீப் கோர்ட்டிலிருந்துதான். அதையும் கொஞ்சம் பரிசீலனை செய்யவேண்டும் என்ற அளவுக்குத்தான் நான் சொல்லலாம்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

நானும் அந்த ஜாதியைச் சேர்ந்தவன், வக்கீல் ஜாதியைச் சேர்ந்தவன். அதைப்பற்றி குறைத்து பேசுவது சரியல்ல. ஜுடிஷியல் ஆபிசர் பற்றி பிராக்டிஸ் பண்ணுகிறவர்கள் பலவித மான கருத்து கூறுகிறார்கள். ஆகையினால் தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், மாஜிஸ்ட்ரேட்களைப்பற்றி, அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கவேண்டும் என்ற ஒரு வெட்டுப் பிரேரணை எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் கீழே இருக்கக்கூடியவர்கள். அப்பேர்ப்பட்ட வர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு கார் அலவன்ஸ் கொடுக்கவேண்டும். காரணம், சில சமயங்களில் அவர்கள் பஸ்ஸில் போகும்பொழுது அக்யூஸ்டுக்கு வேண்டிய ஆட்களால் அவர்கள் தாக்கப்படலாம் என்ற அச்சம் கூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அப்பேர்ப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அவர்களுக்கு கார் அலவன்ஸ் கொடுக்க வேண்டும்.

'லீகல் எய்டு டு தி பூவர்' என்ற ஒரு மசோதா கொண்டுவரப் பட்டது. இந்த மசோதா இங்கே வந்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. செலக்ட் கமிட்டிக்குப் போய் அப்படியே இருக்கிறது. ஏதாவது வரப்போகிறதா? ஏழையாக உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்கு ஏதாவது ஏற்பாடுகள் உண்டா? இந்த மசோதாவைத் தான் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கப் போகிறோமா? மசோதா இல்லாமல் வேறு ஏதாவது வாய்ப்பு உண்டா? இதுபற்றி விவரம் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

லேபர் கோர்ட்டுக்கு அதிகமான அதிகாரம் வேண்டும். போன தடவையே நான் வெட்டுப் பிரேரணை கொடுத்திருந்தேன். இந்தத் தடவை கூட லேபர் கோர்ட்டுக்கு அதிகமான அளவுக்கு அதிகாரம் இருக்கவேண்டும், அவர்கள் எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு ஏற்பாடு இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். Vigilance cell must be under the control of two or three High Court Judges.

ஹைகோர்ட்டு சேம்பர் கட்டப்படவேண்டும்.



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மதுரையில் ஒரு ஹைகோர்ட் பெஞ்ச் ஏற்படுத்தவேண்டும். 1971-ம் ஆண்டில் நான் சட்ட மன்றத்திற்கு வந்ததிலிருந்து—அங்கிருக்கக்கூடிய லாயர்ஸ் கூட என்னை தேர்ந்தெடுக்கக்கூடிய நேரத்தில் இதைப்பற்றிச் சொன்னார்கள்—இதே மாதிரி ஹைகோர்ட் பெஞ்சு அங்கே ஏற்படுத்தவேண்டும், அது ஒரு முக்கியமான ஊராக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆனால் இன்றுவரை ஏற்படவில்லை.

1973-ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் தேதி டாய்லர்ஸ் காமன் வில் பார்டியிலிருந்து தங்களுடைய வகுப்பிலிருந்து யாருக்குமே டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஹைகோர்ட் ஜட்ஜ் கொடுக்கவில்லை என்று ஒரு போராட்டம் நடத்தினார்கள். அந்த மெரிட்டுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அவர்கள் கேட்பதில் நியாயம் இருக்கிறதா, இல்லையா என்பதை நீங்கள் தான் பரிசீலனை செய்யவேண்டும். ஆனால் 160 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். தமிழ்நாடு பூராவிலுமிருந்து வந்தார்கள். கைது செய்யப்பட்டது 41-வது பிரிவை மீறினார்கள் என்பதற்காக சம்மன் செய்யப்பட்டு அவர்கள் வாய்தாவுக்கு வரக்கூடிய ஒரு நிர்பந்தமான நிலை இருக்கிறது.

It is a very unreal and inhuman approach.

ஒன்று அந்த கேஸை வாபஸ் பெற வேண்டும். புதுக் கேஸ் அல்ல. காலையில் கைது செய்யப்பட்டார்கள், மாலையில் விடப் பட்டார்கள். அவர்கள் நினைத்தார்கள் ஏதோ விடுதலை செய் தார்கள் என்று. இப்பொழுது அவர்கள் வாய்தாவுக்கு வந்து காத்துக்கொண்டிருக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரு சமயம் இது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரப்படாமல் இருக்கலாம். அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமே என்று தான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளை பொறுத்தவரையில் சிறைச்சாலைக்குப் போன வர்கள் இங்கே நிறையபேர் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் பிரிட்டிஷ் சிறைச்சாலையிலும் இருந்தவன், காங்கிரஸ் சிறைச்சாலையிலும் இருந்தவன், தி.மு.க. சிறைச்சாலையி லும் இருந்தவன். அடுத்த ஆட்சி வந்தாலும் சிறைச் சாலைக்குப் போகவேண்டியவன். நாங்களெல்லாம் இம்மாதிரியான நிலையில் இருக்கக்கூடியவர்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இனிமேல் நீங்கள் சிறைக்குப் போகவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஒருவேளை ஸி.பி.ஐ. ஆட்சிக்கு வந்தால் தலைவர் ஜெயிலுக்குப் போகவேண்டாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஸி.பி.ஐ. ஆட்சிக்கு வந்தாலும் தொழிலாளர்களுக்காக போராடி நான் ஜெயிலுக்குப் போவேன். கேரளாவில் கம்யூனிஸ்டு கட்சி ஆட்சியில் இருந்தாலும் அங்கே கம்யூனிஸ்டுகள் சிறைக்குச் செல்கிறார்கள். அது விஷயம் வேறு. சிறைக்குச் செல்லவேண்டாமென்றால் நாடு பூராவும் தொழிலாளர்கள் ஆட்சி வந்து, சோஷலிஸம் வந்தால் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி ஆகிக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்பொழுது 'ஒன் தேர்டு' முடித்திருக்கிறேன் இன்னும் 'டு தேர்டு' பாக்கியிருக்கிறது. யாரும் எடுத்துக்கொள்ளாத சிலவற்றைப்பற்றி நான் பேசவேண்டும் என்று நினைக்கிறேன்.

சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் எனக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. சிறைச்சாலைகளில் இப்போது மாறுதல் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அதைப்பற்றி சொல்ல முடியும். பிரிட்டிஷார் காலத்தில் சொல்லிவிட்டு சித்திரவதை செய்வார்கள். அதற்குப் பின்னால் வந்தவர்கள் சொல்லாமலே சித்திரவதை செய்தார்கள். இந்த ஆட்சியில் சித்திரவதை இல்லை. ஆனால் எந்த அளவுக்கு வெளியே சொல்கிறார்களோ அந்த அளவுக்கு அங்கே இல்லை. அப்படி வருகிறபோது இந்த மாற்றங்கள் எப்படி இருக்கவேண்டும்? சிறை சீர்திருத்தம் எப்படி இருக்க வேண்டும் என்று என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

when a person is an under-trial, he is after all an accused person. Under-trial prisoners are a special class of prisoners.

அவர்கள் வெளியே எங்கும் போய்விடக் கூடாது என்ற நிலைதான் இருக்க வேண்டுமே தவிர, அவர்கள் சிறையிலே அடைபட்ட கைதிகள் என்று நினைத்துவிடக்கூடாது.

பல இடங்களில் 'அண்டர் ட்ரயலில்' இருப்பவர்களிடம் கடுமையான வேலை வாங்குகிறார்கள். சப் ஜெயிலில் இருக்கின்ற அண்டர் ட்ரயல் கைதிகளை நான் பார்த்திருக்கிறேன். நானும் இருந்திருக்கிறேன். பிரிட்டிஷ் ஆட்சியிலும் பார்த்திருக்கிறேன்; காங்கிரஸ் ஆட்சியிலும் பார்த்திருக்கிறேன்; இப்போதும் பார்த்திருக்கிறேன். அவர்கள் வெளியே போகக்கூடாது என்பதைத் தவிர, வேறு எந்தத் தடையும் அவர்களுக்கு இருக்கக்கூடாது. அவர்கள் என்னைய் வேண்டுமென்று கேட்டால் கூட கொடுக்க வேண்டும்.



நான் ஒரு அண்டர்ட்ரயலாக இருந்திருக்கிறேன். இந்த ஆட்சியில். கொலை குற்றம் செய்தவனைப் போல என்னை நடத்தினார்கள். என்னை அப்படி நடத்தினார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை; பொதுவாகவே சொல்கிறேன். மற்ற பிரிசனர்களைப் பொறுத்தவரையில் இப்படி நடந்துகொள்ளலாம்; ஆனால் அன்டர் ட்ரயல் பிரிசனர்களுக்கு இந்த நிலை இருக்கக் கூடாது. அவர்களுக்கு பத்திரிகைகள் பார்க்க வசதி செய்து கொடுக்க வேண்டும். என்னென்ன பத்திரிகை என்ற லிஸ்டுக்குள் நான் போக விரும்பவில்லை. அந்த காலத்தில் சில பத்திரிகைகளை கொடுத்திருக்கிறார்கள். இப்போது சில பத்திரிகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அநேகமாக இப்போது எல்லா பத்திரிகைகளுமே கட்சிபாகுபாட்டுடன்தான் வருகின்றன.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் எங்கள் கட்சியின் சார்பில் வருகின்ற ஜனசக்தி பத்திரிகை உள்ளே போக முடியாது. சில ஜெயில்களில் முரசொலி கூட வர முடியாது. அப்படி இல்லாமல் வரக்கூடிய பத்திரிகைகள் எல்லாம் பார்ப்பதற்கு வசதி இருக்க வேண்டும்.

சிறைகளிலே இருக்கின்ற கைதிகளைப் பற்றி இரண்டு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். நீண்டநாள் கைதிகள் சிறையில் இருக்கிறார்கள். பத்து ஆண்டுக்கு மேல் சிறையில் இருக்கக்கூடியவர்களுக்கு ரெமிஷன் கொடுத்து வெளியிலே அனுப்பிவிட வேண்டும். அதை நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

ஆயுள் கைதிகளாக மதுரையில் இருந்தவர்களை கோவைக்கு மாற்றிவிட்டார்கள். மதுரை, கோவை, திருநெல்வேலி போன்ற இடங்களில் பெரிய ஜெயில்கள் இருக்கின்றன. அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஆயுள் கைதிகளை அங்கங்கே இருக்கக்கூடிய ஜெயில்களிலேயே—மத்திய சிறைச்சாலைகளிலேயே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

மதுரை ஜெயில் டிஸ்டிரிக்ட் ஜெயிலாகத்தான் இருந்தது. இப்போது புதுக்கோட்டையை ஒரு புது மாவட்டமாக ஆக்கி இருக்கிறார்கள். ஆகவே, மதுரை ஜெயிலை அப்கிரேடு செய்து, பெரிதாக்கி, சென்ட்ரல் ஜெயிலாக ஆக்கவேண்டும். அப்படிச் செய்தால் பல கைதிகளை அங்கே வைக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் கைதிகள் நெசவு, பாய் முடைதல் இப்பேர்ப் பட்ட காரியங்களை செய்கிறார்கள். அவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும். இப்போது கேரளத்தில் ஊதியம் கொடுக் கிறார்கள். அவர்களுடைய ஊதியத்திற்கு ஒரு கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தண்டனை முடிந்து வீடு திரும்பும் போது 200 அல்லது 300 ரூபாய் ஊதியம் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னொன்று. கைதிகளைப் பார்க்க வருகின்ற விசிடர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும். சில இடங்களில் பெண் விசிட்டர்கள் நீண்ட நேரம் வெயிலில் காத்து நிற்கவேண்டியிருக் கிறது. அண்மையில் மதுரையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சியை நான் கண்டேன். கிராமப்புரங்களில் இருந்து உறவினர் கைதி களைப் பார்க்க வருகின்றபோது அவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதில் விசேஷ கவனம் செலுத்தி, கைதிகளைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது லாக்கப்பில் புது ஏற்பாடு ஒன்றை செய்திருக் கிறார்கள். ஜன்னல்களில் கம்பி பொருத்தி இருக்கிறார்கள் கதவு களிலும் கம்பி பொருத்தியிருக்கிறார்கள். அதனால் உள்ளே காற்று போக வழியில்லை. ஏன் இப்படி செய்யப்பட்டிருக்கிறது என்று கேட்டால் கைதிகள் தற்கொலை செய்துவிடுகிறார்கள். அதைத் தடுப்பதற்காக செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். தற்கொலையைத் தடுக்கிறோம் என்று சொல்லி, காற்று போக முடியாமல் அவர்களை சித்திரவதை செய்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெயில் நிர்வாகத்தில் பணியாற்றக்கூடியவர்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். போன தடவை கூட சொன்னேன். அதைப்பற்றி ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை.



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இப்போது ஐ.ஜி. ஆக இருக்கக்கூடியவர் போலீஸ் டிபார்ட் மெண்டில் டி.ஐ.ஜி. ஆக இருந்தவர்கள்தான். அதனால் போலீஸ் இலாகாவில் ஊழியர்கள் எப்படி பணியாற்றுகிறார்கள்; என்ன வசதி அவர்களுக்கு இருக்கிறது என்பதெல்லாம் தெரியும். அதேமாதிரி இங்கும் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சில மத்திய சிறைகளில் ஜாயின்ட் சூப்பிரண்டுகள் போட்டிருக்கிறார்கள். எல்லா மத்திய சிறைகளிலும் ஜாயின்ட் சூப்பிரண்டுகள் இருக்கவேண்டும். ஏனென்றால் இப்போது வேலை அதிகமாக இருக்கிறது. அதேமாதிரி ஒரே ஒரு டி.ஐ.ஜி. தான் இப்போது இருக்கிறார். இரண்டு பேர்கள் இருக்கலாம். அதைப் பற்றி வெட்டுத் தீர்மானத்திலும் கொடுத்திருக்கிறோம். இன்னும் சிறைகளைப் பற்றி எவ்வளவோ சொல்லவேண்டியிருந்தாலும் இத்துடன் விட்டுவிடுகிறேன்.

தொழில்களைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். பல உறுப்பினர்கள் ஏற்கெனவே பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தின்படி சர்க்கரை ஆலைகளைப்பற்றி சொல்லவிரும்பு கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்மணி அவர்கள் தொழிலாளர்களுக்கு அதிகமாகப் பரிந்து பேசுகிறார்கள்; அவர்கள் பேசக்கூடியவர்கள்தான். நாங்கள் காலை 8 மணியிலிருந்து இங்கே இருக்கிறோம். இரவு சாப்பாடு கொடுத்தால் சாப்பிட்டுவிட்டு, இங்கேயே படுத்துக் கொள்ள வசதியாக இருக்கும். நிருபர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இரவு முழுவதும் கூட சட்டசபை நடக்கும் போல் தெரிகிறது. தொழிலாளர்களுக்கு பரிந்து பேசுவதைப் போல எங்களுக்கும் கொஞ்சம் பரிந்து பேசி, எங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றவகையில் ஏதாவது செய்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த மானியங்களுக்கு இரண்டு நாள் ஒதுக்க வேண்டுமென்றுதான் முதலிலே சொன்னோம். வேறு சில காரணங்களால் ஒரே நாளையில் வந்துவிட்டது. இரண்டு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

நாள் நடைபெற்றால் இரண்டு நாள் சம்பளம் கிடைக்கும். இப்போது மாலையில் 3 மணி நேரத்திற்குமேல் சபை நடைபெறுவதால் ஒரு நாள் கணக்காகிவிடுகிறது. ஆகையால் மாலையில் சபை நடைபெற்றால் அதற்கு தனியாக ஒரு நாள் சம்பளம் கொடுக்கலாம். அதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நாள் விவாதம் நடைபெற்றால் 3-ம், 3-ம் 6 மணி நேரம் தான் கிடைக்கும். இப்போது 7 மணி நேரம் கிடைக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதற்கு மேலே கூட நேரம் எடுத்துக்கொள்வோம். 1½ மணி என்றால் 2 மணி வரையிலும் இழுக்க முடியும்.

தொழில்களைப் பொறுத்தவரையில் நான் சர்க்கரை ஆலைகளைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சர்க்கரை ஆலைகளை எல்லாம் அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னோம். ஆனால் அமைச்சரவர்கள் சொன்னார்கள், சர்க்கரை ஆலைகளை தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் சொல்லட்டும்; செய்துவிடுகிறோம் என்று சொன்னார்கள்.

இங்கே 7 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 9 தனியார் ஆலைகளும் இருக்கின்றன. அவையெல்லாம் இந்த நாட்டின் பொருளாதாரம் 75 குடும்பங்களிடம் சிக்கியிருக்கிறது என்று சொல்கிறோமே, அவர்களிடம்தான் இருக்கிறது. கரிமுத்து, பாரி கம்பெனி, கோத்தாரி, ஏ.பி.டி., மகாலிங்கம் போன்றவர்கள் அந்த 75 குடும்பங்களும் பெரும் முதலாளிகள். இந்தத் தொழிலில் அதிக லாபம் கிடைக்கிறது.

உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் கரும்புக்கு ஒரு டன்னுக்கு 135 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இங்கும் அதே மாதிரி கொடுக்க ஏற்பாடு செய்யலாம் அப்படி கொடுக்காவிட்டால் இந்த சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்க வேண்டுமென்று முடிவு செய்து மத்திய சர்க்காருக்கு நீங்கள் எழுதினால் அவர்கள் அனுமதிக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்க்கலாம்.

உத்திரப் பிரதேசத்தில் 2 சர்க்கரை ஆலைகளை தேசிய மயமாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதினார்கள். மத்திய அரசு அதை ஏற்றுக்கொண்டது. ஆகவே, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சர்க்கரை ஆலைகளை தேசியமயமாக்குவதில் அபிப்பிராய பேதம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, நீங்களும் தேசியமயமாக்க முயற்சி செய்யுங்கள்.



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்த 9 தனியார் ஆலைகளையும் நீங்கள் ஏற்று நடத்துவதாக இருந்தால் அதற்கு பூரண ஒத்துழைப்புத்தர நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுக்கு உரிய நியாயம் கிடைக்கவேண்டும்; உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கவேண்டும். அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தாலும் நாங்கள் ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம்.

அமைச்சரவர்கள் கூட்டுத் துறையிலே சர்க்கரை ஆலைகளை புதிதாக நடத்தபோவதாகச் சொன்னார்கள். ஆனால் இருக்கின்ற நடைமுறைகளைப் பார்க்கின்றபோது அது சாத்தியமாகுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. நான்கு பெரிய சர்க்கரை ஆலைகளுக்கு இந்த அரசாங்கம் உதவி செய்கிறது. அவர்களை மேலும் வளர்க்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சக்தி சுகர்ஸ், ஏ.பி.டி., கோத்தாரி, அருணா, திரு. ஆரூரான் போன்ற ஆலைகளின் திறனளவை அதிகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றி இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

2,000 டன் பிரசன்ட் சாறு பிழியும் சக்தியுள்ள சக்தி கரும்பாலையை 4,000 டன்களாகவும், 1,500 டன் கப்பாசிட்டி உள்ள கோத்தாரி கரும்பாலையை 4,000 டன்களாகவும், 3,000 டன் கப்பாசிட்டி உள்ள அருணா கரும்பாலையை 4,000 டன்களாகவும், 1,200 டன் கப்பாசிட்டி உள்ள ஆரூரான் கரும்பாலையை 2,000 டன்களாகவும் விரிவுபடுத்த இந்த அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. உங்களுடைய கொள்கை இப்படி ரிவர்ஸ் டிரக்ஷனிலே போய்க் கொண்டிருக்கிறது.

(இரவு 7-00)

ஒரு பக்கத்தில் கூட்டுறவு ஆலைகளை அதிகப்படுத்தப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டு, தனியார் நடத்தப்படுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் தனியார் நடத்தக்கூடிய ஆலைகளின் 'கெபாசிட்டி'யை டபிள் படுத்தவேண்டும் என்று சொன்னால், இது என்ன கொள்கை?

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

இதைத் தேசியமயமாக்கவேண்டும் என்ற நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறோம் என்றால், அதற்கு என்ன காரணம்?

இந்தியாவிலேயே தென் மாநிலங்கள்தான் இன்றைக்கு கரும்பு உற்பத்தியில் சிறப்பாக இருக்கிறது. இதை உங்கள் புள்ளி விவரம் காட்டுகிறது. தமிழ்நாடு மூன்றாவது இடத்தை பிடித்திருக்கிறது. 'ரிகவரி'யைப் பொறுத்து கூட பரவாயில்லை. இப்படி இருக்கக் கூடிய நிலையில் தென் மாநிலங்களுக்குத்தான் வந்திருக்க வேண்டும்.

ஆனால், சரித்திர ரீதியாக வடக்கே உள்ள மாநிலங்களில்—குறிப்பாக உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் அதிகமாக இப்பொழுது சர்க்கரை ஆலைகளை உண்டாக்குகிறார்கள். இந்த ஆட்சி இருக்கும்பொழுது தமிழ்நாட்டில் எந்த சர்க்கரை ஆலையும் தனியாருக்கு இல்லை என்ற நிலையை இந்த ஆட்சியினர் ஏற்படுத்துவார்களானால் அது பாராட்டுக்குரிய விஷயம். பல தடவை கம்யூனிஸ்ட் கட்சி பாராட்டியிருக்கிறது: முன்பு பாராட்டினோம். இதை நீங்கள் செய்யுங்கள். கண்டிப்பாக நாங்கள் வெளியேயும் பாராட்டுவோம். இங்கேயும் பாராட்டுவோம். எங்கள் கட்சி பாராட்டுத் தீர்மானம் போடும். எங்களுடைய மத்திய கமிட்டியே தீர்மானம் போடும்.

தமிழக அரசு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எந்த சர்க்கரை ஆலையையும் தனியாருக்கு விட்டுவிக்கவில்லை என்ற நிலையைக் கொண்டுவந்தால் அதைப் பாராட்டக்கூடிய முறையில் தீர்மானம் போட்டு வைப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அகில இந்தியாவிலேயே இந்த மாநிலம்தான் முதன் முதலில் இந்தக் கொள்கையை இப்பொழுது அறிவித்திருக்கிறது. அவர்கள் சொல்கிற அளவுக்கு நாங்கள் செல்ல முடியவில்லையென்றாலும், துணிந்து இந்த ஒரு மாநிலம்தான் புதிய தொழிற்சாலைகள்—11 தொழிற்சாலைகளை—அரசாங்கமே நடத்தப் போகிறது என்று அறிவித்திருக்கிறது. இதற்குப் பாராட்டு கிடைக்குமா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** While I say praise for that, I find



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

that these big 75 house-holders are expanding, you are allowing them to fatten.

இரண்டும் நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வேறு தவறாக அமைச்சரவர்கள் நினைத்துக்கொள்ள வேண்டாம். இன்னும் இரண்டொரு விஷயங்கள் பற்றி குறிப்பிட வேண்டியிருப்பதால், இதற்குள் அதிகமாகப் போக விரும்பவில்லை.

கயிறுத் தொழில்பற்றி நான் சொல்ல நினைத்த பல விஷயங்களை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லிவிட்டார்கள். தமிழ்நாட்டில் அந்தக் கயிறுத் தொழிற்சாலையை ஏன் விரிவு படுத்தக்கூடாது?

ஈத்தாமொழியில் ஆரம்பித்து மூடிவிட்டோம்.

தென்காசியில் ஆரம்பித்துத் திணறிக்கொண்டிருக்கிறது.

இப்பொழுது தஞ்சை ஜில்லாவில் ஏதோ நடந்துகொண்டிருக்கிறது என்றுதானே சொல்கிறீர்கள். 1973-74-இல் the Budget provision was Rs. 6.49 lakhs and the revised estimate was Rs. 5.93 lakhs. The provision for 1974-75 is only Rs. 3.30 lakhs. The decrease in the provision in 1974–75 is due to poor response. இதில் விசேஷ கவனம் செலுத்தி, கயிறுத் தொழிற்சாலைகள் எல்லா இடங்களிலும் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஈத்தா மொழியில் வெறும் ட்ரெயினிங் சென்டராக இருந்ததை ப்ரொடக்ஷன் சென்டராக ஆக்கினோம். ட்ரெயினிங் சென்டரை காங்கிரஸ் சர்க்கார் ஆரம்பித்தார்கள். அதைப் பிறகு ஓரளவு ப்ரொடக்ஷன் சென்டராக ஆக்கினார்கள். இந்த அரசு வந்தபிறகு எல்லாவற்றையும் ப்ரொடக்ஷன் சென்டராக, ஓரளவு லாபம் வரக் கூடிய அளவுக்குச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆகையால், அந்த முறையில் கயிறுத் தொழிற்சாலைகளைப் பொறுத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"ஸ்டேட் போர்டு ஃபார் ஸால்ட் என்று வைத்திருக்கிறார்களே, அதில் நிபுணர்கள் இருக்கிறார்களா?" என்று நான் ஒரு கேள்வி கேட்டேன். அதற்கு, "குருநாத் போன்ற டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ் இருக்கிறார்கள்" என்று பதில் அளிக்கப்பட்டது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

But Gurunath has submitted a report on salt industry—he has recommended that we must establish major salt works in the State என்று சொல்லியிருக்கிறார்கள், ஆகவே, அதை மிகப் பெரிய தொழிலாக வளர்க்க முடியும்.

இராமநாதபுரம் கடற்கரையில் ஒரு லிமிடெட் கம்பெனிவைப்பு தாக இருக்கிறார்கள்.

கோவளத்திற்குப் பக்கத்தில் ஒரு தொழிற்சாலை வரப்போகிறது. அப்படி வரும்போது ஏன் அவை ஜாயின்ட் செக்டாரில் இருக்க வேண்டும்?

ஜாயின்ட் செக்டாரைப் பற்றி திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னார்கள். அதே கருத்துதான் என்னுடைய கருத்தும்.

ஜாயின்ட் செக்டருக்கு ஏன் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்றுபுரிகிறது. ஆனால், அதை இந்த இடத்தில் சொல்வதற்குக் கொஞ்சம் தயக்கமாக இருக்கிறது. ஐந்துகோடி ரூபாய் நாம் போட்டு, முதலாளிகள் நான்கு கோடி ரூபாய் போட்டு, அவர்களுடைய திறமையால் என்பது கோடி ரூபாய் வரை அவர்கள் 'ரெயிஸ்' பண்ணி, அதன்மூலம் ஒரு பெரிய தொழிற்சாலையை அமைக்கும்போது, யார் கண்ட்ரோல் பண்ணுவார்கள்? முதலாளிகள்தான் கண்ட்ரோல் பண்ணு வார்கள். உண்மையிலேயே அந்த கண்ட்ரோலிங் பவர் நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும்.

அரசாங்க அதிகாரிகள் அதில் இருக்கிறார்கள் என்றாலும், நம் முடைய அதிகாரிகள் நிதான புத்தியுள்ளவர்களாக இருந்து, நம்முடைய அரசு தான் கண்ட்ரோல் பண்ணவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தினால் என்ன முரண்பாடு வருகிறது—பாருங்கள். அப்பொழுது தெரியும். என்னதான் இருந்தாலும், முதலாளிக ளிடம் ஒன்றிரண்டு கோடி ரூபாய் வாங்கி நாம் பத்து கோடி ரூபாய் போட்டு உருவாக்கினாலும், கண்ட்ரோல் யார் பண்ணு வார்கள் என்பதுதான் பிரச்னை. இந்தத் துறைகளில் அரசுக்கு அனுபவம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அரசாங்கத்தில் இருக்கும் அதிகாரிகளில் சிறப்பானவர்களை அங்கே போய் இருக்கச் செய்தாலும், நிலைமை என்ன?



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

They will be only demoralised.

ஸ்பிக் அனுபவம் நமக்கு இருக்கிறது. எல்லோரும் ஸ்பிக்கைப் பற்றிச் சொல்கிறோம். ஸ்பிக்கை நீங்கள் ஜாயின்ட் செக்டாரில் கொண்டுவாருங்கள். அப்படிக் கொண்டுவர முடிவுசெய்தால் ஜாயின்ட் செக்டார் பரவாயில்லை என்று சொல்ல முடியும்.

நம்முடைய புத்தகத்தைப் பார்த்தால் பொதுத் துறையில் மூன்று வரும் என்று இருக்கிறது.

ஆலங்குளம், தமிழ்நாடு சிமென்ட் நல்ல முறையில்தான் நடக் கிறது. என்ன கோளாறு வந்துவிட்டது. தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நல்ல முறையில் நடக்கிறது.

தமிழ்நாடு சிந்தடிக் ஃபைபர்ஸ் நல்ல முறையில் நடக்கப் போகிறது. இதிலே குறைபாடு இல்லை.

ஆனால், மூன்று தான் பொதுத் துறையில் இருக்கும் என்றும், 15 ஜாயின்ட் செக்டரில் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஜாயின்ட் செக்டார் என்ற கருத்தோட்டத்தைக் கொஞ்சம் 'டிஸ்-அப்யூஸ்' செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மாறாக நாமே ஏற்று நடத்துவோம். அப்பொழுது நிதி இடைஞ்சல் இருந்தால், அந்த இடைஞ்சலை எப்படி நிவர்த்தி பண்ணுவது, அதிகமாக நிதி கிடைக்க என்ன ஏற்பாடு செய்வது என்பதை நாம் ஆலோசிக்கலாம். காவிரி நீர்ப் பிரச்னையில் எப்படி எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரே மாதிரி தீர் மானம் போட்டு செய்கிறோமோ அதேமாதிரி இந்த விஷயத்திலும், அதாவது பப்ளிக் செக்டாரில் சில தொழில்கள் ஆரம்பிக்கவேண்டும் என்பதிலே இருக்கவேண்டும். மத்திய சர்க்கார் தகராறு இதில் ஒன்றும் வருவதற்கில்லை. எல்.ஐ.சி.-ஐ நாம் பார்ப்போம்.

இந்திரஜித் சிங் என்ன சொல்லியிருக்கிறார். எல்.ஐ.சி. சர்க்கார் கைக்கு வந்தபிறகு என்ன ஆயிற்று? When you go into the investment policy, more than 50 per cent goes to Private Sector. ஐம்பது சதவீதத்திற்கு மேல் தனியாரிடம் இன்வெஸ்ட் செய்திருக் கிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

தேசியமாக்கப்பட்ட வங்கிகள் அரசாங்கத்தின் கையில் இருந்தாலும், அதைக் கண்ட்ரோல் பண்ண முடியாது. அப்படிக் கண்ட்ரோல் பண்ண பெரு முதலாளிகள் பம்பாய் போன்ற இடத்தில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சிலரை நம்பித்தான் நாம் தொழில் வளர்ச்சியில் ஈடுபடுவது என்பது சாத்தியமல்ல.

என்னிடத்தில் ஒருவர் சொன்னார். பிரிட்டிஷ் ப்ரைம் மினிஸ்டர் பானர்மென் பற்றிச் சொன்னார். அவர் பெரிய ப்ரைம் மினிஸ்டர் இல்லையென்றாலும் :

Bannerman was always noted for his literary genius—It was he who said 'power corrupts and absolute power corrupts absolutely — என்று அவரே சொன்னார். Self-Government is better than bad Government. என்று அடிமையாக இருப்பதைவிட சுதந்திரமாக இருந்து மோசமாக இருந்தாலும் பரவாயில்லை என்று சொன்னார். A Superior Joint Sector is inferior to an inferior Public Sector. என்ற அளவுக்குச் சொல்ல வேண்டும். பப்ளிக் செக்டரை எந்த அளவுக்கு வளர்த்துக்கொண்டு போகிறோமோ அந்த அளவுக்குத்தான் நாம் ஓரளவு சோஷலிச பாதையில் போகிறோம் என்று அர்த்தம்.

தொழிலைப்பற்றி நான் பேசும்போது, டெக்ஸ்டைல் பற்றிப் பேச விரும்புகிறேன். டெக்ஸ்டைலில் நான் அதிகமாக தெரிந்தவன்—திரு. ஏ. சுப்பிரமணியம் மாதிரி.

டெக்ஸ்டைல் மில்கள் மூடியிருந்தால் என்ன கஷ்டங்கள் என்பது எனக்குத்தான் தெரியும். நாங்களும் முன்நின்று, அரசின் முயற்சியோடு முடிவுகள் ஏற்பட்டன. இதில் நான் ஒன்று சொல்லவேண்டும்.

தொழிலாளிகள் என்றும்போல்தான் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள். தனியார் முதலாளிகளிடமிருந்து சர்க்கார் கைக்கு நிர்வாகம் வந்தால் தொழிலாளிகள் வேலை செய்யமாட்டார்கள் என்ற கருத்தோட்டம் உண்மையல்ல, அரசாங்கத்தின் அதிகாரிகள்



1974 மார்ச் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்தக் காரியங்களில் பாடுபடுவார்கள்—திறமைசாலிகள்—அவர்கள் நல்ல முறையில் காரியங்களை நடத்தி இருக்கிறார்கள். ஆகவே, லாபம் இருக்கிறது. லாபம் அதிகம் சம்பாதித்துக்கொண்டிருந்த முதலாளிகள் இவ்வளவு நாளாக ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள்.

When we are able to take sick mills and if the Government through the co-operation of workers and ability of the officers can produce profits in sick mills, they are no longer sick mills and this is a case for public sector. அப்படி வரும்போது, பொதுத் துறையை நல்ல முறையில் நடத்த முடியும். பொதுத் துறையில் நடத்துவது என்ற கருத்தோட்டம் நம்முடைய அரசுக்கு இருந்தால் செய்ய முடியும் என்பதற்கு இதைவிட வேறு பெரிய உதாரணம் இருக்க முடியாது. (மணி அடிக்கப்பட்டது) இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். Geo-Chemical Orientation Survey. என்கிற உங்களுடைய ரிபோர்ட்டிலிருந்து படிக்கிறேன்.

As a search for fresh gold-bearing horizons, 540 stream sediments were collected from the hilly region around Devala, Nilgiris district where gold mining was active till two decades ago. These samples were analysed for Arsenic, Antimony, Nickel. Cobalt etc. The Geo-chemical distribution and behavour of elements in this area have been incorporated for further geo-chemical work in Tamil Nadu for gold prospecting. தங்கம் நிறைய கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் நீலகிரியில் இருக்கிறது என்று இந்த ரிபோர்ட்டில் இருக்கிறது. அதில் கொஞ்சம் துரிதமாக சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சில ஜில்லாக்களில் சில பகுதிகளை பின்தங்கிய பகுதிகளாக வைத்திருக்கிறோம். அதனால் அவைகளுக்கு மத்திய சர்க்கார் உதவி அளிக்கிறது. ஆனால், இந்த உதவிகள் பயன்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது திருப்தியாக இல்லை. அதிலே கொஞ்சம் முனைப்பாக குறிப்பிட்ட அதிகாரிகளைப் போட்டு—மதுரை மேலூரிலே ராமநாதபுரத்திலே வசதி இருக்கிறது—இப்படி அதை எடுத்து செய்யக்கூடிய அளவிற்கு ஒரு செட்டப் இருக்கிறது. கிடைத்த வசதியைப் பயன்படுத்த முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 27

சொன்னார்கள். அது எனக்கு வேதனையாக இருக்கிறது. இதற்கு விசேஷமான அதிகாரிகளைப் போட்டு அவர்களுக்கு அதைத் தவிர வேறு வேலை கொடுக்கக் கூடாது.

கடைசியாக, நான் கேள்விப்படுகிறேன், ஒரு கோடி ரூபாய் பணம் போட்டு தொழில் ஆரம்பித்தால் அதற்கு மத்திய சர்க்காரின் அங்கீகாரம் தேவையில்லை என்று சொல்கிறார்கள். நேற்று நம் நாட்டு எஞ்ஜினியர்கள் எப்படி செயல்படுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஃபாரினிலே உள்ள, அங்கேயிருந்த வருகிற பொருட்களைப் போல் நம்முடைய எஞ்ஜினியர்களே செய்கிறார்கள்.

சித்தரஞ்சனைப் போய் பார்த்தால் அங்கே 95 சதவிதம் பொருட்களை மிகவும் முக்கியமான பொருட்களை, உற்பத்திசெய்கிறார்கள். இப்படியிருக்கிறபோது ஒரு கோடி ரூபாய் இன்றைக்குப் பத்து, அடுத்து ஆண்டு 20 என்று அனௌன்ஸ் பண்ணினால் என்ன. இப்படிப் போட்டுவிட்டால் மத்திய சர்க்கார் அதற்கு எந்தத் தடங்கலும் போட முடியாது. ஆகவே, அந்த நிலையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் கட்சியின் சார்பிலே கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்துகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, தொழில் துறை, நீதி துறை, சிறைத் துறை மானியங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் சிறந்த கருத்துக்களை தந்திருக்கின்றனர். இந்தக் கருத்துக்களை எல்லாம் நம்முடைய இலாகாக்களில் பரிசீலித்து அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவைகளை உறுதியாக எடுப்பார்கள் என்று முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும்பாலும் தொழில்துறையிலே பேசிய அங்கத்தினர்களெல்லாம் அதனைப் பாராட்டி ஆதரித்து அதிகமாக பதில் சொல்லவேண்டிய நிலைமையில்லாமல் தான் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

முதலில் சிறைத்துறை பற்றி இங்கு பேசப்பட்டபோது சிறப்பான முறையில் வசதிகள் செய்துதரவேண்டும், நம்முடைய தொன்கைகள் மாறவேண்டும்; கைதிகளையெல்லாம் ஏதாவது



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

கொடுமைப்படுத்தவேண்டுமென்று எண்ணத்தில் செயல்படாமலிருக்கவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அதையெல்லாம் முழுக்க முழுக்க இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

புதிய வசதிகளைச் சிறையிலே செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறோம். ஆனால் சிறைத் துறையில் இன்றைக்கு இருக்கிற கஷ்டமெல்லாம் அரசியல் ரீதியாக போராட்டம் நடத்துகிறபோது தான் நமக்கு ஏற்படுகிறது.

திரு. பொன்னப்ப நாடார் சொல்லியபோது கஷ்டம் ஏற்படுகிறது. இதைச் சமாளிக்க ஒரே ஒரு வழிதான். சிறைச்சாலையில் எதிர்க்கட்சிக்காரர்களைப் பழி வாங்க வேண்டாமென்ற எண்ணத்தில்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அந்த ரீதியில் நம்மை பொன்னப்ப நாடார் அவர்கள் குறை கூற மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். காரணம் நாங்கள் எல்லாம் கூட சிறையில் இருந்து இருக்கிறோம். அப்போது எப்படி இருந்தது, இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பார்கள் என்று கருதுகிறேன்.

இன்னும் வசதிகள் என்னென்ன செய்ய வேண்டுமென பரிசீலித்து வருகிறோம். அப்படி பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்கிறேன்.

ஒன்மேன் ஜூரிஸ்டிக்ஷன் கமிட்டி நீதிமன்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். இதற்கு மாஜிஸ்ட்ரேட்டுகளைப் போட்டு 60 புதிய நீதிமன்றங்களைச் செயல்படுத்த வேண்டும். அதற்கு 46 லட்சம் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சர் ஆகும் என்பதால் அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, அதைப் பார்த்துச் செய்ய வேண்டும்.

டேப்பியாகோ கேஸைப் பற்றி சொன்னார்கள். அதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறேன். காரணம் வழக்கறிஞர்கள் போடுவது பற்றிச் சொன்னார்கள். நாம் வழக்கறிஞர்களை அரசாங்கத்திலிருந்துதான் போடுகிறோம். அது மகிழ்ச்சி தரத்தக்கது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, அப்படியானால் இந்த அப்ளிகேஷன்களெல்லாம் கால்ஃபார் செய்யாமல் நேரடியாக நியமனம் செய்திருக்கலாமே. அதற்கு அப்ளிகேஷன்

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

போட்டவர்கள் என்னைப் பார்த்து சொன்னார்கள். அது தவருக இருக்கலாமோ என்ற காரணத்தால் சொன்னேன். அதன் முழு விபரங்களையும் சொல்ல வேண்டாமென்ற காரணத்தால் குறிப்பிட்டதைச் சொன்னேன். இப்போது முழுவிவரத்தையும் கூற வேண்டுமானால் கூறுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்தக் கொள்கையை வரவேற்பார்கள் என்று பார்த்தேன். அதை வரவேற்கவில்லை. அரசாங்கம் வழக்கறிஞர்களைப் போடுவதால் செலவுகுறையும். அந்த வழி மோசமான வழி தான். ஆனால் அது எங்கள் காலத்தில் ஏற்பட்டதல்ல. அவர்கள் காலத்திலேயே உள்ளது. அதிலே நிறைய குற்றவாளிகள் இருக்கிறார்கள். காலதாமதத்திற்கு நாங்கள் காரணமல்ல.

நல்லவேளை இப்போது சி.ஆர்.பி.சி. வந்துவிட்டது. இனிமேல் காலதாமதம் தவிர்க்கப்படலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மேஜிஸ்ட்ரேட்களுக்கெல்லாம் இன்னும் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதைக் கொள்கை அளவிலே அரசு ஏற்றுக் கொள்கிறது. அதைப் பற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆந்திராவில் இப்போது இண்டகிரேஷன் செய்திருக்கிறார்கள். அது எந்த அளவிற்கு வெற்றிபெறப்போகிறதென்று பார்த்து அதை இங்கேயும் செய்கிறோம். தொழிற்துறையில் டிசென்ட்ரலைசேஷன் செய்யப்படவேண்டும் என்பதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. திரு. சுவாமிதாஸ் அவர்கள்கூட அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

லீகல் எய்டு டு தி பூவர் என்பதை இந்தியாவிலேயே நாம்தான் முதலில் கொண்டு வந்தோம். இப்போது மத்திய அரசு ஒரு மசோதா கொண்டு வந்திருப்பதால் அதையும் சேர்த்துப் பரிசீலித்து பிறகுதான் அதை நல்லமுறையில் செயல்படுத்த முடியும்.



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

சிறையிலே பத்திரிகைகள் வரவழைப்பதில் கட்சி வேறுபாடு கிடையாது. எந்தெந்த பத்திரிகைகளை படிப்பதென்று அந்தக் காலத்திலிருந்ததை விட்டுவிட்டு நாங்கள் லிபரலைசேஷன் செய்திருக்கிறோம். ஆனால் நாம் காசு கொடுத்து வாங்கிக் கொடுக்கக் கூடிய பத்திரிகைகள் நடுநிலைப் பத்திரிகைகள். அவர்களாகவே காசு கொடுத்து வாங்கினால் அவர்கள் எந்தப் பத்திரிகையும் வாங்கலாம். அதிலே எந்தவிதமான சந்தேகமும் கிடையாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக தொழில்துறை வளர்ச்சி அடையவில்லை என்று இது வரை யாரும் சொல்லவில்லை. ஆகவே, அதுபற்றி விரிவாக விளக்காவிட்டாலும், சிறிய தொழில்கள் வாரியத்தால் சிறு தொழில்கள் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

1967-68-ல் 11,813 சிறிய தொழிற்சாலைகள் தமிழகத்தில் இருந்தன. ஆனால் 1973-74-ல் 48,214 சிறிய தொழிற்சாலைகள் என்கிற அளவிலே அதிகமாகப் பெற்றிருக்கிறோம். அதிலே குறிப்பாக இவ்வளவு வளர்ச்சி பெறுவதற்கு ஐ.டி.பி.ஐ., டி.ஐ.சி.ஐ. போன்ற நிறுவனங்கள் கடன் உதவி வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அந்த நிறுவனங்களைப் பாராட்டுகிறேன்.

அதுபோல் தொழில் வளர்ச்சியில் நம் தமிழ்நாடு வளர்ந்திருக்கிறதென்று சொல்வதற்கு கணிப்பு வேண்டுமானால் சில புள்ளி விவரங்களைத் தருகிறேன். ஆல் இந்தியா பினான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன் வழங்கிய இரு கடனில் நம் தமிழ்நாட்டைப்பொறுத்த வரையில் ஐ.எஃப்.சி. 1968–69-ல் 134.56 லட்சம் ரூபாய் கொடுத்தது. 1972–73-ல் 576.15 லட்ச ரூபாயாகக் கொடுத்திருக்கிறது. அந்த முறையில் அகில இந்திய ரீதியில் பார்த்தால் இந்த உதவியை உபயோகித்ததில் நாம் 13 சதவிகிதம் உயர்ந்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல ஐ.சி.ஐ.சி. என்ற அகில இந்திய நிறுவனத்தின் உதவி 1968-ல் 159 லட்ச ரூபாயாக இருந்தது. 1973-ல் அது 873 லட்ச ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

அதைப்போல புதிய தொழிற்சாலைகள் ரெஜிஸ்ட்ரேஷன் 1967-68-ல் பப்ளிக் செக்டாரைப் பொறுத்தவரையில் 9 ஆக இருந்தது. 1972-73-ல் அது 20 ஆக உயர்ந்திருக்கிறது. அதேபோல பிரைவேட் செக்டாரில் 1967-68-ல் 83 என்றிருந்தது. 1972-73-ல் அது 166 ஆக உயர்ந்திருக்கிறது. அந்த அளவிலே நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமர்ஷியல் பாங்க்ஸ் நமக்கு உதவிசெய்கிற வாய்ப்பைப் பார்த்தால் 1967-இல் 27,797 லட்சம் என்று இருந்த நிலைமை மாறி 71-ல் மட்டும் 46,765 லட்சம் ரூபாய், அதுவும் பன்மடங்குக்கு மேல் வளர்ந்திருக்கிறது. ஐ.டி.பி.ஐ. மூலமாக அகில இந்தியாவில் உள்ள நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 2 ஆயிரம் லட்சம் ரூபாய் கொடுக்கப்பட வாய்ப்பு இருக்கிறது, இது அகில இந்தியாவிலேயே மூன்றாவது இடத்தை நம்முடைய தமிழ்நாடு பெற்றிருப்பதைக் காட்டுகிறது.

ரிஜிஸ்டர்டு பேக்டரிஸ் 1968-ல் 5,887 ஆக இருந்தது. 1973-ல் 6,713 ஆக ஆகியிருக்கிறது. அதைப்போல் வேலைவாய்ப்பு 1968-ல் 3,82,828 இருந்தது, இப்பொழுது 4,67,400 ஆகியிருக்கிறது.

மீடியம் இண்டஸ்ட்ரீஸ் 1971-ல் 19 இப்பொழுது 33. லைசென்ஸ், லெட்டர் ஆப் இன்டன்ட்ஸ் 1967-ல் 17 இருந்தது, 1973-ல் 62 ஆகியிருக்கிறது. ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் கோவாப்ரேடிவ் பாங்க் பொறுத்தவரையில் 17 லட்சத்திலிருந்து 67 முதல் 1972-க்குள் 97 லட்சம் என்று உயர்ந்திருக்கிறது.

இப்படி தொழில் துறையிலே பல்வேறு முயற்சிகளின் விளைவாக வளர்ச்சியைக் காணுகின்ற வாய்ப்பைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டிலே அது மேலும் பெருகுகின்ற வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் அரசின் சார்பிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் பல்வேறு அங்கத்தினர்களும் எடுத்துத் தெரிவித்த கருத்து எல்லா மாவட்டங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்பது. பின்தங்கிய பகுதிகள் எல்லா மாவட்டங்களிலும் இருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

நான் தொடக்க உரையிலே சொன்னேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே அதிலே வேறுபாடு கிடையாது. எட்டு மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் கேட்டது ஒரே ஒரு தனிச்சலுகை அதாவது 15 சதவீதத்தை சப்ஸிடியாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசு ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னது, நாம் 3 மாவட்டங்களை எடுத்துக்கொண்டோம். பிறகு மத்திய அரசு 2 மாவட்டங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னது, நாம் நான்கு மாவட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டோம். நாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தரப்படவேண்டுமென்று சொன்னோம். அவர்கள் அதற்கு உரிமை தந்தால் எல்லா மாவட்டங்களுக்கும் பயன்தரக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்யலாம்.

இதுபோன்ற சலுகைகள் கொடுக்கப்படுவதால்மட்டும் தொழிற்சாலைகள் வளரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. நம்முடைய நோக்கமே தவறு என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள்.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரையில் ஒரு பகுதி என்று அறிவித்தோம். சொந்த முயற்சிகளின் காரணமாக சில நண்பர்கள் முன்வந்த காரணத்தினால் அந்த அளவிற்குக் கூட முன் வந்ததே தவிர வேறில்லை. மதுரையிலே வரவில்லை.

ஆனால் இராணிப்பேட்டை என்று சொன்னவுடனே 70 கோடிக்கு வந்தது. ஓசூர் என்று சொன்னவுடனே உடனடியாக 16 கோடிக்கு வந்தது. சென்னையை நோக்கி, பெங்களூரை நோக்கிப் போகிறபோது உற்சாகம் ஏற்படுகிறது. அதுவும் போதாது என்று நம்முடைய அரசாங்கம் ஒவ்வொரு பின்தங்கிய மாவட்டத்திலும் வரிசை வரிசையாக எடுத்துக்கொண்டு எல்லா மாவட்டங்களுக்கும் க்ரோத் சென்டர்கள் என்று ஏற்படுத்தி வளர்க்கவேண்டுமென்ற முறையிலேதான் இராணிப்பேட்டையிலே அமைத்து இருக்கிறோம்.

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

தஞ்சாவூர் மாவட்டமாக இருந்தாலும் வேறு எந்த மாவட்டமாக இருந்தாலும் புறக்கணிக்கப்படுகிறது என்று யாரும் கருதிக் கொள்ளவேண்டாம்.

தொழில் வளர்ச்சிபற்றி இங்கே பல உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள்.

மூலப் பொருட்கள் இல்லாத ஒரு மாநிலம் என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒரு கோடி என்றால் ஏராளமான தொழிற்சாலைகள் வந்துவிடும் என்று சொன்னார்கள். அவர்களே சப்ஜக்ட் டு செர்டன் கண்டிஷன்ஸ் என்று சொன்னார்கள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே மூலப்பொருட்களுக்கும் மத்திய அரசை நாம் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது, வெளி நாட்டுச் செலாவணிக்கும் மத்திய அரசை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டியிருக்கிறது, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவுக்கும் மத்திய அரசை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. அங்கே ஒரு கோடி என்ற நிலை உதவி செய்யாமல் இருக்கிறது, சர்க்கரைத் தொழிற்சாலை இருக்கிறது, அதிலே துணிந்து இறங்குவோம், அதைப்போன்ற வாய்ப்பு மற்றத் தொழிற்சாலைகளுக்குக் கிடையாது.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலே,

Salt based industrial development, Salem–Neyvely Steel Complex, Petroleum complex, Pharmaceutical complex development,

இவையெல்லாம் வரவேண்டுமென்ற முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

ஸ்டீலைப்பற்றி 1972-73-ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களை மூலப் பொருட்கள் கிடைப்பதைப் பொறுத்தவரையிலும் நம்முடைய மாநிலத்திலே சிறு தொழில்களுக்காக மாநில அரசுக்குக் கொடுக்கப்படுவதை மட்டும் சொல்கிறேன்.



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

நமக்குத் தேவை 2,47,285 டன், மத்திய அரசாங்கம் கொடுப்பது 11,278 டன்தான். எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிற சூழ்நிலை, மூலப்பொருட்கள் இல்லாத சூழ்நிலை என்பதை இதற்கு மேலும் நான் விளக்கவேண்டிய அவசியம் இல்லை. இந்த நிலைமை மாறினால்தான் வேகமான வளர்ச்சி வரும். நடைமுறைச் சிக்கல்கள் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலிருந்தும் பல இலாகாக்களுக்கு மனுப்போட்டு அங்கே ஒன்றும் செய்யாத நிலையில் உள்ளவற்றைத் தொழில் இலாகாவே சென்று அவற்றை வாங்கி பரிசீலிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த முறை வெற்றிகரமாக இருந்தால் அதுபற்றி மீண்டும் பரிசீலிக்கலாம்.

பஞ்சாப் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு மோசமான நிலைமை—பஞ்சாபிலே தொழிலாளர்களின் நிலைமையையும் பார்த்துவிட்டு, தொழிற்சாலைகளின் நிலைமையையும் பார்த்துவிட்டு நம்முடைய அம்பத்தூர் தொழிற்சாலையையும் பார்த்தால் சட்டங்களை அமல்நடத்தவேண்டுமென்ற நிலைமைதான் தோன்றுகிறது—சட்டம் அவ்வளவு அமல் நடத்தப்படாவிட்டால் பஞ்சாபைப்போல் விட்டுவிட்டால் பாதகமான சூழ்நிலை ஏற்படும்.

தொழிற்சாலைகள் வளர்வதற்கு இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்வோம்.

ஹான்டிகிராப்ட்ஸ் பற்றி நாம் ஒரு முக்கியமான முடிவை எடுத்திருக்கிறோம். இப்பொழுது ஒரு கார்ப்பரேஷனை வைத்திருக்கிறோம். அதற்கு எதிர்ப்பு இருக்கிறது. அது மிகுந்த அளவிற்கு உதவிசெய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஹான்டிகிராப்ட்ஸ் எம்போரியம் ஏற்படுத்தி, சிறிய சிறிய கைவினைஞர்கள் உடன் தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களுக்குப் பண உதவி, மூலப்பொருட்கள் கொடுத்தல், உற்பத்தி செய்கிற பொருட்களை எம்போரியமே வாங்கிக்கொள்ளுதல் போன்ற உதவிகளைச் செய்யக்கூடிய அடிப்படையிலே கார்ப்பரேஷன் மிகுந்த பயன்தரும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

கைத்தறித் தொழிலைப்பற்றி எல்லோரும் பேசினார்கள். எல்லா உறுப்பினர்களும் மிகுந்த கவலை தெரிவித்தது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையைத்தான் ஏற்படுத்தியிருக்கிறது, அதற்காக வருத்தப் படவில்லை, அதை எதிர்க்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் அதிலே கூட கட்சிக் கண்ணோட்டம்தான் முன்னாலே வருகிறது. 5 லட்சம் தறிகள், 20 லட்சம் தறியாளர்களுக்குச் செய்யவேண்டியது நம்முடைய கடமை, அவர்களுக்கு நூல் கிடைக் காததற்கு யார் பொறுப்பு என்று தெரியும். மாநில அரசின் குறைகளை மிகைப்படுத்துகிற நேரத்தில் என்ன தவறு நடக்கிறது அதற்கு யார் பொறுப்பு என்பதைச் சிந்திக்கவே மறுக்கிறோம். அந்தக் குறை இருக்கக்கூடாது என்ற முறையிலேதான் அனைத்துக் கட்சியினரையும் இணைத்துக்கொண்டோம். அப்படி இணைத்துச் செய்தும்கூட தகராறு நடக்கிறது, தவறு நடக்கிறது என்று சொன்னால் கொஞ்சம் வருத்தம் ஏற்படுகிறது.

மூலப்பொருட்கள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதில் இந்த அரசு ஒரு திட்டவட்டமான கொள்கையை வைத்திருக்கிறது. ஒரு எதிர்க்கட்சித் தலைவர் கூட அதைப் பாராட்டாமல் இருப்பது வருத்தமாக இருக்கிறது. அந்த நிலைமை தமிழ்நாட்டிற்கு வரக் கூடாது. இவ்வளவு பெரிய கஷ்டங்கள் கைத்தறியாளர்களுக்கு வந்தது. ஒன்றரை லட்சத்துக்கு மேல் இருக்கிற கூட்டுறவுக் கைத்தறியாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு கஷ்டமும் வரவில்லை. அதைப்பற்றி ஒருவரும் கூறவில்லை. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான் கூறினார்.

கூட்டுறவுக்கு அப்பாற்பட்ட நிலைமையில் உள்ளவற்றிற்குத்தான் நம்முடைய 24 மில்களிலே உற்பத்தியாகிற நூல் அனைத்தையும் முழுக்க கூட்டுறவுக்குக் கொடுத்துவிட்டு மிகுதியிருப்பதை மற்ற கைத்தறியாளர்களுக்குக் கொடுக்கிறோம், அது போதாது.

எங்களுடைய திட்டவட்டமான கொள்கை 5 லட்சம் தறிகளுக்கு 20 லட்சம் நெசவாளர்களுக்குத் தேவையான அனைத்து நூலையும் தமிழ்நாட்டிலே 206 ஆலைகளிலேயிருந்து இந்த மாநில அரசே





பொறுப்பேற்றுக்கொண்டு அதை வாங்கிக்கொடுக்கிற கொள் கைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கிற நிலைமை வருகிற வரை இப்படிப்பட்ட நிலைமை தொடரத்தான் செய்யும். என்ன குற்றச் சாட்டைச் சொன்னாலும் பரிகாரம் ஏற்படாது என்பதுதான் என்னுடைய எண்ணமாகும்.

(இரவு 7-30)

திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் ரொம்ப வருத்தத்தோடு சொன்னார்கள். எனக்கே கேட்பதற்கு மிகவும் உருக்கமாக இருந்தது. ஜெயிலுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். யாரை அனுப்பினாலும் அவர்களை அனுப்ப மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அவர்கள் சொன்ன கருத்தை மறுக்கிறோமா என்றால் இல்லை. ஒரு சில முதலாளிகள்—அவர்கள் நம்முடைய தமிழகத்தில் இல்லை, ஆகவே, கட்டுப்படுத்த முடியவில்லை—வெளிமாநிலங்களில் இருந்துகொண்டு மாஸ்டர் வீவர்ஸ் என்ற பெயரிலே இருக்கிறார்கள். அவர்களும் பெரிய வியாபாரிகளும் சேர்ந்துகொண்டு அவர்கள் நினைத்தால்தான் கொடுக்க முடியும் என்ற அளவில் மத்திய சர்க்காரின் கொள்கை அமல் நடத்தப்படுகிறது.

இதைப்பற்றிப் பலமுறை இந்த மன்றத்தில் விளக்கியிருக்கி றேன். ஆனால் ஒரு எதிர்க்கட்சித் தலைவர்கூட, தமிழக அரசுக்காக மட்டுமல்ல, 20 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்காகக்கூடப் பேச மறுக்கிறார்களே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. அந்த நிலைமை இப்பொழுது இருக்கிறது. பெயருக்கு கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். அதிலும், போகக்கூடாது என்றில்லாமல் போய் உட்கார்ந்திருக்கிறோம். மத்திய சர்க்காரின் அனுமதியோடு அதிகாரிகளும் ஆலை அதிபர்களும் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தை மத்திய அரசு அங்கீகாரம் செய்திருக்கிறது. இந்த உண்மையை இந்த மன்றத்தில் நான் சொல்லியிருக்கிறேன்.

ஆனால் ஒரு எதிர்க் கட்சித் தலைவர்கூட அதற்கு ஆதரவு தர மாட்டேன் என்கிறார்கள். நானும் பம்பாய்க்குப் போய் பேசி னேன். இந்த அரசாங்கத்தை மத்திய சர்க்கார் நம்பாவிட்டாலும் அந்தக் கமிட்டி மத்திய சர்க்கார் சார்பில் இந்த மாநிலத்தின்

தலைநகரத்திற்கு வரட்டும். அனைத்துக் கட்சிக் குழு ஒன்றைப் போடுகிறோம். அவர்களின் மூலமாக எல்லாத் தறிகளுக்கும் நூலைக் கொடுக்கட்டும் என்று கண்டிப்பாகச் சொன்னேன். இந்த மாதம் ஒப்புக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒப்புக்கொண்டால்தான் செயற்கைப் பட்டிற்கு விமோசனம் ஏற்படும். இல்லையென்றால் இதே பதிலைத்தான் நான் சொல்ல வேண்டும். இதற்காக மத்திய சர்க்காரை நான் குறை கூறுகின்ற நேரத்தில்—நல்ல வேளையாக அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது ஒருவர்கூட இங்கு இல்லை, இங்கே இருந்து இந்தப் பதிலைக் கேட்கவில்லை, இருந்திருந்தால் (குறுக்கீடு) குமாரசாமி அவர்கள் இருக்கிறார்கள் ஸ்டேபில் ஃபைபரைப்பற்றி குமாரசாமி அவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். ஸ்டேபிள் ஃபைபருக்கான மூலப் பொருள்களைக் கொடுக்க கண்ட்ரோல் மத்திய சர்க்காரில் இருக்கிறது. ஆனால் அந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி அதை நூலாக்கி விற்பதற்குக் கண்ட்ரோல் இல்லை.

ஆகவே, ஆலை முதலாளிகள் நல்ல லாபம் அடைய வேண்டுமென்ற கொள்கையை எப்படி நியாயம் என்று ஏற்றுக்கொள்ள முடியும்? இந்த மாநில அரசாங்கத்தைக் குறை சொல்ல முன்வருபவர்களுக்கு மத்திய சர்க்காரின் தவறான கொள்கையை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, கைத்தறி நெசவாளர்களுக்காக ஒரு தெளிவான கொள்கையை நாம் சொல்லி, இதையும் சந்தானம் குழு ஆதரித்து அந்தக் குழுவின் அறிக்கையையும் நாம் ஏற்றுக்கொண்டபிறகு, இதில் மத்திய சர்க்காரை வலியுறுத்துவதில் அனைத்துக் கட்சியினரும் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிக்கான நூல் பிரச்சனையில் எப்படியும் நம்மால் சமாளித்துவிட முடியும். ஏனென்றால் நாம் 10½ இலட்சம் பேல்ஸ் உற்பத்தி செய்கிறோம், ஆனால் தேவை 5 இலட்சம்தான். ஆகவே, இதில் எந்தக் கஷ்டமும் வராது. ஆனால் செயற்கைப்பட்டு, ஸ்டேபில் ஃபைபர் இவற்றில் சிரமம் உண்டு. இதைப்பற்றி விளக்க வேண்டுமென்றுதான் கூறினேன்.





கைத்தறித் துணி விற்பனையில் தெளிவில்லாத ஒரு கொள்கையை டெல்லி அரசாங்கத்திடம் பார்க்கிறோம். அதையும் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். இதற்காக ஒரு முடிவை, பரிகாரத்தை ரொம்ப நாட்களுக்கு முன்பு அனைத்துக் கட்சிகளும்கூட கைத்தறிக்கு என்று திட்டவட்டமாக இந்தந்தத் துறைக்கு என்று ஒதுக்கினாலொழிய விமோசனம் இல்லை என்று சந்தானம் கமிட்டியும் கூறி, நானும் கூறி இதுவரையில் மத்திய சர்க்கார் ஒரு பதிலும் சொல்லவில்லை. இருந்தாலும் இதற்கான சட்டத்தை இந்தக் கூட்டத்தொடரிலேயே கொண்டு வருவதற்கு முடிவு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையில் நூல் பிரச்னை, மூலப் பொருள் பிரச்னை, ரிசர்வேஷன் பிரச்னை தீர்க்கப்பட்டாலொழிய விமோசனம் ஏற்படாது என்று இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தெளிவான கண்ணோட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோல் பதனிடுவதைப்பற்றி, 'டேனரி' பிரச்னை எல்லோரும் ஆதரிக்கின்ற பிரச்னை. இந்த மன்றத்தில் தீர்மானம் கூடப் போட்டோம். அதற்குப் பதில் வந்திருக்கிறது. அந்தப் பதிலைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. எல்லாக் குறிப்புகளையும் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

நாம் இவ்வளவு பெரிய மாமன்றத்தில், 4 கோடி மக்களின் சார்பில் திட்டவட்டமான ஒரு கொள்கையை, 'ஃபினிஷ்ட் குட்ஸ்' ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற கொள்கை தேவையில்லை, ஆனால் ஃபினிஷிங் சென்டர்களை ஏராளமாகப் போட முயற்சியெடுக்க வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவது, தவிர சிறிய ஏற்றுமதி செய்யாத அத்தனை தொழிற்சாலைகளிலேயும் உற்பத்தி செய்யப்படும் செமி-ஃபினிஷ்ட் குட்ஸ் ஏற்றுமதி செய்ய முழு உரிமை வேண்டும். ஆனால் இந்தப் பதிலைப் படித்துப் பார்த்தால் ஒரு தெளிவான பதிலைச் சொல்ல மத்திய சர்க்கார் விரும்பவில்லை என்று தெரிகிறது. எதிர்க்கட்சித் தலைவர்களிடத்தில் அந்தக் கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

செரி கல்சரைப்பற்றிப் பேசினார்கள். 4 கோடி ரூபாயில் பெரிய திட்டத்தைப் போட்டிருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் சில்க் போர்டு அதை ஏற்கும் என்று நம்புகிறேன். அந்த அமைச்சரையும் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். இந்தப் புதிய முயற்சியை இரண்டு வருஷங்களாகச் செய்கிறோம். நாமே சுமார் ஆயிரம் ஏக்கர்களில் அந்தச் செடியை வளர்க்க முயற்சியெடுக்கிறோம். தர்மபுரி மாவட்டம் ஹோசூர், இன்னும் ஆரணி, காஞ்சிபுரம், கும்பகோணம் இப்படி எங்கெங்கு பட்டுத்தொழில் நடக்கிறதோ அங்கு முயற்சியெடுக்க நினைக்கிறோம். அது வெற்றி தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தொழில் வளர்ச்சியில் உள்ள கொள்கைத் திட்டத்தை இன்றைக்கு என்னுடைய உரையிலேயே சொன்னேன். தனியாரா, கூட்டுத் துறையா, கூட்டுறவுத் துறையா, பொதுத் துறையா என்பதில் எனக்கு ஸ்ட்ராங் வியூ, ஒரு ஃபைட்டிங் டென்டென்சி என்று இல்லை.

என்னுடைய எண்ணமெல்லாம் தமிழ்நாட்டிற்குத் தொழில் வர வேண்டும், உரிய வளர்ச்சி காண வேண்டும் என்று ரொம்ப நம்பிக்கையுடன் இருக்கிறோம். அதேசமயத்தில் இதன் பலன் தனி நபருக்குச் செல்லக்கூடாது என்ற கொள்கையிலே இந்த அரசுக்குக் கருத்து வேறுபாடு இல்லை.

எங்களைக் குறைசொல்வது வாடிக்கை. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அதோடுகூட அகில இந்தியாவிலே இந்தக் கண்ணோட்டம் வந்தால் ஒழிய நம் மாநிலத்திலே மட்டும் இதில் மாட்டிக்கொண்டு தொழில் மந்தம் அடைய நாங்கள் தயாராக இல்லை. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கரைத் தொழிற்சாலை நடத்த வேண்டுமென்றால் அதற்குக் கரும்பு மூலப்பொருள். அந்தக் கரும்பை நாமே பெறுகிறோம். ஆகவே, தைரியமாக முடிவெடுத்து, புதிய தொழிற்சாலைகள் தனியாருக்குக் கிடையாது என்று செய்தோம்.

ஆனால் அந்தத் தைரியம் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் வர மறுக்கிறது. அதற்கு அகில இந்தியக் கண்ணோட்டம் மாறினாலொழிய தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பாதிக்காத அளவில் முடிவெடுக்கிறோம்.



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

இந்த நல்ல முடிவைக்கூட திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பாராட்டாமல், பாராட்டாததற்கு ஏதாவது தேடிப்பிடித்து கருத்தைச் சொன்னார்கள். நான் இந்தக் கருத்தை அவர்கள் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது வயபிள் யூனிட்டாக உருவானால் தொழில் நசித்துவிடும். தனியாக விடுவதால் அதிக உற்பத்தித் திறனுக்குக் கொண்டு வந்தால் அது நாட்டுக்கும் நல்லது. நாட்டுக்கு நல்லது என்பதால் நாம் அதில் செய்தோமே தவிர அதனால் தனியார் துறையை ஆதரிக்கிறோம் என்று சொல்லிவிடக் கூடாது. இது அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பெரும் அளவில் நன்மைகளைத் தரும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அகில இந்தியாவிலே சர்க்கரைத் தொழிற்சாலைகளைப்பற்றி நல்ல கண்ணோட்டம் உருவாவதைக் கவனித்துக்கொண்டு வருகிறோம். 'ஷுகர் கமிஷனி'ல் நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் நானே அந்தக் கமிட்டியின் முன்னால் வாதாடினேன். நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இந்தச் சர்க்கரைத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் விவசாயிகளிடமிருந்து சாதாரணமாகக் கிடைக்கும் மூலப்பொருட்களின் அடிப்படையில் உற்பத்தியாகும் தொழில். அப்படி உற்பத்தியாகும் சர்க்கரை சாதாரண மக்களுக்குத் தேவைப்படும் பொருள். எனவே, இந்தத் தொழிலில் பொதுத் துறையைத் தவிர வேறு எந்தத் துறையும் பொருத்தமற்றது என்ற கருத்தைத் திட்டவட்டமாக நமது அரசாங்கத்தின் சார்பில் நானே சொல்லிவந்தேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போல எந்தத் தொழிலானாலும் அகில இந்தியக் கண்ணோட்டத்துடன், இந்த வாய்ப்பு வசதிகள் இல்லாவிட்டால் பெருமளவில் தமிழகம் பாதிக்கப்படும். அவர்கள் ரைடர் போட்டுப் பேசினார்கள். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஜாயின்ட் செக்டார், அதற்குப் போக விருப்பமில்லை என்று சொன்னார்கள். நம்மைப் பொறுத்தவரையிலே எப்படியாவது தொழில்கள் வளர வேண்டுமென்பதிலே, ஏதாவது ஒரு துறையிலே வர வேண்டுமென்று எண்ணுகிறோம். அப்படிப்பட்ட தொழில்கள் வரும்பொழுது அதன் மூலமாக சமுதாயத்திற்குத் தீமையில்லாமல், தனி மனிதன் கொள்ளை அடிக்காமல் இந்த

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து இந்தத் தொழிற்சாலைகளை நடத்துகிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல யோசனைகள் புதிதாகத் தரப்பட்டால் கொஞ்சமும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இது ஏதோ தமிழகத்தில் மட்டும்தான் என்று நினைத்துவிடக் கூடாது. எல்லா மாநிலங்களிலும் இந்தக் கொள்கை, ஜாயின்ட் செக்டார் கொள்கையைப் பின்பற்றுகிறார்கள். கேரள மாநிலத்திலேகூட பல தொழிற்சாலைகளில் பின்பற்றுகிறார்கள். நான் பின்பற்றுகின்ற கொள்கையை அவர்களும் பின்பற்றுகிறார்கள். அவர்கள் மாற்றம் காணவில்லை. அதற்குக் காரணம் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் அங்கேயும் இருக்கின்றன.

இதில் ஏதோ கட்சி காரணம், கொள்கை காரணம் என்று யாரும் நினைத்து விடக்கூடாது. இந்தப் பொருளாதாரச் சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இப்படிச் செய்யும்போது எப்படியாவது தொழிற்சாலைகளின் மூலமாக நம்முடைய மாநில அரசு கொள்கைகளை நிறைவேற்றும் முயற்சியை எடுத்துக் கொண்டாலும், அதற்காகச் சட்ட விதிகளை கொண்டு வருகிறோம் என்றாலும் இவ்வளவுக்கும் பிறகு நாம் உணருவது—கூட்டுத் தொழில் (ஜாயின்ட் செக்டார்) பொறுத்தவரை கொள்கையளவில் ஆட்சேபனை இல்லாவிட்டாலும்—இருக்க முடியாது. வேண்டுமென்று வலியுறுத்தினாலும் சில தனி மனிதர்களைப் பார்க்கும்போது வெறுப்புணர்ச்சி ஏற்படுகிறது. அதை ரொம்ப கவனமாகப் பரிசீலிப்போம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தொழிற்சாலைகளுக்கு எடுத்திருக்கும் கொள்கை முடிவு—நம்முடைய பணம் 26 சதவிகிதம்; தனியார் 25 சதவிகிதம்; பொது மக்களிடமிருந்து 49 சதவிகிதம். அதைப் போல் ஈக்விடிக்கு—பங்குக்குத் தகுந்தாற்போல் 25 சதவிகிதம், 26 சதவிகிதத்திற்கு ஏற்றாற்போல் டைரக்டர்கள் போடுகிறோம். சம பங்கு கிடைக்கிறது. தொழிற்சாலையை நடத்தும்போது ப்ரொபஷனல்ஸ் போடுகிறோம். அந்தத் தொழில் நிபுணர்களையும் தனியார் என்று கருதுவது சரியல்ல.



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

நாமினி டைரக்டர்ஸ்—

Nominee Directors of the private association will be appointed in consultation with the Government.

தனியார் துறை போடும்போது நம்மைக் கேட்டுக் கொண்டுதான் போட வேண்டுமென்று வைத்திருக்கிறோம். தொழிற்சாலைத் தலைவரைப் போடும்போதும் நம்முடைய அனுமதி இல்லாமல் போடக்கூடாது என்று வைத்திருக்கிறோம். மானேஜிங் டைரக்டரைக் கூட நம்மைக் கேட்காமல் போட முடியாது. ஏகபோக முதலாளிகளை, மத்திய அரசு மொனாபலிஸ்ட்ஸ் என்று குறிப்பிட்டிருக்கிற முதலாளிகளைத் தவிர்க்க வேண்டுமென்றிருக்கிறது.

டெக்னோக்ராட்ஸ்—அவர்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். பணத்தைக் கொண்டு போய்ப் போட்டு முதலாளி தொழில் நடத்தினான் என்ற காலம் மாறி மூளையைப் போட்டு திட்டத்தைத் தந்து தொழில்களைத் தொடங்குகின்ற தனியாராக இருந்தால் ஆட்சேபிப்பது சரியல்ல என்று கருதுகிறேன்.

அவர்களே சொன்னார்கள்—ஏன் சால்ட் தொழிற்சாலையை ஜாயின்ட் செக்டாரில் ஆரம்பித்தீர்கள் என்று கேட்டார்கள். அருமையான நிபுணர் குருநாத்தைக் கொண்டு அறிக்கை தயாரித்திருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த நிபுணரை வைத்துத்தான் தொழிற்சாலை ஆரம்பிக்கிறோம். இதுபோன்ற டெக்னோக்ராட்ஸ் ஒரு காசு கூட இல்லாதவர்கள். அவர்கள் ஜாயின்ட் செக்டாருக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கொள்கையில் பெரும்பாலும் ஆட்சேபனை இருக்க முடியாது.

இப்படி ஒரு துறை நடத்தப்படும்போது 25 சதவிகிதத்திற்கு வாய்ப்பு இருக்கிறதே தவிர பலவிதமான முறைகளை நாம் கொண்டு வருகிறோம். ரெக்ரூட்மென்ட் பாலிசியில் நம்முடைய கொள்கையை அமல் நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறோம். பர்ச்சேஸ் அண்டு சேல்ஸில் நம்முடைய கொள்கையை அமல் நடத்த வேண்டும். இதிலே நமக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறேன்.

The Government directors would be associated with the recruitment of persons at the top level.

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

Foreign collaboration and foreign equity will be made with the prior approval of the Government.

Preference shall be given to develop backward areas.

இந்த நல்ல கொள்கைகள் இருக்கும் காரணத்தால் பெருமளவு உடனடியாகப் பயன் தரும் என்று கருதுகிறேன்.

உரத் தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். தனிப்பட்ட முறையிலும் விளக்கியிருக்கிறேன். இந்த மாமன்றத்திலும் விளக்கியிருக்கிறேன். நாலு கோடி ரூபாய் முதல் போட்டு 84 கோடி ரூபாயில் பிரம்மாண்டமான தொழிற்சாலையை மிகக் குறுகிய காலத்திலே இந்தியாவிலேயே உலகத்திலேயே இல்லை என்ற அளவுக்குத் தொடங்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்கப் போகிறார்கள். அந்த நிலையை உண்டாக்கியவர்களை எல்லாம் நாம் பாராட்ட வேண்டும். அதற்குப் பின்னால் பெரிய ப்ரொபஷனல்ஸ்—நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ரெக்ரூட்மென்டைப் பொறுத்தவரை ஷெட்யூல்டு டிரைப்ஸ் 3 பேர்; ஷெட்யூல்டு காஸ்ட்ஸ் 34 பேர்; பாக்வார்டு க்ளாஸஸ் 376 பேர்; நான்-பிராமின்ஸ் 360 பேர்; ஃபார்வேர்டு கம்யூனிடி 135 பேர் ஆக மொத்தம் 908 பேர். இவ்வளவு பெரிய பிரம்மாண்டமான தொழிற்சாலையில் 90 பேர்தான் வெளி மாநிலத்திலிருந்து வந்திருக்கிறார்கள். மீதி அத்தனைபேரும் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தான். இதை எல்லாம் கொள்கை அடிப்படையில் பெற்றிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட வாரியாகப் பார்த்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் அது அமைந்திருப்பதால் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 326 பேர்; மூன்றில் ஒரு பங்கு. சென்னையில் அலுவலகம் இருக்கும் காரணத்தால் 202 பேர். கன்னியாகுமரியில் 25 பேர், அந்த லிஸ்டையெல்லாம் இந்தச் சபையிலே படித்து விட்டார்கள். சாதி வாரியாகக் கூடப் படிக்கச் சொன்னேன். பின்தங்கிய வகுப்பினருக்கு முதலிடம் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.



1974 மார்ச் 27] [திரு. செ. மாதவன்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உற்பத்தியிலே பிடிப்பு வைக்க வேண்டுமென்று உன்னிப்பாக வலியுறுத்தி வந்தார்கள். உரத் தொழிற்சாலையைப் பொறுத்து நம்முடைய கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்று விவசாயத் துறை அமைச்சர் அவர்களும், உணவுத் துறை அமைச்சர் அவர்களும் அடிக்கடி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். டில்லி அரசு உரக் கொள்கை, விநியோகக் கொள்கையில் நல்ல கருத்தைக் கொண்டிருக்கவில்லை. நாம் அதை இந்த துறையில் கொண்டு வந்திருக்கிறோம். லட்சக்கணக்கான டன் உரத்தை உற்பத்தி செய்யப் போகும் இந்தத் தொழிற்சாலையில் அந்தக் கொள்கையைக் கொண்டு வருகிற அருமையான வாய்ப்பு வந்திருக்கிறது என்று மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன்.

இந்த உரத்தைக் கொடுக்கும்போது தனியார் துறை மூலமாகக் கொடுக்கப் போவதில்லை என்ற வகையில் அரசாங்கத்தின் கொள்கையை இந்த நிறுவனம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது ஒரு பெரிய வரப்பிரசாதம். தமிழ்நாட்டு விவசாயிகள் பெரிதும் பலன் பெற இருக்கிறார்கள். முழுக்க முழுக்க கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படும். அந்தத் தொழிற்சாலையிலிருந்து ஒவ்வொரு விவசாயிக்கும் அவனுடைய நிலத்தின் அளவு, விஸ்தீர்ணத்தின் சர்வே எடுத்து பெயரைப்போட்டு கார்டு கொடுத்து. அந்தக் கார்டுக்கு எவ்வளவு உரம் தேவை என்று அதையும் போட்டு அந்த உரத்திற்கு மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்க இருக்கிறது என்பதையும் பார்த்து கார்டு வைத்திருப்பவர்களுக்கு உரம் கொடுக்கப்படும் என்ற முயற்சியினையும் தொழிற்சாலை எடுத்திருக்கிறது. இந்த இரண்டு கொள்கைகளில் முடிவானது கூட்டுத் துறையின் மூலம் நாம் பெற்ற பயன். இது விவசாயிகளுக்கு நிச்சயமாகப் பயன்தரும்.

இப்படிச் சொல்லுவதால் கூட்டுத் துறைதான் என்ற முடிவுக்கு யாரும் வந்துவிடத் தேவையில்லை. எந்த துறையாக இருந்தாலும் தொழிலைத் தமிழகத்திலே ஆரம்பிக்க வேண்டும்; அதிலே பொதுத் துறைக்குத்தான் முதலிடம்; மற்றத் துறைகளுக்கெல்லாம் பின்னிடந்தான். இதிலே இந்த அரசாங்கம் தீவிரமான கருத்துக் கொண்டிருக்கிறது

[திரு. செ. மாதவன்] [1974 மார்ச் 27

அகில இந்தியா பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸ் நிதி கொடுக்கும் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டாலொழிய விமோசனமே கிடையாது. அந்தக் கொள்கை மாற வேண்டும் என்று தொழிலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய மாநில அரசின் சார்பில் வலியுறுத்தினேம்; தனியாருக்கு உதவி செய்வதன் மூலம் அவர்கள் பெரும் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள்; அரசாங்கம் சென்று பணத்தைச் சம்பாதிக்க வழி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இதையும் மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். எல்லா மாநில அமைச்சர்களும் வரவேற்றார்கள். அந்தக் கண்ணோட்டம் மத்திய அரசுக்கு ஏற்பட்டாலொழிய பொதுத் துறையை அதிக அளவுக்குக் கொண்டு வர முடியாது.

கொள்கை அளவில் இந்த அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சியின் கருத்துக்களில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லையென்பதையும், தொழிற்துறை இன்னும் நல்ல முறையில் வளர்ச்சியடைய நம்முடைய அரசு எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்று கூறி, உறுப்பினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிய நல்ல ஆலோசனைகளுக்கு நன்றி கூறி, வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் பிற்பட்ட பகுதியில் தொழில் ஆரம்பிப்பதற்கு 15 சதவிகித மானியம் கொடுக்க மத்திய அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். வட ஆற்காடு, வாலாஜா தாலுகா பிற்பட்ட பகுதி என்று ஏற்கனவே அரசாங்கம் ஆய்வு செய்து அதை ஒத்துக் கொள்ளுகின்ற நேரத்தில் எங்களுடைய போறாத காலம் வாலாஜா தாலுகாவுக்கு கெஜட் நோட்டிபிகேஷன் வந்து விட்டது; ஆற்காடு தாலுகா தனியாகப் பிரிந்து விட்டது. பிற்பட்ட பகுதி என்பதற்கான சலுகைகள் வாலாஜா தாலுகாவுக்கு உண்டு, எங்கள் தாலுகாவுக்கு இல்லை. அரசாங்கம் இதுபற்றிப் பரிசீலித்து ஆற்காடு தாலுகாவையும் பிற்பட்ட பகுதி என்று நோட்டிபிகேஷன் செய்து அந்தச் சலுகைகளைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



1974 மார்ச் 27]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே, மத்திய அரசாங்கத்திற்கு எழுதியாகிவிட்டது என்று இந்த மன்றத்திலேயே தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திருவாளர்கள் வி. கோதண்டராமைய்யா, கே. ஏ. வகாப் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை என் 24-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. என். குமாரசாமி, ஏ. சுவாமிதாஸ், பி. வெங்கடசாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,01,33,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை என் 26-க்கு கொடுக்கப்பட்டிருந்த திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், எம். ஏ. லத்தீப், சௌடி எஸ். சுந்தரபாரதி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திரு. ஏ. சுப்பிரமணியம், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. எம். சுப்பிரமணியம், திரு. எஸ். வடிவேல் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,93,40,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. கே. எ. வகாப், திரு. எஸ். வடிவேல். டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை என் 49-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, திரு. பி. வெங்கடசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,33,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு. கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை என் 13-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. பி. வெங்கடசாமி, திரு. எம். ஏ. லத்தீப், திரு. ஏ. சுவாமிதாஸ், திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன

திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. கே. எஸ். கோதண்டராமையா திரு. க. உரொ. எட்மண்ட், திரு. எஸ். வடிவேல் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என். 13-நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,62,32,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை என் 14-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. பி. வெங்கடசாமி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. கே. என். குமாரசாமி, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி, ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. எ. வகாப் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை என். 14 சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,52,02,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.52 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

1974 மார்ச் 27]

## பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

% 211. Notification issued with Roc. No. 170301/73-E4, dated the 4th December 1973, in regard to extension of certain provisions relating to building regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Sambavarvadakarai Town Panchayat in Tirunelveli district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

% 212. Notification issued with G.O. Ms. No. 169, Rural Development and Local Administration, dated the 30th January 1974, in regard to inclusion of certain areas within the jurisdiction of the Madurai City Municipal Corporation with effect from 30th January 1974. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).].

213. Notification issued with G.O. Ms. No. 1801, Rural Development and Local Administration, dated the 3rd September 1973, in regard to amendment to the rules relating to qualifications of officers and servants of municipal councils. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).].

214. Notification issued with G.O. Ms. No. 2232, Agriculture, dated the 3rd November 1973, in regard to establishment of markets at Tiruvadanai and Rajasingamangalam in Ramanathapuram district to provide facilities for the purchase and sale of groundnut, chillies, paddy and cashewnut. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

215. Notification issued with Roc. No. 89877/73-T2, dated the 18th January 1974, in regard to passing of no confidence motion against Thiru V. V. Venkatachalam, Chairman, Gobichettipalayam Panchayat Union Council and removal from the office of the Chairman of the Gobichettipalayam Panchayat Union Council. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



1974 மார்ச் 27]

216. Notification issued with G.O. Ms. No. 438, Rural Development and Local Administration, dated the 25th February 1974, in regard to amendment relating to redivision of wards and reservation of seats published at page 10 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).].

### B. *Reports, Notifications and other Papers.*

@ 108. A Review on Buildings Programme in Tamil Nadu, 1973-74 (English and Tamil).

@ 109. A Review on Road Development Programme in Tamil Nadu, 1973-74 (English and Tamil).

@ 110. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Small Industries Development Corporation Limited, 1973-74 (English and Tamil).

@ 111. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Small Industries Carporation Limited, 1973–74 (English and Tamil).

@ 112. Housing in Tamil Nadu, 1973-74 (English and Tamil).

@ 113. Slum Clearance in Tamil Nadu, 1973-74 (English and Tamil).

@ 114. The Essential Commodities (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 6 of 1974) with Annexure.

@ 115. The Registration (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 7 of 1974) with Annexure.

@ 116. The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 8 of 1974) with Annexure.

@ 117. Activities and Achievements of the State Directorate of Ground Water (English and Tamil).

% 118. Statement in regard to action taken on recommendations of the Administrative Reforms Commission on Public Works Department (English and Tamil).

% 119. Demands for Grants for further Expenditure and Detailed Supplement is Estimates thereof for the year 1973-74 (English and Tamil).

% 120. Notice on Demands for further Grants during the year 1973-74.

% 121. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister presenting the Final Supplementary Estimates for the year 1973-74

---

@ Despatched to Members on 25th March 1974.

% Laid on the table of the House on 26th March 1974.



## இணைப்பு I

[ 382 ம் பக்கத்தில் குறுகிய கால வினா 2 எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) இம் மாதத்தில் 28—2—1974-ஆம் நாள் ஏற்பட்ட உடன்பாட்டை இதுவரையிலும் முழுமையாக ஏற்றுக்கொள்ளாத பஞ்சாலைகளின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

1. ஸ்ரீராமலிங்கா சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட், பி. எஸ். சுந்தரம் ரோடு, திருப்பூர்.

2. ஸ்ரீவாசுதேவர் இண்டஸ்டீரீஸ், கோயம்புத்தூர்.

3. அவிநாசி ஸ்பின்னிங் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், கோயம்புத்தூர். (மூடப்பட்டது.)

4. கந்தசாமி ஸ்பின்னிங் மில்ஸ், சூரியம்பாளையம், பவானி, ஈரோடு தாலுகா.

5. ஸ்ரீபத்மா மில்ஸ் (ஸ்ரீபாலதண்டாயுதபாணி அண்டு கோ), காளபட்டி, கணபதி வழி, கோயம்புத்தூர்.

6. மருதமலை ஸ்ரீமுருகன் மில்ஸ் பி. என். பாளையம், கோயம்புத்தூர்.

7. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், திருமுருகன் பூண்டி, திருப்பூர்-3.

8. வி. ஆர். டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், நல்லூர், புளியம் பட்டி, வழி ஈரோடு.

9. பழனி ஸ்ரீமுருகன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கோயம் புத்தூர், வழி பழனி.

10. இந்திரா காட்டன் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட், ஜகம்பட் கார்டன்ஸ், குரோம்பேட், சென்னை.

11. வீரராகவன் டெக்ஸ்டைல்ஸ், உத்திரமேரூர்.

12. ஸ்ரீலக்ஷ்மி சரஸ்வதி டெக்ஸ்டைல்ஸ் (ஆரணி) லிமிடெட், ஆரணி டவுன், வட ஆர்க்காடு மாவட்டம்.

13. சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், அரக்கோணம் ரோடு, சோளிங்கர்.

14. திருமகள் மில்ஸ் லிமிடெட், தபால் பெட்டி எண். 1, குடியாத்தம்.

15. ஸ்ரீபாரிதி காட்டன் மில்ஸ், தபால் பெட்டி எண் 61, ராஜபாளையம், ராமநாதபுரம் மாவட்டம்.

16. ஜானகிராம் மில்ஸ் லிமிடெட், சக்திநகர், ராஜபாளையம்.

17. ஸ்ரீகற்பகாம்பாள் மில்ஸ் லிமிடெட், சோழபுரம் போஸ்ட், ராஜபாளையம்.

18. ராஜபாளையம் மில்ஸ், ராஜபாளையம்.

19. ஸ்ரீராமலிங்கா மில்ஸ் பிரைவேட் லிமிடெட், 52, கிரேட் காட்டன் ரோடு, அருப்புக்கோட்டை.

20. சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ், தபால் பெட்டி எண் 2, ராஜபாளையம்.

21. ஸ்வாமிஜி மில்ஸ் லிமிடெட், மீனாட்சிபுரம், சிவகாசி. ராமநாதபுரம் மாவட்டம்.

22. ஸ்ரீசண்முகர் மில்ஸ் லிமிடெட், ராஜபாளையம்.

23. வரதலக்ஷ்மி மில்ஸ் லிமிடெட், ராஜகம்பீரம் போஸ்ட், மானாமதுரை அருகில்.

24. சேலம் டெக்ஸ்டைல்ஸ், லிமிடெட், செல்லியம்பாளையம்.

25. தி மேட்டூர் ஸ்பின்னிங்ஸ் மில்ஸ், மேட்டூர் டேம்.

26. ஆனைமலை காட்டன் மில்ஸ், கஜ்ஜிநாயக்கன்பட்டி, சேலம்.

27. நாகம்மை காட்டன் மில்ஸ், விக்கிரவாண்டி, தென் ஆற்காடு மாவட்டம்.

28. நதியம்பாள் டெக்ஸ்டைல்ஸ், வாரங்காங்கி.





29. ஸ்ரீசபரி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சிராப் பள்ளி.

30. தி புதுக்கோட்டை டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், நமண சமுத்திரம் போஸ்ட், திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

31. கீதாஞ்சலி மில்ஸ் லிமிடெட், ஸ்ரீகோமதிபுரம், சங்கரன்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

32. பயனீர் ஸ்பின்னர்ஸ், கமுதகுடி, இராமநாதபுரம் மாவட்டம்.

(இ) தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 18 (1)-ன்கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் சம்பந்தப்படாத பி அண்டு சி ஆலை சம்பந்தமாக 4—3—1974 அன்றும் மேற்படி ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாத இதர சில ஆலைகள் சம்பந்தமாக 6—3—1974, 7—3—1974 தேதிகளில் தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகத்தில் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மேலும் போச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தொழிலாளர் துறை துணை ஆணையர்கள் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தைக் குறித்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். பி அண்டு சி ஆலை சம்பந்தமாக தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் முன்னிலையில் 8—3—1974 அன்று ஒரு உடன்படிக்கை கையெழுத்தாகி வேலைநிறுத்தம் 11—3—1974 முதல் கைவிடப்பட்டது.

(உ) பெப்ரவரி, மார்ச் 1972-ல் பஞ்சாலைகளில் நடந்த பொது வேலை நிறுத்தத்தின்போது ஓடிக்கொண்டிருந்த பஞ்சாலைகளின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

1. பக்கிங்காம் அண்டு கர்னாடிக் மில்ஸ், சென்னை.

2. தி சவுத் ஆர்க்காட் டிஸ்டிரிக்ட் கோ-ஆப்பரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், சாரம்.

3. தி நாகம்மை காட்டன் மில்ஸ், விக்கிரவாண்டி.

4. இந்திரா காட்டன் மில்ஸ், குரோம்பேட்.

5. ஸ்ரீசரஸ்வதி மில்ஸ், திருத்தணி.

6. வீரராகவ டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ், சிருங்குழி.

7. சவுந்தரராஜா மில்ஸ், திண்டுக்கல்.

8. போஜராஜா டெக்ஸ்டைல்ஸ், பழனிசெட்டிபட்டி, தேனி.

9. விசாலாட்சி மில்ஸ், விளாங்குடி.

10. சோமசுந்தரா மில்ஸ், முத்தனேந்தல்.

11. ஸ்ரீராமலிங்கா மில்ஸ், அருப்புக்கோட்டை.

12. ஸ்வாமிஜி மில்ஸ், அணைக்கோட்டம், சிவகாசி.

13. ஜவகர் மில்ஸ் லிமிடெட், செட்டிநாடு.

14. காளீஸ்வரா ஸ்பின்னிங் மில்ஸ், காளையார்கோவில்.

15. தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், தஞ்சாவூர்.

16. நதியாம்பாள் டெக்ஸ்டைல்ஸ், அறந்தாங்கி.

17. தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் கோ-ஆப்பரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், மணல் மேடு.

18. சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ், சோளிங்கர்.

19. தி நார்த் ஆர்க்காட் டிஸ்டிரிக்ட் கோ-ஆப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், அரியூர்.

20. ஸ்ரீ லக்ஷ்மி சரஸ்வதி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ், ஆரணி.

21. தி தூத்துக்குடி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், தூத்துக்குடி.

22. தி சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ், நாங்குநேரி.

23. மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், தூத்துக்குடி (ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மட்டும்).

24. கோமதி மில்ஸ், வீரவநல்லூர் (ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மட்டும்).

25. திருச்செந்தூர் கோ-ஆப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், நாசரேத் (ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மட்டும்).



26. கீதாஞ்சலி மில்ஸ், சங்கரன்கோவில் (ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் மட்டும்).

(எ) பிப்ரவரி 1974-ல் பஞ்சாலைகளில் நடந்த பொதுவேலை நிறுத்தத்தின்போது பாதிக்கப்படாத பஞ்சாலைகளின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

இராமநாதபுரம் மாவட்டம் :

1. ஸ்ரீராமலிங்கா மில்ஸ், அருப்புக்கோட்டை.

2. ஸ்வாமிஜி மில்ஸ், அணைக்கோட்டம், சிவகாசி.

திருநெல்வேலி மாவட்டம் :

3. சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், நாங்குநேரி.

4. பலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், செங்கோட்டை.

5. மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், அம்பாசமுத்திரம்.

6. கீதாஞ்சலி மில்ஸ், சங்கரன்கோவில்.

சேலம் மாவட்டம் :

7. சேலம் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், செல்லியம்பாளையம்

8. புலிகார் மில்ஸ், திருச்செங்கோடு.

9. சுந்தரம் ஸ்பின்னிங் மில்ஸ், குமாரபாளையம்.

10. மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ், மேட்டூர் அணை.

வட ஆற்காடு மாவட்டம் :

11. சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், சோளிங்கர்.

12. லக்ஷ்மி சரஸ்வதி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், ஆரணி.

திருச்சி மாவட்டம் :

13. ஸ்ரீ சபரி மில்ஸ் லிமிடெட், திருச்சி.

புதுக்கோட்டை மாவட்டம் :

14. புதுக்கோட்டா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், நமண சமுத்திரம்.

15. நதியாம்பாள் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், அறந்தாங்கி.

செங்கல்பட்டு மாவட்டம் :

16. ஸ்ரீ வீரராகவா டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ், உத்திரமேரூர்.

17. ஸ்ரீ சரஸ்வதி டெக்ஸ்டைல்ஸ், லிமிடெட் திருத்தணி.

சென்னை :

18. இந்திரா காட்டன் மில்ஸ், குரோம்பேட்டை.

மதுரை மாவட்டம் :

19. சவுந்தரராஜா மில்ஸ் லிமிடெட், திண்டுக்கல்.

20. பழனி ஸ்ரீ முருகன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், பழனி.

(ஒ) கீழ்க்கண்ட பஞ்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் பிப்ரவரி 1974-ல் நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டு 1—3—1974 அன்று வேலைக்குத் திரும்பினர் :—

1. நித்தியகல்யாணி டெக்ஸ்டைல்ஸ். திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம்.

2. மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், தூத்துக்குடி.

3. தூத்துக்குடி ஸ்பின்னிங் மில்ஸ், தூத்துக்குடி.

4. ஸ்ரீ ராஜேந்திரா மில்ஸ் லிமிடெட், 'ஏ' மில்ஸ், சேலம்.

5. ஸ்ரீ ராஜேந்திரா மில்ஸ் லிமிடெட், 'பி' மில்ஸ், சேலம்.

6. திருச்சிராப்பள்ளி மில்ஸ், ராம்ஜி நகர், திருச்சி.

7. தியாகேசர் ஆலை, மணப்பாறை.

8. காமாட்சியம்மன் கோ-ஆப்பரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், காஞ்சீபுரம்.

9. விஜயகுமார் மில்ஸ், பழனி.

10. அண்ணாமலையார் மில்ஸ், திண்டுக்கல்.

11. தஞ்சாவூர் டெக்ஸ்டைல்ஸ், தஞ்சாவூர்.

12. மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை.

13. பாண்டியன் மில்ஸ், மதுரை.

14. விசாலாட்சி மில்ஸ், விளாங்குடி.

15. நாகம்மை காட்டன் மில்ஸ், விக்கிரவாண்டி.

16. ஆர்க்காட் மில்ஸ், கள்ளக்குறிச்சி.

17. ஸ்ரீ நடேசர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், ஈரோடு.



*(a) The names of the textile mills in the State which have not so far accepted the terms of the industry-wise settlement of 28th February* 1974, *into to* :

1. Sri Ramalinga Choodambigai Mills Ltd., B. S. Sundaram Road, Tiruppur.

2. Sri Vasudeva Industries, Coimbatore.

3. Avinashi Spinning Mills (Private) Limited, Coimbatore-4 (not functioning).

4. Kandasamy Spinning Mills, Suriyampalayam, Bhavani, Erode taluk.

5. Sri Padma Mills Sri Bala Dhandayuthapani and Company, Kalapatti, Via., Ganapathy, Coimbtore.

6. Maruthamalai Sri Murugan Mills, P. N. Palayam, Coimbatore.

7. Tamil Nadu Spinning Mills Limited, Thirumuruganpoondi, Tiruppur-3.

8. V. R. Textiles Limited, Nallur, Puliampatti, via., Erode.

9. Palani Sri Murugan Textiles Limited, Kalyamputhur, via., Palani.

10. Indra Cotton Mills Private Limited, Jagampet Gardens, Chrompet, Madras.

11. Veeraraghava Textiles, Uthiramerur.

12. Sri Lakshmi Saraswathi Textiles (Arni), Limited, Arni Township, North Arcot district.

13. Sholingar Textiles Ltd., Arkonam Road, Sholingar.

14. Thirumagal Mills Limited, P.B. No. 1, Gudiyatham.

15. Sri Bharathi Cotton Mills, P.B. No. 61, Rajapalayam, Ramanathapuram district.

16. Janakiram Mills Limited, Sakthinagar, Rajapalayam.

17. Sri Karpagambal Mills Limited, Sholapuram P.O., Rajayapalayam.

18. Rajapalayam Mills, Rajapalayam.

19. Sri Ramalinga Mills Private Limited, 52, Great Cotton Road, Aruppukottai.

20. Sudarsanam Spinning Mills, P.B. No. 2, Rajapalayam.

21. Swamiji Mills Limited, Meenakshipuram, Sivakasi, Ramanathapuram district.

22. Sri Shanmugar Mills Limited, Rajapalayam.

23. Varadhalakshmi Mills Limited, Rajagambeeram P.O., Manamadurai.

24. Salem Textiles Limited, Selliampalayam.

25. The Mettur Spinning Mills, Mettur Dam.

26. Annamalai Cotton Mills, Gajjinaickenpatti, Salem.

27. Nagammai Cotton Mills, Vikravandi, South Arcot district.

28. Nadiambal Textiles Limited, Aranthangi.

29. Sree Sabari Mills Private Limited, Tiruchirappalli.

30. The Pudukottah Textiles Limited, Namanasamudram P.O., Tirumayam taluk, Pudukottai district.

31. Gitanjali Mills Limited, Srigomathipuram, Sankarankoil, Tirunelveli district.

32. Pioneer Spinners, Kamuthagudi, Ramanathapuram district.

(b) *The steps taken by the Government to make them fall in line with the other mills :*

Bipartite talks were held in the office of the Commissioner of Labour on 4th March 1974 in respect of Buckingham and Carnatic Mills which was not a party to the settlement, dated 28th February 1974 and on 6th March 1974 and 7th March 1974 in



respect of certain other textile mills which had not accepted the terms of the settlement under section 18 (1) of the Industrial Dispute Act, dated 28th February 1974. Further talks are being continued and the Deputy Commissioners of Labour have been asked to report the progress. In the case of Buckingham and Carnatic Mills, a settlement was signed on 8th March 1974 and the strike has been called off from 11th March 1974.

(c) *The names of the textile mills which kept on running during the general strike of textile workers in February, March* 1972.

The names of the mills are furnished below :

1. Buckingham and Carnatic Mills, Madras.

2. The South Arcot District Co-operative Spinning Mills Limited, Saram.

3. The Nagammai Cotton Mills, Vikravandi.

4. Indra Cotton Mills, Chrompet.

5. Sri Saraswathi Mills, Tiruttani.

6. Veeraraghava Textile Mills, Sirunkuzhi.

7. Soundararaja Mills, Dindigul.

8. Bojaraja Textiles, Palanichettipatty, Theni.

9. Visalakshi Mills, Vilangudi.

10. Somasundaram Mills, Muthanendal.

11. Sri Ramalinga Mills, Aruppukottai.

12. Swamiji Mills, Anaikottam, Sivakasi.

13. Jawahar Mills Limited, Chettinad.

14. Kaleeswara Spinning Mills, Kalayarkoil.

15. Thanjavur Textiles Limited, Thanjavur.

16. Nadiambal Textiles, Arantanki.

17. Thanjavur District Co-operative Spinning Mills Limited, Manalmedu.

18. Sholinghur Textile Mills, Sholinghur.

19. The North Arcot District Co-operative Spinning Mills Limited, Ariyur.

20. Sri Lakshmisaraswathi Textile Mills, Arni.

21. The Tuticorin Spinning Mills Limited, Tuticorin.

22. The Sundaram Textiles, Nanguneri.

23. Madurai Mills Company Limited, Tuticorin (one day token strike only).

24. Gomathy Mills, Veeravanallur (one day token strike only).

25. Tiruchendur Co-operative Spinning Mills Limited, Nazareth (one day token strike only).

26. Geethanjali Mills, Sankarankoil (one day token strike only).

(d) *The names of textile mills which were not affected by the general strike in February* 1974.

The names of the mills are furnished below :—

*Ramanathapuram district*—

1. Sree Ramalinga Mills, Aruppukottai.
2. Swamiji Mills, Anaikottam, Sivakasi.

*Tirunelveli district*—

3. Sundaram Textiles Limited, Nanguneri.
4. Balarama Varma Textiles Limited, Shencottah.
5. Madurai Mills Company Limited, Ambasamudram.
6. Gitanjali Mills, Sankarankoil.

*Salem district*—

7. Salem Textiles Limited, Selliampalayam.
8. Pulicar Mills, Tiruchengode.
9. Sundaram Spinning Mills, Komarapalayam.
10. Mettur Spinning Mills, Mettur Dam.



*North Arcot District*—

11. Sholingar Textiles Limited, Sholingar.
12. Lakshmi Saraswathi Textiles Limited, Arni.

*Tiruchirappalli District*—

13. Sri Sabari Mills Limited, Tiruchirappalli.

*Pudukkottai District*—

14. Pudukottah Textiles Limited, Namanasamudram
15. Nadiambal Textiles Limited, Arantangi.

*Chingleput District*—

16. Sri Veeraraghava Textiles Limited, Uthiramerur.
17. Sri Saraswathi Textiles Limited, Tiruttani.

*Madras*—

18. Indra Cotton Mills Limited, Tambaram.

*Madurai District*—

19. Soundararaj Mills Limited, Dindigul.
20. Palani Sri Murugan Textiles Limited, Palani.

(e) *The names of the textile mills, whose workers joined the strike in February* 1974 *but resumed work before 1st March* 1974. The name of the mills are furnished below :—

1. Nithyakalyani Textiles, Tiruvadanai, Ramanathapuram district.
2. Madura Mills Company Limited, Tuticorin
3. Tuticorin Spinning Mills, Tuticorin.
4. Sree Rajendra Mills Limited, 'A' Mill, Salem.
5. Sree Rajendra Mills Limited, 'B' Mill, Salem.
6. Tiruchirappalli Mills, Ramji Nagar, Tiruchirappalli.

[1974 மார்ச் 27

7. Thiyakesar Alai, Manapparai.

8. Kamatchiamman Co-operative Spinning Mills Limited, Kancheepuram.

9. Vijayakumar Mills, Palani.

10. Annamalaiyar Mills, Dindigul.

11. Thanjavur Textiles, Thanjavur.

12. Madura Mills Company Limited, Madurai.

13. Pandiyan Mills, Madurai.

14. Visalakshi Mills, Vilankudi.

15. Nagammai Cotton Mills, Vikravandi.

16. Arcot Mills, Kallakurichi.

17. Sri Natesar Spinning and Weaving Mills, Erode.

## இணைப்பு II

(398-ஆம் பக்கத்தில் 630 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

| வரிசை எண். | விவரங்கள். | செலவிடப்பட்ட தொகை. | பயன்டைந்தோர் விவரம். |
|---|---|---|---|
| 1 | தங்கும் விடுதி .. .. | 87,984 | 8 விடுதிகள் |
| 2 | (அ) மாணவர்கட்கு சீருடை வழங்கியது. | 17,110 | 1,711 மாணவர்கள் |
| | (ஆ) மாணவிகள் .. .. | 40,505 | 1,926 மாணவிகள் |
| 3 | அரிசன நலப்பள்ளி வாடகை கட்டிடங்கட்கு வாடகை செலுத்தியது. | 782 | 3 பள்ளிகள் |
| 4 | புத்தகம் விநியோகித்தது .. | 9,930 | 22 பள்ளிகள் |
| 5 | நீர்ப்பாசன மான்ய கிணறு வெட்டியது. | 4,000 | 2 கிணறுகள் |
| 6 | அரிசனங்களுக்கு குடியிருப்பு வீடு கட்டியது. | 26,067 | 27 வீடுகள் |
| 7 | சலவைத் தொழில் கருவிகள் .. | 170 | 1 நபர் |
| 8 | சவரத் தொழில் கருவிகள் .. | 175 | 1 நபர் |



1974 மார்ச் 27]

| | | | |
|---|---|---|---|
| 9 | பள்ளிக்கூடங்களில் மதிய உணவு வழங்கியது. | 38,703 | 1,852 பேர்கள் |
| 10 | படிப்பு உபகாரச் சம்பளம்: | | |
| | (அ) ப்ரீமெட்ரிக் (1) புதியது .. | 47,175 | 2,033 நபர்கள் |
| | .. (2) புது பித்தது | 31,496 | 2,176 ,, |
| | (ஆ) போஸ்ட்மெட்ரிக் (1) புதியது | 5,771 | 23 ,, |
| | (மாநிலம்) (2) புதுப்பித்தது | 3,867 | 12 ,, |
| | (இ) போஸ்ட் மெட்ரிக் (இந்திய அரசு) (1) புதியது .. | 40,910 | 95 ,, |
| | (2) புதுப்பித்தது .. | 21,512 | 48 ,, |
| 11 | இழு கிணறு பழுது பார்த்தது .. | 277 | 1 கிணறு |
| 12 | சாலை வேலைகள் .. .. | 1,873 | 2 சாலைகள் |
| 13 | ஆசிரியர் குடியிருப்பு இல்லம் .. | 278 | 1 இல்லம் |
| 14 | அரிசன நலப் பள்ளிகளில் கழிவிடம் கட்டியது, | 3,152 | 8 கழிவிடம் |
| 15 | குடிநீர் .. .. .. | 687 | 2 வேளைகள் |
| 16 | அரிசன நல பள்ளிகள் பழுது பார்த்தது, | 1,158 | 4 பள்ளிகள் |
| | மொத்தம் ரூ. | 3,83,482 | |

## இணைப்பு III

[405-ம் பக்கத்தில் 636-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளிவிழா சிரூராக தேர்ந்தெடுக்கப்பட்ட தீத்தாம்பேட்டை இராமத்தில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண். | பணியின் பெயர். | மதிப்பீடு. ரூ. | செலவு. ரூ. | பணிநிலை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பள்ளிக்கட்டிடம் ஒன்றைக் கட்டுதல். | 10,000 | 10,000 | முடிக்கப்பட்டது. |
| 2. | குடிநீர் ஊருணியை ஆழப்படுத்துதல். | 1,500 | 1,500 | முடிக்கப்பட்டது. |

[1974 மார்ச் 27

| | | | |
|---|---|---|---|
| 3. பொதுக்கிணறு தோண்டுதல். | 14,500 | 8,500 | முடிவடையும் 2நிலையில் உள்ளது |
| 4. தீத்தாம்பேட்டையிலிருந்து கொம்புகாரனேந்தலுக்கு இணைப்புச்சாலை அமைத்தல். | 10,000 | 3,000 | பணி நிறைவேறி வருகிறது. |
| 5. குடிநீர் கிணறு தோண்டுதல். | 3,000 | 3,000 | நிறைவேற்றி முடிக்கப்பட்டது. |
| 6. தீத்தாம்பேட்டை ஏரிக்கு நீர் வழங்கும் கால்வாயை ஆழப்படுத்துதல். | 3,000 | 3,000 | நிறைவேற்றி முடிக்கப்பட்டது. |
| 7. ஏரியைப் பழுது பார்த்தல் | 2,500 | 2,500 | நிறைவேற்றி முடிக்கப்பட்டது. |
| 8. ஹரிஜன நலத்திட்டத்தின் கீழ் ஹரிஜனங்களுக்கு 7 வீடுகள் கட்டுதல். | 13,160 | 13,160 | நிறைவேற்றி முடிக்கப்பட்டது. |
| 9. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் வெள்ளி விழா சீரூரில் (ஜெயந்தி கிராமம்) ஹரிஜனங்களுக்கு 23 வீடுகள் கட்டுதல். | 46,000 | .. | நிறைவேறிவருகிறது. |
| 10. மேல்நிலை நீர்த்தொட்டி கட்டுதல. | 25,000 | .. | நிறைவேறிவருகிறது. |



1974 மார்ச் 27]

The details of works taken up for execution Seerur in the Manamadurai Panchayat Union of Ramanathapuram districts are as follows :—

| *Serial nnmber and name of the work.* | *Estimate.* | *Expenditure.* | *Stage of work.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 Construction of a school building. | 10,000 | 10,000 | Completed. |
| 2 Deepening of a drinking water Oorani. | 1,500 | 1,500 | Do. |
| 3 Construction of a community well. | 14,500 | 8,500 | Work nearing completion |
| 4 Formation of a link road from Theethampettai to Kombukaranendal. | 10,000 | 3,000 | Work in progress. |
| 5 Construction of a drinking water well. | 3,000 | 3,000 | Completed. |
| 6 Deepening of the supply channel to Theethampettai tank. | 3,000 | 3,000 | Do. |
| 7 Repairs to the tank | 2,500 | 2,500 | Do. |
| 8 Construction of 7 houses for Harijans under Harijan Welfare Scheme. | 13,160 | 13,160 | Do. |
| 9 Construction of 23 houses for Harijans under Centrally Sponsored Scheme in the Vellivizha Seerur (Jayanthi village) | 46,000 | .. | Under progress. |
| 10 Construction of an overhead tank. | 25,000 | .. | Do. |

வியாழக்கிழமை, 1974 மார்ச் 28.

---

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### *Sale of harmful drugs.*

*644 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Union Government have directed the State Drug Control authorities to keep frequent watch over the sale of harmful drugs in 1972; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) விவரமான அறிக்கை @ ஒன்று அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

**திரு. த. சோணையா:** மத்திய சர்க்காரிடம் இருந்து எந்தவிதமான உத்தரவும் வரவில்லை என்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் மருந்து என்ற பெயரால் போதை தரக்கூடிய சில மருந்துகளை கடைகளில் விற்பனை செய்கிறார்களே, அப்படிப்பட்ட கடைகளைப் பரிசோதனை செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராய் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** 1972-ஆம் ஆண்டில் மத்திய அரசால் ஆணை பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆலோசனையில்—குறிப்பிட்ட கம்பெனிகளில் தயாரிக்கப்படுகிற மயக்க மருந்துகள் வழங்கப்படுகிற முறையில்—அவை நியாயமான முறையில் மருத்துவர்களால் வழங்கப்படுகிற

---

@ 862 ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ப்ரிஸ்க்ரிப்ஷன் அடிப்படையில் விற்கப்படுகிறதா, அல்லது வேறுவகையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி தெரிவிக்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள துணை இயக்குநர்—டெபுடி ட்ரக் கண்ட்ரோலர்—இந்த ஏற்பாட்டை ஆய்வு அதிகாரிகளுக்கு தெரிவித்து ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் மூலமாக இந்த மருந்துகள் விற்பனை ஆகிற இடங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும் பள்ளிகள், கல்லூரிகள் இருக்கும் இடங்களுக்கு அருகாமையிலுள்ள மருந்து விற்பனை நிலையங்கள் அடிக்கடி பரிசீலனை செய்யப்படுகின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மருந்தின் பெயர் மெத்தாக்வாலோ Hydrocholoride including Nandra இந்த மருந்து அத்தனையும் மயக்கம் உண்டாக்கக் கூடியது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தமிழ் நாட்டில் ஆங்காங்கு திரிகிற ஹிப்பிகள் சில பேர்களுக்கு இதுபோன்ற மருந்துகளை விநியோகம் செய்வதாகத் தெரிகிறது. இப்படி போதை தரும் மருந்துகளை விநியோகம் செய்கிற ஹிப்பிகள் மீது 1972-லே வழக்கு தொடரப்பட்டிருந்தால் அந்த விவரத்தைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அனுமதிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்படாத மருந்து விற்பனை நிலையங்களாக இருந்தால் அவற்றைத்தான் ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் ஆய்வு செய்ய முடியும். நடைப் பயணத்தில் ஹிப்பிகள் செய்கிற காரியங்களை இன்றைக்கு ட்ரக் இன்ஸ்பெக்டர்களால் பரிசீலிக்க முடியாது. அப்படி ஹிப்பிகள் செய்வதாகத் தெரிந்தால் அவர்கள் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கும். அப்படி எந்தக் குறிப்பும் இப்போது என்னிடத்தில் இல்லை.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவர் அவர்களே, இப்படி ஊறு விளைவிக்கும் மருந்துகளைவிட—சப் ஸ்டாண்டர்ட் மருந்துகளை—Pharmaceuticals விற்பனை செய்கிறார்களே, இதுபோன்ற சப் ஸ்டாண்ட மருந்துகளில் மக்கள் பணம் வேஸ்ட் ஆகாமல் இருக்க, ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் அதையும் கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தக் கேள்வி ஊறு விளைவிக்கும் மருந்துகளைப் பற்றியது. தரக்குறைவான மருந்துகள் வழங்கப்பட்டால், அது போன்ற குறை மருந்தகங்களில் இருந்தோ, டாக்டர்கள், பொதுமக்களிடம் இருந்தோ வந்தால் அவையும் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு—அதைத் தடுப்பதற்கும், தரக்குறைவான மருந்துகளைத் தயார் செய்யும் கம்பெனிகளை ப்ளாக் லிஸ்ட் செய்வதற்கும் சில முறைகள் இருக்கின்றன. தரக்குறைவான மருந்து



என்பதை ஆராய்ச்சி நிலையத்தில்தான் கண்டுபிடிக்க முடியும். அனுபவத்தினால் தனிப்பட்ட டாக்டர்களும் இதைக் கண்டுபிடித்துவிட முடியும். அவற்றை எழுதி அனுப்பினால் அவை பரிசீலிக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஊறு விளைவிக்கும் மருந்துகளை விற்பனை நிலையங்களில் தடுப்பதைவிட, தயாரிக்கும் இடத்திலேயே தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருந்துகள் ஊறு விளைவிப்பதோ, நலன் விளைவிப்பதோ உபயோகிப்பவர்களுடைய நிலையைப் பொறுத்திருக்கிறது. மருந்து என்ற முறையில் மயக்க மருந்துகள் தேவைப்படுகின்றன. மருந்தாக டாக்டர்களின் ஆலோசனைபேரில் உபயோகப்படுத்துகிறபோது அது நலன் விளைவிக்கிறது. போதை தரும் பொருள் என்று சாதாரணமானவர்கள் உபயோகப்படுத்துகிறபோதுதான் இந்தச் சிக்கல் ஏற்படுறது. ஆகவேதான், தவறான உபயோகத்தைத் தடுக்க, அவர்களுக்கு விற்பனையாளர்கள் உதவியாக இருக்கக்கூடாது, இதில் ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்கிற முறையில் இந்த மருந்துகள் விற்பனைபற்றி ட்ரக் இன்ஸ்பெக்டர்கள் ஆய்வு செய்கிறார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** அந்த மெடிசன்களில் குறிப்பிட்ட காலம் வரைக்கும் தான் சக்தி இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். இதுபோல குறிப்பிட்ட காலம் கடந்த மருந்துகளைக் கூட சிலபேர் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்துவிடுகிறார்கள் என்கிற பல புகார்களைச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட விற்பனையையும் கட்டுப்படுத்த, அரசாங்கம் டிரக் இன்ஸ்பெக்டர்கள் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மருத்துவர்களாக இருந்தாலும், மருந்து உற்பத்தியாளர்களாக இருந்தாலும், விநியோகிப்பவர்களாக இருந்தாலும்—நாணயமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்வது தான் முக்கியமான அடிப்படை. இதனை மீறி காலம் கடந்த மருந்துகளை வழங்குவார்களானால், அது கண்டுபிடிக்கப்பட்டால் உடனே நடவடிக்கை எடுப்பார்கள். எந்த மருந்தகத்தில் இதுபோல காலம் கடந்த மருந்து விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்தாலும், உடனே அவர்கள் மீது—சில மருந்துகளையோ, அத்தனை மருந்துகளையுமோ விற்பனை செய்வதைத் தடுக்க இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். எனக்குத் தெரிந்த அண்மையில் கூட ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதை அறிவேன்.

## *Eye Camp at Avadi*

* 645 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that an eye-camp was held at Avadi in December 1973; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) இந்தக் கண் சிகிச்சை முகாமில் 767 பேருக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டது. 176 பேருக்கு கண்படல அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 119 பேருக்கு கண் தொடர்பான பிற நோய்களுக்காகச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

**திரு. என். கே. பழனிசாமி :** Myolinth activities என்ற தர்மம், தானம் போன்ற அடிப்படையில்—கண்ணுக்கு வருகிற வியாதியைப் போக்கக்கூடிய முறையில் வருஷாவருஷம்—எத்தனை வருஷத்திற்குச் செய்யப்படும்? இது தொடர்ந்து நடைபெற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நண்பர் பழனிசாமி மருத்துவ மனையில் பலகாலம் தங்கி இருந்தவர்கள். அங்கே உள்ளவர்களைக் கேட்டே இவற்றைத் தெரிந்துகொண்டிருக்கலாம். காட்ராக்ட் என்பது முதுமை காரணமாக கண்ணில் ஒரு சதைப் படலம் வளர்வது—அதனால் பார்வையை இழப்பது ஆகும். முதுமையைத் தடுக்க ஒன்றும் கிடையாது. வந்தவர்களுக்கு உதவி செய்வதுதான் நம் கடமை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரிய உள்ளத்தோடு இத்திட்டத்தைத் தொடங்கிய காரணமாக அறுபத்திரண்டாயிரம் பேருக்கு ஒன்னேமுக்கால் ஆண்டுக்குள் அறுவை சிகிச்சை வழங்கப்பட்டிருக்கிறது. நான்கு லட்சத்து, ஐம்பத்து மூன்று பேர்கள் இந்த முகாம்களில் புற நோயாளிகளாக சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். ஐநூற்று பதினைந்து பேர்களுக்கு வேறுவிதமான அறுவை சிகிச்சை கிடைத்திருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய மருத்துவத் தொண்டாக விளங்குகிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்தக் கண் சிகிச்சை முகாம்களில் அதிகமான பேர்களுக்கு ஒரே நேரத்தில் அறுவை சிகிச்சை நடத்தப்பட்ட காரணத்தினால்—ஒரு சிலருக்கு முன்பு கொஞ்ச நஞ்சம் தெரிந்த பார்வையும் இப்போது அடியோடு தெரியாமல் போய்விட்டது, அதனால் வேலை செய்து பிழைக்க முடியாதவர்களாக ஆகிவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்களுக்கு எல்லாம் மாதாமாதம் ஓய்வூதியமாக அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?





**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** காட்ராக்ட் என்பது மெள்ள மெள்ள பார்வை முழுவதும் இல்லாது போகிற அளவுக்கு கண்ணில் வளர்கிற மெல்லிய சதைப் படலமாகும். டிரான்ஸ்பேரன்டாக இருக்கிற உறுப்பு இதன் காரணமாக நான்-டிரான்ஸ்பேரன்ட் ஆக ஆகிவிடுகிறது. நான்-டிரான்ஸ்பேரன்ட் ஆக ஆகிவிட்ட இந்த உறுப்பை அறுவை சிகிச்சை மூலம் எடுப்பது வெற்றி பெற்றாலும் கூட அவருக்குப் பார்வை தெரியாது. இந்த உறுப்பின் பயன் எதுவோ அந்தப் பயனை அளிக்கக்கூடிய கண்ணாடி போட்டால்தான் பார்வை தெரியும். கண்ணாடி போட்டும் தெரியவில்லை என்றால் வேறு குறைகள் இருக்கலாம். எல்லாவற்றையும் முழு அளவுக்குப் பரிசீலித்து, மறுபடியும் சிகிச்சை வழங்க வாய்ப்பு இருக்கிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இப்படி இந்த முகாம்களை நடத்திக் கொண்டு வருகிறபோது நல்ல பயன் கிடைத்திருக்கிறது. நிரந்தரமாக—எங்கள் பகுதியில் கல்யாண மண்டபத்தில் கண் சிகிச்சை முகாம் நடக்கிறது, அப்படியின்றி—ஓரிடத்தில் இருந்து இந்த சிகிச்சை வழங்கும் ஏற்பாட்டை எதிர்காலத்தில் செய்வதற்கு முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போது ஐந்து ஜோன் ஆகப் பிரித்து, ஐந்து மருத்துவக் குழுக்களோடு இணைக்கப்பட்டு, ஆங்காங்குள்ள மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படுகிறது. இடவசதிக் குறைவு இல்லாது, புதிய இடம் கிடைத்து 40 பேர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய வசதியுள்ள இடத்தில் கண் மருத்துவ முகாம் மருத்துவமனை ஏற்பட்டிருக்கிறது—காம்ப் ஹாஸ்பிடல். இதுபோல கோயம்பத்தூர், திருச்சியில் உருவாகியிருக்கிறது. இடவசதி கிடையாது என்கிற நிலையில் எல்லா இடங்களுக்கும் இதுபோல செய்ய முடியாது என்றாலும் படிப்படியாக எல்லா மாவட்ட தலைநகரிலும் இடவசதி கிடைக்கிறபோது ஏற்பாடு செய்யலாம். மாவட்ட தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனையில் இப்போதே கண் சிகிச்சைப் பகுதி இருக்கிறது. ஒரு வாரத்தில் 40, 45 பேர்களுக்கு இடவசதி இருப்பதைப் பார்த்துச் செய்யப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த முகாம்களில் ஸ்டாப் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் வசதிக் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஏதாவது உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர் மருத்துவக் கல்லூரியிலுள்ள கண் சிகிச்சைப் பிரிவு பேராசிரியர். அவருக்கு உதவியாக துணை, உதவி பேராசிரியர்கள், ரீடர்கள் டி.ஓ. பெற்றவர்களோ இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவியாக அசிஸ்டென்ட் சர்ஜன்ஸ். அவர்களுக்கு உதவியாக இப்படிப்பட்ட முகாம்களில் பணியாற்றும் பயிற்சி பெற்ற செவிலியர்கள். அவர்களுக்கு உதவியாக அந்த அந்தப் பகுதியிலுள்ள கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவர்கள், இன்னும் அலுவலர்கள் இடம் பெறுகிறார்கள். ஒத்துழைப்பு நல்குவதற்கு ஸ்கவுட்ஸ் இடம் பெறுகிறார்கள். இவ்வளவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது. முகாம்கள் என்கிறபோது கொஞ்சம் வசதிக் குறைவாகத்தான் இருக்கும். சமூக நலன் என்கிற அளவுக்கு இந்தக் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டுதான் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

### திருக்காட்டுப்பள்ளி மருத்துவமனை

* 646 வினா.—**திரு. கோ. இளங்கோவன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள அரசு மருத்துவ மனையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கோ. இளங்கோவன் :** அந்த மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவு டாக்டரை ஏற்படுத்த வேண்டும், எக்ஸ்ரே கருவி அமைக்கப்படவேண்டும் என்று மாவட்ட அதிகாரி பரிந்துரை செய்திருக்கிறாரா ? ஆம் எனில் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாவட்ட அதிகாரி அப்படி ஒன்றும் பரிந்துரை செய்திருப்பதாகக் குறிப்பு இல்லை. குழந்தைப்பிரிவு என்று தனியாக அங்கே ஏற்படுத்த வசதி இல்லை. ஆனால் குழந்தை மருத்துவத்தில் பயிற்சி பெற்ற டாக்டர் எங்கே இருக்கிறாரோ அங்கே தனியாக அதற்கும் சிகிச்சை கிடைக்க வாய்ப்பு இருக்கிறதே தவிர தனித்தனி பகுதியாக ஏற்படுத்துவது இயலாத காரியம். எக்ஸ்ரே யூனிட் அமைப்பதைப் பொறுத்து 24 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவ மனைகளில் படிப்படியாக கொண்டுவரப்படும்.





**திரு. கோ. இளங்கோவன் :** இந்த மருத்துவமனை நெடுங்காலமாக இருந்து வருவது—படுக்கைகள் 26—இடவசதி போதாது. எனவே குறைந்தபட்சம் இடத்தை விரிவுபடுத்தவும், இந்த எக்ஸ்ரே கருவியை அமைக்கவாவது அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதைத்தான் நான் தெரிவித்தேன். 24 படுக்கைகளுக்கு மேற்பட்ட தாலுக்கா மருத்துவ மனையில் இடவசதியை ஏற்படுத்த வேண்டும், பின்னர் ஒவ்வொன்றுக்காக எக்ஸ்ரே கருவிக்கு ஆர்டர் செய்து, அதை அமைக்க கட்டிடம் கட்டி, முறையாக படிப்படியாக அது அமைக்கப்பட இவை பரிசீலிக்கப்படும்.

### மேட்டுப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம்

* 647 வினா.—**திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், மேட்டுப்பாளையத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மேட்டுப்பாளையத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு அடையாள நன்கொடைத் தொகையாக ரூபாய் 10,000 கொடுத்து இருக்கிறார்கள். நிலம் வழங்குவதில் 3.16 ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஐந்து ஏக்கர் நிலம் இருக்கவேண்டும் என்று விதி இருப்பதால், முழு அளவு நிலமும் கிடைத்த பின்னர், கட்டிடம் கட்டுவது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத்தைக் கட்ட மொத்த மதிப்பு எவ்வளவு? அரசாங்கம் ஏதாவது உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** குடும்ப நல திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்டுவதற்கு ஒரு லட்சத்து பத்தாயிரம்; ஒரு லட்சத்து இருபதாயிரம் ஆகிறது. ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு மருந்தகம், குடியிருப்

[1974 மார்ச் 28

[illegible]

போடு ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம், ஒரு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் ஆகிறது. அதிலே 150 இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மருந்தகம், குடியிருப்போடு கட்ட வேண்டும் என்கிறபோது ஆண்டுக்குச் சில—அவர்கள் கொடுக்கிற இடம், பத்தாயிரம் கொண்டு மருந்தகத்தைக் கட்டுவது—ஆறு படுக்கைகள் உள்ளதாக—என்று தீர்மானித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் செயல்படும்.

### வடக்கலூர் அரிசனங்களிடமிருந்து முறையீடு

* 648 விளு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், அவிஞசி வட்டம், வடக்கலூர் அரிசன மக்கள், அங்கு கட்டப்பட்டு வரும் பொது மண்டபம் (Community Centre) முடிக்கப் பெருமல் இருப்பது குறித்தும், தங்களுக்குக் குடியிருப்புகள் ஒதுக்குவது குறித்தும், 12—8—1973-ல் மாண்புமிகு அமைச்சரிடம் விண்ணப்பித்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(இ) விளு எழவில்லை.

### மீன் வளப் பயிற்சி.

*.649 விளு—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடையளிப்பாரா—

மீன் வளத்தைப் பெருக்கவும், மீன் பிடிப்பதில் புதிய முறைகளை கண்டறியவும் 1973-ல் தமிழ்நாடு அரசின் சார்பில் நார்வே, சுவீடன் போன்ற நாடுகளுக்கு யாராவது அனுப்பப்பட்டார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இல்லை.

திரு. நா. வீராசாமி: நார்வேக்கும், சுவீடனுக்கும் மீனவர்களைச் சேர்ந்த மெம்பர்களை அனுப்பிக் கேர்ந்துவரக்கூடிய வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். இப்போது நம் நாட்டில் மீன் இலாக்கா திறமையாகச் செயல்பட்டு வருகிறது. அப்படி இருக்கும்போது சட்டசபையில் இருக்கக் கூடிய மெம்பர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதன் மூலம் இந்த நாட்டின் மீன் வளத்தைப் பெருக்க நம் அரசு முயற்சிக்குமா?



1974 மார்ச் 28]

THE HON. THIRUMATHI SATHYAVANI MUTHU: The General Foreman, Boat Building Yard, Mandapam has been deputed to Norway for training in Marine Engineering, Thiru K. C. Joseph, Assistant Director of Fisheries, Fish Meal Plant, Mandapam and Thiru S. Durairaj, Senior Research Assistant (Bacteriology) have been recommended to the Government of India for Training Course under the auspices of the FAO/DANIDA to be held in Sweden during 1974.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படுகிற மீன்கள் வளர்ச்சி அடைவதைப் போல, நம் நாட்டில் நீண்டகாலமாக விரால் மீன்கள் இனப்பெருக்கம் தானகவே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த உயர்தரமான மீனை வெளிநாடுகளுக்கு அனுப்பி அறிமுகப்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே. சட்டமன்றத்தில் எரால் மீன், விரால் மீன் என்ற சொல்லை நவருகப் பத்திரிகையில் போடுகிறார்கள். எரால் என்ற வகை தான் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிறது. விரால் மீன் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது எராலா, விராலா என்று தெரியவில்லை. மறுபடியும் கேள்வியை போட்டால் விவரமாகச் சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மீன்பிடி சம்பந்தமான முற்போக்குத் திட்டங்களை தெரிந்து கொள்வதற்காக நார்வேக்கு இரண்டு பேர் இந்த வருஷம் அனுப்பப்படுவதாகச் சொன்னார்கள். அந்த இரண்டு பேரும் அபிஷியலாக இருக்கிறார்கள். இதிலே நேரடியாக ஈடுபடும் நான்-அபிஷியல்ஸ்ஸை அனுப்ப யோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான்-அபிஷியல்ஸ் அனுப்புவதாக இப்போது திட்டம் இல்லை. ஆனால் மீன் மாநில ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கவேண்டுமென்று மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### ராங்கியன் கண்மாய்.

* 650 வினு—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ராங்கியன் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்த ராங்கியன் கால்வாயில் மண் மேடிட்டு சரியான முறையில் பாசனத்திற்கு தண்ணீர் தேங்குகிற மாதிரி பள்ளமாக இல்லை. ஆகவே, இந்த ஆண்டு அதைப் பரிசீலனை செய்து, அந்தக் கண்மாயை ஆழப்படுத்த அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ? மேலும், இன்றைக்கு வைகை சீரமைப்பு திட்டத்தின் மூலமாக நாட்டு மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த வைகை நீரை இந்த ராங்கியன் கண்மாய்க்கு கொடுத்து உதவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மூலக் கேள்வி தூர் வாரப்படுமா என்பதைப் பற்றியதாகும். அது இல்லை என்று நான் தெரிவித்தேன். காரணம், ஏரியின் எதிர் வயலில் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். தூர் வாரி கொட்டினால் நிலச் சொந்தக்காரர்கள் அதற்கு ஆட்சேபனை செய்கிறார்கள். மண் எடுத்து வேறு இடத்திற்கு கொண்டு சென்று கொட்டுவது என்றால் செலவு அதிகமாகும். ஆகவே, குறிப்பு இல்லை என்று சொன்னேன்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, கண்மாயைத் தூர் எடுக்க அரசு ஆவன செய்தால், அதற்கு அந்த விவசாயிகள் சம்மதிப்பார்கள். அப்படிச் செய்தால், அரசாங்கம் தூர் எடுப்பதற்கு உடனடியாக உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் அப்படிச் சம்மதம் வாங்கித் தருவார்களானால், அரசு அதைப் பரிசீலிக்கும்.



### பிரமனூர் பழையனூர் கால்வாய்களை இணைத்தல்

651. வினு—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூருக்குச் செல்லும் கால்வாயை திருப்புவனம் நகரத்தின் அருகாமையில் செல்லும் பழையனூர் கால்வாயோடு சேர்க்கும் உத்தேசம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

### பட்டவர்த்தி—குறிச்சி புலவனூர் சாலை

652. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் பட்டவர்த்தியிலிருந்து குறிச்சி புலவனூர் வரை உள்ள சாலையை அரசினர் நெடுஞ்சாலைத்துறை எப்பொழுது மேற்கொள்ளும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சாலை ஏற்கெனவே ஒரு அரசு சாலையாகும். ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

### *Assignment of lands in Dharmapuri*

* 653 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether it is a fact that a vast extent of cultivable waste lands in Dharmapuri had been recently assigned to Scheduled Caste people; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தர்மபுரி மாவட்டத்தில் ஏப்ரல் 73-லிருந்து ஜனவரி 74 வரை 299.21 ஏக்கர் பரப்பளவு விவசாய தரிசு நிலம் 160 அரிசனங்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 28

**திரு. என். கே. பழனிசாமி:** சார், வெறும் பூமி மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்து அவர்கள் விவசாயம் செய்யமுடியவில்லை. ஆகவே, அவர்கள் விவசாயம் செய்வதற்கு உதவியாக சர்க்காரே கூட்டுறவுத் துறை அல்லது வேறு துறை மூலமாக கடன்கள் கொடுத்து, கிணறு வெட்ட மற்றும் வேறு காரியங்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, என்னுடைய இலாகாவின் பொறுப்பு பட்டா கொடுப்பதுதான். கடன் கொடுக்கும் பொறுப்பு கூட்டுறவுத் துறை அமைச்சருடையது, அவரைக் கேட்க வேண்டும். அப்படி ஒரு திட்டம் இருந்தால் நிச்சயமாக கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, as per revenue records there appears to be a lot of poramboke lands in Dharmapuri district but actually most of the lands are being cultivated by poor people who have not been given pattas. So, may I know from the Hon. Minister whether he will take action to see that pattas are given to them early

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The target fixed for the assignment of lands during 1973-74 is 9,000 acres. Upto the end of January 1974 a total extent of 3,186 acres have been assigned and out of this, 299.21 acres have been assigned to Harijans. The rest of the lands will be assigned in due course.

THIRU B. VENKATASWAMY: Sir, most of the lands which have been cultivated by the poor people for the last 30 or 40 years have not been assigned in Dharmapuri district, especially in the Anjati firka. They have represented to me that they have not been assigned to them. So, may I know from the Hon. Minister whether he will take steps to assign them at least in the Anjati firka?

THE HON THIRU S. J. SADIQ PASHA: My hon Friend can bring it to the notice of the District Collector and he will certainly look into the representation made in this regard.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, தமிழக அரசு ஏழைகளுக்கு பட்டா செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் பல பகுதிகளில் அவைகளை கிராமக்கணக்கில் எழுதவில்லை. ஆகவே, அந்த அரிசனங்களுக்கு



1974 மார்ச் 28]

எல்லாம் நிலவள வங்கி மூலமாகக் கடன் கிடைக்கவில்லை. எனவே பட்டா செய்து தருகிறபோதே உடனடியாக அந்தக் கிராமக்கணக்கில் அவற்றை எழுதச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டதாக அறிகிறேன். ஏதாவது தவறு இருக்குமானால் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் ஸ்டேட் பாங்கியில் இதுபோன்ற பட்டா செய்து கொடுத்த பூமியின் மீது கடன் தருவது இல்லை என்று சொல்கிறார்கள். மதுரை மாவட்டத்திலிருந்து அத்தகைய குறிப்பு வந்திருக்கிறது. அவைகளைப் பரிசீலித்து, ஸ்டேட் பாங்க் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கும்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, அரிசனங்களுக்கு நிலம் கொடுக்கிறபோது, இந்தச் சமுதாயக் கிணறுகள் என்று நம் அரசாங்கத்தின் நடைமுறையில் இருக்கிறதே, அதுமாதிரியாவது கட்டித் தர அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாவில் குறைந்தபட்சம் ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு வழங்கப்பட்டது, உயர்ந்தது எவ்வளவு வழங்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதற்கென விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளைப் பின்பற்றி கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. த. சோலையா:** தலைவரவர்களே, தமிழக அரசு ஏழை எளிய மக்களுக்காக பட்டா வழங்குகிறது. அதை பணக்காரர்கள் பார்த்துக்கொண்டே இருந்து அந்த நிலங்களைக் கையெழுத்து வாங்கி எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். அப்படி அரசாங்கத்தால் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலங்களை ஏழை எளியவர்கள் இத்தனை நாளைக்கு விற்கக்கூடாது, வாங்கக்கூடாது என்று ஒரு சட்டத்தை அரசு இயற்ற ஆலோசிக்குமா?

[1974 மார்ச் 28

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே அப்படி விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட ஆண்டு வரையில் அதை பாரதினம் செய்யக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் எங்காவது இப்படி இருக்கிறது என்று புகார் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படி எல்லா மாவட்டங்களிலும் அரிசனங்களுக்கு மாத்திரம் இல்லாமல், மனைப்பட்டாக்கள் இல்லாத ஏழை எளியவர்களுக்கும் மனைப்பட்டா வழங்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறதே, அதற்கு தீவிர நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது நிலம் கொடுக்கிற பிரச்னை பற்றியதாகும். வீட்டு மனை பற்றி ஹவுசிங் போர்டு மினிஸ்டரிடத்தில் கேள்வி கேட்க வேண்டும். ஏற்கனவே இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ரூரல் ஹவுஸ்லெஸ் புவர் மக்களுக்கு உதவி செய்யப் படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி வீட்டு வசதி வாரியத் தலைவரைக் கேட்டால் ஒரு விவரம் தருவார்கள். இன்று மானியத்தில் கூடத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

வக்பு வாரியத்தின் கீழுள்ள மசூதிகள்

* 654வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வக்பு வாரியத்தின் கண்காணிப்பில் 1972-ம் ஆண்டு முடிய உள்ள மசூதிகள் எத்தனை ?

(இ) அவற்றின் மூலம் வாரியம் பெறும் மொத்த வருவாய் எவ்வளவு ரூபாய் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 2,235.

(இ) ரூ. 2,28,569.18 (ஓராண்டிற்கு).

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்து சமுதாயத்திற்கும் இஸ்லாமிய சமுதாயத்திற்கு இம்மாதிரி வாரியங்கள் இருப்பது போல், கிருஸ்துவ சமுதாயத்திற்கும் உள்ள அறநிலையங்களைப் பாதுகாக்க இம்மாதிரி வாரியங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா ?



1974 மார்ச் 28]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசீலிக்கலாம் என்று நான் பதில் சொல்வதற்கு இயலாது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்த மசூதியின் வருமானம் ரூபாய் இரண்டு லட்சத்து சொச்சம் என்று சொன்னார்கள். வக்ப் சொத்துக்களை தனிப்பட்டவர்கள் எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையைப் போக்குவதற்கு அந்த ஊரில் இருக்கிற முஸ்லிம் பெருமக்கள் மனு செய்து கொண்டிருந்தபோதிலும், நீண்ட நாட்களாகியும் அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அந்தப் பகுதி மக்களிடம் இந்தக் குறை இருந்து வருகிறது. இதைப் போக்குவதற்கு இந்த அரசு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடவடிக்கை எடுக்க காலதாமதம் என்று சொல்வது சரியல்ல. ஒரு நடவடிக்கை எடுக்கும்போது பல்வேறு விதிமுறைகள், சட்டப்பிரச்சினை வந்து விடுகின்றன. அந்தச் சட்டத்தின் துணைகொண்டு அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். நடவடிக்கை எடுப்பதை தடைசெய்வதற்கு உத்தரவு வாங்கிவிடுகிறார்கள். அந்தத் தடை எடுக்கப்பட பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இடம் எனக்குத் தெரியும். அந்தக் குறிப்பிட்ட பிரச்னை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதை ஒன்றும் செய்வதற்கு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த வக்ப் போர்டுக்கு கிட்டத்தட்ட ரூ. 30 கோடிக்கு பிராப்பர்ட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் வருமானத்தைப் பார்த்தால் மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால் எங்கேயோ எதிலோ தவறு நடக்கிறது என்று தெரிகிறது. இதை ஆராய்ந்து பார்ப்பதற்கு ஒரு ஹை-பவர் கமிஷன் போடுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கமிஷனே வேண்டாம். இருக்கிற வாரியமே அதைக் கவனித்து வருகிறது. சொத்து மதிப்பு 15 கோடி இருக்கலாம். வரக்கூடிய வருமானம் குறைவாகத்தான் வருகிறது. வக்ப் கான்டிரிப்யூஷன் குறைவாகத்தான் வருகிறது. ஏற்கனவே வந்த வருமானத்தைப் பற்றி குறிப்பு தரப்பட்டிருக்கிறது. இதற்கு மொத்தமாக வந்துள்ள வருமானம் ரூ. 4,17,556.

[1974 மார்ச் 28

(முற்பகல் 9-30)

## Workshop on soil testing.

* 655 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether any Regional Workshop on Soil Testing, Fertiliser Quality Control and Fertiliser Promotion was held at Madras around the 9th July, 1973; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) & (இ) மத்திய அரசினர் நடத்திய இந்தக் கருத்தரங்கில் தென் மாநிலங்களைச் சேர்ந்த 120 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ரசாயன உரம் மற்றும் கரிம உரம், அதாவது ஆர்கானிக் உரம் உற்பத்தி, விநியோகம் பற்றி ஆராயப்பட்டது.

**திரு. ஆ. பரந்தாமன்:** ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கேள்வித் தாளில்

(a) whether any Regional Workshop on Soil Testing, Fertiliser Quality Control and Fertiliser Promotion was held at Madras around the 9th July 1973; and

(b) if so, the deails thereof?

என்று இருக்கிறது. ஆனால் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கேள்வித் தாளில் "சென்னையில் 1973 ஜூலை 9-ஆம் நாள் அளவில், மண்வள ஆராய்ச்சி, உர தரக்கட்டுப்பாடு, உரங்கள் பயன்படுத்துவதைப் பெருக்குதல் குறித்த வட்டார கருத்தரங்கு நடைபெற்றதா?" என்று இருக்கிறது. ஆகவே இது ரீஜனல் வொர்க்ஷாப்பா அல்லது ரீஜனல் செமினாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வொர்க்ஷாப் என்பதும் செமினார் என்பதும் ஒரே கருத்தைத் தான் குறிக்கும்.

## கன்னியாகுமரியில் தென்னை சாகுபடி

* 656 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், தென்னை முனைப்புச் சாகுபடித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?



1974 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அந்தப் பகுதியிலே இந்தத் தென்னை மரம் பயிரிடுவதற்கு நில வள வங்கி மூலமாகக் கடன் கொடுக்க ஒரு திட்டம் இருந்ததே, அதை அமல் நடத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமா? அதையும் கைவிடுவதாக இருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** முன்னால் ஒரு முறை கேட்டதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது வினா வந்து முனைப்புத் திட்டம் பற்றியது. அதைப்பற்றி இல்லை என்று சொன்னேன். நில வள வங்கியின் மூலம் கடன் கொடுக்கிற திட்டம் நிச்சயம் செயல்படும். போன தடவை சுமார் 3,500 ஏக்கர் அளவுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படும் என்று சொன்னேன். கன்யாகுமரி மாவட்டப் பிரதிநிதிகள் சற்று அதை விரிவுபடுத்தக்கூடாதா என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு, 7,500 ஏக்கருக்கு விரிவுபடுத்தி கன்னியாகுமரி மாவட்டத்திற்கு திட்டம் ஒன்றைத் தயார் செய்து, அது ஏ. ஆர். ஸி. அதாவது வேளாண்மை மறு நிதிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தேங்காயின் விலை ரூ. 1½, 1¾ என்ற அளவில் போய்க்கொண்டிருக்கிறது. ஆதலால் மண் வளமும் நீர் வளமும் இருக்கிற பகுதிகளிலெல்லாம் முனைப்புத் திட்டத்தைத் தென்னை மர வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்து, அதற்கான உதவிகளை விவசாயிகளுக்குச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** முனைப்புத் திட்டம் என்ற பெயரால் அதை இனமாகக் கொடுப்பது என்பது சாத்தியக்கூறு இல்லாத ஒன்று. ஆனால், தென்னங்கன்றுகளைக் குறைந்த விலையில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை எப்படி வளர்ப்பது என்பதற்கு உண்டான ஆராய்ச்சி செய்து, அதை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்கிறோம். தென்னை மரம் வளர்ப்பவர்கள் மிக நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டியது நல்லது. தென்னை மரம் வளர்த்தால் மிகவும் லாபகரமானது. பலன் கிடைப்பதற்கு சற்று நாள் பிடிக்கும். நீண்ட காலக் கடன் கொடுத்து, 6 வருஷங்களுக்குப் பிறகு அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிப் பெற்றுக்கொள்கிறோம்.

**திரு. கு. இராசமாணிக்கம்:** தென்னை மரம் வளர்ப்பதற்கு அதிகப்படியான பலன் தருவதற்கு தஞ்சை மாவட்டத்தில் மண்வளம் ஏற்றதாக இருக்கிறது. ஆகவே, கிராமப் பஞ்சாயத்துக்களிலும், நெடுஞ்சாலைப் பகுதிகளிலும், பொதுப்பணித் துறை கரைகளிலும் தென்னை பயிரிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[1974 மார்ச் 28

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தஞ்சை மாவட்டத்திலே ஏற்கனவே வேளாண்மை மறு நிதிக் கழகத்தினுடைய திட்டம் செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. ஆனால் அது இப்பொழுது தனிப்பட்ட விவசாயிகளுக்குப் பயன்பட்டு வருகிறது, பட்டா நிலம் உள்ளவர்களுக்கு, சிறிய விவசாயிகளுக்குக் கூட பயன்பட்டுவருகிறது. அதையே அரசாங்க நிலத்தில் பயிரிடவேண்டும் என்பது வேறு பிரச்சினை. அதுபற்றித் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அமைச்சர் அவர்கள் பாக்கேஜ் ஸ்கிம் இல்லை என்று கூறினார்கள். இந்த மாநிலத்திற்குத் தேவையான தேங்காய் இந்த மாநிலத்தில் உற்பத்தியாகிறதா? இல்லையென்று சொன்னால், தேவைக்குக் குறைவான அளவுக்குத்தான் உற்பத்தி ஆகிறது என்று சொன்னால், உற்பத்தியைக் கூட்டுவதற்குத் திட்டங்கள் தேவையில்லையா என்பதனைஅரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தேங்காய் நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு இப்பொழுது ஏற்றுமதி ஆகிக் கொண்டிருக்கிறது. போதுமான அளவுக்கு நமக்குக் கிடைக்கிற காரணத்தினால்தான் வெளி மாநிலங்களுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறோம் என்று கருதுகிறேன். பாக்கேஜ் ஸ்கிம் என்பது வேறு. அதைத்தான் இல்லை என்று சொன்னேன். ரூ. 3,500 வரையில் ஐந்து ஆண்டுகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் கடன் கொடுத்துக்கொண்டே வந்து, ஆறுவது ஆண்டுக்குப் பிறகு அதைத் திரும்பிப் பெற்றுக்கொள்கிற திட்டம் விவசாயிகளினால் பெரிதும் வரவேற்கப்படுகிறது. முன்பு ஒரு முறை ஜேம்ஸ் அவர்கள் 3,500 ஏக்கரை விரிவுபடுத்தக்கூடாதா என்று கேட்டவர். 7,500 ஏக்கராவாகப் பெருக்குவதற்கு அவர் என்று கேட்டவர். 7,500 ஏக்கராவாக பெருக்குவதற்கு அதற்கு ஒரு திட்டம் தனியாக தயார் செய்து ஏ. ஆர். சி.-க்கு அனுப்பியிருக்கிறோம். அதற்கேற்ற பணம் கிடைக்கும், நிச்சயம் விரிவுபடுத்த முடியும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** தென்னை மரத்தில் மூன்று வகை இருக்கிறது. டால் வெரெய்டி, மற்றொன்று ட்வார்ஃப் வெரெய்டி, மூன்றாவது ஹைபிரிட் வெரெய்ட்டி. ஹைபிரிட் வெரெய்டி குறுகிய காலத்தில் அதிகமாகப் பலன் கொடுக்கக்கூடியது. இப்பொழுது ஹைபிரிட் வெரெய்டி கிடைக்கவில்லை, அது அதிகமாகக் கிடைப்பதற்கு அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளுமா?



1974 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தமிழ் நாட்டில் பல இடங்களில் தென்னங்கன்றுப் பண்ணைகள் இருக்கின்றன. அதில் டால் வெரெய்டி, ட்வார்ஃப் வெரெய்டி, ஹைபிரிட் வெரெய்டி எல்லாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். குறிப்பிட்ட எந்த இடத்தில் ஹைபிரிட் வெரெய்டி கிடைக்கவில்லை என்று தெரிவிப்பார்களேயானால் அங்கே அது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். கோவை மாவட்டத்தில் நானே எங்கே கிடைக்கவில்லை என்பதை விசாரித்து, அதை அங்குக் கிடைக்கும்படி செய்விக்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** தென்னை உற்பத்திக்குத் தனியாக ஒரு இலாகாவில் பணம் தருகிறார்கள். தருகின்ற பணம் இன்றைய தினம் செலவுக்குப் போதவில்லை. தென்னை வளர்க்க நிலவள வங்கிகள் ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் கடனைத் தருகிறார்கள். தென்னை வளரக்கூடிய எல்லாப் பகுதிகளுக்கும் அந்த ஸ்கிமை விஸ்தரித்தால் நல்லதாக இருக்கும். அதுகுறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இந்த வினா கன்யாகுமரி மாவட்டத்தைப் பற்றியதாக இருந்ததினால் கன்யாகுமரி மாவட்டத்தைப் பற்றி மட்டும் பதில் அளித்தேன். அதனால் மற்ற மாவட்டங்களில் விரிவாக்கப் படவில்லை என்றோ, அமலாக்கப்படவில்லை என்றோ பொருள் அல்ல. குறிப்பாக வட ஆற்காடு, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி, தர்மபுரி, சேலம், கோவை மாவட்டங்களில் தரப்படுகிறது.

**திரு. கோவை செழியன்:** கோவை மாவட்டத்தில் ஒரு இடத்தில்தான் இருக்கிறது. என் கேள்விக்குப் பதில் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் கேள்வி அனுமதிக்கப்பட்ட பொழுது கேட்கவேண்டும்.

THIRU B. VENKATASWAMY: The Hon. Minister said that hybrid variety is abundantly available in the State. May I know where the hybrid variety is available in the State?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எங்கே கிடைக்கவில்லை என்று சொன்னால் அதைக் கவனிக்கிறேன் என்று சொன்னேன். இப்பொழுது தென்னங்கன்றுப் பண்ணைகள் எல்லாவற்றிலும் ஏராளமாக கன்றுகள் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இப்பொழுது நிச்சயம் எங்கேயாவது ஹைபிரிட் வெரெய்டி கிடைக்கவில்லை என்றால் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : முனைப்புத் திட்டத்தின்கீழ்க் கொடுக்கப் பட்ட கடன் 5 ஆண்டு ஆகும் சமயத்தில் நிறுத்தப்பட்டுவிடுகிறது. 7 ஆண்டு தொடர்ச்சியாக கடன் தருவார்களா ? இராமநாதபுரம் பகுதியிலே பாதியிலேயே கடனை நிறுத்திவிட்டதாக புகார்கள் வருகின்றன. முனைப்புத் திட்டத்தின்கீழ்க் கொடுக்கக் கூடிய கடன் தொடர்ச்சியாக 6, 7 ஆண்டு களுக்குக் கொடுப்பதற்கு இந்த அரசு திட்டம் தீட்டுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஏற்கனவே சொன்னேன். முனைப்புத் திட்டம் வேறு, இந்த வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டம் வேறு. முன்னால் முனைப்புத் திட்டத்தின் அடிப்படையில் தென்னை மரங் களுக்குக் கொஞ்சம் உதவி செய்யப்பட்டது. ரூ. 150, 200, 300 என்று இப்படிச் செய்த உதவி மிகவும் குறைவு என்பதை உணர்ந்து, அந்தத் திட்டத்தை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் மூலம் பல கோடி ரூபாய் பெற்று, ஒரு மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 1,22,50,000 என்ற அளவுக்கு அந்தப் பணத்தைப் பெற்று விவசாயி களுக்குக் கொடுக்கிறோம். பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் தென்னை மரங்கள் பலன் கொடுக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. 5 வருஷத்திற்குக் கொடுத்துக்கொண்டிருந்து, ஒரு வருஷம் இடைவெளிவிட்டு, 7-வது ஆண்டிலிருந்து அந்தப் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெறுகிறோம்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபொழுது கோவை மாவட்டத்தில் தருவதாகச் சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதிகளில் மட்டும் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. தென்னை வளர்க்கக்கூடிய நல்ல தரம் உள்ள நீர்வளம் உள்ள பூமி மற்ற தாலுக்காக்களில் இருக்கிறது. அங்கே யெல்லாம் இப்பொழுது அந்த ஸ்கீம் வருவதில்லை. ஆக, வளர்கின்ற எல்லா இடங்களுக்கும் அந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, தென்னை மரம் வளர்வதற்குச் சத்துள்ள பூமி மட்டும் போதாது. நீர்வளம் பெருவாரி யாக வேண்டும். ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு 90 இன்செஸ் தண்ணீர் தேவைப் படும். தண்ணீர் மழையாகப் பொழியவேண்டும். இல்லையென்றால் கிணற்றி லிருந்து எடுக்க வேண்டும். இரண்டு வகையிலும் எங்கே தண்ணீர் வருகிறதோ அங்கே அமல் நடத்தப்படுகிறது. ஒருவேளை காங்கேயம் பகுதியில் நீர்



வளம் நன்றாக இருக்கிறது என்று கூறக்கூடும். அந்த அளவுக்கு அங்கே தண்ணீர் கிடைக்கும் என்று நமது வேளாண்மை விஞ்ஞானிகள் பரிசோதித்துச் சொல்வார்களேயானால் அங்கு விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

### சங்கையில் கால்நடை வளர்ப்புத் துணை நிலையம்.

*** 657 வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—**

சங்கையில், கால்நடை வளர்ப்புத் துணை நிலையம் ஒன்றை அமைப்பதற் கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

### *Polutry Extension Centre, kappalur.*

* 658 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government for the expansion of Poultry Extension Centre near the chick hatchery at Kappalur in Madurai district; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், நாம் இந்த பவுல்ட்ரி டெவலப் மென்ட்டுக்கு அதிகமாக பணம் ஒதுக்கியும், நமக்குத் தேவைப்படும் முட்டை களில் 40 சதவிகிதம் கேரளத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. இதை மாற்றி நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு முட்டை ஏற்றுமதி செய்யத்தக்க அளவுக்கு திட்டம் போடப்படுமா ?

அதோடு ‘ டிரெஸ்டு சிக்கன் ’, ‘ ஃப்ரோசன் சிக்கன் ’ தயாரிப்பது பற்றியும் விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களுக்கும் இந்தவகை சிக்கன்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

---

@ 863–865-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 28

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, கோழி ஒன்றரை வருடம்தான் முட்டையிடும். அதன் பிறகு அதை இறைச்சி வகைக்குப் பயன் படுத்திக்கொள்கிறார்கள். அந்த வகையிலே முட்டையிட்டு முடிந்த கோழிகளை பக்குவப்படுத்துகிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'டிரெஸ்டு சிக்கன்' என்று குறிப்பிடுகிறார்கள். டிரெஸ்டு சிக்கனை ப்ரோஸன் சிக்கனாக்கினால்தான் வெளி மாவட்டங்களில் கொண்டு போய் விற்பனை செய்யும்போது கெட்டுப்போகாமல் இருக்கும். முட்டை உற்பத்தியைப் பெருக்குவதற்கு உண்டான நடவடிக்கைகளையும் இந்த விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன். 5,000 கோழிக் குஞ்சுகள் பொரிக்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக 20,000 குஞ்சுகளைப் பொரிக்க வைக்கும் திட்டம் இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, கப்பலூரில் மட்டும் 5,000 கோழிக்குஞ்சுகள் பொரிப்பதை 20,000-மாக மாற்றுவதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பெருமளவில் கோழிக்குஞ்சுகளை உற் பத்தி செய்தால்தான் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்ய முடியும்; தொழில் லாபகரமாக நடைபெறும். இப்போது பல இடங்களில் கோழிப்பண்ணைகள் ஆரம்பிக்கிறார்கள். அந்தப் பண்ணைகளுக்கு முட்டை யிடுகின்ற பருவத்திலுள்ள கோழி ஒன்று 20 ரூபாய் வீதம் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இப்போது கோழித் தீவனம் 1½ ரூபாய்க்கு மேல் விற்கிறது. அதன் காரணமாக பல விவசாயிகள் பண்ணைகளை மூடி விடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் லாபம் இல்லை. ஆகவே, கோழி யும் கோழித் தீவனமும் குறைந்த விலைக்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெரிய உண்மையைச் சொன்னார்கள். கோழிப் பண்ணைகளுக்கு கோழித் தீவனத்தை குறைந்த விலைக்குக் கொடுத்தால் லாபம் கிடைக்கும் என்று அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள் கிறேன். தற்போது கோழித் தீவனம் கிலோ 1½ ரூபாய்க்கு விற்கிறது என்று சொன்னார்கள் என்று கருதுகிறேன். அது சில தனியார் கம்பெனிகளில் இருக்கலாம். அரசு 1.05 ரூபாய்க்கு நந்தனம் உற்பத்தி நிலையத்திலிருந்து கொடுக்கிறது. அது கூட அதிகம் என்று நான் சொல்லியிருக்கிறேன். விலையைக் குறைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

குறிப்பாக மக்காச்சோளத்திற்குப் பதிலாக இந்த குச்சிக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்குகளை சேர்த்துக் கொடுத்தால் விலை குறைகிறது; அதனால் தீனியின் தரம் குறைவதில்லை. அந்த வகையிலே கோழித் தீவனத்தின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.



1974 மார்ச் 28]

## உழவர்கள் கூட்டுறவு காகித ஆலைகள்

* 659 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

உழவர்கள் கூட்டுறவு காகித ஆலைகள் நிறுவப்படுவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஆம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த உழவர்கள் கூட்டுறவு காகித ஆலை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் இருக் கிறது, எங்கெங்கே நிறுவப்பட இருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இது திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் புகளூர் என்ற இடத்தில் நிறுவப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 11 திட்டங்களைக் கொண்டது. ஐந்து நிறைவேறி நல்லமுறையில் இருக்கின்றன. 21.3 லட்சம் ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இன்று நாட்டில் காகிதப் பஞ்சம் பெருமளவில் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 15 பைசாவுக்கு விற்ற பத்திரிகை 25 பைசாவாக விற்கிறது. எனவே, நம்முடைய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்ற இந்த உழவர் கூட்டுறவு காகித ஆலையில் நியூஸ் பிரின்ட் தயாரிக்கும் திட்டம் இருக்கிறதா? தமிழ்நாட்டில் காகிதப் பஞ்சத்தைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** காகிதப் பஞ்சத்தைப் போக்குவதற்காகத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது பயன்படும் திட்டமாக இருக்குமா? திட்டம் முழுமையாக நிறைவேறினால் நல்ல லாபம் கிடைக்குமா? என்பதைப்பற்றி எல்லாம் ஆராய்ந்து அறிக்கை கொடுப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினர் 30 நாட்களுக்குள் இந்தத் திட்டத்தை ஆராய்ந்து சொல்லவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது புகளூர் பகுதியில் உழவர் கூட்டுறவு காகிதத் தொழிற் சாலையை ஆரம்பிக்க உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள், ஆனால்

புகளூரிலிருந்து வேறு ஒருவரின் செல்வாக்கின் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றுவதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி வேறு இடத்திற்கு மாற்றுவதாக இருந்தால், அதை என்னுடைய தொகுதியில் சின்னதாராபுரம் என்ற இடத்தில் அமைக்க அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: உறுப்பினர் அவர்கள் பொதுநலத்தோடு கேள்வி போடுகிறார் என்று நினைத்தேன். ஆனால் அவர் சுயநலத்தோடுதான் கேட்டிருக்கிறார் என்பது கேள்வியின் முடிவில் தெரிந்தது. அவர் சொல்வது உண்மை அல்ல.

திரு. எஸ். வடிவேல்: சார், உழவர் கூட்டுறவு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவது மிகவும் அவசியமானது. அது எந்தெந்த வகையிலே அமைக்கப்படுகிறது? என்னென்ன விதிகளின்படி அமைக்கப்படுகிறது? தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பித்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைவார்கள் என்ற வகையில் அங்கே அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்குத் தேவையான உப பொருட்கள் புளிச்சக்கிரையும் அகத்திக்கீரையுமாகும். இந்தக் கிரை வகைகள் நஞ்சை நிலத்தில் உற்பத்தியாகாது; புஞ்சை நிலத்தில்தான் உற்பத்தி செய்ய முடியும். மேலும் இதற்கு 8,000 ஏக்கர் நிலப்பரப்பு தேவைப்படும் என்று கருதப்பட்டது. பரிசீலனை செய்ததில், 1,30,000 டன் புளிச்சக்கிரையும், கிட்டத்தட்ட 30 ஆயிரம் டன் அகத்திக்கிரையும் தேவை என்று தெரிய வந்தது. அதற்கு 9,200 ஏக்கர் நிலப்பரப்பு வேண்டும். அந்த அளவுக்கு நிலம் கிடைத்தால் மட்டும் போதாது; ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும். நீரேற்றுப் பாசனம் மூலம் இந்தக் கீரைவகைகளை பயிர் செய்தால் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர்தான் பயிரிட முடியும். ஆனால் தண்ணீரை தேக்கி வைத்து, 'ஸ்பிரிங்ளர்' மூலம் தெளித்தால் 8,000 ஏக்கர் பாசன வசதி பெறும். இதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுக்க குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மாதத்திற்குள் அறிக்கை கொடுத்துவிடுவார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் இந்த புளிச்சக்கிரையும் அகத்திக்கிரையும் உற்பத்தி செய்ய வாய்ப்பு இல்லாததால் அங்கே இந்த காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பது சாத்தியமல்ல.



திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டத்தில் உழவர் கூட்டுறவு காகித ஆலை அமைத்து, அங்குள்ள வைக்கோல் மூலம் காகிதம் உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அப்படி ஒரு முயற்சி இதுவரையில் இல்லை. அதற்கான முயற்சிகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

### *Vehicles belonging to Co-operative Societies.*

*660 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether surcharge is imposed on Clerks for using vehicles in the Co-operative Societies without permission by the Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) வண்டிகளைப் பேணி வருவதற்காகக் கூட்டுறவுச் சங்கத்தினால் கடைப்பிடிக்கப்படும் விதி முறைகள், கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள வண்டிகளைப் பயன்படுத்துவதற்குப் பொருந்துகின்றன. இதற்கு அரசின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இப்போது கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான வண்டிகளில் பிரயாணம் செய்வதற்கு கட்டணம் குறைவாக இருக்கிறது. இப்போது இருக்கின்ற எரிபொருள் விலை யேற்றத்தின் அடிப்படையில் இந்த ரேட்டுகளை மாற்றி அமைக்க அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறதா? அப்படியானால் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: வாகனங்களைப்பற்றி கேட்டிருப்பது—பிளஷர் கார், ஜீப் பற்றியது இந்தக் கேள்வி. மற்ற வாகனங்களைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். அதற்கு தனிக் கேள்வி போடவும்.

### *Price of Coconut oil.*

*661 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Government are aware of the sudden spurt in prices of coconut oil in this State during October 1973; and

(b) if so, the action taken thereon?

[1974 மார்ச் 28

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் தேங்காய் என்ணெய் உற்பத்தியில் பற்றுக்குறை நிலவுகிறது. இந்த மாநிலத்தின் தேவைகளில் 80 சதவீதம் பிற மாநிலங்களிலிருந்து, குறிப்பாக கேரள மாநிலத்திருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. தேங்காய் என்ணெய் விலேகள் ஏறிவருவதைத் தடுப்பதற்கு இயலும் வகையில் இம்மாநிலத்திற்கு கொப்பரைத் தேங்காய் போதுமான அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று அரசு வணிகக் கழகத்திற்கு எழுதப்பட்டுள்ளது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலேவர் அவர்களே, தேங்காய் விலே இன்றைக்கு 2 ரூபாய் வரை விற்கிறது. அதுபோல தேங்காய் என்ணெ விலேயும் அதிகரித்திருக்கிறது. ஆகவே, ஏழைகளுக்கு தேங்காயும், தேங்காய் என்ணெய்யும் சுலபமாக கிடைக்க, சப்சிடி ரேட்டிலே கிடைக்க, ரேஷன் மூலம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலேவர் அவர்களே, தேங்காய் என்ணெய் மட்டும் சப்சிடி ரேட்டிலே கொடுப்பதோடு, மற்ற அத்தியாவசியப் பொருட்களேயும் கணக்கில் எடுத்துக்கொண்டால் அதற்கு மட்டுமே 375 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப்படவேண்டும். நம்முடைய பட்ஜெட்டே 400 கோடி என்றிருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட சப்சிடி ரேட்டில் கொடுப்பதற்கில்லே.

இந்தியாவிலே, தேங்காய் அதிகமாக உற்பத்தியாகிற கேரளாவில் இன்றைக்கு ஒரு குவிண்டால் தேங்காய் என்ணெய் 1,040 ரூபாய்க்கு விற்கிறது. கள்ளிக்கோட்டையில் 1,040 ரூபாய்க்கு விற்கிறது. ஆனல் சென்னேயில் 1,030 ரூபாய்க்குத் தான் விற்கிறது. நமக்கு கிட்டத்தட்ட 80% தேங்காய் அங்கேயிருந்து வருகிறது. ஆகவேதான் நம்மால் வேறு எதுவும் செய்யமுடியவில்லே.

மேலும் நமக்கு இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து தேங்காய் என்ணெய்க்கான கொப்பரை இறக்குமதி இதுவரை செய்யப்பட்டது. ஆனல் அது தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது. இப்போது கேரளாவில் கூட பல ஆலேகள் தேங்காய் கிடைக்காத காரணத்தால் மூடப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட காரணங்களால்தான் விலே உயர்ந்திருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 28]

DR. H. V. HANDE : Sir, are the Government aware of the fact that the prices of edible oils have increased enormously during the last 15 days or one month and consequently more people are going in for coconut oil. As a result of it the price of coconut oil also has increased enormously. So, may I know from the Hon. Minister the concrete and definite steps taken by this Government to reduce the spiralling prices of edibile oils and particularly the price of coconut oil?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலேவர் அவர்களே, என்ணெய் போன்ற பொருட்கள் வெளி மாநிலங்களிலிருந்து இங்கு வருவதால் அப்படிப்பட்ட பொருட்கள் மீது மாநில சர்க்கார் கட்டுப்பாடு விதிக்க முடியாது. அதற்கு கட்டுப்பாடு கொண்டு வந்தால் அதற்குப் பிறகு அந்தப் பொருட்களே கிடைக்கவில்லே என்ற நிலேமை ஏற்படும். ஆகவே, இதை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு மாநில சர்க்காரிடம் இல்லே, மத்திய சர்க்காரிடம் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்திப் :** தலேவர் அவர்களே, நம்முடைய மாகாணத்தில் தேங்காய் தட்டுப்பாடு இருப்பதால் அந்நிய மாநிலங்களிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்து தேங்காய் என்ணெய் உற்பத்தி செய்கிருர்கள். இந்த மாநிலத்திலிருந்து தேங்காய் என்ணெய் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, தேங்காய் உற்பத்தி இங்கேயே செய்ய தொழிற்சாலே ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலேவர் அவர்களே, தேங்காய் உற்பத்தி செய்ய தொழிற்சாலேகள் அமைக்க முடியாது. தேங்காய் என்ணெய் உற்பத்தி செய்யத்தான் தொழிற்சாலேகள் அமைக்க முடியும். ஆலேகள் குறைவால் தேங்காய் என்ணெய்க்குத் தட்டுப்பாடு இல்லே. கேரளாவில் தேங்காய் உற்பத்திக் குறைவால் இன்றைக்கு பல ஆலேகள் மூடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு தேங்காய் என்ணெய் உற்பத்தி செய்ய தேங்காய் கிடைக்காததால்தான் இப்படி மூடியிருக்கிருர்கள். நான் முன்பே

சொல்லியது போல இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு தேங்காய் வருவது நின்றிருக்கிறது. ஆகவே, ஆலைகள் குறைவால் தட்டுப்பாடு இல்லை, தேங்காய் உற்பத்திக் குறைவால் தான் இந்தத் தட்டுப்பாடு என்று சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இன்றைக்கு பெண்கள் தலைவாரி சீவி முடிக்கக் கூட தேங்காய் எண்ணெய் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பெண்களுக்காவது சப்சிடி முறையில் எண்ணெய் கிடைக்கச் செய்ய இந்த அரசு வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆகவே, அம்மையார் அவர்கள் சொல்கிறபோது எனக்குக் கூட கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆகவே, அம்மையார் அவர்களே இதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் தகுந்த நடவடிக்கை எடுக்கச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கேரளாவிலே ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் 10 ரூபாய் விற்கிறது, தமிழ்நாட்டிலே 11 ரூபாய் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது இங்கே 15 ரூபாய் கொடுத்தால்தான் ஒரு கிலோ எண்ணெய் கிடைக்கிறது. ஆகவே, இங்கே 11 ரூபாய்க்காவது கிடைக்க இந்த அரசு வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்த விலை எங்கே விற்கிறதென்று தெரியாது. ஆனால் நாகர்கோவில் போன்ற இடங்களிலிருந்து எண்ணெய் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, ஆங்காங்கே விலையில் வித்தியாசம் இருக்கலாம். நான் சொல்கிற விலை கூட்டுறவு மார்க்கெட்டுகளிலும், சூப்பர் மார்க்கட்டுகளிலும் விற்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து முன்பு கொப்பரை வந்து கொண்டிருந்தது. ஆகவே, தூத்துக்குடி போன்ற இடங்களில் எண்ணெய் உற்பத்தி செய்து மலிவான விலைக்குக் கிடைத்தது. இப்போது அதிகமான விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. தற்போது கேரளாவில் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதைப் போல இங்கேயும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.



## நடுவட்டத்தில் டைவர்ஷன் அணைத்திட்டம்

* 662 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுவட்டம், டைவர்ஷன் அணைக்கட்டின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்தத் திட்டம் எப்போது பூர்த்தி செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி இத்திட்டத்தை நிறைவேற்ற சுமார் ரூ. 2.50 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தும்மக்குண்டு ஊராட்சியில் மின் சக்தி வழங்கல்

* 663 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், தும்மக்குண்டு ஊராட்சி மன்றத்தை சேர்ந்த கர்டானா எஸ்டேட்டுக்கு 1971-ம் வருடம் ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும், இன்னமும் லைட்டு போடாமல் இருப்பதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கர்டானா எஸ்டேட்டு ஒரு தனிப்பட்டவரின் பட்டா நிலத்தில் இருக்கிறது. அதைப் பஞ்சாயத்துக்கு மாற்றிக் கொடுத்தால் மின் விசை கொடுக்கப்படும்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, அந்த ஊராட்சி மன்றமே தீர்மானம் நிறைவேற்றி, அங்குள்ள மக்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று 71-ம் ஆண்டே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் மின் இணைப்புச் செய்துதரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்த இடம் ஒரு தனிப்பட்டவருக்குச் சொந்தமானதாக இருக்கிறது. அதைப் பஞ்சாயத்துக்கு எழுதிக்கொடுத்தால் மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, அது தனியார் இடம் என்பது சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வந்து பார்த்தவர்களிடம் சொல்லி அனுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பல்லவன் போக்குவரத்துப் பேருந்துக்கு தாம்பரம் அருகில் ஏற்பட்ட விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து ஆகிய மூன்று பேர்களும்

'the disastrous accident that happened yesterday morning to Pallavan Transport Bus very near to Tambaram resulting in the death of seven passengers including a woman and causing serious injuries to 48 other passengers'.

என்ற பொருள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எந்தவகையில் இந்த சபையை ஒத்திவைத்து பேச வேண்டிய முக்கிய விஷயம் என்பதை அவர்களை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை இந்த அவையிலே விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்து ஓரிரு கருத்துக்களைக் கூறி, இது எப்படி விதி முறைக்கு உட்பட்டதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திடீரென்று, இந்த மன்றம் நடந்துகொண்டிருக்கிற நேரத்தில் ஒரு நிகழ்ச்சி அண்மையில் நடந்திருக்கிறது. அதன் காரணமாக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எழுந்திருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த விபத்தானது எப்படி ஏற்பட்டதென்று சொன்னால், ஒரு பல்லவன் போக்குவரத்து பஸ் முன்னே சென்று கொண்டிருந்தபோது அதற்குப் பின்னால் ஒரு லாரி வந்து மோதி அதிலே பலர் உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக அந்தப் பகுதியிலே அதிகமான வாகனங்கள் போக்குவரத்தால் நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. அதோடு அருகாமையிலே ரோட்டிலேயே லாரிகள் போன்ற வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. லாரிகளெல்லாம் ரோட்டின் நடுவிலே நிறுத்தப்பட்டிருப்பதால் போக்குவரத்திற்கு போதிய வசதியில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் ரோடுகளைச் செப்பனிடுவதற்காக இரு மருங்கிலும் பல தடைகளைவேறு போட்டு வைத்திருக்கிறார்கள்.

ஆகையால் இன்றைக்கு என்ன நிலைமை என்றால் கவனக்குறைவு காரணமாக பல உயிரிழப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் போன்றவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அதற்குமேலே பாதிக்கப்பட்டவர்கள் க்ரைம்ஸ் ட்ரிபூனல் கேஸ் போட்டாலும் அவர்களுக்கு போதிய பணம் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. அரசாங்கம் இதிலே போதிய கவனம் செலுத்தி, மேலும் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படாமல் போலீஸ் இலாகாவின் துணையோடு தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காரணங்களுக்காக சபையை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, the notice I have given is as follows :—

'Serious collision accident on 26th March 1974 morning near Conjeevaram involving Pallavan Transport Bus on Route 79-A and a lorry loaded with paddy bags without a permit resulting in the death of 7 persons and serious injuries to more than 30 and public concern regarding safety of passengers with smuggling allowed by lorries.'

(முற்பகல் 10-00)

சார், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்ததின் நோக்கமே நம்முடைய தமிழ்நாட்டிலே சில சாமான்கள் கடத்தப்படுகின்றன, என்பதைப் பலமுறைகள் சொல்லியிருக்கிறோம். கிடைத்திருக்கிற தகவலிலிருந்து பார்த்

னால் இந்த லாரியில் கொண்டு செல்லப்பட்ட அரிசியோ நெல்லோ லைசென்ஸ் இல்லாமல் கொண்டுசெல்லப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து அதிகாரிகளுடைய ஜீப் அந்த லாரியைத் துரத்திக்கொண்டு சென்றதாகவும், ஆகவே லாரி வெகு வேகமாகச் சென்று சர்க்காருடைய பஸ் 79எ யில் மோதியதாகவும் அதனால் விபத்து ஏற்பட்டதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

அதுவும் நடந்தது அதிகாலையிலே, இப்படிப்பட்ட லாரிகள் போவது கண்காணிக்கப்படவேண்டும் என்பது ஒன்று. நல்லமுறையிலே டிரைவர்கள், கண்டக்டர்கள் சென்றுகொண்டிருக்கின்ற நேரத்திலே 7 பேர்கள் இறந்திருக்கிறார்கள்.

ரயில்வேயில் இப்படி இறந்து விட்டால் அவர்களுக்கு 500 ரூபாயோ அல்லது 1,000 ரூபாயோ 24 மணி நேரத்திற்குள் கொடுத்துவிடுகிறார்கள். அதைப்போன்று நம்முடைய பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலேயும் கொண்டுவரவேண்டும்.

கண்டக்டர் இறந்திருக்கிறார், தொழிலாளி இறந்திருப்பதால் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணம் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது மட்டுமல்லாமல் அமைச்சர் அவர்களோ அல்லது யாரோ சென்று அவர்களுக்கு ஆறுதல் கொடுக்கலாம்.

பொதுப்பணியாற்றுகின்றவர்கள் தங்களுடைய தவறு இல்லாத முறையிலே நடந்து கொண்டிருக்கிறபோது அவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரணங்கள் அளிக்கப்படவேண்டும். அன்றைக்கே 7, 8 பேர்கள் திருப்பதியிலே ஏற்பட்ட பஸ் விபத்திலே இறந்து விட்டார்கள் என்ற செய்தியும் வந்திருக்கிறது. நல்ல முறையிலே டிரைவர்கள் பணியாற்றக்கூடிய நிலைமை இருந்தும் இப்படி விபத்து எந்தக் காரணத்தினால் ஏற்பட்டது என்பது தெளிவாக்கப்பட வேண்டும். அரசு இம்மாதிரியான விஷயங்களைப் பொறுத்தவரையில் எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளைப்பற்றி விவாதிப்பதற்காகவும் அந்த விவாதம் பயன்படுவதாக இருக்கும். அவர்களும் அரசின் சார்பிலே பல விவரங்களைக் கொடுக்கமுடியும்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதைப்போலே ரோடுகள் எல்லாம் நல்ல முறையிலே கண்காணிக்கப்படவேண்டும். குறுகிய ரோடுகளாக இருக்கிற காரணத்தினால் விபத்துகள் ஏற்படுவதால் அதற்கு என்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்வதைப்பற்றியும் விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த விபத்தானது உண்மையிலேயே வருத்தப்படக்கூடிய ஒன்றுதான். 26—3—1974 அன்று காலை பிராட்வேயிலிருந்து காஞ்சிபுரத்திற்கு ஒரு பேருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்றுகொண்டிருந்தது. ஆனால் எட்டரை மணியளவில் ஒரு லாரி சற்றும் எதிர்பாராத விதத்திலே ஓரகடம் சாலைசந்திப்பில் பேருந்தோடு மோதியது. அதன் விளைவாக இரண்டு வண்டிகளும் தலைகுப்புற விழுந்து அதன் காரணத்தினாலே அந்த இடத்திலேயே பஸ்ஸிலே பயணம் செய்த ஒரு பயணி இறந்துவிட்டார். நல்லவேளையாக அந்த நேரத்திலே வேறு ஒரு பேருந்து காஞ்சிபுரத்திலிருந்து 15 நிமிடங்களுக்குள்ளாக அவ்வழியே வந்துவிட்ட காரணத்தினால் மீதியிருக்கிற பயணிகளை ஏற்றிக்கொண்டு காஞ்சிபுரம் மருத்துவமனையிலே அவர்களைச் சேர்ப்பதற்கு உடனடியாக வாய்ப்பு ஏற்பட்டது.

இருந்தாலும், போகிற வழியில் படுகாயமுற்ற 6 பேர்கள் இறந்துவிட்டார்கள். மொத்தம் 7 பேர்கள் இறந்துவிட்டார்கள். 36 பேர்கள் காயமுற்றிருக்கிறார்கள். மொத்தம் இருந்த 48 பேர்களில் இன்பேஷன்ட் ஆக 37 பேர்களும் அவுட்பேஷன்ட்களாக 3 பேர்களும் இறந்தவர்கள் 7 பேரும் ஸ்ரீபெரும்புதூர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்ட ஒருவரையும் சேர்த்து 48 பேர்கள் பயணம் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் கூறியதைப்போல நேற்றைய தினம் அந்த விபத்து நடந்த இடத்திற்கு நானே சென்று பார்த்தேன். அதற்குப் பிறகு காஞ்சிபுரம் மருத்துவமனையிலே இருக்கின்ற பயணிகளைச் சந்தித்தோம். அந்த லாரியை ஓட்டிக்கொண்டு வந்தவர் காயமுற்று காஞ்சிபுரம் மருத்துவமனையிலே இருக்கிறார். லாரி பெர்மிட் இல்லாமல் நெல் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வந்ததாகவும் அதை ஒரு ஜீப் துரத்திக்கொண்டு வந்ததால் வேகமாக ஓட்டிக்கொண்டு வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன, ஆனால் அவையெல்லாம் உண்மையல்ல. லாரியில் நெல்லை ஏற்றிக்கொண்டு பெர்மிட்டோடு தான் வந்திருக்கிறார்கள். டிரைவர் சுயநினைவில் இல்லாததால் அவரிடமிருந்து எந்தவிதமான வாக்குமூலமும் பெறக்கூடிய நிலைமை இல்லை. விசாரித்துப் பார்த்ததில் லாரி டிரைவர் திருத்துறைப்பூண்டியிலிருந்து விடியவிடிய விழித்துக் கொண்டே லாரியை ஓட்டிக்கொண்டு வந்திருப்பார் என்று தெரிகிறது. அதிகாரிகளுடைய ஜீப்பைக்கண்டு மிரண்டு லாரியை ஓட்டிசெல்லவேண்டிய நிலைமை இல்லை என்று தெரிகிறது. டிரைவருடைய கவனக்குறைவினாலும், களைப்பினாலும் அது ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. போக்குவரத்து அதிகாரிகள்

வண்டிகளைப் பரிசோதித்துப் பார்த்ததில் மெக்கானிக்கல் டிபக்ட்ஸ், இயந்திரக் கோளாறுகள் எதுவும் இல்லை, ஆகவே கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டிருக்கிறது. என்பது ஓரளவுக்கு உண்மையென்றே தெரிகிறது. இருந்தாலும் மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்றுக்கொண்டு வருகின்ற அந்த டிரைவர் தன்னிலைக்கு வந்து எந்தக் காரணத்தினால் விபத்து ஏற்பட்டது என்று வாக்குமூலம் தருகிற நிலையில்தான் எது காரணம் என்று சொல்வதற்கு வழிவகை ஏற்படும். நேற்றைய தினம் மருத்துவமனையிலே சென்று பார்த்த நேரத்திலே அவர்களுக்கு மருத்துவ நிபுணர்கள் நல்லமுறையிலே சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே நான் சொன்னதைப்போல் உடனடியாக வேறு ஒரு பேருந்து வந்தது பொருத்தமாக இருந்தது. எதிர்க் கட்சித் தலைவர் கூறியதுபோல் அது ஒன்றும் நெரிசல் நிறைந்த சாலையல்ல. படப்பையிலிருந்து வாலாஜாபாத் போகிற சாலை. நெரிசல் மிகுந்த சாலை அல்ல. நான்கு மூலை ரோடிலே பஸ் போய்க்கொண்டிருந்தபோது அந்த லாரி டிரைவர் பார்த்திருந்தால் நன்றாகத் தெரிந்திருக்கும். பார்வையை மறைக்கக் கூடிய மரங்களோ அல்லது வீடுகளோ கூட அங்கே இல்லை, டீக்கடைதான் இருக்கிறது. ஆகவே பார்த்திருந்தால் பஸ் போவது தெரிந்திருக்கும். இதெல்லாம் அவருடைய நெக்ளிஜன்ஸ், கேர்லஸ்னெஸ் என்று சொல்வார்களே அதனால் தான் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இறந்துவிட்ட குடும்பங்களுக்கு இழப்பீடும் அதேபோல் காயமுற்றவர்களுக்கு நஷ்ட ஈடும் தரவேண்டுமென்று அதற்காக நீதிமன்றத்திற்குப் போய் அவர்கள் பெறவேண்டுமென்ற நிலைமையில்லாமல் போக்குவரத்துக் கழகமே டைரக்ட் நெகோஷியேஷன்ஸ் மூலமாக நேர்முக உடன்படிக்கை மூலமாக இறந்துவிட்டவர்களின் குடும்பத்திற்கும் காயமுற்றவர்களுக்கும் தகுந்த நிதி உதவி செய்யவேண்டுமென்று போக்குவரத்துக் கழக நிர்வாகத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த நடவடிக்கைகளிலே ஈடுபடுவார்கள்.

பொதுவாக இவ்வளவு பெரிய விபத்துக்களை தடுக்கவேண்டுமென்பதுதான் அரசினுடைய கருத்து ஆகும். குறிப்பாக லாரி டிரைவர்கள் பொறுத்தவரையில் 24 மணிநேரம் 48 மணிநேரம் என்று லாரிகளை ஓட்டிக்கொண்டிருப்பது உண்மையிலேயே பல கஷ்டங்களுக்கு ஆளாக்குகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.



காவல் துறையினரும், போக்குவரத்துத் துறையினரும் தீவிரமாக இதைக் கண்காணிக்கவேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஏற்கனவே மேற்கொண்டிருப்பதால் அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** லாரி டிரைவர் கவனக்குறைவினால்தான் ஏற்பட்டது என்று சொன்னார்கள். ஒரு மணியிலிருந்து 4 மணிவரை அவர்கள் ஓட்டக்கூடாது என்று தடை விதிக்கப்படுமா? அல்லது ஒரு லாரியிலே, இரண்டு டிரைவர்கள் போடவேண்டும் என்ற முறையை ஏற்படுத்துவார்களா? இப்படி விபத்துகள் ஏற்படுவதால் டிரைவர்களுடைய உயிருக்கு மட்டுமல்ல, எந்தவிதமான தவறு செய்யாத பாஸஞ்சர்களுக்கும் ஆபத்து ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பது அமைச்சர் அவர்களுடைய பதிலிலே தெளிவாக இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஜீப் தூக்கிக்கொண்டு போனதாக இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரெவின்யூ இலாகாவிலிருந்து விவரம் தெரிவிக்கப்பட்டதா அல்லது தற்போது நடந்த விசாரணையிலிருந்து தெரியவருகிறதா? நெல்லுக்குச் சொந்தக்காரர் யார் என்பதைப் பற்றிச் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஜீப்பைப் பொறுத்தவரையிலும் அது ஏற்கனவே அங்கே நின்றுகொண்டிருந்தது. 175 மூட்டை நெல்லை ஏற்றிக்கொண்டு அந்த லாரி ஸ்ரீபெரும்புதூரிலேயுள்ள ஆலைக்கு அரைப்பதற்குக் கொடுப்பதற்காக வந்திருக்கிறது.

போலீஸ் அதிகாரிகளும் நேற்று என்னுடன் இருந்தார்கள். நான் அவர்களைக் கேட்டேன். நெல் ஏற்றிக்கொண்டு போவதற்கான பர்மிட் அவர்கள் கையில் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஆகவே, முறையாகத்தான் ஏற்றிச் சென்றார்கள் என்பதிலே ஐயப்படத் தேவையில்லை.

லாரிகளை 4 மணி நேரம் இரவிலே ஓடுவதைத் தடை செய்யலாமா அல்லது இரண்டு டிரைவர்களைப் போடலாமா என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது எடுத்துக் குறிப்பிட்டார்கள். தடை செய்வதற்குப் பதிலாக இரண்டு டிரைவர்களைப் போடவேண்டுமென்ற கருத்து அரசின் ஆலோசனையில் இருந்து, அதற்கான நடவடிக்கைகளைப் பரிசீலிக்கிறோம், விரைவில் உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதற்காக அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதி இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(3) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(4) கவன ஈர்ப்பு.

(அ) உருது பயிற்சிப் பள்ளிகள் மூடப்பட்டதும் அதன் விளைவுகளும்.

THIRU M. A. LATHEEF : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the closure of all the Urdu Training Schools in the State resulting in the dislocation of Urdu teachers and trainees/students.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இம் மாநிலத்தில், கீழ்க்கண்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உருது மொழியில் ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

(1) அரசினர் உருது ஆசிரியர்ப் பயிற்சி நிறுவனம் (ஆண்கள்) அன்னை சாலை, சென்னை.

(2) அரசினர் ஹோபர்ட் இடைநிலை மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (பெண்கள்) இராயப்பேட்டை.

(3) வைகௌண்ட்ஸ் கோஷன் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் (பெண்கள்) திருச்சி.



வைகௌண்ட்ஸ் கோஷன் நிறுவனத்தில் இளநிலை ஆசிரியர்களுக்கான பயிற்சி மட்டும் அளிக்கப்பட்டு வந்தது. இளநிலை ஆசிரியர்கள் பயிற்சி இம் மாநிலத்தில் நிறுத்தப்பட்டவுடன் இந்நிறுவனத்திலும் இப்பயிற்சி வகுப்பு மூடப்பட்டுவிட்டது. மற்ற இரு நிறுவனங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் உருது மொழி பயிற்சி வகுப்பு (இடைநிலை) ஒன்று நடத்துவதற்கு அனுமதி வழங்கி வந்தது.

ஆயினும், உருது மொழி பயிற்சி வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வந்தது. 1969-70-ம் ஆண்டில் உருது மொழி பயிற்சி வகுப்பு நடத்த இயலாதபடி குறைவான விண்ணப்பங்களே வந்தன. ஆகவே, 1970-71-ம் ஆண்டில் முதலாமாண்டு பயிற்சி வகுப்பு இப்பள்ளிகளுக்கு அளிக்கப்படவே இல்லை. சிறுபான்மை மொழிகள் மூலம் பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் போதுமான அளவு விண்ணப்பம் செய்வதில்லை. மேலும் தகுதி வாய்ந்த உருதுமொழி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் புதிதாகப் பணியிலமர்த்தவும் அளவிற்குப் போதுமான அளவில் உள்ளனர். ஆகவே மேற்கூறிய பயிற்சி நிறுவனங்களில் உருது மொழி பயிற்சி வகுப்பு 1971 ஏப்ரல் முதல் திறக்க இயலாத நிலைமை ஏற்பட்டது.

உருது மொழி பயிற்சி ஆசிரியர்களுக்கான தேவை ஏற்பட்டால் அவ்வப் போது தற்போதுள்ள நிறுவனங்களிலேயே ஒன்று அல்லது இரண்டு உருது மொழிப் பயிற்சி வகுப்புகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், போதிய அளவிற்கு மாணவர்கள் உருது பயிற்சி பெறக்கூடிய அளவில் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் சென்னையிலே உள்ள பயிற்சிப் பள்ளிகளைப் பார்த்தால் உருது பேசுகின்றவர்கள் மிகவும் கணிசமாக இருக்கிறார்கள். திருவல்லிக்கேணி, சூளை, ஆயிரம் விளக்கு போன்ற பகுதிகளில் லட்சக்கணக்கான உருது பேசும் மாணவர்கள் இருக்கிறார்கள், அதேபோல் வடார்க்காடு, திருச்சி, மதுரை மாவட்டங்களில் உருது பேசும் மாணவர்கள் இருக்கிறார்கள்.

திடீரென்று இம்மாதிரி மூடிவிட்டதால் எங்களுக்கு முறையீடுகள் வந்திருக்கின்றன. பயிற்சிப் பள்ளியை மூடிவிடுவதால் உருது ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும், பிறகு இல்லாமல் போய்விடுவார்கள். அதனால் உருது படிக்கும் மாணவர்களுக்கு வாய்ப்பு இருக்காது என்பதால், இதிலே கணிசமாக வருவதில்லை என்பதில் அரசு எந்தக் கணக்கில் வைத்திருக்கிறது, அந்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டு, சிறுபான்மை மொழியினருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் பயிற்சிப் பள்ளி உடனடியாகத் திறக்கப்படுமா, ஒன்றே ஒன்றையாவது திறப்பதற்கு அரசு முன்வரவேண்டும், அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே உருது மொழி பயிற்சி வகுப்பிலே சேர விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது என்று சொன்னேனே தவிர, பள்ளிகளிலே உருது படிக்கின்ற மாணவர்கள் குறைவாக வருகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. மேலும் உருது மொழி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு ஏற்படாமல் இருக்கிறார்கள் என்ற கருத்து இருக்கிறது. இப்பொழுதேகூட தேவைப்படும் அளவிற்கு ஆசிரியர்கள் இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டால் இரண்டு பள்ளிகளிலேயும் வைப்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நெருக்கடி ஏற்பட்டால் மறுபடியும் திறக்க இருக்கிறதே தவிர, அறவே இல்லையென்று மூடவில்லை.

இப்பொழுதே வெளியிலே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு பெறாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலை கிடைத்து, இந்த ஆண்டு கணக்கிடும்பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் கணக்கிடும் பொழுது உருது மொழி பயிற்சி பெற்றவர்கள் யாரும் இல்லை, அவர்கள் தேவைப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுவது போன்ற நிலை இருந்தால் வருகிற ஆண்டில் இரண்டு பள்ளிகளிலும் உருது மொழிப் பயிற்சிக்கு இடம் ஒதுக்குவதில் ஆட்சேபணையில்லை. அரசு ஆராய்ந்து தக்க முடிவெடுக்கும்.

**(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் அரசுடைமையாக்கப்பட்ட சில கிராமங்களில் பட்டா விசாரணை நடத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. சங்குமுத்து தேவர் அவர்கள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்கா சிவந்திபுரம், சிவந்தி ஈசானமடம் ஆகிய கிராமங்கள் அரசுடைமையானதை சுப்ரீம் கோர்ட்டு பல ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றுக்கொண்ட பிறகும் இதுவரை பட்டா விசாரணை நடத்த அரசு நடவடிக்கை எடுக்காதது குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவந்திபுரம், சிவந்தி ஈசான மடம் ஆகிய இரண்டு எஸ்டேட்டுகளும், 1963-ஆம் ஆண்டு 26-வது சட்டத்தின்கீழ், ஏற்கனவேயுள்ள இனாம் எஸ்டேட்டுகளாக அறிவிக்கப்பட்டு, 15-4-1965-ஆம் நாள் அன்று அரசால் மேற்கொள்ளப்பட்டன.

இந்த எஸ்டேட்டுகள் திருவாவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்தவை. இச்சட்டத்தின் செல்திறனையும் மற்றும் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பின் செல்திறனையும் எதிர்த்து இந்த ஆதினம் உயர்நீதிமன்றத்தில் 3222/1966-ஆம் எண் ரிட் மனு தாக்கல் செய்து, தடை உத்திரவும் பெற்றது. இந்தத் தடை உத்தரவு காரணமாக, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை.

உயர்நீதிமன்றம், 20-7-1966-ஆம் நாளன்று இந்த ரிட் மனுவைத் தள்ளுபடி செய்தது. இந்த ஆதினம், 3-2-1967-ஆம் நாளிட்ட S.C.P 389/66-ல் சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்வதற்கான அனுமதியும் மேல் முறையீடு செய்யும் வரையில் தடை உத்தரவும் வாங்கியது C.A.No. 673/67-ல் தலைமை உயர் நீதிமன்றத்திடமிருந்து தடை உத்தரவும் பெற்றது. இந்தியத் தலைமை உயர் நீதிமன்றம் 18-11-1970-ஆம் நாளிட்ட பொதுத் தீர்ப்பு ஒன்றில் இந்த மேல் முறையீட்டையும் ஏனைய மேல் முறையீடுகளையும் தள்ளுபடி செய்தது.

மேல் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டதன் விளைவாக இந்த எஸ்டேட்டுகள் 18-11-1970-ஆம் நாளிலிருந்து மாநில அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டன. அந்த நாளிலிருந்து இந்த எஸ்டேட்டுகள் அரசின் இடையீடற்ற உடைமையிலும் நிர்வாகத்தின் கீழும் இருந்து வந்தன.

ரிட் மனுக்களையும், சிவில் மேல்முறையீடுகளையும் தள்ளுபடி செய்கையில் இந்த எஸ்டேட்டுகளின் நில உரிமை முறைபற்றி நீதிமன்றம் எதுவும் குறிப்பிடாமல் விட்டுவிட்டது.

1963-ஆம் ஆண்டு 31-ஆம் சட்டத்தின்படி இந்த எஸ்டேட்டுகளின் நில உரிமை முறைபற்றி ஆட்சேபிக்கலாமென நில உடைமையாளர்களுக்கு எடுத்துச்சொல்லப்பட்டால், அவர்களே அதை பொருத்தமான அதிகார மன்றத்தின்முன் ஆட்சேபித்துக் கொள்ளலாமெனத் தலைமை உயர் நீதிமன்றம் சொல்லிவிட்டது.

இதனை அடுத்து, இந்த ஆதீனம், இந்த எஸ்டேட்டுகளின் நில உரிமை முறைபற்றி ஓர் அறிவிப்பு வெளியிடுமாறு கோரி, 1963-ஆம் ஆண்டு 31-ஆவது சட்டத்தைச் சேர்ந்த 5 (1) ஆவது பிரிவின்கீழ் மதுரை நிலவரி ஏற்பாட்டு அதிகாரிக்கு விண்ணப்பித்தது. மதுரை, நிலவரி ஏற்பாடு அதிகாரி, 15—11—1971-ஆம் நாளிட்ட S.R. 2/67, 1/67,-ம் என் ஆணைகளில் இந்தக் கிராமங்களை ஏற்கனவேயுள்ள இனும் எஸ்டேட்டுகளாக அறிவித்தார்.

இந்த ஆணைகளால் பாதிக்கப்பட்ட ஆதீனம், ரிவிஷன் அப்பீல் 165/71, 166/71-ல் இந்த எஸ்டேட்டுகள் சிறு இனும்கள் எனக் கூறி திருநெல்வேலி, இனும்கள் ஒழிப்பு நடுவர் மன்றத்தின் முன் மேல்முறையீடு செய்தது. அவை குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. முறையே 270/71, 269-71-ஆம் என்னுள்ள இடை மனுக்கள் பேரில் நடுவர் மன்ற 4—3—1972, 6---4---1972-ஆம் நாளிட்ட உத்திரவுகளில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட இடைக்காலத் தடை, துறையினால் எதிர்க்கப்பட்டபோதிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், மேற்கொண்டு நிலவரி ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை.

மேற்படி தடை ஆணையின் காரணமாக மேற்படி சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதும் மேற்கொண்டும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் தேவையற்ற முறையில் தடை செய்யப்பட்டுள்ளன என்றும், குடியானவர்களும் குத்தகைதாரர்களும் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் காரணங்காட்டி, மேல்முறையீடுகளை உடனடியாக விசாரணை செய்து முடிவு செய்ய நடுவர் மன்றத்தில் சிறப்பு மனுக்களைத் தாக்கல் செய்யுமாறு திருநெல்வேலி மாவட்ட வருவாய்த்துறை, அதிகாரிக்கு வருவாய் வாரியம் கட்டளையிட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி இந்தப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே முன்பு நேரில் சென்று கவனிக்க வேண்டுமென்று இருந்தார்கள். இப்போது சொல்லியிருக்கும் கருத்துக்களின் அடிப்படையில் அடுத்த வாரம் நான் திருநெல்வேலிக்கு வரும்போது நேரடியாகப் பரிசிலித்து உரிய நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. எட்மன்ட் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.



**திரு. கே. டி. கே. தங்கமணி** : கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒரு நாளைக்கு இரண்டு தீர்மானங்கள்தான் கொண்டு வரலாம் என்றிருக்கிறது. அந்த விதியைத் தளர்த்தினால்தான் அதற்கு மேற்கொண்டு தீர்மானங்களைக் கொண்டு வரலாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஏற்கனவே அதற்கான தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டது.

**(இ) உணவு தானியங்களின் விலையும் கடைகளிலும் உணவகங்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலையும் அளவுக்கு மீறி உயர்ந்திருப்பது குறித்து**

THIRU G. R. EDMUND : Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the recent abnormal rise in price of foodgrains and prepared food stuffs sold at shops and hotels in Madras City causing hardships to the people.

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி**: இன்றியமையாப் பொருள்கள் அனைத்தின் விலைகளும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளன. உணவுப் பண்டங்களின் விலைமட்டுமின்றி நுகர்பொருள்கள், ஏனைய தயாரிப்புப் பண்டங்கள் முதலியவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளன. நாடு முழுவதிலுமே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், நாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ள பணவீக்கத்தின் பிடியிலிருந்து தமிழ்நாடும் விடுபட இயலாது. எந்த அளவுக்குச் செலவு செய்ய வேண்டும், அதை எந்த முறையில் செய்ய வேண்டும் என்பன குறித்து சரியான கட்டுதிட்டங்கள் இல்லாமையும், மக்களிடையே பணப்புழக்கம் பெருகிவருவதுமே இந்த விலையுயர்வுக்கு முக்கிய காரணமாகும். இவற்றுக்கெல்லாம் மத்திய அரசே பொறுப்பேற்க வேண்டும். மத்திய அரசு வரிச்சுமையை அதிகமாக்கியுள்ள போதிலும் 1968 முதல் 1973 வரை மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தில் காட்டி வந்துள்ள நிதிப்பற்றுக்குறை ரூ. 2,500 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்பதே இதற்குச் சான்றாகும். இவ்வாறு நிதிப்பற்றுக்குறை ஏற்பட்டுள்ள காரணத்தால் ரூ. 2,100 கோடி நிதி திரட்ட வேண்டியிருப்பதற்கு மாறாக தற்போது ரூ. 3,222 கோடி அளவுக்கு மத்திய அரசு நிதி திரட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்களிடையே இருந்துவரும் பணப்புழக்கம் 1970-71-ல் 12 சதவிதமாகவும், 1971-72-ல் 14 சதவிதமாகவும், 1972-73-ல் சுமார் 16 சதவித

மாகவும் உயர்ந்துள்ளது. நடப்பு நிதியாண்டில் பணப்புழக்கம் கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிகமாக இருக்கலாமென்று இப்போக்கிலிருந்து தெரிய வருகிறது. உற்பத்தி, குறிப்பிட்டுள்ள அளவுக்கே உயர்ந்துள்ளது. ஆனால், பணப்புழக்கமோ மிக அதிகமாக உயர்ந்துள்ளது. இந்நிலையில் விலை உயர்வைக் கட்டுப்படுத்த இயலாது, மோசமாகிவரும் இப்போக்கைத் தடுத்து நிறுத்த மாநில அரசு செய்வதற்கு ஒன்றுமில்லை.

பெருகி வரும் பற்றாக்குறையும் உயர்ந்துவரும் விலைவாசியும் நாட்டில் இருண்டதோர் சூழ்நிலையை உருவாக்கியுள்ள இச்சமயத்தில், தற்போதுள்ள விலைகளிலாவது உணவுப் பொருள்களை வழங்க முடிகிறதே என்ற அளவில் தமிழ்நாடு மன நிறைவு பெறலாம். இவ்வகையில் நாம் கொடுக்கும் விலை அதிகமானது என்று கூற முடியாது. மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களில் உள்ள அங்காடிகளில் அரிசி, கோதுமை, பயறுவகைகள், சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருள்கள் பதுக்கப்பட்டுவிட்டன என்றும், அதன் விளைவாக, பெரும் போராட்டங்களும் வன்முறைகளும் தலைவிரித்தாடின என்றும் நாம் செய்தித்தாள்களில் படித்து வருகிறோம். பிற வட இந்திய மாநிலங்களில் நிலைமை மகிழ்ச்சிகரமாக உள்ளது என்று கூறுவதற்கில்லை. தமிழ்நாட்டில் 1972, டிசம்பரில் 219 ஆக இருந்த உணவுக் குறியீட்டு எண், 1973, டிசம்பரில் 241 ஆக உயர்ந்துள்ளது. இந்தக் கூடுதல் அளவு 22 புள்ளிகளாகும். இக்கால அளவில், தேசிய அளவில் உணவுக் குறியீட்டு எண் 61 புள்ளிகள் உயர்ந்திருந்தது. தானியங்களின் விலை 15.5 சதவீதம் உயர்ந்தது. சமையல் எண்ணெய்க்கு நாம் பிற மாநிலங்களையே நம்பியிருக்கிறோம். இந்த எண்ணெய்களின் விலையோ 18 சதவித அளவுக்கு உயர்ந்துள்ளது. உணவுப்பொருள்களின் விலை எல்லா வகையிலும் உயர்ந்துள்ள போதிலும் தமிழ்நாட்டில் அரிசி மொத்த விற்பனை விலையும் சில்லறை விற்பனை விலையும் நமது நாட்டில் மற்றெல்லா மாநிலங்களைவிட மலிவாகவே உள்ளது. சிறு தானியங்களைப் பொறுத்தவரையில், நியாயமான அளவில் விலைகள் ஏறி இறங்கிவரும் ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும்.

ஏனைய பொருள்களைக் காட்டிலும் உணவுப் பொருள்களின் விலை அதிகமாக உயர்ந்துள்ளது. உணவுப் பொருள்களின் விலை உயர்வு முற்றிலும் அநியாயமானதென்று கூற முடியாது. ஏனெனில், நவீன வேளாண்மை முறைகளினால் விதைகள், உரம், பூச்சிக்கொல்லி மருந்து, பாசன வசதிகள் ஆகியவற்றிற்கு செலவு பெருகி வருகிறது. உழவர், தனது விளைபொருளுக்கு ஆதாயமுள்ள விலையைப் பெற வேண்டும். மேலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில்





நெல் கொள்முதல் விலை சுமார் 36 சதவீதம் உயர்ந்ததுள்ளது. நெல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கவென்றே இது வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கு நிகராக நெல், அரிசி சிறுதானியங்கள் ஆகியவற்றின் விலை வெளி அங்காடியிலும் உயர்ந்துள்ளது, முற்றிலும் இயற்கையே. உற்பத்தியாளர்களுக்கே பெரும்பகுதி பயன் கிட்டுகின்றது என்பதால், உணவு தானிய விலைகள் உயர்ந்துள்ளது குறித்து வெறுப்படைவதில் நியாயம் ஏதுமில்லை. பொருட்கள் அனைத்தின் விலைகளில் பொதுவான உயர்வு காணப்படுகையில் உணவு தானியங்களின் விலை மட்டும் இறங்குமுகமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கமுடியாது என்றாலும் உணவு விலைகளைக் குறைப்பதற்கு முயற்சி செய்வதும் நியாயமற்றதாகும்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரை 1973 நவம்பரிலிருந்து 1974 பிப்ரவரி வரை அரிசி விலை சுமார் 23 சதவீதம் உயர்ந்துள்ளது. இன்றியமையாப் பொருட்களின் விலைகள் கூடுதலானது, நெல் கொள்முதல் விலைகள் ஏறுமுகமாக இருந்தது ஆகியவை இதற்குப் பெரும்பாலும் காரணமாக இருந்தாலும் வறட்சி நிலைமை காரணமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் முக்கிய நெற்பயிர் குறைவாக விளைந்ததும், செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து சென்னை மாநகருக்கு வரும் நெல்லின் அளவு குறைவாக உள்ளதும் இதற்கான சிறப்புக் காரணங்களாகும். செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து சென்னை மாநகருக்கு வரும் நெல்லின் அளவில் ஏற்பட்ட குறைவை ஈடுசெய்யும் பொருட்டு, கடந்த ஆண்டில் கொண்டு வரப்பட்ட அளவைக் காட்டிலும் இருமடங்கு நெல்லை சென்னை மாநகருக்குக் கொண்டுவர சென்னை மாநகரத்திலுள்ள உரிமம் பெற்ற வணிகர்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. உண்மையில் சொல்லப்போனால், கடந்த ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து சென்னை மாநகருக்கு 5,199 டன் நெல் கொண்டு வர அனுமதிக்கப்பட்டிருக்க, 1974-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் நாள் வரை 10,450 டன் நெல் கொண்டு வர அனுமதிக்கப்பட்டது. ரயில்வே சரக்கு வண்டிகள் கிடைப்பதில் உள்ள இடர்களினால், வட இந்தியாவிலிருந்து கொண்டைக்கடலை, கடலைப்பருப்பு ஆகியவை குறைவாக வந்ததன் காரணமாக அவற்றின் விலை உயர்ந்துள்ளது. சமையல் எண்ணெய், மிளகாய், புளி ஆகியவற்றின் விலை மேற்சொன்ன காரணங்களினால் மிகவும் உயர்ந்துள்ளது. சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ரூ. 300-ம் அதற்குக் குறைவாகவும் ஊதியம் பெறுபவர்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் அரிசி வழங்கும் திட்டத்தை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

[மன்னை திரு. ப. நாராயணசாமி] [1974 மார்ச் 28

கடந்த ஆண்டில் ஓட்டல்களில் நிலவிய உணவுப் பொருள்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டில் சில ஓட்டல்களில் உணவுப் பொருள்களின் விலை சுமார் 5 முதல் 10 காசு வரை உயர்ந்துள்ளது. தானிய வகைகள், சமையல் எண்ணெய், காப்பிக் கொட்டை ஆகியவற்றின் விலைகள் உயர்ந்ததும் பணியாளர் அமைப்பு, வரி ஆகியவற்றின் செலவுவகைகளில் பொதுவாக உயர்வு காணப்பட்டதும் இந்த விலை உயர்வுக்குக் காரணமாகும். 1973 ஆகஸ்டில் தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளை வரவழைத்து, சென்னை போன்ற பெரிய நகரங்களில் உள்ள ஓட்டல்களில் உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் குறித்து நான் வலியுறுத்தினேன். ஓட்டல் உரிமையாளர்களுக்கு நியாய விலைகளில் கோதுமைப் பொருட்களை வழங்குவதன் மூலம் அரசு அவர்களுக்கு உதவி அளிப்பதாக நான் அப்போது சுட்டிக்காட்டினேன். உணவுப் பண்டங்களின் விலைகளை உயர்த்தாமலிருக்க ஓட்டல் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டனர். உணவுப் பண்டங்களின் விலைகளை ஓட்டல்கள் உயர்த்தியுள்ளன என்று 1974 ஜனவரியில் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிக்கைகளை யொட்டி 1974 பிப்ரவரி முதல் வாரத்தில் சென்னை ஓட்டல் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளை நான் மீண்டும் சந்தித்துப் பேசினேன். உணவுப் பொருட்களின் விலைகள் எல்லா வகையிலும் உயர்ந்துள்ளபோதிலும், மாநகரத்திலுள்ள பெரும்பாலான ஓட்டல்கள், மக்கள் பெரிதும் விரும்பக்கூடிய உணவு வகைகளின் விலைகளை ஆகஸ்டு 73-க்குப்பின் உயர்த்தவில்லையென்றும், சுமார் 10 சதவீத ஓட்டல்கள் மட்டுமே சில உணவு வகைகளின் விலைகளை ஓரளவு உயர்த்தியதென்றும் ஓட்டல் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். அவ்வாறு உணவுப் பண்டங்களின் விலைகளை உயர்த்தியுள்ள ஓட்டல் உரிமையாளர்கள் அப்பொருட்களின் விலையை மீண்டும் பழைய விலைக்குக் குறைக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளவும் சங்கம் ஒப்புக் கொண்டது.

(முற்பகல் 10-30)

THIRUMATHI T. N. ANANDANAYAKI : How long will the Minister take? He is taking such a long time to read his statement.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : அம்மையார் அவர்களை ஏதோ பாதிக்கிறது என்று கருதுகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : If the reply is pretty long, it can be laid on the table of the House and an advace copy given to the member concerned.



1974 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீண்ட அறிக்கைகளாக இருந்தால் அச்சிட்டு மேசையில் வைத்துவிடுவதுதான் மரபு. ஆகவே, நீண்ட அறிக்கைகளாக இருப்பதை அச்சடித்து மேசையில் வைத்துவிடுமாறு மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** விளக்கிச் சொன்னாலும் பிடிக்கவில்லை, சுருக்கிவிட்டாலும் பிடிக்கவில்லை.

ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைவாசி குறித்து அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. எனினும் சில ஓட்டல்களில் உணவுப் பொருட்களின் விலை ஓரளவு உயர்த்தப்பட்டிருந்தபோதிலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் பொதுவாக மாநகரத்திலும், வெளியூர்களிலுமுள்ள ஓட்டல்களில் உணவுப் பொருட்களின் விலைகள் நியாயமான அளவிலேயே உள்ளன என்பதை ஈண்டு வலியுறுத்த வேண்டும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பொதுவாக உணவுப்பொருள்களின் உற்பத்தி பெருகி வருகிற இந்த நேரத்தில் கூட உணவுப் பண்டங்களின் விலைகள் 1967-ல் இருந்ததை விடக் கூடுதலாக இன்றையதினம் ஏறியிருக்கிறது. 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர்ந்த நேரத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையின் மீது விளக்கங்கள் கேளுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பேரறிஞர் அண்ணா அவர்கள் படி அரிசித் திட்டத்தை சென்னையிலும், கோவையிலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையின்மீது விளக்கம் பெற ஒன்றிரண்டு கேள்விகள் போடலாமே தவிர 1967-ல் இருந்து 74 வரை ஏழு ஆண்டுக் காலத்திற்கு வரக்கூடாது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பேரறிஞர் அண்ணா அவர்கள்கொண்டு வந்த படி அரிசித் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கேட்டதற்கு பதில் அளித்திருக்கிறேன். அவர்கள் ஏழு வருடக் கதையைச் சொல்லச் சொல்கிறார்கள். அதற்கு ஒரு நீண்ட அறிக்கையை மீண்டும் தர முடியாத நிலை இருப்பதால்—அது வேறு பிரச்னை—இப்போது பண்டங்கள் பற்றிய விளக்கங்களைச் சொல்லிவிட்டேன்.

## (5) 1973-74-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை மீதான பொது விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கு அடுத்தபடியாக இறுதித்துணை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் இருக்கிறது. இதற்கு நான்கு பேர்கள் பேசப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். திரு. காளிமுத்து, திரு. லத்தீப், திருமதி அனந்தநாயகி, திருமதி ஜோதி வெங்கடாசலம் ஆகியோர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். 11-30 மணிக்குள் இதை நாம் முடித்துவிடவேண்டும். திரு. காளிமுத்து.

**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் சம்மதத்தைப் பெறுவதற்காக நமது முதல் அமைச்சர் அவர்கள் முன் வைத்திருக்கிற துணை மானியக் கோரிக்கையின் தொடர்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையினை வரிக்கு வரி பாராட்டவும், வாயாறப் புகழவும், ஆம் என்று பெருமிதத்துடன் கூறி அப்படியே ஏற்றுக்கொள்வதற்கும் உரிய பெரும்பான்மையினை ஆளும் கட்சி பெற்றிருப்பதை நான் மறந்து விடவில்லை.

ஆனால், இந்தப் பெருமையைப் பிரதிபலித்துக் காட்டக்கூடிய கண்ணாடியாக இன்று மக்கள் மன்றம் இல்லை என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அரசாங்கம் என்பது ஆகாயத்திலிருந்து இயங்குவதல்ல. அதற்கு அடிப்படை பொதுமக்களுடைய நம்பிக்கைதான் என்பது உண்மையானால் அந்த அடிப்படை கலகலத்துப் போன நிலையில் இன்று இந்த அரசு இருக்கிறது.

ஆளும் கட்சி என்ற தேருக்கு அச்சாணி பொதுமக்களுடைய ஆதரவு என்றால் அச்சாணி இல்லாத தேராக இந்த அரசு ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இந்த மானியக் கோரிக்கையில் கோடிக்கணக்கான பணம் கோரி சமூகப் பணிகளுக்காக நாம் செலவிடுவதற்காகத் திட்டமிடுகிறோம். ஆனால் இவ்வளவு பணம் செலவிடப்பட்டதற்குப் பிறகும் பலர் கை மாறிய பனிக் கட்டித் துண்டாகப் பயனற்றுப் போய்விட்டது என்று கருதக்கூடிய அளவிற்கு சமூகத்தில் உள்ள அவலநிலையை நம்மால் அகற்ற முடியவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது குறிப்பிட்டார்கள். எவ்வளவு மருத்துவ மனைகள் கட்டுகிறோம், எவ்வளவு பாலங்கள் அமைக்கிறோம், எவ்வளவு சாலைகள் போடுகிறோம் என்பதில் நம் சாதனை



இல்லை. சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கிற ஏழை எளியோர் உயர்வு பெற வேண்டும், அவர்களுக்கு சமூக நீதி வழங்கப்படவேண்டும், அதில்தான் வெற்றி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு பார்த்தால் எந்த அளவிற்கு அந்த முயற்சியில் இந்த அரசு வென்றிருக்கிறது என்பதை இதயசுத்தியோடு எண்ணிப்பார்க்கவேண்டும்.

செங்குத்தாக உயர்கிற விலைவாசி, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்ற இப்பிரச்சனைகளையெல்லாம் தீர்ப்பதற்கு மைய அரசுக்கும் பங்கு இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த அரசின் வரையறைக்குட்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த அரசே நேசிக்கிற, ஏற்றுக்கொள்கிற கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு விரைவாகச் செயல்பட்டிருக்கிறார்களா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

1968 ஜனவரித் திங்கள் 23-ம் தேதி, மொழிக் கிளர்ச்சி மீண்டும் கொழுந்துவிட்டெறிந்த நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பேரவையை அவசர அவசரமாகக் கூட்டினார்கள். இந்தியினுடைய வருகைக்கு இரு மொழித் திட்டம் என்ற இரட்டைத் தாழ்ப்பாள் அமைத்து தமிழ் வளர்ச்சி தங்குதடையின்றி பெறும் நிலையை உருவாக்கிக் காட்டினார்கள். அப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். ஐந்தாண்டுகளுக்குள் தமிழ் பாடமொழியாகவும், பயிற்சிமொழியாகவும் ஆக்கவும், நீதிமன்ற மொழியாக ஆக்கவும், நிர்வாக மொழியாக ஆக்கவும் தீர்மானிக்கிறோம் என்று அவர்கள் அன்றையதினம் அறிவித்தார்கள்.

ஐந்தாண்டுக் கால எல்லையை இப்போது நாம் கடந்திருக்கிறோம். அன்னைத் தமிழ் நீதிமன்ற மொழியாக ஆகியிருக்கிறதா, நிர்வாக மொழியாக ஆகியிருக்கிறதா, பயிற்சி மொழியாக முழுமையாக ஆகியிருக்கிறதா என்பதை நாம் எண்ணிப் பார்த்திடவேண்டும். பயிற்சி மொழியாக பாதிக் கிணறு தாண்டினோம் என்ற பரிதாப நிலையில் இன்றைக்கு அரசு இருக்கிறது.

தமிழ்த் தாயை தலைகவிழ்ந்த நிலையில் அமர்த்தி வைத்திருக்கிறது அரசு. பந்தயக் குதிரை போல் மற்றச் செயல்களில் எல்லாம் செயல்படுகிறோம் என்று பெருமிதத்தோடு அறிவிக்கிற அரசு பயிற்சி மொழித் திட்டத்தைப் பொறுத்த வரையில், தமிழ் ஏற்றம் பெறாத அளவிற்கு, நொண்டிக் குதிரையாக மாறியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் அறிவு என்பதும் தமிழ் உணர்ச்சி என்பதும் ஒரு கட்சியின் எல்லைக் கோட்டிற்குள் மட்டும் அடங்குகிற ஒன்றாக அருள்கூர்ந்து ஆளும் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர்கள் கருதக் கூடாது. ஒருகாலத்தில் தமிழ் உணர்ச்சி உருவாக இன்று ஆளும் கட்சி முன் வரிசைகளில் இருக்கிற தலைவர்கள் பெரும் பாடு பட்டார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. தமிழ்நாடு அதற்கு நன்றிக் கடனாக ஆட்சிப் பொறுப்பில் அவர்களை அமர்த்தி வைத்திருக்கிறது என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆனால் இன்று அன்னைத் தமிழ் அரியாசனத்திலமர அண்ணா அவர்கள் உருவாக்கிய ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெறவில்லை. தமிழ் மொழி ஏற்றம் பெறச் செய்கிற முயற்சியில் நாம் தளர்ந்திருக்கிறோம், சோர்ந்திருக்கிறோம் என்பதை ஆட்சியில் இருக்கிற அருமைத் தலைவர்களுக்குத் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் மொழி வளருவதற்கு தக்க திட்டங்களைப் போடாமல் இருக்கிறது இந்த அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.

பாஞ்சாலங்குறிச்சியில் கோட்டை அமைக்கப் போகிறோம். ஆனால் பாஞ்சாலங்குறிச்சியின் வீர சரித்திரம் என்ற நூலை எழுதிய ஜகவீர பாண்டியனை மறந்து விட்டார்கள். அவர்கள் திருக்குறளுக்கு பத்தாயிரம் பக்கங்களில் உரை எழுதி வைத்திருக்கிறார்கள். அதை வெளியிட முடியாமல் அவர்களது குடும்பம் வறுமையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

எழுபதாவது வயதிலும் இன்னும் சங்க இலக்கியத்திற்கு உரை எழுதிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார் ஔவை துரைசாமி பிள்ளையவர்கள். அவர்கள் தாளாத வறுமை நிலையில் தத்தளித்துக்கொண்டிருந்தும் தமிழ் மொழிதான் உலக மொழிகளுக்குத் தாய் என்று ஆணித்தரமான வாதங்களை எடுத்துச் சொல்லி அறிவுலகம் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவநேயப் பாவணரை இந்த அரசு எந்த அளவிற்கு உற்சாகப்படுத்தியிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

எதிர்க் கட்சிகளை நோக்கி வீசுகிற ஆயுதமாக தமிழ் மொழி உணர்ச்சியை மேலும் மேலும் பயன்படுத்த வேண்டாம். ஒரு கட்சி ஆட்சி அமைப்பது தான் ஜனநாயக மரபு. ஆனால் ஆட்சி ஒரு கட்சியை நடத்திக் கொண்டுவரும் ஒரு அவலத்தை தமிழ்நாடுதான் சந்தித்துக்கொண்டிருக்கிறது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் காவல் துறை நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று சுட்டிக் காட்டுகிறபோது நம் முதல் அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.





முதல் அமைச்சர் அவர்களுக்குத் தமிழில் இருக்கிற சொல்லாட்சியை நினைத்து வியக்கலாமே தவிர உண்மையில் நல்லாட்சி நடைபெறவில்லை யென்பதை மனச்சாட்சியோடு எண்ணிப் பார்க்கவேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பலவிடங்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் வேட்டையாடப்படுகிறார்கள்.

சாதாரணக் கூலிவேலை செய்பவர்கள் எதிர்க் கட்சியோடு இணைந்திருக்கிறார்கள் என்ற குற்றத்திற்காகப் பலபேர்கள் வழக்குகளில் மாட்டிவைக்கப்பட்டு கோர்ட்டுகளுக்கு அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆட்சி செய்யக்கூடிய சாதனைகள், செயல் திட்டங்கள் ஆட்சி புரிகிற கட்சியினருக்குத்தான், அவர்கள் தான் அனுபவிக்க வேண்டும் என்ற கருத்தை கீழே இருக்கக்கூடியவர்கள் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

பிப்ரவரி 8, 1974-ல் வெளிவந்த நாத்திகம் பத்திரிகையின் நான்காவது பக்கத்தில் கட்டம் கட்டி ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். “குடிசையில் குடியிருந்தவனுக்கு நாம் நான்காவது மாடிக் கட்டிடம் கட்டி வைத்தோம், அவன் மேலே உட்கார்ந்து கொண்டு எம்.ஜி.ஆர். வாழ்க” என்று சொல்கிறான்.

“கண்ணொளி திட்டத்தின் மூலமாக கண்பார்வை இழந்தவர்களுக்கு கண் சிகிச்சை அளிக்கப்பட்டு பார்வை கிடைத்தவுடன் அவன் எம்.ஜி.ஆர். படம் பார்க்கப்போகிறான், அவன் கண்ணைப் பறித்தால் என்ன?” என்று எழுதுகிறான்.

நிரந்தரமாக ஆளும் கட்சிக்காரர்கள் என்று சில பேர் இருக்கிறார்கள். எந்தக் கட்சி ஆளும் கட்சியாக வந்தாலும் அவர்களோடு இணைந்து கொண்டு தங்களுடைய எழுத்தாலும், பேச்சாலும் எதிர்க் கட்சிகளைத் தாக்குவது, அடுத்து வரும் ஆளும் கட்சிக்கு பிறகு தாவுவது என்ற முறையில் தமிழ் நாட்டில் அரசியல் வாதிகள் ஆட்சியின் பிரதிநிதிகளாகக் கருதிக்கொண்டு மிக மோசமான நிலையில் எதிர்க் கட்சிகளை தாக்கிக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

ஆளும் கட்சி தங்களுடைய கருத்துக்களைச் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை. அவர்களுடைய சாதனைகளைப் பெருமையோடு எடுத்துக் கூறுவதில் தவறு இல்லை. ஆனால் இடித்துரைக்க வேறு எதிர்க் கட்சி என்ற அமைப்பே இல்லாமல் ஆக்குவதுதான் மிகப்பெரிய சாதனை என்ற அளவுக்கு ஆட்சியில் இருப்பவர்கள் யாரும் கருதி முடிவு செய்யக்கூடாது.

ஜனநாயகத்தில் ஒரு ஆட்சியை மாற்றி அமைக்க மக்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த மக்களைக் கட்டுப்படுத்த இந்த சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அதேபோல், சட்டமன்றத்தின் வடிவத்தை மாற்றி அமைக்கும் அதிகாரத்தைப் பொதுமக்கள் பெற்று இருக்கிறார்கள். ஜனநாயகத்தின் பரிமாணத்தில் பல்வேறு வளர்ச்சிகள் நிச்சயமாக ஏற்படும். அந்த வளர்ச்சியை, மறுமலர்ச்சி, விழிப்புணர்ச்சி என்று அழைத்தாலும் சரி, அல்லது மாயை, கவர்ச்சி என்று வேதாந்த நடையில் விளக்கிச் சொன்னாலும் சரி, மக்களாட்சி மாபுகள் நாளுக்கு நாள் மெருகேறிக்கொண்டு இருப்பதைத் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

ஆளும் கட்சிக்காரர்கள் தங்களுடைய சாதனைகளை எடுத்துச் சொல்லட்டும். அதனுடைய தவறுகளை எதிர்க்கட்சியாகிய நாங்கள் சொல்லி வருகிறோம். புதுக்கோட்டையை தனிக்கோட்டையாக அமைத்து இருப்பதையும், பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனின் பழைய கோட்டையை புதுக்கோட்டையாக ஆக்கிவருவதையும் பெருமையோடு எடுத்துச் சொல்லிக்கொள்ளட்டும். ஆனால் எத்தனையோ பேர் இருந்து அரசாண்ட இந்தப் பழைய கோட்டையிலே உட்கார்ந்து என்றென்றுமே நாம்தான் என்ற மனக்கோட்டையை தயவு செய்து கட்டவேண்டாம்.

ஜனநாயகத்தின் சுழற்சியை தடுத்து நிறுத்துகிற வல்லமை எவர்க்கும் இல்லை என்று எடுத்துக் கூறி இந்த மானியக் கோரிக்கையைக் கொண்டுவந்த முதலமைச்சர் கற்றுத் தந்த தமிழில் சொல்லவேண்டுமானால், "முத்து எடுக்கப் புறப்பட்ட இந்த அரசாங்கம், கிளிஞ்சல் பொறுக்கிக் கொண்டு இருக்கிறது" என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏறத்தாழ 53 கோடிக்கு துணை மானியம் கோரப்படுகிறது. இப்படி துணை மானியக் கோரிக்கையில் 40 கோடி 50 கோடி என்ற அளவுக்குக் கொண்டு வருகிறார்கள் என்றால் அவர்கள் என்ன திட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் போடுகிறார்கள் என்று தெரியவில்லை.

மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல் என்று சொன்னார்கள். திட்டங்களையெல்லாம் எப்படிச் சமாளிக்க வேண்டுமென்பதை அவர்கள் வரவு-செலவு திட்டத்திலேயே இதைப்போட்டு இருக்கலாம்.





இந்தத் துணை மானியம் என்பதே அவசர செலவுகள், நியூ சர்வீஸ் என்று ஆரம்பிப்பதற்காகத்தான் கேட்கப்படவேண்டும். என்ன நியூ சர்வீஸ் ஆரம்பித்து இருக்கிறீர்கள்? ஏதோ ஏப்ரல் 1-ம் தேதி தருகிற சம்பளத்தை மார்ச்சு 31-ம் தேதியே தருகிறோம் என்று கொண்டுவந்திருக்கிறீர்கள். இதனால் என்ன நன்மை என்று எனக்குப் புரியவில்லை. 1-ம் தேதி வாங்கும் சம்பளத்தை 31-ம் தேதி வாங்குகிறார்கள் என்று சொன்னால், சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 31-ம் தேதியே மாதம் துவங்குவது போல் இருக்கும்.

உள்ளபடியே பார்க்கிறோம், ஏதோ நாற்காலி, சேர் போன்றவற்றை வாங்குவதற்குத்தான் கோரிக்கை வைத்து இருப்பதுபோல் இருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட கிராண்டிலேயே பணம் இருக்கும். அதைக் கூட சரண்டர் செய்து இருக்கமாட்டார்கள். அதற்கு மேலும் கிராண்ட் வாங்கி வைத்துக் கொள்வார்கள். ஒரு இலாகாவிற்கு அவசரச் செலவு வரலாம். எல்லா இலாகாவிற்குமா வரும். அவசரமான வேலைகளுக்குதான் துணை மானியக் கோரிக்கை கேட்கலாம்.

திருவாரூரில் பஸ் ஸ்டாண்டு கட்டுவதற்கு 6 லட்ச ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இங்கே சென்னையில் இருக்கிற மொபசல் பஸ் ஸ்டாண்டு நாறிக்கொண்டிருக்கிறது. அதைச் சீர்செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைச் செய்ய முடியவில்லை, தலைநகரத்தில் இருக்கிற பஸ் ஸ்டாண்ட் இப்படி இருக்கிறபோது . . .

திரு. இராம. அரங்கண்ணல்: அது பற்றித் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு நல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது கூடத் தெரியாமல் பேசுவது வருத்தமாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, எத்தனையோ வருஷமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நானும் தினமும் அந்த வழியாகத்தான் போய்க்கொண்டிருக்கிறேன். தீவிரமாக ஒன்றும் காணோம். இந்த வருஷமாவது சீக்கிரமாக முடிக்கப்பாருங்கள். அங்கே போய் நிற்க முடியவில்லை. அவ்வளவு அசிங்கமாக இருக்கிறது. சென்னையில் இப்படி இருக்கிறபோது திருவாரூரில் 6 லட்சம் ரூபாய்க்கு அவசரமாக பஸ் ஸ்டாண்டு கட்டவேண்டுமென்று கேட்கிறீர்கள். உங்கள் ஊர் என்றால் அதற்கு தனி கவனிப்புபோல் இருக்கிறது. ஆனால் எங்களுக்கு என்றால் இந்த கதி.

அதேமாதிரி தொழில் அமைச்சர் ஊராகிய சிங்கம்புணரிக்கு கோவாபரேடிவ் ஹவுசிங் சொசைடிக்கு 6 லட்ச ரூபாய். இது என்ன பெரிய டிஸ்டிரிக்ட் எட்குவார்ட்டர்ஸ்! இதற்கு முன்னாலே கூட்டுறவு ஹவுசிங் கிடையாதா? அமைச்சர் சொந்த நிலத்தை அதிக விலை கொடுத்து எடுத்தார்கள், என்று சொல்லி தகராறு ஏற்பட்டது, அப்போது நான் இங்கே இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எல்லாம் பேசி, தீர்ந்து விட்டது. நியாயமான விலைக்கு எடுத்தார்கள் என்று முடிவு செய்து விட்டார்கள். அதைப்பற்றிப் பேசுவது சரியல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சிங்கம்புணரியில் மந்திரி பிறந்தார் என்பதைத் தவிர அங்கே என்ன முக்கியத்துவம் இருக்கிறது? எந்த முக்கியத்துவமும் கிடையாது. அமைச்சர் பிறந்த ஊர் என்பதால், அங்கே கோவாபரேடிவ் ஹவுசிங் சொசைடி, அங்கே தொழில்கள் ஆரம்பிக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

அவர்கள் தொகுதியைப் பார்த்துக்கொள்வது அவசர வேலை என்று போட்டு துணை மானியக் கோரிக்கை கேட்டால் இந்த சட்ட சபை எப்படி அனுமதிக்க முடியும் என்று கேட்கிறேன். சிங்கம்புணரியில் ஆஸ்பிடல் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே ஆளே கிடையாது. ஆஸ்பிடல் தான் இருக்கிறது. பேஷன்டுகளைக் காணோம். அந்த அளவுக்கு அங்கே மக்கள் தொகை கிடையாது. மக்கள் தொகை அதிகமாக இருக்கிற இடத்தில் கட்டினால் ஜனங்களுக்கும் அது பயன்படும்.

அமைச்சர் என்பதால் அவர் ஊருக்குத்தான் தொழிற்சாலை. அங்கே தான் டயர் பாக்டரி, என்பீல்டு பாக்டரி, சர்க்கரை ஆலை, என்று போயிருக்கிறது. அங்கே தண்ணீர் கூட சரியாகக் கிடையாது. இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்றால் இங்கேதான் எல்லாவற்றையும் செய்ய வேண்டுமா? ஏதோ பாரபட்சமாக நடந்துகொண்டு போவது என்ற நிலை வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** கனம் அம்மையார் அவர்கள் அந்த பின் தங்கிய மாவட்டம் வளர வேண்டாம் என்று கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வளர வேண்டும், நிச்சயமாக வளர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக மந்திரி தொகுதிதான் வளரவேண்டும் என்று இல்லை. முதுகுளத்தூரைப் போய் பாருங்கள்.





மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறது. அவர்கள் தொகுதிக்கு பப்ளிக் சர்வீஸ் என்று போட்டு பணம் கேட்பதை இந்தச் சட்டமன்றம் அனுமதிக்காது என்று எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால், உங்கள் கட்சிக்கு மெஜாரிட்டி இருக்கிறது, அனுமதித்து விடுவீர்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** வீடு கட்டுகின்ற பிரச்னை பற்றி சொன்னார்கள். அமைச்சர் தொகுதிக்குத்தான் ஏராளமாக செலவு செய்ததாகச் சொன்னார்கள். சென்னை நகரத்தில் அவர்களுடைய தொகுதிக்கு எவ்வளவு செலவு செய்யப்படுகிறது வீடு கட்டுவதற்கு, முதலமைச்சர் தொகுதிக்கு எவ்வளவு செலவு செய்யப்படுகிறது, மற்றவர்கள் தொகுதிக்கு எவ்வளவு என்பதைச் சொல்ல வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என் தொகுதிக்குச் செய்வதற்கு நன்றி. நீங்களும் அங்கே குடியிருக்கிறீர்கள் அதனால் செய்கிறீர்கள். நான் எம்.எல்.ஏ. நீங்கள் வாசி. ஆகையால் செய்கிறீர்கள்.

**திரு. இராம அரங்கண்ணல்:** தலைவரவர்களே, அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்கள் தொகுதிக்கு எவ்வளவு செலவு செய்யப்படுகிறது, முன்னாள் காங்கிரஸ் உறுப்பினர் கே.எம்.எஸ். அவர்கள் தொகுதிக்கு எவ்வளவு செலவு செய்யப்படுகிறது, என்னுடைய தொகுதி எழும்பூர், அங்கே அவர் வாசி, அங்கே எவ்வளவு செலவு செய்யப்படுகிறது, இந்தக் கட்சி வித்தியாசம் இல்லாமல் யாருக்குச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல், மக்களுக்காகச் செலவு செய்கிறோம் என்ற நல்லெண்ணத்தை உணரவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆனால் ஒன்று, சென்னையில் எவ்வளவு செலவழித்தாலும் தாங்கும். அவ்வளவு நெருக்கடி. ஆனால் சிங்கம்புணரியில் என்ன நெருக்கடி? ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு பணம் செலவழிக்கப்படுகிறது என்பதற்காகச் சுட்டிக்காட்டுகிறேன்.

பைலட் பிளான்ட் என்று இப்போது கொடுத்து இருக்கிறீர்கள். ஏற்கனவே கொடுத்த பிளான்ட் என்ன கதி ஆயிற்று என்று ஆராயவேண்டும். கேட்டால் நாங்கள் இருக்கும்போது ஆரம்பித்தோம் என்று சொல்கிறீர்கள். எந்த அளவுக்கு சக்சஸ்புல்லாக நடைபெறுகிறது என்பதை ஒரு கமிட்டி போட்டு, ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை நடைமுறை என்ன என்று பார்ப்பது கிடையாது.

இன்று உள்ள நிலைமை என்ன என்றால் மற்றவர்கள் எல்லாம் லாபத்துடன் நடத்தும் தொழிலை நாம் நஷ்டத்தில் நடத்திக்கொண்டிருக்கிறோம். மெகனைசுடு பிரிக் பிளான்ட் எங்கே நல்ல முறையில் நடக்கிறது? தனியார் லட்சக்

கணக்கில் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் நடத்தும் தொழிற்சாலை நஷ்டத்தில் நடக்கிறது. இது 10—12 ஆண்டுகள் கழித்துத் தான் பொதுக் கணக்குக் கமிட்டிக்கு வருகிறது.

ஒவ்வொரு துறையிலும் பிளான் ஸ்கீம் என்று கொடுக்கிறார்கள். பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா என்று பார்க்கவேண்டும்.

சேலம் ஓமலூரில் ஒரு மொசைக் டைல்ஸ் பாக்டரி இருக்கிறது. அது நஷ்டத்தில் ஓடுகிறது. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் ஓமலூருக்கும் சேலத்திற்கும் அதிக தூரம் அதனால் டிரான்ஸ்போர்ட் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஓமலூருக்கும் சேலத்திற்கும் இடையே 7 மைல். எல்லா தனியார் துறையும் மொசைக் டைல்ஸ் பாக்டரி வைத்து லாபத்தில் நடத்துகிறார்கள். ஆனால் இந்த அரசு ஓமலூர் டைல்ஸ் பாக்டரி நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படி அரசாங்கம் ஆரம்பித்த அத்தனை பைலட் திட்டங்களும் நஷ்டம்.

அதேபோலத்தான் எரணாவூரில் மெரைன் டீசல் என்ஜின் பிஷிங் போட்ஸ்க்காக பல ஏக்கர் நிலங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 189 ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டார்கள். 1962-ல் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கீம். மத்திய அரசு தாங்கள் ஆரம்பிக்கவில்லை, நஷ்டத்தில் ஓடுமோ என்று சந்தேகப்பட்டு விட்டுவிட்டது. அது விட்டுவிட்ட பிறகு நீங்கள் ஏதாவது செய்தீர்களா? இன்னும் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். நாமே ஒரு பிளாண்டை ஆரம்பிக்கலாமா அல்லது வேறு யாரிடமாவது கொடுக்கலாமா என்று யோசனை எப்பொழுது? 12 வருஷங்களுக்கு அப்புறம் ஸ்லோ டெவலப்மெண்ட். மானியக் கோரிக்கையின் கீழ் வாங்குகிற நிதி ஒழுங்காக செலவழிக்கப்படுகிறதா அல்லது நஷ்டத்தில் ஓடுகிறதா என்று கண்காணிப்பு இல்லாத அளவுக்கு இலாக்காக்கள் நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கின்றன என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

ஈஸ்டு டாப்லட்ஸ் ரொம்ப அவசியம். சாதாரண ஏழை மக்களுக்குக் கொடுப்பது ரொம்ப அவசியம். அதற்கு ஒரு பிளாண்ட் ஆரம்பிக்க திட்டம் கிண்டி இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் 12 வருஷங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட திட்டம், இப்பொழுது சொல்கிறீர்கள். அங்கே ஆரம்பிக்கக் கூடாது எங்கே கரும்பு சக்கை கிடைக்குமோ அங்கேதான் ஆரம்பிக்க வேண்டும் என்று எத்தனை வருஷங்களுக்கு பிறகு? After 12 long years. What is the department doing? What is the Minister doing? They should follow up the Schemes, is it not?



ஒரு ஸ்கீம் ஆரம்பிக்கிறோம். 12 ஆண்டுகள் உருண்டோடிய பிறகு ஒரு நிபுணர் குழு சொல்கிறது, இங்கே செய்யக் கூடாது, எங்கே கரும்புச் சக்கை கிடைக்கிறதோ அங்கே வைக்கலாம் என்று. இதனால் எவ்வளவு நஷ்டம். கிண்டி எஸ்டேட்டில் இடம் வீணாக வெட்டியாகப் போகிறது.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், நாம் பைலட் ஸ்கீம் ஆரம்பிக்கிறோம். பட்டுப்பூச்சி வளர்ச்சிக்காக ரூபாய் 7 லட்சம் செலவில் பல பண்ணைகள் ஆரம்பித்து உருப்படியாக நடக்கவில்லை. நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 40 ஏக்கர் பட்டுப் பூச்சி வளர்ப்புக்காக, வருமானம் ரூபாய் 2,000 தான் வருகிறது. என்ன அநியாயம்? நஷ்டமா, லாபமா என்று கண்டுபிடிப்பதற்கு எத்தனை வருஷங்கள் ஆகின்றன.

ரூபாய் 10,000 ஸ்கீமில் ஸெரிகல்சர் ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் நஷ்டத்தில் ஓடுகிறது.

போடப்பட்ட திட்டங்களெல்லாம் ஒழுங்காக நடக்கவேண்டுமென்று பார்க்க வேண்டாமா? போட்ட ஸ்கீமை ஒழுங்காக நடத்திவிட்டு, கொடுத்த பணத்தை ஒழுங்காக செலவழித்துவிட்டு, பிறகு துணை மானியக் கோரிக்கை அவசியமாகவும் அவசரமாகவும் இருக்கிறது என்று கோரலாம். ஆனால், கொடுக்கப்படுகின்ற பணத்தை ஒழுங்காக செலவழிக்கிறார்களா என்று பார்க்கவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). இண்டரப்ஷன் எல்லாம் இருந்தது. இரண்டு நிமிடங்கள் கொடுங்கள், முடித்துவிடுகிறேன்.

இன்றைக்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷனை எடுத்துக்கொண்டால், நாம் டாக்டர்ஸ், சப்-மாஜிஸ்ட்ரேட்ஸ் டெம்பரரியாக ரெக்ரூட் செய்கிறோம். ஆனால் ரெகுலரைஸேஷன் வரும்பொழுது 5, 6 வருஷம் டெம்பரரியாக வேலை பார்த்தவர்களை விட்டுவிட்டு புதிய ஆள்களைக் கொண்டு வருகிறார்கள். இது என்ன நியாயம்? டெம்பரரியாக 5, 6 வருஷம் டாக்டர்கள் ஒழுங்காக வேலை பார்க்கிறார்கள். ஏதாவது பிளாக் மார்க் இருந்து, சர்வீஸ் ரோல் சரியில்லாமல் இருந்து, சுபீரியர்ஸ் 'சர்வீஸ் நாட் ஸாடிஸ்பாக்டரி' என்று எழுதிவைத்தால் ஒழிய, வேறு ஆளைக் கொண்டு வந்து போடுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

ஆறு வருடம் டெம்பரரியாக வேலை பார்த்தவர்களை விட்டுவிட்டு, நல்ல முறையில் வேலை செய்தவர்களை விட்டு விட்டு, ரெகுலரைஸேஷன் என்று வரும் பொழுது, சர்வீஸ் கமிஷனுக்குப் போகும்பொழுது, புதியதாக ஆளைக் கொண்டு வந்து போடுகிறார்கள். இது நியாயமா, முறையா? இதையெல்லாம் நீங்கள் தவிர்க்கவேண்டும்.

அதே மாதிரியாகத்தான் டெம்பரரியாக சப்-மாஜிஸ்ட்ரேட்ஸ் 90 பேர்கள் இருக்கிறார்கள். ரொம்ப 'கில்லிங் பொஸிஷன்'. இரண்டு வருஷம், 3 வருஷத்திற்கு இன்கிரிமெண்டே கிடைக்காது. செகண்ட் பே கமிஷன் வந்தபிறகு சப்-மாஜிஸ்ட்ரேட் பே குறைந்துபோய்விட்டது. இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், சப்-மாஜிஸ்ட்ரேட் ஆகிய இருவர்களுடைய பேயிலும் வித்தியாசம் இல்லை. இரண்டு பேர்களுக்கும் ஒரே அளவில் பே சமமாக இருக்கிறது. என்றைக்கு சபார்டினேட் ஜூடிஷியரிக்கு நல்ல சம்பளம் கொடுக்கிறீர்களோ அன்றைக்குத் தான் கொஞ்சம் கூட நீதி கரைபடாத அளவுக்கு இருப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

நீதித் துறையில் இருப்பவர்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும், அவர்களுக்குப் போதுமான வசதிகளையும் செய்து தரவேண்டும். அவர்களுக்கு கார் அலவன்ஸ் . . . (மணி அடிக்கப்பட்டது)

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

துணை மானியக் கோரிக்கைகள் வாயிலாக மேற்கொண்டு மதிப்பீடுகளைக் கொடுத்து அவையினுடைய ஒப்புதலைக் கோருகிறோம் என்றால், ஏற்கனவே நாம் தீட்டிவிட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையிலே என்னென்ன திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று முடிவு செய்தோமோ, அவைகளுக்கும் மேலாக சில கோரிக்கைகளைத்தான் இதன் வாயிலாக நாம் கேட்கிறோம். இதன் வாயிலாக நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், இந்த மாநிலத்தில் வளர்ச்சித் திட்டங்கள் எவ்வளவு வேகமாக நடந்துவருகிறது என்பதுதான். அவ்வப்பொழுது நாட்டிலே ஏற்படுகிற மாறுபட்ட தேவைகளுக்கு இந்த அரசு எவ்வளவு தூரம் மதிப்பு கொடுக்கிறது என்பதைத்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் எடுத்துக்காட்டுவதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





நல்ல தமிழிலே, தூய தமிழிலே, தமிழர்கள் உள்ளங்களிலெல்லாம் உணர்ச்சிகள் பொங்குகின்ற வகையிலே நல்ல தமிழில் நல்ல திட்டங்களை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நமக்குத் தருவது எப்பொழுதும் வழக்கமாக இருக்கிறது. நல்ல தமிழைத் தந்திருக்கிற நம்முடைய தானைத் தலைவரின் அரசு தமிழுக்கு இலக்கணம் வகுத்துக்கொடுக்கிறது. தமிழ் சமுதாயம் தன்னை மறந்து, மொழியை மறந்து, மானத்தை மறந்து, இனத்தை மறந்து, இனத்தின் தன்மையை மறந்து, வாழ்ந்த, பந்நெடுங்காலமாக வாழ்ந்த தமிழ் திருநாட்டில் தமிழன் என்றால் யார், தமிழ் இனத்தினுடைய பெருமை என்ன, தமிழ் தாயினுடைய பெருமை என்ன, தமிழ் மொழியின் ஏற்றம் என்ன, சிறப்பு என்ன, பெருமை என்ன என்பதை பெருமை மிகுந்த இவர்கள்தான் இந்த மாநிலத்திற்கு அறிவித்தார்கள் என்பது நாடு கண்ட உண்மை. ஏடுகள் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு உண்மையாகும்.

இன்றைக்கு இந்த அவையிலே இந்த ஆட்சிதான் தமிழை மறந்திருக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே தருகிறார்கள். உள்ளத்தை நாம் தொட்டுப் பார்க்கவேண்டும். நம்முடைய எண்ணத்தை நாம் பக்குவப்படுத்தி நினைத்துப் பார்க்கவேண்டும். இந்த ஆட்சி வந்தபிறகு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இந்த நாட்டின் முதல் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு தமிழ் இந்தக் கோட்டையிலே ஏற்றம் பெற்றதா அல்லது அதற்கு முன்பு ஏற்றம் பெற்றதா என்று தமிழினுடைய ஏற்றத்துக்கு வாதாடிக்கொண்டிருந்தவர்களெல்லாம் நினைவு கூர்ந்து பார்க்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகையினாலே தமிழ் உயரவேண்டும், தமிழினுடைய மானம் காப்பாற்ற வேண்டும், தமிழ் தாயினுடைய பெருமை உலகத்திற்கு உணர்த்தப்படவேண்டும் என்று மற்றவர்களுக்கு இருக்கிற அக்கரையைவிட எங்களுக்குக் இருக்கிற அக்கறை குறைவானது அல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய அருமைத் தம்பி மாண்புமிகு உறுப்பினர் காளிமுத்து அவர்கள் உணர்ச்சி பூர்வமாக உரையினை ஆற்றினார்கள். அவர் இன்றைக்கு தமிழ் தவித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவருடைய தமிழைக் கேட்கும்பொழுது அவர் யாரால் இந்தத் தமிழ் உணர்வு பெற்றாரோ, யாரிடம்தான் இந்தத் தமிழைக் கற்றுக்கொண்டேன் என்று அவர்களே சொல்கிறார்களோ அவர்களுடைய தமிழ்ப் பேச்சைக் கேட்ட பிறகு தமிழ் தாழ்ந்து

விட்டிருக்கிறதா, உயர்ந்து விட்டிருக்கிறதா என்பதைப்பற்றி தீர்ப்பு சொல்லக் கூடிய அளவிலே இருப்பவர் மான்புமிகு உறுப்பினர் காளிமுத்து அவரே தான் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த அவையிலே மட்டும் அல்லாமல் வேறு இடங்களிலும் அடிக்கடி சொல் கிறார்கள். 'எனக்கு தமிழினுடைய தன்மையை உணர்த்தியவர் கலைஞர், தமிழ் மானத்தை என்னுடைய உள்ளத்தில் ஏற்றித்தந்தவர் கலைஞர், தமிழ் ஏற்றம் எவ்வாறு அமையவேண்டும், தமிழில் எவ்வாறு பேசவேண்டும் என்று கற்றுத்தந்தவர் கலைஞர் என்று அவர்களே சொல்வார்கள். இன்றைக்கு அத்தகைய ஆசானாக இருக்கின்ற கலைஞர் அவர்களை எதிரிலேயே வைத்துக் கொண்டு, எந்தக் கலைஞர் தமிழினுடைய ஏற்றத்திற்காக பாடுபட்டாரோ அவரையே எதிரில் வைத்துக்கொண்டு இப்படிப் பேசுவது நல்லது அல்ல.

தூய தமிழிலே எழுதவேண்டும் என்று சொல்கிறபொழுது நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆங்கில கலைச் சொற்களுக்கு நல்ல அழகிய தமிழ்க் கலைச் சொற்களை அமைத்துத் தந்திருக்கிறார்கள் கலைஞர் அவர்கள். முதல் மந்திரி என்பதை முதல் அமைச்சர் என்று மாற்றி, மராமத்து இலாகா மந்திரி என்பதை பொதுப்பணித் துறை அமைச்சர் என்று மாற்றி தந்திருக்கிற அத்தகைய கலைஞர் அவர்களை எதிரிலே வைத்துக்கொண்டு இத்தகைய ஒரு குற்றச்சாட்டை சொல்கிறார்களே என்று நான் மிகவும் வேதனை அடைகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மராமத்து என்பது நல்ல தமிழ் வார்த்தைதானே? அதிலே என்ன தவறு வந்திருக்கிறது?

**திரு. எம். ஏ. லத்தீப்:** நான் என்ன சொல்வது? மராமத்து, இலாகா இரண்டும் அரபி வார்த்தைகள். நான் அரபி தெரிந்த அளவில் சொன்னேன். மராமத்து இலாகா என்பதுகூட அரபி வார்த்தைகள்தான். ஆகையினால் நல்ல தமிழிலே சொற்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன் மராமத்து இலாகா என்பது அரபி வார்த்தைகள், அவைகளுக்கு தூய தமிழ் வார்த்தைகளை அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்ற தன்மையை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொன்னேன். அம்மையார் ஒத்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிக்க நன்றி.

இன்றைக்குக் கூட கூறிக்கொண்டிருக்கிறோம். இதுதான் நல்ல தமிழ் என்று தமிழ் உலகத்துக்கு உணர்த்துவோம். ஆட்சியில் இருப்பவர்களை விட்டுவிடலாம். முதல் அமைச்சரை விட்டுவிடலாம், மற்றப்படி கல்வி



அமைச்சரையும் விட்டுவிடலாம். ஆனால் கலைஞரை தமிழ் சமுதாயம் மறக் காது, நாவலரை மறக்காது, பேராசிரியரை மறக்காது என்பதை நினைவு கூர்ந்து பார்க்கவேண்டும்.

இந்த அவையிலே தமிழைப்பற்றி பேசுகிறோம். தமிழ் உயரவேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. தமிழுக்கு பண்பாடு உண்டு, தமிழுக்கு சிறப்பு உண்டு, தமிழனுக்கு நாகரிகம் உண்டு, தமிழனுடைய நாகரிகத்தை, தமிழனுடைய பண்பாட்டை, தமிழனுடைய பெருந்தன்மையை, தமிழனுடைய தூய்மையை இழந்துவிடக்கூடாது, இன்றைக்கு வேறு இடத்தில் சேர்ந்துவிட்டோம் என்பதற்காக. அதுதான் என்னைப்போன்றவர்களுக்கு கவலை தருகிறது. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது தமிழ் சமுதாயம். தமிழ் நாட்டு தலைமகன், 4½ கோடி மக்களுக்கு நாயகனாக இருக்கிற, தமிழுக்கு ஏற்றம் தந்திருக்கிற கலைஞரைப் பார்த்து பேசப்படுகிறது.

குலத்தொழில், குலத்தைப்பற்றி பேசுகிறார்கள். அன்றையதினம் இந்த அவையிலே குலத்தைப்பற்றி பேசப்பட்டது. அன்றைக்கு நாங்களெல்லாம் என்னுடைய உள்ளத்தில் வேதனையோடு பொறுமையாக உட்கார்ந்திருந்தோம். காரணம், தானே பதில் சொல்கிறேன் என்று கலைஞர் அவர்கள் பதில் சொல்லி விட்டார்கள்.

எந்த அண்ணா அவர்கள் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று தமிழ் சமுதாயத்தினுடைய நாகரிகத்தை, இலக்கணத்தை, மையமாக விளங்குகின்ற மிகப் பெரிய தத்துவத்தை அந்த நேரத்தில் உலகத்துக்கு தந்துவிட்டுச் சென்றார்களோ, தமிழ் மொழிக்கு உயிர் தந்தார்களோ, தமிழ் மொழிக்கு ஏற்றம் தந்தார்களோ அந்த அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகிற, அந்த அண்ணாவினால் வளர்க்கப்பட்ட, தமிழ் சமுதாயத்தில் தலைநாயகனாக இருக் கின்றவரைப் பார்த்து சோரம் போகின்ற குலத்தைச் சார்ந்தவர் என்று சூசக மாகச் சொன்னார்கள். தமிழ் சமுதாயத்தினுடைய நாகரிகத்தை இழந்து விட்டார்கள், தமிழ் சமுதாயத்தின் தன்மையை இழந்துவிட்டார்கள், தமிழின் தன்மையை இழந்து, தமிழின் சிறப்பை இழந்து, தமிழின் பெருமையை யிழந்து, இலக்கணத்தை இழந்து, இலக்கியத்தை இழந்து, தமிழை காப்பாற்றப்போகிறவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களே, உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ளாதீர்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 28

(முற்பகல் 11-00)

அச்சாணி இல்லாமல் வண்டி ஓடுகிறது என்று சொல்கிறார்கள். அச்சாணி இல்லாமல் வண்டி எப்படி ஓடும்? அப்படிப்பட்ட வண்டிகளை இழுத்துக் கொண்டு போகலாம். அச்சாணி இல்லாத வண்டியை சிரமத்துடன் இழுத்துக் கொண்டு போகலாம். அப்படி சிரமப்பட்டு இழுத்தும் இழுபடாத வண்டிகள் வேறிடத்திலே இருக்கின்றன. இன்றைக்கு இருக்கின்ற இந்த ஆட்சி என்னும் வண்டிக்கு இரும்பால் ஆன அச்சாணித் தேவையில்லை. இந்த மாநிலத்து மக்களின் அன்பு என்னும் அச்சாணி, ஆதரவு என்னும் அச்சாணி இந்த அரசுக்கு இருக்கிறது. அந்த அன்பு, ஆதரவு என்ற மிகப்பெரிய அச்சாணியை வைத்து இந்த அரசு ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நான் வேறு பல விஷயங்களைப்பற்றி சொல்லவேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் இந்த மன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்னை வேறு எங்கோ இழுத்துச்சென்று விட்டன. ஆகவே, இந்தப் பிரச்சனையை இத்துடன் முடித்துவிட்டு, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில கருத்துக்களை, இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

வாணியம்பாடி தொகுதியில் முன்சீப் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கெனவே கொடுத்திருக்கிறேன். அதை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களிடம் ஒரு கோரிக்கையை விடுக்கிறேன். மோட்டார் வாகன வரிகளை கட்டுவதற்கு வசதியாக வேலூரிலே ஒரு 'டாக்சேஷன் பே ஆபீஸ்' அமைத்து அங்கே அலுவலர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி, ஆட்சியிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும் இன்றைக்கு இருக்கின்ற கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் கலைஞராகவும் நாவலராகவும் பேராசிரியராகவும் மாட்சிமையோடு விளங்குவார்கள். மாட்சிமை இல்லாத ஆட்சி தேவையில்லை. தமிழ் மக்களின் மாட்சியோடு இந்த ஆட்சி நடக்கிறது; என்றைக்கும் நடக்கும். அந்த மாட்சி இருக்கின்ற வரையில் இந்த ஆட்சியை ஒரு கட்சியும் அழித்துவிட முடியாது என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 28]

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். இங்கே பேசிய சில வார்த்தைகள் இந்த சபையின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் குறைப்பதாக இருக்கின்றன. இந்தமாதிரி பேசுவது சரியா? இதற்கு முன்னாலே . . . (குறுக்கீடு). (மணியடிக்கப்பட்டது).

### 6. நடைமுறைக் கேள்வி.

### துணை மானியக் கோரிக்கையில் கண்டுள்ள பொருள் குறித்தே துணை மானிய நிதி அறிக்கை மீதான விவாதத்தில் பேசுவது குறித்து

THIRU K. T. K. THANGAMANI: Sir, I am raising a point of order with regard to the discussion on the Supplementary Budget. Rule 160 says—

'The demands for supplementary or additional grants shall be dealt with as if they were demands for grants:

Provided that the discussion of a demand for a supplementary or additional grant shall be confied to the details of which it is composed . . . .'

There is a general rule about relevance. I am making a general observation. I am not referring to the speech of a particulars Member. Discussion on the Supplementary Demand is very much limited and whenever cut motions are given, they should relate to a particular item of expenditure.

So, in the discussion on the Supplementary Budget if you can guide and help us, it would be useful. Otherwise, it becomes a general discussion on the Budget or like the discussion on the Finance Bill where you can talk on anything under the Sun. Because we are disscussing the Supplementary Budget, I request that you may direct hon. Members to strictly conform to the relevant points raised in the Supplementary Budget.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதை நான் அப்படியே ஒப்புக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்கள் பேசிய பிறகு சொன்ன அந்த விளக்கத்தை காளிமுத்து அவர்கள் பேசுகின்றபோது சொல்லியிருந்தால் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும்.

## துணை மானியக் கோரிக்கையில் கண்டுள்ள பொருள் குறித்தே துணை மானிய நிதி அறிக்கை மீதான விவாதத்தில் பேசுவது குறித்து

[1974 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய கவனத்திற்கு திரு. தங்கமணி அவர்கள் ஒரு கருத்தைக் கொண்டுவந்தார்கள். துணை மானியக் கோரிக்கை மட்டுமல்ல, வேறு எந்த மானியக் கோரிக்கை வந்தாலும் பேரவையில் என்ன பொருள் பற்றி விவாதிக்கப்பட வேண்டியிருக்கிறதோ அதைப் பற்றி மட்டுமே பேசுவதுதான் பொருத்தமுடையதாகும். அதிலே பேரவைத் தலைவர் கண்டிப்பாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வரக்கூடிய நிலைமைதான் இருக்கும். அதையும் நான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### 1973-74-ஆம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற துணை மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

துணை மானியக் கோரிக்கையிலே முக்கியமாக ஒரு கோடி ரூபாய் கைத்தறி நெசவாளர்களுக்கு' ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் நேற்று இந்த மானியத்தின்மீது பேசும்போது பலரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளிலே முக்கியமாக நெசவாளர்களுக்குத் தேவைக்கு ஏற்றபடி 'நூல் நல்ல முறையிலே விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பது. அதைச் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, மண்ணடியிலே இருக்கக்கூடிய காவலர் இல்லங்களை இடித்து, புதுப்பித்து அந்த இடத்திலே வீடுகள் கட்டுவதற்காக அரசாங்கம் 46 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். சென்றமுறை நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் எடுத்துக் கூறிய இந்தக் கருத்திற்கு அவர்கள் செவி சாய்த்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீரங்கத்திலே—திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தது—காவேரி, கொள்ளிடம் கரைகளை பலப்படுத்த வேண்டுமென்று முக்கியமாகக் கூறப்பட்டிருக்கிறது. கரைகளைப் பலப்படுத்துகின்ற இந்த நேரத்தில்—அதை நான் வரவேற்கிறேன். அங்கே இருக்கின்ற பாலம் அதிகப் போக்குவரத்து செல்லக்கூடியதாக இருக்கிறது; அதையும் பலப்படுத்த வேண்டும். அதோடு அங்கே ஒரு ஆண்டு காலமாக விளக்கு எரியாமல் இருக்கிறது. அதைப்பற்றி பலமுறை கூறியிருக்கிறேன். அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 28] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

புதுக்கோட்டை புது ஜில்லாவாக ஆன பிறகு அதற்கென்று பணம் ஒதுக்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அந்த ஜில்லா இன்னும் பல்வேறு துறைகளில் முன்னேறுவதற்கு வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த 'ஆஃப் எ மில்லியன் ஜாப் புரோகிராம்' திட்டத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தொடர்ந்து பல்வேறு துறைகளிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்கப்பட்டு வருகிறது. மாநில அரசு செலவிடக்கூடிய பணத்தை மத்திய அரசு 'ரீ இம்பர்ஸ்' செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. பல லட்சக் கணக்கான ரூபாய் இதற்கென்று பல்வேறு துறைகளில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாதத்திற்கு 1,46,600 ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் செலவிடுகின்ற தொகை முழுவதும் மத்திய அரசால் 'ரீ இம்பர்ஸ்' செய்யப்படும் என்ற உறுதிமொழியை அவர்கள் கொடுத்திருக்கிறார்களா? ஏற்கெனவே செலவிட்டதை கொடுத்திருக்கிறார்களா? இதிலே அவர்களுடைய பங்கு எப்படி இருக்கிறது என்பதை சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

இதை ஏன் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், இலங்கையிலிருந்து இன்னும் அதிக அளவில் அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை குடியமர்த்துகின்ற வகையில் பெரும் தொகை செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் 'ரீ இம்பர்ஸ்' செய்யாவிட்டால், பின்னால் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய நிதி குறைந்துபோய் பெரும் பாதகம் ஏற்பட்டு விடும். அந்த நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

இன்னும் மருத்துவப் பணிகளுக்கும், கல்விப் பணிகளுக்கும் பல லட்சக் கணக்கான ரூபாய்க்கான சலுகைகளை செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்களுக்கு என்று பஞ்சப்படிகளை உயர்த்துகின்ற நேரத்தில் அதை வரவேற்கின்ற அதே நேரத்தில் என்னுடைய அபிப்பிராயத்தையும் கூற விரும்புகிறேன். திருமதி அனந்த நாயகி அவர்கள் கூறியதைப்போல, இதை ரெகுலர் பட்ஜெட்டிலே கொண்டு வந்தால் நல்லதாக இருக்கும் என்ற கருத்து ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் சப்ளிமென்டரி பட்ஜெட்டில் கொண்டுவருவதைப்பற்றி பத்திரிகையில் பார்த்த செய்தியைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பைனான்ஸ் செக்ரட்டரி அவர்கள் இப்படி இடையிடையே கனம் முதலமைச்சரவர்கள் பஞ்சப்படிகளை உயர்த்துவதனால்—அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவதனால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை எடுத்துக்கூறி, ஆண்டு கடைசியிலே பட்ஜெட்டை வைத்துக்கொண்டாலும் நலமாக இருக்கும் என்று சொன்னதாக பத்திரிகையிலே பார்த்த ஞாபகம் இருக்கிறது.

அந்தக் கஷ்டங்களை எல்லாம் தவிர்க்க இந்த நேரத்தில் முதலமைச்சரவர்கள் என்ன முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். பட்ஜெட் வரும்போது ஒரு டோக்கன் கிரான்ட்தான் கொடுக்கப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. டோக்கன் கிராண்டு கொடுத்தால் அது கமிஷண்டு ஸ்கீம்தான். அதை வரவேற்கின்ற நிலைமையிலே மற்றும் பணம் ஒதுக்குகின்ற காரணத்தினால் இவற்றில் முக்கியமாக இருக்கக்கூடிய சிலவற்றை மட்டும் குறிப்பிட்டு, துணை மானியக் கோரிக்கையை வரவேற்கின்ற அளவில் இருந்தாலும், குறிப்பாகத் தனிப்பட்ட முறையில் அமைச்சர் அவர்கள் தொகுதிக்குச் செய்திருக்கிற காரணத்தினால்—ஆத்திரம் இல்லாவிட்டாலும்—எங்கள் தொகுதிக்குக் கிடைக்காத காரணத்தினால் சில அதிருப்திகள் ஏற்படுகின்றன என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்ட துணை மானியக் கோரிக்கையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் நேற்று மேலவையில் குறிப்பிட்டதுபோல் இந்தத் துணை மானியம் என்பது—பேசுகின்ற உறுப்பினர்கள் பல்வேறு விஷயங்களையும் கலந்து பேசுவதற்குத் துணையாக இருக்கிறது என்பதனால் ஒருவேளை துணை மானியம் என்று பெயர் பெற்றதோ என்று ஐயுறுகிறேன்.

'ஆண்டுக்காண்டு இதுபோன்ற துணை மானியங்களை மன்றத்தில் வைக்கின்றார்களே, நியாயமா?' என்ற கேள்வியை ஒவ்வொரு முறையும் துணை மானியக் கோரிக்கையை வைக்கும்போது திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுப்பி வருகிறார்கள்.

துணை மானியக் கோரிக்கை என்றால் ஒரு ரெடிமேட் பேச்சு. என்னிடத்திலும் ரெடிமேட் ஆன்சர் இருக்கிறது. துணை மானியக் கோரிக்கை 53 கோடி என்பது மிக அதிகம் என்று குறிப்பிட்டார்கள். 1965-66 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தின் மொத்த தொகை—வருவாய்க் கணக்கில் ரூ. 181 கோடியாக இருந்தபோது ரூ. 21 கோடிக்கு துணை மானியக் கோரிக்கை இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.





1966-67 இல் பட்ஜெட் ரூ. 201 கோடியாக இருந்தபோது துணை மானியக் கோரிக்கை ரூ. 62.91 கோடியாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது 1973-74 இல் 473 கோடி ரூபாயாக திருத்தப்பட்ட பட்ஜெட் இருக்கும்போது நமது இறுதி துணை மானியக் கோரிக்கை 53 கோடி ரூபாயாக இருக்கிறது. கடந்த ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் இது அதிகம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசின் இறுதித் துணை மானியக் கோரிக்கை ரூ. 865 கோடிக்குமேல் இருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்துக்கொண்டால், இந்தத் துணை மானியக் கோரிக்கையின் அளவு அதிகம் இல்லை என்பது தெளிவாகும் என்று நான் கருதுகிறேன்.

இறுதித் துணை மானியக் கோரிக்கையில் கோரப்பட்ட தொகைகளை வரிசையாக ஆண்டுதோறும் பார்த்தால் 1965-66 இல் 21.32 கோடி ரூபாய். 1966-67 இல் ரூ. 62.91 கோடி. 1967-68 இல் ரூ. 9.31 கோடி 1968-69 இல் ரூ. 66 கோடி. 1969-70 இல் 18.49 கோடி. 1970-71 இல் ரூ. 56.19 கோடி. 1971-72 இல் ரூ. 116.35 கோடி. 1972-73 இல் ரூ. 64.38 கோடி. 1973-74 இல் 53.91 கோடி அளவுக்கு இந்த இறுதி துணை மானியக் கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஏற்கனவே ஒரு துணை மானியக் கோரிக்கை வந்திருக்கிறது. அந்தத் தொகை எவ்வளவு? இரண்டையும் சேர்த்தால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சரியான விவரம் இல்லை. பார்த்து வேண்டுமானால் சொல்கிறேன்.

துணை மானியக் கோரிக்கை—நாம் போடுகிற பட்ஜெட்டுக்குப் பிறகு—அவசரமாக அல்லது அத்தியாவசியமாகக் கருதப்படுகிற அடிப்படை வளர்ச்சித் திட்டங்கள் அடிப்படையில் தேவைப்படுகிற ஒன்று என்பதை அனைவரும் நன்கு அறிவோம்.

திருமதி அனந்தநாயகி அவர்களுடைய கோரிக்கையை முன்னாள் அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ஓரளவுக்கு ஆதரித்து இங்கே பேசினார்கள். ஆனால், அவர்கள் இந்த இடத்தில் அமர்ந்திருந்தபோது கொண்டு வரப்பட்ட துணை மானியக் கோரிக்கைகளை, இந்த இடத்தில் இருந்து நான்

கொண்டு வருகிற போது, அவர்கள் அந்த இடத்தில் இருந்து வாதிடுகிறார்கள். எதிர்க்கட்சியில் அவர்கள் இன்று இருக்கும்போது அவர்களுக்குச் சில விவரங்கள் தெரிந்திருக்கலாம். அண்ணா அவர்கள் இங்கே ஒரு முறை குறிப்பிட்டார்கள். ஆளுங்கட்சியில் இருப்பவர்களுக்கு, எதிர்க்கட்சியில் உள்ள எங்களுக்குத் தெரியாத சில விவரங்கள் தெரிந்திருக்கலாம் என்றார்கள். ஆகவே ஆளுங்கட்சியில் இருந்து அவர்கள் பெற்ற அனுபவங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, எதிர்க்கட்சியில் இருக்கும்போது முழு எதிர்க்கட்சியாக மாறி விடுவது நல்லது அல்ல என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையில் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஈஸ்ட் ப்ளாண்டைப் பற்றிச் சொன்னார்கள். அது சரியான இடத்தில் அமையவில்லை என்று சொன்னார்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அரசு எடுத்த முடிவு அது. அது தவறான முடிவு என்று கருதினால் இந்த அரசு அதற்குப் பொறுப்பாளி அல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட முடிவு என்றால் அது தவறானால் அதை மாற்றக்கூடாதா? பன்னிரண்டு வருஷத்திற்கு முன்னாடி எடுத்த முடிவு, அதுதான் அதன் தலையெழுத்து என்று பார்க்காமல் இருந்தால் அதுதான் தலையெழுத்தா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாமாங்கத்திற்கு மாமாங்கம் தலையெழுத்து மாறிவிடும் என்று வைதிகர்கள் சொல்வார்கள். இந்த மாமாங்கத்தில் அந்த பாவம் தீர்க்கப்படும் என்று நான் சொல்வேன்.

இந்த 13 மாதச் சம்பளம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுமா என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் கேட்டார்கள். அரசு ஆசிரியர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கும், இந்த முறை வகுக்கப்படும் என்பதைத் தெரிவிப்பதோடு, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதுபற்றி கல்வித் துறை பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் பற்றி திருமதி ஜோதியம்மாள் இங்கே சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திற்கு 6 கோடி ரூபாய்க்கு இந்த வேலை வாய்ப்புக்கான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் என்கிறபோது சில இடங்களில் சிலர் தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் ஐந்து



லட்சம் பேருக்கு என்பது சரியல்ல. அகில இந்திய அளவில் ஐந்து லட்சம் பேர்களுக்கு. அகில இந்திய அடிப்படையில் ஐந்து லட்சம் பேர்கள் என்கிற போது நம் மாநிலத்தில் பத்தாயிரம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயே 5 லட்சம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெறாமல் இருக்கக்கூடும். நம்முடைய மாநிலத்தில் வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க இது போதுமானது அல்ல. அதுவும் இந்தியாவில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற தேசீய பொருளாதார நெருக்கடியைத் தணிக்கின்ற முறைக்கு இது போதுமான பரிகாரம் ஆகாது என்பதை நாம் உணர்கிறோம்.

ஆனாலும் கொடுத்ததைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்கிற ஆவல் நமக்கு இருக்கும். அப்படிப் பெற்றுக்கொள்வதை ஒழுங்காக செலவிட வேண்டுமென்கின்ற திட்டவட்டமாகச் செயல்படவேண்டும் என்கின்ற ஆசை நமக்கிருக்கிறது.

அவர்கள்—மத்திய அரசைப் பொறுத்தவரையில்—பல புதிய திட்டங்களை பிரகடனப்படுத்துகிறார்கள். அரிசனங்களுக்கு ஒரு திட்டம் என்று சொல்வார்கள்—கவர்ச்சிகரமாக இருக்கும். பின் தங்கிய மக்களுக்கு—அல்லது குறைந்த வருவாய் உடைய மக்களுக்கு—என்று இப்படி திட்டங்கள் அவர்களால் தீட்டப்படும். அந்தத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநில அரசுகளால் நிறைவேற்றப்பட்டு வருகிறபோது—சில வருஷங்கள் அந்தத் திட்டங்களுக்காக மானியங்களை அளித்து வருகிறார்கள்—மாநில அரசுகள் அவற்றைச் செயல்படுத்தி வருகிறபோது அந்தரத்தில் அந்தத் திட்டங்கள் மத்திய சர்க்காரால் விடப்படுகின்றன.

அப்படித்தான் அரிசனங்களுக்காக அவர்கள் கொடுத்த திட்டத்தை நாம் நிறைவேற்றி வருகிறபோது அதற்குத் கொடுத்த மானியத்தை நிறுத்தினார்கள்.

பின்தங்கிய மக்களுக்காகக் கொடுத்துவந்த மானியத்தை நிறுத்தினார்கள். குறைந்த வருவாய் உள்ளவர்களின் குழந்தைகளுக்காக ஸ்காலர்ஷிப் தருகிற திட்டத்தைக் கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த மானியத்தைக் கொண்டு ஐந்தாறு ஆண்டுகள் அதனை நடத்தி வந்தோம். திடீரென்று அந்தத் திட்டத்தையும் நிறுத்திவிட்டார்கள்.

அதைப்போல ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்கிற திட்டத்தைக் கொடுத்து, நம் மாநிலத்திற்கு 6 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கித் தந்திருக்கிறார்களே என்று நாம் சில ஆயிரம் பேர்களுக்கு வேலை

கொடுத்தால்—அவர்கள் தொடர்ந்து அந்த உதவியினைச் செய்வார்களா? நிறுத்திவிட்டால் ஆண்டுதோறும் நடைபெறுகிற தொடர் செலவுகளுக்கு நாம் என்ன செய்வது? ஆகவே தொடர் செலவுகளுக்கு அவர்கள் பொறுப்பு ஏற்காத சூழ்நிலையில், நாம் இந்த ஆண்டு 6 கோடி ரூபாயை வாங்கி செலவழித்துவிட்டு, வருகிற ஆண்டில் ஏற்படக்கூடிய தொடர் செலவுகளை எண்ணிப் பார்க்காது அந்தப் பணத்தைப் பயன்படுத்துகிற நேரத்தில் என்ன ஆவது?

ஆகவே நாம் போட்ட திட்டங்களின் சிறப்புத் தன்மை—சிறப்பு அம்சம் என்னவென்றால், தொடர்ச் செலவுக்கென மட்டும் இத்தொகையைப் பயன்படுத்தாமல் மூலதனச் செலவுக்கும் பயன்படுத்தியிருக்கிறோம் என்பதுதான். பல்வேறு வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் (அக்ரோ சர்விஸ் கோவாப்ரேடிவ்) போக்குவரத்துத்துறையில் பொறியியல் சங்கங்கள், மீனவர் சங்கங்கள் போன்ற அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு மத்திய உதவியை பயன்படுத்தியதனால், நிதி நிறுவனங்களில் இருந்து பல மடங்கு கூடுதலாக உதவி பெற்று, மேலும் பல வேலை வாய்ப்புகளை வரும் ஆண்டுகளில் ஏற்படுத்துவதுதான் நமது நோக்கமாகும். மத்திய அரசு நமக்கு ஒதுக்கிய 6 கோடி ரூபாயில் 5.59 கோடி ரூபாய்வரை—அவர்கள் தருவார்கள் என்று—எதிர்பார்த்து நாம் செலவு செய்திருக்கிறோம் என்பதை அம்மையார் அவர்கள் எழுப்பிய அந்தக் கருத்துக்கு நான் விடையாக விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அமைச்சர்களுடைய தொகுதிகளிலே காரியங்கள் எல்லாம் நடைபெறுகிறதைப் பார்த்து மற்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளிலே அந்த மாதிரி காரியங்கள் நடைபெறவில்லையே என்று குறைப்பட்டார்கள். அவர்கள் சொல்கிறபோது அவர்களின் தொகுதியில் எவ்வளவு கோடி ரூபாய் வேலைகள் நடந்திருக்கிறது என்பதைச் சொல்லாவிட்டாலும் அரங்கண்ணல் அவர்கள் ஞாபகப்படுத்தியுள்ளார்கள். ஆகவே, அமைச்சர்கள் தொகுதி, மற்றவர்கள் தொகுதி என்று பாராமல் காரியங்கள் நடைபெறவேண்டும். ஒருவேளை அமைச்சர்களின் தொகுதிகளிலே செலவு அதிகரித்திருக்குமானால் அமைச்சர்களே உணர்ந்தால் அவர்களே முன்வந்து குறைத்துக் கொண்டால் அது மாண்புமிகு உறுப்பினர்கள் குறைபடாமல் இருப்பதற்கு உதவியாக இருக்குமென்று கருதுகிறேன்.

திருவாரூரிலே பஸ் ஸ்டாண்டு கட்டுவதைப் பற்றிக் கூட மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் அது தேவையா என்று கேட்டார்கள். வரட்டும். தேர்தல் வரும். அந்த நேரத்தில் இந்த அம்மையார் தான் பஸ் ஸ்டாண்டு கட்டுவது தேவையா என்று கேட்டார்கள் என்று சொல்கிறேன்.



திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, நான் பஸ் ஸ்டாண்டு வேண்டாமென்று சொல்லவில்லை. சென்னையிலே உள்ள பஸ் ஸ்டாண்டு கவனிக்கப்படாமல் இருக்கிறபோது அங்கே இப்படி ஒரு பஸ் ஸ்டாண்டு தேவையா என்று தான் கேட்டேன். அதுவும் 6 லட்ச ரூபாயில் முதல்வரின் தொகுதியிலே தேவையா என்று தான் கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திருவாரூர் என்னுடைய தொகுதி அல்ல; அது கருணாநிதி தொகுதி தான். ஆகவே அது கருணாநிதி தொகுதி. அந்த ஊருக்கு ஏதாவது நான் செய்யாவிட்டால் சொல்ல மாட்டார்களா? இந்த ஊரிலேயே பிறந்து, வளர்ந்து, படித்தவன் அந்தப் பகுதிக்கு எதுவுமே செய்யவில்லையே என்று சொல்லமாட்டார்களா. நாளை அம்மையாரே கேட்டகலாம். 'உங்களுக்கு சொந்த ஊருக்குக் கூட நன்மை செய்யவேண்டுமென்ற நன்றி இல்லையே' என்று கேட்கலாம். ஆகவே, அப்படிப்பட்ட கேள்வி எழக்கூடாதென்பதற்காகவே இதைச் செய்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய திரு. காளிமுத்து அவர்களும், திரு. லத்தீப் அவர்களும் தமிழ் பற்றிய ஒரு கருத்தரங்கையே நடத்தியிருக்கிறார்கள். அது காரசாரமான விவாதமாக இருந்தாலும் நல்ல சுவையான தமிழ் அதிலே பெருகி வந்தென்பதற்காக அந்த நண்பர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

காளிமுத்து அவர்கள் சொன்னார்கள். இந்த அரசு அச்சாணி இல்லாமல் ஓடுகிறது என்று. ஆகவே, ஓட்டுகிற சாரதி நிச்சயமாக பாராட்டப்பட வேண்டியவர். ஏனென்றால் அச்சாணி இல்லாமல் தேரை ஓட்டுவது பாராட்டப்படவேண்டிய ஒன்று தான். ஆனால் சில இடங்களில் சக்கரமே இல்லாமல் தேர் ஓட்டப்பட்டு அது கவிழ்ந்து விட்டதையும் பார்க்கிறோம்.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதை பொன்னப்ப நாடார் அவர்கள் சார்பாக சொல்லியிருந்தால் மகிழ்ச்சியோடு நான் வரவேற்றிருப்பேன். ஆனால், மாண்புமிகு முதல்வர் இதைச் சொல்வது எந்த விதத்தில் பொருத்தமென்று தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் எதைச் சொன்னேன். அவர் எதைச் சொன்னார் என்று புரியவில்லை. நான் சொன்னது சில இடங்களில் சக்கரம் இல்லாமலே தேர் ஓடி கவிழ்ந்திருக்கிறதென்று குறிப்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 28

பிட்டேன். ஆனால் காளிமுத்து அவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள் என்று கொஞ்சம் விளக்கமாக புரியும்படி சொன்னால் பயனுள்ளதாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பாண்டிச்சேரியைத் தான் உங்களுக்கே உரிய தமிழில் குறிப்பிடுகிறீர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இங்கே சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறபோது இரண்டு காங்கிரசும், கம்யூனிஸ்ட் கட்சியும், அண்ணா தி.மு.க.வும் எல்லாம் ஒன்றாகிற சூழ்நிலை இருப்பது போல அங்கேயும் காங்கிரசும், தி.மு. கழகமும் சேர்ந்து செயல்பட்டிருக்கிறதென்பதை என்னிடம் தமிழை மட்டுமல்லாமல் அரசியலையும் கற்றுக்கொண்ட காளிமுத்து உணர்வார் என்று கருதுகிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது அவர் பேசுகிற போது 'முத்து எடுக்கப்போய் சிப்பி எடுப்பது போல்' என்று சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், கடலிலே சிப்பி எடுத்தபிறகுதான் அதில் இருந்து முத்துக்களை எடுப்பார்கள். அதுபோல முதலிலே 184 சிப்பிகளை தேர்ந்தெடுத்து, இன்றைக்கு சிப்பிகள் போக 170 நன்முத்துக்கள் எங்களிடம் மிஞ்சி இருக்கிறதென்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே நான் கிளிஞ்சல் என்றுதான் குறிப்பிட்டேனே தவிர வேறு மாதிரி குறிப்பிடவில்லை. முதல்வர் அவர்கள் தனக்கே உரிய நடையில் முத்து எடுக்கப்போய் சில பேர்கள் சிப்பி எடுக்கிறார்கள் என்று என் மேல் உள்ள கோபத்தின் மூலம் அண்ணன் மதுரை முத்துவை தாக்குகிறார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் காளிமுத்துவைத் தான் குறிப்பிட்டேனே தவிர வேறு முத்துவை குறிப்பிடவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொது விவாதம் முடிவுற்றது. இனி மேல் மானியக் கோரிக்கை மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



**7. 1973-74-ம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.**

**நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை என். 1 நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 55,25,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக்கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 2 மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, when there are no cut motions, you can straightaway put the Demands to the vote of the House.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானம் இருக்கிறதை எல்லாம் சேர்த்து பொதுவாக கேட்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, வெட்டுத் தீர்மானம் சில மானியங்களிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. வெட்டுத் தீர்மானம் இல்லாத மானியங்களை முதலிலே போட்டுவிட்டு மீதியைப் பின்னால் எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்தையும் படிக்கிறேன். அதை வற்புறுத்தவில்லை என்று சொன்னால் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே தங்கமணி :** தலைவர் அவர்களே, எல்லாத் தீர்மானங்களின் மீதும் வெட்டுத் தீர்மானங்கள் இருப்பதாகத் தெரியவில்லை, ஆகவே, மானியங்கள் வருகிறபோது, வெட்டுத் தீர்மானங்கள் இல்லாததை தனியாகப் போட்டுவிட்டு, மீதியை தனியாகப் போட்டால் அதன் மீது விவாதம் நடத்த வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்வது. வரிசையாக இருக்கிறது. நான் பொதுவாகப் படிக்கிறேன். வெட்டுத் தீர்மானங்களை எதிலே எல்லாம் வற்புறுத்துகிறீர்களோ, அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதிலே,

'To discuss the need to confirm all Section Writers numbering 240 who are still kept as temporary ' என்று

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்கள் ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்தையும் படிக்கிறேன் என்று சொல்கிறார்கள். அதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா இல்லையா என்று சொன்னால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொரு வெட்டுத் தீர்மானத்தையும் படிக்கிறேன். அதிலே எதையெல்லாம் வற்புறுத்துகிறீர்கள் என்று சொல்லி விட்டால் அதைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம். மானியக் கோரிக்கை 3-லிருந்து 5 வரை வெட்டுத் தீர்மானங்கள் இல்லை. மானியக் கோரிக்கை 6-லே தான் வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

" To discuss the need to confirm all Section Writers numbering 240 who are still as Temporary "

பல மானியங்களின் மீது வெட்டுத் தீர்மானங்கள் இல்லை. ஆகவே, அதையெல்லாம் அனுசரித்து நேரத்தை குறைக்கலாம் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே. 5, 6 கட் மோஷன்கள் கொடுத்திருக்கிறேன். ஆனால் இரண்டே இரண்டின் மீது தான் நான் பேசப் போகிறேன். டிமாண்ட் நெம்பர் 6. டிமான்ட் நெம்பர் 16. ஆக இந்த இரண்டே இரண்டுக்கு மட்டும் தான் கட் மோஷனை வற்புறுத்துகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய கருத்துக்களை சொன்னீர்கள். மற்றவர்களும் இதுபோல கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்தை மட்டும் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 3-லிருந்து 5 வரையுள்ள நிதிக் கோரிக்கைகளின் மேல் வெட்டுத் தீர்மானங்கள் இல்லை. ஆகவே, அந்த மூன்றையும் ஒன்றாகப் பிரேரிக்கும்படி முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 3 மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் 9,51,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் 83,37,600-க்கு மேற்படாத. தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் '

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் 10,98,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,65,41,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,60,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 44,53,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 56,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



**நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,24,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 16—கல்வி.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 16—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,41,63,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to meet the demands of 'Second Grade Tamil Teachers' in the Secondary Schools, I move—

'That the allotment of Rs. 7,41,63,900 under Demand No. 16—Education be reduced by Re. 1'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 16—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,41,63,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 17—மருத்துவம்.**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 17—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,52,32,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 18—பொதுச் சுகாதாரம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 18—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 19—வேளாண்மை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 19—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,60,37,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 20—மீனளம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 20—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 48,67,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 21—கால்நடை வளர்ப்பு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 21—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



நிதிக் கோரிக்கை எண் 22—கூட்டுறவு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 22—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,35,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 23—தொழில்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 23—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 44,28,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,57,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 26—கதர்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 26—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1974 மார்ச் 28

நிதிக் கோரிக்கை எண் 27—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை என் 27—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,10,97,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 28—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

' நிதிக் கோரிக்கை என் 28—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,36,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 29—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை என் 29—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



1974 மார்ச் 28]

நிதிக் கோரிக்கை எண் 32—பொதுப்பணிகள்—பணிகள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை என் 32—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,47,65,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை என் 33—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,75,98,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 34—பொதுப்பணிகள்—உதவி மானியம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை என் 34—பொதுப்பணிகள்—உதவி மானியம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 35—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை என் 35—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 87,28,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள்.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 37—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,72,71,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 38—பல்வகை.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 38—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 40—காட்டு வளத் துறை.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 40—காட்டு வளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 45—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 45—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,11,01,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 46—பாசனம் குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 46—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,32,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 47—பொதுப்பணித் துறை குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 47—பொதுப்பணித் துறை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,56,94,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 48—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 48—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 43,03,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 52—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 52—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,26,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

(8) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(9) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.





(10) 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

அ) நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,68,33,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 3,68,33,900 under Demand No. 29, Labour including Factories be reduced by Rs. 100'.

THIRU A. SUBRAMANIAM: Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 3,68,33,900 under Demand No. 29, Labour including Factories be reduced by Rs. 100'.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, ஒரு தொழிற் சாலைக்கு ஒரு சங்கம் துவக்கி தொழில் அமைதி ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,68,33,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, to discuss the need to abolish overtime occupation and to compel proportionate increase in the number of workers by a suitable legislation, I move—

'That the allotment of Rs. 3,68,33,900 under Demand No. 29, Labour including Factories be reduced by Rs. 100'.

THIRU J. JAMES: Sir, to discuss the desirability to give permanent jobs for those who are working under apprentice training scheme after the expiry of their period of apprenticeship, I move—

'That the allotment of Rs. 3,68,33,900 under Demand No. 29, Labour including Factories be reduced by Rs. 100'

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to set up Minimum Wages Committee for Hotel Workers, I move—

'That the allotment of Rs. 3,68,33,900 under Demand No. 29—Labour including Factories, be reduced by Rs. 100'.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,92,23,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU B. VENKATASWAMY : Sir, to discuss the need to start construction of more houses in the rural areas, I move—

'That the allotment of Rs. 3,92,23,800 under Demand No. 32, Housing, be reduced by Rs. 100'.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு தவறியது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,92,23,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கிராமங்களில் குறைந்த வருமானம் உள்ள கூலித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 3,92,23,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுக்காத் தலைநகரிலும் வீட்டு வசதி வாரியக் கிளைகள் ஏற்படுத்தி வீடு கட்டும் திட்டம் பற்றி விவாதிக்க—

'That the allotment of Rs. 3,92,23,800 under Demand No. 32—Housing be reduced by Rs. 100'.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



THIRU J. JAMES : Sir, to discuss the necessity to expand the activities of the Housing Board to all the districts and to construct buildings to solve the rural housing problem also, I move—

'That the allotment of Rs. 3,92,23,800 under Demand No. 32—Housing be reduced by Rs. 100'.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to institute an efficient and sufficiently large repair squad to maintain the upkeep of all the houses under the State Housing Board, I move—

'That the allotment of Rs. 3,92,23,800 under Demand No. 32—Housing be reduced by Rs. 100'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வருகின்றன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கை எண் 29—"தொழிற்சாலைகளும் தொழிலாளர்களும்" என்ற தலைப்பின் கீழும், மானியக் கோரிக்கை எண் 32—"வீட்டு வசதி" என்ற தலைப்பின் கீழும் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளும் என்னுடைய உரையும் (*), இன்னும் குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், மத்திய கூட்டுறவு வீடு கட்டும் அடமானச் சங்கம் ஆகிய வாரியங்கள் ஆற்றும் பணியைக் குறிப்பிடுகின்ற வகையில் உள்ள விளக்கக் குறிப்புகளும் அச்சிட்டு அவையின் முன் மாண்புமிகு அங்கத்தினர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே நான் முன்னுரையாக விரிவாக எதுவும் கூறவேண்டாம் என்று நினைக்கிறேன். என் உரையைப் படித்ததாகவே ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசின் நோக்கம் எல்லாம் தொழில் வளம் பெருகவேண்டும், தொழிலாளர் நலன் பேணிக் காக்கப்படவேண்டும் என்பதுதான். தொழில் தகராறுகள் ஏற்பட்டு தொழில் அமைதி குறைகின்ற சூழ்நிலை உருவாகும் நேரங்களில் எல்லாம், தொழிலாளர் நலத்தை கருத்தில் கொண்டு அரசு செயல்பட தயங்கியதே இல்லை. அண்மையிலே மாநில அளவில் நடந்த பஞ்சாலை தொழில் தகராறு தீர்க்கப்பட்டு, தொழிலாளர் தங்கள் வேலை நிறுத்தத்தை நிறுத்தி வேலைக்கு திரும்பியதை அங்கத்தினர்கள் அனைவரும் அறிவார்கள்.

---

(*) 866–882-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. க. இராசாராம்] [1974 மார்ச் 28

தொழிலாளர் பிரச்னைகளை கட்சிக் கண்ணோட்டத்திற்கு அப்பால் நின்று பார்த்து தொழிலாளர் பிரச்னைகள் அணுகப்பட்டு தீர்வு காணப்பட்டன என்பதற்கு சாட்சியாக, நான் பி. அண்டு சி. மில்லில் நடந்து முடிந்த வேலை நிறுத்தத்தை சுட்டிக் காட்ட விழைகிறேன். மூன்று நான்கு கட்சிகள் சேர்ந்த தொழிற் சங்கம் இயங்கிவரும் அந்த ஆலையில் அத்தனை கட்சியைச் சேர்ந்த அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலே ஒரு உடன்பாட்டை உருவாக்க அரசு வழி வகுத்ததை மாண்புமிகு அங்கத்தினர்கள் அறிவார்கள்.

ஆகவே, தொழிலாளர்களின் நலனை மட்டும் கருத்தில் கொண்டுதான் அவர்களின் பிரச்னைகள் இந்த அரசால் கவனிக்கப்பட்டு தீர்வுகள் காணப்படுகின்றன. மின்வெட்டால் நாம் ஓரளவு பாதிக்கப்பட்டாலும், 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நிலைமை ஓரளவு சீராகவே இருந்து வந்திருக்கிறது. 1972-ம் ஆண்டில் நடந்த கதவடைப்புகள், வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 356 என்றால், 1973-ம் ஆண்டில் நடந்தவை 314 தான். மேலும் 1972-ல் ஏற்பட்ட மனித ஆற்றல் இழப்பு நாட்கள் (Mandays lost) 37,18,448 என்றால், 1973-ல் 20,56,995 ஆகும். ஆகவே, 1972-ம் ஆண்டைவிட 1973-ம் ஆண்டு தொழில் அமைதியிலே நல்ல முன்னேற்றம் இருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன்.

நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர் தோழர்களுக்கும் இடையே நல்ல சுமுகமான உறவு கடந்த ஆண்டிலே நிலவி வந்ததாகவே நான் கருதுகிறேன். தொழிலாளர் நலன் கருதி அவ்வப்போது இந்த அரசு மாநில தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவைக் கூட்டி தொழிலாளர் தலைவர்களின் நல்ல பல கருத்துக்களையும் பெற்று அதற்கேற்ப காரியங்கள் முடிந்தவரை ஆற்றி வந்திருக்கிறோம் என்பதை அங்கத்தினர்கள் அறிவார்கள்.

இவ்வாறு அவ்வப்போது ஏற்படும் தொழில் தகராறுகள் எங்கெங்கு காணினும், அது மாநிலத்திலே உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் ஆனாலும் சரி, அல்லது விம்கோ தொழிற்சாலை தகராறு ஆனாலும் சரி, அன்றி ராணிப்பேட்டையில் உள்ள "பாரி கம்பெனி" தொழில் தகராறு ஆனாலும் சரி, அல்லது டாக்ஸி தொழிலாளர்கள் தகராறு என்றாலும் சரி, அல்லது தனியார் துறையை விடுத்து பொதுத் துறையான போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் மத்தியிலே ஏற்படுகின்ற வேலை நிறுத்தம் ஆனாலும் சரி, அன்றி மின்வாரியத் தொழிலாளர்கள் மத்தியிலே ஏற்பட்ட வேலை நிறுத்தம் ஆனாலும் சரி, அவற்றிற்கெல்லாம் உடனுக்குடன் பரிகாரங்கள் தேடி தொழிலாளர் நலன் காத்திட இந்த அரசு ஆவன செய்து வந்திருக்கிறது.



1974 மார்ச் 28] [திரு. க. இராசாராம்]

இது தவிர, தொழிலாளர்களுக்கு ஆக்கபூர்வமான நன்மைகளை இந்த அரசு அவ்வப்போது செய்து வந்திருக்கிறது. தொழிலாளர்களுக்கு ஏற்படும் சட்டச் சிக்கல்களைத் தீர்த்துவைக்க மூன்று குழுக்களை சென்னை, கோவை, மதுரை போன்ற மூன்று பெரிய நகரங்களிலே அமைத்துத் தகுதி வாய்ந்த நீதித் துறையிலும், தொழிலாளர் நலத் துறையிலும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற வல்லுநர்களை நியமித்துள்ளது. குறைந்த அளவு ஊதியங்களைத் திருத்தியமைக்க பொடி தயாரிக்கும் தொழில், வாசனை தாம்பூல புகையிலை தயாரிக்கும் தொழில், சாலை போடுதல், கட்டிடங்கள் கட்டுதல் போன்ற தொழில்களுக்குக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. பல தொழில்களுக்குக் குறைந்த ஊதிய அளவை நிர்ணயம் செய்திருக்கிறது.

பிடித் தொழிலாளர்களுக்கு 1973-ம் ஆண்டில் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டாலும் அவை கால நிலையை ஒட்டி போதாது என்று பரவலாகக் கருதப்படுவதால் அவற்றைத் திருத்தியமைக்கும் யோசனையும் அரசின் ஆய்வில் உள்ளது. குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்து, அவர்களின் குறைந்த ஊதியத்தை நிர்ணயித்த அரசு, திரு. கார்த்திகேயன், வருவாய்த் துறை வாரிய உறுப்பினரவர்களின் தலைமையில் ஒரு குழுவை நியமித்து அவர் அறிக்கையை ஏற்று தஞ்சை நீங்கலாக உழவுத் தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதியத்தைத் திருத்தி அமைத்து ஆணை பிறப்பித்துள்ளது.

இன்னும் தொழிலாளர் நலச் சட்டம், எடைகள்-அளவை குறித்த சட்டங்கள் நன்கு செயல்படவும் அமல்படுத்தவும், அரசு ஆவன செய்து வந்திருக்கிறது. கடந்த பேரவையின் கூட்டத் தொடரில் அங்கத்தினர்கள் வெளியிட்ட கருத்தை ஏற்று இந்தச் சட்டங்களை நன்கு அமல்படுத்தும் நோக்கத்தோடு உதவித் தொழிலாளர் நல ஆய்வாளர்களின் (Deputy Inspectors) எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் 50 புதிய பதவிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. புதியதாக ஒரு (Joint Commissioner of Labour) பதவிக்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தொழிலாளர் நலத் துறையில் நல்ல பயிற்சி அளிக்கவும், தொழிலாளர் தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் ஒரு தொழிலாளர் நல ஆய்வு நிறுவனத்தை நிறுவியது. அதன் மூலம் நல்ல பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த அரசு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தை இயற்றியிருக்கிறது. அதன் கீழ் பணிபுரிய ஒரு குழுவையும் நியமித்திட அரசு விரைவில் ஆணையிடும். இன்னும் தொழிலாளர் ஊட்டச் சத்து உணவுத் திட்டத்தின் மூலம் தொழிலாளர் குடும்பத்திற்கும், மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நல்ல சேவை செய்யப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்குத் தொழிலாளர் நல இன்சூரன்ஸ் திட்டம் நம்முடைய மாநிலத்தில்தான். அவர்களுக்கெல்லாம் வரையறுக்கப்பட்ட சட்ட வரம்புக்கு மீறி தொகையைச் செலவழித்திருக்கின்றோம்.

ஒரிஸாவில் சட்ட வரம்புக்குள்ளேதான் செலவழிக்கப்படுகிறது.

குஜராத்தில் 21 லட்சம் சட்ட வரம்புக்கு மேல் அதிகமாக செலவழிக்கப்படுகிறது.

பீகாரில் 9 லட்சம் அதிகம் செலவு.

ஆந்திராவில் 7 லட்சம் அதிகம் செலவு.

மராட்டிய மாநிலத்தில், தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கும். இந்த மாநிலத்தில் கூட, சட்ட வரம்புக்குள்தான் செலவு நடக்கின்றது.

மத்திய பிரதேசமும் வரம்பிற்குள்தான்.

மேற்கு வங்கத்தில் ரூ. 23 லட்சம் அதிகம் செலவழிக்கப்படுகிறது. அஸ்ஸாமும் கேரளமும் கூட சட்ட வரம்பிற்குள்தான்.

ஆனால், தமிழ்நாட்டில் ரூ. 72 லட்சத்திற்கும் மேல் அதிகப்படியாக ஏற்பட்ட செலவை மாநில அரசே ஏற்றிருக்கிறது. இந்த ஆண்டும் ரூ. 80 லட்சம் வரை ஏறக்குறைய அதிகப்படி செலவு அரசிற்கு ஆகும் எனத் தெரிகிறது. ஆகவே, தொழிலாளர் நலன் காத்திட, தொழில் அமைதி நிலைத்திட இந்த அரசு நல்ல வகையிலே பணிபுரிந்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வசதியைப் பொறுத்தவரை முதன்முறையாக மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்ற வகையில் ஒரு தனி மானியக் கோரிக்கையே உங்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றது.

மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் உணவுக்கும் உடைக்கும் அடுத்து வீட்டு வசதி வருகிறது. வீட்டு வசதியைப் பெருக்குவதில் தமிழக அரசு பிற மாநிலங்கள் கண்டு பெருமைப்படும் அளவில் சாதனைகள் செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் அறிவார்கள்.





குடிசைகளை மாற்றி மாடி வீடுகள் கட்டி நல்வாழ்வு அளித்திருப்பதை மத்திய அரசும் பிற மாநிலங்களும் போற்றிப் புகழ்ந்திருக்கின்றன. முதன் முதலில் குடிசை மாற்று வாரியம் அமைத்த பெருமை தமிழக அரசைச் சாரும். வீட்டு வசதியைப் பெருக்குவதில் பல முனைகளிலே காரியங்கள் ஆற்றிவருகிறோம்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புற நகர்த் திட்டங்களையும் மலிவு வீடுகளையும், குறைந்த வருவாய் உள்ளவர்கட்கும் மத்திய தர வகுப்பினர்களுக்கும் ஏற்ற விதத்தில் கட்டித் தரப்படுகின்றன.

வீட்டு வசதி வாரியம் தாலுகா நகரங்களிலும், மாவட்டத் தலைநகர்களிலும் அரசு ஊழியர்களுக்கு நல்ல வசதியான வீடுகளைக் கட்டித் தருகின்றது.

கிராமப்புறத்திலே வாழும் மக்களுக்கென 'கிராம வீட்டு வசதித் திட்ட'த்தின்கீழ் நபருக்கு ரூ. 4,000 விதம் கடந்த ஆண்டு 77 லட்சம் வரை ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல கிராமங்கள் இதனால் பயன் பெற்றிருக்கின்றன.

இன்னும் சென்னை மத்தியக் கூட்டுறவு வீட்டு அடமானச் சங்கத்தின் மூலம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உதவியோடு 9—3—74 வரை ஏறக்குறைய 6½ கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆக, வீட்டு வசதி வாரியம், கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், கூட்டுறவுத் துறை ஆகிய மும்முனைகளிலே காரியங்கள் ஆற்றப்பெற்று வீடுகளை நிறையக் கட்டித் தருகிறோம்.

வீட்டு வசதி வாரியத்தின் நிர்வாகத்தை மேலும் தீவிரப்படுத்துவதில் கவனம் செலுத்திப் பல காரியங்கள் ஆற்றிவருகிறோம்.

பாக்கிகள் ஒழுங்காக வசூலிக்கப்படவும் கணக்குகளை ஒழுங்காக வைக்கவும் ஓய்வு பெற்ற ஏ.ஜி. திரு. சுப்பிரமணியம் தலைமையில் ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். வீட்டு வசதி வாரியம்பற்றிய அறிக்கையிலிருந்து வாரியத்திற்கு வரவேண்டிய பாக்கியைத் தீவிரப்படுத்துவதில் வாரியம் தற்போது காட்டுகின்ற வேகத்தையும் அதன் பலனையும் ஓரளவு காணலாம். இதை மேலும் தீவிரப்படுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இன்னும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் பணியிலும் இந்த அரசு நல்ல அக்கறை காட்டி வந்திருக்கிறது.

[திரு. க. இராசாராம்] [1974 மார்ச் 28

கோவையிலேயும், மதுரையிலேயும் சென்னையிலேயும் தொழிலாளர்களுக்கென வீடுகள் கட்டப்படுவதை அங்கத்தினர்கள் அறிவார்கள். மதுரையிலே மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களும் நானும் அண்மையிலே மதுரையில் தொழிலாளர்களுக்கென கட்டப்படும் குடியிருப்புக் கால்கோள் விழா நடத்தியபோது குடியரசுத் தலைவரவர்கள் அரசு வீட்டு வசதித் துறையில் செய்து வரும் ஆக்கப்பணிகளைப் பாராட்டியதை நான் நினைவு கூர்கிறேன்.

இரண்டு தினங்கட்கு முன்பு நானும் நண்பர் பழனிவேல் ராசனும் மாண்புமிகு அங்கத்தினர் டி. என். அனந்தநாயகி அம்மையாரும் பி. அண்டு சி. மில் தொழிலாளர்களுக்கென்று கட்டப்பட்டு வரும் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் விழாவில் பங்கெடுத்துக்கொண்டோம்.

இன்னும் அசோக் லிலண்ட், செஞ்சுரி பிளவர் மில், பாண்டியன் ரோட் வேஸில் பணியாற்றும் தோழர்களுக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. பல வீடுகள் தொழிலாளருக்கென திட்டங்கள் தீட்டி காரியமாற்றப்பட்டு வருகிறது.

இன்னும் நெசவாளர்களுக்கென சேலத்திலேயும், கோவையிலேயும், தஞ்சையிலேயும் வீடு கட்டும் திட்டம் தீட்டி காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இது தவிர மலைத் தோட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கென கட்டப்படும் வீடுகளிலே நாம் 97 சதவிகிதம் கட்டி முடித்துவிட்டோம். 'இது மாநிலத்திலேயே ஒரு சாதனை என்று கூறுவேன்.

இன்னும் பர்மா அகதிகளுக்கென மதுரையிலே 400-க்கும் மேற்பட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன.

சென்னையிலே குறைந்த வருவாயிலுள்ள படத்தொழில் இயக்குநருக்கென வீடுகள், படத் தொழிலில் ஈடுபட்டுள்ள குறைந்த வருவாயுள்ள கலைஞர்களுக்கு வீடுகள், எனவும் திட்டம் திட்டப்பட்டு காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

சமீபத்தில் மிகவும் குறைந்த வருவாயுள்ளவர்களும் தங்களுக்கென வீடு ஒன்று பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அரசின் ஒப்புதலோடு வீட்டு வசதி வாரியம் Special Low Cost Housing என்ற ஒரு திட்டத்தைத் தீட்டி 10,000 ரூபாயில் ஒரு வீட்டைக் கட்டி முன் பணமாக ஆயிரம் ரூபாய் கொடுப்பவர்களுக்கு வீடுகளைக் கொடுத்து மீதியை வீட்டில் இருந்துகொண்டே 20 ஆண்டுகளில் வாடகை கொடுப்பது போல் கொடுத்து கழிக்கலாம் என்ற திட்டத்தையும் அறிவித்தது. அத்திட்டத்தின்கீழ் மதுரை,



1974 மார்ச் 28] [திரு. க. இராசாராம்]

கோவை, சேலம், திருச்சி, நாகர்கோவில் வேலூர் ஆகிய நகரங்களில் நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 1,437 வீடுகள் 1973-74-ல் கட்டி முடிக்கப்படும்.

மதுரையிலே கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தைத்திங்களிலே திறந்து சிறப்புரையாற்றினார்கள். இந்த வீடுகளுக்கும், திட்டத்திற்கும் மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பு இருக்கிறது. இதற்காகும் பணம் அனைத்தையும் அரசே ஒதுக்கிட நிதி நிலை இடம் தராது. ஆகையால் இதற்காகும் செலவினங்களுக்கு டில்லியுள்ள HUDCO விடமிருந்து பணம் பெற்று காரியங்கள் ஆக்கிட திட்டம் தீட்டியுள்ளோம். வீட்டு வசதி வாரியம் இதுவரை ஏறக்குறைய 4 கோடி ரூபாய் செலவில் 3,630 வீடுகள் கட்ட அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே சமுதாயத்தில் நலிந்தவர்களுக்கும், குறைந்த வருவாயுள்ளவர்கட்கும் இன்னும் மத்திய தர வகுப்பினருக்கும் வீடுகள் கட்டும் பணியிலே வீட்டுவசதித்துறை நல்ல அக்கறை காட்டி வருகிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர்கள் அறிவார்கள். இன்னும் நான் விரிவாக கூருமல், மாண்புமிகு அங்கத்தினர்கள் தங்கள் கருத்தை தெரிவித்தபின் பதிலளிக்கும் வகையில் என் கருத்தை கூறுகிறேன் என்று சொல்லி அங்கத்தினர்களின் கருத்தை வரவேற்று. இந்த அளவில் அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 13 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நமக்கு இன்னும் ஒன்றைமுக்கால் மணி நேரம்தான் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் 6 நிமிடங்களுக்குமேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, 6 நிமிடத்தில் முடிக்க முடியாது என்பதை முதலில் சொல்லிவிடுகிறேன். எனக்கு 20 நிமிஷங்கள் கொடுக்க வேண்டும். இரண்டு முக்கியமான மானியங்கள் இருக்கின்றன.

இந்த மானியக் கோரிக்கைகளின் மேல் என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். அமைச்சரவர்களின் உரையிலே 1972 ஆம் ஆண்டைவிட 1973 ஆம் ஆண்டிலே வேலை நிறுத்தங்களினாலும் கதவடைப்புகளினாலும் இழந்த மேன்டேஸ் குறைவு, வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் குறைவு என்று பெருமைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், 1972 ஆம் ஆண்டில் 12 இலட்சத்திற்கும் அதிகமாக ஆயிற்று என்றால் அதில் 1972 ஆம் ஆண்டில் நடைபெற்ற பஞ்சாலை

போது வேலை நிறுத்தம்தான் காரணம். அதை நீக்கிவிட்டுப் பார்த்தால் 1972-ஐவிட 1973-லே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முன்னேற்றம் எதுவும் இல்லை என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், 1972-லே தொழிலாளர் நல இலாக்காவின் துணையால் தீர்க்கப்பட்ட தகராறுகள் என்று பார்க்கும்பொழுது 1972-ல் 1,212 தகராறுகள் தீர்க்கப்பட்டன. ஆனால் 1973-ல் 1017 தகராறுகள் மட்டுமே தீர்க்கப் பட்டிருக்கிறது. இப்படி குறைந்திருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன என்று கூற விரும்புவேன். ஒன்று தொழிற் துறையில் மிகுதியான அரசியல் தலையீடு. 1973-ம் ஆண்டு சென்னை நகரத்தில் சிம்சன் போன்ற தொழிற் தகராறுகள் மாதக் கணக்கில் நடந்து கொண்டிருந்ததற்கு இதுவே காரணம்; அத்தகைய அரசியல் தலையீடுகள் தொழிற்துறையில் தவிர்க்கப்படவில்லை என்று சொன்னால் தொழிற் தகராறுகள் அதிகமாவதும், நபர் நாள் இழப்பு அதிகமாகவும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும். தொழிலாளர் நல இலாகா அதிகத் தீவிரமாக முனைப்போடு அக்கறையோடு செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வேன்.

(திரு. துரை முருகன்—தலைமை)

அதிகமான தீவிரத்தோடு அவர்கள் செயல்பட்டாக வேண்டும். பல தகராறுகள் தீர்க்கப்படுவதற்கு மாதக் கணக்கில் ஆகிவிடுகிறது. தமிழகத்து முதலாளிகள் செருக்கும் மமதையும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பல இடங்களில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வேலை நீக்கம் செய்வது சகஜமாக இருக்கிறது. மாதக் கணக்கில் தொழிற் தகராறுகள் நீண்டு கொண்டு போவது சரியல்ல. இந்த மாதிரி விஷயங்களில் தொழிற் தகராறுகளை குறிப்பிட்ட காலவரையறைக்குள் தீர்த்துவிட வேண்டுமென்று சட்ட ரீதியாக நிர்ணயிக்க முடியாது என்றாலும் தொழிலாளர் நல இலாகா அதிகாரிகளைப் பொறுத்த வரை குறித்த காலத்திற்குள் முடித்தாக வேண்டுமென்ற அக்கறையோடு செயல்பட்டாக வேண்டும்.

அமைச்சர் அவர்கள் நோக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். 'தொழில் துறையில் அமைதி நிலவ வேண்டும்', தொழில் செழித்து வளரவும் தொழிலாளர் நலன் ஓங்கவும் உகந்ததொரு சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்' என்ற நோக்கத்தைப் பாராட்டினாலும் அந்த அளவுக்குச் செயல்முறை அமைந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.



அண்மையில் நடந்த பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டத்தைப் பொறுத்த ரை ஆரம்பத்தில் அமைச்சர் அவர்கள் தயங்கிய போதிலும் நல்ல முறையில் டிவு காணுவதற்குப் பெரிதும் உதவினார்கள். அதற்காக உண்மையில் ஞ்சாலைத் தொழிலாளர் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஞ்சாலைத் தொழிலாளர்களுடைய போராட்டம் கட்டுப்பாடான, அமைதி ான போராட்டமாக அமைந்தது. உடன்பாடு ஏற்பட்டு விட்டது. ஆனால் ல பஞ்சாலைகள் அந்த உடன்பாட்டுக்கு இணங்கிவராத தன்மை இருக்கிறது. ம் தேதி பேச்சு வார்த்தை நடந்தது. ஒரு வாரத்திற்குள் ஆங்காங்கு டெபுடி லேபர் கமிஷனர் ஆலைகளை வழிக்குக் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்த வேண்டும் என்று அப்பொழுது சொல்லப்பட்டது. ஆனால் 20 நாட்கள் ஆகியும் லதான் வந்திருக்கின்றன; பல வரவில்லை மதுரை மில்ஸ், அம்பாசமுத்திரம் மில்ஸ் என்ற அந்தக் கூட்டம் இந்த ஒப்பந்தத்திற்கு மாறான ஒரு ஒப்பந்தத்தைத் தனியாகச் செய்துவிட்டு சம்பந்தம் இல்லாத சங்கங்களோடு செய்து விட்டு அதிலேயே நிற்போம் என்று இருந்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே, செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு அவர்களைக் கட்டுப்படச் செய்யவேண்டும்.

கூட்டுறவு ஸ்பின்னிங் மில்சிலும் மற்ற ஆலைகளில் இருக்கும் வேலைப் பளு இருக்கிறது. ஆனால் சம்பளம் குறைவாக இருக்கிறது. மற்ற ஆலைகளைப்போல் இங்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

சஸ்பென்ட் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை லேபர் அட்வைசரி போர்டில் வந்தது. நான் மாதிரி மசோதாவினை வழங்கி பல மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஏன் சட்டமன்றத்தில் மசோதா கொண்டுவரப்படவில்லை என்று தெரியவில்லை. இந்தக் கூட்டத் தொடரிலாவது கொண்டுவர வேண்டும்.

பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரை 1971-ம் ஆண்டில் நிர்ணயிக்கப் பட்ட சம்பளம் 3½ ரூபாய், ரூ. 2.90 காசு. இது இன்றைய விலைவாசிக்கு நிச்சயமாக ஏற்றதல்ல. மாதம் ஒன்றுக்கு 80 ரூபாய் 90 ரூபாயில் காலம் தள்ள முடியாது. அவர்களுடைய ஊதியத்தைத் தேவையான அளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சமீபத்தில் ஆந்திராவில் கூலியை உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய பேரரசில் இருப்பவர் ஆந்திராக்காரர்தான். நாம் ஏற்கனவே 3½ ரூபாய் கொடுத்து வருகிறோம். ஆந்திரத்தில் இன்று உயர்த்தியிருப்பது ரூ. 3.25 தான்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மற்ற இடங்களைச் சுட்டிக்காட்டி இங்கே குறைத்து கூலியை நிர்ணயிக்க வேண்டாம். இந்த மாநிலத்திலுள்ள தொழிலாளர் நலனை உணர்ந்து கூலியை உயர்த்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

வேளாண்மைத் தொழிலாளர் ஊதிய நிர்ணயம் பற்றிச் சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் ஒரு ஆண் தொழிலாளிக்கு 7 ரூபாய்; பெண் தொழிலாளிக்கு 2½ ரூபாயிலிருந்து 3 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் நிர்ணயித்திருப்பது 3½ ரூபாய், 1½ ரூபாய். மாடு கொண்டு வந்தால் 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அரசாங்கம் நிர்ணயித்திருப்பது 10 ரூபாய்தான். நடைமுறையில் இருக்கும் கூலியே போதாது என்ற நிலையில் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்த பிறகு இருக்கின்ற கூலியை விடக் குறைவான கூலியை நிர்ணயித்து அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இருக்கின்ற கூலியைக் குறைப்பதுதான் அரசின் வேலையா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

சென்னையில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்சை அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. அதிலே மாதம் ஒன்றுக்கு 70 வாகன் ரயில்வேக்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் கடந்த நான்கு மாதங்களில் 34 வாகன்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். அங்கிருக்கும் 570 தொழிலாளர்களின் எதிர்காலம் என்ன ஆகும் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த 570 தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதோடு அந்தத் தொழிற்சாலையையும் பாதுகாக்கவேண்டும்.

பல்லடம் லட்சுமி ஆலையில் 2½ மாதமாக வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. இதில் எல்லாத் தொழிற்சங்கங்களும் ஈடுபட்டிருக்கின்றன. ஆலை நிர்வாகம் 23 பேர்களைப் பழி வாங்க எண்ணம் கொண்டிருக்கிறது. இரண்டே முக்கால் மாதமாக வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கும் இந்த ஆலைப் பிரச்சினையில் அரசு தலையிட்டு உடனடியாக முடித்து வைக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

கோவையில் பல்வேறு தொழிலாளர் நல அலுவலகங்கள் இருக்கின்றன. அந்த அலுவலகங்களுக்குப் போவது என்றால் தீர்த்த யாத்திரை போவது போல் அவ்வளவு தொலைவில் இருக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கிறது. மொத்தமாக எல்லாவற்றுக்கும் சேர்த்து மையமான இடத்தில் வைக்க வேண்டுமென்று சட்ட மன்றத்திலும் தெரிவித்தேன்; லேபர் அட்வைசரி





போர்டிலும் சொல்லியாகிவிட்டது. உடனே அதைச் செய்யவேண்டும் லேபர் அட்வைசரி போர்டில் பல முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அமைச்சரை வைத்து எடுக்கும் முடிவுகள் கூட உடனடியாக நிறைவேற்றப்படுவதில்லை. காலம் தாழ்த்தப்படுகிறது. காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். லேபர் அட்வைசரி போர்டு முத்தரப்பு அமைப்பாகும். அதன் முடிவுகளை அரசு முடிவாகக் கொண்டு உடனடியாக அமல்படுத்த வேண்டும். தொழிலாளர் சம்பந்தப்பட்ட எந்தச் சட்டம் வருவதாக இருந்தாலும் லேபர் அட்வைசரி போர்டில் வைத்து பிறகு கொண்டு வரவேண்டும். சட்ட மன்றத்தில் வெறும் விவாதந்தான் நடத்த முடியும். கலந்து உரையாட வாய்ப்பு இருக்காது. லேபர் அட்வைசரி போர்டில் தான் கலந்துரையாடும் வாய்ப்புப் பெற முடியும்.

தனியார் துறைத் தொழில்கள் இருக்கின்றன. அரசுத் துறைத் தொழில்கள் இருக்கின்றன—கவர்ன்மென்ட் எஸ்டாபிளிஷ்மென்ட்ஸ் இருக்கின்றன. கோவாப்பரேட்டிவ் எஸ்டாபிளிஷ்மென்ட்ஸ் இருக்கின்றன. இதிலே இரு வேறு வகையான கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. தனியார் நிறுவனமாக இருந்தால் தலையிடு செய்கிறார்கள். அரசாங்கத் துறையாக இருந்தால் லேபர் இலாகா போக யோசிக்கிறது. பல தடங்கல்கள் இருக்கின்றன. தொழில் உறவுகளைப் பொருத்தவரை பாகுபாடு இல்லாமல் இருக்கவேண்டும். தனியார் துறையாக இருந்தாலும் பொதுத் துறையாக இருந்தாலும் ஒரே மாதிரி கண்ணோட்டத்தில்தான் கவனிக்கவேண்டும். எந்தப் பிரச்சினையையும் தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரும்படி செய்யவேண்டும்.

தொழிலாளர் கல்வியைப் பொறுத்தவரை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பல ஆலை நிர்வாகிகள் தொழிலாளர் கல்வியில் நாட்டம் செலுத்துவது கிடையாது. என்னதான் அட்வைசரி கமிட்டியில் சொன்னாலும் கவனிப்பதில்லை. இதிலே நிர்வாகத்தைக் கட்டாயப்படுத்தி ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்டஸ்ட்ரியல் சேஃப்டி என்று எடுத்துக் கொண்டால் இன்றைய தினம் ஏராளமான விபத்துக்கள் நடக்கின்றன. ஆலை நிறுவனங்களுக்கு இதிலே போதுமான அக்கரை இருப்பதாகத் தெரியவில்லை. நேஷனல் சேஃப்டி கவுன்சில் என்று வைத்திருக்கிறார்கள். அதன் பணிகளிலே ஆலை நிர்வாகிகளும் சரி, அவர்களின் அமைப்புகளும் சரி, கொஞ்சம் கூட அக்கரை கொள்வதில்லை. அவர்கள் அக்கரை கொள்ளும்படி செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ராஜாராம் அவர்கள் அமைச்சராக வந்த பிறகாவது தொழில் உறவில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இல்லாது பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரை பார்த்தால் 1972-ம் ஆண்டு எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு லைவ் ரிஜிஸ்டரைப் பார்த்தால்—இதிலே எல்லோரும் வருவதில்லை; படித்தவர்கள், நகரத்தில் இருக்கக்கூடியவர்கள் தான் வருவார்கள். கிராமத்தில் இருப்பவர்கள் வரமாட்டார்கள்—வேலையில்லாதோர் எண்ணிக்கை 1972-ம் ஆண்டு 4,64,000 பேர். 1973-ம் ஆண்டில் 5,84,000 பேர். ஓராண்டில் 26 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. இதற்காக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க நீங்கள் என்ன திட்டம் போட்டிருக்கிறீர்கள்; ஒன்றுமே இல்லை. மத்திய அரசு போட்டிருக்கிற ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டம் என்ற திட்டத்தைத் தவிர இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை.

(மணியடிக்கப்பட்டு திரு. மா. வே. நாராயணசாமி பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.)

இது நியாயம் அல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்)**: 12 பேர்கள் இருக்கிறார்கள். ஒரு மணிக்கு விவாதம் முடிய வேண்டும். அமைச்சருக்கு அரை மணி நேரம் வேண்டும். அவை 1-30-க்கு முடியவேண்டும். பேரவைத் தலைவர் அவர்கள், உறுப்பினர்களுக்கு ஐந்து நிமிட நேரம் என்றும், துவக்கி வைப்பவருக்கு பத்து நிமிடங்கள் என்றும் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சொல்லிவிட்டு போய் நான் இந்தயிடத்தில் வந்து உட்கார்ந்தவுடன் என்னைக் கேட்டுவிட்டு கோபிப்பதில் அர்த்தம் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்**: பல மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தைப் பார்த்திருக்கிறேன். துவக்கிப் பேசுகிறவர்களுக்கு 20, 30 நிமிடங்கள் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு முக்கியமான மானியங்களின் மீது துவக்கிப் பேசுவதற்கு பத்து நிமிடங்கள் என்றால் எப்படிப் பேச முடியும்? ஆகவே இந்த விவாதம் பயன் உள்ளதாக இருக்க வேண்டுமென்றால் உரிய நேரம் கொடுக்கப்படவேண்டும். நான் ஒரு மணி நேரம் கேட்கவில்லை. பத்து நிமிடங்களில் என்ன பேச முடியும் என்று கேட்கிறேன்.





**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்)**: நீங்கள் ஒரு மணி நேரம் அல்லது ஐந்து மணி நேரம் கூட பேசுவதற்கு எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை. ஆனால் பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டியில் இது குறித்து பேசியிருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் அவைத் தலைவர் இங்கு அறிவித்த போது பத்து நிமிடங்கள் போதாது, எனக்கு அரை மணி நேரமாவது வேண்டும் அல்லது மதியம் அவையை வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டிருக்கலாம். அவர்கள் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள், துவக்கி வைத்துப் பேசுகிறவருக்கு பத்து நிமிடங்கள் என்றும் மீதி உறுப்பினர்களுக்கு ஐந்து நிமிடங்கள் தரவேண்டும் என்றும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். நான் அதை பாலோ செய்ய வேண்டியவனாக இருக்கிறேன்.

**திரு. ஏ. எம். திருப்பூர் மொய்தீன்**: கட்சித் தலைவன் என்ற முறையில் நான் பேசுவதற்கில்லை, உடல் நலம் இல்லாத காரணத்தால். எங்கள் கட்சியிலிருந்து பேசுவது ஒருவர், அவர் எல்லாக் கருத்துக்களையும் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய நேரத்தையும் சேர்த்து என்னுடைய கட்சியின் பிரதிநிதி பேசும்போது கொடுக்கவேண்டும். அதிலும் ஐந்து நிமிடங்கள் நான்கு நிமிடங்கள் என்று சொல்வது முறையல்ல; எனது நேரத்தையும் அவர்களுக்கு சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்)**: துவக்கிப் பேசுகிறவருக்கு பத்து நிமிடங்கள், மற்றவர்களுக்கு ஐந்து நிமிடங்கள் என்று அவைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். 12 பேர்கள் பேசவேண்டியிருக்கிறது. திரு. நாராயணசாமி.

**திரு. ஏ. சுப்பிரமணியம்**: இதற்கு ஆட்சேபனை தெரிவித்து நான் வெளியே போகிறேன்.

(திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் அவையைவிட்டு வெளியேறினார்.)

**திரு. மா. வே. நாராயணசாமி**: ஐந்து நிமிடங்களில் ஒன்றும் பேச முடியாது. இது தொழிலாளர்கள்பற்றிய மானியக் கோரிக்கை.

THIRU J. JAMES: Five minutes is not sufficient.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is too short a time.

[1974 மார்ச் 28

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** ஐந்து நிமிடங்களில் பேசமுடியாது என்பதை உறுப்பினர் என்ற முறையில் நானும் உணருகிறேன். ஆனால் அவைத் தலைவர் அவர்கள் சொன்ன நேரத்தில் நீங்கள் ஏன் சொல்லவில்லை ? அவர்கள் இறங்கிப் போனவுடன், நான் உட்கார்ந்தவுடன், ஐந்து நிமிடங்களில் என்ன பேசமுடியும் என்று சொன்னால் எப்படி ?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பாயின்ட் ஆப் ஆர்டர். ஸ்பீக்கர் இப்போது ஆசனத்தில் இல்லை என்றாலும் தாங்கள் தாற்காலிக அவைத் தலைவர் என்ற முறையில் அத்தனை அதிகாரங்களையும் பெற்றிருக்கிறீர்கள். அப்போதைக்கப்போது தேவைப்படுகிற முடிவுகளை எடுக்க தங்களுக்கு அத்தனை அதிகாரங்களையும் இந்த அவை வழங்கியிருக்கிறது. ஆகவே தேவைப்படுகிற அதிகாரங்களை தாங்கள் எடுத்துக்கொள்ளலாம். யாராலும் ஐந்து நிமிடங்களில் கருத்துக்களைச் சொல்லமுடியாது. ஆகவே தேவைப்படுகிற முறையில் சபையை மாலையில் வைத்துக்கொள்ளலாம் என்ற என் கருத்தைத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. துரைமுருகன்) அதை அப்போதே சொல்லியிருக்கவேண்டும்.

**திரு. கே. என். குமாரசாமி :** 1-30 என்பதை அரை மணி நேரம் கூட்டி இரண்டு மணி வரையில் வைத்துக்கொள்ளலாமே. அப்போது சிறிது நேரம் அதிகமாகக் கொடுக்கலாம் உறுப்பினர்களுக்கு.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இரண்டு மணி வரை வைத்துக்கொள்ளலாம் என்ற கருத்தை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள்.

**திரு. மா. வே. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்றும் ஆதரித்தும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு . . .

**திரு. எம். ஏ. லத்திப் :** பாயின்ட் ஆப் ஆர்டர். முக்கியமான பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறபோது ஐந்து நிமிடங்களில் எதைப் பேசுவது என்று தெரியவில்லை. இந்த மானியம் லட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடியது. திரு. சுப்பிரமணியம், திரு. நாராயணசாமி



974 மார்ச் 28] [திரு. எம். ஏ. லத்திப்]

போன்றவர்கள் இப்பிரச்னையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். ஆகவே அவர்கள் ஐந்து நிமிடங்களில் பேசி முடிக்கவேண்டுமென்றால் அது முடியாத காரியம். மாலையில் வைத்துக்கொள்ளலாம் என்றால் வேறு இன்னல்கள் இருக்கின்றன, பத்திரிகை நிருபர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது, எதிர்க்கட்சித் தலைவர்களும் மறுக்கிறார்கள். ஆகவே ஏன் இந்த சபையை, அதாவது இந்தச் சட்டசபைத் தொடரை இரண்டு நாட்கள் நீட்டிக்கக் கூடாது ? கேரளாவில் ஒவ்வொரு மானியத்திற்கும் இரண்டு நாட்கள் ஒதுக்கி விவாதிக்கிறார்கள். நாம் ஏன் இவ்வளவு குறுக்கி விவாதிக்கவேண்டும் ? ஆகவே இந்தச் சட்டசபைத் தொடரை இரண்டு நாட்கள் நீட்டித்துக் கொள்ளலாம் என்ற என் அபிப்பிராயத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஹௌஸிங் அன்ட் லேபர் மானியக் கோரிக்கைகள் மீது உள்ள விவாதத்தை 11-30-க்குத்தான் ஆரம்பித்திருக்கிறோம். இந்த மானியம் லட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடியது. ஆறு வருடங்களாக பாருங்கள், காலையிலும் மாலையிலும் லேபர் பற்றிய மானியத்தின் மீது விவாதங்கள் நடந்திருக்கின்றன. என்.வி.என். அமைச்சராக இருந்தபோதும் அப்படித்தான் இருந்தது. தொழிலாளர்கள் பிரச்னை வரும்போது சட்டசபையில் அலட்சியமாக இருந்திருக்கிறார்கள். முழுமையாக அந்தப் பிரச்னையை கவனிக்கவில்லை என்று லட்சக்கணக்கான தொழிலாளர்கள் எண்ணக்கூடாது. ஆளும் கட்சி உறுப்பினர் நாராயணசாமி அவர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி எல்லோருக்கும் விரிவாகப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் அரை மணி நேரம் கொடுக்கவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தயிடத்திற்கு வந்து கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் பேரவைத் தலைவரிடம் வாதாடுகிறார்கள். இது அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்தது. இன்று துணை மானியக் கோரிக்கை வரும், அதோடு கூட லேபர் அன்ட் ஹௌஸிங் மானியக் கோரிக்கைகளும் வரும் என்று முடிவு செய்யப்பட்டது. அதை, பேரவைத் தலைவர் முடிவு செய்வதில்லை. ஆளும் கட்சியினர் மட்டும் முடிவு செய்வதில்லை. எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்துதான் பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்யப்படுகிறது. கூடுதல் மணி நேரம் அல்லது கூடுதல் நாட்கள் வேண்டுமென்றால் அங்கு சண்டை போட்டு வாங்கவேண்டும். அப்படி வாங்காமல் இங்கு வந்து பேசுகிறபோது கூடுதல் நேரம் வேண்டுமென்றால் என்ன செய்வது ? ஒதுக்கப்பட்டிருக்கிற நேரத்தை நான் பகிர்ந்தளிக்

கிறேன். விவாதத்தைத் துவக்கும்போது ஆறு நிமிடங்கள்தான் வரும் என்று நான் சொன்னவுடன் உட்கார்ந்திருக்கிற தலைவர்கள் ஆறு நிமிடங்களில் பேச முடியாது என்று வேறு ஏதாவது மாற்று வழி சொன்னால் பரவாயில்லை; நீங்கள் என்ன முடிவு எடுத்தாலும் அதன்படி இந்த அவையை நடத்த நான் தயாராயிருக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திருமதி அனந்தநாயகி, நான் எல்லோரும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணி நேரம் கூடுதல் வைத்தால் முடியுமா ?

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** நாளைக்கு ஒத்திப்போட்டால் நன்றாக இருக்கும். நாளைய மானியத்தை வேண்டுமானால் சிறிது குறைத்துக்கொள்ள லாம். ஆகவே, இதை நாளைக்கு கண்டின்யூ செய்யலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர்வர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இவ்வளவு ஆர்வத்தோடு மாலையிலும் இந்த விவாதம் நடை பெறவேண்டுமென்று விரும்பிக் கேட்பதால், எல்லோரும் மாலையில் வந்து சேருவார்கள் என்ற அடிப்படையில் மாலையில் வேண்டுமானால் விவாதத்தை தொடர்ந்து நடத்தலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மாலையில் வேண்டாம், இரண்டு நாளாக வைத்து நடத்தலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு நாள் என்று சொன்னால் எந்த டிமாண்டை மாற்றி அமைப்பது என்ற பிரச்னை வரும்.

**திரு. துரைமுருகன்:** 2 நாள் வைத்துக்கொண்டாலும், மூன்று மணி நேரம்தான் விவாதத்திற்கு அதிகமாகக் கிடைக்கிறது. ஆகவே, மாலையிலேயே வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாலையில் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. கே. என். குமாரசாமி:** நேரம் இருக்கிற காரணத்தால், திரு. சுப்பிர மணியம் அவர்களுக்கு இன்னும் 5 நிமிடம் கொடுத்தால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அவர் பேசட்டும்.



**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, தங்களுடைய உதவியால் இன்னும் சிறிது நேரம் இந்த முக்கியமான மானியத்தின் மீது பேசுவதற்கு கிடைத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது தொழில் உறவுகளில் அரசியல் தலையீடுகள் ஆங்காங்கு நடந்து கொண்டு இருக்கின்றன. நேற்றையதினம் கூட நான் குறிப்பிட்டேன். அரசாங்கம் நடத்துகின்ற தொழிலில் கூட, பஞ்சாலைக் கார்ப்பரேஷனில் கூட இந்த நிலைமை இருக்கிறது. அருமை நண்பர் ராஜாராம் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபிறகு இந்த மோசமான முறை நீக்கப்பட வேண்டும். ஆகவே, அரசியல் தலையீடு இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டு மென்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்ததாக வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் மிக வருத்தத்தோடு நான் இங்கே சொல்லிக்கொள்வேன். வீட்டு வசதியில் மிகமிகக் குறைவான அளவே இங்கே இந்த மாநிலத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன். பல வீடுகள் கட்டுவதைப் பற்றி இங்கே சொல்லி இருக்கிறார்கள். வீடுகள் கட்டப்பட்டு வந்த போதிலும் சாதாரண ஏழை மக்கள், மிகவும் மோசமான நிலையில் இருக்கும் ஏழை மக்கள், கிராம மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதில் போதுமான அக்கரை காட்டவில்லை என்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். கிராமப்புறங்களில் இருக்கும் சாதாரண மக்களுக்கு இலவச மாக வீடு கட்டிக்கொடுக்கலாம். சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் அரசு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தந்திருக்கிறது. மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் இப்படிப்பட்ட வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, பேசுகின்ற உறுப்பினர் சற்று நேரத்திற்கு முன்பு தனக்கு நேரம் கிடைக்கவில்லை என்று அவையிலிருந்து வெளியேறி மீண்டும் அனுமதியளிக்கப்பட்டு இப்போது பேசிக்கொண்டி ருக்கிறார். ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கும் இந்த மரபை கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நான் தொழிலாளர் நலன் குறித்துப் பேசு வதற்கு நேரம் கொடுக்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, எங்களுக்கும் ப்ரொடக்‌ஷன் வேண்டும். ஒவ்வொரு முறையும் ஆய்வுக்குழுவில் எடுத்துச் சொல்லப் படுகிறது. கட்சித் தலைவர்கள் மட்டும், ஆய்வுக்குழுவில் இடம் பெறவில்லை. அமைச்சர்களும் இடம் பெறுகிறார்கள். பொறுப்பு எல்லோருக்கும் சேர்த்துத் தான். ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில் அந்தக் குழுவில் அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் அவர்களிடத்தில் தங்கள் குறைகளை வைத்து இவ்வளவு நேரம் வேண்டுமென்று சொல்லலாம். அந்த வகையில் அவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பல ஆலை அதிபர்கள் 25 சதவிகிதம் சப்சிடி கொடுக்கும்போதே குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கவில்லை. ஆகவே, கட்டாயமாகச் சொல்லவேண்டும் 'லைசென்சு கொடுக்கும்போதே தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கட்டாயம் செய்ய வேண்டும். பிளான்டேஷன் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் 190 வீடுகள்தான் இதுவரையில் கட்டியிருக்கிறார்கள். ஆகவே, இம்மாதிரியான வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் நல்ல திட்டங்களைத் தீட்டி வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கமானது ஏழைகளுக்கு வீட்டு மனை வழங்க திட்டம் போட்டு இருக்கிறது. ஒரு வீட்டிற்கு ரூ. 150 கொடுப்பதாகச்சொல்லி இருக்கிறார்கள். மாநிலம் பூராவிலும் உள்ள ஏராளமான மக்கள் அதற்கு விண்ணப்பம் கொடுத்து இருக்கிறார்கள். ஏன் அதில் காலதாமதம் செய்கிறார்கள் என்று புரியவில்லை. இந்த மனைக்கட்டு விலைகள் மிகவும் அதிகமாக ஏறிக்கொண்டிருக்கிறது. 1962-63-ல் மொத்தம் வீட்டு வசதிக்காக செலவு செய்த தொகையின் மனைக்கட்டுகளை கையகப்படுத்தல் செலவு 14 சதவிகிதம் தான் என்றால், 1974-75-ல் 29 சதவிகிதம் ஆக உயர்ந்து இருக்கிறது. இப்படி எல்லா இடங்களிலும் மனைக்கட்டு விலை ஏறிக்கொண்டே போகிறபோது, வீடுகள் கட்டும் திட்டம் சரியாகச் செயல்பட முடியாது. எனவே மனைக்கட்டு நிலங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உடனே சட்டரீதியான நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இங்கே நெசவாளர்களுக்கு குடியிருப்புகள் இருக்கின்றன. அவர்கள் கடனுக்கு வட்டி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வட்டியை வரவாக வைத்துக்கொண்டு, கொடுத்து இருக்கும் அசல் தொகையை வஜா செய்து குடியிருப்புகளை அவர்களுக்கே சொந்தமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





நந்தனம் ஹவுசிங் போர்டில் டோர் எண் 155/2 என்ற இடத்தில் ஏ. கே. வில்வம் என்பவர் மாத வாடகை 325 என்ற அளவில் எடுத்து இருக்கிறார். அவர் ஒரு வருட காலமாக வாடகை கட்டாமல் இருக்கிறார். மேலும் தன்னுடைய சொந்தச் செலவில் மாடி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதை முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. இதுபற்றி விசாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வீடுகள் கட்டிக்கொடுக்கும் விஷயத்தில் மிகுந்த அக்கரை காட்டிட வேண்டும். சாதாரணமாக தொழிலாளர் நலத்துறையை 'சின்திரல்லா' என்று சொல்வார்கள். அதோடு வீட்டு வசதி சேர்ந்து இருந்தாலும் அந்த வீட்டு வசதி பாதிக்காமல் வீடுகள் கட்டிக் கொடுப்பதில் குறிப்பாக கிராமங்களில் ஏழை எளியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில் நல்ல கவனம் செலுத்த வேண்டும், அதற்காக பல கோடி ரூபாய் செலவழித்தாலும் தவறு கிடையாது என்று சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மா. வே. நாராயணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கோரியுள்ள மானியங்களை ஆதரித்தும், வரவேற்றும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்ற பெருண்மையை பாட்டாளி மக்கள் மிக நின்றாக அறிவார்கள். அந்த அளவுக்கு தொழில் தகராறுகளிலே, எந்தத் தகராறாக இருந்தாலும் தொழிலாளர்களுக்கு சமூக நீதி கிடைத்திட வேண்டுமென்ற முறையில் இந்த அரசு அந்தத் தொழில் தகராறுகளை நல்ல முறையில் தொழிலாளர்களுக்கு சாதகமான முறையில் தீர்த்து வைத்து இருக்கிறார்கள். அதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்னை. அது ஒரு மிகப் பெரிய பிரச்னை. அதுவும் கோவை மாவட்டத்தில் தேர்தல் வரக்கூடிய சந்தர்ப்பம் பார்த்து, பிப்ரவரித் திங்கள் முதல் தேதியிலிருந்து அந்த வேலை நிறுத்த போராட்டம் அரசியல் நோக்கத்திற்காக தொடங்கப்பெற்றது என்பது என்னுடைய கருத்தாகும். அப்படியிருந்தாலும் கூட பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய பிரச்னை. . .

[1974 மார்ச் 28

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இம்மாதிரி பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் அரசியலுக்காக செய்யப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அது உண்மைக்குப் புறம்பானது. அரசியலுக்காக செய்யப்பட்டிருக்குமானால் இந்தப் போராட்டம் இவ்வளவு அமைதியாக நடந்திருக்காது, வேறு மாதிரியாக நடந்திருக்கும், தப்பான குற்றச்சாட்டை, அமைச்சர் அவர்கள் சொல்லாத குற்றச்சாட்டை, ஆளும் கட்சி உறுப்பினர் சொல்லி வீணாக அரசுக்கு கெட்ட பெயரை தேடிக்கொடுக்க வேண்டாம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்த மறுப்பிலிருந்து அமைதியில்லாத நிலைமையை உண்டாக்குகின்ற வகையில் பல நேரங்களில் அரசியல் நோக்கத்தோடு போராட்டம் நடத்தப்படுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறார்களா ?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஆளும் கட்சியினராலும் நடத்தப்படுகிறது.

**திரு. மா. வே. நாராயணசாமி :** அரசுக்கு மாசு கற்பிக்கக்கூடியது என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மை அல்ல. நானும் தொழிற் சங்கத் தலைவன் என்ற முறையிலே சொல்கிறேன்.

வேலை நிறுத்தப் போராட்டம் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். அருணகிரி ரிபோர்ட் வந்து அதனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலையிலே, ஒன்று முன்னால் செய்திருக்கலாம். இல்லையென்றால் முதல் அமைச்சர் வரையில் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தியதற்குப் பின்னால் வேண்டுமானால் செய்திருக்கலாம். நான் சொல்லக்கூடியது என்னவென்றால் அரசியல் உள்நோக்கமும் அதில் அடங்கியிருக்கிறது. தொழில் தகராறுக்குள்ள பிரச்னைகள் நிரம்ப இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். . .

(திரு. கே. என். குமாரசாமி எழுந்தார்)

**திரு. மா. வே. நாராயணசாமி :** 'ஐ ஆம் நாட் யீல்டிங்'. அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றி ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தொழிலாளிகளுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்கின்ற அந்த நோக்கத்திற்காக மட்டும் அந்தப் பிரச்னையில் தீவிர கவனம் செலுத்தி, மிக வெற்றிகரமான முறையில் பஞ்சாலை தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு பிரச்னையையெல்லாம் நல்ல முறையில் தீர்த்து வைத்திருக்கிறார்கள் அமைச்சர் அவர்கள்.



1974 மார்ச் 28] [திரு. மா. வே. நாராயணசாமி]

ஆகையினால் இந்த அரசு யார் எந்த நோக்கத்தோடு எந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்பதைப்பற்றி கவலைப்படாமல், தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற, நீதி கிடைக்கின்ற, தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுகின்ற பிரச்னை என்றால், அதில் தீவிர கவனம் செலுத்தி, தொழிலாளர்களுக்கு சாதகமாக பல்வேறு தொழில் தகராறுகளை நல்ல விதத்தில் தீர்த்து வைத்திருக்கிறது.

அந்த அடிப்படையில் பார்த்தால் பல்வேறு பிரச்னைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

விம்கோ தொழிலாளர்கள் பிரச்னை, 8 மாத காலமாக விம்கோ தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. விம்கோ நிர்வாகம் தொழிலாளர்களுடைய நியாயமான பிரச்னைகளைக்கூட ஏற்காமல் காலம் கடத்தி வந்தார்கள். கடைசியாக நம்முடைய அரசு அதிலே முழு முயற்சி எடுத்துக் கொண்டதன் விளைவாக இந்தப் பிரச்னை நல்ல முறையில் தீர்க்கப்பட்டது. இப்படி பல்வேறு பிரச்னைகள், தொழில் தகராறுகள் இவைகள் அனைத்தையும் தொழிலாளர்களுக்குச் சாதகமான முறையில் நம்முடைய அரசு தீர்த்துவைத்திருக்கிறது.

தொழிலாளர் நலனுக்காக அரசாங்கம் பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கிறது. தொழிலாளர் நல ஆய்வு நிறுவனம் தமிழ் நாடு இன்ஸ்டியூட் ஆப் லேபர் ஸ்டடீஸ் தொழிற் சங்கத் தலைவர்கள் எப்படி இருந்திடவேண்டும் என்பதற்கு பயிற்சி அளிக்கக்கூடிய நல்ல திட்டத்தை இன்றையதினம் நம்முடைய அரசு நடைமுறைப்படுத்திவருகிறது.

தொழிலாளர்கள் நல நிதி வாரியம், லேபர் வெல்பேர் பண்ட் போர்டு இதற்கு நம்முடைய அரசு ரூ. 5 லட்சம் வழங்குகிறது. அமைச்சர் அவர்கள் அளித்துள்ள குறிப்பிலிருந்து 14 லட்சம் ரூபாய் வரவு வந்திருக்கிறது என்று தெரியவருகிறது. மகிழ்ச்சியான செய்தி. ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு முக்கியமான தொழிற்சங்கத் தலைவர்கள், தொழில் அதிபர்களுடைய பிரதிநிதிகள், ஆகியோர்கள் கொண்ட நம்முடைய அமைச்சர் அவர்கள் தலைமையிலே இயங்கக்கூடிய ஒரு ஆலோசனைக் குழு இந்தக் குழு. இதிலே பல நல்ல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன, பல நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1974 மார்ச் 28

பிறகு மினிமம் வேஜஸ்—குறைந்தபட்சக் கூலி என்பதைப் பார்க்கும் பொழுது, நிச்சயம் நம்முடைய அரசினுடைய முற்போக்கான தொழிலாளர் களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்ற கொள்கையின் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, மிகப் பெரிய சமூகக் கேடு இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ரூ. 2, 2½ ஒரு நாளைக்கு கூலி தரப்படக்கூடிய நிலை எங்கேயோ அல்ல, சென்னை மாநகரத்தில், சென்னை மாநகரத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் இன்றைக்குக் கூட இருப்பதைக் காண்கிறோம்.

அதிலும் குறிப்பாக மெட்டல் இண்டஸ்ட்ரீஸ், ரீ-ரோலிங் மில்ஸ் இவற்றில் எல்லாம் மிக மோசமான நிலையிலே அந்தத் தொழிலாளர்கள் வைக்கப்பட்டி ருக்கிறார்கள். உடனடியாக இதற்கு ஒரு தனிச் சட்டம் கொண்டு வந்து, மெடல் இண்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ரூ. 6 கூலி கிடைக்கக்கூடிய வகையில் நம்முடைய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரியல் செக்டார், ரெகுலர் வொர்க்மென் நிரந்தரமாக பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 300 மாதத்திற்குக் கிடைக்கவேண்டும் என்ற விளக்கத்தை பொதுவாகத் தந்துவிட வேண்டும். நாட்டில் முதலாளிகள் எந்தத் தொழிலாளிக்கும் இன்னும் முழு மையான லிவிங் வேஜஸ் தரவில்லை என்பது ஒரு பெரிய பிரச்னை. ரூ. 500, 600 என்று இல்லாவிட்டாலும், நீட் பேஸ்டு மினிமம் வேஜ்; குறைந்தபட்சம் ரூ. 300 ஆவது தொழில் துறையில் பணியாற்றக்கூடிய நிரந்தர தொழிலாளர் களுக்கு சம்பளம் கிடைக்கக்கூடிய வகையில் திட்டவட்டமான கொள்கையை உருவாக்கவேண்டும்.

மாநில மட்டத்தில் தமிழகத்தில் உள்ள தி.மு.க. அரசு மட்டும் இதை அமுல் நடத்த முடியாது என்பது எனக்குத் தெரியும். அகில இந்திய மட் டத்தில் இது போன்ற தெளிவான கொள்கை உருவாக்கப்படவேண்டும். ரூ. 300 குறைந்தபட்ச கூலி என்பதாக இருந்திடவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

(திரு. துரைமுருகன் தலைமை)

சென்னை மாநகராட்சியில் இருக்கக்கூடிய தாற்காலிக தொழிலாளர்கள் அதுவும் குறிப்பாக மின்சார துறை தொழிலாளர்களுக்கெல்லாம் நீண்ட நெடுங் காலமாக 5, 6, 7 ஆண்டுகளாக பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு



1974 மார்ச் 28] [திரு. மா. வே. நாராயணசாமி]

ஒரு நாளைக்கு ரூ. 3½ கூலி என்ற அவல நிலை இருந்துவருகிறது. அவர்க ளுக்கு வருடாந்திர இன்கிரிமெண்ட் கிடையாது. மஸ்டர் ரோல் ஒழுங்கீனங்கள் இது போன்று தற்காலிக தொழிலாளர்கள் இருக்கக்கூடிய காரணத்தினால் ஏற்படுகிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

ஆகையினால் சென்னை மாநகராட்சி தொழிலாளர்களுக்கு, தற்காலிக தொழிலாளர்களுக்கு, குறிப்பாக மின்சாரத் துறையிலிருக்கும் தொழிலாளர் களுக்கு பாதுகாப்பு கிடைத்தாகவேண்டும். அவர்கள் நிரந்தரமான தொழிலா ளர்களாக ஆக்கப்படவேண்டும். இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலையை இழந்து தவிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அந்தத் துறையில் இல்லை என்றாலும், வேறு ஆல்டெர்நேடிவ் வேலையாக, வேறு துறைகளில் வேலை அளிப் பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நம்முடைய அரசை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

காஷுவல் வொர்கர்ஸ் தொழிற்சாலைகளில் எத்தனையோ ஆண்டுகளாக காஷுவல் வொர்கர்ஸ் என்பதாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இது மிகப் பெரிய தவறு. மாக்சிமம் எக்ஸ்ப்ளாயிடேஷன் இந்தத் தொழிலாளர் களை வைத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதைத் தடுக்கக்கூடிய வகையில் சட்ட ரீதியான பாதுகாப்பு, சட்டப் பின் அணியில் நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதை நாம் கருத்தில் கொண்டு, காஷுவல் வொர்கர்ஸ்-க்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில், அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கக்கூடிய ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் ஆய்வு செய்வது-இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் அவர்கள் செய்கின்ற இன்ஸ்பெக்ஷன் திருப்தியில்லை. தொழில் சம்பந்தமாக இருக்கக் கூடிய தொழிலாளர்கள் எல்லோருமே சேர்ந்து சொல்லக்கூடிய ஒரு குறை இது. எப்பொழுது இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரீஸ் வருகிறார், போகிறார் என்பது பற்றி தகவல் கூட தெரியவில்லை என்று சொல்கிறார்கள்.

சென்னை மாநகரத்தில் என்னுடைய பகுதி முழுக்க முழுக்க தொழி லாளர்கள், தொழிற்சாலைகள் நிறைந்துள்ள பகுதி. அங்கு இருக்கக்கூடிய சில தொழிற்சாலைகளில் குடிக்க குடிநீர் இல்லாத ஒரு நிலை, நல்ல வசதியான ஆரோக்கியமான சூழ்நிலையிலே கழிவு இடம் இல்லாத குறை, இப்படி பல குறை பாடுகள் இருக்கின்றன.

[திரு. மா. வே. நாராயணசாமி] [1974 மார்ச் 28

உள்ளபடியே பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் இன்ஸ்பெக்ட் பண்ணப் போகும் பொழுது தொழிற் சங்க பிரதிநிதிகளை உடன் அழைத்துச் சென்றால், அவர்கள் அந்தக் குறைகளை எடுத்துச்சொல்வார்கள். அப்பொழுது உடனடியாக அப்படிப்பட்ட குறைகளை களைவதற்கு வாய்ப்பாக அது அமையும். அந்த முறையை கையாளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி தொழில் தகராறுகள் விரைவாகத் தீர்க்கப்படவேண்டும் என்பது நீண்ட நாளாக இருக்கிற பிரச்னை. 'டிலே இன் தி கன்சிலியேஷன் ப்ரோஸிடிங்ஸ்' இருக்கக்கூடிய கன்சிலியேஷன் அதிகாரிகளை மட்டும் குறை சொல்லி பலன் இல்லை. பல சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு முதலாளிகள் வரவே மறுக்கிறார்கள். அதற்கு முக்கியத்துவம் தருவதில்லை. மாதக்கணக்கில் தீர்க்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக, தொழிலாளர்கள் பழிவாங்கப் படுகிற பிரச்னைகளில் கன்சிலியேஷன் ப்ரோசிடிங்ஸ் 6 மாத காலத்திற்கு நடந்தால், எப்பொழுது தகராறு சுமுகமாக தீர்க்கப்படுவது, எப்பொழுது தொழில் கோர்ட் அவார்டு பெறுவது, எப்பொழுது தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைப்பது? ஆகையினால் கன்சிலியேஷன் விரைவில் முடிவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். அதிகாரிகள் தரப்பில் நிறைய சங்கடங்கள் இருக்கலாம். அதை நாங்கள் அறிவோம்.

ஆகவே, போதுமான அளவுக்கு அதிகாரிகளுடைய எண்ணிக்கையை உயர்த்தவேண்டும். லேபர் ஆபீசர்களுக்கும், மற்ற தொழிலாளர்களுக்குரிய அதிகாரிகளுக்கும் வாகன வசதி செய்துதரவேண்டும். வெஹிகிள்ஸ், ஜீப், அல்லது கார், அல்லது வான் போன்ற வாகன வசதி செய்து தரவேண்டும். பல நேரங்களில் 6 மணி, 7 மணி நேரம் தொழிற் சங்க பிரதிநிதிகள், முதலாளிகளின் பிரதிநிதிகள் ஆகியோர்களை உட்கார வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். பிறகு அவர்களுக்கு போவதற்கு வாகன வசதி கிடையாது. தப்பித் தவறி முதலாளிகள் கூப்பிட்டு, லேபர் ஆபீசர் முதலாளியினுடைய காரில் போனால்,

(பிற்பகல் 12.30)

அவருக்கு களங்கம் கற்பிக்கப்படுகிறது. ஆகையால் லேபர் ஆபீசர்களுக்கு வாகன வசதிகள் இருக்க வேண்டும், என்பது மிகவும் முக்கியமாகும். அதோடு அலுவலகங்களுக்கு நல்ல கட்டட வசதிகளும் இருக்க வேண்டும். மயிலாப்பூரிலே இருக்கக்கூடிய லேபர் ஆபீசில், லேபர் ஆபீசர் 1, லேபர் ஆபீசர் 2, லேபர் ஆபீசர் 3 என்று மூன்று லேபர் ஆபீசர்களுடைய அலுவலகங்கள் இருக்கின்றன. அந்த கட்டடம் மிகவும் பழைய கட்டடம். திருவெற்றியூர், என்னூர், ஆவடி, அம்பத்தூரில் உள்ளவர்கள் எல்லாம் அங்கேதான்



1974 மார்ச் 28] [திரு. மா. வே. நாராயணசாமி]

போகவேண்டும். இது மிகவும் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, சென்னையில் மையமான ஒரு இடத்தில் லேபர் ஆபீசை கட்ட வேண்டும்; அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

இ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வில்லிவாக்கத்தில் நிறைய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே இ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி கிடையாது. அங்கே உள்ள தொழிலாளர்கள் எல்லாம் அம்பத்தூருக்குத்தான் போகவேண்டும். நீண்டகாலமாகவே அங்கே ஒரு டிஸ்பென்சரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் திறக்கப் படவில்லை; விரைவிலே அங்கே ஒரு டிஸ்பென்சரியை திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே முக்கியமான ஒன்று, வில்லிவாக்கம் ரயில்வே லைனுக்குத் தெற்கே உள்ளவர்களுக்குத்தான் இ.எஸ்.ஐ. ஸ்கீம் பயனைப் பெற முடியும். ரயில்வே லைனுக்கு வடக்கே உள்ளவர்களுக்குக் கிடையாது. வடக்கே ஐ.ஐ.சி. பம்ப்ஸ் தொழிற்சாலை இருக்கிறது, அங்கே ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆகவே, அவர்களும் இத்திட்டத்தின் பயனை அடையத்தக்க வகையில் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, ஐடியல் இன்டஸ்ரியல் ரிலேஷன்சிப் ஏற்பட வேண்டும். தொழிலாளி, முதலாளி நல்லுறவு இருந்தால்தான் தொழில் துறையில் முன்னேற்றம் அடையமுடியும். நேரடி போராட்டங்கள், கதவடைப்புகள் ஏற்படாமல் இருக்கத்தக்க வகையில் தொழிலாளி-முதலாளி நல்லுறவு இருக்க வேண்டும். அதற்குத் தொழிலதிபர்களையும் தொழிற்சங்கங்களையும் ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். லேபர் இன்ஸ்டிடியூட்டிலிருந்துகூட அதற்கு சில ஆலோசனைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் பரிசிலனை செய்ய வேண்டும். பத்து ஆண்டு காலத்திற்குத் தகராறுகள, போராட்டங்கள் எதுவுமில்லாமல் தொழிற் சங்கமும் நிர்வாகத்தினரும் சுமுகமாக நடந்து தொழில் அமைதி ஏற்பட்டால் அந்தச் சங்கத்திற்கு பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும்.

அந்த முறையிலே 'ஃபிக்கி–அவார்டு' கொடுத்தார்கள். அந்த ஃபிக்கி அவார்டு 1½ ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியன் டுபாக்கோ கம்பெனிக்கு கிடைத்தது. நான் ஒரு தொழிலாளர் சங்கத் தலைவர் என்ற முறையிலே அது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அந்த நிறுவனம் சுமார் 15 ஆண்டு காலமாக வேலை நிறுத்தம், கதவடைப்பு இல்லாமல் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1959-ம் ஆண்டு கடைசியில் ஒரு வேலை நிறுத்தப்

போராட்டம் நடைபெற்றது. அதன் பிறகு போராட்டமே கிடையாது. அங்கே அப்படி ஒரு ஐடியல் ஒர்க்கிங் கண்டிஷன், ஐடியல் சர்வீஸ் கண்டிஷன், ஐடியல் இன்டஸ்டிரியல் ரிலேஷன்ஸ் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நல்ல நிறுவனங்களுக்கு அரசாங்கம் ஒரு பரிசு வழங்கும் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்பிளாய்மென்ட் ஆபீஸ்களில் போதுமான அளவுக்கு ஸ்டாஃப் இல்லை. 40 பேர்கள் செய்யக்கூடிய அளவுக்கு வேலை இருக்கிறது. ஆனால் அங்கே 9 பேர் அல்லது 10 பேர்கள்தான் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே ஸ்டாஃப் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹவுசிங் ஸ்கீம் இருக்கிறது. அமைச்சர் இராசாராம் அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக வந்த பிறகு பல பிரச்சனைகளில் நல்ல முறையில் தீர்வு கண்டிருக்கிறார்கள். தொழிலாளர், முதலாளி பிரச்சனையாக இருந்தாலும், எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் எத்தனை முறை வேண்டுமானாலும் பேச்சுவார்த்தை நடத்தத் தயங்காமல் பல பிரச்னைகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவர் வீட்டுவசதி பொறுப்பையும் ஏற்றிருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும். வீட்டுவசதி பிரச்சனையை அவர்கள் நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள். தொழிலாளர்கள் தங்கள் சம்பளத்திலிருந்து—பிராவிடன்ட் ஃபண்டிலிருந்து முன்பணமாக 1,000 ரூபாய் வாங்கிக்கொடுத்தால் 10,000 ரூபாய் அளவிலே வீடு கட்டிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டும் போதாது. சப்சிடைஸ்ட் ஸ்கீமில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். அதற்கு 'சப்சிடைஸ்ட் இன்டஸ்டிரியல் ஹவுசிங் ஃபண்டு' ஒன்றை உருவாக்க வேண்டும். முன்பு 25 சதவிகிதம் மானியம் கொடுக்கின்ற 'சென்ட்ரலி அசிஸ்டட் ஸ்கீம்' இருந்தது. பின்னால் சைனீஸ் அக்ரெஷன் சமயத்தில் நிதி போதாது என்று சொல்லி அதை நிறுத்தி விட்டார்கள். அதன் பின்னால் மீண்டும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை.

தொழிலாளர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டும். குறைந்த வட்டிக்கு அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும். அதற்குத் தமிழ்நாடு ஹவுசிங் கோவாப்பரேட்டிவ் சொசைட்டி இருக்கிறது என்று சொல்லலாம். அங்கே தனிப்பட்டவர்களுக்கு எந்த முறையில் கடன் கொடுப்பார்களோ அதே முறையில்தான் தொழிலாளர்களுக்கும் கொடுப்பார்கள். அதிலே மாற்றம் இருக்க வேண்டுமென்று நான் குறிப்பிடுகிறேன். மற்றவர்களைவிட குறைந்த செலவில் லாபகரமாக தொழிலாளர்கள் வீடு கட்டும் வசதி ஏற்படுத்த வேண்டும். அதற்குத் தொழிலாளர்கள் வீடு கட்டும் சங்கங்களை உருவாக்கி அதன் மூலம் உதவி செய்ய வேண்டும்.



என்னுடைய தொகுதி முழுக்க முழுக்கத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அங்கே இதுவரையிலும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஒரு தொழிலாளர் குடியிருப்பு காலனி கூட உருவாகவில்லை. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வீடுகளைக் கட்டி, குடியிருப்பு காலனி உருவாக்கியிருக்கலாமே தவிர வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் தொடங்கப்படவில்லை. வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அங்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே வீடுகளைக் கட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லை என்று சொல்லலாம். அது சரியல்ல. திருவொற்றியூர், எண்ணூரை தாண்டி சென்றால் அங்கே 'மிஸ்டிரி ஐலன்ட்'—மர்மத் தீவு இருக்கிறது. அங்கே இடவசதி தாராளமாக இருக்கிறது; 10,000 வீடுகளைத் தொழிலாளர்களுக்குக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு ஒரு பாலம் அமைக்க வேண்டும். பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை நான் அறிவேன். அந்தக் கடற்கரை சாலையை வடக்கே நீட்டி, கத்திவாக்கம் வரையில் விரிவுபடுத்தி, மர்மத் தீவிலே தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தர வசதிகள் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ மர்மத் தீவிலே வீடுகள் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். மர்மத் தீவு என்றால் பயமாக இருக்கிறது. அது எங்கே இருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா ?

**திரு. மா. வே. நாராயணசாமி :** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் பயப்பட வேண்டியதில்லை. அவர்கள் அங்கே வந்தால் சுற்றுலாக் கண்ணோட்டத்தோடு, கவர்ச்சி மிக்க காட்சிகளை எல்லாம் காணமுடியும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, இந்த அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளை எதிர்த்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்கள் திருப்தி அளிக்கின்ற வகையில் முழுமையாக இல்லை என்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, எதிர்க் கட்சிக்காரர்கள் சாட்டுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கின்ற அமைச்சர்கள் மூன்று உக்திகளை கையாளுகிறார்கள். முதல் உக்தி—1967-ம் ஆண்டுக்கு முன்னால் இருந்த நிலைமையோடு ஒப்பிடுவது. இரண்டாவது உக்தி—பிற மாநிலங்களை ஒப்பிட்டுக் காட்டுவது. மூன்றாவது உக்தி—மத்திய அரசால் ஏற்படுகின்ற தடைகளைப்பற்றிச் சொல்வது. இப்படிப்பட்ட உக்திகளைக் கையாள்வதால் நீங்கள் பொது மக்களை திருப்திப்படுத்திவிட்டோம் என்று எண்ணிவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அங்கத்தினர் அரங்கநாயகம் அவர்கள் மூன்று உக்திகளை கையாள்வதாகச் சொல்கிறார்கள். இங்கே மூன்று உக்திகள் கிடையாது. ஒரு பொது உக்தியைத்தான் கையாள்கிறோம்; அதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. அரங்கநாயகம் :** அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இங்கே தரப்படுகின்ற விபரங்கள் புள்ளிவிபரங்கள் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்கின்ற குறிப்புகளைப்போல் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, இந்த மானியங்களை எதிர்க்கின்ற நேரத்தில் ஒரு காரணத்தைக் கூற விரும்புகிறேன்.

உண்டி, உடை, உறையுள் இவை மூன்றும் ஒரு மனிதனுக்கு முக்கியமானவை. உறையுள்ளுக்கு இந்த அரசாங்கத்தால் எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டை இங்கே குறிப்பிடுகிறேன்.

விட்டு வசதி வாரியத்தின் சார்பிலே கட்டப்படுகின்ற வீடுகளால் சாதாரண மக்களுக்கு திருப்தி இல்லை என்ற காரணத்தை முன்னிட்டு நான் இந்த மானியத்தை எதிர்க்கிறேன்.

நகர்ப்புறங்களிலே ஏற்படுகின்ற குடிசைகள் எல்லாம் சர்க்கார் புறம்போக்கு நிலங்களிலேதான் அமைகின்றன. பொதுப்பணித் துறையின் மூலமாக அங்கே இருக்கின்ற குடிசைகளை அகற்றுவதால், குடிசைகள் அகற்றப்



படும்போது குடிசை மாற்று வாரியம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரியாமல் அகற்றிவிடுகிறார்கள். ஆகவே, குடிசை மாற்று வாரியத்திற்கும், அந்தத் துறையை பொறுப்பேற்றிருக்கிற அமைச்சருக்கும் தெரியாமல் குடிசைகளை அப்புறப்படுத்தக் கூடாது என்ற ஒரு விதிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** குடிசைகளை மாற்ற வேண்டுமென்றால், சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் குடிசை மாற்று வாரியத்தின் அனுமதி இல்லாமல் யாரும் செய்யக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

கோவையைப் பொறுத்தவரையில், இதே நிலைதான் அங்கும் இருக்கிறது. வீட்டு வசதி வாரியத்தைக் கலந்துகொண்டுதான் செய்கிறார்கள். வீட்டு வசதி வாரியத்திற்குத் தெரியாமல் குடிசைகளை அப்புறப்படுத்தக் கூடாது.

**திரு. செ. அரங்கநாயகம் :** கோவையில் அப்படி இல்லை. பத்து நாட்களுக்கு முன்னதாக கோவை மேற்குத் தொகுதியில் செல்வ சிந்தாமணி ஏரிக் கரையில் இருந்த குடிசைகளை புல்டோசர், லாரிகளைக் கொண்டுவந்து பொதுப்பணித் துறையினர் அழிக்க வந்திருக்கிறார்கள். போலிசார் அதற்குத் துணையாக வந்தார்கள்.

500 குடிசைகளுக்குமேல் அங்கே இருக்கின்றன. அந்தக் குடிசை வாசிகள் ஒன்று சேர்ந்து எதிர்த்து, அதிகாரிகளையும் மற்றவர்களையும் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். கலெக்டருக்கு விண்ணப்பம் கொடுத்து, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே குடியிருப்பவர்களுக்கு அடையாள கார்டு கொடுத்திருக்கிறார்கள். அதுவும் எல்லோருக்கும் கொடுக்கவில்லை; பாதி பேருக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள்.

வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்ட ஏறக்குறைய 150 வீடுகள் அமைச்சர்களால் திறக்கப்பட்டு, 2 ஆண்டு காலமாகியும் இன்னும் காலியாக இருக்கின்றன. அதற்குப் பக்கத்திலே வீட்டு மனைகளுக்கு ஏற்ற 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆகவே, அந்தக் குடிசைவாசிகளுக்கு அந்தப் பக்கத்தில் குடியிருப்பு வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆர்.எஸ். புரம் பகுதியில் அருணைசலபுரம் என்ற இடத்தில் குடிசைகள் இருக்கின்றன. மழை காலத்தில் அங்கே தண்ணீர் தேங்கி போய்வர முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் அதை மேம்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொழிலாளர்களைப்பற்றிப் பேசுகின்றபோது, தொழிலாளர்கள் நலன் என்கிறபோது நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குரிய பங்கினைத் தரவேண்டும். பொதுத் துறையாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் நிர்வாகத்தில் அவர்களுக்குப் பங்கு தரவேண்டும். சேரன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு தந்திருக்கிறார்கள். அதிலுள்ள இரண்டு குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சேரன் போக்குவரத்துக் கழகத்தில் பங்குகளைத் தொழிலாளர்களுக்கு விற்றிருக்கிறார்கள். எதற்காக இப்படி பங்கினை அவர்கள் வாங்கி நிர்வாகத்தில் பங்கு பெறவேண்டும்? உழைப்பே அவர்களது மூலதனம் என்பதை கேலி செய்வதுபோல இது இருக்கிறது. மத்திய சர்க்காரின் நிறுவனங்களில் தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுத்திருக்கிறார்கள், 1972-இல் இருந்தே. அவர்கள் இன்னொன்றையும் செய்திருக்கிறார்கள். தொழிலாளர் யூனியன் கொடுக்கிற 3 பேர்களைக்கொண்ட பானலை வைத்து அதில் அடங்கிய தொழிலாளர் பிரதிநிதிகளையே தேர்ந்தெடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் இங்கே அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படுகிறவர்களை அனுமதிக்கிறார்கள். இத்தகைய தவறுகள் இல்லாமல் நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்குரிய பங்கு தரப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்குக் கொள்கையினால் பாதிக்கப்பட்டிருக்கிற மரம் ஏறும் தொழிலாளர்களது வாழ்க்கைப் பிரச்சினையை ஆராய ஒரு குழுவை ஏற்படுத்தி அவர்களுக்குத் தக்க உதவி செய்வதுபற்றி ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிம்சன் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் இன்னும் பல தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறார்கள். அமைச்சர் கொடுத்த வாக்குறுதிப்படி அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்னும் தண்டையார்பேட்டையில் 98 பஸ் தொழிலாளர்கள் ஊர்வலமாக மதிப்பிற்குரிய திரு. ராகவானந்தம் அவர்கள் தலைமையில் அமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். ஓரிரு நாட்களில் அவர்கள் எடுத்துக்கொள்ளப் படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரை எடுத்துக்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.

மேலும் கோவை டெபுடி கமிஷனர் ஆப் லேபர் ஆபிசில் புதியதாக ஒரு தொழிற் சங்கத்தை பதிவு செய்துகொள்வதற்கு ரூ. 50 கேட்பதாக திரு. ராகவானந்தம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதன்மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

குனி பகுதியில்—மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் பகுதியில் சௌராஷ்டிர நெசவாளர்களிடத்தில் வீடு கட்டும் திட்டத்திற்காக மாதத் தவணை ரூ. 100 கேட்டிருக்கிறார்கள். இந்தத் தவணையைக் குறைத்தால் நலமாக இருக்கும் என்று குறிப்பிட்டு, நான் சொல்லியிருக்கிற கருத்துக்களின் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைத்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1974-75 ஆம் ஆண்டுக்காக—தொழிலாளர் நலன் குறித்துக் கோரியிருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாத் தொழிலாளர்களும், எல்லாச் சங்கங்களும் இன்றையதினம் நமது தொழிலாளர் நலத் துறை அமைச்சரை பாராட்டுகிறார்கள். இங்கே பேசிய திரு. சுப்பிரமணியம் அவர்கள் பஞ்சாலைத் தொழிலாளர்களது சம்பள உயர்வு போராட்ட நேரத்தில், நமது அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினைப் பாராட்டுவதாக இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டில் தொழில் துறையில் ஏற்படுகிற எந்தச் சிக்கலாக இருந்தபோதிலும், அதைத் தொழிலாளர்களுக்குச் சாதகமாகப் பயன்படும் வகையில், தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பெற்றுத் தருவதில் நமது அமைச்சர் அவர்கள் இரவு பகல் பாராமல் பணியாற்றி வருகிறார்கள். இதைப் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தொழிற் சங்கத் தலைவர்களே அறிவார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சு. துரைசாமி] [1974 மார்ச் 28

இன்றைக்கு இங்கிருக்கிற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைக் குற்றம் சாட்ட வேண்டும் என்கிற அடிப்படையில் ஏதோ சில குறைபாடுகளைச் சொல்கிறார்களே தவிர அகில இந்திய தொழிலாளர் நிலைகளோடு நம் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு 1972-ஆம் ஆண்டு ஒரு குழுவை நியமித்து, அருணாகிரி ரிப்போர்ட் கொடுத்து, நம் அரசாங்கம் தலையிட்டு, அதிகமான தொழிலாளர்கள் பஞ்சப்படி சம்பள உயர்வு பெறும் நிலைமையை உருவாக்கியிருக்கிறோம்.

பம்பாயில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு கூட வேலை நிறுத்தம் செய்தார்கள். பெற்ற சம்பளம் என்ன? ஆனால் நம் அரசு பஞ்சாலைத் தொழிலாளர்கள் நம் மாநிலத்தில் அதிக சம்பளம் பெறும்படியாகச் செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக மன்றத்திலுள்ள எதிர்க் கட்சித் தலைவர்களை பணிவோடு கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு மத்திய அரசாங்க போனஸ் சட்டம் குறைந்த பட்சம் 8.33 சதவிகிதம்தான் போனஸ் என்று நிர்ணயித்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டின நிலைமை என்ன? பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அதிகமான போனஸை வேண்டுமென்ற கோரிக்கையை கோவை மாவட்டத்தில் வைத்தோம். நம் அரசாங்கம் தொழிலாளர் நல இலக்கா மூலமாக அதற்கு வேண்டிய ஒத்துழைப்பைக் கொடுத்ததன் பயனாக 8.33 சதவிகிதம் என்று மத்திய அரசாங்கம் நிர்ணயித்தும், அதற்கு மேலும் 4 சதவிகிதம் அதிகமாக கொடுத்தார்கள். இன்னும் சில மில்களில் அந்தச் சட்டத்திற்கும் 5 சதவிகிதம் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

மதிப்பிற்குரிய தலைவர்களைக் கேட்கிறேன்—எனக்குப் பின்னால் பேசக் கூடியவர்கள் தயவு செய்து சொல்லலாம். நம் நாட்டில் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அளிக்கக்கூடிய போனஸ் போல வேறு எந்த மாநிலத்திலாவது—பஞ்சாலைத் தொழில் அதிகமாக இருக்கக்கூடிய மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில், அல்லது வேறு எந்த மாநிலத்திலாவது அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதைச் சொல்ல வேண்டும். எச்.எம்.எஸ்.ஐச் சேர்ந்த திரு. ஏ. சுப்பிரமணியம் அகில இந்திய தலைவராக இருக்கிறார்கள். ஏ.ஐ.டி.யு.சி. சேர்ந்த தங்கமணி இருக்கிறார்கள். அகில இந்திய அடிப்படையில் நம் மாநிலத்தைவிட வேறு எந்த மாநிலத்திலாவது அதிகமாக போனஸ் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்று சொல்லட்டும்.



1974 மார்ச் 28]

**திரு. கே. என். குமாரசாமி:** திரு. துரைசாமி பேசுகின்றபோது நம் மாநிலத்தைத் தவிர வேறு எந்த மாநிலமும் அதிகமாக போனஸ் பெறவில்லை என்று சொன்னார்கள். 1948-இல் இருந்தே கோயம்பத்தூரைச் சேர்ந்த தொழிலாளர்கள் சேர்ந்து பல ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டு, மற்ற மாநிலங்களைவிட அதிகமாகவே பல சலுகைகளைப் பெற்று வந்திருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வெட்டு நஷ்ட ஈடாகட்டும் அதிகமாகவே பெற்றிருக்கிறார்கள். எச்.எம்.எஸ். தலைமையில் போராடித்தான் அந்த நிலைமை தொடர்ந்து வந்திருக்கிறதே தவிர இவர்கள் போராடி போனஸ் டிபரன்ஸ் வாங்கவில்லை என்பதை மனதில் வைத்துப் பேசவேண்டும்.

**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரசாமி அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற எல்லா உடன்படிக்கைகளும் 1958-ல் இருந்து நாங்கள் பங்கு கொண்ட ஒப்பந்தம் ஆகும், ஆகவே இதிலே இந்த அரசு பெருமைகொள்ள ஒன்றுமில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இங்கே நம்முடைய கோவைத் தொழிலாளர்கள் மற்ற இடங்களைவிட அதிகமாகப் பெற்றிருக்கிற லாபத்தைப் போன்று அகில இந்திய ரீதியில் இருக்கிற எச்.எம்.எஸ்., ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி. போன்ற தொழிற் சங்க ஸ்தாபனங்கள் மற்ற இடங்களில் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

(திரு. வை. பாலசுந்தரம் தலைமை)

*** திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, கோவையிலே செய்யப்பட்ட போனஸ் ஒப்பந்தம் மாறுபட்ட ஒரு ஒப்பந்தம். தொழிற் சங்கங்களின் முயற்சியாலே மட்டும் ஏற்பட்ட ஒப்பந்தம். அது இந்த அரசிலே அல்ல, காங்கிரஸ் அரசு இருக்கும்போதே செய்தது. ஆகவே, இந்த அரசிற்கு அதில் பங்கு கிடையாது. காங்கிரஸ் இருந்தபோது செய்த பெருமையை நண்பர் எடுத்துக்கொள்ள முயலுவது வேண்டாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, மாற்றுச் சங்கங்களை இதிலே இழுத்ததால் நான் அதைப்பற்றி பேச வேண்டியிருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேண்டுமானால் இங்கே 20 சதவிகிதம் போனஸை பெற்றிருக்கலாம். ஆனால் இதே மாநிலத்தில் வேறு பல தொழில்களில் 25 சதவிகிதம், 30 சதவிகிதம் எல்லாம் தொழிலாளர்கள் பெற்றிருக்கிறார்கள். இதே தமிழ்

நாட்டில் தமிழ்நாட்டு அரசிற்கு சம்பந்தமில்லாத, மத்திய அரசிற்குச் சொந்தமான நிறுவனம் 30 சதவிகிதம் கொடுத்திருக்கிறதென்பதை துரைசாமி அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே பஞ்சாலை . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்) :** நீங்கள் பின்னல் பேச இருக்கிறீர்கள். அப்போது பேசுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நான் பேச எழுந்தவுடன் பேச அனுமதித்ததால்தான் பேசினேன். இப்படி பேச சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் பேச வேண்டுமென்ற எண்ணம் உள்ளவன் அல்ல.

I do not expect that insinuation. I do not want any insinuation from that particular place.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே. மாண்புமிகு ஏ. சுப்பிரமணியம் அவர்களும், கே. டி. கே. தங்கமணி அவர்களும் இங்கே இந்த போனஸ் பல ஆண்டு காலம் இருக்கிறதென்று சொன்னுர்கள்.

நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூட இன்னொரு தொழிலில் அதிகமாக கிடைக்கிறதென்று சொன்னுர்கள். அதை நான் குறிப்பிடவில்லை. அது எனக்கும் தெரியும். மற்றத் தொழில்களில் எங்கள் சங்கத்தின் சார்பாகக் கூட 30 சதவிகிதம், 40 சதவிகிதம் என்று போனஸ் பெற்றுத் தந்திருக்கிறோம்.

நான் குறிப்பிடுவதெல்லாம் பஞ்சாலைத் தொழில் போன்ற பெரிய தொழிலில் நீங்கள் பெற்றுத் தந்திருக்கிறீர்களா என்பது தான். இதிலே இன்றைக்கு நம்முடைய அரசாங்கம் பக்கபலமாக இருந்ததால்தான் அதைப் பெற்றோம்.

நம்முடைய ஏ. சுப்பிரமணியம் அவர்கள் அரசாங்கத்தின் சம்பந்தம் இல்லாமல்தான் பெற்றோம் என்று கூறினுர்கள். அவருக்கும் தெரியும் எல்லோரும் லேபர் கமிஷனரின் முன்பு இருந்துதான் பேசினோம். அதனுல் இது லேபர் கமிஷனரிடமிருந்து அரசின் கைக்குப் போய்விட்டால், 20 சதவிகிதம் என்றிருப்பதை 25 சதவிகிதம் என்று கொடுக்கவேண்டி வரும் என்ற அச்சத்தில்தான் இந்த மில் முதலாளிகள் இப்படி கீழே இறங்கி வந்தார்கள். இதையெல்லாம் தனிப்பட்ட முறையில் பேசுகிறபோது நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்.



இதை நான் தெரிவிப்பதற்குக் காரணம் இந்த அரசு தொழிலாளர்களுக்கு நியாயமான போனஸ் கிடைப்பதற்கு பக்கபலமாக இருக்கிறதென்பதை தெரிவிக்கத்தான். இதைக் கூட நான் அவரிடம் தனியாக இருக்கிறபோது சொல்லியிருக்கிறேன். நம்முடைய அரசு இந்த அளவிற்கு போனஸ் பெற உதவியிருக்கிறதே, அதற்காக வேண்டி நன்றி சொன்னேமா என்று கேட்டேன். ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கூட நன்றி தெரிவித்திருக்கிறேன் என்று சொன்னுர்கள்.

அதேபோல சம்பள விஷயத்தில் இந்த அரசாங்கம் தலையிடவில்லை என்று சொன்னுல் நாம் இந்த அளவுக்கு அதிகமாக பணம் பெற்றிருக்க முடியுமா? முதல் சம்பள போர்டு சிபாரிசு, 2-வது சம்பள போர்டு சிபாரிசு இவைகளெல்லாம் வந்தும், அவைகளையெல்லாம் அமுல்படுத்த இன்றைக்குப் போராட வேண்டியிருக்கிறதே.

இன்றைக்கு அருணகிரி கமிட்டியின் சிபாரிசை விட கூடுதலாக புள்ளிக்கு 29 பைசா என்று பெற்றுக் கொண்டிருக்கிறுர்கள். அடுத்த ஆண்டு 30 பைசா என்று கூட பெறப்போகிறுர்கள். ஆகவே, இந்த அரசின் அடிப்படை கொள்கையெல்லாம் தொழிலாளர்களுக்கு பக்கபலமாக இருந்து செயல்பட வேண்டுமென்பது தான். (மணி அடிக்கப்பட்டது) பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் குறிப்பிட விரும்புவதெல்லாம் மாலையிலும் விவாதம் இருப்பதால் எனக்குப் பேச சந்தர்ப்பம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விபத்துக்களைப் பார்க்கிறபோது 1971-ம் வருடம் 28,811 என்றும், 1972-ம் ஆண்டு 26,965 என்றும், 1973-ம் ஆண்டு 25,682 என்றும் இப்படியே குறைந்து வந்திருக்கிறது. அதிகமாகவில்லை. அதற்காக இந்த இலாகாவிலே உள்ளவர்களைப் பாராட்ட வேண்டும்.

இங்கே வேலை இழப்பு நாட்களைப் பற்றிச் சொன்னுர்கள். அதிலே கூட 1972-ஐ விட 1973-லே குறைந்திருக்கிறது. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னுர்கள். பஞ்சாலைப் போராட்டத்தால் அதிகமாகி விட்டதென்று சொன்னுர்கள். ஆனுல் போன தடவை சட்டமன்றத்தில் பேசுகிறபோது முந்திய ஆண்டைக் காட்டிக் கூறினுர்கள்.

நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு தொழிலாளர்களுக்கு எல்லாத் தரப்பிலும் நியாயத்தைப் பெற்றுத் தருகிறுர்கள்.

[திரு. சு. துரைசாமி] [1974 மார்ச் 28

ஆனால் இதே சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிடம் சொல்லி சில சட்டங்களை, உரிமைகளைப் பெற்றுத்தரவேண்டும். இன்றைக்கு இருக்கிற மத்திய அரசின் தொழில் தகராறுச் சட்டத்தால் எல்லாவற்றையும் தீர்க்க முடியவில்லை. (மணி அடிக்கப்பட்டது). தலைவர் அவர்கள் மேலும் பேச அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வை. பாலசுந்தரம்):** இன்னும் 13 பேர்கள் பேச இருக்கிறார்கள். மாலையில் இருந்தாலும், ஆளுக்கு 10 நிமிடம் தான் வரும். ஆகவே, சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சு. துரைசாமி:** அதே போல இன்றைக்கு போனஸ் எல்லோருக்கும் கிடைத்தாலும், மத்திய சர்க்கார் அதிலே வருமான வரி வாங்குகிறார்கள். அதற்கு விலக்கு கொடுக்கவேண்டும். அதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

அதேபோல குறைந்தபட்ச குழுபோட்டால் அது 6 மாதங்களிலே அதனுடைய அறிக்கையை கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்தக் குழு சில சமயம் அதனுடைய அறிக்கையைக் கொடுக்க ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு ஆகிறது. ஆகவே, அதை 6 மாதங்களுக்குள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்தபட்ச கூலி நிர்ணயத்தை எல்லாத் தொழிலிலும் மாற்றி அமைக்க வேண்டும். இன்றைக்கு ஏறி இருக்கிற விலைவாசியில் அது மிகவும் அவசியம். பஞ்சாலைத் தொழிலாளர்களைத் தவிர, ஜவுளிக் கடை, கூட்டுறவுச் சாய தொழிலாளர்கள் ஆகியவர்களுக்குக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்ய வேண்டும். இன்றைக்கு இப்படிப்பட்ட தொழில்களில் உள்ளவர்கள் 10 ஆண்டு, 20 ஆண்டுகள் வேலை செய்தாலும் அவர்களுக்கு ப்ராவிடன்ட் ஃபண்டு, கிராஜுவிட்டி போன்றவை கிடைப்பதில்லை. அதையெல்லாம் கிடைக்கச் செய்யவேண்டும்.

அரசாங்க ஊழியர்கள் மாதம் 10 ரூபாய் கொடுத்துவிட்டால், அவர்கள் இறந்துவிட்டால் அவர்களின் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வந்து விடுகிறது. இப்படிப்பட்ட சலுகைகள் எல்லோருக்கும் கிடைக்க முயற்சி எடுத்தால் எல்லோருக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



1974 மார்ச் 28] [திரு. சு. துரைசாமி]

(பிற்பகல் 1.00)

இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை, கிராஜுவிடி ஒரு ஆண்டுக்கு ஒரு மாதம் என்று இருக்கிறது. அது எல்லாத் தொழில்களிலும் இருக்கிற தொழிலாளர்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் தொழிலாளர்கள் இருக்கின்றவைதான் பாக்டரி சட்டத்தின்கீழ் வருகின்றன. எந்த எந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் பேக்டரி சட்டத்தின் கீழ் வருகின்றனவோ அந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் பிராவிடன்ட் பண்ட் வசதி இருக்கவேண்டும், அந்தத் தொழிலாளர்களுக்கு எல்லாம் இ.எஸ்.ஐ. திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும், அந்தத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பென்ஷன் கொடுக்கவேண்டும்.

சமீப காலமாக கோவை மாவட்டத்திலே சில தொழில் தகராறுகள் ஏற்படுகின்றபோது ஆலை முதலாளிகள் எல்லாம் சிவில் கோர்ட்டிற்குப் போகிறார்கள். புதுமையாக இருக்கிறது. அங்கேயுள்ள தொழிலாளர்களை அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்கிறார்கள், அதைத் தடுக்கவேண்டும், தொழில் தகராறுகளை சிவில் கோர்ட்டிற்குக் கொண்டுபோவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இருநூறு பேர்களுக்கு மேற்கொண்டு தொழிலாளர்கள் இருந்தால் அப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம் கூட்டுறவு பண்டகசாலைகள் அமைக்கப் படவேண்டும். சத்துணவு இப்பொழுது 93 தொழிற்சாலைகளிலேதான் கொடுக்கப்படுகிறது. முடிந்த அளவிற்கு எந்த எந்த இடங்களிலே பெண்கள் பணியாற்றுகிறார்களோ அப்படிப்பட்ட இடங்களிலேயெல்லாம் சத்துணவு வழங்குகிற திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். பல்லடம் லட்சுமி மில்லில் தொழிலாளர்களை மில் நிர்வாகத்தினர் வீட்டுக்கு அனுப்பிவிடக்கூடிய முறையிலே முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இ.எஸ்.ஐ. திட்டத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. மூன்று நகரங்களிலே மட்டும் தற்போது உள்ளது. திருப்பூரில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள், இந்த நகரத்திற்கும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவமனை கட்டுவதற்காக இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனிலிருந்து கொடுக்கப்படுகிற பணம் குறைவாக இருக்கிறது. அதை அதிகமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். (மணியடிக்கப்பட்டது).

[1974 மார்ச் 28

*திரு. மு. கோபால்: தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு தான் தொழிலாளர்களுக்கு என்று மே தினத்தைக் கொண்டாடுவதற்காக அரசாங்க விடுமுறை நாள் கொடுக்கப்பட்டது. அதை யாரும் மறுக்கமுடியாது. பல பேர்கள் தொழிலாளர்களைப்பற்றிப் பேசலாம். தொழிலாளர்களுக்காகவே விடுமுறையைக் கொண்டுவந்தது அண்ணாவுடைய அரசுதான், கலைஞருடைய அரசுதான்.

தொழிலாளர்களுடைய பிரச்னைகளை ஒன்றிரண்டு நாட்கள் அல்ல, மாதந் தோறும் பேசலாம். காரணம், ஒரு நாட்டினுடைய வளர்ச்சி தொழிலாளர்களுடைய வளர்ச்சியிலேதான் இருக்கிறது.

குறிப்பாக நம்முடைய கழக அரசு வந்ததற்குப் பிறகுதான் மரம் ஏறுகிற தொழிலாளி கீழே விழுந்து இறந்துவிட்டால் அவனுடைய குடும்பத்திற்கு 1,000 ரூபாய் தருகிறோம்.

அதைப்போலவே கடலில் சென்று மீன் பிடிக்கிறவர்கள் மீன் பிடிக்கும் போது அந்தத் தொழிலாளி இறந்துவிட்டால் அவனுடைய குடும்பத்திற்கு 1,000 ரூபாய் தருகிறோம்.

ஒரு நாள் இந்தச் சட்டமன்றத்திலே ஒரு உறுப்பினர் சொன்னார், மருந்து தெளிக்கிற விவசாயி இறந்துபோனால் அவனுக்கும் உதவி தரப்படுமா என்று கேட்டவுடனேயே நம்முடைய கலைஞர் பெருந்தகை ஏற்றுக்கொண்டு அந்த நேரத்திலேயே உத்திரவு பிறப்பித்தார்கள்.

இப்படி ஏழை எளிய தொழிலாளர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு நடத்தக்கூடிய ஒரே அரசு கழக அரசுதான்.

குறிப்பாகச் சொல்லப்போனால் சில கட்சித் தலைவர்கள் தொழிலாளர்களை வைத்து விளையாடுகிறார்கள். அதிலே தன்னுடைய கட்சியை நுழைத்து முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் மனவேறுபாட்டைக் கிளப்பிவிட்டு வேலை நிறுத்தம் செய்யச் சொல்கிறார்கள். அதனால் பல்வேறு தொழிலாளர்கள் நசுக்கப்பட்டு, பட்டினியால் சாகிறார்கள்.

எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெருந்தன்மையோடு சொன்னார்கள், கட்சித் தலைவர்கள் தொழிலாளர்கள் விஷயத்தில் ஈடுபடாமல் அந்த அந்த தொழிற்சாலைகளிலே உள்ள அந்த அந்தத் தொழிலாளர்களே



1974 மார்ச் 28] [திரு. மு. கோபால்]

சங்கங்களை நடத்தட்டும் என்று சொன்னாரே யாராவது ஏற்றுக்கொண்டார்களா, கிடையவே கிடையாது. தொழிலாளர்களை வைத்து எப்படியாவது கட்சியை வளர்க்கவேண்டுமென்ற எண்ணத்திலே அவர்கள் செயல்படுகிறார்கள்.

அம்பத்தூரிலே பல கட்சிக்காரர்கள் உள்ளே நுழைந்துகொண்டு அடிக்கடி வேலை நிறுத்தங்களைச் செய்துவந்தார்கள். ஆனால் அங்கேயுள்ள தொழிற்சங்கத்தார்கள் அவர்களே தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வேலை நிறுத்தம் செய்ய மறுத்தார்கள்.

அது மட்டுமல்ல, அண்ணா அவர்கள் அழகாகச் சொன்னார்கள், எங்களுடைய ஆட்சியிலே கூனன் நிமிருவான், குருடன் ஒளிபெறுவான் என்று சொன்னார்கள். ஐந்தடிக் குடிசையிலே குனிந்து சென்றுகொண்டிருந்த ஏழை எளிய மக்கள் இன்றைக்கு நிமிர்ந்து செல்கிறார்கள், மாடி வீடுகளிலே வசிக்கிறார்கள். பல ஆண்டுகளாக கண்பார்வை தெரியாத மக்கள் எல்லாம் ஒளிபெற்றுத் திகழ்கிறார்கள். கலைஞருடைய பிறந்த நாள் விழா ஏற்பாடு செய்து அதிலே பணம் சேகரித்து அப்படி ஒளி வழங்குகிற திட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இதை எந்தக் கட்சியாவது பாராட்டுகிறார்களா என்றால் இல்லை. ஆனால் மக்கள் மறுக்கவில்லை.

மக்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த அரசு வந்ததற்குப் பிறகு தொழிலாளர்களுக்கு அங்கங்கே உள்ள மக்களுக்கு நிலப் பட்டா வழங்கியிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு கூட்டுறவு முறையிலே சங்கம் அமைத்து பணத்தை ஒதுக்கி வீடு கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேறு எந்த சர்க்காராவது இப்படிச் செய்திருக்கிறதா ?

என்னுடைய தொகுதியிலே கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கல் உடைக்கும்போது வேட்டினால் சிலர் இறந்துவிடுகிறார்கள். அவர்களுடைய குடும்பத்திற்கும் 1,000 ரூபாய் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நெசவாளர்கள் இருக்கிறார்கள். அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டித்தருகிற முறையில் அவர்களுக்கு பட்டா கொடுக்கிறோம், விவசாயிகளுக்குப் பட்டா நிலங்கள் கொடுக்கிறோம். அதைப்போன்று அவர்களுக்கு இரண்டு ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம் கொடுத்தால் அந்த மக்கள் அதிலே விவசாயம் செய்து பிழைத்துக்கொள்வார்கள் வேலையில்லாத நேரத்திலே. அவர்களும் மக்கள்தான்.

பல பேர்களைப் பார்க்கிறேன், பலர் என்னுடைய வீட்டுக்கு வருகிறார்கள், நான் சேலம் போகிறேன், வேலை பார்க்க எனக்கு கடிதம் கொடுங்கள் என்றெல்லாம் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு நான் சொன்ன முறையிலே நிலத்தைக் கொடுத்துவிட்டால் அவர்கள் விவசாயம் செய்து கொள்வார்கள், இங்கே வர முன்வரமாட்டார்கள்.

அமைந்தகரையிலே உள்ள தொழிலாளர்களுக்கும் முதலாளிக்கும் வேலை நிறுத்தம் சச்சரவுகள் ஏற்பட்டது. ஒரு லாரிக்கு சேதம் ஏற்பட்டால் அதற்கு இன்ஷூர் செய்திருக்கிறார்கள், ஆனால் டிரைவருக்கு, காயம் என்றால் அவர்களுக்கு ஒன்றும் கிடையாது, ஆகவே அவர்களுக்கும் இன்ஷூர் செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

லாரி தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலையையும் சம்பளத்தையும் அரசாங்கம் நிர்ணயிக்கவேண்டும்.

கல் உடைக்கிற தொழிலாளர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே அவர்களுக்கும் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவரவேண்டும். அவர்களுக்கு இப்பொழுது ஆகாயமே கூரை, பூமியே பாய் என்று வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த ஏழை எளிய மக்கள் வாழமுடியும். அந்தத் தொழிலாளர்களுக்கு இன்ஷூரன்ஸ் வசதி செய்துகொடுக்க வேண்டும்.

இந்தச் சர்க்கார்தான் தொழிலாளர்களை வாழ வைக்கிற சர்க்கார். தொழிலாளர்களைக் காப்பாற்றக்கூடிய ஒரே சர்க்கார் இந்தச் சர்க்கார் என்பதைக் கூறி இந்த மானியத்தை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். நீண்ட நெடுங்காலமாக தொழிலாளர்களுடைய வரலாறு ஒரு சோகக் காவியமாக இருந்து வருகிறது. இன்றைய உலகத்திலே பொருளாதாரத்திற்கு வித்தாகவும் பொருளாதாரத்திற்கு அடிப்படையாகவும் உலகில் வாழ்வதற்கே மூலமாகவும் இருப்பது தொழிலாளர்களுடைய உலகம்தான். ஆனால் அந்தத் தொழிலாளர்கள் பன்னூறு ஆண்டுகளாகத் தங்கள் வாழ்க்கையின் தேவைகளைப் பெறவும் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டத்தின் காரணமாக, அந்தப் போராட்டங்கள் வெற்றி பெறுததன் காரணத்தால்தான் இன்றைக்கு நாம் தொழிலாளர்களுக்கு என்று தனித்



துறையையே ஏற்படுத்தி தொழிலாளர்களுக்கான நன்மைகளையும், தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற திட்டங்களையும் வகுத்துச் செயல்படுத்துகிறோம்.

முதலை வைத்திருப்பவன் முதலாளி, அதாவது முதலை ஆள்பவன். ஆட்சியிலே இருப்பவர்கள் ஆட்சியாளர்கள், ஆட்சியை ஆள்கிறார்கள், எழுத்துக்கு நாயகனாக இருப்பவன் எழுத்தை ஆள்பவன், பேச்சுக்கு மூலவனாக இருப்பவன் பேச்சாளன், பேச்சை ஆள்கிறான். ஆனால் தொழிலுக்கு மூலமாக இருப்பவன், வித்தாக இருப்பவன், தொழிலைச் தொழிலாகச் செய்து உலகத்தினுடைய தொழில்களுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கின்ற தொழிலாளி இன்றைக்குத் தொழிலை ஆள்பவனாக இல்லை. அவன் பெயருக்குத்தான் தொழிலாளி என்ற முத்திரையை வைத்துக்கொண்டிருக்கிறானே தவிர மூளையை வைத்துக்கொண்டிருப்பவன்தான் தொழிலை ஆண்டு கொண்டிருக்கிறான். தொழில் ஆளி என்று சொல்லப்படுபவன் தொழிலை ஆள்பவனாக இல்லை என்பது என்னுடைய கருத்து என்பதை இன்றைக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாம் தொழிலாளர்களுக்காகப் பல திட்டங்களை வகுக்க வேண்டும். இன்றைய தினம் நாம் தொழிலாளர்களுக்கு ஊக்கத்தை கொடுக்க வேண்டுமென்று ஆக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று அவர்களுடைய வருமானத்தை அதிகமாக்க வேண்டுமென்பதற்காக கூலி உயர்வு ஏற்றம், சம்பள உயர்வு ஏற்றம், போனஸ் ஏற்றம் என்று பலவிதமான ஏற்றங்களைத் தருகிறோம். ஆனால் இந்த ஏற்றங்களுக்கெல்லாம் மேலாக விலைவாசியேற்றம் என்ற ஒரு ஏற்றத்தால் நாம் கொடுக்கின்ற இந்த ஏற்றங்களெல்லாம் அழிக்கப்பட்டுவிடுகின்றன என்பதை நாம் மறந்துவிட்டவர்களாக இருக்கிறோம். நாம் பத்து ரூபாய் உயர்வு தந்தால் 50 ரூபாய், 100 ரூபாய் என்று விலைவாசியேற்றம் ஏற்பட்டிருப்பதால் 10 ரூபாய் பெறுபவன், "ஆஹா, பத்து ரூபாய் கிடைத்துவிட்டது" என்று அவன் சந்தோஷத்தோடு வாழ்கிறானா என்று பார்த்தால், அவன் கடைக்குச் செல்லும்பொழுது இந்த மகிழ்ச்சியெல்லாம் சோகமாக மாறுகின்றது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும், கூர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நாட்டிலே பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது, 'இன்ஃப்லேஷன்' இருக்கிறது என்பதை நாட்டிலேயுள்ள பொருளாதார நிபுணர்கள் மட்டுமல்ல, ஆட்சியிலே இருப்பவர்கள் அத்தனைபேரும், மத்தியிலே இருப்பவர்களும் ஒத்துக்கொள்கிறார்கள், மாநிலத்திலே இருப்பவர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். பண வீக்கம் என்பது என்ன? பணம் அதிகமாக செலாவணியிலே இருப்பது.

'Larger money in circulation without any corresponding production and labour'. என்று சொல்வார்கள். அப்படி யென்றால் உற்பத்தியும் இல்லாமல் உழைப்பாலேயும் இல்லாமல் அதிக விகிதாசாரத்தில் அதிகப் பணம் புழக்கத்திலேயிருப்பது இன்ஃப்லேஷனு அல்லது விலைவாசி ஏறி வருகிறது, பொருள்களின் அகவிலை ஏறி வருகிறது, ஆகையால் இன்ஃப்லேஷனு என்றால் பொருளாதார நிபுணத்துவத்தைப் படித்தவர்கள் சொல்கிறார்கள்.

'Neither the price rise nor the larger money in circulation are the signs of inflation. But the surest sign of inflation is abnormal profit.' என்று இன்றைக்கு நாட்டிலே அப்னார்மல் பிராஃபிட் இருப்பதுதான் பணவீக்கம் என்பதற்கு ஒரே அறிகுறி என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். அதை நாம் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கி றோம் அல்லவா? நாட்டிலே இன்ஃப்லேஷன் இருக்கிறது என்று ஏற்றுக்கொண் டிருக்கிறோம் அல்லவா? நம் நாட்டிலே அப்னார்மல் ப்ராஃபிட், அபரிமிதமான லாபம் இருக்கிறது என்று தெரிந்திருந்தும், to chop of the excess profit அந்த அபரிமிதமான லாபத்தைக் குறைப்பவற்கு, தொழிலாளிகளாக இருக்கின்ற தொழிலாளர்களுக்கு பங்கிட்டுக் கொடுப்பதற்கான முறைகளை, திட்டங்களை என்ன வகுத்திருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தொழில் துறையிலே அமைதியின்மை என்பதைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்படுகிறது. அதற்கு என்ன காரணம் என்றால், வாழ்வற்று, வசதி யற்று, அல்லும் பகலும், காலையிலிருந்து மாலை வரையில் உழைக்கின்ற உழைப்பாளி வீட்டுக்குச் செல்லும்பொழுது சோகமான காட்சிகளைக் காணும் பொழுது அமைதி எங்கே வரும்? அப்பொழுது அவனுடைய சிந்தனையிலே அறிவு இல்லாதவனாக இருக்கும்பொழுது அவனுடைய வீட்டிலே அமைதி இருக்காது, அதனாலே நாட்டிலேயும் அமைதி இருக்காது என்பதை எச்சரிக் கையாக எடுத்துக்கொண்டு இந்த நாட்டை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசியேற்றத்திற்கும் கொடுக்கப்படும் சம்பளத்திற்கும் ஒரு 'ப்ரபோர் ஷனேட் ரிலேஷன்ஷிப்', விகிதாச்சாரத் தொடர்பு இருக்க வேண்டும். எப்பொழுது எப்பொழுது விலை ஏறுகிறதோ அப்பொழுதெல்லாம் அந்த அடிப்படையிலே மட்டுமல்லாமல், எப்பொழுது எப்பொழுது அபரிமிதமான லாபம் வருகிறதோ அப்பொழுதெல்லாம் தாமாகவே கூலி உயர்வு, சம்பள உயர்வு ஏற்பட வேண்டுமென்று இந்த அரசு சட்டம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்லாமல் நாம் இன்றைக்கு இங்கேயே பார்க்கிறோம். பலவிடங் களிலே வேலை நிறுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. தொழிலாளர்கள் தங்களுக்கு நன்மைகள் கிடைக்க வேண்டுமென்று, கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஆனால் விளைவுகள் என்ன என்றால், கடைசியாகத் தொழிலாளர்கள்தான் பாதிக்கப் படுகிறார்கள். இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வேலை நிறுத்தம் நடைபெறுகிறது, வேலை நிறுத்தத்தின் காரணமாக உற்பத்தி குறைகிறது, உற்பத்தி குறைவதால் விலையேற்றம் ஏற்படுகிறது, அந்த விலையேற்றம் இவர்கள் பெறுகின்ற அதிகப்படியான கூலிக்கும் அதிகமான ஏற்றமாக இருப்பதால் போராட்டத்தினால் கிடைக்கும் லாபத்தை அவர்கள் பெறமுடியாமல் போகிறது.

ஆகவே, இதற்கு ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும். எங்கெங்கு தொழி லாளர்களின் கோரிக்கைகள் நிறைவேறுவதில்லை என்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்களோ அந்த நேரத்திலேயே அரசாங்கம் அந்தத் தொழிற்சாலையை மேற்கொள்ள வேண்டும். ' "Interim take-over of the industries" அப்படி என்று சொல்லி இன்டஸ்ட்ரீஸ்களை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் தொடர்ந்து உற்பத்தி நடக்க வேண்டும். அதே நேரத்திலே மேனேஜ்மெண்டார்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் பேச்சுக்கள் நடக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய 'நெகோஷியேஷன்', அவர்கள் அந்தத் துறையின் மூலமாக பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும். சுமுகமாக அந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதற்குப் பிறகு பழைய மேனேஜ்மெண்டாருக்கு அதைத் திருப்பிக்கொடுக்கின்ற முறை இருக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கு ஒருவேளை அரசியல் சட்டம் தடையாக இருக்கலாம் . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த நேரத்தில் ஒரு சிறிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினரவர்களிடமிருந்து பெற வேண்டு மென்று நான் கருதுகிறேன். அரசியல் சட்டத்திலே இப்படிப்பட்ட முறை களில்லை. ஆகவே, உறுப்பினரவர்கள், தடையாக இருக்கலாம் என்ற அந்தக் கருத்தைச் சொல்லும் வரையில் நான் பயந்துபோனேன். ஆகவே, அவர்கள் அதில் வேகத்தைக் காட்டாமல் வேறு காரியங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அதனுல்தான் சொன்னேன், அரசியல் சட்டம் தடையாக இருக்கலாம் என்று. சட்டம் என்பது நாட்டு மக்களுக்காக, நாட்டுமக்களின் நன்மைக்காக இருக்கிறது. அந்தச் சட்டங்கள் தடையாக இருந்தால் நாட்டுமக்களின் நன்மைக்காக, அந்தச் சட்டங்களுக்குச் சட்டம் போட்டு எங்கோ ஒரு இடத்திலே வைக்கக்கூடிய திட்டங்களாக இருந்தால் அந்தத் திட்டங்களையும், சட்டத்தையும் மாற்றியமைக்க சமுதாயம் முன்வர வேண்டுமென்பதுதான் இன்றைக்குள்ள தொழிலாளர்கள் கோரிக்கை.

அறிக்கையைப் பார்க்கும்பொழுது எவ்வளவு பேர் வேலையில்லாதவர்கள் என்ற கணக்கைப் பார்க்கும்பொழுது சுமார் 6 இலட்சம் படித்த வாலிபர்கள், 5 இலட்சத்து 80 ஆயிரம் பேர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே 1968-ஆம் ஆண்டிலேயிருந்து பதிவு செய்து பதிவு செய்து, நடந்து நடந்து வேலையில்லாதவர்கள் எத்தனை நாட்களுக்கு பஸ் சார்ஜ் கொடுக்க வேண்டும், இரயில் சார்ஜ் கொடுக்கவேண்டும் என்பதைப் பார்க்கவேண்டும். அவைகளுக்கு மட்டுமல்லாமல் இருப்பவர்களின் நலன்களுக்கும், ஆசைகளுக்கும், தகாத செயல்களுக்கும் தங்களுடைய பையிலே உள்ள பணத்தைக் கொடுத்து ஒவ்வொரு மாதமும் திரும்பிக்கொண்டிருக்கிருர்கள் என்ருல் நாட்டிலே அமைதியின்மை ஏற்படதா? It is a potential danger. இதை இங்கே உள்ளவர்கள் மட்டுமல்ல எல்லாயிடத்திலும் இருப்பவர்களும் சிந்திக்க வேண்டும். இந்த ஆட்சிதான் பொறுப்பு என்று நான் சொல்ல மாட்டேன். ஏனென்ருல் இங்கேயுள்ள தமிழ்நாடு, Tamil Nadu is not a water tight compartment separate from the Indian Union. இந்த ஒரு மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியா பூராவுமே பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படுகிறது. நாம் நல்ல திட்டங்களை வகுத்தாலும், நல்ல சட்டங்களையும், செயல்முறைகளையும் வகுத்தாலும் நம்முடைய செயல்கள், நம்முடைய திட்டங்கள், நம்முடைய சட்டங்கள் செயலுக்கு உதவாமல் மாற்றக்கூடிய நிலையிலே மற்ற இடங்களிலெல்லாம் நடைபெறும் காரியங்கள் நமக்குப் பாதகமாக இருப்பதால் இதைத் தடுப்பதற்கு என்ன முறை இருக்கிறது என்று பார்க்க வேண்டும். இன்றைக்குள்ள நிலைமைகளில் நாம் என்ன முறைகளைக் கையாள வேண்டுமென்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும்.





விம்கோ தொழிற்சாலையைப்பற்றி ஒரு குறிப்பு தந்திருக்கிருர்கள். வேலை நிறுத்தம் செய்யப்படுகிறது. 9-3-1972-இல் அந்த வேலை நிறுத்தம் ஆரம்பமாகிறது. ஆனுல் அது தொடர்ந்து பல மாதங்களாக, சுமார் 8 மாதங்களுக்கு மேல் அந்தத் தொழிற்சாலை மூடிவைக்கப்பட்டிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

காரணம் என்ன? உங்களுடைய, conciliatory efforts, negotiating efforts பலஹீனம் இருந்ததா? அல்லது நிர்வாகம் தொழிலாளர்களுக்கு நன்மைகளைக் கொடுக்க மாட்டோம் என்று மறுத்தார்களா? 8 மாதங்களாக மூடிவைக்கப்பட்டிருந்த அந்தத் தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்ற அறிவிப்பைச் செய்வதற்கு என்ன தடங்கலாக இருந்தது என்றுதான் கேட்க ஆசைப்படுகிறேன்.

எட்டு மாத காலமாகத் தொழிற்சாலை மூடப்பட்டுக் கிடக்கிறது. உற்பத்திக் குறைவு ஒரு பக்கம்; அதே நேரத்தில் எத்தனை குடும்பங்கள் நாசமாகிக் கிடக்கின்றன என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல திட்டங்களை, முனைப்போடு செயல்படும் திட்டங்களைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்; உறுதியோடு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பீடித் தொழிலாளர்களைப் பற்றி எடுத்துச் சொன்னுர்கள். நம்முடைய உச்ச நீதிமன்றம்—சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. போனஸ் வழங்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கொடுத்தால் என்ன, நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம் என்ற முறையில் பீடி முதலாளிகள் இருக்கிருர்கள். லட்சக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் நட்டாற்றில் விடப்பட்டு கஷ்டத்தில் வாழ்கிருர்கள்.

பீடித் தொழிலைப் பற்றித் துறையில் இருக்கும் அதிகாரிகள் கூட குழப்பத்தில் இருக்கிருர்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் பீடியின் தன்மை மாறுபடுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கு செய்கிற பீடி அரை சைஸ்தான். அரை பீடி என்பார்கள்.

வட ஆற்காடு மாவட்டத்தில் சில இடங்களில் முக்கால் பீடியும், சில இடங்களில் முழு பீடியும் செய்கிருர்கள்.

கோவை, சேலம் மாவட்டங்களில் முழு பீடி செய்கிறார்கள். முழு பீடிக்கு எவ்வளவு கூலி கொடுக்க வேண்டும்; முக்கால் பீடிக்கு எவ்வளவு கூலி கொடுக்க வேண்டும், அரை பீடிக்கு எவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி நாம் நிர்ணயம் செய்து முடிவுக்கு வரவேண்டும். துண்டு பீடியைப்பற்றி நான் பேசவில்லை. அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

ஃபாக்டரி ஆக்ட் எல்லோருக்கும் அமல் செய்கிறோம். பீடித் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 3½ ரூபாய் கொடுக்கிறார்கள். அதை வைத்துக் கொண்டு ஒருவேளை சாப்பிட முடியுமா? ஆகவே, அந்த நிர்வாகிகளைக் கட்டாயப்படுத்த வேண்டும். இந்தச் சமுதாயம் உங்கள் சார்பில் இருக்கிறது. தயக்கம் வேண்டாம்.

பிராஞ்சு முறையை வைத்திருக்கிறார்கள். என்ன அநியாயம்? பாக்டரி திட்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள, போனஸ் கொடுக்கக் கூடாது என்பதற்காக பாக்டரி திட்டத்தின்கீழ் உள்ள சலுகைகளைக் கொடுக்கக்கூடாது என்பதற்காக பிராஞ்சுகளை வைக்கிறார்கள், என்ன ஆகிறது?

There is no rural relationship between the employer and the employee. "Who is the employer". என்று வருகிறது.

பிராஞ்சில் வேலை செய்கிறவனுக்கு பிராஞ்சு மானேஜர்தான் எம்ப்ளாயர். ஓனருக்கும் இந்த எம்ப்ளாயிசுக்கும் ரிலேஷன்ஷிப் எதுவும் கிடையாது. இல்லை என்று சட்டம் வாதிட்டாலும் திட்டம் போடுங்கள்; அந்தத் திட்டங்கள் தொழிலாளர்களுக்கு நன்மை தருவதாக இருக்கவேண்டும்.

உடனடியாக இந்த பிராஞ்சு முறைகளை மாற்றியமைக்க வேண்டும். குறைந்த பட்சம் ஆயிரம் பீடிகளுக்கு 6 ரூபாயாவது கூலி நிர்ணயிக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வாழ்க்கையை நடத்த முடியாது.

பில்டிங்ஸ் கட்டுகிறோம். கட்டடங்களை எடுத்துக் கொண்டால் சில கட்டடங்களில் வாடகைக்கு இருக்கிறார்கள். ஏழை எளியவர்கள், ஃபிக்ஸட் இன்கம் க்ரூப்பில் இருப்பவர்கள் வாடகைக்கு இருக்கிறார்கள். அவர்களை அகற்ற வேண்டுமென்றால் என்ன செய்கிறார்கள்? ரென்ட் கன்ட்ரோல் ஆக்ட் 14-வது பிரிவின்படி டெமாலிஷன் அண்டு ரிகன்ஸ்ட்ரக்ஷன் என்று சொன்னால் உடனடியாக எவிக்ஷன் ஆர்டர் கொடுக்கவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அதுவும் முடியாவிட்டால் கார்ப்பரேஷன் ஆபீசர்களிடத்தில் அணுகுகின்ற





முறைப்படி அணுகினால் உடனடியாக நோட்டீஸ் அனுப்பி விடுகிறார்கள்.

'This building is very much dilapidated and requires demolition and reconstruction'

என்று சொன்னால் அந்த நோட்டீஸைக் காட்டி பெட்டிஷன் போட்டால் ரென்ட் கோர்ட்டில் உடனடியாக எடுத்து விடுகிறார்கள். அப்படி கொடுக்கப்பட்டாலும் டெமாலிஷ் செய்வதற்கு முன்பு யார் குடித்தனக்காரர்களாக இருந்தார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற நியதியைக் கொண்டு வரவேண்டும். டெமாலிஷன் அண்டு ரி கன்ஸ்ட்ரக்ஷன் செய்து என்ஹான்ஸ்டு ரென்டுக்கு அதிகமாக வாடகைக்கு வேறு ஆட்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, கண்டிஷன் போடவேண்டும். அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று திட்டம் வகுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தோட்டத் தொழிலாளர்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் மிக அதிகமான அளவில் தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்களுக்குப் பல சலுகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது.

அங்கே மலைவாசிகளும் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய சில பழக்கவழக்கங்கள், முறைகள் எல்லாம் வேறுபட்டிருக்கிறது. அவர்கள் அவர்களுடைய நாகரிகத்தைக் காப்பாற்ற விரும்புகிறார்கள். எஸ்டேட் ஓனர்கள் மற்றவர்களோடு அவர்களும் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மலைவாசிகள் மற்றவர்களைச் சேர்ப்பதில்லை. மற்றவர்களோடு இணைந்து வாழ்வதில்லை. அதனால் வீட்டு வசதி சலுகைகளைப் பெற முடியாமல் அவர்கள் தவிக்கிறார்கள், பல ஆண்டு காலமாகக் கோரிக்கை விடுகிறார்கள்.

நான் கூட ஒரு கோரிக்கையை லேபர் செகரடரிக்கு, லேபர் கமிஷனருக்கு ஓராண்டுக்கு முன்பு கொடுத்தேன். அந்தக் கோரிக்கையைப் பரிவோடு கவனிக்கவேண்டும்— 'We have received your memorandum' என்ற கடிதம் வந்தது ஓராண்டுக்கு முன்பு. அந்தக் கடிதம் என்னவாயிற்று? உயிர் இருக்கிறதா என்பதைக்கூட பரிதாபத்திற்குரிய சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியப்படுத்தவில்லை.

அதே மாதிரி மே பீல்டு நிறுவனத் தொழிலாளர்கள் நிலையை எடுத்துக் கொண்டால் இதே நிலைதான். அந்தத் தொழிலாளர்களின் தலைவன் என்ற முறையில் சொல்லுகிறேன். அவந்தி பகுதியில் தொழிலாளர் காலனி இருக்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 28

கிறது. அங்குள்ள தண்ணீர்த் தொட்டியைப் பார்த்தால் உலகத்திலே இருக்கும் குப்பைகள் அதிலே இருக்கின்றன. அதுபற்றி ஓராண்டுக்கு முன்பு செகரடரிக்குக் கடிதம் எழுதிக் கொடுத்தேன். இது சுகாதாரத்தைப் பாதிக்கும். இதுவரை எந்த முடிவும் அதுபற்றித் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அங்கிருக்கும் தொழிலாளர் சொசைடிகளில் அதிகமான நிலத்தை வைத்திருக்கிறார்கள். குறைந்த அளவுக்குத்தான் பயன்படுத்துகிறார்கள். பின்னுக்கு இருக்கும் நிலங்களை சொசைடியிலிருந்து பெற்று கட்டாயமாகப் பயன்படுத்தச் செய்யவேண்டும். அதைத் தொழிலாளர்களுக்குப் பரிந்து கொடுத்து வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பீடித் தொழிலைப்பற்றி மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் பீடித் தொழிலாளர்கள் உடலைக் காட்டி மருத்துவ வசதி பெறுவது மறுக்கப்படுகிறது. பாக்டரி ஆக்ட் அப்ளை ஆவதில்லை என்று சொல்லுகிறார்கள். தயவு செய்து இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தோல் தொழிலாளர்களைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் எங்கள் ஊருக்கு மாப்பிள்ளை. எங்கள் வீட்டுக்கு மாப்பிள்ளையாக இருக்கும் அவர்கள் இதிலே அக்கறை காட்ட வேண்டும். தோல் தொழிற்சாலைகளில் இருக்கிற தொழிலாளர்கள் எந்த முறையில் இருந்தாலும் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டியது அவசியம். யாராக இருந்தாலும் கொடுக்கவேண்டும்.

நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்று நினைத்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால் நான் ஈடுபட்டிருந்தாலும்கூட அந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும். இந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் நாட்டிலே இருக்கும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று இருப்பார்களே தவிர, முதலாளிகளுக்கோ மற்றவர்களுக்காகவோ இல்லை. அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்கள் முயற்சி ஓங்கவேண்டும்; அவர்கள் சொன்னதுபோல் தொழில் அமைதி ஓங்கவேண்டுமென்று கூறி இந்த மானியத்தை ஆதரித்து அமர்கிறேன்.



## 8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) 6—4—1974 அன்று எடுத்துக்கொள்ளப்பட இருந்த அலுவல் 5—4—1974 அன்று எடுத்துக்கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

5—4—1974 அன்று மீலாடி நபிக்காக விடப்பட்டிருந்த விடுமுறை 6—4—1974 அன்று மாற்றப்படுவதால் 6—4—1974 அன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த 'என் 7—மாநிலச் சட்ட மன்றம்' என்ற மானியக் கோரிக்கை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் 5—4—1974 அன்று எடுத்துக்கொள்ளப்படும் என்றும் 6—4—1974 அன்று பேரவைக் கூட்டம் இருக்காது என்றும் அறிவிக்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று மாலை 4 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பிறகு மாலை 4-00 மணியளவில் பேரவைத் தலைவர் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### 1974-75-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* THIRU K. M. SUBRAMANIAM : Hon. Speaker, Sir, I am not an expert on labour affairs but definitely I am a consumer. Disputes are settled between labour and management, many a time, as if there is no consumer at all existing. The consumer's interests are very rarely cared for. Of course there has been of late a cry all over India that strikes should be banned and also that there should be a curb on profit. But what is more important is that there should be a curb on managerial expenses, curb on purchasing commission, selling commission and so many other wastes. Unless this is done, I think the consumer's interest will not be safeguarded.

I am now coming to the important question, housing, in wastes. Unless this is done, I think the consumer's interest will Nadu is concerned, I think I will be failing in my duty if I do not congratulate the Government for the good work they have been doing both in housing and slum clearance.

So far as housing is concerned, there were various policies in the past. The Government used to have housing for rich and used to give assistance for the higher class to build houses. 'Higher income housing scheme', 'middle income housing scheme' and so many schemes. Houses were allotted for the rich in the past.

I am very glad that gradually there has been change of policy in the allotment of houses. No country can progress unless people live fairly comfortably in their houses. I am told in London, 1/3rd of the houses occupied by the middle income-group are owned by the middle income-group and assistance is given by the municipalities. For the construction of latrines of low-income groups in London, free grant is being given. That sort of policy is necessary.

If we compare the various developments that have taken place in other cities, we find that Tamil Nadu has done very well so far as housing is concerned. We have had difficulties.

Being a developing department, there was little care for accounting. I am not flattering the present Chairman. He needs no flattery but when he took up the job, I found as a member of the Public Undertakings Committee that even 1964–65 accounts were not ready, one year back in the Housing Board. It was in that pitiable condition. Today fortunately we find the accounts have been fairly completed. I think, if I am not wrong, even 1972–73 accounts are finished. This is a very great achievement during one year and thanks to the Special Officer appointed (retired Accountant-General Mr. Subramaniam), the accounts have been brought up-to-date.

Apart from this, in the past one may not know how many plots remained unallotted, how much was the arrear in respect of any allottee, etc. Now there is a chart wherein you find information regarding number of unallotted plots, etc., and what is the arrear one has to pay.

All these things, I think, are very great improvements.

My only request to the Hon. Minister is instead of spending money for housing the rich and higher income-groups, let him concentrate on low income-groups, I mean the groups, living in chawls, not slums



Go to West Mambalam and you will find in a house there are 10 to 12 tenants each paying Rs. 30 to Rs. 40 per room; they live miserably; their lot should be improved.

But the Hon. Minister says land value is prohibitive in City, He has thought of this Rs. 10,000 house in the mofussil. I would request him to buy the vast stretch of land between Tambaram and Chingleput and build houses (Rs. 10,000 house) for these people there so that by paying not more than Rs. 100 per mensem they can become owners of houses in 10 to 15 years. I hope and trust Government will do thisg which is very essential.

Coming to the other points, in the Housing Board there was shortage of a lot of technical staff and I am very glad that now proposals are going ahead for expanding the technical staff so that there will not be any delay in work in future.

Regarding amenities for various places, I find that local meetings are arranged among corporation, Housing Board staff and the residents of the area and complaints are made there and serious attempts are made to rectify these things then and there. It is really a very good arrangement that is being appreciated by the local residents. Not only that, when the owners want slight changes or alterations in the construction of their houses in the plan, I am very happy that the Housing Board Chairman without restricting himself to set plans is allowing whatever small alterations the allottees want, if they pay the extra cost. That is also very commendable.

So far as Slum Clearance is concerned, there was a time when statistics were taken when the population of the City was about 20 lakhs and it was ascertained that 9 lakhs of people were living in slums. I am very happy that this Government has taken up this work very seriously and considerable improvement has taken place . Although the economic rent of the flat is Rs. 45 to 55, they are being allotted at Rs. 10 or 15, with amenities which is a huge subsidy that is given to the slum dwellers for which we express our gratitude.

Last year, in my constituency, Teynampet, many huts got burnt and there was a huge fire in 1972 and the Slum Clearance Board said that they would give them alternative accommodation

well-built accommodation, within one year. I did not then believe and nobody would belief that 600 or 700 families could be provided with accommodation within such a short time. But fortunately, I found the impossible had been achieved and they are about to house these families very soon in Teynampet area in built-up houses. (Bell was sounded) I will finish in another one second.

So far as another slum is concerned in Theagarayanagar behind the Police Station, about 700 or 800 are huddled together in huts and I understood that this land belonged to the Inspector-General of Police. I am told by the persuasion of some one, about 50 grounds have been allotted to house these people and 20 grounds have been taken by the Police. I am very happy if this is true, and if this is true, it is another achievement and another feather in the cap of the Housing Board.

I wish to make a small request to the Hon. Minister. When allotments were made to slum dwellers, fortunately or unfortunately, the Fourth Grade Government Servants living in these slums were also accommodated in these houses on the same rent as others because they were also slum dwellers and not because. . . .

(Bell was sounded and the next Member was called.)

THIRU B. VENKATASWAMY : Mr. Speaker, Sir, I want to offer a few remarks on the Demands before us.

In the beginning itself, the Hon. Labour Minister has beautifully mentioned in his book, 'May industry flourish and labour prosper'. Really, it is a beautiful slogan, for without Industry flourishing, labour cannot prosper. It is like the two eyes or the two wheels of a cart. Without one wheel, the cart cannot move. Just like that, industry also should flourish if labour should prosper and labour should prosper and make industry flourish.

Coming to the other point, now the Swathanthra Party is of the opinion that each industry must have one union only. I hope our Hon. Minister will accept this. For, if there are a number of unions, they start exploiting the labourers and because of that both the labourers are suffering and many industries are also suffering. That is what is actually happenning.



Therefore, it is better to have a legislation to have one labour union for one industry. Otherwise, exploitation and other things will be there. Recently, all hon. Members have seen what happened in Simpson and Company. Only for the interests of a few individuals, the labourers were misled and they had to suffer; whichever the union, it should be interested only in the good of the labourers. At the same time, there should be unions for agricultural workers also to fight for their welfare.

Regarding minimum wage, really I am very happy that the Government have declared minimum wages for agricultural labourers and others. At the same time, I request the Hon. Minister to see even in some of the Government farms themselves, the workers are paid only Re. 1 or Rs. 1.50. In Hosur Cattle Farm—the Hon. Minister has seen it—actually the casual labourers are paid only one rupee, 1.50 or so, even though it is a Government Farm. Even in the Silk Farm at Kelletti, the labourers are paid only Rs. 1.50 or Rs. 2. Eventhough we have legislation and ask other factory owners to pay the minimum wage, in our own Government Farm, we are paying very low wages. I request the Hon. Minister—this is not only in Government Farm at Hosur, but I understand in other Seed Farms and others also—the Government should pay the minimum to the labourers.

Regarding Housing Board, agricultural labourers are also getting land sites for constructing houses. I do not know if Government of India has allotted any amount for this. It is a beautiful scheme. I understand in certain villages, they have not properly prepared the list of agricultural labourers.

The Village Munsiffs and Karnams have not taken proper steps with the result the poor people will not know about the scheme and be benefited. I request the Hon. Minister to once more call for the particulars, strictly giving orders that the Village Munsifs and Karnams should send proper lists. The local politicians may also be associated with this work and it should be seen that not a single individual is left out and all agricultural coolies should be listed so that all the poor people will get land for their houses.

At the same time, I request the Hon. Minister to see—there is no use of giving house-sites to the people—just as we are doing in the Slum Clearance Board, where we are allotting houses and collecting token amounts—that the agricultural labourers are provided with house-sites with houses constructed and then we can collect the amount from them.

The middle class people are suffering a lot in the villages. It has been stated by the Hon. Minister in the note that a sum of Rs. 4,000 will be given for each house nn the villages. I would like to point out that it is a very meagre amount and it is very difficult to have a house with that amount. It is very difficult to construct a house in rural areas with that amount.

There are many huts in villages. Just like Slum Clearance Board in Madras and in other towns, there should be a unit of the Slum Clearance Board in rural areas and slum clearance should be implemented throughout Tamil Nadu. It should be the slogan and aim of the Government to see that within five years every individual will have a house of his own.

Now amount is given by the Government for House Building Mortgage Societies which are situated in some places. They are finding it difficult to give money for constructed houses due to paucity of funds. More money should be provided for such banks.

In the Budget provision has been made for construction of houses for middle income-group people and also under Slum Clearance Board. The amount allotted is very low. In Hosur, no work has been taken up so far. I request the Hon. Minister for Housing to see that housing works are taken up immediately in Hosur and help the people from house difficulties. I am sure the Hon. Minister also knows that many industries are coming up in Hosur and the housing problem is very acute there. I hope the Hon. Minister will implement the housing schemes in Hosur expeditiously.

Coming to the allotment of houses and plots in Madras City, I understand that the people are suffering a lot to get allotment of plots or houses and they are going in search of politicians for getting recommendations. There must be a seniority list or some such thing so that there will be proper allotment of sites.



Under the Hire Purchase Scheme also, I understand that many houses have not been registered in Madras City. I request the Department to see that the houses are registered within five years so as to enable the owners to have additional construction or to mortgage their houses or even to sell them. I know that some houses have not been registered in their favour.

(திருமதி ஜோதி வெங்கடாசலம் தலைமை)

I have also given cut motions specifically to discuss about the need to start construction of more houses in the rural areas. The construction of houses in rural areas should be given top priority by the Hon. Minister. With these words, I conclude, Sir.

* திரு. ஈ. இராமசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இந்த மாமன்றத்தில் தந்திருக்கிற இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

தி.மு.க. அரசு அமைக்கப்பட்டப் பின்னாலே தொழிலாளர்கள் கிளர்ச்சியானாலும், தொழிலாளர்கள் வேலை நிறுத்தமானாலும் அவ்வப்பொழுது அரசு நேரடியாக தலையிட்டு சுமுகமான தீர்வினை கண்டிருக்கிறோம். எனவேதான் இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு என்று எல்லோரும் பாராட்டுகின்றார்கள்.

ஆனால் எதிர் தரப்பிலே இந்த அரசு தொழிலாளர்கள் மீது அக்கரை காட்டவில்லை என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் உள்ளத்தில் பாராட்டியிருக்கலாம், அவர்கள் கட்சிக் கட்டுப்பாடு இருக்கிறது, அதற்காக ஏதோ ஒப்புக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காக இந்த அரசைப் பார்த்து அப்படிச் சொல்லக்கூடும். என்றாலும் எந்த அரசாங்கமாக இருந்தாலும், இருக்கிற பிரச்னையை ஒரே நேரத்திலே தீர்த்துவிட முடியாது. ஒரு சில குறைகள் இருக்கத்தான் செய்யும். அந்தக் குறைகளுக்குக்கூட மெல்ல மெல்ல தான் ஒரு தீர்வு காண முடியும். அந்த அடிப்படையில் சில குறைகள் இன்றைக்கு இருந்தாலும் கூட, அவைகள் உடனடியாகத் தீராவிட்டால், அது பெரிய பிரச்னை என்று சொல்வதற்கில்லை. இந்த மாமன்றத்தில் என்னுடைய கருத்தினை ஒரு சில காரியங்களில் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரண்டு உறுப்பினர்கள் இருக்கையைவிட்டு எழுந்து வெளியே செல்ல இருந்தனர்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : Let the hon. Members take their seats.

திரு. ஈ. இராமசாமி : தமிழ்நாட்டு தோட்ட தொழிலாளர்களின் நிலைமை நாம் பார்ப்போமானால் அவர்கள் வாழ்க்கையில் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தத் தொழிலை எடுத்தாலும், மலைத் தோட்ட தொழிலாளர்கள் செய்கின்ற வேலைதான் மிகக் கஷ்டமான வேலை என்பதை யாராலும் மறுக்க முடியாது. அந்த அளவுக்கு அவர்கள் மிகவும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கிற கூலியைப் பார்த்தோமானால் நமக்கு வேதனையாக இருக்கும். ஆண் தொழிலாளிக்கு ரூ. 3.65, பெண் தொழிலாளிக்கு ரூ. 3.15 தான் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இந்த விலைவாசி ஏற்றத்தில் ரூ. 3.65 சம்பளம் போதுமா என்றால், அவர்கள் குடும்பத்தை நடத்த முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. நாம் எந்த அளவுக்கு குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் செய்தாலும்கூட, 5, 6 குழந்தைகளுக்குப் பெற்றோர்களாக ஆகிவிடுகிறார்கள். 5, 6 குழந்தைகளைப் படிக்க வைக்க முடியுமா, அவர்களுக்கு உணவு அளிக்க முடியுமா, உடை வாங்கிக் கொடுக்க முடியுமா ரூபாய் 3.65 சம்பளத்தில் என்றால், முடியாது. அந்த அளவுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

மற்றத் தொழிலில் வேலை செய்கிறவர்களுக்கு ரூ. 7-லிருந்து ரூ. 16 வரை ஒரு சாதாரண தொழிலாளிக்குக் கிடைக்கிறது. ஆனால் கஷ்டமான தொழிலான மலைத் தோட்டத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் என்பதை யாராலும் மறைக்க முடியாது. மற்ற தொழிலில் வேலை செய்கின்றவர்கள் லாப அடிப்படையில், 4 மாதம், 6 மாதச் சம்பளத்தை போனஸாகப் பெறுகிறார்கள். ஆனால் மலைத் தோட்டத் தொழிலாளர்கள் 8 அல்லது 10 சத விகிதம்தான். அதாவது ரூ. 600-க்கு வேலை செய்திருந்தால் ரூ. 60 போனஸ் பெற முடியும் என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. இதனை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே அண்டை மாநிலமான கேரளத்தில் அரசு ஒரு அறிவிப்புக் கொடுத்தார்கள். தேயிலை, காப்பி, ரப்பர், ஏலம் ஆகிய தோட்டத் தொழிலாளர்களுக்கு 1948-ம் ஆண்டு குறைந்தபட்சக் கூலி மத்திய சட்டம் பிரிவு 5, உப பிரிவு (1) (ஏ)-ன்படி அமைக்கப்பட்டிருந்த கமிட்டியின் சிபார்சுபடியும், மாநில அரசுக்குரிய அதிகாரங்களை வைத்துக்கொண்டும் குறைந்தபட்சக் கூலியைத் திருத்தி, அது 1—4—1974 முதல் அமலுக்கு வரும் என்று கேரள அரசு



அறிவித்துள்ளது. அதன்படி பார்த்தால், கூலியையும் பஞ்சப்படியையும் சேர்த்து தேயிலை தோட்டத்தில் வேலை செய்கின்ற ஆண் தொழிலாளிக்கு ரூபாய் 4.69, காப்பி தோட்டத்தில் வேலை செய்கின்ற ஆண் தொழிலாளிக்கு ரூபாய் 5.22, ரப்பர் தோட்டத்தில் வேலை செய்கின்ற ஆண் தொழிலாளிக்கு ரூபாய் 6.49, ஏலத் தோட்டத்தில் வேலை செய்கின்ற ஆண் தொழிலாளிக்கு ரூபாய் 4.89.

பெண்களைப் பொறுத்தவரையில், தேயிலை தோட்டத்தில் ரூ. 4.40, காப்பி தோட்டத்தில் ரூ. 4.39, ரப்பர் தோட்டத்தில் ரூ. 6.11, ஏலத் தோட்டத்தில் ரூ. 4.40. 15 வயதிலிருந்து 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு தேயிலை தோட்டத்தில் ரூ. 3.39, காப்பித் தோட்டத்தில் ரூ. 3.11, ரப்பர் தோட்டத்தில் ரூ. 4.87, ஏலத் தோட்டத்தில் ரூ. 3.49.

12 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்டவர்களுக்கு தேயிலைத் தோட்டத்தில் ரூ. 3.24, காப்பித் தோட்டத்தில் ரூ. 3.13, ரப்பர் தோட்டத்தில் ரூ. 4.45, ஏலத் தோட்டத்தில் ரூ. 3.24. கேரளத் தோட்ட தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் 1975-ஆம் ஆண்டு வரைக்கும் ஒப்பந்தம் இருக்கிறது. இருந்தும் அந்த அளவுக்கு இந்தகைய அறிவிப்பைத் தொழிலாளர் அமைச்சர் அவர்கள் அங்கே அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு 21—3—1974 இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் செய்தியாக வெளி வந்துள்ளது. இதை கேரளத் தோட்ட முதலாளிகள் அமுல்படுத்துகிறார்களோ, அமுல்படுத்த வில்லையோ என்றாலும் தமிழ் நாட்டு தோட்ட தொழிலாளர்களுடைய நிலையை தயவு செய்து இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும்.

(மாலை 4.30)

நமது அரசு குறைந்தபட்சக் கூலி சட்டத்தின்படி எல்லாத் தொழிலாளர்களுக்கும் கூலி, பஞ்சப்படி முதலியவை கிடைக்கச்செய்வதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு சட்டத்தை விரைவாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டத் தொழிலில் எத்தனையோ சட்டங்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்தாலும் அந்தச் சட்டங்களைத் தோட்ட முதலாளிகள் சரியாக அமுல்படுத்துவதில்லை. உதாரணமாக, ஊட்டச் சத்துணவுத் திட்டம்பற்றி அமைச்சரவர்களுடைய அறிவிப்பில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வயது வராத குழந்தைகள், கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு ஊட்டச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கம். அமைச்சரவர்களும் அதைத்தான் கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்

அடிப்படையில் மலைத் தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்கு மட்டும்தான் ஊட்டச் சத்துணவு கொடுக்கப்படுகிறது. ஆனால் சூலுற்ற பெண்களுக்கும் பாலூட்டும் பெண்களுக்கும் நிச்சயமாகக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாடு வளர்க்கின்ற திட்டம் இருக்கிறது. நமது அரசு கால்நடைகளைப் பராமரிப்பதில் அதிக அக்கரை காட்டி வருகிறது. ஆனால் தோட்டங்களில் தோட்ட முதலாளிகள் விருப்பம் இருந்தால்தான் மாடு வளர்க்க முடியும். அவர்கள் விரும்பாவிட்டால் வளர்க்க முடியாது. யாராவது ஒரு மாடு வைத்திருந்தால், ஏதாவது பண நெருக்கடி வரும்போது அந்த மாட்டை அந்த தொழிலாளியின் விருப்பப்படி விற்கமுடியாது. மானேஜ்மென்டாரின் சம்மதத்தைப் பெற்றுதான் கடனைத் தீர்ப்பதற்கு வேண்டுமானாலும் விற்க முடியும். அவர்களுக்குத் தெரியாமல் விற்றுவிட்டால் சஸ்பென்ட், டிஸ்மிஸ் தான் செய்வார்கள். இப்போது இந்த நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது.

கால்நடை அபிவிருத்திக்காக நம்முடைய அரசாங்கம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்பட்டாலும், தோட்டத் தொழிலாளர்கள் அந்தத் திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைதான் இன்றும் இருக்கிறது.

ஒரு பெண் தொழிலாளி காலை 8 மணிக்கு வேலைக்குப் போனால் மாலை 6 மணிக்குத்தான் திரும்பி வருவாள். அதுவரையிலும் அந்த வீட்டுக் குழந்தைக்கு மாட்டுப் பால்தான் கொடுக்கப்பட வேண்டும்.

இந்தச் சூழ்நிலை இருக்கும்போது மாடு வளர்க்கக் கூடாது என்று சொன்னால் அந்தக் குடும்பம் எப்படி இருக்கும்? அந்தக் குழந்தையை வளர்க்க என்ன செய்வார்கள்? ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனிப்பட்ட தோட்ட முதலாளிகள் நடத்துகின்ற பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கப்பட வேண்டுமென்று முத்தரப்பு மாநாட்டிலே சொல்லப்பட்டு, மானேஜ்மென்டார் அதை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை அவர்கள் அமுல்படுத்தவில்லை.

அதைப்போலவே மருத்துவ வசதிகளை ஆசிரியர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மானேஜ்மென்டார் அந்த வசதியைச் செய்து கொடுப்பதில்லை.



என்னுடைய வால்பாறை தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் அதை எதிர்த்து கோவை லேபர் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். அவருக்கு சாதகமாக வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்படி இருந்தும் ஓராண்டு காலமாகியும் அமுல்படுத்தவில்லை. அந்த அளவுக்கு சட்டம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. சட்டம் சாதகமாக இருந்ததால்தான் ஆசிரியருக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்தது. இருந்தும் அமுல்படுத்தப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இன்னொன்று. தோட்டத் தொழிலாளர்களுக்கு மருந்து அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு 41 நாளைக்கு அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் கொடுப்பது 14 நாட்கள் மட்டும்தான். சட்டத்தை அவர்கள் சரிவர கடைப்பிடிக்கவில்லை.

அதைப்போலவே ஊட்டியில் நடைபெற்ற முத்தரப்பு மாநாட்டில் தொழிலாளர் வீடுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டுமென்பதை மானேஜ்மென்டார் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இன்றுவரையிலும் ஆரம்ப வேலை கூட செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட 2, 3 ஆண்டு காலம் ஆகிவிட்டது. இவையெல்லாம் தோட்ட முதலாளிகள் சட்டத்திற்குப் பணியவில்லை என்பதைத்தான் காட்டுகின்றன.

எனவே, தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு, போனஸ், சட்டத்தின்படி கிடைக்கவேண்டிய இதர நன்மைகள் எல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து, அவர்களின் குறைகளைப் போக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியம் பற்றியும் தொழிலாளர்கள் சம்பந்தமாகவும் இங்கு சமர்ப்பித்து இருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகள் மிக முக்கியமானவை என்று நான் சொல்லாமலேயே விளங்கும். இவைகளைப்பற்றி மிக விபரமாகப் பேசலாம் என்றாலும் கூட கொடுத்திருக்கின்ற நேரத்தை வைத்துக்கொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உண்மையிலேயே ஹவுசிங் போர்டு சம்பந்தமாக பல விஷயங்களைச் சொல்ல முடியும். ஆனால் இந்த ஹவுசிங் போர்டு பற்றி சமீபத்தில்தான்—சென்ற ஆண்டு அமைக்கப்பட்ட பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி முதன் முதலாகப் பரிசீலனை செய்தது. அதனுடைய ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள்.

That report is not at all complimentary. 1965-ம் வருஷத்தி லிருந்தே கூட எந்தவிதமான வரவு செலவுக் கணக்கையும் காட்டவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் 1972-73-ம் ஆண்டு வரையில் கூட கணக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படிச் செய்திருந்தால் அது வரவேற்கத்தக்கது.

It is being manned by a powerful Secretary என்ற அளவில் இப்போது ஹவுசிங் போர்டுக்கு வந்திருக்கின்ற அதிகாரி ஒரு சீனியர் ஆபீசர். ஹவுசிங் போர்டு செயலாளராக இருக்கக்கூடியவர் லேபர் டிப்பார்ட்மென்டி லெல்லாம் இருந்து வந்தவர். ஆகவே, அப்படிப்பட்ட அதிகாரிகளும் அமைச்சர வர்களும் கலந்துகொண்டு, நல்லமுறையிலே கண்காணிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தவறுகளை நீக்க தக்க நடவடிக்கைகளை எடுப் பார்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஹவுசிங் போர்டு பற்றி சமீபத்திலே ஒரு செய்தி வந்தது. அவர்கள் கொடுத்த பிரமோஷனை எதிர்த்து ஹைகோர்ட்டிலே மனு தாக்கல் செய்தார்கள். ஹவுசிங் போர்டுக்கு விரோதமாகத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதற்கு மேல் அப்பீல் செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தமாதிரி இன்றைக்கு அங்கு இருக்கக்கூடிய சிப்பந்திகளே ஹவுசிங் போர்டு நடவடிக்கை சரியில்லை என்று கோர்ட்டுக்குப் போவதும், கோர்ட்டிலே ஹவசிங் போர்டுக்கு விரோதமாகத் தீர்ப்பு கொடுக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்தால் அந்தத் தீர்ப்பை மதித்து அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இரண்டு விஷயங்களையும் நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்திலே கொடுத்திருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய சிங்காநல்லூர் உறுப்பினர் அவர்கள் சொன்ன விஷயத்தையே நான் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போது பல ஹவுசிங் போர்டு காலனிகள் இருக்கின்றன. மதுரையில் இருக்கக்கூடியதைப்பற்றி நான் சொல்லவில்லை.

நந்தனம் காலனி ஒன்று இருக்கிறது. அதிலே கிட்டத்தட்ட 600 வீடுகள் இருக்கின்றன. அதில் 250 ஹையர் பர்ச்சஸ் ஸ்கீமில் கொடுக்கப்பட்டிருக்கிறது; 300 வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. வாடகை 60 ரூபாய் முதல் 400 ரூபாய் வரையில் இருக்கிறது. அந்த வாடகை எல்லாம் ஒழுங்காகக் கட்டப் படுகிறதா என்ற விபரம் நமக்குத் தெரியவில்லை. அவையெல்லாம் தெரிய வேண்டும்.



அங்கே இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட நபரைப்பற்றிய புகார்கள் பல வந்திருக் கின்றன. அதைப்பற்றி மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த வீட்டு நம்பர் 185/2, நந்தனம் எக்ஸ்டன்ஷன். இதிலே இருப்பவர் சரியான படி வாடகை கட்டிவருகிறாரா என்று தெரியவில்லை. அவர் வாடகைக்கு இருக்கின்ற கட்டடத்தை ஒட்டி புதிதாகக் கட்டடங்கள் எல்லாம் கட்டியிருக் கிறாராம். யாராலும் அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லையாம். அவரைப் பற்றி பல புகார்கள் வந்திருக்கின்றன. அவரை அப்படி விட்டுவைக்காமல், எல்லோருக்கும் சம நீதி என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி இந்த எல்.ஐ.சி. பணம், அதேபோல் நேஷனலைஸ்ட் பாங்கு பணம் எல்லாம் கொடுக்காமல் இருந்தால், மறுபடியும் கொடுக்க ஏற்பாடு செய்து, மேலும் பல கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்டஸ்டிரியல் ஹவுசிங் ஸ்கீமை மறுபடியும் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் அது ஆமை வேகத்தில் போகிறது. 100-க்கு மேற்பட்ட குடியிருப்புகளை ஒவ்வொரு இடத்திலும் கட்டுவதானால்தான் இன்றைக்கு இருக்கக் கூடிய பிரச்சனையைத் தீர்த்து வைக்க முடியும். இல்லை என்றால் தொழிலாளர் வீட்டுப் பிரச்சனையை ஒருநாளும் தீர்க்க முடியாது.

எனக்கு முன்னால் ஒரு உறுப்பினர் பேசினார். ஸ்டிரைக் அவசியமா இல்லையா என்பதைப்பற்றிப் பேசினார். எங்களைப் பொறுத்தவரையில் 'Strike must be considered as the fundamental right' என்று சொல்வோம். நாங்கள் இன்றல்ல; நீண்ட நெடுங்காலமாகவே சொல்லிக்கொண்டு வருகிறோம். தொழிற் சங்கத் தலைவர்கள் எந்தவிதமான மத்தியஸ்தம் செய்து வைத்தாலும் 'ஸ்டிரைக்' கூடாது என்று சொல்லமாட்டார்கள். ஸ்டிரைக் எப்போது கொண்டுவரலாம் என்றுதான் சொல்வார்கள். இன்று இந்த பத்திரிகையில் 'Is Moratorium on strikes possible', என்று ஒரு செமினார் ஹைதராபாத்தில் நடைபெற்றதாகவும், அதன் விபரத்தையும் போட்டிருக் கிறார்கள். அந்த செமினார் நான்கு நாட்கள் நடைபெற்றது.

'It was organised by the Faculty of Law, Osmania University. It was attended by academicians, judges, lawyers, trade union leaders, managerial personnel and professors of the Osmania University, etc.

The Seminar divided itself into four sessions to discuss political legal, social and economic aspects of moratorium on strikes. ..........

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 28

Those who participated in the Seminar included Mr. Justice Alladi Kuppuswami, Thiru Narasinga Rao, Chairman of the Industrial Tribunal, Thiru K. Natesan, Principal of the Law College, Thiru Mahendra of APTUC, Thiru Bhaskara Rao of CITU, Thiru Sanjiva Reddi of INTUC, Thiru Khandhubhai Desai of Andhra Pradesh and others.'

Why I am mentioning all these names is to show that the conseusus that emerged from the discussion in this Seminar is that 'self-imposed discipline on the part of the labour to refrain from strikes is not practicable and total ban on strikes even for a specific period is undesirable'.

ஆகவே, இந்தக் கருத்து வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் சொன்னது அல்ல—இந்த நாட்டின் நிலைமையை நன்கு தெரிந்துகொண்டிருக்கக்கூடிய பெரும் பெரும் தலைவர்களும், அறிவாளிகளும் சேர்ந்து விவாதித்துக் கொடுத்திருப்பதாகும். "அடிக்கடி ஸ்ட்ரைக் செய்கிறார்கள், ஸ்ட்ரைக் செய்கிறார்கள்" என்று சொல்கிறார்களே, அதற்காகச் சொல்கிறேன்.

ஸ்ட்ரைக் என்பதற்கு அர்த்தம் இருக்கிறது. 1936-37-இல் அதிகமான ஸ்ட்ரைக்குகள் நடந்திருக்கின்றன.

How many man-days lost, I am not in a position to say now. அதன் காரணமாக 37-ஆம் வருஷம் காங்கிரஸ் ஆட்சி வந்தபோது பலவிதமான தொழிலாளர்களது சட்டங்கள் வந்தன.

1946-ஆம் வருஷம் முதன் முதலாக the number of man-days lost exceeded 10 millions.

1966-ஆம் வருஷம் The number of man-days lost exceeded 20 millions.

1967-க்குப் பிறகு இது கூடிக்கொண்டேதான் வருகிறது.

இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய அரசு இடதுசாரிப் பக்கம் செல்ல வேண்டும், தொழிலாளர்களைச் சார்ந்து இருக்கவேண்டும், முதலாளிகள் பக்கம் போய்விடக் கூடாது என்பதற்கு ஜனநாயக அமைப்பில் உள்ள அரசுகளை உந்தும் சக்தியாக ஸ்ட்ரைக் இருக்கிறதே தவிர ஸ்ட்ரைக்கைக் கண்டு மிகவும் ஆயாசப்பட வேண்டியதில்லை. தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் பண்ணுகிறார்களே என்று வேதனைப்பட வேண்டியதில்லை.



1974 மார்ச் 28] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஸ்ட்ரைக் செய்கிறவர்கள் தவறாகச் செய்கிறார்கள் என்கிற கருத்தில் 1920-ஆம் வருஷம் லண்டனில் இருந்து ஒரு தூதுகோஷ்டி லெனினை வந்து பார்த்தார்கள். "ஆம் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள்".

'They committed some mistakes, 1 to 10. I concede they have committed 10 mistakes but there are thousands of achievements to their credit'
அது எல்லாவற்றையும் நீங்கள் மறுக்கிறீர்கள்.

'Right or wrong my worker is right' என்ற அந்த நிலையை எடுத்தார். அந்த அளவில்தான் இன்றைக்கு இந்த இலாக்கா பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர் அவர்களும் செயல்பட வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். இவரது சகா கிட்டத்தட்ட இதே கருத்தைத் தான் சொன்னார்கள்.

'Right or wrong my worker is right'

இன்றைக்குப் பேச்சுவார்த்தை நடக்கிறபோது சில நன்மைகள் ஏற்படுகின்றன. அகில இந்திய ரீதியில் சிமின்ட் தொழிற்சாலையில் உள்ளவர்களுக்கு சம்பள நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி. தான் கேட்டன. அப்போது அவர்களுக்கு ரூ. 150 சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. தொழிலாளர் சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளை பரிசீலனை செய்து திரு. ரகுநாத ரெட்டி தலைமையில்தான் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு ரூ. 308 ஆக—கிட்டத்தட்ட நூறு ரூபாய்க்கும் அதிகமான சம்பளத்தை இன்றையதினம் அவர்கள் இந்தியா பூராவிலும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால் அரசு தொழிலாளர் நலனில் அக்கறை உடையதாகச் செயல்பட—முற்போக்கான கருத்துக்களை மேற்கொள்ள ஸ்ட்ரைக்குகள் வேண்டித்தான் இருக்கின்றன. அதற்காகத்தான் சொன்னேன்.

அடுத்து, நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணைகளை வைத்து சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஹைக்கோர்ட்டிலே பீடித் தொழிலாளர்களுக்காகக் கொண்டுவரப்பட்ட 1966-ம் வருஷத்திய சட்டம் செல்லும் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதில் இருந்து எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்—பீடித் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்புகள்—உடனடியாகத் தொடர வேண்டும். அரசு அந்தக் காரியத்தில் இறங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி இறங்குகிற அதே நேரத்தில்—மற்ற மாநிலங்களில் பீடித் தொழிலாளர்களுடைய சம்பளம் ஆயிரம் பீடிகளுக்கு 4 ரூபாய், 4½ ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. பக்கத்தில் உள்ள ஆந்திர மாநிலத்தில் கூட ரூ. 3.75 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இங்கு ஆயிரம் பீடிகளுக்கு ரூ. 3.50 என்று இருப்பதை உயர்த்தியாக வேண்டும். இதற்கும் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஹோட்டல் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தின் அடிப்படையில் அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்திற்கான கமிட்டி அமைக்கப்படவில்லை. பதில் சொல்லக்கூடிய நேரத்திலாவது இந்தக் கமிட்டி அமைக்கப்படுமா என்பதைச் சொல்ல வேண்டும். அத்தகைய வாக்குறுதி கொடுக்கப்படவில்லை என்றால் நான் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துவேன் என்று சொல்லிக் கொள்வேன்—நான் வற்புறுத்துவதாக இல்லை—சிறிய விஷயம்.

அடுத்து, பெரிய விஷயம் என்பதற்கு சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். 1973-ஆம் வருஷத்திலே ஹோட்டல் தொழிலாளர்கள் 71,765 பேர்கள் இருந்தார்கள். 1974-ஆம் ஆண்டில் 68,249 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்கிற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது? இதற்குக் காரணம் என்ன? எப்படி 3,500 பேர்கள் குறைந்துபோய்விட்டார்கள்? வேலையைவிட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். புதிய புதிய கடைகள் வருகின்றன. வந்ததும் இந்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைகிறது.

குறிப்பாக, 19,786 ஹோட்டல்கள் 1973-இல் இருந்திருக்கின்றன என்றால், 1974-இல் 19,[illegible]95 ஹோட்டல்கள் வந்திருக்கின்றன. இதில் எந்தவிதமான தொழிலாளர்களையும் வைத்துக்கொள்ளாது இயங்கும் ஹோட்டல்கள் 1973-இல்—9,412 என்றால் இந்த ஆண்டில் 1974-இல்—9,665.

இதை ஏன் சொல்கிறேன் என்றால்—ஹோட்டல்களை அதிகமாகத் திறக்கிறார்கள். ஆனால் ஹோட்டல் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அவர்களுக்காக நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய சட்டம் எந்த வகையிலும் அமல்படுத்த முடியாத மோசமான நிலைமையில்தான் இருக்கிறது. ஆறு மாதம் ஆனவுடனே வேலையைவிட்டு நீக்குவது, உடனே மறுநாளே வேலைக்கு வைத்துக்கொள்வது என்கிற நிலைதான் இருக்கிறது. ஆகவே, ஹோட்டல் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு—ஒரு உத்தரவாதம் ஏற்படச் செய்து, அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயம் பண்ணக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அந்தமாதிரி டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள்—அந்தத் தொழிலாளர்களுக்கு சம்பள போர்டு தீர்ப்புக் கொடுத்துவிட்டது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் கேரளத்தில் ஒரு சட்டமே கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே நீலகிரி மாவட்ட பஸ்களை தேசியமாக்குகிறபோது இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்களே சொன்னார்கள், "புதியதாக ஏற்று இருக்கக்கூடிய பஸ் கம்பெனிகளில் சம்பள போர்டு தீர்ப்பின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று—பக்கத்தில் உள்ள திருவொற்றியூரில் க்ளாஸ் ஷீட் பாக்டரி ஒன்று இருக்கிறது. நடுவிலே மூடினார்கள்—நம் சர்க்கார் 20 லட்சம் அட்வான்சு கொடுத்தது—திரும்பத் திறந்தார்கள்.—இப்போது மறுபடியும் மூடிவிட்டார்கள். கிட்டத்தட்ட 250 தொழிலாளர்கள் இந்த திருவொற்றியூரில் உள்ள—அன்சோஷல் ஆசாமியிடம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறார்கள்.

He is an unsocial man who always resorts to unfair labour practices.

அப்படிப்பட்ட ஆசாமியாக இருக்கிறார். அவரைக் கொஞ்சம் குறி பார்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம்—சாதாரணமாக தொழிலாளர்கள் தகராறு—ஸ்ட்ரைக் ஏற்படுகிறது—தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள் என்றால் சில சமயம் முதலாளிகள் பிடிவாதமாக இருந்தால் அவருக்கு எதிராக தொழிலாளர்கள் கோஷம் போடுவது உண்டு. அவரது காரில் கல்லை விட்டெறிவதும் உண்டு. சாதாரணமாகச் செய்யமாட்டார்கள். தொழிலாளர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்காமல்—அவர்களுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபடுகிறபோது இதுபோல நடப்பது உண்டு.

ஆனால் ஒப்பந்தம் என்று ஏற்பட்ட பிறகு—கேஸ்கள் எல்லாம் வாபஸ் ஆக வேண்டும். அப்போதுதான் மறுபடியும் சுமுகமான நிலை ஏற்பட முடியும். ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு—தொழிலாளர்களது மீது வழக்குகளையும் தொடர்ந்து நடத்துவது—தொழில் தகராறு தீர்ந்ததாக ஆகாது—தீராத வினையாகத்தான் போய்விடும்.

இன்றைக்கு சிம்சனையே எடுத்துக்கொண்டால் 400 பேர்கள் மீது கேஸ்—அதற்காக ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்—வாரத்திற்கு அவர் ஒரு நாள்தான் வருவார். 1½ ஆண்டுகள் ஆகிய பிறகும் கூட அங்கே இந்த நிலைமைதான் இருக்கிறது—இது எல்லாம் மாறவேண்டும். அதை இந்த அரசு மாற்றும்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 28

என்று நம்புகிறேன். வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

எனக்கு இன்னும் 10 நிமிடங்கள் தேவை. உட்காரச் சொன்னால் உட்கார்ந்துவிடுகிறேன்.

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENCATACHELLUM): I have already given 15 minutes. All right, the hon. Member can take ten more minutes.

THIRU K. KAMATCHI: Madam, with your pemission can I go outside for taking coffee. Now we are 27.

CHAIRMAN (THIRUMATHI JOTHI VENKATACHALLUM): permission is not necessary. But quorum must be there.

THIRU K. KAMATCHI: Yes, Madam.

திரு. கே. டி. கே. தங்கமணி: இதுவரை தலைவரிடம் பெர்மிஷன் கேட்டுக் கொண்டு யாரும் போனதில்லை. இதிலிருந்து தலைவர் அவர்கள் ரொம்ப ஸ்ட்ரிக்ட்டாக இருப்பது தெரிகிறது. பொதுவாக தொழிலாளர்கள் விவாதம் நடைபெறுகிறபோது ரொம்ப கட்டுப்பாடாக இருப்பார்கள். அதே மாதிரி தாங்கள் இருப்பதற்கு ரொம்ப சந்தோஷம்.

அடுத்தபடியாக மினிமம் வேஜெஸ் ரிவிஷன். இப்போது இந்த ஸ்டேட் ஒரு கமிட்டி போட்டிருக்கிறது. ஆனால் அது என்ன செய்கிறதென்று தெரியவில்லை.

Probably the Committee will have to be revised.

அதேபோல ஒரு தொழிலுக்கு ஒரு கமிட்டி போடவேண்டும்.

I am not spelling out the details. அதைச் செய்யவேண்டும்.

இன்னொன்று. பொதுவாக என்ன ஒரு கொள்கை செய்ய வேண்டுமென்று கேட்டால் 'நோ க்ளோஷர், நோ ரிட்ரன்ஜ்மென்ட், நோ லாக் அவுட்' என்று வைக்கவேண்டும். இப்போது மெட்ராஸ் லேபர் கெஜட் ரெகுலராக வரவில்லை. ஆகவே அதை வர தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். முதல் கூட்டத்திலேயே சொன்னேன்.



1974 மார்ச் 28] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அடிஷனல் லேபர் கமிஷனர் போடப் போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சென்னையிலே அது உதவிகரமாக இருக்கலாம். இன்னும் சொன்னால், நாங்கள் எல்லாம் வெட்டுப் பிரோணை கொடுக்கிறவர்கள். ஆகவே, அந்த டிபார்ட்மெண்டிலே அதிக வேலை இருக்கலாம். அதனால் அது சரிதான். இதே போல மதுரையில் ஒரு டெபுடி லேபர் கமிஷனர் இருக்கிறார். அவருக்கு இன்றைக்கு இந்த மாநிலத்தில் பாதி இருக்கிறது. ஆகவே, வேலைப் பளு அதிகரித்து அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே, அவரின் வேலைப் பளுவைக் குறைக்கிற வகையிலே இன்னொரு அதே ரேங்கில் உள்ள அதிகாரியை திருச்சியிலே போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால் அது தொழில் தகராறுகளை விரைவிலே தீர்க்க பேருதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில விஷயங்கள். எப்படி சில ஊனங்கள் சட்டத்திலே இருக்கிறதென்ற விஷயம். நமது அரசாங்கம் அதைச் செய்யாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது வொர்க்மென் காம்பென் சேஷன் என்றிருக்கிறது. இன்றைக்கு

There is no guarantee for medical treatment by the employer

அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இன்றைக்கு ஃபாக்டரி சட்டத்திலே

There is provision for earned leave but leave lapses are not allowed to accumulate

அதற்கான ஏற்பாடுகள் செய்யமுடியுமா என்று பார்க்கவேண்டும்.

வொர்க்கர்ஸ் எஜுகேஷனைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மத்திய சர்க்கார் 1957-லிருந்தே நடத்திக்கொண்டிருக்கிறது. சென்னையிலே, மதுரையிலே, கோவையிலே நடந்துகொண்டிருக்கிறது. அது நடக்கிறபோது must there be a duplication அது அவசியம் தானா என்று பார்க்க வேண்டும்.

அடுத்தாற்போல இன்றைக்கு இருக்கிற லேபர் கோர்ட்டுகளை அதிகப்படுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கிற ட்ரிபூனல் போதுமானதாக இல்லை. ஆனாலும், வருங்காலத்தில் நேரடியாக பேச்சு வார்த்தைகள் நடத்தி செட்டில்மெண்ட் ஆகிற சூழ்நிலை இருக்கிறபோது இந்த ட்ரிபூனல் அதிகமாக தேவைப்படாது.

ஏனென்று சொன்னால் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி பல காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதை பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினை நமக்குக் காட்டுகிறது. ஆனாலும் அதிலே நம்முடைய அரசாங்கம் தான் எல்லாம் செய்ததென்று சொன்னால் அது நல்லதல்ல. சொல்லப்போனால், இந்தப் பிரச்சினையை இன்னும் துரிதமாகக் கூட முடித்திருக்கலாம்.

துரைசாமி சொன்னார்கள். எங்களுடைய அரசுதான் 29 பைசா கிடைக்கச் செய்தது. 22 ரூபாய் தான் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்தும், இந்த அரசின் முயற்சியால் 30 ரூபாய் கிடைத்திருக்கிறதென்று சொன்னார்கள்.

ஆனால், நான் என்ன சொல்வேன் என்று சொன்னால் பல நாட்கள் தொழிலாளர்கள் போராடி அந்தத் தொழிலாளர்களின் சம்பளத்தில் பல கோடி ரூபாய் நஷ்டம், அதற்குமேலே உற்பத்தியில் 30 கோடி ரூபாய் நஷ்டம், இதற்கெல்லாம் பிறகு தானே இது கிடைத்திருக்கிறதென்று சொல்வேன். ஆகவே, சுமுகமான பேச்சு வார்த்தை நடத்தினால் தீராத பிரச்சினையே இல்லை.

பலபேர்கள் சொல்வார்கள், ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் வேண்டுமென்று வேதம் ஓதுகிற மாதிரி சொல்வார்கள். ஆனால் யாருக்குமே அதிலே நம்பிக்கை கிடையாது. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு தொழிற்சங்கம் வைத்திருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் ஒரு யூனிட்டுக்கு இரண்டு சங்கம் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதை 'வித் எ ஹார்ஸ் சென்ஸ்' சொன்னார்கள்.

இரண்டு சங்கங்களிலே எந்தச் சங்கத்திற்கு தொழிலாளர்கள் அதிகமாக ஓட்டுப்போடுகிறார்கள் என்று பார்த்து அந்தச் சங்கத்தை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் தொழிலாளர்கள் அபரிதமான ஒற்றுமையோடு இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம்.

சமீபத்திலே 1 லட்சத்து 25 ஆயிரம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் எல்லோரும் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்தார்கள் என்று சொன்னால் அது தொழிலாளர்களின் ஒற்றுமையைக் காட்டுகிறது இல்லையா. பல தொழிற் சங்கங்கள் இருந்தாலும் பேஸிலே வலுவான ஒற்றுமை இருக்கிறது. அதிலே ஆட்சேபனை இல்லை.

யாரோ ஒரு உறுப்பினர் சொன்னார் வெளி ஆட்கள் தொழிற்சங்கத்தில் இருக்கக்கூடாதென்று. அது தான் எங்கள் கட்சி சங்கத்தின் கொள்கையும்.





ஆனால் அதே நேரத்தில் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து பழிவாங்கப் பட்டவர்கள் வெளி ஆட்கள் இல்லை. உதாரணமாக எங்கள் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரத்தை எடுத்துக்கொண்டால் அவர் முன்பு ரயில்வே வொர்கராக இருந்தார். 'ஸோ ஹி இஸ் நாட் அன் அவுட் சைடர்'.

அதே போல அனந்தன் நம்பியார், காலம் சென்ற விட்டல் ராவ் இப்படி நாங்கள் பல தொழிலாளர் தலைவர்களைத் தயாரித்திருக்கிறோம்.

ஆனால், இன்றைக்கு எல்.ஐ.சி. தொழிற்சங்கத்தை எடுத்துக்கொண்டால் அதிலே அங்கே பணியாற்றுகிறவர்கள் தான் தலைவர்களாக இருக்கிறார்கள். பாங்கிகளிலும் அப்படித் தான். என்.ஜி. ஓக்கள் சங்கத்திலும் அரசிலே பணியாற்றக்கூடியவர்கள் தான் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஏதோ ஒரு தப்பான கருத்தை, சில பேர்கள் வந்து தவறு செய்கிறார்கள் என்பதால், பலமாக பிரச்சாரம் செய்வதால் இதைச் சொல்கிறேன். ஆகவே, இன்றைக்கு பெரிய பெரிய சங்கங்களிலே உள்ளவர்கள் அங்கே பணியாற்றுகிறவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

அதே மாதிரி சென்னையிலே ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் உள்ள இடத்தில் ஒரு சங்கம் தான் இருக்கிறது. அப்படியிருந்தாலும் 4, 5 கோஷ்டிகள் அங்கே சண்டை போடுகின்றன. ஆகவே ஒரே சங்கம் என்பதால் பிரச்சினை தீர்ந்துவிடாது. ஒரே சங்கத்தில் 4, 5 கோஷ்டிகள் இருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் விட்டு ஒன்றுபட்டு நிற்கவேண்டும். அந்த சங்கம் கட்டுப்பாடோடு இயங்கவேண்டும். எப்படி பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினையில் ஒன்றுபட்டு நின்று பிரச்சினைகள் தீர்க்கப்பட்டனவோ அந்த முறையில் இதற்காக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்னொரு முக்கியமான விஷயம். இன்றைக்கு எல்.ஐ.சி. ரயில்வே, ஆசிரியர்களாக இருக்கிறவர்கள்—சாதாரணமாக காலும், கரத்தாலும் பணியாற்றக்கூடியவர்கள் எல்லோரும் தொழிலாளர்கள் தான். அந்த அடிப்படையில் அங்கே உள்ள எல்லோரும் தொழிலாளர்கள் தான். ஆகவே அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கெல்லாம் இந்த காரியத்தை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றிரண்டு சிறிய விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தொழிலாளர்களுக்கு பல சட்டங்கள் இருக்கின்றன நான் விவரங்களுக்கு உள்ளேபோகவில்லை. ஹோட்டல் தொழிலாளர்கள் பாது காப்புச் சட்டம் இருக்கிறது. நான் இந்த அதிகாரிகளைப்பற்றி குறிப்பாக பேச

கஷ்டமாக இருக்கிறது. மதுரையில் இன்ஸ்பெக்டர்கள் ஹோட்டலுக்கு இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிறார்கள். அதைப் பற்றித் தொழிலாளர்கள் தப்பாகச் சொல்கிறார்கள். 'இன்ஸ்பெக்ஷன் வொர்க் மஸ்ட் பி ரியல் இன்ஸ்பெக்ஷன் வொர்க்'. அந்தமாதிரி இருந்தால் போதும். ஆனால் இன்றைக்கு இன்ஸ்பெக்டர்கள் எப்படி இருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்கள் தொழிலாளர்களை பாதுகாக்க இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இல்லை. முதலாளிக்குத்தான் பாதுகாப்பாக இருக்கிறார்கள். நான் எல்லோரையும் சொல்லவில்லை.

(மாலை 5.00)

Inspection work must be real inspectorate work.
சோவியத் யூனியன் மாதிரி இடங்களிலே
Inspection work is done by trade Union worker. Factory worker is a trade unionist.
என்கிற அந்த மாதிரி கருத்தோட்டத்தோடு செயல்படுகிறார்கள். அந்தக் கருத்தோட்டத்தோடு பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் தொழிற்சங்கத்தினுடைய ஒரு பகுதி என்று கருதி செயல்படுவார்களானால்
If they are to identify themselves with workers and trade union movement.
ரொம்ப ஈஸியாக இருக்கும். அப்படிச் செய்தால் நாம் பல சட்டங்களை அமல் படுத்தமுடியும். தொழிலாளர்கள் நலனுக்காக இருக்கக்கூடிய பல சட்டங்கள் இன்றைக்கு அமல்படுத்தாத நிலைமை இருக்கிறது. எந்தப் பகுதியிலே இருக்கிற தொழிலாளர்களாக இருந்தாலும் 1, 2 மாதம் முடிந்த பிறகு அவர்களுக்கு பிராவிடண்ட் பண்டிலே எவ்வளவு இருக்கிறது என்று தெரிய வேண்டும். முன்னாலே சிலிப் கொடுத்தார்கள். இப்பொழுது கொடுக்கப்படவில்லை, ஆகவே அதைத் தெரிவிக்கவேண்டும்.

இ.எஸ்.ஐ. பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பலரும் சொன்னார்கள். நம்முடைய அரசு 75 லட்சம், 85 லட்சம் ரூபாய் அதிகமாகச் சொலவழிக்கிறார்கள் என்றாலும்கூட அதற்கு சரியான பலன் இருக்கக்கூடிய முறையிலே செய்யவேண்டும். இ.எஸ்.ஐ ஸ்கீமை விரிவுபடுத்துகிற விஷயத்தில் கஞ்சத்தனமாக இருக்கவேண்டியதில்லை.

We need not be stingy.

மதுரையிலே மேலூரைச் சேர்த்திருக்கிறோம். இன்னும் அதிகமான ஏரியாக்களைச் சேர்க்கவேண்டும். ஒரு கால கட்டத்திலே தமிழ்நாடு பூராவுமே இ.எஸ்.ஐ.யிலே வரவேண்டுமென்ற முறையிலே செய்யவேண்டும். திரு. துரைசாமி அவர்கள் சொன்னார்கள் பேக்டரி சட்டம் இருக்கிறது. வித் பவர் என்றால்



9 பேர் என்று இருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட முறையில்லாமல் சாதாரணமாக இருக்கக்கூடிய எல்லா தொழிலாளர்களுக்கும், ஸ்வெட்டட் லேபர், என்ற முறையிலே எல்லோருக்கும் அந்த வசதிகளை விரிவுபடுத்தவேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக மினிமம் வேஜஸ் ஆக்டிலே ஷரத்துக்கள் போட்டிருக்கிறோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு மினிமம் வேஜஸ் ஆக்டின் கீழே ஒரு உதவி செய்யக்கூடிய முறையிலே ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். அந்தக் கமிட்டி பரிசீலித்து ரிப்போர்ட்டும் கொடுத்துவிட்டது, ஆனால் அது வெளியே வரவில்லை இன்னும். தொழிலாளர்களுக்குத் தெரியும் அந்தக் கமிட்டி ரிப்போர்ட் கொடுத்துவிட்டது என்று. அவர்களுக்கு சம்பளம் நிர்ணயம் பண்ணக்கூடிய, அதிலே ஏதாவது மாறுபாடு இருந்தால் அரசு அவர்களுடைய முடிவு இதுதான் என்று எடுத்து அறிவித்துவிடலாம். அப்படியில்லாமல் இன்னும் வைத்துக்கொண்டு காலதாமதம் செய்யக்கூடாது. உடனடியாக கவனிக்க வேண்டும்.

தொழிலாளர்களின் சார்பிலே நடக்கக்கூடிய கூட்டங்களிலே எங்களுக்கு தொழிற்சங்கத் தலைவர்கள் சொல்லிக்கொடுத்தது தொழிலாளர்கள் மத்தியிலே தவறு இருந்தால் அதைப்பற்றி பொதுமக்கள் மத்தியிலே சொல்லக்கூடாது, தொழிலாளர்களை தனியாகக் கூப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொல்லிக் கொடுத்த தலைவர்கள் சிங்காரவேலு செட்டியார், சக்கரை செட்டியார் போன்றவர்களை நாம் ஞாபகம்படுத்திக்கொள்ளவேண்டும்.

பேரவைத்தலைவர்—தலைமை

ஜாதி, மதம் என்ற வேறுபாடுகள் எல்லாம் இருக்கிற தமிழகத்திலே 1918 ஆம் வருஷத்திலே தொழிற்சங்கம் அமைக்கிறபோது, மண்ணெண்ணெய் தொழிலாளர்கள் எல்லாம் சங்கம் ஆரம்பித்து அதற்கு என்ன பெயர் வைப்பது என்று அவர்களிடத்திலே போய் கேட்டார்களாம். தாழ்த்தப்பட்ட மக்கள் அப்பொழுது அந்த தொழிலிலே அதிகமாக இருந்த காரணத்தால் தாழ்த்தப்பட்ட மண்ணெண்ணெய் தொழிலாளர்கள் சங்கம் என்று வைக்கலாம் என்று சொன்னதற்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட மண்ணெண்ணெய் தொழிலாளர்கள் சங்கம், மேலே போன தொழிலாளர் சங்கம் என்று போவதா, மண்ணெண்ணெய் தொழிலாளர் சங்கம் என்று வைக்கலாம் என்று சொன்னார்கள்.

1918 ஆம் வருஷத்திலேயே, 1926 ஆம் வருஷத்திலேதான் தொழிற்சங்க சட்டம் வந்தது. ஆனால் அதற்கு முன்னாலேயே சாதி மதம் என்று இருந்த காலத்திலேயே தொழிலாளர்கள் எல்லாம் ஒரு இனம் என்று சொல்லி தொழிற் சங்கங்களை கட்டி வளர்த்த அந்தத் தலைவர்களுடைய பாரம்பரியம், சிங்கார

வேலு செட்டியார், சக்கரை செட்டியார், திரு. வி.க. போன்றவர்களுடைய பாரம்பரியம் இருக்கிறது, அந்த வகையிலே இந்த அரசு தொழிலாளர்களுக்கு நலன் புரிவதில் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக பார்க்கிற நேரத்திலே இந்த இரண்டு துறைகளிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிரமான கவனம்செலுத்தி முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறார்கள் என்று தான் சொல்லவேண்டும். தனிப்பட்டு அல்லது குறிப்பிட்டு சொல்லக்கூடிய சில குற்றங்களை குறைகளைத்தவிர பொதுவாக நல்ல முன்னேற்றத்தைத் தமிழகம் அடைந்திருக்கிறது என்பதை இந்த அறிக்கையிலே பார்க்கிறபோது தெளிவாகப் புரிந்துகொள்கிறோம்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் வீட்டு வசதி வாரியம் தன்னுடைய பணிகளை சிறப்பாகச் செய்து வருகிறது என்பதை மறுப்பதற்கில்லை. பொது நிறுவனங்கள் குழுவின் தலைவன் என்ற முறையிலே நானும் மாண்புமிகு உறுப்பினர்கள் என்ற முறையிலே மாண்புமிகு உறுப்பினர்களும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே சென்று வீட்டு வசதி வாரியத்தின் நடவடிக்கைகளை ஏறக்குறைய ஒரு ஆண்டுக்காலம் பரிசீலனை செய்துவந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அண்டை மாநிலங்களுக்கும் வட நாட்டிற்கும் சென்றுகூட வீட்டுவசதியிலே எப்படிப்பட்ட முன்னேற்றத்தை நாம் பெற்றிருக்கிறோம், அவர்கள் எப்படியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் கண்டு வந்திருக்கிறார்கள்,

கம்பேரடிவ் ஸ்டடி என்ற முறையிலே பார்க்கிறபோது தமிழ்நாட்டிலே வீட்டு வசதி வாரியம் செயலாற்றுகின்ற தன்மையைப் பார்க்கிறபோது பாராட்டத்தக்கதாக அமைந்திருக்கிறது.

நீண்ட நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த அந்த கணக்குவழக்குகள் எல்லாம் நாங்கள் அந்தக் குழுவின் நடவடிக்கைகளை ஆரம்பித்ததற்குப் பிறகு மிகத் தீவிரமாக சீர்படுத்தப்பட்டு இப்பொழுது அந்தக் கணக்கு வழக்குகள் எல்லாம் சீராக அமைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





முதல் அறிக்கையிலே வீட்டுவசதி வாரியத்திலே சில குற்றங்களை நாங்கள் சுட்டிக்காட்டிய நேரத்திலே அதற்குப் பிறகு அந்தத் தலைவரும் அதிகாரிகளும் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக மிகக் குறுகிய நேரத்திலே அந்தக் கணக்குகளையெல்லாம் பார்த்து சீர்செய்து இப்பொழுது கணக்குவழக்குகள் நல்லமுறையிலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஒரு புதிய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களிலே வீட்டு வசதிக்காக 3 சென்ட் நிலம் பட்டா கொடுக்கிறார்கள் அல்லது குறைவாகக் கொடுக்கிறார்கள். கிராமங்களிலே உள்ள மக்களுக்கு 4 ஆயிரம் ரூபாய் கடனை வழங்கவேண்டுமென்ற நிலை இருப்பதால் குறைந்தது 5 சென்ட் நிலம் இருந்தால் தான் அந்தக் கடன் வழங்கப்படும் என்ற நிலைமை இருக்கிறது. அந்த முறையைத் தளர்த்தி கிராமங்களிலே ஒரு சென்ட், ஒன்றை சென்ட், இரண்டு சென்ட் என்று நிலம் இருந்தாலும்கூட பரவாயில்லை அந்த அளவிற்கு நல்ல கட்டடம் கட்டிக்கொள்வதற்கு ஏற்றமுறையிலே அந்தக் கடனை அவர்களுக்குக் கொடுத்து உதவ வாய்ப்பை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் நடவடிக்கைகள் தஞ்சை மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஓரளவிற்கு அதிகரித்திருக்கின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்திற்கு அதை ஒரு தனி கோட்டமாக ஆக்கி தனி அதிகாரிகளைப் போடவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன் வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு ஏறக்குறைய 189 லட்சம் ரூபாய் கடன் வழங்கி ஏறக்குறைய 3 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொள்ள வசதி ஏற்படுத்தியதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற் பிரச்னை என்று வருகிற நேரத்திலே ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லவிரும்புகிறேன். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் தான் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி போன்றவர்கள் எல்லாம் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் வேண்டும் என்று சொல்கிற நேரத்திலே தொழிற் சங்கங்களிலே ஏற்படுகிற கோளாறுகளுக்குக் காரணம் அரசியலை மறந்து விட்டு பாரபட்சமற்ற தன்மையிலே நாம் சிந்தித்தால் பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தொழிற்சங்கங்களிலே நுழைந்துகொண்டு தங்களுடைய செல்வாக்கைப் பெருக்க அதன்மூலம் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளவேண்டுமென்று நினைக்கிற நிலைமை இருப்பதால்தான் அத்தகைய நிலைமை இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

[திரு. என். கணபதி] [1974 மார்ச் 28

அப்படிப்பட்ட நிலை மாற வேண்டுமானால் அரசியலிலே சம்பந்தப்பட்டவர்களானாலும் சரி, இல்லாதவர்களானாலும் சரி தொழிலிலே இருப்பவர்கள்தான் அந்தத் தொழிற்சங்கங்களில் பொறுப்பையேற்று தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்குகின்ற ஒரு நிலைமைக்கு மாற்றித் தீர வேண்டும்.

அப்படி மாற்றுகின்ற நேரத்தில், எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள், ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்க வேண்டும், நாங்கள் அதில் அரசியலைப் புகுத்த விரும்பவில்லை, ஆனால் மற்றவர்கள் நுழைந்து பலவிதமான முயற்சிகளை எடுக்கும் நேரத்தில் நாங்கள் எப்படிப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடியும் என்ற தொனியில் சொன்னார்கள்.

நான் சொல்ல விரும்புகிறேன், தொழிலாளர்கள் நம்முடைய சகோதரர்கள், அவர்கள்தான் உற்பத்தியைப் பெருக்கி, பொருளாதாரத்தை உயர்த்தி நமக்கு கௌரவத்தை உண்டாக்குகிறார்கள். ஆனால் அவர்கள் வெளியாரின் தலையீட்டின் காரணமாக அர்த்தமில்லாத, பல தகுந்த காரண காரியங்களை எடுத்துச் சொல்ல முடியாத சில கோரிக்கைகளை வைத்துவிட்டு அதற்காக போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதன் காரணமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 1973-ஆம் ஆண்டில் 20, 56, 995 மேன்டேஸ் இழந்திருக்கிறோம். அந்த உற்பத்தித் திறனை இழந்ததன் காரணமாக நமக்கு எவ்வளவு பொருளாதார நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படிச் சொல்லும் நேரத்தில் மாண்புமிகு திரு. தங்கமணி அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். வெளியார் போகக் கூடாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன், ஆனால் எக்ஸ்-ஒர்க்கர் போகலாம் என்ற விதிவிலக்கை அவர்கள் கேட்டார்கள். அதோடு சேர்த்து நான் சொல்வது என்னவென்றால், தொழிலாளர்களுக்காக வாதாடுகின்ற வக்கீல்கள் போயாக வேண்டும், தொழிலாளர்களுக்காகப் பேசுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் போயாக தொழிலாளர்களுக்காகப் பாராளுமன்றத்தில் எடுத்துச் சொல்லுகின்ற அங்கத்தினர்கள் அங்கே போயாக வேண்டும் என்று பட்டியல் நீண்டு வெளியிலே உள்ள அரசியல் வாதிகள் அங்கே நுழைந்து தொழிலாளர் அமைதியைக் கெடுக்கின்ற நிலைமை உருவாகும் என்று சொல்லி, யாரானாலும் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளி, நிர்வாகத் திறமை மிக்க ஒரு தொழிலாளி அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் செல்வாக்குள்ள ஒரு தொழிலாளி தலைவராக இருந்து தொழிற்சங்கத்தை நடத்துவதுதான் சிறப்பாக அமையும் என்ற கருத்தை நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1974 மார்ச் 28] [திரு. என். கணபதி]

அடுத்து, ஒரு முக்கியமான பிரச்னை. பல்வேறு தொழிலாளர்களைப்பற்றி இங்கே நாம் பேசுகிறோம். அதேநேரத்தில் துணை நடிகர்கள், துணை நடிகைகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். ஏதோ போதாத காலம் நாங்களெல்லாம் துணை நடிகர்களாக வந்துவிட்டோம், எங்களுக்குத் திறமையில்லையா, ஃபேஸ்கட் இல்லையா, வசனம் பேசும் திறமையில்லையா அல்லது ஆடல் பாடல் போன்ற தகுதியில்லையா என்று குறைப்படும் அளவில் துணை நடிகர்களும் துணை நடிகைகளும் நம் நாட்டில் இருக்கிறார்கள். நாளெல்லாம் அரிதாரம் பூசிக்கொண்டு வெய்யிலிலும் மழையிலும் கேட்பாரற்ற நிலையில் கிடந்து, கிடைக்கும் கூலிக்காக காண்டிராக்டருக்குக் கட்டுப்பட்டு, நாளெல்லாம் கஷ்டப்பட்டு 10 ரூபாயோ, 15 ரூபாயோ, 20 ரூபாயோ வாங்குகின்ற நிலையில் இன்றையதினம் துணை நடிகர்களும், துணை நடிகைகளும் கஷ்டத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள்.

அதேநேரத்தில் அடுத்த முனையைப் பார்க்கும்பொழுது ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷங்கள் அல்லது 10, 15 நிமிஷங்கள் தொடர்ந்து நடித்துவிட்டு அதற்காக லட்சக்கணக்கில் பணத்தை வாங்கும் ஹீரோ நடிகர்களும், நடிகைகளும் நம் நாட்டில் இருக்கிறார்கள். அந்த ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சியெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதில் நிச்சயமாக ஒரு உச்சவரம்பைக் கொண்டு வருவதற்கு நமக்கு அதிகாரம் இல்லை. ஆனால் அதேநேரத்தில் குறைந்த ஊதியம் இவ்வளவுதான் இருக்க வேண்டும், இந்த இந்த முறையிலேதான் அவர்கள் நடத்தப்பட வேண்டுமென்று சொல்ல அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த துணை நடிகர்களுக்கும், துணை நடிகைகளுக்கும் நல்லதொரு வசதியை, நல்லதொரு உதவியைச் செய்து அவர்களுக்குக் கைகொடுத்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, 10 நிமிஷம், 15 நிமிஷம் நடித்துவிட்டு இலட்சக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அது யார் என்று சொன்னால், விளக்கமாகச் சொன்னால் நாங்களும் ரசிப்போம்.

திரு. என். கணபதி: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சினிமா பார்ப்பார்கள் என்பதை அவர்களே மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஹீரோ நடிகர்கள், நடிகைகள் என்று சிலர் இருக்கிறார்கள். யார் என்று பெயரைச் சொல்லிக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் ஹீரோ நடிகர்களில் புரட்சித் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன்

அவர்கள் இருக்கிறார்கள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் இருக்கிறார்கள், நடிகைகளில் ஜெயலலிதா இருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு ஹீரோ நடிகர்கள், நடிகைகள் இருக்கிறார்கள். அவர்கள் இலட்சக்கணக்கில் பணம் வாங்குகின்ற நேரத்தில் அவர்களுக்கு உறுதுணையாக நடிப்பவர்கள் 5 ரூபாய், 10 ரூபாய் என்று பிச்சையெடுக்கும் நிலைமையிருப்பதை மாற்றியாக வேண்டுமென்று இந்த மன்றத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன் :** பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் ஒரு வழக்கறிஞர். நடிப்பது ஒரு தொழில். அதிலே சில நடிகர்கள் திறமையாக நடிப்பார்கள், எனவே அவர்கள் அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். சிலருக்குத் திறமையிருக்காது.

அதேபோல் வக்கீல்களிலும் சில வக்கீல்கள் அதிகமாகப் பணம் வாங்குகிறார்கள். சில வக்கீல்கள் 'சன்டே கோர்ட் லாயர்'களாக இருக்கிறார்கள். இதைப்பற்றி மாற்றியமைக்க அவர்கள் வழி சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதிகமாகப் பீஸ் வாங்குவது அவர்களின் திறமையைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாக வாங்க முடியவில்லையென்றால் அதற்காக மற்றவர்களைப் பார்த்து சங்கோஜப்பட்டால் என்ன செய்வது ?

**திரு. என். கணபதி :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கோபப்படுவது நியாயம்தான். ஆனால் வக்கீல்களுடைய திறமையை அளவுகோல் போட்டு . . .

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, நடிகர்களைப் பற்றிப் பேசும் பொழுது வக்கீல்களைக் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். இந்த இரண்டு தொழில்களையும் ஏன் இணைத்துப் பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. வக்கீல்கள் திறமையை நிதர்சனமாகக் கொடுத்து பணத்தைப் பெறுகிறோம். ஆனால் நடிப்பில் பார்த்தால் காட்சியிலேதான் வருகிறது. எனவே, இதற்கும் அதற்கும் வித்தியாசம் உண்டு. ஆகையால் எங்களை இழிவாகப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அவரும் வக்கீல்.

**திரு. நா. வீராசாமி :** லத்தீப் அவர்கள் கோபப்படத் தேவையில்லை. துரைமுருகன் அவர்கள் நடிப்பதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வக்கீல் நடிகர்களும் நடிக்கிறார்கள் கோர்ட்டிலே.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வழக்கறிஞர்களைப்பற்றி தப்பான கருத்து வந்திருக்கிறது. நானும் வறிக்கறிஞர் என்ற முறையில், 'நோபில் புரஃபொஷன்' என்று உலகம் ஒப்புக்கொள்ளும் தொழில். ஆகவே, அதைப்பற்றிக் குறைத்துப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதி மன்றத்திலே வாதாடி நீதியை நிலைநாட்டவும், சட்டத்திற்கு உறுதுணையாகவும் இருக்கும் சமுதாயம் என்ற அடிப்படையில் நாம் அதைக் குறைத்துக் கூற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** நான் குறைத்துச் சொல்லவில்லை. நானும் ஒரு வந்திருக்கிறது. நானும் வழக்கறிஞர் என்ற முறையி, 'நோபில் புரஃபொ யாருக்கு திறமையிருக்கிறதோ அவர் பெரிய வழக்கறிஞராக இருக்கிறார். உள்ளத்து உணர்வுகளைத் தெள்ளத் தெளிவாகக் காட்டினால் நடிகர்கள் திறமை பெற்ற பெரிய நடிகர்களாக இருக்கின்றார்கள். அதைப்போல திறமையான வழக்கறிஞர் பெரிய வழக்கறிஞராக ஆகிறார். ஆகவே இது திறமையின் அடிப்படையிலே அமைய முடியுமே தவிர, இதற்குச் சட்டம் போட்டு மட்டம் தட்ட முடியாது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். கணபதி :** திரு. துரைமுருகன் அவர்கள் நடிகராக முயன்று தோற்றவர்கள், இப்பொழுது வழக்கறிஞராக இருப்பவர்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், வழக்கறிஞர்களுக்குத் திறமை அவசியம் தேவை. வழக்கறிஞர்களுக்கு ஃபேஸ்கட் தேவையில்லை, பவுடர் தேவையில்லை, கேமரா தேவையில்லை, வெளிச்சம் தேவையில்லை. அவர்களுக்கு வேண்டியது அறிவு, உழைப்பு. இந்த இரண்டும் இருந்தால் நிச்சயமாக அவர்கள் முன்னணி வழக்கறிஞராக இருக்கலாம். வழக்கறிஞர்களிலும் திறமை மிக்கவர்கள், இல்லாதவர்கள் என்று சொல்வது தவிர, எல்லா வழக்கறிஞர்களும் ஒரே திறமையுடையவர்களாகக் கணிக்க முடியாது. ஆனால்,

Legal Practitioners' Fees Act

என்று வைத்து, ஒரு பீஸை வைத்து, இந்த அளவில்தான் கட்டணம் வாங்க வேண்டும், அதைவிடக் குறைத்து வாங்கக்கூடாது என்றுகூடச் சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. எனவே, இந்த அளவில் துணை நடிகர்களுக்கும், துணை நடிகைகளுக்கும் குறைவாகக் கொடுக்கக்கூடாது என்று சொல்லி, அதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விவசாயத் தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆண்டிலே 6 மாதங்களுக்குத்தான் விவசாய வேலை நடக்கிறது. மீதமுள்ள 6 மாதங்களுக்கு எந்தவிதமான வேலையுமில்லை. அவர்கள் வேலை இல்லாமல் சுறுசுறுப்பு இழந்து குன்றிப்போயிருக்காமல் அவர்கள் குடும்பங்களுக்கு உழைத்து நல்ல வசதியைப் பெறுவதற்கான வழிவகைகளை நம்முடைய அரசு செய்துதர முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காவிரியாற்றில் ஜூன் மாதத்தில்தான் தண்ணீர் வருகிறது. பிப்ரவரி மாதத்தில் தண்ணீர் நின்று விடுகிறது. இந்த இரண்டு மாதங்களுக்கும் இடையில் ஏற்பட்ட காலத்தில்தான் விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு அங்கே நடைபெறுகிறது. மீதமுள்ள காலங்களில் ஊர் வரண்டு போயிருக்கும் காலத்தில் அவர்களுடைய வாழ்க்கையிலும் வரட்சியைக் கண்டு வெதும்புவது நல்லது அல்லது. அதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை யொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கழிந்த ஆண்டு ஓரளவு நமது மாநிலத்தில் தொழில் அமைதி இருந்தது என்று சொன்னால் நிச்சயமாக அதை எங்கள் கட்சியின் சார்பில் மறுப்பதற்கில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிக அக்கறை கொண்டு பல தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்ற பெருமை அமைச்சர் அவர்களைச் சாரும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இருந்தாலும் கூட இந்த மாநிலத்தில் எந்த அளவுக்கு இப்போது இருக்கிற தொழிலாளர் நலச் சட்டங்கள் செயல்படுகிறது என்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

1947 முதல் இந்த மாநிலமானாலும் சரி, பாரத கண்டமானாலும் சரி பல்வேறு சட்டங்களைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் அவை எந்த அளவுக்கு அமுல் செய்யப்பட்டு வருகிறது, எந்த அளவுக்குத் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படுகிறது என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக அந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்றுதான் கூறவேண்டும்.





தனியார் துறையைப் பொறுத்தமட்டில் அரை குறையாக இந்தச் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டாலும் பொதுத் துறைத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் நிச்சயமாக இந்தச் சட்டங்கள் அமல்படுத்தப்படவில்லை என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் துறையில் வேலை செய்கிற தொழிலாளர்கள், பொதுத் துறையில் வேலை செய்கிற தொழிலாளர்கள் என்ற இவர்கள் இரண்டு பேருக்கும் இந்தச் சட்டங்கள் அமல்படுத்தப்படுவதில் டபிள் ஸ்டாண்டர்டைக் கையாள்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக இது சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்லுகிற நாம் விரும்பத்தக்கது அல்ல என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுத் துறைக்கு அரசே தலைமையாக இருந்து தொழிலாளர்களுக்காக சட்டத்தையும் நிறைவேற்றி அந்தச் சட்டத்தினால் வருகிற பயனைப் பெற வழி வகுத்துக் கொடுக்கவில்லை என்றால் அது விரும்பத்தக்கதல்ல. அதே வேளையில் அரசைக் காட்டி இந்த நாட்டில் இருக்கும் பிற்போக்குச் சக்திகள் தனியார் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு எந்த அளவு தீமை செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வகை தேடுவார்கள் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அமைச்சர் அவர்கள் ஒரு நாள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூறினார்கள். தனியார் துறையானாலும் அரசுத் துறையானாலும் சட்டங்களை மீறுகிற நிர்வாகிகளைப் ப்ராசிக்யூட் பண்ணி இருக்கிறோம் என்று சொன்னார்கள். நிச்சயமாக நான் அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

தனியார் முதலாளிகளை ஒரு வேளை ப்ராசிக்யூட் செய்திருந்தாலும் பொதுத் துறையில் இருக்கின்ற அதிகாரிகளை சட்டங்களை மீறிய காரணத்திற்காக இந்த அரசாங்கம் ப்ராசிக்யூட் பண்ணியிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையின்போது கூறுவார்கள் என்று எண்ணுகிறேன். நான் அறிந்தமட்டில் நிச்சயமாக இந்த அரசு அந்த அளவுக்குத் துணிவோடு உயர்ந்த எண்ணத்தோடு செயலாற்றவில்லை என்ற குறைபாட்டைக் கூறிக் கொள்கிறேன்.

குறைந்தபட்ச ஊதியம், பல்வேறு தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய சட்டபூர்வமான நன்மைகள் பொதுத் துறையில் பணி செய்யும் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதில்லை. குறிப்பாக டெக்ஸ்டைல் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் தனியார் முதலாளிகள் அனைவரும் பிப்ரவரி மாதம் 28-ம் தேதி செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழிலாளர்

களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், அதே வேளையில் இன்று ஏற்கனவே கூட்டுறவுத் துறையில் செயலாற்றுகின்ற தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியக் கோரிக்கையானது அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தில்கூட அந்தப் பிரச்சினையை வேறு ஒரு ஒப்பந்தத்தின்மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற வகையும் அதிலே இருக்கிறது. இருந்தாலும்கூட கூட்டுறவுத் துறையில் செயலாற்றுகின்ற தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க இதுவரை முயற்சி எடுத்துக் கொள்ளப் படவில்லை.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் உள்ள தொழிலாளர்கள் அவர்களுக்குக் கிடைக்கின்ற அடிப்படைச் சம்பளமான 45 ரூபாயிலேயே திருப்திகரமாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் அடிப்படைச் சம்பளம் 45 ரூபாய்; அதே நேரத்தில் தனியார் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 110 ரூபாயாக இருக்கிறது. இவ்வளவு வித்தியாசம் தனியார் துறைக்கும் கூட்டுறவுத் துறைக்கும் இருக்கும் என்று சொன்னால் நிச்சயமாக இது வரவேற்கத்தக்கதல்ல.

அரசாங்கம் உடனடியாக கூட்டுறவுத் துறையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கும் தனியார் துறையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் வாங்குகின்ற அடிப்படைச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிளான்டேஷன் தொழிலாளர்களை பொறுத்தமட்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றையதினம் இந்த மாமன்றத்திலே சொன்னார்கள். பிளான்டேஷன் லேபர் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. அது நிறைவேற்றுகிற சிபாரிசுகள் அத்தனையையும் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள்.

எனக்குத் தெரிந்தவரை இதுவரை பிளான்டேஷன் அட்வைசரி கமிட்டி நிறைவேற்றிய எந்தத் தீர்மானமும் அரசுத் துறையில் நிறைவேற்றப்படவில்லை என்று கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

எங்கள் ஜில்லாவில் அரசாங்கத் துறையில் செயல்படுகிற ரப்பர் பிளான்டேஷன் இருக்கிறது. அங்கு பிளான்டேஷன் லேபர் அட்வைசரி கமிட்டி நிறைவேற்றிய தீர்மானங்கள் இதுவரை ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டை கூறிக்கொள்ள விரும்புகிறேன். பிளான்டேஷன் லேபர்



அட்வைசரி கமிட்டி எப்போது அமைக்கப்பட்டது? எந்தெந்த அடிப்படையில் அதற்கான அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். உண்மையில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக உள்ள பலர் அதிலே இடம் பெறவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது.

பிளான்டேஷன் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் குறைந்த பட்ச ஊதிய நிர்ணயிக்க கமிட்டி அமைக்கப்பட்டு அறிக்கையும் வந்திருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையில் காணப்படுகிறது. ஆனால் இந்த அறிக்கையானது பல மாதங்களாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறுகிறார்கள். இப்போது இருக்கும் மினிமம் வேஜஸ் ஆக்ட் பல ஆண்டுகளுக்கு முன்னதாக 1947-ம் ஆண்டு என்று நினைக்கிறேன்—நிறைவேற்றப்பட்டது. அதற்கும் இன்றையதினத்திற்கும் இடையே எவ்வளவு வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன? உண்மையில் தொழிலாளர்கள் வாங்குகின்ற சம்பளம் அன்று இருந்ததைவிட பல மடங்குகள் உயர்ந்திருக்கிறது. சட்ட ரீதியாக குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை; பொதுத் துறையிலும் செயலாற்றுகின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

கேரள மாநிலத்தை எடுத்துக் கொண்டால் பிளான்டேஷன் தொழிலாளர்கள் நம்முடைய மாநிலத்தை விட அதிகமான சம்பளமும் மற்றச் சலுகைகளும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்க சட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

பிளான்டேஷன் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் வீட்டு வசதி 92 சத விகிதம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் **அவர்கள்** கூறினார்கள்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்த அளவுக்கு வீட்டு வசதி அந்தத் தொழிலாளர்களுக்கு நிச்சயமாகச் செய்து தரப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தனியார் தோட்டங்களில் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்திலிருந்து தனியார் முதலாளிகள் பல லோன்கள் பெற்றிருக்கிறார்கள்.

அந்தப் பணத்தை அவர்கள் வேறு வகைகளுக்குச் செலவு செய்திருக்கிறார்கள்; தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவில்லை. வீட்டு வசதி செய்து கொடுக்கவில்லை என்று சொன்னாலும் அதற்குப் பதிலாக வீட்டு வாடகையாவது கொடுக்க வழிவகை செய்யலாம். இன்றையதினம் இருக்கும்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 28

விலைவாசிக்கு ஏற்ற அடிப்படையில், பிளாண்டேஷன் தொழிலாளர்களுக்கும் வீட்டு வாடகை நிர்ணயித்து அவர்களுக்குக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

(மாலை 5-30)

ஒரு வேளை அவ்வளவு பேர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வழியில்லை என்றால் வீட்டுக்குப் பதிலாக ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போக்குவரவு தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிப்பதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷன் தன் அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கிறது என்று அறிகிறேன். அது இதுவரையில் அமல் செய்யப்படவில்லை. அந்தக் கமிஷன் அறிக்கைப்படி ட்ரைவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் ரூ. 210 என்றும் கண்டக்டர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் ரூ. 200 என்றும் நிர்ணயித்திருப்பதாக அறிகிறேன்.

ஆனால் இன்றையதினம் ட்ரைவர்கள் ரூ. 160 என்றும் கண்டக்டர்கள் ரூ. 150 என்றும்தான் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் பாட்டா போன்ற பிற சலுகைகள் எல்லாம் கூட குறைவாகத் தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தனியார் துறையில் இருக்கக் கூடிய டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ் அதிகப்படியான சம்பளம், சலுகைகள் பெறுகிறார்கள் என்பதை நான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

உதாரணமாக டி.வி.எஸ்.-ஐ நம் அரசாங்கம் ஏற்றெடுப்பதற்கு முன்னால் அங்கு பணியாற்றி வந்த தொழிலாளர்கள் வாங்கிய சம்பளத்தைவிட நம் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்களில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் சம்பளம் குறைவாகத்தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கு உடனடியாக குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டிரான்ஸ்போர்ட் இலாகாவில் தொழில் சங்கங்கள் உண்மை யிலேயே சரியான முறையில் செயல்படுவதற்கு இந்த அரசாங்கம் அனுமதிக்க வில்லை என்ற குற்றச்சாட்டினை நான் கூற விரும்புகிறேன்.



1974 மார்ச் 28] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருந்தாலும் தனது சங்கம் மட்டும்தான் செயல்படவேண்டும் தங்கள் கட்சியை சார்ந்த சங்கங்கள் தான் செயல்படவேண்டுமென்று சொன்னால் அதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. இன்றையதினம் ஒரு முறை இருக்கிறது.

டி.எம்.கே. சங்கம் என்றால் அரசே சந்தா வசூல் செய்து கொடுக்கிறது. அரசாங்க அலுவலகத்திலேயே அந்த சங்கம் செயல்பட அனுமதி கொடுக்கப் பட்டு வருகிறது. அதோடு கூட அரசாங்கக் கட்டடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சங்கங்கள் ஆபீஸ் அமைத்துக்கொள்வ தற்கான வசதியையும் செய்து கொடுக்கிறார்கள். அதேவேளையில் மற்ற அரசியல் கட்சிகளை சார்ந்த சங்கங்கள் டிப்போ காம்பவுண்டிலேயே சந்தா வசூலிக்க அனுமதிப்பதில்லை என்றால் ஜனநாயகத்தில் இது விரும்பத்தக்கதல்ல.

இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தண்டையார் பேட்டையில் கழிந்த ஏழு மாதங்களுக்கு முன்பாக ஒரு நிகழ்ச்சி நடந்தது அது போலீஸ் வழக்காகி அது சம்பந்தமாக 98 தொழிலாளர்கள் ஸஸ்பென்ட் செய்யப்பட்டு கழிந்த ஏழு மாதங்களாக அவர்கள் வேலையில்லாது தவிக்கிறார்கள். அவர்கள் முதல் அமைச்சர் அவர்களைப் பேட்டி கண்டிருக்கி றார்கள். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் பேட்டி கண்டிருக்கிறார்கள், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் கண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒருவேளை வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தாலும் கூட இதுவரையில் அவர்களை திரும்ப வேலையில் எடுத்துக்கொள்வதற்கான ஒரு ஏற்பாட்டினைச் செய்ததாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, ப்ராவிடன்ட் பண்டுக்கு தொழிலாளர்கள் கொடுத்த காண்ட்ரிப்யூஷன் குறித்து இதுவரையில் கணக்கு இல்லை. 1970-ம் ஆண்டு வரையில் அவர்கள் செலுத்திய தொகை எவ்வளவு, அதன்மீது வந்துள்ள வட்டி எவ்வளவு, மொத்தம் எவ்வளவு என்று கணக்குபோட்டு ப்ராவிடன்ட் பண்ட் ஸ்லிப் தொழிலாளர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைய தினம் அந்த முறை இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ப்ராவிடன்ட் பண்ட் ஸ்லிப் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அன்றையதினம் கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் ரசீது கொடுத்துத்தான் அந்த பத்து

ரூபாய் வசூலிக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அப்படி ரசீது கொடுக்கப்படவில்லை என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வெட்டு காரணமாக லே ஆப் ஏற்பட்டபோது கொடுக்கப்படுகிற லே ஆப் காம்பன்சேஷன் போதாது. அளவுச் சம்பளமும் கொடுக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே லே ஆப் காம்பன்சேஷனை முழுச் சம்பளமும் கொடுக்கப்படுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போனஸ் ஆக்ட் அரசாங்க நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்ற நிலைமை இன்றிருக்கிறது. அதை மாற்றியமைக்க மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபார்சு செய்யவேண்டும்.

அதோடு, போனஸ் ஆக்ட்படி போனஸ் கிடைப்பதற்கு வழியில்லை என்று சொன்னாலும் டிரான்ஸ்போர்ட் இலாகா எக்ஸ்கிரேஷியா பேமென்ட் கொடுப்பது போல் அரசாங்க நிறுவனங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் போனஸ் கிடைப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் நடத்துகிற ரப்பர் ப்ளான்டேஷனில் மிகுந்த லாபம் இருக்கிறது. சட்டம் குறுக்கிடும் காரணத்தால் அங்கு வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுவதில்லை. அதேசமயத்தில் தனியார் தோட்டங்களில் வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அத்தனை பேர்களும் 15 சதவிகிதம் போனஸ் வாங்கும்போது கவர்ன்மென்ட் ப்ளான்டேஷனில் வேலை பார்க்கக் கூடிய தொழிலாளர்களுக்கு இன்றையதினம் போனஸ் இல்லாத ஒரு நிலை இருக்கிறது.

அதோடு மத்திய அரசாங்கம் காண்ட்ராக்ட் ஸிஸ்டத்தை நிறுத்தவேண்டும் என்று ஏற்றுக்கொண்டுள்ளது. இன்று பொதுத்துறையில் பல ப்ளான்டேஷன்ஸ் உள்ளன. காண்ட்ராக்ட் ஸிஸ்டம் என்பது விரும்பத்தக்கதொரு முறை அல்ல. இப்படிப்பட்ட ஒரு பீல்டில் அவசியமில்லை. எனவே இந்த காண்ட்ராக்ட் ஸிஸ்டத்தை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லேபர் டிப்பார்ட்மென்டைப் பொறுத்தவரையில் அதிகாரிகளை வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்குத் தேவையான லோன்களை வசூல் செய்வது என்ற நிலை இருந்தால் இந்த அதிகாரிகள் தொழிலாளர்களுக்காக நேர்மையாக நின்று செயல்பட இயலாது, தொழிலாளர்களின் நன்மைகளைப் பாதுகாக்க முடியாது. காரணம், முன்தினம் அந்த முதலாளிகளிடம் போய் அரசாங்கத்திற்காக லோன் வாங்கிய அதிகாரி நிச்சயமாக அந்த முதலாளிக்கு எதிராகவோ அல்லது தொழிலாளர்களுக்கு நியாயம் அல்லது நீதி வழங்குவதற்கான ஒரு சூழ்நிலை இல்லை. ஆகவே லேபர் இலாகாவில் பணியாற்றுகிற அதிகாரிகளை வைத்து அரசாங்க லோன்கள் வசூல் செய்வதை நிறுத்தவேண்டும்.



அடுத்தபடியாக, என் மாவட்டத்தில் அதிக ப்ளான்டேஷன்ஸ் உள்ளன. அங்கு ஒரு இன்ஸ்பெக்டர் ஆப் ப்ளான்டேஷன்ஸ் இல்லாத காரணத்தால் சட்டங்களை அமல் செய்வதில் பல கஷ்டங்கள் உள்ளன. திருநெல்வேலியில் இருக்கிற அதிகாரியே கன்னியாகுமரியையும் சேர்த்து அந்த வேலையைப் பார்க்கிற ஒரு சூழ்நிலை இருப்பதால் அவர்கள் அங்கு என்றோ ஒரு நாள் வருகிறார், அப்படி வரும்போது முதலாளிகளுக்கு தகவல் கொடுத்துவிட்டு வருவதால் நிச்சயமாக தொழிலாளர்களின் நலன்களைப் பேணிக்காப்பதற்கு வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு என்று ஒரு இன்ஸ்பெக்டர் ஆப் ப்ளான்டேஷன்ஸ் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஸவுத் மதராஸ் எலக்ட்ரிசிட்டி கார்ப்பரேஷன் பற்றி ஒரு வார்த்தை. சென்ற இரண்டு ஆண்டுகளாக இது ஒரு ஆர்பிட்ரேட்டர் முன் பென்டிங்கில் இருக்கிறது. அரசு ஒரு தரப்பிலும் தொழிலாளர்கள் ஒரு தரப்பிலும் நின்று இந்தப் பிரச்னையில் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக தட்டுக்கழித்துக்கொண்டு போவதால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்னையை துரிதமாகத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன் ஆர்கனைஸ்ட் லேபரைப் பொறுத்தவரையில் விவசாயிகளின் குறைந்த பட்சம் கூலிக்காக இன்றையதினம் ஒரு அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையைப் பார்க்கும்போது மிக வேதனைப்படக் கூடிய நிலையில் இருக்கிறது.

மாடுகளைக் கொண்டு உழுது தொழில் செய்கிற ஒரு தொழிலாளிக்கு ரூ. 6 தினக்கூலி என்று காணப்படுகிறது. மாடு இல்லாமல் ஒரு தொழிலாளி தனியாக வேலை செய்தால்கூட இன்றையதினம் ரூ. 5 கூலி கிடைக்கும்போது

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 மார்ச் 28

இப்படிப்பட்ட ஒரு அறிக்கை சமர்ப்பித்திருப்பதற்காக நான் அந்தக் கமிட்டியை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமல் மறுபரிசீலனை செய்து, இன்றையதினம் இருக்கக்கூடிய விலைவாசி யேற்றத்தையும் கணக்கில் கொண்டு, நாட்டில் சாதாரணத் தொழிலாளர்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்களோ அதைவிட அதிகப்படியாக கூலி வழங்குவதற்குரிய விதத்தில் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏனெனில் நான் பப்ளிக் அக்கௌன்ட்ஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருப்பதால் இந்த வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி சற்று அறிந்து வைத்து இருக்கிறேன். ஒரு வேளை இந்த ஆண்டுக்கு முன்னால் பல சீர்கேடுகள் இருந்தாலும் கூட இப்போது அது ஒழுங்குபடுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்று நான் அறிகிறேன். அதற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் அந்த வீட்டு வசதி வாரியம் மேலும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென்று சொன்னால், இன்னும் அதிகமாக வீட்டு வசதி செய்து தர வேண்டும்.

ஹவுசிங் சொசைடி பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஹவுசிங் போர்டு வழியாக எல்லா மாவட்டங்களிலும் அதிக வீடுகளைக் கட்டிக்கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஹவுசிங் சொசைடீஸ் எல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குப் போதுமான நிதி அரசு வழங்கவில்லை என்று குறைபாடு இருக்கிறது. ஆகவே, ஹவுசிங் சொசைடிக்கு அதிக நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, ஹவுசிங் சொசைடி சூப்பர்வைஸ் செய்வதற்கு உள்ள டெபுடி ரிஜிஸ்டிரார்களுக்குப் போதுமான அளவுக்கு வசதியில்லை. அவர்களுக்கு ஜீப், டெலிபோன் வசதி இல்லையென்று சொன்னால் அவர்கள் தங்கள் வேலையைச் சரிவர செய்ய முடியாது. ஆகவே அரசு துரிதமாக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, ஹவுசிங் சொசைடி மூலமாக நமது மாநிலத்தில் உள்ள வீடு இல்லாத ஏழைகளுக்கு குறைந்த வாடகையில், வீடு கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 மார்ச் 28] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இந்த எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சு பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். எதற்காக இந்த அமைப்பு இருக்கிறது. லைவ் ரிஜிஸ்டரில் பல்லாயிரக்கணக்கான பேர் பதிவு செய்து கொள்கிறார்கள். அவர்களை 3 மாதத்திற்கு ஒரு முறை ரினியூவல் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் பணத்தை செலவு செய்து கொண்டு நகரத்திற்கு வந்து இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த 3 மாதத்திற்கு ஒரு முறை பதிவு செய்ய வேண்டுமென்று சொல்வதை ஒரு ஆண்டிற்கு ஒரு முறை செய்ய வேண்டுமென்று வைத்தால் நல்லது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

தமிழ் நாட்டிலே வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கிராமத்தில் வீட்டு வசதித் திட்டம் என்ற திட்டமும், மாவட்டங்களில் அமலாக்கப்பட்டு வருகிறது. அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு 3 சென்ட் நிலம் இருந்தால் போதுமானது என்ற அடிப்படையில், ரூ. 4,000 வரையில் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு கடனும் வழங்கப்பட்டு வருகிறது. இது நல்ல சிறந்த திட்டமாகும்.

இந்தத் திட்டத்தை வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பொறியாளர்கள் போதுமான அளவுக்கு இல்லை.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் கஷ்டத்தை நான் இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஒரு மாவட்டத்திற்கு ஒரு சூப்பர்வைசர்தான் போட்டு இருக்கிறார்கள். அந்த சூப்பர்வைசர் அந்த வீட்டு வேலை நடந்து இருக்கிறதா என்பதைப் போய்ப் பார்த்து சர்ட்டிபிகேட் செய்தபிறகுதான் கூட்டு மன்ற ஆணையர் அவர்கள் பில் சாங்ஷன் செய்து, பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதற்கு வெகு மாதங்கள் ஆகின்றன. இந்தக் காரியங்களைச் சூப்பர்வைஸ் செய்ய அதிகமாக சூப்பர்வைசர்கள் நியமிக்க அரசுக்கு உத்தேசம் இருந்தால் ஒரு தாலுக்காவிற்கு ஒருவரை நியமிக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் ஆணையர்தான் அதற்குப் பொறுப்பாளராக இருப்பதால் அந்த பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் பொறியாளர்களே அதற்கு மதிப்பீடுகள் தயார் செய்து, செய்த வேலைக்கு மெஷர்மென்ட் எடுத்து சர்ட்டிபி

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 மார்ச் 28

கேட் செய்தால் பணம் கொடுக்கலாம் என்ற ஒரு ஏற்பாட்டை செய்வதன் மூலமாக இந்த வேலை மிகவும் துரிதமாக நடக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்படி வீடு கட்டுகிறவர்களுக்கு சிமெண்ட் கிடைப்பது இல்லை. மிகக் குறைவான கோட்டாதான் பி.டி.ஓ.க்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அதனால் அவர் எல்லோருக்கும் சிமெண்ட் கொடுக்க முடியவில்லை. இதனால் வேலை செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, சிமெண்ட் காலாகாலத்தில் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு திட்டம், மத்திய அரசாங்கத் திட்டம். கிராமத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு, அல்லது விவசாயத் தொழிலைச் சேர்ந்தவர்களுக்கு சொந்தத்தில் நிலம் இல்லை என்று சொன்னால் அவர்களுக்கு 2 செண்ட் நிலம் ஆர்ஜிதம் செய்து தரப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் இது அமலில் இருக்கிறது. அரசாங்கம் மாநிலம் முழுவதும் கொண்டு வருவதற்கு உத்தேசித்து, அதற்காக நடவடிக்கை எடுப்பதாக இதிலே அறிவித்து இருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் முன்னாலேயே குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. நிலம் இல்லாமல் பாரியாக இருப்பவர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து வேலைகள் சரியான முறையில் அளிக்கப்படவில்லை. அங்கே இந்த அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். ஏன் என்றால் அவர்களுக்கு மனை தேவையானவர்களுக்கு நிலம் எடுக்கிறபோது அவர்கள் விரும்பாத இடங்களை எடுக்கிறார்கள். அல்லது மிகவும் தாழ்வுற்ற நிலையில் இருக்கிற நிலங்களை எடுக்கிறார்கள், அல்லது அவர்கள் யார் வேண்டாதவர்களோ அவர்களின் நிலத்தை எடுக்கிறார்கள், மேடான இடம் இருக்கிறது என்று சொன்னால், அங்கே எடுக்கவேண்டாம் என்று சொல்லி ஆலோசனை சொல்கிறார்கள், அவர்கள் எடுக்கும் நிலங்கள் புஞ்சை நிலமாக இருக்கவேண்டும். அப்படி எடுப்பதற்கு பதிலாக நஞ்சை நிலத்தையும் எடுக்கிறார்கள். அதற்குக் காரணம் அதைத் தூர்த்துவதற்கு பணம் செலவு செய்யும் திட்டமும் இதிலே அடங்கியிருக்கிறது. கான்டிராக்டருக்கு அந்தத் திட்டத்தைக் கொடுத்து அதன் மூலமாக அதைத் தூர்த்துவதற்கு ஏற்பாடு செய்கிற வகையில் ஊழல் ஏற்படுகிறது. ஆகவே தயவுசெய்து நல்ல நிலங்களை, மேடாக இருக்கும் நிலங்களை, ஜனங்கள் விரும்பக்கூடிய இடத்தில் ஆர்ஜிதம் செய்து கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ததாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1974 மார்ச் 28] [திரு. ஆ. கு. சுப்பையா]

இரண்டு செண்ட் நிலம் போதுமானதாக இல்லை. நகரத்தில் கூட இரண்டு செண்ட் வைத்து வீடு கட்ட முடியாது. கிராமத்தில் இருக்கும் விவசாயிகள் ஆடு, மாடுகள் வைத்து இருப்பார்கள். இன்னும் அவர்களுக்கு இருக்கும் உழவு கருவிகளை வைத்து இருப்பார்கள். வைக்கோல் கொண்டுவந்து போட்டுக் கொள்வார்கள். இதுவெல்லாம் இந்த 2 செண்ட் நிலத்தில் வைத்துக்கொண்டு, வீடு கட்ட முடியாது. இதனால் பலபேர் நிலம் தேவையில்லை என்று சொல்லி விடுகிறார்கள். அந்த முறையில் அரசாங்கம் தமிழ் நாடு முழுவதும், தமிழ் நாடு அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டு, மத்திய அரசாங்கம் கொடுக்கும் உதவியையும் பயன்படுத்திக்கொண்டு, மீதித் தொகையை மாநில அரசாங்கம் போட்டு அவர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு 5 செண்ட் நிலமாவது வாங்கிக் கொடுத்து, கிராமப்புறங்களில் இருக்கும் மக்கள் வீடு கட்டிக்கொள்ள உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நில ஆர்ஜித நடவடிக்கைகள் மிகத் தாமதமாக நடந்து கொண்டு இருக்கின்றன. அந்த தாமதத்தைப் போக்குகிற முறையில் அங்கே அதிகாரத்தில் இருப்பவர்களை எப்படி கன்ட்ரோல் செய்து முறையாக, வேகமாக செய்ய வேண்டுமோ அந்த முறையில் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியம் நகரத்தில் வீடு ஒதுக்குகிறபோது தாழ்த்தப்பட்டவர்களுக்கு தேவையான வீடுகள் ஒதுக்கிக்கொடுப்பது இல்லை என்ற புகார் நிறைய இருக்கிறது. வீடாக ஒதுக்கினாலும், மனையாக ஒதுக்கினாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுப்பது இல்லை என்ற புகார் இல்லாமல் செய்யும் நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இது வரையில் எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது, எவ்வளவு வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஒதுக்கிய வீட்டில் எவ்வளவு பேர் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதை அரசாங்கம் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் பல சலுகைகளை அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. இருந்தபோதிலும் தொழிலாளர்களின் கோரிக்கையை உடனுக்குடன் போக்குகிற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து அதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் போலீஸ் வந்து முதலாளிக்கு ஆதரவாக இல்லாமல் இருப்பதற்கு ஒரு நடவடிக்கை இன்றையதினம் தேவைப்படுகிறது, அதை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்றையதினம் ஒரு கமிஷன் நியமித்து அந்தக் கமிஷன் ஒரு சிபார்சு செய்திருக்கிறது. தமிழகம் முழுவதும் எடுத்துக் கொள்வோமானால் மிகக் குறைந்த ஊதியத்தை பெற்றுக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் அந்தக் கமிஷன் சிபார்சு செய்திருக்கக் கூடிய அளவுக்கு கிடைக்க வேண்டும் என்று சொன்னாலும், குறைந்தபட்ச ஊதியம் கிடைப்பதற்கான உத்திரவாதம் என்ன? அதற்குரிய உத்திரவாதத்தை அரசாங்கம் தரவில்லை. வெறுமனே அறிக்கை விட்டுவிட்டார்கள். எந்த அதிகாரியிடம் முறையிடுவது, யாரிடம் முறையிட்ட பிறகு அவர்கள் சமரசம் செய்து வாங்கிக் கொடுப்பார்கள் என்பதற்கு எந்தவிதமான உத்தரவும் கிடையாது.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால்கூட அதே நிலை இருக்கிறது. தாசில்தாரிடம் சொன்னால் தனக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். போலீஸிடம் சொன்னால் சட்டத்துக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். போலீஸ்காரர்கள் கலகம் செய்துகொண்டு வந்தால் தாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிறார்கள்.

தஞ்சை ஜில்லாவில் பல பகுதிகளில் அமுலாக்கப்படவில்லை. வேதாரண்யம், தலைஞாயர், சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டிணம் ஆகிய பகுதிகளில் சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை. அதற்குரிய சமரச அதிகாரிகளைப் போடவில்லை. அதைத் தீர்த்துவைப்பதற்கு நீதி மன்றங்களோ அல்லது சட்டமோ இல்லை. எனவே அதை யாரும் தீர்த்து வைப்பதற்கு முன்வருவதில்லை. சட்டம் மாத்திரம் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தஞ்சை ஜில்லாவில் சட்டத்திற்கு அப்பாற்பட்டு சென்ற ஆண்டு ஆண்களுக்கு ரூ. 4, தான்யமாகக் கொடுத்தால் 2 மரக்கால் ரூ. 1.80, பெண்களுக்கு ரூ. 2, தான்யமாகக் கொடுத்தால் 3 படியும் 75 காசும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தப் பிரகாரம் தஞ்சை ஜில்லா முழுவதும் சட்டம் கொண்டுவந்தாக வேண்டும். அப்படி சட்டம் கொண்டுவந்து, அதை நிறைவேற்றுவதற்கு, அதை அமுலாக்குகின்ற முறையில் அதிகாரிகளை நியமித்து, அதற்கு உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதிலும் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் குறைந்த வருவாயிலே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கிடைக்க ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்ததன் மூலமாக ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் பயன் அடைவார்கள். அவர்கள் வாயில்லா பூச்சிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம்தான்





உறுதுணையாக இருக்க முடியும். இந்த அரசாங்கம் அவர்களுக்கு சாதகமாக அதிகாரிகளை மாவட்ட ரீதியிலோ அல்லது தாலுகா ரீதியிலோ நியமனம் செய்து, அந்தக் கூலி கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நல மானியக் கோரிக்கையின்மீது பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் மிக சிறப்பான முறையிலே எடுத்துக் கூறியதற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மானியத்திலே பேசிய யாரும் எந்தவிதமான சூட்டையும் வெளிப்படுத்தாத தன்மையிலே பேசியது பாராட்டுக்குரிய ஒன்று என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சமீபத்திலே இந்தத் தொழிற் சங்கத்தில் நெடுங்காலமாக ஈடுபட்டு வந்திருக்கிற பெரியவர் திரு. ஏ. எஸ். கே. அய்யங்கார் அவர்கள் தொழிற் சங்கத்தைப்பற்றி ஒரு புத்தகம் எழுதி, அந்தப் புத்தகத்தை என்னை வெளியிடும்படி அன்புக் கட்டளையிட்டார்கள். அந்தப் புத்தகத்தை நான் படிக்கின்ற வாய்ப்பினையும் பெற்றேன். அவர்கள் அதிலே ஒரு கருத்தைச் சொல்லியிருப்பதை நான் பார்த்தேன். நடைமுறையில் அரசு என்பதற்கு அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கம், முதலாளி வர்க்கத்தின் பல உரிமைகளைப் பேணிக் காக்கவும், தொழிலாளர் வர்க்கத்தினை அடக்கி ஆளவும் பயன்பட்டுவருகிறது என்ற ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அரசினுடைய நடவடிக்கையை தொடர்ந்து பார்த்துவருகிற இந்த மாமன்ற உறுப்பினர் மக்களாகிய நீங்கள் எல்லாம் இந்த அரசு அந்தக் கருத்துக்கு நேர்மாறான தன்மையிலே நடைபோட்டு வருகிறது என்பதை அறிவீர்கள், ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். இங்கே தமிழகத்தில் சென்ற மாதத்திற்கு முன்னதாக ஒரு பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. பின்னி ஆலையிலும் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. அந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்ற காரணத்தினால் ஏறக்குறைய 1,25,000 தொழிலாளர்கள் அதிலே ஈடுபட்டார்கள்.

இங்கே தொழிற் சங்க போராட்டம், பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில், பம்பாயிலும் ஒரு தொழிற் சங்கப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டு வந்தது. பம்பாய்

தொழிற் சங்க போராட்டம் நடத்திய தலைவர் சாதாரணமான தலைவர் அல்ல. மிகப் பெரிய தலைவர், வயதானவரும் கூட. 1922-ம் ஆண்டிலேயே தொழிற் சங்கங்களை உருவாக்கிய திரு. டாங்கே அவர்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள். அந்தப் போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவைப்பற்றி ஒரு பத்திரிகையிலே எழுதப்பட்ட கருத்தினை இந்த மாமன்றத்தில் உங்கள் அனுமதியோடு படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'41 day old textile strike is over in Bombay. The cost is 35 crores and the conservative estimate is one crore per day. The workers have lost over 8 crores in wages. The additional benefit they have gained is an increase of Rs. 4 per month in basic wage. Considering the average pay of a Mill worker of Rs. 4.50, this means that it will take him over 10 years to make up his loss.'

ஒரு தொழிலாளி 41 நாட்களுக்கு ஒரு போராட்டத்தை நடத்தி, அவருக்கு வாங்கிக் கொடுத்த தொகைக்கு, தொழிலாளர்கள் இழப்பீட்டை சரிக்கட்டிக் கொள்வதற்கு இன்னும் 10 ஆண்டு காலம் எதிர்காலத்தில் அவர்கள் உழைக்க வேண்டியிருக்கிறது என்ற செய்தியை, புள்ளிவிவரத்தை நான் உங்கள் மூலம் சமர்ப்பிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் தமிழகத்தில் ஒரு போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் அரசு தலையிட்டு, இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை முன்னால் இருந்து நடத்திக் காட்டியது. அதன் விளைவாக தொழிலாளர்கள் அவர்கள் வேலை நிறுத்த நாட்களை விடுமுறை நாட்களாக கழித்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

அதோடு ஈ.எஸ்.ஐ. போன்ற பல உபகாரங்களின் மூலமாக—தவறாக பயன் படுத்தப்பட்டுக்கூட இருக்கலாம்—அதன் மூலமாகவும் எந்தத் தொழிலாளியும் பாதிக்கப்படாத தன்மையை உருவாக்கி ஒரு சுமுகமான தன்மையை உருவாக்கிக் காட்டி இருக்கிறது இந்த அரசு என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஏ.எஸ்.கே. அய்யங்கார் அவர்கள் வகுத்திருக்கிற அந்த இலக்கணத்திற்கு நேர் மாறாக இந்த அரசு தொழிலாளர்கள் நல அரசாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்கு எடுத்த எடுப்பிலேயே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு வேலை நிறுத்தம் தொழிலாளர்களுடைய உரிமை என்பதை திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் தன்னுடைய உரையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதற்காக உஸ்மேனியா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற



ஒரு பெரிய விவாதத்திலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக்காட்டி, பெரிய நீதிபதிகள் பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு எனக்கு மாறுபாடான கருத்து கிடையாது.

ஆகவே, தி.மு.க. தொழிற் சங்கமாக இருந்தாலும் சரி, எச்.எம்.எஸ். தொழிற் சங்கமாக இருந்தாலும் சரி, ஏ.ஐ.டி.யு.சி. தொழிற் சங்கமாக இருந்தாலும் சரி, ஸி.ஐ.டி.யு.ஸி. தொழிற் சங்கமாக இருந்தாலும் சரி, மற்ற எந்தத் தொழிற் சங்கமாக இருந்தாலும் சரி, இந்த உரிமைகளை விட்டுக்கொடுக்க தயாராக இல்லை. இந்த அரசும் உரிமைகளில் தலையிடத் தயாராக இல்லை.

முக்கியமான தொழிற் சங்கத் தலைவர்களையெல்லாம் வேண்டிக்கொள்கிறேன். இந்த மன்றத்தில் சில பேர்கள்தான் இருக்கிறார்கள். வெளியே நிரம்பப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் வேண்டி கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். தொழிலாளர்கள் போராடுவது அவர்களுடைய உரிமை. வேலை நிறுத்தம் செய்வது அவர்களுடைய உரிமை. அதை யாரும் மறுப்பதற்கு தயாராக இல்லை. அதை மறுத்து நிறுத்திவிடவும் முடியாது. ஆனால் அப்படி வேலை நிறுத்தம் ஏற்படுகிற நேரத்தில் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கையிலே மிக முக்கியமான கொள்கையாகக் கருதப்படுகிற தேசிய உடைமையாக்குகின்ற அந்தத் தத்துவத்திற்கு சற்று சிந்தனை செலுத்த வேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு தமிழக அரசு பஸ்களை தேசியமயமாக்கியிருக்கிறது. மற்றும் பல்வேறு தொழில்களை, டெக்ஸ்டைல் மில்களை, பஞ்சாலைகளை தேசியமயமாக்கி இருக்கிறது. 'சக்தி பைப்ஸ்' போன்ற நிறுவனங்களை தேசியமயமாக்கியிருக்கிறது. மத்திய பேரரசு ரயில்வேயை தேசியமயமாக்கியிருக்கிறது.

இன்னும் பல இரும்பு தொழிற்சாலைகள் பூராவும் மத்தியப் பேரரசின் கையில் இருக்கிறது. நெய்வேலி நிலக்கரி சுரங்கம் மத்தியப் பேரரசின் கையில் இருக்கிறது. திருவரம்பூரில் உள்ள பெரிய பாக்டரி இந்தியப் பேரரசின் கையில் இருக்கிறது. இவைகளெல்லாம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்த நேரத்தில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியத்திற்கு அந்தக் கருத்து தெரியும். அதே கருத்தினை நான் இங்கே சொல்கிறேன்.

[திரு. க. இராசாராம்] [1974 மார்ச் 28

'நீங்கள் வேலை நிறுத்தம் செய்யுங்கள். பேச்சு வார்த்தைகள் நடத்து வோம். பேச்சு வார்த்தைகளில் எந்த முடிவு வருகிறதோ அந்த முடிவை அரசு சார்பிலே உள்ள தேசியமயமாக்கப்பட்ட பஞ்சாலைகளை ஏற்றுக்கொள்ளச் சொல்கிறேன்' என்று சொன்னேன். நான் சொன்ன அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அரசு ஒரு பக்கம் தொழிலாளர்கள் கூடவே இருக்கிறது. உள்ளபடியே சொல்கிறேன், இந்த அரசு தொழிலாளர்கள் நல அரசு. இந்த அரசு மட்டுமல்ல, எதிர் காலத்தில் எந்த அரசு வந்தாலும், தொழிலாளர்களுக்கு விரோதமாக எந்த ஒரு அரசும் எந்தக் காலத்திலும் அரசை நடத்தி விடமுடியாது என்பதை நான் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 6.00)

ஆகவே, இந்த முறையிலே இருக்கிற நேரத்தில் தேசியமயத்தின் முக்கியத்துவத்தை தொழிலாளர்கள் பார்க்க வேண்டும். அந்த முக்கியத் துவத்தை உணராமல் தேசியமயமாக்கப்பட்ட ஆலைகள், தேசியமயமாக்கப்பட்ட பஸ்கள், தேசியமயமாக்கப்பட்ட மற்ற பல நிறுவனங்கள் அங்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்வது என்றால் அது நாட்டுக்கு நல்லதா என்பதை அருள் கூர்ந்து தொழிற் சங்கத் தலைவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் அந்த முக்கியத்துவத்தில் நாம் காட்டுகிற உத்வேகம், உற்சாகம் குறைந்துவிடும் என்பதை, தனிப்பட்டவர்கள் தேசிய மயத்தில் அவர்கள் என்ன கண்டார்கள் என்று கேலி பேசுகின்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதை சிந்திக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேசியமயக் கொள்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுகின்ற நிலையை உருவாக்கித் தருவார்களானால் எதிர்காலத் திலே எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்கும் சூழ்நிலை உருவாகிவிடும்.

மத்திய தொழில் அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் கூட தேசிய மயம் என்று சொல்லலாமே தவிர நடைமுறைக்கு உகந்ததா என்ற ஐயப் பாட்டை நாடாளுமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

ஐயப்பாடு அளிக்காமல் இருக்க வேண்டுமென்றால், தொழிலாளர்கள் வர்க்கப் போராட்டம், வர்க்கப் போராட்டம் என்று சொல்லும் நிலை மாற வேண்டும்.



1974 மார்ச் 28] [திரு. க. இராசாராம்]

திரு. வி. க. அவர்களும், சர்க்கரை செட்டியார் அவர்களும், பெரியார் இராமசாமி அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பல்வேறு கருத்துக் களை வழங்கியிருக்கிறார்கள்.

மே தினத்தைப்பற்றியும், புரட்சியைப் பற்றியும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி எல்லாம் எடுத்துச் சொல்லியும் எந்தவிதமான நன்மையும் ஏற் படுத்தவில்லை என்றால் என்ன பலன் இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு தொழிலாளர் நல அரசு என்பதற்கு மேலும் ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 26 ஆண்டு காலம் ஆயிற்று. இந்த 26 ஆண்டு காலத்தில் பல்வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் தோன்றியிருக் கிறார்கள். அவர்கள் நாடாளுமன்றத்திற்கு—ராஜ்ய சபைக்கு தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவர்கள் நாடாளுமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். குறிப்பாக அனந்தன் இருக் கிறார்கள். இப்படி பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்கள் போயிருக்கிறார்கள்.

ஆனால் இந்த 26 ஆண்டு காலத்தில் போஸ்டல் தொழிற் சங்கத் தொடர் புடையவர்கள் யாராவது போயிருக்கிறார்களா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். எந்தக் கட்சியின் சார்பிலாவது அனுப்பியிருக்கிறார்களா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு கட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஆளும் கட்சி இருக்கிறது. ஆனால் யாராவது போஸ்டல் தொழிலாளர்களைப்பற்றி எண்ணிப் பார்த்த துண்டா. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர வேறு எந்தக் கட்சியும் எண்ணிப் பார்க்கவில்லை என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

பல போராட்டங்களிலே ஈடுபட்டு, பல நேரங்களிலே வேலைவாய்ப்பை இழந்து, வழக்கு மன்றங்கள் ஏறி, பல கஷ்டங்களை அனுபவித்த லட்சுமணன் அவர்கள் இன்றைக்கு ராஜ்ய சபைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த அரசு எந்த தொழிலாளர்களையும் மதிக்காமல் நடக்கவில்லை என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையிலே பல்வேறு காரியங்களை இந்த அரசு தொடர்ச்சியாக செய்துகொண்டிருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள் என்று நம்புகிறேன்.

வேலை நிறுத்தத்தைப்பற்றி சுப்பிரமணியம் அவர்கள் பல கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். சஸ்பென்ட் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் தரவேண்டுமென்று அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் என்னுடைய பதிலாக இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு தெரிவித்திருக்கிற பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கு அவைகளை அமுல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அரசு அதை ஆராய்ந்து அமுல்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்லடம் லட்சுமி மில்லில் வேலை செய்து வந்த 23 பேர்களை நீக்கிவிட நிர்வாகத்தினர் துடிதுடிக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். பேச்சு வார்த்தை நடத்தப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் கலந்து பேசியிருக்கிறார்கள். அந்த காரியத்திலே ஒரு நல்ல முடிவை எடுக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்டஸ்டிரியல் சேப்டி பற்றி சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு அதில் எவ்வளவு அக்கரை செலுத்த முடியுமோ அவ்வளவு அக்கரை செலுத்தி வருகிறது. பல்வேறு கருத்தரங்குகளை இங்கே நடத்தியிருக்கிறார்கள் சமீபத்தில் மாணவர்கள் கூட அதைப்பற்றி ஒரு கண்காட்சி நடத்தினார்கள். அதற்கு நான் போயிருந்தேன். அந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு, மாணவர்களை ஊக்குவித்து, பாராட்டிவிட்டு வந்திருக்கிறேன்.

அந்த வகையில் முழு இன்டஸ்டிரியல் சேப்டி—தொழில் பாதுகாப்பு இல்லாததன் காரணமாகவே பல தொழிலாளர்கள் கரங்களை இழந்தார்கள், கால்களை இழந்தார்கள்; உயிர்களை இழந்தார்கள். தொழில் பாதுகாப்பு முறையை அமுல்படுத்தாத நிர்வாகத்தினரை கண்டித்து எடுத்துக்கூறி, இருந்தால் இந்த இழப்புகள் ஏற்பட்டிருக்காது. இந்த அரசைப் பொறுத்த வரையில் தொழில் பாதுகாப்பு முறையை எல்லா நிர்வாகத்தினரும் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறது. அதனால் இப்போது விபத்துக்கள் குறைந்திருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இன்டஸ்டிரியல் சேட்டி இல்லை. முதலாளிகள் அவர்களுடைய நலனைத்தான் பார்க்கிறார்களே தவிர தொழிலாளர்களைப்பற்றி அக்கரை கொள்வதில்லை. அவர்கள் நேஷனல் சேப்டி கவுன்சில் சிபாரிசுகளை



அமுல்படுத்துவதில்லை. தொழிலாளர்களுக்கு இன்டஸ்ரியல் சேப்டி பற்றிய போதனை தேவைப்படுகிறது. அதிகாரிகளுக்கும் தேவைப்படுகிறது. நிர்வாகத்தினர் இந்த விதிமுறைகளை சரியாக கடைப்பிடிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அதற்காக தொழிலாளர் நல அதிகாரிகளை எல்லாம் அழைத்து ஒரு மாநாடு நடத்தினார்கள். உதகமண்டலத்தில் அந்த மாநாடு 2 நாள் நடைபெற்றது. அந்த மாநாட்டிலே இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் மாநாடு ஒன்றைக் கூட்டி, அதிலும் இந்த கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். அதோடு இரு தரப்பு என்ற அளவில் அதிகாரிகளும், தொழில் நிர்வாகமும் கலந்து பேசி, எந்தெந்த முறையிலே தொழில் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று சிந்தித்து, நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், அதைப்பற்றிய புள்ளிவிபரங்களைக் கேட்டு, சரியாக அமுல்படுத்துகிறார்களா என்பதைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் பலனை நாம் விரைவில் எதிர்பார்க்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மா. வே. நாராயணசாமி அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அதை எல்லாம் அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநகராட்சி மன்றத்தில் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்றும், தற்காலிக பணியில் சிலர் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளிலே தக்க பரிகாரங்களை காண அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லேபர் ஆபீசர்களுக்கு வாகன வசதி வேண்டும்; நல்ல கட்டட வசதி வேண்டும் என்ற கருத்தையும் சொன்னார்கள். சென்னையில் மத்தியப் பகுதியில் லேபர் ஆபீஸ் கட்டடம் கட்டுவதற்கு இடவசதி இல்லை. இடம் கிடைக்குமானால் விரைவிலே அதற்கு ஒரு கட்டடத்தை கட்டுவதற்கு நாங்கள் ஆவன செய்வோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு இ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி பற்றியும் சொன்னார்கள். வில்லிவாக்கத்தில் ரயில்வே லைனுக்கு வடக்குப் பக்கத்தில் இருக்கிற தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. ஸ்கீமில் வரவில்லை; தெற்கு பக்கத்தில் இருக்கிறவர்கள்தான் வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

இந்த நேரத்தில் இ.எஸ்.ஐ. யில் இருக்கிற ஒரு பிரச்சனையைத் தெளிவாக்க விரும்புகிறேன். இந்த அரசு 80 லட்சம் ரூபாயை அதிகமாக இந்தத் திட்டத்தில் செலவிடுகிறது. இதைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் யாரையும் நான் குறைகூறுவதாக கருத வேண்டியதில்லை.

உரிமையோடு சொல்கிறேன். இ.எஸ்.ஐ. திட்டத்தை ஒழுங்காகப் பயன்படுத்திக்கொள்வதாக இருந்தால் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் விஸ்தரிக்க இந்த அரசு தனிக் கவனத்தை செலுத்தும் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் தொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வில்லிவாக்கத்தைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கின்ற குறைபாடுகளை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்துக்கள் கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவொற்றியூருக்கு வீட்டுவசதி வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அங்கு மட்டுமல்ல; தமிழ்நாடு பூராவும் வீட்டுவசதி திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கருத்தில் காரியங்களை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அரங்கநாயகம் அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள் இன்னும் தரப்படவில்லை என்று சொன்னார்கள். அதைப்பொறுத்தவரையில் அந்த வீடுகளுக்கு இன்னும் தண்ணீரும் மின்சாரமும் தரப்படவில்லை என்று அறிகிறேன். அவை தரப்பட்ட உடனே விரைவிலேயே அங்கே இருக்கிற குடிசைகளில் இருக்கிற மக்களுக்குத் தரப்படும் என்பதை கடமையுணர்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே வேறு எந்தவிதமான பிரச்சனைகளுக்கும் இடமில்லை.

அதோடு, போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டையும் சொன்னார்கள். கோவையில் சங்கம் பதிய பணம் கேட்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். இந்த இலாகாவின் மூலமாக அவைகளை பரிசீலிக்கும்படி சொல்லியிருக்கிறேன். தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைசாமி அவர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்களைப்பற்றியும், விபத்துகள் குறைந்திருப்பது பற்றியும், மற்ற காரியங்களையும் குறிப்பிட்டுப் பேசினார்கள்,



திருப்பூருக்கு இ.எஸ்.ஐ. வேண்டும் என்றார்கள். இ.எஸ்.ஐ. பொறுத்தவரையில் நான் முன்பு கூறியதையேதான் இதற்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. லத்திப் அவர்கள் தாம் ஓராண்டுக்கு முன்னால் எழுதிய கடிதத்திற்கு இதுவரை பதில் கொடுக்கப்படவில்லை, இந்த இலாக்கா என்ன செய்கிறதோ தெரியவில்லை என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். அவர் எழுதிய கடிதம் என்னிடம் இருக்கிறது. அதைப் பார்த்தேன். அதில் பொதுப்படையான ஒரு குற்றச்சாட்டைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு பதில் அளிக்கப்படாததற்குக் காரணம் அந்தக் கடிதம் பொதுப்படையாக இருந்தது தான் என்று சொன்னார்கள். அவர் கடிதம் புறக்கணிக்கப்படவில்லை, இலாகாவால் பரிசீலிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இன்ன இடத்தில் இன்ன தோட்டத்தில் என்று குறிப்பிட்டிருந்தார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு, அவருக்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்திருக்கக்கூடும்.

திரு. எம். ஏ. லத்தீப்: என்னுடைய குறிப்பில் நான் இரண்டு கடிதங்களைக் கொடுத்தேன். ஒன்று பொதுப்படையானதுதான். மற்றது குறிப்பாக மேச்சேரி எஸ்டேட்டில் அவின்டேல் காலனியில் இருப்பதைபற்றிச் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: காலையிலேயே 2 கடிதங்கள் என்று சொல்லியிருந்தால் அதையும் இதற்குள் வரவழைத்திருப்பேன்.

அவர்கள் பீடித் தொழிலாளர்களைப்பற்றியும் சொன்னார்கள். மற்றவர்களும் சொன்னார்கள். பீடித் தொழிலாளர்களுக்கு மேலும் தகுந்த பாதுகாப்பு அளிக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு இருக்கிற ஒரு சங்கடம்—அதையும் சொல்கிறேன். ஆந்திராவில் சமீப காலம் வரையில் ஆயிரம் பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 2.50 தான் தந்து வந்தார்கள். நான் டெல்லியில் தொழிலாளர் நல அமைச்சர்கள் மகாநாட்டில் கூட வலியுறுத்திச் சொல்லிவந்தேன். ஆந்திராவில் பீடித் தொழிலாளர்களுக்கு இதுபோலச் சம்பளம் கொடுத்தால் நாங்கள் எப்படி பீடித் தொழிலாளர்களைக் காப்பாற்ற முடியும் என்று கேட்டேன். அப்போது பரிசீலிப்பதாகச் சொன்னார்கள், தற்போதும் வருந்தத்தக்க அளவுக்கு—

அவர்கள் அந்த மாநிலத்தில் ஆயிரம் பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 3.25 தான் நிர்ணயித்திருக்கிறார்கள். இப்போது நம் ஊரில் ஆயிரம் பீடிகளுக்கு ரூ. 3.50 இருக்கிறது. மேலும் தொடர்ந்து பேசி இதுபற்றி தக்க ஒரு நடவடிக்கை எடுக்க நான் தயார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அமைச்சர் அவர்கள் ஆந்திராவில் ஆயிரம் பீடிகளுக்கு ரூ. 3.25 தான் நிர்ணயித்திருப்பதாகச் சொன்னார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம், பீடியின் தன்மை மாறுபடுவதைக் கருத்தில் கொண்டு—எல்லா இடத்திற்கும் ஒரேமாதிரி என்றல்லாமல் அவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி நிர்ணயிக்க வேண்டும் என்பது என் கோரிக்கை.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இப்போதே பீடிகளில் மூன்றுவகை இருக்கின்றன. ஜாடி பீடி ஆயிரத்திற்குத்தான் ரூ. 3.50 சாதா பீடி ஆயிரத்திற்கு ரூ. 3.25. சின்ன பீடி—முக்கூடல் பீடிக்கு ஆயிரத்திற்கு ரூ. 3.25 என்ற வகையில்தான் இருக்கின்றன.

ஆனால் சேலத்தில் மட்டும் பீடித் தொழிலாளர்களுக்கு ஆயிரம் பீடிக்கு 4½ ரூபாய் கொடுக்கிறார்கள். பீடியும் நன்றாக இருப்பதாகச் சொல்கிறார்கள், எங்கள் பகுதியில் சிறப்பான முறையில் அந்த தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இப்போது முதலாளிகள் நேரிடையாக பீடித் தொழிலாளர்களுடன் தொடர்பு கொள்வதில்லை. ஏஜெண்டுகள் மூலமாகத்தான் இந்தத் தொழில் நடக்கிறது. அதனால் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைப்பதில்லை. இந்த ஏஜெண்டுகளை ஒழிக்க—உண்மையான முதலாளி—உண்மையான தொழிலாளர்களுடன் நேரிடையாகத் தொடர்பு வைத்துக்கொள்ள "jural relationship" சட்டபூர்வமான ஏற்பாட்டைச் செய்வார்களா? அப்போது தான் பாக்டரி ஆக்ட்படி நாம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய நலன்கள் இவர்களுக்கு கிடைக்கும். இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தியா பூராவும் ஏஜெண்டுகள் வேலை இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஏஜெண்டுகள் இல்லாத முதலாளிகளே கிடையாது. ஆந்திரா, கேரளம், மைசூர் ஆகிய எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஏஜெண்டுகளை ஒழிப்பதற்கு வழி என்ன, இதில் உள்ள சட்டச் சிக்கல் என்ன என்பதை நான் ஆராயவில்லை. இந்தக் கருத்துக்களை மனதில் வைத்து இதுபற்றி ஆலோசனை செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கேரளத்தில் ஏஜெண்டுகளைத் தவிர்ப்பதற்காகத்தான் இரண்டாண்டுகளுக்கு முன்னேயே கூட்டுறவு முறையில் அவர்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டினை நமது அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** திரு. சுப்பிரமணியம் சொன்னது போல கூட்டுறவுத்துறையில் அவர்களைக் கொண்டுவருவதற்கு இங்கேயும் முயற்சி செய்யலாம் என்ற எண்ணம் நம் அரசுக்கு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சப்சிடி ஹவுசிங் ஸ்கீமில் அதிக வீடுகள் கட்டப்படவேண்டுமென்று கூறினார்கள். நாம் முதலில் இந்தத் திட்டத்திற்கு 2½ லட்சம் அனுமதித்தோம். ஆனால் வீட்டு வசதி வாரியம் 6.66 லட்சத்தில் 108 வீடுகளைக் கட்டியிருக்கிறது இன்னும் பத்து லட்சத்திற்கு திட்டங்களை வைத்திருக்கிறது என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தொழிலாளர்களுக்கு லண்டனில் கொடுப்பதுபோல, முன்பணம் கொடுத்து வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். லண்டனிலேயே வீடு நெருக்கடிபற்றி ராணியார் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் பார்த்தேன். மேலும் அங்குள்ள பொருளாதார நிலை வேறு, நம் நாட்டின் பொருளாதார நிலை வேறு.

ஆயினும் நடுத்தர மக்களுக்காகத்தான் நாம் முன்பு 10 ஆயிரம் வீடுகளுக்கு 20 சதவிகிதம் கொடுக்கவேண்டுமென்று இருந்ததைக் கூட இப்போது 10 சதவிகிதம் கொடுத்தால் போதும்—ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும் என்று செய்திருக்கிறோம். மேலும் வீட்டுவசதி வாரியம் மற்ற வீடுகளுக்கு எல்லாம் 12½ சதவிகிதம் சென்டேஜ் போடுகிறது என்றால்—இந்த வீடுகளுக்கு 6¼ சதவிகிதம்தான் சென்டேஜ் போடவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** சென்னை நகரில் இந்தத் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சென்னை நகரில் என்றால் மவுண்டு ரோடில் இல்லை. சென்னை புறநகர்ப்பகுதியில் வியாசர்பாடியிலேயே பின்னி கம்பெனி தொழிலாளர்களுக்கு, அசோக் லேலண்டு தொழிலாளர்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் நெசவாளர் பெருமக்கள் எல்லாம் இதனால் பயன் அடைந்திருக்கிறார்கள். சந்தோஷமாக முன்பணம் ஆயிரத்தைக் கொடுக்க வருகிறார்கள்.

இன்னும் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள்—இதற்கு பரிகாரம் கண்ட அரசு உலகத்தில் இல்லை. எல்லோரும் இதைப்பற்றி பேசுகிறார்கள். இது பேசுவதற்கு சிறந்த தத்துவமே தவிர நடைமுறைக்கு ஒத்த தத்துவம் இல்லை என்பதை என்னுடைய குறைந்த அனுபவத்தில் ஐயப்பாடு உடையவனாக இருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : நம்முடைய சென்னையில் டன்லப் தொழிற்சாலையில் ஒரே ஒரு தொழிற் சங்கம்தான் இருக்கிறது என்பது உண்மையா? அது போல மற்ற இடங்களிலும் செய்ய முடியாதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அது தொழிற்சங்கத் தலைவரது சாமர்த்தியத்தைப் பொறுத்தது. அவரவர்களுடைய சாமர்த்தியம்—முதலாளிகள் சாமர்த்தியம் உண்டு.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களிடம் நல்ல முறையில் பேசி அவர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள். ஏற்கனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே மன்றத்திலே ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால், எதிர்க்கட்சிக்காரர்கள் அதை ஏகமனதாக ஒத்துக்கொண்டால் உடனடியாக சட்டம் கொண்டு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே தனியாக எல்லா எதிர்க் கட்சிக்காரர்களையும் அழைத்துப் பேசி இப்படிப்பட்ட கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறார்களா என்று பார்த்து அந்த மாதிரி ஒரு சட்டம் கொண்டு வர தொழில் அமைச்சர் அவர்கள் முயலுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஒரு பயங்கரமான சோதனையில் என்னை நண்பர் வீராசாமி ஆட்படுத்த விரும்புகிறார்.

திரு. பெ. சீனிவாசன் : 'வி ஆர் ப்ரிபேர்டு.'. எதிர்கட்சிக்காரர்களை கலந்து பேசினால் அதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே. இந்தக் கருத்தை ஏற்கனவே எடுத்துச் சொல்லியதுபோல எல்லோரும் பேசுகிறார்கள். எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களும் பேசுகிறார்கள். அதுதான் ஆச்சரியம். ஆனால் அவர்களின் பிரச்சினை என்று வரும்போது அவர்கள் ஒத்துக்கொள்வதில்லை.





**திரு. மா. வெ. நாராயணசாமி :** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தது போல ஒரு குறிப்பிட்ட மையத் தொழிற் சங்கத் தலைவர் மட்டும் ஒப்புக் கொண்டால் அது சரியல்ல. எல்லா மையத் தொழிற் சங்கங்களும் சேர்ந்து தீர்மானம் போடவேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நாராயணசாமி அவர்கள் டன்லப்பிலே தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறார்கள். அங்கே ஒரே சங்கம்தான் இருக்கிறது. ஆகவே அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

அரசுப் பண்ணைகளில் உள்ள விவசாயிகளுக்கு குறைந்தபட்சக் கூலி தரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் கூறினார்கள். குறிப்பாக ஹோசூர் பண்ணையில் அப்படி இருக்கிறதென்று சொன்னார்கள். இது வருந்தத்தக்கது. அதை விசாரித்து அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமென சொல்லிக்கொள்கிறேன்.

நாலாயிரம் ரூபாயில் கிராமப்புறங்களில் இருக்கிற வீடுகளைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை வீட்டு வசதி வாரியம் கட்டுகிறது. அதை விரைவிலே முடிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி இராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். கேரளாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறிப்பிட்டு, அங்கே ஊட்டச் சத்து உணவு கொடுப்பதாகக் குறிப்பிட்டார்கள். அந்த மாதிரி நம்முடைய இலாகாவில் உள்ள அதிகாரிகளைக் கலந்து அந்த காரியத்தைச் சிறப்பாக நடத்த நடவடிக்கை எடுக்கச் செய்கிறேன்.

மாடு வளர்ப்பதிலே முதலாளிகளின் உத்தரவு இல்லாமல் தோட்டத் தொழிலாளிகள் மாடு வளர்க்க முடியவில்லை என்று சொன்னார்கள்.

இன்னும் மலைகளிலே மலைக்காட்டு ராஜாக்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களையும் கலந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு தங்கமணி அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். வீட்டு வசதி வாரியத்திலே உள்ள ஒரு வழக்கைப்பற்றிச் சொன்னார்கள். தற்போது அது அப்பீலுக்குச் சென்றிருப்பதால் அதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை.

[திரு. க. இராசாராம்] [1974 மார்ச் 28

நந்தனத்திலே 155/2 என்ற ஒரு வீட்டில் பல மாதங்கள் வாடகை கட்டாமல் இருக்கிறார்கள் என்றும், அதோடு அந்த வீட்டிலேயே மேலும் கூடுதலாக கட்டிடத்தை கட்டியிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அதைப் பற்றி விசாரித்தபோது, சுமார் 1,400 ரூபாய் செலவில் ஒரு கழிவு அறையும், மற்றும் சில வசதிகளையும் செய்திருக்கிறார்கள் என்றும், அந்த வீட்டிற்கு நான்கு மாத வாடகை பாக்கிதான் இருக்கிறதென்றும் தெரியவருகிறது. சாதாரணமாக இரண்டு மாத வாடகை பாக்கி வரை எல்லோருக்கும் அனுமதிக்கப்படுகிறது. இவருக்கு அதிகமாக இரண்டு மாதம் பாக்கியிருக்கிறது. ஆகவே, அதிகமாக எதுவும் தரப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

தங்கமணி அவர்கள் பேசுகிறபோது ஸ்டிரைக்கைப் பற்றிச் சொன்னார்கள். ஸ்ட்ரைக் முடிந்தவுடன் கேஸ்கள் வாபஸ் பெற வேண்டுமென்று சொன்னார்கள்.

சிம்சன் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். அது ஒரு தனிப்பட்ட பிரச்சினை. அது கொலை வழக்கு வரை போயிருக்கிறது. ஆகவே அதிலுள்ள சங்கடங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆனாலும் அங்கே ஒரு நீதிபதியை வைத்து விசாரணை செய்து அவரும் தன்னுடைய தீர்ப்புக்களை நேற்று முன்தினம் தான் மாண்புமிகு முதல்வரிடம் தந்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சியிலே ஒரு டி.சி.எல். போடவேண்டுமென்று சொன்னார்கள். அதைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது திருச்சியிலே ஒரு டி.சி.எல். போடப் போவதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லி ஓராண்டு முடிந்துவிட்டது. ஆகவே, விரைவிலே அதற்கு வேண்டிய ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அதைப் பற்றிய தகவல்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் டி.சி.எல்.-ஐ போடுவதைப்பற்றி தொழிலாளர் நல செயலாளரோடு கலந்து அதில் விரைவாக நடவடிக்கை எடுக்கும்படி சொல்கிறேன். ஃபேக்டரி இன்ஸ்பெக்டர்கள் ஹோட்டலுக்குப் போகும் நேரத்திலே அவர்களும் ஹோட்டல் முதலாளிகளும் ஐக்கியமாகி விடுகிறார்கள் என்று தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட தவறை குறிப்பிட்ட எந்த ஒரு அதிகாரி செய்கிறார் என்று சொன்னால், அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காதென்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 மார்ச் 28] [திரு. க. இராசாராம்]

கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று சொன்னார்கள். கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய நிலையில் மினிமம் வேஜஸ் கமிட்டி—குறைந்தபட்ச கூலி நிர்ணயக் குழு—ஒன்றைப் போட்டு அது அறிக்கை கொடுத்து அதன் மூலம் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஹோட்டல் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயக் குழு ஒன்றைப் போடவேண்டுமென்று தங்கமணி அவர்கள் சொன்னார்கள். நான் ஏற்கனவே சுற்றுலாத் துறையில் பொறுப்பேற்றிருந்தேன் என்பது எல்லோருக்கும் தெரியும். தற்போது ஹோட்டல் தொழில் நல்லபடியாக வளர்ந்திருக்கிறது. ஆகவே, அந்தத் துறையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்குமென்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கணபதி அவர்கள் வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி பேசுகையில் தஞ்சையிலே ஒரு கோட்டம் அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். நல்லவேளை அதை பாபநாசத்திலேயே அமைக்க வேண்டுமென்று சொல்லவில்லையே என்று சந்தோசப்படுகிறேன்.

தஞ்சையிலே கூலிகள் 6 மாதம் வேலை செய்கிறார்கள் மீதி 6 மாத காலம் சும்மா இருக்கிறார்கள் ஆகவே அப்படிப்பட்ட மனித வேலை இழப்பை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்ள, குடிசைமாற்று வாரியத்திலே பெண்கள் தையல் வேலை செய்து துணிகளைத் தைத்துக் கொடுப்பது போல, ஒரு திட்டத்தைக் கொண்டுவர இந்த அரசு ஆலோசனை செய்யும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிப் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களெல்லாம் கன்னியாகுமரி மாவட்டத்திலே வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

தோட்டத் தொழிலாளர்களில் நிரந்தரமாக வேலை செய்பவர்களுக்கு 97 சதவிகிதம் வரை வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு என்னிடம் புள்ளிவிவரம் இருக்கிறது. அதை மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள்

பாராட்டுகிறார்கள். ஆனால் அதிலே யாருக்கு வீடு இல்லை என்பதற்கு என்னிடத்திலே குறிப்பு இல்லை. ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிடுவதால் கன்னியாகுமரியிலே ஒரு ஆராய்ச்சி செய்து அதைச் சபைக்குத் தெரிவிக்கிறேன்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று பேசுகிறபோது டி.எம்.கே. சங்கத்தை மட்டும் அது தனியாக கவனிக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

அதைப்பற்றி சொல்கிறபோது சந்தா வசூலிப்பது பற்றியும் சொன்னார்கள். அப்படி ஏதாவது இருந்தால் அதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளபடியே கட்சி அடிப்படையில் எந்தச் சங்கமும், யாரும் சந்தா வசூலித்து கொள்ளலாம். அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் தகராறு இல்லாமல் சந்தா வசூலித்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பஸ் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் என்னை சந்தித்ததைப் பற்றியும், மாண்புமிகு முதல்வரைச் சந்தித்ததைப் பற்றியும் திரு. ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களின் விஷயத்தில் ஆவன செய்யப்படுமென தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

போனஸ் சட்டத்தில் ரப்பர் ப்ளாண்டேஷனில் 15 சத விகிதம் தருகிறார்கள். ஆனால் அரசுத் துறையில் தரவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றிக் குறிப்பு இல்லை. அதைப்பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி பஸ் தொழிலாளர்கள் பிரச்சினையைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே தற்போது 200 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். வழக்கு வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. தற்போது புதிதாக வேலைக்கு எடுக்கிறபோது வேலை இழந்தவர்களை 'அப்சார்ப்' செய்தால் நன்றாக இருக்கும். ஆனால் தற்போது கன்னியாகுமரி பஸ் போக்குவரத்துத் துறையிலே உள்ள அதிகாரி வெளியே இருந்து ஆட்களை எடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(மாலை 6-30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல்கள் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த எண்ணங்களைத் தெரிவித்திருக்கிறார்கள், நான் அதுபற்றி போக்குவரத்துத்





துறை அதிகாரிகளிடத்திலும், அமைச்சர் அவர்களிடத்திலும், சொல்லி அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முயற்சியை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் ஒரு குற்றச்சாட்டை ரொம்பச் சுலபமாக எடுத்துச் சொன்னார்கள், நான் பயந்துவிட்டேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்கள் சரிவர ஒதுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். எங்களுக்கு இருக்கிற குறைபாடு எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிகமாகச் செய்கிறோம் என்ற குற்றப்பாட்டைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. நிலப் பட்டாவாக இருந்தாலும் வீட்டு மனைகளாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமாக வழங்கி வருகிறோம். எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு வழங்கி வருகிறோம். வந்த விண்ணப்பங்களையெல்லாம் கவனிக்கிறோம். தனிப்பட்ட புகார்கள் ஏதாவது இருக்குமானால் அதைப்பற்றி அவர்கள் தெரிவித்தால் அதைப்பற்றி விசாரிக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய சாதனைகளை இந்த அரசு செய்திருக்கிறது. 1972-73 ஆம் ஆண்டிலே செலவழிக்கப்பட்ட தொகை 5.93 கோடி, 1973-74-ல் செலவழிக்கப்பட்ட தொகை 8.48 கோடி ரூபாய்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, நம்முடைய விவசாயத் தொழிலாளர்கள்பற்றி இங்கே பேசப்பட்டது. முதல் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றி ஏற்கனவே 45 லட்சம் பேர்கள் விவசாயிகள் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு குறைந்தபட்சக் கூலி கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. மற்றவர்களுக்கு கூலி நிர்ணயப்படி கொடுக்கவில்லையென்றால் கோர்ட்டிற்குப் போக முடியும் சட்டம் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அப்படிப்பட்ட பாதுகாப்பு இல்லை; ஆகவே அவர்களைப் பாதுகாப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** விவசாயத் தொழிலாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். திரு. சுப்பையா அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கிடைப்பதில்லை என்று சொன்னார்கள்.

அவர்களுக்கு கூலி நியாயமாகக் கிடைக்கிற தன்மையிலே இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்திற்கு சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதைவிட இந்த ஆண்டு அதிகமாக 255 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டுவதைப்பற்றி ஏற்கனவே நான் எடுத்துச் சொன்னேன். ஹட்கோ மூலமாக உதவி பெற்று வீடுகள் கட்டப்படுகின்றன.

தொழிலாளர்களுக்கு இரண்டரைக் கோடி ரூபாய் அளவிலே திட்டமிட்டு விருதுநகர், சிவகாசி, சத்தியமூர்த்தி குடியிருப்பு, சர்மா நகர், திரு.வி.க. நகர், பசுமலை, சிங்கநல்லூர், பீளமேடு, திருப்பூர் ஆகிய இடங்களில் குடியிருப்புத் திட்டம் ஏற்படுத்த இருக்கிறோம்.

நெசவாளர் குடியிருப்புக்காக சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், கடையநல்லூர், உறையூர், திருச்சி, துறையூர், திருச்சி சர்வோதயா, சென்னை சூளை ஆகிய இடங்களில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

கைவினைஞர்களுக்கான வீட்டு மனைகள் வியாசர்பாடி, கொரட்டூர் கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், அறிஞர் அண்ணாநகர் விரிவாக்கம் ஆகிய இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அசோக் லேலண்ட், செஞ்சுரி ப்ளவர் மில்ஸ், தூத்துக்குடி தொழிற்சாலை, பாளையங்கோட்டை ரோடுவேஸ் இவற்றில் உள்ள தொழிலாளர்களுக்காக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டித் தருகிறோம்.

மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாட்டிலே இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன என்பதை உறுப்பினர்கள் எல்லாம் அறிவார்கள்.

குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் சென்னை மாநகரத்திலே மட்டுமன்றி மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட வேண்டுமென்ற முறையிலே வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக குடிசைமாற்று வாரியப் பணிகளை நிறைவேற்றுகின்ற திட்டத்தை அரசு வைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக ஒதுக்கிய பணம் 35 லட்சம் என்பது இன்றைக்கு 75 லட்சமாக உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுக் கணக்குக் குழுவினாலே கணக்குகள் பரிசீலிக்கப்பட்ட நேரத்திலேயும், பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியினாலே பரிசீலிக்கப்பட்ட நேரத்திலேயும், பல குறைபாடுகள் இருந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்





குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே நான் விசாரித்ததிலே இப்பொழுது 72 ஆம் ஆண்டு வரையிலே கணக்குகள் சரிவர பரிசீலிக்கப்பட்டு அக்கவுண்டண்ட் ஜெனராலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

முன்னாள் ஏ.ஜி. திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின் மூலமாக கணக்குகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு எல்லா கணக்குகளும் இப்பொழுது சரிவர இருக்கின்றன. வாடகை வசூல், நிலத்திற்கு பாக்கிகள் இவற்றைப் பொறுத்தவரையில் நிலுவை வசூல் 1973–74 ஆம் ஆண்டிலே டிமாண்ட், கலெக்ஷன், பேலன்ஸ் 1971 ஏப்ரல் 1 முதல் பார்க்கப்பட்டிருக்கிறது. 1971 பிப்ரவரியில் 4 கோடியே 11 லட்சம் என்ற அளவிற்கு இருந்து 1974 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் வசூலானது 2 கோடியே 20 லட்சம், பாக்கி ஒரு கோடியே 41 லட்சம். பழைய பாக்கி ஒரு கோடியே 49 லட்சம், அதிலே வசூலானது 54 லட்சம், மீதி 95 லட்சம். அந்த மீதி 95 லட்சத்தை வசூலிக்க 1 ஆண்டிற்குள் முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இப்பொழுது பாக்கியிலே 70 சதவிகிதமும், பழைய பாக்கியில் 35 சதவிகிதமும் வசூலிக்கிறோம். மொத்தத்திலே 6 மாதத்திலே 80 சதவிகிதம் பாக்கி வசூலாகிவிடும், ஆகவே ஒரு வருஷத்திலே எல்லா பாக்கிகளையும் வசூலிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

வீட்டு வசதி வாரியம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நிலத்தினுடைய வீட்டினுடைய மதிப்பைப் போடவில்லை என்ற குறைபாடு இருந்தது. சென்னையிலே இருக்கின்ற 16 திட்டங்களுக்கு விலை மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களிடத்திலே வசூலித்து வருகிறோம். காலியாகவுள்ள நிலங்களைப்பற்றி எல்லா தகவல்களும் சேகரிக்கப்பட்டு எந்த எந்த இடங்களிலே எவ்வளவு நிலங்கள் காலியாக இருக்கின்றன என்ற கணக்கை வைத்து இருக்கிறோம். வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பொதுமக்கள் தொடர்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அதன்மூலம் அங்கேயுள்ளவர்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளைத் தீர்த்துவைக்கும் ஏற்பாடு பற்றியும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சலவையாளர்களுக்கு சைதாப்பேட்டையில் 125 வீடுகள், காவல் துறையினருக்கு ராஜா அண்ணாமலைபுரத்திலே 258 வீடுகள் 60 லட்ச ரூபாய் செலவில் கட்ட இருக்கிறோம். மதுரை, சேலம், திருச்சி போன்ற இடங்களில் உள்ள கடைநிலை ஊழியர்களுக்குக் குடியிருப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். அரிசன மாணவர்களுடைய இல்லங்கள் என்ற முறையிலே செய்யூர், செய்யார்,

வேலூர், சேலம், தாராபுரம் ஆகிய இடங்களிலே 400 அரிசன் மாணவர்களுக்கான இல்லங்களைக் கட்டிக்கொண்டு வருகிறோம். கிராம வீட்டு வசதியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் 96.4 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அதிலே 76.45 லட்ச ரூபாய் செலவிலே ஏறக்குறைய 2500 வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த பதினைந்து ஆண்டுக் காலத்திலிருந்து 73 வரையிலே 3,704 வீடுகள்தான் கிராமப்புறங்களிலே கட்டிக்கொடுக்கப்பட்டது, ஆனால் கடந்த ஒரே ஒரு ஆண்டிலே 2600 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்ற நல்ல செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 450 கிராமங்களுக்கு வீட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத்தினுடைய கிளைகள் தாலுகாக்களிலே உருவாக்க வேண்டுமென்று நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இருக்கிற பிரச்சினையை உறுப்பினர்கள் மத்தியிலே எடுத்துச் சொல்லி விடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தாலுகாக்களிலே எவ்வளவு வீடுகள் தேவை என்று அனுமானிக்க முடியவில்லை, சில இடங்களிலே 50 வீடுகள் தேவைப்படலாம், சில இடங்களிலே 10 வீடுகள் தேவைப்படலாம், சில இடங்களிலே வீடுகள் தேவைப்படாது என்ற நிலைமை இருக்கலாம்.

குறிப்பாக எவ்வளவு வீடுகள் என்று கணக்கிட்டு நிலத்தை நாம் ஆர்ஜிதப் படுத்த முடியவில்லை. அங்கங்கே உள்ளவர்கள் எவ்வளவு வீடுகள் தேவை என்பதை வீட்டு வசதி வாரியத்திற்கு தெரியப்படுத்தினால் அதைப்பற்றிக் கவனிக்கலாம். கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் நண்பர் பழனிவேல் ராஜன் அவர்களுடைய தலைமையிலே சிறப்பான பணியை ஆற்றி வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கடன் அளித்திருக்கிறோம். 10 கோடி ரூபாய் அளவிலே இருக்கலாம் என்று நினைக்கிறேன். குடிசை மாற்று வாரியப் பணிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமாகப் பேசவில்லை. குறைபாடுகள் அற்ற முறையிலே நண்பர் இராம. அரங்கண்ணல் அவர்கள் அந்த வேலையை பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன்.

ஆகவே, எந்த உறுப்பினரும் அதைப்பற்றி எந்தக் குறையும் சொல்லாமல் மனநிறைவோடு எடுத்துச் சொன்னதால் அவருக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் இந்த இலாக்காவிலே இரவானாலும் சரி, பகலானாலும் சரி தொழிலாளர் பிரச்சினைகளில் நான் ஈடுபட்ட நேரத்தில் எல்லாம் தொழிலாளர் நல செயலாளர் அவர்களும், தொழிலாளர் நல ஆணையாளர் அவர்களும், தொழிலாளர் நல அதிகாரிகளும் மிகவும் சிறப்பாக என்னுடன் ஒத்துழைத்தார்கள். அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



வீட்டு வசதி சிறப்புச் செயலாளர் அவர்களையும், வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்களையும், குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களையும், மத்திய கூட்டுறவு அடைமான சங்கத் தலைவர் அவர்களையும் உங்கள் சார்பில் இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்துடன் என்னுடன் நடந்த பேச்சு வார்த்தைகளில் சூடற்ற தன்மையில் சுவையான நிலைமையில் தொழிற்சங்கத் தலைவர்களும் ஈடுபட்டு மிகச் சிறப்பாக ஒத்துழைத்தார்கள். அப்படி அவர்கள் கட்சி பேதமில்லாமல் ஒத்துழைத்ததற்காக என்னுடைய நன்றியை அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. காமாட்சி:** பேரவைத் தலைவரவர்களே, கிராமங்களில் வீடு கட்டுவதற்கு 4,000 ரூபாய் கடன் தரப்படுகிறது. ஆனால் அதற்கு 5 சென்ட் நிலம் இருக்க வேண்டுமென்று ஒரு விதியிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர்கள்கூட இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த 5 சென்ட் என்பதை மாற்றி 2 சென்ட் அல்லது 1½ சென்ட் என்று இருந்தால் போதும் என்று விதியைத் தளர்த்தினால் கிராமங்களில் வீடு கட்டுவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அங்கத்தினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிச் சொல்வதற்கு நான் மறந்துவிட்டேன். 5 சென்ட் இல்லாமல் 3 சென்ட் இருந்தாலும் தருவதற்குத் தயாராக இருக்கிறது. அநேகமாக பட்டாகூட மூன்று சென்ட்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் வீடுகள் கட்டினால்கூட பல இலட்சக்கணக்கான வீடுகள் வரும். அவ்வளவிற்கு நிதிநிலை இடம் தராது. இருந்தாலும் 3 சென்ட் இருந்தாலும் தரலாம் என்று இருக்கிறோம். ஆனால் என்ன பிரச்சினை இருக்கிறது என்றால், விண்ணப்பங்களை அனுப்புகின்றவர்கள் எத்தனை சென்ட் என்று பட்டா விவரங்களை அனுப்புவது இல்லை. விண்ணப்பங்கள் நிறைய வருகின்றன. ஆனால் பெரும்பாலான விண்ணப்பங்களில் இந்தக் குறிப்புகள் இருப்பது இல்லை. ஆகவேதான் பணம் ஒதுக்குவதில் காலதாமதம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதியிலுள்ள கிராமங்களில் பக்கத்தில் இருந்து பட்டாக்கள் இருக்கிறது என்று சொல்லி அந்த முறையில் விண்ணப்பங்களை அனுப்பினால் தமிழகத்தில் அதிகமாக வீடுகளைக் கட்டலாம். இன்றைக்கு இந்தியாவிலேயே அதிகமான வீடுகளைத் தமிழக அரசுதான் கட்டிக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, வளர்ந்து வருகின்ற தொழில் நகரங்களுக்கு வீட்டு வசதி அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில் குறிப்பாக இராணிப்பேட்டையில் தொழில் வளர்கிறது. அங்கே வீடு கட்டிக் கொடுக்க வாரியம் முடிவெடுத்திருப்பதாக அறிகிறோம். அதை உடனடியாகச் செய்து அதை முன்னோடித் திட்டமாகச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இராணிப்பேட்டையில் தொழிற்சாலைக்கு இப்பொழுதுதான் அடிக்கல்நாட்டுவிழா நடந்துகொண்டிருக்கிறது. தொழிற்சாலை வந்து, அங்கே தொழிலாளர்கள் வந்து சேர்வதற்கு முன்னால் வீடுகள் வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் வருவதற்குள்ளாகவே முடிந்துவிடும் என்று கருதுகிறேன்.

தொழிலாளர்கள் நலத்துறை அதிகாரிகள் நல்ல முறையில் பணியாற்றினார்கள் என்று நான் சொன்னேன். அவர்களுக்கெல்லாம் வீடு கட்டும் திட்டத்தை உருவாக்க மாண்புமிகு முதலமைச்சரவர்களை அணுகிய நேரத்தில் அவர்கள் மனப்பூர்வமாக ஒத்துழைப்பை நல்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு வீடு கட்டும் திட்டத்திற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சேலத்திலே நடந்த வீட்டு அடைமான சங்க மாநில மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். தற்பொழுது வீடுகளுக்கு 25,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு, 20 ஆண்டு தவணைகளில் திருப்பித் தருகிறோம், இப்பொழுது சிமெண்ட் விலை, இரும்பு விலை, கூலி முதலியவை ஏறிவிட்டது, ஆகவே, அதை 30,000 ரூபாய் என்று உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலித்து 30,000 ரூபாய் இனிமேல் தரலாம் என்று, அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இம்மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



சமீபத்திலே வடார்க்காடு மாவட்டம் குடியாத்தத்திலே ஒரு தீ விபத்து ஏற்பட்டு, அதில் ஏராளமான நெசவாளர்கள், ஏழைகள் பாதிக்கப்பட்டார்கள். இதுவரையிலும் கூட்டுறவு வீடுகள் அடைமான சங்கம் ரிப்பேர் செலவுக்காகப் பணம் தந்திருக்கிறது. ஆனால் குடியாத்தத்தில் உள்ள நிலைமைகளைப் பார்த்த பிறகு உடனடியாகப் பரிகாரம் செய்ய வேண்டுமென்ற தன்மையில் கூட்டுறவு வீடு கட்டும் அடைமான சங்கத் தலைவர், நம்முடைய நண்பர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கண்டு பேசினார்கள். அவர்களுக்கு அதிகத் தொகை அனுப்பப் படவேண்டுமென்று கூறியதை ஏற்றுக்கொண்டார்கள். அந்த வகையிலே கூட்டுறவு வீடு கட்டும் அடைமான சங்கம் குடியாத்தம் தீ விபத்து சம்பந்தமாக 5,000 ரூபாய் வீட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்காக கடன் வழங்க முன் வந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வகையிலே பல வெட்டுப் பிரேரணைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அவர்கள் தந்துள்ள வெட்டுப் பிரேரணைகளை அநேகமாக ஒன்றையும் விடாமல் நான் தொடுத்துப் பேசியிருக்கிறேன். அதிலே ஏதாவது விட்டுப் போயிருந்தால் அதைப்பற்றி இந்த அரசு தக்க நேரத்தில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுப் பிரேரணைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மான்யங்களை ஆதரிக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு. சு. துரைசாமி :** தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள், திருப்பூருக்கு இ.எஸ்.ஐ. திட்டம் வேண்டுமென்று கேட்டதாகவும், அதற்கு முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்கள். ஏற்கனவே அந்தத் திட்டம் அங்கே இருக்கிறது. ஆனால் நான் சொன்னது, கோவை, மதுரை, கோயில்பட்டி போன்ற இடங்களில் இ.எஸ்.ஐ.-யில் சேர்ந்திருக்கும் குடும்பங்களுக்கும் இருப்பதைப்போல் திருப்பூரிலும் தொழிலாளர்கள் நிரம்பியுள்ள அந்த நகரத்திலும் கொண்டு வர முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அதை அரசு பரிசீலிக்கும்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, நான் பேசும்பொழுது திறமைமிக்க துணை நடிகர்கள், துணை நடிகைகளுக்கு குறைந்தபட்சம் ஊதியம் நிர்ணயிக்க வேண்டும், திறமையில்லாத நடிகர்கள் இலட்சக்கணக்கில் சம்பாதிக்கி

[திரு. என். கணபதி] [1974 மார்ச் 28

ரூர்கள், திறமையுள்ளவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள், அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கூறினேன். அதற்கு அமைச்சரவர்கள் விளக்கம் தரவில்லை. அதற்கு என்ன விளக்கம் அளிக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, எல்லாத் தொழிலுக்குமே இந்த அரசு குறைந்தபட்ச கூலியை நிர்ணயிக்க வேண்டுமென்று கருதுகிறது. ஹோட்டல் தொழிலாளியானாலும் சரி அல்லது துணை நடிகர்களானாலும் சரி எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற அக்கறையை இந்த அரசு செலுத்த விரும்புகிறது. ஒவ்வொரு பிரச்னையாகத் தீர்த்து வருகிறது. இப்பொழுதுதான் நெசவாளர்கள் பிரச்சினையைத் தீர்க்கின்ற நிலைமையில் இருக்கிறோம். இப்படி ஒவ்வொரு பிரச்சினையிலும் அக்கறை செலுத்தி காரியங்களைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இன்ஸ்பெக்டர் ஆஃப் பிளாண்டேஷன்ஸ் என்ற அதிகாரி கன்னியாகுமரி ஜில்லாவிற்கும், நெல்லை ஜில்லாவின் ஒரு பகுதிக்கும் ஒரே ஆபீசர்தான் இருக்கிறார். கன்னியாகுமரி ஜில்லாவில் ஏறத்தாழ 20,000 ரப்பர் ப்ளாண்டேஷன் இருக்கிறது. ஏகதேசம் 40,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். திருநெல்வேலியிலிருந்து அந்த அதிகாரி வந்து இப்படிப்பட்ட காரியங்களைப் பார்ப்பதற்குச் சிரமமாக இருக்கும். ஆகவே, கழிந்த பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டிருக்கிறோம். கன்னியாகுமரி ஜில்லாவிற்கு என்று தனியாக ஒரு இன்ஸ்பெக்டர் ஆஃப் பிளாண்டேஷன் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதை அமைச்சரவர்கள் கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அதைப்பற்றி வெட்டுப்பிரேரணை கூட கொடுத்திருக்கிறார்கள். அவருடைய எண்ணங்களை ஏற்றுக்கொண்டு திருநெல்வேலி, கன்னியாகுமரி என்று இரண்டு மாவட்டங்களையும் இணைத்து ஒரே அதிகாரியை நியமிப்பது என்று முடிவெடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, அரசாங்கம் கட்டித் தந்து அதில் குடியிருக்கும் அரசு ஊழியர்களுக்கு தற்பொழுது எவ்வளவு சதவிகிதம் வாடகை வசூலிக்கப்படுகிறது, அதைக் குறைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தப்போதுள்ள வாடகையே மிகமிகக் குறைவு. அந்த அளவிற்கு எந்த நாட்டிலேயும் கொடுக்காத அளவிற்கு நம்முடைய நாட்டிலே கொடுக்கிறோம். அதைக் குறைக்கச் சொல்லி விடு கட்டும் வேலை நின்றுவிடக் கூடாது. மேற்கொண்டு சர்க்கார் அலுவலாளர்கள் பயன்பெற வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்பொழுது குறைக்கும் யோசனையை மற்றவர்களிடத்தில் பரப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. கோரிக்கை எண் 29-க்கு கொடுக்கப்பட்டிருந்த திருவாளர்கள் பி. வெங்கடசாமி, ஏ. சுப்பிரமணியம், பெ. சௌந்தரபாண்டியன், திரு. எம் ஏ. லத்தீப், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இருக்கையில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,68,33,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. மருதாசலம், திரு. கே. என். குமாரசாமி, டாக்டர் ஹாண்டே ஆகியவர்கள் இருக்கையில் இல்லாததால் கோரிக்கை எண் 32-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் வெங்கடசாமி, கே. எ. வகாப், ஜேம்ஸ் ஆகியவர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 32—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,92,23,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/74).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/74), 23—3—1974-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டது என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை மாலை 6.52 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

### 11. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

217. Notification issued with G.O. Ms. No. 223, Rural Development and Local Administration, dated the 6th February 1974 in regard to division of Tiruvarur Municipality into twenty-four wards and reservation of one seat for Scheduled Castes and one seat for women in the Tiruvarur Municipal Council. [Laid on the table of the House under section 304 (*d*)of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

### B. Reports, Notifications and Other Papers

122. Erratum issued with Memorandum No. 59400/MF/73-2, Rural Development and Local Administration, dated the 31st May 1973 to G.O. Ms. No. 2151, Rural Development and Local Administration, dated the 10th October 1972 published at pages G944–945 of Part II—Section I of the *Tamil Nadu Government Gazette*, dated the 8th November 1972.

@ 123. A Review on Industrial Growth in Tamil Nadu Major Industry, 1973–74 (English and Tamil),

@ 124. A Review on Industrial Growth in Tamil Nadu Small Scale Industries, 1973–74 (English and Tamil).



@ 125. A Review on Industrial Growth in Tamil Nadu Handloom and Textile, 1973-74 (English and Tamil).

@ 126. A Review on Industrial Growth in Tamil Nadu Sugar Industry, 1973-1974 (English and Tamil).—

@ 127. A Review on Industrial Growth in Tamil Nadu Mineral Development, 1973-74 (English and Tamil).

@ 128. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Textile Corporation Limited, 1973. (English and Tamil).

@ 129. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Industrial Development Corporation Limited; 1973-74 (English and Tamil).

@ 130. A Review on Industrial Growth in Tamil Nadu—State Industries Promotion Corporation of Tamil Nadu Limited, 1973–74 (English and Tamil).

@ 131. A Review on Industrial Growth in Tamil Nadu—Industrial Finance, 1973–74 (English).

@ 132. Performance Budget on Industries, 1974–75.

£ 133. Review on Labour in Tamil Nadu, 1973–74 (English and Tamil).

£ 134. Speech of Hon. Thiru K. Rajaram, Minister for Labour on Demand No. 29—Labour including Factories.

---

* Cut Motions circulated separately.
@ Despatched to Members on 26th March 1974.
£ Despatched to Members on 27th March 1974.

## இணைப்பு I

**[21-ம் பக்கத்தில் 644 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]**

*ஊறு விளைவிக்கும் மருந்துகளின் விற்பனை குறித்து அடிக்கடி கண்காணிக்குமாறு மத்திய அரசிடமிருந்து கட்டளைகள் ஏதும் 1972-ல் வரவில்லை. எனினும், பம்பாய் ரஸ்ஸல் பார்மஸூடிகல்ஸ் நிறுவனம் தயாரிக்கும் நான்ட்ராக்ஸ் (Nandrax) உட்பட மெத்தாகுவாலோன் (Methaqualone) மருந்தைத் தயாரித்து விற்பனை செய்வது குறித்து, குறிப்பாக மருத்துவரின் மருத்துவச் சீட்டின்படி அவை வழங்கப்படுகின்றனவா என்பதை கண்காணித்து வரலாம் எனக் கருத்து தெரிவித்து இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து 1972, மே திங்களில் தனக்குச் சுற்றறிக்கை ஒன்று வந்ததாக சென்னையில் உள்ள மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார். அதன்படி, வழக்கமாகிவிடக்கூடிய மருந்துகள், போதைப் பொருள்கள் (Psychotropic substances) விற்பனை குறித்து அதிக நாட்டம் செலுத்துமாறு இம்மாநிலத்தில் உள்ள மருந்துப் பொருள் ஆய்வாளர்கள் அனைவருக்கும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.*

No directions have been reeived from the Union Government in 1972 to keep frequent watch over the sales, of harmful drugs. The Drugs Controller, Madras, has however, reported that he had received a circular from the Drugs Controller, India, in May 1972, suggesting that a watch may be kept over the sale and distribution of preparations of Methaqualone including Nandrax (of Messrs Roussel Pharmaceuticals, India Limited Bombay), especially with reference to the bonafides of the prescriptions against which the supplies are made, and that in pursuance thereof, all the Drugs Inspectors in this State have been instructed to exercise greater control over the sale of habit forming and psychotropic substances.



## இணைப்பு II

*[679-ம் பக்கத்தில் 658-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

*கால்நடைப் பராமரிப்புத் துறையிடமிருந்து கோழிப் பண்ணைப் பணிகள் முழுவதையும் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம், கீழ்க்கண்ட வளர்ச்சித் திட்டங்களை கப்பலூர் கோழி வளர்ச்சிப் பண்ணையில் மேற்கொள்ளக் கருதியுள்ளது :—*

*கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையத்தை விரிவுபடுத்தல்.—கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையம் முதலில் ஆண்டொன்றுக்கு 60,000 கோழிக் குஞ்சுகளை (மாதமொன்றுக்கு 5,000 கோழிக் குஞ்சுகள்) பொரிக்கும் திறனுடையதாக இருந்தது. இது ஆண்டொன்றுக்கு சுமார் 2.4 லட்சம் குஞ்சுகளை (மாதமொன்றுக்கு 20,000 கோழிக் குஞ்சுகள்) பொரிக்கும் திறனுடையதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்பணி முன்பே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. முன்னர், மாதமொன்றுக்கு 5,000 கோழிக்குஞ்சுகள் பொரிக்கப்பட்டு வந்ததற்கு மாறாக தற்சமயம் மாதமொன்றுக்கு 12,000 கோழிக் குஞ்சுகள் பொரிக்கப்பட்டு வருகின்றன. மாதமொன்றுக்கு 20,000 கோழிக் குஞ்சுகள் என்ற இலக்கை இவ்வாண்டுக்குள் அடையமுடியும்.*

*கலப்பு இரைப் பிரிவு.—கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழக நிறுவனங்களுக்கு மட்டுமல்லாமல் கோழி வளர்ப்பவர்களுக்காக குறிப்பாக சிறு உழவர்களுக்கு வேண்டியுள்ள கோழி இரைகளின் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு மாதமொன்றுக்கு 500 டன்கள் வீதம் தயாரிக்கும் கலப்பு இரைப் பிரிவு அமைக்கும் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதற்கு மூலதனச் செலவாக ரூ. 2 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், சிறு உழவர்கள் வளர்ச்சி அமைப்பு உதவியுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் மாதமொன்றுக்கு 1,000 டன்கள் தயாரிக்கும் திறனளவு கொண்ட கலப்பு இரைப் பிரிவு அமைக்கும் பணி இப்பொழுதுதான் முடிக்கப்பட்டு வருகிறது. சில புதிய வகை இயந்திரங்கள் இந்தப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வருவதால் சென்னையில் உள்ள புதிய பிரிவு சிறிது காலம் செயல்படுவதைக் கவனித்துப் பிறகு கப்பலூரில் உள்ள கலவை இரைப் பிரிவுக்கு தொழில் நுட்ப அனுமதி கொடுக்கப்படும். அப்போதுதான் புதிய இயந்திரங்களை கப்பலூரிலும் பயன்படுத்த முடியும்.*

***கோழியின் வளர்ச்சிப் பிரிவுகளை விரிவுபடுத்தல்.***—முட்டைகள் அடைகாக்கப்பட்டு குஞ்சு பொரிக்க வேண்டிய கோழி முட்டைகளை யந்திரங்களிலிட்டுக் குஞ்சு பொரிக்கும் தேவை அதிகரித்து வருவதை நிறைவு செய்யவும், புதிய இனக் கோழிகளை வளர்ப்பதற்காகவும், தற்போது உள்ள கோழிகளின் எண்ணிக்கையை 2,000-லிருந்து 5,000 கோழிகளாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டு இத்திட்டம் நடைபெற்று வருகிறது. தேவைப்படும் கூடுதல் இடவசதி முதலியவற்றை அளிப்பதன் மூலம் இவ்வாண்டு இச்சாதனை எய்தப்படும்.

***விற்பனை நடவடிக்கைகள்.***—கப்பலூரில் முட்டைகளைச் சேமிக்கும் வசதியினை விரிவுபடுத்துவதன் மூலம் மதுரையில் விற்பனை நடவடிக்கைகளை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. "சமைப்பதற்குப் பக்குவப்படுத்தப்பட்ட கோழியைத்" தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அப்பொழுதுதான் "உறைய வைக்கப்பட்ட கோழியை" மதுரையில் விற்க முடியும். அவர்களிடம் உற்பத்தியாகும் முட்டைகளுக்கும் கோழி இறைச்சிக்கும் உடனடியாக விற்பனை தேடித்தரவும், அதே சமயத்தில் வருடம் முழுவதும் நியாயமான விலையில் மதுரைமாநகர மக்களுக்கு முட்டைகளையும் கோழி இறைச்சியையும் வழங்கவும் இந்த விற்பனை வசதிகள் உதவி புரிகின்றன.

***அடிப்படை வசதிகள்.***—மேற்கண்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாகத் தண்ணீர் வழங்குவது சீர்படுத்தப்பட்டு வருகிறது. முட்டை பொரிப்பதைத் தொடர்ந்து செயல்படுத்துவதில் தடையிருப்பதைத் தவிர்க்க பதிலி ஜெனரேட்டர் வைப்பதன் மூலம் மின்வசதி வழங்கும் நிலைமை சீர்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறு மின்வசதி இரண்டு மணி நேரம் தொடர்ந்து தடைப்படுமானால் ஒரு சமயத்தில் ஆயிரக்கணக்கான முட்டைகள் குஞ்சு பொரிக்க வைக்கப்படுவதால் கோழிக் குஞ்சுகள் உற்பத்தியை இது பெரிதும் பாதிக்கும்.

The Tamil Nadu Poultry Development Corporation which has taken over the Poultry activities from the Animal Husbandry Department has proposed to take up the following expension programmes at the Poultry Extension Centre, Kappalur.

*Expansion of Hatchery.*—The original capacity of the Hatchery was to produce 60,000 chicks per year (5,000 chicks per month). This is now being expanded to produce about 2.4 lakhs chicks annually (20,000 chicks per month). The work has already been taken up and from the original production of 5,000 chicks per





month, about 12,000 chicks per month is now achieved and the target of 20,000 per month will be reached in the course of this year.

*Erection of a Feed Mixing Unit.*—In order to meet the requirements of the Poultry feed, not only to the units of the Corporation, but also to meet the requirements of feed for Poultry farmers in the area particularly the small farmers, a scheme for establishment of Feed Mixing Unit to produce about 500 tonnes feed per month has been sanctioned under aid from the Small Farmers Development Agency at an estimated cost of Rs. 2 lakhs by way of Capital expenditure. A new feed mixing unit at Madras with a capacity to produce about 1,000 tonnes per month is just being completed and as certain new type of machineries are used at this unit, the Feed Mixing Unit at Kappalur is awaiting Technical Clearance to watch the working of the new unit at Madras for some time so that such new machineries can be used at Kappalur also.

*Expansion of Poultry Breeding Units.*—In order to meet the increased demand for hatching eggs and also to introduce new strains of birds, it is proposed to increase the present strength of layers of about 2,000 layers to 5,000 layers and this is also under progress. This will also be achieved this year by putting up necessary additional accommodation, etc.

*Marketing Activities.*—It is proposed to increase marketing activities at Madurai by expanding the facilities for storage of eggs at Kappalur. It is also proposed to prepare " dressed chicken " so that " frozen chicken " may be sold at Madurai. These marketing facilities will help the small farmers by providing ready outlet for the eggs produced by them and also for their culled birds and at the same time ensure steady supply of eggs and Poultry Meat to the citizens of Madurai at reasonable cost throughout the year.

*Infrastructure facilities.*—To facilitate the above activities the supply of water is being improved. The electricity position is also being improved by providing a stand-by generator in order to avoid interruption in the continuous process of " Chick hatching " as lack of electricity even for two hours continuously will affect the production of chicks as thousands of eggs will be " under-hatch " at a time.

## இணைப்பு III

[ 745 ம் பக்கத்திலுள்ள அடிக்குறியைக் காண்க]

### மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் உரை.

கோரிக்கை 29—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும்.

பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் '' கோரிக்கை 29—தொழிற்சாலைகளும் தொழிலாளர் நலனும் '' என்பதன் கீழ், ரூ. 3,68,33,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென்று முன்னுரைக்கின்றேன். இக் கோரிக்கையில், வேலைதேடித்தரும் பணிகளுக்கும் கைவினைப் பணியாளர் பயிற்சிக்கும் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் சேர்ந்துள்ளது. தொழிலாளர் நலத் துறை, வேலைவாய்ப்பு-பயிற்சித்துறை ஆகிய துறைகள் 1973—74-இல் ஆற்றிய பணிகளை விவரிக்கும் ஆய்வுரை பேரவையின்கண் வைக்கப்பட்டுள்ளது. அதனைக் காணுமாறு மதிப்பிற்குரிய உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர் நலத் துறை கொள்கையின் முக்கியமான சில அம்சங்கள் பற்றியும் சாதனைகள் குறித்தும் இப்போது சுருங்கச் சொல்லி விளக்க விரும்புகிறேன்.

' தொழில் துறையில் அமைதி நிலவ வேண்டும்; தொழில் செழித்து வளரவும், தொழிலாளர் நலன் ஓங்கவும் உகந்ததொரு சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும் ' என்பதே தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலக் கொள்கையின் அச்சாணியாக விளங்குகிறது. தொழிலதிபர் தொழிலாளர் ஆகிய இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த முழுவாய்ப்பு அளிக்கப்படுகின்ற அதே சமயத்தில், தொழில் துறை அமைதி குலையும்போது அல்லது உற்பத்தி தடைப்படும்போது அந்நிலையில் அரசு தலையிட்டு அமைதி மீண்டும் நிலைபெறச் செய்யவேண்டியது அரசின் கடமையாகும்; ஏனெனில், தொழிலாளர் நலன், தொழில் துறையின் நலன் மட்டுமின்றி சமுதாய நலனும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது; அத்தகைய சூழ்நிலையில், இம் மூவகையினரின் நலனுக்கும் தீங்கு விளையக் கூடுமென்றிருக்கையில் அரசு வாளா பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தொழிலாளர் பாதுகாப்பிற்கும், அவர் தம் சுகாதாரம், நலன் இவற்றைக் காக்கும் பொருட்டும், தனியார் துறை, பொதுத் துறை இவற்றிற்கிடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்துமாறு செய்தலும் அரசின் பொறுப்பாகும்.



தொழிலாளர் நலத் திட்டத்தை உருவாக்கியதன் மூலம் தொழிலாளர் சமுதாயத்தினரின் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்கான நமது திட்டத்தின் வாயிலாக நமது தொழிலாளர் நலக் கொள்கைக்கு நாம் புதியதொரு பரிமாணம் அளித்துள்ளோம்; தற்போதுள்ள தொழிலாளர் நலச்சட்டங்களின் செயல் வரம்பிற்குள் வராத துறைகளில் தொழிலாளருக்கு வசதிகளைச் செய்து தர விழைவது நமது தொழிலாளர் நலத் திட்டம் ஆகும். வருங்காலத்தில், இத்திட்டம், தொழிலாளர்களுக்கு எல்லா வித நன்மைகளையும் அளிக்கின்ற வரப்பிரசாதமாக அமையும்; வாழ்வில் மகிழ்ச்சியும் நலமும் நிறைந்திருக்க, சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் அவர்களுக்குப் பல்வகை வாய்ப்புகளை ஏராளமாக அளிக்கும் என்பதில் நான் முழு நம்பிக்கை வைத்துள்ளேன்.

அரசு தனது தொழிலாளர் நலக் கொள்கைகளை உருவாக்குவதிலும், திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், பெயர்பெற்ற தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரது ஆலோசனையையும் அனுபவ மொழிகளையும் மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் மூலமாகப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்கிறது. மாநில அளவில் தொழிலாளர் நலன் தொடர்பான கொள்கை விஷயங்கள் அனைத்திலும் மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவே தலைமை ஆலோசனைக் குழுவாகும்.

1973 ஆம் ஆண்டின் முதற்பாதியிலே செயலில் இருந்த மின்விசை வெட்டின் விளைவாக தொழில் நிறுவனங்கள் யாவும் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தன. அந்த நிலைமையிலும், 1973 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தில் தொழிலாளர் நிலைமை சீரடைந்தது என்பது தெளிவாகப் புலப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் மகிழ்வுடன் கூறிக் கொள்கிறேன். 1973 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கதவடைப்புகள் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 314 ஆகும்; இந்த ஆண்டில் இதனால் இழப்பு ஏற்பட்ட மனித ஆற்றல் நாட்கள் 20,56,995 ஆகும். முந்திய ஆண்டில் அதாவது 1972 ஆம் ஆண்டில் நிகழ்ந்த கதவடைப்புகள் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 356; இழக்கப்பெற்ற மனித ஆற்றல் நாட்கள் 37,18,448 ஆகும். ஆக, நிலைமை நம்பிக்கையளிக்கத்தக்க வகையில் சீரடைந்துள்ளது என்பதற்கு இது நிச்சயமான அறிகுறியாகும். எனவே இத்தகைய வரவேற்கத்தக்க மாறுதலுக்குப் பெரிதும்

காரணமாக இருந்துள்ள தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகிய இருதரப்பினரின் ஒத்துழைப்பை உளமாரப் பாராட்டுகிறேன் என்பதை ஈண்டு நான் கூறிக் கொள்ள விழைகிறேன்.

இம்மாநிலத்தில் உள்ள பஞ்சாலைகளின் நிர்வாகத்தினர், அவர்தம் தொழிலாளர்கள் ஆகிய இருதரப்பினரிடையே 9—3—1972ஆம் நாளில் ஏற்பட்ட உடன்படிக்கையை ஒட்டி, தொழிலாளர் நீதிமன்றத்தின் தலைமை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற திரு வி. பி. அருணகிரி அவர்களின் தலைமையில் பஞ்சாலை இணக்கக் குழுவொன்றை அரசு அமைத்தது. குழு உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து இல்லாததால், குழு தனது அறிக்கையை அளித்தபொழுது அதுபற்றி குழுத் தலைவரே தனது பரிவுரைகளை அளிக்க வேண்டியிருந்தது. அதன்மேல், அவரது பரிவுரைகளை ஏற்றுக்கொள்ளாதவையான பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்கள், ஊதியமும் படிகளும் உயர்ந்த வீதத்தில் அளிக்கப்பட வேண்டுமென்று கோரி, வேலைநிறுத்தம் செய்வதாக அறிவிப்புகள் கொடுத்தன. தொழிலாளர் நல ஆணையாளர் சமரச நடவடிக்கைகளைத் தொடங்கினார். ஆனால் ஒப்பந்தம் எதுவும் ஏற்பட முடியாமற்போனதால், அடிப்படை ஊதியங்கள், அகவிலைப்படிகளைத் திருத்தியமைப்பது குறித்த தகராறுகளை அரசு 31—1—1974 அன்று தொழில் தகராறு குறித்த தனி நடுவர் மன்றம் ஒன்றுக்கு அனுப்பி வைத்தது. உயர்நீதிமன்ற நீதிபதியாகவிருந்து ஓய்வு பெற்ற திரு ஆர். சதாசிவம், தொழில் தகராறு குறித்த தனி நடுவர் மன்றத்தின் நடுவராக மூன்று மாத காலத்துக்கு நியமிக்கப்பட்டார். இருந்தபோதிலும், தொழிலாளர்கள் தாங்கள் விடுத்திருந்த வேலைநிறுத்த அறிவிப்பின்படியே, 1—2—1974இலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர்.

இருந்தபோதிலும், இருதரப்பு உடன்பாடு ஏற்படுவதற்குரிய சாத்தியக் கூறுகளைக் குறித்து ஆராய்ந்து பார்க்கவியலும் பொருட்டு, இருதரப்பினர் பேச்சுவார்த்தை நடைபெற ஏற்பாடு செய்யுமாறு, தொழிலாளர்களின் பிரதிநிதிகள் என்னைக் கேட்டுக் கொண்டனர். அவ்வாறே பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பேச்சுவார்த்தைகளின் விளைவாக, இரு தரப்பினருக்கும் இடையே இசைவான ஒப்பந்தம் ஒன்று 28—2—1974 அன்று கையெழுத்தா



யிற்று என்பதையும், 1—3—1974இலிருந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டு தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒப்பந்தத்தின் மூலம், தொழிலாளர் ஒவ்வொருவரும் 1—1—1974 முதற்கொண்டு தமது மாத ஊதியத்தில் 30 ரூபாய் கூடுதலாகப் பெறுவர். பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலையும் வேறு சில ஆலைகளும் இந்த இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளவில்லை; அவை தொடர்பாக மேலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலை குறித்து 8—3—1974-ல் உடன்படிக்கை ஏற்பட்டது; 11—3—1974-ல் இருந்து வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

1973-ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட பெரிய தொழில் தகராறுகளில் முக்கியமான ஒரு சிலவற்றைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இவண் எடுத்துரைக்க விழைகின்றேன்.

1972–73 ஆம் ஆண்டுக்குரிய பணிக்கொடை பற்றி கோயம்புத்தூர் வட்டாரத்திலுள்ள பஞ்சாலைகளில் ஏற்பட்ட தகராறு இவ்வாண்டில் எழுந்த பெரிய தொழில் தகராறுகளில் ஒன்றாகும். தொழிலாளர் நல ஆணையாளர் இதுபற்றி இணக்கப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3)-வது பிரிவின் கீழ், 1973 அக்டோபர் திங்களில் இத் தகராறு குறித்து உடன்பாடு ஏற்படச் செய்தார்.

சென்னை, திருவொற்றியூரில் உள்ள ''விம்கோ' தீக்குச்சித் தொழிற்சாலையின் தொழிலாளர்கள், தங்களது ஊதியம், அகவிலைப்படி, பணிக்கொடை முதலியன திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும், தமது கோரிக்கைகளுக்கு ஆதரவாக 4–10–1972 முதல் வேலைநிறுத்தம் செய்தனர். அவ்வாறு வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 1,700 ஆகும். வேலைநிறுத்தம் நெடுநாட்கள் நீடித்தது; ஆனால், இறுதியில் தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் 10–6–1973 ஆம் நாளன்று, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3)-வது பிரிவின்கீழ் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியது. அதன்படி 11–6–1973 முதல் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. அங்கு இப்போது நிலைமை இயல்பாக உள்ளது.

[1974 மார்ச் 28

சிம்சன் தொகுதி நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகள் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் நன்கறிவர். அத்தகராறுகள் மாண்புமிகு முதல்வரவர்களின் பெருமுயற்சியால் தீர்த்து வைக்கப்பட்டன என்பதும், 1972 செப்டம்பரில் அதுபற்றி ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது என்பதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யாவரும் நினைவில் கொண்டிருப்பர். அவ்வொப்பந்தத்தின்படி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைகள் நடைபெறும் என்றும், ஆனால், அக்கால அளவில் அவர்களுக்கு முழு ஊதியமும் அகவிலைப்படியும் வழங்கப்படும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும், விசாரணை அதிகாரி தெரிவித்தவை பற்றி நிர்வாகத்தினர் செய்யும் முடிவு தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும், ஆனால், அம்முடிவுகளைச் செயற்படுத்து முன்னர், அவர்களது நேர்வுகளை முதல்வர் ஆய்வு செய்வார் என்றும் அவ்வொப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. நிர்வாகத்தினர் தமது விசாரணைகளை நடத்தி முடித்துள்ளனர். விசாரணை குறித்த முடிவுகள் தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. அம்முடிவுகள் முதல்வரால் ஆய்வு செய்யப்படவிருக்கின்றன.

தொழிலாளர் சமுதாயத்தில், நிறுவன அமைப்பைப் பெற்றிராத பிரிவினரின் உதவிக்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி இப்போது குறிப்பிட விழைகின்றேன். புதுடில்லியில், 1973-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் மத்திய அரசின் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரால் கூட்டப்பட்ட மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவிற்கிணங்க, பீடி தயாரிப்பு உட்பட புகையிலைத் தொழில்களில், தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை அரசு திருத்தியமைத்துள்ளது. மீண்டும் இவ்வாண்டில் பீடித் தொழிலாளருக்குக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைக்க கருதப்பட்டுள்ளது. வருவாய்த் துறை வாரிய உறுப்பினரான திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உழவுத் தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதியம் குறித்த ஆலோசனைக் குழுவின் பரிவுரைகளை ஏற்றுக்கொண்டு, 23—11—1973-லிருந்து, உழவுத் தொழிளாருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களையும் திருத்தியமைத்து, அரசு அறிவிப்புச் செய்துள்ளது.



1974 மார்ச் 28]

கீழ்காணும் தொழில்களில் உள்ள தொழிலாளருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைக்கும் பொருட்டு அரசு ஆலோசனை குழுக்களை ஏற்படுத்தியுள்ளது:—

1. பொடி தயாரிப்புத் தொழில்.

2. வாசனைப் புகையிலை-தாம்பூலப் புகையிலை தயாரிப்புத் தொழில்.

3. உள்ளாட்சி மன்றங்களில் உள்ள வேலைநியமனங்கள்.

4. சாலை போடுவதிலும், கட்டடங்கள் கட்டுவதிலும், கல் பொடியாக்குவதிலும், கல் உடைத்தலிலும், சாலை பராமரிப்புகளிலுமுள்ள வேலை நியமனங்களும் கல் தோண்டி எடுக்குமிடங்களில் கல் உடைப்பதிலும், கல் பொடியாக்குவதிலும் உள்ள வேலை நியமனங்களும்.

உணவகங்களிலும் சிற்றுண்டிச்சாலைகளிலும் வேலைப் பார்க்கும் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுப்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனைக்குழு ஒன்றை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. (1) அச்சகங்கள், (2) கடைகள், வாணிக நிறுவனங்கள், (3) திரைப்பட அரங்குகள் ஆகிய வற்றில் வேலை நியமனங்களுக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுக்க இயலும் பொருட்டு இந்த வேலைகளையும் குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விவர அட்டவணையில் சேர்த்துக்கொள்வது என்ற தமது கருத்தைத் தெரிவித்து வரைவு அறிவிப்புகளை அரசு வெளியிட்டுள்ளது.

1973 நவம்பர் திங்களில் புது டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நான் பெற்றேன். இந்த மாநாட்டில், வேலையின்மையால் செய்யப்படும் தற்காலிக வேலை நீக்கத்துக்குத் தாராளமாக இழப்பீடு வழங்குதல், பணிகொடை நிதியொன்றை நிறுவுவது பற்றிப் பரிசீலிப்பதற்கான குழுவை நியமித்தல் தொழில் துறையில் இயந்திர முறையைக்கொண்டு வரும் பிரச்சினை ஆகியவை தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. வேலையின்மை காரணமாகச் செய்யப்படும் தற்காலிக வேலை நீக்கத்துக்கு இழப்பீடு கொடுப்பதற்கான விதித்துறையைத் தாராளமாக்குவதற்காக எடுக்கப்பட்ட முடிவைத் தொழிலாளர் வரவேற்பர் என நான் உறுதியாக நம்புகிறேன்.

தொழிலாளருக்குச் சட்ட உதவி அளிப்பது குறித்துப் பரிசீலனை செய்வதற்கான ஒரு நபர் குழுவின் முடிவிற்கிணங்க, சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களில், அரசு, தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் மூன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதி அளித்துள்ளது. இக்குழுக்கள் தொழிலாளருக்கும் சிறு தொழிற் சங்கங்களுக்கும் தங்களது குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறை பற்றியும், இடர் தணிப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அவர்கள் அணுகவேண்டிய மன்றம் பற்றியும், அவை தொடர்பான விஷயங்கள் பற்றியும் அவர்களுக்கு ஆலோசனை அளித்து அவசியமான உதவிகள் அனைத்தையும் செய்யும். இக்குழுக்கள் தொழிலாளர் பிரதிநிதிகளின் முறையீடுகளைக் கருணையோடும் பரிவுணர்ச்சியோடும் கேட்டு அவர் தம் குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அவர்களுக்கு எடுத்துரைக்கும். ஒவ்வொரு குழுவுக்கும் ஓய்வு பெற்ற நீதித்துறை அதிகாரி ஒருவர் இருப்பார். அவர் நடுவர் மன்றத் தீர்ப்புகளுக்கு விடப்பட்ட தொழில் தகராறுகளை முடிவு செய்வதில் அனுபவம் வாய்ந்தவராயிருப்பார்; மேலும், அக்குழுவில் ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரி ஒருவரும் இருப்பார். அவர் இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்திய அனுபவம் வாய்ந்தவராயிருப்பார். இவ்விருவரைத் தவிர, அக்குழுவிற்கு அவசியமான சார்நிலைப் பணியாளர்களும் நியமிக்கப்படுவர்.

**14—1—1974**-ல் புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்டது என்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர், தொழிலாளர் நலச் சட்டங்களை செயற்படுத்தும் பணியாளர்கள் எண்ணிக்கையையும், இணக்கப் பேச்சுவார்த்தை நடத்துதல் குறித்து பணியாளர்கள் எண்ணிக்கையையும் உயர்த்தும் நோக்குடன், புதுக்கோட்டையில் தொழிலாளர் நல அதிகாரி ஒருவர். தொழிலாளர் நல ஆய்வாளர் ஒருவர், தொழிற்சாலைகள் ஆய்வாளர் ஒருவர் ஆகியோர் நியமிக்கப்படுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. புதுக்கோட்டையில் மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கவும் அரசு அனுமதித்துள்ளது.

தொழிலாளர் நலச் சட்டங்களையும் எடைகள்-அளவைகள் குறித்த சட்டங்களையும் செயற்படுத்துவதற்கான பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற



முந்திய சட்டமன்ற கூட்டத் தொடரின்போது இப்பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் வெளியிட்ட விருப்பங்களுக்கிணங்கவும், 1972 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளது ஆண்டு மாநாட்டில் செய்த முடிவிற்கிணங்கவும், உதவித் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் பதவிகள் 50-க்கு அரசு அனுமதித்துள்ளது என்பதை உங்கள் அனைவருக்கும் அறிவிப்பதில் மகிழ்ச்சியுறுகிறேன். இந்தத் தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் அதிகார வரம்பானது அவர்களிடையே உள்ள பணிச்சுமை, நியாய அளவில் பகிர்ந்தளிக்கப்படும் வண்ணம் ஏற்கவாறு திருத்தியமைக்கப்பட்டும் உள்ளது.

தொழிலாளர் நல ஆணையாளருக்கு இணக்கப் பேச்சு வார்த்தைகள் தொடர்பான பணிகளிலும், நிர்வாகப் பணிகளிலும் உதவும் பொருட்டு, துறையின் தலைமையிடத்தில் தொழிலாளர் நல இணை ஆணையாளர் பதவி ஒன்றுக்கும் அரசு அனுமதித்துள்ளது.

தொழிற் சங்கத் தலைவர்களை உருவாக்கவும், தொழிலாளர் நல அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், தொழில் துறையில் உள்ள தொழிலாளர் நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், துறையின் அதிகாரிகளுக்கு நினைவு கூர் பயிற்சிகள் நடத்தவும் ஆகிய இந்த முக்கிய குறிக்கோள்களுடன் சென்னையில் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ''தமிழ்நாடு தொழிலாளர் நல ஆய்வு நிறுவனம்'' ஒன்றை அரசு அமைத்தது. இந்த நிறுவனம் நடத்திய தொழிற்சங்கத் தலைவர்களுக்குரிய முதலாவது பயிற்சி வகுப்பு 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6 ஆம் நாளன்று தொடங்கி 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாளன்று முடிவுற்றது. இத்தகைய அடுத்த பயிற்சி வகுப்பு 2—1—74 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. ''தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம்'' என்னும் பெயருள்ள தொழிலாளர் நல சிறப்புச் சட்டமொன்று இயற்றப்பட்டதையும், மாநில நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயுடன் தொழிலாளர் நல நிதி ஒன்று அமைக்கப்பட்டதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். தொழிலாளர் நல நிதிக்கு தொழில் அதிபர்களிடமிருந்தும், தொழிலாளர்களிடமிருந்தும் பங்குத் தொகைகள் வசூலிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்குச் சட்டபூர்வமான இடத்தையும் அளிக்கிறது. இச்சட்டம் 1973 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது.

இச்சட்டத்தின்கீழ், தொழிற்சாலைகள் ஆய்வாளர்களும் மலைத் தோட்டங்கள் ஆய்வாளர்களும் தொழிலாளர் நல ஆய்வாளர்களும் இச்சட்டப்படிக்கான ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நிதிக்கு அரசு, 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கியுள்ளது. இதைத் தவிர, இந்நிதிக்கு, இதுவரை, 14 இலட்சம் ரூபாய் வரப் பெற்றுள்ளது. இந்நிதியை நிர்வகிப்பதற்காக, தொழிலாளர் நல வாரியம் ஒன்றை சட்டப்படி அரசு விரைவில் அமைக்கும்.

இத் திட்டத்தின்கீழ், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய ஊர்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தொழிலாளர் நல நிலையங்களோடு, மற்றுமொரு நல நிலையம் 6—12—1973 ஆம் நாளிலிருந்து வட சென்னையில் தொடங்கப்பட்டது. வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கான வசதிகளுக்கு இந்நிலையங்களில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையங்களில், பெண் தொழிலாளர்கள், தொழிலாளர்களின் மனைவியர் ஆகியோருக்குத் தையல் வகுப்புகளும், தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பாலர் பள்ளிகளும் சமூக நலத்துறையின் ஒத்துழைப்புடன் நடத்தப்படுகின்றன. இத்தகைய நிலையங்களை இம்மாநிலத்தில் ஏனைய இடங்களில் அமைக்கவும், பாட்டாளி மக்களுக்குத் தேவையான கல்வி, மனமகிழ் வசதிகளை நிறைவு செய்ய இந்நிலையங்களின் நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் அரசு பரிசீலித்து வருகிறது.

1973 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் 26 ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைப் பின்பற்றி, மூடப்பட்டு பின்னர் திறக்கப்பட்டு, குத்தகையில் அல்லது வேறுவிதமாக நடத்தப்படும் தொழில் நிறுவனங்கள் குறித்து எழும் பிரச்சினைகளை ஆய்ந்தறியவும், அதன் மூலம் பாதிக்கப்படும் தொழிலாளர்களின் பணி உறுதியைப் பாதுகாப்பதற்குத் தேவையான பரிவுரைகளைச் செய்யவும், தொழிலாளர் நல உதவி ஆணையாளர் ஒருவருடன் கூடிய ''தனி நபர் ஆணைக்குழு'' ஒன்றை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு சென்னையில் 1974 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5, 6 ஆம் நாட்களில் மீண்டும் கூடியது. மாநிலம் முழுவதும் நடைபெற்ற பஞ்சாலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தின்போது இக்குழு கூடியதால் அப்பிரச்சினை குறித்து விவாதிக்கவே அதிக நேரத்தை இது எடுத்துக்கொண்டது. இருப்பினும்,





சுமுகமான தொழில் உறவை ஊக்குவிப்பதற்காகப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றைத் தொடங்குதல், குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விவர அட்டவணையில் அங்காடி இடங்கள், அவை போன்ற பணியிடங்களில் பணிபுரியவும் சுமையாட்களைச் சேர்த்தல், தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், ஊதியம் வழங்கல் சட்டம், குறைந்த அளவு ஊதியச் சட்டம் ஆகியவற்றின்கீழ் உரிமைக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கான கால வரையறையை அதிகப்படுத்துவது போன்ற குறிப்பிட்ட சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

இம்மாநிலத்தில், தமிழ்நாடு தொழிற்சாலைத் தொழிலாளர் ஊட்டச் சத்துணவுத் திட்டம் 1973 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது, தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் வயதடையா குழந்தைகளுக்கும், சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சரிவிகித சீருணவு வழங்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம், தற்போது 92 தொழிற்சாலைகளிலும் மலைத் தோட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. சுமார் 23,781 பேர் இத் திட்டத்தினால் பயனடைகின்றனர்.

தொழிற்சாலைகளில் பாதுகாப்பு-உற்பத்தித் திறன் குறித்த கருத்தை, தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் தொடர்ந்து பரப்பி வருகிறது. ஆசியாவின் உற்பத்தித் திறன் ஆண்டு ''நம்புறுதியான தரப் பொருள்'' குறித்து செய்தித் திரைப்படம் ஒன்று, தமிழ்நாடு செய்தித் திரைப்பட வெளியீட்டு நிறுவனத்தில் 20,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத் தொகைக்கு அரசு வகை செய்துள்ளது.

தமிழ்நாடு எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தை, தொழிலாளர் நலத்துறையின் ஆய்வுப் பிரிவு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்த எடைகள்-அளவைகள் சட்டத்தை டாக்ஸி மீட்டர்கள், ஆட்டோ ரிக்ஷா மீட்டர்கள் ஆகியவற்றுக்கும் நீட்டிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எடைகள்-அளவைகள் சட்டத்தை, இரயில்வே, அஞ்சல்-தந்தித் துறைகளில் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை, சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் பணிந்தனுப்பியுள்ளார். அது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. வர்த்தகம், வாணிபத்தில் முறைகேடான செயல்களைத் தடுக்க,

[1974 மார்ச் 28

எடைகள்-அளவைகள் சட்டத்தின்கீழ் திடீர் சோதனையிடும் முனைப்புத் திட்டம் ஒன்று ஆய்வாளர் அலுவலகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

இத் திட்டம், தற்போது தருமபுரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் செயல்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 39 பெரிய தொழில் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் இத் திட்டத்தினால் பயனடைகின்றன. தற்போது, அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைகள் 3, நிலையியல் மருந்தகங்கள் 94, இயல் ஊர்தி மருந்தகங்கள் 8, பகுதி நேர மருந்தகங்கள் 3, தொழிலதிபர் பயன்பாட்டு மருந்தகங்கள் 3 ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம், இம்மாநிலத்திலே, 4,03,500 குடும்பங்களில், 15,65,600 பேர் பயனடைகின்றனர். சென்னை மாநகர், அதன்புற நகர்ப்பகுதிகள், கோயம்புத்தூர் நகர், அதன் புறநகர் பகுதிகள், மதுரை மாநகர், அதன் புறநகர் பகுதிகள், கோவில்பட்டி ஆகியவற்றிலுள்ள ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்கள், அவர்களது குடும்பத்தினருக்கு மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது உட்பட முழு மருத்துவப் பாதுகாப்பு அளிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள எஞ்சிய பகுதிகள் அனைத்திலும், காப்புறுதி செய்து கொண்டுள்ள தொழிலாளர்களுக்கு முழு மருத்துவப் பாதுகாப்பு அளிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அவர்களது குடும்பத்தினர் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது தவிர ஏனைய மருத்துவ வசதிகள் அடைந்துள்ளனர்.

இத் திட்டத்தின்கீழ், ஆண்டொன்றுக்கு, தொழிலாளர் ஒருவர் பெறும் மருத்துவ வசதிக்கான செலவு ரூ. 50 என்ற உச்ச வரம்பினை 1—4—1970 ஆம் நாளிலிருந்து அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம் வரையறுத்தது. இந்த உச்சவரம்பிற்கு மேல் ஆகும் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்கவேண்டியுள்ளது. இந்த அரசு, மத்திய அரசுக்குத் திரும்பத் திரும்ப செய்து கொண்ட முறையீடுகளுக்குப் பிறகு,



1794 மார்ச் 28)

தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகம், உச்சவரம்பு வீதங்களை மூன்று முறை உயர்த்தியது. 1—4—1973ஆம் நாளிலிருந்து செயல்படுத்தப்படும் மருத்துவச் செலவு குறித்த உச்சவரம்பு வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| வரையறுத்த மருத்துவ வசதி. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 63 ரூபாய். |
| விரிவான மருத்துவ வசதி .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 67 ரூபாய். |
| முழு மருத்துவ வசதி .. | தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு 80 ரூபாய். |

மருந்து, மருந்துப் பொருட்கள், கட்டுக்கட்டும் பொருள்கள் குறித்துத் தொழிலாளர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு அதிகமாக ஆனால் 45 ரூபாய்க்கு குறைவாக மாநில அரசுக்கு ஏற்படும் எந்தவொரு செலவும், உச்ச வரம்புக்கு அப்பால் சாதாரண விகிதாச்சாரத்தில் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தால் பகிர்ந்து கொள்ளப்படும். உச்ச வரம்புக்கும் அதிகமாக 1972–73 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கூடுதல் செலவான 111·00 இலட்சம் ரூபாய் இந்த அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது, 1973–74ஆம் ஆண்டில் 80 இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகத்தின் நீண்ட காலத் திட்டம் குறித்த குழுவின் அறிக்கை குறித்துக் கருத்துரை வழங்கும்போது, தொழிலாளர் மருத்துவ வசதிக்கான உச்ச வரம்பு வீதத்தை நீக்கவேண்டும்; உச்சவரம்பு இருக்கவேண்டுமாயின் தற்போதுள்ள விலைவாசி அளவில் குடும்பம் ஒன்றுக்கு 103 ரூபாய் என்று வரையறுக்கப்பட வேண்டும்; இந்த வரையறையானது விலைவாசி ஏற்றத்துக்குத் தகுந்தவாறு ஒவ்வொரு ஆண்டும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

[1974 மார்ச் 28

அரசுத் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டமானது, 1974-75 ஆம் ஆண்டில், கீழ்க்காணும் ஆறு புதிய பகுதிகளுக்கு நீட்டிக்கப்படும்.

(i) சென்னை புறநகர்ப் பகுதிகள் (அடையாறு, நந்தம்பாக்கம்).

(ii) மேலூர், மதுரை மாவட்டம்.

(iii) கரூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(iv) ஆத்தூர், சேலம் மாவட்டம்.

(v) ஆம்பூர், வட ஆர்க்காடு மாவட்டம்.

(vi) காரமடை, கோயம்புத்தூர் மாவட்டம்.

### தேசிய வேலைவாய்ப்புப் பணி நிறுவனம்.

சாதாரணமாக உள்ள 17 வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தவிர வேலைவாய்ப்புத் துணை அலுவலகங்கள் எட்டு, வேலைவாய்ப்புச் சிறப்பு அலுவலகங்கள் இரண்டு, சென்னை, அண்ணாமலை நகர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டிக் கழகங்கள் மூன்று ஆகியவை உள்ளன. இப்பணி நிறுவனம் வேலை தேடுபவர்களுக்கு வேலை தேடித் தருவது மட்டுமின்றி தொழில்கள் செய்ய வழி காட்டியாக இருந்தும், வேலைவாய்ப்பு ஆலோசனை வழங்கியும் வாழ்க்கைத் தொழில் பற்றிய தகவல்களைத் தந்தும் உதவுகிறது. உயர்ந்த கல்வித் தகுதிகள் பெற்றுள்ளவர்களுக்கென தொழில் சார்ந்த நிர்வாகத் துறை வேலைவாய்ப்புச் சிறப்பு நிறுவனம் ஒன்றும் உள்ளது. பர்மா-இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பி வரும் அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிப்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த அகதிகளை முறையாகக் குடியமர்த்தும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு அதற்காகவே நியமிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புத் தொடர்பு அதிகாரி, தனிப்பட்ட தொழிலதிபர்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் இதில் அக்கறையுள்ள நிறுவனங்களுடன் இடைவிடாமல் தொடர்பு கொண்டு வருகிறார். அரிசனங்கள் பழங்குடி மக்களைச் சேர்ந்தவர்களுக்குச் செம்மையான வழிகளில் வழிகாட்டி உதவியளிக்கும் கருத்துடன் 'பயிற்சியளித்து வழிகாட்டியுதவும் நிலையம்' ஒன்றை இந்திய அரசு சென்னையில் தொடங்கியுள்ளது. நந்தனத்திலுள்ள



1974 மார்ச் 28]

வேலைவாய்ப்பு சிறப்பு அலுவலகத்தோடு உடல் ஊனமுற்றவர்களின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கென்றே சென்னையில் உடலூனமுற்றவர்களுக்கான மாநில வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புத்தகம் ஆக்குதலில் பயிற்சியளிக்கும் பிரிவு ஒன்றினை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்தப் பிரிவும் கிண்டி தொழிற்பயிற்சி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றவர்களுக்குச் சிறப்பான முறையில் வேலைவாய்ப்பளிக்கின்ற தொழிலதிபர்களுக்கும் ஊனமுற்றவர்களில் சிறந்த தொழிலாளராக விளங்குவோருக்கும் மாநில அளவில் பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் அரசு ஏற்படுத்தியுள்ளது.

ஆட்படை ஊற்றம், அவ்வப்பகுதிக்குரிய தொழில் அமைப்பு முறை, தொழில்களின் வேலைவாய்ப்புகள் குறைந்திருத்தல் ஆகியவை தொடர்பாக ஆழ்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு, இயக்குநர் அலுவலகத்தில் ''வேலைவாய்ப்பின்மை குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்யும் பிரிவு'', (Depth Study Cell) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டத்தின்கீழ் குறித்த காலத்துக்கொருமுறை மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுடன், அவற்றுக்குத் துணையாக இந்த ஆய்வுகள் அமையும்; இவை ஆட்படை ஊற்றம் குறித்துத் திட்டமிடுதல், வாழ்க்கைத் தொழிலில் வழிகாட்டியுதவுதல், திட்டமிடுதல் ஆகியவற்றில் பயன்படும்.

### வேலைவாய்ப்பின்மை.

30—11—1973 ஆம் நாள் நிலவரப்படி, வேலைவாய்ப்பு அலுவலகங்களின் நடப்புப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 5,85,684 ஆகும்.

வேலைவாய்ப்பின்மை குறித்த பிரச்னையைச் சமாளிக்க, இந்த அரசு, இளைஞர் அணித் திட்டம், கிராமப்புற சாலைத் திட்டம், தொழில் பழகு சிறப்புப் பயிற்சித் திட்டம் முதலியவை போன்ற வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள், வேலைவாய்ப்பு சிறப்புத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்தி வருகிறது.

இதோடு, 1973-74 ஆம் ஆண்டில், இந்த அரசு 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்னுந் திட்டத்தின் கீழ் 37,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் 48 திட்டங்களை உருவாக்கி உள்ளது. இத் திட்டங்களில்,

படித்து வேலைவாய்ப்பின்றி இருப்போருக்கு உதவித் தொகையுடன் வேலைவாய்ப்பு; போக்குவரத்துக் கழகங்களின்கீழ் துணைக் கழகங்களை அமைத்தல், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், குழந்தை நல நிறுவனதாரர்களுக்குப் பயிற்சியளித்தல், தொழில் பழகு ஆசிரியர்கள் 10,200 பேருக்கு வேலைவாய்ப்பளித்தல், மீன்வள வளர்ச்சி முதலியவை அடங்கும். இவைகளில் ரூ. 6·65 கோடி செலவுள்ள 42 திட்டங்கட்கு ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

தொழில்நுட்ப ஆட்படை ஊற்றத்தைக் கிடைக்கச் செய்வது, விரைவான தொழில் வளர்ச்சிக்கு ஒரு அடிப்படை முன் தேவையாகும். இம்மாநிலத்தில் விரைவான தொழில் மயம் காரணமாகப் பயிற்சி பெற்ற கைவினைஞர்களின் தேவை பெருகிவருகிறது. இதனைச் சரிக்கட்ட, கைவினைஞர்களுக்கான பயிற்சி வசதிகள் கணிசமான அளவுக்கு, குறிப்பாக மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், பின்னர் வந்த ஆண்டுத் திட்ட காலங்களின்போதும் பெருக்கப்பட்டுள்ளன. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் வகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:—

(i) தொழில் பயிற்சிப் பள்ளிகளில் நிறுவனப் பயிற்சி.

(ii) 1961-ம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்கீழ் தொழில் பழகு பயிற்சி.

(iii) தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு நூலறிவுப் பயிற்சி (மாலைநேர வகுப்புகள்).

(iv) இடம் பெயர்ந்த பொற்கொல்லர், வடிவமைப்போர், கைத்தறி நெசவாளர்களுக்கு அவரவர் தொழில்களில் (பகுதிநேர) பயிற்சியளித்தல்.

இம்மாநிலத்தில், தற்போது 31 தொழிற்பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இதில், சென்னையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையமும் அடங்கும். சென்னையிலுள்ள நிலையம் மகளிருக்குப் பயிற்சியளிப்பதற்காகவுள்ளதாகும். பொறியியல் சார்ந்த முப்பது தொழில்களிலும், பொறியியல் சாராத ஆறு தொழில்களிலும் நிறுவனப் பயிற்சி (முழுநேர வகுப்புகள்) அளிக்கப்படுகிறது. இதோடு, தொழிற்சாலைத் தொழிலாளர்கள், தங்களது தொழில்களில் நூல் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காக, வாரத்தில் மூன்று நாட்களில்





மாலை 6 மணி முதல் 8 மணிவரை மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மொத்தமுள்ள 31 தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் ஐந்து பள்ளிகளிலே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1961-ம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்கீழ், தொழில் பழகு பயிற்சித் திட்டம் தற்போது இம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது, இம் மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு அதிகமான தொழில்களை ஏற்றுக் கொள்வதன்மூலம் பல்திறப்படுத்தப்பட்டுள்ளது, மேலும், கைத்தறி நெசவாளர்கள், வடிவமைப்போர், பொற்கொல்லர் ஆகியோருக்குப் பயிற்சியளிப்பதற்கான மாநிலச் சிறப்புத் திட்டம் ஒன்றும், மாலை நேரத்தில் பகுதிநேரப் படிப்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் நான்கில் செயல்படுத்தப்படுகிறது.

இம் மாநிலத்திலுள்ள கைவினைஞர் பயிற்சித் திட்டம், 1968–69-ம் ஆண்டு முடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் (Centrally sponsored) திட்டமாக இருந்தது. 1969–70-ம் ஆண்டிலிருந்து இத் திட்டங்களுக்கு மத்திய அரசு பொறுப்பேற்கும் முறை அற்றுப்போனது. முந்திய ஆண்டுத் திட்டக்காலங்களின்போது மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை முடிப்பதிலேயே நடப்பாண்டிலுள்ள திட்டங்களில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய திட்டங்களைத் தவிர, தொழில் நுட்பத் தகுதி பெற்றோரிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மையைப் போக்கும் ஒரு முயற்சியாக, தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறி வேலைவாய்ப்பற்றிருக்கும் பயிற்சி பெற்றவர்கள் தாங்களாகவே சொந்தத் தொழில்களை ஆரம்பிக்கக் கடன் வழங்கும் திட்டம் ஒன்றை, வேலைவாய்ப்பு பயிற்சித் துறை செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 30·00 இலட்சம் ரூபாய்க்கு மாநில அரசு வகை செய்கிறது.

கைவினைஞர் பயிற்சித் திட்ட வேலைகளுக்காக, 1974–75-ம் ஆண்டின் அரசு வரவு - செலவுத் திட்டத்தில், ரூ. 40·13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முடிவாக, இம்மாநிலத்தில், சிறப்பான தொழில் மேம்பாட்டுச் சூழ்நிலை உருவாவதற்குக் காரணமாயுள்ள இம் மாநிலத் தொழிலாளர், நிர்வாகத்தினர் ஆகியோரின் பிரதிநிதிகளுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள

விரும்புகிறேன். பொதுவாகத் தொழில் அமைதியைப் பாதுகாப்பதிலும், அதே சமயத்தில் தொழில் உற்பத்தியைப் பெருக்குவதிலும் எடுத்துக்கொண்ட கடின முயற்சியில் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்கிய பேரவை உறுப்பினர்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இம் மாநிலத்திலுள்ள பாட்டாளி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் தங்களது அறிவை எங்களுக்கு அளிப்பதோடு, வழிகாட்டவும் வேண்டுமென உறுப்பினர் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## How to use the Index.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporation etc., are consolidate under the said main headings, i.e.., ' Committee(s) ', ' Council(s) ' ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the papers laid on the Table of the House are indexed only under the main heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |

| | |
|---|---|
| C. A. St. | ... Calling Attention Statement. |
| Consid. | ... Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... Consideration of clauses of a Bill. |
| D. E. E. | ... Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S.D. | ... Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... Demands for Supplementary Grants. |
| G.A. | ... Governor's Address. |
| G.D. | ... General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... Half-hour Discussion. |
| Int. | ... Introduction stage of a bill. |
| L.A. | ... Legislative Assembly. |
| L.C. | ... Legislative Council. |
| M. | ... Motion. |
| P.M. | ... Privilege Motion. |
| R/Res. | ... Resolution. |
| St. | ... Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

## TENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

*25th to 28th March 1974*

VOLUME LII (Nos. 1 to 4)

### A


PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1974 75, Voting:

Irrigation
Public Works—Buildings
Public Works—Establishment and Tools and Plant
Roads and Bridges
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Roads and Bridges } 168, 178–185

ACT(S)—

Inam Abolition Act, lands .. .. .. 403–404

AGRICULTURE—

Cocoanut cultivation, Kanyakumari .. .. 674–679

Rice Research Station, Ambasamudram, details .. 144–146

Ryots, awards.. .. .. .. .. 141–143

Soil testing, workshop .. .. .. 674

Sprayers, grants for .. .. .. .. 143–144

A—*cont.*

PAGES

ALAGARSAMY, THIRU S.—

Budget, 1974–75, Voting :

Irrigation
Public Works—Buildings
Public Works—Establishment and Tools and Plant
Road and Bridges
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Roads and Bridges. } 170, 171, 227–231

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1974–75, Voting :

Industries
Handloom and Textiles,
Capital Outlay on Industrial Development
Administration of Justice
Jails } 439

Irrigation
Public Works—Buildings
Public Works—Establibshment and Tools and Plant
Roads and Bridges
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Roads and Bridges. } 171, 175,

Labour including Factories .. ..
Housing .. .. } 771

Police .. ..
Fire Services .. .. } 64–72

D. S. G. Final 1973–74, G. D. .. .. .. 708–714

Midday-meals scheme .. .. .. 121–126



PAGES

A—*cont.*

ANBAZHAGAN, THIRU K.—

Budget, 1974–75, Voting:

Industries
Handloom and Textiles
Capital Outlay on Industrial Development
Administration of Justice
Jails } 523

Labour including Factories .. .. .. 764
Housing

ANIMAL HUSBANDRY—

Sub-Centre, Sankari .. .. .. .. 679

ANNAMALAI, THIRU C. V. M.—

Budget, 1974–75, Voting :

Irrigation
Public Works—Builngs
Public Works—Establihment and Tools and Plant
Roads and Bridges
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Roads and Bridges } 241–245

ANNOUNCEMENT—

Business of the House .. .. .. 793

ARANGANAYAGAM, THIRU C.—

Budget, 1974–75, Voting :

Labour including Factories .. .. .. 772–775
Housing

ARANGANNAL, THIRU RAMA—

Budget, 1974–1975, Voting :

Labour including Factories .. 773
Housing ..

A—*cont.*

PAGES

ARUMUGAM, THIRU C.—
Budget, 1974-75, Voting :
Irrigation
Public Works—Buildings
Public Works—Establishment and Tools and Plant
Roads and Bridges
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Roads and Bridges .. 234-237

B

BALASUNDARAM, THIRU V.—
Adult Education Programme .. .. .. 395-397
Ryots, awards .. .. .. .. 141-143

BILL(S)
Appropriation Bill, 1974 Int. .. .. 742
Message from Governor .. .. .. 742
Appropriation (Vote on Account) Bill, 1974 Message from Legislative Council without amendment. .. .. .. .. 256
Motor Vehicles Taxation Bill, 1974 : Message from Legislative Council agreeing without recommendation .. .. 860

BOMMAN, THIRU K. H.—
Budget, 1974-75, Voting :
Police, Fire Services .. .. 72-75
Lake, Ootacamund, maintenance, .. .. 397-398
Naduvattam Diversion Weir Scheme, estimated cost .. .. .. .. .. 687



B—*cont.*

PAGES

BRIDGE—
Rajeswara Sethupathy, Manamadurai .. 401

BUILDING (S)—
Madurai Corporation estimated cost .. 147-149
Sivaganga Palace, repairs .. .. .. 126-128
Sub-taluk office at Ottapidaram .. .. 13

BUSES—
Route, Madras to Kadambathur .. .. 21-26
Route, Madras to Kannambakkam .. .. 20-21
Route, Salem to Kodumudi .. .. .. 26-27
Suburban routes, extension to Perandur .. 20

C

CALLING ATTENTION—
Cement, adverse effect on production due to coal shortage. .. .. .. .. .. 159-160
Distribution of Inam lands, Ambasamudram Taluk. .. .. .. .. .. 696-698
Foodgrains and foodstuffs, rise in price .. .. 699-703
Handloom Weavers, Karur, strike .. .. 418-420
S. I. E. T. Women's College, hardship to students on account of Collection of third term fees 156-158
Urdu Training Schools, closure and its consequences .. .. .. .. .. 694-696

CANALS—
Piramanur and Palayanur Canals, Thiruppuvanam, linking of .. .. .. .. .. 360

CEMENT.—
Production, adverse effect due to coal shortage (C. A.) .. .. .. .. .. 159-160

PAGES

C—cont.

CHAIR—

*Announcements* :

D. S. G. (Final), 1973-74, time for giving cut-motions .. .. .. .. .. 167

*Rulings and Observations* :—

*Absence of Opposition Members* :

Rising on a point of order, a Member of the Ruling Party pointed out that the Members of the Anna Dravida Munnetra Kazhagam were absent in the House, while a discussion on an important Demand like 'Labour' was taking place and enquired whether they had gone to Pondicherry where their Ministry had fallen

The Speaker ruled that it was not a point of order .. .. .. .. 515

Adjournment Motion :

*Accident to a Pallavan Transport bus near Tambaram* :

Consent was withheld as in the light of the explanation given by the concerned Minister, there was no need to adjourn the other business of the House .. .. 688-694

*Boiler leak in the Ennore Thermal Power Plant and consequent reduction in electricity production* :

Consent was withheld as in the light of the explanation given by the Minister, there was no need to adjourn the other business of the House to discuss this subject .. .. 27-3

*Allegation* :

Even when a Member made a generel allegation, he should take responsibility for it. Also, it was not prope: to speak about a person who was not in the House .. .. .. .. 459

PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Calling Attention Statement :

A Member who had given notice of call attention could put one or two questions to seek clarification on the statement made by the Minister and should not traverse a long number of years. .. .. .. .. .. 703

Debate :

*Interruptions*:

When a Member interrupted the speech of another Member, the leader of an Opposition Party requested the Hon. Speaker to direct that the former should not interrupt the speech of the latter. ..

The Hon. Speaker observed that he agreed that there should be no interruption, but; while speaking, the Member should be guarded in his speech .. .. .. .. .. 458

*Mode of addressing the Chair* :

When a Member addressed the Chair as 'Temporary Chairman', a member from the who was then occupying the Chair observed that there was no 'Temporary Chairman' and there was only a 'Chairman' .. .. .. .. 569

Demands For Grants :

*Allotment of time* :

When a Member requested that more number of days should be allotted for discussion on Demands, the Chair observed that he could not do anything in the matter and that only the Business Advisory Committee could decide about it. He added that it was not proper to raise it in the House .. .. .. .. 269

**CHAIR**—*cont.*

*Rulings and Observations*—cont.

**Demands** For Grants—*cont.*

*Supplementary grants, scope of discussion* :

With reference to a point of order raised by a Member that the discussion on a "Supplementary Budget" should be confined to the details of which it was composed, the Hon. Speaker observed that not only with regard to the Supplementary Budget but also with regard to any Demand for Grant, Members should confine themselves to the details of which it was composed and the Chair had to be very strict in that regard. Otherwise, there was a possibility of a No Confidence Motion being brought against him and he had also to look into that aspect of the matter. .. .. — .. 719–720

POINT OF ORDER :

*Allotment of seats to Pressmen* :

With reference to a point of order raised by a Member about the allotment of seats to Pressmen in the House, the Chair holding that it was not a point of order observed that the subject vested with the (Press) Advisory Committee and the House had nothing to do with it .. .. 156

*Allotment of Seat to Hon. Speaker during the discussion on the Motion for his removal from office.*

On 27-3-1974, rising on a point of order a Member of the ADMK stated that unless a separate seat was allotted to the Hon. Speaker, his reply to the discussion on the Motion for his removal would not go on record and enquired whether, therefore, a separate seat had been allotted to him. The Chairman who was in the Chair at that time observed that the question of allotment of a separate seat for the Hon. Speaker would arise



CHAIR—*cont.*

*Rullings and Obsrvations*—cont.

Points Of Order—*cont.*

*Allotment of Seat to Hon. Speaker dnring the discussion on the Motion for his removal from Office*—cont,

only after the House gave permission for the moving of the Motion for the removal of the Hon. Speaker from office and the requisite number of Members supported it .. .. 428

*Occupation of Chair by a Member from the Panel of Chairman during discussion of Motion for removal of Hon. Speaker*

A Member raised a point of order and stated that it was only the House which should give permission with regard to the *appointment* of the person who should sit in the Chair when the Motion for the removal of the Speaker was taken up for discussion and that the Deputy Speaker himself should not appoint a Member from the Panel of Chairman. The Chairman who was in the Chair observed that according to the rules of procedure, a Member from the Panel of Chairmen could sit and conduct the proceedings of the House and hence, there was no point of order. .. .. .. 429–430

*Passes for Speaker's Gallery* :

Rising on a point of order, a Member stated that a pass asked for by him for the Speaker's Gallery was not issued to him on the ground that it was full, whereas there were many seats still vacant. The Chair observed that the full complement of 35 passes had been issued to 35 persons and it was possible that some of them might not have turned up. .. .. .. 430–431

*Precedence for Motion for removal of Speaker from Office* :

A Member raised a point of order that the Motion for removal of Speaker hould have been taken immediately after the Question Hour and not after the consideration of the Call Attention

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulings and Observations—cont*

Points o forder—*cont.*

*Precedence for Motion for removal of Speaker from Office*—Cont :

Notice under Rule 41. The Chair observed that Call Attention Notices under Rule 41 were never included in the Agenda and hence, there was no point of order .. .. 433–435

*Proprtety of Speaker occupying the Chair When the Motion for leave to move a Motion for his removal Was vnder consideration*

Rising on a point of order, a Member stated that the Hon. Speaker himself against whom a Motion for leave to move a resolution for his removal was under consideration, could have put the Motion to the vote of the House and he need not have vacated the Chair at that stage as only when the resolution for his removal as such was under discussion, some other person should occupy the Chair .. ..

The Hon. Speaker observed as follows :—

'As per the practice obtaining in the Lok Sabha, it has been held that consideration by the House of a Motion for leave to move the resolution does not amount to consideration of the resolution for removal and it would not be unconstitutional if the Speaker or the Deputy Speaker, as the case may be, does not vacate the Chair while a Motion for leave to move the resolution for his removal is under consideration of the House. .. .... .. ..

However, as a matter of propriety and as rule 201 (1) of the Assembly Rules, provided that the Speaker or the Deputy Speaker, as the case may be, shall vacate the Chair even when a Motion for leave to move the resolution was taken up, he vacated the Chair accordingly and another person occupied it .. .. .. 431–434

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Rulingsang Observations*—cont.

Questions And Answers—

*Supplementary Questions :*

*Chair's permission to put a supplementary* :

If a Member thought that his supplementary was not fully answered by the Minister, the Member could put another supplementary only when he was allowed by the Chair to put it .. 677

*Relevancy* :

A supplementary should relate to the main question .. ... .. .. 134

Statements—

*Laying on the Table* :

When the attention of the Chair was drawn to the long time taken by a Minister to read his statement under Rule 41, the Chair observed that it was a convention to place lengthy statements on the table of the House and requested the Ministers to get such lengthy statements Printed and place them on the table of the House .. .. .. 702–703

CHELLADRUAI, Thiru V.—

X-ray unit for Omalur Hospital ... ... 135–136

CHELLIAH, Thiru Kuzha—

Budget, 1974–75, Voting :

Irrigation .. .. .. ...
Public Works-Buildings .. ..
Public Works-Establishment and Tools and Plant .. .. ... ..
Roads and Bridge .. .. ..
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works Buildings ..
Capital Outlay on Roads and Bridges. ...
} 194-200

PAGES

C—*cont.*

CHINNAVELLAYYAN, THIRU C.—
Kolli Hills, assignment of lands .. .. 402–403

COLLEGE(S)—
S.I.E.T. Women's College, hardship to students on account of Collection ofthird term fees (C.A.) .. 154–158

CO-OPERATIVE SOCIETIES—
Farmer's Co-op. Paper Mills, establishment .. 681–683
Vehicles, of Co-operative Societies use by clerks .. 683

D.

DAIRIES—
Milk coolers, supply .. .. .. 153–154

DAMS—
Naduvattam Diversion Weir Scheme, estimated cost 687

DENNIS, THIRU N.—
Animal husbandry sub-centre, Sankari .. 679
Applied Nutrition Programme, Kanyakumari district .. .. .. .. 406-407
Budget, 1974-75, Voting:
Irrigation .. .. .. ..
Public Works-Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plant .. .. .. ..
Roads and Bridges .. .. ..
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. } 169–176
Cocoanut cultivation, Kanyakumari .. .. 674–679
Cocoanut oil, price .. .. .. 683–686

PAGES

D—*cont.*

DENNIS, THIRU N.—*cont.*
Co-operative Societies' vehicles, use by clerks .. 683
Harmful drugs, sale .. .. .. 659–661
Housing Projects, Hindustan Housing Factory, assistance .. .. .. .. 407–409
Labourers, Beedi industry .. .. 411–414
Lands, Theosophical Society at Adyar .. 15–16
Tourism Development Corporation, promotion of Thiruvanmiyur as Tourist centre .. .. 131–133
Transport Staff, Training Institute .. .. 414–416

DEVARAJAN, THIRU M.—
Budget, 1974–75, Voting—
Police .. .. .. ..
Fire Services .. .. .. } 49–52

DEVENDIRAN, THIRU A.—
Sivaganga Palace, repairs .. .. 126–128
Training in fisheries, deputation .. ... 666

DISEASES—
Eye camp at Avadi, details .. .. 662–664

DISTRICT ADMINISTRATION—
Mayuram, renaming .. .. .. 146–147
Vellivizha Seerur, Ramanathapuram district .. 405–406

DURAISAMY, THIRU A.K.—
Budget 1974–75, Voting—
Industries .. .. .. ..
Handloom and Textiles .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice .. ..
Jails .. .. .. .. } 575–577

PAGES

D—*cont.*

DORAISAMY, THIRU S.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. .. .. } 524-529
Handloom and Textiles .. .. ..
Capital Outlay on Industrial Development .. ..
Administration of Justice .. ..
Jails .. .. .. .. ..

Budget, 1974-75, Voting—

Labour including Factorie's .. } 775-777
Housing .. } 778-781

E

EDMUND, THIRU G. R.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. .. .. } 447-471
Handlooms and Textiles .. .. .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice .. .. .. ..
Jails .. .. .. ..

Cement, adverse effect on production due to coal shortage—(C.A.) .. .. .. .. 159

Foodgrains and foodstuffs, price rise (C.A.) .. 699, 703

EDUCATION—

Adult Education Programme .. .. .. 395-397

ELECTRICITY—

Supply to Thummonakkundu Panchayat .. .. 687-688

EMPLOYEES—

Transport Staff, Training Institute .. .. .. 414-416



PAGES

E—*cont.*

ETTIAPPAN, THIRU P.—

Budget, 1974-75, Voting—

Irrigation .. .. .. } 211-218
Public Works-Buildings .. .. .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. .. ..
Capital Outlay on Irrigation .. .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

F

FAMILY PLANNING—

Intensive Family Planning Programme, continuation 136-137

FINANCIAL BUSINESS—

Budget, 1974-75, Voting—

Industries .. .. .. .. } 436-639
Handloom and Textiles .. .. .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice .. .. .. ..
Jails .. .. .. .. .. ..

Irrigation .. .. .. .. .. } 167-255, 256-351
Public Works-Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plants
Roads and Bridges .. .. .. ..
Capital Outlay on Irrigation .. .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

Labour including Factories .. .. .. .. } 743-792
Housing .. .. .. ..
Police .. .. .. .. } 32-119
Fire Services .. .. .. ..

D.E.E. 1973-74, Voting—

Administration of Justice .. .. .. .. 734

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowment Act, 1959. .. .. } 734

PAGE

E—*cont.*

**FINANCIAL BUSINESS—**
**Budget, 1974–55 Voting—*cont.***
Agriculture .. .. .. .. .. .. 736
Animal Husbandry .. .. .. .. .. .. 736
Capital Outlay on Industrial Development .. .. 740
Capital Outlay on Irrigation .. .. .. .. 741
Capital Outlay on Public Works .. .. .. 741
Capital Outlay on Road Transport Schemes .. 741
Co-operation .. .. .. .. .. .. 737
Community Development Projects, etc. .. .. 738
District Administration and Miscellaneous .. .. 733–734
Education .. .. .. .. .. .. 735
Elections .. .. .. .. .. .. 733
Fisheries .. .. .. .. .. .. 736
Forest Department .. .. .. .. .. 740
General Sales Tax and Other Taxes and Duties–Administration .. .. .. .. .. 731
Handlooms and Textiles .. .. .. .. 737
Head of State, Ministers and Headquarters Staff .. 733
Industries .. .. .. .. .. .. 737
Jails .. .. .. .. .. 734
Khadi .. .. .. .. .. 737
Labour including Factories .. .. .. .. 738
Land Revenue Department .. .. .. .. 729
Loans and Advances by the State Government .. 742
Medical .. .. .. .. 735
Milk Supply Schemes .. .. .. .. 733
Miscellaneous .. .. .. .. 740



F—*cont.*

PAGES

**FINANCIAL BUSINESS—*cont.***
**D.E.E., 1973–74, Voting—*cont.***
Motor Vehicles Acts–Administration .. .. 731
Pensions .. .. .. .. .. 740
Police .. .. .. .. 735
Public Health .. .. .. .. 736
Public Works–Establishment and Tools and Plant .. 739
Public Works—Grants–in–aid .. .. .. .. 739
Public Works—Works .. .. .. .. 739
Registration Dept. .. .. .. .. 732
Road Transport Schemes .. .. .. .. 739
Stamps–Administration .. .. .. .. 731–732
State Excise Duties .. .. .. .. 729
State Legislature .. .. .. .. 732
Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. 738
D.S.G. (Final) 1973–74, Presentation .. .. 160–166
G.D. .. .. .. .. 704–719, 720–728

**FISHERIES—**
Prawns in seashores of Radhapuram .. .. 7–13
Training in Fisheries, deputation .. .. .. 666–667

**FOOD—**
Applied Nutrition Programme—Kanyakumari district .. .. .. .. 406–407

**FOODGRAINS—**
Paddy, cultivation .. .. .. .. .. 139–141

PAGE

G

GANAPATHY, THIRU N.—

Budget, 1974-75, Voting—

Labour including Factories .. .. }
Housing .. .. .. .. .. .. } 816-821

Police .. .. .. .. .. .. .. }
Fire Services .. .. .. .. .. } 39-44

GANESAN, THIRU L.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. }
Handloom and Textiles .. .. .. .. }
Capital Outlay on Industrial Development .. } 512-515
Administration of Justice .. .. .. .. }
Jails .. .. .. .. .. .. .. }

GANESAN, THIRU S.—

Irrigation .. .. .. .. .. }
Public Works—Buildings .. .. .. .. }
Public Works—Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. .. .. .. } 200-203
Capital Outlay on Irrigation .. .. .. .. }
Capital Outlay on Public Works—Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. .. }

GOPAL, THIRU K. P.—

Budget, 1974-75, Voting—

Irrigation .. .. }
Public Works–Buildings .. }
Public Works–Establishment and Tools and Plant. }
Roads and Bridges .. .. } 173
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works—Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. .. }



PAGES

GOPAL, THIRU M.—

Budget, 1974–75, Voting—

Irrigation .. .. }
Public Works—Buildings .. .. }
Public Works—Establishment and Tools and Plant. }
Roads and Bridges .. .. } 192-194
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works—Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Labour including Factories .. .. }
Housing .. .. .. .. .. } 782-784

GURUSAMI, THIRU N. V.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. }
Handloom and Textiles .. .. }
Capital Outlay on Industrial Development .. } 529-531
Administration of Justice .. .. }
Jails .. .. }

Irrigation .. .. }
Public Works—Buildings .. .. }
Public Works—Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. } 265-268
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works—Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. .. }

Electricity, supply to Thummonakkundu Panchayat 687-688

H

HANDE, DR. H. V.—

Allotment of a separate seat for Speaker while discussing Motion for removal of the Speaker (Point of Order) .. .. 423

H—*cont.*

PAGES

HANDE, Dr. H. V.—*cont*

Appointment of a Member from the Panel of Chairmen for conducting proceedings on Motion for Removal of Speaker (Point of Order) .. .. 420

Boiler leak in Ennore Thermal Plant and consequent reduction in electricity production (A. M.) 27–29

Budget, 1974–75, Voting—

Industries .. ..
Handloom and Textiles .. ..
Capital Outlay on Industrial Development .. .. 436, 438
Administration of Justice .. .. 440, 442
Jails .. ..

Irrigation .. ..
Public Works—Buildings .. ..
Public Works—Establishment and Tools and Plant 169, 171
Roads and Bridges .. .. 173, 175
Capital Outlay on Irrigation .. .. 176
Capital Outlay on Public Works—Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. ..

Labour including Factories .. ..
Housing .. .. 745

Police .. .. 32, 39
Fire Services .. .. 97, 105
112, 113

Houses of Slum Clearance Board, rent .. 16

S.I.E.T. Women's College, hardship to students on account of collection of third term fees (C.A.) .. 156
157–158

HANDLOOMS—

Weavers, Karur, strike (C.A.) .. .. 418–420

HARIJAN WELFARE—

Assignment of lands, Dharmapuri .. .. 669–672

Harijans of Vadakkalur, representation .. 666

H—*cont.*

PAGES

HARIJAN WELFARE—*cont.*

Hostel at Nattrampalli and Kandhili .. .. 2–4

Hostel at Thiruppuvanam .. .. 1–2

Hostels (private), take over by Government .. 4–7

Works, amount spent in Mayuram .. .. 398

HIGHWAY—

Madurai–Mandapam, erosion .. .. 402

HOSPITALS and DISPENSARIES—

Blood bank for Mayuram Hospital .. .. 136

Primary Health Centre, Mettupalayam .. .. 665–666

Thirukkattuppalli, expansion .. .. 664–665

X-ray unit for Omalur Hospital .. .. 135–136

HOUSING—

Houses of Slum Clearance Board, rent .. .. 16

Housing Project, Hindustan Housing Factory, assistance .. .. 407–409

Industrial Housing Schemes .. .. 409–410

I

ILANGOVAN, Thiru G.—

Hospital at Thirukkattupalli, expansion .. 664

INDUSTRIES—

Sandalwood oil factory .. .. 16–19

PAGES

J

JAMES, THIRU J.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. }
Handloom and Textiles .. .. }
Capital Outlay on Industrial Development .. .. } 437, 443
Administration of Justice .. .. }
Jails .. .. }

Irrigation .. .. }
Public Works-Buildings .. .. }
Public Works-Establishment and Tools and Plant } 169, 170
Roads and Bridges .. .. } 175,
Capital Outlay on Irrigation .. .. } 302-310
Capital Outlay on Public Works—Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. .. }

Labour including Factories, Housing .. .. 743, 745 822, 831 858

JAYARAMAN, THIRU K.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. }
Handloom and Textiles .. .. }
Capital Outlay on Industrial Development .. } 546-549
Administration of Justice .. .. }
Jails .. .. }

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI.—

D.S.G. (Final), 1973-74, G.D. .. .. 720-722

K

KALIMUTHU, THIRU K.—

D.S.G. (Final), 1973-74, G.D. .. .. 704-708

KAMATCHI, THIRU K.—

Budget, 1974-75, Voting—

Labour including Factories, .. .. .. }
Housing .. .. .. .. .. .. } 855

Police .. .. .. .. }
Fire Services .. .. .. .. } 56-59



PAGES

K—cont.

KANDASAMI, THIRU Manali C.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. }
Handloom and Textiles .. .. }
Capital Outlay on Industrial Development .. } 536-542
Administration of Justice .. }
Jails .. .. }

Irrigation .. .. }
Public Works—Buildings .. }
Public Works-Establishment and Tools and Plant } 167, 173
Roads and Bridges .. .. } 174, 175
Capital Outlay on Irrigation .. } 176
Capital Outlay on Public Works - Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Police
Fire Services .. 44-49

KARTHEESAN, THIRU V.—

Budget, 1974-75, Voting—

Irrigation .. }
Public Works-Buildings .. }
Public Works-Establishment and Tools and Plant .. }
Roads and Bridges .. } 250-253
Capital Outlay on Irrigation .. }
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Prawns in seashores of Radhapuram .. 7-13

KARUNANIDHI, Dr. M—

Appropriation Bill, 1974 .. 742

Budget, 1974-75—Voting—

Police ..
Fire Services .. 55, 68, 69 87, 92-118

D.E.E., 1973-74, Voting—

Administration of Justice .. 734

K—*cont.*

PAGES

KARUNANIDHI, Dr. M—*cont.*

D.E.E., 1972-74, Voting—*cont.*

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. 734
Agriculture .. .. 736
Animal Husbandry .. .. 736
Capital Outlay on Industrial Development .. 740
Capital Outlay on Irrigation .. 741
Capital Outlay on Public Works .. 741
Capital Outlay on Road Transport Schemes .. 741
Community Development Projects, etc. .. 738
Co-operation .. 737
District Administration and Miscellaneous .. 733–734
Education .. 735
Elections .. 733
Forest Department .. 740
Fisheries .. 736
General Sales Tax and Other Taxes and Duties Administration .. 731
Handlooms and Textiles .. 737
Head of State, Ministers and Headquarters Staff .. 733
Industries .. 737
Jails .. 734
Khadi .. 737
Labour including Factories .. 738
Land Revenue Department .. 729
Loans and Advances by the State Government .. 742

K—*Cont*

PAGES

KARUNANIDHI, Dr. M.—*cont.*

D.E.E., 1973-74, Voting—*cont.*

Medical .. 735
Milk Supply Schemes .. 733
Miscellaneous .. 740
Motor Vehicles Acts—Administration .. 731
Pensions .. 740
Police .. 735
Public Health .. 736
Public Works—Establishment and Tools and Plant 739
Public Works—Grants-in-aid .. 739
Public Works—Works .. 739
Registration Department .. 732
Road Transport Schemes .. 739
Stamps—Administration .. 731, 732
State Excise Duties .. 729
State Legislature .. 732
Welfare of the Scheduled Tribes and Castes, etc, .. 738
Discussion on Supplementary Grants (Point of order) .. 719
D.S.G. (Final), 1973—74, Presentation .. 160-166
G.D. .. 722–728

KITTAPPA, THIRU N.—

Blood bank for Mayuram Hospital .. 136
Drainage scheme for Madras City .. 138, 139
Fishermen, Parvatharajakulam, inclusion in the list of Scheduled Castes .. 399–401

PAGES

KITTAPPA, THIRU N.—*cont.*

- Harijan Welfare Works, Mayuram .. 398
- Mayuram, renaming . .. 146–147
- Paddy, cultivation .. 141
- Pattavarthy-Kurichipulavanur road, Mayuram .. 669

KOTHANDARAMIAH, THIRU K.S.—

Budget, 1974–75, Voting—

- Industries ..
- Handlooms and Textiles ..
- Capital Outlay on Industrial Development ..
- Administration of Justice ..
- Jails .. } 436, 441

- Irrigation ..
- Public Works–Buildings ..
- Public Works–Establishment and Tools and Plant
- Roads and Bridges ..
- Capital Outlay on Irrigation ..
- Capital Outlay on Public Works-Buildings ..
- Capital Outlay on Roads and Bridges .. } 168, 169, 248–250

KRISHNAMOORTHY (Nellikuppam), THIRU V.—

Budget, 1974–75, Voting—

- Industries ..
- Handlooms and Textiles ..
- Capital Outlay on Industrial Development ..
- Administration of Justice ..
- Jails .. } 471–482

KUMARASAMI, THIRU K. N.—

Budget, 1974–75 Voting—

- Industries ..
- Handlooms and Textiles ..
- Capital Outlay on Industrial Development ..
- Administration of Justice .. .. .. ..
- Jails .. .. .. .. } 436, 443



PAGES

KUMARASAMI, THIRU K. N.—*cont*

Budget, 1974-75, Voting—*cont.*

- Irrigation ..
- Public Works—Buildings ..
- Public Works—Establishment and Tools and Plant
- Roads and Bridges ..
- Capital Outlay on Irrigation ..
- Capital Outlay on Public Works-Buildings.. ..
- Capital Outlay on Roads and Bridges .. } 172,174, 208–211

- Labour including Factories, ..
- Housing .. .. .. .. .. .. 744, 777

KUMARASAMY, THIRU A. S.—

Budget, 1974–75, Voting—

- Irrigation .. .. ..
- Public Works—Buildings .. ..
- Public Works—Establishment and Tools and Plant
- Roads and Bridges .. ..
- Capital Outlay on Irrigation .. ..
- Capital Outlay on Public Works—Buildings ..
- Capital Outlay on Roads and Bridges .. .. } 185–187

LABOUR—

- Addison and Company, dispute in .. .. 149–151
- Fast by workers of Alexander Thread Company, Mettur (C. A.) .. .. 420–422
- Labourers, Beedi industry .. .. 410–414
- Textile workers of Coimbatore, Committee's report .. .. 151–152
- Wages for suspension period .. .. 14–15

LANDS—

- Kolli Hills, assignment .. .. 402–403
- Distribution of Inam lands, Ambasamudram Taluk (C.A.) .. .. .. 696–697
- Theosophical Society, Adyar .. .. 15–16

PAGES

LATHEEF, THIRU M. A.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. }
Handlooms and Textiles .. .. }
Capital Outlay on Industrial Development .. .. } 437, 441
Administration of Justice .. .. } 577-582
Jails .. .. }

Irrigation .. .. }
Public Works—Buildings .. .. }
Public Works—Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. } 170
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works Buildings.. .. }
Capital Outlay on Roads and Bridges .. .. }

Labour including Factories, .. .. 734,
Housing 784-792
820, 843
844

D.S.G. (Final), 1973-74,

G. D. .. .. 714-718

Urdu Training Schools, closure and its consequences (C.A.) .. .. 694-695

LAW COLLEGE—

Special Coaching Scheme .. .. 394-395

M

MADHAVAN, THIRU S.—

Budget, 1974-75, Voting—

Industries .. .. }
Handloom and Textiles .. .. } 436, 440,
Capital Outlay on Industrial Development .. } 442,
Administration of Justice .. } 443-447,
Jails .. .. } 450, 454,
455, 461,
466,





PAGES

MADHAVAN, THIRU S.—*cont.*

Budget 19745-7, Voting—*cont.*

516-517,
518,
520-521,
529, 571,
618-637.

Cement, adverse effect on production due to coal shortage (C.A.St.) .. 159-160

MARIMUTHU, THIRU A. R.—

Budget, 1974-75, Voting—

Irrigation .. .. }
Public Works-Buildings .. .. }
Public Works-Establishment and Tools and Plants }
Roads and Bridges .. } 284-291
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Pallavan Transport bus, accident near Tambaram (A.M.) .. .. 688

MARUDACHALAM, THIRU N.—

Budget, 1974-75, Voting—

Irrigation .. .. }
Public Works-Buildings .. .. }
Public Works-Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. } 168, 172
Capital Outlay on Irrigation .. .. } 279-281
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Labour including Factories, .. 744
Housing .. .. .. .. .. ..

Harijans of Vadakkalur, representation .. 666

PAGES

MEDICINES—

Harmful drugs, sale .. 659–661

MILLS—

Textile, industrial dispute .. 381–386

MOIDEEN, Thiru Thiruppur A. M.—

Budget, 1974–75, Voting—

Police ..
Fire Services .. } 59-64, 65

MOTIONS—

Adjourement Motions—

Boiler leak in Ennore Thermal Plant and consequent reduction in electricity production .. 27–31

Pallavan Transport bus, accident near Tambaram 688–694

Removal of Speaker from Office .. 424–428

Suspension of Rule 41(3) .. 694

MUNUSAMI, Thiru R. R.—

Law College, special coaching scheme .. 394–395

Soil testing, workshop .. 674

MURUGAIYAN, Thiru S—

Budget, 1974–75, Voting—

Industries ..
Handlooms and Textiles ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice ..
Jails .. } 531–534





PAGES

MUTHAMIL SELVAN, Thiru V. N.—

Budget, 1974–75, Voting—

Irrigation ..
Public Works-Buildings ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges ..
Capital Outlay on Irrigation ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. } 291–294

Cement, adverse effect on production due to coal shortage (C.A.) .. 159

MUTHIAH, Thiru M.—

Buildings, sub-taluk office at Ottapidaram .. 13

Harijan hostel's (private), take over by Government .. 4–7

Paddy, cultivation .. 139–141

Pooranathaswamy temple, Koilpatti, trustees .. 152-153

MUTHU, Thiru V.—

Budget, 1974–75, Voting :—

Irrigation ..
Public Works-Buildings ..
Public Works-Establishment and Tools and Plants ..
Roads and Bridges ..
Capital Outlay on Irrigation ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. } 259–261

Bus route from Salem to Kodumudi .. 26–2?

MUTHUVEL, Thiru, N.—

Budget, 1974–75, Voting:—

Irrigation ..
Public Works-Buildings ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges ..
Capital Outlay on Irrigation ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. } 281–284

PAGES

N

NACHIAPPAN, Thiru A.M.T.—

Budget, 1974–75, Voting—

Industries ..
Handloom and Textiles ..
Capital Outlay on Industrial Development .. 562–565
Administration of Justice ..
Jails ..

NACHIAPPAN, Thiru N.—

Budget, 1974–75, Voting—

Irrigation ..
Public Works-Buildings ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. 297–301
Capital Outlay on Irrigation ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

NAGALINGAM, Thiru P.—

Budget, 1974–75, Voting—

Irrigation ..
Public Works-Buildings ..
Public Works-Establishment and Tools and Plants
Roads and Bridges .. 190–192
Capital Outlay on Irrigation ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

NARAYANASAMY, Thiru MANNAI P.—

Foodgrains and foodstuffs, rise in price (C.A. St.) 699–703

NARAYANASAMY, Thiru M.V.—

Budget, 1974–75, Voting—

Labour including Factories .. .. 763–771
Housing. 847

Industries, .. .. .. ..
Handlooms and Textiles ..
Capital Outlay on Industrial Development. .. 491–495
Administration of Justice. ..
Jails. .. .. .. ..



NATIONALISATION

T.V.S., Company, Madurai, compenations. 416–418

NEDUNCHEZHIYAN, DR. V.R.—

S.I.E.T. Women's College hardship to students on account of third term fees (C.A. St.) 156–157
158

Suspension of Rule 41 (3) (M) .. .. 694

Urdu Training Schools, closure and its consequences (C. A. St.) 694–696

O

OBITUARY REFERENCE :

Pais, Thiru L.C., former Member of the Assembly... 381

P

PALANIAMMAL, Thirumathi V.P.—

Budget, 1974–75 Voting:

Irrigation
Public Works-Buildings
Public Works-Establishment and Tools and Plants
Roads and Bridges 224–227
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

PALANISAMY, Thiru N.K.—

Addison and Company, labour dispute in .. 149–151

Assignment of lands, Dharmapuri .. .. 669–672

Centre–State Relations, amendment of Constitution, .. .. .. .. .. 386–394

Eye camp at Avadi, details .. .. 662–664

Handloom weavers, Karur, strike (C.A) .. 418

Industries, Sandalwood Oil factory .. .. 16–19

Labour, wages for suspension period .. 14–15

PAGES

PALANISAMY, THIRU N.K.—*cont.*

Law Collage, special coaching scheme .. 394–395

Milk Coolers, supply .. .. .. .. 153–154

Poultry Extension Centre, Kappalur .. .. 679–680

Textile workers of Coimbatore, Committees report .. 151–152

Tourism Development Corporation, profit and loss .. .. .. .. .. 128–139

Transport Staff Training Institute .. .. 414–411

PALANIVELAN, THIRU K.—

Budget, 1974–75, Voting :—

Irrigation .. .. .. .. ..
Public Works-Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges . .. ..
Capital Outlay on Irrigation .. . ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges; ..
} 219–224

PANNEERSELVAM, THIRU M.—

Budget, 1974–75, Voting

Industries .. .. .. .. ..
Handlooms and Textiles: .. .. ..
Capital Outlay on Industrial Development
Administration of Justice .. .. ..
Jails .. .. .. .. .. 573–575

PAPERS LAID ON THE TABLE—

Activities and achievements of State Directorate of ground water. .. .. .. .. 641

Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969, notification. .. .. .. 351



PAGES

PAPERS LAID ON THE TABLE —*cont*

Agricultural Providuce Markets Act, 1959, notification .. .. .. .. 120,640

Demand No, 29—Labour including Factories, speech of Hon. THIRU K. Rajaram, Minister for Labour .. .. . 861

Demands for Grands for Further Expenditure and Detailed Supplementary Estimatse thereof for the year 1973–74. .. .. .. .. 642

District Municipalities Act, 1920, notification 640–641

District Municipalities (Amendment) Bill, 1974. .. 641

Essential Commodities (Tamil Nadu Amendment) Bill 1974 .. .. .. .. .. 641

Final Supplementary Estimates for the year 1973–74, speech of Hon. Dr. M. Karunanihi, Chief Minister .. .. .. .. 642

Housing in Tamil Nadu, 1973–74 .. .. 641

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notification .. .. 119–123

Industrial Growth in Tamil Nadu, Handloom and Textile, 1973–74 (English and Tamil), review .. 861

Industrial Growth in Tamil Nadu, Industrial Finance, 1973–74 (English), review .. .. 861

Industrial Growth in Tamil Nadu, Major Industry 1973–74 (English and Tamil), review .. .. 860

Industrial Growth in Tamil Nadu, Mineral Developement, 1973–74 (English and Tamil), review .. .. .. .. .. 861

Industrial Growth in Tamil Nadu, Small Scale Industries 1973–74 (English and Tamil), review 860

Industrial growth in Tamil Nadu, State Industries Promotion Corporation of Tamil Nadu Ltd., 1973–74 (English and Tamil), review .. .. 861

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Industrial growth in Tamil Nadu, Sugar Industry, 1973-74 (English and Tamil), (review) .. 861

Industrial growth in Tamil Nadu (Tamil Nadu Textile Corporation Ltd., 1973 (English and Tamil) review .. .. .. 861

Irrigation and Public work, Department demonds, 1974-75, speech of Minister (English and Tamil .. 352

Irrigation in Tamil Nadu 1973-74 review (English and Tamil) .. .. .. 352

Labour in Tamil Nadu, 1973-74 (English and (Tamil) review .. 861

Madurai City Municipal Corporation Act, 1971, notification .. .. .. .. .. .. 640

Minor Ports, 1973-74 worknig review of (English and Tamil) .. .. .. .. .. 352

Notice on Demands for further Grants during the year 1973-74. .. .. .. .. .. 642

Panchayats Act, 1958, notification. .. .. 640

Parks, Playfields and Open Spaces Preservation and Regulation) Act, 1959—notification .. .. 119-120

Performance Budget on Industries, 1974-75 .. 861

Registration (Tamil Nadu Amendment) Bill, 1974

Review on Building Programmes in Tamil Nadu .. 641

Review on Industrial Growth in Tamil Nadu Small Industries Development Corporation, Ltd, 641

Review on Road Development Programme in Tamil Nadu .. .. .. .. .. 641

Rural Development and Local Administraton Memorandum, Erratum .. .. .. 860

Selum Clearance in Tamil Nadu, 1973-74. .. 641



PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Statement of Action recommendations of the .. Administrative Reforms Commission on Public .. Works Department. .. .. .. .. 641

(Transferred Teritorry) Ryotwari Settlement Act, 1964, Notification .. .. .. .. 352

Tuticorn Hardbour Project and Sethusamudram Project 1973-74, review on working (English and Tamil) .. .. .. .. 352

PARANDHAMAN, THIRU A.—

Bus route for Madras to Kadambathur .. 21-26

Intensive Family Planning Programme, Continuation. .. .. .. .. .. 136-137

PAULIAH, THIRU A.—

Budget, 1974-75, Voting :—

Irrigation .. .. .. .. .. ..
Public Works-Buildings .. .. .. .
Public Works Establishment and Tools and Plants .. .. .. .. .. ..
Roads and Bridges .. .. .. ..
Capital Outlay on Irrigation .. .. ..
Capital Outlay on Public-Works-Building ..
Capital Outlay on Roads and Bridges ...
} 187-190

PON CHOCKALINGAM, THIRU P.—

Budget, 1974-75, Voting :—

Irrigation .. .. .. .. .. ..
Public Works-Buildings .. .. .. .. ..
Public Works Establishment and Tools and Plants .. .. .. .. .. ..
Roads and Bridges .. .. ..
Capital Outlay on Irrigation .. .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges. ..
} 268-27

PAGES

P—*cont*

PONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1974–75, Voting.—
Industries, .. .. .. .. .. ..
Handloom and Textiles. .. . .. .. 523
Capital Outlay on Industrial Development. .. 586–599
Administration of Justice. .. .. .. 600
Jails. .. .. .. .. .. .. ..
Labour including Factories .. ..
Housing . .. .. .. .. 821
Police .. .. .. .. .. .. ..
Fire Service .. .. .. .. .. .. 81–92
117
Pallavan Transport bus, accident near Tambaram
(A,M) .. .. .. .. .. ... .. 688–689
693

POULTRY
Extension Centre, Kappalur .. .. .. 679–680

PRICE
Coconut oil, .. .. .. .. .. 683–686
Foodgrains and foodstuffs rice in price (C.A) .. 699–703

PUBLIC HEALTH
Drainage Saheme for .adras City 138 –139

R

RAJAGOPAL THIRU V.—
Budget, 1974–75, Voting :—
Irrigation .. .. .. .. .. ..
Public Works Buildings .. .. .. ..
Public Works–Establishment and Tools and Plants
Road and Bridges .. .. .. .. .. 245–248
Capital Outlay on Irrigation .. .. ..
Captal Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges. ..



PAGES

W—*cont.*

RAJARAM, THIRU K.—
Budget, 1974–75, Voting :—
Labour including Factories and Housing 743–744,745
751–753
772–787
835–859
Fast by workers of Alexander Thread Company,
Mettur (C.A- St.) .. .. .. 420–422
Handloom Weavers, Karur, strike (C.A. St). .. 418–420

RAMASWAMY, THIRU G.—
Labourers, Beedi Industry .. .. 410–414

RAMACHANDRAN, THIRU S.—
Pallavan Transport bus, accident near Tambaram
(A.M.) .. .. .. .. 691–693

RAMAKRISHNAN, KUPPAL THIRU K.S.—
Budget, 1974-75, Voting—
Industries .. .. ..
Handloom and Textiles .. ..
Capital Outlay on Industrial Development .. 565–569
Administration of Justice .. ..
Jails .. .. .. ..

RAMAN, THIRU M.—
Budget, 1974-75, Voting :—
Irrigation .. .. .. ..
Public Works-Buildings .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. .. 261–262
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

RAMAN, THIRU O.P.—
Boiler leak in Ennore Thermal plant and consequent neduction in electricity production(A.M). .. 29 31

PAGE

R—*cont*

RAMASAMY, THIRU E.—

Budget, 1974-75, Voting :—

Labour including Factories Housing .. .. 799–803

RANGANATHAN THIRU K.—

Budget 1974-75 Voting :—

Industries .. .. ..
Handloom, and Textiles .. ..
Capital Outlay on Industrial Development .. } 508–512
Administration of Justice .. ..
Jails .. .. .. ..

RASU, THIRU J.S.—

Budget, 1974–75, Voting :—

Irrigation .. .. .. ..
Public Works-Buildings .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. .. .. } 274–279
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

ROADS—

Pattavarthy-Kurichipulavanur road, Mayuram .. 669

S

SADIQ PASHA, THIRU S.J.—

Budget, 1974-75, Voting :—

Labour including Factories and Housing .. 820

Non distribution of pattas, Ambasamudram Taluk. (C. A. St.) .. .. .. .. 697–698



PAGES

S—*cont.*

SAHADEVAN, THIRU S.—

Budget, 1974-75, Voting—

Irrigation .. .. .. ..
Public Works-Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plants
Roads and Bridges .. .. .. } 203–206
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Budget 1974–75, Voting :—

Irrigation .. .. ..
Public Works-Buildings .. ..
Public Works Establishment and Tools and Plants
Roads and Bridges .. .. .. } 256–259
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

Distribution of Inam lands, Ambasamudram taluk, Tirunelveli District (C.A.). .. .. .. 696

Inam Abolition Act, lands under .. .. 402–404

SCHEDULED CASTES—

Fishermen, Parvatharajakulam, inclusion in the list of 399–401

SCHOOL(S)—

Midday meals scheme .. ... .. 121–126

Urdu Training—closure and its consequences (C.A.) 694–696

SHANMUGAM, THIRU P. U.—

Budget, 1974–75, Voting :

Irrigation .. .. ..
Public Works-Buildings .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. .. .. } 231–234
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges ..

S—*cont.*

PAGES

SHANMUGAM, THIRU P.U.—

Budget, 1974-75, Voting :

Irrigation .. .. .. } 167, 169,
Public Works-Buildings .. .. } 170, 171,
Public Works-Establishment and Tools and Plant } 173, 175,
Roads and Bridges .. .. .. .. } 176, 177,
Capital Outlay on Irrigation .. .. } 310–347
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

SIVAPRAKASAM, THIRU D.S.A.—

Budget, 1974-75, Voting :

Irrigation .. .. .. }
Public Works-Buildings .. .. }
Public Works-Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. .. } 216–219
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Rice Research Station, Ambasamudram, details .. 144–146

SLUM CLEARANCE BOARD—

*See* Housing.

SONIAH, THIRU T.—

Budget, 1974-75, Voting :

Industries .. .. .. }
Handlooms and Textiles .. .. }
Capital Outlay on Industrial Development .. } 495–498
Administration of Justice .. }
*Jails* .. .. .. }

Building for Madurai Corporation, estimated cost .. 147–149

Harijan Hostel at Thiruppuvanam .. .. 1–2

Madurai-Mandapam Highway, erosion, .. .. 402

Piramanur and Palayanur canals, Thiruppuvanam, linking of .. .. 669



S—*cont.*

PAGES

SONIAH, THIRU T.—*cont.*

Budget, 1774-75, Voting :—*cont.*

Rangaiyan tank, Thiruppuvanam, deepening, .. 668

Rajeswara Sethupathy Bridge, Manamadurai, .. 401

T.V.S. Company, Madurai, compensation ... 416–418

Vellivizha Seerur, selection in Ramanathapuram district .. .. .. .. 405–406

SOUNDARAPANDIAN, THIRU P.—

Budget, 1974-75, Voting :

Irrigation ... ... ... .. }
Public Works-Buildings ... .. }
Public Works-Establishment and Tools and Plant }
Roads and Bridges .. . . } 167, 172
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Labour including Factories ... ... 743–858

Farmer's Co-operative Paper Mills, establishment .. 681–683

Industrial Housing Schemes – ... 409–410

Tourist Bungalow at Rameswaram, construction ... 133–135

SEENIVASAN, THIRU P.—

Budget, 1974-75, Voting :

Labour including Factories ... ... 846–850
Housing

SRINIVASAN, THIRU T.P.—

Budget, 1974-75, Voting :

Irrigation ... ... ... }
Public Works-Buildings .. .. }
Public Works-Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. .. } 253 255
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

STATE AUTONOMY—

Centre by State Relations–amendment of Constitution, communication to Centre .. .. 386–394

SUBBIAH, THIRU A.K.—

Budget, 1974-75, Voting :

Irrigation .. .. ..
Public Works-Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. .. ..
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. .. } 237–241

Labour including Factories and Housing .. 831–835

SUBBIAH, THIRU A.R.—

Budget, 1974-75, Voting :

Industries .. .. ..
Handlooms and Textiles .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice .. ..
Jails .. .. .. .. } 549–553

SUBRAMANIAM, THIRU A.—

Budget, 1974-75, Voting :

Industries ..
Handloom and Textiles .. .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice .. .. ..
Jails .. .. .. .. .. } 438

Labour including Factories .. .. ..
Housing .. .. .. .. } 743, 751–756, 761–763, 764, 777, 840–841, 845, 848,

Non-issue of Speaker's gallery pass (Point of order) 430–431

Textile Mills, industrial dispute .. .. 381–386



SUBRAMANIAM, THIRU K.M.—

Budget, 1974-75, Voting:

Industries .. .. .. .. ..
Handlooms and Textiles .. .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice .. .. .. ..
Jails .. .. .. .. .. } 438, 553–556

Labour including Factories .. ..
Housing .. .. } 793–796

SUBRAMANIAM, THIRU M.—

Budget, 1974–75, Voting :

Industries, .. .. .. ..
Handlooms and Textiles .. .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice .. ..
Jails .. .. .. .. .. } 504–508

SUBRAMANIAM, THIRU S.K.—

Budget, 1974-75, Voting :

Irrigation .. .. .. ..
Public Works-Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. .. ..
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. .. } 206–208

SUBRAMANIAM, THIRU V.—

Budget, 1974–75, Voting :

Irrigation .. .. .. ..
Public Works-Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plant
Roads and Bridges .. .. ..
Capital Outlay on Irrigation .. .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridges .. } 294–297

PAGES

SUNDARABHARATHI, THIRU SOWDI, S.—

Budget, 1974-75, Voting :

Industries, .. ... ... .. }
Handlooms and Textiles .. .. .. } 438, 439,
Capital Outlay on Industrial Development .. } 441, 443,
Administration of Justice .. .. .. } 498–504
Jails .. .. .. ... .. }

SURENDRAN, THIRU M.—

Budget, 1974-75, Voting:

Industries, .. .. .. .. }
Handlooms and Textiles .. .. .. }
Capital Outlay on Industrial Development .. } 515–524
Administration of Justice .. .. .. }
Jails .. .. .. .. .. }

Irrigation .. .. .. .. }
Public-Works-Buildings .. .. .. }
Public Works-Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. .. } 168
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Fast by workers of Alexander Thread Company, Mettur (C.A.) .. .. .. .. 420

SWAMIDHAS, THIRU A.—

Budget, 1974-75, Voting :

Industries, .. .. .. .. }
Handlooms and Textiles .. .. .. }
Capital Outlay on Industrial Development .. } 437, 482,
Administration of Justice .. .. .. } 487
Jails .. .. .. .. .. }

TANGAMANI, THIRU K.T.K-—

Budget, 1974-75, Voting :

Industries .. .. .. .. }
Handlooms and Textiles .. .. .. } 436,442,
Capital Outlay on Industrial Development .. } 460–461,
Administration of Justice .. .. .. } 600–618,
Jails .. .. .. .. .. }



PAGES

TANGAMANI, THIRU K.T.K.—*cont.*

Budget, 1974–75 Voting—*cont.*

Irrigation .. .. .. .. }
Public Works-Buildings .. .. .. }
Public Works-Establishment and Tools and Plant }
Roads and Bridges .. .. .. } 174,175,
Capital Outlay on Irrigation .. .. } 176
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges .. }

Labour including Factories .. 744, 777-778
Housing 803-816

D.E.C. 1973-74, Voting: Education .. .. 735

Discussion on Supplementary Grants (Point of order) .. .. .. .. .. 719

Pallavan Transport bus, accident near Tambaram (A.M.) .. .. .. .. 689–690, 693

Priority to Motion relating to removal of Speaker from office. (Point of Order) .. .. 431–435

Taking up of motion relating to removal of Speaker immediately after question hour and inclusion of item in the list of business (Point of Order. .. .. .. .. .. 423, 424

TANKS—

Rangayan tank, Thiruppuvanam, deepenihg .. 668

TEMPLE(S)

Poovanathaswamy temple Koilpatti, trustees .. 152–153

THIMMARAYA GOUNDER, THIRU T.C.—

Harijan hostel at Nuthumpalli at Kanduli .. 2–4

PAGES

T—*cont.*

THIRUVENGADAM, THIRU Thoppur—

Budget, 1974-75, Voting —

Industries .. .. .. .. }
Handlooms and Textiles .. .. .. }
Capital Outlay on Industrial Development .. } 534–536
Administration of Justice .. .. .. }
Jails .. .. .. .. .. }

THIYAGARAJAN, THIRU E.S.—

Budget, 1974-75, Voting :

Industries .. .. .. .. }
Handloom and Textiles .. .. .. }
Capital Outlay on Industrial Development .. } 542–546
Administration of Justice .. .. .. }
Jails .. .. .. .. }

TOURISM

Ootacamund, Lake, maintenance, .. .. 397–398

Tourist Bungalow at Rameswaram, construction.. 133–135

Tourism Development Corporation, profit and loss .. .. .. .. .. .. 128–131

Tourist Development Corporation, promotion of Thiruvanmiyur as Tourist Centre .. .. 131–133

V

VADIVEL, THIRU S.—

Budget, 1974–75, Voting,

Industries, .. .. .. .. }
Handloom and Textiles, .. .. .. }
Capital Outlay on Industrial Development .. } 438-442
Administration of Justice. .. .. .. }
Jails. .. .. .. .. .. }

Labour including Factories .. .. }
Housing } 851

PAGES

V—*cont*

VADIVEL, THIRU .S—*cont.*

Budget, 1974–75 Voting—*cont*

Police .. .. .. .. .. }
Fire Services .. .. .. .. } 52–56

Irrigation .. .. .. .. .. }
Public Works Building .. . .. }
Public Works Establishment and Tools and Plant .. .. .. .. .. }
Roads and Bridges .. .. .. } 214–216
Capital Outlay on Irrigation .. .. }
Capital Outlay on Public Works-Buildindg .. }
Capital Outlay on Roads and Bridges. .. }

Primary Health Centre, Mettupalayam .. 665–666

VEERASAMI THIRU N—

Budget, 1974–75, Voting :—

Labour including Factories and Housing .. 846

Police .. .. .. .. .. }
Fire Services .. .. .. .. } 75–81

VENKATASAMY THIRU B.

Budget, 1974–75, Voting

Industries, .. .. .. .. }
Handloom and .. Textiles, .. .. .. } 436
Capital Outlay on Industrial Development .. } 440–442
Administration of Justice. .. .. .. } 582–586
Jails. .. .. .. .. .. }

Irrigation .. .. .. .. .. }
Public Works Buildings .. .. .. }
Public-Works-Establishment and Tools and Plants .. .. .. .. .. }
Roads and Bridges .. .. .. } 168–173
Capital Outlay on Irrigation.. .. .. }
Capital Outlay on Public Works-Buildings .. }
Capital Outlay on Roads and Bridges. .. }

V211, 31 N74.
31 N74.52

PAGES

V—*cont.*

VENKATASAMY, THIRU B.—*cont.*
Budget, 1974-75 Voting—*cont.*
Labour Including Factories .. .. 743–744
Housing. .. .. .. 796–799

VEZHAVENDAN, THIRU K.—
Budget, 1974-75, Voting—
Industries, .. .. .. .. .. } 557–562
Handloom and Textiles .. .. ..
Capital Outlay on Industrial Development. ..
Administration of Justice. .. .. ..
Jails. .. .. .. .. ..
Bus route Madras to Kannambakkam .. 20–21
Sprayers, grants for .. .. .. 143–144
Suburban Bus Route, extension to Porandur 20

W

WAHAB, THIRU K.A.—
Budget, 1974-75, Voting—
Industries, .. .. .. .. .. } 437–439, 487–491
Handloom and Textiles, .. .. ..
Capital Outlay on Industrial Development ..
Administration of Justice. .. .. ..
Jails. .. .. .. .. ..
Irrigation .. .. .. .. } 172–174
Public Works—Buildings .. .. ..
Public Works-Establishment and Tools and Plant ..
Roads and Bridges .. .. .. .. ..
Capital Outlay on Irrigation .. ..
Capital Outlay on Public Works-Buildings ..
Capital Outlay on Roads and Bridgs ..
Labour includings Factories .. } 744–856
Housing
Mosques under Wakf Board, details .. 672–677
Wakf Board Detials of mosques. .. .. 672—673

61673

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

## IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores Book-sellers, Villupuram, South Arcot district
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.